مسند الإمام أحمد بن حنبل

நபிகளாரின் பொன்மொழிகள்

முஸ்னது அஹ்மத்

மூலம் - தமிழாக்கம் - அடிக் குறிப்பு

பாகம் ஒன்று



ரஹ்மத் அறக்கட்டளை
சென்னை - 600 004.


RGT
M.A. THAMIM

RGT
M.A. THAMIM

مسند الإمام أحمد بن حنبل

நபிகளாரின் பொன்மொழிகள்

முஸ்னது அஹ்மத்

மூலம் - தமிழாக்கம் - அடிக் குறிப்பு

பாகம் ஒன்று



ரஹ்மத் பப்ளிகேஷன்ஸ்
சென்னை - 600 004.

PUBLICATION DATA

Name of the Book	:	**MUSNAD AHMAD (ARABIC)**
Author	:	**ABU ABDILLAH AHMAD IBN HANBAL (RAH)** (780-855 AD; 164-241 Hijri)
Translation	:	**MUSNAD AHMAD (TAMIL)**
Copyright	:	**RAHMATH PUBLICATIONS (P) LTD.**
Edition	:	First, 11-01-11
Size of the Book	:	Crown 1 x 4
No of Copies	:	1000
Pages	:	880 + 145 = 1025
Publisher	:	**RAHMATH PUBLICATIONS (P) LTD.** 21/11, Second Main Road, C.I.T. Colony, Mylapore, Chennai - 600 004. India Phone : 0091 44 2499 7374 Mobile : 0091 96001 25000 www.rahmathtrust.com email : admin@rahmath.in
Printer	:	Patel Graphics Teynampet, Chennai - 6.
Price	:	₹ 300/-



எல்லாம் வல்ல அல்லாஹ்வே!

எங்களை விட்டுப் பிரிந்துவிட்ட

எங்கள் அன்புப் பெற்றோர்

அப்துல் காசிம் - ரஹ்மத் அம்மா

ஆகியோரின் பிழைகளைப் பொறுத்து,

மறுமையின் அருட்பேறுகளை முழுமையாக

அவர்களுக்கு வழங்குவாயாக!

அறங்காவலர்கள்

M.A.முஸ்தஃபா, M.A.தமீம்

மற்றும் சகோதரர்கள்

M.A. யாக்கூப், M.A.யூசுஃப்

பதிப்புக் குழு

பதிப்பாளர்:

M.A. தமீம்

Cell : 98400 99999
e-mail : thamimgmt@singnet.com.sg

மேலாய்வாளர்கள்:

மௌலவி,
எம். முஹம்மது யூசுஃப் மிஸ்பாஹி

மௌலவி, அஃப்ஸலுல் உலமா,
சா. அப்துந் நாஸிர் ஃபாஸில் பாகவி

மொழி பெயர்ப்பாளர்:

மௌலவி, அ. அன்வருத்தீன் பாகவி

ஒளி அச்சுக்கோவை:

மௌலவி, அ. ஷாஹுல் ஹமீது பாகவி M.A.,

வெளியீடு:

ரஹ்மத் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்



எண். 21/11, இரண்டாவது பிரதான சாலை, சி.ஐ.டி. காலனி,
மயிலாப்பூர், சென்னை – 600 004. தமிழ்நாடு, இந்தியா.
இணையதளம் : www.rahmathtrust.com
மின்னஞ்சல் : admin@rahmath.in
தொலைபேசி : 0091 44 2499 7374
அலைபேசி : + 91 96001 25000

பொருளடக்கம்

ரஹ்மத் அறக்கட்டளை

மனிதன் இவ்வுலகில் வாழ்வது ஒரு முறைதான். இவ்வுலகை விளைநிலமாக்கி மறுமையில் மகசூல் பெற வேண்டுமானால் இச்சமுதாயத்திற்குப் பயன்படும் அறப் பணி ஏதேனும் செய்ய வேண்டும். அறப்பணிகளுள் மிக உயர்ந்தது இஸ்லாமிய அழைப்புப் பணியே ஆகும். இறைத் தூதர்கள் செய்த பணி, இஸ்லாமிய அழைப்புப் பணியே. இப்பணிக்கு அடிப்படை, உலகப் பொதுமறை குர்ஆனும் நபிமொழிகளுமே ஆகும். எனவே, குர்ஆன் மற்றும் நபிமொழிகளை அரபிமொழியிலிருந்து நமது தாய்மொழியில் தமிழ் பேசும் மக்களுக்குத் தருவதற்காக, எங்கள் பாசம் மிகு தாயார் ரஹ்மத் அம்மா அவர்கள் பெயரில் ரஹ்மத் அறக்கட்டளை (Rahmath Trust) ஒன்றை (பதிவு எண் 784/1991) 1991ஆம் ஆண்டு நவம்பர் 18ஆம் நாள் துவக்கினோம்.

அல்லாஹ்வின் பேருதவியாலும் நல்லுள்ளம் கொண்ட நல்லோரின் ஆலோசனைகளாலும் இதுவரை ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம் தமிழாக்கம் முழுமையாக வெளிவந்து, மக்கள் பயன்பெற்றுவருகின்றனர். ஸஹீஹுல் புகாரியில் மொத்தம் 7563 நபிமொழிகளும், ஸஹீஹ் முஸ்லிமில் மொத்தம் 5771 நபிமொழிகளும் இச்சமுதாயத்திற்கு 'ரஹ்மத் அறக்கட்டளை' மூலம் தமிழில் கிடைத்துள்ளன.

'தஃப்சீர் இப்னு கஸீர்' எனும் பிரபலமான குர்ஆன் விரிவுரை நூலும் எங்கள் அறக்கட்டளை மூலம் தமிழ் மக்களுக்குக் கிடைத்துள்ளது. இவையன்றி, சுனனுந் நசாயீ எனும் நபிவழித் தொகுப்பின் முதல் பாகத்தையும் வெளியிட்டுள்ளோம். அதன் மற்ற பாகங்களும் வெளியிடவுள்ளோம், இன்ஷா அல்லாஹ்.

இப்போது 'முஸ்னது அஹ்மத்' முதல் பாகம் வெளிவந்துள்ளது. இன்ஷா அல்லாஹ், இதைத் தொடர்ந்து தஃப்சீர் இப்னு கஸீர் (ஜுஸ்உ அம்ம), சுனன் அபூதாவூத் போன்ற கிரந்தங்களும் வெளிவர இருக்கின்றன.

இன்னும் தமிழாக்கப்படாமல் அரபிமொழியிலேயே நீடித்துவரும் இன்ன பிற இஸ்லாமிய மூலாதார நூல்களையும், வரலாற்று நூல்களையும் ரஹ்மத் அறக்கட்டளை மூலம் தமிழுக்குக் கொண்டுவரும் திட்டங்களும் உள்ளன. எல்லாவற்றுக்கும் இறைவனிடம் இறைஞ்சும்படி வாசகர்களாகிய உங்களிடம் வேண்டுகிறோம். வஸ்ஸலாம்.

அன்புடன்,

சென்னை – 4
1.1.11

M.A. தமீம்
அறங்காவலர், ரஹ்மத் அறக்கட்டளை

بسم الله الرحمن الرحيم

பதிப்புரை

இறைவா!

நீ கொடுத்ததை தடுப்பவர் யாருமில்லை.

நீ தடுத்ததை கொடுப்பவர் யாருமில்லை.

(நபிமொழி)

ஆடைக்குக் காரணம் நூல். நூலுக்குக் காரணம் பஞ்சு. பஞ்சுக்குக் காரணம் செடி. செடிக்குக் காரணம் விதை. விதைக்குக் காரணம் எது என்று வினவிப் பார்த்தால் கடைசியில் இறைவனில் போய் நிற்கும். 17.07.1994 அன்று நபிகளாரின் பொன் மொழிகள் ஸஹீஹுல் புகாரீ முதல் பாகம் ஒரு முழுத்தொகுப்பாக வெளிவர எங்களை ஒரு காரணமாக ஆக்கினான் அல்லாஹ். அல்ஹம்துலில்லாஹ்

இஸ்லாத்தில் ஒரு நன்மையான காரியத்தை தொடங்கி வைத்தவருக்கு அதைத் தொடருவோருக்குக் கிடைக்கும் நன்மை போன்றது உண்டு (முஸ்லிம்-1848) என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அரபிமொழியிலுள்ள இஸ்லாத்தின் மூலாதார நூல்களை தமிழாக்கி வெளியிட வேண்டும் என்ற எண்ணம் யாரால் ஏற்பட்டதோ அவர்களுக்கு நிறைவான நன்மை உண்டு என்பதில் எள்ளளவும் ஐயமில்லை

இறையருளால் ஸஹீஹுல் புகாரீ, ஸஹீஹ் முஸ்லிம் ஆகிய இரு நூல்களும் எல்லாக் காலத்திலும் சிறப்புக்குரியவையாகவே திகழும். ரஹ்மத் பப்ளிகேஷன்ஸ் (1994) சார்பாக அவ்விரு நூல்களும் முன்பு போன்றே பதினோரு பாகங்களில் கிடைக்கும் என்ற நற்செய்தியை வாசகர்களாகிய உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறோம்

ரஹ்மத் பப்ளிகேஷன்ஸ் சார்பாக ஜூலை 4, 2009 அன்று சுனனுந் நஸாயீ ஒன்றாம் பாகம் வெளியிட்டோம். இப்போது மூதறிஞர் இமாம் அஹ்மது பின் ஹன்பல் (ரஹ்) அவர்கள் தொகுத்தளித்த முஸ்னது அஹ்மத் எனும் நூலின் முதல் பாகத்தை வெளியிடுவதில் நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம்.

ஆதாரபூர்வமான நபிமொழித் தொகுப்பாளர்கள் அறுவருள் இமாம் புகாரீ, இமாம் முஸ்லிம், இமாம் அபூதாவூத் ஆகியோர், அஹ்மது பின் ஹன்பல் (ரஹ்) அவர்களின் நேரடி மாணவர்கள் ஆவர். மற்ற மூவரான திர்மிதீ, இப்னுமாஜா, நஸாயீ ஆகியோர் மாணவர்களின் மாணவர்கள் ஆவர் என்பது அஹ்மத் பின் ஹன்பல் (ரஹ்) அவர்களின் மேதைமைக்கும் மேன்மைக்கும் சிறந்த சான்றாகும்.

ரஹ்மத் பப்ளிகேஷன்ஸ் சார்பாக ஆதாரபூர்வமான ஆறு நூல்கள் எனச் சிறப்பிக்கப் படும் நூல்களில் எஞ்சியுள்ள நூல்களையும் தமிழாக்கி வெளியிடத் திட்டமிட்டு

சுனனுந் நஸாயீ இரண்டாம் பாகம், சுனன் அபூதாவூத் முதல் பாகம் ஆகியவற்றின் முதற்கட்ட பணிகள் நடைபெற்றுவருகின்றன.

வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க முஸ்லிம்கள் அன்றாடம் தம் தொழுகைகளில் ஓதும் சிறு குறு 'சூரா'க்களுக்கான விரிவுரையை தனி நூலாகத் தரும் திட்டமும் உள்ளது.

அதற்காக, குர்ஆனின் 30ஆம் ஜுஸ்உம், தஃப்சீர் இப்னு கஸீரின் நிறைவுத் தொகுதியுமான ஜுஸ்உ அம்ம, மொழிபெயர்ப்புப் பணி நிறைவு பெற்றுவிட்டது மேலாய்வுப் பணி மட்டுமே எஞ்சியுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்

இந்த நூல் சிறப்பாக வெளிவரக் காரணமாக அமைந்த அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்

குறிப்பாக, இந்த நூலில் தமிழாக்கப் பணியை முழுமைப்படுத்திய எமது ரஹ்மத் அறக்கட்டளையின் மொழிபெயர்ப்புக் குழு மார்க்க அறிஞர்கள், இந்நூலின் மொழிபெயர்ப்புப் பணி தொடங்கிய நேரத்தில் இப்பணியைத் தொட்டுவைத்த முஹ்யித்தீன் உலவி, ஹாமித் பக்ரி மன்பஈ, யூசுஃப் சித்தீக் மிஸ்பாஹி ஆகியோருக்கும், இடைக் காலம்வரை இந்நூலில் தமிழாக்கப் பணியை மேற்பார்வையிட்ட அதிரை அஹ்மது பி.ஏ. அவர்களுக்கும், அணிந்துரை வழங்கிச் சிறப்பித்த

பேராசிரியர், ஏரல் ஜே. அஷ்ரஃப் அலீ M.A., M.phil.

டாக்டர், ஹமீதுல்லாஹ் ஜீலானி

மௌலவி, முஹம்மது கிஃபாயத்துல்லாஹ் தாவூதி, பாஜில் ஜமாலி

ஆகியோருக்கும் தரமாக அச்சிட்டுத்தந்த அச்சகத்தாருக்கும் மனநிறைவுடன் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்

இந்த நூல் நமது மறுமைப் பயணத்தில் விழியாகவும் ஒளியாகவும் திகழ வேண்டும் என்பதே என் ஆசை. நம் அனைவருக்கும் அல்லாஹ் நல்லருள்புரிவானாக.

M.A. தமீம்

பதிப்பாளர்: அறங்காவலர்

ரஹ்மத் அறக்கட்டளை

E-mail:thamimgmt@singnet.com.sg

11.1.11

சென்னை-4.

முன்னுரை

அல்லாஹ்வின் அளப்பரிய அருளால் பிரபல நபிமொழி நூலான 'முஸ்னது அஹ்மத்' முதல் பாகம் இப்போது உங்கள் கைகளை வந்தடைந்துள்ளது. முஸ்னது அஹ்மத் போன்ற பிரமாண்டமான நபிமொழித் தொகுப்பு ஒன்றை தமிழில் கொண்டு வருவதை யாரும் எண்ணிக்கூடப் பார்க்கமாட்டார்கள்.

26363 ஹதீஸ்கள் கொண்ட மாபெரும் கிரந்தமாக அது இருப்பதே அதற்குக் காரணம். அத்தகைய ஒரு நூலின் ஒரு பகுதியை ரஹ்மத் அறக்கட்டளை சார்பாக மிகச் சிறப்புடன் செய்து முடிக்க எங்களுக்கு வாய்ப்பளித்த வல்ல அல்லாஹ்வை மெய்யன்புடன் வாழ்த்துகிறோம்.

இந்த முதல் பாகத்தில் மொத்தம் 1025 பக்கங்களில் 1608 நபிமொழிகள் இடம் பெற்றுள்ளன. தொடக்கத்தில் அணிந்துரைகள், ஹதீஸ்கலை வழக்குச் சொற்கள், மூல நூலாசிரியர் இமாம் அஹ்மது பின் ஹம்பல் (ரஹ்) அவர்களின் வாழ்க்கை வரலாறு, நூல் அறிமுகம் ஆகியவை இடம்பெறுகின்றன.

இது இஸ்லாத்தின் மூலாதார நூல்களுள் ஒன்றாக இருப்பதால் வழக்கம் போல தமிழாக்கத்துக்கு நேராக வலப் பக்கத்தில் ஹதீஸ்களின் அரபி மூலத்தையும் தந்துள்ளோம்.

நபிமொழிகளை நபிகளாரிடமிருந்து நேரடியாகக் கற்றுக்கொண்டார்கள் நபித்தோழர்கள். அந்த நபித்தோழர்களின் அறிவிப்புகளிலிருந்தே நம்மால் நபிமொழிகளை அறிந்துகொள்ள முடிகிறது. குறிப்பிட்ட நபித்தோழர்கள் அல்லது அவர்கள் சார்ந்த நாடுகள் அல்லது குலங்கள் ஆகிய குடைகளின் கீழ் தொகுக்கப்பட்டதே முஸ்னது வகை நூல்கள்.

முஸ்னது வகைகளில் குறிப்பிட்ட தலைப்பில் நபிமொழிகளைத் தேடுவது சற்று சிரமமே. இந்தச் சிரமத்தை நீக்கும் வண்ணம் நூலின் துவக்கத்தில் (பக்கம்: A 71-124) அகரவரிசைப் பொருள் அட்டவணை ஒன்றை நாங்களே உருவாக்கித் தந்துள்ளோம்.

நபிமொழிகளை வாசிக்கும்போது ஐயங்கள் குறுக்கிடாதிருக்க தேவையான இடங்களில் அடைப்புக் குறிகளுக்குள் விளக்கம் தந்துள்ளோம். நூல் குறிப்புகள் வழங்கும்போது

இன்னின்ன நூல்களில் இந்த நபிமொழி இடம்பெற்றுள்ளது என்பதோடு நிறுத்திக் கொள்ளாமல் எந்தெந்த எண்களில் அவை இடம்பெற்றுள்ளன என்ற குறிப்பையும், தேவையான கருத்துரைகளையும் அடிக்குறிப்பில் தந்துள்ளோம். இவை ஆய்வாளர்களுக்கு மிகவும் பயனளிப்பதோடு அந்த ஹதீஸ்கள் குறித்த நம்பகத்தன்மையையும் வலுப்படுத்தும்.

'சொர்க்கவாசிகள் என நற்செய்தி கூறப்பெற்ற நபித்தோழர்கள் பதின்மர் வழியாக வந்துள்ள நபிமொழிகள்' எனும் ஒரே ஓர் அத்தியாயம் மட்டுமே இந்நூலில் இடம் பெற்றுள்ளது. அபூபக்ர் (ரலி), உமர் (ரலி) உஸ்மான் (ரலி), தல்ஹா பின் உபைதில்லாஹ் (ரலி), ஸுபைர் பின் அல்அவ்வாம் (ரலி), சஅது பின் அபீவக்காஸ் (ரலி), ஸயீத் பின் ஸைத் (ரலி), அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி), அபூஉபைதா பின் அல்ஜர்ராஹ் (ரலி) ஆகியோரே அந்த பத்து நபித்தோழர்கள் ஆவர். அவர்கள் வழியாக வந்துள்ள நபிமொழிகளே இந்நூலில் இடம்பெறுகின்றன. ஒவ்வொரு பாடம் தொடங்கும்போதும் அதற்கு முந்தைய பக்கத்தில் அந்த நபித்தோழரின் வாழ்க்கை வரலாற்றின் சில பகுதிகளை நாங்கள் தனியாகத் தந்துள்ளோம். இது வாசகர்களுக்கு மிகவும் பயனளிக்கும் என நாங்கள் நம்புகிறோம்.

எங்கள் தமிழாக்கம் குறித்து நாங்களே மெச்சிக்கொள்வதில் பொருளில்லை. எங்களால் இயன்ற அளவு நல்ல தமிழில் மொழிபெயர்த்துள்ளோம். வாசித்துப் பாருங்கள். குறை-நிறைகளை எங்களுக்குத் தெரிவியுங்கள். இப்பணிமனையின் பல முனைகளிலும் இதற்காக உழைத்த எல்லா உள்ளங்களுக்காகவும் 'துஆ' செய்யுங்கள்.

மொழிபெயர்ப்பாளர் குழு
ரஹ்மத் பப்ளிகேஷன்ஸ்

மேலாய்வுரை

வற்றாத பெருங் கருணையாளன் வல்ல அல்லாஹ்வின் உதவியால் 'முஸ்னது அஹ்மத்' தமிழாக்கம் முதல் தொகுதி உங்கள் கைகளில் மலர்ந்திருக்கிறது. எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே.

இதுவரை, தமிழில் வெளிவந்துள்ள நபிமொழி நூல்களுள் இது வித்தியாசமானது என்றால் அது மிகையன்று. பிற நபிமொழித் தொகுப்புகளிலிருந்து மாறுபட்ட முறையில் முஸ்னது தொகுப்பு முறை அமைந்திருப்பதே அதற்குக் காரணம். நபித்தோழர் ஒவ்வொருவரும் அறிவித்த ஹதீஸ்களை, அகரவரிசையிலோ அல்லது தர வரிசையிலோ அவர்களுடைய பெயரில் அல்லது குறிப்பிட்ட குலத்தாரின் அல்லது நாட்டாரின் பெயரில் தனித் தனியே திரட்டித்தரும் நபிமொழி நூலுக்கே நபிமொழி இயலார் வழக்கில் 'முஸ்னது' என்பர். இதுபோன்ற ஒரு நூலை அறிமுகப்படுத்துவதில் நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம்.

மேற்கு ஆசியாவிலுள்ள இராக் நாட்டின் தலைநகர் பஃக்தாதில் பிறந்த இமாம் அபூ அப்தில்லாஹ் அஹ்மது பின் முஹம்மத் பின் ஹன்பல் (ரஹ்) அவர்கள் (கிபி. 780-855) தொகுத்துத் தந்த நூல்தான் 'முஸ்னது அஹ்மத்' ஆகும்.

முஸ்னது முறையில் இமாம் அஹ்மது பின் ஹன்பல் (ரஹ்) அவர்கள் மட்டும் நபிமொழிகளைத் தொகுக்கவில்லை. வேறு அறிஞர்கள் பலரும் இம்முறையில் தொகுத்துள்ளனர்.

இதர முஸ்னது நூல்கள்:

(1) ***இமாம் அபூஹனீஃபா (ரஹ்) அவர்களின் (இறப்பு: ஹி. 150) முஸ்னது அபீஹனீஃபா.*** **(2).** ***சுலைமான் பின் தாவூத் அத்தயாலிசீ (ரஹ்) அவர்களின் (இ.ஹி. 204) 'முஸ்னதுத் தயாலிசீ.*** **(3)** ***இமாம் ஷாஃபிஈ (ரஹ்) அவர்களின் (இ.ஹி. 204) முஸ்னதுஷ் ஷாஃபிஈ.*** **(4)** ***முசத்தத் பின் முசர்ஹத் (ரஹ்) அவர்களின் (இ.ஹி. 228) முஸ்னத்.*** **(5)** ***அபூபக்ர் பின் அப்தில்லாஹ் முஹம்மத் பின் அபீஷைபா அல்கூஃபீ (ரஹ்) அவர்களின் (இ.ஹி. 235) முஸ்னது இப்னு அபீஷைபா.*** **(6)** ***இஸ்ஹாக் பின் ராஹவைஹி (ரஹ்) அவர்களின் (இ.ஹி. 238) முஸ்னது இப்னு ராஹவைஹி.*** **(7)** ***முஹம்மத் பின் யஹ்யா அல்அத்னீ (ரஹ்) அவர்களின் (இ.ஹி. 243) முஸ்னது இப்னு அபீஅம்ர்.*** **(8)** ***அப்துல்லாஹ் பின் அப்திர் ரஹ்மான் அத்தாரிமீ (ரஹ்) அவர்களின் (இ.ஹி. 255) முஸ்னதுத் தாரிமீ.*** **(9)** ***இமாம் புகாரீ (ரஹ்) அவர்களின் (இ.ஹி. 256) முஸ்னதுல் கபீர்.*** **(10)** ***இப்ராஹீம் பின் இஸ்மாயீல் அத்தூசீ (ரஹ்) அவர்களின் (இ.ஹி. 280) முஸ்னதுல் அம்பரீ.*** **(11)** ***இப்ராஹீம் பின் ஹர்ப் அல்அஸ்கரீ (ரஹ்) அவர்களின் (இ.ஹி. 282) முஸ்னது அபீஹுரைரா.*** **(12)** ***ஹாரிஸ் பின் முஹம்மத் அத்தமீமீ (ரஹ்) அவர்களின் (இ.ஹி. 282) முஸ்னது இப்னு அபீ உசாமா.*** **(13)** ***அஹ்மத் பின் அம்ர் அஷ்ஷைபானீ (ரஹ்) அவர்களின் (இ.ஹி. 287) முஸ்னது இப்னு அபீ ஆஸிம்.*** **(14)** ***அப்துல்லாஹ் பின் அஸ்ஸுபைர் அல்ஹுமைதீ (ரஹ்) அவர்களின் (இ.ஹி. 295) முஸ்னதுல் ஹுமைதீ.*** **(15)** ***இப்ராஹீம் பின் யூசுஃப் அல்ஹஸன்ஜானீ (ரஹ்) அவர்களின் (இ.ஹி. 300) முஸ்னத்.***

(16) இமாம் தயாலிஸீ (ரஹ்) அவர்களின் (ஹி. 303) முஸ்னது அலீ; (17) முஸ்னது மாலிக் (18) முஹம்மத் பின் இஸ்ஹாக் அந்நைஸாபூரீ (ரஹ்) அவர்களின் (ஹி. 313) முஸ்னது அபில் அப்பாஸ் அஸ்ஸர்ராஜ். (19) இப்ராஹீம் பின் நஸ்ர் அர்ராஸீ (ரஹ்) அவர்களின் (ஹி. 385) முஸ்னத் (20) இப்னு ஜுமைஉ எனும் முஹம்மத் பின் அஹ்மத் அல்ஃகஸ்ஸானீ (ரஹ்) அவர்களின் (ஹி. 402) முஸ்னது இப்னு ஜுமைஉ (21) அபூபக்ர் அல்குவாரிஸ்மீ அவர்களின் (ஹி. 425) முஸ்னதுல் குவாரிஸ்மீ. (22) பகிய்யு பின் மக்லத் அல்குர்துபீ (ரஹ்) அவர்களின் (ஹி. 772) முஸ்னத் (23) இமாம் அபூ யூசுஃப் (ரஹ்) அவர்களின் முஸ்னத் (24) ஹசன் பின் சுஃப்யான் (ரஹ்) அவர்களின் முஸ்னத். (25) முஸ்னதுல் ஹுமைதீ. (26) முஸ்னது ராமஹுர்முஸீ. (27) அபூஸுர்ஆ (ரஹ்) அவர்களின் முஸ்னத் (28) அபூபக்ர் அஹ்மது பின் ஜஅஃபர் அல்குத்தைஈ (ரஹ்) அவர்களின் முஸ்னதுல் அஷரா. (29) அபூஅவானா (ரஹ்) அவர்களின் முஸ்னது அபீஅவானா. (30) அஹ்மது பின் அலீ அல்மவ்ஸிலீ (ரஹ்) அவர்களின் முஸ்னது அபீயஅலா. (31) அபூபக்ர் பின் அஹ்மது அல்பஸ்ரீ (ரஹ்) அவர்களின் முஸ்னதுல் பஸ்ஸார். (32) அஹ்மது பின் சுலைமான் (ரஹ்) அவர்களின் முஸ்னது உமர் பின் அல்கத்தாப். (33) அபூயூசுஃப் அத்தஹபீ (ரஹ்) அவர்களின் முஸ்னது இப்னு ஷைபா. (34) இமாம் மூசா அல்காழிம் (ரஹ்) அவர்களின் முஸ்னத். (35) இமாம் அவ்ஸாஈ (ரஹ்) அவர்களின் முஸ்னதுல் அவ்ஸாஈ. (36) அபீபக்ர் அல்மர்வஸீ (ரஹ்) அவர்களின் முஸ்னதுல் மர்வஸீ. (37) முஹம்மது பின் சலாமா அல்குளாஈ (ரஹ்) அவர்களின் முஸ்னதுஷ் ஷிஹாப். (38) அலீ பின் அல்ஜஅது அல் பஃக்தாதீ (ரஹ்) அவர்களின் முஸ்னது இப்னுல் ஜஅத். (39) ரபீஉ பின் ஹபீப் அல்பஸ்ரீ (ரஹ்) அவர்களின் முஸ்னதுர் ரபீஉ (40) முஸ்னதுஷ் ஷாஃபிஈ.

இவையன்றி இன்னும் பல முஸ்னதுகளும் உள்ளன. ஆயினும், இவற்றுள் மிக பிரபலமானது இமாம் அஹ்மது பின் ஹம்பல் (ரஹ்) அவர்கள் தொகுத்தளித்த இந்த முஸ்னதே ஆகும்.

சர்வதேச அறிஞர்களால் ஏற்கப்பட்ட எண்ணிக்கைப்படி முஸ்னது அஹ்மதில் 26363 நபிமொழிகள் இடம்பெற்றுள்ளன. அவை 14 பெரும் முஸ்னதுகளுக்குள் அடக்கப்பட்டுள்ளன. பெரும் முஸ்னதுகளை நாங்கள் 'முஸ்னது' எனக் குறிப்பிடாமல் 'அத்தியாயம்' என்றே குறிப்பிட்டுள்ளோம். வாசகர்களின் வசதிக்காகவே இவ்வாறு செய்துள்ளோம். இது பற்றி நாங்கள் நூல் அறிமுகம் எனும் பகுதியில் குறிப்பிட்டுள்ளோம்.

முஸ்னது அஹ்மதின் பதினான்கு அத்தியாயங்களுள் ஒன்றாம் அத்தியாயம் மட்டுமே இந்த நூலில் இடம்பெற்றுள்ளது. ஒன்றாம் அத்தியாயம் 'சொர்க்கவாசிகள் என நற்செய்தி கூறப்பெற்ற பத்து நபித்தோழர்கள் வழியாக வந்துள்ள நபிமொழிகள்' என்பதாகும். இதில் பத்து பாடங்களும் 1608 நபிமொழிகளும் இடம்பெற்றுள்ளன. அவை:

1. அபூபக்ர் (ரலி) அறிவித்த நபிமொழிகள் (1-77),
2. உமர் (ரலி) அறிவித்த நபிமொழிகள் (78-298),
3. உஸ்மான் (ரலி) அறிவித்த நபிமொழிகள் (376-529),
4. அலீ (ரலி) அறிவித்த நபிமொழிகள் (530-1308),
5. தல்ஹா பின் உபைதில்லாஹ் (ரலி) அறிவித்த நபிமொழிகள் (1309-1330),
6. ஸுபைர் பின் அல்அவ்வாம் (ரலி) அறிவித்த நபிமொழிகள் (1331-1361),

7. சஅது பின் அபீவக்காஸ் (ரலி) அறிவித்த நபிமொழிகள் (1362-1538),

8. சஈது பின் ஸைத் (ரலி) அறிவித்த நபிமொழிகள் (1539-1566),

9. அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அறிவித்த நபிமொழிகள் (1567-1597),

10. அபூஉபைதா பின் அல்ஜர்ராஹ் (ரலி) அறிவித்த நபிமொழிகள் (1598-1608).

முஸ்னது அஹ்மதில் இடம்பெற்ற 26363 நபிமொழிகளில் 4234 நபிமொழிகள் 'ஸிஹாஹுஸ் ஸித்தா' (ஆதாரபூர்வமான ஆறு திரட்டுகள்) எனச் சிறப்பிக்கப்படும் புகாரீ, முஸ்லிம், திர்மிதீ, நஸாயீ, அபூதாவூத், இப்னுமாஜா ஆகிய நூல்களில் இடம்பெற்றுள்ளன.

இமாம் இப்னு கஸீர் (ரஹ்) அவர்கள் தமது பிரபலமான குர்ஆன் விரிவுரையில், இமாம் அஹ்மது பின் ஹன்பல் (ரஹ்) அவர்களின் இந்நூலிலிருந்தே பெரும்பாலும் மேற்கோள் காட்டுவதிலிருந்து இந்நூலின் முக்கியத்துவத்தை உணரலாம்.

நபிமொழி இயல் வல்லுநரும் ஆய்வாளருமான இமாம் ஷவ்கானீ (ரஹ்) அவர்கள் தமது பிரபலமான 'நைலுல் அவ்தார்' எனும் நூலில், 'முத்தஃபகுன் அலைஹி' (ஒருங்கிணைந்து அறிவித்த ஹதீஸ்கள்) என்று கூறினால், அது புகாரீ, முஸ்லிம் மட்டுமின்றி, முஸ்னது அஹ்மதையும் சேர்த்தே உள்ளடக்கும் என்பது முஸ்னதின் தனிச் சிறப்பைச் சுட்டும் செய்தியாகும்.

ஹதீஸ்களைத் தொகுத்தளித்த இமாம் புகாரீ (ரஹ்), முஸ்லிம் (ரஹ்), திர்மிதீ (ரஹ்) போன்றோருக்கு, அவர்களின் நேரடி வாரிசுகள் யாருமே அவற்றைத் தொகுப்பதில் பங்களிப்புச் செய்யவில்லை. ஆனால், முஸ்னது அஹ்மத் நூலில், இமாம் அவர்களின் புதல்வர் அப்துல்லாஹ் பின் அஹ்மத் (ரஹ்) அவர்களின் பங்களிப்பும் உண்டு.

குறைஷியருள் பத்து நபித்தோழர்கள் குறித்து அவர்கள் சொர்க்கவாசிகள் என நபியவர்கள் முன்னறிவிப்புச் செய்த ஹதீஸ், இதே முஸ்னதில் (1550, 1551, 1558, 1585 ஆகிய ஹதீஸ்களில்) இடம்பெற்றுள்ளது. அந்த பத்துப் பேரும் அறிவித்த நபிமொழிகளை முதல் அத்தியாயத்தில் கொண்டு வந்திருப்பது அந்தப் பத்துப் பேரின் சிறப்புக்கு கட்டியம் கூறுவதாக அமைந்துள்ளது.

இத்தொகுப்பில் சிறப்பான செய்திகளைச் சொல்லும் பல ஹதீஸ்கள் உள்ளன. இஸ்லாத்தின் தனிச் சிறப்புக்கு சான்று பகரும் பல நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன.

இஸ்லாமிய ஆட்சியாளர்களின் நேர்மைக்கு ஏராளமான சான்றுகளை இந்நூலில் காணலாம். உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்களின் ஆட்சியின் போது, தமது செல்வங்களில் தூய்மையை விரும்பிய முஸ்லிமல்லாத மக்களும் 'ஸகாத்' கொடுக்கத் தாமாகவே முன்வந்தனர். அதைப் பெற்றுக்கொள்ள உமர் (ரலி) அவர்கள் தயங்கினார்கள். தமக்கு முன்னிருந்த அபூபக்ர் (ரலி) மற்றும் நபி (ஸல்) அவர்கள் ஆகியோரது காலத்தில் அந்த நடைமுறை இல்லாததால் அவர்களிமிருந்து ஸகாத்தை ஏற்கவில்லை என 78, 213 ஆகிய ஹதீஸ்களில் காண முடிகிறது.

அதிகாரத்திலிருக்கும்போது எவ்வளவு முடியுமோ அவ்வளவு கரண்டல்கள் புரியும் ஆட்சியாளர்களுக்கு இதுபோன்ற செய்திகள் நல்ல பாடமாகும்.

ஏழ்மை நிலையிலும், மார்க்கத்தைப் பயில நபித்தோழர்கள் காட்டிய ஆர்வத்தை 106ஆவது ஹதீஸ் எடுத்துரைக்கிறது.

அடுத்து முஸ்னது அஹ்மத் போன்ற நூல்களை தமிழாக்கம் செய்வது, தமிழாக்கத்தை திருத்தி செம்மைப்படுத்துவது, அதற்கு நூல் குறிப்புகள் அளிப்பது, கருத்துரைகள் வரைவது, அதிலுள்ள ஹதீஸ்களுக்கு தர மதிப்பீடளிப்பது, அதிலுள்ள அறிவிப்பாளர்களின் குறை-நிறை விமர்சனங்களை எடுத்துரைப்பது போன்ற பணிகள் எவ்வளவு கடினமானது என்பதை இத்துறையில் ஆழ்ந்த அறிவு உள்ள அறிஞர்கள் மட்டுமே அறிந்த விஷயம் ஆகும்.

வேறுவிதமாகச் சொல்வதானால் மற்ற நபிமொழி நூல்களைப் போல இதற்கு விரிவுரை நூல்கள் அதிகமாகக் கிடையாது. ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம் போன்ற நூல்களை தமிழாக்கம் செய்வது, அவற்றை மேலாய்வு செய்வது ஆகியவற்றோடு ஒப்பிடும் போது இது பல மடங்கு பாரமான பணியாகும். ஸஹீஹுல் புகாரிக்கு 100க்கும் மேற்பட்ட விரிவுரை நூல்கள் உள்ளன. ஸஹீஹ் முஸ்லிமுக்கு இமாம் நவவீ (ரஹ்) அவர்கள் எழுதிய அல்மின்ஹாஜ் போன்ற அருமையான உரைநூல் உள்ளது.

ஆனால், முஸ்னதுக்கு அத்தகைய உரை நூல்கள் இல்லை. ஓரக் குறிப்புகள் போல அமைந்த அறிஞர் ஷுஐப் அல்அர்னஊத் குழுவினரின் குற்றுரைகள்தான் எங்களுக்கு ஓரளவுக்கு கைகொடுத்தன. மற்றபடி மதீனா முனவ்வராவின் 'அஷ்ஷாமிலா' நிறுவனத்தார் வெளியிட்ட மார்க்க நூல் களஞ்சியமான 'அல்மக்தபத்துஷ் ஷாமிலா' எனும் குறுந்தகடே விரிவான தேடல்களுக்கு வழியமைத்துக் கொடுத்தது.

முஸ்னதில் இடம்பெற்றுள்ள சில ஹதீஸ்கள் ஏற்கெனவே தமிழாக்கம் செய்துள்ள நூல்களில் இடம்பெற்றிருந்தால் அதையே எடுத்தாண்டுவிடலாம். தமிழில் வராவிட்டாலும் உரைகள் உள்ள ஹதீஸ் நூல்களில் இடம்பெற்றிருப்பின் அந்தந்த நூல்களின் விரிவுரைகளுக்குச் சென்றுதான் பார்வையிட்டு தமிழாக்கவும் திருத்தவும் குறிப்பெழுதவும் வேண்டியதாயிற்று. 'அல்ஹர்ஃப்' நிறுவனத்தார் வெளியிட்டுள்ள 'மவ்சூஆ அல்ஹதீஸ் அஷ்ஷரீஃப்' குறுந்தகடு இதற்குப் பெரிதும் உதவியது. உரை இல்லாத நூல்களில் இடம்பெற்ற ஹதீஸ்கள், முஸ்னதில் மட்டுமே இடம்பெற்ற நபிமொழிகள் போன்றவற்றுக்கு என்ன செய்வது?

மேலாய்வாளர்கள் என்ற முறையில் இயன்றவரை மிகவும் முயன்று, தமிழாக்கம் செய்யப்பட்ட ஒவ்வொரு ஹதீஸையும் அரபி மூலத்துடன் ஒப்பிட்டுப் பார்த்து, திருத்தங்கள் இருப்பின் திருத்தங்கள் செய்து, அதை வாசிப்பு ஓட்டத்துக்கேற்ப எளிமைப்படுத்தி, ஒவ்வொரு நபிமொழியும் வேறெந்த நூல்களில் எந்தெந்த எண்களில் இடம்பெற்றுள்ளன என்பன போன்ற குறிப்புகள் வரைந்துள்ளோம்.

ஒவ்வொரு ஹதீஸையும் ஆய்ந்து அது ஆதாரபூர்வமானதுதானா, பலவீனமானதா போன்ற மதிப்பீடுகளை அளித்து, விளக்கம் தேவைப்படும் இடங்களில் கருத்துரைகளையும் வழங்கியுள்ளோம். அதனால்தான் பல்லாண்டுகளை இப்பணி விழுங்கிக்கொண்டது. இதற்காகப் பெருந்தொகை செலவிட்டு மார்க்கச் சேவை செய்துகொண்டிருக்கும் பெருந்தகை M.A.தமீம் அவர்களுக்கு அல்லாஹ் அழகிய நற்கூலியை வழங்குவானாக!

சில ஹதீஸ்கள் அவற்றின் அறிவிப்பாளர்களில் அல்லது அறிவிப்பாளர்தொடர்களில் ஏதேனும் குறையிருப்பதால் பலவீனமடைவதுண்டு. அத்தகைய ஹதீஸ்கள் குறித்து 'இது பலவீனமான ஹதீஸ் ஆகும்' என்று ஒற்றை வாக்கியத்தில் சொல்லிவிடலாம். ஆனால், அதே பொருளில் அமைந்த ஹதீஸ், ஆதாரபூர்வமான வேறு அறிவிப்புகளில் இடம்பெற்றிருக்கலாம். இத்தகைய ஹதீஸ்களை நாங்கள் எங்கள் கருத்துரையில் சுட்டிக் காட்டியுள்ளோம்.

அடுத்து, இந்நூலில் ஒரே ஹதீஸ் பல இடங்களில் இடம்பெற்றிருப்பது ஏன்? முதல் தர ஹதீஸ்கள் மட்டுமன்றி நடுத்தர ஹதீஸ்களும் பலவீனமான ஹதீஸ்களும் இடம்பெற்றிருப்பது ஏன்? என்பன போன்ற வினாக்கள் வாசகர்களுக்கு எழலாம். இது குறித்து நூல் அறிமுகம் எனும் பகுதியில் மிக விரிவாக விடையளித்துள்ளோம்.

இந்நூலில் முஸ்லிம்களின் புழக்கத்தில் உள்ள சில அரபிச் சொற்களுக்கு புதிய தமிழ்ச் சொற்களை நாங்கள் அறிமுகப்படுத்தியுள்ளோம். ஸித்தீக்: பேருண்மையாளர்; ஹிஜாப்: மகளிர் மறைப்பாடை; குஸூஃப்: சூரிய நிழடிப்பு; ஹுஸூஃப்: சந்திர நிழலடிப்பு; ரமல்: நடைபோட்டம்; ஸஹீஹுன் லி தாத்திஹி: சுய ஆதார ஹதீஸ்; ஸஹீஹுன் லி ஃகைரிஹி: புறச்சான்றால் ஆதாரமான ஹதீஸ்; ஹசனுன் லி தாத்திஹி: சுயமாகவே ஹசன் தரத்தில் அமைந்த ஹதீஸ்; ஸஹீஹுன் லி ஃகைரிஹி: புறச்சான்றால் ஹசன் தரத்தை எட்டிய ஹதீஸ்; மஜ்ஹூல்: மர்ம அறிவிப்பாளர்; ஜப்ரிய்யா: தன்னியலாற்றல் மறுப்பாளர்கள்; அர்ஷ்: இறை இருக்கை; மஷீ: இச்சைக் கசிவு; நஃபல்: கூடுதல் வெகுமதி; தவாஃபுல் குதூம்: வருகைநேரச் சுற்றல்; ஷமாயில்: உருவ அமைப்பு வர்ணனை; பித்அத்: புகுத்தப்பட்ட புதுமை; லிஆன்: சாப அழைப்புச் சத்தியம்; ஜம்ரத்துல் ஊலா: கல்லெறியும் முதலிடம்; ஜம்ரத்துல் வுஸ்தா: கல்லெறியும் நடுவிடம்; ஜம்ரத்துல் அகபா: கல்லெறியும் கடையிடம்; அல்முஹல்லில்: தாற்காலிகத் திருமணம் செய்தவன்; அல்முஹல்லலு லஹு: தாற்காலிகத் திருமணத்துக்கு உடந்தையாகச் செயல்படும் முதல் கணவன்.

நாம் ஏற்கெனவே குறிப்பிட்டது போல் முஸ்னது அஹ்மதுக்கு அரபி மொழியில்கூட நிறைவான விரிவுரை இல்லாததால் அந்தக் குறையை எமது இந்தத் தமிழாக்கம் ஓரளவு போக்கும் என்றே நாங்கள் கருதுகிறோம்.

முஸ்னது அஹ்மத், அரபிக் கல்லூரிகளின் பாடத்திட்டத்தில் இல்லாத ஒரு நூல். அதற்குக் காரணம் அதன் கணிசமான ஹதீஸ் எண்ணிக்கையே. இப்போது உலமா பெருமக்களும் இந்த நூலை வாசிக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இந்நூலின் ஒவ்வோர் அத்தியாயமும் 'குறிப்பிட்ட நபித்தோழர் ஒருவர் அறிவித்த நபிமொழிகள்' என்றிருப்பதால் அந்த நபித்தோழரின் வரலாற்றில் சில பகுதிகளை ஒவ்வோர் அத்தியாயம் துவங்கு முன் தனிப் பக்கத்தில் தந்துள்ளோம். இதனால் நபிமொழிகளோடு நபித்தோழர்களின் வரலாறுகளை வாசிக்கும் வாய்ப்பும் வாசகர்களுக்கு கிடைக்கிறது.

மேலோன் அல்லாஹ்வின் மகத்தான உதவியால் ஒன்றுக்குப் பலமுறை மேலாய்வும் மீளாய்வும் செய்து இப்பணியை நிறைவு செய்துள்ளோம். எங்கள் அறிவையும் அனுபவத்தையும் பயன்படுத்தி இப்பணியில் எங்கள் முன்னோடிகள் காட்டித் தந்த வழிமுறைகளையும் கையாண்டு இப்பணியை செய்து முடித்துள்ளோம். இன்ஷா அல்லாஹ், இந்நூல் அனைத்து தரப்பு மக்களுக்கும் பயனளிக்கும் என்பதில் ஐயமேதுமில்லை. குறிப்பாக மக்களை இருள்களிலிருந்து மீட்டெடுக்க நல்லொளி நோக்கி அழைப்பு விடுக்கும் அறிஞர் பெருமக்களுக்கும் அழைப்பாளர்களுக்கும் வழிகாட்டும் என்பதில் சந்தேகமில்லை.

நம்மை அறியாமலே நாம் பல ஹதீஸ்களை எடுத்தாண்டு கொண்டிருப்போம். உண்மையில் அவை பலவீனமான ஹதீஸ்களாய் இருக்கும். அத்தகைய பல ஹதீஸ்கள் 'ஆதாரபூர்வமான திரட்டுகள்' என சிறப்பிக்கப்படும் ஆறு நூல்களிலும் உண்டு. வேறு நூல்களிலும் உண்டு. நபிமொழி மேதைகளின் நாயகர் (இமாமுல் முஹத்திஸீன்) என்றழைக்கப்படும் மூதறிஞர் இமாம் அஹ்மத் (ரஹ்) அவர்களின் பெருந்திரட்டான இதோ இந்த முஸ்னதிலும் அத்தகைய ஹதீஸ்கள் உண்டு.

செம்மொழி அரபியிலுள்ள இந்நூல்கள் முழுவதையும் செம்மொழித் தமிழுக்கு கொண்டுவராமல் நல்லதையும் அல்லதையும் எப்படி பிரித்தறிய இயலும்? இதற்காகவும் மார்க்கத்தை அதன் மூலாதாரங்களோடு மக்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவும் இப்பணியைத் தொட்டுத் தலைமேற்கொண்டு தொடர்ந்து செய்துகொண்டிருக்கும் பதிப்பாளரும் ரஹ்மத் அறக்கட்டளையின் அறங்காவலருமான M.A. தமீம் அவர்களுக்கும் அவர்களுடைய குடும்பத்தாருக்கும் வல்ல அல்லாஹ் எல்லா வளங்களையும் இம்மையிலும் மறுமையிலும் வழங்கட்டும் என மனதாரப் பிரார்த்திக்கிறோம்.

அரபிமொழியிலிருக்கும் எந்தவொரு நபிமொழி நூலும் தமிழுக்கு வராமல் போய்விடக்கூடாது என்ற இலக்குக் கொண்ட இன்னும் பல நிறுவனங்கள் தோன்ற வேண்டும். அதற்குத் தேவை பணம் மட்டுமல்ல; மனமும்தான். அந்த இலக்கை நோக்கி இயங்கிவரும் ரஹ்மத் அறக்கட்டளை குடும்பத்தாருக்கு வாசகர்களாகிய உங்களின் ஒத்துழைப்பும் தேவை! எங்கள் அறக்கட்டளை வெளியிடும் நூல்களை நீங்கள் வாங்கி வாசிப்பதும் வாசிப்பவர்களுக்கு வாங்கிக் கொடுப்பதும் இப்பணிக்கு நீங்கள் அளிக்கும் ஒத்துழைப்பாகும். வசதி படைத்தவர்கள் உங்கள் ஊர்களிலுள்ள பள்ளிவாசல்கள், மதரசாக்கள், நூலகங்கள் ஆகியவற்றுக்கு இந்நூல்களை வாங்கி வக்ஃப் செய்யுங்கள். நிலையான நன்மைகளின் பயனை உங்கள் இறப்புக்குப் பிறகும் நீங்கள் அடைந்து கொள்ள முடியும்.

மனிதன் பலவீனமானவன்தான். அவன் செய்த வேலைகளில் குறை காணப்படுவது இயல்பு. குறையற்றவன் அல்லாஹ் ஒருவனே! எனவே, இத்தமிழாக்கப் பணியில் குறைகள் ஏதும் தென்பட்டால் எங்களுக்குத் தெரிவியுங்கள். அதைப் பரிசீலித்து இன்ஷா அல்லாஹ், அடுத்த பதிப்பில் சீர் செய்துகொள்வோம்.

இந்நூல் வெளிவரத் துணை புரிந்த அல்லாஹ்வுக்கு மீண்டும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, அதற்காக எல்லா விதமான உதவிகளையும் செய்துவரும் ரஹ்மத் அறக்கட்டளை அறங்காவலர் எம். ஏ. தமீம் அவர்களுக்கும் அவர்களின் குடும்பத்தாருக்கும் இறைவன் நிறைவான சாந்தியையும் நிலையான நல்வாழ்வையும் வழங்குவானாக! அவர்களின் எல்லா நல்ல முயற்சிகளையும் நிறைவேற்றித்தருவானாக எனப் பிரார்த்திக்கிறோம்.

மௌலவி எம். முஹம்மது யூசுப் மிஸ்பாஹீ

மௌலவி சா. அப்துந் நாஸிர் ஃபாஸில் பாகவி

(மேலாய்வாளர்கள்: ரஹ்மத் பப்ளிகேஷன்ஸ் - சென்னை)



பெருநூல் அறிஞரின் அரும்பணி அறிவோம்

பேராசிரியர், ஏரல் ஜே. அஷ்ரஃப் அலீ M.A., M.phil

(மதுரை, வக்ஃபு வாரியக் கல்லூரியின் முன்னாள் பொருளியல் பேராசிரியர்)

உலகெலாம் படைத்து உயர்வுறக் காக்கும் அல்லாஹ்வுக்குகந்த வாழ்க்கை நெறியே இஸ்லாம் சீரான, சிறப்பான இப்பெருநெறிக்கு அடிப்படையாக அமைவன, அருள்மறை குர்ஆனும், நபியின் தகைமிகு வாழ்வும் வாக்கும். நபிமணி (ஸல்) வாழ்வு பற்றிய வினாவுக்கு, அன்னை ஆயிஷா (ரலி) அவர்கள் தந்த விளக்கம், 'கான குலுக்குஹு' அல்குர்ஆன' (நபி (ஸல்) நடைமுறை குர்ஆனாக இருந்தது) என்பதே

திருமறை அறிவும் திருநபி முறையும் ஒன்றுக்கொன்று விளக்கமாக அமைவது மறுக்க முடியாத உண்மை. எனவே, இவற்றின் அறிவும் ஆழமும் அளவிடற்கரியது இவற்றின் மீது ஏற்படும் நட்பும் நேசமும் கூட, நவில்வதற்கரியதேயாகும். நாயகக் கண்மணி (ஸல்) அவர்கள்பால் கொண்ட நேசமே 'ரஹ்மத் அறக்கட்டளை'யினரின் 'முஸ்னது அஹ்மது - நபிமொழித் தொகுப்பு' எனும் அரும்பெரும் பணியாகும்.

குர்ஆனின் 'அல்மாயிதா' அத்தியாயத்தின் 67ஆவது திருவசனம், "தூதரே! உம்முடைய இறைவனிடமிருந்து உம்மீது இறக்கி வைக்கப்பட்டதை (மனிதர்களுக்கு) எடுத்துரைப்பீராக! (அவ்வாறு) நீர் செய்யவில்லையானால், அவனுடைய தூதை (முற்றிலும்) நீர் எடுத்துரைத்தவராக மாட்டீர். மனிதர்களி(ன் தீங்கி)லிருந்து அல்லாஹ் உம்மைக் காப்பாற்றுவான்." என விரிகின்றது.

அண்ணல் நபி (ஸல்) அவர்களின் அருள்மொழியிலும், 'எடுத்துரைப்பீராக!' என்ற சொல்லே இடம்பெற்றுள்ளது "என்னிடமிருந்து ஒரேயொரு செய்தி கிடைத்தாலும், அதைப் பிறருக்கு எடுத்துரையுங்கள்!" (ஸஹீஹுல் புகாரீ: 3461).

அண்ணல் நபியின் கன்னல் மொழிகளைக் கற்பது, பெரும் பேறு. பல்வேறு ஹதீஸ் தொகுப்புகள் தமிழ் மொழியில் வெளிவந்துள்ளமை, பெரிதும் போற்றுதற்குரியது. பிற ஹதீஸ் தொகுப்புகளிலிருந்து 'முஸ்னது'த் தொகுப்பு முறை வேறுபடுகிறது. நபித்தோழர் ஒவ்வொருவரும் அறிவித்த ஹதீஸ்களை, அவர்களின் பெயரில் அல்லது, அவர் சார்ந்த குலத்தாரின் பெயரில் தனித்தனியே தரும் நபிமொழி நூலுக்கே ஹதீஸ் துறையினர் வழக்கில் 'முஸ்னது' என்பர். இவ்வகையில், 'முஸ்னது அஹ்மத்' தனித்துவம் மிக்கதாக உள்ளது.

ஏராளமான நபிமொழிகளிலிருந்து தேர்வு செய்யப்பட்டவற்றையே இமாம் அஹ்மது பின் ஹன்பல் (ரஹ்) தமது தொகுப்பில் இடம்பெறச் செய்துள்ளார்கள் முஸ்னது அஹ்மதில் மொத்தம் 26363 ஹதீஸ்கள் இடம்பெற்றுள்ளன. இந்த முதல் தொகுதியில் மொத்தம் 1608 ஹதீஸ்கள் இடம்பெற்றுள்ளன. முஸ்னது அஹ்மத் நூலின் அறிமுகம் சிறப்பாகத் தரப்பட்டுள்ளது. பெரும் எண்ணிக்கையிலான, ஆதாரபூர்வமான அறிவிப்பா

ளர்தொடரில், பல்வேறு கருத்துகளைக் கொண்டதாக அமைந்துள்ள 'முஸ்னது அஹ்மத்' தமிழில் மலர்ந்திருப்பது பெறற்கரிய பேறாகும்.

அணிந்துரைக்காக இந்நூலின் படிகளை வாசித்துக்கொண்டிருந்தபோது, என்னுடைய கவனத்தைக் கவர்ந்த நபிமொழிகள் சிலவற்றைச் சுட்டிக் காட்ட விழைகின்றேன்:

1. நபி பெருமானார் (ஸல்) அவர்கள் தம் அருமைப் புதல்வி ஃபாத்திமா (ரலி) அவர்களுக்கு உதவியாகப் பணியாள் கொடுப்பதற்குப் பகரமாக, ஒவ்வோர் இரவும் ஓத வேண்டுமென்று பணித்த 'தஸ்பீஹு'கள் (சுப்ஹானல்லாஹ்-33, அல்ஹம்து லில்லாஹ்-33, அல்லாஹு அக்பர்-34 தடவை) ஓதுவதால், அன்றைய உடல் களைப்பு நீங்குமென்ற ஹதீஸ் (எண்: 570) என்றென்றும் எல்லாராலும் ஓதிப் பயன் பெறத் தகுந்ததாகும்.

2. பற்களை ஆரோக்கியமாகவும் தூய்மையாகவும் வைத்துக்கொள்ள நபி (ஸல்) பணிப்பது, தம் சமுதாயத்திற்குத் தொல்லை கொடுத்துவிடுவது என்றில்லாவிட்டால், ஒவ்வொரு தொழுகையின்போதும் அவர்களைப் பல் துலக்குமாறு நபியவர்கள் கட்டளையிட்டிருப்பார்கள் என்ற நபிமொழிக் குறிப்பு (ஹதீஸ் எண்கள்: 573, 921), பல் துலக்குதல் உடலாரோக்கியத்தின் அடிப்படை அம்சமாக உள்ளது என்ற உண்மையை உணர்த்துகின்றது.

இதனைக் குறிப்பிடும்போது, அண்மையில் Readers Digest *எனும் ஆங்கிலப் பத்திரிகை வெளியிட்ட ஒரு மகத்தான மருத்துவ உண்மைச் செய்தியை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்வதில் நான் மகிழ்கிறேன்.*

அதாவது, பற்களைத் தூய்மை செய்யாதிருப்பது, இதய நோய்கள், Alzheimer's *போன்ற ஆபத்தான நோய்கள் வருவதற்குக் காரணமாகும் என்று அமெரிக்காவின்* University of Kentucky*யில் நடந்த ஆய்வுக் குறிப்பொன்று கூறுகின்றது.*

- (ரீடர்ஸ் டைஜஸ்ட், நவம்பர்-2008)

3. முஸ்லிம்களில் 'ஷீஆ' என்ற பிரிவினர், அலீ (ரலி) அவர்களுக்கு மட்டும் நபி (ஸல்) அவர்கள் சிறப்பான வழிகாட்டல்கள் சிலவற்றைக் கூறிச் சென்றுள்ளார்கள் என்று பிரசாரம் செய்கின்றனர். அதனைப் பொய்ப்படுத்தும் விதமாக, அலீ (ரலி) அவர்களே கூறும் நபிவழிப் போதனைகள் (ஹதீஸ் எண்கள் 813, 816), வாசகர்களின் கவனத்தை ஈர்த்து வழிகாட்டத் தக்கவை.

அருள்வளமும் அறிவுத்திறனும் மிக்க இமாம் அஹ்மது பின் ஹன்பல் (ரஹ்) அவர்களின் தொகுப்பு நூலைப் பதிப்பிப்பது, பெரும் நன்றிக்குரிய சமூகப் பணியாகும்.

நூலாசிரியர் சிறப்பினைப் போன்று, 'முஸ்னது' நூலின் சிறப்பும் நுவலும் பான்மைக்குரியது. நபித்தோழர் வழியாக வந்துள்ள நபிமொழியை அறிவிப்பது மட்டுமே முஸ்னதின் நோக்கம். இத்தகைய தொகுப்பு முறையின் சிறப்புகள் பல. ஒருவர் அறிவித்த அனைத்து ஹதீஸ்களையும் அறிவிப்பாளர் (சனது) வரிசைப்படி அறிந்துகொள்ள முடியும். குறிப்பிட்ட நபித்தோழர் வழியாக வந்துள்ள ஒரு நபிமொழி, வேறொரு முஸ்னதிலும் இடம்பெறுவதுண்டு.

முஸ்னதில் பல தரங்களிலும் அமைந்த ஹதீஸ்கள் இடம்பெற்றுள்ளன. சுயமாகவே ஆதாரபூர்வமான ஹதீஸ்கள்; புறச்சான்றுகளால் ஆதாரபூர்வமானவை; சுயமாக ஹசன் தரத்தில் அமைந்தவை; புறச்சான்றுகளால் ஹசன் தரத்தை எட்டியவை; நம்பத் தக்க வலுவான ஹதீஸ்களுக்கு மேலும் உறுதி கூறும் உறுதுணை ஹதீஸ்கள்; 'ளஈஃப்' எனும்

பலவீனமான ஹதீஸ்கள் எனப் பல பிரிவுகள் உள. முஸ்னது அஹ்மதின் வகைமை (பிரிவு) சிறப்பாக அமைந்துள்ளது. இத்தொகுப்பில் முஸ்னது அஹ்மத் நூல் அறிமுகம் தெளிவாகத் தரப்பட்டுள்ளது.

'மஜ்மஉஸ் ஸவாயித்' என்ற நூலின் ஆசிரியர் நூருத்தீன் அல் அல்ஹைஸமீ (ரஹ்) அவர்கள் 'முஸ்னது அஹ்மத் இன்னபிற நபிமொழி நூல்களைவிட ஆதாரத் தன்மை மிக்க கொண்டதாகும்' என மொழிந்துள்ளமை சிந்தனைக்குரியதாகும். முஸ்னது அஹ்மதில் புகாரீ, முஸ்லிம், திர்மிதீ, அபூதாவூத், நசாயீ, இப்னுமாஜா முதலான பல ஹதீஸ் நூல்களில் இடம்பெற்றுள்ள நபிமொழிகளும் இடம்பெற்றுள்ளன.

இவற்றைக் குறிப்பிட்டுக் காட்டும் அடிப்படையிலேயே, இத்தொகுதியில் இடம் பெறும் அடிக்குறிப்புகளில் பிற நூல்களில் காணப்படும் அவைபோன்ற ஹதீஸ்களின் எண்கள் பார்வைக்குத் தரப்பட்டுள்ளன. இமாம் இப்னு கஸீர் (ரஹ்) அவர்கள் தமது குர்ஆன் விளக்கவுரையில் அறிஞர் அஹ்மது பின் ஹன்பல் (ரஹ்) அவர்களின் நூலிலிருந்தே அதிகமான ஹதீஸ்களை மேற்கோள் காட்டியுள்ளமையை 'இப்னு கஸீர்' குர்ஆன் விளக்கவுரை படிப்போர் அறிய முடியும்.

நபி (ஸல்) அவர்களின் சொல்-செயல்களை அறிவிப்பாளர்களின் சங்கிலித் தொடர் போடு நாம் காணுகின்ற, கற்கின்ற பேறு கிடைத்தமைக்கு இறைவனுக்கு நன்றி கூறி, இமாமுக்குச் சிறப்பான அருட்பேற்றை அல்லாஹ் நல்கிடவும், முஸ்னது அஹ்மதின் தமிழாக்க விளக்கம் வெளியிடும் 'ரஹ்மத் அறக்கட்டளை அறங்காவலர் எம். ஏ. தமீம் அவர்களுக்கு அனைத்து நலன்களும் வழங்கிட வல்ல அல்லாஹ்வை இறைஞ்சுகின்றோம்.

'முஸ்னது அஹ்மது' எனும் பெருநூல் அருமையாக நாம் பெறவேண்டிய புதையலாம். இத்தகு முயற்சியில் ரஹ்மத் அறக்கட்டளை ஈடுபட்டிருப்பது, தமிழ் உலகம் பெற்றுள்ள பேறாகும். நிறைவாக, 'நபிமணி மாலை' தந்த இறையருட் கவிமணியின்,

"அகமதெனும் பெயர்தாங்கி அவனிவரு பேரறிஞர்
அகமதிலே தங்கிவிட்ட அன்புருவே நாயகமே
பாருலகின் பெருமணமே பவர்துயர வருமணமே
சீருலவும் ஒருமணமே சிந்தையொளிர் நாயகமே"

எனும் வாழ்த்துடனும்,

இறைவா! எங்கள் பெருமானார்
ஏந்தல் முகம்மது நபிமீது
குறைவா நோக்கும் ஸலவாத்தைக்
குன்றா தென்றும் சொரிந்தருள்வாய்"

எனும் இனிய துஆவுடனும் விடைபெறுகின்றேன்.

– பேரா. ஏரல் ஜே. அஷ்ரஃப் அலீ

நபிமொழிகள் - ஓர் அருட்கொடை

டாக்டர் ஜைனுல்லாஹ் ஹுஸைனி

சென்னை, கீழ்ப்பாக்கம் மருத்துவமனையின் முதன்மை மருத்துவர் (ஓய்வு)

அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். அவனையே புகழ்கின்றோம். அவனிடமே உதவியும் தேடுகின்றோம். மன்னிப்பும் கோரி நிற்கிறோம். அவன் அளவற்ற அருளாளன். நிகரற்ற அன்புடையோன். தன் அருளைத் தன்னுடைய அடியார்களுக்கு நேர்வழி காட்டுவதைக்கொண்டு முழுமைப்படுத்தினான்.

அல்லாஹ் கூறுகிறான்: இன்று நான் உங்களுக்கு உங்களுடைய (இஸ்)மார்க்கத்தை முழுமையாக்கி வைத்து, என்னுடைய அருளையும் உங்கள் மீது முழுமையாக்கி வைத்துவிட்டேன். உங்களின் இந்த இஸ்லாம் மார்க்கத்தைப் பற்றியும் திருப்தியடைந்தேன். (அல்குர்ஆன் 5:3).

அல்லாஹ் முழுமையாக்கிய இஸ்லாம், இன்று நமக்கு குர்ஆன், ஹதீஸ் எனும் எழுத்துகளாகவும், நபித்தோழர்களின் வழிமுறை எனும் செயல்வடிவமாகவும் இருந்து வருகிறது. அல்லாஹ்வின் மகத்தான அருட்கொடை அவன் தனது மார்க்கத்தைச் சொல் வடிவம், செயல் வடிவம் இரண்டின் மூலமும் நமக்கு விளக்கியிருப்பது.

இந்த விளக்கத்தை முதன்முதலில் நபியவர்களிடமிருந்து அவர்களுடன் வாழ்ந்த தோழர்கள் பெற்றுக்கொண்டார்கள். அதன்பின், அத்தோழர்கள் நபியவர்களைச் சந்திக்காத அடுத்த தலைமுறைக்கு எடுத்து விளக்கினார்கள். அவர்களிடமிருந்து பெற்றவர்கள், தங்களை அடுத்த தலைமுறைக்கு அதை விளக்கினார்கள்.

இப்படியே நபிமொழி, தொடர்ந்து பல தலைமுறையினரிடமிருந்து நமக்குக் கிடைத்துள்ளது. அல்லாஹ் தனது மார்க்கத்தை தன் நல்லடியார்கள் பலர் மூலம் பாதுகாத்து நம்மீது அளவில்லாக் கருணை புரிந்துள்ளான்.

அத்தகைய நல்லடியார்களுள் ஒருவரின் தொகுப்பு நூலையே இப்போது நாம் தமிழில் பெற்றிருக்கிறோம். அவர்தாம் இமாம் அஹ்மது பின் ஹன்பல் (ரஹ்மத்துல்லாஹி அலைஹி) ஆவார்கள். ஹிஜ்ரி இருநூறுகளில் வாழ்ந்த இவர்கள், ஹதீஸ் துறைக்கு அளப்பரிய சேவை செய்திருக்கிறார்கள். இறையருளால் இவர்களின் 'முஸ்னது' எனும் தொகுப்பு ஹதீஸ்துறை அறிஞர்கள் அனைவராலும் போற்றப்பட்டது; போற்றப்படுகிறது; இன்ஷா அல்லாஹ் இனியும் போற்றப்படும்.

ஹதீஸ் தொகுப்புகளில் 'முஸ்னது' என்பது தனிச்சிறப்புடன் கூடிய வகையாகும். குறிப்பிட்ட சட்டங்கள் சார்ந்த ஹதீஸ்களை ஒரு தலைப்பின் கீழ் தொகுத்துத் தரும் நூல்களையே பொதுவாக நாம் அறிந்து வைத்திருக்கிறோம். ஆனால், குறிப்பிட்ட அறிவிப்பாளர்கள் சார்ந்த ஹதீஸ்களைத் தொகுத்துத் தரும் நூல்களை அறிவோமா என்றால், இல்லை என்பதே பெரும்பாலோரின் பதிலாக இருக்கும்.

இப்போதோ, 'முஸ்னது' வந்துவிட்டது. குறிப்பிட்ட அறிவிப்பாளர்களின் ஹதீஸ்களை ஒரு குடையின் கீழ் படித்தறிய இது வழிவகுக்கிறது. முஸ்னதின் சிறப்பே இதுதான்.

அதிலும் குறிப்பாக, இமாம் அஹ்மது (ரஹ்) அவர்களின் 'முஸ்னது', வரலாற்றில் நீங்கா இடம்பெற்றுவிட்ட ஒன்றாகும். பல 'முஸ்னது'கள் அறிஞர்களால் தொகுக்கப் பட்ட போதிலும், 'முஸ்னது' என்றாலே அது இமாம் அஹ்மது (ரஹ்) அவர்களின் தொகுப்பைத்தான் குறிக்கும் எனுமளவிற்குப் பிரபலமாகிவிட்டது இந்த நூல். ஏனெனில், நபிமொழித் தொகுப்புகளில் புகாரீ, முஸ்லிம், திர்மிதீ, அபூதாவூத், நஸாயீ, இப்னுமாஜா ஆகிய ஆறு பெருநூற்களின் பல செய்திகள் இதில் நிரம்பிக்கிடக்கின்றன. ஏன், இந்த ஆறு பெருநூற்களும் இமாமவர்களின் முஸ்னதிற்குப் பிறகே தொகுக்கப்பட்டன.

இமாம் யஹ்யா பின் மயீன் (ரஹ்) அவர்களின் பின்வரும் வாசகம் மிகத் தெளிவாக உணர்த்துகிறது:

"அல்லாஹ்வின் மீது ஆணையாக! வான் முகட்டுக்குக் கீழே அஹ்மது பின் ஹம்பல் (ரஹ்) அவர்களைவிட மிகச் சிறந்த மார்க்கச் சட்ட அறிஞர் (ஃபகீஹ்) எவருமில்லை. அவருக்கு நிகரான ஒருவர்கூட கிழக்கிலும் இல்லை; மேற்கிலும் இல்லை."

இத்தகைய இமாமின் நூலையே இன்று ரஹ்மத் அறக்கட்டளையினர் தமிழில் தர முயன்றுள்ளார்கள். ஏற்கனவே புகாரீ, முஸ்லிம் போன்றவை தமிழில் வெளிவந்திருந்தாலும், அவற்றுக்கு இல்லாத ஒரு முக்கியச் சிறப்பு இந்நூலுக்கு உண்டு.

ஆம்! இந்நூல் நாற்பெரும் இமாம்களுள் ஒருவரின் நூல். நம்மவர்களுக்கு அந்த இமாம்களின் பெயர்கள்தான் தெரியுமே தவிர, அவர்களின் மகத்தான நூல்களைத் தெரியாது. அந்நூல்களில் நிறைந்து வழியும் ஞானம் தெரியாது.

அதற்குக் காரணமும் உண்டு. தமிழில் அந்த இமாம்களின் நூல்கள் எதுவும் வெளியிடப்படவில்லை என்பதே முக்கியக் காரணம். அந்தக் குறை, இமாம் அஹ்மது பின் ஹம்பல் (ரஹ்) அவர்களின் இந்நூல் வெளிவருவதிலிருந்து களையப்படுகிறது. அல்ஹம்து லில்லாஹ்!

பதிப்பாளரும் ரஹ்மத் அறக்கட்டளை அறங்காவலருமான எம். ஏ. தமீம் அவர்களையும் இப்பணியில் தங்களை ஈடுபடுத்திக்கொண்டோர் அனைவரையும் அல்லாஹ் பொருந்திக்கொள்வானாக! இதன் மூலம் தங்கள் வாழ்வைச் சீராக்கிக்கொண்ட நல்லடியார்களையும் பொருந்திக்கொள்வானாக!

டாக்டர் ஹமீதுல்லாஹ் ஜீலானீ

நபிமொழி இலக்கியத்தில் ஒரு புதிய பார்வை

காழீ முஹம்மது கிஃபாயத்துல்லாஹ் தாவூதீ, பாஜில் ஜமாலி, பாகவி
தமிழ்நாடு அரசு காழீ, ஈரோடு மாவட்டம்;
வேலூர் 'பாக்கியாத்துஸ் ஸாலிஹாத்' வெளியிடான
'ஜவாஹிருல் குர்ஆன்' தமிழ் தஃப்ஸீர் விரிவுரையாளர்

வாழ்க்கையின் முப்பரிமாணங்களை இறையொளி கொண்டு புலப்படுத்தும் இறைத் தூதரின் மணிமொழிகளின் தொன்மைமிகு புனிதப் பதிப்பே 'முஸ்னது அஹ்மத்' எனும் நூலாகும். இமாமுல் முஹத்திஸீன் அஹ்மது பின் ஹன்பல் (ரஹ்) அவர்கள் இந்நூலைத் தொகுத்தளித்தார்கள்.

மெய்ப் பேரிலக்கியத் திரட்டான இச்சுவடி-இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கைகள், போதனைகள், ஆகுமானதும் ஆகாததுமான சட்டக் கூறுகள் போன்ற பல்வேறு அம்சங்களைத் தனக்குள் பொதிந்து கொண்டுள்ளது. இஸ்லாத்தின் எழிலான ஓரிறைக் கோட்பாட்டை முன்னிலைப்படுத்தி நல்லறம், ஆகுமான பொருள், நிலையான இன்பம் எவையென இறைவன் விவரித்த அனைத்தையும் அண்ணல் நபி முஹம்மது (ஸல்) அவர்களின் சொல்லாடல்களின் மூலம் மின்னொளியாய்ப் பாய்ச்சிடச் செய்கிறது.

இஸ்லாமிய சமயப் பரப்புரைக்குச் சான்றுகள் பல்லாயிரங்கொண்ட இப்பதிவேடு பலகோடி நம்பிக்கையாளர்களை ஆன்மப் படிக்கட்டுகளில் ஏறவைத்துள்ளது.

14 அதிகாரங்கள் கொண்ட இந்நூலில் ஒவ்வொரு காலக் கட்டத்திலும் இறைத் தூதர் முஹம்மது நபி (ஸல்) வாயிலாக மனித சமுதாயம் பெறவேண்டிய வழிகாட்டல்கள், அத்தூதரின் அருந்தோழர்கள் தந்த விளக்கங்கள் சுட்டிக் காட்டப்பெற்றுள்ளன. இறை தூதர்கள் மூலம் உலகினருக்கு அறிவுறுத்தப்பெற்ற இஸ்லாமிய அடிப்படைக் கோட்பாடுகளின் ஒட்டுமொத்தச் சாறாகவே - அருட்தூதர் முஹம்மது (ஸல்) அவர்களின் 'சுன்னா' எனும் வழி காட்டல் அமைந்துள்ளது என்பதை இப்பெருநூலை மேம்போக்காகப் படித்தாலே புரிந்துகொள்ளலாம்.

இதில் இடம்பெற்றுள்ள பதியல் நிகழ்வுகள் ஒவ்வொன்றும் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மறைந்து பலகாலங்களுக்குப் பின்னரே பதிவு செய்யப்பெற்றவை. புதுமைக் கால அறிவியல் சிந்தனைகளில் சிறைப்பட்டுள்ள மனிதனை பூமிக்கும் வானத்துக்குமிடையிலான 'வஹீ' வலைப் பின்னலுக்குள் கொணர்ந்து விழிப்படையச் செய்து புத்துயிரூட்டுபவை.

நபிமொழி இலக்கியத்தில் ஒரு புதிய பார்வையை உருவாக்க முனைந்ததன் மகா வெற்றிப் படைப்பே "முஸ்னது அஹ்மத்" எனும் இப்பேரிலக்கியம். நபித்தோழர்

ஒவ்வொருவரும் அறிவித்துள்ள ஹதீஸ்களை அவர்களின் பெயரில் அல்லது அவர் சார்ந்த குலத்தாரின் பெயரில் தனித்தனியே தொகுத்துத் தரும் முறையில் இப்பதிப்பு வெகு நுட்பமாக அமைக்கப்பெற்றுள்ளது! நபிமொழி இலக்கிய வகைகளில், 'முஸ்னது அஹ்மத்' ஒரு சன்மார்க்க நெறிப் புதினம் என்று சொன்னால் மிகையாகாது.

'முஸ்னது அஹ்மத்' அண்ணல் நபி (ஸல்) அவர்கள் காலத்துக்குப் பின் -நபியவர்களின் அருமைக் குடும்பத்தினர், அருமைத் தோழர்களுடன் மிக நெருக்கம் பெற்ற- இமாம் அஹ்மது பின் ஹன்பல் (ரஹ்) அவர்களால் கோவை செய்யப்பெற்ற 26363 ஹதீஸ்களைக் கொண்டதோர் அருந்திரட்டு என்பது பொதுவான கணிப்பாகும். கீழ்மேலை நாட்டு இஸ்லாமிய இலக்கிய மெய்த்திரட்டாய்வாளர்களின் முடிவும் இதுவே. மிகுந்த நிபுணத்துவம் பெற்ற இஸ்லாமிய சமயக் கலைவல்லுநர்களாய் நபித்தோழர்கள் திகழ்ந்து வந்தார்கள்.

நபித்தோழர்களின் மாணவர்களான தாபிஈன் அறிஞர்களின் ஒருமித்த கருத்தும் இதுவே. முஸ்னது அஹ்மத் தொகுக்கப்பெற்ற காலத்தில் வாழ்ந்த ஹதீஸ்கலை வல்லுநர்கள் இதேபோன்றே சிறிதும் பெரிதுமான "முஸ்னது"களைத் திரட்டி வைத்திருந்தார்கள். அவற்றில் சில இமாம் அஹ்மது பின் ஹம்பல் (ரஹ்) அவர்களின் பார்வைக்கும் வந்தன. இமாம் அவர்களின் நிபந்தனைகளுக்குட்பட்ட பதிவுகள் சிலவற்றை இத்திரட்டிலும் சேர்த்துக்கொண்டார்கள். இவையனைத்தும் ஃபிக்ஹுச் சட்ட வல்லுநர்களின் சிறந்த ஆவணங்களாக ஏற்கப்பெற்றுள்ளன.

இந்தியாவில் கடந்த 14 நூற்றாண்டுகளாய் கீழைநாடுகளின் ஹதீஸ்கலை நிபுணர்கள் முஸ்னது அஹ்மதை விலாவாரியாக விவரிக்கும் பணியில் ஈடுபட்டுவருகிறார்கள். ஆனால், ஆதாரபூர்வமான அறுநூல்களான 'ஸிஹாஹ் சித்தா'வைப் போல இதுவும் ஒரு ஹதீஸ் பாடநூலாக இஸ்லாமியக் கல்லூரிகளில் இதுவரை வைக்கப்படவில்லை. ஸஹீஹுல் புகாரியைப் போல மும்மடங்குப் பதிவுகள் இதில் இடம்பெற்ற பெருநூலாய் இருப்பது ஒரு காரணமாக இருக்கலாம். இருப்பினும் ஹதீஸ் விளக்கவுரைகள் அனைத்திலும் முஸ்னது அஹ்மதின் பதிவுகள் பல சான்றுகளாய்க் கோடிட்டுக் காட்டப்பெறுகின்றன.

ஐயக் கருத்துகளுக்கு இடந்தராமல் வாய்மைக் கருவூலமாய் விளங்கும் 'முஸ்னது அஹ்மத்' முழுக்க தமிழ் கூறும் நல்லுலகுக்குத் தர ரஹ்மத் அறக்கட்டளை முனைந்திருப்பது பேரருளாளனின் பெருங்கருணை என்பதை இங்கு நினைவுபடுத்த வேண்டியதில்லை.

கடந்த இரண்டு நூற்றாண்டுகளாக அதிலும் குறிப்பாக அச்சுப் பதிப்பின் ஆரம்பக் காலந்தொட்டு அகிலமெங்கும் இஸ்லாமியக் கலைக் கருவூலங்களின் அரபிமொழிப் பதிப்புகள் அபரிமிதமாய் வெளிவரத் தொடங்கிவிட்டன. ஆயிரமாயிரம் பக்கங்களைக் கொண்டிலங்கும் வேதவிளக்க ஞான உரைகளைப் பதிப்பித்தல் எனும் பளுவான பணியை அநாசியமாகச் சுமந்துகொண்டு இறைவனின் வெகுமதியை மட்டுமே வேண்டலாய்க் கொண்ட இம்மனிதர்கள் போற்றத் தக்கோரே!

பல்வேறு மதப் பரப்பாளர்கள் இஸ்லாமிய இலக்கியங்களை இளப்பமாக விமர்சித்துக்கொண்டிருந்த காலகட்டத்தில் அதைப் பெரிதுபடுத்தாமல் உண்மையின் உரைகற்களை உருவாக்கிடும் திட்டமுனைப்பில் அவர்கள் தீவிர சிந்தனையுடன் செயல்பட்டதன் விளைவே அவ்வுரைகள். இவ்வணிந்துரைக் குறிப்புத் தேடலுக்கான தடயங்கள் அவையே.

ஃபிக்ஹுக் கலைப் பட்டறையில் முஸ்னது அஹ்மதுவின் பொழிவு கணிசமானது. நம்பகமான 'இஸ்னாது'களை இலக்காய்க் கொண்ட முஸ்னது அஹ்மதின் பதிவுகளே அதன் தலைசால் தரவுகள்.

மிக்க கருணர்வு கொண்ட இமாமவர்களால் தொகுப்பெற்ற இம்மாபெரும் நூல் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் குறித்து புதருவது செய்துவரும் இருண்மையான அச்சிடுகளை வகைப்படுத்தி எரிக்கும் தணலாய் விளங்குகிறது. பல இனத்தவரும் பல்வினச் சமயத்தவர்களும் வாழும் இப்பூவுலகில் இனிய இஸ்லாமிய வாழ்வு நெறியை இலேசாக இதயங்களுள் பதியச் செய்வதில் இந்நூல் காத்திரம் முன்னிலை வகிக்கிறது எனலாம்.

அரபிமொழியாளர்கள் மட்டுமே அறிவுபெற முடியுமென்றிருந்த நிலைமாறி முஸ்னது அஹ்மத் இன்று நெஞ்சையள்ளும் வகையில் தமிழாக்கம் பெற்றுள்ளது. அல்ஹம்து லில்லாஹ். இதில் இடம்பெற்றுள்ள நூல் அறிமுகம், அகர வரிசை பொருள் அட்டவணை, கலைச் சொல் அகராதி, இமாம் அஹ்மது பின் ஹன்பல் (ரஹ்) அவர்களின் வாழ்க்கை வரலாறு, ஹதீஸ்கலை வழக்குச் சொற்கள் ஆகியன இதுவரை இவ்வாறான நூல்கள் எதிலும் காணப்பெறாத வகையில் வெகு நேர்த்தியாக விளக்கப்பட்டுள்ளன. இத்தொகுப்பை உருவாக்குவதில் அயராது நின்ற இமாமவர்களின் கடும் பிரயத்தனங்களுக்கு இவை சான்றுகளாய்ப் பரிணமிக்கின்றன எனலாம்! ஹதீஸ் அறிவிப்பாளர்களைக் குறித்த அடிக்குறிப்புகள் மிகவும் கவனமாக எடுத்தாளப்பட்டுள்ளன.

மிக எளிய நடையில் எவரும் புரிந்துகொள்ளும் வகையில், இது மொழிபெயர்ப்புதானோ? என வியந்து புருவத்தை உயர்த்தும் முறையில், தமிழில் அண்ணலாரும் அருமை ஸஹாபாக்களும் பேசுவதைப் போன்ற பிரம்மையை - முஸ்னது அஹ்மத் தமிழாக்கம் ஏற்படுத்துகிறது. அல்ஹம்துலில்லாஹ்!

பொருட் செலவை பொருட்படுத்தாது இதைத் இன்பத் தமிழ்மொழியில் பெயர்க்க வேண்டும் என்ற எண்ணம் உதித்தவருக்கும் அதன் அளப்பெருந் தாக்கத்தால் தமிழாக்கி உங்கள் கரங்களில் தவழவிட அரும்பாடுபட்ட அறிஞர் பெருந்தகைகளுக்கும் வல்ல ரஹ்மான் அனைத்து வகையான நற்பேறுகளையும் ஈருலகிலும் தந்தருளட்டும்!

இவ்வரியதொண்டினை ஏற்றருளட்டும்! இத்தொகுப்பினை வழங்கிய தியாகச் செம்மல் இமாமுல் முஹத்திஸீன் அஹ்மது பின் ஹம்பல் (ரஹ்) அவர்களைக் கருணைமிகு இறைவன் சுவனத்தில் அண்ணல் நபியவர்களுடன் இருக்கச் செய்யட்டும்!

அலீ (ரலி) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் தொடர்பாக உங்களிடம் ஒரு செய்தி கூறப்பெற்றால் நல்வழிக்கும் இறையச்சத்துக்கும் நல்லெண்ணத்துக்கும் ஏற்ற வகையிலேயே அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களைக் குறித்து நீங்கள் எண்ணுங்கள் (ஹதீஸ் எண்: 1028).

காழி முஹம்மது கிஃபாயத்துல்லாஹ்

முஸ்னது அஹ்மத்

நூல் அறிமுகம்

இமாம் அஹ்மது பின் ஹன்பல் (ரஹ்) அவர்கள் தமது இளமைக் காலம் முதலே நபிமொழிகளைக் கற்பதில் பேரார்வம் காட்டினார்கள். அந்த ஆசை, அவர்களுக்குத் திடீரெனத் தோன்றியதன்று. விவரம் தெரிந்த நாள் முதலே அவர்கள் கல்வி விழிப்புணர்வு உடையவராக இருந்தார்கள். நபிமொழிகள், நபித்தோழர் நடைமுறைகள், தாபிஈன் அறிஞர்களின் வரலாறுகள் ஆகியவற்றைத் தெரிந்துகொள்வதற்காக, அவ்வத் துறை சார்ந்த அறிஞர்களைத் தேடிச் சென்றார்கள். ஏறத்தாழ, அவர்கள் அனைத்து நபிமொழிகளையும் அறிந்திருந்தார்கள் என்றால், அது மிகையன்று.

அவர்கள் வாழ்ந்த காலத்தில் ஹதீஸ் கலை அறிஞர்கள் தொகுத்து வைத்திருந்த நபிமொழிகளுடன், நபித்தோழர்கள் மற்றும் அவர்களுக்கு அடுத்த தலைமுறையினரான தாபிஈன் அறிஞர்களின் கூற்றுகளும் கலந்தே இருந்தன. அவற்றைத் தனித்தனியே பிரித்தெடுக்கும் பணியில் இமாமவர்கள் கவனம் செலுத்தலானார்கள். ஒன்றில் நபி (ஸல்) அவர்களின் வழிமுறை என்ன என்பதில் மக்களிடையே கருத்து வேறுபாடு எழும்போது, அதற்குத் தீர்வு கூறும் நிலைக்குத் தம்மைத் ஆயத்தப்படுத்தியிருந்தார்கள்.

மக்களுக்கு வழி காட்டுவதற்காக, நபிமொழிகளை ஒரே நூலில் திரட்டும் பணியில் இமாமவர்கள் ஈடுபட்டார்கள். நபிமொழியாளர்களின் வழக்கிலிருந்த 'முஸ்னது' தொகுப்பு முறையிலேயே தமது நூலையும் தொகுக்கலானார்கள். கிட்டத்தட்ட அவர்களது எண்ணப்படியே நூலும் அமைந்தது. ஆனால், நூலை மீளாய்வு செய்து சரிபார்க்கும் தேவை இருக்கவே செய்தது. சரிபார்க்கும் பணியை இமாமவர்கள் தொடங்கினார்கள். ஆனால், அதற்குள் மரணம் அவர்களை முந்திக்கொண்டுவிட்டது.

இமாம் அஹ்மது பின் ஹன்பல் (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்: "ஒரு முன்னோடி நூலாகவே இதை நான் தொகுத்துள்ளேன். நபி (ஸல்) அவர்களின் வழிமுறைகள் பற்றி மக்களிடையே கருத்து வேறுபாடு எழும்போது, வழிகாட்டியாகத் திகழும் விதமாகவே இந்த நூலை நான் அமைத்துள்ளேன்."

முஸ்னது அஹ்மதின் தனித்துவத்தை எடுத்துரைக்கும் விதமாக, 'கஸாயிஸுல் முஸ்னத்' எனும் நூலை எழுதிய ஹாஃபிழ் அபூமூசா அல்மதீனீ (ரஹ்) அவர்கள், அதில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்கள்:

"இந்த முஸ்னது, நபிமொழியாளர்களுக்கு மாபெரும் அடிப்படையும் வலுவான சான்றுமாகும். ஏராளமான நபிமொழிகளிலிருந்து தேர்வு செய்யப்பட்டவற்றையே இதில் இமாமவர்கள் இடம்பெறச் செய்துள்ளார்கள். சான்றுகள் மிக்க ஒரு வழிகாட்டி நூலாகவே இதை அவர்கள் அமைத்துள்ளார்கள். மக்களிடையே கருத்து வேறுபாடு

ஏற்படும்போது, மக்களின் மீளிடமாகவும், அவர்களுக்குத் தீர்வு கூறும் நீதிபதியாகவும் இது திகழும் என்பது திண்ணம்."

முஸ்னது பாட அமைப்பு முறை

நபித்தோழர் ஒவ்வொருவரும் அறிவித்த ஹதீஸ்களை அவர்களின் பெயரில் அல்லது அவர் சார்ந்த குலத்தாரின் பெயரில் தனித்தனியே தொகுத்துத் தரும் நபிமொழி நூலுக்கே ஹதீஸ் துறையினர் வழக்கில் 'முஸ்னது' என்பர்.

குறிப்பிட்ட ஒரு ஹதீஸை அறிய விரும்புகின்றவர், அந்த ஹதீஸை அறிவிக்கும் நபித்தோழர் யார் என்பதை அறிந்துகொண்டால், அந்த நபித்தோழர் வழியாக வந்துள்ள முஸ்னதில் அந்த (அறிவிப்பு வரிசையில்) ஹதீஸை அறிந்துகொள்ள முடியும்.

இவ்வாறு ஏறத்தாழ நூறு முஸ்னதுகள் இருப்பதாக, அவற்றின் பெயர்களுடன் இமாம் அல்கத்தானீ (ரஹ்) அவர்கள் 'அர்ரிசாலத்துல் முஸ்தத்ரிஃபா' எனும் நூலில் குறிப்பிட்டு விட்டு, "இவையன்றி, இன்னும் பல முஸ்னதுகளும் உள்ளன. ஏராளமான முஸ்னதுகள் இருந்தாலும், அவற்றிலெல்லாம் மிகச் சிறந்தது, இமாம் அஹ்மது பின் ஹன்பல் (ரஹ்) அவர்கள் தொகுத்த முஸ்னதேயாகும். பொதுவாக, 'முஸ்னது' என்று சொன்னால், அஹ்மது பின் ஹன்பல் அவர்களின் முஸ்னதையே குறிக்கும்" என்றும் கூறுகிறார்கள்.

முஸ்னதுல் பஸ்ஸார், முஸ்னது அபீயஃலா, முஸ்னது அபீஅவானா, முஸ்னது இஸ்ஹாக் பின் ராஹவைஹி, முஸ்னதுஷ் ஷாஃபிஈ என நூற்றுக்கும் அதிகமான முஸ்னதுகள் இருந்தாலும், முதல் முஸ்னது நூலைத் தொகுத்தவர் இமாம் அபூதாவூத் அத்தயாலிசீ (இறப்பு ஹிஜ்ரி. 204) அவர்கள் ஆவார்கள். அந்த நூலின் பெயர் 'முஸ்னதுத் தயாலிசீ' என்பதாகும்.

பொதுவாக, நபிமொழித் தொகுப்பாளர்கள் இரண்டு முறைகளில் நபிமொழிகளைத் தொகுத்துள்ளனர்:

1. 'ஃபிக்ஹு' பாட வரிசை முறை. (அங்கத்தூய்மை, தொழுகை, நோன்பு என்று தலைப்பிட்டு, அதற்கேற்ப ஹதீஸ்களைத் தொகுத்தல்).

2. முஸ்னது தொகுப்பு முறை. (அபூபக்ர் (ரலி) அறிவித்த நபிமொழிகள், உமர் (ரலி) அறிவித்த நபிமொழிகள், பனூஹாஷிம் குலத்தார் அறிவித்த நபிமொழிகள், ஷாம்வாசிகள் அறிவித்த நபிமொழிகள் என்ற அமைப்பில் தொகுத்தல்.) இந்த இரண்டாவது முறையிலேயே இமாம் அஹ்மது பின் ஹன்பல் (ரஹ்) அவர்கள் தமது நூலைத் தொகுத்துள்ளார்கள்.

இந்தத் தொகுப்பு முறையே இமாம் அவர்களின் காலத்தில் பரவலாக இருந்தது. 'ஃபிக்ஹு' பாட வரிசையிலான தொகுப்பு முறை, கையாள்வதற்கு மிக எளிதானதாகும். ஆயினும், முஸ்னதுத் தொகுப்பு முறையில், ஒரே இடத்தில், ஒருவர் அறிவித்த அனைத்து ஹதீஸ்களையும் பார்க்க முடியும். 'ஃபிக்ஹு' பாட வரிசையிலான தொகுப்பு முறையில் இந்த வசதி இருக்காது.

நபித்தோழர் ஒவ்வொருவர் வழியாகவும் தமக்குக் கிடைத்த நபிமொழிகளை அந்தந்த

நபித்தோழரின் பெயரின் கீழ், இமாமவர்கள் தொகுத்துத் தந்துள்ளார்கள். ஒரே நூலில் பல முஸ்னதுகளை (பல அத்தியாயங்கள் போல) இடம்பெறச் செய்துள்ளார்கள். அவற்றி லுள்ள ஒவ்வொரு நபிமொழியும் பலமானதா பலவீனமானதா என்பது தனியானது.

முஸ்னதைப் படிக்கும் ஒருவர், குறிப்பிட்ட நபித்தோழர் ஒருவரின் வழியாக வந்துள்ள நபிமொழிகள் எனும் பாடத்தில், ஒரு குறிப்பிட்ட பொருளிலான நபிமொழிகளை மட்டுமே எதிர்பார்க்க முடியாது. எடுத்துக்காட்டாக, ஓர் அத்தியாயத்தின் அல்லது ஒரு முஸ்னதின் முதல் நபிமொழி 'குற்றவியல் தண்டனை' தொடர்பானதாக இருக்கிறதென்றால், அதற்கு அடுத்த நபிமொழி 'தொழுகை' பற்றியதாகவோ, நோன்பு பற்றியதாகவோ, வேறு பொருளில் அமைந்ததாகவோ இருக்கலாம். குறிப்பிட்ட அந்த நபித்தோழர் வழியாக வந்துள்ள நபிமொழியை அறிவிப்பது மட்டுமே முஸ்னதின் நோக்கமாகும். குறிப்பிட்ட பொருளிலான நபிமொழிகளைத் திரட்டிக் கொடுப்பது, முஸ்னதின் நோக்கமன்று.

இதே போன்று, இன்னொன்றையும் நாம் புரிந்துகொள்ள வேண்டும். முஸ்னதின் ஓர் அத்தியாயத்தில் குறிப்பிட்ட நபித்தோழர் வழியாக வந்துள்ள ஒரு நபிமொழி, வேறொரு முஸ்னதிலும் இடம்பெறுவதுண்டு.

அதற்குக் காரணம், வேறொரு கோணத்தில் அந்த நபிமொழியை அணுகுவதே ஆகும். எடுத்துக்காட்டாக, 14762ஆவது ஹதீஸ் 26351 ஆவது ஹதீஸாகவும் இடம்பெறுகின்றது. இந்த ஹதீஸ் ஓர் இடத்தில், 'மக்காவாசிகள் வழியாக வந்துள்ள நபிமொழி' என்ற கண்ணோட்டத்திலும், மற்றோர் இடத்தில், 'பல குலத்தார் வழியாக வந்துள்ள நபிமொழி' என்ற கண்ணோட்டத்திலும் தொகுக்கப்பெற்றுள்ளது. 'மிகச் சிறந்த நபித்தோழர்கள் வழியாக வந்துள்ள நபிமொழிகள்' என்ற தலைப்பில் ஒரு நபிமொழி இடம்பெற்றால், 'தொடக்க கால முஸ்லிம்கள் வந்துள்ள நபிமொழிகள்' என்ற தலைப்பில் அதே ஹதீஸ் இடம்பெறுகிறது. எனவே, முஸ்னதில் திரும்பக் கூறல், மீள் அறிவிப்புகள் தவிர்க்க முடியாத ஒன்றாகிவிட்டது.

முஸ்னது பாட வரிசை சீராக இல்லை என்பது உண்மையே. அதற்குக் காரணம், நாம் ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போல, தமது தொகுப்பைச் சரி பார்ப்பதற்குள் இமாமவர்கள் இறந்துவிட்டார்கள் என்பதேயாகும்.

ஹதீஸ்களைத் தேடி அவர்கள் மேற்கொண்ட பயணத்தின்போது, அவர்கள் பல பகுதிகளுக்கும் சென்று, அங்குள்ள நபிமொழி அறிவிப்பாளர்களைச் சந்தித்து, அவர்களிடமிருந்து கேட்டறிந்ததன் அடிப்படையில் தலைப்பிட்டுள்ளார்கள். எந்தப் பகுதிக்கு அவர்கள் சென்றார்களோ, அந்தப் பகுதிக்காரர்களிடம் கேட்ட ஹதீஸை அப்படியே (கூஃபாவாசிகள் வழியாக வந்துள்ளவை, பஸ்ராவாசிகள் வழியாக வந்துள்ளவை என்று) வரிசைப்படுத்தியுள்ளார்கள்.

முஸ்னதைப் பற்றிய இன்னும் சில குறிப்புகள்

இமாம் அஹ்மது பின் ஹன்பல் (ரஹ்) அவர்கள் தமது முஸ்னது நூலைப் பதினான்கு கிளை முஸ்னதுகளாகப் பிரித்துள்ளார்கள். வாசகர்களின் வசதிக்காக அவற்றை 'அத்தியாயங்கள்' என நாம் தலைப்பிட்டுள்ளோம்.

அத்தியாயம்: 1. சொர்க்கவாசிகள் என நற்செய்தி பெற்ற நபித்தோழர் பதின்மர் வழியாக வந்துள்ள நபிமொழிகள் 1608 (ஹதீஸ்கள்: 1 - 1608).

அத்தியாயம்: 2. (மேற்கண்ட நபித்தோழர்களுடன் தொடர்புடைய) வேறு நபித்தோழர்கள் வழியாக வந்துள்ளவை 16 (1609 - 1624).

அத்தியாயம்: 3. நபியின் குடும்பத்தார் வழியாக வந்துள்ளவை 46 (1625 -1670).

அத்தியாயம்: 4. பனூஹாஷிம் குலத்தார் வழியாக வந்துள்ளவை 1696 (1671 -3366).

அத்தியாயம்: 5. கூடுதல் ஹதீஸ் அறிவித்த (நான்கு) நபித்தோழர்கள் வழியாக வந்துள்ளவை 3455 (3367 - 6821).

அத்தியாயம்: 6. கூடுதல் ஹதீஸ் அறிவித்த (மேலும் நான்கு) நபித்தோழர்கள் வழியாக வந்துள்ளவை 7939 (6822 - 14760).

அத்தியாயம்: 7. மக்காவாசிகள் வழியாக வந்துள்ளவை 747 (14761 - 15507).

அத்தியாயம்: 8. மதீனாவாசிகள் வழியாக வந்துள்ளவை 701 (15508 - 16208).

அத்தியாயம்: 9. ஷாம்வாசிகள் வழியாக வந்துள்ளவை 1185 (16209 - 17393).

அத்தியாயம்: 10. கூஃபாவாசிகள் வழியாக வந்துள்ளவை 1533 (17394 - 18926).

அத்தியாயம்: 11. பஸ்ராவாசிகள் வழியாக வந்துள்ளவை 1245 (18927 - 20171).

அத்தியாயம்: 12. அன்சாரிகள் வழியாக வந்துள்ளவை 948 (20172 - 21119).

அத்தியாயம்: 13. எஞ்சிய அன்சாரிகள் வழியாக வந்துள்ளவை 4781 (21120 - 25900).

அத்தியாயம்: 14. பல குலத்தார் வழியாக வந்துள்ளவை 463 (25901 - 26363).

இந்த வகையில், முஸ்னது அஹ்மதில் 26363 ஹதீஸ்கள் இடம்பெற்றுள்ளன.

இது, 'தர்கீமுல் ஆலமிய்யா' எனும் சர்வதேசத்தாராலும் ஏற்கப்பட்ட எண்ணிக்கை அடிப்படையில் அமைந்ததாகும். முஸ்னதின் சில பிரதிகளில், இதன் எண்ணிக்கை சற்றுக் கூடுதலாகப் பதிவாகியிருக்கலாம்.

ரஹ்மத் பப்ளிகேஷன்ஸ் சார்பாக தமிழாக்கம் செய்யப்பட்டுள்ள முஸ்னது அஹ்மதின் இந்த முதல் பாகத்தில் அத்தியாயம் ஒன்று (சொர்க்கவாசிகள் என நற்செய்தி பெற்ற நபித்தோழர் பத்துப்பேர் வழியாக வந்துள்ள நபிமொழிகள்) மட்டுமே இடம்பெற்றுள்ளது. இதில் 1608 ஹதீஸ்கள் உள்ளன. அடுத்தடுத்த தொகுதிகள் தொடர்ந்து வெளிவர அல்லாஹ்வின் உதவியும் வாசகர்களாகிய உங்களுடைய ஒத்துழைப்பும் துஆவும் அவசியம்.

முஸ்னதில் இடம்பெற்றுள்ள 26363 நபிமொழிகளுள்,

4234 நபிமொழிகள், 'ஸிஹாஹ் சித்தா' எனும் ஆறு நபிமொழி நூல்களிலும் இடம் பெற்றுள்ளன.

10663 நபிமொழிகள் புகாரீ, முஸ்லிம் ஆகிய இரண்டிலும் இடம்பெற்றுள்ளன.

12050 நபிமொழிகள் புகாரியில் இடம்பெற்றுள்ளன

13979 நபிமொழிகள் முஸ்லிமில் இடம்பெற்றுள்ளன.

12795 நபிமொழிகள் திர்மிதியில் இடம்பெற்றுள்ளன.

11208 நபிமொழிகள் நஸாயீயில் இடம்பெற்றுள்ளன.

13190 நபிமொழிகள் அபூதாவூதில் இடம்பெற்றுள்ளன.

12891 நபிமொழிகள் இப்னுமாஜாவில் இடம்பெற்றுள்ளன.

5312 நபிமொழிகள் முஅத்தா மாலிக்கில் இடம்பெற்றுள்ளன.

8934 நபிமொழிகள் தாரிமியில் இடம்பெற்றுள்ளன.

முஸ்னதின் அடிப்படை அம்சங்கள்

இமாம் அஹ்மது பின் ஹன்பல் (ரஹ்) அவர்கள், நபி (ஸல்) அவர்களைப் பற்றிய செய்திகளையும் நபியவர்களின் பொன்மொழிகளையுமே தமது நூலில் இடம்பெறச் செய்ய வேண்டும் எனத் திட்டமிட்டிருந்தார்கள். மற்றவர்களின் கருத்துகளோ, அறிவிப்பாளர்தொடர் இல்லாத செய்திகளோ (முஅல்லக்) இதில் கலக்கக் கூடாது என்பதில் கண்ணும் கருத்துமாய் இருந்தார்கள்.

அதேபோன்று, நபித்தோழர்களின் கூற்றுகளோ (மவ்கூஃப்), நபித்தோழர்களுக்கு அடுத்த தலைமுறையில் வாழ்ந்த 'தாபிஈன்' அறிஞர்களின் கூற்றுகளோ (மக்தூஉ), இதில் இடம்பெறாமல், முழுக்க முழுக்க நபியவர்களின் நல்லுரைகள் மட்டுமே இடம்பெற வேண்டும் எனவும் எண்ணியிருந்தார்கள். அவ்வாறே தமது நூலைத் தொகுக்கவும் செய்தார்கள்.

ஆயினும், முஸ்னதின் சில இடங்களில், நபித்தோழர் மொழிகளும் தாபிஈன் அறிஞர்களின் கருத்துகளும் இடம்பெற்றே உள்ளன. அவற்றை நேரடிச் சான்றுகளாக இமாமவர்கள் குறிப்பிடவில்லை. ஓரிடத்தில் நபித்தோழர் கூற்றொன்றை (மவ்கூஃப்) இமாமவர்கள் இடம்பெறச் செய்தால், அந்தக் கூற்றை வலுப்படுத்தும் அடிப்படை ஆதாரமான நபிமொழியை (மர்ஃபூஉ) மற்றோர் இடத்தில் கூறுவது இமாமவர்களின் வழக்கமாகும்.

முஸ்னதில் நபித்தோழர் கூற்றுகள் (மவ்கூஃப்) 313 இடங்களிலும், தாபிஈன் அறிஞர்களின் கூற்றுகள் 29 இடங்களிலுமே இடம்பெற்றுள்ளன. மொத்த ஹதீஸ்களை (26363) ஒப்பிடும்போது, இது மிகவும் குறைவேயாகும். இவைகூட, அறிவிப்பாளர்களின் குறைநிறையை எடுத்துரைப்பது போன்ற காரணங்களுக்காகவே கூறப்பெற்றுள்ளன.

சான்றாக, 1495ஆவது ஹதீஸை எடுத்துக்கொள்வோம். அதில் பின்வருமாறு அறிவிக்கப்படுகிறது: "அபூநூஹ் (ரஹ்) அவர்கள் கூறினார்கள்: நான் சுஃப்யான் அஸ்ஸவ்ரீ (ரஹ்) அவர்களை மக்காவில் சந்தித்தேன். அவர்கள் என்னிடம் முதன் முதலில் அபூபத்ர் ஷுஜாஉ (பின் அல்வலீத் பின் கைஸ்) எனும் அறிவிப்பாளர் குறித்தே கேட்டார்கள்."

இமாமவர்களின் புதல்வரான அப்துல்லாஹ் பின் அஹ்மது அவர்கள், மற்றும் அஹ்மது பின் ஜஅஃபர் அல்கத்தீஈ (ரஹ்) ஆகிய இருவர் மட்டுமே இமாமவர்களிடமிருந்து முஸ்னதை அறிவித்துப் பரவலாக்கிய அறிவிப்பாளர்கள் ஆவர். அவ்விருவரும் முஸ்னதில் சில தகவல்களைச் சேர்த்து அறிவித்துள்ளனர்.

அப்துல்லாஹ் பின் அஹ்மத் அவர்கள் வழியாக வரும் அறிவிப்புகளை தனியாக

அறிந்துகொள்ள விரும்பும் ஆய்வாளர்களுக்காக அரபி மூலத்தில் அவருடைய பெயர் வரும் இடங்களை தடிமனான எழுத்தில் (Bold) நாங்கள் சுட்டிக் காட்டியுள்ளோம்.

ஆனால், அவை மிகக் குறைவான இடங்களில் மட்டுமே இடம்பெற்றுள்ளன. சில இடங்களில் நேரடிச் சான்றான ஹதீஸ்களையும், மற்ற சில இடங்களில் பக்கபலமான (முதாபிஆத்) அறிவிப்புகளையும், வேறு சில இடங்களில் நபித்தோழர் மற்றும் தாபிஈன் அறிஞர்களின் கூற்றுகளையும், இன்னும் சில இடங்களில் தொடர்புடைய ஹதீஸ் மற்றும் அறிவிப்பாளர்கள் பற்றிய குறிப்புகளையும் (ஆஸார்) கூடுதலாக இவ்விருவரும் இணைத்துள்ளனர்.

சான்றாக, முஸ்னதில் இடம்பெற்றுள்ள 21210ஆவது ஹதீஸைக் குறிப்பிடலாம். அந்த ஹதீஸின் கீழ், "அபூஅப்திர் ரஹ்மான் (அப்துல்லாஹ் பின் அஹ்மது) கூறுகிறேன்: (இந்த ஹதீஸின் அறிவிப்பாளரான) அபூ உமாமா அல்ஹாரிஸீ (ரலி), அபூஉமாமா அல் பாஹிலீ (ரலி) அல்லர் (இவர் வேறு. அவர் வேறு)" என்று இடம்பெற்றுள்ளது.

இதேபோன்று, 8387ஆவது ஹதீஸைக் குறிப்பிடலாம். அதில், அப்துல்லாஹ் பின் அஹ்மது அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகிறார்கள்: "(இந்த ஹதீஸின் மூன்றாவது அறிவிப்பாளரான) அப்பாத் பின் ராஷித் நம்பத் தகுந்த அறிவிப்பாளர் ஆவார். ஆயினும், (இரண்டாவது அறிவிப்பாளரான) ஹசன் அல்பஸ்ரீ அவர்கள் (முதலாவது அறிவிப்பாளரான) அபூஹுரைரா (ரலி) அவர்களிடமிருந்து எதையும் செவியுற்றவர் அல்லர் (எனவே, இது அறிவிப்பாளர்தொடர் இடைமுறிவுற்ற 'முன்கத்திஉ' வகை ஹதீஸாகும்)."

இதேபோன்று, 6944ஆவது ஹதீஸையும் குறிப்பிடலாம். அதில், அப்துல்லாஹ் பின் அஹ்மத் அவர்கள் கூறுகிறார்கள்: "நபிமொழிகளை எழுதிப் பதிவு செய்யலாம் என்பது தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ள ஹதீஸ்களிலேயே இதுதான் (6944) மிகவும் ஆதாரபூர்வமான ஹதீஸாகும். ஏனெனில், நபி (ஸல்) அவர்களே (மக்கா வெற்றியின்போது ஆற்றிய உரையில்), "நான் ஆற்றிய இந்த உரையை (என் தோழர்) அபூஷாஹ்ஹுக்கு எழுதிக்கொடுங்கள்" எனக் குறிப்பிட்டுள்ளார்கள்.

அஹ்மது பின் ஜஅஃபர் அல்குதைஈ அவர்கள் அறிவிக்கும் கூடுதல் தகவல் முஸ்னதில் 21314ஆவது ஹதீஸில் மட்டுமே இடம்பெற்றுள்ளது என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

இமாமவர்கள் 'ஃபிக்ஹ்' - மார்க்கச் சட்ட அறிஞராக இருந்தும், தமது இந்த நூலில் ஹதீஸ்களை நபித்தோழர் ஒவ்வொருவரும் அறிவித்த ஹதீஸ்கள் என்ற (முஸ்னது) முறையிலேயே தொகுத்துள்ளார்கள்; 'ஃபிக்ஹ்' பாட வரிசையில் தொகுக்கவில்லை. ஏற்கெனவே நாம் குறிப்பிட்டது போல், இந்த நூலைச் சரி பார்த்து, இன்னும் மேம்படச் செய்வதற்குள், அவர்கள் இறந்துவிட்டார்கள். இதனால்தான், ஹதீஸ்களின் அருஞ்சொற்களுக்கு, அவற்றுக்கு அருகிலேயே பொருளோ உரையோ கூறப்படவில்லை.

முஸ்னதில் எத்தனை ஹதீஸ்கள் இடம்பெற்றுள்ளன?

இமாம் அஹ்மது பின் ஹன்பல் (ரஹ்) அவர்கள் கூறினார்கள்:

"இந்த நூலில் இரண்டுக்கும் மேற்பட்ட அறிவிப்பாளர்தொடர்களில் வந்துள்ள

பிரபல (மஷ்ஹூர்) ஹதீஸ்களை மட்டுமே இடம்பெறச் செய்யவேண்டுமென நான் எண்ணியிருந்தேன். பிறகு, அல்லாஹ்வின் நிரைக்குள் மக்களை விட்டுவிட்டேன். (இரண்டுக்கும் குறைவான அறிவிப்பாளர்தொடரில் வந்துள்ளதையும் பதிவு செய்து, அறிவிப்பாளர்களின் வெளிப்படையான நேர்மையையும் நினைவாற்றலையுமே பார்த்தேன். மறைமுகமான குறைபாடுகளை இறைவனிடம் சாட்டிவிட்டேன்) என்னிடம் ஆதாரபூர்வமானவை என ஏற்கப்பட்ட ஹதீஸ்களை மட்டுமே இந்த நூலில் நான் இடம்பெறச் செய்திருந்தால், இதிலுள்ள பல ஹதீஸ்களை என்னால் பதிவு செய்திருக்க இயலாது.

அன்பு மகனே! ஹதீஸ் அறிவிப்பில் எனது பாதை என்னவென்பதை நீயே அறிந்து கொள்வாய். ஒரு பாடத்தில் இடம்பெற்றுள்ள ஒரு பலவீனமான ஹதீஸை மறுத்துரைக்கக் கூடிய வேறு ஹதீஸ் இடம்பெறாவிட்டாலும், அந்த பலவீனமான ஹதீஸை நான் பலமான ஹதீஸ் என மாற்றிக் கூறுவதில்லை. (பலவீனமான ஹதீஸை பலவீனமான ஹதீஸ் என்றே கூறுவேன்)".

இமாமவர்களின் இக்கூற்றிலிருந்து, மூன்றுநிலை தரங்களிலும் அமைந்த ஹதீஸ்கள் இடம்பெற்றுள்ளன என்பதை நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது: ஸஹீஹுன் லி தாத்திஹி (சுய ஆதார ஹதீஸ்கள்), ஸஹீஹுன் லி ஃகைரிஹி (புறச்சான்றால் ஆதாரபூர்வமான ஹதீஸ்) ஆகிய தரங்களில் அமைந்த முதல்நிலை ஹதீஸ்களும் இடம்பெற்றுள்ளன.

ஹசனுன் லி தாத்திஹி (சுயமாகவே ஹசன் தரத்தில் அமைந்த ஹதீஸ்), ஹசனுன் லி ஃகைரிஹி (புறச்சான்றால் ஹசன் தரத்தை எட்டிய ஹதீஸ்) ஆகிய தரங்களில் அமைந்த நடுநிலை ஹதீஸ்களும் இடம்பெற்றுள்ளன. பலவீனமான ஹதீஸ் (ளஈஃப்), மிகவும் பலவீனமான ஹதீஸ் (ளஈஃபுன் ஜித்தன்) ஆகிய தரங்களில் அமைந்த கடைநிலை ஹதீஸ்களும் இடம்பெற்றுள்ளன.

நபிமொழி அறிவிப்பாளர்களுள் ஒருவர் குறித்து ஹதீஸ் விமர்சன அறிஞர்கள், 'அவர் பலவீனமானவர்' (ளஈஃப்) என்றோ, 'கைவிடப்பட்ட ஏற்றவர்' (மத்ரூக்) என்றோ விமர்சித்திருந்தால், அந்த அறிவிப்பாளர் வழியாக வந்துள்ள ஹதீஸ்களை இமாமவர்கள் குறை கூறவே செய்துள்ளார்கள்.

இமாம் இப்னு தைமிய்யா (ரஹ்) அவர்கள் கூறினார்கள்:

ஆதாரபூர்வமான நூல்களான சுனன் அபூதாவூத், ஜாமிஉத் திர்மிதீ ஆகியவற்றில் இடம்பெற்ற அறிவிப்பாளர்கள் பலருடைய அறிவிப்பை இமாமவர்கள் தமது நூலில் இடம்பெறச் செய்யவில்லை. சான்றாக, கஸீர் பின் அப்தில்லாஹ் பின் அம்ர் பின் அல்முஸனீ எனும் அறிவிப்பாளரைக் குறிப்பிடலாம்.

இவர் தம் தந்தை அப்துல்லாஹ் பின் அம்ர் வழியாக, அவருடைய தந்தை அம்ர் பின் அவ்ஃப் (ரலி) அவர்களிடமிருந்து அறிவிக்கிறார். இந்த ஹதீஸ் திர்மிதியில் 1325ஆவது ஹதீஸாக இடம்பெற்றுள்ளது. ஆனால், கஸீர் பின் அப்தில்லாஹ் வழியாக வந்துள்ள ஹதீஸ்களை இமாம் அஹ்மது (ரஹ்) அவர்கள் தமது நூலில் இடம்பெறச் செய்யவில்லை.

றைது முஸ்னதில் திரும்பக் கூறல் ஏற்பட்டுள்ளதேன் என்பதைப் பற்றியும், திரும்பக் கூறல் என்பது பல வகைகளில் உள்ளது என்பதைப் பற்றியும் அறிந்துகொள்வோம்:

1. குறிப்பிட்ட நபித்தோழர் ஒருவர் அறிவித்த நபிமொழிகள் எனும் அத்தியாயத்தில், அந்த நபித்தோழர் அறிவித்த ஹதீஸின் மூல வாசகத்தை (மத்தன்), மீண்டும் ஒரு முறை அதே அத்தியாயத்தில் கொண்டுவருவதுண்டு. அதற்குக் காரணம், அந்த நபித்தோழரிட மிருந்து அந்த ஹதீஸை அறிவிக்கும் அறிவிப்பாளர்கள் வேறு. இந்த இடத்திலுள்ள அறிவிப்பாளர்கள் வேறு இந்த ஹதீஸ், குறிப்பிட்ட அந்த நபித்தோழரிடமிருந்து, பல அறிவிப்பாளர்தொடர்களில் வந்துள்ளது என்பதைச் சுட்டிக் காட்டுவதே இமாமவர் களின் நோக்கம்.

2. குறிப்பிட்ட நபித்தோழர் ஒருவர் அறிவித்த நபிமொழிகள் எனும் அத்தியாயத்தில், அந்த நபித்தோழர் அறிவித்த ஹதீஸின் மூல வாசகத்தையும் (மத்தன்), அதன் அறிவிப் பாளர்தொடரையும் (சனது) அப்படியே அந்த நபித்தோழர் தொடர்புடைய மற்றோர் அத்தியாயத்தில் மீண்டும் கொண்டுவருவது. எடுத்துக்கொண்ட தலைப்பில் எல்லா நபி மொழிகளையும் கூறுவது என்ற எண்ணமே இத்தகைய திரும்பக் கூறலுக்குக் காரணமா கும்.

நபித்தோழர் ஒருவர் அறிவித்த ஹதீஸின் மூல வாசகமும், அதன் அறிவிப்பாளர் தொடரும் எந்தக் காரணமுமின்றி முஸ்னதில் திரும்பத் திரும்பக் கூறப்பட்டுள்ளதா என்றால், இல்லை என்றே சொல்ல முடியும் அப்படி ஏதேனும் இருந்தால், அது திட்ட மிடாமல் நிகழ்ந்திருக்க வேண்டும். இமாமவர்கள் தமக்குக் கிடைத்த ஹதீஸ்களைப் பதிவு செய்துகொண்டிருந்தார்கள்; பணியும் நிறைவுற்றது.

அவர்கள் கையாலேயே மீளாய்வும் சரிபார்த்தலும் முழுமையாக நடைபெற, அவர்க ளது ஆயுட்காலம் அனுமதிக்கவில்லை. அல்லாஹ் மிகவும் அறிந்தவன்.

முஸ்னதில் ஒரு ஹதீஸ் பல துண்டுகளாகப் பிரித்து அறிவிக்கப்பட்டுள்ளதா?

மற்ற நபிமொழி நூல்களின் தொகுப்பு முறைக்கும் முஸ்னதின் தொகுப்பு முறைக்கு மிடையே வேறுபாடுள்ளது என்பதை முன்பே நாம் கண்டோம். 'ஃபிக்ஹ்' பாட வரிசை யில் ஹதீஸ்களைத் தொகுக்கும் நூலாசிரியர், ஒரு பெரிய ஹதீஸைப் பல பகுதிகளாக்கித் தமது பாடத்திற்கேற்ற பகுதியை மட்டும் அதில் இடம்பெறச் செய்வார். பாடத்தில் தாம் குறிப்பிடும் சட்டத்திற்கேற்ற சான்றை நிறுவுவதே அவருடைய நோக்கமாகும்.

முஸ்னது நூல்களைப் பொறுத்தவரை, சட்டங்கள் கூறுவது முஸ்னதுத் தொகுப்பா ளரின் நோக்கமன்று நபித்தோழர் ஒருவரின் அறிவிப்புகளைத் தனியாக ஓரிடத்தில் திரட்டித் தருவதே அவருடைய நோக்கமாகும் முஸ்னதில் ஒரு ஹதீஸ் உட்பொதிவாய்க் கொண்டுள்ள பொருளையோ, முன்பின் தொடரையோ பார்ப்பதில்லை.

நபித்தோழர் ஒருவர் அறிவித்த ஹதீஸ்கள் இடம்பெறும் முஸ்னதில், முதல் ஹதீஸிற்கும் இரண்டாவது ஹதீஸிற்குமிடையே, அதன் அறிவிப்பாளர் குறிப்பிட்ட அந்த நபித்தோழர்தாம் என்பதைத் தவிர வேறெந்தத் தொடர்பும் கணக்கில் எடுக்கப்படு வதில்லை எனவே, ஒரு ஹதீஸைப் பல துண்டுகளாகப் பிரித்து அறிவிக்க வேண்டிய தேவை ஒரு முஸ்னதுத் தொகுப்பாளருக்கு ஏற்படுவதில்லை.

இமாம் அஹ்மது பின் ஹன்பல் (ரஹ்) அவர்களைப் பொறுத்தவரை, சிலபோது நபித்தோழர் ஒருவர் அறிவிக்கும் ஹதீஸை முதல் ஹதீஸில் அறிவித்துவிட்டு, பிறகு அவர் வழியாக வரும் வேறு பல ஹதீஸ்களை அடுத்தடுத்த ஹதீஸ்களில் இடம்பெறச் செய்வார்கள். பிறகு, முதல் ஹதீஸோடு தொடர்புடைய மற்றோர் அறிவிப்பாளர்தொடரைக் கூறுவார்கள். 'முதல் ஹதீஸின் அறிவிப்பாளர் இன்னாரின் அறிவிப்பில் உள்ளதைப் போன்றே குறிப்பிட்டுள்ளார்' என்று கூறுவார்கள். முதல் ஹதீஸில் இடம்பெற்ற செய்திகள் அனைத்தையும் திரும்பக் கூறுவதைத் தவிர்த்துவிடுவார்கள்.

முஸ்னதில் பலவீனமான ஹதீஸ்கள் நீடிப்பதேன்?

முஸ்னதில் இடம்பெற்ற சில ஹதீஸ்கள் அறிஞர்களால் விமர்சிக்கப்பட்டுள்ளன. இதற்கு என்ன காரணம் என்பதைப் பற்றி அறிவதற்குமுன், முக்கியமான ஒன்றை நாம் விளங்கிக்கொள்ள வேண்டும்.

அறிஞர் இப்னு கைய்யிம் அல்ஜவ்ஸிய்யா (ரஹ்) அவர்கள் கூறினார்கள்:

இமாம் அஹ்மது பின் ஹன்பல் (ரஹ்) அவர்கள் தமது நூலைத் தொகுத்துவிட்டு, மறுசீரமைப்புச் செய்வதற்குள் இறந்துவிட்டார்கள். எனவே, தொகுக்கப்பட்ட நிலையிலேயே, அப்படியே அது தொடர்கிறது.

இப்னு கைய்யிம் அவர்களது காலத்தில் வாழ்ந்த ஏராளமான அறிஞர்களும், ஹாஃபிழ் இப்னு ஹஜர் (ரஹ்) அவர்களும் இவ்வாறே கூறுகின்றனர். அவர்கள் முஸ்னதில் இட்டுக் கட்டப்பட்ட ஹதீஸ்கள் உள்ளனவா என்பதைக் குறித்துக் கூறுகையில், இப்னுல் ஜவ்ஸீ (ரஹ்)[1] அவர்கள் பின்வருமாறு கூறியதாகத் தெரிவிக்கிறார்கள்:

முஸ்னதில் இமாம் அஹ்மது பின் ஹன்பல் (ரஹ்) அவர்கள் ஒரு ஹதீஸைப் பற்றி எந்தக் கருத்தும் கூறாவிட்டால், அது ஆதாரபூர்வமான ஹதீஸாகும் என்று சிலர் கூறுகின்றனர். இது அடிப்படையற்ற வாதமாகும். சொல்லப் போனால், இந்த வாதத்திற்கு எதிராகவே, நபிமொழி இயல் அறிஞர்கள் கருத்துக் கூறியுள்ளனர்.

இமாமவர்கள் தமது நூலில் இடம்பெறும் ஹதீஸ்கள் அனைத்தும் ஸஹீஹானவையாகவே இருக்கவேண்டுமென நிபந்தனை விதித்துக்கொள்ளவுமில்லை; அதைக் கடைப் பிடிக்கவுமில்லை. முஸ்னதில் இடம்பெறும் பல ஹதீஸ்கள் குறித்து இமாமவர்களிடம் கேட்கப்பட்டபோது, அவை பலவீனமானவை என இமாமவர்களே விடையளித்துள்ளார்கள்.

ஹாஃபிழ் அபூமூசா அல்மதீனீ (ரஹ்) அவர்கள், "முஸ்னது அஹ்மதில் பலவீனமான ஹதீஸ்களும் இடம்பெற்றுள்ளன. அவற்றை முந்தைய இமாம்களுள் பலரும் சுட்டிக் காட்டியுள்ளனர்" என்று கூறியுள்ளார்கள்.

இமாம் தஹபீ (ரஹ்), மற்றும் ஹாஃபிழ் இராக்கீ (ரஹ்) ஆகியோர் முஸ்னது அஹ்மதைப் பற்றிக் கூறுகையில், "முஸ்னது அஹ்மதில் கணிசமான அளவுக்கு பலவீனமான

1. [illegible] 1- [illegible] இப்னுல் ஜவ்ஸீ (ரஹ்) அவர்கள் (ஹி. 510-597). 2- [illegible] இப்னு கய்யிம் அல்ஜவ்ஸிய்யா (ரஹ்) அவர்கள் (ஹி. 691-751)

ஹதீஸ்களும் உள்ளன. அவற்றை எடுத்தாளலாம். ஆனால், (ஒரு சட்டத்தை நிறுவுவதற்கு) அவற்றைச் சான்றாகக் கொள்ள முடியாது" என்று குறிப்பிட்டுள்ளார்.

இப்னு ஹஜர் (ரஹ்) அவர்கள் இது குறித்துப் பேசுகையில், பின்வருமாறு தெரிவித்துள்ளார்கள்:

'முஸ்னது அஹ்மதில் ஆதாரபூர்வமான ஹதீஸ்கள் மட்டுமே உள்ளன; அதில் இடம்பெற்றுள்ள அறிவிப்பாளர்கள் அனைவரும் நம்பத் தகுந்த பலமான அறிவிப்பாளர்களே' என்று சிலர் வாதிக்கின்றனர். இது தொடர்பாக, ஹாபிழ் அபூமூசா அல்மதீனீ (ரஹ்) அவர்கள் தனி நூலொன்றையே எழுதியுள்ளார்கள். உண்மை என்னவென்றால், முஸ்னதில் இடம்பெற்றுள்ள ஹதீஸ்களுள் பெரும்பாலானவை ஆதாரபூர்வமானவையே ஆகும்.

பலவீனமான ஹதீஸ்கள் சில இதில் இடம்பெற்றாலும், அவை நேரடிச் சான்றுகளாக எடுத்தாளப்படவில்லை. நம்பத் தக்க வலுவான ஹதீஸ்களுக்கு மேலும் வலுச்சேர்க்கும் உறுதுணை ஹதீஸ்களாகவே (முதாபிஆத்) ஆளப்பட்டுள்ளன. முஸ்னதில் சில பலவீனமான ஹதீஸ்களும் ஒற்றை வழித்தொடர் (ஃகரீப்) அறிவிப்புகளும் இடம்பெறவே செய்தன. பின்னர், சிறிது சிறிதாகப் பல ஹதீஸ்களை இமாமவர்களே நீக்கலானார்கள். அதற்குள் மரணம் முந்திக்கொள்ளவே, பலவீனமான ஹதீஸ்கள் அப்படியே எஞ்சிவிட்டன.

சுருக்கக் கூறின், முஸ்னதில் பலவீனமான ஹதீஸ்களும் உள்ளன என்பது உண்மையே. அவற்றுள் பல ஹதீஸ்கள் வேறு பல அறிவிப்புகளின் அடிப்படையில் 'ஹசன்' எனும் தரத்தை எட்டுபவை ஆகும். இவையன்றி, வேறு சில பலவீனமான ஹதீஸ்கள் இடம்பெற்றதற்கான காரணங்கள் பல. அவையாவன:

1. 'பலவீனமான' ஹதீஸ்கள்தாமே தவிர, 'மிகவும் பலவீனமான' ஹதீஸ்கள் அல்ல.

2. இமாமவர்கள் நூலைத் தொகுத்து முடித்துச் சரி செய்வதற்குள் இறந்துவிட்டார்கள்.

3. இந்த ஹதீஸ்கள் பலவீனமானவை என்பது ஹதீஸ் அறிஞர்கள், ஹதீஸ் தரச்சான்று அறிஞர்களிடையே பிரபலமானவை என்பதால், அவற்றை அப்படியே விட்டுவிட்டார்கள்.

4. தனி மனிதர்களின் சொந்த யூகங்களைவிடவும் ஒப்பாய்வுச் சட்டங்களை விடவும் (ரஃயு, கியாஸ் ஆகியவற்றைவிட) பலவீனமான ஹதீஸ்கள் முன்னுரிமை பெறுபவை என இமாமவர்கள் கருதினார்கள்.

முஸ்னதில் இட்டுக்கட்டப்பட்ட ஹதீஸ்கள் உள்ளனவா?

இந்தக் கேள்விக்கு, இமாம் இப்னு தைமிய்யா (ரஹ்) அவர்கள் விடையளிக்கையில், "முஸ்னது அஹ்மதில் இட்டுக்கட்டப்பட்ட (மவ்ளூஉ) ஹதீஸ்கள் உள்ளனவா என்பதில் அறிஞர்களிடையே கருத்து வேறுபாடு உள்ளது. ஹதீஸ்துறை அறிஞர் அபுல் அலா அல்ஹம்தானீ (ரஹ்) போன்றோர் முஸ்னதில் இட்டுக்கட்டப்பட்ட ஹதீஸ்கள் இல்லை என்கின்றனர்.

'அபுல் ஃபரஜ் இப்னுல் ஜவ்ஸீ (ரஹ்) போன்ற அறிஞர்கள் சிலர் மட்டுமே, அதில் இட்டுக்கட்டப்பட்ட ஹதீஸ்கள் இருப்பதாகச் சொல்கிறார்கள். 'மவ்ளூஉ' (இட்டுக்கட்

டப்பட்டது) எனும் சொல்லுக்கு இரு பொருள்கள் உள்ளன.

1. ஒருவர் திட்டமிட்டுச் சொன்ன பொய்.

2. ஒருவர் திட்டமிட்டுப் பொய் சொல்லாவிட்டாலும், இல்லாத அல்லது நிகழாத ஒன்றை இருப்பதாக அல்லது நிகழ்ந்ததாகத் தவறாக அறிவிப்பது.

இவற்றின் முதல் பொருளில் அமைந்த 'மவ்ளூஉ', முஸ்னது அஹ்மதில் இடம்பெற்றுள்ளதா என்பது அறியப்படவில்லை. ஏனெனில், சுனன் அபூதாவூதின் ஆசிரியர் தமது நூலில் ஒரு ஹதீஸ் இடம்பெறுவதற்கு விதித்துள்ள அளவுகோலைவிட, மிகக் கடுமையான அளவுகோலை இமாம் அஹ்மது பின் ஹன்பல் அவர்கள் தமது நூலுக்கு விதித்துள்ளார்கள்.

இரண்டாவது பொருளில் அமைந்த 'மவ்ளூஉ'கள் முஸ்னது அஹ்மதிலும், ஏன்-சுனன் அபூதாவூதிலும்கூட, இடம்பெறவே செய்துள்ளன. அதுவும் பெருங்கடலில் ஒரு சில நீர்த்துளிகள் போலத்தான்.

முதலாவது பொருளில் அமைந்த 'மவ்ளூஉ'கள் முஸ்னதில் இடம்பெற்றிருப்பதாகக் கூறும் இப்னுல் ஜவ்ஸீ (ரஹ்), ஹாபிழ் இராக்கீ (ரஹ்) போன்றோருக்கு மறுப்புக் கூறுவதற்கென்றே இமாம் இப்னு ஹஜர் (ரஹ்) அவர்கள், 'முஸ்னது அஹ்மது மீது சுமத்தப்பட்ட களங்கத்தைத் துடைக்கும் தெளிவான கூற்றுகள்' (அல்கவ்லுல் முசத்தத் ஃபித் தப்பி அன் முஸ்னதில் இமாம் அஹ்மத்) எனும் பெயரில் தனி நூலே எழுதியுள்ளார்கள்.

அதில் இட்டுக்கட்டப்பட்டவை என விமர்சிக்கப்பட்ட ஒவ்வொரு ஹதீஸையும் எடுத்து அதற்குத் தக்க மறுப்பும் கூறுகிறார்கள். இப்னு ஹஜர் (ரஹ்) அவர்கள் தொட்டுப் போகாத சில ஹதீஸ்களை, இமாம் சுயூத்தீ (ரஹ்) அவர்கள் தமது 'அல்கவ்லுல் முசத்தத்' எனும் நூலில் தக்க சான்றுகளைக் கூறி, அவற்றை இட்டுக்கட்டப்பட்டவை அல்ல என நிறுவுகின்றார்கள்.

ஹதீஸ் நூல்களுக்கிடையே முஸ்னது அஹ்மதின் தகுதி

இமாம் அஹ்மது பின் ஹன்பல் (ரஹ்) அவர்கள் தொகுத்துள்ள இந்நூலுக்கு முஸ்லிம் சமுதாயம் மிகுந்த முதன்மையும் ஏற்புடைமையும் அளித்து, அதற்குப் புகழாரமும் சூட்டியுள்ளது. புகழ்பெற்ற 'மஜ்மஉஸ் ஸவாயித்' எனும் நூலின் ஆசிரியரான நூருத்தீன் அலீ அல்ஹைஸமீ (ரஹ்) அவர்கள் முஸ்னது அஹ்மத் பற்றிக் கூறுகையில், "முஸ்னது அஹ்மத் இன்னபிற தனிமொழி நூல்களைவிட, ஆதாரத் தன்மை மிகக் கொண்டதாகும்" எனக் குறிப்பிடுகின்றார்கள்.

ஸஹீஹுல் புகாரீ மற்றும் ஸஹீஹ் முஸ்லிமில் இடம்பெற்றுள்ள அறிவிப்பாளர்களுக்கும் ஹதீஸ்களுக்கும் நிகரான எத்தனையோ அறிவிப்பாளர்களும் ஹதீஸ்களும் முஸ்னது அஹ்மதில் இடம்பெற்றுள்ளன. இன்னும் சொல்லப்போனால், முஸ்னதில் இடம்பெற்ற ஆதாரபூர்வமான பல ஹதீஸ்கள், 'ஆதாரப்பூர்வமான ஆறு நூல்கள்' என்று கூறப்படும் 'ஸிஹாஹ் சித்தா'விலும்கூட இடம்பெறவில்லை.

அபூமூசா அல்மதீனீ (ரஹ்) அவர்கள் தமது 'கஸாயிஸுல் முஸ்னத்' (முஸ்னதின் தனித்துவங்கள்) எனும் நூலில் குறிப்பிடுகிறார்கள்:

இந்த முஸ்னது, நபிமொழியாளர்களுக்கு மாபெரும் அடிப்படையும் வலுவான சான்று மாகும். ஏராளமான நபிமொழிகளிலிருந்து தேர்வு செய்யப்பட்டவற்றையே இதில் இமா மவர்கள் இடம்பெறச் செய்துள்ளார்கள். ஆதாரபூர்வமான ஒரு வழிகாட்டி நூலாகவே இதை அவர்கள் அமைத்துள்ளார்கள். மக்களிடையே கருத்து வேறுபாடு ஏற்படும்போது, மக்களின் புகலிடமாகவும் அவர்களுக்குத் தீர்வு கூறும் நீதிபதியாகவும் இது திகழும் என்பது திண்ணம்.

முஸ்லிம் அறிஞர்கள் இந்த நூலுக்கு எத்தகைய முக்கியத்துவத்தை அளித்துள்ளனர் என்பதைப் பின்வரும் செய்திகளிலிருந்து அறிந்துகொள்ளலாம்.

1. அறிஞர்கள் பலர் முஸ்னது அஹ்மதில் இடம்பெற்றுள்ள ஹதீஸ்களைப் படிப்பதற்கும் அறிவதற்கும் பேரார்வம் காட்டினர்.

ஹாபிழ் அபூமூசா அல்மதீனீ (ரஹ்) அவர்கள் கூறுவார்கள்:

பேரறிஞரும் முன்னோடி அறிஞருமான 'இமாமுத்தீன்' அபூ அப்தில்லாஹ் அஹ்மது பின் ஹன்பல் (ரஹ்) அவர்கள் தொகுத்தளித்த நபிமொழிகளை அறிவதற்கு அல்லாஹ் எங்களுக்கு நல்லருள் புரிந்தான். இது, அல்லாஹ் எங்களுக்குச் செய்த நல்லுபகாரங்களுள் ஒன்றாகும்.

இந்நூலின் ஒரு சதவீதம் ஹதீஸை மனனமிட்ட நபிமொழி அறிஞர் ஒருவர் அடையும் பெருமிதத்தையும் பேரானந்தத்தையும் அபூமூசா அல்மதீனீ அவர்கள் பின்வருமாறு படம் பிடித்துக் காட்டுகிறார்கள்:

"நான் என் ஆயுளின் அதிபதி (அல்லாஹ்) மீது ஆணையிட்டுச் சொல்கிறேன்: நமக்கு முன் வாழ்ந்த நபிமொழி அறிஞர்களுள் பலர், இந்தப் பேரறிஞர் தொகுத்த நூலின் ஒரு பகுதி தமக்குத் தெரியும் என்பதற்காகப் பெருமிதம் கொண்டனர். பல தொகுதிகளில் ஏராளமான நபிமொழிகளைக் கொண்ட இந்நூலை, அறிஞர்கள் பலர் மனனமிட்டு வந்தனர். இதனால், அவர்களுக்கு மற்ற நபிமொழி நூல்களை மனனமிட வேண்டிய தேவை இல்லாமல் ஆகிவிட்டது."

அறிஞர் அலீ பின் முஹம்மத் அல்யூனீனீ (ரஹ்) அவர்களிடம், "நீங்கள் ஸிஹாஹ் சித்தா (எனப்படும் ஆறு ஆதாரபூர்வமான) நூல்களை மனனமிட்டுள்ளீர்களா?" என்று கேட்கப்பட்டது. அதற்கு அவர்கள், "அவற்றை நான் மனனம் செய்துமிருக்கிறேன்; மனனம் செய்யாமலும் இருக்கிறேன்" என்று கூறினார்கள். "அது எப்படி?" என்று கேட்கப்பட்டது. அதற்கு அவர்கள், "நான் முஸ்னது அஹ்மதை மனனமிட்டுள்ளேன். முஸ்னதில் 'ஸிஹாஹ் சித்தா'வில் உள்ள பெரும்பாலான ஹதீஸ்கள் இடம்பெற்றுள்ளன; ஒரு சிலவற்றைத் தவிர" என்று விடையளித்தார்கள்.

2. இந்த நூலை மக்களுக்குச் சுலபமாக எட்டச் செய்வது, அதைப் பரப்புவது தொடர்பாக, அறிஞர்கள் ஆற்றிய பணிகளிலிருந்தும் முஸ்னதின் முக்கியத்துவத்தையும் தகுதியையும் அறியலாம்.

முந்தைய அறிஞர்கள் முஸ்னதைப் பாடத் திட்டத்தில் வைத்துப் படித்துக் கொடுத்தனர். முஸ்னதை மையமாக வைத்துப் பல நூல்கள் எழுதினர். அவற்றுள் கையேட்டுப் பிரதிகளும் உள்ளன; அச்சேறியவையும் உள்ளன. அத்தகைய நூல்கள் சிலவற்றை இப்

போது காண்போம்:

1. தர்த்தீபு அஸ்மாயிஸ் ஸஹாபா அல்லதீன அக்ரஜ ஹதீஸஹும் அஹ்மது பின் ஹன்பல் (அஹ்மது பின் ஹன்பல் அறிவித்த நபித்தோழர்களின் வரிசை முறை). ஆசிரியர்: இப்னு அஸாக்கிர். (அச்சிடப்பெற்றுள்ளது)

2. தர்த்தீபுல் முஸ்னத் (முஸ்னதின் பாட அமைப்பு முறை). ஆசிரியர்: இப்னுல் முஹிப்பு. நபித்தோழர்களின் அகர வரிசைப்படி நூலாசிரியர் இதனை அமைத்துள்ளார்.

3. தர்த்தீபு முஸ்னதி அஹ்மத் அலா அப்வாபில் புகாரீ (ஸஹீஹுல் புகாரியின் பாட வரிசையில் முஸ்னது அஹ்மது). ஆசிரியர்: அலீ பின் அல்ஹுசைன் பின் உர்வா பின் ஸுக்னூன். முஸ்னது அஹ்மதை ஸஹீஹுல் புகாரியிலுள்ள பாட வரிசை முறையில் நூலாசிரியர் தொகுத்துள்ளார். இதற்கு நூற்றி இருபது தொகுதிகளில் விரிவுரை எழுதப்பெற்றுள்ளது.

4. அத்ராஃபுல் முஸ்னத். (முஸ்னதிலுள்ள முதல் வாசகங்கள்). ஆசிரியர்: இப்னு ஹஜர் அல்அஸ்கலானீ.

முஸ்னதை மையமாகக் கொண்டு அதைச் சுருக்கியும் தெளிவுரை கூறியும் பல்வேறு நூல்கள் எழுதப்பெற்றுள்ளன. அவற்றுள் சிலவற்றை இனிக் காண்போம்:

1. அத்துர்ருள் முனள்ளது மின் முஸ்னதி அஹ்மத் (முஸ்னதின் முத்துமாலை). ஆசிரியர்: உமர் பின் அஹ்மத் அஷ்ஷம்மாஉ (ஹி: 639). முஸ்னதிலுள்ள ஹதீஸ்களைத் தேர்ந்தெடுத்து, சுருக்கித் தந்துள்ளார்.

2. ஃகரீபுல் ஹதீஸ் அலா முஸ்னதி அஹ்மத் (முஸ்னதில் இடம்பெற்ற அருஞ்சொற்கள்). ஆசிரியர்: குலாம் ஸஅலப் (ஹி: 345). முஸ்னதில் இடம்பெற்றுள்ள அருஞ்சொற்களுக்கு இந்நூலில் பொருளும் விளக்கமும் தரப்பட்டுள்ளது.

3. கஸாயிஸுல் முஸ்னத் (முஸ்னதின் தனித்துவங்கள்). ஆசிரியர்: ஹாபிழ் அபூமூசா அல்மதீனீ.

4. அல்கவ்லுல் முசத்தத் ஃபித் தப்பி அன் முஸ்னதி அஹ்மத் (முஸ்னது அஹ்மதுக்கு எதிராகக் கூறப்படும் குற்றச்சாட்டுகளுக்குத் தக்க பதில்கள்) ஆசிரியர்: இப்னு ஹஜர் அல்அஸ்கலானீ. (இந்நூல் குறித்து ஏற்கனவே நாம் கூறியுள்ளோம்).

முஸ்னதைப் பரவலாக்கிய சான்றோர்கள்

முஸ்னது அஹ்மதை இமாம் அஹ்மது பின் ஹன்பல் அவர்கள் தாம் தொகுத்தார்கள் என்பது உலகறிந்த உண்மை. முஸ்னதைப் பொறுத்தவரை, அச்சுத்துறை முன்னேற்ற மடையாத கையேட்டுப் பிரதிக் காலத்தில் எழுதப்பட்டதாகும். இமாமவர்களை நேரடியாகச் சந்தித்து, அவர்களிடம் அப்பிரதியிலிருந்து கற்ற அவர்களுடைய மாணவர்கள் மூலம்தான் 'முஸ்னது' பரவலாயிற்று.

யார் மூலம் ஒரு நபிமொழி நூல் அதன் ஆசிரியரிடமிருந்து பரவலாகிறதோ, அவரை 'சனது' (சான்றாளர்) என்று கூறுவர். இந்தக் கையேட்டுப் பிரதியிலிருந்து முழுமையாக இந்நூலை இமாமவர்களிடமிருந்து கற்றுக்கொண்ட மாணவர்கள் மூவர் ஆவர்.

அவர்களுள் இமாமவர்களின் புதல்வர் அப்துல்லாஹ் பின் அஹ்மத் (ரஹ்) குறிப்பிடத் தக்கவர் ஆவார்.

அவரே முஸ்னதின் 'சான்றாளர்' (சனது) ஆவார். அவரிடமிருந்து அபூபக்ர் அஹ்மது பின் ஜஅஃபர் அல்குத்தைஈ (ஹி. 274-368) என்பார் வழியாகவே அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்குக் காரணம், முஸ்னதைச் சரி பார்த்துச் சீரமைப்பதற்குப் பதின்மூன்று ஆண்டுக ளுக்கு முன்பே இமாமவர்கள் மக்களுக்கு ஹதீஸ் அறிவிப்பதை நிறுத்திவிட்டார்கள்.

இமாமவர்களின் தந்தையின் சகோதரர் புதல்வர் ஹன்பல் பின் இஸ்ஹாக் (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்: "இமாம் அஹ்மது பின் ஹன்பல் (ரஹ்) அவர்கள் என்னையும் (தம் புதல்வர்களான) சாலிஹ் மற்றும் அப்துல்லாஹ் ஆகிய இருவரையும் ஒன்று கூட்டி, எங்களுக்கு முஸ்னது முழுவதையும் வாசித்துக் காட்டினார்கள். முஸ்னது முழுவதையும் எங்கள் மூவரைத் தவிர வேறெவரும் இமாமவர்களிடமிருந்து நேரடியாகச் செவியேற்க வில்லை."

இம்மூவரும் இமாமவர்களிடமிருந்து நேரடியாக முஸ்னது முழுவதையும் செவியுற் றாலும், அதைப் பரவலாக்கிய சிறப்பு, இமாமவர்களின் புதல்வர் அப்துல்லாஹ் பின் அஹ் மது அவர்களுக்கும், அடுத்து அஹ்மது பின் ஜஅஃபர் அல்குத்தைஈ அவர்களுக்குமே கிட்டுகிறது.

ஒரேயொரு ஹதீஸை, அதன் அறிவிப்பாளரிடமிருந்து நேரடியாகச் செவியுறுவதற் காக, அன்று இமாம் அஹ்மது பின் ஹன்பல் (ரஹ்) அவர்களைப் போன்ற அறிஞர்கள் பல்லாயிரம் மைல்கள் பயணம் மேற்கொள்ள வேண்டியிருந்தது.

அப்படியானால், 25000-க்கும் அதிகமான ஹதீஸ்களைக் கொண்ட இந்த முஸ்னதுக் குள் மறைந்திருக்கும் இமாமவர்களின் உழைப்புகளும் தியாகங்களும் எத்தனை என்பதை நம்மால் ஊகிக்க முடிகிறதா? ஹிஜ்ரீ பதினைந்தாம் நூற்றாண்டில் வாழும் நாம், இரண் டாம் நூற்றாண்டில் தொகுக்கப்பட்ட இந்நூலை இன்றைக்கு மொழிபெயர்த்து வாசிக்கி றோம் என்றால், இறைவன் அந்த நன்மக்களின் தன்னலங்கருதாச் சேவையை ஏற்றுக் கொண்டான் என்றுதான் பொருள். எல்லாம் வல்ல இறைவன் இமாமவர்களுக்கும், இந்த நூல் தொகுக்கப்படுவதற்குக் காரணமாக இருந்தவர்களுக்கும், இதனை தமிழாக்கம் செய்து வெளியிட்ட ரஹ்மத் அறக்கட்டளை அறங்காவலரும் ரஹ்மத் பப்ளிகேஷன்ஸ் நிறுவனத்தின் பதிப்பாளருமான M.A. தமீம் அவர்களுக்கும் தமிழாக்கப் பணியிலும் மேலாய்வுப் பணிகளிலும் ஒளி அச்சுக்கோவை பணியிலும் ஈடுபட்டுழைத்த அனைவருக் கும் உன்னதமான சொர்க்கப் பேறுகளை வழங்குவானாக என்று பிரார்த்திப்போம். இதுவே நபிமொழி திரட்டிய அந்த நல்லோருக்கு நாம் காட்டும் நன்றிக் கடனாகும். எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே.

மூல நூலாசிரியர்

இமாம் அஹ்மது பின் ஹன்பல் அஷ்ஷைபானீ (ரஹ்) அவர்களின் வாழ்க்கை வரலாறு

'அபூஅப்தில்லாஹ்' அஹ்மது பின் முஹம்மது பின் ஹன்பல் பின் ஹிலால் பின் அசது அஷ்ஷைபானீ என்பது அவர்களது வமிசத்துடன் சேர்ந்த முழுப் பெயராகும்.

இமாம் அவர்கள் இராக்கிலுள்ள பஃக்தாத் நகரில் ஹிஜ்ரி 164 (கி.பி. 780) ரபீஉல் அவ்வல் திங்கள் இருபதாம் நாள் பிறந்தார்கள். பிறந்தது, 'மர்வ்' எனும் பகுதியில்தான். பால்குடிப் பருவத்தில் அவர்கள் பஃக்தாதுக்குக் கொண்டுசெல்லப்பட்டார்கள் என்றும் கூறப்படுகிறது.

தாய்-தந்தை இருவருமே அரபியர் ஆவர். இவ்விருவரும் ஷைபான் பின் துஹ்ல் பின் ஸஅலபா வழி மக்கள் ஆவர். இமாமவர்களின் வமிசத் தொடர் நபி (ஸல்) அவர்களின் பாட்டனார் 'நிஸார்' என்பாரில் போய் இணைகிறது.

இமாமவர்கள் பிறப்பதற்கு முன்பே அவர்களுடைய தந்தையும் பாட்டனாரும் இறந்துவிட்டார்கள். அவர்கள் இருவரும் படை வீரர்களாகத் திகழ்ந்தனர். ஒரு போரில் தான் அவர்களின் தந்தை முஹம்மது பின் ஹன்பல் அவர்கள் வீரமரணமடைந்தார்கள். பாட்டனார் ஹன்பல் அவர்கள் உமய்யாக்களின் ஆட்சிக் காலத்தில் ஈரானின் 'சர்ஹஸ்' எனும் பகுதியின் ஆட்சியாளராக இருந்தார்கள்.

கல்விப் பயணம்

இமாமவர்கள் முதலில் தமது சொந்த ஊரான பஃக்தாதில் தொடக்கக் கல்வி கற்று, திருக்குர்ஆனை மனனமிட்டார்கள். அதன் பின்னர், பஃக்தாதிலிருந்த அறிஞர்களிடம் நபிமொழிக் கலையை (ஹதீஸ்) கற்பதில் கவனம் செலுத்தினார்கள். அப்போது அவர்களுக்கு வயது பதினாறு. ஹிஜ்ரி 179ஆவது ஆண்டில் அலீ பின் ஹாஷிம் பின் அல்பரீத் எனும் ஆசிரியரிடமிருந்தே முதன்முதலில் நபிமொழியைக் கற்றார்கள். காழீ அபூயூசுஃப் அவர்களிடமும் ஆரம்பக் காலத்தில் கல்வி பயின்றுள்ளார்கள்.

இதே ஆண்டில் அறிஞர் அப்துல்லாஹ் பின் அல்முபாரக் (ரஹ்) அவர்கள் பஃக்தாதுக்கு வந்தார்கள். அவரிடம் கல்வி பயில இமாம் அவர்கள் விரைந்தார்கள். அதற்குள் அப்துல்லாஹ் பின் அல்முபாரக் (ரஹ்) அவர்கள் ரோமர்களுடன் நடைபெற்ற ஒரு போருக்குச் சென்றுவிட்டதால், அவர்களைச் சந்திக்க முடியவில்லை. தொடர்ந்து நான்கு ஆண்டுகள் பஃக்தாத் அறிஞர்களிடமே நபிமொழிகளைக் கற்றார்கள். ஹிஜ்ரி 183ஆவது ஆண்டில் தம் ஆசிரியர் ஹுஷைம் பின் பஷீர் (ரஹ்) அவர்கள் இறந்துவிட்டபோது, இமாமவர்கள் கல்வியைத் தேடி வெளிநாடுகளுக்குப் புறப்பட்டார்கள்.

இது பற்றி இமாமவர்கள் குறிப்பிடுகையில், "நாங்கள் ஹிஜ்ரி 179ஆவது ஆண்டில் ஹுஷைம் பின் பஷீர் அவர்களிடமிருந்து நபிமொழிகளை பதிவுசெய்துகொண்டோம்.

அவர்கள் வாயிலாக ஹஜ் பற்றிய 1000 ஹதீஸ்களையும், குர்ஆன் விரிவுரையின் ஒரு பகுதியையும், தீர்ப்புகள் (அஹ்காம்) பற்றிய அத்தியாயத்தையும் பதிவுசெய்துகொண்டோம்" என்று கூறியுள்ளார்கள்.

பயணம் செய்த நாடுகள்

நபிவழித் தகவல்களைக் கேட்டறிவதற்காக அவற்றின் தொகுப்பாளர்கள் அனைவரும் பல்வேறு நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டுள்ளனர். அதற்காக அவர்கள் செய்த தியாகங்கள் பல. மற்றவர்களைப் போன்றே, இமாம் அவர்களும் பல பகுதிகளுக்குப் பயணம் மேற்கொண்டார்கள். தம் ஆசிரியர் ஹுஷைம் (ரஹ்) அவர்கள் இறந்தபின், நபிமொழி நல்லாசான்களை ஆய்ந்தறிந்து, அவர்களிடம் ஹதீஸ்களைக் கேட்பதற்காகப் பல்வேறு நாடுகளுக்குச் சென்றார்கள்.

உறுதியான முடிவெடுத்து, இஸ்லாத்தின் அடிப்படைச் சான்றுகளுள் ஒன்றான நபிமொழிகளை, உரிய அறிவிப்பாளர் வரிசையுடன் பயில்வதற்காக அவர்கள் ஏற்றுக்கொண்ட துயரங்கள் ஏராளம். அவர்களுடைய தாயாரும் தந்தையின் சகோதரரும் இமாமவர்களின் கல்விக்குப் பின்புலமாக இருந்தது, நினைவு கூரப்பட வேண்டியதாகும். அவர்கள் நபிமொழிகளைப் பயில்வதற்காக பின்வரும் நாடுகளுக்குப் பயணம் செய்தார்கள்:

1. கூஃபா: இங்கு ஹி. 183ஆவது ஆண்டில் சென்றார்கள். அதே ஆண்டில் அங்கிருந்து கால்நடையாகவே திரும்பினார்கள். இதுவே அவர்கள் முதன்முதலில் செய்த கல்விப் பயணம் ஆகும்.

2. பஸ்ரா: இராக்கிலுள்ள பஸ்ரா நகருக்கு ஐந்து தடவைகள் கல்வியைத் தேடிச் சென்றார்கள்.

3. புனித மக்கா: இங்கு ஹி. 187ஆம் ஆண்டில் சென்றார்கள். அங்கு இமாம் ஷாஃபிஈ (ரஹ்) அவர்களைச் சந்தித்தார்கள். பிறகு மீண்டும் இரண்டு முறை ஹி. 196, 197 ஆகிய ஆண்டுகளில் சென்றார்கள். பிறகு சுமார் மூன்று ஆண்டுகள் (ஹி. 197-199) மக்காவில் தங்கியிருந்தார்கள். அப்போது 'முஸன்னஃப் அப்துர் ரஸ்ஸாக்' எனும் நபிமொழித் தொகுப்பின் ஆசிரியர் அபூபக்ர் அப்துர் ரஸ்ஸாக் (ஹி. 126-211) அவர்களைச் சந்தித்தார்கள். பிறகு அங்கிருந்து புறப்பட்டு யமன் நாட்டுக்குச் சென்றார்கள்.

4. யமன்: ஹிஜ்ரி 199ஆவது ஆண்டில் மக்காவிலிருந்து நடந்தே யமன் நாட்டுக்குச் சென்றார்கள். அங்கு அறிஞர் இப்ராஹீம் பின் அகீல் அவர்களிடம் இருந்தார்கள். அப்துர் ரஸ்ஸாக் அவர்கள் வழித்தொடர் ஹதீஸ்களை எழுதிக்கொண்டார்கள்.

5. தர்சூஸ்: பின்னர் துருக்கியிலுள்ள 'தர்சூஸ்' நகருக்குக் கால்நடையாகவே சென்றார்கள்.

6. வாசித்: பிறகு பஸ்ராவுக்கும் கூஃபாவுக்கும் இடையிலுள்ள 'வாசித்' எனும் நகருக்குச் சென்றார்கள். இது குறித்து இமாமவர்கள் கூறுகையில், "நான் (ஹதீஸ் கலை மேதை) யஹ்யா பின் சஈத் அல்கத்தான் (ரஹ்) அவர்களிடம் தங்கியிருந்துவிட்டு, வாசித் நகருக்குப் புறப்பட்டேன்" எனக் குறிப்பிட்டுள்ளார்கள்.

7. அர்ரக்கா: பிறகு சிரியா நாட்டிலுள்ள 'அர்ரக்கா' நகருக்குப் பயணம் மேற்

கொண்டார்கள். "அர்ரக்கா நகரில், ஃபய்யாள் பின் முஹம்மது பின் ஸினான் (ரஹ்) அவர்களைவிடச் சிறந்த அறிஞர் எவரையும் நான் பார்க்கவில்லை" என இமாமவர்கள் குறிப்பிட்டுள்ளது, அவர்களது அர்ரக்காப் பயணத்திற்குச் சான்றாகும்.

8. அபாதான்: ஈரானிலுள்ள இந்த நகருக்கு ஹிஜ்ரீ 186ஆம் ஆண்டு சென்றார்கள். அங்கு அறிஞர் அபுர்ரபீஉ (ரஹ்) அவர்களிடம் சென்று ஹதீஸ்களைப் பதிவு செய்து கொண்டார்கள்.

9. மதீனா.

10. அல்ஜஸீரா.

சொல்லொணாத் துயரங்கள் ஏற்றுப் பல்வேறு நாடுகளுக்குப் பயணம் செய்து, பல்லாண்டுகளைச் செலவிட்டு, நபி (ஸல்) அவர்களின் பொன்மொழிகளைத் திரட்டிய இமாம் அஹ்மது பின் ஹன்பல் (ரஹ்) அவர்களின் இந்தப் பயணத்திலிருந்து இரண்டு கருத்துகள் தெளிவாகின்றன:

1. இமாமவர்கள் நல்ல நினைவாற்றல் உள்ளவர்களாக இருந்தும்கூட, தாம் ஒவ்வொரு நாட்டினரிடமிருந்தும் செவியுற்ற ஹதீஸ்கள் அனைத்தையும் தனித்தனியே பதிவு செய்வதில் அவர்கள் காட்டிய தனிக் கவனம்.

அவற்றை, 'மக்காவாசிகள் வழியாக வந்துள்ள நபிமொழிகள்' (முஸ்னதுல் மக்கிய்யீன்), 'மதீனாவாசிகள் வழியாக வந்துள்ள நபிமொழிகள்' (அல்லது முஸ்னதில் மதனிய்யீன அஜ்மஈன்), 'ஷாம்வாசிகள் வழியாக வந்துள்ளவை' (முஸ்னதுஷ் ஷாமிய்யீன்), 'பஸ்ரா வாசிகள் வழியாக வந்துள்ளவை' (முஸ்னதுல் பஸரிய்யீன்) எனத் தனித்தனித் தலைப்புகளில் ஏராளமான ஹதீஸ்களைத் திரட்டித் தந்துள்ளார்கள். "அஹ்மது பின் ஹன்பல் அவர்கள் பத்து லட்சம் ஹதீஸ்களை மனனமிட்டிருந்தார்கள்" என அபூ ஸுர்ஆ (ரஹ்) அவர்கள் கூறியிருப்பது, இங்குக் குறிப்பிடத் தக்கதாகும்.

2. இந்தப் பயணங்களில் நபிமொழிகள் மட்டுமன்றி, அவற்றிலிருந்து பெறப்படும் ("ஃபிக்ஹு" எனும்) மார்க்கச் சட்ட விளக்கங்களையும் கற்றுக்கொண்டார்கள். இமாம் ஷாஃபிஈ (ரஹ்) அவர்களிடம் அவர்கள் காட்டிய வெகுவான ஈடுபாடு, இதை உறுதிப்படுத்துகின்றது.

கற்ற கலைகள்

இமாமவர்கள் தமது காலத்திலிருந்த அனைத்துக் கலைகளையும் கற்றார்கள். அவர்கள் வாழ்ந்தது, இஸ்லாமிய உலகின் அறிவுக் கோட்டையாகத் திகழ்ந்த பஃக்தாத் நகராமிற்றே. அன்றைய அறிஞர்களின் தலைமையிடமாகத் திகழ்ந்த பஃக்தாதின் எந்தக் கலையையும் திரும்பிப் பார்க்காமல், இமாமவர்கள் காலத்தை நகர்த்தினார்கள் என்று சொல்வதற்கில்லை. அவர்கள் கற்ற கலைகளுள் சில:

1. அரபி மொழியியல்

குர்ஆன் மற்றும் அதைச் சார்ந்த கலைகளைப் பயில்வதற்கு அடிப்படையாகத் திகழும் அரபிமொழியை அரேபியச் சூழலிலேயே கற்றுக்கொண்டார்கள். அவர்கள் அந்த மண்ணிலேயே பிறந்து, அந்த மண்ணிலேயே பயணம் செய்து, ஏராளமான

கலைகளைக் கற்றார்கள். இது குறித்து இமாமவர்கள் கூறுகையில், "நான் அரபுமொழி குறித்து அரபு மொழியறிஞர் அபூஅம்ர் பின் அல்அலா அல்பஸ்ரீ (கிபி. 689-770) அவர்கள் எழுதியதைவிட அதிகமாக எழுதியிருக்கிறேன்" எனக் குறிப்பிட்டுள்ளார்கள்

2. நபிமொழியியல்

ஹதீஸ் கலையில் இரண்டு பிரிவுகள் உள்ளன. ஒன்று, அறிவிப்பாளர்கள் தொடர்பானது. மற்றொன்று, நபிமொழியின் வாசகம் தொடர்பானது. நபிமொழியியலின் இவ்விரு பிரிவுகளையும் இமாம் அவர்கள் நன்கு அறிந்திருந்தார்கள் என்பதற்கு, அவர்கள் எழுதிய 'முஸ்னது' எனும் இந்த நூலே சாட்சி. இந்நூலில், அறிவிப்பாளர்களின் குறை-நிறைகள் தொடர்பாக இமாமவர்கள் கூறும் தகவல்கள், அவர்கள் இக்கலையில் மாமேதை என்பதை எடுத்துரைக்கின்றன.

அ. நபிமொழியியலின் அறிவிப்பாளர் கலை (இல்முல் ஹதீஸி ரிவாயத்தன்)

இமாமவர்கள், இக்கலையில் தமது சம காலத்தில் வாழ்ந்த அறிஞர்களின் முன்னோடியாகத் திகழ்ந்தார்கள் என்பதற்கு, அவர்கள் எழுதிய 26363 ஹதீஸ்கள் கொண்ட முஸ்னது எனும் இந்நூலே சான்றாகும். இமாமவர்கள் தம் புதல்வரான அப்துல்லாஹ் பின் அஹ்மது அவர்களிடம், "இந்த முஸ்னதை நீ பாதுகாத்துக்கொள். இது, மக்களுக்கு இமாமாக (வழிகாட்டும் முன்னோடி நூலாக)த் திகழும்" என்று கூறியுள்ளது, இங்கு நினைவுகூரத்தக்கதாகும்.

ஹாபிழ் அபூமூசா அல்மதீனீ (ரஹ்) அவர்கள் தமது 'கஸாயிஸு-ல் முஸ்னத்' (முஸ்னதின் தனித்துவங்கள்) எனும் நூலில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்கள்:

இந்த முஸ்னது, நபிமொழியாளர்களுக்கு மாபெரும் அடிப்படையும் வலுவான சான்றுமாகும். ஏராளமான நபிமொழிகளிலிருந்து தேர்வு செய்யப்பட்டவற்றையே இதில் இமாமவர்கள் இடம்பெறச் செய்துள்ளார்கள். சரியான சான்றுகளுள்ள ஒரு வழிகாட்டி நூலாகவே இதை அவர்கள் அமைத்துள்ளார்கள். மக்களிடையே கருத்து வேறுபாடு ஏற்படும்போது, மக்களின் மீளுமிடமாகவும், அவர்களுக்குத் தீர்வு கூறும் நீதிபதியாகவும் இது திகழும் என்பது திண்ணம்.

ஆ. நபிமொழி வாசகக் கலை (இல்முல் ஹதீஸி திராயத்தன்)

இ. அறிவிப்பாளரின் நிறைகுறை ஆராய்ச்சிக் கலை (இல்முல் ஜர்ஹி வத்தஅதீல்)

இமாமவர்கள் நபிமொழிச் செய்தியாளர்களின் (ருவாத்) நிறை-குறைகள் குறித்தும் பேசியுள்ளார்கள். அவர்கள் இத்துறையில் நடுநிலைப் போக்குக் கொண்ட விமர்சகராகத் திகழ்ந்தார்கள். இக்கலையில் மேதையாகத் திகழ்ந்த யஹ்யா பின் சஈத் அல்கத்தான் (ரஹ்) அவர்களின் மாணவர் ஆவார்கள் ஹம்பலீ மத்ஹபு அறிஞர்களின் தரவரிசை முறை (தபகாத்துல் ஹனாபிலா) எனும் நூலில் இமாமவர்களின் புதல்வர் அப்துல்லாஹ் பின் அஹ்மது அவர்கள் கூறுகின்றார்கள்: "(ஒரு முறை) அபூதுராப் அந்நக்ஷபீ அவர்கள் என் தந்தையாரிடம் வந்தபோது, என் தந்தையார், 'இன்ன அறிவிப்பாளர் பலவீனமானவர் ஆவார்', 'இன்ன மனிதர் நம்பத் தகுந்தவர் ஆவார்' என்று கூறலானார்கள். இதைக் கேட்டு அபூதுராப் அவர்கள், 'ஆசிரியர் அவர்களே! மார்க்க அறிஞர்களைப் பற்றிப் புறம் பேசாதீர்கள்' என்றார்கள். அப்போது என் தந்தையார் அவரை நோக்கித் திரும்பி,

'இவ்வாறு கூறுவது நலம் நாடுதலே தவிர, புறங்கூறல் அன்று' என்றார்கள்."

அபூயஹ்யா அந்நாகித் அவர்கள் கூறினார்கள்: (ஒருமுறை) நாங்கள் இப்ராஹீம் முஹம்மது பின் அர்அரா அவர்களுடன் இருந்தோம். அப்போது அறிவிப்பாளர் யஹ்யா பின் ஆஸிம் என்பார் பற்றிப் பேச்சு வந்தது. அங்கிருந்த ஒருவர், "யஹ்யா பலவீனமானவர் என அஹ்மது பின் ஹன்பல் அவர்கள் கூறியுள்ளார்கள்" என்றார். மற்றொருவர், "யஹ்யா நம்பத் தகுந்த அறிவிப்பாளராயிருந்தால், எந்தப் பிரச்சனையுமில்லை (அஹ்மது பின் ஹன்பல் அவர்களின் விமர்சனத்தைப் பொருட்படுத்த வேண்டியதில்லை)" என்றார். அப்போது இப்ராஹீம் பின் முஹம்மது பின் அர்அரா அவர்கள், "அல்லாஹ்வின் மீதாணையாக! அஹ்மது பின் ஹன்பல் அவர்கள், அஃப்பான் மற்றும் அஸ்வத் (போன்ற சிறந்த அறிவிப்பாளர்களைக்) குறித்துக் குறை கூறினாலும், அதை ஏற்றுக் கொள்ளவேண்டும்" என்றார்கள்.

௨. நபிமொழி மறைமுகக் குறை ஆய்வுக் கலை (இல்மு இலலில் ஹதீஸ்)

இமாமவர்கள் நபிமொழிகளின் மறைமுகக் குறைபாடுகள் குறித்தும் பேசியுள்ளார்கள். தம்முடைய புதல்வர் அப்துல்லாஹ் அவர்களுக்கு முஸ்னதைப் பாடம் நடத்திக்கொண்டிருந்தபோது, "இந்த ஹதீஸைக் குறித்துக்கொள். இதில் மறைமுகமான குறை உள்ளது" என்று கூறுவார்கள். அபூபக்ர் அல்கல்லால் (ரஹ்) அவர்கள் எழுதிய 'கிதாபுல் இலல்' எனும் நூலைப் படித்தவர்கள், அதில் அஹ்மத் பின் ஹன்பல் அவர்கள் இக்கலை தொடர்பாகப் பேசியுள்ளதிலிருந்து, இமாமவர்களுக்கு இக்கலையில் இருந்த ஆழ்ந்த புலமையை நன்கு புரிந்துகொள்ள முடியும்.

அவர்களின் கல்வித்திறன் குறித்து வரலாற்று நூல்கள் விரிவாகப் பேசாவிட்டாலும், அவர்கள் பல கலைகளிலும் தேர்ச்சி பெற்றிருந்தார்கள் என்பதில் எந்த ஐயமுமில்லை. தம்மிடமிருந்து நபிமொழிகளைத் தவிர வேறெதையும் பதிவு செய்துகொள்ள வேண்டாம் என அவர்கள் தடைவிதித்ததே இதற்குக் காரணம்.

3. மார்க்கச் சட்டக் கலை (ஃபிக்ஹ்)

இமாமவர்கள் இக்கலையிலும் தேர்ச்சி பெற்றிருந்தார்கள். அவர்கள் கல்வியைத் தேடிப் புறப்பட்ட தொடக்க காலத்தில், முதலில் மார்க்கச் சட்ட அறிஞர் காழீ அபூயூசுஃப் (ரஹ்) அவர்களிடமே பயின்றார்கள். பிறகு நபிமொழிகளைத் திரட்டுவதிலும், அதற்காகப் பயணம் மேற்கொள்வதிலும் அவர்கள் முழுக் கவனம் செலுத்தியதால், மார்க்கச் சட்டக் கலையைக் கற்பதில் பின்னர் ஈடுபாடு காட்டவில்லை.

நபிமொழிகளைத் திரட்டும் பணிகள் முடிந்ததும், சொந்த ஆய்வின்படி மார்க்கச் சட்டங்கள் கூறும் (அஹ்லுர் ரஃயி) அறிஞர்களிடம் மறுபடியும் இக்கலையைத் திறனாய்வுக் கண்ணோட்டத்துடன் பயிலச் சென்றார்கள். அதன் விளைவாக மார்க்கத் தீர்ப்புகள் (ஃபத்வா) கூறுவதில் தமக்கென ஒரு தனி வழியை வகுத்துக்கொண்டார்கள். இது குறித்து 'தபகாத்துல் ஹனாபிலா' எனும் நூலின் ஆசிரியர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்கள்:

இமாம் அஹ்மது பின் ஹன்பல் அவர்கள் தமது மார்க்கச் சட்ட முடிவுகளை உறுதியான சான்றுகளின் அடிப்படையிலேயே அமைத்தார்கள். தமது ஃபிக்ஹுச் சட்ட முடிவுகளைக் குர்ஆன் வசனம் அல்லது நபிமொழி அல்லது முக்கிய நபித்தோழரின் கூற்று

ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டே அமைத்தார்கள். ஆய்வு, ஒப்பீட்டுச் சட்டம் (கியாஸ்) ஆகியவற்றைவிட, நபித்தோழர் கூற்றுக்கு அவர்கள் முதலிடம் அளித்தார்கள். இமாம் ஷாஃபிஈ அவர்கள்மீது அவர்களுக்கிருந்த ஈர்ப்பும், அவர்களைப் பல முறைகள் சந்தித்துப் பயின்றதும், அஹ்மது பின் ஹன்பல் அவர்களின் மார்க்கச் சட்டத் தீர்ப்புகளில் மிகப்பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின என்பதில் எந்த ஐயமுமில்லை. இமாமவர்களின் காலத்தில் வாழ்ந்த அறிஞர்களின் புகழாரங்களும், இமாமவர்கள் விண்டுரைத்த மார்க்கச் சட்டத் தீர்ப்புகளும், இக்கலையில் அவர்களுக்கு இருந்த புலமைக்குக் கட்டியம் கூறுகின்றன.

"அல்லாஹ்வின் மீதாணையாக! வான் முகட்டுக்குக் கீழே அஹ்மத் பின் ஹன்பல் (ரஹ்) அவர்களைவிட மிகச் சிறந்த மார்க்கச் சட்ட அறிஞர் (ஃபகீஹ்) எவருமிலர். அவருக்கு நிகரான ஒருவர்கூடக் கிழக்கிலும் மேற்கிலும் இலர்" என ஹதீஸ் கலை மேதை யஹ்யா பின் மயீன் (ரஹ்) அவர்கள் கூறியுள்ளது இங்குக் குறிப்பிடத் தக்கதாகும்.

ஹதீஸ் தர மதிப்பீட்டறிஞர் தஹபீ (ரஹ்) அவர்கள், "மார்க்கச் சட்டவியல் (ஃபிக்ஹு), நபிமொழியியல் (ஹதீஸ்), எதையும் இறைப்பொருத்தத்திற்காகச் செய்யும் உயர் குணம் (இக்லாஸ்), மற்றும் மார்க்கப் பிடிப்பு (வரஉ) ஆகிய அனைத்திலுமே அஹ்மது பின் ஹன்பல் (ரஹ்) அவர்கள் இமாமாகவே திகழ்ந்தார்கள்" என்கிறார்கள்.

"அஹ்மது பின் ஹன்பல் அவர்கள் எட்டுக் கலைகளில் முன்னோடியாக (இமாமாக) இருந்தார்கள்: 1. ஹதீஸ் கலை, 2. 'ஃபிக்ஹு' எனும் மார்க்கச் சட்டக் கலை, 3. 'லுஃகத்' எனும் அரபி மொழியியல், 4. குர்ஆன், 5. எளிமை, 6. 'ஸுஹ்து' எனும் பற்றற்ற தன்மை, 7. 'வரஉ' எனும் மார்க்கப் பிடிப்பு, 8. 'சுன்னா' எனும் நபிவழி ஆகியவையே அவை" என இமாம் ஷாஃபிஈ (ரஹ்) அவர்கள் கூறினார்கள் என ரபீஉ பின் சுலைமான் (ரஹ்) அவர்கள் தெரிவித்துள்ளார்கள். ('தபகாத்துல் ஹனாபிலா')

4. கொள்கைத் தர்க்கவியல் கலை (இல்முல் கலாம்)

தர்க்க ரீதியாக இறைக் கோட்பாட்டை வாதிக்கும் இறைமையியல் கொள்கையாளர்களுடன் உறவாடுவது, அவர்களிடம் வாதம் புரிவது, அவர்களுடைய உரைகளைச் செவி தாழ்த்திக் கேட்பது, ஆகியவற்றைத் தவிர்த்துக்கொள்ளுமாறு, இமாம் அவர்கள் மக்களுக்கு அறிவுரை கூறிவந்துள்ளார்கள். அவற்றிலிருந்து இக்கலையையும் இதன் சாதக பாதகங்களையும் அவர்கள் நன்கு அறிந்திருந்தார்கள் என்பதை நம்மால் புரிந்துகொள்ள முடியும்.

இமாமவர்கள் கூறுவார்கள்: தர்க்கவியல் கலையைக் கற்றவர் ஒருபோதும் வெற்றி படையமாட்டார். அவர் (அடிப்படையற்ற) 'ஜஹ்மிய்யா' சித்தாந்தத்திற்கு ஆட்படாமல் போகமாட்டார்.

இமாமவர்கள் தம் புதல்வர் அப்துல்லாஹ் அவர்களிடம், "தர்க்கவியல் கொள்கையாளர்களின் அவையில் நீ அமராதே! அவர்களுள் எவரிடமும் நீ உரையாடாதே" என்று கூறிவிட்டு, "நபிவழிக் கருத்துகளுக்கு அவர்கள் ஆதரவாகப் பேசினாலும், அவர்களுடைய அவைகளில் அமராதே!" என்று கூறிவந்துள்ளார்கள். இவற்றிலிருந்து, தர்க்கவியல் கலையையும் அவர்கள் அறிந்திருந்தார்கள் என்பதை உணர்ந்துகொள்ள முடிகிறது.

இமாமவர்களின் ஆசிரியர்கள்

நபிமொழிகளைக் கற்பதற்காக இமாமவர்கள் மேற்கொண்ட நெடிய பயணம், ஏராளமான அறிஞர்களைச் சந்திப்பதற்கும் அவர்களிடமிருந்து தேவையானவற்றைப் பயில்வதற்கும் வாய்ப்பளித்தது. அவர்களுடைய ஆசிரியர்களின் எண்ணிக்கை குறித்து இப்னுல் ஜவ்ஸீ (ரஹ்) அவர்கள் கூறுகையில், "அஹ்மத் பின் ஹன்பல் (ரஹ்) அவர்கள் நானூற்றுப் பதினைந்து ஆசிரியர்களிடம் கல்வி கற்றார்கள். அவர்களுள் ஒருவர் பெண் ஆவார்" என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

முஸ்னது அஹ்மதில் இடம்பெற்றுள்ள ஹதீஸ்கள் இமாமவர்கள்வரை வந்து சேர்வதற்குக் காரணமாயிருந்த ஆசிரியர்கள் (நேரடி அறிவிப்பாளர்கள்) 292 பேர்கள் ஆவர் என 'முஃஜமு ஷுயூகில் இமாமி அஹ்மது' (இமாம் அஹ்மது அவர்களின் ஆசிரியர்களின் அகரவரிசை அட்டவணை) எனும் நூலின் ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

இமாமவர்களின் ஆசிரியர்களுள் சிலர்:

1. அலீ பின் ஹாஷிம் அல்ஃபரீத் (இறப்பு, ஹிஜ்ரி. 180)
2. காழீ அபூயூசுஃப் (இ. ஹி. 182)
3. ஹுஷைம் பின் பஷீர் (பஃக்தாத். இ. ஹி. 183)
4. இப்ராஹீம் சஅத் அஸ்ஸுஹ்ரி (இ. ஹி. 185)
5. முஃதமிர் பின் சுலைமான் (பஸ்ரா. இ. ஹி. 187)
6. இஸ்மாயீல் உலய்யா அல்அசதீ (இ. ஹி. 193)
7. யஹ்யா பின் சயீத் அல்உமவீ (இ. ஹி. 194)
8. வலீத் பின் முஸ்லிம் (இ. ஹி. 195)
9. வகீஉ பின் அல்ஜர்ராஹ் (இ. ஹி. 196)
10. சுஃப்யான் பின் உயைனா (பஃக்தாத். இ. ஹி. 198)
11. யஹ்யா பின் சயீத் அல்கத்தான் (பஸ்ரா. இ. ஹி. 198)
12. அப்துர் ரஹ்மான் பின் மஹ்தீ (பஸ்ரா. இ. ஹி. 198)
13. அப்துல்லாஹ் பின் நுமைர் (கூஃபா. இ. ஹி. 199)
14. யஹ்யா பின் ஆதம் அல்உமவீ (இ. ஹி. 203)
15. முஹம்மது இத்ரீஸ் அஷ்ஷாஃபிஈ (ஹி. 150-204)
16. யஸீத் பின் ஹாரூன் (இராக். இ. ஹி. 206)
17. முஹம்மது பின் ஜஃபர் (மதாயின். இ. ஹி. 206)
18. அப்துர் ரஸ்ஸாக் பின் ஹம்மாம் அஸ்ஸன்ஆனீ (யமன். இ. ஹி. 211)

இமாமவர்களின் மாணவர்கள்

இமாம் அஹ்மது பின் ஹன்பல் அவர்களிடமிருந்து அவர்களுடைய மாணவர்கள் மட்டுமன்றி, அவர்களுடைய ஆசிரியர்களும் அக்காலத்தில் வாழ்ந்த பெரும் அறிஞர்களும்கூட, நபிமொழிகளை அறிவித்துள்ளனர். நபிமொழிகளைத் திரட்டுவதற்காக இமாமவர்கள் மேற்கொண்ட முயற்சிகளும், அதற்காக அவர்கள் மேற்கொண்ட பன்னாட்டுப் பயணங்களுமே இதற்குக் காரணம். அவர்கள் இருந்த இடத்தைத் தேடி வெகு தொலைவிலிருந்தெல்லாம் நபிமொழி அறிஞர்கள் வந்து, அவர்களிடம் கற்றுச் சென்றனர். இது, இமாமவர்களின் கடின உழைப்புக்குக் கிடைத்த வெற்றியாகும்.

தம்முடைய மாணவர் அஹ்மது பின் ஹன்பல் அவர்களிடமிருந்து நபிமொழிகளை அறிவித்த ஆசிரியர்கள், மற்றும் மூதறிஞர்கள் சிலருடைய பெயர்கள் வருமாறு:

1. வகீஉ பின் அல்ஜர்ராஹ் (இறப்பு, ஹிஜ்ரீ 196)
2. அப்துர்ரஹ்மான் பின் மஹ்தீ (பஸ்ரா, இ. ஹி. 198)
3. யஹ்யா பின் ஆதம் அல்உமவீ (இ. ஹி. 203)
4. முஹம்மது பின் இத்ரீஸ் அஷ்ஷாஃபிஈ (ஹி. 150-204)
5. ஹசன் பின் மூசா அல்அஷ்யபு (இ. ஹி. 209)
6. அப்துர் ரஸ்ஸாக் பின் அல்ஹம்மாம் (யமன் இ. ஹி. 211)

ஆதாரப்பூர்வமான நபிமொழித் தொகுப்பாளர்கள் அறுவருள் இமாம் புகாரீ, இமாம் முஸ்லிம், இமாம் அபூதாவூத் ஆகியோர், அஹ்மது பின் ஹன்பல் (ரஹ்) அவர்களின் நேரடி மாணவர்கள் ஆவர். மற்றவர்கள் மூவரும் (திர்மிதீ, இப்னுமாஜா, நஸாயீ ஆகியோர்) மாணவர்களின் மாணவர்கள் ஆவர்.

இமாம் அவர்களிடமிருந்து நபிமொழிகளை அறிவித்த அறிஞர்கள் சிலரின் பெயர்கள் வருமாறு:

1. யஹ்யா பின் மயீன் (இ. ஹி. 233)
2. அலீ பின் அல்மதீனீ (இ. ஹி. 234)
3. துஹைம் அஷ்ஷாமீ (இ. ஹி. 245)
4. அஹ்மது பின் அபில் ஹவாரீ (இ. ஹி. 246)
5. அஹ்மது பின் சாலிஹ் அல்மிஸ்ரீ (இ. ஹி. 248)

தஹபீ (ரஹ்) அவர்கள் கூறுவார்கள்: இமாம் அஹ்மது பின் ஹன்பல் அவர்களின் ஹதீஸ் வகுப்பில் ஏறத்தாழ ஐயாயிரம் பேர் குழுமியிருப்பார்கள். அவர்களுள் ஐந்நூறுக்குக் குறையாதவர்கள் இமாமவர்கள் கூறும் நபிமொழிகளை ஏடுகளில் பதிவு செய்துகொண்டிருப்பார்கள். மற்றவர்கள் மௌனமாக அமர்ந்து செவியுற்றுக்கொண்டிருப்பார்கள்.

அறிஞர்கள் அளித்துள்ள நற்சான்றுகள்

1. குதைபா (ரஹ்) அவர்கள் (இ. ஹி. 240), "இந்தத் தலைமுறை அறிஞர்களுள் மிகவும் சிறந்தவர் அப்துல்லாஹ் பின் அல்முபாரக் (ரஹ்) அவர்கள் ஆவார்கள். பிறகு இந்த இளைஞர் (அஹ்மது) ஆவார். அஹ்மதை நேசிக்கும் ஒருவரை நீ கண்டால், அவர் நபி வழியில் ஈடுபாடு உள்ளவர் என்பதைப் புரிந்துகொள். அறிஞர்களான ஸுஃப்யான் அஸ்ஸவ்ரீ, அவ்ஸாஈ, லைஸ் ஆகியோருடைய காலத்தை அஹ்மது பின் ஹன்பல் அடைந்திருந்தால், அவர்கள் அனைவரையும்விடச் சிறப்பில் முந்தியிருப்பார்" என்று கூறினார்கள். அப்போது அவர்களிடம், "நபித்தோழர்களைச் சந்தித்த தாபிஉ அறிஞர்களின் வரிசையிலா அஹ்மது பின் ஹன்பல் அவர்களை நீங்கள் சேர்க்கிறீர்கள்?" என்று கேட்கப்பட்டது. அதற்குக் குதைபா (ரஹ்) அவர்கள், "மூத்த தாபிஉ அறிஞர்களின் வரிசையில் அவர்களைச் சேர்த்துள்ளேன்" என்றார்கள்.

2. இமாம் ஷாஃபிஈ (ரஹ்) அவர்கள் கூறினார்கள்:

"நான் பஃக்தாதில் இளைஞர் ஒருவரைப் பார்த்தேன். அவர், 'இவர் (ஹத்தஸனா) எங்களுக்கு அறிவித்தார்' என்று கூறினால், மக்கள் அனைவரும், 'அவர் உண்மையே சொல்கிறார்' என்று கூறினர். அப்போது ஷாஃபிஈ (ரஹ்) அவர்களிடம், "அந்த இளைஞர் யார்?" என்று கேட்கப்பட்டது. அதற்கு அவர்கள், "அஹ்மது பின் ஹன்பல்தான் அவர்" என்று விடையளித்தார்கள்.

3. யஹ்யா பின் மயீன் (ரஹ்) அவர்கள் கூறினார்கள்:

"இறைவனின் திருப்திக்காக மட்டும் நபிமொழிகளை அறிவிப்பவர்களாக மூவர் இருந்தனர்:

1. யஹ்யா பின் உபைத் 2. அப்துல்லாஹ் பின் மஸ்லமா அல்கஅனபீ 3. அஹ்மது பின் ஹன்பல் ஆகியோரே அவர்கள்."

4. இப்னு அபீஹாத்திம் (ரஹ்) அவர்கள் கூறினார்கள்:

நான் என் தந்தையாரிடம், "அலீ பின் அல்மதீனீ, அஹ்மது பின் ஹன்பல் (ரஹ்) ஆகிய இருவருள் நினைவாற்றலில் சிறந்தவர் யார்?" என்று கேட்டேன். அதற்கு என் தந்தையார், "அவர்கள் இருவருமே சமஅளவு நினைவாற்றல் கொண்டவர்கள்தாம். ஆயினும், மார்க்கச் சட்ட (ஃபிக்ஹு) விளக்கத்தில் அலீ பின் அல்மதீனீ அவர்களைவிட, அஹ்மது பின் ஹன்பல் அவர்களே சிறந்து விளங்கினார்கள்" என்று கூறினார்கள்.

இமாமவர்கள் சந்தித்த சோதனை:

இறைவனின் வஹீயான குர்ஆன் (அது இறைவனின் பேரறிவு என்ற கண்ணோட்டத்தில்) அநாதியானதா அல்லது புதிதாகப் படைக்கப்பட்டதா என்ற விவாதம், அப்பாஸிய ஆட்சியாளர்களுள் ஐந்தாமவரான ஹாரூன் ரஷீத் என்பாரின் ஆட்சிக் காலத்தில்தான் (ஹிஜ்ரீ 170-193 / கி.பி. 786-809) தோன்றியது. அதற்கு முன்புவரை, 'இறைவனின் வஹீயான குர்ஆன், அல்லாஹ்வின் வாக்கு; அவனது பேரறிவு. இறைவன் ஆரம்பமில்லாதவன். அவன் புதிதாகப் படைக்கப்பட்டவன் அல்லன். அவனது பேரறிவும் புதிதாகத் தோன்றியதன்று. குர்ஆனும் அவனுடைய பேரறிவே. அதுவும் புதிதாகப் படைக்கப்பட்டதன்று' எனும் நேரான கொள்கையிலேயே முஸ்லிம்கள் இருந்துவந்தனர்.

அப்பாஸியாக்களின் ஏழாம் ஆட்சியாளர் மஃமூன் பின் அப்தில்லாஹ் பின் ஹாரூன் ரஷீது ஆட்சிக் காலத்தில் (ஹி. 198-218 / கி.பி. 813-833) 'முஅதஸிலா', 'ஜஹ்மிய்யா' ஆகிய கொள்கை பிறழ்ந்த கூட்டங்கள் தோன்றி, 'குர்ஆன் இறைவனால் புதிதாகப் படைக்கப்பட்டதாகும். குர்ஆனும் ஒரு பொருள்தான். பொருள்கள் அனைத்தும் புதிதாகப் படைக்கப்பட்டவை. எல்லாப் பொருட்களும் இறைவனால் படைக்கப் பட்டவை. குர்ஆனும் இறைவனால் படைக்கப்பட்டதுதான்' என்று கூறினர். ஆனால், இறைவன் அநாதியானவன் (ஆரம்பமில்லாதவன்); அவனது தன்மையும் பேரறிவும் அநாதியானவையாகவே இருக்க வேண்டும். அவனது பேரறிவான குர்ஆன் புதிதாகத் தோன்றியதாக இருக்கலாகாது எனும் அடிப்படையைக் கைவிட்டனர்.

இறைத் தன்மைக்கே எதிரான 'முஅதஸிலா' மற்றும் 'ஜஹ்மிய்யா' கூட்டத்தாரின் கருத்துக்கு மன்னர் மஃமூனும் பலியானார். இந்நிலையில் ஹிஜ்ரீ 218ஆம் ஆண்டு மஃமூன், மக்களையும் அறிஞர்களையும் சோதித்துப் பார்த்து, இறைவனின் சொல் அநாதியானதன்று எனும் கருத்தை ஏற்குமாறு வற்புறுத்தினார். தண்டனைக்கு அஞ்சிய மக்கள் அவரது கருத்தை ஏற்றனர்.

இதேபோன்று, இமாம் அஹ்மது பின் ஹன்பல் (ரஹ்) அவர்களும் சோதிக்கப்பட்ட போது, இறை வாக்கான குர்ஆன் புதிதாகப் படைக்கப்பட்டதன்று எனும் தமது கொள்கையைத் துணிந்து கூறினார்கள். அதனால் ஆட்சியாளரால் அடித்துத் துன்புறுத்தப் பட்டுச் சிறையில் தள்ளப்பட்டார்கள் இமாம் அஹ்மது பின் ஹன்பல் (ரஹ்) அவர்கள். மஃமூன் இறக்கும்வரை, இமாமவர்கள் சிறையிலேயே அடைக்கப்பட்டிருந்தார்கள்.

பிறகு எட்டாம் ஆட்சியாளராக முஅத்தஸிம் (ஹி. 218-227/ கி.பி. 833-842) பதவிக்கு வந்தார். அவரும் மஃமூனின் வழியில், 'முஅதஸிலா'க் கொள்கைக்கு ஆதரவாகச் செயல்பட்டார். சிறையிலிருந்த இமாமவர்களை வாதிடுவதற்காக அழைத்தார். முஅத்தஸிமுக்கும் இமாமுக்கும் இடையே வாதப் பிரதிவாதம் நடந்தது. இமாமவர்கள் தமது கொள்கையில் உறுதியாக இருந்தார்கள். பிறகு முஅத்தஸிமின் கட்டளைப்படி, இமாமவர்களைக் காவலர்கள் சாட்டையால் மாறி மாறி அடித்தனர். அந்த அடிகள் இமாமின் உடலை மட்டுமே காயப்படுத்தின. அவர்களது கொள்கையில் சிறு கீறலைக் கூட அவை ஏற்படுத்தவில்லை!

அடிக்கச் சொன்ன முஅத்தஸிமே இமாமவர்களிடம் வந்து, "அஹ்மதே! ஏன் உம் மையே நீர் அழித்துக்கொள்கிறீர்?" என்று கேட்குமளவுக்கு அவர்கள் வதைக்கப்பட்டார் கள். 'முஅதஸிலா'க் கொள்கைவாதிகளுள் சிலர், இமாமவர்களைக் கொன்றுவிடச் சொன்னார்கள். "உமது கருத்தை மாற்றிக்கொள்ளும் உம்மை நான் விட்டுவிடுகிறேன்" என்று சொன்னார் முஅத்தஸிம். ஆனால், இமாமவர்களோ, "நீங்கள் கூறும் கொள் கைக்கு, குர்ஆனிலிருந்து ஒரேயொரு சரியான சான்றைக் கூறுங்கள்; நான் எனது கொள் கையை விட்டுவிடுகிறேன்" என்று கூறினார்கள். 'முஅதஸிலா'க் கொள்கைக்காரர்களும் மன்னர் ஆதரவுபெற்ற அறிஞர்களும் ஓர் அணியில் இருக்க, இமாமவர்கள் தன்னந் தனியாக நின்று சோதனைகளைத் தாங்கிக்கொண்டிருந்தார்கள். மயக்கமுறும்வரை சாட்டையடிகள் விழுந்தன! மயக்கம் தெளிந்ததும், மறுபடியும் அடிகள் விழுந்தன! காலில் விலங்கிட்டிருந்தார்கள்! காயம் அவர்களைச் செயலிழக்கச் செய்தது! ஆனால், கொள் கையில் எந்தத் தளர்வுமில்லை! வணக்க வழிபாடுகளும் தவறவில்லை! இரத்தம் வழிந்த

நிலையிலும், கடமையான தொழுகைகளைச் சிறைக்குள் தொழுதார்கள் இமாமவர்கள்!

ஒரு நாள், இரத்தம் வழிந்த நிலையில் அவர்கள் தொழுவதைக் கண்ட இப்னு சமாஆ என்பவர், "உமது ஆடையில் இரத்தம் வழிந்துகொண்டிருக்கும் நிலையில், தொழுகிறீரே (தொழுகை நிறைவேறுமா?)" என்று கேட்டார். அதற்கு இமாமவர்கள், "உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள் (அபூலுஃலுஆ என்பவனால் குத்தப்பட்டபோது) இரத்தம் வழிந்த நிலையில் தொழவில்லையா?" என்று கேட்டார்கள். இமாமவர்கள் பதினெட்டு ஆண்டுகள் சிறை வைக்கப்பட்டு இருந்தார்கள்! இதற்கிடையே அவர்கள் சந்தித்த விவாதங்களும் அடைந்த சித்திரவதைகளும் ஏராளம்! ஏராளம்!

முஅத்தஸிம் இறந்து, அவருடைய புதல்வர் 'வாஸிக்' என்பாரின் ஆட்சி (ஹிஜ்ரி 227-232 /கி.பி.842-847) நடந்துகொண்டிருந்தபோது, சிறைத் தண்டனை முடிந்து, இமாமவர்கள் வெளியில் வந்து மீண்டும் கல்விப் பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். ஆட்சியாளர் வாஸிக்கும் 'முஅதஸிலா'க் கொள்கைகளுக்கு ஆதரவாகச் செயல்பட்டார். தன் அப்பன்-பாட்டன் வழியில், குர்ஆன் புதிதாகப் படைக்கப்பட்டதாகும் எனும் கருத்தை மக்களிடையே திணித்தார். பாடத் திட்டத்தில் சேர்த்து, அதைச் சிறார்களுக்கும் கற்பிக்குமாறு வற்புறுத்தினார். இதைக் கண்டு நபிமொழி அறிஞர்களும் சட்ட அறிஞர்களும் கொதித்தெழுந்தனர்.

அப்போது வாஸிக், இமாமவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினார். "இனிமேல் உங்கள் முன்பு கல்வியாளர்கள் குழுமக் கூடாது. நான் இருக்கும் இடத்தில் நீங்கள் இருக்கக் கூடாது. இங்கிருந்து நீங்கள் விரும்பும் பகுதிக்குச் சென்றுவிடுங்கள்" என்று அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. இதற்குப் பிறகு இமாமவர்கள், எங்கும் செல்லாமல் தமது வீட்டுக்குள்ளேயே காலத்தைக் கழித்தார்கள். வாஸிக் இறக்கும்வரை, இதே நிலையில் இருந்தார்கள். அதன் பின்னர் முத்தவக்கில் அப்பாஸியாக்களின் பத்தாம் ஆட்சியாளராக (ஹிஜ்ரி 232-247/ கி.பி. 847-861) வந்தார்.

சத்திய சோதனைகளில் சிக்கித் தவித்த மக்களின் துன்பங்களைத் துடைத்தார் முத்தவக்கில். முஅத்தஸிலாக்களை ஒடுக்கினார்; நபிவழிக்கு ஆதரவாகச் செயல்பட்டார் என்பது வரலாறு.

"அல்லாஹ் இந்த மார்க்கத்தை இருவர் மூலம் காத்தான். மதம் மாறியோருக்கெதிராக நடைபெற்ற போர் (யவ்முர் ரித்தா) நாளில், அபூபக்ர் (ரலி) அவர்கள் மூலம் காத்தான். (குர்ஆன் இறைவனின் பேரறிவாகும்; அது அநாதியானது என்ற கொள்கைக்காக அப்பாஸிய ஆட்சியாளர்களால் ஏற்பட்ட) சோதனை நாளில் (யவ்முல் மிஹ்னா) அஹ்மத் பின் ஹன்பல் (ரஹ்) அவர்கள் மூலமும் காத்தான்" என அலீ பின் அல்மதீனீ (ரஹ்) அவர்கள் புகழாரம் சூட்டியது இதனால்தான்.

இமாமவர்கள் எழுதிய நூல்கள்

இமாம் அஹ்மது பின் ஹன்பல் (ரஹ்) அவர்கள் இருபதுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார்கள்.

1. முஸ்னது, 2. அல் இலல் (ஹதீஸ் கலை), 3. அந்நாசிகு வல்மன்சூக் (காலாவதியாக்கப்பட்ட வசனங்களும் காலாவதியாக்கிய வசனங்களும்), 4. அஸ்ஸுஹ்து (உலகாசை

கொள்கைகள்), 5. அல்அஷ்ரிபா (குடிபானங்கள்), 6. ஈமான் (இறைநம்பிக்கை), 7. அல்ஃபளாயில் (நபித்தோழர் சிறப்புகள்), 8. அல்ஃபராயிள் (பாகப் பிரிவினைச் சட்டங்கள்), 9. அல்மனாசிக் (ஹஜ் கிரியைகள்), 10. தாஅத்துர் ரசூல் (இறைத்தூதருக்குக் கட்டுப்படல்), 11. அல்முகத்திமு வல்முஅக்கிரு (முன்னேற்றும் அளிப்பவனும் பின்னடைத் தருபவனும்), 12. ஜவாபாத்துல் குர்ஆன் (குர்ஆனின் பதில்கள்), 13. ஹதீஸு ஷுஅபா (அறிஞர் ஷுஅபா அறிவித்த ஹதீஸ்கள்), 14. நஃப்யுத் தஷ்பீஹ் (இறைவனுக்கு ஒப்புவமையாக்காமை), 15. அல்இமாமத் (தலைமைத்துவம்), 16. கிதாபுல் ஃபித்தன் (குழப்பங்கள்), 17. கிதாபு ஃபளாயிலி அஹ்லில் பைத் (நபியின் குடும்பத்தார் சிறப்புகள்), 18. முஸ்னது அஹ்லில் பைத் (நபியின் குடும்பத்தார் வழியாக வந்துள்ள நபிமொழிகள்), 19. அல்அஸ்மாஉ வல்குனா (அறிவிப்பாளர்களின் இயற்பெயர்களும் குறிப்புப் பெயர்களும்), 20. கிதாபுத் தாரீக் (வரலாறு).


இமாமவர்களின் கூற்றுகள், மார்க்கத் தீர்ப்புகள் ஆகியவற்றைத் தொகுத்து, அபூபக்ர் அல்கல்லால் அவர்கள் மூன்று நூல்கள் எழுதியுள்ளார்கள். 1. கிதாபுல் இலல் (மூன்று தொகுதிகள்), 2. கிதாபுல் இல்ம் (மூன்று தொகுதிகள்), 3. கிதாபுஸ் ஸுன்னத் (மூன்று தொகுதிகள்).

இறப்பு

ஹிஜ்ரீ 241ஆம் ஆண்டு, ரபீஉல் அவ்வல் மாதத்தின் தொடக்க நாட்களில், இமாமவர்களுக்குக் காய்ச்சலுடன் கடுமையான மூச்சிரைப்பும் ஏற்பட்டது. இமாமவர்களின் புதல்வர் சாலிஹ் பின் அஹ்மது அவர்கள் கூறுகிறார்கள்: என் தந்தையார் தமது இறுதி விருப்பமாகப் பின்வருமாறு தெரிவித்தார்கள்:

"அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் பெயரால். இது அஹ்மது பின் முஹம்மத் பின் ஹன்பல் தெரிவிக்கும் இறுதி விருப்பம். அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவனில்லை. அவன் தனித்தவன். அவனுக்கு நிகராக எவருமில்லை. முஹம்மது (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் அடியாரும் தூதருமாவார்கள். இணைவைப்போர் வெறுத்தபோதிலும், அனைத்து மார்க்கங்களைவிட மேலோங்கச் செய்வதற்காக, அவனே தன் தூதரை நேர்வழியுடனும் உண்மை மார்க்கத்துடனும் அனுப்பினான். நபி (ஸல்) அவர்களுக்குக் கீழ்ப்படிய வேண்டிய நபியின் குடும்பத்தாரும் உறவினரும் வழிபாட்டாளர்களுடன் சேர்ந்து, அவர்களும் அல்லாஹ்வையே வணங்கி வழிபட வேண்டும்; அந்த இறைவனைப் போற்றிப் புகழ்வோருடன் சேர்ந்து, அவர்களும் போற்றிப் புகழவேண்டும்; அவர்கள் (ஓர் ஆட்சித் தலைமையின் கீழ் ஒன்றுபட்ட) முஸ்லிம்களின் சமுதாயக் கட்டமைப்பைப் பற்றிக்கொள்ள வேண்டும். நான் அல்லாஹ்வை இறைவனாகவும், இஸ்லாத்தை மார்க்கமாகவும், முஹம்மது (ஸல்) அவர்களைத் தூதராகவும் மனநிறைவுடன் ஏற்றுக்கொண்டேன்."

இமாம் அஹ்மது பின் ஹன்பல் (ரஹ்) அவர்கள் ஹிஜ்ரீ 241 ஆம் ஆண்டு, ரபீஉல் அவ்வல் மாதம், பன்னிரெண்டாம் நாள், வெள்ளிக்கிழமை பஃக்தாத் நகரில், தமது 76ஆவது வயதில் இறந்தார்கள். அங்குள்ள 'பாபுல் ஹர்ப் (அல்ஹர்பிய்யா) எனுமிடத்தில் அடக்கம் செய்யப்பட்டார்கள். இமாமவர்களின் சேவைகளை இறைவன் ஏற்றுக்கொள்வானாக! அவர்களுக்கு அழகிய நற்பலன்களை அளிப்பானாக!



இமாம் அஹ்மது பின் ஹன்பல் (ரஹ்) அவர்கள்

கல்விப் பயணம் மேற்கொண்ட நாடுகள்

கூஃபா, பஸ்ரா, மக்கா, மதீனா, யமன், ஷாம் (சிரியா),
அவாஸிம், மொராக்கோ, பாரசீகம், குராசான்

நபிமொழி நூலாசிரியர்கள் பிறந்த ஊர்கள்

1. [illegible]
2. [illegible]
3. [illegible]
4. [illegible]
5. [illegible]
6. [illegible]
7. [illegible]
8. [illegible]
9. [illegible]

ஹதீஸ்கலை
வழக்குச் சொற்கள்

ஹதீஸ்

'ஹதீஸ்' எனும் அரபிச் சொல்லுக்கு, செய்தி, புதுமை, உரை, நிகழ்ச்சி போன்ற பொருள்கள் உள்ளன. நபிமொழி இயல் வழக்கில் இச்சொல், இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களின் சொல், செயல், சம்மதம், குணநலன்கள், உருவ அமைப்பு ஆகியவற்றைக் குறிக்கும்.

கபர்

'கபர்' எனும் சொல்லுக்கு செய்தி என்பது சொற்பொருளாகும். இது நபி (ஸல்) அவர்களின் சொல்லுக்கும் பயன்படுத்தப்படுகிறது மற்றவர்களின் சொல்லுக்கும் பயன்படுத்தப் படுகிறது.

அசர்

அ) ஹதீஸ்' எனும் சொல்லுக்கு நிகரான சொல். ஆ) நபித்தோழர்கள் மற்றும் தாபிஈன் அறிஞர்களின் சொல் மற்றும் செயல்கள் தொடர்பான செய்தி.

'அசர்' எனும் சொல்லுக்கு 'மீதம்' என்பது சொற்பொருள்.

முஹத்திஸ்

நபிமொழிக் கலைஞர். நபிமொழி அறிவிப்புகள் அவற்றின் அறிவிப்பாளர்தொடர்கள் ஆகியவற்றில் மிகுதியான விஷயங்களை அறிந்த, அவற்றில் ஈடுபாடுள்ள அறிஞரே 'முஹத்திஸ்' ஆவார். பெரும்பாலான அறிஞர்களின் கருத்துப்படி. 'ஹாபிழ்' (நபிமொழி மேதை) என்பதும் இதற்கு நிகரான சொல்லாட்சியாகும்.

மத்தன்-சனது

பொதுவாக எந்த ஒரு செய்தியை எடுத்துக்கொண்டாலும் அந்தச் செய்தியைச் சொன்னவர் ஒருவர் இருப்பார் அவர் சொன்ன செய்தி என ஒன்று இருக்கும் ஹதீஸ்களைப் பொறுத்தவரை நபி (ஸல்) அவர்களின் சொல், செயல், சம்மதம் ஆகியவற்றை உள்ளடக்கிய பகுதிக்கு 'மத்தன்' (பொருள்) என்றும், அச்செய்தி, நபி (ஸல்) அவர்களிடமிருந்து யார் யார் வழியாக நூலாசிரியர் வரை வந்து சேர்ந்ததோ அந்த அறிவிப்பாளர்களின் சங்கிலித்தொடருக்கு 'சனது' அல்லது 'இஸ்னாது' (அறிவிப்பாளர்தொடர்) என்றும் கூறு

வர். 'மத்தன்' எனும் சொல்லுக்கு 'மேடு' என்பது சொற்பொருள். 'சனது' எனும் சொல் லுக்கு சாய்மானம் என்பது சொற்பொருள்.

முசல்சல்

அறிவிப்பாளர்தொடரில் இடம்பெற்ற ஒவ்வோர் அறிவிப்பாளரும் ஒரே மாதிரியான சொல்லையே பயன்படுத்தி அறிவிக்கும் ஹதீஸை 'முசல்சல் ஹதீஸ்' என்பர். (உம்:) ஒவ்வோர் அறிவிப்பாளரும் ஒரே மாதிரி 'ஹத்தஸனா' (அவர் எங்களுக்கு அறிவித்தார்) என்றோ 'அக்பரனா' (அவர் எங்களிடம் தெரிவித்தார்) என்றோ அறிவிப்பதைப் போல.

முஅன்அன்

அறிவிப்பாளர்தொடரில் 'அன்' என்ற இடைச்சொல் பயன்படுத்தப்பட்டு அறிவிக்கப் பட்ட ஹதீஸையே 'முஅன்அன் ஹதீஸ்' என்பர். (உம்:) சாலிமுன் அன் இப்னி உமர் (இப்னு உமரிடமிருந்து சாலிம் கூறியது) என்பதைப் போல.

முஸ்னது

'முழுமையடைந்த அறிவிப்பாளர்தொடர்' என்பது பொருள். அறிவிப்பாளர்தொடர் இடைமுறிவுறாமல் நூலாசிரியர் முதல் நபி (ஸல்) அவர்கள் வரை சென்று முழுமைய டைந்த ஹதீஸ். நபிமொழித் தொகுப்புகளில் ஒரு வகைக்கும் 'முஸ்னது' என்ற பெயர் உண்டு.

முதாபிஉ

'இணைந்தது' என்பது சொற்பொருள். சொல்லிலோ அல்லது பொருளிலோ அல்லது இரண்டிலுமோ ஒற்றை அறிவிப்பாளர் (ஃகரீப்) வழியில் வந்துள்ள ஹதீஸுக்கு வலுச் சேர்க்கும் வண்ணம் வந்துள்ள பிறிதோர் அறிவிப்புக்கு 'முதாபிஉ' அல்லது 'தாபிஉ' (பக்க பல அறிவிப்பு) என்பர். நபித்தோழர்களின் காலத்தில் வாழ்ந்த முஸ்லிமையும் தாபிஉ என்பர் என்பது தனிச் செய்தி. இவற்றில் வலுவூட்டிய அறிவிப்பு, வலுவூட்டப் பட்ட அறிவிப்பு ஆகிய இரண்டிலும் அந்த ஹதீஸை அறிவிக்கும் நபித்தோழர் ஒருவ ராகவே இருப்பார்.

ஷாஹித்

'சாட்சி' என்பது சொற்பொருள். சொல்லிலோ அல்லது பொருளிலோ அல்லது இரண்டி லுமோ ஒற்றை அறிவிப்பாளர் (ஃகரீப்) வழியில் வந்துள்ள ஹதீஸுக்கு சான்று பகரும் பக்க பல அறிவிப்பு. ஏறத்தாழ இதுவும் 'முதாபிஉ'ம் ஒன்றே. ஆயினும், வலுவூட்டிய அறிவிப்பு, வலுவூட்டப்பட்ட அறிவிப்பு ஆகிய இரண்டிலும் இடம்பெறும் நபித்தோழர் ஒருவரா இருக்கமாட்டார். வேறு வேறு நபித்தோழர்களே இடம்பெற்றிருப்பர். முதல் அறிவிப்புக்கு இரண்டாவது அறிவிப்பு சாட்சியமளித்து அதை நிலைநிறுத்துவதால் தான் இதற்கு 'ஷாஹித்' (சாட்சி) எனப் பெயரிட்டுள்ளனர்.

ஹதீஸ்களின் வகைகள்

○ யார் கூறிய செய்தி அல்லது யாரைப் பற்றிய செய்தி என்பதைப் பொறுத்து ஹதீஸ்கள் மூன்று வகைப்படும். 1. மர்ஃபூஉ 2. மவ்கூஃப் 3. மக்தூஉ

மர்ஃபூஉ

நபி (ஸல்) அவர்களவரை கொண்டு செல்லப்பட்ட செய்தி என்பது இதன் பொருள். நபி (ஸல்) அவர்களின் சொல், செயல், சம்மதம், பண்பு ஆகியவை தொடர்பான செய்திக்கே ஹதீஸ்கலை வழக்கில் 'மர்ஃபூஉன ஹதீஸ்' என்பர். நபிமொழி எனப் பொதுவாகச் சொன்னாலும் இதையே குறிக்கும்.

'மர்ஃபூஉ' எனும் சொல்லுக்கு உயர்த்தப்பட்டது என்பது சொற்பொருள்.

மவ்கூஃப்

'நபி (ஸல்) அவர்களவரை கொண்டு செல்லாமல் நபித்தோழரோடு நிறுத்தப்பட்ட செய்தி என்பது பொருள். நபித்தோழரின் கூற்றுக்கே நபிமொழி இயல் வழக்கில் 'மவ்கூஃபான ஹதீஸ்' என்பர்.

'மவ்கூஃப்' எனும் சொல்லுக்கு நிறுத்தப்பட்டது என்பது சொற்பொருள்.

மக்தூஉ

'தாபிஉ அறிஞரோடு துண்டிக்கப்பட்ட செய்தி என்பது பொருள். நபித்தோழர்கள் காலத்தில் வாழ்ந்த 'தாபிஉ' அல்லது அவருக்குப் பின்னுள்ள தாபிஉத் தாபிஈன் அறிஞர்களின் கூற்றுக்கே 'மக்தூஉவான ஹதீஸ்' என்பர்.

'மக்தூஉ' எனும் சொல்லுக்கு துண்டிக்கப்பட்டது என்பது சொற்பொருள்.

ஹதீஸ் குத்ஸீ

'அல்லாஹ் சொன்னான்' என்ற சொற்பிரயோகத்தோடு நபி (ஸல்) அவர்கள் கூறிய பொன்மொழிக்கு 'ஹதீஸ் குத்ஸீ' என்பர். இது 'மர்ஃபூஉ' வகை ஹதீஸ்களில் அடங்கும். 'ஹதீஸ் குத்ஸீ'யும் குர்ஆன் வசனங்களும் ஒன்றல்ல.

'ஹதீஸ் குத்ஸீ' என்பதற்கு 'தூய வாக்கு' என்பது சொற்பொருள்.

○ அறிவிப்பாளர்களின் எண்ணிக்கையை அடிப்படையாக வைத்து ஹதீஸ்கள் இரண்டு வகையாகும். 1. முத்தவாத்திர் 2. ஆஹாத்.

முத்தவாத்திர்

நான்கு நிபந்தனைகளை உள்ளடக்கிய ஹதீஸே முத்தவாத்திர் ஆகும்:

அ) அறிவிப்பாளர்தொடரின் ஒவ்வொரு படிநிலையிலும் (தபக்கா) ஏராளமானோர் இடம்பெற்றிருக்க வேண்டும். குறைந்த பட்சம் ஒவ்வொரு படிநிலையிலும் பத்துப்பேர் இடம்பெற்றிருத்தல்.

ஆ) இத்தனை பேரும் சேர்ந்து பொய் சொல்ல வாய்ப்பே இல்லை என்ற முடிவுக்கு வருமளவுக்கு எண்ணிக்கையில் அவர்கள் அதிகமாக இருப்பது.

இ) நபி (ஸல்) அவர்களின் காலம் முதல் நபிமொழி நூலாசிரியரின் காலம் வரையுள்ள ஒவ்வொரு தலைமுறையிலும் இந்த எண்ணிக்கை தொடர்வது.

ஈ) ஏறுமுகமாக அறிவிப்பாளர்தொடரின் கடைசியிலுள்ள அறிவிப்பாளர் (நபித்தோழர்),

நபி (ஸல்) அவர்கள் கூறியதை தாம் நேரடியாகக் கேட்டதாக அல்லது நபிகளார் செய்ததைத் தாம் நேரடியாகப் பார்த்ததாக அறிவித்திருக்க வேண்டும்

'முத்தவாத்திர்' எனும் சொல்லுக்கு தொடர்ச்சியானது என்பது சொற்பொருள்

ஆஹாத்

○ முத்தவாத்திர் ஹதீஸின் நிபந்தனைகள் நிறைவடையாத, ஒரு சிலர் அறிவித்த ஹதீஸே 'ஆஹாத்' ஆகும். இது மூன்று வகையாகும்: 1 மஷ்ஹூர் 2 அஸீஸ் 3 ஃகரீப்

மஷ்ஹூர்

அறிவிப்பாளர்தொடரின் ஒவ்வொரு படிநிலையிலும் இரண்டுக்கு மேற்பட்ட அறிவிப்பாளர்கள் காணப்படுவது.

'மஷ்ஹூர்' எனும் சொல்லுக்கு பிரபலமானது என்பது சொற்பொருள்.

அஸீஸ்

அறிவிப்பாளர்தொடரின் ஒவ்வொரு படிநிலையிலும் அறிவிப்பாளர்கள் இரண்டுபேர் மட்டுமே இடம்பெற்ற ஹதீஸ்.

'அஸீஸ்' எனும் சொல்லுக்கு அரிதானது என்பது சொற்பொருள்

ஃகரீப்

அறிவிப்பாளர்தொடரின் ஏதேனும் ஒரு படிநிலையில் அறிவிப்பாளர் ஒருவர் மட்டுமே காணப்படும் ஹதீஸ்

'ஃகரீப்' எனும் சொல்லுக்கு தனியானது என்பது சொற்பொருள்

ஆஹாத் வகை ஹதீஸ்கள் அனைத்துமே ஏற்கத் தக்கவையுமல்ல; ஏற்கத் தகாதவையுமல்ல. ஹதீஸின் பொருள், அறிவிப்பாளரின் தகுதி ஆகியவற்றைப் பொறுத்து அவை ஏற்கத் தக்கவையா அல்லது ஏற்கத் தகாதவையா என முடிவு செய்யப்படும்.

ஆஹாத் வகை ஹதீஸ்கள் இரண்டு வகையாகும் 1. ஏற்கத் தக்க ஹதீஸ்கள் (மக்பூல்) 2. ஏற்கத் தகாத ஹதீஸ்கள் (மர்தூத்):

ஏற்கத் தக்க ஹதீஸ்கள்

○ ஏற்கத் தக்க ஹதீஸ்கள் நான்கு வகைப்படும் 1 ஸஹீஹுன் லி தாத்திஹி 2 ஸஹீஹுன் லி ஃகைரிஹி 3 ஹசனுன் லி தாத்திஹி 4 ஹசனுன் லி ஃகைரிஹி.

ஸஹீஹுன் லி தாத்திஹி

சுய ஆதார ஹதீஸ் ஐந்து நிபந்தனைகளை உள்ளடக்கிய ஹதீஸையே 'ஸஹீஹுன் லி தாத்திஹி (சுயமாகவே ஆதாரபூர்வமான ஹதீஸ்) என்பர் அந்நிபந்தனைகள் வருமாறு:

அ) அந்த ஹதீஸின் அறிவிப்பாளர்தொடர் இடைமுறிவு ஏற்படாததாக இருக்க வேண்

டும். அதாவது அறிவிப்பாளர்தொடரில் இடம்பெற்றுள்ள ஒவ்வோர் அறிவிப்பாளரும் தமக்கு முன்னுள்ள அறிவிப்பாளரிடம் நேரடியாக ஹதீஸை செவியுற்றிருக்க வேண்டும்.

ஆ) அறிவிப்பாளர்தொடரில் இடம்பெற்றுள்ள ஒவ்வோர் அறிவிப்பாளரும் முஸ்லிமாக, பருவம் அடைந்தவராக, புத்தி சுவாதீனம் உள்ளவராக இருப்பதுடன், பாவம் செய்பவரா கவோ ஒழுக்கம் தவறி நடந்துகொள்பவராகவோ இருக்கலாகாது.

இ) அறிவிப்பாளர்தொடரில் உள்ள ஒவ்வோர் அறிவிப்பாளரும் நிறைவான நினைவாற் றல் கொண்டவராக இருக்க வேண்டும். மனனமிட்டோ அல்லது எழுத்து பூர்வமாகவோ தமக்கு கிடைத்துள்ள செய்தியை கட்டிக் காத்துவருபவராக இருக்க வேண்டும்.

ஈ) அந்த அறிவிப்பாளர்தொடரில் உள்ள அறிவிப்பாளர் ஒருவர் அறிவிக்கும் செய்தி அவரைவிட மிகவும் பலமான அறிவிப்பாளர் அறிவிக்கும் செய்திக்கு எதிரானதாக இருக் கக்கூடாது. அதாவது, அந்த அறிவிப்பு நம்பத் தகுந்த பிற அறிவிப்பாளர்களின் அறிவிப் புக்கு முரணானதாக இருக்கக் கூடாது.

உ) அறிவிக்கப்பட்டுள்ள அந்த ஹதீஸின் நம்பகத் தன்மையை வினாக் குறியாக்கும் மறை முகமான எந்த குறைபாடும் பொருள் சிதைவும் இருக்கலாகாது.

இந்நிபந்தனைகளுள் ஒன்றை இழந்தாலும் அதை 'ஸஹீஹுன் லி தாத்திஹி' (சுயமாகவே ஆதாரபூர்வமான ஹதீஸ்) என்று கூற முடியாது.

ஸஹீஹுன் லி ஃகைரிஹி

புறச்சான்றால் ஆதாரமான ஹதீஸ் என்பது சொற்பொருள். முந்தைய ஹதீஸில் குறிப்பி டப்பெற்ற நிபந்தனைகளுள் ஒன்றில் சிறிது குறைபாடு இருக்கும். ஆனால், அதைவிட வலுவான மற்றோர் அறிவிப்பாளர்தொடரில் அதே ஹதீஸ் வந்திருக்கும். உதாரணமாக ஒரு ஹதீஸில் சுய ஆதார ஹதீஸுக்கு விதிக்கப்பட்டுள்ள மற்ற நிபந்தனைகள் இருந்தும் அறிவிப்பாளர் ஒருவரிடம் நினைவாற்றலில் மட்டும் குறை இருக்கலாம். எனினும் இக் குறையை சமன்படுத்தக்கூடிய அதைவிட வலுவான அறிவிப்பாளர்தொடர் வந்திருப்ப தால் அந்த ஹதீஸ் 'புறச்சான்றால் ஆதாரபூர்வமான ஹதீஸ்' ஆகும். அந்த புறச்சான்று மட்டும் இல்லாவிட்டால் இந்த ஹதீஸ் 'ஸஹீஹ்' எனும் பட்டியலுக்குள் வராது.

ஹசனுன் லி தாத்திஹி

'சுயமாக ஹசன் தரத்தில் அமைந்த ஹதீஸ்' என்பது பொருள். நினைவாற்றல் குறைவான, அதே நேரத்தில் நேர்மை தவறாத அறிவிப்பாளர் இடம்பெற்றுள்ள ஹதீஸ் நம்பத் தகுந்த பிற அறிவிப்பாளர்களின் அறிவிப்புக்கு முரணானதாகவோ வேறு குறைகள் உள்ளதா கவோ அது இருக்காது. 'ஹசன்' எனும் சொல்லுக்கு அழகானது என்பது சொற்பொருள்.

ஹசனுன் லி ஃகைரிஹி

'புறச்சான்றால் ஹசன் தரத்தை எட்டிய ஹதீஸ்' என்பது பொருள். இது பல அறிவிப்பா ளர்தொடர்களில் வந்துள்ள ஒரு பலவீனமான ஹதீஸ் ஆகும். இருப்பினும் அதன் பலவீ னத்துக்குக் காரணம் அறிவிப்பாளர் பொய்யர் என்பதோ, பாவம் புரிபவர் என்பதோ

அல்லது மாறாக, அறிவிப்பாளரின் நினைவாற்றலில் மிக மோசமான பாதிப்பு, அறிவிப்பாளர் தொடரில் இடைமுறிவு, அறிவிப்பாளர் தரம் அறிய முடியாமை ஆகியவையே ஆகும்.

ஏற்கத் தகாத ஹதீஸ்கள்

ஆதாரபூர்வமான ஹதீஸ் என்பதற்கு நாம் மேலே கண்ட ஐந்து நிபந்தனைகளுள் ஒன்றை இழந்தாலும் அது ஏற்கத் தகாத ஹதீஸ் (மர்தூத்) என்ற பெயரைப் பெறும். இவ்வகை ஹதீஸை, கொள்கை விதிகளுக்கோ சட்ட விதிகளுக்கோ ஆதாரமாகக் கையாளக் கூடாது. ஏற்கத் தகாத ஹதீஸ்கள் மூன்று வகை: 1. ளஈஃப் (பலவீனமான ஹதீஸ்). 2. அறிவிப்பாளர் தொடரில் இடைமுறிவு 3. அறிவிப்பாளரிடம் காணப்படும் குறை.

(1) ஒரு ஹதீஸ் ஏற்கத் தக்கதாக ஆவதற்குத் தேவையான அம்சங்களுள் ஏதேனும் இல்லாமற்போய் 'ஹசன்' தரத்தைக்கூட எட்டாத ஹதீஸையே பலவீனமான ஹதீஸ் என்பர். பல வினத்துக்கான காரணத்தை வைத்து இது பல தரங்களில் அமையலாம்.

(2) இடைமுறிவால் ஏற்கத் தகாத ஹதீஸ்: அறிவிப்பாளர்களில் ஒருவரோ பலரோ திட்டமிட்டோ திட்டமிடாமலோ அறிவிப்பாளர்தொடரில் விடுபட்ட ஹதீஸைக் குறிக்கும். இவ்வாறு விடுபடுவது ஒன்று வெளிப்படையாகத் தெரியலாம். அல்லது மறைமுகமாக இருக்கலாம்.

வெளிப்படையாக விடுபடல் என்பதன் விளக்கம்: அறிவிப்பாளர் ஒருவருக்கும், அவருக்கு அந்த ஹதீஸை அறிவித்தாகக் கூறப்படும் அவருடைய ஆசிரியருக்கும் இடையே சந்திப்பே நடந்திருக்காது. அதற்குக் காரணம், இருவர் வாழ்ந்த காலமும் வெவ்வேறாக இருக்கும். அல்லது அவ்விருவரும் ஒரே காலத்தில் வாழ்ந்திருந்தாலும் இருவரும் சந்தித்தே இருக்க மாட்டார்கள். பிறகு எப்படி அவரிடமிருந்து இவர் கேட்டதாக அறிவிக்கிறார் என்ற வினா எழும்.

○ அறிவிப்பாளர்தொடரில் வெளிப்படையாக இடைமுறிவு ஏற்பட்ட ஹதீஸ்கள் நான்கு வகையாகும்: 1. முஅல்லக் 2. முர்சல் 3. முஉளல் 4. முன்கதிஉ

முஅல்லக்

இதற்கு 'தொங்கவிடப்பட்டது' என்பது சொற்பொருள். அறிவிப்பாளர்தொடரின் ஆரம்பத்தில் அறிவிப்பாளர் ஒருவருடைய பெயரோ அல்லது அறிவிப்பாளர்கள் பலருடைய பெயரோ குறிப்பிடப்படாத ஹதீஸுக்கே 'முஅல்லக்' என்பர். அறிவிப்பாளர்தொடரே இல்லாமல் நேரடியாக "நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்" என ஹதீஸ் தொடங்கும். அல்லது நபித்தோழர் பெயர் மட்டுமோ, நபித்தோழர் மற்றும் தாபிஉ பெயர் மட்டுமோ குறிப்பிடப்பட்டிருக்கும். இத்தகைய ஹதீஸ்கள் ஏற்கத் தகாதவை ஆகும்.

முர்சல்

இதற்கு 'அவிழ்த்துவிடப்பட்டது' என்பது சொற்பொருள். நபித்தோழர் பெயரைக் குறிப்பிடாமல் நபி (ஸல்) அவர்களைச் சந்திக்காத தாபிஉ நேரடியாக நபி (ஸல்) அவர்கள் கூறி

ளார்கள் என அறிவிக்கும் ஹதீஸே 'முர்சல்' எனப்படும். நபித்தோழர் விடுபட்ட இத்தகைய ஹதீஸ், ஏற்கத் தகாத ஹதீஸ் ஆகும்.

முஉளல்

இதற்கு 'சிக்கலானது' என்பது சொற்பொருள். ஒரு ஹதீஸின் அறிவிப்பாளர்தொடரில் தொடர்ச்சியாக ஒன்றுக்கு மேற்பட்ட அறிவிப்பாளர்களின் பெயர்கள் குறிப்பிடப்படாத ஹதீஸுக்கே 'முஅளல்' எனப்படும். இதுவும் ஏற்கத் தகாத ஹதீஸ் ஆகும்.

முன்கத்திஉ

'முறிந்தது' என்பது இதன் சொற்பொருள்.

அ) நபித்தோழரிடமிருந்து அவரைச் சந்திக்காத தாபிஉக்கு அடுத்த நிலையிலுள்ள ஒருவர் அறிவித்த ஹதீஸே 'முன்கத்திஉ' எனப்படும்.

ஆ) பொதுவாக அறிவிப்பாளர்தொடரின் எந்தப் படிநிலையிலுள்ள ஒருவர் விடுபட்ட ஹதீஸுக்கும் 'முன்கத்திஉ' (அறிவிப்பாளர்தொடர் இடைமுறிவுற்ற ஹதீஸ்) எனக் கூறுவதுண்டு.

அறிவிப்பாளர்தொடரில் மறைமுகமாக இடைமுறிவு ஏற்படுவதைப் பற்றி இனி காண்போம்: ஹதீஸ்கள் வந்துசேரும் வழிகளையும் அறிவிப்பாளர்தொடரில் உள்ள குறைகளையும் நன்கு அறிந்துள்ள நபிமொழி திபுணர்களால் மட்டுமே சில அறிவிப்பாளர்தொடர்களில் உள்ள இடைமுறிவை அறிய முடியும். வெளிப்படையாக அந்த இடைமுறிவை அறிந்துகொள்ள முடியாது. இந்நிலையிலுள்ள இடைமுறிவே மறைமுக இடைமுறிவாகும்.

○ அறிவிப்பாளர்தொடரில் மறைமுக இடைமுறிவு ஏற்பட்டுள்ள ஹதீஸ்கள் இரு வகையாகும்: 1. முதல்லஸ் 2. முர்சல் கஃபீ.

முதல்லஸ்

இதற்கு 'இருட்டடிப்புச் செய்யப்பட்டது' என்பது சொற்பொருள். ஒரு ஹதீஸின் அறிவிப்பாளர்தொடர் வெளியில் பார்க்கும்போது பழுதேதும் இல்லாதது போன்று தெரியும். ஆனால் அதிலுள்ள குறைபாடு மூடி மறைக்கப்பட்டிருக்கும். இத்தகைய அறிவிப்பாளர்தொடர் கொண்ட ஹதீஸே, 'முதல்லஸ்' ஆகும்.

விரிவான விளக்கம்: ஓர் அறிவிப்பாளர்தொடரில் நம்பத் தகுந்த அறிவிப்பாளர்கள் இருவரிடையே பலவீனமான அறிவிப்பாளர் ஒருவர் இருப்பார். ஆனால், இவர்களிடமிருந்து அறிவிக்கும் மூன்றாமவர் பலவீனரின் பெயரை மறைத்துவிட்டு, அவருக்கு முன்னுள்ள நம்பத் தகுந்த அறிவிப்பாளரிடமிருந்து கேட்டதைப் போன்று அறிவித்தால் அத்தகைய ஹதீஸையே 'முதல்லஸ்' என்பர். அப்படி மறைப்பவரை 'முதல்லிஸ்' என்பர்.

முர்சல் கஃபீ

'மறைமுக முர்சல்' என்பது இதன் பொருள். அறிவிப்பாளர் ஒருவர் தாம் சந்தித்த ஒருவரிடமோ, தமது காலத்தில் வாழ்ந்த ஒருவரிடமோ ஒரு ஹதீஸைக் கேட்காமலேயே கேட்ட

ஷைப் போன்ற மயக்கத்தை ஏற்படுத்தும் வார்த்தையால் அறிவிப்பதே 'முர்சல் கஃபீ' ஆகும். உதாரணமாக 'அவர் சொன்னார்' என அறிவிப்பது.

(3) அறிவிப்பாளரிடம் காணப்படும் குறையால் ஏற்கத் தகாத ஹதீஸ் என்பதன் விளக்கம் வருமாறு:

அறிவிப்பாளரின் நாணயம், நேர்மை, நினைவாற்றல் ஆகிய அனைத்தும் குறைகூறி விமர்சிக்கப்பட்டவையாக இருக்கும். அறிவிப்பாளர் ஒருவரின் நேர்மை தொடர்பான குறைபாடுகள் ஐந்தாகும்: 1. அவர் பொய்யுரைத்தல் 2 அவர்மீது பொய்யர் என்ற குற்றச்சாட்டு 3. அவர் பாவம் புரிபவர் 4. அவர் மார்க்கத்தில் புதுமை (பித்அத்)களை நுழைப்பவர் 5. அவர் யாரென அல்லது அவருடைய தகுதியை யாதென அறிய முடியாமை.

அறிவிப்பாளர் ஒருவரின் நினைவாற்றல் தொடர்பான குறைகளும் ஐந்தாகும்: 1. அவர் மிகவும் பிழையாக அறிவிப்பவர் 2. மிக மோசமான நினைவாற்றல் உள்ளவர் 3. அலட்சியப் போக்குடன் நடந்துகொள்பவர் 4. கற்பனையை கலந்துவிடுபவர் 5. நம்பத் தகுந்த வலுவான அறிவிப்பாளர்களுக்கு முரணாக அறிவிப்பவர்.

○ அறிவிப்பாளரிடம் காணப்படும் குறையால் ஏற்கத் தகாத ஹதீஸ்கள் ஒன்பது வகையாகும்: 1. மவ்ளூஉ 2. மத்ருக் 3. முன்கர் 4. முஅல்லல் 5. முத்ரஜ் 6. மக்லூப் 7. முஸ்தரிப் 8. ஷாத் 9. மஜ்ஹூல்.

மவ்ளூஉ

'இட்டுக்கட்டப்பட்டது' என்பது சொற்பொருள். நபி (ஸல்) அவர்கள்மீது பொய்யுரைக்கும் குணம் அறிவிப்பாளர் ஒருவரிடம் இருந்தால், அவர் அறிவிக்கும் ஹதீஸ் 'மவ்ளூஉ' எனப்படும். நபி (ஸல்) அவர்கள் சொல்லாத ஒன்றை அவர்கள் சொன்னதாகப் புனைந்து கூறப்பட்டதே 'மவ்ளூஉ' (இட்டுக்கட்டப்பட்ட ஹதீஸ்) ஆகும்.

மத்ருக்

'கைவிடப்பட ஏற்றது' என்பது பொருள். பொய்யர் என்ற குற்றச்சாட்டுக்கு இலக்கான ஒருவர் அறிவித்த ஹதீஸே 'மத்ருக்' ஆகும்.

முன்கர்

'நிராகரிக்கப்படுவதற்கு ஏற்றது' என்பது பொருள்.

அ) பலவீனமான அறிவிப்பாளர் ஒருவர் நம்பத் தகுந்த அறிவிப்பாளர் அறிவித்த (ஆதார பூர்வமான) ஹதீஸுக்கு முரணாக அறிவித்த ஹதீஸை 'முன்கர்' என்பர். இதில் நம்பத் தகுந்தவரின் அறிவிப்புக்கு 'மஅரூஃப்' (அறியப்பட்ட ஹதீஸ்) என்பர்.

ஆ) மிகவும் பிழையாக அறிவித்தல், அதிக அலட்சியம் காட்டல், அல்லது வெளிப்படையாகப் பாவம் புரிதல் ஆகிய குணங்கள் கொண்ட அறிவிப்பாளர் அறிவித்த ஹதீஸையும் 'முன்கர்' என்பர்

முஅல்லல்

'மறைமுகமான குறைபாடு உள்ளது' என்பது சொற்பொருள். வெளிப்படையில் குறையில்லாதது போன்று தோன்றினாலும், ஒரு ஹதீஸை ஆதாரபூர்வமான ஹதீஸ் என்று கூறும் தகுதியை இழக்கச் செய்யும் குறைபாடுகள் ஒளிந்துள்ள ஹதீஸ் இக்குறை சில நேரங்களில் ஹதீஸின் பொருளையே பாதிக்கலாம். சில நேரங்களில் அறிவிப்பாளர்தொடரை மட்டும் பாதிக்கலாம்.

முத்ரஜ்

'இடைச் செருகல் செய்யப்பட்டது' என்பது இதன் பொருள். நபி (ஸல்) அவர்களின் சொல் அல்லது செயலோடு மற்றவர்களின் சொல்லையோ, செயலையோ கலந்து அறிவிப்பாளர் ஒருவர் அறிவித்த ஹதீஸ்.

மக்லூப்

'தலைகீழாகப் புரட்டப்பட்டது' என்பது இதன் சொற்பொருள். ஹதீஸில் ஒன்றுக்குப் பகரமாக மற்றொன்றையோ அல்லது அறிவிப்பாளர் வரிசையில் ஒருவருக்கு பதிலாக மற்றொருவரையோ அல்லது முதலாமவரை இரண்டாமவராகவோ இரண்டாமவரை முதலாமவராகவோ மாற்றிச் சொன்ன ஹதீஸ்.

முள்தரிப்

'சீர்குலைந்தது' என்பது பொருள். ஒன்றுக்கொன்று முரண்பட்ட பல வடிவங்களில் அறிவிக்கப்பட்டுள்ள ஹதீஸ். அந்த வடிவங்களில் ஒன்றுக்கு மற்றதைவிட முன்னுரிமை அளிக்க முடியாத அளவுக்கு எல்லா அறிவிப்புகளும் சமநிலையில் அமைந்திருக்கும். உதாரணமாக, ஒரு செய்தி நபிமொழியா - நபித்தோழர் மொழியா, முழுமையடைந்த தொடரா-முறிவுற்ற தொடரா, குறிப்பிட்ட இந்த நபித்தோழரின் அறிவிப்பா அல்லது குறிப்பிட்ட அந்த நபித்தோழரின் அறிவிப்பா எனப் பார்த்தால் எல்லா வடிவங்களிலும் அறிவிப்புகள் வந்திருக்கும். ஒரு முடிவுக்கு வரமுடியாத ஒழுங்கற்ற நிலை அந்த ஹதீஸில் காணப்படும். ஆகவேதான், இதற்கு 'முள்தரிப்' (சீர்குலைவுடன் காணப்படும் ஹதீஸ்) என்கின்றனர்.

ஷாத்

நம்பத் தகுந்த பலர் அறிவித்த ஹதீஸுக்கு முரணாக நம்பத் தகுந்த ஒருவர்மட்டும் அறிவித்த ஹதீஸுக்கு ஷாத் என்பர். அந்தப் பலருடைய அறிவிப்புக்கு 'மஹ்ஃபூழ்' (பாதுகாக்கப்பட்ட ஹதீஸ்) என்பர். ஒரு ஹதீஸைக் குறித்து மதிப்பீடு அளிக்கும்போது 'இது மஹ்ஃபூழான ஹதீஸ் இல்லை' என்று கூறினால் 'இது ஷாத் தரத்தில் அமைந்த ஹதீஸ் ஆகும்' எனக் கொள்க.

ஷாத் எனும் சொல்லுக்கு 'பெரும்பான்மையிடமிருந்து வேறுபட்டு நிற்கக்கூடியது', தனித்து நிற்கக்கூடியது, வித்தியாசமானது, விநோதமானது, அரிதானது போன்ற சொற்பொருள்கள் உள்ளன.

மஜ்ஹூல்

அ) யாரென்றே அறியப்படாத மர்ம நபர் அறிவித்த ஹதீஸ்.

ஆ) நேர்மை, நினைவாற்றல் உள்ளிட்ட தகுதிகள் அறியப்படாத ஒருவர் அறிவித்த ஹதீஸ்.

இதுவரையில் ஹதீஸ் கலைஞர்களின் வழக்கிலுள்ள சொற்களின் விளக்கத்தையே சுருக்கமாக நாம் கண்டோம் நபிமொழி இயலாரின் வழக்காறுகளை வாசிக்கும்போது வாசகர்களுக்கு சிரமம் ஏற்படக் கூடாது என்பதே நமது நோக்கம் இக்கலை சார்ந்த ஒவ்வொரு சொல்லுக்கும் நபிமொழிகளிலிருந்து உதாரணங்களை எடுத்துக் கூறினால் விரிவாகிவிடும் என்பதால் இத்தோடு விடுகிறோம். கூடுதல் விவரங்கள் தேவைப்படுவோர் எமது இதர வெளியீடுகளில் பார்த்துக்கொள்ளவும்.

கலைச்சொல் அகராதி

அகழ்ப் போர்

கன்தக் போர். ஹிஜ்ரி 4ஆவது ஆண்டு (கி.பி. 625) மதீனா நகர முஸ்லிம்கள்மீது யூதர்கள் உள்பட அனைத்து அரபுக் குலத்தாரும் ஒன்றுதிரண்டு வந்து தொடுத்த போர். அப்போது நகருக்குள் எதிரிகளை நுழையவிடாமல் தடுப்பதற்காக மதீனாவைச் சுற்றிலும் அகழ் (கன்தக்) ஒன்று தோண்டப்பட்டது. இதனாலேயே அது 'அகழ்ப் போர்' எனப்பட்டது. யூதர்களுடன் கைகோத்துக்கொண்டு அனைத்து அரபுக் குலத்தாரும் அணி திரண்டு வந்ததால் 'அல்அஹ்ஸாப்' (கூட்டுப்படையினரின் போர்) என்றும் ஒரு பெயர் உண்டு.

அபுல் காசிம்

'காசிமின் தந்தை' என்பது இதன் சொற்பொருள் இது. இறைவனின் இறுதித்தூதர் முஹம்மத் நபி (ஸல்) அவர்களின் குறிப்புப் பெயராகும். நபி (ஸல்) அவர்களின் புதல்வரான காசிம் (ரலி) அவர்கள் மழலைப் பருவத்திலேயே இறந்துவிட்டார்.

அதான் (பாங்கு)

தொழுகை அறிவிப்பு. தொழுகைக்கு விடுக்கப்படும் அறிவிப்பையே இது குறிக்கும். இதைக் குறிக்க தமிழ் முஸ்லிம்களின் வழக்கில் குறிப்பிடப்படும் 'பாங்கு' எனும் சொல் ஃபார்சீ மொழியாகும். பாரசீக மொழியில் 'பாங்க்' என்பதற்கு ஒலி என்று பொருள். அரபி மொழியில் தொழுகை அறிவிப்பாளரை 'முஅத்தின்' என்பர்.

அர்ஷ்

அர்ஷ் எனும் சொல்லுக்கு இருக்கை, ஆட்சி அமைவிடம் ஆகியன சொற்பொருள்கள் ஆகும். இறைமறை குர்ஆன் (7:54, 10:3, 13:2, 20:5, 25:59, 57:4), நபிமொழிகள் ஆகியவற்றில் பல இடங்களில் ஆளப்பெற்றுள்ள இச்சொல்லுக்கு அரியாசனம்' என்றும் 'சிம்மாசனம்' என்றும் தமிழாக்கம் செய்துவருகின்றனர். இது மார்க்க அடிப்படையில் பொருத்தமான பொருளன்று. 'இருக்கை' என்பதே பொருத்தமானதாகும். அர்ஷுல்லாஹ் என்பதை 'இறை இருக்கை' எனத் தமிழாக்கலாம். 'சிம்மாசனம், அரியாசனம்' ஆகிய சொற்கள் சிங்கத்தின் சிலை வடிக்கப்பட்டிருந்த பண்டைய அரசர்களின் ஆசனங்களின் பால் கவனத்தைக் கொண்டு செல்வதாக அமைந்துள்ளது. இறைவனின் இருக்கையைப் படைப்பினங்களின் இருக்கையோடு ஒப்பிடுவது இஸ்லாமிய அடிப்படைக் கோட்பாட்டிற்கு எதிரானதாகும். எனவே, அர்ஷ் என்பதற்கு 'இறை இருக்கை' என்று தமிழாக்கம் செய்வதே தகுமானதாகும்.

அரஃபா

அரஃபாத். புனித மக்காவுக்குக் கிழக்கே சுமார் 17 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள திறந்தவெளி. ஹஜ் கடமையை நிறைவேற்றச் செல்வோர் 'துல்ஹஜ்' மாதம் ஒன்பதாம் நாள் (யவ்மு அரஃபா) சிறிது நேரமாவது அங்கு தங்குவது கட்டாயக் கடமையாகும். அந்நாளில் அப்பெருவெளியில் செய்யப்படும் பிரார்த்தனையை மார்க்கம் மிகச் சிறப்பானதாகக் கருதுகிறது.

அரபு தீபகற்பம்

ஜஸீரத்துல் அரப். இது, செங்கடலுக்கும் வளைகுடாவுக்கும் இடையே தென்மேற்கு ஆசியாவில் அமைந்துள்ள துணைக் கண்டம் ஆகும். சவூதிஅரேபியா, யமன், ஓமன், ஐக்கிய அரபு எமிரேட்ஸ், கத்தார், குவைத் ஆகிய நாடுகள் இதில் அடங்கும்.

அல்லாஹ்

இறைவன். அரபிமொழியில் ஒரே இறைவனைக் குறிக்கும் சொல். 'அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவனில்லை' என்பது இஸ்லாமிய மார்க்கத்தின் மூலக் கோட்பாடாகும். இப் பேரண்டம் முழுவதையும் படைத்துப் பரிபாலிக்கின்ற எல்லாம் வல்ல தூய இறைவன் ஒருவனே வழிபாட்டுக்கு உரியவன் ஆவான் என்பதே இதன் பொருள். அல்லாஹ் என்பது முஸ்லிம்களின் தனிக் கடவுள் என்று நினைப்பது தவறாகும்.

(அலை)

'அலைஹிஸ் ஸலாம்' (அவர்மீது அல்லாஹ்வின் அமைதி பொழியட்டும்) என்பதன் சுருக்கம். இறைத்தூதர்களுக்குப் பிரார்த்தனை செய்யும் வகையில் அவர்களின் பெயரைக் குறிப்பிடும்போது 'அலைஹிஸ் ஸலாம்' என்று கூறுவர். அதையே எழுத்தில் '(அலை)' என்று சுருக்கமாகக் குறிப்பிடுவது தமிழ் முஸ்லிம்களின் வழக்காகும்.

அறியாமைக் காலம்

அய்யாமுல் ஜாஹிலிய்யா. இஸ்லாத்திற்கு முந்தைய இருண்ட காலம். ஓரிறை அறிவும் மார்க்க நெறிகளும் இல்லாத, குலமாச்சரியங்கள் கோலோச்சிய அன்றைய கலாசாரத்திற்கும் 'ஜாஹிலிய்யா' எனப்படுவதுண்டு. பண்பாட்டுப் பஞ்சம் நிறைந்த அன்றைய மக்களின் நிலை, நபி (ஸல்) அவர்களின் வருகைக்குப்பின் 'சிறந்த தலைமுறை' (கைருல் குரூன்) என்ற நிலைக்கு உயர்ந்தது.

அறிவிப்பாளர்தொடர்

ஸனத் அல்லது இஸ்னாத். ஒரு நபிமொழி நபி (ஸல்) அவர்களிடமிருந்து, யார் யார் வழியாக நூலாசிரியர் வரை வந்து சேர்ந்தது என்பதைப் பொறுத்தே அது நபிமொழியா இல்லையா என்பது தீர்மானிக்கப்படும். அறிவிப்பாளர்களின் அந்தச் சங்கிலித் தொடருக்கே 'அறிவிப்பாளர்தொடர்' அல்லது 'அறிவிப்பாளர்வரிசை' எனப்படுகிறது.

அன்சாரிகள்

'அன்சார்' என்பதற்கு 'உதவியாளர்கள்' என்பது சொற்பொருளாகும். நபி (ஸல்) அவர்களின் காலத்தில் மதீனாவில் வாழ்ந்த முஸ்லிம்களை இது குறிக்கும். தமது பிறந்தகமான மக்காவைத் துறந்து மதீனாவில் குடியேறிய நபி (ஸல்) அவர்களுக்கும், அவர்களுடைய தோழர்களுக்கும், மற்ற பகுதிகளிலிருந்து புலம்பெயர்ந்துவந்த முஸ்லிம்களுக்கும் அனைத்து வகையிலும் ஆதரவளித்ததால் குறிப்பாக மதீனா முஸ்லிம்களுக்கு இப்பெயர் வரலாயிற்று. இச்சிறப்புப் பெயரை 'அவ்ஸ்' மற்றும் 'கஸ்ரஜ்' ஆகிய இரு குலத்தாரே பெரிதும் தட்டிச் சென்றனர்.

அஸபா

ஒருவருக்காகப் பரிந்துபேசும் அவருடைய நெருங்கிய உறவினர் என்பது சொற்பொருள். பாகப் பிரிவினை சட்டத்தில் பங்கு நிர்ணயிக்கப்பெற்ற வாரிசுதாரர்களுக்குக் கொடுத்தது போக மீதமுள்ள சொத்திற்கு முழு உரிமை பெற்றவர்கள் 'அஸபா' எனப்படுவர். இவர்

கள் மூவகையினர் ஆவர்.

1. அஸபா பி நஃப்சிஹி (முழுச் சொத்துக்கும் தாமாகவே உரிமை பெற்றவர்). இது இறந்தவரின் ஆண் வாரிசுகளையும், அவர்களுக்குப்பின் அவர்களுடைய ஆண் வாரிசு களையும் குறிக்கும் இவர்கள் இறந்துபோன தம் தந்தை அல்லது பாட்டன் அல்லது சகோதரன் அல்லது தந்தையின் சகோதரன் ஆகியோரின் முழுச் சொத்துக்கும் (பிறருடன் கூட்டுச்சேராமல்) தாமாகவே உரிமை பெறுவர்.

2. அஸபா பி ஃகைரிஹி (பிறரால் முழுச் சொத்துக்கும் உரிமை பெறுபவர்). இது இறந்த வரின் புதல்வியரையும், அவர்களுக்குப்பின் அவர்களின் புதல்வியரையும் குறிக்கும். இவர் கள் இறந்துபோன தம் தந்தையின் சொத்துக்குத் தம் சகோதரர்களுடன் வாரிசாக வரும் போது மட்டும் அவர்களுடன் சேர்ந்து மொத்தச் சொத்துக்கும் முழு உரிமை பெறுவர். அப்போது இரு பெண்களுக்குரிய பாகம் ஓர் ஆணுக்குக் கிடைக்கும்.

3. அஸபா மஅ ஃகைரிஹி (பிறருடன் வரும்போது முழுச் சொத்துக்கும் உரிமை பெறுப வர்). பெண் வாரிசுதாரருடன் இணைந்து வரும்போது மொத்தச் சொத்துக்கும் உரிமை பெறும் பெண்களை இது குறிக்கும். (உம்:) இறந்துபோனவருக்கு ஒரு பெண் குழந்தை இருந்து அவளுடன் இறந்தவரின் சகோதரியும் வாரிசாக வந்தால், அந்தப் பெண் குழந் தைக்குக் கொடுத்ததுபோக மீதமுள்ள சொத்து முழுவதும் அந்தச் சகோதரிக்குப் போய்ச் சேரும்.

அஸ்ல்

புணர்ச்சி இடைமுறிப்பு (coitus interr uptus). தாம்பத்திய உறவின்போது பெண்குறிக்குள் விந்தைச் செலுத்தாமல் வெளியேற்றுவதை இது குறிக்கும்.

ஆதம் (அலை)

ஆதாம். முதல் மனிதர். இறைவன் தனது கரத்தால் இவரைப் படைத்தான். ஆதி இறைத்தூதரும் ஆவார். ஆதம் - ஹவ்வா (ஆதாம் - ஏவாள்) தம்பதியரிலிருந்தே மனித குலம் பெருகிற்று.

ஆஷூரா

இஸ்லாமிய ஆண்டின் முதல் மாதமான முஹர்ரம் மாதத்தின் பத்தாவது நாள். அன்றைய தினம் நோற்கும் நோன்பிற்கு 'ஆஷூரா நோன்பு' என்பர். அந்த நாளும் அதற்கு முந்தைய நாளும் நோன்பு நோற்பது நபிவழியாகும்.

இகாமத்

'நிலைநிறுத்தல்' என்பது இதன் சொற்பொருள். பொதுவாக, தொழுகை அறிவிப்பு (பாங்கு) கூறிய பின்னர் கூட்டுத் தொழுகை (ஜமாஅத்) நடைபெறப்போவதாகச் செய்யப் படும் அறிவிப்பை இது குறிக்கும்.

இச்சைக் கசிவு

மதீ. பாலுணர்வுக் கிளர்ச்சி ஏற்படும்போது, இன உறுப்பிலிருந்து வெளியாகும் பிசுபிசுப் பான இளகிய நீருக்கு அரபியில் 'மதீ' (இச்சைக் கசிவு) என்பர். இது வெளியானால் குளிக்க வேண்டிய தேவையில்லை. எனினும், இது அசுத்தமானதாக இருப்பதால், இன உறுப்பையும் உடலிலும் ஆடையிலும் அது பட்டுள்ள இடங்களையும் கழுவிக்கொள்ள வேண்டும். உளூ செய்தபின் இது வெளியானால், உளூ நீங்கிவிடும். மீண்டும் உளூ

செய்யவேண்டும். விந்து வெளிப்பட்டால்தான் குளியல் கடமையாகும்.

இணைவைப்பாளர்

முஷ்ரிக்; பல தெய்வக் கொள்கையாளர். ஏக இறைவனுக்கு இணையாகப் பிற பொருட்களையோ, மனிதர்களையோ, உயிரினங்களையோ நம்புவதற்கே இணை வைத்தல், அல்லது இணைகற்பித்தல் என்று பெயர். ஏக இறைவனுக்கே உரித்தான பண்புகள், தனித்தன்மைகள், வழிபாடுகள் மற்றும் அதிகாரங்கள் ஆகியவற்றில் அவனுக்கு இணையாகப் பிறரைக் கருதுவதும் இணைவைப்பில் அடங்கும். இவ்வாறு கருதுகின்றவருக்கு 'முஷ்ரிக்' (இணைவைப்பாளர்) என்பர். 'முஷ்ரிகூன்' அல்லது 'முஷ்ரிகீன்' என்பது இதன் பன்மையாகும். இணைவைத்தல் மன்னிக்க முடியாத குற்றம் எனக் குர்ஆன் கூறுகிறது (4:48).

இத்தா

'காத்திருத்தல், எண்ணுதல்' என்பன இதன் சொற்பொருள்களாகும். கணவனால் மணவிலக்கு அளிக்கப்பட்ட பெண் மூன்று மாதவிடாய்க் காலமும், கணவனை இழந்த பெண் நான்கு மாதம் பத்து நாட்களும் (குர்ஆன்-2:234), மறுமணம் செய்துகொள்ளாமலும் தன்னை அலங்கரித்துக்கொள்ளாமலும், தான் இருக்கும் வீட்டில் தங்கி இருப்பதே 'இத்தா' எனப்படும். மாதவிடாய் நின்றுவிட்ட பெண்ணும் மாதவிடாயே ஏற்படாத பெண்ணும் மூன்று மாதங்கள் 'இத்தா' இருக்க வேண்டும் (65:4). கருவுற்றிருக்கும் பெண்ணின் 'இத்தா' காலம் அவள் குழந்தை பெறும்வரையிலாகும் (65:4).

இப்ராஹீம் (அலை)

ஆப்ரஹாம். தென் இராக்கிலுள்ள "ஊர்-UR" எனும் ஊரில் பிறந்த இறைத்தூதர் இறைவனின் உற்ற தோழர் (கலீலுல்லாஹ்) எனும் சிறப்புப் பெயர் பெற்ற அவர்கள், ஓரிறைக் கொள்கைக்காக எல்லா விதமான தியாகங்களையும் மேற்கொண்டார்கள். இறைத்தூதர்களான இஸ்மாயீல் (அலை), இஸ்ஹாக் (அலை) ஆகியோரின் தந்தை ஆவார்கள். இவருக்குப் பின்னர் தோன்றிய அனைத்து இறைத்தூதர்களும் இவருடைய சந்ததிகளே. ஆதலால் அன்னாரை 'அபுல் அன்பியா' (நபிமார்களின் தந்தை) என்பர்.

இஃப்ராத்

ஹஜ்ஜின் வகைகளுள் ஒன்று. 'தனித்தது' என்பது இதன் பொருள். ஹஜ்ஜுக்குரிய மாதங்களில், ஹஜ்ஜுக்காக மட்டும் 'இஹ்ராம்' அணிவதாக உறுதிமொழி எடுத்து, ஹஜ் கடமைகளை நிறைவேற்றுதல் 'இஃப்ராத்' எனப்படும். இந்த வகை ஹஜ் செய்யும்போது, பலிப்பிராணியை அறுத்து 'குர்பானி' கொடுப்பது கட்டாயமில்லை

இம்மை

இவ்வுலகம். 'மறுமை' என்பதன் எதிர்ச்சொல்.

இமாம்

தலைவர் என்பது சொற்பொருள். முதன்மைப் பொறுப்பு வகிப்பவர்; கூட்டுத் தொழுகையை முன் நின்று நடத்துபவர்; வழிகாட்டி; முன்னோடி; பாதை ஆகிய பொருள்களும் இதற்கு உண்டு. சான்றோரைக் குறிப்பிடும்போது அவர்களது பெயருக்கு முன்னர் இச்சொல் குறிப்பிடப்படுவதுண்டு. (உ-ம்:) இமாம் அஹ்மது (ரஹ்); இமாம் இப்னு கஸீர் (ரஹ்)

இறுதிவிருப்பம்

வஸிய்யத். விருப்ப ஆவணம். ஒருவர் தனது சொத்தை தம் வாரிசுகள் அல்லாத மற்றவர்களுக்கோ அறப்பணிகளுக்கோ எழுதி வைக்க முன்வரலாம். அவ்வாறு அவர் முன்வரும் போது தனது சொத்தில் மூன்றில் ஒரு பங்குக்கு மிகாமல் விருப்பம் தெரிவிப்பதற்கு மட்டுமே மார்க்கத்தில் அனுமதி உண்டு. முழு சொத்தையும் வாரிசுகள் அல்லாதவர்களுக்கு உயில் எழுதுவதற்கு மார்க்கத்தில் அனுமதி இல்லை. வாரிசுகளை பிறரிடம் கையேந்தும் நிலையில் விட்டுச் செல்வதைவிட தன்னிறைவு உடையவர்களாக விட்டுச் செல்வதே சிறந்ததாகும் என்பதே இதற்குக் காரணம். அறிவுரை, இறுதி அறிவுரை உள்ளிட்ட பொருள்களிலும் 'வஸிய்யத்' எனும் சொல் ஆளப்படுவதுண்டு.

இறைநம்பிக்கையாளர்

முஃமின்; மார்க்க விசுவாசி. ஓரிறைவன், வானவர்கள், இறைத்தூதர்கள், இறுதித்தூதர் முஹம்மத் (ஸல்), இறைவனால் அருளப்பெற்ற முந்தைய வேதங்கள், இறுதி வேதம் குர்ஆன், மறுமைநாள், விதி ஆகியவற்றின் மீது நம்பிக்கைகொண்டவர்.

இறைநம்பிக்கையாளர்களின் அன்னை

உம்முல் முஃமினீன். நபி (ஸல்) அவர்களின் மனைவி.

இறைநம்பிக்கையாளர்களின் தலைவர்

அமீருல் முஃமினீன். இறைத்தூதருக்குப்பின் வந்த இஸ்லாமிய ஆட்சித் தலைவர். இச்சிறப்புப் பெயரால் கலீஃபா உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்களே முதன் முதலில் அழைக்கப்பட்டார்கள்.

இறைமறுப்பாளர்

காஃபிர். அவிசுவாசி. இறைநம்பிக்கையாளர் என்பதன் எதிர்ச் சொல். இதற்கு மறைப்பவர், மறுப்பவர், நன்றி கொல்பவர் என்பன சொற்பொருள்களாகும். ஏக இறைவனை, அல்லது அவனுடைய கட்டளைகளை ஏற்க மறுப்பவரை இச்சொல் குறிக்கும். அவ்வாறு ஏற்க மறுப்பது 'இறைமறுப்பு' (குஃப்ர்) எனப்படும். காஃபிர் என்பது முஸ்லிம் அல்லாதோரை இழிவுபடுத்தும் சொல்லாட்சி அன்று.

இன்ஷா அல்லாஹ்

இதற்கு 'அல்லாஹ் நாடினால்...' என்று பொருள். வருங்காலத்தில் ஒன்றைச் செய்யப் போவதாக வாக்களிக்கும் இறைநம்பிக்கையாளர் இதையும் சேர்த்தே குறிப்பிடுவார். (எ.டு:) இன்ஷா அல்லாஹ், நாளை தருகிறேன்.

இஸ்ரவேலர்

பனூ இஸ்ராயீல். இஸ்ராயீலின் வழித்தோன்றல்கள். இறைத்தூதர் யஅகூப் (அலை) அவர்களுக்கு (Jocob) 'இஸ்ராயீல்' (இறையடியார்) என்ற பெயர் உண்டு. அவர்களுடைய சந்ததிகள் 'பனூ இஸ்ராயீல்' (இஸ்ராயீலின் மக்கள்; இஸ்ரவேலர்) எனக் குறிப்பிடப்படுகின்றனர். கிறிஸ்துவின் பிறப்புக்குமுன் ஒரே இனத்தாராயிருந்த அவர்களின் வழித்தோன்றல்கள், பிறகு யூதர்கள் என்றும் கிறித்தவர்கள் என்றும் பிரிந்தனர்

இஸ்லாம்

சாந்தியளித்தல், கீழ்ப்படிதல், அடிபணிதல், ஒப்படைத்தல், இறைவனை மட்டுமே

வழிபடுதல் என்பன இதன் சொற்பொருள்களாகும் பொதுவாக இறைத்தூதர் ஒருவர் எடுத்துரைத்த மார்க்கத்தை ஏற்று, அதை வாழ்க்கையில் கடைப்பிடிப்பதே 'இஸ்லாம்' ஆகும் அதைக் கடைப்பிடிப்பவருக்கு 'முஸ்லிம்' என்பர் முதல் இறைத்தூதர் முதல் இறுதி இறைத்தூதர்வரை அனைவரும் 'இஸ்லாமை'யே போதித்தனர்

இஸ்லாமிய மாதங்கள்

1. முஹர்ரம் 2. ஸஃபர் 3. ரபீஉல் அவ்வல் 4. ரபீஉல் ஆகிர் 5. ஜுமாதல் ஊலா 6. ஜுமாதல் ஆகிரா 7. ரஜப் 8. ஷஅபான் 9. ரமளான் 10. ஷவ்வால் 11. துல்கஅதா 12. துல்ஹஜ்.

இஹ்ராம்

'தடுத்துக் கொள்ளல்' என்பது சொற்பொருள். ஹஜ், அல்லது உம்ரா செய்ய நாடி, அதன் அடையாளமாக குறிப்பிட்ட எல்லையில் அணியும் ஆடைக்கு 'இஹ்ராம்' என்று கூறப் படும். 'இஹ்ராம்' அணிந்தபின் உடலுறவு, முடி களைதல், நகம் வெட்டுதல் போன்ற செயல்கள் தடுக்கப்படும். ஆண்கள் தைக்கப்படாத மேலாடையொன்றும் கீழாடை யொன்றும் அணிவர். பெண்கள் தம் வழக்கமான ஆடைகளுடன் இருக்கலாம். பெண்கள் இஹ்ராமின்போது, முகத்தையும் முன் கைகளையும் மூடலாகாது என்பது இஹ்ராமின் விதிகளுள் உள்ளதாகும்.

ஈசா (அலை)

இயேசு (Jesus). இறைத்தூதர்களில் ஒருவரான இவர்கள் கி.மு. 4ஆம் ஆண்டில் பாலஸ்தீ னத்தில் உள்ள நாசிரா (Nazareth) எனும் ஊரில் மர்யம் (அலை) அவர்களுக்கு, ஆண் துணையின்றி அற்புதமான முறையில் பிறந்தார்கள் இவர்களுக்கு அருளப்பெற்ற இறைவேதமே 'இன்ஜீல்' ஆகும்.

ஈதுல் அள்ஹா

ஹஜ் பெருநாள். ஹிஜ்ரீ ஆண்டில் துல்ஹஜ் மாதம் 10ஆம் நாள் முஸ்லிம்கள் கொண்டாடு கின்ற பண்டிகை. இறைத்தூதர் இப்ராஹீம் (அலை) அவர்கள் இறைவனின் கட்டளைப் படி தம் புதல்வர் இஸ்மாயீலை இறைவனுக்காக அறுத்துப் பலியிட முன்வந்த தியா கத்தை நினைவுகூரும் வகையில் இந்நாளில் முஸ்லிம்கள் ஆடு, மாடு, ஒட்டகம் ஆகிய பிராணிகளை இறைவனுக்காக அறுத்து ஏழைகளுக்குக் கொடுத்து இப்பண்டிகை யைக் கொண்டாடுவதால் இது ஈதுல் அள்ஹா - தியாகப் பெருநாள் என்று அழைக்கப்படுகிறது.

ஈதுல் ஃபித்ர்

நோன்புப் பெருநாள். ரமளான் மாதம் முழுவதும் நோன்பு நோற்று அடுத்த நாள் ஷவ்வால் மாதம் பிறை 1-ல் முஸ்லிம்கள் கொண்டாடுகின்ற பண்டிகை. இதை 'ஈதுல் ஃபித்ர் - நோன்பை நிறைவு செய்த பண்டிகை' என்றும், ஏழைகளுக்கு ஈந்து மகிழ்வதால் 'ஈகைத் திருநாள்' என்றும் குறிப்பிடுவர்.

ஈமான்

இறைநம்பிக்கை; மார்க்க விசுவாசம் காண்க: இறைநம்பிக்கையாளர்.

உம்ரா

நாடுதல், சந்தித்தல், வழிபடுதல் என்பன இதன் சொற்பொருள்களாகும். குறிப்பிட்ட இடங்களில் உறுதிபூண்டு இஹ்ராம் அணிந்து, புனித கஅபாவை ஏழு முறை சுற்றி

(தவாஃப்) வந்து, இரண்டு ரக்அத்கள் தொழுது, ஸஃபா-மர்வா இடையே 'சஈ' செய்து, முடி களைந்து இறைவனை வழிபடும் ஒரு வகை வழிபாடே 'உம்ரா' ஆகும். மக்காவின் புறநகர்ப் பகுதிகளான மினா, அரஃபா, முஸ்தலிஃபா ஆகிய இடங்களுக்குச் செல்வது, குர்பானி கொடுப்பது ஆகியன ஹஜ்ஜின் கிரியைகளில் உள்ளதாகும். உம்ராவில் இவை இல்லை.

உமர் பின் அப்தில் அஸீஸ்

ஹிஜ்ரி 61-101 ; கி.பி. 681-720. உமய்யா ஆட்சியாளர்களில் எட்டாமவர். (ஹிஜ்ரி: 99 - கி.பி. 717) நல்வழி கலீஃபாகளில் ஐந்தாமவர். நிர்வாகம் மற்றும் பொருளாதாரத் துறைக ளில் சீர்திருத்தங்கள் கொண்டு வருவதில் தனிக்கவனம் செலுத்தினார்

உளூ

அங்கத் தூய்மை. தொழுகை போன்ற இறைவழிபாடுகளை நிறைவேற்றுவதற்கு முன், முகம், கை, கால் உள்ளிட்ட உறுப்புகளை அல்லாஹ்வின் ஆணைக்கிணங்க நபி (ஸல்) அவர்களின் வழிமுறைக்கு உட்பட்டு நீரால் கழுவித் தூய்மை செய்யும் முறை.

உஹுத்

மதீனாவுக்கு வடக்கே மூன்று மைல் தொலைவில் அமைந்துள்ள ஒரு மலை. ஹிஜ்ரி 3ஆம் ஆண்டு (கி.பி.625) ஷவ்வால் மாத மத்தியில் இறைநம்பிக்கையாளர்களுக்கும், இணைவைப்பாளர்களுக்குமிடையே இங்கு நடைபெற்ற சண்டையே 'உஹுதுப் போர்' எனப்படுகிறது.

ஏகத்துவம்

தவ்ஹீத். ஓரிறைக் கோட்பாடு (Monotheism). அனைத்தையும் படைத்து ஆளுகின்ற இறை வன் ஒருவனே. அவன் தனது உள்ளமையிலும் பண்புகளிலும் தனித்தவன். அவனுக்கு ஒப்பான, நிகரான பொருள் ஏதுமில்லை. இணை துணையற்ற அந்த ஆண்டவனுக்கு ஊண், உறக்கம், பெற்றோர், மனைவி, மக்கள் என எந்தத் தேவையும் இல்லை. அவன் ஆண், பெண் பாலினம் அற்றவன்; ஆதியும் அந்தமும் இறப்பும் பிறப்பும் இல்லாதவன். ஆக்கல், அழித்தல், உயிர்கொடுத்தல், உயிர் எடுத்தல், உயர்வு அளித்தல், தாழ்வு கொடுத் தல் உள்ளிட்ட அனைத்து ஆற்றல்களும் ஒருங்கே உள்ளவன். அனைத்தையும் அறிந்த மகா வல்லவன் அவன். நம் எண்ணவோட்டங்களையும் சிந்தனை அலைகளையும் நிர்ண யிப்பவன் அவனே. நமது இறப்பும் பிறப்பும், உயர்வும் தாழ்வும், கண்ணீரும் புன்னகையும், நோயும் ஆரோக்கியமும், உணவும் பசியும் அவன் கையிலேயே உள்ளன. இத்தகைய சர்வ வல்லமை படைத்த இறைவன் ஒருவன் இருக்கின்றான் என நம்பிக்கை கொள்வதற்கே 'தவ்ஹீத்' எனப்படும்.

ஐவேளைத் தொழுகைகள்

ஒரு நாளைக்கு ஐந்துவேளை தொழ வேண்டியது கட்டாயக் கடமையாகும். தொழுகை களின் பெயர்களும் நேரங்களும்:

ஃபஜ்ர் (சுப்ஹு)	-	சூரிய உதயத்திற்கு முன்னர்
லுஹ்ர்	-	பிற்பகலின் முற்பகுதியில்
அஸ்ர்	-	பிற்பகலின் நடுப்பகுதியில்

மஃக்ரிப் - சூரிய மறைவு நிகழ்ந்தவுடன்

இஷா - இரவின் முற்பகுதியிலிருந்து நடுநிசி வரை.

கஅபா

மக்கா நகரிலுள்ள புனித இறையில்லம்; உலகில் முதன் முதலாக ஏக இறைவனின் வழி பாட்டுக்காக நிர்மாணிக்கப்பெற்ற இறையாலயம். இந்த ஆலயம் அமைந்துள்ள திசையை முன்னோக்கியே முஸ்லிம்கள் தொழுகை நடத்துகிறார்கள். இதை தரிசித்து இறைவனை வழிபடவே ஹஜ் பயணமும் மேற்கொள்கிறார்கள்.

கத்ரிய்யா

இது 'கத்ர்-விதி' என்ற சொல்லிலிருந்து வந்ததாகும். விதியை மறுக்கும் ஒரு பிரிவினர் 'கத்ரிய்யா' என அழைக்கப்படுகின்றனர். மனிதன், தன் செயலைத் தானே படைத்துக் கொள்கிறான்; பாவங்கள் அல்லாஹ்வின் விதிப்படி நிகழ்வதில்லை உள்ளிட்டவை இவர் களின் கொள்கைகளில் உள்ளவையாகும்.

கஃபன்

பிரேத ஆடை; சவக்கோடி. இறந்த உடலை நீராட்டி, அணிவிக்கப்படும் ஆடை

கப்று

மண்ணறை, அடக்கக் குழி, சவக்குழி ஆகிய சொற்களுக்குப் பொதுவாக அரபியில் 'கப்று' என்பர். இறந்தவர்கள் அடக்கப்படும் பொதுமையவாடிக்கு வழக்கில் 'கப்ருஸ்தான்' என்பர்.

கலீஃபா

இதற்குப் 'பிரதிநிதி' என்று பொருள். நபி (ஸல்) அவர்களுக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த முஸ்லிம் ஆட்சித் தலைவர்கள் 'கலீஃபாக்கள்' எனப்பட்டனர். கலீஃபா எனும் சொல் லுக்கு 'வாழையடி வாழையாகத் தோன்றும் இனம்' என்ற பொருளும் உண்டு.

கஸ்ர்

குறைத்தல். கடமையான நான்கு ரக்அத் கொண்ட தொழுகைகளை பயணத்தின்போது இரண்டு 'ரக்அத்'களாக குறைத்துத் தொழுவதற்கே 'கஸ்ர் தொழுகை' எனப்படுகிறது.

கராஜ்

இஸ்லாமிய நாட்டில் வாழும் முஸ்லிமல்லா பிறமக்கள் ஆண்டுக்கு ஒருமுறை அரசுக்குச் செலுத்தும் நிலவரி.

காரிஜிய்யா (கவாரிஜ்)

வெளியேறியோர் என்பது இதன் சொற்பொருளாகும். 'ஹரூரிய்யா'கள்; 'நஹ்ரவான்வாசி கள்' என்ற பெயர்களும் இவர்களுக்கு உண்டு. நபி (ஸல்) அவர்களால் முன்னறிவிப்புச் செய்யப்பட்ட குழப்பவாதக் கொள்கையாளர்களான இவர்கள் நான்காவது கலீஃபா அலீ பின் அபீதாலிப் (ரலி) அவர்களது காலத்தில் இஸ்லாமிய அரசுக்கு எதிராக பயங்கர வாத நடவடிக்கைகளில் வெளிப்படையாக ஈடுபட்டனர். மூன்றாவது கலீஃபா உஸ்மான் (ரலி) அவர்கள் கொல்லப்பட்டதற்குப்பின், அலீ (ரலி) அவர்களும் முஆவியா (ரலி) அவர்களும் ஆட்சித்தலைமைக்கு முன்மொழியப்பட்டனர். அப்போது, அப்துல்லாஹ் பின் அல்கவ்வா என்பவர் தலைமையில் மூன்றாவது அணியொன்று உருவாகி, முதலிரு

தலைவர்களையும் கடுமையாக எதிர்த்தனர். இவர்கள் பத்தாயிரத்துக்கும் மேற்பட்டோர் இருந்தனர். அலீ (ரலி) அவர்களுக்கும் முஆவியா (ரலி) அவர்களுக்கும் இடையே ஆட்சித் தலைமை விஷயத்தில் மோதல்கள் தோன்றி இறுதியில் அவர்கள் உடன்பாடு காணும் நிலைக்கு வந்து நடுவர்கள் இருவரை நியமித்தனர். ஆனால், அதையும் அவர்கள் ஏற்க மறுத்தனர். நாட்டுக்குள் பாதுகாப்பற்ற சூழலை உருவாக்கினர். இறுதியாக, ஹிஜ்ரீ 37ஆவது ஆண்டு (கி.பி. 658) இராக்கில் பஃக்தாதுக்கு அருகிலுள்ள 'நஹ்ரவான்' எனும் இடத்தில் இவர்களுடன் கலீஃபா அலீ (ரலி) அவர்கள் போரிட்டு கணிசமான அளவில் இவர்களை ஒடுக்கினார்கள்.

இருப்பினும் இச்சிந்தனைப் போக்குகொண்டவர்கள் நீடிக்கவே செய்தனர். இவர்களுள் அப்துர்ரஹ்மான் பின் முல்ஜிம் என்பவனால்தான் கலீஃபா அலீ (ரலி) அவர்கள் கொலை செய்யப்பட்டார்கள். அலீ (ரலி) அவர்களின் அணியிலிருந்து வெளியேறியதால் இவர்கள் 'வெளியேறியோர்' (காரிஜிய்யா) என்றும், இராக்கிலுள்ள 'ஹரூரா' எனுமிடத்தில் இவர்களின் முதலாவது கூட்டம் நடைபெற்றதால், 'ஹரூரிய்யாக்கள்' என்றும் நஹ்ரவான் என்ற இடத்தில் இவர்களுடன் போர் நடைபெற்றதால் 'நஹ்ரவான் வாசிகள்' என்றும் இவர்கள் அறியப்படுகிறார்கள். இவர்கள் அரசியல் ரீதியாக குழப்பங்கள் விளைவித்தது போன்றே ஆன்மிக ரீதியாகவும் குழப்பங்கள் விளைவிக்கவே செய்தனர். தொழுகை, நோன்பு போன்ற இறைவழிபாடுகளில் தீவிர ஈடுபாடு காட்டினர். குர்ஆன் ஓதலிலும் சொல்லுக்குச் சொல், குர்ஆன் வசனங்களைக் கையாள்வதிலும் கைதேர்ந்தவர்களாய் காணப்பட்டனர். ஆனால், குர்ஆன் வசனங்களுக்குத் தம் மனோ விருப்பப்படி விளக்கம் அளித்தனர். 'ஆட்சியதிகாரம் அல்லாஹ்வுக்கே உரியது' என்ற இறைவசனத்தை தவறான பொருளில் கூறிக்கொண்டு, அலீ (ரலி) அவர்கள் முதற்கொண்டு உமய்யா, அப்பாசிய்யா ஆட்சியாளர்கள்வரை அனைவரிடமும் கலகம் செய்தனர். அப்பாசிய்யா ஆட்சியாளர் ஹாரூன் ரஷீத் ஆட்சி (ஹி. 170-193) காலத்தில்தான் இவர்களின் குழப்பம் ஓய்ந்ததாக வரலாறு சொல்கிறது.

கிப்லா

முன்னோக்கும் திசை என்பது சொற்பொருள். உலக முஸ்லிம்கள் அனைவரும் மக்காவிலுள்ள புனித இறையில்லம் கஅபாவை முன்னோக்கியே தொழ வேண்டும். கஅபா உள்ள திசை 'கிப்லா' எனப்படுகிறது.

கிரான்

ஹஜ்ஜின் முறைகளுள் ஒன்று. 'இணைத்தல்' என்பது இதன் சொற்பொருள். ஒரே நேரத்தில் ஹஜ், உம்ரா இரண்டிற்காகவும் சேர்த்து உறுதிமொழி எடுத்து, 'தல்பியா' கூறி, உம்ராவை நிறைவேற்றிவிட்டு, இஹ்ராமைக் களையாமல், அதே இஹ்ராமில் நீடித்து, ஹஜ் கடமைகளையும் நிறைவேற்றுவதற்குப் பெயர் 'கிரான்' ஆகும். இந்த வகை ஹஜ் செய்யும்போது, துல்ஹஜ் பிறை பத்தன்று பலிப் பிராணியை அறுத்து 'குர்பானி' கொடுப்பது கட்டாயமாகும்.

குமுஸ்

'ஐந்தில் ஒரு பாகம்' என்பது இதன் சொற்பொருள். போரில் கிடைத்த செல்வங்களில் நான்கு பாகம் போரில் கலந்துகொண்ட வீரர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படும் மீதமுள்ள ஒரு பாகம் (1/5) இறைத்தூதருக்கு உரிய நிதியாகும். இதை 'குமுஸ்' என்பர். இந்நிதியை இறைத்தூதர், சேம நல நிதியாகவும் இன்னும் உரிய இனங்களிலும் செலவிடுவார்கள்.

குர்ஆன்

உலக மக்கள் யாவருக்கும் வழி காட்ட இறுதி இறைத்தூதர் முஹம்மத் நபி (ஸல்) அவர்களுக்கு வானவர் ஜிப்ரீல் (அலை) அவர்கள் வாயிலாக இறைவன் அருளிய இறுதி இறை வேதம். 114 அத்தியாயங்களைக் கொண்ட குர்ஆன், 30 பாகங்களாக அமைக்கப்பெற்றுள்ளது. 'குர்ஆன்' எனும் அரபிச் சொல்லுக்கு 'ஓதப்படக்கூடியது', 'ஒருங்கிணைக்கப்பட்டது' என்று பொருள்.

குர்பானி

இது 'ஹத்யு' என்றும் கூறப்படும். பலிப் பிராணி என்பது இதன் பொருள். ஆடு, மாடு, ஒட்டகம் ஆகியவையே குர்பானிப் பிராணிகளாகும்.

குறைஷ்

குறைஷியர். பிரபலமான அரபுக் குலம். நபி (ஸல்) அவர்களின் மூதாதையர்களுள் 14ஆவது தலைமுறையைச் சேர்ந்த நள்ர் பின் கினானாவின் மக்களே குறைஷியர்; குறைஷி குலத்தார் என அறியப்படுகின்றனர். உமய்யா, நவ்ஃபல், ஸுஹ்ரா, மக்ஸூம், அஸத், ஜுமஹ், ஸஹ்ம், ஹாஷிம், தைம், அதீ ஆகியவை இதன் கிளைக் குலங்களாகும். ஹாஷிம் கிளைக் குலத்திலேயே நபி (ஸல்) அவர்கள் பிறந்தார்கள். குறைஷிகள்தாம் அன்றைய அரபு நாட்டின் தலைவர்களாகவும் பெரும் வணிகர்களாகவும் திகழ்ந்தனர்.

குனூத்

இச்சொல்லுக்கு நீண்ட நேரம் நின்று வணங்குதல், பிரார்த்தனை செய்தல், கீழ்ப்படிதல், தொழுகையில் உள்ளச்சம் போன்ற பல பொருள்கள் உள்ளன. தொழுகையின் நிலையில் ஓதப்படும் ஒரு குறிப்பிட்ட சிறப்புப் பிரார்த்தனையே 'குனூத்' ஆகும். இஸ்லாமியச் சமூகத்தினருக்குச் சோதனைகள் நேரும்போது, தொழுகையில் ஓதப்படும் பிரார்த்தனையை 'குனூத்' (சோதனை காலப் பிரார்த்தனை) என்பார்கள். வித்ருத் தொழுகையின் இறுதி ரக்அத்தில் குனூத் ஓதுவது நபிவழியாகும்.

குன்யத்

குறிப்புப் பெயர். அபூ, உம்மு என்று துவங்கும் அரபிப் பெயர்கள். எடுத்துக்காட்டு: 'அபூஅப்தில்லாஹ்'. பொருள்: அப்துல்லாஹ்வின் தந்தை. 'உம்மு அய்மன்' - அய்மனின் தாய்.

கூடுதல்தொழுகை

நஃபில் தொழுகை. கடமையாக்கப்பட்ட தொழுகைகள் நீங்கலாக நபி (ஸல்) அவர்கள் தொழுதுவந்த அல்லது நாமாக விரும்பித் தொழுகின்ற அதிகப்படியான தொழுகைகள் அனைத்தையும் இச்சொல் உள்ளடக்கும். இதற்கு 'தத்தவ்வுஉ' என மற்றொரு பெயரும் உண்டு. நஃபில் என்பதன் பன்மை, நவாஃபில் என்பதாகும்.

கைபர்

மதீனாவிலிருந்து ஷாம் (சிரியா) நாட்டிற்குச் செல்லும் வழியில் அமைந்துள்ள பெரிய நகரம். ஹிஜ்ரீ ஏழாம் ஆண்டில் (கி.பி. 628) இறைநம்பிக்கையாளர்களுக்கும், யூத இணைவைப்பாளர்களுக்கும் இடையே நடந்த சண்டையே 'கைபர் போர்' எனப்படுகிறது.

கைஸர்

சீசர் (Caesar). கிழக்கு ரோமப் பேரரசர்களின் புனை பெயர் நபிகளாரின் காலத்தில் இருந்த சீசரின் பெயர்: ஹிரக்லிஸ் (Heraclius - கி.பி. 610-641). இவரோடு கிழக்கு ரோமப் பேரரசு முற்றுப் பெற்றது.

ஸயீ

ஸயீ. 'விரைந்து செல்லல்' என்பது இதன் சொற்பொருளாகும். ஹஜ்ஜின்போது ஸஃபா-மர்வா மலைக் குன்றுகளுக்கிடையே ஏழு சுற்றுகள் விரைவாக நடந்தும் தொங்கோட்டம் ஓடியும் மேற்கொள்ளும் வழிபாட்டை இது குறிக்கும். இவ்வழிபாடு உம்ரா மற்றும் ஹஜ்ஜின் கிரியைகளில் உள்ளதாகும்.

ஸலாம்

முகமன். ஒருவரை மற்றவர் சந்திக்கும்போது கூறும் 'அஸ்ஸலாமு அலைக்கும்' (உங்கள் மீது சாந்தி நிலவட்டும்) என்ற வாழ்த்து. மற்றவர் 'வ அலைக்குமுஸ் ஸலாம்' (உங்கள் மீதும் அதுபோன்று சாந்தி நிலவட்டும்) என்று பதிலளிப்பார். இவ்வாறு முகமன் கூறுவதும் அதற்கு பதிலளிப்பதும் முஸ்லிம்களுள் ஒருவர் மற்றவருக்குச் செய்ய வேண்டிய கடமைகளுள் ஒன்றாகும்.

ஸஜ்தா (ஸுஜூத்)

சிரவணக்கம். தொழுகையில் நெற்றி, மூக்கு, இரு உள்ளங்கைகள், இரு முட்டுக் கால்கள், இரு கால்களின் விரல்கள் ஆகிய உறுப்புகள் தரையில் படும்படி செய்யப்படும் சிரவணக்கம். இறைவனைத் தவிர வேறெவருக்கும் சிரவணக்கம் செய்யக் கூடாது என்பது இஸ்லாத்தின் விதியாகும். பிறருக்கு அல்லது பிறவற்றுக்கு சிரவணக்கம் செலுத்துவது இறைவனுக்கு இணை கற்பிக்கும் பாவச் செயலாகும்.

ஸஹர்

அதிகாலை முன்னேரம். இரவின் பிற்பகுதியில் வைகறைக்குச் சற்று முன்னுள்ள, நோன்பிற்காக உணவு உண்ணும் நேரம்; அவ்வாறு உண்ணல்; அவ்வாறு உண்ணும் உணவு.

ஸுன்னா (ஸுன்னத்)

நபிவழி. நபி (ஸல்) அவர்கள் தம் சொல் மற்றும் செயல்களால் பணித்த, தடைவிதித்த, ஊக்கப்படுத்திய, அங்கீகரித்த நடைமுறைகளையே 'ஸுன்னா' என்பர் ஸுனன் என்பது இதன் பன்மையாகும். சுருங்கக் கூறின், மார்க்கம் தொடர்புடைய நபியவர்களின் வாழ்வு மற்றும் வாக்கு அனைத்தும் 'ஸுன்னத்' ஆகும். வழி, வழிமுறை என்பன இதன் சொற்பொருள்களாகும்.

ஸுனன்

நபிமொழி நூல்களுள் ஒரு வகை. தூய்மை, தொழுகை, ஸகாத், நோன்பு, ஹஜ், திருமணம், மணவிலக்கு என இஸ்லாமியச் சட்டவியலுக்கென ஒரு பாட வரிசை முறை உண்டு. அந்த வரிசையில் தொகுக்கப்பெற்ற நபிமொழித் திரட்டுக்கே 'ஸுனன்' என்பர் (உம்: ஸுனுந் நஸாயீ, ஸுனன் அபூதாவூத், ஸுனன் இப்னுமாஜா)

சிறுதுடக்கு

ஹதஸ். சிறுநீர், மலம், காற்று, இச்சைக் கசிவு (மதீ) ஆகியவை வெளியேறுவதற்கே சிறுதுடக்கு என்பர். அங்கத் தூய்மை (உளூ) செய்திருந்த ஒருவருக்கு சிறுதுடக்கு ஏற்பட்

டால் மார்க்கத்தின் பார்வையில் அவர் தூய்மை நீங்கியவராகக் கருதப்படுகிறார். அவர் தொழுகை போன்ற வழிபாடுகள் புரிய மீண்டும் அங்கத் தூய்மை செய்துகொள்ள வேண்டும்.

தக்பீர்

'அல்லாஹு அக்பர்' என்று கூறுதல். இறைவன் மிகப் பெரியவன் என்பது இதன் பொருளாகும்.

தக்பீர் தஹ்ரீம்

தொழுகையைத் துவக்கும்போது கைகளைக் காதுச் சோணை வரை அல்லது தோள் பட்டை வரை உயர்த்தி, 'அல்லாஹு அக்பர்' என்று கூறுதல். தொழுகை தவிரப் பிற செயல்களைத் தடைசெய்யக் கூறும் தக்பீர் என்பதால், இதற்குத் 'தக்பீர் தஹ்ரீம்' அல்லது 'தக்பீரத்துல் இஹ்ராம்' (தடைசெய்யும் தக்பீர்) என்று பெயர்.

தபூக்

மதீனாவிற்கு வடக்கே 750 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள நகரம். ஹிஜ்ரி 9ஆவது ஆண்டு (கி.பி. 630) ரஜப் மாதத்தில் இறைநம்பிக்கையாளர்களுக்கும் ரோமாபுரி (இன்றைய இத்தாலி) வேதக்காரர்களுக்குமிடையே இங்கு நடைபெற்ற போர் 'தபூக் போர்' எனப்படுகிறது. இதற்கு 'ஃகஸ்வத்துல் உஸ்ரா' (சிரமப் போர்) என்றும் பெயர் வழங்கப்படுகிறது.

தமத்துஉ

ஹஜ்ஜின் வகைகளுள் ஒன்று. பயனடைதல், சுகம் காணல், ஓய்வெடுத்தல் என்பன சொற்பொருள்களாகும். ஒரே ஆண்டின் ஹஜ்ஜுக்குரிய மாதங்களில் 'உம்ரா' செய்வதாக எண்ணம் கொண்டு 'இஹ்ராம்' அணிந்து, 'உம்ரா'வின் கடமைகளை நிறைவு செய்த பின்னர், 'இஹ்ராம்'மைக் களைந்து, முன்பு 'உம்ரா'வின்போது விலக்கப்பட்டிருந்த செயல்களைச் செய்து பயனடைதல். பின்னர் மீண்டும் இஹ்ராம் அணிவதற்குரிய எல்லைக்குச் செல்லாமல் எல்லைக்குள்ளேயே 'ஹஜ்' செய்வதாக எண்ணம் கொண்டு 'இஹ்ராம்' அணிந்து, தொடர்ந்து 'ஹஜ்' செய்வதையே 'தமத்துஉ' என்று கூறப்படும். தமத்துஉ வகை ஹஜ்ஜில், பிறை பத்தன்று பலிப் பிராணியை அறுத்துக் 'குர்பானீ' கொடுப்பது கட்டாயமாகும்.

தயம்மும்

'உளூ' எனும் அங்கத் தூய்மைக்குப் பகரமாகச் செய்யப்படும் ஒரு வகை தூய்மை முறை. 'உளூ' செய்யத் தண்ணீர் கிடைக்காதபோதும் தண்ணீரைப் பயன்படுத்த முடியாத நோய் நேரங்களிலும் சுத்தமான மண்ணில் கைகளைப் பதித்து உதறிவிட்டு மணிக்கட்டுவரை இரு கைகளிலும், முகத்திலும் தடவிக்கொள்ளும் முறை. இதற்கான காரணம் புலப்படாவிட்டாலும் இந்தக் காரியம் அல்லாஹ்வின் ஆணை; நபி (ஸல்) அவர்களின் வழிமுறை. மார்க்கத்தின் நெறிமுறை.

தலாக்

மணவிலக்கு (Divorce). கணவன் மனைவிக்கு இடையில் பிரச்னைகள் தோன்றி, ஒன்றாக வாழமுடியாத சூழ்நிலை ஏற்படும்போது, மணவிலக்கு அளிப்பதற்காக கணவன் மூன்று கட்டங்களில் தன் மனைவியை நோக்கிப் பயன்படுத்தப்படும் சொல்லுக்குத் 'தலாக்' என்று பெயர்.

தல்பியா

"லப்பைக் அல்லாஹும்ம லப்பைக். லப்பைக் லா ஷரீக்க லக்க லப்பைக். இன்னல் ஹம்த வந்நிஃமத்த லக்க வல்முல்க், லா ஷரீக்க லக்" என்று கூறுதல். (பொருள்: இதோ, உன் அழைப்பேற்று வந்துவிட்டேன் இறைவா! இதோ வந்துவிட்டேன். இணையில்லாதோனே உனக்கே எல்லாப் புகழும். அருட்கொடையும் ஆட்சியும் உனக்கே உரியன. உனக்கு இணையானவர் எவருமிலர்). 'உம்ரா', 'ஹஜ்' ஆகியவற்றை நிறைவேற்றுவதற்காக 'இஹ்ராம்' அணிந்ததிலிருந்து கஃபாவை தவாஃப் செய்யத் துவங்கும்வரை தல்பியா கூறுதல் நபிவழியாகும். இதை ஆண்கள் உரத்த குரலிலும் பெண்கள் மெதுவாகவும் கூற வேண்டும். ஹஜ்ஜின்போது, 'துல்ஹஜ் பத்தாவது நாள் 'ஜம்ரத்துல் அகபா' (பெரிய ஜம்ரா)வில் கல்லெறியும்வரை இதைச் சொல்ல வேண்டும்.

தவக்குல்

சார்ந்திருத்தல், பொறுப்பு ஒப்படைத்தல் என்பன இதன் சொற்பொருள்களாகும். ஒருவர் இறைவன் மேல் முழுநம்பிக்கை வைத்து முயன்று உழைப்பதோடு தமது அலுவல்கள் அனைத்தையும் இறைவனிடம் ஒப்படைத்து இறைவன் காப்பான் என்ற மன உறுதியுடன் செயல்படுவதையே 'தவக்குல்' என்பர். உழைக்காமல் முயலாமல் இறைவன் உதவுவான் என முடங்கிக் கிடப்பதற்குப் பெயர் 'தவக்குல்' இல்லை.

தவ்பா (பாவமீட்சி)

செய்த தவற்றிற்காக மனம் வருந்தி, அதை மீண்டும் செய்வதில்லை என உறுதி பூண்டு திருந்தி வாழ்வது; தம்மால் பாதிக்கப்பட்டவருக்கு உரிய நிவர்த்தியை மேற்கொள்வது; இறைவனிடம் பாவமன்னிப்புக் கோருவது.

தவாஃப்

சுற்றி வருதல். புனித கஃபாவை நபிவழிப்படி ஏழு முறை சுற்றி வருவது. ஹஜ்ஜிலும் உம்ராவிலும் இது முக்கிய வழிபாடாகும்.

தவாஃபுல் இஃபாளா

'திரும்பிய பின் சுற்றல்' என்பது இதன் சொற்பொருளாகும். ஹாஜிகள் துல்ஹஜ் மாதம் பத்தாவது நாள் கல்லெறிந்து, குர்பானி கொடுத்து, தலைமுடி களைந்த பின் திரும்பி வந்து கஃபாவைச் சுற்றி தவாஃப் வருவதை 'தவாஃபுல் இஃபாளா' என்றும், தவாஃபுல் ஸியாரா (சந்திப்புச் சுற்றல்) என்றும் கூறுவர்.

தவாஃபுல் குதூம்

'வருகைநேரச் சுற்றல்' என்பது இதன் பொருளாகும். ஹாஜிகள் மக்காவை அடைந்ததும் இறையில்லம் கஃபாவை தவாஃப் செய்வது அவசியமாகும். இதற்கு தவாஃபுல் குதூம் (வருகைச் சுற்றல்), தவாஃபுத் தஹிய்யத் (காணிக்கைச் சுற்றல்), தவாஃபுல் லிகாஉ (முதல் சந்திப்புச் சுற்றல்) ஆகிய பெயர்கள் உண்டு.

தவாஃபுல் வதா

'விடைபெறும்நேரச் சுற்றல்' என்பது இதன் பொருள். ஹாஜிகள் எல்லாக் கிரியைகளையும் நிறைவு செய்தபின் இறுதியாக ஒரு முறை புனித கஃபாவைச் சுற்றி தவாஃப் வருவதற்கே 'தவாஃபுல் வதா' என்பர்.

தஜ்ஜால்

அந்தி கிறிஸ்து (anti crist) உலக அழிவுக்குமுன் மத்திய கிழக்கு ஆசியாவில் தோன்றவிருக்கும் கண்கட்டு வித்தைகளில் கை தேர்ந்த மகா பொய்யன். இவனை இறைத்தூதர் ஈசா (அலை) அவர்கள் அழிப்பார்கள்.

தாபிஉ

'பின்தொடர்ந்தவர்' என்பது சொற்பொருள். நபித்தோழர்களை நேரில் கண்டு, இஸ்லாத்திலேயே இறந்தவருக்கு 'தாபிஉ' என்று கூறப்படும். இவர்களுக்கு அடுத்த தலைமுறையினர் அதாவது, தாபிஉகளைக் கண்டு, இஸ்லாத்திலேயே இறந்தவர்கள் 'தாபிஉத் தாபிஈன்' (தாபிஉகளைப் பின்தொடர்ந்தோர்) எனப்படுவர்.

தாத்துஸ் ஸலாஸில்

மதீனா நகரிலிருந்து அன்றைய 10 நாள் பயணத் தொலைவிலிருந்த மணற் பாங்கான ஓர் இடம். அங்கு வாழ்ந்த அரபுக் குலத்தார் மதீனாவின் மீது படையெடுக்க முற்பட்டனர். அவர்களுடன் இங்கு ஹிஜ்ரி 7 அல்லது 8-(கி.பி. 630)ஆம் ஆண்டு நடைபெற்ற சண்டையே 'தாத்துஸ் ஸலாஸில் போர்' எனப்படுகிறது. இதற்கு 'லக்ம் போர்', 'ஜுதாம் போர்' என்ற பெயர்களும் உண்டு.

திர்ஹம்

முற்கால வெள்ளி நாணயம். இது நிறுத்தல் அளவையில் 2.975 கிராம் எடைக்கு நிகரானதாகும் என்பது பெரும்பாலான அறிஞர்களின் முடிவாகும்.

தீனார்

முற்கால தங்க நாணயம். இது 4.25 கிராம் எடையளவுக்கு நிகரானதாகும்.

துஆ

பிரார்த்தனை; வேண்டுதல்.

நபி

இறைத்தூதர் (Prophet). இதற்கு 'செய்தி அறிவிப்பவர்' என்பது சொற்பொருள். இஸ்லாமிய வழக்கில், மக்களுக்கு இறைச் செய்திகளை எடுத்துரைத்து, அவர்களை நல்வழிப்படுத்துவதற்காக மனிதர்களிலிருந்தே இறைவனால் நியமிக்கப்படும் இறைத்தூதரை நபி என்பர். இறுதி இறைத்தூதர் முஹம்மது (ஸல்) அவர்களை சுருக்கமாக 'நபி (ஸல்)' என்று குறிப்பிடுவர்.

நபித்துவம்

இறைத்தூதர் எனும் பொறுப்பு அல்லது தகுதி. இத்தகுதியை அரபிமொழியில் 'நுபுவ்வத்' என்பர்.

நபித்தோழர்

நபி (ஸல்) அவர்களின் காலத்தில் வாழ்ந்து, அவர்களைக் கண்டு, முஸ்லிமாக வாழ்ந்து, முஸ்லிமாக இறந்த ஒவ்வொருவருக்கும் 'ஸஹாபி' (நபித்தோழர்) என்று கூறப்படும். பன்மை: அஸ்ஹாபுந் நபி.

நபிமொழி

இறைவனின் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களின் சொல், செயல், அங்கீகாரம், குண நலன், உருவ அமைப்பு.

நயவஞ்சகர்கள்

போலி விசுவாசிகள் வெளித் தோற்றத்தில் தம்மை இறைநம்பிக்கையாளர்களாகக் காட்டிக்கொண்டு உள்ளே இறைமறுப்பைக் கொள்கையாகக் கொண்டிருப்பவர்கள் முனாஃபிகீன் அல்லது முனாஃபிக்கூன் எனப்படுபவர். ஒருமை: முனாஃபிக். நபி (ஸல்) அவர்களது காலத்தில் இத்தகைய நயவஞ்சகர்கள் இருந்துகொண்டு முஸ்லிம்களுக்குப் பல்வேறு தீவினைகள் செய்துவந்தனர். பொய், துரோகம், கெட்ட பேச்சுகள் பேசுதல் போன்ற தீய பண்புகள் நயவஞ்சகர்களின் குணங்களாகும்.

நஹ்ரவான்

பஃக்தாதுக்கு அருகிலுள்ள ஓர் ஊர். அங்குள்ள ஓர் ஆற்றின் பெயரால் அந்த ஊர் அழைக்கப்படுகிறது. 'திக்ரீத்' என்ற ஊரிலிருந்து அந்த ஆறு துவங்கி, 'டைக்ரிஸ்' (திஜ்லா) எனும் இடத்தில் அது முடிவடைகிறது. ஹிஜ்ரீ 37ஆவது ஆண்டு (கி.பி. 658) இந்த இடத்தில் அலீ (ரலி) அவர்கள் காரிஜிய்யா கொள்கையாளர்களுடன் போரிட்டு அவர்களை ஒடுக்கினார்கள்.

நூஹ் (அலை)

நோவா. முதல் மனிதர் ஆதம் (அலை) அவர்களுக்குப் பின்வந்த முதலாம் முக்கிய இறைத் தூதர் 950 ஆண்டுகள் வாழ்ந்தார்கள். அன்னாரின் காலத்தில் ஏற்பட்ட வெள்ளப் பிரளயத்தை வரலாறு பேசும்.

நோன்புப் பெருநாள்

ஈதுல் ஃபித்ர். ரமளான் மாதம் முழுவதும் நோன்பு நோற்று அடுத்த நாள் ஷவ்வால் மாதம் தலைப் பிறை நாளில் முஸ்லிம்கள் கொண்டாடுகிற பண்டிகை. இதை 'ஈதுல் ஃபித்ர்' (நோன்பை நிறைவு செய்த பண்டிகை) என்றும், ஏழைகளுக்கு ஈந்து மகிழ்வதால் 'ஈகைத் திருநாள்' என்றும் அழைப்பர்.

பத்ர்

மக்கா-மதீனா இடையே உள்ள ஓர் இடம். மதீனாவுக்கு தென் மேற்கே 84 மைல் தொலைவில் உள்ள இந்த இடத்தில் மக்கா இணைவைப்பாளர்களுக்கும் மதீனா முஸ்லிம்களுக்கும் இடையே ஹிஜ்ரீ 2 (கி.பி. 624) ரமளான் திங்கள் 17ஆம் நாள் வெள்ளிக் கிழமை நடந்த முதல் பெரும் போரே 'பத்ருப் போர்' எனப்படுகிறது. இங்குள்ள ஒரு கிணற்றுக்கும் சந்தைக்கும் 'பத்ர்' எனும் பெயர் வழங்கப்படுவதுண்டு.

ஃபர்சக்

ஏறத்தாழ 5.544 கி.மீ. கொண்ட தொலை தூரம்.

ஃபஜ்ர்

காண்க: ஐவேளைத் தொழுகைகள்

பித்அத்

மார்க்கத்தில் புகுத்தப்பட்ட புதுமை; அநாசாரம். அல்லாஹ்வும் அவனுடைய திருத்தூதர்

முஹம்மத் (ஸல்) அவர்களும் மார்க்கமாக அறிமுகப்படுத்தாத வழிமுறை.

ஃபிர்அவ்ன்

ஃபாரோவா; பாரோ (pharaoh). அமலேக்கிய அரசப் பரம்பரையில் வந்த 11 எகிப்து நாட்டு அரசர்களின் புனைபெயர். இறைத்தூதர் மூஸா (அலை) அவர்களது காலத்தில் சர்வாதிகாரியாகத் திகழ்ந்த ஃபிர்அவ்னின் இயற்பெயர் வலீத் பின் முஸ்அப் பின் அர்ரய்யான் என்பதாகும். கிப்தி (coptic) குலத்தில் பிறந்த இவன் இஸ்ரவேலரைக் கொடுமைப்படுத்தினான். கொத்தடிமைகளாக நடத்திவந்தான். வரலாற்றாசிரியர்கள் இவனை இரண்டாம் ரம்ஸேஸ் (ramses II) எனக் குறிப்பிடுகின்றனர். இறைவனுக்கும் அவனது ஆணைப்படி ஓரிறைக் கோட்பாடு, சமூகநீதிக் குரல் ஆகியவற்றை ஓங்கி ஒலித்த இறைத்தூதர் மூஸாவுக்கும் எதிராக அவன் சர்வாதிகாரத்தைப் பயன்படுத்தினான். முடிவில் செங்கடலில் மூழ்கி மாண்டான். அவனுடைய சர்வாதிகாரம் அழிந்தது. ஆனால், அவனுடைய உடல் அழியாமல் இறைவனால் பாதுகாக்கப்பட்டு இன்றும் எகிப்தின் தலைநகர் கெய்ரோவிலுள்ள ராயல் மம்மி அறையில் வைக்கப்பட்டுள்ளது. பாடமிடப்பட்ட அவனுடைய உடல் பாரோத்துவத்துக்கு எதிராகப் பல பாடங்களைச் சொல்கிறது.

பெருந்துடக்கு

உடலுறவு கொண்டாலோ விந்து வெளிப்பட்டாலோ குளியல் கடமையாகும். அவ்வாறே மாதவிடாய், பிரசவ இரத்தப்போக்கு நின்ற பின்னரும் குளியல் கடமையாகும். குளியல் கடமையான இந்நிலைக்கே அரபியில் 'ஜனாபத்' (பெருந்துடக்கு) என்பர்.

ஃபைஉ

ஃபைஉ. எதிரி நாட்டுடன் போர் ஏதும் நடக்காமல் சமாதான அடிப்படையில் அந்நாடு வெற்றிகொள்ளப்படும் பட்சத்தில் கிடைக்கப்பெறும் செல்வம். இதில் போர் வீரர்களுக்குப் பங்கு கிடையாது. ஆட்சியாளரின் பொறுப்பில் இது சிறப்பு நிதியாக இருக்கும்.

பைத்துல் மக்திஸ்

பைத்துல் முகத்தஸ். பாலஸ்தீன நாட்டின் ஜெரூஸலம் நகரில் அமைந்துள்ள பள்ளிவாசல். இதற்கு 'தூய்மை இல்லம்' என்று பொருள். இதை 'மஸ்ஜிதுல் அக்ஸா' (தொலைவிலுள்ள பள்ளிவாசல்) என்றும் அழைப்பர். வேதக்காரர்கள் இதை 'ஹைகல்' என்பர்.

மக்கா

மக்கத்துல் முகர்ரமா. சவூதியிலுள்ள புனித நகரம். ஏக இறைவனை வணங்குவதற்காக உலகில் நிர்மாணிக்கப்பெற்ற முதல் இறையாலயமான கஅபா இங்குதான் அமைந்துள்ளது. உலகின் இறுதி இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் இந்த நகரில்தான் பிறந்தார்கள். உலக முஸ்லிம்கள் இங்கு சென்றுதான் புனித கஅபாவைத் தரிசித்து புனித ஹஜ் கடமையை நிறைவேற்றுகிறார்கள். இதற்கு பக்கா, அல்பலத், உம்முல்குரா, அல்பைத்துல் அத்தீக், அல்பைத்துல் ஹராம், அல்பலதுல் அமீன் ஆகிய பெயர்களும் உண்டு.

மக்கா வெற்றி

ஃபத்ஹு மக்கா. ஹிஜ்ரி 8ஆம் ஆண்டு (கி.பி.630) ரமளான் மாதம் நபி (ஸல்) அவர்கள் 12,000 முஸ்லிம்களுடன் சென்று தனது பிறந்தகமான மக்காவை யுத்தமின்றி வெற்றி கொண்ட நிகழ்ச்சி.

மகாமு இப்ராஹீம்

இப்ராஹீம் நின்ற இடம்' என்று பொருள். நபி இப்ராஹீம் (அலை) அவர்களும் அவர்களுடைய புதல்வர் இஸ்மாயீல் (அலை) அவர்களும் உலகின் முதல் இறையில்லமான கஅபாவின் அடித்தளத்தை உயர்த்திக் கட்டி அதைப் புதுப்பித்தபோது, இப்ராஹீம் (அலை) அவர்கள் எந்த இடத்தில் நின்றுகொண்டு கஅபாவைக் கட்டினார்களோ அந்த இடத்தின் பெயர்.

மதீனா

சவூதி அரபிய்யா நாட்டிலுள்ள மற்றொரு புனித நகரம். மக்காவிலிருந்து நபி (ஸல்) அவர்களும் முஸ்லிம்களும் நாடுதுறந்து சென்று குடியேறிய நகரம். முன்னதாக 'யஸ்ரிப்' எனப் பெயர் பெற்றிருந்த இந்த நகரம் நபி (ஸல்) அவர்களின் வருகைக்குப் பின்னர் 'மதீனத்துந் நபீ' (நபிகளாரின் நகரம்) எனப் பெயர் பெற்றது. இந்த நகரத்தில் நபி (ஸல்) அவர்கள் பத்தாண்டுகள் வசித்தார்கள். இங்குதான் அவர்கள் இறந்தார்கள். அவர்களின் அடக்கத்தலமும் இங்குதான் உள்ளது. இரண்டாவது புனிதப் பள்ளிவாசலான 'மஸ்ஜிதுந் நபவீ' இங்குதான் அமைந்துள்ளது.

மர்யம்

அன்னை மேரி. இம்ரான் என்பாரின் புதல்வியான இவர் ஆண் துணையின்றி அற்புதமான முறையில் இயேசு எனப்படும் இறைத்தூதர் ஈசா (அலை) அவர்களைப் பெற்றெடுத்த கன்னித் தாய் ஆவார்.

மர்வா

மக்கா நகரில் இறையில்லம் கஅபா அருகே அமைந்துள்ள ஒரு சிறிய மலைக் குன்று.

மறுமை

இம்மை என்பதன் எதிர்ச் சொல். இவ்வுலகமும் அதிலுள்ள அனைத்தும் ஒருநாள் அழியும். பின்னர் முதல் மனிதர் தொட்டு இறுதியாக இறந்த மனிதர்வரை அனைவரும் உயிர் கொடுத்து எழுப்பப்படுவர். பின்னர் அனைவரும் அவரவர் செய்த வினைகள் குறித்து விசாரிக்கப்படுவர். பின்னர் அவரவர் புரிந்த வினைகளுக்குத் தக்கவாறு சொர்க்கத்திற்கோ அல்லது நரகத்திற்கோ அனுப்பப்படுவர். அந்நாளே மறுமைநாள் ஆகும். அந் நாளுக்கே 'அஸ்ஸாஅ (அந்த நேரம்), யவ்முல் கியாமா (எழுப்பி நிறுத்தப்படும் நாள்), யவ்முல் ஆகிரா (இறுதி நாள்), யவ்முத் தீன்; யவ்முல் ஹிசாப் (விசாரணை நாள்), யவ்முல் ஹஷ்ர் (ஒன்று திரட்டப்படும் நாள்) உள்ளிட்ட பெயர்கள் வழங்கப்படுகின்றன.

மன்னு - சல்வா

இஸ்ரவேலருக்கு இறைவன் வழங்கிய சிறப்பு உணவுகள்.

மஜூசி

நெருப்பு வழிபாட்டாளர். நெருப்பை இறைவனின் தூய அடையாளம் என்று கருதி வழிபட்டுவந்த பண்டைய பாரசீகர்களையே மஜூசிகள் என்பர். பூர்வீகத்தில் இவர்கள் விண்கோள்கள் குறித்து ஆய்வுகள் நிகழ்த்தியவர்களாகவும் உருவ வழிபாட்டை வெறுப்பவர்களாகவும் இருந்து காலப்போக்கில் விண்கோள்களையும் நெருப்பையும் வழிபடலாயினர். ஒளியும் இருளுமே அனைத்துச் செயல்களுக்கும் அடிப்படை; நல்லவை ஒளியிலிருந்தும் தீயவை இருளிலிருந்தும் உருவாகின்றன என்பது இவர்களின் முக்கியக் கொள்கையாகப் பிறந்தது. கி.மு. 6ஆம் நூற்றாண்டில் தோன்றிய சொராஸ்டிரர் இவர்களி

டையே தோன்றிய சீர்திருத்தவாதியாகக் கருதப்படுகிறார். 'மஜூஸ்' எனும் சொல் இவர்களின் குருக்களான 'மாகோஷ்' என்பாரிலிருந்து மருவியதே ஆகும். வேதமளிக்கப்பட்ட ஓரிறைக் கோட்பாட்டாளர்களாக இருந்து பின்னரே நெருப்பு வழிபாட்டுக்கு இவர்கள் தடம்புரண்டனர் என்று கூறுவோரும் உளர். இவர்களைப் பற்றிய குறிப்பு குர்ஆனில் ஒரு வசனத்தில் (22:17) இடம்பெற்றுள்ளது.

மஸ்ஜித்

பள்ளிவாசல். சஜ்தா (சிரம் பணிதல்) செய்யுமிடம் என்பது இதன் சொற்பொருளாகும். பன்மை: மஸாஜித்.

மஸ்ஜிதுல் அக்ஸா

காண்க: பைத்துல் மக்திஸ்.

மஸ்ஜிதுந் நபவீ

சவூதி அரபிய்யாவில் மதீனா நகரில் அமைந்துள்ள புனிதப் பள்ளிவாசல். இதை நபி (ஸல்) அவர்கள் கட்டியதால் இது 'மஸ்ஜிதுந் நபவீ' (நபிகளாரின் பள்ளிவாசல்) என அழைக்கப்படுகிறது.

மஸ்ஜிதுல் ஹராம்

சவூதி அரபிய்யாவில் மக்கா நகரில் அமைந்துள்ள புனிதப் பள்ளிவாசல். 'மஸ்ஜிதுல் ஹராம்' என்பதற்கு 'புனிதப் பள்ளிவாசல்' என்பது சொற்பொருளாகும். இதை பைத்துல் ஹராம் (புனித இல்லம்) என்றும் கூறுவர்.

மஸ்ஹு

'தடவுதல்' என்பது பொருள். உளூ செய்யும்போது, நனைந்த கைகளால் தலையைத் தடவுவதற்கும் காயம், புண் போன்ற காரணங்களால் கழுவ முடியாத உறுப்புகளை ஈரக்கையால் வருடுவதற்கும், உளூ செய்து காலுறை அணிந்தவர்கள் மறுபடியும் உளூ செய்யும்போது தண்ணீரைத் தொட்ட கையால் காலுறைகள் மீது தடவுவதற்கும் 'மஸ்ஹு' என்பர்.

மஹ்தீ

மன்னர் மஹ்தீ. நபி (ஸல்) அவர்களின் புதல்வி ஃபாத்திமா (ரலி) அவர்களின் வழித்தோன்றலில் பிறக்கும் நல்லடியார்; அரசர். "மஹ்தீ என்பவர் என் வழித்தோன்றலான ஃபாத்திமா (ரலி) அவர்களின் மக்களில் தோன்றுவார்" என அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அபூதாவூத் -3735).

மஹ்ர்

மணக்கொடை ஈடு, பதில் என்பது இதன் சொற்பொருளாகும். மணம் புரிந்து கொள்வதற்காக மணாளர் தம் மணாளிக்கு வழங்க வேண்டியத் தொகை.

மிம்பர்

சொற்பொழிவு மேடை. ஏறி நின்று சொற்பொழிவாற்றுவதற்காகப் பள்ளிவாசலில் இமாம் நின்று தொழுவிக்கும் இடத்திற்கு அருகில் இது அமைக்கப்பட்டிருக்கும்.

மினா

மக்காவுக்கும் அரஃபாவுக்கும் இடையிலுள்ள ஓர் இடம் மக்காவிலிருந்து 8 கி.மீ தொலை

விலும் அரஃபாவிலிருந்து 14.4 கி.மீ தொலைவிலும் இது உள்ளது. ஹஜ் பருவத்தில் இங்கு தங்க வேண்டிய (துல்ஹஜ் 11, 12, 13, ஆகிய மூன்று) நாட்களை 'மினாவின் இரவுகள்' என்பர்.

முஃதஸிலா

இஸ்லாத்தில் மாறுபட்ட சிந்தனைகளை வெளியிட்ட ஒரு பிரிவினர். வாஸில் பின் அதாஉ (ஹிஜ்ரி 131 - கி.பி. 748) என்பவரே அவர்களின் தலைவராக விளங்கினார். ஹஸன் அல்பஸ்ரீ (ரஹ்) அவர்களின் மாணவராயிருந்த அவர் பின்னர் மாறுபட்ட கருத்துகளைத் தெரிவித்து அன்னாரின் அவையிலிருந்து விலகிச் சென்றார். இதையொட்டி அவர் 'விலகிச் சென்றவர்' (முஃதஸில்) என அறியப்பட்டார். அவருடைய ஆதரவாளர்கள் 'முஃதஸிலா'கள் எனப்பட்டனர். முஸ்லிம்களில் பாவம் இழைப்போர் இஸ்லாத்திலிருந்து வெளியேறிவிடுவர் என்பது இவர்களது கொள்கைகளில் ஒன்றாகும். இவர்களுள் 24 உட்பிரிவுகள் இருந்ததாக 'ஷர்ஹுல் மவாகிப்' எனும் நூலில் காணப்படுகிறது. அல்லாஹ்வின் வார்த்தை (குர்ஆன்) படைக்கப்பட்டது என்பது இவர்களின் கருத்தாகும். அதனால், அதற்கு எதிரான கருத்து வெளியிட்ட இமாம் அஹ்மது பின் ஹன்பல் (ரஹ்) அவர்களை, ஆட்சியாளர்களின் துணைகொண்டு மிகக் கடுமையாகக் கொடுமைப்படுத்தினர். அப்பாஸிய கலீஃபாக்களான அல்மஃமூன், அல்முஃதஸிம் பில்லாஹ், அல்வாஸிக் ஆகியோர் முஃதஸிலாக் கொள்கைக்கு ஆதரவாக இருந்தனர்.

முத்ஆ

அ. முத்அத்துல் ஹஜ். காண்க: தமத்துஉ

ஆ. தவணை முறைத் திருமணம் (முத்அத்துந் நிகா): ஒரு குறிப்பிட்ட தவணை நிர்ணயித்து பெண் ஒருத்தியை மணமுடித்துக்கொள்வது நடைமுறையில் இருந்துவந்த இத்திருமண முறை பின்னர் முற்றிலும் தடைசெய்யப்பட்டுவிட்டது.

இ. வாழ்க்கை வசதி அல்லது உதவிப் பொருள்: பொதுவாக விவாகரத்துச் செய்யப்பட்ட பெண்ணுக்குக் கணவன் தனது வசதிக்குத் தக்கவாறு வழங்க வேண்டிய ஜீவாதாரத் தொகை.

'முத்'து

மதீனா நகரில் நடைமுறையில் இருந்துவந்த சுமார் 533 கிராம் எடை கொண்ட ஓர் அளவை.

முஃபஸ்ஸல்

அல்முஃபஸ்ஸல். இது குர்ஆனின் 49ஆவது அத்தியாயமான 'அல்ஹுஜுராத்' முதல் இறுதிவரையுள்ள அத்தியாயங்களைக் குறிக்கும். சிலர் 'காஃப்' (50ஆவது) அத்தியாயம் முதல் இறுதிவரையுள்ள அத்தியாயங்களைக் குறிக்கும் என்பர்.

முஹாஜிர்

துறந்தவர், குடிபெயர்ந்தவர் என்பது சொற்பொருள். இஸ்லாத்திற்காக மக்காவைத் துறந்து மதீனாவிற்குச் சென்ற முஸ்லிம் அகதிகளை இஸ்லாமிய வரலாற்றில் 'முஹாஜிர்கள்' என்பர்.

முஸ்தலிஃபா

இது அரஃபாவுக்கும் மினாவுக்கும் இடையிலுள்ள ஒரு திறந்தவெளியாகும். ஹஜ்ஜை நிறைவேற்றும் ஹாஜிகள் 'துல்ஹஜ்' மாதம் ஒன்பதாவது நாள் அரஃபாவிலிருந்து திரும்

பிய பிறகு, இந்த இடத்தில் தங்கி இரவைக் கழிப்பது ஹஜ்ஜின் கிரியைகளில் உள்ளதா கும். அரஃபாவிலிருந்து திரும்பிய பின், இங்குத் தங்கி மஃக்ரிப் (மூன்று ரக்அத்), இஷாவை இரண்டு ரக்அத்தாக குறைத்தும், ஃபஜ்ருத் தொழுகையையும் தொழுவது ஹஜ்ஜின் செயல்பாடுகளுள் ஒன்றாகும். முஸ்தலிஃபா எனும் சொல்லுக்கு இரவில் சிறிது நேரம் தங்குமிடம், இறை நெருக்கம் தருமிடம், ஒன்று கூடுமிடம் போன்றவை சொற்பொருள் களாகும்.

முஸ்னது

நபிமொழி நூல்களுள் ஒரு வகை. 'நபித்தோழர்கள் வரிசை முறைப்படி அமைக்கப்பட்டது' என்பது இதன் பொருள். ஹதீஸ்களை அறிவித்த நபித்தோழர்களின் தர வரிசைப் படியோ, அல்லது அவர்களின் அகர வரிசைப்படியோ பாடங்கள் அமைத்து, அதனடிப் படையில் தொகுக்கப்பெற்ற நபிமொழித் திரட்டே 'முஸ்னது' எனப்படும். (உம்:) முஸ்னது அஹ்மத், முஸ்னதுத் தயாலிசீ.

முஸன்னஃப்

நபிமொழி நூல்களுள் ஒரு வகை. 'தொகுப்பு' என்பது இதன் சொற்பொருள். நபி (ஸல்) அவர்களின் ஹதீஸ்களுடன் நபித்தோழர்கள், அவர்களைப் பின்தொடர்ந்த 'தாபிஈ'கள், தாபிஈகளைப் பின்தொடர்ந்த 'தபஉத் தாபிஈ'கள் ஆகியோரின் சொல், செயல்களையும் சேர்த்து தொகுக்கப்பட்ட நூலே 'முஸன்னஃப்' எனப்படுகிறது. (உம்:) முஸன்னஃப் அப்திர் ரஸ்ஸாக், முஸன்னஃப் இப்னு அபீஷைபா.

மூசா (அலை)

மோசே (Moses). இறைத்தூதர்களில் ஒருவரான இவர்கள் எகிப்தில் பிறந்தார்கள். கொடுங்கோலன் ஃபிர்அவ்னால் கொத்தடிமைகளாக நடத்தப்பட்ட இஸ்ரவேலரை மீட்டார்கள். இவர்களுக்கு இறைவன் தவ்ராத் (தோரா) என்னும் வேதத்தை அருளினான்.

யமாமா

மக்கா நகரிலிருந்து அன்றைய 4 நாள் பயணத் தொலைவிலிருந்த ஓர் இடம். அன்று யமன் நாட்டின் தலைநகராக விளங்கிய யமாமா இன்று சஊதியில் ஒரு பாலை இடைச் சோலை (Oasis) ஆகும். தம்மைத்தாமே நபியென அறிவித்துக்கொண்ட பெரும்பொய்யன் முசைலி மாவுடன் கலீஃபா அபூபக்ர் (ரலி) அவர்களது ஆட்சியில் நடைபெற்ற போரே 'யமாமா போர்' எனப்படுகிறது.

யர்மூக்

ஜோர்டானிலுள்ள ஒரு கால்வாயின் பெயர். ஹிஜ்ரீ 15ஆம் ஆண்டில் (கி.பி. 636) இரண்டாம் கலீஃபா உமர் (ரலி) அவர்களின் ஆட்சிக் காலத்தில் கிழக்கு ரோமானியருக் கும் முஸ்லிம்களுக்கும் இடையே நடைபெற்ற சண்டையே 'யர்மூக் போர்' எனப்படுகிறது.

யூதர்கள்

Jews. இறைத்தூதர் யஅகூப் (அலை) அவர்களுக்கு (யாக்கோபு) 12 ஆண் பிள்ளைகள் இருந்தனர். இப்பன்னிருவரின் வழித்தோன்றல்களான இஸ்ரவேலர்கள் கிறிஸ்துவின் பிறப்புக்குப்பின் இரு பிரிவினராகப் பிரிந்துவிட்டனர். அவர்களில் ஒரு சாராரே யூதர்கள் ஆவர். இன்னொரு சாரார் கிறிஸ்தவர்கள். காண்க: இஸ்ரவேலர்.

யூனுஸ் (அலை)

யோனா (Jonah). இவர், இராக்கிலுள்ள 'நீனவா'ப் பகுதி மக்களுக்கு இறைத்தூதராக அனுப்பப்பட்டார்.

ரக்அத்

தொழுகையில் நிற்றல், ஒரு முறை குனிதல், இரண்டு முறை 'சஜ்தா' செய்தல் ஆகிய நிலைகளை உள்ளடக்கிய ஒரு பகுதி.

ரமல்

நடைபோட்டம் அல்லது தொங்கோட்டம். கால் எட்டுகளை நீட்டி வைக்காமல், அருகருகே வைத்து, நடைக்கும் ஓட்டத்துக்கும் மத்தியில் செல்வதற்கே 'ரமல்' (நடைபோட்டம்) எனப்படும். அவ்வாறு நடக்கும்போது, தோள்கள் இயல்பாகவே குலுங்கும். அதனால் ரமல் செய்வதை 'தொங்கோட்டம்' என்றும் கூறலாம். 'தொங்கல்' என்பதற்கு 'குலுங்கல்' என்பது ஒரு பொருளாகும். உம்ரா, ஹஜ் ஆகியவற்றின் தவாஃப்களில் முதல் மூன்று சுற்றுகளிலும், ஸஃபா-மர்வா இடையே 'சஈ' செய்யும்போது குறிப்பிட்ட எல்லை வரையிலும் 'நடைபோட்டம்' (ரமல்) மேற்கொள்வது நபிவழியாகும். ஸஃபாவில் தொடங்கி மர்வாவரை அனைத்து இடங்களிலும் தோள்கள் குலுங்க 'ரமல்' செய்ய வேண்டியதில்லை. எனவே, 'சஈ' என்ற சொல்லுக்கே தொங்கோட்டம் எனப் பொருள் செய்வது பொருத்தமன்று. விரைந்து செல்லல் என்பதே 'சஈ' என்பதற்கு சரியானப் பொருளாகும்.

(ரலி)

'ரலியல்லாஹு அன்ஹு' (இறைவன், இவரை உவந்துகொள்வானாக) என்பதன் சுருக்கம். இது பெரும்பாலும் நபித்தோழர்களுக்காக செய்யப்படும் பிரார்த்தனையாகும். மற்றவர்களுக்காகவும் அவ்வாறு பிரார்த்திக்கலாம்.

ரஜ்மு

கல்லெறி தண்டனை. திருமணமான ஒருவர் அல்லது ஒருத்தி விபசாரத்தில் ஈடுபட்டது நிரூபிக்கப்பட்டால், அல்லது அவரே அதை ஒப்புக்கொண்டால், இஸ்லாமிய அரசால் வழங்கப்படும் தண்டனைக்கு 'ரஜ்மு' என்று பெயர். சாகும்வரை கல்லால் எறிந்து அவருக்கு மரண தண்டனை வழங்கப்படும். ரஜ்மு எனும் சொல்லுக்கு எறிதல் என்பது சொற்பொருளாகும்.

ராஃபிளா

'புறக்கணித்தோர், கைவிட்டோர்' என்பன இதன் சொற்பொருள்களாகும். அலீ (ரலி) அவர்களின் தீவிர ஆதரவாளர்களான 'ஷீஆ'களில் ஒரு பிரிவினரையே ராஃபிளாகள் என்பர். இவர்கள் அலீ (ரலி) அவர்களின் பேரர் ஸைது பின் அலீ பின் ஹுசைன் அவர்களை ஒரு நெருக்கடியான காலகட்டத்தில் கைவிட்டதால், இப்பெயர் பெற்றனர்.

(ரஹ்)

'ரஹ்மத்துல்லாஹி அலைஹி' (அன்னாருக்கு இறைவன் கருணை புரிவானாக) என்பதன் சுருக்கம். இறந்துபோன இஸ்லாமியப் பெரியவர்களுக்காக இப்படிப் பிரார்த்திப்பது வழக்கம். உயிரோடிருப்பவர்களுக்கும் அவ்வாறு பிரார்த்திக்கலாம்.

ருக்னுல் இராக்கீ

இறையில்லம் கஅபாவின் நான்கு மூலைகளில் வடமேற்கு மூலை.

ருக்னுல் யமானீ

கஃபாவின் தென்கிழக்கு மூலை. ருக்னுல் அஸ்வத் மற்றும் ருக்னுல் யமானீ ஆகிய இரு மூலைகளுக்கும் சேர்த்து 'யமனிய மூலை' என்ற பொதுப் பெயர் உண்டு.

ருக்னுஷ் ஷாம்

கஃபாவின் தென்மேற்கு மூலை

ருகூஉ

'குனிதல்' என்பது சொற்பொருள். தொழுகையில் இரு கைகளையும் இரு முழங்கால்கள் மீது வைத்துக் குனிந்து நிற்கும் நிலை. இதில் தலையை மிகவும் தாழ்த்தாமலும் மிகவும் உயர்த்தாமலும், முதுகைச் சமமாக்கி நிற்க வேண்டும். (அப்போது 'சுப்ஹான ரப்பியல் அழீம்' (மகத்தான என் இறைவன் தூயவன்) எனத் துதிக்க வேண்டும்.

லாத் - உஸ்ஸா

நபி (ஸல்) அவர்களது காலத்தில் வாழ்ந்த இணைவைப்பாளர்கள் வழிபட்டுவந்த இரு தெய்வச் சிலைகளின் பெயர்கள்.

லிஆன்

சாப அழைப்புச் சத்தியம். தம் மனைவியின் மீது விபசாரக் குற்றச்சாட்டைக் கொண்டு வரும் ஒருவர், தகுந்த சாட்சிகளுடன் அதை நிரூபிக்க முடியாமல் போகும்போது தம்பதியர் இருவரும் செய்ய வேண்டிய சாப அழைப்புப் பிரமாணமே 'லிஆன்' ஆகும். கணவன், மனைவி மீது சுமத்தும் குற்றச்சாட்டில், தான் கூறுவது உண்மையே என நான்கு முறை அல்லாஹ்வின் பெயரால் சத்தியம் செய்ய வேண்டும். ஐந்தாவது முறையாக, இக்குற்றச் சாட்டில் தான் பொய்யனாக இருந்தால், தன்மீது அல்லாஹ்வின் சாபம் இறங்கட்டும் எனக் கூற வேண்டும். அடுத்து, மனைவி, 'என் கணவன் சுமத்தும் குற்றச்சாட்டில் அவன் உண்மையாளன் அல்லன்' என நான்கு முறை அல்லாஹ்வின் மீது சத்தியம் செய்ய வேண்டும். ஐந்தாவது முறையாக, 'கணவன் உண்மையாளனாக இருந்தால், என்மீது அல்லாஹ்வின் கோபம் இறங்கட்டும்' என்று கூற வேண்டும். (குர்ஆன் 24:6-9). இதன் பிறகு அவ்விருவரும் எந்த வகையிலும் மீண்டும் இணைய முடியாது.

லுக்மான்

lokman. மத்திய கிழக்கு ஆசியாவில் வாழ்ந்த தத்துவப் பேரறிவாளர். செங்கடலோரத்தில் 'அய்லா' எனும் பகுதியில் வசித்துவந்த அன்னார், ஓரிறைக் கொள்கையை அழுத்தமாக போதிப்பவராகத் திகழ்ந்தார். அவருடைய தத்துவங்களில் சிலவற்றைத் திருகுர்ஆன் எடுத்துரைப்பதே அன்னாரின் சிறப்புக்குப் போதிய சான்றாகும்

லைலத்துல் கத்ர்

கண்ணியமிக்க இரவு. இந்த இரவில்தான் நபி (ஸல்) அவர்களுக்கு இறைமறை குர்ஆன் அருளப்பெற்றது. நபிமொழிகளில் ரமளான் மாதத்தில் கடைசிப் பத்து நாட்களில் உள்ள ஒற்றைப்படை இரவுகளில் ஒன்றில் இந்த இரவு அமைந்ததாக அறிய முடிகிறது.

வலா

அடிமையின் வாரிசுரிமை. விடுதலை செய்யப்பட்ட ஓர் அடிமை சொத்துகள் சிலவற்றைச் சேர்த்துவிட்டு இறந்தும்விடுகிறான். அவனுக்கு மூலவாரிசுகளோ கிளைவாரிசுகளோ

யாருமில்லை இந்நிலையில் அவன் சேர்த்த சொத்துக்கு அவனை விடுதலை செய்த முன்னாள் உரிமையாளரே வாரிசாவார். இவ்வாறு வாரிசாகும் உரிமைக்கே 'வலா' என்பர்

வஹ்யி

வானவர் மூலம் இறைத்தூதர்களுக்கு இறைவனால் வழங்கப்பெற்ற இறைச் செய்தி; வேத வெளிப்பாடு.

விடைபெறும் ஹஜ்

ஹஜ்ஜத்துல் வதா. ஹஜ் கடமையாக்கப்பட்டபின் நபி (ஸல்) அவர்கள் இறப்பதற்கு முந்தைய (ஹிஜ்ரி 10ஆம்) ஆண்டில் முதலாவதாகவும் இறுதியாகவும் செய்த ஹஜ் 'ஹஜ்ஜதுல் வதா' (விடைபெறும் ஹஜ்) எனப்படுகிறது.

வித்ர்

ஒற்றை என்பது இதன் சொற்பொருளாகும். இரவில் நிறைவேற்றப்படும் 1 அல்லது 3 அல்லது 5 போன்ற ஒற்றைப்படையான ரக்அத்கள் கொண்ட தொழுகைக்கு 'வித்ர் தொழுகை' என்பர். இஷா தொழுகைக்குப் பின்போ அல்லது இரவுத் தொழுகைக்குப் பின்போ இரவின் ஏதேனும் ஒரு பகுதியில் இதை நிறைவேற்றலாம். இது நபி (ஸல்) அவர்கள் தவறாமல் கடைப்பிடித்த தொழுகையாகும்.

ளுஹா தொழுகை

முற்பகல் தொழுகை. சூரிய உதயத்துக்கும் நண்பகலுக்கும் இடைப்பட்ட முற்பகல் நேரமே 'ளுஹா' ஆகும் இந்நேரத்தில் தொழப்படும் கூடுதல் (சுன்னத்) தொழுகையே 'ளுஹா தொழுகை' எனப்படுகிறது. முஸ்லிம்கள் சிலர் சூரியன் உதித்ததும் 'இஷ்ராக்' என்றொரு தொழுகையைத் தொழுகின்றனர். 'இஷ்ராக்' எனும் சொல்லுக்கு 'சூரிய உதயம்' என்பதே சொற்பொருள். சூரியோதய நேரத்தைச் சுட்டிக் காட்ட பள்ளிவாசல் தொழுகை நேர அட்டவணையில் 'இஷ்ராக்' என எழுதப்பட்டுள்ளதை, ஒரு தொழுகை எனக் கருதிக்கொள்கின்றனர் இது தவறாகும். ஹதீஸில் இப்பெயரில் வந்துள்ளது 'ளுஹா' தொழுகையையே குறிக்கின்றது. 'ளுஹா தொழுகை, இரண்டு முதல் எட்டு ரக்அத்கள் வரை ஆகும்.

ஜம்ரா

ஜம்ரத். இதற்கு 'பொடிக் கற்கள்' என்பது சொற்பொருள். இறைத்தூதர் இப்ராஹீம் (அலை) அவர்களை இறைவனுக்கு இணங்கவிடாமல் இடையூறு விளைவித்த ஷைத்தானின் நினைவாக மக்காவுக்கு அருகிலுள்ள மினா எனுமிடத்தில் மூன்று தூண்கள் நிறுவப்பட்டுள்ளன. முதலாவது தூணுக்கு 'ஜம்ரத்துல் ஊலா' என்றும், இரண்டாவது தூணுக்கு 'ஜம்ரத்துல் வுஸ்தா' என்றும் மூன்றாவது தூணுக்கு 'ஜம்ரத்துல் அகபா' என்றும் பெயர். முறையே இவற்றுக்கு 'கல்லெறியும் முதலிடம்' , 'கல்லெறியும் நடுவிடம்', 'கல்லெறியும் கடையிடம்' என்று பொருள் கொள்ளலாம். இம்மூன்றுக்கும் பொதுவாக 'ஜம்ராத்' என்பர். ஹஜ்ஜை நிறைவேற்றும் ஹாஜிகள் மினாவின் இரவுகளில் அங்கு தங்கியிருந்து, அத்தூண்கள் மீது பொடிக்கற்களை எறிவது நபிவழியாகும். துல்ஹஜ் பத்தாம் நாள் சூரியன் உச்சி சாயுமுன் 'ஜம்ரத்துல் அகபா' என்ற தூண்மீது மட்டும் ஏழு பொடிக்கற்கள் எறிவர். துல்ஹஜ் பிறை 11, 12 ஆகிய நாட்கள் சூரியன் உச்சி சாய்ந்த பின், மேற்கண்ட மூன்று ஜம்ராகள்மீதும் ஏழேழு பொடிக் கற்கள் எறிவர். 13ஆம் நாள் ஹாஜிகள் மினாவில் தங்கினால், அன்றும் சூரியன் உச்சி சாய்ந்தபின் மூன்று ஜம்ராகள் மீதும் கல்லெறிய வேண்டும்

ஜனாஸா தொழுகை

பிரேதத் தொழுகை; இறுதித் தொழுகை. இறந்தவருக்காகப் பிரார்த்தித்து தொழுவிக்கப் படும் இறுதித் தொழுகைக்கு 'ஜனாஸா தொழுகை' என்பர். ஜனாஸா எனும் சொல் 'பிரேதம்', பிரேதம் வைக்கப்பட்டுள்ள பெட்டி இரண்டையும் குறிக்கும்.

ஜஹ்மிய்யா

கொள்கை பிறழ்ந்த முஸ்லிம் பிரிவினர். ஜஹ்ம் பின் ஸஃப்வான் (கிபி. 745) என்பவரே இதன் தலைவர். இவர் கூஃபாவில் பிறந்து, குராசானில் வாழ்ந்தவர். நபிமொழி அறிஞராய் வாழ்க்கையைத் தொடங்கிய இவர் ஜஅது பின் திர்ஹம் என்பவரிடம் கற்ற கல்வி காரணமாக இறைவன், விதி, நரகம், சொர்க்கம் ஆகியவை பற்றி நூதனமான கருத்துகளை வெளியிட்டார். தம் ஆசிரியரைப் போன்றே இவரும் 'இறைவனின் வாக்கு ('குர்ஆன்') படைக்கப்பட்டது (அநாதியல்ல) என்று கூறினார். ஜஹ்மிய்யாகள் மனிதனுக்குள்ள தன்னியலாற்றலை மறுத்து எல்லாம் விதி என்பதை வலியுறுத்துவர். எனவே, இவர்களுக்கு 'ஜபரிய்யா' (தன்னியலாற்றல் மறுப்பாளர்கள்) என்றொரு பெயரும் உண்டு. அல்லாஹ் தனது உள்ளமையோடும் மெய்யோடும் எல்லா இடங்களிலும் வீற்றிருக்கிறான் என்பது இவர்களது பிழையான கொள்கைகளுள் ஒன்றாகும். இவர்களின் கொள்கைகளை எதிர்த்து, இமாம் புகாரீ (ரஹ்), இமாம் அஹ்மது பின் ஹன்பல் (ரஹ்) ஆகியோர் 'அர்ரத்து அலல் ஜஹ்மிய்யா' (ஜஹ்மிய்யாகளுக்கு மறுப்பு) எனும் பெயரில் நூல்கள் எழுதியுள்ளனர். குர்ஆன் மற்றும் ஹதீஸ்களுக்கு நேரடிப் பொருள் கொடுக்காமல், அதன் மறைபொருளை உய்த்துணரவேண்டுமென்று இஸ்லாமிய வரலாற்றில் முதன் முதலாகக் கூறியவர், இந்த ஜஹ்ம் பின் ஸஃப்வான்தான்

ஜிப்ரீல்

Angel Cabriel. *இறைவனிடமிருந்து இறைத்தூதர்களுக்குச் செய்தி கொண்டுவந்த வானவர். இவரே வானவர்களின் தலைவர் ஆவார்.*

ஜிஸ்யா

'பாதுகாப்பு வரி' என்று பொருள். இஸ்லாமிய அரசின் கீழ் வாழ்ந்த முஸ்லிமல்லாத குடிமக்களைப் பாதுகாப்பதற்காக மிகக் குறைவான வரி வசூலிக்கப்பட்டது. அதுவே 'ஜிஸ்யா' எனப்படும். அவ்வாறு வரி செலுத்திவிட்டால், அவருக்குப் பாதுகாப்பளித்து, ஏனைய முஸ்லிம் குடிமக்களுக்குரிய அனைத்து உரிமைகளும் அந்த அரசால் வழங்கப் பட்டன. அவர்கள் போரில் கலந்துகொள்ள வேண்டிய தேவையில்லை. அதனால், அவர்கள் அமைதியாக வாழவும் முன்னேறவும் வழிபேற்பட்டது. இந்த வரியைப் பெண்களும் ஏழைகளும் சிறுவர் சிறுமிகளும் செலுத்த வேண்டியதில்லை. 'ஜிஸ்யா' வரி செலுத்தியவர், நாட்டைப் பாதுகாக்கப் போர்ப் படையில் சேர்ந்து பணியாற்றினால், அவர் இவ்வரியைச் செலுத்த வேண்டியதில்லை. இந்த வரியை காப்புவரி என்றும் இராணுவக் காப்பு வரி என்றும் குறிப்பிடுவர்.

ஜின்

Genii. *மனிதனும் வானவரும் அல்லாத ஓர் இனம். இந்த இனம் தீப்பிழம்பால் படைக்கப் பட்டதாகும். கண்ணுக்குத் தெரியாத வாயுவாகவும் மனிதன் உள்பட பல்வேறு உயிரினங்களின் தோற்றத்திலும் ஜின்கள் மாற வல்லனவாகும். மனிதனுக்கு முன்பே இந்த இனம் படைக்கப்பட்டுவிட்டது. ஜின்களில் ஆண், பெண், சந்ததிப் பெருக்கம், மார்க்கச் சட்டம் ஆகியவை உண்டு. இவர்களுக்கும் நன்மை-தீமை முதலியவற்றில் தன்னியலாற்றல் உண்டு. ஷைத்தான்களின் தந்தையான இப்லீஸ் இந்த இனத்தில் பிறந்தவன் ஆவான்.*

ஜுமுஆ

வெள்ளிக்கிழமை. இந்நாளில் முஸ்லிம்கள் நண்பகல் நேரத்தில் பள்ளிவாசலில் ஒன்று கூடுவர். முதலில் இமாம் மக்களுக்கு உரை நிகழ்த்துவார். பிறகு இரண்டு ரக்அத் தொழுகை நடைபெறும். ஜுமுஆ எனும் சொல்லுக்கு ஒன்றுகூடல் என்பது சொற்பொருளாகும்.

ஷாம்

அக்காலத்தில் சிரியா, ஃபலஸ்தீன், ஜோர்டான், லெபனான் உள்ளிட்ட நாடுகள் சேர்ந்த ஐக்கிய நாட்டின் பெயராகும். இன்று அதன் பெரும் பகுதி சிரியாவில் அமைந்துள்ளது.

ஷைத்தான்

சாத்தான் (Satan); இப்லீஸின் சந்ததி. இவனைக் கிறிஸ்தவர்கள் 'அசுத்த ஆவி' என்பர். ஜின் இனத்தைச் சேர்ந்த இவர்களுக்குச் சந்ததிகளும் சேனைகளும் உண்டு. மறைவாக இருந்துகொண்டே மனிதர்களை வழிகெடுப்பதே இவர்களின் முக்கியப் பணியாகும்.

ஸகாத்

கட்டாயக் கொடை. தேவைகள்போக ஒரு குறிப்பிட்ட அளவு செல்வம் முஸ்லிம் ஒருவரின் கைவசத்தில் சேமிப்பாக இருந்தால் அவர் அதிலிருந்து இரண்டரை சதவீதம் கட்டாயமாகத் தர்மம் கொடுக்க வேண்டும். குர்ஆன் (9:60ஆவது வசனத்தில்) குறிப்பிடும் ஏழைகள் உள்ளிட்ட எட்டுப் பிரிவினரில் எவருக்கேனும் இது வழங்கப்படும். ஸகாத் எனும் சொல்லுக்கு சுத்திகரிப்பு, தூய்மை, வளர்ச்சி என்பன சொற்பொருள்களாகும்.

ஸஃபா

மக்காவில் இறையில்லம் கஅபாவுக்கு அருகே அமைந்துள்ள ஒரு சிறிய மலைக் குன்று.

ஸம்ஸம்

புனித மக்காவில் இறையில்லம் கஅபா அருகிலுள்ள கிணறு. அங்கிருந்து எடுக்கப்படும் தண்ணீருக்கும் இப்பெயர் கூறப்படுகிறது. இதன் பொருள் (ஓடாமல்) 'நில் நில்' என்பதாகும். இப்ராஹீம் (அலை) அவர்கள் தம் மனைவி ஹாஜர் அவர்களையும் தம் புதல்வர் இஸ்மாயீல் (அலை) அவர்களையும் இன்றைய மக்கா அமைந்துள்ள பாலைவனத்தில் விட்டுச் சென்றபோது, குழந்தை இஸ்மாயீல் தாகத்தால் அழ, தண்ணீர் தேடி ஹாஜர் அம்மையார் 'ஸஃபா, மர்வா' குன்றுகளுக்கு இடையே ஓடினார். அப்போது, வானவர் ஜிப்ரீல் (அலை) தமது இறக்கையால் பூமியில் அடிக்க அங்கிருந்து நீர் பொங்கியது. நீர் பொங்கியதை நிறுத்த, 'நில் நில்' (ஸம் ஸம்) என்று ஹாஜர் கூறினார். எனவே, அப்பெயரே அக்கிணற்றுக்கும் நீருக்கும் உரியதாக நிலைத்துவிட்டது.

(ஸல்)

'ஸல்லல்லாஹு அலைஹி வசல்லம்' என்று துவங்கும் பிரார்த்தனையின் சுருக்கம். அன்னார்மீது அல்லாஹ்வின் கருணையும் சாந்தியும் உண்டாகட்டும் என்பது இதன் சொற்பொருளாகும். இது இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களுக்காக இறைவனிடம் மக்கள் செய்யும் பிரார்த்தனையாகும். எனவே, நபிகளாரின் பெயருடன் இணைத்து இதைக் குறிப்பிடுவர். இதை 'ஸலவாத்' என்பர்

ஸாஉ

அரபியரின் பண்டைய அளவைகளுள் ஒன்று இது முகத்தல் அளவையில் 2.75 லிட்டர் கொண்டதாகும்

ஸிஃப்பீன்

சிரியாவின் யூப்ரடீஸ் நதிக்கரையில் அமைந்த ஓர் ஊர். இங்கு கி.பி. 657ஆவது ஆண்டில் அலீ பின் அபீதாலிப் (ரலி) அவர்களின் ஆதரவாளர்களுக்கும் முஆவியா (ரலி) அவர்களின் ஆதரவாளர்களுக்கும் இடையே நடைபெற்ற போரையே 'ஸிஃப்பீன் போர்' என்பர்.

ஸியாரத்

ஸியாரத்துல் குபூர். ஸியாரத் எனும் சொல்லுக்கு 'சந்தித்தல்' என்பது சொற்பொருளாகும். இறந்தவர்கள் புதைக்கப்பட்டுள்ள அடக்கவிடங்களைச் சந்திப்பதற்கே இஸ்லாமிய வழக்கில் 'ஸியாரத்' எனப்படுகிறது. இறப்பையும் மறுமையையும் நினைவுகூர்ந்து தம் தவறுகளை திருத்திக்கொண்டு மறுமைக்கான ஆயத்தப் பணிகளில் மக்கள் ஈடுபட வேண்டும் என்பதற்காகவே அடக்கவிடங்களைச் சந்திப்பதற்கு மார்க்கம் அனுமதியளிக்கிறது.

ஹதீ

பலிப்பிராணி. ஹஜ்ஜின்போது அறுக்கப்படும் ஆடு, மாடு, ஒட்டகம் ஆகிய பலிப்பிராணிகளுள் ஒன்றுக்கே 'ஹதீ' என்பர்.

ஹதீஸ்

காண்க: நபிமொழி.

ஹராம்

அ. இறைமறை குர்ஆனாலும் இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களாலும் சட்டபூர்வமாகத் தடைசெய்யப்பட்டது. சட்டபூர்வமாக அனுமதிக்கப்பட்டதற்கு 'ஹலால்' என்று சொல்லப்படும்.

ஆ. புனிதம் வாய்ந்தது; கண்ணியப்படுத்தப்பட வேண்டியது. முஹர்ரம் மாதத்தை 'அஷ்ஷஹ்ருல் ஹராம்' (புனித மாதம்) என்றும், மக்கா நகரை 'அல்பலதுல் ஹராம்' (புனித நகரம்) என்றும், கஅபாவை உள்ளடக்கிய இறையில்லத்தை 'மஸ்ஜிதுல் ஹராம்' (புனித இறையில்லம்) என்றும் கூறுவர்.

ஹரூரிய்யா

காண்க: காரிஜிய்யா.

ஹலால்

அ. இறைமறை குர்ஆனாலும் இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களாலும் சட்டபூர்வமாக அனுமதிக்கப்பட்டதற்கு 'ஹலால்' என்று பெயர்.

ஆ. ஹஜ்ஜின்போது இஹ்ராம் உடையைக் களைந்து இயல்பான நிலைக்குத் திரும்புதல்.

இ. அல்லாஹ்வின் பெயர் கூறி அறுக்கப்பட்ட பிராணிகளால் தயாரிக்கப்பட்ட அசைவ உணவு.

ஹஜ்

உடல் நலமும் பொருள் வசதியும் உள்ள முஸ்லிம் ஒருவர் தமது ஆயுளில் ஒருமுறையேனும் புனித மக்கா நகரை நாடிச் சென்று அங்குள்ள உலகின் முதல் இறையில்லமான கஅபாவைச் சந்தித்து அங்கும் அதனைச் சுற்றியுள்ள குறிப்பிட்ட புனித இடங்களிலும் வழிபாடுகள் மேற்கொள்வது கடமையாகும். இந்த வழிபாட்டுக்கே ஹஜ் எனப்படுகிறது.

நபி (ஸல்) அவர்கள் காட்டிய வழியில் கஃபாவைச் சுற்றல், ஸஃபா-மர்வா மலைக் குன்றுகளுக்கிடையே விரைந்து செல்லல் (சஈ), 'நடையோட்டம்' (ரமல்) மேற்கொள்ளல், மினா, அரஃபா, முஸ்தலிஃபா ஆகிய இடங்களில் குறிப்பிட்ட நாட்களில் தங்குதல், குர்பானிப் பிராணியை அறுத்துப் பலியிடல், முடிவில் தலைமுடி களைதல் ஆகியவையே ஹஜ்ஜின் முக்கிய வழிபாடுகளாகும்.

ஹஜருல் அஸ்வத்

கறுப்புக் கல் என்பது சொற்பொருள். இறையில்லம் கஃபாவின் வடகிழக்கு மூலையில் பதிக்கப்பட்டுள்ள சொர்க்கக் கல். ஹஜ்ஜின்போது இதை முத்தமிடுவது நபிவழியாகும்.

ஹாரூன் (அலை)

ஆரோன் (Aaron). இறைத்தூதர் மூசா (அலை) அவர்களின் சகோதரரும் அதே காலத்தில் நபியாகவும் விளங்கியவர். எகிப்தின் சர்வாதிகாரி இரண்டாம் ரம்சேஸை எதிர்த்துப் போராடுவதில் மூசா (அலை) அவர்களுக்கு உறுதுணையாக நின்றார்கள்.

ஹிரா

மக்காவுக்கு அருகிலுள்ள 'ஜபலுந் நூர்' எனும் மலை. இம்மலையிலுள்ள ஒரு குகையில் நபி (ஸல்) அவர்கள் இருந்தபோதுதான் அவர்களுக்கு முதன்முதலில் திருக்குர்ஆன் அருளப் பெற்றது. அப்போது நபி (ஸல்) அவர்களுக்கு வயது 40 (கி.பி.611).

ஹில்ஃபுல் ஃபுளூல்

'ஹில்ஃப்' எனும் சொல்லுக்கு 'நட்புறவு உடன்பாடு' என்பதும் 'ஃபுளூல்' என்பதற்கு 'எஞ்சியவை' என்பதும் சொற்பொருள்களாகும். 'முஹம்மத் (ஸல்) அவர்கள் நபியாக நியமிக்கப் படுவதற்குமுன் இருபது வயது இளைஞராக இருந்தபோது பனூ ஹாஷிம், பனூல் முத்தலிப், அசத், ஸுஹ்ரா, தைம் ஆகிய குறைஷி குலத்தார் அப்துல்லாஹ் பின் ஜுத்ஆன் என்பாரின் இல்லத்தில் ஒன்றுகூடி உடன்படிக்கை செய்தனர். மக்காவுக்குள் யார் அநீதிக்குள்ளானா லும் அவர்களுக்கு நியாயம் பெற்றுத் தருவது, யாருடைய உரிமையேனும் யாரிடமேனும் சிக்கி மீண்டு வராமல் எஞ்சியிருந்தால் அதை மீட்டுக் கொடுப்பது போன்ற விஷயங்க ளில் உடன்பாடு கண்டனர். இதற்கே 'ஹில்ஃபுல் ஃபுளூல்' (எஞ்சியவற்றை மீட்டெடுக்கும் உடன்பாடு) என்பர். இந்த உடன்பாட்டில் இளைஞராயிருந்த முஹம்மத் (ஸல்) அவர் களும் கலந்துகொண்டார்கள்.

ஹில்ஃபுல் முதய்யபீன்

அறியாமைக் காலத்தில் அப்து மனாஃப் குலத்தாருக்கும் அப்துத் தார் குலத்தாருக்கும் இடையே ஹஜ் யாத்திரிகர்களுக்கு தண்ணீர் விநியோகிப்பது, தாருந் நத்வா சமுதாயக் கூட நிர்வாகம் உள்ளிட்ட விஷயங்களில் பிரச்னை ஏற்பட்டது. இப்பொறுப்புகளை அப்துத் தார் குலத்தாரிடமிருந்து பறிப்பதற்கு முயற்சிகள் நடந்தன. அம்முயற்சிகள் தோல்வியில் முடிந்தன என்பது தனிச் செய்தி. இது மிகப்பெரும் மோதலில் போய் முடியும் என்று அஞ்சிய குறைஷி குலத்தாருள் எட்டு பிரிவினர் உடன்பாடு காண முன்வந்தனர். அநீதிக் குள்ளானவர்கள் யாராயினும் அவர்களுக்கு உரிய நீதி கிடைக்கச் செய்வது, குற்றமிழைத்த வருக்கு தண்டனை பெற்றுத் தருவது போன்றவற்றின் பேரில் இந்த உடன்படிக்கை கையெழுத்தானது. உடன்பாடு காணும்போது நறுமண கரைசலுக்குள் கையை நுழைப் பது அன்றைய அரபுகளின் வழக்கம். இதனால்தான் இந்த உடன்பாட்டுக்கு 'ஹில்ஃபுல் முதய்யபீன்' (நறுமணம் தோய்க்கப்பட்டோரின் உடன்பாடு) எனப் பெயர் வந்தது. நபி

(ஸல்) அவர்கள் பிறப்பதற்கு முன்பே இந்த உடன்பாடு நடைபெற்று முடிந்துவிட்டது.

ஹிஜ்ரத்

நாடு துறத்தல். ஒருவர் இறை மார்க்கத்தைப் பின்பற்றி வாழ தடைகள் ஏற்படும்போது தாம் வசிக்குமிடத்தைத் துறந்து வேற்றிடம் செல்லல். புலம் பெயர்தல். இவ்வாறு நபி (ஸல்) அவர்கள் கி.பி. 622ஆவது ஆண்டு மக்காவைத் துறந்து மதீனா சென்ற நிகழ்ச்சி இஸ்லாமிய வழக்கில் 'ஹிஜ்ரத்' எனப்படுகிறது. நபித்துவ ஆண்டு ஐந்தில் நபித்தோழர்களும் நபித்தோழியரும் முதற்கட்டமாக 15 பேரும் இரண்டாவது கட்டமாக 101 பேருமாக முதன்முறையாக அபிசீனிய நாட்டுக்குச் ஹிஜ்ரத் பயணம் மேற்கொண்டனர். இதை 'ஹிஜ்ரத்துல் ஊலா' (முதலாவது ஹிஜ்ரத்) என்பர். கி.பி.622ஆம் ஆண்டு நபிகளாரும் தோழர்களும் மக்காவிலிருந்து மதீனாவுக்கு மேற்கொண்ட ஹிஜ்ரத்தை 'ஹிஜ்ரத்துஸ் ஸானியா' (இரண்டாவது ஹிஜ்ரத்) அல்லது 'ஹிஜ்ரத்துந் நபி' (நபியின் ஹிஜ்ரத்) என்றும் வழங்குவர்.

ஹிஜ்ரி

இஸ்லாமிய ஆண்டு. ஹிஜ்ரத் நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டே 'ஹிஜ்ரி' எனும் இஸ்லாமிய ஆண்டு துவங்குகிறது. காண்க: இஸ்லாமிய மாதங்கள்.

ஹிஜாப்

மகளிர் மறைப்பாடை. அந்நிய ஆடவர்கள் பார்க்காத வகையில் பெண்கள் தம் முகம், மணிக்கட்டுவரை கைகள், பாதங்கள் தவிர இதர உடலுறுப்புகள் முழுவதையும் உடையால் மறைத்துக்கொள்ளல். அவ்வாறு மறைக்கும் ஆடைக்கே 'ஹிஜாப்' என்பர். உர்து மொழியில் இதை 'பர்தா' என்பர்.

ஹிஜாஸ்

சவூதி அரபிய்யாவில் செங்கடலுக்கு அருகே வடக்கே அகபா வளைகுடாவிலிருந்து தெற்கே 'அஸீர்' வரை பரந்து கிடக்கும் பகுதி. இந்த நிலப்பகுதியில்தான் மக்கா, தாயிஃப், தபூக் ஆகிய நகரங்கள் உள்ளன. புனித மக்கா இதன் தலைநகரமாக விளங்கியது.

ஹுதைபிய்யா

ஹுதைபியா. இது மக்காவிலிருந்து சிறிது தொலைவிலுள்ள ஒரு பள்ளத்தாக்கு ஆகும். ஹிஜ்ரி 6ஆம் ஆண்டு (கி.பி.627) நபி (ஸல்) அவர்களும் மக்காவாசிகளும் இங்கு செய்து கொண்ட வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒப்பந்தம் 'ஹுதைபிய்யா ஒப்பந்தம்', ஹுதைபிய்யா உடன்படிக்கை எனப்படுகின்றது.

ஹுனைன்

மக்காவுக்கும் தாயிஃபுக்கும் இடையில் உள்ள, 'அரஃபா'வின் திசையில் மக்காவிலிருந்து சுமார் 18 கிலோ மீட்டருக்கும் அதிகமான தொலைவில் உள்ள ஒரு பள்ளத்தாக்கின் பெயர். ஹிஜ்ரி 8ஆம் ஆண்டு (கி.பி. 630) ஷவ்வால் மாதம் 'ஹவாஸின்' எனும் அரபுக் குலத்தாருக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே இங்கு நடைபெற்ற போரே 'ஹுனைன் போர்' எனப்படுகிறது

துணை நூல்கள் பட்டியல்

குர்ஆன் விரிவுரைகள்:

1. அஹ்காமுல் குர்ஆன் லித் தஹாவீ
2. அல்-இத்கான் ஃபீ உலூமில் குர்ஆன் லிஸ் ஸுயூத்தீ
3. அல்-இஹ்காம் ஃபீ உஸூலில் அஹ்காம்
4. தஃப்ஸீர் இப்னு கஸீர்
5. தஃப்ஸீர் குர்த்துபீ
6. அல்-புர்ஹான் ஃபீ உலூமில் குர்ஆன்
7. ஸஃப்வத்துத் தஃபாஸீர்.

ஹதீஸ் நூல்கள்:

8. அல்-அதபுல் முஃப்ரத்
9. அமலுல் யவ்மி வல்லைலா
10. அல்-ஆஹாது வல்மஸானீ லி இப்னி அபீ ஆஸிம்
11. ஸுனன் அபூதாவூத்
12. ஸுனன் இப்னு மாஜா
13. ஸுனனுத் தாரகுத்னீ
14. ஸுனனுத் தாரிமீ
15. ஸுனனுந் நஸாயீ
16. அத்-தஅவாத்துல் கபீர் லில் பைஹகீ
17. தலாயிலுந் நுபுவ்வா லில் பைஹகீ
18. அத்-துஆ லித் தபரானீ
19. அல்-முஅஜமுல் அவ்சத் லித் தபரானீ
20. அல்-முஅஜமுல் கபீர் லித் தபரானீ
21. அல்-முஅஜமுஸ் ஸஃகீர் லித் தபரானீ
22. முவத்தா மாலிக்
23. அல்-முன்தகபு மிம் முஸ்னதி அப்தி பின் ஹுமைத்
24. அல்-முன்தகா லி இப்னில் ஜாரூத்
25. முஸ்தக்ரஜு அபீஅவானா
26. முஸ்னது அபீஅவானா
27. முஸ்னது அபீபக்ர் அல்-மர்வஸீ
28. முஸ்னது அபீ யஅலா
29. முஸ்னது இப்னில் முபாரக்
30. முஸ்னதுத் தயாலிஸீ
31. முஸ்னதுல் பஸ்ஸார்
32. முஸ்னதுஷ் ஷாமிய்யீன் லித் தபரானீ
33. முஸ்னதுஷ் ஷாஃபிஈ
34. முஸ்னதுஷ் ஷாஷீ
35. முஸ்னதுஷ் ஷிஹாப் அல்குழாஈ
36. முஸ்னதுல் ஹுமைதீ
37. முஸன்னஃபு அப்திர் ரஸ்ஸாக்
38. முஸன்னஃபு இப்னி அபீஷைபா
39. ஜாமிஉத் திர்மிதீ

40. ஜாமிஉல் மஸானீதி வஸ்ஸுனன்
41. ஷுஅபுல் ஈமான் லில் பைஹகீ
42. ஸஹீஹ் இப்னு குஸைமா
43. ஸஹீஹ் இப்னு ஹிப்பான்
44. ஸஹீஹ் முஸ்லிம்
45. ஸஹீஹுல் புகாரீ
46. அஸ்-ஸுனனுல் குப்ரா லிந் நஸாயீ
47. அஸ்-ஸுனனுல் குப்ரா லில் பைஹகீ
48. அஸ்-ஸுனனுல் மஃஸூரா
49. அஸ்-ஸுனனுஸ் ஸுஃக்ரா லில் பைஹகீ
50. ஹாக்கிம்
51. ஹில்யத்துல் அவ்லியா லி அபீ நுஐம்

ஹதீஸ் கலை நூல்கள்:

52. அத்ராஃபுல் முஸ்னத்
53. அல்-அபாத்தீலு வல்மனாக்கீர்
54. அவ்னுல் மஃபூத்
55. அல்-ஆஹாது வல்மஸானீ
56. இர்ஷாதுஸ் ஸாரீ
57. அல்-இலல் லி அபீஹாத்திம்
58. அல்-இலல் லித் தாரகுத்னீ
59. அல்-இலலுல் கபீர் லித் திர்மிதீ
60. அல்-இலலுல் முத்தனாஹிய்யா லி இப்னில் ஜவ்ஸீ
61. அல்-இலலுல் முத்தனாஹிய்யா லித் தாரகுத்னீ
62. உம்தத்துல் காரீ
63. அல்-கவ்லுல் முசத்தத் லி இப்னி ஹஜர் அல்-அஸ்கலானீ
64. ஃகரீபுல் ஹதீஸ் லி இப்னி குதைபா
65. கிதாபுல் மவ்ளூஆத்
66. தஃஜீலுல் மன்ஃபஆ
67. தக்மிலத்து ஃபத்ஹில் முல்ஹிம்
68. தக்ரீபுத் தஹ்தீப்
69. தபகாத்துல் குப்ரா லி இப்னி சஃத்
70. அத்-தம்ஹீத் லி இப்னி அப்தில் பர்
71. அத்-தர்ஃகீப் வத்தர்ஹீப்
72. அத்-தல்கீஸுல் ஹபீர்
73. தஹ்தீபுல் கமால்
74. அல்-ஜுமஆத்
75. தஹ்தீபுல் ஆஸார் லி இப்னி ஜரீர் அத்-தபரீ
76. தஹ்தீபுத் தஹ்தீப்
77. துஹ்ஃபத்துல் அஹ்வதீ
78. நதாயிஜுல் அஃப்கார் லி இப்னி ஹஜர்
79. அந்-நிஹாயா ஃபீ ஃகரீபில் அஸர்
80. ஃபத்ஹுல் பாரீ
81. அல்-ஃபுதூஹாத்துர் ரப்பானிய்யா லி இப்னி ஹஜர்
82. மஃரிஃபத்து உலூமில் ஹதீஸ் லில் ஹாக்கிம்
83. மஃரிஃபத்துஸ் ஸஹாபா லி அபீ நுஐம்
84. மஃரிஃபத்துஸ் ஸுனனி வல்ஆஸார்
85. மஆலிமுஸ் ஸுனன் லில் கத்தாபீ
86. அல்-மனாருல் முனீஃப் லி இப்னில் கைய்யிம் அல்-ஜவ்ஸிய்யா
87. மஜ்மஉஸ் ஸவாஇத்
88. அல்-மஜ்ரூஹீன்
89. மிர்காத்துல் மஃபாதீஹ்
90. மின்ஹாஜுஸ் ஸுன்னா லி இப்னித் தைமிய்யா

91. அல்-மின்ஹாஜ் லின் நவவீ
92. மீஸானுல் இஃதிதால்
93. முஷ்கிலுல் ஆஸார் லித் தஹாவீ
94. அள்-ளுஅஃபா லில் உகைலீ
95. அள்-ளுஅஃபாஉஸ் ஸஃகீர் லில் புகாரீ
96. அல்-ஜவ்ஹருந் நகிய்யு லி இப்னித் துர்குமானீ
97. ஷர்ஹு மஆனில் ஆஸார்
98. ஷர்ஹுஸ் ஸுன்னா லில் பஃகவீ
99. ஸிகாத்து இப்னி ஹிப்பான்
100. அஸ்-ஸுன்னா லி இப்னி அபீ ஆஸிம்
101. ஹாஷியத்துஸ் ஸிந்தீ அலா இப்னிமாஜா.
102. ஹாஷியத்துஸ் ஸிந்தீ அலந் நஸாயீ.

ஃபிக்ஹு நூல்கள்:

103. நைலுல் அவ்த்தார்
104. ஃபிக்ஹுஸ் ஸுன்னா.

வரலாற்று நூல்கள்:

105. அல்-இஸ்தீஆபு ஃபீ அஸ்மாயில் அஸ்ஹாப்
106. அல்-இஸாபா
107. உஸ்துல் ஃகாபா
108. அல்-காமில் ஃபித்தாரீக்
109. ஸியரு அஃலாமின் நுபலா
110. அத்-தபகாத்துல் குப்ரா லி இப்னி ஸஅத்
111. அத்-தாரீகுல் கபீர் லில் புகாரீ
112. தாரீகுல் குலஃபா
113. தாரீகு பஃக்தாத்
114. தாரீகு மஆலிமில் மதீனத்தில் முனவ்வரா கதீமன் வஹதீஸன்
115. தாரீகுல் மதீனத்தில் முனவ்வரா
116. தாரீகுஸ் ஸஃகீர் லில் புகாரீ
117. அல்-பிதாயா வந்நிஹாயா
118. முஹம்மதுர் ரசூலுல்லாஹ்
119. அஸ்-ஸீரத்துந் நபவிய்யா லி இப்னி ஹிஷாம்.

அகராதிகள்:

120. இஸ்லாமியக் கலைக் களஞ்சியம்
121. க்ரியாவின் தமிழ் அகராதி
122. சென்னைப் பல்கலைக்கழகம் ஆங்கிலம் - தமிழ் சொற்களஞ்சியம்
123. பிரிட்டானிகா தகவல் களஞ்சியம்
124. அல்-மவ்ரித் அரபி - ஆங்கில அகராதி
125. மின்னணு உயிரியல் கலைக் களஞ்சியம் (Birds Fat ar Grieving as Stated in the Quran, www.55a.com)
126. அல்-முன்ஜித்
127. லிஸானுல் அரப்
128. Universal Delux Dictionary Eng-Eng-Tamil.

பொது நூல்கள்:


129. அல்-அம்வால் லி அபீ உபைத்
130. அல்-அம்வால் லி இப்னி ஸன்ஜுவைஹி.





அகரவரிசை

பொருள் அட்டவணை

குறிப்பிட்ட நபித்தோழர்கள் வழியாக நமக்குக் கிடைத்த நபிமொழிகளை அதன் அறிவிப்பாளர்தொடருடன் ஓரிடத்தில் குவிப்பதே முஸ்னது வகை நூலாசிரியர்களின் சேவையாகும். இமாம் அஹ்மது பின் ஹன்பல் (ரஹ்) அவர்கள் தொகுத்தளித்த இந்த நூலும் முஸ்னத் வகையில் அமைந்ததே. இதில் குறிப்பிட்ட ஒரு தலைப்பில் நபிமொழி களைத் தேடுவது சிரமம். எனவே, வாசகர்களின் சிரமத்தைக் குறைக்க நாங்களே நபி மொழிகளின் பொருள்களை தமிழ் அகரவரிசையில் முன்மொழிந்து அவற்றை அட்ட வணைப்படுத்தியுள்ளோம். அருகில் அப்பொருள் இடம்பெறும் நபிமொழிகளின் எண் களையும் தந்துள்ளோம்.







169, 560, 573, 638, 896, 1204, 1292.

○ இஸ்லாத்தின் ஆரம்பக் காலக் கட்டங்களில் நிலவிய வறுமை: 154, 333, 562, 569, 797, 1080, 1297, 1416, 1483, 1532.

○ இஸ்லாமிய அரசில் முஸ்லிமல்லா பிற மதத்தார் 'ஸகாத்' செலுத்த வேண்டிய தில்லை: 78, 213.

○ இஸ்லாமிய அரசின் கீழுள்ள பிற சமுதாயப் பெண்கள் அல்லது முஸ்லிம் பெண்கள் அரச துரோகக் குற்றமிழைக்கும்போது அவர்களின் முடியை அவிழ்த்து அல்லது ஆடையைக் களைந்து சோதனையிட வேண்டிய நிர்பந்தம் அரசு அதிகாரிக்கு ஏற்பட்டால் அவ்வாறு செய்யலாம்: 566, 786.


○ இஸ்லாமிய வரலாற்றில் (படைப் பிரிவுக்காக) முதன்முதலில் நியமிக்கப் பெற்ற தளபதி, அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ் அல் அசதீ (ரலி) அவர்களே ஆவார்கள் என்பது தொடர்பான செய்தி: 1457.

○ இஹ்ராம்: 79, 164, 221, 246, 262, 356, 378, 396, 432, 435, 436, 461, 463, 465, 466, 503, 504, 744, 745, 773, 789.

○ 'இஹ்ராம்' அணிந்தவர் மணமுடிப்பதோ, மணமுடித்துக்கொடுப்பதோ, பெண் கேட்பதோ கூடாது: 378, 432, 436, 461, 465, 503, 504.

○ இஹ்ராம் அணிந்திருப்பவர் கண் வலிக்காக கண்களில் மருந்திடலாம்: 396, 435, 463, 466


○ இஹ்ராம் அணியாதவர் வேட்டையாடியதை இஹ்ராம் அணிந்தவர் உண்ணலாமா?: 744, 745, 773, 789, 1311, 1320.



○ ஈசா நபி (அலை): 149, 159, 1305, 1306.

○ ஈமான் (இறைநம்பிக்கை): 93, 179, 186, 346, 352, 1324, 1327, 1338, 1355, 1356, 1057.

○ ஈலா (சத்தியம்): 217



○ 'உங்கள் கரங்கள் ஈட்டிக் கொண்ட (தீய) செயலின் காரணமாகவே எந்தத் தீங்கும் உங்களை வந்தடைகிறது' (42:30) எனும் இறைவசனத்தின் விளக்கம்: 614.

○ 'உங்கள் தொழுகையில் நீங்கள் குரலை மிகவும் உயர்த்தவும் வேண்டாம்; மிகவும் தாழ்த்தவும் வேண்டாம்" (17:110) எனும் இறைவசனம் அருளப்பெற்ற சூழல்: 150.


○ "உங்களுக்கு என்ன நேர்ந்தது? நயவஞ்சகர்கள் விஷயத்தில் நீங்கள் இரு பிரிவினராக உள்ளீர்கள்?" எனும் (4:88ஆவது) இறைவசனம் அருளப்பெற்றதற்கான காரணம்: 1578.


○ "உங்களுக்கு நாம் தெளிவான வெற்றியினை அளித்துள்ளோம். (அதனால்) உங்களின் முன் பின் தவறுகளை மன்னித்து.." (48:1-2) என்று தொடரும் இறைவசனங்கள் குறித்து நபி (ஸல்) அவர்கள் கூறிய செய்தி: 204.


○ "உங்களை அவர் மணவிலக்குச் செய்துவிட்டால் உங்களைவிடச் சிறந்த முஸ்லிம்களான, நம்பிக்கை கொண்ட, கட்டுப்பட்டு நடக்கிற, திருந்திக்கொள்கிற, வழிபாடு புரிகிற, நோன்பு நோற்கிற விதவைகளையும், கன்னியரையும் மனைவியராக அவருடைய இறைவன் மாற்றித் தரக்கூடும்" (66:5) எனும் இறைவசனம் அருளப்பெற்ற காரணம்: 152, 155, 242.


ஊ


எ


ஏ



ஐ



ஒ



ஓ






கா



கி







கூ



கெ


கே



கை












சா


சி





















தா


தி



○ தீமை: 23, 63, 449, 587, 614, 893, 1015, 1277, 1298, 1302.

○ தீமைகளுக்கு வழிவகுக்கும் பொய்: 5, 43.


○ 'தீமை செய்பவர் அதற்குரிய தண்டனை வழங்கப்படுவார்' (4:123) எனும் இறைவசனத்தை விளக்கும் நபிமொழி: 23, 65, 66, 67.

○ தீய ஆட்சியாளர் அடையும் மறுமைத் தண்டனை: 21.

○ தீய மரணம் ஏற்படாமலிருக்க விரும்புகின்றவர், இறைவனை அஞ்சி நடக்கட்டும்; இரத்த உறவுகளுடன் சேர்ந்து வாழட்டும்: 1150.

○ தீய மனைவி; தீய இல்லம்; மோசமான வாகனம் ஆகியவை தொடர்பான செய்தி: 1368.

○ தீர்ப்பு: 178, 262, 445, 541, 594, 602, 621, 652, 707, 779, 840, 879, 1011, 1088, 1148, 1215, 1216, 1218, 1220, 1241, 1272, 1345, 1434.



○ 'துஆ' (பிரார்த்தனை): 6, 8, 10, 17, 28, 37, 45, 49, 60, 77, 139, 190, 203, 216, 218, 288, 257, 412, 603, 653, 663, 664, 674, 688, 691, 712, 714, 764, 800, 886, 1254, 1259, 1262, 1267, 1269, 1282, 1284, 1293, 1323, 1378, 1402.

○ தும்மல் ஏற்பட்டவர் 'அல்ஹம்து லில்லாஹ்' கூறுதல்; அதைக் கேட்டவர் 'அல்லாஹ் உனக்கு அருள்புரியட்டும்' (யர்ஹமுக்கல்லாஹ்) என்று மறுமொழி பகர்தல்: 925.

○ தும்மல் ஏற்பட்டவர் 'அல்ஹம்து லில்லாஹி அலா குல்லி ஹால்' என்று கூற வேண்டும் என்பது தொடர்பாக வந்துள்ள செய்தி: 926, 948

○ தும்மி, இறைவனை வாழ்த்திய முஸ்லிமுக்கு அருள்வேண்டிப் பிரார்த்திப்பது, முஸ்லிம்கள் ஒருவருக்கொருவர் செய்ய வேண்டிய கடமைகளுள் ஒன்றாகும்: 636.


துரோகம்: 32.

○ துல்ஹஜ் பிறை 11, 12, 13 ஆகிய 'தஷ்ரீக்' நாட்களில் நோன்பு நோற்கலாகாது: 535, 670, 780, 783, 945, 1377, 1418.

○ துறவறம் மேற்கொள்வதும் ஆண்மை நீக்கம் செய்துகொள்வதும் தடைசெய்யப்பட்டவையாகும்: 1432, 1443, 1503.

○ துன்பம், துயரம்: 65-67, 688, 1230, 1312, 1314.

○ துன்பம், நெருக்கடி ஆகியவை நேரும்போது கூற வேண்டிய இறைத்துதி: 663, 688.




○ தூய்மை: 7, 59, 531, 572, 584, 718, 724, 950, 1091, 1092.



○ தொடர்ந்து சோதனைகளைச் சந்திப்போர் பாவமற்றோராய் பூமியில் நடமாடிக்கொண்டிருப்பர்: 1400, 1412, 1473, 1521.

○ தொடர்நோன்பு: 1133.

○ தொடைப் பகுதியை வெளிக்காட்டவும்


ந

நா

நி

நீ





















பா



பி



பு


பூ



பெ



பே



பை



பொ







மா



மி



மு




































வி












வை


ஞ


ஜ


ஜி



ஜு



ஷா



ஷி


ஷை


ஸ


ஸா


ஹா


ஹி



ஹு



முஸ்னது அஹ்மத்

நபிகளாரின் பொன்மொழிகள்

மூலம் - தமிழாக்கம் - அடிக்குறிப்புகள்


بسم الله الرحمن الرحيم

அபூபக்ர் அஸ்ஸித்தீக் (ரலி) அவர்களின் வரலாற்றுச் சுருக்கம்

அன்னாரின் இயற்பெயர் அப்துல்லாஹ். இஸ்லாத்திற்கு முன்பு இவர்களின் பெயர் 'அப்துல் கஅபா' என்று இருந்ததாகக் கூறப்படுகின்றது. நபி (ஸல்) அவர்களின் இளமைக் காலத் தோழரும், நபி (ஸல்) அவர்களைவிட இரண்டு அல்லது மூன்று வயது இளையவரும் ஆவார். நபியவர்களைப் போன்று, இவர்களும் குறைஷிக் குலத்தைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள். அபூபக்ர் (ரலி) அவர்களின் ஆறாவது பாட்டனார் முர்ரா ஆவார். (அபூபக்ர் பின் அபீ குஹாஃபா பின் ஆமிர் பின் அம்ர் பின் கஅபு பின் சஅது பின் தைம் பின் முர்ரா). இவரே நபியவர்களின் ஆறாவது பாட்டனார் ஆவார். (முஹம்மது பின் அப்துல்லாஹ் பின் அப்துல் முத்தலிபு பின் ஹாஷிம் பின் அப்து மனாஃப் பின் குஸை பின் கிலாபு பின் முர்ரா).

அபூபக்ர் அஸ்ஸித்தீக் (ரலி) அவர்களுடைய தந்தையின் இயற்பெயர் உஸ்மான் என்பதாகும். குறிப்பு பெயர் அபூகுஹாஃபா என்பதாகும். தாயாரின் பெயர், ஸல்மா பின்த் ஸக்ர் (உம்முல் கைர்). நபியவர்களின் தோழமையிலேயே இவரின் வாழ்க்கை தொடர்ந்தது. நபியவர்களை நன்கு புரிந்தவர்களாகவும் அன்னாரை எப்போதும் உண்மைப்படுத்துபவராகவும் இருந்தார்கள். நபியவர்களுக்கு வேத வசனங்கள் இறங்கி, அவர்கள் இறுதி நபி என்ற தகுதியைப் பெற்ற பின்னர் முதன்முதலாக இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட பெரியவர் அபூபக்ர் (ரலி) அவர்களே.

நபி (ஸல்) அவர்கள் 'மிஃராஜ்' எனும் விண்ணேற்றப் பயணம் மேற்கொண்டு திரும்பியதைக் கேள்விப்பட்டவுடன், அதனை உண்மைப்படுத்தியதால், 'ஸித்தீக்' (மிகவும் உண்மைப்படுத்துபவர்; பேருண்மையாளர்) என்ற பெயருக்குரியவரானார்கள். இயல்பாகவே இரக்க குணம் உடையவராக இருந்த அபூபக்ர் (ரலி) அவர்கள், நலிந்தோருக்கு உதவுபவராகவும், அடிமைகளை அவர்களின் அடிமைத் தளையிலிருந்து விடுவிப்பவராகவும் இருந்தார்கள். இதனால்தான் அவர்களுக்கு, 'அத்தீக்' (அடிமைத்தளையை அகற்றுபவர்) என்ற சிறப்புப் பெயரும் உண்டு.

இச்சமுதாயத்தில், நபி (ஸல்) அவர்களுக்குப் பின் மிகச் சிறந்தவர், அபூபக்ர் (ரலி) அவர்கள் ஆவார்கள். உஸ்மான், தல்ஹா, ஸுபைர், சஅது, அப்துர்ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) போன்றோர் அபூபக்ர் (ரலி) அவர்கள் மூலமே இஸ்லாத்தை தழுவினார் என்பது குறிப்பிடத் தக்கது.

நபி (ஸல்) அவர்கள் இரகசியமாக மக்காவிலிருந்து மதீனாவுக்கு புலம்பெயர்ந்து சென்ற 'ஹிஜ்ரத்' பயணத்தின்போது, நபி (ஸல்) அவர்களுக்குத் துணைநின்ற தோழர் அபூபக்ர் (ரலி) அவர்களே ஆவார்கள். அப்பயணத்தில் 'ஸவ்ர்' குகைக்குள் இருவரும் ஒளிந்திருந்த சம்பவத்தை இறைவனே தனது குர்ஆனில் (9:40) பேசுகிறான்.

அபூபக்ர் (ரலி) அவர்கள் பத்ர், உஹுத், அகழ்ப் போர், தபூக் முதலான போர்களில் நபியவர்களுடன் இணைந்து போரிட்டுள்ளார்கள். வரலாறு முக்கியத்துவம் கொண்ட 'ஹுதைபிய்யா' உடன்படிக்கை போன்ற நிகழ்வுகளிலும் முக்கியப் பங்கு வகித்துள்ளார்கள். நபியவர்கள், 'சொர்க்கத்திற்குரியோர்' என்று நற்செய்தி கூறிய பத்து குறைஷியருள் முதலாமவர் அபூபக்ர் அஸ்ஸித்தீக் (ரலி) அவர்களே ஆவார்கள்.

தாம் மட்டுமன்றி, தம் பெற்றோர், தாம் பெற்றெடுத்த பிள்ளைகள் அனைவரையும் இஸ்லாத்தில் ஒன்றிணைத்துப் பெருமை பெற்றவர் அபூபக்ர் (ரலி). அத்துடன், தம் அருமை மகள் ஆயிஷா (ரலி) அவர்களை நபி (ஸல்) அவர்களுக்கு மணமுடித்துக் கொடுத்ததன் மூலம், நபியின் மாமனார் என்ற தகுதியையும் பெற்றார்கள்.

"அபூபக்ரின் மீது அல்லாஹ் அருள்புரிவானாக! அவர் தம் மகளை எனக்கு மணம் செய்து வைத்தார். 'தாருல் ஹிஜ்ரா' (என்ற மதீனா)வின் பக்கம் என்னை வழி நடத்திச் சென்றார். மேலும், தனது பொருளைக் கொண்டு (அடிமை) பிலாலை விடுவித்தார்" என்று நபிகள் பெருமானார் அபூபக்ர் (ரலி) அவர்களைப் பற்றிப் புகழ்ந்துரைத்துள்ளார்கள்.

நபி (ஸல்) அவர்களின் இறப்புக்குப் பின்னர், இஸ்லாமிய உலகின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றார்கள். அப்பொறுப்பில் 2 ஆண்டுகளும் மூன்று மாதங்களும் பத்து நாட்களும் இருந்து அசைவுறாத ஆட்சியை நடத்திக் காட்டினார்கள். இக்கால கட்டத்தில் 'ஸகாத்' மறுப்பாளர்களை ஒடுக்கினார்கள். போலி நபி முஸைலிமாவை அழித்தார்கள். நபியின் இறப்புக்குப் பின் மதமாறிய சந்தர்ப்பவாதிகளோடு போரிட்டு மார்க்கத்தைக் காத்தார்கள். அன்னாரின் ஆட்சியில் அரேபிய தீபகற்பத்துக்கு வெளியிலும் இஸ்லாம் பரவியது. இராக், சிரியா ஆகிய நாடுகள் வெற்றி கொள்ளப்பட்டன.

ஹிஜ்ரீ 13ஆம் ஆண்டு, ஜுமாதல் ஊலா மாதம் தமது 63ஆவது வயதில் இறப்பெய்தி, நபி (ஸல்) அவர்களின் மண்ணறை அருகில் அடக்கம் செய்யப்பட்டார்கள்.

சான்றேடுகள்:

- ஃபத்ஹுல் பாரி,
- உம்தத்துல் காரி,
- உஸ்துல் ஃகாபா,
- அல்காமில் ஃபித்தாரீக்,
- தஃப்ஸீர் இப்னு கஸீர்,
- உஸ்துல் ஃகாபா.



அளவிலா அருளாளன் நிகரிலா அன்புடையோன் அல்லாஹ்வின் திருப்பெயரால்.

முஸ்னது அஹ்மத்

١ - مُسْنَدُ الْعَشَرَةِ الْمُبَشَّرِينَ بِالْجَنَّةِ

அத்தியாயம் - 1

சொர்க்கவாசிகள் என நற்செய்தி கூறப்பெற்ற நபித்தோழர்கள் பதின்மர் வழியாக வந்துள்ள நபிமொழிகள்

(١) مُسْنَدُ أَبِي بَكْرٍ الصِّدِّيقِ رَضِيَ اللَّهُ عَنْهُ

١ حَدَّثَنَا عَبْدُ اللَّهِ بْنُ نُمَيْرٍ قَالَ أَخْبَرَنَا إِسْمَاعِيلُ يَعْنِي ابْنَ أَبِي خَالِدٍ عَنْ قَيْسٍ قَالَ: قَامَ أَبُو بَكْرٍ رَضِيَ اللَّهُ عَنْهُ فَحَمِدَ اللَّهَ وَأَثْنَى عَلَيْهِ ثُمَّ قَالَ: يَا أَيُّهَا النَّاسُ إِنَّكُمْ تَقْرَءُونَ هَذِهِ الْآيَةَ ﴿يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا عَلَيْكُمْ أَنْفُسَكُمْ لَا يَضُرُّكُمْ مَنْ ضَلَّ إِذَا اهْتَدَيْتُمْ﴾ وَإِنَّا سَمِعْنَا رَسُولَ اللَّهِ ﷺ يَقُولُ: إِنَّ النَّاسَ إِذَا رَأَوُا الْمُنْكَرَ فَلَمْ يُنْكِرُوهُ أَوْشَكَ أَنْ يَعُمَّهُمُ اللَّهُ بِعِقَابِهِ.

பாடம்: 1

அபூபக்ர் அஸ்ஸித்தீக் (ரலி) அவர்கள் அறிவித்த நபிமொழிகள்

1 *கைஸ் பின் அபீ ஹாஸிம் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:*

அபூபக்ர் (ரலி) அவர்கள் (மக்களிடையே) நின்று உரையாற்றினார்கள். அப்போது இறைவனைப் போற்றிப் புகழ்ந்துவிட்டு, "மக்களே! நீங்கள், 'இறைநம்பிக்கை கொண்டவர்களே! உங்களை நீங்கள் காத்துக்கொள்ளுங்கள். நீங்கள் நேர்வழியில் இருந்தால், மற்றவர்களின் வழிகேடு உங்களுக்கு எத்தீங்கும் செய்திடாது' எனும் இந்த (5:105ஆவது) இறைவசனத்தை ஓதுகின்றீர்கள். ஆனால், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், 'மக்கள் (தம் கண்ணெதிரே) தீமை நடைபெறுவதைக் கண்டும், அதை அவர்கள் தடுக்காமலிருந்தால், அல்லாஹ் பொதுவாக எல்லாரையும் சேர்த்துத் தண்டித்து விடலாம்' என்று கூறியதை நாங்கள் கேட்டுள்ளோம்" என்று குறிப்பிட்டார்கள்.[1]

---

1. நல்வழியில் நடந்து நம்மைக் காத்துக்கொண்டால் போதும்; மற்றவர்கள் எப்படிப்போனால் நமக்கென்ன என யாரும் இருக்கலாகாது என்பது இவ்வசனத்தின் அடிப்படைகளுள் ஒன்றாகும். 'இறைநம்பிக்கை கொண்டவர்களே! உங்களை நீங்கள் காத்துக்கொள்ளுங்கள். நீங்கள் நேர்வழியில் இருந்தால் மற்றவர்களின் வழிகேடு உங்களுக்கு எந்தத் தீங்கும் செய்திடாது' எனும் 5:105ஆவது வசனத்தை வெளிப்படையாகப் பார்த்தால் நாம் நம்மைக் காத்துக்கொண்டால் போதும் என்பதைப் போன்று பொருள் கொள்ளத் தோன்றும். அப்படி யாரேனும் இந்த வசனத்திற்குப் பொருள் கொண்டு நன்மையை மட்டும் எடுத்துரைத்து தீமையிலிருந்து தடுக்க வேண்டிய கடமையைச் செய்யாமல் இருந்துவிடுவார்களோ என அபூபக்ர் (ரலி) அவர்கள் அஞ்சினார்கள்.

எனவேதான், 'இந்த வசனத்திற்கு இவ்வாறு பொருள் கொண்டுவிட்டீர்கள்; அல்லாஹ்வின் ஆணைப்படி அவை கடமையாக்கியவற்றை நீங்கள் செய்யுங்கள். மக்களுக்கு நன்மையை எடுத்துச் சொல்லி தீமையிலிருந்து

٢ حدثنا وكيع قال حدثنا مسعر وسفيان عن عثمان بن المغيرة الثقفي عن علي بن ربيعة الوالبي عن أسماء بن الحكم الفزاري عن علي رضي الله عنه قال: كنت إذا سمعت من رسول الله حديثا نفعني الله بما شاء منه وإذا حدثني عنه غيري استحلفته فإذا حلف لي صدقته وإن أبا بكر رضي الله عنه حدثني وصدق أبو بكر أنه سمع النبي ﷺ قال: ما من رجل يذنب ذنبا فيتوضأ فيحسن الوضوء قال مسعر ويصلي وقال سفيان ثم يصلي ركعتين فيستغفر الله عز وجل إلا غفر له.

2 அலீ பின் அபீதாலிப் (ரலி) அவர்கள் கூறியதாவது:

நான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடமிருந்து (நேரடியாக) எதையேனும் செவியுற்றால், அதன் மூலம் அல்லாஹ் எனக்குப் பயனளிக்கக் கூடிய அளவுக்குப் பயனளிப்பான். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடமிருந்து வேறு யாரேனும் எனக்கு அறிவித்தால், அவரை நான் சத்தியம் செய்யச் சொல்வேன். அவர் சத்தியம் செய்தால் அதை உண்மை என நான் ஏற்பேன். அபூபக்ர் (ரலி) அவர்கள் என்னிடம் பின்வருமாறு அறிவித்தார்கள்: -அபூபக்ர் (ரலி) அவர்கள் உண்மையே உரைத்தார்கள்- "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், 'யாரேனும் ஒருவர் பாவமொன்றைச் செய்துவிட்டு, அங்கத் தூய்மை (உளூ) செய்து, அதையும் செம்மையாகச் செய்த பிறகு, இரண்டு 'ரக்அத்'கள் தொழுது, வல்லமையும் மாண்பும் உடைய அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கோரினால், அவரை அல்லாஹ் மன்னிக்காமல் இருப்பதில்லை' என்று சொன்னதாக அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறியதைக் கேட்டுள்ளேன்" என்றார்கள்.[2]

٣ حدثنا عمرو بن محمد أبو سعيد يعني العنقزي قال حدثنا إسرائيل عن أبي إسحاق عن البراء بن عازب قال: اشترى أبو بكر من عازب سرجا بثلاثة عشر درهما قال فقال أبو بكر لعازب: مر البراء

3 பராஉ பின் ஆஸிப் (ரலி) அவர்கள் கூறியதாவது:

அபூபக்ர் (ரலி) அவர்கள், (என் தந்தை) ஆஸிப் (ரலி) அவர்களிடம் பதின்மூன்று

---

¹அவர்களைத் தடுப்பவர் இருந்தும் [illegible] நடந்து மற்றவர்களுக்கும் அதை எடுத்துக் கூறுவோர் [illegible] இருந்துவிடுகின்றனர் [illegible] நாள் நடைபெறுவதைக் கண்டும் அதைத் தடுக்காமலிருந்தால், அல்லாஹ் பொதுவாக எல்லாரையுமே வேதனையில் தண்டித்து விடலாம் என்று நபியவர்கள் கூறியுள்ளார்கள் என அறிவிக்கின்றார்கள் (பார்க்க: அறிவிப்பு) மேலும் காண்க: முஸ்னது அஹ்மத் ஹதீஸ் எண்கள் - 16, 29, 30, 50 இந்த ஹதீஸ் ஜாமிஉத் திர்மிதீ (2094, 2983), அபூதாவூத் (3775), இப்னுமாஜா (3995), முஸ்னது அபீயஅலா (131), முஸ்னதுல் பஸ்ஸார் (65) ஸஹீஹ் இப்னு ஹிப்பான் (304) உள்ளிட்ட நூல்களிலும் பதிவாகியுள்ளது.

2. ஜாமிஉத் திர்மிதீயின் அறிவிப்பில் "அபூபக்ர் (ரலி) அல்லாத வேறு நபித்தோழர் எவரேனும் ஒரு ஹதீஸை அறிவித்தால் அவரை நான் சத்தியம் செய்யச் சொல்வேன். அவர் சத்தியம் செய்துவிட்டால் அதை உண்மை என நான் ஏற்பேன்" என்று அலீ (ரலி) அவர்கள் கூறியதாக இடம் பெற்றுள்ளது. இதிலிருந்து நம்பத் தகுந்த தனிநபர் தரும் தகவல் [illegible] ஏற்கத் தகுந்ததன்று எனும் முடிவுக்கு வந்துவிடக் கூடாது. நம்பத் தகுந்த தனிநபர் அறிவிப்பும் ஏற்கத் தக்கதே.

எனினும் தனிநபர் சத்தியமிட்டுச் சொல்லும்போது அந்தத் தகவலில் கூடுதலான நம்பிக்கை பிறக்கிறது என்ற கருத்திலேயே அலீ (ரலி) அவர்கள் அவ்வாறு கூறினார்கள். 'அவர் சத்தியம் செய்துவிட்டால் அதை நான் உண்மை என ஏற்பேன்' என்பதற்கு 'முழுமையான உறுதியுடன் அதை நான் ஏற்பேன்' என்றே பொருள். சத்தியம் செய்யாவிட்டால் நம்பத் தகுந்தவர் கூறினாலும் அதை நிராகரித்துவிடுவேன் என்று பொருளன்று. (பார்க்க: அறிவிப்பு) இந்த ஹதீஸிலிருந்து அபூபக்ர் (ரலி) அவர்களின் நம்பகத் தன்மை, உளூவை செம்மையாகச் செய்வதன் சிறப்பு, உளூ மற்றும் தொழுகை மூலம் சிறு பாவங்கள் மன்னிக்கப்படும் செய்தி, பாவமன்னிப்புக் கோருவதன் சிறப்பு, அல்லாஹ்வின் தனிப் பெருங்கருணை, மன்னிக்கும் குணம் உள்ளிட்ட பல செய்திகள் தெளிவுபடுத்தப்படுகின்றன. மேலும் காண்க: முஸ்னது அஹ்மத் ஹதீஸ் எண்கள் - 46, 53. ஜாமிஉத் திர்மிதீ (371, 2932), அபூதாவூத் (1300), இப்னுமாஜா (1385) இந்த ஹதீஸ் முஸ்னது அபீயஅலா (13), முஸன்னஃப் இப்னு அபீஷைபா (7724), முஸ்னதுல் ஹுமைதீ (1), முஸ்னதுல் பஸ்ஸார் (8)-

திர்ஹங்கள் (வெள்ளிக் காசுகள்) கொடுத்து ஒட்டகச் சேணம் ஒன்றை விலைக்கு வாங்கினார்கள். அப்போது அபூபக்ர் (ரலி) அவர்கள் (என் தந்தை) ஆஸிப் (ரலி) அவர்களிடம், "(உம்முடைய புதல்வர்) பராஉக்குக் கட்டளையிடுங்கள். அவர் இந்தச் சேணத்தை எனது வீடு வரை சுமந்து வரட்டும்" என்று சொன்னார்கள்.

அதற்கு ஆஸிப் (ரலி) அவர்கள், "முடியாது; அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் மதீனாவுக்குப் புலம்பெயர்ந்து (ஹிஜ்ரத்) சென்றபோது, அவர்களுடன் நீங்களும் இருந்தீர்கள். அப்போது நீங்கள் எப்படி நடந்து கொண்டீர்கள் என்பதைப் பற்றி எங்களிடம் நீங்கள் கூறாதவரை, (இதைச் சுமந்து வருமாறு பராஉவுக்குக் கட்டளையிடமாட்டேன்!" என்று கூறிவிட்டார்கள்.

அப்போது அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்:

நாங்கள் இரவின் தொடக்கத்தில் (மக்காவை விட்டு மதீனாவை நோக்கிப்) புறப்பட்டோம். ஒரு பகல் ஓர் இரவு விரைவாகப் பயணம் செய்து, நண்பகல் நேரத்தை அடைந்தோம். உச்சிப் பொழுதின் வெயில் கடுமையாக அடிக்கலாயிற்று. நாங்கள் ஒதுங்குவதற்கு நிழல் ஏதும் தென்படுகிறதா? என்று நான் நோட்டமிட்டேன். அங்கு பாறை ஒன்றைக் கண்டேன். அந்தப் பாறையை நோக்கி நான் சென்றேன். அங்குப் பாறையின் நிழல் இருந்தது.

فليحمله إلى منزلي فقال لا حتى تحدثنا كيف
صنعت حين خرج رسول الله ﷺ وأنت معه قال
فقال أبو بكر خرجنا فأدلجنا فأحثثنا يومنا وليلتنا
حتى أظهرنا وقام قائم الظهيرة فضربت ببصري
هل أرى ظلا نأوي إليه فإذا أنا بصخرة فأهويت
إليها فإذا بقية ظلها فسويته لرسول الله ﷺ وفرشت
له فروة وقلت اضطجع يا رسول الله فاضطجع ثم
خرجت أنظر هل أرى أحدا من الطلب فإذا أنا
براعي غنم فقلت لمن أنت يا غلام فقال لرجل من
قريش فسماه فعرفته فقلت هل في غنمك من لبن
قال نعم قال قلت هل أنت حالب لي قال نعم قال
فأمرته فاعتقل شاة منها ثم أمرته فنفض ضرعها من
الغبار ثم أمرته فنفض كفيه من الغبار ومعي إداوة
على فمها خرقة فحلب لي كثبة من اللبن فصببت

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுக்காக அ(ந்த இட)த்தைச் சரி செய்து, அவர்களுக்காகத் தோல் விரிப்பொன்றை அந்த இடத்தில் விரித்து, "அல்லாஹ்வின் தூதரே! படுத்துக்கொள்ளுங்கள்" என்றேன். அவர்கள் படுத்துக்கொண்டார்கள்.

பிறகு நான் எங்களைத் தேடிக்கொண்டு யாரேனும் வந்திருக்கிறார்களா என்று பார்ப்பதற்காகப் புறப்பட்டேன். அப்போது ஆடு மேய்ப்பவன் ஒருவனைக் கண்டேன். அவனிடம் நான், "இளைஞரே! நீ யாருடைய பணியாள்?" என்று கேட்டேன். அவன், "நான் இன்ன குறைஷி மனிதருடைய பணியாள்" என்று கூறி, அவருடைய பெயரைக் குறிப்பிட்டான். அவர் இன்னாரெனப் புரிந்துகொண்டேன். அவனிடம் நான், "உன் ஆடுகளில் பால் இருக்குமா?" என்று கேட்டேன். அவன், "ஆம்" (இருக்கிறது) என்றான். "எனக்குப் பால் கறந்து தருவாயா?" என்று கேட்டேன். அவன் "ஆம்" (கறந்து தருகிறேன்) என்றான்.

அவற்றிலிருந்து ஓர் ஆட்டைப் பிடிக்கும்படி கூறினேன். அவ்வாறே அவன் பிடித்தான். பின்னர் அதன் மடியில் படிந்திருந்த புழுதியைச் சுத்தம் செய்யச் சொன்னேன். அவன் சுத்தம் செய்தான். பிறகு அவனுடைய கைகளை உதறிச் சுத்தம் செய்யச் சொன்னேன். அவ்வாறே அவன் செய்தான். என்னிடம் ஒரு தண்ணீர்ப் பை இருந்தது. அதன் வாய்ப் பகுதி ஒரு துண்டுத் துணியால் மூடப்பட்டிருந்தது.

அவன் (ஒரு குவளையில்) எனக்காகச் சிறிது பாலைக் கறந்து தந்தான். நான்

[illegible]

يَصُبُّ الْمَاءَ عَلَى الْقَدَحِ حَتَّى بَرَدَ أَسْفَلُهُ ثُمَّ أَتَيْتُ
رَسُولَ اللَّهِ ﷺ فَوَافَيْتُهُ وَقَدِ اسْتَيْقَظَ فَقُلْتُ اشْرَبْ يَا
رَسُولَ اللَّهِ فَشَرِبَ حَتَّى رَضِيتُ ثُمَّ قُلْتُ هَلْ أَنَى
الرَّحِيلُ قَالَ فَارْتَحَلْنَا وَالْقَوْمُ يَطْلُبُونَا فَلَمْ يُدْرِكْنَا
أَحَدٌ مِنْهُمْ إِلاَّ سُرَاقَةُ بْنُ مَالِكِ بْنِ جُعْشُمٍ عَلَى فَرَسٍ
لَهُ فَقُلْتُ يَا رَسُولَ اللَّهِ هَذَا الطَّلَبُ قَدْ لَحِقَنَا فَقَالَ
لاَ تَحْزَنْ إِنَّ اللَّهَ مَعَنَا حَتَّى إِذَا دَنَا مِنَّا فَكَانَ بَيْنَنَا
وَبَيْنَهُ قَدْرُ رُمْحٍ أَوْ رُمْحَيْنِ أَوْ ثَلاَثَةٍ قَالَ قُلْتُ يَا
رَسُولَ اللَّهِ هَذَا الطَّلَبُ قَدْ لَحِقَنَا وَبَكَيْتُ قَالَ لِمَ
تَبْكِي قَالَ قُلْتُ أَمَا وَاللَّهِ مَا عَلَى نَفْسِي أَبْكِي وَلَكِنْ
أَبْكِي عَلَيْكَ قَالَ فَدَعَا عَلَيْهِ رَسُولُ اللَّهِ ﷺ فَقَالَ
اللَّهُمَّ اكْفِنَاهُ بِمَا شِئْتَ فَسَاخَتْ قَوَائِمُ فَرَسِهِ إِلَى
بَطْنِهَا فِي أَرْضٍ صَلْدٍ وَوَثَبَ عَنْهَا وَقَالَ يَا مُحَمَّدُ
قَدْ عَلِمْتُ أَنَّ هَذَا عَمَلُكَ فَادْعُ اللَّهَ أَنْ يُنْجِيَنِي مِمَّا
أَنَا فِيهِ فَوَاللَّهِ لأُعَمِّيَنَّ عَلَى مَنْ وَرَائِي مِنَ الطَّلَبِ
وَهَذِهِ كِنَانَتِي فَخُذْ مِنْهَا سَهْمًا فَإِنَّكَ سَتَمُرُّ بِإِبِلِي
وَغَنَمِي فِي مَوْضِعِ كَذَا وَكَذَا فَخُذْ مِنْهَا حَاجَتَكَ

(அதிலிருந்த) தண்ணீரைப் பால் குவளையின் மீது அதன் அடிப்பகுதி குளிர்ந்துவிடும்வரை ஊற்றினேன். பின்னர் (அதை எடுத்துக்கொண்டு) அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் சென்றபோது, சரியாக அவர்களும் விழித்தெழுந்துவிட்டிருந்தார்கள். "அல்லாஹ்வின் தூதரே! பருகுங்கள்" என்றேன். நான் நிறைவடையும்வரை அவர்கள் பருகினார்கள்.

நான், "புறப்படும் நேரம் இன்னும் வரவில்லையா, அல்லாஹ்வின் தூதரே?" என்றேன். பிறகு நாங்கள் புறப்பட்டோம். பகைவர்களோ எங்களைத் தேடிக்கொண்டிருந்தனர். (அதுவரை இஸ்லாத்தைத் தழுவியிராத) சுராக்கா பின் மாலிக் பின் ஜுஅஷும் என்பவரைத் தவிர அ(ந்தப் பகை)வர்களுள் வேறெவரும் எங்களைக் காணவில்லை. சுராக்கா தமது குதிரையில் அமர்ந்தவாறு (எங்களைப் பின்தொடர்ந்து) வந்தார். நான், "அல்லாஹ்வின் தூதரே! இதோ நம்மைத் தேடுபவர்கள் (பகைவர்கள்) நம் அருகே வந்து விட்டார்கள்" என்று சொன்னேன்.

அப்போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "கவலைப்படாதீர்! அல்லாஹ் நம்முடன் இருக்கின்றான்" என்று கூறினார்கள். அவர் எங்களை நெருங்கி, அவருக்கும் எங்களுக்கும் இடையில் ஓர் ஈட்டி அல்லது இரண்டு ஈட்டிகள் அல்லது மூன்று ஈட்டிகள் அளவு தூரமே இருந்தது. அப்போது நான், "அல்லாஹ்வின் தூதரே! இதோ நம்மைத் தேடுபவர்கள் நம்மை நெருங்கி விட்டனர்" என்று கூறி அழுதேன். நபி (ஸல்) அவர்கள், "ஏன் அழுகிறீர்கள்?" என்று கேட்டார்கள். நான், "அல்லாஹ்வின் மீதாணையாக! நான் என் உயிரை அஞ்சி அழவில்லை. தங்களுக்காகவே (தங்களுக்கு ஏதேனும் நிகழ்ந்துவிடுமோ என்று எண்ணியே) அழுகிறேன்" என்று கூறினேன்

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "இறைவா! நீ விரும்பிய முறையில் அவனிடமிருந்து எங்களுக்குப் பாதுகாப்புக் கொடு!" என சுராக்காவிற்கு எதிராகப் பிரார்த்தித்தார்கள். உடனே அவரது குதிரையின் கால்கள் அதன் வயிற்றுப் பகுதிவரை கடுநிலத்தில் புதைந்தன. சுராக்கா கீழே குதித்தார்.

"முஹம்மதே! இது உமது செயல்தான் என நான் அறிவேன். நான் சிக்கியிருக்கும் இந்நிலையிலிருந்து என்னைக் காப்பாற்றுமாறு அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்வீராக! அல்லாஹ்வின் மீதாணையாக! எனக்குப் பின்னால் உம்மைத் தேடிக்கொண்டு வரும் ஆட்களிடம் உம்மைப் பற்றிய செய்தியைச் சொல்லமாட்டேன். இதோ என் அம்புக் கூடு. இதிலிருந்து அம்பை எடுத்துக்கொள்வீராக! எனக்குச் சொந்தமான ஒட்டகங்களும் ஆடுகளும் இன்ன இன்ன இடங்களில் உள்ளன. நீர் சென்று அவற்றுள் உமக்குத் தேவைப்படும் அளவுக்கு எடுத்துக்கொள்ளும்!" என்று கூறினார்.

"அது எனக்கு வேண்டியதில்லை" என்று கூறிய அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், சுராக்காவுக்காகப் பிரார்த்தனை செய்தார்கள். அவர் விடுவிக்கப்பட்டார். பிறகு அவர் தம்முடைய நண்பர்களிடமே திரும்பிச் சென்றுவிட்டார்.

பிறகு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அங்கிருந்து புறப்பட்டார்கள். நானும் அவர்களுடன் சென்றேன். மதீனாவை நாங்கள் அடைந்தோம். அவர்களை மக்கள் எதிர்கொண்டு சந்தித்தார்கள். பாதைகளிலும் மொட்டை மாடிகளிலும் மக்கள் திரண்டிருந்தார்கள். பணியாளர்களும் சிறுவர்களும், "அல்லாஹு அக்பர்! (இறைவன் மிகப் பெரியவன்) அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் வந்துவிட்டார்கள்! முஹம்மது (ஸல்) அவர்கள் வந்துவிட்டார்கள்!" என்று கூறியபடி ஓடிவந்தார்கள்.

தங்களிடம்தான் அவர்கள் தங்க வேண்டும் என மக்கள் போட்டி போட்டுக் கொண்டனர். அப்போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "நான் (என் பாட்டனார்) அப்துல் முத்தலிப் அவர்களின் மாமன்களான 'பனூ நஜ்ஜார்' குலத்தாரிடம் அவர்களை கண்ணியப்படுத்துவதற்காக இன்றிரவு தங்குகிறேன்" என்று கூறினார்கள். காலை நேரமானதும், இறைவன் கட்டளையிட்ட இடத்திற்குச் சென்றார்கள். (இவ்வாறு அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.)

قَالَ فَقَالَ رَسُولُ اللَّهِ ﷺ: لاَ حَاجَةَ لِي فِيهَا قَالَ
وَدَعَا لَهُ رَسُولُ اللَّهِ ﷺ فَأُطْلِقَ فَرَجَعَ إِلَى أَصْحَابِهِ
وَمَضَى رَسُولُ اللَّهِ ﷺ وَأَنَا مَعَهُ حَتَّى قَدِمْنَا الْمَدِينَةَ
فَتَلَقَّاهُ النَّاسُ فَخَرَجُوا فِي الطَّرِيقِ وَعَلَى الأَجَاجِيرِ
فَاشْتَدَّ الْخَدَمُ وَالصِّبْيَانُ فِي الطَّرِيقِ يَقُولُونَ اللَّهُ أَكْبَرُ
جَاءَ رَسُولُ اللَّهِ ﷺ جَاءَ مُحَمَّدٌ قَالَ وَتَنَازَعَ الْقَوْمُ
أَيُّهُمْ يَنْزِلُ عَلَيْهِ قَالَ فَقَالَ رَسُولُ اللَّهِ ﷺ أَنْزِلُ اللَّيْلَةَ
عَلَى بَنِي النَّجَّارِ أَخْوَالِ عَبْدِ الْمُطَّلِبِ لأُكْرِمَهُمْ بِذَلِكَ
فَلَمَّا أَصْبَحَ غَدَا حَيْثُ أُمِرَ قَالَ الْبَرَاءُ بْنُ عَازِبٍ أَوَّلُ
مَنْ كَانَ قَدِمَ عَلَيْنَا مِنَ الْمُهَاجِرِينَ مُصْعَبُ بْنُ عُمَيْرٍ
أَخُو بَنِي عَبْدِ الدَّارِ ثُمَّ قَدِمَ عَلَيْنَا ابْنُ أُمِّ مَكْتُومٍ
الأَعْمَى أَخُو بَنِي فِهْرٍ ثُمَّ قَدِمَ عَلَيْنَا عُمَرُ بْنُ الْخَطَّابِ
فِي عِشْرِينَ رَاكِبًا فَقُلْنَا مَا فَعَلَ رَسُولُ اللَّهِ ﷺ فَقَالَ
هُوَ عَلَى أَثَرِي ثُمَّ قَدِمَ رَسُولُ اللَّهِ ﷺ وَأَبُو بَكْرٍ مَعَهُ
قَالَ الْبَرَاءُ وَلَمْ يَقْدَمْ رَسُولُ اللَّهِ ﷺ حَتَّى حَفِظْتُ

தொடர்ந்து பராஉ பின் ஆஸிப் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

புலம்பெயர்ந்து (மதீனாவுக்கு) வந்தோருள் எங்களிடம் முதலாமவராக வந்தவர், பனூ அப்தித் தார் குலத்தவரான முஸ்அப் பின் உமைர் (ரலி) அவர்கள் ஆவார்கள். அடுத்து எங்களிடம் வந்தவர், பனூ ஃபிஹ்ர் குலத்தவரும், கண் தெரியாதவருமான இப்னு உம்மி மக்தூம் (ரலி) அவர்கள் ஆவார்கள். பின்பு எங்களிடம் இருபது பேர் கொண்ட பயணக் குழுவினருடன் வந்தவர் உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள். (இவர்களுக்குப் பிறகே அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் வந்தார்கள்.)

அப்போது நாங்கள், "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் என்ன ஆனார்கள்?" என்று கேட்டோம். "இதோ, அவர்கள் எனக்குப் பின்னால் வந்துகொண்டிருக்கிறார்கள்" என்று (உமர்) மறுமொழி கூறினார்கள். பின்னர் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் தம்முடன் அபூபக்ர் (ரலி) அவர்கள் இருக்க, எங்களிடம் வந்தார்கள். குர்ஆனின் 'அல்முஃபஸ்ஸல்'[3] எனும் நடுத்தர அத்தியாயங்களுள் (49-114) சிலவற்றை

3. 'அல்முஃபஸ்ஸல்' என்பது திருக்குர்ஆனின் 49ஆவது அத்தியாயமான அல்ஹுஜுராத் முதல் இறுதிவரையுள்ள அத்தியாயங்களைக் குறிக்கும். அறிஞர்களுள் சிலர், 'காஃப்' எனும் 50ஆவது அத்தியாயத்திலிருந்து இறுதி அத்தியாயமான 114வரை என்று கூறுகின்றனர். இந்த ஹதீஸ், புகாரீ (3615, 3652, [illegible]) முஸ்லிம் (5737) ஆகிய நூல்களிலும் பதிவாகியுள்ளது. [illegible]

سُوَرًا مِنَ الْمُفَصَّلِ.

قَالَ إِسْرَائِيلُ: وَكَانَ الْبَرَاءُ مِنَ الْأَنْصَارِ مِنْ بَنِي حَارِثَةَ.

4 حَدَّثَنَا وَكِيعٌ قَالَ قَالَ إِسْرَائِيلُ قَالَ أَبُو إِسْحَاقَ عَنْ زَيْدِ بْنِ يُثَيْعٍ عَنْ أَبِي بَكْرٍ أَنَّ النَّبِيَّ ﷺ بَعَثَهُ بِبَرَاءَةَ لِأَهْلِ مَكَّةَ لَا يَحُجُّ بَعْدَ الْعَامِ مُشْرِكٌ وَلَا يَطُوفُ بِالْبَيْتِ عُرْيَانٌ وَلَا يَدْخُلُ الْجَنَّةَ إِلَّا نَفْسٌ مُسْلِمَةٌ مَنْ كَانَ بَيْنَهُ وَبَيْنَ رَسُولِ اللَّهِ ﷺ مُدَّةٌ فَأَجَلُهُ إِلَى مُدَّتِهِ وَاللَّهُ بَرِيءٌ مِنَ الْمُشْرِكِينَ وَرَسُولُهُ قَالَ فَسَارَ بِهَا ثَلَاثًا ثُمَّ قَالَ لِعَلِيٍّ رَضِيَ اللَّهُ تَعَالَى عَنْهُ الْحَقْهُ فَرُدَّ عَلَيَّ أَبَا بَكْرٍ وَبَلِّغْهَا أَنْتَ قَالَ فَفَعَلَ قَالَ فَلَمَّا قَدِمَ عَلَى النَّبِيِّ ﷺ أَبُو بَكْرٍ بَكَى قَالَ يَا رَسُولَ اللَّهِ حَدَثَ فِيَّ شَيْءٌ قَالَ مَا حَدَثَ فِيكَ إِلَّا خَيْرٌ وَلَكِنْ أُمِرْتُ أَنْ لَا يُبَلِّغَهُ إِلَّا أَنَا أَوْ رَجُلٌ مِنِّي.

நான் மனனமிடும்வரை, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் மதீனாவுக்கு வரவில்லை

இந்த ஹதீஸின் நான்காவது அறிவிப்பாளரான இஸ்ராயீல் பின் யூனுஸ் (ரஹ்) அவர்கள், "பராஉ (ரலி) அவர்கள் பனூ ஹாரிஸா குலத்தைச் சேர்ந்த அன்சாரிகளுள் ஒருவராக இருந்தார்கள்" என்று குறிப்பிட்டார்கள்.

4 அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறியதாவது:

(குர்ஆனின் 9:28வது வசனம் அருளப் பெற்றபோது,) '(அல்லாஹ்வும் அவனுடைய தூதரும்) பொறுப்பிலிருந்து விலகிக்கொண்டனர்' என்று அறிவிப்பதற்கு என்னை நபி (ஸல்) அவர்கள் மக்காவாசிகளிடம் அனுப்பி வைத்தார்கள். "இந்த ஆண்டுக்குப் பிறகு இணை வைப்பாளர் எவரும் ஹஜ் செய்யக் கூடாது. (இறையில்லம்) கஅபாவை நிர்வாணமானவர் எவரும் சுற்றி (தவாஃப்) வரக் கூடாது. (ஒரே இறைவனை நம்பி, அவனுக்கு அடிபணிந்து வாழ்ந்த) முஸ்லிமைத் தவிர வேறெவரும் சொர்க்கத்திற்குள் நுழைய முடியாது. யாரேனும் ஒருவருக்கும் அல்லாஹ்வின் தூதருக்கும் இடையே (ஏற்கனவே ஏற்பட்ட) உடன்படிக்கை ஏதேனும் இருக்குமானால், அது அதற்குரிய தவணைவரைதான் நீடிக்கும். இணை வைப்போரைவிட்டு, அல்லாஹ்வும் அவன் தூதரும் பொறுப்பு விலகிக்கொண்டனர்" என்று அறிவிப்பதற்கும் அனுப்பிவைத்தார்கள். இந்தச் செய்தியுடன் நான் சென்ற மூன்றாவது நாள் நபி (ஸல்) அவர்கள் அலீ (ரலி) அவர்களிடம், "நீங்கள் அபூபக்ரைச் சென்றடைந்து, அவரை என்னிடம் திரும்பி வரும்படிக் கூறுங்கள். அந்தச் செய்திகளை மக்களிடம் நீங்கள் அறிவியுங்கள்" என்று கூறினார்கள். அலீ (ரலி) அவர்களும் அதே போன்று செய்தார்கள். நான் நபி (ஸல்) அவர்களிடம் வந்து, "அல்லாஹ்வின் தூதரே! என்னைப்பற்றி ஏதேனும் புதிய கட்டளை வந்துள்ளதா?" என்று அழுதுகொண்டே கேட்டேன்.

அதற்கு நபி (ஸல்), "உங்கள் சார்பாக, நல்ல கட்டளைதான் வந்துள்ளது. ஆயினும், (உங்களிடம் கூறி அனுப்பிய செய்தியை) நானோ, என்(குடும்பத்தி)னைச் சேர்ந்த வேறொருவரோதான் அறிவிக்க வேண்டும் என்று நான் கட்டளையிடப்பட்டுள்ளேன்" என்று கூறினார்கள்.[4]

இதை ஸைது பின் யுஸைஉ (ரஹ்) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

---

4. [illegible]

٥ حدثنا محمد بن جعفر قال حدثنا شعبة عن يزيد بن خمير عن سليم بن عامر عن أوسط قال: خطبنا أبو بكر ﷺ فقال: قام رسول الله ﷺ مقامي هذا عام الأول وبكى أبو بكر فقال أبو بكر سلوا الله المعافاة أو قال العافية فلم يؤت أحد قط بعد اليقين أفضل من العافية أو المعافاة عليكم بالصدق فإنه مع البر وهما في الجنة وإياكم والكذب فإنه مع الفجور وهما في النار ولا تحاسدوا ولا تباغضوا ولا تقاطعوا ولا تدابروا وكونوا إخوانا كما أمركم الله تعالى.

5 அவ்சத் (பின் இஸ்மாஈல் அல்பஜலீ-ரஹ்) அவர்கள் கூறியதாவது:

(ஒருநாள் கலீஃபா) அபூபக்ர் (ரலி) அவர்கள் எங்களுக்கு உரை நிகழ்த்தினார்கள். அப்போது அவர்கள், "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் (மதீனாவுக்கு வந்த) முதலாம் ஆண்டில் நான் நிற்கும் இதே இடத்தில் (இந்த சொற்பொழிவு மேடைமீது) நின்றார்கள்" என்று கூறிவிட்டு அழுதார்கள்!

பிறகு, "அல்லாஹ்விடம் பாவமன்னிப்பை அல்லது உடல்நலத்தைக் கேளுங்கள். ஒருவருக்கு உறுதி(யான இறை நம்பிக்கை)க்குப் பின், பாவமன்னிப்பை அல்லது உடல்நலத்தைவிட மிகச் சிறந்த வேறெதுவும் ஒருபோதும் கொடுக்கப்படுவதில்லை. உண்மை பேசுவதைக் கடைப்பிடியுங்கள். அது நன்மைக்கு வழி வகுக்கும். (உண்மை, நன்மை ஆகிய) அவ்விரண்டும் (அவற்றைக் கடைப்பிடிப்போரைச்) சொர்க்கத்தில் சேர்க்கும். பொய் பேச வேண்டாமென உங்களை நான் எச்சரிக்கிறேன். அது, தீமைகளுக்கு வழி வகுக்கும். (பொய், பாவம் ஆகிய) அவ்விரண்டும் (அவற்றைக் கடைப்பிடிப்போரை) நரகத்தில்தான் சேர்க்கும். நீங்கள் ஒருவருக்கொருவர் பொறாமை கொள்ளாதீர்கள். ஒருவரையொருவர் பகைத்துக் கொள்ளாதீர்கள். உறவை முறித்துக்கொள்ளாதீர்கள். பிணங்கிக்கொள்ளாதீர்கள். (மாறாக,) நீங்கள் அல்லாஹ் உங்களுக்குக் கட்டளையிட்டபடி, (அன்பு காட்டுவதில்) சகோதரர்களாய் இருங்கள்" என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறியதாகக் குறிப்பிட்டார்கள்.[8]

٦ حدثنا عبد الرحمن بن مهدي وأبو عامر قالا حدثنا زهير يعني ابن محمد عن عبد الله يعني ابن محمد بن عقيل عن معاذ بن رفاعة بن رافع

6 ரிஃபாஆ பின் ராஃபிஉ அல்அன்சாரீ (ரலி) அவர்கள் கூறியதாவது:

---

*குறிப்பிடுகிறார்கள். மேலும் இந்த ஹதீஸின் பல்வேறு அறிவிப்பாளர்தொடர்களையும் குறிப்பிட்டு அவை அனைத்துமே குறைபாடுகள் நிரம்பியவை, மறுக்கத் தக்கவை என்றும் குறிப்பிடுகிறார்கள்.

இந்த ஹதீஸின் இறுதிப் பகுதியாகிய "நானோ என் குடும்பத்தினரைச் சேர்ந்தவரோ தான் அறிவிக்க வேண்டும்" என்பது பற்றி எதைக்குறித்தும் இல்லாமல் இப்னு தைமிய்யா (ரஹ்) அவர்கள் 'மின்ஹாஜுஸ் ஸுன்னா' எனும் நூலில் "இது பொய்யான தகவல்" என்று கூறுகிறார்கள்.

நபி (ஸல்) அவர்கள் மதீனா நகர மக்களை இஸ்லாத்தின் பக்கம் அழைக்கவும், அவர்களுக்கு குர்ஆனைக் கற்றுக் கொடுக்கவும், மார்க்கக் கட்டளைகளைப் புரிய வைக்கவும் முஸ்அப் பின் உமைர் (ரலி) அவர்களை அனுப்பினார்கள். இதுபோன்ற காரணங்களுக்காக பஹ்ரைன் நாட்டிற்கு அல்அலா பின் அல்ஹள்ரமீ (ரலி) அவர்களையும், முஆத் பின் ஜபல் (ரலி), அபூமூஸா அல்அஷ்அரீ (ரலி) ஆகியோரை யமன் நாட்டிற்கும், அத்தாப் பின் அஸீத் (ரலி) அவர்களை மக்காவுக்கும் அனுப்பி வைத்தார்கள். இவர்கள் நபி (ஸல்) அவர்களின் குடும்பத்தாரைச் சாராதவர்கள் அல்லவா? எனும்போது மேற்கண்ட சொல் பொருத்தமற்றதாகிறது. எனவே இது தவறான தகவல் என்று தெளிவுபடுத்துகிறார்கள்.

8. இதே ஹதீஸ் இந்த நூலில் 6, 10, 17, 34, 37, 43, 45, 47, 63 ஆகிய ஹதீஸ்களாகவும் இடம்பெற்றுள்ளது. மேலும் திர்மிதீ (3481), இப்னுமாஜா (3830) ஆகிய நூல்களிலும் இமாம் புகாரீ (ரஹ்) அவர்களின் 'அல்அதபுல் முஃப்ரத்' எனும் நூலிலும் இமாம் நஸாயீ (ரஹ்) அவர்களின் 'அமலுல் யவ்மி வல்லைலா' எனும் நூலிலும் இடம்பெற்றுள்ளது.

அபூபக்ர் அஸ்ஸித்தீக் (ரலி) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுடைய சொற்பொழிவு மேடை (மிம்பர்) மீதிருந்தபடி, "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறியதைக் கேட்டேன்" என்று சொற்பொழிவைத் துவக்கினார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களைப் பற்றி நினைவு கூர்ந்ததும், அபூபக்ர் (ரலி) அவர்கள் அழுதார்கள்! பின்பு அமைதியானார்கள்.

பிறகு, "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் (மதீனாவுக்கு வந்த) முதலாம் ஆண்டில், இதே போன்ற ஒரு கோடைக் காலத்தில், "அல்லாஹ்விடம் இம்மை-மறுமை ஆகிய இரண்டிலும், மன்னிப்பையும் உடல் நலத்தையும் மன உறுதியையும் கேளுங்கள்' என்று கூறியதைக் கேட்டேன்" என்றார்கள்.

الأنصاريُّ عن أبيه رفاعة بن رافع قال سمعتُ أبا بكر الصدّيق رضيَ اللهُ عنهُ يقول على منبر رسول الله ﷺ سمعتُ رسولَ الله ﷺ يقول: فبكى أبو بكر حين ذكرَ رسولَ الله ﷺ ثمّ سُرِّيَ عنهُ ثمّ قال سمعتُ رسولَ الله ﷺ يقولُ في هذا القيظ عامَ الأوّل سَلُوا اللهَ العفوَ والعافيةَ واليقينَ في الآخرةِ والأولى.

7 அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

பல் துலக்குவது, வாயைத் தூய்மைப்படுத்தும்; இறைவனை மகிழ்வடையச் செய்யும்.[6]

இதை அபூபக்ர் அஸ்ஸித்தீக் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

٧ حدثنا أبو كامل قال حدّثنا حمّادٌ يعني ابنَ سلمةَ عن ابن أبي عتيق عن أبيه عن أبي بكر الصدّيق رضيَ اللهُ عنهُ أنَّ النبيَّ ﷺ قال: السّواكُ مطهرةٌ للفم مرضاةٌ للرّبّ .

8 அபூபக்ர் அஸ்ஸித்தீக் (ரலி) அவர்கள் கூறியதாவது:

٨ حدثنا هاشمُ بنُ القاسم قال حدّثنا اللّيثُ قال حدّثني يزيدُ بنُ أبي حبيب عن أبي الخير عن عبد الله بن عمرو عن أبي بكر الصدّيق أنّهُ قال لرسول الله ﷺ: علّمني دعاءً أدعو به في صلاتي قال: قل اللّهمّ إنّي ظلمتُ نفسي ظلمًا كثيرًا ولا يغفرُ الذنوبَ إلاّ أنتَ فاغفر لي مغفرةً من عندك وارحمني إنّك أنتَ الغفورُ الرّحيمُ.

நான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம், "எனது தொழுகையி(ன் இறுதி அமர்வி)ல் ஓதிக்கொள்ள ஒரு பிரார்த்தனையை எனக்குக் கற்றுத்தாருங்கள்" என்று கேட்டேன். அப்போது அவர்கள், 'அல்லாஹும்ம இன்னீ ழலம்த்து நஃப்ஸீ ழுல்மன் கஸீரன், வலா யஃக்ஃபிருத் துனூப இல்லா அன்த்த, ஃபஃக்ஃபிர்லீ மஃக்ஃபிரத்தம் மின் இன்திக்க வர்ஹம்னீ, இன்னக்க அன்த்தல் ஃகஃபூருர் ரஹீம்' எனப் பிரார்த்திப்பீராக" என்று கூறினார்கள்.

(பொருள்: இறைவா! எனக்கு நானே அதிகமாக அநீதியிழைத்துக்கொண்டேன்.

6. இதே ஹதீஸ், 59ஆவது ஹதீஸாகவும் இடம்பெறுகிறது. [illegible] அபூபக்ர் (ரலி) [illegible] 27 [illegible] (1051) [illegible] (1070), [illegible] (1371) [illegible]

உன்னைத் தவிர, பாவங்களை மன்னிப்பவர் வேறெவருமிலர். ஆகவே, எனக்கு உன்னிடமிருந்து மன்னிப்பை வழங்குவாயாக! எனக்குக் கருணை புரிவாயாக! நீயே மிகவும் மன்னிப்பவன்; பெரிதும் கருணை புரிபவன்.)

யூனுஸ் பின் முஹம்மது பின் முஸ்லிம் அவர்கள் வழியாக வரும் அறிவிப்பில், '(அதிகமாக அநீதியிழைத்துக்கொண்டேன்' எனும் இடத்தில்), 'பெரிதும் அநீதியிழைத்துக் கொண்டேன்' (ளுல்மன் கபீரன்) என்று இடம்பெற்றுள்ளது. இப்னு லஹீஆ அவர்களிடமிருந்து ஹசன் பின் மூசா அவர்கள் வழியாக வரும் அறிவிப்பிலும், 'பெரிதும் அநீதியிழைத்துக் கொண்டேன்' என்றே இடம்பெற்றுள்ளது.[7]

وقَالَ يُونُسُ: كَبِيرًا. حَدَّثَنَاه حَسَنٌ الأَشْيَبُ عَنِ ابْنِ لَهِيعَةَ قَالَ قَالَ كَبِيرًا.

٩ حَدَّثَنَا عَبْدُ الرَّزَّاقِ قَالَ حَدَّثَنَا مَعْمَرٌ عَنِ الزُّهْرِيِّ عَنْ عُرْوَةَ عَنْ عَائِشَةَ رَضِيَ اللَّهُ عَنْهَا أَنَّ فَاطِمَةَ وَالْعَبَّاسَ أَتَيَا أَبَا بَكْرٍ رَضِيَ اللَّهُ عَنْهُ يَلْتَمِسَانِ مِيرَاثَهُمَا مِنْ رَسُولِ اللَّهِ ﷺ وَهُمَا حِينَئِذٍ يَطْلُبَانِ أَرْضَهُ مِنْ فَدَكَ وَسَهْمَهُ مِنْ خَيْبَرَ فَقَالَ لَهُمَا أَبُو بَكْرٍ إِنِّي سَمِعْتُ رَسُولَ اللَّهِ ﷺ يَقُولُ: لَا نُورَثُ مَا تَرَكْنَا صَدَقَةٌ إِنَّمَا يَأْكُلُ آلُ مُحَمَّدٍ فِي هَذَا الْمَالِ وَإِنِّي وَاللَّهِ لَا أَدَعُ أَمْرًا رَأَيْتُ رَسُولَ اللَّهِ ﷺ يَصْنَعُهُ فِيهِ إِلَّا صَنَعْتُهُ.

9 ஆயிஷா (ரலி) அவர்கள் கூறியதாவது:

(அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் இறப்புக்குப் பின், அவர்களுடைய புதல்வி) ஃபாத்திமா (ரலி) அவர்களும், (பெரிய தந்தை) அப்பாஸ் (ரலி) அவர்களும் 'ஃபதக்' எனுமிடத்திலிருந்த அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் நிலத்தையும் 'கைபர்' எனுமிடத்திலிருந்த குமுஸ் (ஐந்தில் ஒரு பங்கு) நிதியில் கிடைத்த அவர்களின் போர்ப் பங்கையும் தங்களது வாரிசுச் சொத்தாகக் கோரியவர்களாக (கலீஃபா) அபூபக்ர் அஸ்ஸித்தீக் (ரலி) அவர்களிடம் வந்தனர்.[8]

அப்போது அபூபக்ர் (ரலி) அவர்கள், '(நபிமார்களான) எங்களுக்கு (எங்களுடைய சொத்தில்) எவரும் வாரிசாக ஆகமாட்டார்கள். நாங்கள் விட்டுச் செல்பவையெல்லாம் தர்மம் ஆகும். இந்தச் செல்வத்திலிருந்தே முஹம்மதின் குடும்பத்தார் (செலவுத் தொகை பெற்று) உண்பார்கள்' என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறியதை நான் கேட்டுள்ளேன்" என்று கூறிவிட்டு, "அல்லாஹ்வின் மீதாணையாக! அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் செய்யக் கண்ட எந்த ஒரு செயலையும் நான் செய்யாமல் விடமாட்டேன்" என்று கூறினார்கள்.[9]

---

7. இதே ஹதீஸ், முஸ்னது அஹ்மதில் 28ஆவது ஹதீஸாகவும் இடம்பெறுகிறது. மேலும், புகாரீ (834, 6326, 7388), முஸ்லிம் (5241), திர்மிதீ (3454), நஸாயீ (1285), இப்னுமாஜா (3825), இப்னு குஸைமா, இப்னு ஹிப்பான், பஸ்ஸார் ஆகிய நூல்களிலும் இந்த ஹதீஸ் இடம்பெற்றுள்ளது.

8. 'ஃபதக்' என்பது கைபர் அருகிலுள்ள இடமாகும். 'கைபர்' என்பது மதீனாவிலிருந்து சிரியா செல்லும் வழியில் உள்ள பாலைவனச் சோலை போன்ற நகரமாகும். இவ்விரு இடங்களில் வசித்துவந்த யூதர்கள் நபி (ஸல்) அவர்களுடன் சமாதான உடன்படிக்கை செய்து தமது சொத்துகளைக் கொடுத்துவிட்டனர். அந்தச் சொத்துகளை தமக்கு வாரிசுச் சொத்தாக வழங்கவேண்டும் என்று ஃபாத்திமா (ரலி) அவர்களும் அப்பாஸ் (ரலி) அவர்களும் உரிமை கோரினர்.

9. இது தொடர்பான ஹதீஸ் முஸ்னது அஹ்மதில் 14, 25, 52, 55, 74, 166, 315, 318, 330, 399, 1319, 1468, 23872, 25050 ஆகிய எண்களிலும் இடம்பெற்றுள்ளது. மேலும் காண்க: ஸஹீஹுல் புகாரீ தமிழாக்கம் ஹதீஸ் எண்கள் - 3092, 3712, 4036, 4241, 6725, 6730; ஸஹீஹ் முஸ்லிம் தமிழாக்கம் ஹதீஸ் எண்கள் - 3612, 3614, 3615, 3616. மேலும் இந்த ஹதீஸ், ஸுனன் நஸாயீ (4071, 4072), ஸுனன் அபூதாவூத் (2574, 2578, 2582), திர்மிதீ (1533, 1535, 1841), முஅத்தா மாலிக் (1577), பஸ்ஸார், இப்னு ஹிப்பான் ஆகிய நூல்களிலும் இடம்பெற்றுள்ளது.

10 அபூஹுரைரா (ரலி) அவர்கள் கூறியதாவது:

அபூபக்ர் அஸ்ஸித்தீக் (ரலி) அவர்கள் (மஸ்ஜிதுந்நபவீ பள்ளிவாசலிலுள்ள) இந்தச் சொற்பொழிவு மேடை (மிம்பர்) மீதிருந்தவாறு, "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் (மதீனாவுக்கு வந்த) முதலாம் ஆண்டின் முதல் நாளில் கூறியதைக் கேட்டேன்" என்று கூறிவிட்டு, (அல்லாஹ்வின் தூதரை நினைவு கூர்ந்ததும்) தம்மைக் கட்டுப்படுத்த முடியாமல் சப்தமிட்டு அழலானார்கள்!

பிறகு, "(லா இலாஹ இல்லல்லாஹ் எனும்) இந்த ஏகத்துவ உறுதிமொழிக்குப் பின், உடல் நலத்தைப் போன்ற வேறு (சிறந்த அருட்கொடை) எதுவும் நீங்கள் வழங்கப்பட்டதில்லை. எனவே, நீங்கள் அல்லாஹ்விடம் உடல் நலத்தைக் கேளுங்கள்' என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறியதைக் கேட்டுள்ளேன்" என்றார்கள்.[10]

١٠ حدثنا أبو عبد الرحمن المقرئ قال حدثنا حيوة بن شريح قال سمعت عبد الملك بن الحارث يقول إن أبا هريرة قال سمعت أبا بكر الصديق رضي الله عنه على هذا المنبر يقول: سمعت رسول الله ﷺ في هذا اليوم من عام الأول ثم استعبر أبو بكر وبكى ثم قال: سمعت رسول الله ﷺ يقول: لم تؤتوا شيئا بعد كلمة الإخلاص مثل العافية فاسألوا الله العافية.

١١ حدثنا عفان قال حدثنا همام قال أخبرنا ثابت عن أنس أن أبا بكر حدثه قال: قلت للنبي ﷺ وهو في الغار وقال مرة ونحن في الغار لو أن أحدهم نظر إلى قدميه لأبصرنا تحت قدميه قال فقال: يا أبا بكر ما ظنك باثنين الله ثالثهما.

11 அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறியதாவது:

(ஹிஜ்ரத் பயணத்தில்) நாங்கள் அந்த (ஸவ்ர்) குகையில் இருந்தபோது, நான் நபி (ஸல்) அவர்களிடம், "(குகைக்கு மேலிருந்து நம்மைத் தேடிக்கொண்டிருக்கும்) இவர்களில் யாரேனும் தம் பாதங்களுக்குக் கீழே (குனிந்து) பார்த்தால், நம்மைக் கண்டு பிடித்து விடுவார்கள்" என்று சொன்னேன்.

அதற்கு நபி (ஸல்) அவர்கள், "(நம்) இருவருடன் அல்லாஹ் மூன்றாமவனாக இருப்பதைப் பற்றி நீங்கள் என்ன கருதுகின்றீர்கள், அபூபக்ரே?" என்றார்கள்".[11]

மற்றொரு தடவை அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறுகையில், 'நாங்கள் குகையில் இருந்தபோது' எனும் இடத்தில், 'நபி (ஸல்) அவர்கள் (ஸவ்ர்) குகையில் இருந்தபோது' என்று (சிறு வேறுபாட்டுடன்) கூறினார்கள்.[12]

---

10. [illegible] - 5, 6, 10, 17, 34, 37, 43, 45, 47, 63, திர்மிதீ (3481) மற்றும் [illegible]

11. [illegible] 3 [illegible] 'ஸவ்ர்' குகையில் 3 நாட்கள் [illegible]

12. [illegible] (3652, 3653, 3922, 4663), முஸ்லிம் (4747) [illegible] திர்மிதீ (3021) [illegible]

12 அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

(மாபெரும் குழப்பவாதியான) தஜ்ஜால்,[13] (உலக முடிவு நாள் நெருக்கத்தில்) கிழக்குத் திசையிலுள்ள ஒரு பகுதியிலிருந்து புறப்படுவான். அது, 'குராசான்'[14] என்று கூறப்படும். அப்போது, (அவனுக்கு ஆதரவாக) அவனை ஒரு சமுதாயத்தார் பின்தொடர்வர். அவர்களுடைய முகங்கள் தோலால் மூடிய கேடயங்களைப் போன்று (அகலமாக) இருக்கும்.[15]

இதை அபூபக்ர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

١٢ حدثنا روح قال حدثنا ابن أبي عروبة عن أبي التياح عن المغيرة بن سبيع عن عمرو بن حريث عن أبي بكر الصديق قال: حدثنا رسول الله ﷺ أن الدجال يخرج من أرض بالمشرق يقال لها خراسان يتبعه أقوام كأن وجوههم المجان المطرقة.

13 அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

கஞ்சனும் மகா மோசடிப் பேர்வழியும் தன் அடிமைகளை மோசமாக நடத்துகின்ற உரிமையாளனும் சொர்க்கத்தில் நுழைய மாட்டார்கள். தம் இறைவனுக்குச் செய்ய வேண்டிய கடமைகளையும், தம் உரிமையாளருக்குச் செய்ய வேண்டிய கடமைகளையும் உரிய முறையில் நிறைவேற்றியிருந்தால், சொர்க்கத்தின் கதவை முதலில் தட்டுபவர்கள் அடிமைகளாகத்தான் இருப்பர்.[16]

இதை அபூபக்ர் அஸ்ஸித்தீக் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

١٣ حدثنا أبو سعيد مولى بني هاشم قال حدثنا صدقة بن موسى صاحب الدقيق عن فرقد عن مرة بن شراحيل عن أبي بكر الصديق رضي الله عنه قال قال رسول الله ﷺ: لا يدخل الجنة بخيل ولا خب ولا خائن ولا سيء الملكة وأول من يقرع باب الجنة المملوكون إذا أحسنوا فيما بينهم وبين الله عز وجل وفيما بينهم وبين مواليهم.

---

13. [illegible] 5638 [illegible] (anti christ) [illegible] - 7122 [illegible] 7134 [illegible] 5610 [illegible] 5648 [illegible]

14. [illegible]

15. [illegible] 33 [illegible] 2152 [illegible] 4082 [illegible] - 2163.

16. [illegible] 31 32 71 [illegible] 368 [illegible]

١٤ حدثنا عبد الله بن محمد بن أبي شيبة قال عبد الله وسمعته من عبد الله بن أبي شيبة قال حدثنا محمد بن فضيل عن الوليد بن جميع عن أبي الطفيل قال: لما قبض رسول الله ﷺ أرسلت فاطمة إلى أبي بكر أنت ورثت رسول الله ﷺ أم أهله قال فقال: لا بل أهله قالت فأين سهم رسول الله ﷺ؟ قال فقال أبو بكر إني سمعت رسول الله ﷺ يقول إن الله عز وجل إذا أطعم نبيا طعمة ثم قبضه جعله للذي يقوم من بعده فرأيت أن أرده على المسلمين فقالت فأنت وما سمعت من رسول الله ﷺ أعلم.

١٥ حدثنا إبراهيم بن إسحاق الطالقاني قال حدثني النضر بن شميل المازني قال حدثني أبو نعامة قال حدثني أبو هنيدة البراء بن نوفل عن والان العدوي عن حذيفة عن أبي بكر الصديق رضي الله عنه قال: أصبح رسول الله ﷺ ذات يوم فصلى الغداة ثم جلس حتى إذا كان من الضحى ضحك رسول الله ﷺ ثم جلس مكانه حتى صلى الأولى والعصر والمغرب كل ذلك لا يتكلم حتى صلى العشاء الآخرة ثم قام إلى أهله فقال الناس لأبي بكر ألا

14 அபுத்துஃபைல் (ஆமிர் பின் வாஸிலா -ரலி) அவர்கள் கூறியதாவது:

நபி (ஸல்) அவர்கள் இறந்ததும், (அவர்களுடைய புதல்வி) ஃபாத்திமா (ரலி) அவர்கள் (கலீஃபா) அபூபக்ர் (ரலி) அவர்களிடம் ஆளனுப்பி, "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் வாரிசு நீங்களா? அல்லது அவர்களின் குடும்பத்தாராகிய நாங்களா?" என்று கேட்டார்கள். அதற்கு அபூபக்ர் (ரலி) அவர்கள், "இல்லை; அவர்களின் குடும்பத்தார்தான் (வாரிசுகள்)" என்று கூறினார்கள். அப்போது ஃபாத்திமா (ரலி) அவர்கள், "அப்படியானால், அல்லாஹ்வின் தூதர் (விட்டுச் சென்ற ஃபதக் மற்றும் கைபர் சொத்துகளில்) அவர்களின் பங்கு எங்கே?" என்று கேட்டார்கள்.

உடனே அபூபக்ர் (ரலி) அவர்கள், "அல்லாஹ், நபி ஒருவருக்கு (சொத்து) ஒன்றை உணவு(வகை)க்காகத் தந்திருந்து, பிறகு அவரை அவன் இறக்கச் செய்துவிட்டால், (அந்த நபி செலவழித்த வகைகளில், செலவழிப்பதற்காக) அதை அவருக்குப் பின் (ஆட்சிப்) பொறுப்பேற்பவரிடம் அல்லாஹ் வழங்குகிறான்' என அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறியதை நான் கேட்டுள்ளேன். நான் அதை முஸ்லிம் பொதுமக்களிடம் (அவர்களது பொறுப்பிலேயே) ஒப்படைக்க விரும்புகிறேன்" என்று கூறினார்கள். அதற்கு ஃபாத்திமா (ரலி) அவர்கள், "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் நீங்கள் கேட்டதை நீங்களே மிகவும் அறிந்தவர்" என்று கூறினார்கள்.[17]

15 அபூபக்ர் அஸ்ஸித்தீக் (ரலி) அவர்கள் கூறியதாவது:

ஒருநாள் காலையில் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், 'சுப்ஹு'த் தொழுது விட்டுப் பிறகு (தொழுத இடத்திலேயே) அமர்ந்தார்கள். முற்பகல் (ளுஹா) நேரமான போது, அவர்கள் சிரித்தார்கள். பின்பு அதே இடத்திலேயே அமர்ந்திருந்து லுஹ்ர், அஸ்ர், மற்றும் மஃக்ரிப் ஆகிய தொழுகைகளை (அவற்றிற்குரிய நேரங்களில்) தொழுதார்கள். இடைப்பட்ட நேரத்தில் அவர்கள் பேசவே இல்லை.

இறுதியாக, இஷா தொழுதுவிட்டுத் தம் வீட்டாரிடம் சென்றார்கள். அப்போது மக்கள் என்னிடம், "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் நிலை என்ன? இதுவரை

17. இத் தொடரை [illegible] முஸ்னதில் 2, 25, 52, 55, 57, 75, 167, 318, 318, 330, 1312, 1332, 1408, 1520 ஆகிய எண்களிலும் [illegible] (2581) [illegible]

نَسْأَلُ رَسُولَ اللهِ ﷺ مَا شَأْنُهُ صَنَعَ الْيَوْمَ شَيْئًا لَمْ
يَصْنَعْهُ قَطُّ قَالَ فَسَأَلَهُ فَقَالَ نَعَمْ عُرِضَ عَلَيَّ مَا هُوَ
كَائِنٌ مِنْ أَمْرِ الدُّنْيَا وَأَمْرِ الْآخِرَةِ فَجُمِعَ الْأَوَّلُونَ
وَالْآخِرُونَ بِصَعِيدٍ وَاحِدٍ فَفَظِعَ النَّاسُ بِذَلِكَ حَتَّى
انْطَلَقُوا إِلَى آدَمَ عَلَيْهِ السَّلَام وَالْعَرَقُ يَكَادُ يُلْجِمُهُمْ
فَقَالُوا يَا آدَمُ أَنْتَ أَبُو الْبَشَرِ وَأَنْتَ اصْطَفَاكَ اللهُ عَزَّ
وَجَلَّ اشْفَعْ لَنَا إِلَى رَبِّكَ قَالَ: لَقَدْ لَقِيتُ مِثْلَ الَّذِي
لَقِيتُمْ انْطَلِقُوا إِلَى أَبِيكُمْ بَعْدَ أَبِيكُمْ إِلَى نُوحٍ ﴿إِنَّ
اللهَ اصْطَفَى آدَمَ وَنُوحًا وَآلَ إِبْرَاهِيمَ وَآلَ عِمْرَانَ
عَلَى الْعَالَمِينَ﴾ قَالَ فَيَنْطَلِقُونَ إِلَى نُوحٍ عَلَيْهِ السَّلَام
فَيَقُولُونَ اشْفَعْ لَنَا إِلَى رَبِّكَ فَأَنْتَ اصْطَفَاكَ اللهُ
وَاسْتَجَابَ لَكَ فِي دُعَائِكَ وَلَمْ يَدَعْ عَلَى الْأَرْضِ
مِنَ الْكَافِرِينَ دَيَّارًا فَيَقُولُ: لَيْسَ ذَاكُمْ عِنْدِي انْطَلِقُوا
إِلَى إِبْرَاهِيمَ عَلَيْهِ السَّلَام فَإِنَّ اللهَ عَزَّ وَجَلَّ اتَّخَذَهُ
خَلِيلًا فَيَنْطَلِقُونَ إِلَى إِبْرَاهِيمَ فَيَقُولُ: لَيْسَ ذَاكُمْ
عِنْدِي وَلَكِنْ انْطَلِقُوا إِلَى مُوسَى عَلَيْهِ السَّلَام فَإِنَّ

ஒருபோதும் அவர்கள் நடந்து கொள்ளாத விதத்தில் இன்று அவர்கள் நடந்து கொண்டார்களே? அதைப் பற்றி நீங்கள் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் கேட்கக் கூடாதா?'' என்றனர். அது போன்றே அவர்களிடம் நான் கேட்டேன் அப்போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "ஆம் (சொல்கிறேன்)" என்று கூறிவிட்டுப் பின்வருமாறு கூறினார்கள்:

''இவ்வுலகில் நடப்பவை, மறுமையில் நடக்க இருப்பவை அனைத்தும் எனக்கு எடுத்துக் காட்டப்பட்டன. (உலக) மக்களில் முன்னோர், பின்னோர் அனைவரும் ஒரே சமவெளியில் ஒன்று திரட்டப்பட்டனர். இதனால் மக்கள் திடுக்கிட்டு, (நிலைகுலைந்து செய்வதறியாது), ஆதம் (அலை) அவர்களிடம் சென்றனர். மக்களின் (உடலிலிருந்து சுரந்த) வியர்வையோ அவர்களை மூழ்கடிக்கும் அளவில் இருந்தது.

"ஆதம் அவர்களே! நீங்கள் மனித குலத்தின் தந்தை ஆவீர்கள். வல்லமையும் மாண்பும் உடைய அல்லாஹ் உங்களைத் தேர்ந்தெடுத்தான். (இந்தத் துன்ப நிலையிலிருந்து எங்களை விடுவிக்கும்படி) எங்களுக்காக உங்கள் இறைவனிடம் பரிந்துரை செய்யுங்கள்" என்று கூறினர்.

அதற்கு ஆதம் (அலை) அவர்கள், "நீங்கள் எந்த நிலையில் உள்ளீர்களோ, அதே நிலையில்தான் நானும் உள்ளேன். எனவே, நீங்கள் (எனக்குப் பின்) உங்களின் தந்தையான (நபி) நூஹிடம் செல்லுங்கள்" என்று கூறினார்கள்

(இவ்விருவரைப் பற்றி அல்லாஹ் கூறுகிறான்:) ஆதம், நூஹ், இப்ராஹீமின் குடும்பத்தார் ஆகியோரை (அந்தந்தக் காலத்தில் வாழ்ந்த) அகிலத்தாருள் அல்லாஹ் தேர்ந்தெடுத்தான் (குர்ஆன், 3:33)

அவ்வாறே மக்கள் நூஹ் (அலை) அவர்களிடம் சென்று, "(இந்தத் துன்ப நிலையிலிருந்து எங்களை விடுவிக்கும்படி) எங்களுக்காக உங்கள் இறைவனிடம் பரிந்துரை செய்யுங்கள். அல்லாஹ் உங்களைத் தேர்ந்தெடுத்தான். உங்களுடைய பிரார்த்தனையை ஏற்று, புவியில் இறைமறுப்பாளர் எவரையும் அவன் உயிருடன் விட்டுவைக்கவில்லை" என்று கூறினர்

உடனே நூஹ் (அலை) அவர்கள், "உங்களுக்கு உதவும் நிலையில் நான் இல்லை வல்லமையும் மாண்பும் உடைய அல்லாஹ், தனக்கு உற்ற நண்பராக்கிக் கொண்ட (நபி) இப்ராஹீமிடம் செல்லுங்கள்" என்று கூறினார்கள்.

உடனே மக்கள் இப்ராஹீம் (அலை) அவர்களிடம் சென்று பேச, அவர்களும், "உங்களுக்கு உதவும் நிலையில் நான் இல்லை" என்று கூறி, "வல்லமையும் மாண்பும் உடைய

اللهُ عَزَّ وَجَلَّ كَلَّمَهُ تَكْلِيمًا فَيَقُولُ مُوسَى عَلَيْهِ
السَّلَام: لَيْسَ ذَاكُمْ عِنْدِي وَلَكِنِ انْطَلِقُوا إِلَى عِيسَى
ابْنِ مَرْيَمَ فَإِنَّهُ يُبْرِئُ الْأَكْمَهَ وَالْأَبْرَصَ وَيُحْيِي الْمَوْتَى
فَيَقُولُ عِيسَى: لَيْسَ ذَاكُمْ عِنْدِي وَلَكِنِ انْطَلِقُوا إِلَى
سَيِّدِ وَلَدِ آدَمَ فَإِنَّهُ أَوَّلُ مَنْ تَنْشَقُّ عَنْهُ الْأَرْضُ يَوْمَ
الْقِيَامَةِ انْطَلِقُوا إِلَى مُحَمَّدٍ ﷺ فَيَشْفَعَ لَكُمْ إِلَى رَبِّكُمْ
عَزَّ وَجَلَّ قَالَ فَيَنْطَلِقُ فَيَأْتِي جِبْرِيلُ عَلَيْهِ السَّلَام رَبَّهُ
فَيَقُولُ اللهُ عَزَّ وَجَلَّ: ائْذَنْ لَهُ وَبَشِّرْهُ بِالْجَنَّةِ قَالَ
فَيَنْطَلِقُ بِهِ جِبْرِيلُ فَيَخِرُّ سَاجِدًا قَدْرَ جُمُعَةٍ وَيَقُولُ
اللهُ عَزَّ وَجَلَّ: ارْفَعْ رَأْسَكَ يَا مُحَمَّدُ وَقُلْ يُسْمَعْ
وَاشْفَعْ تُشَفَّعْ قَالَ فَيَرْفَعُ رَأْسَهُ فَإِذَا نَظَرَ إِلَى رَبِّهِ عَزَّ
وَجَلَّ خَرَّ سَاجِدًا قَدْرَ جُمُعَةٍ أُخْرَى فَيَقُولُ اللهُ عَزَّ
وَجَلَّ: ارْفَعْ رَأْسَكَ وَقُلْ يُسْمَعْ وَاشْفَعْ تُشَفَّعْ قَالَ
فَيَذْهَبُ لِيَقَعَ سَاجِدًا فَيَأْخُذُ جِبْرِيلُ عَلَيْهِ السَّلَام
بِضَبْعَيْهِ فَيَفْتَحُ اللهُ عَزَّ وَجَلَّ عَلَيْهِ مِنَ الدُّعَاءِ شَيْئًا لَمْ
يَفْتَحْهُ عَلَى بَشَرٍ قَطُّ فَيَقُولُ: أَيْ رَبِّ خَلَقْتَنِي سَيِّدَ
وَلَدِ آدَمَ وَلَا فَخْرَ وَأَوَّلَ مَنْ تَنْشَقُّ عَنْهُ الْأَرْضُ يَوْمَ

அல்லாஹ் உரையாடிய (நபி) மூசாவிடம் செல்லுங்கள்" என்று கூறிவிட்டார்கள்.

(அவ்வாறே மக்கள் சென்றபோது) மூசா (அலை) அவர்களும், "உங்களுக்கு உதவும் நிலையில் நான் இல்லை" என்று கூறி, "நீங்கள் மர்யமின் மைந்தர் ஈசாவிடம் செல்லுங்கள். அவர் பிறவிக் குருடரையும் தொழுநோயாளி களையும் குணப்படுத்தினார். (இறை அனுமதி யின்பேரில்,) இறந்தோரை உயிர்ப்பித்தார்" என்று கூறினார்கள்.

(அவ்வாறே மக்கள் சென்றபோது,) ஈசா (அலை) அவர்கள் (அந்த மக்களிடம்), "இல்லை. நீங்கள் ஆதமுடைய மக்களின் (மனிதர்களின்) தலைவர் முஹம்மதிடம் செல்லுங்கள். அவர்தாம் மறுமை நாளில் மண்ணறையிலிருந்து வெளியேறும் முதலாமவர் ஆவார். அவரிடம் செல்லுங்கள். அவர் உங்களுக்காக உங்கள் இறைவனிடம் பரிந்துரை செய்வார்" என்று கூறினார்கள்.

அபூபக்ர் (ரலி) அவர்கள் தொடர்ந்து கூறுகிறார்கள்:

அவ்வாறே மக்கள் நபி (ஸல்) அவர்களிடம் செல்வார்கள். அப்போது, (வானவர்) ஜிப்ரீல் (அலை) அவர்கள் இறைவனிடம் செல்வார்கள். அவர்களிடம் வல்லமையும் மாண்பும் மிக்க அல்லாஹ், "அவருக்கு (பரிந்துரை செய்ய) அனுமதி கொடு. அவருக்குச் சொர்க்கம் உண்டென நற்செய்தி கூறு" என்பான். அப்போது ஜிப்ரீல் (அலை) அவர்கள் நபி (ஸல்) அவர்களை அழைத்துச் செல்வார்கள். நபி (ஸல்) அவர்கள் ஒரு வார காலம் அளவுக்கு 'சஜ்தா'வில் இடப்பார்கள்.

அப்போது அல்லாஹ், "முஹம்மதே! உங்கள் தலையை உயர்த்துங்கள். கேளுங்கள்; கொடுக்கப்படும். பரிந்துரை செய்யுங்கள்; பரிந்துரை ஏற்கப்படும்" என்று கூறுவான். உடனே நபி (ஸல்) அவர்கள் தம் தலையை உயர்த்துவார்கள். வல்லமையும் மாண்பும் உடைய அல்லாஹ்வைப் பார்த்தவுடன், மற்றொரு வார காலம் அளவுக்கு 'சஜ்தா'வில் விழுந்து கிடப்பார்கள். பிறகு, "முஹம்மதே! தலையை உயர்த்துங்கள்! கேளுங்கள்; கொடுக்கப்படும். பரிந்துரை செய்யுங்கள்; பரிந்துரை ஏற்கப்படும்" என்று அல்லாஹ் கூறுவான்.

மீண்டும் 'சஜ்தா'வில் விழுவதற்காக நபி (ஸல்) அவர்கள் முயற்சிப்பார்கள். அப்போது ஜிப்ரீல் (அலை) அவர்கள் அவர்களின் இரு விலாப் புறங்களையும் பிடித்துக் கொள்வார்கள். அப்போது, எந்த மனிதருக்கும் அறவே தோன்றாத பிரார்த்தனை ஒன்றை அவர்களுக்குத் தோன்றச் செய்வான் அல்லாஹ். அவர்கள், "இறைவா! நீ ஆதமுடைய மக்களின் தலைவராக என்னைப் படைத்தாய். பெருமைக்காகச் சொல்லவில்லை (உலக மாந்தர்களுள் மறுமை நாளில்) முதன் முதலாக மண்ணறையிலிருந்து வெளியேறு

الْقِيَامَةِ وَلَا فَخْرَ حَتَّى إِنَّهُ لَيَرِدُ عَلَيَّ الْحَوْضَ أَكْثَرُ
مِمَّا بَيْنَ صَنْعَاءَ وَأَيْلَةَ ثُمَّ يُقَالُ ادْعُوا الصِّدِّيقِينَ
فَيَشْفَعُونَ ثُمَّ يُقَالُ ادْعُوا الْأَنْبِيَاءَ قَالَ فَيَجِيءُ النَّبِيُّ
وَمَعَهُ الْعِصَابَةُ وَالنَّبِيُّ وَمَعَهُ الْخَمْسَةُ وَالسِّتَّةُ وَالنَّبِيُّ
وَلَيْسَ مَعَهُ أَحَدٌ ثُمَّ يُقَالُ ادْعُوا الشُّهَدَاءَ فَيَشْفَعُونَ
لِمَنْ أَرَادُوا وَقَالَ فَإِذَا فَعَلَتِ الشُّهَدَاءُ ذَلِكَ قَالَ يَقُولُ
اللَّهُ عَزَّ وَجَلَّ: أَنَا أَرْحَمُ الرَّاحِمِينَ أَدْخِلُوا جَنَّتِي مَنْ
كَانَ لَا يُشْرِكُ بِي شَيْئًا قَالَ فَيَدْخُلُونَ الْجَنَّةَ قَالَ ثُمَّ
يَقُولُ اللَّهُ عَزَّ وَجَلَّ: انْظُرُوا فِي النَّارِ هَلْ تَلْقَوْنَ مِنْ
أَحَدٍ عَمِلَ خَيْرًا قَطُّ قَالَ فَيَجِدُونَ فِي النَّارِ رَجُلًا
فَيَقُولُ لَهُ: هَلْ عَمِلْتَ خَيْرًا قَطُّ؟ فَيَقُولُ لَا غَيْرَ أَنِّي
كُنْتُ أُسَامِحُ النَّاسَ فِي الْبَيْعِ وَالشِّرَاءِ فَيَقُولُ اللَّهُ عَزَّ
وَجَلَّ: أَسْمِحُوا لِعَبْدِي كَإِسْمَاحِهِ إِلَى عَبِيدِي ثُمَّ
يُخْرِجُونَ مِنَ النَّارِ رَجُلًا فَيَقُولُ لَهُ: هَلْ عَمِلْتَ
خَيْرًا قَطُّ؟ فَيَقُولُ لَا غَيْرَ أَنِّي قَدْ أَمَرْتُ وَلَدِي إِذَا
مِتُّ فَأَحْرِقُونِي بِالنَّارِ ثُمَّ اطْحَنُونِي حَتَّى إِذَا كُنْتُ
مِثْلَ الْكُحْلِ فَاذْهَبُوا بِي إِلَى الْبَحْرِ فَاذْرُونِي فِي الرِّيحِ

பவனாகவும் (என்னைப்) படைத்தாய் இதையும் நான் பெருமைக்காகச் சொல்லவில்லை" என்று கூறுவார்கள்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

பிறகு (யமன் நாட்டிலுள்ள) 'ஸன்ஆ' மற்றும் (ஃபலஸ்தீனிலுள்ள) 'அய்லா' பகுதிகளுக்கிடையிலான தொலைவைவிட அதிகத் தொலைவு கொண்ட தண்ணீர்த் தடாகத்(தை அல்லாஹ் எனக்கு வழங்குவான். அந்தடாகத்)திற்கு (நீரருந்த) மக்கள் வருவர்.

பின்னர், "ஸித்தீக்கீன் (பேருண்மையாளர்)களை அழையுங்கள்" என்று கூறப்படும். அவர்களும் (இறைவனிடம்) பரிந்துரை செய்வார்கள். பின்னர், "நபிமார்களை அழையுங்கள்" என்று கூறப்படும். அப்போது நபி ஒருவர் வருவார் அவருடன் ஒரு குழுவினர் வருவர்

மற்றொருவர் வருவார். அவருடன் ஐந்து அல்லது ஆறு பேர் இருப்பர். இன்னொருவர் வருவார். அவருடன் எவரும் இருக்கமாட்டார் பின்னர், "(இறைவனுக்காக உயிரை அர்ப்பணித்த) உயிர்த் தியாகிகளை அழையுங்கள்" என்று கூறப்படும். அவர்கள் தாம் விரும்புவோருக்கு (இறை நாட்டப்படி) பரிந்துரை செய்வார்கள். இவ்வாறு உயிர்த் தியாகிகள் செய்தவுடன், அல்லாஹ், "நான் கருணையாளர்களுக்கெல்லாம் கருணையாளன் (அர்ஹமுர் ராஹிமீன்) ஆவேன். ஆகவே, யார் எனக்கு எதையும் இணைவைக்காமல் இருந்தாரோ, அவரை எனது சொர்க்கத்தில் நுழையச் செய்யுங்கள்" என்று கூறுவான். அப்போது அ(த்தகைய)வர்கள் சொர்க்கத்தில் நுழைவார்கள்.

பிறகு அல்லாஹ், "எந்த நன்மையும் செய்யாத எவரேனும் உள்ளனரா? என நரகத்தில் பாருங்கள்" என்று கூறுவான். நரகத்தில் அப்படி ஒருவரைக் காண்பர் அப்போது அவரிடம் அல்லாஹ், "நீ (உலகில்) எந்த நன்மையும் செய்யவில்லையா?" என்று கேட்பான். அவர், "இல்லை; எனினும், நான் கொடுக்கல் வாங்கல் செய்தபோது (மக்களிடம் விட்டுக் கொடுத்துப்) பெருந்தன்மையுடன் நடந்துகொண்டேன்" என்று கூறுவார்

அப்போது அல்லாஹ், "என் அடியாரிடம் இவர் பெருந்தன்மையுடன் நடந்து கொண்டதைப் போன்று, என் அடியா(ரான இவ)ரிடமும் பெருந்தன்மையுடன் நடந்து கொள்ளுங்கள்" என்று கூறுவான்.

பின்பு நரகத்திலிருந்து மற்றொருவரையும் வெளியேற்றுவார்கள். அவரிடம் அல்லாஹ், "நீ நன்மையே செய்யவில்லையா?" என்று கேட்பான் அவர் "இல்லை! ஆனால், நான் (மரணப் படுக்கையில் இருந்தபோது) என் பிள்ளைகளிடம், 'நான் இறந்துவிட்டால், நெருப்பில் என்னை எரித்துவிடுங்கள். பிறகு அஞ்சனம்போல் ஆகிவிடும் அளவுக்கு என்னைத் தூளாக்கி, கடலுக்குக் கொண்டு சென்று, காற்றில்

கலந்துவிடுங்கள்' என்று உத்தரவிட்டேன் அல்லாஹ்வின் மீது சத்தியமாக! அகிலத்தின் இறைவனான அல்லாஹ் ஒரு போதும் என் மீது வலிமை பெறமாட்டான்[18] (அவனால் என்னை மீண்டும் படைக்க முடியாது) என்று எண்ணினேன்" என்பார் அதற்கு அல்லாஹ், "ஏன் இப்படிச் செய்தாய்?" என்று கேட்பான் அதற்கு அவர், "உன்னைப் பற்றிய அச்சத்தால் தான் (அவ்வாறு செய்தேன்)" என்று கூறுவார்.

உடனே அல்லாஹ், "பேரரசனின் ஆட்சி(க்குட்பட்ட பகுதி)யைப் பார் நீ பார்த்தவையும், அது போன்று பத்து மடங்கும் உனக்கு உண்டு" என்று கூறுவான் "அரசனாகிய நீயே என்னைக் கேலி செய்கிறாயா?" என்று கேட்பார் முற்பகல் நேரத்தில் நான் சிரித்ததற்கு இதுதான் காரணம் (என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்).[19]

فوالله لا يقدر علي رب العالمين أبدا فقال الله عز وجل: لم فعلت ذلك؟ قال من مخافتك قال فيقول الله عز وجل: انظر إلى ملك أعظم ملك فإن لك مثله وعشرة أمثاله قال فيقول: لم تسخر بي وأنت الملك؟ قال وذلك الذي ضحكت منه من الضحى.

16 கைஸ் பின் அபீஹாஸிம் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

அபூபக்ர் (ரலி) அவர்கள் (மக்களிடையே) நின்று உரையாற்றினார்கள் அப்போது இறைவனைப் போற்றிப் புகழ்ந்துவிட்டு, "மக்களே! 'இறை நம்பிக்கை கொண்டவர்களே! உங்களை நீங்கள் காத்துக்கொள்ளுங்கள். நீங்கள் நேர்வழியில் இருந்தால், மற்றவர்களின் வழிகேடு உங்களுக்கு எந்தத் தீங்கும் செய்திடாது' எனும் இந்த (5:105ஆவது) இறைவசனத்தை நீங்கள் ஓதுகின்றீர்கள். ஆனால், அதற்குப் பொருத்தமில்லாத பொருள் கொள்கிறீர்கள்

١٦ حدثنا هاشم بن القاسم قال حدثنا زهير يعني ابن معاوية قال حدثنا إسماعيل بن أبي خالد قال حدثنا قيس قال: قام أبو بكر رضي الله عنه فحمد الله عز وجل وأثنى عليه فقال: يا أيها الناس إنكم تقرءون هذه الآية ﴿يا أيها الذين آمنوا عليكم أنفسكم لا يضركم من ضل إذا اهتديتم﴾ إلى آخر الآية وإنكم تضعونها على غير موضعها وإني سمعت رسول الله ﷺ يقول: إن الناس إذا رأوا المنكر ولا يغيرونه أوشك الله أن يعمهم بعقابه قال وسمعت أبا بكر رضي الله عنه يقول: يا أيها الناس

"அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், 'மக்கள் (தங்கள் கண்ணெதிரே) தீமை நடைபெறுவதைக் கண்டும், அதைத் தடுக்காமலிருந்தால், அல்லாஹ் பொதுவாக எல்லாரையும் சேர்த்துத் தண்டித்து விடலாம்' என்று கூறியதை நாங்கள் கேட்டுள்ளோம்" என்று குறிப்பிட்டார்கள்.

அபூபக்ர் (ரலி) அவர்கள் (பின்வருமாறு) சொல்லக் கேட்டேன்: மக்களே! பொய்

---

18. [illegible]

19. [illegible] புகாரீ 3340, 4712, 6565; முஸ்லிம் 302, 327, [illegible] புகாரீ 2391, 2077, 2078, 3480 [illegible] முஸ்லிம் 3178-3183 [illegible] புகாரீ 3481, 6480, 6481, 7506, 7508, முஸ்லிம் 5317-5320 [illegible]

புரைப்பது பற்றி உங்களை எச்சரிக்கிறேன்! ஏனெனில், பொய்யானது இறைநம்பிக்கைக்கு மிகத் தொலைவானதாகும்.[20]

إِيَّاكُمْ وَالْكَذِبَ فَإِنَّ الْكَذِبَ مُجَانِبٌ لِلْإِيمَانِ.

17 அவ்சத் (பின் இஸ்மாயீல் அல்பஜலீ-ரஹ்) அவர்கள் கூறியதாவது:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் இறந்த பின்னர், அபூபக்ர் (ரலி) அவர்கள் எங்களுக்கு உரை நிகழ்த்தினார்கள். அப்போது அவர்கள், "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் (மதீனாவுக்கு வந்த) முதலாம் ஆண்டில் நான் நிற்கும் இதே இடத்தில் (இந்த மிம்பர் மீது) நின்றார்கள்" என்று கூறிவிட்டு, அழுதார்கள்! பிறகு, "உண்மை பேசுவதைக் கடைப் பிடியுங்கள். அது, நன்மைக்கு வழிவகுக்கும். (உண்மை, நன்மை ஆகிய) அவ்விரண்டும் (அவற்றைக் கடைப்பிடிப்போரைச்) சொர்க்கத் தில் சேர்க்கும். பொய் பேச வேண்டாமென உங்களை நான் எச்சரிக்கிறேன். அது தீமைகளுக்கு வழி வகுக்கும். (பொய், தீமை ஆகிய) அவ்விரண்டும் (அவற்றைக் கடைப்பிடிப் போரை) நரகத்தில்தான் சேர்க்கும்.

"அல்லாஹ்விடம் பாவமன்னிப்பை அல்லது உடல்நலத்தைக் கேளுங்கள். ஒருவருக்கு உறுதி(யான நம்பிக்கை)க்குப் பின், பாவமன்னிப்பை அல்லது உடல்நலத்தைவிட மிகச் சிறந்த வேறெதுவும் ஒருபோதும் கொடுக்கப் படுவதில்லை.

"நீங்கள் ஒருவருக்கொருவர் உறவை முறித்துக்கொள்ளாதீர்கள். பிணங்கிக் கொள்ளாதீர்கள். ஒருவரையொருவர் பகைத்துக் கொள்ளாதீர்கள். பொறாமை கொள்ளாதீர்கள். அல்லாஹ் உங்களுக்குக் கட்டளையிட்டபடி, (அன்பு காட்டுவதில்) சகோதரர்களாய் இருங்கள்" என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறியதாகக் குறிப்பிட்டார்கள்.[21]

١٧ حدثنا هاشم قال حدثنا شعبة قال أخبرني يزيد بن خمير قال سمعت سليم بن عامر رجلا من حمير يحدث عن أوسط بن إسماعيل بن أوسط البجلي يحدث عن أبي بكر أنه سمعه حين توفي رسول الله ﷺ قال: قام رسول الله ﷺ عام الأول مقامي هذا ثم بكى ثم قال: عليكم بالصدق فإنه مع البر وهما في الجنة وإياكم والكذب فإنه مع الفجور وهما في النار وسلوا الله المعافاة فإنه لم يؤت رجل بعد اليقين شيئا خيرا من المعافاة ثم قال: لا تقاطعوا ولا تدابروا ولا تباغضوا ولا تحاسدوا وكونوا عباد الله إخوانا.

18 ஹுமைது பின் அப்திர்ரஹ்மான் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் இறந்தபோது, அபூபக்ர் (ரலி) அவர்கள் மதீனாவின் புறநகர்ப் பகுதியில் இருந்தார்கள். (நபியின் இறப்புச் செய்தியைக் கேள்விப் பட்டதும்) வந்து, அவர்களின் முகத்தை (மூடியிருந்த துணியைத்) திறந்து, அவர்களை முத்தமிட்டார்கள்.

பின்பு, "என் தந்தையும் தாயும் தங்களுக்கு அர்ப்பணமாகட்டும். உயிருடன் இருந்த போதும், இறந்த பிறகும் நீங்கள் நறுமணம் கமழ்கின்றீர்களே! கஅபாவின் அதிபன்

١٨ حدثنا عفان قال حدثنا أبو عوانة عن داود بن عبد الله الأودي عن حميد بن عبد الرحمن قال توفي رسول الله ﷺ وأبو بكر في طائفة من المدينة قال: فجاء فكشف عن وجهه فقبله وقال: فداك أبي وأمي ما أطيبك حيا وميتا مات محمد ﷺ

---

20. [illegible] 29, 30, 50 [illegible]

21. [illegible] 5, 6, 10, 12, 34, 37, 43, 46, 47, 63 [illegible]

وَرَبِّ الْكَعْبَةِ فَذَكَرَ الْحَدِيثَ قَالَ: فَانْطَلَقَ أَبُو بَكْرٍ وَعُمَرُ يَتَقَاوَدَانِ حَتَّى أَتَوْهُمْ فَتَكَلَّمَ أَبُو بَكْرٍ وَلَمْ يَتْرُكْ شَيْئًا أُنْزِلَ فِي الْأَنْصَارِ وَلَا ذَكَرَهُ رَسُولُ اللَّهِ ﷺ مِنْ شَأْنِهِمْ إِلَّا وَذَكَرَهُ وَقَالَ وَلَقَدْ عَلِمْتُمْ أَنَّ رَسُولَ اللَّهِ ﷺ قَالَ: لَوْ سَلَكَ النَّاسُ وَادِيًا وَسَلَكَتِ الْأَنْصَارُ وَادِيًا سَلَكْتُ وَادِيَ الْأَنْصَارِ وَلَقَدْ عَلِمْتَ يَا سَعْدُ أَنَّ رَسُولَ اللَّهِ ﷺ قَالَ: وَأَنْتَ قَاعِدٌ قُرَيْشٌ وُلَاةُ هَذَا الْأَمْرِ فَبَرُّ النَّاسِ تَبَعٌ لِبَرِّهِمْ وَفَاجِرُهُمْ تَبَعٌ لِفَاجِرِهِمْ قَالَ فَقَالَ لَهُ سَعْدٌ: صَدَقْتَ نَحْنُ الْوُزَرَاءُ وَأَنْتُمُ الْأُمَرَاءُ.

١٩ حَدَّثَنَا عَلِيُّ بْنُ عَيَّاشٍ قَالَ حَدَّثَنَا الْعَطَّافُ بْنُ خَالِدٍ قَالَ حَدَّثَنِي رَجُلٌ مِنْ أَهْلِ الْبَصْرَةِ عَنْ طَلْحَةَ بْنِ عَبْدِ اللَّهِ بْنِ عَبْدِ الرَّحْمَنِ بْنِ أَبِي بَكْرٍ الصِّدِّيقِ قَالَ:

மீதாணையாக! முஹம்மது (ஸல்) அவர்கள் இறந்துவிட்டார்கள்!" என்று கூறினார்கள்.

இந்த ஹதீஸின் தொடர்ச்சியைக் கூறி விட்டு, அறிவிப்பாளர் ஹுமைது பின் அப்திர் ரஹ்மான் கூறுகின்றார்கள்:

அபூபக்ர் (ரலி) அவர்களும் உமர் (ரலி) அவர்களும் முன்னும் பின்னுமாக விரைந்து மக்களிடம் வந்தார்கள். அபூபக்ர் (ரலி) அவர்கள் (மக்களிடையே) பேசினார்கள். (மதீனாவாசிகளான) அன்சாரிகள் தொடர்பாக இறக்கியருளப்பெற்ற இறைவசனங்கள் எதையும் (விட்டு வைக்காமல்) அவர்கள் கூறினார்கள். அன்சாரிகள் தொடர்பாக அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் தம்மிடம் கூறிய எதையும் விட்டு வைக்காமல் கூறினார்கள்.

அப்போது, "மக்கள் அனைவரும் ஒரு கணவாய் வழியாக நடந்து, அன்சாரிகள் மற்றொரு கணவாய் வழியாக நடந்தால், நான் அன்சாரிகள் நடக்கும் கணவாயில்தான் நடப்பேன்' என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறியதை நீங்கள் அறிவீர்கள்" என்று கூறிவிட்டு, (அன்சாரிகளின் தலைவரான சஅது (ரலி) அவர்களை நோக்கி), "சஅதே! நீங்கள் அமர்ந்திருந்தபோது, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், 'இந்த ஆட்சிப் பொறுப்புக்குத் தகுதியானவர்கள் குறைஷியர் ஆவர். மக்களுள் நல்லவர், குறைஷியருள் நல்லவரைப் பின்பற்றுவார். மக்களுள் தீயவர், அவர்களுள் கெட்டவரைப் பின்பற்றுவார்' என்று கூறியதை அறிவீர்கள்" என்று கூறினார்கள்

அப்போது சஅது (ரலி) அவர்கள், "(அபூபக்ரே!) நீங்கள் உண்மை உரைத்தீர்கள். (அன்சாரிகளாகிய) நாங்கள் ஆலோசகர்கள் ஆவோம் (குறைஷியரான) நீங்கள் ஆட்சியாளர்கள் ஆவீர்கள்" என்று கூறினார்கள்.[22]

19 அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறியதாவது:

---

22. [illegible] - 3778, 3779 [illegible] - 1911, 1912, 1917 [illegible] - 1841, 3667, 3668 [illegible] 3495, [illegible] 3714 [illegible]

سَمِعْتُ أَبِي يَذْكُرُ أَنَّ أَبَاهُ سَمِعَ أَبَا بَكْرٍ وَهُوَ يَقُولُ: قُلْتُ لِرَسُولِ اللَّهِ ﷺ يَا رَسُولَ اللَّهِ الْعَمَلُ عَلَى مَا فُرِغَ مِنْهُ أَوْ عَلَى أَمْرٍ مُؤْتَنَفٍ قَالَ: بَلْ عَلَى أَمْرٍ قَدْ فُرِغَ مِنْهُ قَالَ قُلْتُ: فَفِيمَ الْعَمَلُ يَا رَسُولَ اللَّهِ؟ قَالَ: كُلٌّ مُيَسَّرٌ لِمَا خُلِقَ لَهُ.

நான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம், "அல்லாஹ்வின் தூதரே! செயல்கள், (எழுதி) முடிக்கப்பட்டுவிட்ட விதியின்படி நடக்கின்றனவா? அல்லது, முன்பே தீர்மானிக்கப்படாமல் புதிதாக நடக்கின்றனவா?" என்று கேட்டேன். அதற்கு அவர்கள், "ஏற்கனவே (எழுதி) முடிக்கப்பட்டுவிட்ட விதியின்படிதான்" என்று கூறினார்கள்.

"அவ்வாறாயின், (தலைவிதியின் மீது பாரத்தைப் போட்டுவிட்டு இருந்துவிடலாமே) ஏன் நல்லறங்கள் புரியவேண்டும், அல்லாஹ்வின் தூதரே?" என்று நான் கேட்டேன். அதற்கு அவர்கள், "(நீங்கள் செயலாற்றுங்கள்.) ஒவ்வொருவருக்கும், படைக்கப்பட்ட (நோக்கத்)தை அடைய வழிவகை செய்யப்படும்" என்றார்கள்.[23]

٢. حَدَّثَنَا أَبُو الْيَمَانِ قَالَ أَخْبَرَنَا شُعَيْبٌ عَنِ الزُّهْرِيِّ قَالَ أَخْبَرَنِي رَجُلٌ مِنَ الْأَنْصَارِ مِنْ أَهْلِ الْفِقْهِ أَنَّهُ سَمِعَ عُثْمَانَ بْنَ عَفَّانَ رَضِيَ اللَّهُ عَنْهُ يُحَدِّثُ أَنَّ رِجَالًا مِنْ أَصْحَابِ النَّبِيِّ ﷺ حِينَ تُوُفِّيَ النَّبِيُّ ﷺ حَزِنُوا عَلَيْهِ حَتَّى كَادَ بَعْضُهُمْ يُوَسْوِسُ قَالَ عُثْمَانُ: وَكُنْتُ مِنْهُمْ فَبَيْنَا أَنَا جَالِسٌ فِي ظِلِّ أُطُمٍ مِنَ الْآطَامِ مَرَّ عَلَيَّ عُمَرُ رَضِيَ اللَّهُ عَنْهُ فَسَلَّمَ عَلَيَّ فَلَمْ أَشْعُرْ أَنَّهُ

20 உஸ்மான் (ரலி) அவர்கள் கூறியதாவது:

நபி (ஸல்) அவர்கள் இறந்தபோது, நபித் தோழர்களுள் சிலர் கவலையடைந்தனர். (அவர்கள் இறந்தது உண்மையா என) அவர்களுள் சிலர் மனக் குழப்பமடையும் அளவுக்குப் போய்விட்டனர். அவர்களுள் நானும் ஒருவனாக இருந்தேன். நான் உயரமான கட்டடம் ஒன்றின் நிழலில் இருந்தேன். அப்போது என்னைக் கடந்து சென்ற உமர் (ரலி) அவர்கள், எனக்கு 'சலாம்' கூறினார்கள். அவர்கள் (என்னைக்) கடந்து சென்றதையோ, எனக்கு 'சலாம்' சொன்னதையோ, நான் அறியவே இல்லை.

---

23. இது [illegible] புகாரீ 1362, 4947, 4948, 6217, 6596, 6605, முஸ்லிம் 5153, 5154 [illegible]

[illegible]

உமர் (ரலி) அவர்கள் நேராக அபூபக்ர் (ரலி) அவர்களிடம் சென்று, "உங்களுக்குத் தெரியுமா? நான் உஸ்மான் (ரலி) அவர்களிடம் சென்றேன். அவருக்கு 'ஸலாம்' கூறினேன். எனக்கு அவர் பதில் 'ஸலாம்' சொல்லவில்லை" என்று கூறினார். பிறகு அபூபக்ர் (ரலி) அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்பதைக் குறித்துப் பேசுவதற்காக என்னிடம் உமர் (ரலி) அவர்களும் அபூபக்ர் (ரலி) அவர்களும் வந்தனர். இருவரும் எனக்கு 'ஸலாம்' கூறினர்.

பிறகு அபூபக்ர் (ரலி) அவர்கள் என்னிடம், "உங்களுடைய ஸகோதரர் உமர் என்னிடம் வந்தார். உங்களிடம் அவர் வந்தபோது, அவர் 'ஸலாம்' கூறியும், நீங்கள் அவருக்கு பதில் கூற வில்லை என்கிறார். நீங்கள் அவ்வாறு செய்ததற்கு என்ன காரணம்?" என்று கேட்டார்கள் "நான் அப்படிச் செய்யவில்லையே!" என்றேன்

உடனே உமர் (ரலி) அவர்கள், "இல்லை அல்லாஹ்வின் மீதாணையாக! நீங்கள் அப்படித்தான் செய்தீர்கள். உமைய்யாக் கூட்டத்தாரே! உங்களின் செருக்குதான் இதற்குக் காரணம்" என்றார்கள். நான், "அல்லாஹ்வின் மீதாணையாக! நீங்கள் கடந்து சென்றதையோ, எனக்கு 'ஸலாம்' கூறியதையோ நான் அறியவே இல்லை" என்று கூறினேன்.

مَرَّ وَلاَ سَلَّمَ فَانْطَلَقَ عُمَرُ حَتَّى دَخَلَ عَلَى أَبِي بَكْرٍ رَضِيَ اللَّهُ عَنْهُ فَقَالَ لَهُ مَا يُعْجِبُكَ أَنِّي مَرَرْتُ عَلَى عُثْمَانَ فَسَلَّمْتُ عَلَيْهِ فَلَمْ يَرُدَّ عَلَيَّ السَّلاَمَ وَأَقْبَلَ هُوَ وَأَبُو بَكْرٍ فِي وِلاَيَةِ أَبِي بَكْرٍ رَضِيَ اللَّهُ عَنْهُ حَتَّى سَلَّمَا عَلَيَّ جَمِيعًا ثُمَّ قَالَ أَبُو بَكْرٍ: جَاءَنِي أَخُوكَ عُمَرُ فَذَكَرَ أَنَّهُ مَرَّ عَلَيْكَ فَسَلَّمَ فَلَمْ تَرُدَّ عَلَيْهِ السَّلاَمَ فَمَا الَّذِي حَمَلَكَ عَلَى ذَلِكَ؟ قَالَ قُلْتُ مَا فَعَلْتُ فَقَالَ عُمَرُ بَلَى وَاللَّهِ لَقَدْ فَعَلْتَ وَلَكِنَّهَا عُبِّيَّتُكُمْ يَا بَنِي أُمَيَّةَ قَالَ قُلْتُ وَاللَّهِ مَا شَعَرْتُ أَنَّكَ مَرَرْتَ وَلاَ سَلَّمْتَ قَالَ أَبُو بَكْرٍ: صَدَقَ عُثْمَانُ وَقَدْ شَغَلَكَ عَنْ ذَلِكَ أَمْرٌ فَقُلْتُ: أَجَلْ قَالَ مَا هُوَ؟ فَقَالَ عُثْمَانُ رَضِيَ اللَّهُ عَنْهُ: تَوَفَّى اللَّهُ عَزَّ وَجَلَّ نَبِيَّهُ ﷺ قَبْلَ أَنْ نَسْأَلَهُ عَنْ نَجَاةِ هَذَا الأَمْرِ قَالَ أَبُو بَكْرٍ: قَدْ سَأَلْتُهُ عَنْ ذَلِكَ قَالَ فَقُمْتُ إِلَيْهِ فَقُلْتُ لَهُ: بِأَبِي أَنْتَ وَأُمِّي أَنْتَ أَحَقُّ بِهَا قَالَ أَبُو بَكْرٍ: قُلْتُ يَا رَسُولَ اللَّهِ مَا نَجَاةُ هَذَا الأَمْرِ؟ فَقَالَ رَسُولُ اللَّهِ ﷺ: مَنْ قَبِلَ مِنِّي الْكَلِمَةَ الَّتِي عَرَضْتُ عَلَى عَمِّي فَرَدَّهَا عَلَيَّ فَهِيَ لَهُ نَجَاةٌ.

உடனே அபூபக்ர் (ரலி) அவர்கள், "உஸ்மான் உண்மையே கூறுகிறார். ஏதோ ஒன்று உங்கள் கவனத்தைத் திசை திருப்பிவிட்டிருக்கிறது" என்று (என்னிடம்) கூறினார்கள். நான், "ஆம்" என்றேன் "அது என்ன?" என்று அபூபக்ர் (ரலி) அவர்கள் கேட்டார்கள். இந்த மார்க்கத்தின் வெற்றி குறித்து நபி (ஸல்) அவர்களிடம் கேட்பதற்கு முன்பே, அவர்களை அல்லாஹ் கைப்பற்றிக் கொண்டானே!" என்று கூறினேன்

அதற்கு அபூபக்ர் (ரலி) அவர்கள், "இது குறித்து நபி (ஸல்) அவர்களிடம் நான் (முன்பே) கேட்டுவிட்டேன்" என்று கூறினார்கள் உடனே நான், அபூபக்ர் (ரலி) அவர்களை நோக்கி எழுந்து, "என் தந்தையும் தாயும் தங்களுக்கு அர்ப்பணமாகட்டும்! அ(து குறித்துக் கேட்ப)தற்கு நீரே மிகவும் தகுதியானவர்" என்று கூறினேன்.

அப்போது அபூபக்ர் (ரலி) அவர்கள், "அல்லாஹ்வின் தூதரே! இந்த மார்க்கத்தின் வெற்றி என்ன? என்று கேட்டேன். அதற்கு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், 'என் தந்தையின் ஸகோதரரிடம் நான் எதை எடுத்துக் கூறியபோது, அதை அவர் ஏற்க மறுத்தாரோ, அந்த (ஏகத்துவக் கூற்றை என்னிடமிருந்து ஒருவர் ஏற்றுக்கொள்வதே அவருக்கு வெற்றியாக அமையும்' என்று கூறினார்கள்" என்றார்கள்.[24]

24. [illegible] 24, 36, 182, 419 [illegible]

21 (முஆவியா (ரலி) அவர்களின் சகோதரர்) யஸீது பின் அபீசுஃப்யான் (ரலி) அவர்கள் கூறியதாவது:

(கலீஃபா) அபூபக்ர் (ரலி) அவர்கள் என்னை 'ஷாம்' நாட்டுக்கு (அதை வெற்றிகொள்வதற்காகவும் அதன் ஆளுநராகவும்) அனுப்பியபோது, பின்வருமாறு கூறினார்கள்:

"யஸீதே! நிச்சயமாக உமக்கு (அங்கே) உறவினர்கள் உள்ளனர். அதிகாரத்தின் மூலம் அவர்களை நீர் பதவிக்குக் கொண்டுவரக்கூடும். உம்மிடம் இதைத்தான் நான் மிகவும் அஞ்சுகிறேன். ஏனெனில், 'முஸ்லிம்களின் விவகாரத்தில் ஏதேனும் ஒரு பொறுப்பை ஏற்றுக்கொண்ட ஒருவர், தனக்கு விருப்பமான ஒருவரைப் பாரபட்சமான முறையில் அவர்களுக்குப் பொறுப்பாளராக்கினால், அவருக்கு அல்லாஹ்வின் சாபம் உண்டு. அவரிடமிருந்து அல்லாஹ் கூடுதலான வழிபாடுகளையோ, கடமையான வழிபாடுகளையோ ஏற்கமாட்டான். இறுதியில், அவரை நரகத்தில் நுழையச் செய்வான். மேலும், ஒருவர் மற்றொருவருக்கு அல்லாஹ்வின் அதிகாரத்திற்குட்பட்ட (சட்டமியற்றும் அதிகாரத்)தை வழங்கினால், அவர் அல்லாஹ்வின் அதிகாரங்களுள் ஒன்றை எந்த உரிமையுமின்றிப் பாழடித்தவர் ஆவார். அவர் மீதும் அல்லாஹ்வின் சாபம் ஏற்படும். அல்லது, அல்லாஹ்வின் பொறுப்பு அவரைவிட்டு நீங்கிவிடும்' என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்."[24]

22 அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

"நான் (என் சமுதாயத்தில்) எழுபதாயிரம் பேர் எந்த விதக் கேள்வி கணக்குமின்றிச் சொர்க்கத்தில் நுழையும் நற்பேற்றைக் கொடுக்கப்பெற்றுள்ளேன். அவர்களின் முகங்கள்

٢١ حدثنا يزيد بن عبد ربه قال حدثنا بقية بن الوليد
قال حدثني شيخ من قريش عن رجاء بن حيوة عن
جنادة بن أبي أمية عن يزيد بن أبي سفيان قال قال
أبو بكر رضي الله عنه حين بعثني إلى الشام: يا
يزيد إن لك قرابة عسيت أن تؤثرهم بالإمارة وذلك
أكبر ما أخاف عليك فإن رسول الله ﷺ قال: من
ولي من أمر المسلمين شيئا فأمر عليهم أحدا محاباة
فعليه لعنة الله لا يقبل الله منه صرفا ولا عدلا حتى
يدخله جهنم ومن أعطى أحدا حمى الله فقد انتهك
في حمى الله شيئا بغير حقه فعليه لعنة الله أو قال:
تبرأت منه ذمة الله عز وجل.

٢٢ حدثنا هاشم بن القاسم قال حدثنا المسعودي
قال حدثني بكير بن الأخنس عن رجل عن أبي
بكر الصديق قال قال رسول الله ﷺ: أعطيت سبعين
ألفا يدخلون الجنة بغير حساب وجوههم كالقمر

[illegible]

25. [illegible]

பௌர்ணமி இரவின் நிலவுபோல் இருக்கும். அவர்களின் உள்ளங்கள் ஒரே ஒருவரின் உள்ளம் போன்று (போட்டி, பொறாமையின்றி) இருக்கும். என் இறைவனிடம் நான் அவர்களின் எண்ணிக்கையைக் கூடுதலாக்கும்படி கேட்டேன். அவர்கள் ஒவ்வொருவருடனும் எழுபதாயிரம் பேர் (சொர்க்கம்) செல்வார்கள் என அவர்களின் எண்ணிக்கையை எனக்கு அவன் கூடுதலாக்கினான்".

அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: இந்த நபிமொழி, கிராமவாசிகள் மற்றும் பட்டிதொட்டிகளில் அல்லல்படும் (அப்பாவி) மக்களையே குறிக்கும் என நான் கருதுகிறேன்.[26]

இதை அபூபக்ர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

لَيْلَةَ الْبَدْرِ وَقُلُوبُهُمْ عَلَى قَلْبِ رَجُلٍ وَاحِدٍ فَاسْتَزَدْتُ رَبِّي عَزَّ وَجَلَّ فَزَادَنِي مَعَ كُلِّ وَاحِدٍ سَبْعِينَ أَلْفًا قَالَ أَبُو بَكْرٍ رَضِيَ اللَّهُ عَنْهُ: فَرَأَيْتُ أَنَّ ذَلِكَ آتٍ عَلَى أَهْلِ الْقُرَى وَمُصِيبٌ مِنْ حَافَاتِ الْبَوَادِي.

23 அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

ஒருவன் ஒரு தீமையைச் செய்தால், அதற்காக அவன் இவ்வுலகிலேயே தண்டிக்கப்படுவான்.[27]

இதை அபூபக்ர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

٢٣ حَدَّثَنَا عَبْدُ الْوَهَّابِ بْنُ عَطَاءٍ عَنْ زِيَادٍ الْجَصَّاصِ عَنْ عَلِيِّ بْنِ زَيْدٍ عَنْ مُجَاهِدٍ عَنِ ابْنِ عُمَرَ قَالَ: سَمِعْتُ أَبَا بَكْرٍ يَقُولُ: قَالَ رَسُولُ اللَّهِ ﷺ: مَنْ يَعْمَلْ سُوءًا يُجْزَ بِهِ فِي الدُّنْيَا.

24 உஸ்மான் (ரலி) அவர்கள் கூறியதாவது:

நபி (ஸல்) அவர்கள் இறந்தபோது, நபித்தோழர்களுள் சிலர் கவலையடைந்தனர். (அவர்கள் இறந்தது உண்மையா என்று) அவர்களுள் சிலர் மனக் குழப்பத்திற்கு உள்ளாகும் அளவுக்குப் போய்விட்டனர். அவர்களுள் நானும் ஒருவனாக இருந்தேன்.[28]

٢٤ حَدَّثَنَا يَعْقُوبُ حَدَّثَنَا أَبِي عَنْ صَالِحٍ قَالَ قَالَ ابْنُ شِهَابٍ أَخْبَرَنِي رَجُلٌ مِنَ الْأَنْصَارِ غَيْرُ مُتَّهَمٍ أَنَّهُ سَمِعَ عُثْمَانَ بْنَ عَفَّانَ يُحَدِّثُ أَنَّ رِجَالًا مِنْ أَصْحَابِ النَّبِيِّ ﷺ حِينَ تُوُفِّيَ رَسُولُ اللَّهِ ﷺ حَزِنُوا عَلَيْهِ حَتَّى كَادَ بَعْضُهُمْ أَنْ يُوَسْوِسَ قَالَ عُثْمَانُ: فَكُنْتُ مِنْهُمْ فَذَكَرَ مَعْنَى حَدِيثِ أَبِي الْيَمَانِ عَنْ شُعَيْبٍ.

தொடர்ந்து, மேற்கண்ட (20ஆவது) ஹதீஸில் உள்ளதைப் போன்றே இங்கும் இடம்பெறுகிறது.

---

26. [illegible]

27. [illegible]

28. [illegible]

25 ஆயிஷா (ரலி) அவர்கள் கூறியதாவது:

ஃபாத்திமா (ரலி) அவர்கள் (தம் தந்தை) அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் இறந்த பின் அபூபக்ர் (ரலி) அவர்களிடம், "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுக்கு, போரிடாமல் அவர் வழங்கியிருந்த 'ஃபைஉ'ச் சொத்துகளில் அவர்கள் விட்டுச் சென்றுள்ளவற்றில் என் வாரிசுரிமைப்படி பங்கிட்டுத் தாருங்கள்" என்று கேட்டார்கள். அப்போது அவர்களிடம் அபூபக்ர் (ரலி) அவர்கள், "(நபிமார்களான) எங்களுடைய சொத்துக்கு யாரும் வாரிசாக மாட்டார்கள் நாங்கள் விட்டுச் செல்பவை தர்மம் செய்யப்பட வேண்டியவையாகும்" என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறியதாகத் தெரிவித்தார்கள். இதனால், ஃபாத்திமா (ரலி) அவர்கள் கோபம் கொண்டார்கள். அபூபக்ர் (ரலி) அவர்களை வெறுத்தார்கள் தாம் இறக்கும்வரை அந்த வெறுப்பைக் கைவிடவில்லை.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் இறந்தபின், ஆறு மாதம்வரை ஃபாத்திமா (ரலி) அவர்கள் வாழ்ந்தார்கள். தம் தந்தை அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கைபர் மற்றும் ஃபதக் பகுதியில் விட்டுச் சென்றவற்றிலிருந்தும், மதீனாவில் இருந்த அவர்களுக்குரிய தர்மப் பொருளிலிருந்தும் தமக்குரிய பங்கை அபூபக்ர் (ரலி) அவர்களிடம் கேட்டார்கள் ஆனால், அபூபக்ர் (ரலி) அவர்கள், அவர்களிடம் அதைக் கொடுக்க மறுத்துவிட்டார்கள் மேலும் அவர்கள், "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் செய்துவந்த எந்த ஒரு நற்செயலையும் செய்யாமல் நான் விடுபவன் அல்லன். அவர்கள் இட்ட உத்தரவு ஒன்றை நான் விட்டுவிட்டால், வழி தவறிவிடுவேன் என நான் அஞ்சுகின்றேன்" என்றும் கூறினார்கள்

மதீனாவில் இருந்த அவர்களின் தர்மப் பொருளை உமர் (ரலி) அவர்கள் அலீ (ரலி), அப்பாஸ் (ரலி) ஆகிய இருவரிடமும் ஒப்படைத்தார்கள். இந்த(ச் சொத்துகளை பராமரிக்கும்) விஷயத்தில் அலீ (ரலி) அவர்கள், அப்பாஸ் (ரலி) அவர்களை மிகைத்துவிட்டார்கள். கைபர், ஃபதக் பகுதியில் உள்ளதை உமர் (ரலி) அவர்கள் தம்மிடமே (அரசுப் பொறுப்பில்) வைத்துக்கொண்டார்கள். "அந்த இரண்டு சொத்துகளும் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் வழங்கிய தர்மம் ஆகும் அவையிரண்டும் நபி (ஸல்) அவர்களுக்கு ஏற்படுகின்ற (சமுதாயத்) தேவைகளுக்காகவும் அவர்கள் செய்ய வேண்டிய நிவாரணப் பணிகளுக்காகவும் பயன்பட்டு வந்தன அந்த இரண்டையும் பொறுப்புடன் செயல்படுத்துவது, அதிகாரம் உள்ள ஆட்சியாளருக்கே உரியதாகும்" என்று உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். "அந்த இரண்டும் இன்றுவரை அப்படியே உள்ளது" என அறிவிப்பா

٢٥ حدثنا يعقوب قال حدثنا أبي عن صالح قال ابن شهاب أخبرني عروة بن الزبير أن عائشة رضي الله عنها زوج النبي ﷺ أخبرته أن فاطمة بنت رسول الله ﷺ سألت أبا بكر رضي الله عنه بعد وفاة رسول الله ﷺ أن يقسم لها ميراثها مما ترك رسول الله ﷺ مما أفاء الله عليه فقال لها أبو بكر رضي الله عنه: إن رسول الله ﷺ قال: لا نورث ما تركنا صدقة فغضبت فاطمة فهجرت أبا بكر رضي الله عنه فلم تزل مهاجرته حتى توفيت قال وعاشت بعد وفاة رسول الله ﷺ ستة أشهر قال وكانت فاطمة رضي الله عنها تسأل أبا بكر نصيبها مما ترك رسول الله ﷺ من خيبر وفدك وصدقته بالمدينة فأبى أبو بكر عليها ذلك وقال لست تاركا شيئا كان رسول الله ﷺ يعمل به إلا عملت به وإني أخشى إن تركت شيئا من أمره أن أزيغ فأما صدقته بالمدينة فدفعها عمر إلى علي وعباس فغلبه عليها علي وأما خيبر وفدك فأمسكهما عمر رضي الله عنه وقال: هما صدقة رسول الله ﷺ كانتا لحقوقه التي تعروه ونوائبه وأمرهما إلى من ولي الأمر قال: فهما على ذلك اليوم.

வரான உர்வா பின் அஸ்ஸுபைர் (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்.[29]

٢٦ حدثنا حسن بن موسى وعفان قالا حدثنا حماد بن سلمة عن علي بن زيد عن القاسم بن محمد عن عائشة رضي الله عنها أنها تمثلت بهذا البيت وأبو بكر رضي الله عنه يقضي

وأبيض يستسقى الغمام بوجهه

ربيع اليتامى عصمة للأرامل

فقال أبو بكر رضي الله عنه: ذاك والله رسول الله ﷺ.

26 காசிம் பின் முஹம்மது பின் அபீபக்ர் அஸ்ஸித்தீக் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

(என் பாட்டனார்) அபூபக்ர் (ரலி) அவர்கள் இறப்புத் தறுவாயில் இருந்தபோது, (அவர்களுடைய புதல்வி) ஆயிஷா (ரலி) அவர்கள் (அபூபக்ர் (ரலி) அவர்களைப் பாராட்டிக்) கீழ்க்காணும் கவிதையைக் கூறினார்கள்:

"வெண்மை முகமுடை இவர்பொருட்டால்
மேகமிடம், மழைபெறப் பொழிவதும்;
உண்மை! அநாதை வரந்தவர்
உதவிய விதவைக் காவலராம்."

அப்போது அபூபக்ர் (ரலி) அவர்கள், "அல்லாஹ்வின் மீது ஆணையாக! இ(ந்தக் கவிதையான)து, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களையே குறிக்கும்" என்று கூறினார்கள்.[30]

---

29. இது பற்றிய செய்திகள் முஸ்னது அஹ்மதின் ஹதீஸ் எண்கள் - 9, 14, 25, 52, 55, 57, 74, 75, 166, 167, 315, 318, 319, 330, 399, 1319, 1332, 1468, 1570, 23972, 25059 ஆகியவற்றில் இடம்பெற்றுள்ளன. இதே கருத்தமைந்த ஹதீஸ் புகாரீ (3092, 3712, 4036, 4241, 6725, 6730), முஸ்லிம் (3612, 3614-3616) ஆகிய நூல்களிலும் இடம்பெற்றுள்ளது.

[illegible]

30. [illegible]

27 அப்துல் அஸீஸ் பின் ஜுரைஜ் (ரஹ்) கூறியதாவது:

நபி (ஸல்) அவர்(கள் இறந்தபோது, அவர்)களுக்கு எங்கே 'கப்று' (அடக்கக் குழி) தோண்டுவது என்று அறியாமல் நபித்தோழர்கள் (யோசித்துக்கொண்டு) இருந்தார்கள் இந்நிலையில், அபூபக்ர் (ரலி) அவர்கள், "இறைத்தூதர் (இறந்தால்,) அவர் இறந்த இடத்திலேயே அவருக்கு 'கப்று' தோண்டப்பட வேண்டும்' என்று நபி (ஸல்) அவர்கள் கூறியதை நான் கேட்டுள்ளேன்" என்றார்கள் உடனே நபித்தோழர்கள், நபி (ஸல்) அவர்களின் படுக்கையைச் சற்று நகர்த்திவிட்டு, அந்தப் படுக்கை விரிப்பின் கீழ்ப் பகுதியிலேயே (அவர்களுக்காகக்) குழி தோண்டினார்கள்[31]

٢٧ حدثنا عَبْدُ الرَّزَّاقِ قَالَ أَخْبَرَنِي ابْنُ جُرَيْجٍ قَالَ أَخْبَرَنِي أَبِي أَنَّ أَصْحَابَ النَّبِيِّ ﷺ لَمْ يَدْرُوا أَيْنَ يَقْبُرُونَ النَّبِيَّ ﷺ حَتَّى قَالَ أَبُو بَكْرٍ رَضِيَ اللَّهُ عَنْهُ: سَمِعْتُ رَسُولَ اللَّهِ ﷺ يَقُولُ: لَنْ يُقْبَرَ نَبِيٌّ إِلَّا حَيْثُ يَمُوتُ فَأَخَّرُوا فِرَاشَهُ وَحَفَرُوا لَهُ تَحْتَ فِرَاشِهِ.

28 அபூபக்ர் அஸ்ஸித்தீக் (ரலி) அவர்கள் கூறியதாவது:

நான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம், "நான் எனது தொழுகையி(ன் இறுதி அமர்வி)ல் ஓதிக்கொள்ள ஒரு பிரார்த்தனையை எனக்குக் கற்றுத் தாருங்கள்" என்று கேட்டேன். அப்போது அவர்கள், "அல்லாஹும்ம இன்னீ ழலம்த்து நஃப்ஸீ ழுல்மன் கஸீரன், வலா யஃக்ஃபிருத் துனூப இல்லா அன்த்த, ஃபஃக்ஃபிர்லீ மஃக்ஃபிரத்தம் மின் இன்திக்க வர்ஹம்னீ. இன்னக்க அன்த்தல் ஃகஃபூருர் ரஹீம்' எனப் பிரார்த்திப்பீராக" என்று கூறினார்கள்.

(பொருள்: இறைவா! எனக்கு நானே வெகுவாக அநீதியிழைத்துக்கொண்டேன். உன்னைத் தவிர, பாவங்களை மன்னிப்பவர் வேறெவருமில்லர். ஆகவே, எனக்கு உன்னிடமிருந்து மன்னிப்பை வழங்குவாயாக! எனக்குக் கருணை புரிவாயாக! நீயே மிகவும் மன்னிப்பவன்; பெரிதும் கருணை புரிபவன்.)[32]

٢٨ حدثنا حَجَّاجٌ قَالَ حَدَّثَنَا لَيْثٌ قَالَ حَدَّثَنِي يَزِيدُ بْنُ أَبِي حَبِيبٍ عَنْ أَبِي الْخَيْرِ عَنْ عَبْدِ اللَّهِ بْنِ عَمْرِو بْنِ الْعَاصِ عَنْ أَبِي بَكْرٍ الصِّدِّيقِ رَضِيَ اللَّهُ عَنْهُ أَنَّهُ قَالَ لِرَسُولِ اللَّهِ ﷺ: عَلِّمْنِي دُعَاءً أَدْعُو بِهِ فِي صَلَاتِي قَالَ قُلْ: اللَّهُمَّ إِنِّي ظَلَمْتُ نَفْسِي ظُلْمًا كَثِيرًا وَلَا يَغْفِرُ الذُّنُوبَ إِلَّا أَنْتَ فَاغْفِرْ لِي مَغْفِرَةً مِنْ عِنْدِكَ وَارْحَمْنِي إِنَّكَ أَنْتَ الْغَفُورُ الرَّحِيمُ.

29 கைஸ் பின் அபீ ஹாஸிம் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

٢٩ حدثنا حَمَّادُ بْنُ أُسَامَةَ قَالَ أَخْبَرَنَا إِسْمَاعِيلُ عَنْ

[illegible] புகாரீ ஹதீஸ் எண் - 1009) [illegible] 32630) [illegible]

31. [illegible] 1339 [illegible]

32. பார்க்க: [illegible] ஹதீஸ் எண் - 8 [illegible]

அபூபக்ர் (ரலி) அவர்கள் (மக்களிடையே) நின்று உரையாற்றினார்கள். அப்போது இறைவனைப் போற்றிப் புகழ்ந்துவிட்டு, "மக்களே! 'இறை நம்பிக்கை கொண்டவர்களே! உங்களை நீங்கள் காத்துக்கொள்ளுங்கள். நீங்கள் நேர்வழியில் இருந்தால், மற்றவர்களின் வழிகேடு உங்களுக்கு எந்தத் தீங்கும் செய்திடாது' எனும் இந்த (5:105ஆவது) இறைவசனத்தை நீங்கள் ஓதுகின்றீர்கள். (ஆனால், அதற்குப் பொருத்தமில்லாத பொருள் கொள்கின்றீர்கள்.) அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், 'அறிந்துகொள்ளுங்கள்! மக்கள் (தம் கண்ணெதிரே ஒருவன்) அநீதியிழைப்பதைக் கண்டும், அவனுடைய கைகளைப் பிடித்து அவனைத் தடுக்காமலிருந்தால், அல்லாஹ் பொதுவாக எல்லாரையும் சேர்த்துத் தண்டித்து விடலாம்' என்று கூறியதை நான் கேட்டுள்ளேன்" என்று குறிப்பிட்டார்கள். மற்றொரு முறை கூறுகையில், 'நாங்கள் கேட்டுள்ளோம்' என்று குறிப்பிட்டார்கள்.[33]

قيس قال: قام أبو بكر فحمد الله وأثنى عليه ثم قال: يا أيها الناس إنكم تقرءون هذه الآية ﴿يا أيها الذين آمنوا عليكم أنفسكم﴾ حتى أتى على آخر الآية ألا وإن الناس إذا رأوا الظالم لم يأخذوا على يديه أوشك الله أن يعمهم بعقابه ألا وإني سمعت رسول الله ﷺ يقول: إن الناس وقال مرة أخرى وإنا سمعنا رسول الله ﷺ.

30 கைஸ் பின் அபீ ஹாஸிம் (ரஹ்) அவர்கள் கூறுவதாவது:

அபூபக்ர் (ரலி) அவர்கள், "மக்களே! 'இறை நம்பிக்கை கொண்டவர்களே! உங்களை நீங்கள் காத்துக்கொள்ளுங்கள். நீங்கள் நேர்வழியில் இருந்தால், மற்றவர்களின் வழிகேடு உங்களுக்கு எந்தத் தீங்கும் செய்திடாது' எனும் இந்த (5:105ஆவது) இறைவசனத்தை நீங்கள் ஓதுகின்றீர்கள். (ஆனால், அதற்குப் பொருத்தமில்லாத பொருள் கொள்கின்றீர்கள்.) அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், 'மக்கள் (தம் கண்ணெதிரே ஒருவன்) அநீதியிழைப்பதைக் கண்டும், அவனுடைய கைகளைப் பிடித்துத் தடுக்காமலிருந்தால், அல்லாஹ் பொதுவாக எல்லாரையும் சேர்த்துத் தண்டித்து விடலாம்' என்று கூறியதை நான் கேட்டுள்ளேன்" என்று குறிப்பிட்டார்கள்.[34]

٣٠ حدثنا يزيد بن هارون قال أخبرنا إسماعيل بن أبي خالد عن قيس بن أبي حازم عن أبي بكر الصديق رضي الله عنه قال: أيها الناس إنكم تقرءون هذه الآية ﴿يا أيها الذين آمنوا عليكم أنفسكم لا يضركم من ضل إذا اهتديتم﴾ وإني سمعت رسول الله ﷺ يقول: إن الناس إذا رأوا الظالم فلم يأخذوا على يديه أوشك أن يعمهم الله بعقابه.

31 நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

தன்னுடைய அடிமையை மோசமாக நடத்துகின்ற உரிமையாளன் சொர்க்கத்தில் நுழைய மாட்டான்.

இதை அபூபக்ர் அஸ்ஸித்தீக் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.[35]

٣١ حدثنا يزيد قال أخبرنا همام عن فرقد السبخي وعفان قالا حدثنا مرة الطيب عن أبي بكر الصديق رضي الله عنه عن النبي ﷺ قال: لا يدخل الجنة سيئ الملكة.

---

33. பார்க்க: முந்தைய ஹதீஸ் எண் 1, 16. பின்வரும் ஹதீஸ் எண் 30, 50

34. மேற்கண்ட ஹதீஸே இங்கு பின்வரும் பதிவாகியுள்ளது.

35. இது பலவீனமான ஹதீஸாகும். இதன் அறிவிப்பாளர்களுள் ஒருவரான ஃபர்கத் பின் யஃகூப் பலவீனமானவர். பார்க்க: முஸ்னது அபீயஃலா ஹதீஸ் எண் 13, திர்மிதீ 1869ஆவது எண்ணிலும் இதே ஹதீஸ் இடம்பெற்றுள்ளது.

٣٢ حدثنا يزيد بن هارون أخبرنا صدقة بن موسى عن فرقد السبخي عن مرة الطيب عن أبي بكر الصديق رضي الله عنه عن النبي ﷺ قال: لا يدخل الجنة خب ولا بخيل ولا منان ولا سيء الملكة وأول من يدخل الجنة المملوك إذا أطاع الله وأطاع سيده.

32 நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

துரோகமிழைப்பவன், கஞ்சத்தனம் செய்பவன், செய்த உதவியைச் சொல்லிக் காட்டுபவன், தன்னுடைய அடிமையை மோசமாக நடத்துகின்ற உரிமையாளன் ஆகியோர் சொர்க்கத்தில் நுழைய மாட்டார்கள். அல்லாஹ்வுக்குக் கீழ்ப் படிந்து, தன் உரிமையாளனுக்கும் கீழ்ப்படிந்து நடந்திருந்தால், முதலில் சொர்க்கத்தில் நுழைபவன் (அந்த) அடிமையாகவே இருப்பான்.

இதை அபூபக்ர் அஸ்ஸித்தீக் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.[36]

٣٣ حدثنا روح قال حدثنا سعيد بن أبي عروبة عن أبي التياح عن المغيرة بن سبيع عن عمرو بن حريث أن أبا بكر الصديق رضي الله عنه أفاق من مرضة له فخرج إلى الناس فاعتذر بشيء وقال: ما أردنا إلا الخير ثم قال: حدثنا رسول الله ﷺ أن الدجال يخرج من أرض بالمشرق يقال لها خراسان يتبعه أقوام كأن وجوههم المجان المطرقة.

33 அம்ர் பின் ஹுரைஸ் (ரலி) அவர்கள் கூறியதாவது:

ஒரு முறை அபூபக்ர் (ரலி) அவர்கள் நோய்வாய்ப்பட்டிருந்து உடல்நலம் தேறிய பின், மக்களிடம் புறப்பட்டு வந்து, ஏதோ ஒன்றுக்காகச் சமாதானம் சொல்லிவிட்டு, "நாம் நன்மையையே நாடினோம்" என்றார்கள். பிறகு, "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், '(மாபெரும் குழப்பவாதியான) தஜ்ஜால், (உலக முடிவு நாள் நெருக்கத்தில்) கிழக்குத் திசையிலுள்ள ஒரு பகுதியிலிருந்து புறப்படுவான். அது 'குராசான்' என்று கூறப்படும். அப்போது அவனை ஒரு சமுதாயத்தார் பின்பற்றுவர். அவர்களுடைய முகங்கள் தோலால் மூடிய கேடயங்களைப் போன்று (அகலமாக) இருக்கும்' என்று எங்களிடம் கூறினார்கள்" என்றார்கள்.

இதை அபூபக்ர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.[37]

٣٤ حدثنا روح قال حدثنا شعبة عن يزيد بن خمير قال سمعت سليم بن عامر رجلا من أهل حمص وكان قد أدرك أصحاب رسول الله ﷺ وقال مرة قال: سمعت أوسط البجلي عن أبي بكر الصديق رضي الله عنه قال: سمعته يخطب الناس وقال مرة حين استخلف فقال: إن رسول الله ﷺ قام عام الأول مقامي هذا وبكى أبو بكر رضي الله عنه

34 அவ்சத் (பின் இஸ்மாயீல்) அல்பஜலீ (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

அபூபக்ர் (ரலி) அவர்கள் ஆட்சிப்பொறுப்பில் அமர்த்தப்பட்டபோது, மக்களுக்கு உரை நிகழ்த்தினார்கள். அப்போது அவர்கள், "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் (மதீனாவுக்கு வந்த) முதலாம் ஆண்டில், நான் நிற்கும் இதே இடத்தில் (இந்த மிம்பர் மீது) நின்றார்கள்" என்று கூறிவிட்டு, அழுதார்கள்!

---

36. மேற்கண்ட 13 ஹதீஸில் இடம்பெறும் ஃபர்கத் பின் யஃகூப் என்ற பலவீனமான அறிவிப்பாளர் இதை அறிவிப்பவர்தொடரிலும் இடம்பெறுவதால் இதுவும் பலவீனமான ஹதீஸேயாகும் [illegible] பார்க்க: முன்சென்ற ஹதீஸ் எண் - 13.

37. காண்க: முன்சென்ற ஹதீஸ் எண் - 12 மற்றும் அதன் அடிக்குறிப்பு

பிறகு, "அல்லாஹ்விடம் பாவமன்னிப்பையும் உடல் நலத்தையும் நான் வேண்டுகின்றேன். உறுதியான நம்பிக்கைக்குப் பின், உடல்நலத்தைவிட மிகச் சிறந்த வேறெதுவும் மக்களுக்கு ஒருபோதும் வழங்கப்படுவதில்லை. உண்மை பேசுவதைக் கடைப்பிடியுங்கள். அது சொர்க்கத்தில் சேர்த்துவிடும். பொய் பேச வேண்டாமென உங்களை நான் எச்சரிக்கிறேன். அது தீமைகளுக்கே வழிவகுக்கும். (பொய், தீமை ஆகிய) அவ்விரண்டும், (அவற்றைக் கடைப் பிடிப்போரை) நரகத்தில்தான் சேர்க்கும்.

"நீங்கள் ஒருவருக்கொருவர் உறவை முறித்துக்கொள்ளாதீர்கள்; கோபம் கொள்ளாதீர்கள்; பொறாமை கொள்ளாதீர்கள்; பிணங்கிக் கொள்ளாதீர்கள். வல்லமையும் மாண்பும் மிக்க அல்லாஹ் உங்களுக்குக் கட்டளையிட்டபடி, (அன்பு காட்டுவதில்) சகோதரர்களாய் இருங்கள்" என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறியதாகக் குறிப்பிட்டார்கள்.[38]

35 அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரலி) அவர்கள் கூறியதாவது:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "ஒருவர் குர்ஆனை, அது இறக்கியருளப்பெற்ற முறையில் செழுமையாக ஓத விரும்பினால், அவர் இப்னு உம்மி அப்தின் (அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரலி) அவர்களின்) ஓதல் முறைப்படி ஓதட்டும்" என்று (என்னைப் பற்றிக்) கூறினார்கள் என அபூபக்ர் (ரலி) அவர்களும் உமர் (ரலி) அவர்களும் என்னிடம் நற்செய்தி கூறினர்.

فَقَالَ: أَسْأَلُ اللَّهَ الْعَفْوَ وَالْعَافِيَةَ فَإِنَّ النَّاسَ لَمْ يُعْطَوْا
بَعْدَ الْيَقِينِ شَيْئًا خَيْرًا مِنَ الْعَافِيَةِ وَعَلَيْكُمْ بِالصِّدْقِ
فَإِنَّهُ فِي الْجَنَّةِ وَإِيَّاكُمْ وَالْكَذِبَ فَإِنَّهُ مَعَ الْفُجُورِ
وَهُمَا فِي النَّارِ وَلَا تَقَاطَعُوا وَلَا تَبَاغَضُوا وَلَا
تَحَاسَدُوا وَلَا تَدَابَرُوا وَكُونُوا إِخْوَانًا كَمَا أَمَرَكُمُ
اللَّهُ عَزَّ وَجَلَّ.

٣٥ حَدَّثَنَا يَحْيَى بْنُ آدَمَ قَالَ حَدَّثَنَا أَبُو بَكْرٍ يَعْنِي
ابْنَ عَيَّاشٍ عَنْ عَاصِمٍ عَنْ زِرٍّ عَنْ عَبْدِ اللَّهِ أَنَّ أَبَا
بَكْرٍ وَعُمَرَ رَضِيَ اللَّهُ عَنْهُمَا بَشَّرَاهُ أَنَّ رَسُولَ اللَّهِ
ﷺ قَالَ: مَنْ سَرَّهُ أَنْ يَقْرَأَ الْقُرْآنَ غَضًّا كَمَا أُنْزِلَ
فَلْيَقْرَأْهُ عَلَى قِرَاءَةِ ابْنِ أُمِّ عَبْدٍ. قَالَ حَدَّثَنَا يَحْيَى بْنُ
آدَمَ حَدَّثَنَا أَبُو بَكْرٍ وَيَزِيدُ بْنُ عَبْدِ الْعَزِيزِ عَنِ الْأَعْمَشِ
عَنْ إِبْرَاهِيمَ عَنْ عَلْقَمَةَ عَنْ عُمَرَ بْنِ الْخَطَّابِ رَضِيَ
اللَّهُ عَنْهُ عَنِ النَّبِيِّ ﷺ مِثْلَهُ قَالَ غَضًّا أَوْ رَطْبًا.

٣٦ حَدَّثَنَا أَبُو سَعِيدٍ مَوْلَى بَنِي هَاشِمٍ حَدَّثَنَا عَبْدُ
الْعَزِيزِ بْنُ مُحَمَّدٍ وَسَعِيدُ بْنُ سَلَمَةَ بْنِ أَبِي الْحُسَامِ
عَنْ عَمْرِو بْنِ أَبِي عَمْرٍو عَنْ أَبِي الْحُوَيْرِثِ عَنْ
مُحَمَّدِ بْنِ جُبَيْرِ بْنِ مُطْعِمٍ أَنَّ عُثْمَانَ رَضِيَ اللَّهُ عَنْهُ
قَالَ: تَمَنَّيْتُ أَنْ أَكُونَ سَأَلْتُ رَسُولَ اللَّهِ ﷺ مَاذَا
يُنْجِينَا مِمَّا يُلْقِي الشَّيْطَانُ فِي أَنْفُسِنَا فَقَالَ أَبُو بَكْرٍ

உமர் (ரலி) அவர்கள் வழியாக வந்துள்ள அறிவிப்பில், 'குர்ஆன் இறக்கியருளப் பெற்ற முறையில் செழுமையாக ஓத விரும்பினால்' என்பதோடு, 'அல்லது (மாற்றமடையாமல்) புத்தம் புதிதாக ஓத விரும்பினால்' என்ற வாசகம் இடம்பெற்றுள்ளது.[39]

36 உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்கள் கூறியதாவது:

நான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம், "ஷைத்தான் நம் உள்ளங்களில் ஏற்படுத்தக்கூடிய (ஓரிறைக் கொள்கைக்கு எதிரான மனக்குழப்பம், ஐயம் உள்ளிட்டவற்)றிலிருந்து நம்மை எது காப்பாற்றும்?" என்று கேட்க விரும்பியிருந்தேன் என நான் (அபூபக்ர் (ரலி) அவர்களிடம்) கூறினேன். அதற்கு அபூபக்ர் (ரலி) அவர்கள், "இது குறித்து

38. பார்க்க: முன்னோடிக் குறிப்பு எண் - 5

39. இந்த ஹதீஸ் [illegible] 170, 236 ஆகிய [illegible] பார்க்க: இணைப்புக் குறிப்பு எண் - 135

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் நான் (முன்பே) கேட்டுவிட்டேன்" என்று கூறிவிட்டு, "என் பெரிய தந்தை (அபூதாலிப்) அவர்களிடம் நான் எதை எடுத்துக் கூறியபோது, அதை அவர் ஏற்க மறுத்தாரோ, அந்தச் சொல்லை (ஏகத்துவ உறுதிமொழியை) நீங்கள் கூறுவதே, அதிலிருந்து உங்களைக் காப்பாற்றும்" என அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் என்றார்கள்.[40]

37 ஹசன் அல்பஸ்ரீ (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

அபூபக்ர் (ரலி) அவர்கள் மக்களுக்கு உரை நிகழ்த்தினார்கள்: "மக்களே! இவ்வுலகில் (ஏகத்துவ) உறுதி, உடல் நலம் ஆகியவற்றைவிடச் சிறந்த வேறெதுவும் மக்களுக்கு வழங்கப்படவில்லை. ஆகவே, வல்லமையும் மாண்பும் மிக்க அல்லாஹ்விடம் நீங்கள் அந்த இரண்டையும் கேளுங்கள்" என அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.[41]

38 இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறியதாவது:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) (அவர்கள் இறந்ததும்,) அவர்களுக்காக (நபித்தோழர்கள்) குழி வெட்ட விரும்பியபோது, (எப்படிக் குழி வெட்டுவது என்ற குழப்பம் ஏற்பட்டது.) அபூஉபைதா பின் அல்ஜர்ராஹ் (ரலி) அவர்கள் மக்காவாசிகள் வெட்டுவதைப் போல் (உட்குழியின்றி) குழி வெட்டுபவராக இருந்தார். அபூதல்ஹா எனும் ஸைத் பின் சஹ்ல் (ரலி) அவர்கள் மதீனாவாசிகளுக்கு உட்குழியுடன் குழி வெட்டுபவராயிருந்தார். அப்போது அப்பாஸ் (ரலி) அவர்கள் இருவரை அழைத்து, "நீ அபூஉபைதாவிடம் செல்" என்று ஒருவரிடமும், "அபூதல்ஹாவிடம் நீ செல்" என்று மற்றொருவரிடமும் கூறிவிட்டு, "இறைவா! உன் தூதருக்காக (அவர் எத்தகைய குழியில் அடக்க வேண்டுமென) நீயே தேர்வு செய்" என்று கூறினார்கள். அப்போது அபூதல்ஹா (ரலி) அவர்களை அழைத்து வரச் சென்றவர் அபூதல்ஹாவைக் கண்டு, அவரையே (முதலில்) அழைத்துவந்தார்.

رضي الله عنه: قد سألته عن ذلك فقال: ينجيكم من ذلك أن تقولوا ما أمرت عمي أن يقوله.

٣٧ حدثنا إسماعيل بن إبراهيم عن يونس عن الحسن أن أبا بكر رضي الله عنه خطب الناس فقال قال رسول الله ﷺ: يا أيها الناس إن الناس لم يعطوا في الدنيا خيرا من اليقين والمعافاة فسلوهما الله عز وجل.

٣٨ حدثنا يعقوب بن إبراهيم حدثنا أبي عن ابن إسحاق قال وحدثني حسين بن عبد الله عن عكرمة مولى ابن عباس عن ابن عباس قال: لما أرادوا أن يحفروا لرسول الله ﷺ وكان أبو عبيدة ابن الجراح يضرح كحفر أهل مكة وكان أبو طلحة زيد بن سهل يحفر لأهل المدينة فكان يلحد فدعا العباس رجلين فقال لأحدهما: اذهب إلى أبي عبيدة وللآخر: اذهب إلى أبي طلحة اللهم خر لرسولك

40. இது பலவீனமான ஹதீஸாகும். ஏனெனில், இதன் அறிவிப்பாளர்தொடரில் உஸ்மான் (ரலி) அவர்களிடமிருந்து அறிவிக்கும் முஹம்மது பின் ஜுபைர் பின் முத்இம் (ரஹ்) அவர்கள் உஸ்மான் (ரலி) அவர்களைச் சந்திக்கவில்லை. எனவே, இது அறிவிப்பாளர்தொடர் இடைமுறிந்த ஹதீஸ் ஆகும். எனினும், முன்சென்ற 20ஆவது ஹதீஸில் இதன் கருத்து இடம்பெற்றுள்ளதால், இதை 'மற்றவற்றின் துணையால் ஆதாரப்பூர்வமான ஹதீஸ்' என அறிஞர் ஷுஐப் அல்அர்னாஊத் உள்ளிட்ட அறிஞர் குழுவினர் கூறியுள்ளனர். இந்த ஹதீஸ் முஸ்னது அபீயஃலா (133) எனும் நூலிலும் இடம்பெற்றுள்ளது. அதுவும் அறிவிப்பாளர்தொடர் இடைமுறிந்ததாகும்.

41. இது பலவீனமான ஹதீஸாகும். இதன் அறிவிப்பாளர்களுள் அபூபக்ர் (ரலி) அவர்களிடமிருந்து அறிவிக்கும் ஹசன் அல்பஸ்ரீ (ரஹ்) அவர்கள் அபூபக்ர் (ரலி) அவர்களைச் சந்திக்கவில்லை. எனவே, இது இடைமுறிவு ஏற்பட்ட ஹதீஸாகும். எனினும், முன்சென்ற ஹதீஸ் எண் 5இல் இதே கருத்து அமைந்துள்ளது. எனவே, இதை 'மற்றவற்றின் துணையால் ஆதாரப்பூர்வமானது' என அறிஞர் ஷுஐப் அல்அர்னாஊத் உள்ளிட்ட அறிஞர் குழுவினர் தெரிவிக்கின்றனர்.

அபூதல்ஹா (ரலி) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுக்கு உட்குழியுடனேயே 'கப்று' (அடக்கக்குழி) வெட்டினார்கள்.[42]

39 உக்பா பின் அல்ஹாரிஸ் (ரலி) அவர்கள் கூறியதாவது:

நபி (ஸல்) அவர்கள் இறந்து சில நாட்களுக்குப் பின், நான் அபூபக்ர் அஸ்ஸித்தீக் (ரலி) அவர்களுடன் 'அஸ்ர்' தொழுதுவிட்டு வந்து கொண்டிருந்தேன். அவர்களுக்குப் பக்கத்தில் அலீ (ரலி) அவர்களும் நடந்து வந்துகொண்டிருந்தார்கள் அப்போது அலீ (ரலி) அவர்களின் புதல்வர் ஹஸன் (ரலி) அவர்கள் சிறுவர்களுடன் சேர்ந்து விளையாடிக்கொண்டிருந்ததைக் கண்ட அபூபக்ர் (ரலி) அவர்கள் (சிறுவர்) ஹஸனைத் தம் தோள்மீது தூக்கி வைத்துக் கொண்டார்கள். பிறகு,

"எந்தையும் அர்ப்பணம்நீர்
இறைத்தூதர்க் கொப்பானீர்!
உந்தை அலிக் கொப்பில்லை
உம்தோற்றம் ஹஸனாரே!"

என்று (கவி நடையில்) கூறினார்கள். (இதைக் கேட்டு) அலீ (ரலி) அவர்கள் சிரித்துக் கொண்டிருந்தார்கள்.[43]

قال: فوجد صاحب أبي طلحة أبا طلحة فجاء به فلحد لرسول الله ﷺ.

٣٩ حدثنا محمد بن عبد الله بن الزبير حدثنا عمر بن سعيد عن ابن أبي مليكة أخبرني عقبة بن الحارث قال: خرجت مع أبي بكر الصديق رضي الله عنه من صلاة العصر بعد وفاة النبي ﷺ بليال وعلي يمشي إلى جنبه فمر بحسن بن علي يلعب مع غلمان فاحتمله على رقبته وهو يقول:

وا بأبي شبه النبي ليس شبيها بعلي

قال وعلي يضحك.

٤٠ حدثنا أسود بن عامر حدثنا إسرائيل عن جابر عن عامر عن عبد الرحمن بن أبزى عن أبي بكر قال: كنت عند النبي ﷺ جالسا فجاء ماعز بن مالك فاعترف عنده مرة فرده ثم جاءه فاعترف عنده الثانية فرده ثم جاءه فاعترف الثالثة فرده فقلت له

40 அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறியதாவது:

(ஒரு நாள்) நான் நபி (ஸல்) அவர்களுக்கு அருகில் அமர்ந்திருந்தேன். அப்போது மாஇஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் வந்து, (தாம் விபசாரக் குற்றம் புரிந்துவிட்டதாகக் கூறி,) நபி (ஸல்) அவர்களிடம் ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். அவரை நபி (ஸல்) அவர்கள் திருப்பியனுப்பி விட்டார்கள். அவர் இரண்டாவது முறை(யாக மீண்டும் வந்து, முன் போன்றே) ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். அப்போதும், அவரை நபி (ஸல்) அவர்கள் திருப்பி அனுப்பிவிட்டார்கள். அவர் மூன்றாவது முறை ஒப்புதல் வாக்குமூலம் அளித்தபோதும், அவரை நபி (ஸல்) அவர்கள் திருப்பி அனுப்பினார்கள்.

---

42. [illegible]

[illegible] 'அல்லஹ்து' என்று கூறப்படும் [illegible]

[illegible] என்று கூறப்படும் [illegible]

43. [illegible] 3542, 3750 [illegible] (53) [illegible] (2464) [illegible]

அப்போது அவரிடம் நான், "நீங்கள் நான்காவது முறை ஒப்புதல் வாக்குமூலம் அளித்தால், உங்களுக்குக் கல்லெறி தண்டனை நிறைவேற்றி விடுவார்கள்" என்று சொன்னேன். ஆனால், அவர் நான்காவது முறையும் வந்து ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். அப்போது அவரை நபி (ஸல்) அவர்கள் (அங்கேயே) நிறுத்தி வைத்துக்கொண்டு, அவரைப் பற்றி (மக்களிடம்) விசாரித்தார்கள். மக்கள், "அவரைப் பற்றி நாங்கள் நல்லவிதமாகவே அறிகிறோம். (அவர் தெளிந்த அறிவோடுதான் உள்ளார்)" என்று கூறினர். பிறகு அவரைக் கல்லால் எறிந்து கொல்லும்படி நபி (ஸல்) அவர்கள் உத்தரவிட்டார்கள்.[44]

إِنَّكَ إِنِ اعْتَرَفْتَ الرَّابِعَةَ رَجَمَكَ قَالَ: فَاعْتَرَفَ الرَّابِعَةَ فَحَبَسَهُ ثُمَّ سَأَلَ عَنْهُ فَقَالُوا: مَا نَعْلَمُ إِلَّا خَيْرًا قَالَ: فَأَمَرَ بِرَجْمِهِ.

41 'ஸலாஸில்'[45] எனும் போரில் அபூபக்ர் (ரலி) அவர்களுடன் இருந்த ராஃபிஉ அத்தாயீ (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

நான் அபூபக்ர் (ரலி) அவர்களிடம், "(உங்களை ஆட்சியாளராகத் தேர்ந்தெடுக்கும்போது) மக்கள் உறுதிமொழி அளித்தபோது என்ன பேசப்பட்டது?" என்று வினவினேன். அப்போது அபூபக்ர் (ரலி) அவர்கள், அன்சாரிகள் (மதீனாவாசிகள்) தம்மிடம் பேசியதைப் பற்றியும், அதற்குத் தாம் அளித்த பதிலைப் பற்றியும், உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள் மதீனாவாசிகளிடம் பேசியதைப் பற்றியும், நபி (ஸல்) அவர்கள் நோய் வாய்ப்பட்டிருந்தபோது, மக்களுக்குத் தம்மைத் தலைமை தாங்கித் தொழுவிக்குமாறு தமக்குக் கட்டளையிட்டதைக் குறித்து உமர் (ரலி) அவர்கள் மக்களிடம் நினைவூட்டிப் பேசியதைப் பற்றியும் விளக்கினார்கள். பிறகு, "இந்த அடிப்படையில்தான் மக்கள் (என்னை ஆட்சியாளராக ஏற்பதாக) என்னிடம் உறுதிமொழி அளித்தனர். அதை மக்களிடமிருந்து நானும் ஏற்றுக்கொண்டேன். (ஆயினும்) அது ஒரு குழப்பமாக உருவெடுத்து, அதன் பின்னர் மக்கள் மதம் மாறிவிடுவார்களோ என நான் அஞ்சினேன்" என்றும் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.[46]

41 حَدَّثَنَا عَلِيُّ بْنُ عَيَّاشٍ حَدَّثَنَا الْوَلِيدُ بْنُ مُسْلِمٍ قَالَ أَخْبَرَنِي يَزِيدُ بْنُ سَعِيدِ بْنِ ذِي عَصْوَانَ الْعَنْسِيُّ عَنْ عَبْدِ الْمَلِكِ بْنِ عُمَيْرٍ اللَّخْمِيِّ عَنْ رَافِعٍ الطَّائِيِّ رَفِيقِ أَبِي بَكْرٍ فِي غَزْوَةِ السَّلَاسِلِ قَالَ وَسَأَلْتُهُ عَمَّا قِيلَ مِنْ بَيْعَتِهِمْ فَقَالَ وَهُوَ يُحَدِّثُهُ عَمَّا تَكَلَّمَتْ بِهِ الْأَنْصَارُ وَمَا كَلَّمَهُمْ بِهِ وَمَا كَلَّمَ بِهِ عُمَرُ بْنُ الْخَطَّابِ الْأَنْصَارَ وَمَا ذَكَّرَهُمْ بِهِ مِنْ إِمَامَتِي إِيَّاهُمْ بِأَمْرِ رَسُولِ اللَّهِ ﷺ فِي مَرَضِهِ فَبَايَعُونِي لِذَلِكَ وَقَبِلْتُهَا مِنْهُمْ وَتَخَوَّفْتُ أَنْ تَكُونَ فِتْنَةٌ تَكُونُ بَعْدَهَا رِدَّةٌ.

---

44. [illegible]

45. [illegible]

46. [illegible]

42 வஹ்ஷீ பின் ஹர்ப் (ரலி) அவர்கள் கூறியதாவது:

(கலீஃபா) அபூபக்ர் (ரலி) அவர்கள், மார்க்கத்தைவிட்டு வெளியேறியவர்களுக்கு எதிராக போர் தொடுக்கும் பொறுப்பை (ஹுரூபுர் ரித்தா) காலித் பின் அல்வலீத் (ரலி)[47] அவர்களிடம் ஒப்படைத்தார்கள். மேலும், "காலித் பின் அல்வலீத், அல்லாஹ்வின் அடியார்களிலும், இன்ன குலத்து மக்களிலும் நல்லவர் ஆவார். அவர் 'அல்லாஹ்வின் வாட்களுள் ஒரு வாள்' ஆவார். அவரை வல்லமையும் மாண்பும் மிக்க அல்லாஹ் இறைமறுப்பாளர்களுக்கும் நயவஞ்சகர்களுக்கும் எதிராக உருவி(ப் பயன்) படுத்தினான் என்று நபி (ஸல்) அவர்கள் கூறியதை நான் கேட்டுள்ளேன்" என்று அபூபக்ர் (ரலி) கூறினார்கள்.[48]

٤٢ حدثنا عليُّ بنُ عيّاشٍ حدثنا الوليدُ بنُ مسلمٍ حدثني وَحشيُّ بنُ حربٍ عن أبيه عن جدِّه وَحشيِّ بنِ حربٍ أنّ أبا بكرٍ رضيَ اللهُ عنهُ عقدَ لخالدِ بنِ الوليدِ على قتالِ أهلِ الرِّدّةِ وقالَ إنّي سمعتُ رسولَ اللهِ ﷺ يقولُ: نِعمَ عبدُ اللهِ وأخو العشيرةِ خالدُ بنُ الوليدِ وسيفٌ من سيوفِ اللهِ سلَّهُ اللهُ عزَّ وجلَّ على الكفّارِ والمنافقين.

43 அவ்சத் பின் அம்ர் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் இறந்தபின், ஓர் ஆண்டு கழித்து நான் மதீனாவுக்கு வந்தேன். அப்போது அபூபக்ர் (ரலி) அவர்கள் மக்களுக்கு உரை நிகழ்த்திக்கொண்டிருந்தார்கள். "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் (மதீனாவுக்கு வந்த) முதலாம் ஆண்டில் எங்களிடையே நின்றார்கள்" என்று கூறிவிட்டு, தேம்பித் தேம்பி மூன்றுமுறை அழுதார்கள்! பிறகு, "மக்களே! அல்லாஹ்விடம் உடல் நலத்தைக் கேளுங்கள். உடல் நலத்திற்குப் பின், உறுதியான நம்பிக்கை(யை)

٤٣ حدثنا عبدُ الرحمنِ بنُ مهديٍّ حدثنا معاويةُ يعني ابنَ صالحٍ عن سُليمِ بنِ عامرٍ الكلاعيِّ عن أوسطَ بنِ عمرٍو: قالَ قدمتُ المدينةَ بعدَ وفاةِ رسولِ اللهِ ﷺ بسنةٍ فألفيتُ أبا بكرٍ يخطبُ الناسَ فقالَ: قامَ فينا رسولُ اللهِ ﷺ عامَ الأوّلِ فخنقتهُ العبرةُ ثلاثَ مرارٍ ثمّ قالَ: يا أيّها الناسُ سلوا اللهَ المعافاةَ فإنّهُ لم يؤتَ أحدٌ مثلَ يقينٍ بعدَ معافاةٍ ولا أشدَّ من

47. [illegible] - 3063, 3757, 4262, 7001. [illegible]

48. [illegible] 4262.

போன்ற ஒன்று ஒருபோதும் யாருக்கும் கொடுக்கப்படுவதில்லை இறைமறுப்புக்குப்பின், (உண்மை பற்றி) ஐயப்படுவதைவிடக் கொடியது எதுவும் இல்லை. உண்மை பேசுவதைக் கடைப்பிடியுங்கள். ஏனெனில், அது நன்மைக்கு வழி வகுக்கும் (உண்மை, நன்மை ஆகிய) அவ்விரண்டும் சொர்க்கத்தில் சேர்க்கும் பொய் பேச வேண்டாமென உங்களை நான் எச்சரிக்கிறேன் அது தீமைகளுக்கே வழிவகுக்கும் (பொய், தீமை ஆகிய) அவ்விரண்டும் (அவற்றைக் கடைப்பிடிப்போரை) நரகத்தில் தான் சேர்க்கும்.[49]

ريبة بعد كفر وعليكم بالصدق فإنه يهدي إلى البر وهما في الجنة وإياكم والكذب فإنه يهدي إلى الفجور وهما في النار.

44 ஆயிஷா (ரலி) அவர்கள் கூறியதாவது:

(என் தந்தை) அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு இறப்பு நெருங்கியபோது, "இன்று என்ன கிழமை?" என்று கேட்டார்கள். மக்கள், "திங்கட்கிழமை" என்று கூறினர். "இன்றிரவு நான் இறந்துவிட்டால், (இன்றே என்னை அடக்கம் செய்துவிடுங்கள்) நாளையாகட்டும் என்று எதிர்பார்க்காதீர்கள். ஏனெனில், பகல்-இரவுகளுள் எனக்கு மிகவும் விருப்பமானது, அவற்றுள் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுக்கு மிக நெருக்கமாக இருந்ததுதான் (திங்கட்கிழமை நபிகளாருக்கு நெருக்கமான தினமாகும்)" என்று அவர்கள் கூறினார்கள்.[50]

٤٤ حدثنا محمد بن بشر أبو سعيد الصاغاني المكفوف حدثنا هشام بن عروة عن أبيه عن عائشة رضي الله عنها قالت: إن أبا بكر رضي الله عنه لما حضرته الوفاة قال: أي يوم هذا؟ قالوا: يوم الاثنين قال: فإن مت من ليلتي فلا تنتظروا بي الغد فإن أحب الأيام والليالي إلي أقربها من رسول الله ﷺ.

٤٥ حدثنا وكيع عن سفيان حدثنا عمرو بن مرة عن أبي عبيدة قال: قام أبو بكر رضي الله عنه بعد وفاة رسول الله ﷺ بعام فقال: قام رسول الله ﷺ مقامي عام الأول فقال: سلوا الله العافية فإنه لم يعط عبد شيئا أفضل من العافية وعليكم بالصدق والبر فإنهما في الجنة وإياكم والكذب والفجور فإنهما في النار.

45 அபூஉபைதா (ஆமிர் பின் அப்தில்லாஹ் அல்ஜர்ராஹ்-ரஹ்) அவர்கள் கூறியதாவது:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் இறந்து ஓர் ஆண்டு கழிந்தபின், அபூபக்ர் (ரலி) அவர்கள் எழுந்து (உரையாற்றினார்கள். அப்போது), "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் (மதீனாவுக்கு வந்த) முதலாம் ஆண்டில் நான் நிற்கும் இதே இடத்தில் நின்றார்கள்" என்று கூறிவிட்டு, "(மக்களே!) நீங்கள் அல்லாஹ்விடம் உடல் நலத்தைக் கேளுங்கள். ஏனெனில், அடியாளுக்கு உடல் நலத்தைப் போன்று சிறந்த வேறெதுவும் வழங்கப்படுவதில்லை உண்மை பேசுவதையும் நன்மை புரிவதையும் கடைப்பிடியுங்கள் அவ்விரண்டும் சொர்க்கத்தில் சேர்க்கும் பொய் கூற வேண்டாமென்றும் தீமைகள் புரிய வேண்டாமென்றும் உங்களை நான் எச்சரிக்கிறேன். (பொய், தீமை ஆகிய) அவ்விரண்டும் நரகத்தில்தான் சேர்க்கும்" என்று கூறினார்கள்.[51]

---

49. [illegible]

50. [illegible]

51. [illegible]

46 அலீ (ரலி) அவர்கள் கூறியதாவது:

நான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடமிருந்து (நேரடியாக) எதையேனும் செவியுற்றால், அதன் மூலம் அல்லாஹ் எனக்குப் பயனளிக்கக்கூடிய அளவுக்குப் பயனளிப்பான். (அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடமிருந்து வேறு யாரேனும் எனக்கு அறிவித்தால், அவரை நான் சத்தியம் செய்யச் சொல்வேன். அவர் சத்தியம் செய்தால், அதை உண்மை என நான் ஏற்பேன்.) அபூபக்ர் (ரலி) அவர்கள் என்னிடம் பின்வருமாறு அறிவித்தார்கள். -அபூபக்ர் (ரலி) அவர்கள் உண்மையே உரைத்தார்கள்- அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

முஸ்லிம் ஒருவர் ஒரு பாவத்தைச் செய்துவிட்டு, அங்கத் தூய்மை (உளூ) செய்து, பிறகு இரண்டு 'ரக்அத்'கள் தொழுது, உயர்ந்தோனாகிய அல்லாஹ்விடம் அந்தப் பாவத்தை மன்னிக்குமாறு கோரினால், அவரை அல்லாஹ் மன்னிக்காமல் இருப்பதில்லை. பிறகு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் பின்வரும் இரு இறைவசனங்களையும் ஓதிக் காட்டினார்கள்:

٤٦ حدثنا عبد الرحمن بن مهدي حدثنا شعبة عن
عثمان بن المغيرة قال: سمعت علي بن ربيعة من
بني أسد يحدث عن أسماء أو ابن أسماء من بني
فزارة قال قال علي رضي الله عنه: كنت إذا سمعت
من رسول الله ﷺ شيئا نفعني الله بما شاء أن
ينفعني منه وحدثني أبو بكر وصدق أبو بكر قال
قال رسول الله ﷺ: ما من مسلم يذنب ذنبا ثم
يتوضأ فيصلي ركعتين ثم يستغفر الله تعالى لذلك
الذنب إلا غفر له وقرأ هاتين الآيتين ﴿ومن يعمل
سوءا أو يظلم نفسه ثم يستغفر الله يجد الله
غفورا رحيما﴾ ﴿والذين إذا فعلوا فاحشة أو ظلموا
أنفسهم﴾ الآية حدثنا محمد بن جعفر حدثنا شعبة
قال: سمعت عثمان من آل أبي عقيل الثقفي إلا أنه
قال قال شعبة: وقرأ إحدى هاتين الآيتين ﴿من
يعمل سوءا يجز به﴾ ﴿والذين إذا فعلوا فاحشة﴾.

"யாரேனும் தீமையைச் செய்து, அல்லது தனக்குத் தானே அநீதியிழைத்துப் பின்னர் அல்லாஹ்விடம் பாவமன்னிப்புத் தேடினால், மன்னிப்பவனாகவும் நிகரற்ற அன்புடையோனாகவும் அல்லாஹ்வை அவர் காண்பார்." (4:110)

"அவர்கள் வெட்கக் கேடானதைச் செய்தாலோ, தமக்குத் தாமே அநீதியிழைத்துக்கொண்டாலோ, அல்லாஹ்வை நினைத்துத் தம் பாவங்களுக்கு மன்னிப்புத் தேடுவார்கள்." (3:135).

முஹம்மது பின் ஜஅஃபர் (ரஹ்) அவர்கள் வழியாக வந்துள்ள அறிவிப்பில், "மேற்கண்ட இரு வசனங்களுள் ஒன்றை ஓதினார்கள்" என்று இந்த ஹதீஸின் அறிவிப்பாளர்களுள் ஒருவரான ஷுஅபா (ரஹ்) அவர்கள் கூறியதாக இடம்பெற்றுள்ளது.[52]

[illegible] 15, 6, 10, 17, 34, 37 [illegible] 47, 63 [illegible]

52. [illegible]

47 உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள் கூறியதாவது:

அபூபக்ர் (ரலி) அவர்கள் எங்களிடையே உரையாற்றினார்கள். அப்போது, "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் (மதீனாவுக்கு வந்த) முதலாம் ஆண்டில் எங்களிடையே நின்று உரையாற்றினார்கள். அப்போது, 'அறிந்துகொள்ளுங்கள்! உறுதி(யான நம்பிக்கை)க்குப்பின், உடல்நலத்தைவிட மிகச் சிறந்த எதுவும் மக்களிடையே பங்கிடு செய்யப்படவில்லை. அறிந்துகொள்ளுங்கள்! உண்மையுரைப்பதும் நன்மை புரிவதும் சொர்க்கத்தில் சேர்க்கும். எச்சரிக்கை! பொய்யுரைப்பதும் தீமைகள் புரிவதும் நரகத்தில்தான் சேர்க்கும்' என்று கூறினார்கள்" என்றார்கள்.[53]

٤٧ حدثنا بهز بن أسد حدثنا سليم بن حيان قال سمعت قتادة يحدث عن حميد بن عبد الرحمن أن عمر قال: إن أبا بكر رضي الله عنه خطبنا فقال: إن رسول الله ﷺ قام فينا عام أول فقال: ألا إنه لم يقسم بين الناس شيء أفضل من المعافاة بعد اليقين ألا إن الصدق والبر في الجنة ألا إن الكذب والفجور في النار.

48 பராஉ (ரலி) அவர்கள் கூறியதாவது:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் (அபூபக்ர் (ரலி) அவர்களுடன்) மக்காவிலிருந்து மதீனாவை நோக்கி (புலம்பெயர்ந்து) சென்றபோது, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுக்குத் தாகம் ஏற்பட்டது. அப்போது அவர்கள் (இருவரும்) ஆடு மேய்க்கும் இடையன் ஒருவனைக் கடந்து சென்றார்கள். (இது குறித்து) அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறுகையில், "நான் கோப்பை ஒன்றை எடுத்து, அதில் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுக்காகச் சிறிது பால் கறந்து கொண்டு வந்தேன். அதை அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் நான் மனநிறைவடையும்வரை பருகினார்கள்" என்றார்கள்.[54]

٤٨ حدثنا محمد بن جعفر حدثنا شعبة قال سمعت أبا إسحاق يقول: سمعت البراء قال: لما أقبل رسول الله ﷺ من مكة إلى المدينة عطش رسول الله ﷺ فمروا براعي غنم قال أبو بكر الصديق رضي الله عنه: فأخذت قدحا فحلبت فيه لرسول الله ﷺ كثبة من لبن فأتيته به فشرب حتى رضيت.

49 அபூஹுரைரா (ரலி) அவர்கள் கூறியதாவது:

அபூபக்ர் (ரலி) அவர்கள் (நபி (ஸல்) அவர்களிடம்), "அல்லாஹ்வின் தூதரே! நான் காலையிலும் மாலையிலும் இரவில் எனது படுக்கையிலும் ஓதுவதற்கேற்ற (பிரார்த்தனை) ஒன்றை எனக்குக் கற்றுத்தாருங்கள்" என்று கேட்டார்கள். அதற்கு நபி (ஸல்)

٤٩ حدثنا بهز حدثنا شعبة حدثنا يعلى بن عطاء قال: سمعت عمرو بن عاصم يقول: سمعت أبا هريرة يقول: قال أبو بكر رضي الله عنه: يا رسول الله علمني شيئا أقوله إذا أصبحت وإذا أمسيت وإذا أخذت مضجعي قال: قل اللهم فاطر السموات

53. [illegible] 5, 6, 10, 17, 34, 45, 47, 63 [illegible]

54. [illegible]

அவர்கள், "அல்லாஹும்ம ஃபாத்திரஸ் ஸமாவாத்தி, வல் அர்ளி, ஆலிமல் ஃகைபி, வஷ்ஷஹாதத்தி" (அல்லது) "அல்லாஹும்ம ஆலிமல் ஃகைபி வஷ்ஷஹாதத்தி ஃபாத்திரஸ் ஸமாவாத்தி வல் அர்ளி ரப்ப குல்லி ஷைஇன் வமலீ(க்)கஹு - அஷ்ஹது அல்லா இலாஹ இல்லா அன்த்த அஊது பிக்க மின் ஷர்ரி நஃப்ஸீ வஷர்ரிஷ் ஷைத்தானி வஷிர்கிஹி என்று கூறுங்கள்!" என்றார்கள்.

(பொருள்: இறைவா! வானங்களையும் பூமியையும் முன்மாதிரியின்றிப் படைத்தவனே! மறைவானதையும் வெளிப்படையானதையும் அறிந்தவனே! அனைத்தையும் படைத்துப் பரிபாலிக்கின்ற இறைவனே! அனைத்துக்கும் அரசனே! உன்னைத் தவிர வேறு இறைவன் இல்லை எனச் சாட்சியம் கூறுகிறேன். என்னுடைய மனத்தின் தீமையிலிருந்தும் ஷைத்தானின் தீங்கிலிருந்தும் இறைவனுக்கு இணை வைக்கும் அவனது குழப்பத்திலிருந்தும் உன்னிடம் நான் பாதுகாவல் கோருகின்றேன்).[55]

وَالْأَرْضِ عَالِمَ الْغَيْبِ وَالشَّهَادَةِ أَوْ قَالَ: اللَّهُمَّ عَالِمَ الْغَيْبِ وَالشَّهَادَةِ فَاطِرَ السَّمَوَاتِ وَالْأَرْضِ رَبَّ كُلِّ شَيْءٍ وَمَلِيكَهُ أَشْهَدُ أَنْ لَا إِلَهَ إِلَّا أَنْتَ أَعُوذُ بِكَ مِنْ شَرِّ نَفْسِي وَشَرِّ الشَّيْطَانِ وَشِرْكِهِ.

حَدَّثَنَا عَفَّانُ حَدَّثَنَا شُعْبَةُ عَنْ يَعْلَى بْنِ عَطَاءٍ قَالَ سَمِعْتُ عَمْرَو بْنَ عَاصِمِ بْنِ عَبْدِ اللَّهِ فَذَكَرَ مِثْلَهُ.

50 கைஸ் பின் அபீஹாஸிம் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

அபூபக்ர் (ரலி) அவர்கள் (மக்களிடையே நின்று) உரையாற்றினார்கள். அப்போது அவர்கள், "மக்களே! 'இறைநம்பிக்கை கொண்டவர்களே! உங்களை நீங்கள் காத்துக்கொள்ளுங்கள். நீங்கள் நேர்வழியில் இருந்தால், மற்றவர்களின் வழிகேடு உங்களுக்கு எந்தத் தீங்கும் செய்திடாது' எனும் இந்த (5:105ஆவது) இறைவசனத்தை நீங்கள் ஓதுகின்றீர்கள். அதற்கு அல்லாஹ் (கூறி) வைத்துள்ள பொருள் அல்லாத வேறொரு பொருளைக் கொடுக்கிறீர்கள். ஆனால், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், 'மக்கள் தம்மிடையே தீமை நடைபெறுவதைக் கண்டும் (வலிமையிருந்தும்), அதை அவர்கள் தடுக்காமலிருந்தால், அல்லாஹ் பொதுவாக எல்லாரையும் சேர்த்துத் தண்டித்துவிடலாம்' என்று கூறியதை நான் கேட்டுள்ளேன்" என்றார்கள்.[56]

٥٠ حَدَّثَنَا مُحَمَّدُ بْنُ جَعْفَرٍ حَدَّثَنَا شُعْبَةُ عَنْ إِسْمَاعِيلَ قَالَ سَمِعْتُ قَيْسَ بْنَ أَبِي حَازِمٍ يُحَدِّثُ عَنْ أَبِي بَكْرٍ الصِّدِّيقِ رَضِيَ اللَّهُ عَنْهُ أَنَّهُ خَطَبَ فَقَالَ: يَا أَيُّهَا النَّاسُ إِنَّكُمْ تَقْرَءُونَ هَذِهِ الْآيَةَ وَتَضَعُونَهَا عَلَى غَيْرِ مَا وَضَعَهَا اللَّهُ ﴿يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا عَلَيْكُمْ أَنْفُسَكُمْ لَا يَضُرُّكُمْ مَنْ ضَلَّ إِذَا اهْتَدَيْتُمْ﴾ سَمِعْتُ رَسُولَ اللَّهِ ﷺ يَقُولُ: إِنَّ النَّاسَ إِذَا رَأَوُا الْمُنْكَرَ بَيْنَهُمْ فَلَمْ يُنْكِرُوهُ يُوشِكُ أَنْ يَعُمَّهُمُ اللَّهُ بِعِقَابِهِ.

٥١ حَدَّثَنَا مُحَمَّدُ بْنُ جَعْفَرٍ حَدَّثَنَا شُعْبَةُ عَنْ تَوْبَةَ الْعَنْبَرِيِّ قَالَ سَمِعْتُ أَبَا سَوَّارٍ الْقَاضِيَ يَقُولُ عَنْ أَبِي بَرْزَةَ الْأَسْلَمِيِّ قَالَ: أَغْلَظَ رَجُلٌ لِأَبِي بَكْرٍ

51 அபூபர்ஸா அல்அஸ்லமீ (ரலி) அவர்கள் கூறியதாவது:

(முஸ்லிம்களுள்) ஒருவர் (கலீஃபா) அபூபக்ர் அஸ்ஸித்தீக் (ரலி) அவர்களைக் கடுமை

55. [illegible] 14405, [illegible] 3390, [illegible] 1502, [illegible] 7644, 7652, 9756, 10326, [illegible] 1682, [illegible] 2573, [illegible] 1662, [illegible] 27052, [illegible] 27054, [illegible] 7680 [illegible]

56. காண்க: முஸ்னது அஹ்மத் ஹதீஸ் எண்கள் - 1, 16, 29, 30.

பாக ஏசினார். அப்போது நான், "அவருடைய கழுத்தை வெட்டிவிடட்டுமா?" என்று கேட்டேன். அதற்காக அபூபக்ர் (ரலி) அவர்கள் என்னைக் கடிந்துகொண்டு, "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுக்குப் பின், வேறெவருக்கும் அந்த உரிமை இல்லை" என்றார்கள்.[57]

الصِّدِّيقِ رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ فَقَالَ أَبُو بَرْزَةَ: أَلاَ أَضْرِبُ عُنُقَهُ قَالَ فَانْتَهَرَهُ وَقَالَ: مَا هِيَ لأَحَدٍ بَعْدَ رَسُولِ اللَّهِ ﷺ.

52 நபி (ஸல்) அவர்களின் துணைவி ஆயிஷா (ரலி) அவர்கள் கூறியதாவது:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் புதல்வி ஃபாத்திமா (ரலி) அவர்கள் (அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் இறந்த பிறகு, கலீஃபா) அபூபக்ர் அஸ்ஸித்தீக் (ரலி) அவர்களிடம் ஆளனுப்பி, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுக்கு அல்லாஹ் ஒதுக்கித் தந்திருந்த மதீனா(விலிருந்த 'பனூ நளீர்' யூதர்களிடமிருந்து கிடைத்த) சொத்து, 'ஃபதக்' ('ஃபய்உச்')[58] சொத்து, 'கைபர்'ச் சொத்தில் எஞ்சிய ஐந்தில் ஒரு பாகம் (குமுஸ்) ஆகியவற்றில் தமக்குச் சேர வேண்டிய வாரிசுரிமையைக் கோரினார்கள்.

அதற்கு (கலீஃபா) அபூபக்ர் (ரலி) அவர்கள், "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், '(இறைத் தூதர்களான) எங்களுக்கு யாரும் (சொத்தில்) வாரிசாக முடியாது. நாங்கள் விட்டுச் செல்பவையெல்லாம் தர்மம் செய்யப்பட வேண்டியவை ஆகும். இந்தச் செல்வத்திலிருந்தே முஹம்மதின் குடும்பத்தாரும் உண்பார்கள்' என்று கூறியிருக்கிறார்கள். (எனவே,) அல்லாஹ்வின் மீதாணையாக! அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் தர்மமாக விட்டுச் சென்ற இந்தச் சொத்தில் நான் சிறிதும் மாற்றம் செய்யமாட்டேன். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களது காலத்தில் எந்நிலையில் இந்தச் சொத்துகள் இருந்துவந்தனவோ, அதே நிலையில் அவை நீடிக்கும். இதில் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் செயல்பட்ட படியே நானும் செயல்படுவேன்" என்று கூறி, ஃபாத்திமா (ரலி) அவர்களிடம் (அவற்றில்) எதையும் ஒப்படைக்க மறுத்துவிட்டார்கள்.

٥٢ حَدَّثَنَا حَجَّاجُ بْنُ مُحَمَّدٍ حَدَّثَنَا لَيْثٌ حَدَّثَنِي عُقَيْلٌ عَنِ ابْنِ شِهَابٍ عَنْ عُرْوَةَ بْنِ الزُّبَيْرِ عَنْ عَائِشَةَ رَضِيَ اللَّهُ عَنْهَا زَوْجِ النَّبِيِّ ﷺ أَنَّهَا أَخْبَرَتْهُ أَنَّ فَاطِمَةَ بِنْتَ رَسُولِ اللَّهِ ﷺ أَرْسَلَتْ إِلَى أَبِي بَكْرٍ الصِّدِّيقِ رَضِيَ اللَّهُ عَنْهُ تَسْأَلُهُ مِيرَاثَهَا مِنْ رَسُولِ اللَّهِ ﷺ مِمَّا أَفَاءَ اللَّهُ عَلَيْهِ بِالْمَدِينَةِ وَفَدَكٍ وَمَا بَقِيَ مِنْ خُمُسِ خَيْبَرَ فَقَالَ أَبُو بَكْرٍ رَضِيَ اللَّهُ عَنْهُ إِنَّ رَسُولَ اللَّهِ ﷺ قَالَ: لاَ نُورَثُ مَا تَرَكْنَا صَدَقَةٌ إِنَّمَا يَأْكُلُ آلُ مُحَمَّدٍ فِي هَذَا الْمَالِ وَإِنِّي وَاللَّهِ لاَ أُغَيِّرُ شَيْئًا مِنْ صَدَقَةِ رَسُولِ اللَّهِ ﷺ عَنْ حَالِهَا الَّتِي كَانَتْ عَلَيْهَا فِي عَهْدِ رَسُولِ اللَّهِ ﷺ وَلأَعْمَلَنَّ فِيهَا بِمَا عَمِلَ بِهِ رَسُولُ اللَّهِ ﷺ فَأَبَى أَبُو بَكْرٍ أَنْ يَدْفَعَ إِلَى فَاطِمَةَ مِنْهَا شَيْئًا فَوَجَدَتْ فَاطِمَةُ عَلَى أَبِي بَكْرٍ فِي ذَلِكَ فَقَالَ أَبُو بَكْرٍ: وَالَّذِي نَفْسِي بِيَدِهِ لَقَرَابَةُ رَسُولِ اللَّهِ ﷺ أَحَبُّ إِلَيَّ أَنْ أَصِلَ مِنْ قَرَابَتِي وَأَمَّا الَّذِي شَجَرَ بَيْنِي وَبَيْنَكُمْ

இதனால் அபூபக்ர் (ரலி) அவர்கள் மீது ஃபாத்திமா (ரலி) அவர்களுக்கு வருத்தம் ஏற்பட்டது. அப்போது அபூபக்ர் (ரலி) அவர்கள், "என் உயிர் எவன் கையிலுள்ளதோ, அந்த இறைவன் மீதாணையாக! என்னுடைய உறவினர்களின் உறவைப் பேணுவதைவிட, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் உறவினர்களே எனக்கு மிகவும்

---

57. [illegible] (4003-4009) [illegible] (4004, 4006) [illegible]

58. [illegible]

உவப்பானவர்கள். இந்தச் செல்வங்கள் தொடர்பாக எனக்கும் உங்களுக்குமிடையே ஏற்பட்ட (கருத்து வேறுபாட்டின்) விவகாரத்தில், நான் நியாயமாக நடந்துகொள்வதில் சிறிதும் குறைவைக்கவில்லை. இந்த விஷயத்தில் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் செய்யக் கண்ட எதையும் செய்யாமல், நான் விட்டுவிடவுமில்லை" என்று கூறினார்கள்.[59]

53 அலீ (ரலி) அவர்கள் கூறியதாவது:

நான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடமிருந்து (நேரடியாக) எதையேனும் செவியுற்றால், அதன் மூலம் அல்லாஹ் எனக்குப் பயனளிக்கக்கூடிய அளவுக்குப் பயனளிப்பான். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடமிருந்து (அபூபக்ர்-ரலி) அவர்களைத் தவிர வேறு யாரேனும் எனக்கு அறிவித்தால், அவரை நான் சத்தியம் செய்யச் சொல்வேன். அவர் சத்தியம் செய்தால், அதை உண்மை என நான் ஏற்பேன். அபூபக்ர் (ரலி) அவர்கள் என்னிடம் பின்வருமாறு அறிவித்தார்கள்: -அபூபக்ர் (ரலி) அவர்கள் உண்மையே உரைத்தார்கள்.- "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், 'இறைநம்பிக்கையாளர் (முஃமின்) ஒருவர் பாவம் ஒன்றைச் செய்துவிட்டு, அங்கத் தூய்மை (உளூ) செய்து, அதையும் செம்மையாகச் செய்து, பிறகு இரண்டு 'ரக்அத்'கள் தொழுது, உயர்ந்தோன் அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கோரினால், அவரை அல்லாஹ் மன்னிக்காமல் இருப்பதில்லை' என்று கூறினார்கள்" என்றார்கள். பிறகு, "யாரேனும் தீமையைச் செய்து, அல்லது தமக்குத் தாமே அநீதியிழைத்துப் பின்னர் அல்லாஹ்விடம் பாவமன்னிப்புத் தேடினால், அவனை மன்னிப்பவனாகவும், நிகரற்ற அன்புடையோனாகவும் அவர் காண்பார்" எனும் (4:110ஆவது) இறைவசனத்தை ஓதிக்காட்டினார்கள்.[60]

54 ஸைது பின் ஸாபித் (ரலி) அவர்கள் கூறியதாவது:

'யமாமா'[61] போருக்குச் சென்ற (நபித்தோழர்களுள், குர்ஆனை மனனமிட்டிருந்த)

من هذه الأموال فإني لم آل فيها عن الحق ولم أترك أمرا رأيت رسول الله ﷺ يصنعه فيها إلا صنعته.

٥٣ حدثنا أبو كامل حدثنا أبو عوانة حدثنا عثمان بن أبي زرعة عن علي بن ربيعة عن أسماء بن الحكم الفزاري قال سمعت عليا كرم الله وجهه قال: كنت إذا سمعت من رسول الله ﷺ حديثا نفعني الله به بما شاء أن ينفعني منه وإذا حدثني غيره استحلفته فإذا حلف لي صدقته وحدثني أبو بكر وصدق أبو بكر قال قال رسول الله ﷺ: ما من عبد مؤمن يذنب ذنبا فيتوضأ فيحسن الطهور ثم يصلي ركعتين فيستغفر الله تعالى إلا غفر الله له ثم تلا: ﴿والذين إذا فعلوا فاحشة أو ظلموا أنفسهم﴾.

٥٤ حدثنا أبو كامل حدثنا إبراهيم بن سعد حدثنا ابن شهاب عن عبيد بن السباق عن زيد بن ثابت قال: أرسل إلي أبو بكر رضي الله عنه مقتل أهل اليمامة فقال أبو بكر: يا زيد بن ثابت أنت غلام

59. இந்த ஹதீஸில் வரும் கருத்து முன்சென்ற ஹதீஸ் எண் - 9 மற்றும் 25 ஆகியவற்றிலும் இடம்பெற்றுள்ளது.

60. பார்க்க: முன்சென்ற ஹதீஸ் எண்கள் - 2, 46 மற்றும் அடிக்குறிப்புகள்.

61. [illegible]

வர்கள் கொல்லப்பட்ட கால கட்டத்தில், அபூபக்ர் (ரலி) அவர்கள் என்னிடம் ஆளனுப்பி (என்னை வரவழைத்து), "ஸைது[62] பின் ஸாபித்தே! நீங்கள் புத்திசாலியான இளைஞர்; உங்களை நாங்கள் (எந்த விதத்திலும்) சந்தேகப்பட மாட்டோம். நீங்கள் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுக்காக வேத வசனங்களை எழுதுபவராக இருந்தீர்கள். எனவே, நீங்கள் குர்ஆன் வசனங்களைக் கண்டறிந்து, (ஒரே பிரதியில்) ஒன்று திரட்டுங்கள்" என்று கூறினார்கள்.[63]

شَابٌ عَاقِلٌ لَا نَتَّهِمُكَ قَدْ كُنْتَ تَكْتُبُ الْوَحْيَ لِرَسُولِ اللَّهِ ﷺ فَتَتَبَّعِ الْقُرْآنَ فَاجْمَعْهُ.

55 ஆயிஷா (ரலி) அவர்கள் கூறியதாவது:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) (அவர்கள் இறந்த பிறகு,) அவர்களின் புதல்வி ஃபாத்திமா (ரலி) அவர்களும் அப்பாஸ் (ரலி) அவர்களும் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுக்குரிய 'ஃபதக்' பகுதி நிலம், கைபர் பகுதியில் அவர்களுக்குக் கிடைத்த பங்கு ஆகியவற்றில் தமக்குச் சேர வேண்டிய வாரிசுரிமையைக் கோரியபடி, (கலீஃபா) அபூபக்ர் ரலி) அவர்களிடம் வந்தார்கள். அப்போது அபூபக்ர் (ரலி) அவர்கள், "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், '(இறைத்தூதர்களான) எங்களுக்கு யாரும் (சொத்தில்) வாரிசாக முடியாது. நாங்கள் விட்டுச் செல்பவையெல்லாம், தர்மம் செய்யப்பட வேண்டியவை ஆகும். இந்தச் செல்வத்திலிருந்தே முஹம்மதின் குடும்பத்தார் உண்பார்கள்' என்று கூறியிருக்கிறார்கள் (எனவே,) அல்லாஹ்வின் மீது ஆணையாக! இ(ந்தச் சொத்துகள் விஷயத்)தில் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் எவ்வாறு செயல்பட்டதை நான் கண்டேனோ, அதை நானும் செயல்படுத்தாமல் விட மாட்டேன்" என்று கூறினார்கள்.[64]

٥٥ حدثنا عَبْدُ الرَّزَّاقِ حَدَّثَنَا مَعْمَرٌ عَنِ الزُّهْرِيِّ عَنْ عُرْوَةَ عَنْ عَائِشَةَ رَضِيَ اللَّهُ عَنْهَا أَنَّ فَاطِمَةَ وَالْعَبَّاسَ أَتَيَا أَبَا بَكْرٍ يَلْتَمِسَانِ مِيرَاثَهُمَا مِنْ رَسُولِ اللَّهِ ﷺ وَهُمَا حِينَئِذٍ يَطْلُبَانِ أَرْضَهُ مِنْ فَدَكَ وَسَهْمَهُ مِنْ خَيْبَرَ فَقَالَ لَهُمَا أَبُو بَكْرٍ رَضِيَ اللَّهُ عَنْهُم إِنِّي سَمِعْتُ رَسُولَ اللَّهِ ﷺ يَقُولُ: لَا نُورَثُ مَا تَرَكْنَا صَدَقَةٌ وَإِنَّمَا يَأْكُلُ آلُ مُحَمَّدٍ ﷺ فِي هَذَا الْمَالِ وَإِنِّي وَاللَّهِ لَا أَدَعُ أَمْرًا رَأَيْتُ رَسُولَ اللَّهِ ﷺ يَصْنَعُهُ فِيهِ إِلَّا صَنَعْتُهُ.

---

62. ஸைது பின் ஸாபித் (ரலி): அன்சாரிகளுள் 'கஸ்ரஜ்' குலத்தைச் சேர்ந்தவர் ஆவார்கள்; மார்க்க அறிஞர். நபி (ஸல்) அவர்கள் மதீனா வந்தபோது இவர்களுக்கு 11 வயது. 'புஆஸ் போர்' நடந்தபோது இவர்களுக்கு 6 வயது. அந்தப் போரின்போதுதான் இவர்களின் தந்தை கொல்லப்பட்டார்கள். தாயார் நவார் பின்த் மாலிக். பத்ருப் போரில் கலந்துகொள்ள வந்த ஸைதை நபி (ஸல்) அவர்கள், அவர் சிறுவர் என்பதால் அனுமதிக்கவில்லை. ஆனால், அகழ்ப் போரில் கலந்து கொண்டார்கள். அந்தப் போரில் அகழ்வெட்டும் பணியில் இவர்களும் மண் சுமந்துள்ளார்கள்.

'தபூக்' போரில் பனூ மாலிக் பின் நஜ்ஜார் குலத்தாரின் கொடியை உமாரா பின் ஹஸ்ம் (ரலி) அவர்களிடமிருந்து நபி (ஸல்) அவர்கள் வாங்கி, ஸைது பின் ஸாபித் (ரலி) அவர்களிடம் கொடுத்தார்கள். அப்போது உமாரா பின் ஹஸ்ம் (ரலி), "அல்லாஹ்வின் தூதரே! என்னைப் பற்றி யாரேனும் ஏதேனும் செய்தி கிடைத்ததோ?" என்று கேட்க, "இல்லை; குர்ஆன் முற்படுத்தப்பட வேண்டும். ஸைது பின் ஸாபித் உம்மைவிடக் குர்ஆன் அதிகம் அறிந்தவராக இருக்கிறார்" என்று கூறினார்கள். இறை அறிவிப்புகளை எழுதிப் பதிவு செய்யும் பொறுப்பும் இவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. நபித்தோழர்களுள் இவர்களே அதிகமாக 'ஃபராயிள்' எனும் வாரிசுரிமைச் சட்டம் அறிந்தவர்களாக இருந்தார்கள். ஹிஜ்ரி 45ஆம் ஆண்டு மரணமடைந்தார்கள். இவர்கள் இறந்தபோது, அபூஹுரைரா (ரலி) அவர்கள், "இந்தச் சமுதாயத்தின் மார்க்க அறிஞர் இறந்துவிட்டார்" என்று கூறினார்கள். இவர்கள்தான், அபூபக்ர், உஸ்மான் (ரலி) ஆட்சிக் காலத்தில் குர்ஆனைத் தொகுத்து எழுதினார்கள். [illegible]

63. இந்த ஹதீஸ், புகாரீ (4679, 4986, 7191, 7425), திர்மிதீ (3028), முஸ்னதுல் பஸ்ஸார், முஸ்னது அபீயஃலா, இப்னு ஹிப்பான் ஆகிய நூல்களிலும் பதிவாகியுள்ளது.

64. காண்க: முன்சென்ற ஹதீஸ்கள் - 9, 14, 25, 52 மற்றும் அவற்றின் அடிக்குறிப்புகள்.

56 இப்னு அபீமுலைக்கா (அப்துல்லாஹ் பின் உபைதில்லாஹ் அத்தைமீ-ரஹ்) அவர்கள் கூறியதாவது:

அபூபக்ர் (ரலி) அவர்கள், "அல்லாஹ்வின் பிரதிநிதியே!" (கலீஃபத்துல்லாஹ்) என்று அழைக்கப்பட்டார்கள். உடனே அவர்கள், "நான் அல்லாஹ்வின் தூதரு(டைய ஆட்சி)க்குத்தான் பிரதிநிதி (கலீஃபத்துர் ரசூல்) ஆவேன். அ(வ்வாறு என்னை அழைப்ப)தையே நான் விரும்புகிறேன் அ(வ்வாறு என்னை அழைப்ப)தையே நான் விரும்புகிறேன் அ(வ்வாறு என்னை அழைப்ப)தையே நான் விரும்புகிறேன்" என்று கூறினார்கள்.[65]

٥٦ حدثنا موسى بن داود حدثنا نافع يعني ابن عمر عن ابن أبي مليكة قال: قيل لأبي بكر رضي الله عنه يا خليفة الله فقال: أنا خليفة رسول الله ﷺ وأنا راض به وأنا راض به وأنا راض.

57 அபூசலமா (அப்துல்லாஹ் பின் அப்திர் ரஹ்மான் பின் அவ்ஃப் -ரஹ்) அவர்கள் கூறியதாவது:

ஃபாத்திமா (ரலி) அவர்கள் அபூபக்ர் (ரலி) அவர்களிடம், "நீங்கள் இறந்துவிட்டால், உங்களு(டைய சொத்து)க்கு யார் வாரிசாவார்கள்?" என்று கேட்டார்கள். அதற்கு அபூபக்ர் (ரலி) அவர்கள், "என் பிள்ளைகளும் என் குடும்பத்தாரும்தான் (வாரிசாவார்கள்)" என்று விடையளித்தார்கள். "அவ்வாறாயின், நபி (ஸல்) அவர்(களின் சொத்துக)ளுக்கு நாங்கள் வாரிசாகாததற்கு என்ன காரணம்?" என்று ஃபாத்திமா (ரலி) அவர்கள் கேட்டார்கள். அதற்கு அபூபக்ர் (ரலி) அவர்கள், "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், '(இறைத்தூதர்களான) எங்களு(டைய சொத்து)க்கு யாரும் வாரிசாக முடியாது' என்று கூறினார்கள் (எனவே அவர்கள் விட்டுச் சென்ற சொத்துக்கு நீங்கள் வாரிசாக முடியாது)" என்று கூறிவிட்டு, "எனினும், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் யாரையெல்லாம் கவனித்து வந்தார்களோ, அவர்களை நானும் கவனிப்பேன் யாருக்கெல்லாம் அவர்கள் செலவுத் தொகை கொடுத்துவந்தார்களோ, அவர்களுக்கு நானும் செலவுத் தொகை கொடுப்பேன்" என்றும் கூறினார்கள்.[66]

٥٧ حدثنا عفان حدثنا حماد بن سلمة عن محمد بن عمرو عن أبي سلمة أن فاطمة رضي الله عنها قالت لأبي بكر: من يرثك إذا مت؟ قال: ولدي وأهلي قالت: فما لنا لا نرث النبي ﷺ؟ قال سمعت النبي ﷺ يقول: إن النبي لا يورث ولكني أعول من كان رسول الله ﷺ يعول وأنفق على من كان رسول الله ﷺ ينفق.

58 அபூபர்ஸா அல்அஸ்லமீ (ரலி) அவர்கள் கூறியதாவது:

٥٨ حدثنا عفان حدثنا يزيد بن زريع حدثنا يونس بن عبيد عن حميد بن هلال عن عبد الله بن مطرف بن الشخير أنه حدثهم عن أبي برزة الأسلمي أنه قال:

---

65. இது அறிவிப்பாளர்தொடர் இடைமுறிந்த (முன்கத்திஉ) பலவீனமான ஹதீஸாகும். அபூபக்ர் (ரலி) அவர்கள் குறித்து அறிவிக்கும் இதன் அறிவிப்பாளர் இப்னு அபீமுலைக்கா (ரஹ்) அவர்கள் அபூபக்ர் (ரலி) அவர்களைச் சந்தித்தவர் அல்லர். இந்த ஹதீஸ் இடைமுறிந்த இதே தொடரில் முஸன்னஃப் இப்னு அபீஷைபா (38203)விலும் பதிவாகியுள்ளது.

66. இதன் இரண்டாவது அறிவிப்பாளர் அபூஸலமா பின் அப்திர்ரஹ்மான் பின் அவ்ஃப் (ரஹ்) அவர்கள் அபூபக்ர் (ரலி) அவர்களைச் சந்தித்தவர் அல்லர். எனவே இது இடைமுறிந்த அறிவிப்பாளர்தொடரில் அமைந்த செய்தியாகும். எனினும் முன்சென்ற 55ஆவது ஹதீஸும் பின்னால் வரும் 75ஆவது ஹதீஸும் தொடர் இடைமுறியாமல் அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே இந்த ஹதீஸ் 'ஸஹீஹ் லி ஃகைரிஹி' (பிறவற்றால் ஆதாரப்பூர்வமானது) ஆகும்.

நாங்கள் (ஸஹாபா) அபூபக்ர் அஸ்ஸித்தீக் (ரலி) அவர்கள் அருகில் அவர்களின் பணி ஒன்றின் நிமித்தம் இருந்தோம். அப்போது அவர்கள் முஸ்லிம்களுள் ஒருவர்மீது கோபமுற்றார்கள். அவர்களின் கோபம் கடுமையானபோது நான், "அல்லாஹ்வுடைய தூதரின் பிரதிநிதியே! அவருடைய கழுத்தை வெட்டிவிடட்டுமா?" என்று கேட்டேன். அவரைக் கொன்று விடட்டுமா என்று நான் கேட்டதும், அது குறித்துப் பேசுவதை விட்டுவிட்டு, வேறு பக்கம் கவனத்தைத் திருப்பினார்கள்.

நாங்கள் (பணி முடிந்து) கலைந்து சென்றதும், என்னிடம் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஆளனுப்பி (என்னை வரவழைத்து), "அபூ பர்ஸாவே, என்ன கூறினீர்?" என்று கேட்டார்கள். "நான் கூறியதை மறந்துவிட்டேன். அதை நீங்களே நினைவூட்டுங்களேன்" என்று கூறினேன். "நீர் என்ன கூறினீர் என்று நினைவில்லையா?" என்றார்கள். "அல்லாஹ்வின் மீதாணையாக! இல்லை" என்றேன். "நான் ஒருவர்மீது கோபப்பட்டதை நீர் கண்டபோது, 'அல்லாஹ்வுடைய தூதரின் பிரதிநிதியே! அவருடைய கழுத்தை வெட்டிவிடட்டுமா?' என்று நீர் கூறினீரே, நினைவிருக்கிறதா? அவ்வாறு நீர் (கொலை) செய்வீரா?" என்று கேட்டார்கள். நான், "அல்லாஹ்வின் மீதாணையாக! ஆம். இப்போது கூட நீங்கள் எனக்கு உத்தரவிட்டால், நான் செய்வேன்" என்றேன். "உமக்குக் கேடுதான்! அல்லாஹ்வின் மீதாணையாக! அ(ந்த உரிமையான)து முஹம்மது (ஸல்) அவர்களுக்குப் பின் வேறெவருக்கும் இல்லை" என்று கூறினார்கள்.[67]

كُنَّا عِنْدَ أَبِي بَكْرٍ الصِّدِّيقِ رَضِيَ اللَّهُ عَنْهُ فِي عَمَلِهِ فَغَضِبَ عَلَى رَجُلٍ مِنَ الْمُسْلِمِينَ فَاشْتَدَّ غَضَبُهُ عَلَيْهِ جِدًّا فَلَمَّا رَأَيْتُ ذَلِكَ قُلْتُ يَا خَلِيفَةَ رَسُولِ اللَّهِ أَضْرِبُ عُنُقَهُ فَلَمَّا ذَكَرْتُ الْقَتْلَ صَرَفَ عَنْ ذَلِكَ الْحَدِيثِ أَجْمَعَ إِلَى غَيْرِ ذَلِكَ مِنَ النَّحْوِ فَلَمَّا تَفَرَّقْنَا أَرْسَلَ إِلَيَّ بَعْدَ ذَلِكَ أَبُو بَكْرٍ الصِّدِّيقُ رَضِيَ اللَّهُ عَنْهُ فَقَالَ: يَا أَبَا بَرْزَةَ مَا قُلْتَ؟ قَالَ: وَنَسِيتُ الَّذِي قُلْتُ قُلْتُ ذَكِّرْنِيهِ قَالَ: أَمَا تَذْكُرُ مَا قُلْتَ قَالَ: قُلْتُ لَا وَاللَّهِ قَالَ: أَرَأَيْتَ حِينَ رَأَيْتَنِي غَضِبْتُ عَلَى الرَّجُلِ فَقُلْتَ أَضْرِبُ عُنُقَهُ يَا خَلِيفَةَ رَسُولِ اللَّهِ أَمَا تَذْكُرُ ذَاكَ أَوَ كُنْتَ فَاعِلًا ذَاكَ قَالَ: قُلْتُ نَعَمْ وَاللَّهِ وَالْآنَ إِنْ أَمَرْتَنِي فَعَلْتُ قَالَ: وَيْحَكَ أَوْ وَيْلَكَ إِنَّ تِلْكَ وَاللَّهِ مَا هِيَ لِأَحَدٍ بَعْدَ مُحَمَّدٍ ﷺ.

٥٩ حَدَّثَنَا عَفَّانُ قَالَ حَدَّثَنَا حَمَّادُ بْنُ سَلَمَةَ قَالَ حَدَّثَنَا ابْنُ أَبِي عَتِيقٍ عَنْ أَبِيهِ قَالَ: إِنَّ أَبَا بَكْرٍ الصِّدِّيقَ رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ قَالَ رَسُولُ اللَّهِ ﷺ: السِّوَاكُ مَطْهَرَةٌ لِلْفَمِ مَرْضَاةٌ لِلرَّبِّ.

٦٠ حَدَّثَنَا عَفَّانُ قَالَ حَدَّثَنَا شُعْبَةُ عَنْ يَعْلَى بْنِ عَطَاءٍ قَالَ سَمِعْتُ عَمْرَو بْنَ عَاصِمِ بْنِ عَبْدِ اللَّهِ قَالَ سَمِعْتُ أَبَا هُرَيْرَةَ يَقُولُ: قَالَ أَبُو بَكْرٍ: يَا رَسُولَ اللَّهِ قُلْ لِي

59 அல்லாஹ்வின் தூதர் (ஸல்) கூறினார்கள்:

பல் துலக்குவது, வாயைத் தூய்மைப்படுத்தும்; இறைவனை திருப்திப்படுத்தும்.[68]

இதை அபூபக்ர் அஸ்ஸித்தீக் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

60 அபூஹுரைரா (ரலி) அவர்கள் கூறியதாவது:

அபூபக்ர் (ரலி) அவர்கள் (நபி (ஸல்) அவர்களிடம்), "அல்லாஹ்வின் தூதரே! நான்

---

67. [illegible] 51[illegible]

68. [illegible] - 7. [illegible]

காலையிலும் மாலையிலும் ஓதிக்கொள்வதற்கேற்ற (பிரார்த்தனை) ஒன்றை எனக்குக் கூறுங்கள்" என்று கேட்டார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள், "அல்லாஹும்ம ஆலிமல் ஃகைபி வஷ்ஷஹாதத்தி ஃபாத்திரஸ் ஸமாவாத்தி வல் அர்ளி ரப்பி குல்லி ஷைஇன் வமலீ(க்)கஹு அஷ்ஹது அன்லா இலாஹ இல்லா அன்த்த அஊது பிக்க மின் ஷர்ரி நஃப்ஸீ வமின் ஷர்ரிஷ் ஷைத்தானி வஷிர்கிஹி' என்று கூறுங்கள்!" என்றார்கள்.

(பொருள்: இறைவா! மறைவானதையும் வெளிப்படையானவற்றையும் அறிந்தவனே! வானங்களையும் பூமியையும் முன்மாதிரியின்றிப் படைத்தவனே! அனைத்தையும் படைத்துப் பரிபாலிக்கின்ற இறைவனே! அனைத்துக்கும் அரசனே! உன்னைத் தவிர வேறு இறைவன் இல்லை எனச் சாட்சியம் கூறுகின்றேன். என்னுடைய மனத்தின் தீமையிலிருந்தும் ஷைத்தானின் தீங்கிலிருந்தும் இறைவனுக்கு இணை வைக்கும் அவனது குழப்பத்திலிருந்தும் உன்னிடம் நான் பாதுகாவல் கோருகின்றேன்).

شَيْئًا أَقُولُهُ إِذَا أَصْبَحْتُ وَإِذَا أَمْسَيْتُ قَالَ: قُلِ اللَّهُمَّ عَالِمَ الْغَيْبِ وَالشَّهَادَةِ فَاطِرَ السَّمَوَاتِ وَالْأَرْضِ رَبَّ كُلِّ شَيْءٍ وَمَلِيكَهُ أَشْهَدُ أَنْ لَا إِلَهَ إِلَّا أَنْتَ أَعُوذُ بِكَ مِنْ شَرِّ نَفْسِي وَمِنْ شَرِّ الشَّيْطَانِ وَشِرْكِهِ وَأَمَرَهُ أَنْ يَقُولَهُ إِذَا أَصْبَحَ وَإِذَا أَمْسَى وَإِذَا أَخَذَ مَضْجَعَهُ.

٦١ حَدَّثَنَا مُحَمَّدُ بْنُ يَزِيدَ حَدَّثَنَا نَافِعُ بْنُ عُمَرَ الْجُمَحِيُّ عَنْ عَبْدِ اللَّهِ بْنِ أَبِي مُلَيْكَةَ قَالَ: قِيلَ لِأَبِي بَكْرٍ رَضِيَ اللَّهُ عَنْهُ يَا خَلِيفَةَ اللَّهِ فَقَالَ: بَلْ خَلِيفَةُ مُحَمَّدٍ ﷺ وَأَنَا أَرْضَى بِهِ.

٦٢ حَدَّثَنَا مُوسَى بْنُ دَاوُدَ حَدَّثَنَا عَبْدُ اللَّهِ بْنُ الْمُؤَمَّلِ عَنِ ابْنِ أَبِي مُلَيْكَةَ قَالَ: كَانَ رُبَّمَا سَقَطَ الْخِطَامُ مِنْ يَدِ أَبِي بَكْرٍ الصِّدِّيقِ رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ فَيَضْرِبُ بِذِرَاعِ نَاقَتِهِ فَيُنِيخُهَا فَيَأْخُذُهُ قَالَ فَقَالُوا لَهُ: أَفَلَا

அபூபக்ர் (ரலி) அவர்களிடம் இந்தப் பிரார்த்தனையைக் காலையிலும் மாலையிலும் இரவில் படுக்கைக்குச் செல்லும்போதும் ஓதிக்கொள்ளுமாறு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கட்டளையிட்டார்கள்.[69]

61 இப்னு அபீமுலைக்கா (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

அபூபக்ர் (ரலி) அவர்கள், "அல்லாஹ்வின் பிரதிநிதியே!" (கலீஃபத்துல்லாஹ்) என்று அழைக்கப்பட்டார்கள். உடனே அவர்கள், "இல்லை. (நான் அல்லாஹ்வின் பிரதிநிதி அல்லன்). நான் முஹம்மது (ஸல்) அவர்களு(டைய ஆட்சி)க்குத்தான் பிரதிநிதி (கலீஃபத்து முஹம்மத்) ஆவேன் இ(வ்வாறு- 'கலீஃபத்து முஹம்மத்' என என்னை அழைப்ப)தையே நான் விரும்புகிறேன்" என்று கூறினார்கள்.[70]

62 இப்னு அபீமுலைக்கா (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

சில நேரங்களில் அபூபக்ர் அஸ்ஸித்தீக் (ரலி) (ஒட்டகத்திலிருக்கும்போது), அவர்களது கையிலிருக்கும் சாட்டை கீழே விழுந்துவிடும். உடனே அவர்கள் தமது ஒட்டகத்தின் முன்காலில் அடித்து, ஒட்டகத்தை மண்டியிட்டுப் படுக்க வைத்துச் சாட்டையை

69. இந்த ஹதீஸ், முன்னர் 40ஆவது எண்ணில் சென்றுள்ளது.

70. இப்னு அபீமுலைக்கா (ரஹ்) அவர்கள் அபூபக்ர் (ரலி) அவர்களைச் சந்தித்தவர் அல்லர். எனவே, இதுவும் முன்சென்ற ஹதீஸ் 56ஆவது போன்று இடைமுறிவுற்ற அறிவிப்பாளர்தொடரில் அமைந்த செய்தியாகும்.

أمرتنا تناولكه فقال: إن حبيبي رسول الله ﷺ أمرني أن لا أسأل الناس شيئا.

٦٣ حدثنا عبد الرزاق أخبرنا سفيان عن عمرو بن مرة عن أبي عبيدة عن أبي بكر رضي الله عنه قال: قام أبو بكر رضي الله عنه بعد وفاة رسول الله ﷺ بعام فقال: قام فينا رسول الله ﷺ عام الأول فقال: إن ابن آدم لم يعط شيئا أفضل من العافية فاسألوا الله العافية وعليكم بالصدق والبر فإنهما في الجنة وإياكم والكذب والفجور فإنهما في النار.

٦٤ حدثنا محمد بن يزيد قال أخبرنا سفيان بن حسين عن الزهري عن عبيد الله بن عبد الله بن عتبة بن مسعود عن أبي هريرة رضي الله عنه عن النبي ﷺ قال: أمرت أن أقاتل الناس حتى يقولوا لا إله إلا الله فإذا قالوها عصموا مني دماءهم وأموالهم

எடுத்துக்கொள்வார்கள். அப்போது அவர்களிடம், "அதை எடுத்துத் தரச் சொன்னால், நாங்கள் எடுத்துத் தரமாட்டோமா?" என்று மக்கள் கேட்பார்கள். அதற்கு அபூபக்ர் (ரலி) அவர்கள், "என் நேசர் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், 'மக்களிடம் (உதவி) எதையும் கேட்க வேண்டாம்' என எனக்கு உத்தரவிட்டார்கள்" என்று கூறுவார்கள்.[71]

63 அபூஉபைதா (ஆமிர் பின் அப்தில்லாஹ் அல்ஹுதலி-ரஹ்) அவர்கள் கூறியதாவது:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் இறந்து ஒரு வருடத்திற்குப் பின், அபூபக்ர் (ரலி) அவர்கள் (எங்களிடையே) எழுந்து உரை நிகழ்த்தினார்கள். அப்போது, "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் (மதீனாவுக்கு வந்த) முதலாம் ஆண்டில் எங்களிடையே நின்று உரையாற்றினார்கள். அதில், 'ஆதமின் மகனுக்கு (மனிதனுக்கு) உடல்நலத்தைவிட மிகச் சிறந்த ஒன்று வழங்கப்படவில்லை. எனவே, நீங்கள் அல்லாஹ்விடம் உடல் நலத்தைக் கேளுங்கள். உண்மை பேசுவதையும் நன்மை புரிவதையும் கடைப்பிடியுங்கள். அவ்விரண்டும் சொர்க்கத்தில் சேர்க்கும். பொய் பேச வேண்டாமென்றும் தீமைகள் புரியவேண்டாமென்றும் உங்களை நான் எச்சரிக்கிறேன். (பொய், தீமை ஆகிய) அவ்விரண்டும் நரகத்தில்தான் சேர்க்கும்' என்று கூறினார்கள்" என்றார்கள்.[72]

64 அபூஹுரைரா (ரலி) அவர்கள் கூறியதாவது:

"அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை (லா இலாஹ இல்லல்லாஹ்) என்று கூறும்வரை, இந்த (இறைவனை மறுக்கும்) மக்களுடன் போரிடுமாறு நான் கட்டளையிடப்பட்டுள்ளேன். அவ்வாறு அவர்கள் கூறிவிட்டால், தகுந்த காரணம் இருந்தாலன்றி, தமது உயிரையும் செல்வத்தையும் என்னிடமிருந்து காத்துக்கொள்வர்.

---

71. [illegible]

72. [illegible]

إلا بحقها وحسابهم على الله تعالى قال فلما كانت الردة قال عمر لأبي بكر رضي الله عنه: تقاتلهم وقد سمعت رسول الله ﷺ يقول كذا وكذا قال فقال أبو بكر رضي الله عنه: والله لا أفرق بين الصلاة والزكاة ولأقاتلن من فرق بينهما قال فقاتلنا معه فرأينا ذلك رشدا.

அவர்களது (அந்தரங்கம் குறித்த) விசாரணை, உயர்ந்தோன் அல்லாஹ்வின் பொறுப்பாகும்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(நபி (ஸல்) அவர்களின் இறப்புக்குப் பின்) மக்கள் (ஸகாத் வழங்க மறுத்து) இஸ்லாத்தை விட்டு வெளியேறியபோது, (அவர்களுடன் போர் தொடுக்க (கலீஃபா) அபூபக்ர் (ரலி) அவர்கள் ஆயத்தமானார்கள். அப்போது) உமர் (ரலி) அவர்கள், அபூபக்ர் (ரலி) அவர்களிடம், "அவர்களிடம் நீங்கள் போர் செய்கின்றீர்களே, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் இவ்வாறிவ்வாறு (மேற்கண்டவாறு) கூறியதை நீங்கள் செவியுற்றுள்ளீர்களே?" என்றார்கள். அதற்கு அபூபக்ர் (ரலி) அவர்கள், "அல்லாஹ்வின் மீதாணையாக! நான் தொழுகையையும் ஸகாத்தையும் பிரி(த்து வேறுபடுத்திப் பார்)க்க மாட்டேன். அந்த இரண்டையும் வேறுபடுத்திப் பார்ப்போருடன் நிச்சயமாக நான் போர் செய்வேன்" என்று கூறினார்கள். ஆகவே, நாங்கள் அபூபக்ர் (ரலி) அவர்களுடன் சேர்ந்து (ஸகாத் வழங்க மறுத்தவர்களுடன்) போரிட்டோம். அதையே நல்வழியாக நாங்கள் கண்டோம்.[73]

٦٥ حدثنا عبد الله بن نمير قال أخبرنا إسماعيل عن أبي بكر بن أبي زهير قال أخبرت أن أبا بكر قال: يا رسول الله كيف الصلاح بعد هذه الآية ﴿ليس بأمانيكم ولا أماني أهل الكتاب من يعمل سوءا يجز به﴾ فكل سوء عملنا جزينا به فقال رسول الله ﷺ: غفر الله لك يا أبا بكر ألست تمرض ألست تنصب ألست تحزن ألست تصيبك اللأواء قال: بلى قال: فهو ما تجزون به.

65 அபூபக்ர் பின் அபீஸுஹைர் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

பின்வருமாறு அபூபக்ர் (ரலி) அவர்கள் பற்றி எனக்கு செய்தி அறிவிக்கப்பட்டது:

அபூபக்ர் (ரலி) அவர்கள் (நபி (ஸல்) அவர்களிடம்), "அல்லாஹ்வின் தூதரே! **உங்களின் விருப்பப்படியோ, வேதக்காரர்களின் விருப்பப்படியோ (எதுவும்) இல்லை. தீமை செய்பவர் அதற்குரிய தண்டனை வழங்கப்படுவார்** எனும் இந்த (4:123ஆவது) இறைவசனம் அருளப்பெற்றதற்குப் பிறகு வெற்றி பெறுவது எவ்வாறு? நாங்கள் செய்த ஒவ்வொரு தவற்றுக்கும் தண்டனை வழங்கப்பட்டுவிடுமே?" என்று கேட்டார்கள். அப்போது நபி (ஸல்) அவர்கள், "அபூபக்ரே! அல்லாஹ் உங்களை மன்னிப்பானாக! உங்களுக்கு நோய் வருவதில்லையா? துன்பங்கள், துயரங்கள் ஏற்படுவதில்லையா? வறுமை ஏற்படுவதில்லையா?" என்று கேட்டார்கள். அதற்கு அபூபக்ர் (ரலி) அவர்கள், "ஆம் (ஏற்படவே செய்கின்றன)" என்றார்கள். அப்போது, "இவையும் உங்கள் தவறுகளுக்கு அளிக்கப்படும் தண்டனைதான்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.[74]

---

73. காண்க: புகாரீ ஹதீஸ் எண்கள் - 1400, 1457, 2946, 6924, 6925, 7285; முஸ்லிம் (32). இந்த ஹதீஸ் அபூதாவூத் (331, 2270), திர்மிதீ (2531, 2532), நஸாயீ (2400, 3039-3044), இப்னுமாஜா (3917), இப்னுஹிப்பான் (216, 217), பைஹகீயின் சுனனுல் குப்ரா (4/104) உள்ளிட்ட நூல்களிலும் இடம்பெற்றுள்ளது.

74. இது அறிவிப்பாளர்தொடர் இடைமுறிந்த ஹதீஸ் ஆகும். இதன் அறிவிப்பாளர்களுள் ஒருவரான அபூபக்ர் பின் அபீஸுஹைர் (ரஹ்) அவர்கள் அபூபக்ர் (ரலி) பற்றி எனக்கு செய்தி அறிவிக்கப்பட்டது என்று தெரிவிக்கிறார். ஆனால் யாரால் அறிவிக்கப்பட்டார்கள் என விளக்கவில்லை. அவர் அபூபக்ர் (ரலி) அவர்களை சந்தித்தவர் அல்லர். மேலும் மூன்றாம் அறிவிப்பாளரான அபூபக்ர் பின் அபீஸுஹைர் நம்பகமானவர் அல்லர். இதே காரணத்தால் பின்வரும் 66, 67 ஆகிய ஹதீஸ்களும் பலவீனமடைகின்றன. எனினும் இதுபோன்ற கருத்துள்ள ஹதீஸ்கள் புகாரீ (5648...

٦٦ حدثنا سُفْيَانُ قَالَ حَدَّثَنَا ابْنُ أَبِي خَالِد عَنْ أَبِي بَكْرِ بْنِ أَبِي زُهَيْرٍ لَعَلَّهُ قَالَ أَبُو بَكْرٍ: يَا رَسُولَ اللَّهِ كَيْفَ الصَّلَاحُ بَعْدَ هَذِهِ الْآيَةِ؟ قَالَ: يَرْحَمُكَ اللَّهُ يَا أَبَا بَكْرٍ أَلَسْتَ تَمْرَضُ أَلَسْتَ تَحْزَنُ أَلَسْتَ تُصِيبُكَ اللَّأْوَاءُ قَالَ: بَلَى قَالَ: فَإِنَّ ذَلِكَ بِذَلِكَ.

حَدَّثَنَا يَعْلَى بْنُ عُبَيْد حَدَّثَنَا إِسْمَاعِيلُ عَنْ أَبِي بَكْرٍ الثَّقَفِيِّ قَالَ قَالَ أَبُو بَكْرٍ: يَا رَسُولَ اللَّهِ كَيْفَ الصَّلَاحُ بَعْدَ هَذِهِ الْآيَةِ ﴿مَنْ يَعْمَلْ سُوءًا يُجْزَ بِهِ﴾؟ فَذَكَرَ الْحَدِيثَ.

66 அபூபக்ர் பின் அபீஸுஹைர் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

"அல்லாஹ்வின் தூதரே! இந்த (4:123ஆவது) இறைவசனம் அருளப்பெற்ற பிறகு வெற்றி பெறுவது எவ்வாறு?" என்று அபூபக்ர் (ரலி) அவர்கள் கேட்டார்கள். அப்போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "அபூபக்ரே! உங்களுக்கு அல்லாஹ் கருணை புரியட்டும்! உங்களுக்கு நோய் வருவதில்லையா? துயரங்கள் ஏற்படுவதில்லையா? வறுமை ஏற்படுவதில்லையா?" என்று கேட்டார்கள். அபூபக்ர் (ரலி) அவர்கள், "ஆம்" (ஏற்படவே செய்கின்றன) என்றார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "இவை தாம் அதற்கு (அதாவது, தண்டனைக்குப்) பகரமாகும்" என்று (விளக்கம்) கூறினார்கள்.

யஅலா பின் உபைத் அத்தனாஃபுசீ அவர்கள் வழியாக வந்துள்ள அறிவிப்பில், "அபூபக்ர் (ரலி) அவர்கள் (நபி (ஸல்) அவர்களிடம்), 'அல்லாஹ்வின் தூதரே! 'தீமை செய்பவர் அதற்குரிய தண்டனை வழங்கப்படுவார்' எனும் இந்த (4:123ஆவது) இறைவசனம் அருளப்பெற்றதற்குப் பிறகு வெற்றி பெறுவது எவ்வாறு? என்று கேட்டார்கள்" என ஹதீஸ் ஆரம்பமாகிறது. மற்ற விவரங்கள், மேற்கண்டவாறே தொடர்கின்றன.[75]

٦٧ حدثنا وَكِيعٌ حَدَّثَنَا ابْنُ أَبِي خَالِد عَنْ أَبِي بَكْرِ بْنِ أَبِي زُهَيْرٍ الثَّقَفِيِّ قَالَ: لَمَّا نَزَلَتْ ﴿لَيْسَ بِأَمَانِيِّكُمْ وَلَا أَمَانِيِّ أَهْلِ الْكِتَابِ مَنْ يَعْمَلْ سُوءًا يُجْزَ بِهِ﴾ قَالَ فَقَالَ أَبُو بَكْرٍ: يَا رَسُولَ اللَّهِ إِنَّا لَنُجَازَى بِكُلِّ سُوءٍ نَعْمَلُهُ فَقَالَ رَسُولُ اللَّهِ ﷺ: يَرْحَمُكَ اللَّهُ يَا أَبَا بَكْرٍ أَلَسْتَ تَنْصَبُ أَلَسْتَ تَحْزَنُ أَلَسْتَ تُصِيبُكَ اللَّأْوَاءُ فَهَذَا مَا تُجْزَوْنَ بِهِ.

٦٨ حدثنا أَبُو كَامِلٍ حَدَّثَنَا حَمَّادُ بْنُ سَلَمَةَ قَالَ: أَخَذْتُ هَذَا الْكِتَابَ مِنْ ثُمَامَةَ بْنِ عَبْدِ اللَّهِ بْنِ أَنَسٍ

67 அபூபக்ர் பின் அபீஸுஹைர் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

"உங்களின் விருப்பப்படியோ, வேதக்காரர்களின் விருப்பப்படியோ, (எதுவும்) இல்லை. தீமை செய்பவர் அதற்குரிய தண்டனை வழங்கப்படுவார்" எனும் (4:123 ஆவது) இறைவசனம் அருளப் பெற்றபோது, அபூபக்ர் (ரலி) அவர்கள் (நபி (ஸல்) அவர்களிடம்), "அல்லாஹ்வின் தூதரே! நாங்கள் செய்த ஒவ்வொரு தவற்றுக்காகவும் தண்டனை வழங்கப்படுவோமா?" என்று கேட்டார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள், "அபூபக்ர் அவர்களே! உங்களுக்கு அல்லாஹ் கருணை புரியட்டும்! உங்களுக்குத் துன்பங்கள், துயரங்கள் ஏற்படுவதில்லையா? வறுமை ஏற்படுவதில்லையா? இவைதாம் உங்களுக்கு அளிக்கப்படும் தண்டனைகளாகும்" என்று கூறினார்கள்.[76]

68 அனஸ் (ரலி) அவர்கள் கூறியதாவது:

---

*5660 மற்றும் முஸ்லிம் 5024-5030 ஆகிய அறிவிப்புகளை நபிமொழித் தொகுப்புகளில் இடம்பெற்றுள்ளன. மேலும் அபூயஃலா 64, திர்மிதீ (2972), ஹாகிம் (4420), பைஹகீயின் ஷுஅபுல் ஈமான் (3/373) உள்ளிட்ட நூல்களிலும் இடம்பெற்றுள்ளன.

75, 76. அறிவிப்பாளர் அபூபக்ர் பின் அபீஸுஹைர் அவர்கள் அபூபக்ர் (ரலி) அவர்களைச் சந்திக்கவில்லை. எனவே முன்சென்ற 65ஆவது ஹதீஸைப் போன்றே இதுவும் இடைமுறிந்த பலவீனமான அறிவிப்பாளர்தொடரில் அமைந்த ஹதீஸ் ஆகும்.

عَنْ أَنَسِ بْنِ مَالِكٍ أَنَّ أَبَا بَكْرٍ رَضِيَ اللَّهُ عَنْهُ كَتَبَ لَهُمْ إِنَّ هَذِهِ فَرَائِضُ الصَّدَقَةِ الَّتِي فَرَضَ رَسُولُ اللَّهِ ﷺ عَلَى الْمُسْلِمِينَ الَّتِي أَمَرَ اللَّهُ عَزَّ وَجَلَّ بِهَا رَسُولَ اللَّهِ ﷺ فَمَنْ سُئِلَهَا مِنَ الْمُسْلِمِينَ عَلَى وَجْهِهَا فَلْيُعْطِهَا وَمَنْ سُئِلَ فَوْقَ ذَلِكَ فَلَا يُعْطِهِ. فِيمَا دُونَ خَمْسٍ وَعِشْرِينَ مِنَ الْإِبِلِ فَفِي كُلِّ خَمْسٍ ذَوْدٍ شَاةٌ. فَإِذَا بَلَغَتْ خَمْسًا وَعِشْرِينَ فَفِيهَا ابْنَةُ مَخَاضٍ إِلَى خَمْسٍ وَثَلَاثِينَ. فَإِنْ لَمْ تَكُنِ ابْنَةُ مَخَاضٍ فَابْنُ لَبُونٍ ذَكَرٌ. فَإِذَا بَلَغَتْ سِتَّةً وَثَلَاثِينَ فَفِيهَا ابْنَةُ لَبُونٍ إِلَى خَمْسٍ وَأَرْبَعِينَ. فَإِذَا بَلَغَتْ سِتَّةً وَأَرْبَعِينَ فَفِيهَا حِقَّةٌ طَرُوقَةُ الْفَحْلِ إِلَى سِتِّينَ. فَإِذَا بَلَغَتْ إِحْدَى وَسِتِّينَ فَفِيهَا جَذَعَةٌ إِلَى خَمْسٍ وَسَبْعِينَ. فَإِذَا بَلَغَتْ سِتَّةً وَسَبْعِينَ فَفِيهَا بِنْتَا لَبُونٍ إِلَى تِسْعِينَ. فَإِذَا بَلَغَتْ إِحْدَى وَتِسْعِينَ فَفِيهَا حِقَّتَانِ طَرُوقَتَا الْفَحْلِ إِلَى عِشْرِينَ وَمِائَةٍ. فَإِنْ زَادَتْ عَلَى عِشْرِينَ وَمِائَةٍ فَفِي كُلِّ أَرْبَعِينَ ابْنَةُ لَبُونٍ. وَفِي كُلِّ خَمْسِينَ حِقَّةٌ. فَإِذَا تَبَايَنَ أَسْنَانُ الْإِبِلِ فِي فَرَائِضِ الصَّدَقَاتِ فَمَنْ بَلَغَتْ عِنْدَهُ صَدَقَةُ

அபூபக்ர் (ரலி) அவர்கள் எங்களுக்குப் பின்வருமாறு கடிதம் எழுதினார்கள்: "இது அல்லாஹ் தன் தூதருக்குக் கட்டளையிட்டு, அவர்கள் முஸ்லிம்கள் மீது விதியாக்கிய 'ஸகாத்' (பற்றிய விவரம்) ஆகும். முஸ்லிம்களுள் யாரும் கணக்குப்படி 'ஸகாத்' கோரப்பட்டால், அதை அவர் வழங்க வேண்டும். கணக்குக்கு மேல் கோரப்பட்டால், அதை வழங்க வேண்டாம்.

ஒருவரிடம் இருபத்து ஐந்தும் அதற்குக் குறைவான ஒட்டகங்களும் இருந்தால், அவர் ஒவ்வோர் ஐந்து ஒட்டகத்திற்கும் ஓர் ஆடு 'ஸகாத்' கொடுக்கவேண்டும்.

இருபத்தைந்து முதல் முப்பத்தைந்துவரை ஒட்டகங்கள் இருந்தால், ஒரு வயது முழுமையடைந்த பெண் ஒட்டகம் ஒன்றை ('ஸகாத்'தாகக்) கொடுக்க வேண்டும். ஒரு வயது முழுமையான பெண் ஒட்டகம் இல்லாவிட்டால், இரண்டு வயது முழுமையடைந்த ஆண் ஒட்டகம் ஒன்றைக் கொடுக்க வேண்டும்.

முப்பத்தாறு முதல் நாற்பத்தைந்துவரை ஒட்டகங்கள் இருந்தால், இரண்டு வயது முழுமையடைந்த பெண் ஒட்டகம் ஒன்றைக் கொடுக்க வேண்டும்.

நாற்பத்தாறு முதல் அறுபதுவரை ஒட்டகங்கள் இருந்தால், மூன்று வயது முழுமையடைந்த சினையுறும் (4-5 வயது) பருவத்தை அடைந்த பெண் ஒட்டகம் ஒன்றைக் கொடுக்க வேண்டும்.

அறுபத்தொன்றிலிருந்து எழுபத்தைந்து வரை ஒட்டகங்கள் இருந்தால், நான்கு வயது முழுமையடைந்த பெண் ஒட்டகம் ஒன்றைக் கொடுக்க வேண்டும்.

எழுபத்தாறிலிருந்து தொண்ணூறுவரை ஒட்டகங்கள் இருந்தால், இரண்டு வயது முழுமையடைந்த இரண்டு பெண் ஒட்டகங்கள் கொடுக்க வேண்டும்.

தொண்ணூற்றொன்றிலிருந்து நூற்றிருபதுவரை ஒட்டகங்கள் இருந்தால், மூன்று வயது முழுமையடைந்த, சினையுறும் பருவத்தை அடைந்த இரண்டு பெண் ஒட்டகங்கள் கொடுக்க வேண்டும்.

நூற்றிருபதுக்கும் கூடுதலாகிவிட்டால், ஒவ்வொரு நாற்பது ஒட்டகங்களுக்கும் இரண்டு வயது முழுமையடைந்த பெண் ஒட்டகம் ஒன்றும், ஒவ்வோர் ஐம்பது ஒட்டகங்களுக்கும் மூன்று வயது முழுமையடைந்த பெண் ஒட்டகம் ஒன்றும் கொடுக்க வேண்டும்.

'ஸகாத்' விதியான ஒட்டகங்களின் வயது வேறுபடும்போது, (அதாவது) ஒருவரிடம் நான்கு வயது முழுமையடைந்த பெண் ஒட்டகம் இல்லாமல், அவரிடம் மூன்று வயது முழுமையடைந்த பெண் ஒட்டகம் மட்டுமே இருக்கும்போது, அதையே அவரிடமிருந்து

الجذعة وليست عنده جذعة وعنده حقة فإنها تقبل منه. ويجعل معها شاتين إن استيسرتا له أو عشرين درهما. ومن بلغت عنده صدقة الحقة وليست عنده إلا جذعة فإنها تقبل منه ويعطيه المصدق عشرين درهما أو شاتين. ومن بلغت عنده صدقة الحقة وليست عنده وعنده بنت لبون فإنها تقبل منه ويجعل معها شاتين إن استيسرتا له أو عشرين درهما. ومن بلغت عنده صدقة ابنة لبون وليست عنده إلا حقة فإنها تقبل منه ويعطيه المصدق عشرين درهما أو شاتين. ومن بلغت عنده صدقة ابنة لبون وليست عنده ابنة لبون وعنده ابنة مخاض فإنها تقبل منه ويجعل معها شاتين إن استيسرتا له أو عشرين درهما. ومن بلغت صدقته بنت مخاض وليس عنده إلا ابن لبون ذكر فإنه يقبل منه وليس معه شيء. ومن لم يكن عنده إلا أربع من الإبل فليس فيها شيء إلا أن يشاء ربها. وفي صدقة الغنم في سائمتها إذا كانت أربعين ففيها شاة إلى عشرين ومائة. فإن زادت ففيها شاتان إلى مائتين. فإذا زادت واحدة ففيها ثلاث

('ஸகாத்'தாக) ஏற்றுக்கொண்டு, முடியுமாயின், அதனுடன் இரண்டு ஆடுகளையோ, இருபது திர்ஹம்களையோ பெற்றுக் கொள்ளலாம்

ஒருவருக்கு மூன்று வயது முழுமையடைந்த பெண் ஒட்டகம் கொடுப்பது கடமையாக இருந்து, அது அவரிடம் இல்லாமல், நான்கு வயது முழுமையடைந்த பெண் ஒட்டகம் இருக்கும்போது, அவரிடமிருந்து அதை ஏற்க வேண்டும். அவருக்கு 'ஸகாத்' வசூலிப்பவர் இருபது திர்ஹம்களை அல்லது இரண்டு ஆடுகளைக் கொடுத்துவிட வேண்டும்.

ஒருவருக்கு மூன்று வயது முழுமையடைந்த பெண் ஒட்டகம் 'ஸகாத்' கடமையாக இருந்து, அவரிடம் இரண்டு வயது முழுமையடைந்த பெண் ஒட்டகம் மட்டுமே இருக்குமானால், அவரிடமிருந்து அதையே ஏற்கவேண்டும். இயன்றால், அதனுடன் அவர் இரண்டு ஆடுகளை அல்லது இருபது திர்ஹம்களை வழங்க வேண்டும்.

ஒருவருக்கு இரண்டு வயது முழுமையடைந்த பெண் ஒட்டகம் கடமையாக இருந்து, அவரிடம் மூன்று வயது முழுமையடைந்த பெண் ஒட்டகமே இருக்குமானால், அதையே அவரிடமிருந்து ஏற்றுக் கொண்டுவிட்டு, அவருக்கு 'ஸகாத்' வசூலிப்பவர் இருபது திர்ஹம்களையோ இரண்டு ஆடுகளையோ கொடுத்துவிட வேண்டும்.

ஒருவருக்கு இரண்டு வயது முழுமையடைந்த பெண் ஒட்டகம் கடமையாக இருந்து, அவரிடம் அது இல்லாமல், ஒரு வயது முழுமையடைந்த பெண் ஒட்டகம் மட்டுமே இருக்கும்போது, அ(ந்த ஒரு வயது ஒட்டகத்)தையே அவரிடமிருந்து ஏற்றுக்கொள்ள வேண்டும். அத்துடன், இயன்றால், அவர் இரண்டு ஆடுகளை அல்லது இருபது திர்ஹம்களை வழங்க வேண்டும்.

ஒருவருக்கு ஒரு வயது முழுமையடைந்த பெண் ஒட்டகம் கடமையாக இருந்து, அது இல்லாமல், இரண்டு வயது முழுமையடைந்த ஆண் ஒட்டகம் மட்டுமே அவரிடம் இருக்குமானால், வேறு எதுவும் அவருக்குக் கடமை இல்லை.

யாரிடம் நான்கு ஒட்டகங்கள் மட்டுமே உள்ளனவோ, அவற்றில் 'ஸகாத்' இல்லை - அவற்றின் உரிமையாளர் நாடினாலே தவிர!

ஒருவரிடம் சுதந்திரமாக மேயும் ஆடுகள் நாற்பதிலிருந்து நூற்றியிருபதுவரை இருந்தால், அவற்றுக்கு ஓர் ஆடு 'ஸகாத்' ஆகும்.

நூற்றியிருபதுக்கு மேல் இருநூறுவரை இரு ஆடுகளும், இருநூறுக்கு மேல் முந்நூறுவரை மூன்று ஆடுகளும் கடமையாகும்.

شاة إلى ثلاث مائة. فإذا زادت ففي كل مائة شاة. ولا تؤخذ في الصدقة هرمة ولا ذات عوار ولا تيس إلا أن يشاء المصدق. ولا يجمع بين متفرق ولا يفرق بين مجتمع خشية الصدقة. وما كان من خليطين فإنهما يتراجعان بينهما بالسوية. وإذا كانت سائمة الرجل ناقصة من أربعين شاة واحدة فليس فيها شيء إلا أن يشاء ربها. وفي الرقة ربع العشر. فإذا لم يكن المال إلا تسعين ومائة درهم فليس فيه شيء إلا أن يشاء ربها.

முன்னூறுக்கும் அதிகமாகிவிட்டால், ஒவ்வொரு நூறுக்கும் ஓர் ஆடு 'ஸகாத்' ஆகும்.

'ஸகாத்' வசூலிப்பவர் விரும்பினாலே தவிர, வயதானவையோ, குறைகள் உள்ளவையோ, ஆண் பிராணிகளோ 'ஸகாத்'தாக வாங்கப்பட மாட்டா.

'ஸகாத்' கொடுப்பதற்கு அஞ்சி, பிரிந்த வற்றை ஒன்று சேர்ப்பதும், ஒன்று சேர்ந்த வற்றைப் பிரிப்பதும் கூடாது.

இருவருக்குக் கூட்டாக உள்ள பொருள்களில், ஒருவர் தன் பொருள்களின் 'ஸகாத்'துடன் மற்றவருடைய பொருள்களின் 'ஸகாத்'தையும் சேர்த்துத் தானே செலுத்தி விடுவாராயின், அவர் தன் கூட்டாளியின் பங்குக்குச் சமமான 'ஸகாத்' தொகையைக் கணக்கிட்டு, அதை அவரிடமிருந்து பெற்றுக்கொள்வார்.

சுதந்திரமாக மேயக்கூடிய ஆடுகளில் நாற்பதில் ஒன்று குறைந்துவிட்டாலும், உரிமையாளர் நாடினாலே தவிர, அதில் 'ஸகாத்' ஏதும் கடமை இல்லை. வெள்ளியில் நாற்பதில் ஒரு பங்கு 'ஸகாத்' கொடுக்க வேண்டும். அதில் நூற்றுத் தொண்ணூறு திர்ஹம் மட்டுமே இருந்தால், உரிமையாளர் நாடினாலே தவிர, அதிலும் 'ஸகாத்' இல்லை.[77]

٦٩ حدثنا عبد الرزاق قال أهل مكة يقولون أخذ ابن جريج الصلاة من عطاء وأخذها عطاء من ابن

69 அப்துர் ரஸ்ஸாக் (பின் ஹம்மாம் பின் நாஃபிஉ-ரஹ்) அவர்கள் கூறியதாவது:

"இப்னு ஜுரைஜ் (அப்துல் மலிக் பின் அப்தில்அஸீஸ்-ரஹ்) அவர்கள், அதாஉ (பின் அபீ ரபாஹ்-ரஹ்) அவர்களிடமிருந்து தொழுகையைக் கற்றுக்கொண்டார்கள்; அதாஉ

---

77. இந்த ஹதீஸ் புகாரீ, அபூதாவூத் (1339), நஸாயீ (2404, 2412), தாரகுத்னீ, முஸ்னது பஸ்ஸார் (40), முஸ்னது அபீயஅலா (127), பைஹகீ (927), இப்னுமாஜா (1790), இப்னுகுஸைமா (2261), இப்னுஹிப்பான் (3266) போன்ற நூல்களிலும் இடம்பெற்றுள்ளது. புகாரீயில் பல்வேறு இடங்களில் மொத்தமாகவோ, தனித்தனியாகவோ இடம்பெற்றுள்ளது. பார்க்க: புகாரீ - 1448, 1450, 1451, 1453, 1454, 1455, 2487, 3106, 5878, 6955 ஆகிய ஹதீஸ்கள்.

'ஸகாத்' கொடுப்பதற்கு அஞ்சி பிரிந்தவற்றை ஒன்று சேர்ப்பதும் ஒன்று சேர்ந்தவற்றைப் பிரிப்பதும் கூடாது என்பதன் பொருளாவது:

பிரிந்தவற்றை ஒன்றுசேர்ப்பது கூடாது என்பதன் விளக்கம் பின்வருமாறு: எடுத்துக்காட்டாக 40 முதல் 120 ஆடுகள்வரை இருந்தால், ஓர் ஆடு 'ஸகாத்'தாகக் கொடுக்க வேண்டும் என்பது சட்டம். தலா 40 ஆடுகளை வைத்துள்ள மூவர், தனித்தனியாக 'ஸகாத்' கொடுத்தால் ஒவ்வொரு நாற்பது ஆடுகளுக்கும் ஓர் ஆடு வீதம் ஆக மொத்தம் 3 ஆடுகள் கொடுக்க வேண்டிவரும் என்பதால், மூவரும் இணைந்து தம் ஆடுகளையெல்லாம் ஒன்றாகச் சேர்த்து மொத்தம் 120 ஆடுகளாகக் கணக்கிட்டு ஒரேயொரு ஆட்டை ஸகாத்தாகக் கொடுப்பதையே இங்கு பிரிந்திருப்பவற்றை ஒன்று சேர்த்தல் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. கொடுக்கவேண்டிய நியாயமான அளவு ஸகாத்தைக் குறைத்துக் கொடுப்பதற்காக இவ்வாறு செய்யப்படுவதால் பிரிந்திருப்பவற்றை இப்படி ஒன்று சேர்ப்பது கூடாது.

ஒன்று சேர்ந்திருப்பவற்றைப் பிரித்தல் என்பதன் விளக்கம் வருமாறு: எடுத்துக்காட்டாக 200 முதல் 300 ஆடுகள்வரை இருந்தால் 3 ஆடுகள் ஸகாத் கொடுக்க வேண்டும் என்பது சட்டம். இந்நிலையில் இருவருக்குக் கூட்டாக இருந்த 240 ஆடுகளை மொத்தமாகக் கணக்கிட்டால் இவற்றிலிருந்து 3 ஆடுகள் ஸகாத் கொடுக்க வேண்டிவரும் என்பதால் அவ்விருவரும் தமது ஆடுகளைத் தலா 120 ஆகப் பிரித்துக் கொண்டு தலா ஓர் ஆட்டை ஸகாத்தாகக் கொடுப்பதையே இங்கு சேர்ந்திருப்பவற்றைப் பிரித்தல் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதுவும் கூடாது (ஃபத்ஹுல் பாரீ).

الزُّبَيْرِ وَأَخَذَهَا ابْنُ الزُّبَيْرِ مِنْ أَبِي بَكْرٍ وَأَخَذَهَا أَبُو بَكْرٍ مِنَ النَّبِيِّ ﷺ مَا رَأَيْتُ أَحَدًا أَحْسَنَ صَلَاةً مِنِ ابْنِ جُرَيْجٍ.

٧. حَدَّثَنَا عَبْدُ الرَّزَّاقِ قَالَ أَخْبَرَنَا مَعْمَرٌ عَنِ الزُّهْرِيِّ عَنْ سَالِمٍ عَنِ ابْنِ عُمَرَ عَنْ عُمَرَ قَالَ: تَأَيَّمَتْ حَفْصَةُ بِنْتُ عُمَرَ مِنْ خُنَيْسٍ أَوْ حُذَيْفَةَ بْنِ حُذَافَةَ شَكَّ عَبْدُ الرَّزَّاقِ وَكَانَ مِنْ أَصْحَابِ النَّبِيِّ ﷺ مِمَّنْ شَهِدَ بَدْرًا فَتُوُفِّيَ بِالْمَدِينَةِ قَالَ: فَلَقِيتُ عُثْمَانَ بْنَ عَفَّانَ فَعَرَضْتُ عَلَيْهِ حَفْصَةَ فَقُلْتُ إِنْ شِئْتَ أَنْكَحْتُكَ حَفْصَةَ قَالَ: سَأَنْظُرُ فِي ذَلِكَ فَلَبِثْتُ لَيَالِيَ فَلَقِيَنِي فَقَالَ: مَا أُرِيدُ أَنْ أَتَزَوَّجَ يَوْمِي هَذَا قَالَ عُمَرُ: فَلَقِيتُ أَبَا بَكْرٍ رَضِيَ اللَّهُ عَنْهُ فَقُلْتُ إِنْ شِئْتَ أَنْكَحْتُكَ حَفْصَةَ ابْنَةَ عُمَرَ فَلَمْ يَرْجِعْ إِلَيَّ شَيْئًا فَكُنْتُ أَوْجَدَ عَلَيْهِ مِنِّي عَلَى عُثْمَانَ فَلَبِثْتُ لَيَالِيَ فَخَطَبَهَا إِلَيَّ رَسُولُ

(ரஹ்) அவர்கள் இப்னுஸ் ஸுபைர் (ரலி) அவர்களிடமிருந்து அதைக் கற்றுக்கொண்டார்கள்; இப்னுஸ் ஸுபைர் (ரலி) அவர்கள், அபூபக்ர் (ரலி) அவர்களிடமிருந்து கற்றுக்கொண்டார்கள் அபூபக்ர் (ரலி) அவர்கள், நபி (ஸல்) அவர்களிடமிருந்து கற்றுக்கொண்டார்கள்" என்று மக்காவாசிகள் கூறுகின்றனர் இப்னு ஜுரைஜ் (ரஹ்) அவர்களைவிட அழகிய முறையில் தொழும் ஒருவரை நான் கண்டதில்லை[78]

70 அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் கூறியதாவது:

உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள் (தம் மருமகன்) குனைஸ் பின் ஹுதாஃபா அல்லது ஹுதைஃபா பின் ஹுதாஃபா (ரலி) அவர்கள் இறந்துவிட்டதால், (மகள்) ஹஃப்ஸா விதவையானபோது, (அவர்களை வேறொருவருக்குத் திருமணம் முடித்து வைக்க எண்ணினார்கள்)

-குனைஸ் அவர்கள் நபி (ஸல்) அவர்களின் தோழர்களுள் ஒருவரும், பத்ருப் போரில் கலந்துகொண்டவருமாவார் அன்னார் மதீனாவில் இறந்தார்கள்-

உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்:

எனவே, நான் உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்களைச் சந்தித்து (என் மகள்) ஹஃப்ஸாவைக் குறித்து எடுத்துக் கூறி, "நீங்கள் விரும்பினால் என் மகள் ஹஃப்ஸாவை உங்களுக்குத் திருமணம் செய்து வைக்கிறேன்" என்று கூறினேன் (அதற்கு) உஸ்மான் (ரலி) அவர்கள், "(உங்கள் மகளை நான் மணம் புரிந்துகொள்ளும்) இந்த விஷயத்தில் நான் யோசிக்க வேண்டியுள்ளது; (யோசித்த பின் எனது முடிவைக் கூறுகிறேன்)" என்று சொன்னார்கள் சில நாட்கள் பொறுத்திருந்தேன் பிறகு (நான் உஸ்மானைச் சந்தித்த போது) அவர், "இப்போது திருமணம் செய்துகொள்ள வேண்டாம் என்றே எண்ணியுள்ளேன்" என்று கூறினார்கள்

ஆகவே, நான் அபூபக்ர் (ரலி) அவர்களைச் சந்தித்தேன் (அவர்களிடம்), "நீங்கள் விரும்பினால், என் மகள் ஹஃப்ஸாவைத் தங்களுக்குத் திருமணம் முடித்து வைக்கிறேன்" என்று கூறினேன் அபூபக்ர் அவர்கள் அமைதியாக இருந்தார்கள் எனக்கு அவர்கள் எந்த மறுமொழியும் கூறவில்லை. எனவே, உஸ்மான் அவர்களைவிட அபூபக்ர் அவர்கள் மீதே நான் மிகவும் மனவருத்தம் கொண்டவனாக இருந்தேன்

சில நாட்கள் பொறுத்திருந்தேன் பிறகு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் ஹஃப்ஸாவைப் பெண் கேட்டார்கள். எனவே, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுக்கு

---

78. இந்த ஹதீஸ், முஸ்னது அஹ்மதில் மட்டுமே இடம்பெற்றுள்ளது

ஹஃப்ஸாவைத் திருமணம் செய்து வைத்தேன்.

பிறகு (ஒரு நாள்) அபூபக்ர் அவர்கள் என்னைச் சந்தித்தபோது, "நீங்கள் என்னிடம் ஹஃப்ஸா அவர்களைக் குறித்துச் சொன்னபோது, நான் உங்களுக்கு மறுமொழி எதுவும் கூறாததால், உங்களுக்கு என் மீது மனவருத்தம் இருக்கக் கூடும்" என்று கூறினார்கள். நான், "ஆம்" என்று கூறினேன். அதற்கு அபூபக்ர் (ரலி) அவர்கள், "நீங்கள் கூறியபோது நான் உங்களுக்கு மறுமொழி கூறாததற்குக் காரணம், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் ஹஃப்ஸா அவர்களை (தாம் மணம் புரிந்து கொள்வது) பற்றிப் பேசியதை நான் அறிந்திருந்தேன். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் இந்த இரகசியத்தை நான் வெளிப்படுத்த விரும்பவில்லை. (எனவேதான், உங்களுக்கு மறுமொழி கூறவில்லை.) நபி (ஸல்) அவர்கள் ஹஃப்ஸாவை (திருமணம் செய்யாமல்) விட்டிருந்தால், உறுதியாக நான் திருமணம் செய்திருப்பேன்" என்று கூறினார்கள்.[79]

الله ﷺ فأنكحتها إياه فلقيني أبو بكر رضي الله عنه فقال: لعلك وجدت علي حين عرضت علي حفصة فلم أرجع إليك شيئا قال: قلت نعم قال: فإنه لم يمنعني أن أرجع إليك شيئا حين عرضتها علي إلا أني سمعت رسول الله ﷺ يذكرها ولم أكن لأفشي سر رسول الله ﷺ ولو تركها لنكحتها.

71 அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

"அடிமைகளை மோசமாக நடத்துகின்ற உரிமையாளர் சொர்க்கத்தில் நுழைய மாட்டார்" என அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அப்போது ஒருவர், "அல்லாஹ்வின் தூதரே! இந்தச் சமுதாயம், அடிமைகளும் அநாதைகளும் நிறைந்த சமுதாயம் என்று எங்களிடம் கூறினீர்களே?" என்று கேட்டார். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "ஆம். அவர்களை நீங்கள் உங்கள் பிள்ளைகளைப் போன்று கண்ணியப்படுத்துங்கள். நீங்கள் உண்பதிலிருந்து அவர்களுக்கும் உண்ணக் கொடுங்கள்" என்று கூறினார்கள். "அல்லாஹ்வின் தூதரே! இவ்வுலகில் எங்களுக்குப் பயன் அளிப்பவை எவை?" என்று மக்கள் கேட்டனர். அதற்கு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "அல்லாஹ்வின் பாதையில் அறப்போரில் ஈடுபடுத்த நீ ஆயத்தம் செய்து வைத்திருக்கும் ஆரோக்கியமான குதிரையும் உம்முடைய அடிமையும் உமக்குப் போதும். அடிமை தொழுகையை நிறைவேற்றினால், அவன் உம்முடைய சகோதரன் ஆவான்" என்று கூறினார்கள்.[80]

٧١ حدثنا إسحاق بن سليمان قال سمعت المغيرة بن مسلم أبا سلمة عن فرقد السبخي عن مرة الطيب عن أبي بكر الصديق رضي الله عنه قال قال رسول الله ﷺ: لا يدخل الجنة سيء الملكة فقال رجل: يا رسول الله أليس أخبرتنا أن هذه الأمة أكثر الأمم مملوكين وأيتاما قال: بلى فأكرموهم كرامة أولادكم وأطعموهم مما تأكلون قالوا: فما ينفعنا في الدنيا يا رسول الله؟ قال: فرس صالح ترتبطه تقاتل عليه في سبيل الله ومملوك يكفيك فإذا صلى فهو أخوك.

72 (வேத வசனங்கள் இறங்கியபோது, அவற்றை எழுதியோருள் ஒருவரான) ஸைது

٧٢ حدثنا عثمان بن عمر قال أخبرنا يونس عن الزهري قال: أخبرني ابن السباق قال أخبرني زيد بن ثابت

79. இந்த ஹதீஸ் புகாரீ (4005, 5122, 5129, 5145), நஸாயீ (3196, 3207), நஸாயீயின் சுனனுல் குப்ரா (5364), தப்ரானீயின் அல்முஃஜமுல் கபீர் (18823), அபூயஃலா (7, 20), இப்னு ஹிப்பான் (4039) உள்ளிட்ட நூல்களிலும் இடம்பெற்றுள்ளது.

80. இந்த ஹதீஸின் அறிவிப்பாளர்களுள் ஒருவரான ஃபர்கத் பின் யஃகூப் பலவீனமானவர் ஆவார். எனவே, இது பலவீனமான ஹதீஸாகும். பார்க்க: 73ஆவது ஹதீஸின் அடிக்குறிப்பு.

أنّ أبا بكر رضي الله عنه أرسل إليه مقتل أهل اليمامة فإذا عمر عنده فقال أبو بكر: إنّ عمر أتاني فقال: إنّ القتل قد استحرّ بأهل اليمامة من قرّاء القرآن من المسلمين وأنا أخشى أن يستحرّ القتل بالقرّاء في المواطن فيذهب قرآن كثير لا يوعى وإنّي أرى أن تأمر بجمع القرآن فقلت لعمر: وكيف أفعل شيئا لم يفعله رسول الله ﷺ؟ فقال عمر: والله خير فلم يزل يراجعني في ذلك حتى شرح الله بذلك صدري ورأيت فيه الذي رأى عمر قال زيد: وعمر عنده جالس لا يتكلّم فقال أبو بكر رضي الله عنه: إنّك شابّ عاقل لا نتّهمك وقد كنت تكتب الوحي لرسول الله ﷺ فاجمعه قال زيد: فوالله لو كلّفوني نقل جبل من الجبال ما كان بأثقل عليّ ممّا أمرني به من جمع القرآن فقلت كيف تفعلون شيئا لم يفعله رسول الله ﷺ؟

பின் ஸாபித் (ரலி) அவர்கள் கூறியதாவது:

(குர்ஆனை மனனமிட்ட வீரர்கள்) பலர் 'யமாமா'ப் போரில் கொல்லப்பட்டபோது, (கலீஃபா) அபூபக்ர் (ரலி) அவர்கள் என்னை அழைத்து வரும்படி என்னிடம் ஆளனுப்பினார்கள். (நான் சென்றபோது) அவர்களுடன் உமர் (ரலி) அவர்களும் இருந்தார்கள். அப்போது அபூபக்ர் (ரலி) அவர்கள், "உமர் (ரலி) அவர்கள் என்னிடம் வந்து, 'இந்த 'யமாமா'ப் போர், முஸ்லிம்களுள் குர்ஆனை மனனமிட்ட அறிஞர்கள் பலரைப் பலி கொண்டுவிட்டது. (இறைமறுப்பாளர்களுடன் போர் நடக்கும்) எல்லா இடங்களிலும் குர்ஆன் அறிஞர்கள் பலர் கொல்லப்பட்டு, அதனால் குர்ஆனின் பெரும் பகுதி பாதுகாக்கப்படாமல், (அந்த அறிஞர்களுடன்) அழிந்துவிடுமோ என நான் அஞ்சுகிறேன். (ஆகவே, கலீஃபாவான) நீங்கள் குர்ஆனைத் திரட்டுமாறு ஆணையிட வேண்டுமென நான் கருதுகிறேன்' என்று கூறினார். உடனே நான், 'அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் செய்யாத ஒன்றை நான் எப்படிச் செய்ய முடியும்?' என்று உமர் (ரலி) அவர்களிடம் கேட்டேன். அதற்கு உமர் அவர்கள், 'அல்லாஹ்வின் மீதாணையாக! இது நன்மை (யான பணி)தான்' என்றார்கள். பிறகு இது பற்றித் தொடர்ந்து அவர்கள் என்னை வலியுறுத்திக்கொண்டேயிருந்தார்கள். முடிவில் உமர் அவர்களின் உள்ளத்தை எதற்காக அல்லாஹ் விரிவாக்கினானோ, அதற்காக என் உள்ளத்தையும் அவன் விரிவாக்கினான். இதில் உமர் அவர்கள் கருதியதையே நானும் (பொருத்தமானதாகக்) கருதினேன்."

இவ்வாறு அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறிக்கொண்டிருந்தபோது, அவர்களுக்கு அருகில் உமர் (ரலி) அவர்கள் எதுவும் பேசாமல் (அமைதியாக) உட்கார்ந்திருந்தார்கள். பிறகு அபூபக்ர் (ரலி) அவர்கள் என்னிடம், "நீங்கள் புத்திசாலியான இளைஞர்; உங்களை நாங்கள் (எந்த வகையிலும்) சந்தேகப்பட்டதில்லை. நீங்கள் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுக்காக வஹீ (வேத அறிவிப்பை) எழுதக்கூடியவராயிருந்தீர்கள். எனவே, (தனித் தனிப் பிரதிகளில் நபித்தோழர்களிடம் இருக்கும்) குர்ஆன் வசனங்களைத் தேடி (ஒரே பிரதியில்) திரட்டுங்கள்" என்று சொன்னார்கள்.

அல்லாஹ்வின் மீதாணையாக! மலைகளுள் ஒன்றை நகர்த்த வேண்டுமென என்னை அவர்கள் பணித்திருந்தால்கூட, அது எனக்குப் பாரமாக இருந்திருக்காது. குர்ஆனை ஒன்று திரட்டும்படி எனக்கு அவர்கள் கட்டளையிட்டது எனக்கு மிகப் பாரமாக இருந்தது.

நான் (அவ்விருவரிடமும்), "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் செய்யாத ஒன்றை நீங்கள் இருவரும் எப்படிச் செய்யப்போகிறீர்கள்?" என்று கேட்டேன்.[81]

---

81. [illegible] - 4679, 4986, 7191

73. இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறியதாவது:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் இறந்து, அபூபக்ர் (ரலி) அவர்கள் ஆட்சிப் பொறுப்பில் அமர்த்தப்பட்டபோது, அவர்களிடம் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் விட்டுச் சென்ற சில சொத்துகள் தொடர்பாக, அப்பாஸ் (ரலி) அவர்கள் அலீ (ரலி) அவர்களோடு வழக்காடினார்கள். அப்போது அபூபக்ர் (ரலி) அவர்கள், "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் எதுவும் செய்யாமல் விட்டு வைத்த சொத்துகள் எதிலும் நான் எந்த மாற்றமும் செய்யமாட்டேன்" என்று கூறினார்கள்

அடுத்து உமர் (ரலி) அவர்கள் ஆட்சிப் பொறுப்பில் அமர்த்தப்பட்டபோது, அவர்களிடமும் அவ்விருவரும் (அந்தச் சொத்துகள் விஷயத்தில்) வழக்காடியபடி வந்தனர். அப்போது உமர் (ரலி) அவர்கள், "அபூபக்ர் (ரலி) அவர்கள் எதுவும் செய்யாமல் விட்டுவைத்த சொத்துகள் எதிலும் நானும் எந்த மாற்றமும் செய்யமாட்டேன்" என்று கூறினார்கள்.

அடுத்து உஸ்மான் (ரலி) அவர்கள் ஆட்சிப் பொறுப்பில் அமர்த்தப்பட்டபோது, அவர்களிடமும் அவ்விருவரும் (அச்சொத்துகள் தொடர்பாக) வழக்காடியபடி வந்தனர். அப்போது உஸ்மான் (ரலி) அவர்கள் தலை தாழ்த்தி அமைதியாக இருந்தார்கள்.

٧٣ حدثنا يحيى بن حماد حدثنا أبو عوانة عن الأعمش عن إسماعيل بن رجاء عن عمير مولى العباس عن ابن عباس قال: لما قبض رسول الله ﷺ واستخلف أبو بكر خاصم العباس عليا في أشياء تركها رسول الله ﷺ فقال أبو بكر رضي الله عنه: شيء تركه رسول الله ﷺ فلم يحركه فلا أحركه فلما استخلف عمر اختصما إليه فقال: شيء لم يحركه أبو بكر فلست أحركه قال: فلما استخلف عثمان رضي الله عنه اختصما إليه قال: فأسكت عثمان ونكس رأسه قال ابن عباس: فخشيت أن يأخذه فضربت بيدي بين كتفي العباس فقلت يا أبت أقسمت عليك إلا سلمته لعلي قال فسلمه له.

٧٤ حدثنا يحيى بن حماد قال حدثنا أبو عوانة عن عاصم بن كليب قال حدثني شيخ من قريش من بني تيم قال حدثني فلان وفلان وقال: فعد ستة أو سبعة كلهم من قريش فيهم عبد الله بن الزبير قال: بينا نحن جلوس عند عمر إذ دخل علي والعباس رضي الله عنهما قد ارتفعت أصواتهما فقال عمر:

உஸ்மான் (ரலி) அவர்கள், அதைத் தமது பொறுப்பில் எடுத்துக்கொள்வார்களோ என நான் அஞ்சினேன். எனவே, (என் தந்தை) அப்பாஸ் (ரலி) அவர்களது தோள்மீது என் கையால் தட்டி, "என் அருமைத் தந்தையே! தங்களிடம் அறுதியிட்டுச் சொல்கிறேன் அ(ந்தச் சொத்)தை அலீ அவர்களிடமே ஒப்படைத்துவிடுங்கள்" என்று சொன்னேன். அவ்வாறே அதை என் தந்தை அவர்கள் அலீ (ரலி) அவர்களிடம் ஒப்படைத்து விட்டார்கள்.[82]

74 அப்துல்லாஹ் பின் அஸ்ஸுபைர் (ரலி) அவர்கள் கூறியதாவது:

நாங்கள் (ஒரு நாள்) உமர் (ரலி) அவர்களிடம் அமர்ந்திருந்தோம். அப்போது அலீ (ரலி) அவர்களும், அப்பாஸ் (ரலி) அவர்களும் (நபி (ஸல்) அவர்கள் விட்டுச் சென்ற சில சொத்துகள் தொடர்பாக வழக்காடியபடி) வந்தார்கள். இருவரின் குரல்களும் உயர்ந்தன. அப்போது உமர் (ரலி) அவர்கள், "அப்பாஸ் அவர்களே! (பேச்சை) நிறுத்துங்

82. இந்த ஹதீஸ் முஸ்னது அஹ்மதில் மட்டுமே இடம்பெற்றுள்ளது

கள். 'நபி (ஸல்) அவர்கள் என் சகோதரரின் புதல்வர். எனவே, அவர்களது சொத்தில் எனக்கும் பாதிப் பங்குண்டு' என நீங்கள் கூறுவதை நான் அறிவேன். அலீ அவர்களே! 'நபி (ஸல்) அவர்களின் புதல்வி ஃபாத்திமா என் மனைவி ஆவார். எனவே, என் மனைவிக்கும் அந்தச் சொத்தில் பாதிப் பங்குண்டு' என நீங்கள் கூறுவதையும் நான் அறிவேன்.

"இது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களது கையில் இருந்த சொத்து ஆகும். இ(ந்தச் சொத்து விஷயத்)தில் அவர்கள் எப்படிச் செயல்பட்டுவந்தார்கள் என்பதை நாம் பார்த்தோம். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுக்குப் பின் அபூபக்ர் (ரலி) அவர்கள் அந்தச் சொத்தைத் தமது பொறுப்பில் வைத்திருந்தார்கள். அதில் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் செயல்பட்டதைப் போன்றே அபூபக்ர் (ரலி) அவர்களும் செயல்பட்டார்கள். அபூபக்ர் (ரலி) அவர்களுக்குப் பின் அதை நான் எனது பொறுப்பில் எடுத்துக் கொண்டேன். அந்தச் சொத்துத் தொடர்பாக, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் செயல்பட்டதைப் போன்றும், அபூபக்ர் (ரலி) அவர்கள் செயல்பட்டதைப் போன்றும் நானும் செயல்பட முயலுவேன் என்று அல்லாஹ்வின் மீது ஆணையிட்டுச் சொல்கிறேன்.

منه يا عباس لقد علمت ما تقول تقول ابن أخي ولي شطر المال ولقد علمت ما تقول يا علي تقول ابنتي تحتي ولها شطر المال وهذا ما كان في يدي رسول الله ﷺ فقد رأينا كيف كان يصنع فيه فوليه أبو بكر رضي الله عنه من بعده فعمل فيه بعمل رسول الله ﷺ ثم وليته من بعد أبي بكر رضي الله عنه فأحلف بالله لأجتهدن أن أعمل فيه بعمل رسول الله وعمل أبي بكر ثم قال حدثني أبو بكر رضي الله عنه وحلف بأنه لصادق أنه سمع النبي ﷺ يقول: إن النبي لا يورث وإنما ميراثه في فقراء المسلمين والمساكين وحدثني أبو بكر رضي الله عنه وحلف بالله إنه صادق أن النبي ﷺ قال: إن النبي لا يموت حتى يؤمه بعض أمته وهذا ما كان في يدي رسول الله ﷺ فقد رأينا كيف كان يصنع فيه فإن شئتما أعطيتكما لتعملا فيه بعمل رسول الله ﷺ وعمل أبي بكر حتى أدفعه إليكما قال

"(இறைத் தூதர்களான) எங்களு(டைய சொத்து)களுக்கு யாரும் வாரிசாக முடியாது. அவர்கள் விட்டுச் செல்லும் சொத்துகளுக்கு வாரிசுரிமை பெறுபவர்கள் முஸ்லிம்களுள் உள்ள ஏழைகளும் வறியவர்களும்தான்' என நபி (ஸல்) அவர்கள் கூறியதை நான் கேட்டுள்ளேன்' என, இதில் தாம் உண்மையே உரைப்பதாகவும் அபூபக்ர் (ரலி) அவர்கள் என்னிடம் கூறினார்கள். இதில் உண்மையே கூறுவதாகவும் அல்லாஹ்வின் மீது ஆணையிட்டு அபூபக்ர் (ரலி) அவர்கள் என்னிடம் கூறினார்கள்.

"தம் சமுதாயத்தில் ஒருவர் தமக்கு தலைமையேற்றுத் தொழுகை நடத்தாமல் ('இமாமத்') எந்த நபியும் இறப்பதில்லை' என நபி (ஸல்) அவர்கள் கூறியதைத் தாம் கேட்டுள்ளதாகவும், தாம் இதுபற்றி உண்மையே உரைப்பதாகவும் அபூபக்ர் (ரலி) அவர்கள் அல்லாஹ்வின்மீது ஆணையிட்டு என்னிடம் கூறினார்கள்.

"இது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் நேரடி நிர்வாகத்தில் இருந்ததாகும். இதில் அவர்கள் எப்படி நடந்துகொண்டார்கள் என்பதை நாம் கண்டுள்ளோம். நீங்கள் விரும்பினால், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் நடந்துகொண்டபடியும், அபூபக்ர் (ரலி) அவர்கள் நடந்துகொண்டபடியும் நீங்கள் இருவரும் நடந்துகொள்வதாக இருந்தால், உங்கள் இருவரிடமும் இதை நான் ஒப்படைக்கிறேன்" என்று கூறினார்கள்.

உடனே அப்பாஸ் (ரலி) அவர்களும் அலீ (ரலி) அவர்களும் தனியாகச் சென்று

فَخَلَوَا ثُمَّ جَاءَا فَقَالَ الْعَبَّاسُ: ادْفَعْهُ إِلَى عَلِيٍّ فَإِنِّي قَدْ طِبْتُ نَفْسًا بِهِ لَهُ.

(கலந்து பேசி)விட்டு வந்தபின், "அலீயிடமே அதை ஒப்படைத்துவிடுங்கள். இதை அலீ அவர்களிடம் ஒப்படைப்பதை நான் மனமுவந்து ஏற்றுக்கொள்கிறேன்" என்று அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறினார்கள்.[83]

٧٥ حَدَّثَنَا عَبْدُ الْوَهَّابِ بْنُ عَطَاءٍ قَالَ أَخْبَرَنَا مُحَمَّدُ بْنُ عَمْرٍو عَنْ أَبِي سَلَمَةَ عَنْ أَبِي هُرَيْرَةَ أَنَّ فَاطِمَةَ رَضِيَ اللَّهُ عَنْهَا جَاءَتْ أَبَا بَكْرٍ وَعُمَرَ رَضِيَ اللَّهُ عَنْهُمَا تَطْلُبُ مِيرَاثَهَا مِنْ رَسُولِ اللَّهِ ﷺ فَقَالَا: إِنَّا سَمِعْنَا رَسُولَ اللَّهِ ﷺ يَقُولُ: إِنِّي لَا أُورَثُ.

75 அபூஹுரைரா (ரலி) அவர்கள் கூறியதாவது:

(நபி (ஸல்) அவர்களின் இறப்புக்குப் பின் அவர்களுடைய புதல்வி) ஃபாத்திமா (ரலி) அவர்கள் அபூபக்ர் (ரலி), உமர் (ரலி) ஆகிய இருவரிடமும் நபி (ஸல்) அவர்கள் விட்டுச் சென்ற சொத்தில் தமக்கு வாரிசுரிமையைக் கேட்டு வந்தார்கள். அப்போது, "நபி ஸல்) அவர்கள், '(இறைத்தூதரான) எனக்கு (எனது சொத்துக்கு) யாரும் வாரிசாக முடியாது' என்று கூறியதை நாங்கள் கேட்டுள்ளோம்" என அவர்கள் இருவரும் கூறினர்.[84]

٧٦ حَدَّثَنَا هَاشِمُ بْنُ الْقَاسِمِ قَالَ حَدَّثَنَا عِيسَى يَعْنِي ابْنَ الْمُسَيَّبِ عَنْ قَيْسِ بْنِ أَبِي حَازِمٍ قَالَ: إِنِّي لَجَالِسٌ عِنْدَ أَبِي بَكْرٍ الصِّدِّيقِ رَضِيَ اللَّهُ عَنْهُ خَلِيفَةِ رَسُولِ اللَّهِ ﷺ بَعْدَ وَفَاةِ النَّبِيِّ ﷺ بِشَهْرٍ فَذَكَرَ قِصَّةً فَنُودِيَ فِي النَّاسِ أَنَّ الصَّلَاةَ جَامِعَةٌ وَهِيَ أَوَّلُ صَلَاةٍ فِي الْمُسْلِمِينَ نُودِيَ بِهَا إِنَّ الصَّلَاةَ جَامِعَةٌ فَاجْتَمَعَ النَّاسُ فَصَعِدَ الْمِنْبَرَ شَيْئًا صُنِعَ لَهُ كَانَ يَخْطُبُ عَلَيْهِ وَهِيَ أَوَّلُ خُطْبَةٍ خَطَبَهَا فِي الْإِسْلَامِ قَالَ: فَحَمِدَ اللَّهَ

76 ஈசா பின் அல்முசய்யப் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

கைஸ் பின் அபீஹாஸிம் (ரஹ்) அவர்கள் கூறினார்: நபி (ஸல்) அவர்கள் இறந்து ஒரு மாதம் கழிந்த பின், நான் கலீஃபா அபூபக்ர் (ரலி) அவர்களுடன் அமர்ந்திருந்தேன். -தொடர்ந்து பெரிய ஹதீஸ் ஒன்றை கைஸ் (ரஹ்) அவர்கள் அறிவித்தார்கள்.- தொடர்ந்து அவர்கள் கூறியதாவது: அப்போது, 'அஸ் ஸலாத்து ஜாமிஆ' (கூட்டுத் தொழுகைக்கு வாருங்கள்) என மக்களுக்கு அறிவிப்புச் செய்யப்பட்டது. 'அஸ்ஸலாத்து ஜாமிஆ' என அறிவிப்புச் செய்யப்பட்ட முதல் தொழுகை அதுதான். மக்கள் ஒன்று கூடினர். அபூபக்ர் (ரலி) அவர்கள் தமக்காக ஆயத்தம் செய்யப்பட்டிருந்த சொற்பொழிவு மேடை (மிம்பர்) மீதேறி, உரை நிகழ்த்தினார்கள். -(வழக்கமாக) அதன் மீதுதான் அவர்கள் உரையாற்றிவந்தார்கள்.- அதுதான் அவர்கள் நிகழ்த்திய முதல் உரையாகும். அப்போது அவர்கள் அல்

83. இந்த ஹதீஸின் அறிவிப்பாளர்தொடரில் ஐந்தாவது அறிவிப்பாளரான ஆஸிம் பின் குலைப் (ரஹ்) அவர்கள், 'எனக்குக் குறைஷியருள் முதியவர் ஒருவர் அறிவித்தார்' எனக் கூறுகின்றார். அந்த முதியவர் யார்? அவரது தகுதி என்ன? என்ற விவரங்கள் தெரியாததால், இது பலவீனமான ஹதீஸாகும். எனினும், இதுபோன்ற கருத்துள்ள ஹதீஸ் புகாரீ (3093, 3094, 6725, 6728, 6730, 7305), முஸ்லிம் (3617) போன்ற நூல்களில் ஆதாரபூர்வமான அறிவிப்பாளர் தொடரில் வந்துள்ளது. இதே நூலில் முன்னரும் சென்றுள்ளது. எனவே, இது 'ஸஹீஹ் லிஃகைரிஹி' புறச் சான்றுகளால் ஆதாரபூர்வமான ஹதீஸ் ஆகும்.

'நம் சமுதாயத்தில் ஒருவர் 'இமாமத்' செய்யாமல் எந்த நபியும் இறப்பதில்லை' என்ற வாசகம் மட்டும் பலவீனமானதாகும். அதற்கு வேறு ஹதீஸ்களில் ஆதாரம் இல்லை.

84. இது 57ஆவது ஹதீஸின் சுருக்கமாகும். 57ஆவது ஹதீஸ் அறிவிப்பாளர்தொடர் இடைமுறிவு ஏற்பட்டதாகும். ஆனால் இந்த 75ஆவது ஹதீஸின் அறிவிப்பாளர்தொடர் இடைமுறிவின்றி 'ஹஸன்' தரத்தில் அமைந்துள்ளது.

وَأَثْنَى عَلَيْهِ ثُمَّ قَالَ: يَا أَيُّهَا النَّاسُ وَلَوَدِدْتُ أَنَّ هَذَا كَفَانِيهِ غَيْرِي وَلَئِنْ أَخَذْتُمُونِي بِسُنَّةِ نَبِيِّكُمْ ﷺ مَا أُطِيقُهَا إِنْ كَانَ لَمَعْصُومًا مِنَ الشَّيْطَانِ وَإِنْ كَانَ لَيَنْزِلُ عَلَيْهِ الْوَحْيُ مِنَ السَّمَاءِ.

லாஹ்வைப் போற்றிப் புகழ்ந்துவிட்டு, "மக்களே! இந்த (ஆட்சி)ப் பொறுப்பை வேறு யாரேனும் ஏற்றுக்கொண்டிருந்தால், நன்றாயிருந்திருக்குமே என நான் விரும்பினேன். உங்களுடைய நபியின் வழிமுறைப்படியே (முழுமையாக நான் நிர்வாகத்தைக் கொண்டு செல்வேன் என) என்னிடம் நீங்கள் எதிர்பார்த்தால், அது என்னால் இயலாது ஏனெனில், நபி (ஸல்) அவர்கள் ஷைத்தானிடமிருந்து பாதுகாக்கப்பெற்றவராயிருந்தார்கள். மேலும், அவர்களுக்கு வானத்திலிருந்து 'வஹீ' (இறைச் செய்தி) அருளப்பெற்றுக்கொண்டிருந்தது. (நான் அத்தகையவன் அல்லவே?)' என்று கூறினார்கள்.[85]

٧٧ حَدَّثَنَا هَاشِمُ بْنُ الْقَاسِمِ حَدَّثَنَا شَيْبَانُ عَنْ لَيْثٍ عَنْ مُجَاهِدٍ قَالَ قَالَ أَبُو بَكْرٍ الصِّدِّيقُ رَضِيَ اللَّهُ عَنْهُ: أَمَرَنِي رَسُولُ اللَّهِ ﷺ أَنْ أَقُولَ إِذَا أَصْبَحْتُ وَإِذَا أَمْسَيْتُ وَإِذَا أَخَذْتُ مَضْجَعِي مِنَ اللَّيْلِ اللَّهُمَّ فَاطِرَ السَّمَوَاتِ وَالْأَرْضِ عَالِمَ الْغَيْبِ وَالشَّهَادَةِ أَنْتَ رَبُّ كُلِّ شَيْءٍ وَمَلِيكُهُ أَشْهَدُ أَنْ لَا إِلَهَ إِلَّا أَنْتَ وَحْدَكَ لَا شَرِيكَ لَكَ وَأَنَّ مُحَمَّدًا عَبْدُكَ وَرَسُولُكَ أَعُوذُ بِكَ مِنْ شَرِّ نَفْسِي وَشَرِّ الشَّيْطَانِ وَشِرْكِهِ وَأَنْ أَقْتَرِفَ عَلَى نَفْسِي سُوءًا أَوْ أَجُرَّهُ إِلَى مُسْلِمٍ.

77 அபூபக்ர் அஸ்ஸித்தீக் (ரலி) அவர்கள் கூறியதாவது:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் காலையிலும் மாலையிலும் இரவில் நான் படுக்கச் செல்லும்போதும் பின்வருமாறு இறைஞ்சுமாறு என்னைப் பணித்தார்கள்:

"அல்லாஹும்ம ஃபாத்திரஸ் ஸமாவாத்தி வல்அர்ளி, ஆலிமல் ஃகைபி வஷ்ஷஹாதத்தி, அன்த்த ரப்பு குல்லி ஷைஇன் வமலீ(க்)குஹூ. அஷ்ஹது அல்லாஇலாஹ இல்லா அன்த்த வஹ்தக்க லா ஷரீக்க லக்க, வஅன்ன முஹம்மதன் அப்துக்க, வரசூலுக்க, அஊது பிக்க மின் ஷர்ரி நஃப்சீ வஷர்ரிஷ் ஷைத்தானி வஷிர்கிஹி, வஅன் அக்த்தரிஃப அலா நஃப்சீ சூஅன், அவ் அஜுர்ரஹூ இலா முஸ்லிமின்."

(பொருள்: இறைவா! வானங்களையும் பூமியையும் முன்மாதிரியின்றிப் படைத்தவனே! மறைவானவற்றையும் வெளிப்படையானவற்றையும் அறிந்தவனே! நீயே அனைத்தையும் படைத்துப் பரிபாலிக்கின்ற இறைவன்! அனைத்துக்கும் அரசன்! உன்னைத் தவிர வேறு இறைவன் இல்லை. நீ தனித்தவன். உனக்கு இணையாக எவருமில்லை என நான் உறுதி கூறுகின்றேன். முஹம்மத் (ஸல்) அவர்கள் உன்னுடைய அடியாரும் தூதரும் ஆவார்கள் எனச் சாட்சியம் கூறுகின்றேன். என்னுடைய மனத்தின் தீமையிலிருந்தும், ஷைத்தானின் தீங்கிலிருந்தும், இறைவனுக்கு இணைவைக்கும் அவனது குழப்பத்திலிருந்தும், எனக்கெதிராக நானே தீங்கிழைப்பதிலிருந்தும், முஸ்லிமான ஒருவருக்கு நான்

85. [illegible]

தீங்கிழைப்பதிலிருந்தும் உன்னிடம் பாதுகாவல் கோருகிறேன்.)[56]

آخِرُ مُسْنَدِ أَبِي بَكْرٍ الصِّدِّيقِ رَضِيَ اللَّهُ عَنْهُ.

அபூபக்ர் (ரலி) அவர்கள் அறிவித்த நபிமொழிகள் நிறைவுற்றன.



56. இந்த ஹதீஸை அபூபக்ர் (ரலி) அவர்களிடமிருந்து அறிவிக்கும் அறிவிப்பாளராக முஜாஹித் பின் ஜப்ர் இடம்பெற்றுள்ளார். இவர் உமர் (ரலி) அவர்களின் ஆட்சிக் காலத்தில்தான் பிறந்தார். அபூபக்ர் (ரலி) அவர்களை இவர் சந்திக்கவில்லை. எனவே இது இடைமுறிந்த பலவீனமான ஹதீஸாகும். எனினும் இந்த ஹதீஸ் ஒரு சில வார்த்தை மாற்றங்களுடன் முன்சென்ற 49, 60 ஆகிய எண்களில் சரியான அறிவிப்பாளர்தொடரில் பதிவாகியுள்ளது. இது முஸ்னது அஹ்மதில் மட்டுமே இடம்பெற்ற ஹதீஸ் ஆகும்.

உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்களின் வரலாற்றுச் சுருக்கம்

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், பல தெய்வ வழிபாடுகளில் மூழ்கித் திளைத்த மக்கா குறைஷியரிடம் ஓரிறைக் கொள்கையை எடுத்து வைத்தபோது, எதிர்ப்பலைகள் ஓங்கி வந்து, ஓரிறைக் கொள்கையை விழ்த்த முயன்றன. அத்தகைய எதிர்ப்பலைகளுள் அஞ்சத்தக்க ஓர் அலையாக ஆர்ப்பரித்து நின்றவர்தாம் உமர் (ரலி) அவர்கள்.

ஓரிறையின் ஒப்பற்ற தூதுச் செய்தி உமரின் உள்ளத்தில் தாக்கத்தை ஏற்படுத்திய போது, உமர் உணர்வு பெற்றார்! இஸ்லாத்தில் இணைந்து ஏற்றம் பெற்றார்! அதன் பின்னர், தமது வாழ்க்கை முழுவதும், செம்மல் நபி (ஸல்) அவர்களின் சிறந்த தோழர்களுள் ஒருவராகவும், அறிவார்ந்த ஆலோசகராகவும் திகழ்ந்தார்.

உமர் (ரலி) அவர்களின் தந்தையின் பெயர், 'அல்கத்தாப்' தாயார் பெயர், ஹன்த்தமா பின்த் ஹாஷிம். நபியவர்களைப் போன்றும், அபூபக்ர் அவர்களைப் போன்றும், உமரவர்களும் குறைஷிக் குலத்தைச் சார்ந்தவர்தாம். அன்னாரின் ஒன்பதாவது பாட்டனார் லுஅய் ஆவார் (உமர் இப்னுல் கத்தாப் பின் நுஃபைல் பின் அப்தில் உஸ்ஸா பின் ரியாஹ் பின் அப்தில்லாஹ் பின் குர்த் பின் ரஸாஹ் பின் அதீ பின் கஅபு பின் லுஅய்) இவர்தான் நபியவர்களின் எட்டாவது பாட்டனார் ஆவார் (முஹம்மது பின் அப்தில்லாஹ் பின் அப்தில் முத்தலிபு பின் ஹாஷிம் பின் அப்து மனாஃப் பின் குஸை பின் கிலாபு பின் முர்ரா பின் கஅபு பின் லுஅய்)

உமரவர்களின் குறிப்புப் பெயர் (குன்யத்) 'அபூஹஃப்ஸ்' என்பதாகும். நீதி - அநீதி ஆகியவற்றுக்கிடையே பாகுபடுத்தி நீதியைத் தெரிவு செய்தவரானதால், இவர்களுக்கு 'ஃபாரூக்' (பாகுபடுத்தியவர்) எனும் புனை பெயரும் (லகபு) உண்டு. உமரவர்கள் இஸ்லாத்தில் இணைந்த பிறகு, இஸ்லாம் வலுப்பெற்றது. இறைச் செய்திகள் வெளிப்படையாக எடுத்துரைக்கப்பெற்றன. குறைஷி இளைஞர்களுள் முதன்மையானவர் எனக் கருதப்பட்ட உமர், இஸ்லாத்தில் இணைந்த பின்னர் தொடக்க கால முஸ்லிம்களை முன்னோக்கிவந்த எதிர்ப்பலைகளைத் தடுக்கும் தடுப்புச் சுவராகத் திகழ்ந்தார்கள்.

உமரவர்களின் அறிவார்ந்த ஆலோசனைகள் நபியவர்களின் பிரசாரத்திற்குப் பெரிதும் துணை நின்றன. உமரின் விவேகமான ஆலோசனைகளுக்கு ஏற்ப, மூன்று அல்லது நான்கு இறைவசனங்கள் சட்டமாக இறங்கி அருளப்பெற்றன.[1]

"மூன்று விஷயங்களில் நான் என் இறைவனுக்கு இசைவான கருத்துக்கொண்டேன் அவை: 1 மகாமு இப்ராஹீம் பற்றி. 2 பெண் தன்னுடலை மறைக்கும் 'ஹிஜாப்' என்ற உடை பற்றி 3 பத்ருப் போரில் பிடிக்கப்பட்ட கைதிகளைப் பற்றி" என்று உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.[2]

நபியவர்களின் காலத்தில் நடந்த பத்ரு, உஹுது, கன்தக், கைபர், ஹுனைன் மற்றும் ஹுதைபிய்யா உடன்படிக்கை, மக்கா வெற்றி ஆகியவற்றிலும் உமரவர்கள் பங்குபெற்றார்.

"எனக்குப் பிறகு நபி இருப்பாராயின், அவர் உமராகத்தான் இருப்பார். எனினும் எனக்குப் பின் நபி இல்லை" என நபி (ஸல்) அவர்கள் நவின்றுள்ளார்கள்.[3]

உமரின் வீரத்தைப் பாராட்டி, நபி (ஸல்) அவர்கள் ஒருதடவை கூறினார்கள்: "என் உயிர் எ(ந்த இறை)வன் கைவசம் உள்ளதோ, அவன் மீதாணையாக! (உமரே!) நீங்கள் ஒரு பாதையில் சென்றுகொண்டிருக்கையில், உங்களை ஷைத்தான் எதிர்கொண்டால், அவன் வேறுபாதையில் அகன்று சென்றுவிடுவான்."[4]

முதலாம் கலீஃபா அபூபக்ர் (ரலி) அவர்களுக்குப் பிறகு, இஸ்லாமிய அரசின் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற உமர் (ரலி) அவர்கள், பத்தாண்டுகளும் ஐந்து மாதங்களும் இருபத்தொரு நாட்களும் நல்லாட்சி நடத்திக் காட்டினார்கள்.[5]

அவர்களின் ஆட்சிக் காலத்தில்தான் அமூரியா நகரம்வரை ரோமப் பேரரசு இஸ்லாமிய அரசின் கீழ்வந்தது. அல்ஜஸீரா, அர்மீனியா, ஆதர்பைஜான், லிபியாவின் கடலோரப் பிராந்தியங்கள் வெற்றிகொள்ளப்பட்டன.

ஹிஜ்ரீ 23ஆம் ஆண்டு துல்ஹஜ் மாதத்தில் தமது 63ஆவது வயதில் அபூலுஃலுஆ ஃபைரூஸ் எனும் மஜூசி (நெருப்பு வழிபாட்டாளன்) என்பவனால் சுப்ஹுத் தொழுகையிலிருந்தபோது கத்தியால் குத்தப்பட்டு வீரமரணம் அடைந்தார்கள்.

தம் தோழர்களான நபி (ஸல்), அபூபக்ர் (ரலி) ஆகிய இருவருக்கும் அருகில் (மஸ்ஜிதுந் நபவீ 'ரவ்ளா'வில்) அடக்கம் செய்யப்பட்டார்கள்.

சான்றேடுகள்:

- உஸ்துல் ஃகாபா,
- அல்காமில் ஃபித்தாரீக்,
- அல்பிதாயா வந்நிஹாயா

1. பார்க்க: இதே நூல் ஹதீஸ் எண்கள் - 152, 155, 242, 355
2. முஸ்லிம் ஹதீஸ் எண் - 4770
3. திர்மிதீ, அஹ்மத், ஹாகிம், இப்னு ஹிப்பான் தப்ரானீ
4. புகாரீ ஹதீஸ் எண்கள் - 3294, 3683, 6085; முஸ்லிம் 4768
5. உஸ்துல் ஃகாபா

பாடம்: 2

உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள் அறிவித்த நபிமொழிகள்

أول مسند عمر بن الخطاب رضي الله عنه

78 ஹாரிஸா பின் முளர்ரிப் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

(கலீஃபா) உமர் (ரலி) அவர்களிடம் சிரியாவாசிகளுள் (முஸ்லிமல்லாத) சிலர் வந்து, "நாங்கள் சொத்துகளும் குதிரைகளும் அடிமைகளும் வைத்துள்ளோம். (எங்களிடம் இவற்றிற்குரிய 'ஸகாத்' வசூலிக்கப்பட்டு) அவற்றில் எங்களுக்குத் தூய்மை ஏற்படவேண்டும் என நாங்கள் விரும்புகிறோம்" என்று கூறினர்.

அதற்கு உமர் (ரலி) அவர்கள், "(இஸ்லாமிய அரசின் கீழ் வாழும் முஸ்லிமல்லாத மக்களிடம் 'ஸகாத்' வசூலிக்கும்) இச்செயலை எனக்கு முன்னிருந்த என் தோழர்கள் இருவரும் (நபி (ஸல்) மற்றும் அபூபக்ர் (ரலி) ஆகியோர்) செய்யவில்லை. அவ்வாறிருக்க, நான் எப்படிச் செய்வேன்?" என்று கூறிவிட்டு, பிறகு (அது குறித்து) முஹம்மது (ஸல்) அவர்களின் தோழர்களிடம் கருத்துக் கேட்டார்கள்.

அப்போது அவர்களிடையே அலீ (ரலி) அவர்களும் இருந்தார்கள். அலீ (ரலி) அவர்கள், "(உமரவர்களே! இஸ்லாமிய அரசின் கீழ் வாழும் முஸ்லிமல்லாத குடிமக்களிடமிருந்து அரசால்) வழக்கமாக வசூலிக்கப்படும் 'இராணுவக் காப்புவரி' (ஜிஸ்யா) போன்று இதுவும் உங்களுக்குப் பின்னால் ஆகிவிடாமலிருக்குமானால், இது நல்லதுதான்" என்று கூறினார்கள்.[1]

٧٨ حدثنا عبد الرحمن بن مهدي عن سفيان عن أبي إسحاق عن حارثة قال: جاء ناس من أهل الشام إلى عمر رضي الله عنه فقالوا: إنا قد أصبنا أموالا وخيلا ورقيقا نحب أن يكون لنا فيها زكاة وطهور، قال: ما فعله صاحباي قبلي فأفعله، واستشار أصحاب محمد ﷺ وفيهم علي رضي الله عنه، فقال علي: هو حسن إن لم يكن جزية راتبة يؤخذون بها من بعدك.

79 அபூவாயில் (ஷகீக் பின் சலமா-ரஹ்) அவர்கள் கூறியதாவது:

சுபய்யு பின் மஅபத் என்பார் 'தஃக்லிப்' குலத்தைச் சேர்ந்த கிராமப்புறக் கிறித்தவ

٧٩ حدثنا محمد بن جعفر، قال: حدثنا شعبة، عن الحكم، عن أبي وائل: أن الصبي بن معبد كان نصرانيا تغلبيا أعرابيا، فأسلم فسأل: أي

1. [illegible]

[illegible]

ராக இருந்தார். பிறகு அவர் இஸ்லாத்தை ஏற்றார். பின்னர், "நற்செயல்களுள் சிறந்தது எது?" என்று கேட்டார். "அல்லாஹ்வின் பாதையில் அறப்போர் புரிவது" என்று அவரிடம் கூறப்பட்டது. ஆகவே, அவர் அறப்போருக்குச் செல்ல விரும்பினார். அப்போது அவரிடம், "நீர் ஹஜ் செய்துவிட்டீரா?" என்று கேட்கப்பட்டது. அவர், "இல்லை" என்றார். அப்போது (அவரிடம்), "ஹஜ்ஜும் உம்ராவும் செய்துவிட்டுப் பிறகு அறப்போருக்குச் செல்வீராக" என்று கூறப்பட்டது.

அவ்வாறே அவர் (மக்கா நோக்கிப்) புறப்பட்டு, 'ஹவாபித்'[2] எனுமிடத்திற்கு வந்து, உம்ராவுக்கும் ஹஜ்ஜுக்கும் சேர்த்து 'இஹ்ராம்' அணிந்தார்.[3] அப்போது அவரை ஸைது பின் ஸூஹான், சல்மான் பின் ரபீஆ ஆகிய இருவரும் பார்த்துவிட்டு, "இவர் தமது ஒட்டகத்தைவிட வழி தவறியவர்; அல்லது இவர் தமது ஒட்டகத்தைவிட நேர்வழி செல்பவர் அல்லர்" என்று கூறினார்கள். பிறகு கபய்யு, (கலீஃபா) உமர் (ரலி) அவர்களிடம் வந்து, அவ்விருவரும் கூறியதைத் தெரிவித்தார். அப்போது உமர் (ரலி) அவர்கள், "நீர் உம்முடைய நபியின் வழிமுறைக்கே வழிகாட்டப்பட்டுள்ளீர்" என்று கூறினார்கள்.

الْعَمَلِ أَفْضَلُ؟ فَقِيلَ لَهُ: الْجِهَادُ فِي سَبِيلِ اللَّهِ - عَزَّ وَجَلَّ -، فَأَرَادَ أَنْ يُجَاهِدَ، فَقِيلَ لَهُ: حَجَجْتَ؟ فَقَالَ: لَا، فَقِيلَ لَهُ: حُجَّ وَاعْتَمِرْ ثُمَّ جَاهِدْ، فَانْطَلَقَ حَتَّى إِذَا كَانَ بِالْحَوَابِطِ أَهَلَّ بِهِمَا جَمِيعًا، فَرَآهُ زَيْدُ بْنُ صُوحَانَ وَسَلْمَانُ بْنُ رَبِيعَةَ، فَقَالَا: لَهُوَ أَضَلُّ مِنْ جَمَلِهِ، أَوْ: مَا هُوَ بِأَهْدَى مِنْ نَاقَتِهِ! فَانْطَلَقَ إِلَى عُمَرَ رَضِيَ اللَّهُ عَنْهُ فَأَخْبَرَهُ بِقَوْلِهِمَا، فَقَالَ: هُدِيتَ لِسُنَّةِ نَبِيِّكَ ﷺ، قَالَ الْحَكَمُ: فَقُلْتُ لِأَبِي وَائِلٍ: حَدَّثَكَ الصُّبَيُّ؟ فَقَالَ: نَعَمْ.

٨٠ حَدَّثَنَا عَفَّانُ حَدَّثَنَا، شُعْبَةُ عَنْ أَبِي إِسْحَاقَ، قَالَ: سَمِعْتُ عَمْرَو بْنَ مَيْمُونٍ قَالَ: صَلَّى بِنَا عُمَرُ بِجَمْعٍ الصُّبْحَ ثُمَّ وَقَفَ وَقَالَ: إِنَّ الْمُشْرِكِينَ كَانُوا لَا يُفِيضُونَ حَتَّى تَطْلُعَ الشَّمْسُ، وَإِنَّ رَسُولَ

இதன் அறிவிப்பாளருள் ஒருவரான ஹகம் (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்:

நான் (இந்த ஹதீஸை எனக்கு அறிவித்த) அபூவாயில் (ரஹ்) அவர்களிடம், "கபய்யு அவர்களே இதைத் தங்களிடம் கூறினார்களா?" என்று கேட்டேன். அதற்கு அவர்கள் "ஆம்" என்று விடையளித்தார்கள்.[4]

80 அம்ர் பின் மைமூன் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

உமர் (ரலி) அவர்கள் (ஹஜ்ஜில்) 'முஸ்தலிஃபா'வில் (தங்கியிருந்தபோது) எங்களுக்கு சுப்ஹுத் தொழுகை தொழுவித்தார்கள் பிறகு அங்கு எழுந்து நின்று, "இணைவைப்போர், சூரியன் உதிக்காதவரை இங்கிருந்து (மினா நோக்கிச்) செல்லமாட்டார்கள். (ஆனால்) அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களோ (சூரியன்

2. [illegible] பகுதியிலுள்ள ஓர் இடத்தின் பெயர்.

3. [illegible]

4. [illegible] (1534), [illegible] (2671), [illegible] (2961), [illegible] [illegible] (3960) [illegible]

உதிப்பதற்கு முன்பே இங்கிருந்து திரும்பிச் சென்று) இணைவைப்போருக்கு மாறு செய்தார்கள்" என்று கூறினார்கள். பிறகு உமர் (ரலி) அவர்கள் சூரியன் உதிப்பதற்கு முன்பே அங்கிருந்து புறப்பட்டார்கள்.[5]

الله ﷺ خالفهم ثم الحق قبل ألا تطلع الشمس.

81 இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறியதாவது:

அதைவிட உம்மை வியப்பில் ஆழ்த்தும் ஒன்றுண்டு. (கலீஃபா) உமர் (ரலி) அவர்கள் முஹம்மது (ஸல்) அவர்களின் தோழர்களுள் பெரியவர்களை (அவைக்கு) அழைக்கும் போது, அவர்களுடன் சேர்த்து என்னையும் அழைப்பார்கள். "அவர்கள் பேசும்வரை நீ (எதையும்) பேசாதே" என்று (என்னிடம்) கூறுவார்கள். அப்படி ஒரு நாள் அல்லது ஓர் இரவில் அவர்கள் எங்களை அழைத்து, "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் 'லைலத்துல் கத்ர்' எனும் (குர்ஆன் அருளப் பெற்ற கண்ணியமிக்க) இரவு குறித்து, 'அந்த இரவை (ரமளான் மாதத்தின்) கடைசிப் பத்து இரவுகளில் ஒற்றைப்படையான இரவில் தேடிக்கொள்ளுங்கள்' என்று கூறியுள்ளதை நீங்கள் அறிந்துள்ளீர்கள். அது எந்த ஒற்றைப்படையான இரவு என நீங்கள் கருதுகிறீர்கள்?" என்று (எங்களிடம்) கேட்டார்கள்.[6]

٨١ حدثنا عفان، حدثنا عبد الواحد بن زياد قال: حدثنا عاصم بن كليب قال: قال أبي: لحدثنا به ابن عباس رضي الله عنهما قال: وما أعجبك من ذلك كان عمر رضي الله عنه إذا دعا الأشياخ من أصحاب محمد ﷺ دعاني معهم فقال: لا تكلم حتى يتكلموا، قال: فدعانا ذات يوم أو ذات ليلة، فقال: إن رسول الله ﷺ قال في ليلة القدر: ما قد علمتم، فالتمسوها في العشر الأواخر وترا، ففي أي الوتر ترونها.

82 ஆஸிம் பின் அம்ர் அல்பஜலீ (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

உமர் (ரலி) அவர்களிடம் பின்வருமாறு (வினவி விளக்கம்) கேட்ட மக்களுள் ஒருவர் கூறினார்:

நாங்கள் உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்களிடம், "மூன்று தகவல்களைப் பற்றிக் கேட்பதற்காகவே நாங்கள் உங்களிடம் வந்துள்ளோம். அவை:

1- ஒருவர் தனது வீட்டில் கூடுதலான (நஃபில்) தொழுகை தொழுவது.

2- பெருந்துடக்கிற்காகக் (குளியல் கடமையானவர்) குளிக்கும் முறை.

٨٢ حدثنا محمد بن جعفر حدثنا شعبة قال: سمعت عاصم بن عمرو البجلي يحدث عن رجل من القوم الذين سألوا عمر بن الخطاب فقالوا له: إنما أتيناك نسألك عن ثلاث: عن صلاة الرجل في بيته تطوعا، وعن الغسل من الجنابة،

5. இந்த ஹதீஸ் புகாரீ (1684, 3838), திர்மிதீ (820), நஸாயீ (3047), அபூதாவூத் (1954), இப்னுமாஜா (3022), தாரிமீ (1890) ஆகிய நூல்களிலும் இடம்பெற்றுள்ளது.

6. இந்த ஹதீஸ் 'அதைவிட உம்மை வியப்பில் ஆழ்த்தும் ஒன்று' [illegible]

وَعَنِ الرَّجُلِ مَا يَصْلُحُ لَهُ مِنِ امْرَأَتِهِ إِذَا كَانَتْ حَائِضًا؟ فَقَالَ: أَسُحَّارٌ أَنْتُمْ! لَقَدْ سَأَلْتُمُونِي عَنْ شَيْءٍ، مَا سَأَلَنِي عَنْهُ أَحَدٌ مُنْذُ سَأَلْتُ عَنْهُ رَسُولَ اللَّهِ ﷺ، فَقَالَ: صَلَاةُ الرَّجُلِ فِي بَيْتِهِ تَطَوُّعًا نُورٌ، فَمَنْ شَاءَ نَوَّرَ بَيْتَهُ، وَقَالَ فِي الْغُسْلِ مِنَ الْجَنَابَةِ: يَغْسِلُ فَرْجَهُ ثُمَّ يَتَوَضَّأُ ثُمَّ يُفِيضُ عَلَى رَأْسِهِ ثَلَاثًا، وَقَالَ فِي الْحَائِضِ لَهُ مَا فَوْقَ الْإِزَارِ.

3- மாதவிடாய் ஏற்பட்டுள்ள மனைவியிடம் ஒருவர் எதைச் செய்வது தகும் ஆகியவையே" என்று கூறினோம். அதற்கு உமர் (ரலி) அவர்கள், "நீங்கள் என்ன சூனியக்காரர்களா?" என்று (வியப்புடன்) கேட்டுவிட்டு, "நீங்கள் என்னிடம் சில தகவல்களைப் பற்றிக் கேட்டீர்கள். இவற்றைக் குறித்து நான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் கேட்டது முதல் (இதுவரை) எவருமே என்னிடம் இவற்றைப் பற்றிக் கேட்கவில்லை. (நான் இவற்றைப் பற்றிக் கேட்டபோது,) அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

'ஒருவர் தமது வீட்டில் கூடுதலான (நஃபில்) தொழுகை தொழுவது, அவருக்கு ஒளியாக அமையும். ஆகவே, விரும்பியவர் (கூடுதலான தொழுகைகளை வீட்டில் தொழுவதன் மூலம்) தமது வீட்டை ஒளிமயமாக்கிக் கொள்ளட்டும்' என்று கூறினார்கள். பிறகு பெருந்துடக்கிற்கான (கடமையான) குளியல் பற்றிக் கூறுகையில், 'அவர் தமது மறைவுறுப்பைக் கழுவிவிட்டு, அங்கத் தூய்மை (உளூ) செய்துகொள்ள வேண்டும். பிறகு தமது தலையில் மூன்றுமுறை தண்ணீர் ஊற்றிக்கொள்ளவேண்டும்' என்றார்கள். மாதவிடாய் ஏற்பட்ட மனைவியைப் பொறுத்தவரையில், 'அவளுடைய கீழாடைக்குமேல் (இன்பம் துய்த்துக்கொள்ள) அனுமதி உண்டு' என்றும் கூறினார்கள்.[7]

٨٣ - حَدَّثَنَا قُتَيْبَةُ بْنُ سَعِيدٍ حَدَّثَنَا ابْنُ لَهِيعَةَ، عَنْ أَبِي النَّضْرِ، عَنْ أَبِي سَلَمَةَ، عَنِ ابْنِ عُمَرَ رَضِيَ اللَّهُ عَنْهُ أَنَّهُ قَالَ: رَأَيْتُ سَعْدَ بْنَ أَبِي وَقَّاصٍ يَمْسَحُ عَلَى خُفَّيْهِ بِالْعِرَاقِ حِينَ يَتَوَضَّأُ، فَأَنْكَرْتُ ذَلِكَ عَلَيْهِ، قَالَ: فَلَمَّا اجْتَمَعْنَا عِنْدَ عُمَرَ بْنِ الْخَطَّابِ رَضِيَ اللَّهُ عَنْهُ، قَالَ لِي: سَلْ أَبَاكَ عَمَّا أَنْكَرْتَ عَلَيَّ مِنْ مَسْحِ الْخُفَّيْنِ، قَالَ: فَذَكَرْتُ ذَلِكَ لَهُ، فَقَالَ: إِذَا حَدَّثَكَ سَعْدٌ بِشَيْءٍ، فَلَا تَرُدَّ عَلَيْهِ، فَإِنَّ

83 இப்னு உமர் (ரலி) அவர்கள் கூறியதாவது:

சஅது பின் அபீவக்காஸ் (ரலி) அவர்கள் இராக்கில் இருந்தபோது, அங்கத் தூய்மை (உளூ) செய்ததை நான் கண்டேன். அப்போது அவர்கள் (கால்களைக் கழுவுவதற்குப் பகரமாகக்) காலுறைகள் மீது (ஈரக் கையால்) தடவி (மஸ்ஹு செய்து)கொண்டார்கள். அவர்களிடம் அதற்கு நான் மறுப்புத் தெரிவித்தேன். பிறகு நாங்கள் உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்களிடம் ஒன்று கூடியபோது, சஅது பின் அபீவக்காஸ் (ரலி) அவர்கள் (என்னிடம்), "நான் காலுறைகள் மீது ஈரக்கையால் தடவி மஸ்ஹு செய்தது குறித்து நீர் மறுப்புத் தெரிவித்ததைப் பற்றி உம் தந்தையிடம் கேள்" என்றார்கள். நான் அவர்களிடம் அது குறித்துக் கேட்டேன். அப்போது அவர்கள், "சஅது (ரலி)

7. இந்த ஹதீஸின் அறிவிப்பாளர்களுள் ஒருவரான ஆஸிம் பின் அம்ர் என்பவர் உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்களிடமிருந்து கேட்ட ஒருவரிடமிருந்து அறிவிக்கிறார். அந்த மனிதர் யாரென அறியப்படவில்லை. இந்த ஆஸிமும் பலவீனமானவர் ஆவார். எனவே, இது பலவீனமான ஹதீஸாகும். இந்த ஹதீஸ் இப்னுமாஜா (1365) [illegible] (687) உள்ளிட்ட நூல்களிலும் இதே அறிவிப்பாளர்தொடரில் இடம்பெற்றுள்ளது. எனினும் [illegible] கூடுதலான தொழுகைகளை வீட்டில் தொழுவது பற்றி புகாரீ (1187) முஸ்லிம் (1426, 1429) ஆகிய நூல்களிலும் பெருந்துடக்கிற்கான குளியல் முறை பற்றி புகாரீ (248, 249) முஸ்லிம் (526) ஆகிய நூல்களிலும் மாதவிடாய் ஏற்பட்டுள்ள மனைவியுடன் உறவுகொள்ளும் முறை பற்றி புகாரீ (300, 303) முஸ்லிம் (482) ஆகிய நூல்களிலும் ஆதாரபூர்வமான ஹதீஸ்கள் இடம்பெற்றுள்ளன.

அவர்கள் உன்னிடம் ஒரு செய்தியைக் கூறினால், அதற்கு மறுப்புத் தெரிவிக்காதே! ஏனெனில், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் (உளூவின்போது ஈரக் கையால்) காலுறைகள் மீது தடவி வந்தார்கள்" என்று கூறினார்கள்.[8]

رَسُولَ اللهِ ﷺ كَانَ يَمْسَحُ عَلَى الْخُفَّيْنِ.

٨٤ حدثنا هَارُونُ بْنُ مَعْرُوفٍ قَالَ: حَدَّثَنَا ابْنُ وَهْبٍ عَنْ عَمْرِو بْنِ الْحَارِثِ، عَنْ أَبِي النَّضْرِ، عَنْ أَبِي سَلَمَةَ بْنِ عَبْدِ الرَّحْمَنِ، عَنْ عَبْدِ اللهِ بْنِ عُمَرَ، عَنْ سَعْدِ بْنِ أَبِي وَقَّاصٍ، عَنْ رَسُولِ اللهِ ﷺ: أَنَّهُ مَسَحَ عَلَى الْخُفَّيْنِ، وَأَنَّ عَبْدَ اللهِ بْنَ عُمَرَ سَأَلَ عُمَرَ رَضِيَ اللهُ عَنْهُ عَنْ ذَلِكَ فَقَالَ: نَعَمْ، إِذَا حَدَّثَكَ سَعْدٌ عَنْ رَسُولِ اللهِ ﷺ شَيْئًا فَلَا تَسْأَلْ عَنْهُ غَيْرَهُ.

84 அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் கூறியதாவது:

"அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் (உளூ செய்தபோது, கால்களைக் கழுவுவதற்குப் பகரமாக ஈரக் கையால் தொட்டுக்) காலுறைகள் மீது தடவினார்கள்" என சஅத் பின் அபீவக்காஸ் (ரலி) அவர்கள் கூறினார்கள். இது குறித்து நான் (என் தந்தை) உமர் (ரலி) அவர்களிடம் கேட்டேன். அப்போது அவர்கள், "ஆம் (அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவ்வாறு செய்தார்கள் என்பது உண்மை தான்). சஅத் (ரலி) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் குறித்து ஏதேனும் உன்னிடம் கூறினால், அதைப் பற்றி நீ பிறரிடம் கேட்காதே" என்று கூறினார்கள்.[9]

٨٥ حدثنا عَفَّانُ، حَدَّثَنَا هَمَّامُ بْنُ يَحْيَى قَالَ: حَدَّثَنَا قَتَادَةُ، عَنْ سَالِمِ بْنِ أَبِي الْجَعْدِ الْغَطَفَانِيِّ، عَنْ مَعْدَانَ بْنِ أَبِي طَلْحَةَ الْيَعْمَرِيِّ: أَنَّ عُمَرَ بْنَ الْخَطَّابِ رَضِيَ اللهُ عَنْهُ قَامَ عَلَى الْمِنْبَرِ يَوْمَ الْجُمُعَةِ فَحَمِدَ اللهَ وَأَثْنَى عَلَيْهِ، ثُمَّ ذَكَرَ رَسُولَ اللهِ ﷺ وَذَكَرَ أَبَا بَكْرٍ رَضِيَ اللهُ عَنْهُ ثُمَّ قَالَ: رَأَيْتُ رُؤْيَا لَا أُرَاهَا إِلَّا لِحُضُورِ أَجَلِي، رَأَيْتُ كَأَنَّ دِيكًا نَقَرَنِي نَقْرَتَيْنِ، قَالَ: وَذَكَرَ لِي أَنَّهُ دِيكٌ أَحْمَرُ،

85 மஅதான் பின் அபீதல்ஹா அல்யஅமுரீ (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

(கலீஃபா) உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள் ஒரு வெள்ளிக் கிழமை (ஜுமுஆ) அன்று உரை நிகழ்த்தினார்கள். அவர்கள் (தமது உரையில்) அல்லாஹ்வை புகழ்ந்து போற்றியபின், இறைத்தூதர் (ஸல்) அவர்களையும் அபூபக்ர் (ரலி) அவர்களையும் நினைவுகூர்ந்தார்கள். மேலும், அவர்கள் (பின்வருமாறு) கூறினார்கள்: "நான் (இன்று) ஒரு சேவல் என்னை இரண்டு முறை கொத்துவதைப் போன்று (கனவு) கண்டேன். இதற்கு, என் ஆயுட்காலம் முடிந்துவிட்டது என்றே நான் (விளக்கம்) கண்டேன். அது சிவப்பு நிறச் சேவலாகும்

8. [illegible]

9. [illegible]

فَقَصَصْتُهَا عَلَى أَسْمَاءَ بِنْتِ عُمَيْسٍ امْرَأَةِ أَبِي بَكْرٍ رَضِيَ اللَّهُ عَنْهُ، فَقَالَتْ: يَقْتُلُكَ رَجُلٌ مِنَ الْعَجَمِ: قَالَ: وَإِنَّ النَّاسَ يَأْمُرُونَنِي أَنْ أَسْتَخْلِفَ، وَإِنَّ اللَّهَ لَمْ يَكُنْ لِيُضَيِّعَ دِينَهُ وَخِلَافَتَهُ الَّتِي بَعَثَ بِهَا نَبِيَّهُ ﷺ، وَإِنْ يَعْجَلْ بِي أَمْرٌ فَإِنَّ الشُّورَى فِي هَؤُلَاءِ السِّتَّةِ الَّذِينَ مَاتَ نَبِيُّ اللَّهِ ﷺ وَهُوَ عَنْهُمْ رَاضٍ، فَمَنْ بَايَعْتُمْ مِنْهُمْ فَاسْمَعُوا لَهُ وَأَطِيعُوا، وَإِنِّي أَعْلَمُ أَنَّ أُنَاسًا سَيَطْعَنُونَ فِي هَذَا الْأَمْرِ، أَنَا قَاتَلْتُهُمْ بِيَدِي هَذِهِ عَلَى الْإِسْلَامِ، أُولَئِكَ أَعْدَاءُ اللَّهِ الْكَفَرَةُ الضُّلَّالُ وَايْمُ اللَّهِ مَا أَتْرُكُ فِيمَا عَهِدَ إِلَيَّ رَبِّي فَاسْتَخْلَفَنِي شَيْئًا أَهَمَّ إِلَيَّ مِنَ الْكَلَالَةِ، وَايْمُ اللَّهِ

பிறகு அந்தக் கனவைப் பற்றி நான் அபூபக்ர் (ரலி) அவர்களின் மனைவி அஸ்மா பின்த் உமைஸ் (ரலி) அவர்களிடம் தெரிவித்தேன். அப்போது அஸ்மா (ரலி) அவர்கள், 'அரபியரல்லாத ஒருவர் உம்மைக் கொல்வார்' என்று (விளக்கம்) சொன்னார்கள்.[10]

தொடர்ந்து உமர் (ரலி) அவர்கள் குறிப்பிட்டார்கள்:

இந்த மக்களுள் சிலர், எனக்குப்பின் வர வேண்டிய ஆட்சியாளர் (கலீஃபா) ஒருவரை நான் அறிவிக்குமாறு வலியுறுத்துகின்றனர். நிச்சயமாக அல்லாஹ் தனது மார்க்கத்தையோ, தன் தூதரை எந்த ஆட்சித் தலைமையுடன் அனுப்பிவைத்தானோ அந்தத் தலைமைத்துவத்தையோ பாழாக்கி விடமாட்டான் எனக்கு ஏதேனும் நேர்ந்துவிட்டால், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் எவரைக் குறித்து உகப்புக்கொண்ட நிலையில் இறந்தார்களோ, அந்த ஆறு பேர்[11] *ஆட்சித் தலைமை குறித்துத் தம்மிடையே கலந்தாலோசித்து முடிவு செய்வார்கள். அவர்களுள் யாரை ஆட்சியாளராக ஏற்று நீங்கள் உறுதியளித்தாலும், அவரின் சொல்லைக் கேட்டு, அவருக்குக் கட்டுப்பட்டு நடங்கள்*

சிலர் இ(ந்த நிர்வாக விஷயத்)தில் என்னைக் குறைகூறிவருவது எனக்குத் தெரியும் நான் (சில நேரங்களில்) அவர்களை இஸ்லாத்திற்காக எனது இந்தக் கையால் அடித்திருக்கிறேன். அவர்கள் இவ்வாறு (குறை கூறுவதை மார்க்கத்திற்கு ஏற்புடைய ஒரு செயலாக நினைத்துச்) செய்தால், அத்தகையோர்தாம் இறைவனின் எதிரிகளும் வழிகெட்ட இறை மறுப்பாளர்களும் ஆவர்.

நான் எனக்குப் பின்னால், 'கலாலா'[12] *வைவிட ஒரு முக்கியமான விஷயத்தை*

---

*எண்ணைக் குழுவுக்குப் பகரமாக ஈரக் கையால் காலுறைகள் மீது தடவுதல் பற்றிய தகவல் புகாரீ (202) நஸயீ (120, 121) இப்னு குஸைமா (182) உள்ளிட்ட நூல்களிலும் பதிவாகியுள்ளது.

10. 'அரபியர் அல்லாத ஒருவர் என்பது அபூலுஃலுஆ ஃபைரோஸ் என்ற பாரசீக மஜூஸி அடிமை ஒருவனையே குறிக்கிறது. இவன்தான் உமர் (ரலி) அவர்களைத் தாக்கினான். இவன் முஃகீரா பின் ஷுஅபா (ரலி) அவர்களின் அடிமையாக இருந்தான். உமர் (ரலி) கொலை செய்யப்பட்ட நிகழ்வு: புகாரீ ஹதீஸ் எண் - 3700 காண்க.

11. உஸ்மான், அலீ, தல்ஹா, ஸுபைர், ஸஅத் பின் அபீவக்காஸ், அப்துர்ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலியல்லாஹு அன்ஹும்) ஆகியோரே அந்த அறுவர்.

12. திருக்குர்ஆனின் 4:12 மற்றும் 4:176 ஆகிய வசனங்களில் குறிப்பிடப்பெற்றுள்ள 'கலாலா' என்பது எதைக் குறிக்கிறது என்பதில் கருத்து வேறுபாடு நிலவுகிறது. தந்தை மற்றும் பாட்டன் ஆகிய மூல வாரிசுகளோ பிள்ளை மற்றும் பேரன் ஆகிய கிளை வாரிசுகளோ இல்லாத நிலைக்கே 'கலாலா' என்று கூறப்படும் என்பர் சிலர். தந்தை இருந்தாலும் குழந்தை இல்லாவிட்டாலே 'கலாலா' என்று சொல்லலாம் என்பர் வேறு சிலர். 4:176ஆவது வசனத்தில் 'கலாலா'வைப் பற்றிக் குறிப்பிடுகையில் 'குழந்தையில்லாத நிலையில் இறந்துபோன மனிதர்' என்றே இறைவன் கூறுகின்றான். தந்தையும் இல்லாதிருக்க வேண்டுமா? அல்லது தந்தை இருந்தாலும் 'கலாலா' எனப்படுமா என்ற குறிப்பு இவ்வசனத்தில் இல்லாததால் இக்கருத்து வேறுபாடு தோன்றியது. இதனாலேயே இது தொடர்பாக நபி (ஸல்) அவர்கள் ஒரு தெளிவான முடிவை அறிவித்திருந்தால் நன்றாயிருந்திருக்கும் என உமர் (ரலி) அவர்கள் குறிப்பிட்டார்கள். மேலும் விளக்கத்திற்குக் காண்க: புகாரீ ஹதீஸ் எண் - 4605 மற்றும் அதன் அடிக்குறிப்பு (4 ம்பாகம்) காண்.

நபி (ஸல்) அவர்களின் இறுதி நாட்களில் அருளப்பெற்ற இவ்வசனம் தொடர்பாகத் திரும்பத் திரும்ப விளக்கம்

விட்டுச் செல்லவில்லை. நான், (இது குறித்து அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் விவாதித்தபோது) அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் இது தொடர்பாக என்னிடம் கடிந்துகொண்டதைப் போன்று வேறு எதற்காகவும் என்னிடம் கடிந்து கொண்டதில்லை எந்த அளவிற்கெனில், அவர்கள் என் நெஞ்சில் தமது விரலால் குத்தினார்கள். "உமரே! 'அந்நிஸா' அத்தியாயத்தின் இறுதியிலுள்ள கோடைக் காலத்தில் இறக்கியருளப்பெற்ற (4:176ஆவது) இறைவசனம் உமக்குப் போதுமானதாக ஆகும்" என்றும் கூறினார்கள்.

நான் இன்னும் (சிறிது காலம்) வாழ்ந்தால், இந்தக் 'கலாலா' தொடர்பாகக் குர்ஆனைக் கற்றோரும் கல்லாதோரும் தீர்ப்பளிக்கும் விதத்தில் தெளிவான ஒரு தீர்ப்பை வழங்குவேன்

مَا أَغْلَظَ لِي نَبِيُّ اللَّهِ ﷺ فِي شَيْءٍ مُنْذُ صَحِبْتُهُ أَشَدَّ مَا أَغْلَظَ لِي فِي شَأْنِ الْكَلَالَةِ، حَتَّى طَعَنَ بِإِصْبَعِهِ فِي صَدْرِي، وَقَالَ: تَكْفِيكَ آيَةُ الصَّيْفِ الَّتِي نَزَلَتْ فِي آخِرِ سُورَةِ النِّسَاءِ، وَإِنِّي إِنْ أَعِشْ فَسَأَقْضِي فِيهَا بِقَضَاءٍ يَقْضِي بِهِ مَنْ يَقْرَأُ، وَمَنْ لَا يَقْرَأُ وَإِنِّي أُشْهِدُ اللَّهَ عَلَى أُمَرَاءِ الْأَمْصَارِ إِنِّي إِنَّمَا بَعَثْتُهُمْ لِيَعْدِلُوا عَلَيْهِمْ، وَلِيُعَلِّمُوا النَّاسَ دِينَهُمْ وَسُنَّةَ نَبِيِّهِمْ ﷺ وَيَرْفَعُوا إِلَيَّ مَا أَشْكَلَ عَلَيْهِمْ، ثُمَّ إِنَّكُمْ أَيُّهَا النَّاسُ تَأْكُلُونَ مِنْ شَجَرَتَيْنِ لَا أُرَاهُمَا إِلَّا خَبِيثَتَيْنِ، هَذَا الثُّومُ وَالْبَصَلُ، وَايْمُ اللَّهِ لَقَدْ كُنْتُ أَرَى نَبِيَّ اللَّهِ ﷺ يَجِدُ رِيحَهُمَا مِنَ الرَّجُلِ فَيَأْمُرُ بِهِ فَيُؤْخَذُ بِيَدِهِ فَيُخْرَجُ بِهِ مِنَ الْمَسْجِدِ حَتَّى يُؤْتَى بِهِ الْبَقِيعَ،

நகரங்களின் ஆளுநர்களுக்கு அல்லாஹ்வையே சாட்சியாக்குகின்றேன். நான் அவர்களை மக்களிடையே நேர்மையாக நடந்துகொள்வதற்காகவும், அவர்களுடைய மார்க்கத்தையும் அவர்களுடைய நபி (ஸல்) அவர்களது வழிமுறையையும் கற்றுத் தருவதற்காகவும், அவர்களுக்கிடையில் சிக்கல் எழும்போது அதை என் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும் என்பதற்காகவும்தான் அனுப்பிவைத்தேன்.

(பிறகு, சற்றே கவனம் திருப்பி,) மக்களே! நீங்கள் இரு செடிகளிலிருந்து விளைகின்றவற்றைச் சாப்பிடுகிறீர்கள் அவ்விரண்டையும் நான் அருவருப்பானவையாகக் கருதுகிறேன் இந்த வெங்காயமும் வெள்ளைப் பூண்டுமே[13] (அவை இரண்டுமாகும்). அல்லாஹ்வின் மீதாணையாக! அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் பள்ளிவாசலில் இருந்தபோது ஒருவரிடமிருந்து அவற்றின் பச்சை வாடை வருவதைக் கண்டால், அவரது கையைப் பிடித்து அவரை 'அல்பகீஉ'[14] பொது

---

*வேறு உமர் (ரலி) அவர்களிடம் 'நான் (இன்னும் சில காலம் உயிரோடு இருந்தால் இது குறித்து விவரிப்பேன்' என நபியவர்கள் குறிப்பிட்டிருந்தார்கள். ஆனால், இறந்துவிட்டார்கள். (முஸ்லிம் - 2716, இப்னுமாஜா - 980 முஅத்தா மாலிக் - 1561)

13. [illegible]

14. [illegible] (Babul) [illegible]

மையவாடிக்குக் கொண்டுபோய் விட்டுவிட்டு வருமாறு கூறுவார்கள். எனவே, யார் அதைச் சாப்பிட விரும்புகின்றாரோ, அவர் அதைச் சமைத்து, அதன் வாடையை நீக்கிக்கொள்ளட்டும்.

உமர் (ரலி) அவர்கள் வெள்ளிக்கிழமை அன்று உரையாற்றினார்கள் (நான்கு நாட்கள் கழித்துப்) புதன் கிழமையன்று (அபூலுஃலுஆ ஃபைரூஸ் என்பவனால்) குத்தப்பட்டார்கள்.[15]

فمن أكلهما لا بد فليمتهما طبخا، قال: فخطب الناس يوم الجمعة وأصيب يوم الأربعاء.

86 அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் கூறியதாவது:

நானும் ஸுபைர் (ரலி) அவர்களும் மிக்தாத் பின் அல்அஸ்வத் (ரலி) அவர்களும் கைபரிலுள்ள எங்கள் சொத்துகளைப் பார்க்கச் சென்றோம். நாங்கள் கைபரை அடைந்ததும், எங்களின் சொத்துகளைக் காண்பதற்காகப் பிரிந்து சென்றோம். அன்றிரவு நான் எனது படுக்கையில் உறங்கிக்கொண்டிருந்தபோது, மர்மமான முறையில் நான் தாக்குதலுக்கு உள்ளானேன். என் மணிக்கட்டு மூட்டுகள் பிசகச் செய்யப்பட்டிருந்தன. நான் காலைப் பொழுதை அடைந்தபோது, எனக்காக உதவிகோரி, என் நண்பர்கள் இருவரும் கூக்குரலிட்டு (மக்களை) அழைத்தனர். அவ்விருவரும் என்னிடம் வந்து, "உங்களை இவ்வாறு செய்தவர் யார்?" என்று கேட்டனர். நான், "தெரியாது" என்றேன்.

٨٦ حدثنا يعقوب حدثنا أبي، عن ابن إسحاق قال: حدثني نافع مولى عبد الله بن عمر عن عبد الله بن عمر قال: خرجت أنا والزبير والمقداد بن الأسود إلى أموالنا بخيبر نتعاهدها، فلما قدمناها تفرقنا في أموالنا، قال: فعدي علي تحت الليل وأنا نائم على فراشي، ففدعت يداي من مرفقي، فلما أصبحت استصرخ علي صاحباي فأتياني فسألاني عمن صنع هذا بك؟ قلت: لا أدري، قال: فأصلحا من يدي، ثم قدموا بي على عمر، فقال: هذا عمل يهود، ثم قام في الناس خطيبا، فقال: أيها الناس، إن رسول الله ﷺ كان عامل يهود خيبر على أنا نخرجهم إذا شئنا، وقد عدوا على عبد الله بن عمر، ففدعوا يديه كما بلغكم مع عدوتهم على الأنصار قبله، لا نشك أنهم أصحابهم، ليس لنا هناك عدو غيرهم، فمن كان

பிறகு அவர்கள் இருவரும் என் கைகளைச் சரி செய்தனர். பிறகு என்னை அழைத்துக்கொண்டு (கலீஃபா) உமர் (ரலி) அவர்களிடம் வந்(து நடந்ததைத் தெரிவித்)தனர். அப்போது உமர் (ரலி) அவர்கள், "இது யூதர்களின் செயல்" என்று கூறினார்கள்; பிறகு மக்களிடையே எழுந்து நின்று உரையாற்றினார்கள்.

அப்போது, "மக்களே! அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கைபர் வாழ் யூதர்களிடம், 'நாம் விரும்பும்போது உங்களை இங்கிருந்து வெளியேற்றுவோம்' எனும் நிபந்தனையின் அடிப்படையில், அவர்களுடைய சொத்து(களான விளை நிலங்)கள் விஷயத்தில் ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். இந்நிலையில், யூதர்கள் (இப்போது) அப்துல்லாஹ் பின் உமரிடம் வரம்பு மீறி நடந்துள்ளனர். அவருடைய கைகளைப் பிசகச் செய்துள்ளனர். இதற்கு முன்னர், (மதீனா முஸ்லிம்களான) அன்சாரிகளிடம் அவர்கள் வரம்பு மீறி நடந்ததும் உங்களுக்குத் தெரியும். இவர்கள், அவர்களின் தோழர்கள்தாம் என்பதில் ஐயமில்லை. அவர்களைத் தவிர அங்கு நமக்கு வேறு பகைவர்கள் யாருமில்லை.

15. இந்த ஹதீஸ் 101, 323 ஆகிய எண்களிலும் பின்னர் வருகிறது. முஸ்லிமிலும் 980ஆவது எண்ணாக இதே ஹதீஸ் இடம்பெற்றுள்ளது. மேலும், முஸ்னதுல் பஸ்ஸார் (315), முஸ்னது அபீயஅலா (240), முஸ்தக்ரஜு அபீஅவானா (4540), ஸஹீஹ் இப்னு ஹிப்பான் (2726), முஸ்னதுல் ஹுமைதீ (52) உள்ளிட்ட நூல்களிலும் இந்த ஹதீஸ் இடம்பெற்றுள்ளது.

له قال بخير فليلحق به، فإني مخرج يهود، فأخرجهم.

எனவே, எவருக்கேனும் (கைபரில்) சொத்துகள் இருந்தால், அவர் அவற்றைக் கைப்பற்றிக் கொள்ளட்டும். ஏனெனில், நான் யூதர்களை அங்கிருந்து நாடு கடத்தப் போகிறேன்" என்று கூறினார்கள். அவ்வாறே அவர்களை நாடு கடத்தினார்கள்.[16]

٨٧ حدثنا حسن بن موسى وحسين بن محمد قالا: حدثنا شيبان، عن يحيى، عن أبي سلمة، عن أبي هريرة: أن عمر بن الخطاب رضي الله عنه بينا هو يخطب يوم الجمعة إذ جاء رجل، فقال عمر: لم تحتبسون عن الصلاة؟ فقال الرجل: ما هو إلا أن سمعت النداء فتوضأت، فقال: أيضا؟ أولم تسمعوا أن رسول الله ﷺ يقول: إذا راح أحدكم إلى الجمعة فليغتسل.

87 அபூஹுரைரா (ரலி) அவர்கள் கூறியதாவது:

(கலீஃபா) உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள் வெள்ளிக் கிழமை (ஜுமுஆ) அன்று உரையாற்றிக்கொண்டிருந்தபோது, ஒருவர் (பள்ளிவாசலுக்கு) வந்தார். அப்போது உமர் (ரலி) அவர்கள், "ஏன் தொழுகைக்குத் தாமதமாக வருகின்றீர்கள்?" என்று கேட்டார்கள். அதற்கவர், "அதற்குக் காரணம், பாங்கைக் கேட்ட பிறகுதான் நான் அங்கத் தூய்மை (உளூ) செய்தேன்" என்றார். அப்போது உமர் (ரலி) அவர்கள், "உளூ மட்டும்தான் செய்தீரா? நபி (ஸல்) அவர்கள், 'உங்களுள் ஒருவர் ஜுமுஆத் தொழுகைக்குச் செல்லும்போது குளித்துக்கொள்ளட்டும்' என்று கூறியதை நீங்கள் செவியேற்கவில்லையா?" என்று கேட்டார்கள்.[17]

٨٨ حدثنا حسن بن موسى قال: حدثنا زهير قال: حدثنا عاصم الأحول، عن أبي عثمان قال: جاءنا كتاب عمر رضي الله عنه ونحن بأذربيجان: يا عتبة بن فرقد، إياكم والتنعم وزي أهل الشرك ولبوس الحرير، فإن رسول الله ﷺ نهانا عن لبوس الحرير، وقال: إلا هكذا، ورفع لنا رسول الله ﷺ إصبعيه.

88 அபூ உஸ்மான் அந்நஹ்தீ (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

நாங்கள் (ஈரானிலிருந்த) அஜர்பைஜானில் (ஒரு படையில்) இருந்தபோது, எங்களுக்கு (கலீஃபா) உமர் (ரலி) அவர்களிடமிருந்து கடிதம் ஒன்று வந்தது. (அதில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்கள்:)

(தளபதி) உத்பா பின் ஃபர்கதே! உல்லாச வாழ்க்கை, இணைவைப்பாளர்களின் நாகரிகம், பட்டாடை அணிதல் ஆகியவைபற்றி உங்களை நான் எச்சரிக்கின்றேன். ஏனெனில், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் பட்டாடை அணியவேண்டாமென நமக்குத் தடை விதித்துள்ளார்கள்-'இந்த அளவைத் தவிர' என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் தம் (நடுவிரல், சுட்டுவிரல் ஆகிய) இரு விரல்களையும் எங்களுக்கு உயர்த்திக் காட்டினார்கள்.[18]

---

16. பார்க்க: புகாரீ ஹதீஸ் எண் - 2730.

17. இந்த ஹதீஸ் புகாரீ (878, 882), முஸ்லிம் (1533, 1534), திர்மிதீ (455), அபூதாவூத் (287), முவத்தா மாலிக் ([illegible]), நஸாயீ (1405), அஹ்மத் (258), இப்னு குஸைமா (1748) உள்ளிட்ட நூல்களிலும் பதிவாகியுள்ளது.

18. இந்த ஹதீஸ் புகாரீ (5828), முஸ்லிம் (4293, 4294), நஸாயீ (5217), அபூதாவூத் ([illegible]), இப்னுமாஜா ([illegible]), அஹ்மத் (213, 214), அல்முஸ்னத் (307) உள்ளிட்ட நூல்களிலும் இடம்பெற்றுள்ளது.

89 அபூஸினான் அத்துஅலீ (ரஹ்) கூறியதாவது:

நான் (கலீஃபா) உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்களிடம் சென்றேன். அவர்களுடன் தொடக்க காலத்தில் புலம் பெயர்ந்துவந்த) முஹாஜிர்களுள் சிலரும் இருந்தனர்.

அப்போது உமர் (ரலி) அவர்கள் இராக் நாட்டின் கோட்டை ஒன்றிலிருந்து கொண்டு வரப்பட்ட நறுமணம் வைக்கும் பை ஒன்றை எடுத்துவரச் சொன்னார்கள். (அது எடுத்து வரப்பட்டது) அதில் மோதிரம் ஒன்று இருந்தது. அதை உமர் (ரலி) அவர்களின் புதல்வர்களுள் ஒருவர் எடுத்துத் தனது வாயினுள் போட்டுக்கொண்டார்.

உடனே உமர் (ரலி) அவர்கள், அதை அவரது வாயிலிருந்து வெளியில் எடுத்தார்கள். பிறகு உமர் (ரலி) அவர்கள் அழுதார்கள்! அப்போது அங்கிருந்த ஒருவர், "நீங்கள் ஏன் அழுகின்றீர்கள்? அல்லாஹ் உங்களுக்கு (நாடுகளின்) வெற்றியை அளித்துள்ளான். உங்களுடைய பகைவர்களுக்கு எதிராக உங்களுக்கு உதவியுமுள்ளான். உங்களுடைய கண்களை (வெற்றிப் பரிசுகள் மூலம்) குளிர்ச்சியாக்கியும் உள்ளானே?" என்று கேட்டார்.

அதற்கு உமர் (ரலி) அவர்கள், "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், 'உலக(த்தின் வெற்றியும் செல்வமு)ம் தாராளமாக வழங்கப்பட்ட எவராயினும், அவர்களிடையே பகைமையையும் வெறுப்பையும் மறுமை நாள்வரை அல்லாஹ் ஏற்படுத்தாமல் இருப்பதில்லை' என்று கூறியதை நான் கேட்டுள்ளேன். அதைத்தான் நான் அஞ்சுகிறேன் (அதனால்தான் அழுகின்றேன்)" என்று கூறினார்கள்.[10]

٨٩ حدثنا حسن قال: حدثنا ابن لهيعة، حدثنا أبو الأسود أنه سمع محمد بن عبد الرحمن ابن لبيبة يحدث عن أبي سنان الدؤلي: أنه دخل على عمر بن الخطاب رضي الله عنه وعنده نفر من المهاجرين الأولين، فأرسل عمر إلى سفط أتي به من قلعة من العراق، فكان فيه خاتم، فأخذه بعض بنيه فأدخله في فيه، فانتزعه عمر منه، ثم بكى عمر، فقال له من عنده لم تبكي، وقد فتح الله لك وأظهرك على عدوك وأقر عينك؟ فقال عمر رضي الله عنه: إني سمعت رسول الله ﷺ يقول: لا تفتح الدنيا على أحد إلا ألقى الله -عز وجل- بينهم العداوة والبغضاء إلى يوم القيامة، وأنا أشفق من ذلك.

90 உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள் கூறியதாவது:

நான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம், "எங்களுள் (பெருந்துடக்கு ஏற்பட்டுக்) குளியல் கடமையான ஒருவர், குளிப்பதற்கு முன் உறங்க விரும்புகிறார் அவர் எப்படி நடந்துகொள்ள வேண்டும்?" என்று கேட்டேன். அதற்கு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "தொழுகைக்கு உளூ (அங்கத் தூய்மை) செய்வதைப் போன்று அவர்

٩٠ حدثنا يعقوب، حدثنا أبي عن ابن إسحاق، حدثني نافع، عن عبد الله بن عمر، عن أبيه، قال: سألت رسول الله ﷺ: كيف يصنع أحدنا إذا هو أجنب ثم أراد أن ينام قبل أن يغتسل؟ قال: فقال رسول الله ﷺ: ليتوضأ وضوءه للصلاة

10. [illegible] - 4980 [illegible]

'உளூ'ச் செய்துகொள்ளட்டும். பிறகு அவர் உறங்கட்டும்" என்று விடையளித்தார்கள்.[20]

ثُمَّ لِيَنَمْ.

91 உமர் பின் அல்கத்தாப் (ரலி) கூறியதாவது:

(நயவஞ்சகர்களின் தலைவர்) அப்துல்லாஹ் பின் உபை பின் சலூல்[21] இறந்தபோது, அவருக்கு ('ஜனாஸா'த்) தொழுகையை முன்னின்று நடத்துவதற்காக அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அழைக்கப்பட்டார்கள்.

அதன்பால் அவர்கள் இறந்தவரை நோக்கிச் சென்று, (இறுதித்) தொழுகை தொழுவிக்க முற்பட்டபோது, நான் அங்கிருந்து நகர்ந்து சென்று, அல்லாஹ்வின் தூதர் அவர்களுடைய முன்னால் போய் நின்று, "அல்லாஹ்வின் தூதரே! அல்லாஹ்வின் விரோதி அப்துல் லாஹ் பின் உபை பின் சலூலுக்கு நீங்கள் முன்னின்று தொழுகை நடத்துகின்றீர்களா? அவர் இன்ன இன்ன கால கட்டங்களில் இப்படி இப்படியெல்லாம் பேசினாரே!" என்றுகூறி, அவர் சொன்னவற்றை அல்லாஹ் வின் தூதர் (ஸல்) அவர்களிடம் பட்டியல் விட்டுச் சொன்னேன்.

٩١ حدثنا يعقوب، حدثنا أبي عن ابن إسحاق، حدثني الزهري عن عبيد الله بن عبد الله بن عتبة بن مسعود، عن عبد الله بن عباس رضي الله عنه قال: سمعت عمر بن الخطاب رضي الله عنه يقول: لما توفي عبد الله بن أبي دعي رسول الله ﷺ للصلاة عليه، فقام إليه، فلما وقف عليه يريد الصلاة تحولت حتى قمت في صدره، فقلت: يا رسول الله، أعلى عدو الله عبد الله بن أبي القائل يوم كذا كذا وكذا يعدد أيامه، قال: ورسول الله ﷺ يتبسم، حتى إذا أكثرت عليه قال: أخر عني يا عمر، إني خيرت فاخترت، وقد قيل: ﴿استغفر لهم أو لا تستغفر لهم إن تستغفر لهم سبعين مرة فلن يغفر الله لهم﴾ لو أعلم أني إن زدت على السبعين غفر له لزدت، قال:

(நான் இவ்வாறு கூறிக்கொண்டிருக்க) அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களோ, புன்னகைத்துக்கொண்டிருந்தார்கள். என் கருத்தை அதிகமாக (வலியுறுத்திக்) கூறியதும், "சிறிது ஒதுங்கிக்கொள்ளுங்கள், உமரே!" என்று கூறிவிட்டு, "(இவருக்காகப்) பாவமன்னிப்புக் கோர நான் விருப்ப உரிமை அளிக்கப்பட்டுள்ளேன். அதனால் அதைத் தேர்ந்தெடுத்துக்கொண்டேன்" என்றார்கள். அப்போது, "(நபியே!) இந்த நயவஞ்சகர்களுக்காக நீர் பாவமன்னிப்புக் கோரும்; அல்லது பாவமன்னிப்புக் கோராமலிரும். நீர் எழுபது தடவை இவர்களுக்காகப் பாவமன்னிப்புக் கோரினாலும், அல்லாஹ் இவர்களை ஒருபோதும் மன்னிக்க மாட்டான்" (9:80) என்ற இறைவசனம் (எனக்கு இறைவன் தரப்பிலிருந்து கூறப்பட்டிருக்கிறது). நான் எழுபது முறைகளைவிட அதிகமாகப் பாவமன்னிப்புக் கோரினால், இவருக்குப்

20. [illegible]

21. [illegible]

ثُمَّ صَلَّى عَلَيْهِ وَمَشَى مَعَهُ فَقَامَ عَلَى قَبْرِهِ حَتَّى
فُرِغَ مِنْهُ، قَالَ: فَعَجَبٌ لِي وَجُرْأَتِي عَلَى رَسُولِ
اللَّهِ ﷺ وَاللَّهُ وَرَسُولُهُ أَعْلَمُ، قَالَ: فَوَاللَّهِ مَا كَانَ
إِلَّا يَسِيرًا حَتَّى نَزَلَتْ هَاتَانِ الْآيَتَانِ: ﴿وَلَا تُصَلِّ
عَلَى أَحَدٍ مِنْهُمْ مَاتَ أَبَدًا وَلَا تَقُمْ عَلَى قَبْرِهِ،
إِنَّهُمْ كَفَرُوا بِاللَّهِ وَرَسُولِهِ وَمَاتُوا وَهُمْ فَاسِقُونَ﴾
فَمَا صَلَّى رَسُولُ اللَّهِ ﷺ بَعْدَهُ عَلَى مُنَافِقٍ وَلَا قَامَ
عَلَى قَبْرِهِ حَتَّى قَبَضَهُ اللَّهُ -عَزَّ وَجَلَّ-.

٩٢ حَدَّثَنَا يَعْقُوبُ، حَدَّثَنَا أَبِي عَنِ ابْنِ إِسْحَاقَ
كَمَا حَدَّثَنِي عَنْهُ نَافِعٌ مَوْلَاهُ قَالَ: كَانَ عَبْدُ اللَّهِ بْنُ
عُمَرَ رَضِيَ اللَّهُ عَنْهُ يَقُولُ: إِذَا لَمْ يَكُنْ لِلرَّجُلِ إِلَّا
ثَوْبٌ وَاحِدٌ فَلْيَأْتَزِرْ بِهِ ثُمَّ لِيُصَلِّ، فَإِنِّي سَمِعْتُ
عُمَرَ بْنَ الْخَطَّابِ رَضِيَ اللَّهُ عَنْهُ يَقُولُ ذَلِكَ،
وَيَقُولُ: لَا تَلْتَحِفُوا بِالثَّوْبِ إِذَا كَانَ وَحْدَهُ كَمَا
تَفْعَلُ الْيَهُودُ، قَالَ نَافِعٌ: وَلَوْ قُلْتُ لَكُمْ إِنَّهُ أَسْنَدَ

பாவமன்னிப்பு அளிக்கப்படும் என்று எனக்குத் தெரியவருமாயின், எழுபது முறையைவிட அதிகமாகப் பாவமன்னிப்புக் கோருவேன்" என்று சொன்னார்கள்.

பிறகு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அவருக்குத் தொழுகை நடத்திவிட்டு, பிரேத ஊர்வலத்துடன் சென்று, உடலை அடக்கம் செய்து முடிக்கும்வரை 'கப்று' அருகே நின்றிருந்தார்கள். அல்லாஹ்வும் அவனுடைய தூதருமே நன்கறிந்தவர்களாயிருக்க, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுக்கு முன் நான் துணிவுடன் பேசியதை எண்ணி வியந்தேன். சற்று நேரம்தான் கழிந்திருக்கும்.

அதற்குள், "அவர்களில் இறந்துவிட்ட எவருக்காகவும் (நபியே!) நீங்கள் (ஜனாஸாத்) தொழுவிக்க வேண்டாம்; அவனுடைய மண்ணறை அருகேயும் நீங்கள் நிற்க வேண்டாம். ஏனென்றால், நிச்சயமாக அவர்கள் அல்லாஹ்வையும் அவனுடைய தூதரையும் மறுத்துவிட்டார்கள். மேலும், பாவிகளாகவே அவர்கள் இறந்துபோனார்கள்" (9:84) எனும் இரு இறைவசனங்கள் அருளப்பெற்றன.

அதன் பின்னர், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், இறக்கும் வரை எந்த நயவஞ்சகருக்கும் (ஜனாஸாத் தொழுகை) தொழ வைக்கவுமில்லை; எந்த நயவஞ்சகருடைய மண்ணறைக்கு (கப்று) அருகே நிற்கவுமில்லை.[22]

92 நாஃபிஉ (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் பின்வருமாறு கூறிவந்தார்கள்: "ஒருவரிடம் ஓர் ஆடை மட்டும் இருந்தால், அவர் அதைக் கீழாடையாகக் கட்டிக்கொண்டு தொழட்டும். ஏனெனில், (என் தந்தை) உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள் மேற்கண்டவாறு கூறியதை நான் கேட்டுள்ளேன்."

மேலும், "தனியாக இருக்கும்போது, ஒரே ஆடையைப் போர்த்திக்கொண்டு யூதர்களைப் போன்று தொழாதீர்கள்" என்றும் உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள் குறிப்பிடுவார்கள்.

அறிவிப்பாளர் நாஃபிஉ (ரஹ்) கூறுகிறார்கள்:

அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் இத்தகவலை நபி (ஸல்) அவர்களுடன்

22. [illegible]

ذَلِكَ إِلَى رَسُولِ اللَّهِ ﷺ لَرَجَوْتُ أَنْ لَا أَكُونَ كَذَبْتُ.

தொடர்புபடுத்தி (நபி (ஸல்) அவர்கள் கூறியதாக) அறிவித்தார்கள் என உங்களிடம் நான் கூறினால், (அதில்) நான் பொய்யுரைத்தவனாக ஆகிவிடமாட்டேன் என நான் உறுதியாக நம்புகின்றேன்.[23]

٩٣ حَدَّثَنَا مُؤَمَّلٌ حَدَّثَنَا حَمَّادٌ قَالَ: حَدَّثَنَا زِيَادُ بْنُ مِخْرَاقٍ عَنْ شَهْرٍ عَنْ عُقْبَةَ بْنِ عَامِرٍ قَالَ: حَدَّثَنِي عُمَرُ رَضِيَ اللَّهُ عَنْهُ أَنَّهُ سَمِعَ رَسُولَ اللَّهِ ﷺ يَقُولُ: مَنْ مَاتَ يُؤْمِنُ بِاللَّهِ وَالْيَوْمِ الْآخِرِ قِيلَ لَهُ: ادْخُلِ الْجَنَّةَ مِنْ أَيِّ أَبْوَابِ الْجَنَّةِ الثَّمَانِيَةِ شِئْتَ.

93 உமர் (ரலி) அவர்கள் கூறியதாவது:

"யார் அல்லாஹ்வையும் இறுதி நாளையும் நம்பிக்கை கொண்டவராக இறந்தாரோ அவரிடம், 'நீ சொர்க்கத்தின் எட்டு வாசல்களுள் விரும்புகின்ற வாசல் வழியாக நுழைந்து கொள்' என்று கூறப்படும்" என அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறியதை நான் கேட்டுள்ளேன்.[24]

٩٤ حَدَّثَنَا أَسْوَدُ بْنُ عَامِرٍ قَالَ: أَخْبَرَنَا جَعْفَرٌ - يَعْنِي: الْأَحْمَرَ -، عَنْ مُطَرِّفٍ عَنِ الْحَكَمِ عَنْ مُجَاهِدٍ قَالَ: حَذَفَ رَجُلٌ ابْنًا لَهُ بِسَيْفٍ فَقَتَلَهُ، فَرُفِعَ إِلَى عُمَرَ، فَقَالَ: لَوْلَا أَنِّي سَمِعْتُ رَسُولَ اللَّهِ ﷺ يَقُولُ: لَا يُقَادُ الْوَالِدُ مِنْ وَلَدِهِ لَقَتَلْتُكَ قَبْلَ أَنْ تَبْرَحَ.

94 முஜாஹித் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

ஒருவர் தம் மகனை நோக்கி வாளை வீசி எறிந்து அவரைக் கொன்றுவிட்டார். இவ்வழக்கு, (கலீஃபா) உமர் (ரலி) அவர்களிடம் கொண்டுவரப்பட்டது. அப்போது உமர் (ரலி) அவர்கள், "'பிள்ளைக்காகத் தந்தை பழி வாங்கப்படமாட்டார்' என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறியதை நான் செவியுறாமல் இருந்திருந்தால், நீ (இந்த இடத்தை விட்டு) நகர்வதற்குள் உன்னை நான் கொன்றிருப்பேன்" என்று கூறினார்கள்.[25]

٩٥ حَدَّثَنَا أَسْوَدُ بْنُ عَامِرٍ قَالَ: حَدَّثَنَا زُهَيْرٌ، عَنْ سُلَيْمَانَ الْأَعْمَشِ حَدَّثَنَا إِبْرَاهِيمُ عَنْ عَابِسِ بْنِ

95 ஆபிஸ் பின் ரபீஆ (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

---

23. இதன் அறிவிப்பாளர்தொடர் [illegible] 353 முதல் 356 [illegible] 862 முதல் 900 [illegible]

24. [illegible]

25. [illegible] 346 [illegible]

رَبِيعَةَ قَالَ: رَأَيْتُ عُمَرَ نَظَرَ إِلَى الْحَجَرِ فَقَالَ: أَمَا وَاللَّهِ لَوْلاَ أَنِّي رَأَيْتُ رَسُولَ اللَّهِ ﷺ يُقَبِّلُكَ مَا قَبَّلْتُكَ، ثُمَّ قَبَّلَهُ.

உமர் (ரலி) அவர்கள் (இறையில்லம் கஅபாவில் பதிக்கப்பெற்றுள்ள) 'ஹஜருல் அஸ்வத்' கல்லைப் பார்த்தபடி, "அல்லாஹ்வின் மீதாணையாக! அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் உன்னை முத்தமிட்டதை நான் கண்டிராவிட்டால், நானும் உன்னை முத்தமிட்டிருக்கமாட்டேன்" என்றார்கள் பிறகு அவர்கள் அதை முத்தமிட்டதை நான் கண்டேன்.[26]

٩٦ حَدَّثَنَا أَبُو الْيَمَانِ قَالَ: أَخْبَرَنَا شُعَيْبٌ عَنِ الزُّهْرِيِّ قَالَ: أَخْبَرَنَا السَّائِبُ بْنُ يَزِيدَ ابْنُ أُخْتِ نَمِرٍ أَنَّ حُوَيْطِبَ بْنَ عَبْدِ الْعُزَّى أَخْبَرَهُ أَنَّ عَبْدَ اللَّهِ بْنَ السَّعْدِيِّ أَخْبَرَهُ أَنَّهُ قَدِمَ عَلَى عُمَرَ بْنِ الْخَطَّابِ رَضِيَ اللَّهُ عَنْهُ فِي خِلاَفَتِهِ، فَقَالَ لَهُ عُمَرُ: أَلَمْ أُحَدَّثْ أَنَّكَ تَلِي مِنْ أَعْمَالِ النَّاسِ أَعْمَالاً فَإِذَا أُعْطِيتَ الْعُمَالَةَ كَرِهْتَهَا؟ قَالَ: فَقُلْتُ: بَلَى، فَقَالَ عُمَرُ رَضِيَ اللَّهُ عَنْهُ: فَمَا تُرِيدُ إِلَى ذَلِكَ؟ قَالَ: قُلْتُ: إِنَّ لِي أَفْرَاسًا وَأَعْبُدًا وَأَنَا بِخَيْرٍ، وَأُرِيدُ أَنْ تَكُونَ عُمَالَتِي صَدَقَةً عَلَى الْمُسْلِمِينَ، فَقَالَ عُمَرُ رَضِيَ اللَّهُ عَنْهُ: فَلاَ تَفْعَلْ، فَإِنِّي قَدْ كُنْتُ أَرَدْتُ الَّذِي أَرَدْتَ، فَكَانَ النَّبِيُّ ﷺ يُعْطِينِي الْعَطَاءَ فَأَقُولُ: أَعْطِهِ أَفْقَرَ إِلَيْهِ مِنِّي، حَتَّى أَعْطَانِي مَرَّةً مَالاً فَقُلْتُ: أَعْطِهِ أَفْقَرَ إِلَيْهِ مِنِّي، قَالَ: فَقَالَ لَهُ النَّبِيُّ ﷺ: خُذْهُ فَتَمَوَّلْهُ وَتَصَدَّقْ بِهِ، فَمَا جَاءَكَ مِنْ هَذَا الْمَالِ وَأَنْتَ غَيْرُ مُشْرِفٍ، وَلاَ سَائِلٍ فَخُذْهُ، وَمَا لاَ، فَلاَ تُتْبِعْهُ نَفْسَكَ.

96 அப்துல்லாஹ் பின் அஸ்ஸஅதீ (ரலி) அவர்கள் கூறியதாவது:

நான் உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்களிடம் அவர்களது ஆட்சிக் காலத்தில் சென்றேன். அப்போது அவர்கள் என்னிடம், "நீங்கள் மக்கள் (நலப்) பணிகள் சிலவற்றுக்குப் பொறுப்பேற்றிருப்பதாகவும், அதற்காக ஊதியம் தரப்பட்டால் அதை நீங்கள் வெறுப்பதாகவும் எனக்குத் தகவல் வந்ததே! (உண்மைதானா?)" என்று கேட்டார்கள் அதற்கு நான், "ஆம்" என்றேன்.

உமர் (ரலி) அவர்கள், "நீங்கள் எந்த நோக்கத்தில் இப்படிச் செய்கின்றீர்கள்?" என்று கேட்க, "என்னிடம் குதிரைகளும் அடிமைகளும் உள்ளனர் நான் நல்ல நிலையில்தான் இருக்கிறேன். ஆகவே, என் ஊதியம் முஸ்லிம்களுக்கு தர்மமாக இருக்கட்டும் என்று நான் விரும்புகின்றேன்" என்று நான் பதிலளித்தேன்.

உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: "அப்படிச் செய்யாதீர்கள். ஏனென்றால், நீங்கள் விரும்பியபடியே நானும் விரும்பிவந்தேன். நபி (ஸல்) அவர்கள் எனக்கு (மக்கள் நலநிதியிலிருந்து) நன்கொடை வழங்குவார்கள். நான், 'என்னைவிட அதிகத் தேவை உடையோருக்கு இதைக் கொடுங்கள்' என்று சொல்லிவந்தேன்.

இறுதியில் ஒரு முறை நபி (ஸல்) அவர்கள், (நன்கொடைப்) பொருள் ஒன்றை எனக்கு அளித்தபோது, நான், 'என்னைவிட மிகத் தேவையுடையோருக்கு இதை வழங்குங்கள்' என்று சொன்னேன். நபி (ஸல்) அவர்கள், '(முதலில்) இதை வாங்கி, உங்களுக்கு உடைமையாக்கிக்கொள்ளுங்கள். பிறகு, (தேவைப்படவில்லையென்றால்,) தர்மம் செய்துவிடுங்கள். இந்தச் செல்வத்திலிருந்து எது நீங்கள் எதிர்பார்க்காமலும், நீங்களாகக் கேட்காமலும் உங்களுக்கு வந்ததோ, அதை (மறுக்காமல்) வாங்கிக் கொள்ளுங்கள். அப்படி எதுவும் வரவில்லையென்றால், அதன் பின்னே நீங்களாகச் செல்லாதீர்கள்' என்று சொன்னார்கள்."[27]

---

26. இந்த ஹதீஸ் புகாரீ (1597, 1610), முஸ்லிம் (2435-2439), அபூதாவூத் (1597), நஸாயீ (2868, 2869), திர்மிதீ (788), இப்னுமாஜா (2943), முவத்தா மாலிக் (720), இப்னு ஹிப்பான் (3822), பைஹகீ (5/74) ஆகிய நூல்களிலும் பதிவாகியுள்ளது.

27. இந்த ஹதீஸின் அறிவிப்பாளர்தொடர் [illegible]

97 ரபீஆ பின் தர்ராஜ் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

அலீ பின் அபீதாலிப் (ரலி) அவர்கள் மக்காவிற்குச் செல்லும் வழியில் அஸ்ர் தொழுகைக்குப் பின் இரண்டு ரக்அத்கள் (கூடுதல் தொழுகை) தொழுதார்கள். இதைக் கண்ட உமர் (ரலி) அவர்கள், அலீ (ரலி) அவர்களை சினந்துகொண்டு, "அல்லாஹ்வின் மீதாணையாக! அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் இதைத் தடைசெய்துள்ளதை நாங்கள் அறிந்துள்ளீர்களே!" என்று கூறினார்கள்.[29]

٩٧ حدثنا سكن بن نافع الباهلي قال: حدثنا صالح عن الزهري قال: حدثني ربيعة بن دراج: أن علي بن أبي طالب رضي الله عنه سبح بعد العصر ركعتين في طريق مكة، فرآه عمر رضي الله عنه فتغيظ عليه، ثم قال: أما والله لقد علمت أن رسول الله ﷺ نهى عنها.

98 மாஜிதா என்பார் கூறியதாவது:

நான் மக்காவில் அடிமை ஒருவனுடன் சண்டையிட்டேன். அவன் என் காதைக் கடித்துத் துண்டித்துவிட்டான். அல்லது நான் அவனது காதைக் கடித்துத் துண்டித்துவிட்டேன். (அறிவிப்பாளர் ஐயம்) பின்னர் (கலீஃபா) அபூபக்ர் (ரலி) அவர்கள், எங்களிடம் (எங்கள் ஊரான மக்காவுக்கு) ஹஜ் செய்ய வந்திருந்தபோது, அவர்களிடம் நாங்கள் இருவரும் கொண்டு செல்லப்பட்டோம்.

٩٨ حدثنا محمد بن يزيد حدثنا محمد بن إسحاق قال: حدثنا العلاء بن عبد الرحمن بن يعقوب عن رجل من قريش من بني سهم عن رجل منهم يقال له ماجدة قال: عارمت غلاما بمكة فعض أذني فقطع منها، أو عضضت أذنه فقطعت منها، فلما قدم علينا أبو بكر رضي الله عنه حاجا رفعنا إليه، فقال: انطلقوا بهما إلى عمر بن الخطاب رضي الله عنه فإن كان الجارح بلغ أن يقتص منه

அப்போது அவர்கள், "இந்த இருவரையும் உமர் பின் அல்கத்தாப் அவர்களிடம் அழைத்துச் செல்லுங்கள். காயமுற்றவர் காயப்படுத்தியவரைப் பழி வாங்கவேண்டிய அளவுக்குப் பாதிப்பு ஏற்பட்டிருந்தால், அவருக்குப் பழிக்குப் பழி தண்டனை அளிக்கட்டும்" என்று கூறினார்கள்.

அவ்வாறே நாங்கள் (இருவரும்) உமர் (ரலி) அவர்களிடம் கொண்டு செல்லப்பட்ட

[illegible]

[illegible]

போது, எங்களை உற்றுப் பார்த்த உமர் (ரலி) அவர்கள், 'ஆம்! பழிவாங்கப்பட வேண்டிய நிலையில்தான் இவர் உள்ளார் எனவே, (காயப் படுத்தியவரின் காதை அறுக்க) நாவிதரை என்னிடம் அழைத்து வாருங்கள்" என்றார்கள் நாவிதரைப் பற்றிப் பேச்சு வந்தபோது, பின் வரும் ஹதீஸையும் அவர்கள் கூறினார்கள்:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "நான் என் தாயின் சகோதரிக்கு அடிமை ஒருவனை வழங்கினேன். அவன் மூலம் அவருக்கு அல்லாஹ் அருள்வளம் (பரக்கத்) வழங்குவான் என்று நான் எதிர்பார்த்தேன் அப்போது என் தாயின் சகோதரியிடம் அந்த அடிமையை நாவிதராகவோ, கசாப்புக்காரராகவோ, பொற்கொல்லராகவோ ஆக்கிவிட வேண்டாம் எனத் தடை விதிக்கவும் செய்தேன்" என்று கூறியதைக் கேட்டேன்.

இந்த ஹதீஸ், அலீ பின் மாஜிதா என்பாரிடமிருந்தே மற்றோர் அறிவிப்பாளர்தொடர் வழியாகவும் வந்துள்ளது. அதில், "(கலீஃபா) அபூபக்ர் (ரலி) அவர்கள் தமது ஆட்சிக் காலத்தில் 'ஹஜ்' செய்ய எங்களிடம் (மக்காவுக்கு) வந்திருந்தார்கள்" என்று ஹதீஸ் துவங்குகிறது. தொடர்ந்து மேற்கண்ட தகவல்கள் இடம்பெற்றுள்ளன.[29]

فَلْيَقْتَصَّ، قَالَ: فَلَمَّا انْتَهَى بِنَا إِلَى عُمَرَ رَضِيَ اللَّهُ عَنْهُ نَظَرَ إِلَيْنَا، فَقَالَ: نَعَمْ قَدْ بَلَغَ هَذَا أَنْ يُقْتَصَّ مِنْهُ، ادْعُوا لِي حَجَّامًا، فَلَمَّا ذُكِرَ الْحَجَّامُ، قَالَ: أَمَا إِنِّي قَدْ سَمِعْتُ رَسُولَ اللَّهِ ﷺ يَقُولُ: قَدْ أَعْطَيْتُ خَالَتِي غُلَامًا وَأَنَا أَرْجُو أَنْ يُبَارِكَ اللَّهُ لَهَا فِيهِ، وَقَدْ نَهَيْتُهَا لَنْ تَجْعَلَهُ حَجَّامًا أَوْ قَصَّابًا أَوْ صَائِغًا.

حَدَّثَنَا يَعْقُوبُ، حَدَّثَنَا أَبِي عَنِ ابْنِ إِسْحَاقَ قَالَ: وَحَدَّثَنِي الْعَلَاءُ بْنُ عَبْدِ الرَّحْمَنِ عَنْ رَجُلٍ مِنْ بَنِي سَهْمٍ عَنِ ابْنِ مَاجِدَةَ السَّهْمِيِّ أَنَّهُ قَالَ: حَجَّ عَلَيْنَا أَبُو بَكْرٍ رَضِيَ اللَّهُ عَنْهُ فِي خِلَافَتِهِ، فَذَكَرَ الْحَدِيثَ.

٩٩ حَدَّثَنَا عَبِيدَةُ بْنُ حُمَيْدٍ عَنْ دَاوُدَ بْنِ أَبِي هِنْدٍ عَنْ أَبِي نَضْرَةَ، عَنْ أَبِي سَعِيدٍ قَالَ: خَطَبَ عُمَرُ رَضِيَ اللَّهُ عَنْهُ النَّاسَ فَقَالَ: إِنَّ اللَّهَ -عَزَّ وَجَلَّ- رَخَّصَ لِنَبِيِّهِ ﷺ مَا شَاءَ، وَإِنَّ نَبِيَّ اللَّهِ ﷺ قَدْ مَضَى لِسَبِيلِهِ، فَأَتِمُّوا الْحَجَّ وَالْعُمْرَةَ، كَمَا أَمَرَكُمُ اللَّهُ -عَزَّ وَجَلَّ-، وَحَصِّنُوا فُرُوجَ هَذِهِ النِّسَاءِ.

99 அபூசயீத் அல்குத்ரீ (ரலி) அவர்கள் கூறியதாவது:

(கலீஃபா) உமர் (ரலி) அவர்கள் மக்களுக்கு உரை நிகழ்த்தினார்கள். அப்போது, "வல்லமையும் மாண்பும் மிக்க அல்லாஹ், தன் தூதருக்கு அவர் நாடிய விதத்தில் (ஹஜ்) செய்துகொள்ள அனுமதியளித்தான்.

"நபி (ஸல்) அவர்கள் (தாம் விரும்பிய விதத்தில் ஹஜ் செய்துவிட்டு), இறந்தார்கள். நீங்கள் உங்களுக்கு அல்லாஹ் கட்டளையிட்டபடி ஹஜ்ஜையும் உம்ராவையும் நிறைவு செய்யுங்கள். இந்தப் பெண்களின் (உங்கள் மனைவியரின்) மறைவுறுப்புகளைப் பாதுகாத்துக்கொள்ளுங்கள்" என்று கூறினார்கள்.[30]

29. [illegible]

30. [illegible]

١٠٠ حدثنا عبيدة بن حميد حدثني عبيد الله بن عمر عن نافع عن ابن عمر عن عمر بن الخطاب رضي الله عنه، قال: سئل رسول الله ﷺ: أيرقد الرجل إذا أجنب؟ قال: نعم إذا توضأ.

100 உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள் கூறியதாவது:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம், "ஒருவருக்குப் பெருந்துடக்கு ஏற்பட்டுக் குளியல் கடமையாகிவிட்டால், அவர் (குளிக்காமல்) உறங்கலாமா?" என்று கேட்கப்பட்டது. அதற்கு அவர்கள், "ஆம்; அங்கத் தூய்மை (உளூ) செய்துவிட்டு உறங்கலாம்" என்று விடையளித்தார்கள்.[31]

١٠١ حدثنا الحسن بن يحيى قال: أخبرنا ابن المبارك قال: حدثنا معمر عن الزهري عن ربيعة بن دراج: أن عليا رضي الله عنه صلى بعد العصر ركعتين، فتغيظ عليه عمر رضي الله عنه وقال: أما علمت أن رسول الله ﷺ كان ينهانا عنها.

101 ரபீஆ பின் தர்ராஜ் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

அலீ (ரலி) அவர்கள் 'அஸ்ர்' தொழுகைக்குப் பின் இரண்டு 'ரக்அத்'கள் (கூடுதல் தொழுகை) தொழுதார்கள். அப்போது உமர் (ரலி) அவர்கள், அவர்களைச் சினந்து கொண்டு, "இதை அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் நமக்குத் தடைவிதித்துவந்ததை நீங்கள் அறியவில்லையா?" என்று கேட்டார்கள்.[32]

١٠٢ حدثنا أبو المغيرة حدثنا صفوان حدثنا شريح بن عبيد قال: قال عمر بن الخطاب رضي الله عنه: خرجت أتعرض رسول الله ﷺ قبل أن أسلم، فوجدته قد سبقني إلى المسجد، فقمت خلفه، فاستفتح سورة الحاقة، فجعلت أعجب من تأليف القرآن، قال فقلت: هذا والله شاعر

102 உமர் பின் அல்கத்தாப் (ரலி) கூறியதாவது:

நான் இஸ்லாத்தைத் தழுவும் முன் (ஒரு நாள்) அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களைத் தாக்கப் புறப்பட்டேன். ஆனால் (நான் செல்வதற்குள்) அவர்கள் முன்பே பள்ளிவாசலுக்குள் போய்விட்டதை அறிந்தேன். ஆகவே நான் அவர்களுக்குப் பின்னால் நின்றுகொண்டேன்.

அப்போது அவர்கள் (தொழுகையில்) 'அல்ஹாக்கா' எனும் (69ஆவது) அத்தியாயத்தை ஓதத் தொடங்கினார்கள். குர்ஆனின் கருத்துக் கோவையைக் கண்டு நான் வியந்து நின்றேன். அல்லாஹ்வின் மீது ஆணையாக! குறைஷியர் கூறுவதைப் போன்றே நானும்.

[illegible]

31. [illegible]

32. [illegible]

'இவர் கவிஞர்தான்' என்று கூறினேன். அப்போது அவர்கள், "இது மதிப்பிற்குரிய தூதரின் கூற்றாகும். இது கவிஞனின் கூற்று அன்று. நீங்கள் குறைவாகவே நம்பிக்கை கொள்கிறீர்கள்" (69:40,41) என ஓதினார்கள். நான், 'இவர் சோதிடர்தான்' என்று கூறிக் கொண்டேன்.

அப்போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "இது சோதிடனின் கூற்றும் அன்று. குறைவாகவே நீங்கள் படிப்பினை பெறுகின்றீர்கள். இது அகிலம் அனைத்தையும் படைத்துக் காக்கும் இறைவனிடமிருந்து இறக்கியருளப் பெற்றதாகும். சில சொற்களை இவர் (முஹம்மது) நம் மீது இட்டுக்கட்டியிருந்தால், அவரது வலக்கையைப் பிடித்திருப்போம். பின்னர், அவரது நாடி நரம்பைத் துண்டித்திருப்போம். உங்களுள் எவரும் அதனைத் தடுக்க முடியாது" (69:42-47) என்று தொடர்ந்து ஓதி, அந்த அத்தியாயம் முழுவதையும் முடித்தார்கள். இதனால் என் உள்ளம் முழுவதிலும் இஸ்லாம் நன்கு இடம் பிடித்துக்கொண்டது.[33]

كَمَا قَالَتْ قُرَيْشٌ، قَالَ: فَقَرَأَ: ﴿إِنَّهُ لَقَوْلُ رَسُولٍ كَرِيمٍ وَمَا هُوَ بِقَوْلِ شَاعِرٍ قَلِيلًا مَا تُؤْمِنُونَ﴾ قَالَ: قُلْتُ: كَاهِنٌ، قَالَ: ﴿وَلَا بِقَوْلِ كَاهِنٍ قَلِيلًا مَا تَذَكَّرُونَ تَنْزِيلٌ مِنْ رَبِّ الْعَالَمِينَ وَلَوْ تَقَوَّلَ عَلَيْنَا بَعْضَ الْأَقَاوِيلِ لَأَخَذْنَا مِنْهُ بِالْيَمِينِ ثُمَّ لَقَطَعْنَا مِنْهُ الْوَتِينَ فَمَا مِنْكُمْ مِنْ أَحَدٍ عَنْهُ حَاجِزِينَ﴾ إِلَى آخِرِ السُّورَةِ، قَالَ: فَوَقَعَ الْإِسْلَامُ فِي قَلْبِي كُلَّ مَوْقِعٍ.

١٠٣ - حَدَّثَنَا أَبُو الْمُغِيرَةِ وَعِصَامُ بْنُ خَالِدٍ، قَالَا: حَدَّثَنَا صَفْوَانُ عَنْ شُرَيْحِ بْنِ عُبَيْدٍ وَرَاشِدِ بْنِ سَعْدٍ وَغَيْرِهِمَا قَالُوا: لَمَّا بَلَغَ عُمَرُ بْنُ الْخَطَّابِ رَضِيَ اللَّهُ عَنْهُ سَرْغَ حُدِّثَ أَنَّ بِالشَّامِ وَبَاءً شَدِيدًا، قَالَ: بَلَغَنِي أَنَّ شِدَّةَ الْوَبَاءِ فِي الشَّامِ فَقُلْتُ: إِنْ أَدْرَكَنِي أَجَلِي وَأَبُو عُبَيْدَةَ بْنُ الْجَرَّاحِ حَيٌّ اسْتَخْلَفْتُهُ، فَإِنْ سَأَلَنِي اللَّهُ: لِمَ اسْتَخْلَفْتَهُ عَلَى أُمَّةِ مُحَمَّدٍ ﷺ؟

103 ஷுரைஹ் பின் உபைத் (ரஹ்), ராஷித் பின் சஅத் (ரஹ்) உள்ளிட்டோர் கூறியதாவது:

(கலீஃபா) உமர் (ரலி) அவர்கள் (நாட்டு மக்களின் நிலவரம் அறிய ஷாம் நாட்டுக்குச் செல்லும் வழியில்) 'சர்ஃக்'[34] என்னுமிடத்தை அடைந்தபோது, ஷாம் நாட்டில் (சிரியாவில்) கடுமையான கொள்ளை நோய் நன்கு பரவியிருப்பதாகச் செய்தி கூறப்பட்டது. (இது தொடர்பாக) உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்:

ஷாம் நாட்டில் கடுமையான கொள்ளை நோய் பரவியிருப்பதாக எனக்குச் செய்தி எட்டியது. எனவே, நான் (நபித்தோழர்) அபூஉபைதா பின் அல்ஜர்ராஹ் (ரலி) உயிரோடிருக்க, என் இறப்பு நெருங்கினால், அபூஉபைதா பின் அல்ஜர்ராஹ் (ரலி) அவர்களை கலீஃபாவாக நியமிக்குமாறு (மக்களிடம்) கூறுவேன். (மறுமை நாளில்) அல்லாஹ் என்னிடம், "(என் தூதர்) முஹம்மதின் சமுதாயத்திற்கு அவரை (அபூஉபைதாவை) நீ

33. [illegible]

34. [illegible]

قُلْتُ: إِنِّي سَمِعْتُ رَسُولَكَ ﷺ يَقُولُ: إِنَّ لِكُلِّ نَبِيٍّ أَمِينًا وَأَمِينِي أَبُو عُبَيْدَةَ بْنُ الْجَرَّاحِ، فَأَنْكَرَ الْقَوْمُ ذَلِكَ، وَقَالُوا: مَا بَالُ عُلْيَا قُرَيْشٍ؟ يَعْنُونَ بَنِي فِهْرٍ، ثُمَّ قَالَ: فَإِنْ أَدْرَكَنِي أَجَلِي وَقَدْ تُوُفِّيَ أَبُو عُبَيْدَةَ اسْتَخْلَفْتُ مُعَاذَ بْنَ جَبَلٍ، فَإِنْ سَأَلَنِي رَبِّي عَزَّ وَجَلَّ: لِمَ اسْتَخْلَفْتَهُ؟ قُلْتُ: سَمِعْتُ رَسُولَكَ ﷺ يَقُولُ: إِنَّهُ يُحْشَرُ يَوْمَ الْقِيَامَةِ بَيْنَ يَدَيِ الْعُلَمَاءِ نَبْذَةً.

١٠٤ حَدَّثَنَا أَبُو الْمُغِيرَةِ، حَدَّثَنَا ابْنُ عَيَّاشٍ، قَالَ: حَدَّثَنِي الْأَوْزَاعِيُّ وَغَيْرُهُ عَنِ الزُّهْرِيِّ عَنْ سَعِيدِ بْنِ الْمُسَيَّبِ عَنْ عُمَرَ بْنِ الْخَطَّابِ رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ: وُلِدَ لِأَخِي أُمِّ سَلَمَةَ زَوْجِ النَّبِيِّ ﷺ غُلَامٌ، فَسَمَّوْهُ الْوَلِيدَ؟ فَقَالَ النَّبِيُّ ﷺ: سَمَّيْتُمُوهُ بِأَسْمَاءِ فَرَاعِنَتِكُمْ؟ لَيَكُونَنَّ فِي هَذِهِ الْأُمَّةِ رَجُلٌ يُقَالُ لَهُ الْوَلِيدُ، لَهُوَ شَرٌّ عَلَى هَذِهِ الْأُمَّةِ مِنْ فِرْعَوْنَ لِقَوْمِهِ.

ஏன் கலீஃபாவாக நியமிக்குமாறு கூறினாய்?" என்று வினவினால், நான், "(இறைவா!) உன்னுடைய தூதர் (முஹம்மது-ஸல்) அவர்கள், 'இறைத்தூதர் ஒவ்வொருவருக்கும் அவருடைய நம்பிக்கைக்குரிய ஒருவர் உள்ளார். என்னுடைய நம்பிக்கைக்குரியவர் அபூஉபைதா பின் அல்ஜர்ராஹ் அவர்களாவார்' என்று கூறியதை நான் கேட்டேன். (அதனால்தான் அவரை கலீஃபாவாக நியமிக்கும்படி மக்களிடம் கூறினேன்)" என்று சொல்வேன்.

மக்கள் அதற்கு மறுப்புத் தெரிவித்தனர். "குறைஷியருள் மிக உயர்ந்த குலத்தாருக்கெல்லாம் என்ன நேர்ந்தது?" என்று பனூ ஃபிஹ்ர் குலத்தாரைக் கருத்தில் கொண்டு கேட்டனர்

பிறகு நான், அபூஉபைதா (எனக்கு முன்பே) இறந்து, என் இறப்பு நெருங்கினால், (நபித்தோழர்) முஆது பின் ஜபல் (ரலி) அவர்களை கலீஃபாவாக நியமிக்குமாறு (மக்களிடம்) கூறுவேன். வல்லமையும் மாண்பும் மிக்க என் இறைவன் என்னிடம், "அவரை (முஆது பின் ஜபலை) நீ ஏன் கலீஃபாவாக நியமிக்குமாறு கூறினாய்?" என வினவினால், நான், "உன்னுடைய தூதர் (முஹம்மது-ஸல்) அவர்கள், 'மறுமை நாளில் அறிஞர்கள் அனைவருக்கும் இடையில் தனித்த(ன்மை உடைய)வராக முஆது பின் ஜபல் எழுப்பப்படுவார்' என்று கூறியதை நான் கேட்டேன். (அதனால்தான் அவரை கலீஃபாவாக நியமிக்குமாறு மக்களிடம் கூறினேன்)" என்று பதிலளிப்பேன்.[35]

104 உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள் கூறியதாவது:

நபி (ஸல்) அவர்களின் மனைவி உம்மு சலமா (ரலி) அவர்களின் சகோதரர் ஒருவருக்கு ஆண் குழந்தை பிறந்தது. அதற்கு அவர் 'வலீத்' என்று பெயர் சூட்டினார். நபி (ஸல்) அவர்கள், "அவனுக்கு உங்கள் சமுதாயத்து ஃபிர்அவ்னின் பெயரையன்றோ சூட்டியுள்ளீர்கள்" என்று கூறிவிட்டு, "இந்தச் சமுதாயத்தில் 'வலீத்'[36] எனப்படும் மனிதன் தோன்றுவான். ஃபிர்அவ்ன் தன் சமூக மக்களுக்கு இழைத்ததைவிட மிக அதிகமாக இவன் இந்தச் சமுதாயத்தாருக்குத் தீங்கிழைப்பவனாக இருப்பான்" என்று கூறினார்கள்.

---

35. இதன் அறிவிப்பாளர்தொடரும் முன் சென்ற (102ஆவது) ஹதீஸில் கூறப்பட்டுள்ள விமர்சனங்களின் அடிப்படையிலேயே பலவீனமடைகிறது. மேலும் இதன் மற்றோர் அறிவிப்பாளரான ராஷித் பின் சஅத் (ரஹ்) அவர்களும் உமர் (ரலி) அவர்களைச் சந்தித்ததில்லை. எனினும் இந்த ஹதீஸில் இடம்பெறும் கொள்ளை நோய் பற்றிய செய்தி புகாரீ (5729, 5730), முஸ்லிம் (4461, 4463) ஆகிய நூல்களில் சரியான அறிவிப்பாளர்தொடர்களில் வந்துள்ளது. அபூஉபைதா பின் அல்ஜர்ராஹ் (ரலி) பற்றிய நபிமொழி புகாரீ (3744, 4382), முஸ்லிம் (4780) ஆகியவற்றில் பதிவாகியுள்ளது. முஆது பின் ஜபல் (ரலி) பற்றிய குறிப்பு மட்டும் முஸ்னது அஹ்மத் தவிர வேறெந்த நூலிலும் காணப்படவில்லை.

36. இந்த ஹதீஸ் முஸ்னது அஹ்மதில் மட்டுமே இடம்பெற்றுள்ளது. இந்த ஹதீஸில் கூறப்படும் வலீத் பிற்காலத்தில் பிறந்து நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டது போன்று பலவீனமான ஆட்சியாளனாக [illegible]

١٠٥ حدثنا بهز، حدثنا أبان، عن قتادة عن أبي العالية، عن ابن عباس قال: شهد عندي رجال مرضيون، منهم عمر، وأرضاهم عندي عمر: أن نبي الله ﷺ كان يقول: لا صلاة بعد صلاة العصر حتى تغرب الشمس، ولا صلاة بعد صلاة الصبح حتى تطلع الشمس.

105 இப்னு அப்பாஸ் (ரலி) கூறியதாவது:

"அஸ்ர் தொழுகைக்குப் பின்னர் சூரியன் மறையும் வரையிலும், சுப்ஹுத் தொழுகைக்குப் பின்னர் சூரியன் உதயமாகும் வரையிலும், எந்தத் தொழுகையும் இல்லை" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.[37]

இதை (நம்பிக்கைக்குரியோர் என மக்களால்) ஏற்றுக்கொள்ளப்பட்ட பலரும் என்னிடம் கூறினர். அவர்களுள் உமர் (ரலி) அவர்களும் ஒருவராவார்கள். என்னைப் பொறுத்த வரையில், அவர்கள் அனைவருள்ளும் உமர் (ரலி) அவர்களே என்னிடம் (நம்பிக்கையாளர் என) மிகவும் ஏற்புடையவராவார்கள்.

١٠٦ حدثنا أبو المغيرة حدثنا صفوان حدثنا عبد الرحمن بن جبير بن نفير عن الحارث بن معاوية

106 ஹாரிஸ் பின் முஆவியா அல்கிந்தீ (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

[illegible] (ரஹ்) மற்றும் ஹாஃபிழ் இப்னு கஸீர் (ரஹ்) போன்றோர் குறிப்பிடுகின்றனர். எனவே இங்கு கூறப்படும் செய்தி நபி (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பு என்று 'சியரு அஃலாமிந் நுபலா'வின் ஆசிரியர் இமாம் ஹாஃபிழ் தஹபீ (ரஹ்) குறிப்பிடுகின்றார்கள். மேற்கண்ட அறிஞர்கள் கூறிய கருத்துகளின் சுருக்கம் வருமாறு:

இந்த ஹதீஸில் குறிப்பிடப்படும் [illegible] ஹிஜ்ரி 90ஆம் ஆண்டு பிறந்தார். ஹிஜ்ரி 126ஆம் ஆண்டு கொல்லப்பட்டார். [illegible] ஆட்சியாளரின் காரணத்தால் அவன் கொல்லப்பட்டான்.

[illegible] ஹிஜ்ரி 126ஆவது வருடம் [illegible] - பாகம் 6, பக்கம் 509-510 மேலும் 'சியரு அஃலாமிந் நுபலா' 1-2/290)

உமர் (ரலி) அவர்களிடமிருந்து இதை அறிவிக்கும் [illegible] (ரஹ்) அவர்கள் [illegible] உமர் (ரலி) அவர்களை [illegible] எனவே அவர்களிடமிருந்து இதைக் கேட்டிருக்க வாய்ப்பில்லை. எனவே இது இடைமுறிந்த அறிவிப்பாளர்தொடரில் அமைந்த ஹதீஸ் ஆகும்.

இமாம் இப்னு [illegible] (ரஹ்) அவர்கள் இதைத் தமது [illegible] எனும் நூலிலும், இமாம் இப்னுல் ஜவ்ஸீ (ரஹ்) அவர்கள் தமது [illegible] எனும் நூலிலும் [illegible] செய்தி [illegible] (ரஹ்) அவர்கள் [illegible] இது முதலாவது ஹதீஸ் ஆகும். [illegible] - இப்னு [illegible] (ரஹ்))

[illegible] (6200) ஹதீஸிலிருந்து நபித்தோழர்களுள் ஒருவருக்கு 'வலீத்' என்ற பெயர் இருந்துள்ளது என்பது [illegible] நபி (ஸல்) அவர்கள் [illegible] ஆகவே 'வலீத்' [illegible] பெயர் [illegible] (ரஹ்) அவர்கள் [illegible].

37. இந்த ஹதீஸ் புகாரீ (581, 586, 1188, 1197, 1992, 1995) முஸ்லிம் (1503, 1504, 1506), அபூதாவூத் (1084), திர்மிதீ (1683), நஸாயீ (558), இப்னுமாஜா (1240), தாரிமீ (1397), [illegible] (185), இப்னு குஸைமா (1272), [illegible] (1/303), [illegible] இப்னு அபீஷைபா (1/88 (10)) ஆகிய நூல்களிலும் ஆதாரப்பூர்வமான அறிவிப்பாளர்தொடரில் பதிவாகியுள்ளது.

الْكِنْدِيِّ: أَنَّهُ رَكِبَ إِلَى عُمَرَ بْنِ الْخَطَّابِ رَضِيَ اللَّهُ عَنْهُ يَسْأَلُهُ عَنْ ثَلَاثِ خِلَالٍ، قَالَ: فَقَدِمَ الْمَدِينَةَ فَسَأَلَهُ عُمَرُ رَضِيَ اللَّهُ عَنْهُ: مَا أَقْدَمَكَ؟ قَالَ: لِأَسْأَلَكَ عَنْ ثَلَاثِ خِلَالٍ، قَالَ: وَمَا هُنَّ؟ قَالَ: رُبَّمَا كُنْتُ أَنَا وَالْمَرْأَةُ فِي بِنَاءٍ ضَيِّقٍ فَتَحْضُرُ الصَّلَاةُ، فَإِنْ صَلَّيْتُ أَنَا وَهِيَ كَانَتْ بِحِذَائِي، وَإِنْ صَلَّتْ خَلْفِي خَرَجَتْ مِنَ الْبِنَاءِ؟ فَقَالَ عُمَرُ: تَسْتُرُ بَيْنَكَ وَبَيْنَهَا بِثَوْبٍ ثُمَّ تُصَلِّي بِحِذَائِكَ إِنْ شِئْتَ، وَعَنِ الرَّكْعَتَيْنِ بَعْدَ الْعَصْرِ؟ فَقَالَ: نَهَانِي عَنْهُمَا رَسُولُ اللَّهِ ﷺ، قَالَ: وَعَنِ الْقَصَصِ فَإِنَّهُمْ أَرَادُونِي عَلَى الْقَصَصِ؟ فَقَالَ: مَا شِئْتَ، كَأَنَّهُ كَرِهَ أَنْ يَمْنَعَهُ، قَالَ: إِنَّمَا أَرَدْتُ أَنْ أَنْتَهِيَ إِلَى قَوْلِكَ؟ قَالَ: أَخْشَى عَلَيْكَ أَنْ تَقُصَّ فَتَرْتَفِعَ عَلَيْهِمْ فِي نَفْسِكَ، ثُمَّ تَقُصَّ فَتَرْتَفِعَ، حَتَّى يُخَيَّلَ إِلَيْكَ أَنَّكَ فَوْقَهُمْ بِمَنْزِلَةِ الثُّرَيَّا، فَيَضَعَكَ اللَّهُ تَحْتَ أَقْدَامِهِمْ يَوْمَ الْقِيَامَةِ بِقَدْرِ ذَلِكَ.

நான் உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்களிடம் மூன்று விஷயங்களைப் பற்றிக் கேட்பதற்காக மதீனாவிற்குப் புறப்பட்டேன். மதீனாவுக்கு வந்ததும், என்னிடம் உமர் (ரலி) அவர்கள், "உமது வருகைக்குக் காரணம் என்ன?" என்று கேட்டார்கள். அதற்கு நான், "தங்களிடம் நான் மூன்று விஷயங்களைப் பற்றிக் கேட்பதற்காக (வந்தேன்)" என்று கூறினேன். அதற்கவர்கள், "அவை யாவை?" என்று கேட்டார்கள்.

அதற்கு நான், "நான் சில நேரங்களில் நெருக்கடியான (சிறிய) வீட்டில் என் மனைவியுடன் இருப்பேன். அப்போது தொழுகை நேரம் வந்து விடுகிறது. அப்போது நான் தொழ வைத்தால், அவள் எனக்குச் சமமாகத்தான் நிற்க நேர்கிறது. (தொழுகையில் ஆணுக்கு நேராக பெண் நிற்கவேண்டிய நிலை ஏற்படுகிறது.) அவள் எனக்குப் பின்னால் நின்றால், அவள் வீட்டிற்கு வெளியே நிற்க வேண்டிய நிலை ஏற்படுகிறது (இந்நிலையில் நான் என்ன செய்வது?)" என்று கேட்டேன்.

உமர் (ரலி) அவர்கள், "உமக்கும் அவளுக்கும் இடையில் ஒரு துணியால் திரையிட்டுக்கொள். பிறகு நீ விரும்பினால், உமக்குச் சமமாக அவளை நிறுத்தித் தொழுவித்துக்கொள்" என்றார்கள்.

நான், அஸ்ருக்குப் பின் இரண்டு 'ரக்அத்'கள் தொழுவது பற்றிக் கேட்டபோது, "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அஸ்ர் தொழுகைக்குப் பின் இரண்டு 'ரக்அத்'கள் தொழ வேண்டாமென எனக்குத் தடைவிதித்தார்கள்" என்று பதிலளித்தார்கள்.

மக்களுக்கு உரை நிகழ்த்துவதைக் குறித்து, "மக்கள் என்னிடம் உரை நிகழ்த்தும்படி விரும்பிக் கேட்கின்றனர். (நிகழ்த்தலாமா)?" என்று கேட்டேன். அதற்கு உமர் (ரலி) அவர்கள், "உமது விருப்பம்" என்று பதில் சொன்னார்கள். அவர்களின் பதில், என்னை (வெளிப்படையாகத்) தடுக்க விரும்பாதது போன்று இருந்தது.

நான், "தங்களின் சொல்லை முடிவாக எடுத்துக்கொள்ளவே விரும்பினேன்" என்றேன். அதற்கு உமர் (ரலி) அவர்கள், "நீர் (மக்களிடையே) உரை நிகழ்த்தப்போய், உமது உள்ளத்தில் அந்த மக்களைவிட உம்மை உயர்வாகக் கருதி, (பெருமை) கொள்ளும் நிலை ஏற்படும். தொடர்ந்து அவர்களுக்கு நீர் உரை நிகழ்த்திக்கொண்டிருந்தால், உம்மைக் குறித்து இன்னும் கூடுதலாக நீர் உயர்வாகக் கருதிவிடுவீர் இறுதியில் அவர்களைவிட நீர் 'ஸுரய்யா' (எனும் கார்த்திகை) நட்சத்திரக் கூட்டத்தின் அளவிற்கு உயர்ந்தவர் என்ற எண்ணம் ஏற்பட்டுவிடும். இதனால், அல்லாஹ் உம்மை அந்தப் பெருமையின் அளவுக்கேற்ப மறுமைநாளில் அவர்களின் கால்களுக்குக் கீழே (மிகத் தாழ்ந்த நிலைக்குத்) தள்ளிவிடுவான்" என்று கூறினார்கள்.[30]

30. இந்த ஹதீஸ் 'ஹஸன்' தரத்திலமைந்ததாகும். இது முஸ்னது அஹ்மதில் மட்டுமே இடம்பெற்றுள்ளது

107 உமர் பின் அல்கத்தாப் (ரலி) கூறியதாவது:

என்னிடம் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "உங்களின் தந்தையர் பெயரால் நீங்கள் சத்தியம் செய்யவேண்டாமென அல்லாஹ் உங்களுக்குத் தடைவிதிக்கிறான்" என்று சொன்னார்கள். அல்லாஹ்வின் மீது ஆணையாக! இவ்வாறு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறியதைக் கேட்டது முதல், நானாகப் பேசும்போதும் சரி, பிறரது பேச்சை எடுத்துரைக்கும்போதும் சரி, நான் தந்தை பெயரால் சத்தியம் செய்ததில்லை.[39]

١٠٧ حدثنا بشر بن شعيب بن أبي حمزة قال: حدثني أبي عن الزهري قال: أخبرني سالم بن عبد الله أن عبد الله بن عمر أخبره أن عمر بن الخطاب رضي الله عنه قال: سمعت رسول الله ﷺ يقول: إن الله -عز وجل- ينهاكم أن تحلفوا بآبائكم، قال عمر: فوالله ما حلفت بها منذ سمعت رسول الله ﷺ نهى عنها، ولا تكلمت بها ذاكرا ولا آثرا.

108 உமர் பின் அல்கத்தாப் (ரலி), ஹுதைஃபா பின் அல்யமான் (ரலி) ஆகியோர் கூறியதாவது:

நபி (ஸல்) அவர்கள் குதிரைகளுக்கும் அடிமைகளுக்கும் 'ஸகாத்' வசூலிக்கவில்லை.[40]

١٠٨ حدثنا أبو اليمان، حدثنا أبو بكر بن عبد الله، عن راشد بن سعد، عن عمر بن الخطاب رضي الله عنه وحذيفة بن اليمان: أن النبي ﷺ لم يأخذ من الخيل والرقيق صدقة.

109 அப்துல்லாஹ் இப்னு உமர் (ரலி) அவர்கள் கூறியதாவது:

١٠٩ حدثنا علي بن إسحاق، أنبأنا عبد الله، - يعني: ابن المبارك -، أنبأنا محمد بن سوقة، عن

39. இந்த ஹதீஸ் புகாரீ (6647), முஸ்லிம் (3360), திர்மிதீ (1453), அபூதாவூத் (2828), இப்னுமாஜா (2085), நஸாயீ (3707, 3708), அஹ்மத் (109), முவத்தா மாலிக் (909), தாரிமீ (2236) ஆகிய நூல்களிலும் பதிவாகியுள்ளது.

[illegible] அபூதாவூத் 2827 நஸாயீ 3708 [illegible]

[illegible] திர்மிதீ 1455 [illegible]

40. [illegible] முஸ்லிம் (1787, 1788), புகாரீ (1463, 1464) ஆகிய நூல்களில் பதிவாகியுள்ளது. [illegible]

عبد الله بن دينار، عن ابن عمر: أن عمر بن الخطاب رضي الله عنه خطب الناس بالجابية فقال: قام فينا رسول الله ﷺ مثل مقامي فيكم فقال: استوصوا بأصحابي خيرا، ثم الذين يلونهم، ثم الذين يلونهم، ثم يفشو الكذب، حتى إن الرجل ليبتدئ بالشهادة قبل أن يسألها. فمن أراد منكم بحبحة الجنة فليلزم الجماعة، فإن الشيطان مع الواحد، وهو من الاثنين أبعد، لا يخلون أحدكم بامرأة، فإن الشيطان ثالثهما، ومن سرته حسنته وساءته سيئته فهو مؤمن.

١١٠ حدثنا أبو اليمان، حدثنا أبو بكر عن حكيم بن عمير وضمرة بن حبيب قالا: قال عمر بن الخطاب رضي الله عنه: من سره أن ينظر إلى هدي رسول الله ﷺ فلينظر إلى هدي عمرو بن الأسود.

(என் தந்தை) உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள் (ஷாம் நாட்டிலுள்ள) 'அல்ஜாபியா' எனுமிடத்தில் நின்று மக்களிடையே உரை நிகழ்த்தினார்கள். அப்போது, "உங்கள் முன் நான் நிற்பது போன்றே எங்களிடையே அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் நின்று, 'என் தோழர்களிடமும் பிறகு அவர்களுக்கு அடுத்து வருவோரிடமும் பிறகு அவர்களுக்கு அடுத்து வருவோரிடமும் நன்முறையில் நடந்துகொள்ளுமாறு நான் கூறும் அறிவுரையை ஏற்றுக்கொள்ளுங்கள். பிறகு, (அதற்கடுத்த தலைமுறையினரிடையே) பொய் பரவலாகும். எந்த அளவுக்கென்றால், (அக்காலத்தாருள்) ஒருவன், தன்னிடம் சாட்சியம் அளிக்குமாறு கோரப்படுவதற்கு முன்பே சாட்சியம் அளிக்க முன்வருவான். 'ஆகவே, உங்களுள் ஒருவர் சொர்க்கத்தின் மையப் பகுதியில் இடம்பிடிக்க விரும்பினால், அவர் (ஒரு தலைமையின் கீழ் ஒன்றுபட்ட) சமுதாயக் கட்டமைப்புடன் இணைந்து வாழ்வதைக் கடைப்பிடிக்கட்டும்! ஏனெனில், நிச்சயமாக, ஷைத்தான், (சமுதாயக் கட்டமைப்பிலிருந்து விலகி வாழும்) தனி மனிதனுடன்தான் இருக்கிறான். அவர்கள் இரண்டு பேர்களாக இ(ணைந்தி)ருப்பின், அவன் வெகு தொலைவிற்கு விலகிச் சென்றுவிடுகிறான்.

உங்களுள் ஒருவர் (அந்நியப்) பெண்ணுடன் தனித்திருக்க வேண்டாம். அவ்வாறு (தனித்து) இருந்தால், நிச்சயமாக, ஷைத்தான் அந்த இருவருடன் மூன்றாமவனாக இருப்பான்.

ஒருவருக்கு அவருடைய நற்செயல் மகிழ்ச்சியளித்து, அவரது தீய செயல் கவலை அளிக்குமானால், அவர்தான் இறைநம்பிக்கையாளர் (முஃமின்) ஆவார்' என்று கூறினார்கள்" என்றார்கள்.[41]

110 உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள் கூறியதாவது:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் நடைமுறையைக் காண விரும்புகின்றவர், அம்ர் பின் அல்அஸ்வத் (ரஹ்) அவர்களின் நடைமுறையைப் பார்த்துக்கொள்ளட்டும்.[42]

41. [illegible]

42. [illegible]

111 உமர் (ரலி) அவர்கள் கூறியதாவது:

நாங்கள் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுடன் ஒரு பயணக் குழுவில் இருந்தோம். அப்போது ஒருவர், "இல்லை; என் தந்தையின் மீது சத்தியமாக" என்று கூறினார். உடனே மற்றொருவர், "உங்களின் தந்தையர் பெயரால் சத்தியம் செய்யாதீர்கள்" என்று கூறினார். நான் (அவர் யாரென்று) திரும்பிப் பார்த்தேன். அங்கே அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் இருந்தார்கள்.[43]

١١١ حدثنا أبو سعيد مولى بني هاشم، قال: حدثنا زائدة، حدثنا سماك، عن عكرمة، عن ابن عباس قال: قال عمر: كنا مع رسول الله ﷺ في ركب، فقال رجل: لا وأبي، فقال رجل: لا تحلفوا بآبائكم، فالتفت فإذا هو رسول الله ﷺ.

112 அபூஹுரைரா (ரலி) அவர்கள் கூறியதாவது:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் இறந்து, அதன் பின் அபூபக்ர் (ரலி) அவர்கள் (கலீஃபாவாக) இருந்தபோது, அரபியர்களுள் சிலர் ('ஸகாத்'தைக் கொடுக்க மறுத்து) இறை மறுப்பாளர் (காஃபிர்)களாயினர். (அவர்களுடன் போரிடும் முடிவுக்கு அபூபக்ர் (ரலி) அவர்கள் வந்தபோது), உமர் (ரலி) அவர்கள், "அபூபக்ர் அவர்களே! அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், 'அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை என மக்கள் கூறும்வரை, அவர்களுடன் போர் புரியுமாறு நான் பணிக்கப்பட்டுள்ளேன். அவ்வாறு, 'அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை' என்று ஒருவர் கூறிவிட்டால், அவர் என்னிடமிருந்து தன் சொத்தையும் தன்னையும் பாதுகாத்துக் கொள்வார், தண்டனைக்குரிய குற்றம் ஒன்றில் அவர் ஈடுபட்டாலே தவிர அவருக்குரிய விசாரணை அல்லாஹ்விடம் உள்ளது' என்று கூறி இருக்கும்போது, நீங்கள் எப்படி ('ஸகாத்' கொடுக்க மறுக்கும்) மக்களிடம் போர் புரியலாம்?" என்று கேட்டார்கள்

அதற்கு (கலீஃபா) அபூபக்ர் (ரலி) அவர்கள், "அல்லாஹ்வின் மீதாணையாக! தொழுகையையும் ஸகாத்தையும் பிரித்துப் பார்ப்போரிடம் நான் கட்டாயம் போர் புரிவேன் ஏனெனில், நிச்சயமாக 'ஸகாத்' என்பது, செல்வத்திற்குரிய கடமையாகும் அல்லாஹ்வின் மீதாணையாக! அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் இவர்கள் ('ஸகாத்' தாகச்) செலுத்திவந்த ஒட்டகக் குட்டியை இவர்கள் என்னிடம் தர மறுத்தாலும், அதைத் தர மறுத்ததற்காக அவர்களிடம் நான் போர் புரிவேன்" என்று கூறினார்கள்

பிறகு உமர் (ரலி) அவர்கள், "போர் புரியும் முடிவில் அபூபக்ர் (ரலி) அவர்களின்

١١٢ حدثنا عصام بن خالد وأبو اليمان قالا أخبرنا شعيب بن أبي حمزة عن الزهري قال حدثنا عبيد الله بن عبد الله بن عتبة بن مسعود رضي الله عنه أن أبا هريرة قال: لما توفي رسول الله ﷺ وكان أبو بكر بعده وكفر من كفر من العرب قال عمر: يا أبا بكر كيف تقاتل الناس وقد قال رسول الله ﷺ: أمرت أن أقاتل الناس حتى يقولوا لا إله إلا الله فمن قال لا إله إلا الله فقد عصم مني ماله ونفسه إلا بحقه وحسابه على الله تعالى قال أبو بكر والله لأقاتلن قال أبو اليمان لأقتلن من فرق بين الصلاة والزكاة فإن الزكاة حق المال والله لو منعوني عناقا كانوا يؤدونها إلى رسول الله ﷺ لقاتلتهم على منعها، قال عمر:

---

43. [illegible] 6046, 6047, 6048, [illegible] 3360 [illegible] - 107.

நெஞ்சத்தை அல்லாஹ் விரிவாக்கிவிட்டான் என்பதை நான் அறிந்துகொண்டேன். அதுவே சரி(யான முடிவு)என்பதையும் விளங்கிக் கொண்டேன்" என்று கூறினார்கள்.

فَوَاللهِ مَا هُوَ إِلاَّ أَنْ رَأَيْتُ أَنَّ اللهَ عَزَّ وَجَلَّ قَدْ شَرَحَ صَدْرَ أَبِي بَكْرٍ رَضِيَ اللهُ عَنْهُ لِلْقِتَالِ فَعَرَفْتُ أَنَّهُ الْحَقُّ.

அபுல்யமான் (ஹகம் பின் நாஃபிஉ-ரஹ்) வழியாக வந்துள்ள அறிவிப்பில் ('கட்டாயம் போர் புரிவேன்' என்பதற்குப் பகரமாக) 'கட்டாயம் மரண தண்டனை அளிப்பேன்' என்று இடம்பெற்றுள்ளது.[44]

113 அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

'சுப்ஹு'த் தொழுகைக்குப் பின் சூரியன் உதயமாகும் வரையிலும், அஸ்ர் தொழுகைக்குப் பின் சூரியன் மறையும் வரையிலும் எந்தத் தொழுகையும் இடையாது.[45]

இதை உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

١١٣ حدثنا أَبُو الْمُغِيرَةِ حَدَّثَنَا الأَوْزَاعِيُّ حَدَّثَنَا عَمْرُو بْنُ شُعَيْبٍ عَنْ عَبْدِ اللهِ بْنِ عَمْرِو بْنِ الْعَاصِ عَنْ عُمَرَ بْنِ الْخَطَّابِ رَضِيَ اللهُ عَنْهُ أَنَّ رَسُولَ اللهِ ﷺ قَالَ: لاَ صَلاَةَ بَعْدَ صَلاَةِ الصُّبْحِ إِلَى طُلُوعِ الشَّمْسِ وَلاَ بَعْدَ الْعَصْرِ حَتَّى تَغِيبَ الشَّمْسُ.

114 உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள் கூறியதாவது:

வாகனத்தின் உரிமையாளர்தான், அதன் முன் இருக்கையில் அமர்வதற்கு மிகவும் தகுதி படைத்தவர் ஆவார் என நபி (ஸல்) அவர்கள் தீர்ப்பளித்தார்கள்.[46]

١١٤ حدثنا الْحَكَمُ بْنُ نَافِعٍ حَدَّثَنَا ابْنُ عَيَّاشٍ عَنْ أَبِي سَبَإٍ عُتْبَةَ بْنِ تَمِيمٍ عَنِ الْوَلِيدِ بْنِ عَامِرٍ الْيَزَنِيِّ عَنْ عُرْوَةَ بْنِ مُغِيثٍ الأَنْصَارِيِّ عَنْ عُمَرَ بْنِ الْخَطَّابِ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ: قَضَى النَّبِيُّ ﷺ أَنَّ صَاحِبَ الدَّابَّةِ أَحَقُّ بِصَدْرِهَا.

115 ஹம்ரா பின் அப்தி குலால் (ரஹ்) கூறியதாவது:

١١٥ حدثنا أَبُو الْيَمَانِ الْحَكَمُ بْنُ نَافِعٍ حَدَّثَنَا أَبُو بَكْرِ بْنُ عَبْدِ اللهِ عَنْ رَاشِدِ بْنِ سَعْدٍ عَنْ حَمْزَةَ بْنِ عَبْدِ كُلاَلٍ قَالَ: سَارَ عُمَرُ بْنُ الْخَطَّابِ رَضِيَ اللهُ عَنْهُ إِلَى الشَّامِ بَعْدَ مَسِيرِهِ الأَوَّلِ كَانَ إِلَيْهَا حَتَّى إِذَا شَارَفَهَا بَلَغَهُ وَمَنْ مَعَهُ أَنَّ الطَّاعُونَ فَاشٍ فِيهَا فَقَالَ لَهُ أَصْحَابُهُ ارْجِعْ وَلاَ تَقَحَّمْ عَلَيْهِ فَلَوْ نَزَلْتَهَا

(கலீஃபா) உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள் ஷாம் நாட்டிற்கு (அதை முற்றுகையிட) இரண்டாவது முறை பயணம் மேற்கொண்டபோது, ஷாமில் கொள்ளை நோய் பரவிக்கொண்டிருப்பதாக, அவர்களுக்கும் அவர்களுடைய தோழர்களுக்கும் தகவல் வந்தது. அப்போது தோழர்கள், "நீங்கள் திரும்பிச் செல்லுங்கள் (ஷாமுக்குச் செல்ல வேண்டாம்). அங்கே செல்ல முனைய வேண்டாம். கொள்ளைநோய் பரவும்

44. பார்க்க: முன்சென்ற ஹதீஸ் எண் - 64. மற்றும் அதன் அடிக்குறிப்பு

45. அம்ரு பின் ஷுஐப் தமது தந்தையின் பாட்டனாரிடம் [illegible] அறிவிப்பாளர்தொடராகும். இருப்பினும் இதன் கருத்து ஆதாரபூர்வமான நபிமொழிகளில் வந்துள்ளது. காண்க: முன்சென்ற ஹதீஸ் எண் - 105. மற்றும் அதன் அடிக்குறிப்பு

46. இந்த ஹதீஸின் கருத்து [illegible] (13454, 13818, 13906, 15242) [illegible] (2000), தாரிமீ (2720), இப்னு ஹிப்பான் (4821), முஸ்னது அஹ்மத் (14030) உள்ளிட்ட நூல்களில் பதிவாகியுள்ளது. [illegible] இந்த அறிவிப்பாளர்தொடரில் [illegible]

நிலையில் அங்கு நீங்கள் தங்கினால், அங்கிருந்து நீங்கள் புறப்பட்டுச் செல்வதை எங்களால் காண முடியாது" என்று கூறினர்.

எனவே, உமர் (ரலி) அவர்கள் மதீனாவை நோக்கித் திரும்பிச் செல்லலானார்கள். அன்றிரவு வழியில் ஓரிடத்தில் இறங்கி, இரவு ஓய்வு எடுத்துக்கொண்டார்கள். அப்போது மற்றவர்களைவிட நானே அவர்களுக்கு மிக அருகில் இருந்தேன்.

அவர்கள் அங்கிருந்து புறப்பட்டுச் சென்ற போது, அவர்களைத் தொடர்ந்து நானும் புறப்பட்டேன். அப்போது அவர்கள் பின்வருமாறு கூறியதை நான் செவியுற்றேன்:

"நான் ஷாம் நாட்டை நெருங்கியதும், 'அங்கே கொள்ளைநோய் பரவுகிறது' என்று கூறி, என்னைத் திருப்பி அனுப்பிவிட்டார்கள். அறிந்துகொள்ளுங்கள்! நான் அங்கிருந்து திரும்பிவிட்டதால், என் வாழ்நாள் தள்ளிப் போய்விடுவதுமில்லை; நான் அங்குச் சென்றால், என் வாழ்வு முன்கூட்டியே முடிந்துவிடப் போவதுமில்லை. அறிந்துகொள்ளுங்கள்! நான் மதீனாவுக்குச் சென்று, தவிர்க்க முடியாத சில (முக்கிய) அலுவல்களை முடித்துவிட்டால், நான் ஷாம் நாட்டுக்குச் சென்று, பின்னர் 'ஹிம்ஸ்' பகுதிக்குச் சென்று, அங்குத் தங்கத்தான் போகிறேன். ஏனெனில், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், 'மறுமை நாளில் அல்லாஹ் (ஹிம்ஸ் அருகிலுள்ள) ஆலிவ் தோட்டத்திற்கு இடையிலுள்ள அல்பர்ஸ்[47] எனும் மிருதுவான செம்மண் பகுதியிலிருந்துதான் எழுபதாயிரம் பேர்களை எழுப்புவான். அவர்களுக்கு விசாரணையும் கிடையாது; வேதனையும் கிடையாது' என்று கூறியதை நான் கேட்டுள்ளேன்."[48]

وَهُوَ بِهَا لَمْ نَرَ لَكَ الشُّخُوصَ عَنْهَا فَانْصَرَفَ
رَاجِعًا إِلَى الْمَدِينَةِ فَعَرَّسَ مِنْ لَيْلَتِهِ تِلْكَ وَأَنَا أَقْرَبُ
الْقَوْمِ مِنْهُ فَلَمَّا انْبَعَثَ انْبَعَثْتُ مَعَهُ فِي أَثَرِهِ فَسَمِعْتُهُ
يَقُولُ رَدُّونِي عَنِ الشَّامِ بَعْدَ أَنْ شَارَفْتُ عَلَيْهِ لِأَنَّ
الطَّاعُونَ فِيهِ أَلَا وَمَا مُنْصَرَفِي عَنْهُ مُؤَخِّرٌ فِي
أَجَلِي وَمَا كَانَ قُدُومِيهِ مُعَجِّلِي عَنْ أَجَلِي أَلَا وَلَوْ
قَدْ قَدِمْتُ الْمَدِينَةَ فَفَرَغْتُ مِنْ حَاجَاتٍ لَا بُدَّ لِي
مِنْهَا لَقَدْ سِرْتُ حَتَّى أَدْخُلَ الشَّامَ ثُمَّ أَنْزِلَ حِمْصَ
فَإِنِّي سَمِعْتُ رَسُولَ اللَّهِ ﷺ يَقُولُ لَيَبْعَثَنَّ اللَّهُ
مِنْهَا يَوْمَ الْقِيَامَةِ سَبْعِينَ أَلْفًا لَا حِسَابَ عَلَيْهِمْ
وَلَا عَذَابَ عَلَيْهِمْ مَبْعَثُهُمْ فِيمَا بَيْنَ الزَّيْتُونِ
وَحَائِطِهَا فِي الْبَرْثِ الْأَحْمَرِ مِنْهَا.

١١٦ حَدَّثَنَا عَبْدُ اللَّهِ بْنُ يَزِيدَ أَخْبَرَنَا حَيْوَةُ أَخْبَرَنَا
أَبُو عَقِيلٍ عَنِ ابْنِ عَمِّهِ عَنْ عُقْبَةَ بْنِ عَامِرٍ أَنَّهُ

116 உக்பா பின் ஆமிர் (ரலி) அவர்கள் கூறியதாவது:

---

47. [illegible]

48. [illegible] (4479) [illegible] (314) [illegible]

عَرَجَ مَعَ رَسُولِ اللهِ ﷺ فِي غَزْوَةِ تَبُوكَ فَجَلَسَ
رَسُولُ اللهِ ﷺ يَوْمًا يُحَدِّثُ أَصْحَابَهُ فَقَالَ: مَنْ
قَامَ إِذَا اسْتَقَلَّتِ الشَّمْسُ فَتَوَضَّأَ فَأَحْسَنَ الْوُضُوءَ
ثُمَّ قَامَ فَصَلَّى رَكْعَتَيْنِ غُفِرَ لَهُ خَطَايَاهُ فَكَانَ كَمَا
وَلَدَتْهُ أُمُّهُ قَالَ عُقْبَةُ بْنُ عَامِرٍ: فَقُلْتُ الْحَمْدُ لِلَّهِ
الَّذِي رَزَقَنِي أَنْ أَسْمَعَ هَذَا مِنْ رَسُولِ اللهِ ﷺ
فَقَالَ لِي عُمَرُ بْنُ الْخَطَّابِ رَضِيَ اللهُ عَنْهُ: وَكَانَ
تُجَاهِي جَالِسًا أَتَعْجَبُ مِنْ هَذَا فَقَدْ قَالَ رَسُولُ
اللهِ ﷺ أَعْجَبَ مِنْ هَذَا قَبْلَ أَنْ تَأْتِيَ فَقُلْتُ وَمَا
ذَاكَ بِأَبِي أَنْتَ وَأُمِّي فَقَالَ عُمَرُ قَالَ رَسُولُ اللهِ
ﷺ: مَنْ تَوَضَّأَ فَأَحْسَنَ الْوُضُوءَ ثُمَّ رَفَعَ نَظَرَهُ إِلَى
السَّمَاءِ فَقَالَ أَشْهَدُ أَنْ لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا
شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ فُتِحَتْ
لَهُ ثَمَانِيَةُ أَبْوَابِ الْجَنَّةِ يَدْخُلُ مِنْ أَيِّهَا شَاءَ.

١١٧ حَدَّثَنَا سُلَيْمَانُ بْنُ دَاوُدَ يَعْنِي أَبَا دَاوُدَ
الطَّيَالِسِيَّ قَالَ حَدَّثَنَا أَبُو عَوَانَةَ عَنْ دَاوُدَ الْأَوْدِيِّ عَنْ
عَبْدِ الرَّحْمَنِ الْمُسْلِيِّ عَنِ الْأَشْعَثِ بْنِ قَيْسٍ قَالَ:
ضِفْتُ عُمَرَ فَتَنَاوَلَ امْرَأَتَهُ فَضَرَبَهَا وَقَالَ يَا أَشْعَثُ

நான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுடன் தபூக் போருக்குப் புறப்பட்டுச் சென்றேன். ஒருநாள் அவர்கள் தம் தோழர்களுடன் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது, "ஒருவர் சூரியன் உயர்ந்துவிட்ட பிறகு எழுந்து அழகிய முறையில் அங்கத் தூய்மை (உளூ) செய்து, பின்னர் நின்று இரண்டு 'ரக்அத்'கள் தொழுதால், அவருடைய பாவங்கள் மன்னிக்கப்படும். அவர் அன்று பிறந்த பாலகரைப் போன்று (குற்றமற்றவராக) ஆகிவிடுவார்" என்று கூறினார்கள்.

அதைக் கேட்ட நான், "இதை அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடமிருந்து செவியுற எனக்கு அருள் புரிந்த அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்" என்று கூறினேன். அப்போது எனக்கெதிரே அமர்ந்திருந்த உமர் (ரலி) அவர்கள் என்னிடம், "இதற்கே நீ வியப்படைகின்றாயா? நீ இங்கு வருவதற்கு முன் இதைவிட வியப்பான செய்தி ஒன்றை அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்" என்றார்கள். "என் தந்தையும் தாயும் உமக்கு அர்ப்பணமாகட்டும்! அது என்ன?" என்று நான் கேட்டேன்.

அதற்கு உமர் (ரலி) அவர்கள், "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், 'ஒருவர் அழகிய முறையில் அங்கத் தூய்மை (உளூ) செய்து, பிறகு வானத்தை அண்ணாந்து பார்த்து, 'அஷ்ஹது அல்லா இலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லா ஷரீக்க லஹு வஅஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வரசூலுஹு' (அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை. அவன் தனித்தவன். அவனுக்கு இணையாக யாருமில்லை என்றும், முஹம்மது (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் அடியாரும் தூதருமாவார்கள் என்றும் நான் உறுதி கூறுகிறேன்) என்று கூறினால், அவருக்குச் சொர்க்கத்தின் எட்டு வாசல்களும் திறக்கப்படும். அவற்றுள் தாம் விரும்பும் வாசல் வழியாக அவர் சொர்க்கத்துக்குள் நுழைந்துகொள்வார்' என்று கூறினார்கள்" என்றார்கள்.[40]

117 அஷ்அஸ் பின் கைஸ் (ரலி) அவர்கள் கூறியதாவது:

நான் உமர் (ரலி) அவர்களிடம் (அவர்களது இல்லத்தில்) விருந்தாளியாகத் தங்கியிருந்

40. [illegible] - 307. [illegible]

தேன். அப்போது அவர்கள் (ஏதோ பிரச்சினையில்) தம் மனைவியைப் பிடித்து அடித்துவிட்டார்கள் பிறகு அவர்கள் என்னிடம் கூறினார்கள்: "அஷ்அஸே! நான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடமிருந்து (கேட்டு) மனனமிட்ட மூன்றை நீயும் என்னிடமிருந்து (கேட்டு) மனனமிட்டுக்கொள்வீராக. அவை:

1. ஒருவர் தன் மனைவியை அடித்தால், அவரிடம் அதுபற்றி நீ கேள்வி கேட்காதே

2 (இரவில்) 'வித்ர்' தொழுகையைத் தொழாமல் உறங்காதே!" என்று கூறினார்கள்

மூன்றாவதையும் உமர் (ரலி) கூறினார்கள். ஆனால், அதை நான் மறந்துவிட்டேன்.[50]

احفظ عني ثلاثا حفظتهن عن رسول الله ﷺ لا تسأل الرجل فيم ضرب امرأته ولا تنم إلا على وتر ونسيت الثالثة.

118 அப்துல்லாஹ் பின் அஸ்ஸுபைர் (ரலி) அவர்கள் கூறியதாவது:

உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள் உரையாற்றியபோது, "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், 'இவ்வுலகில் பட்டாடை அணிகின்றவர், மறுமையில் அதை அணிவிக்கப்படமாட்டார்' என்று கூறியதை நான் செவியுற்றுள்ளேன்" என்று கூறினார்கள்.[51]

١١٨ حدثنا عبد الصمد حدثنا أبي حدثنا يزيد يعني الرشك عن معاذة عن أم عمرو ابنة عبد الله أنها سمعت عبد الله بن الزبير يقول: سمعت عمر بن الخطاب رضي الله عنه يقول في خطبته إنه سمع من رسول الله ﷺ يقول: من يلبس الحرير في الدنيا فلا يكساه في الآخرة.

119 ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரலி) அவர்கள் கூறியதாவது:

நபி (ஸல்) அவர்கள், "(ஒரு கால கட்டத்தில்) இந்த மதீனாவின் சுற்றுவட்டாரங்களில் பயணி ஒருவர் செல்வார். பிறகு அவர், '(முன்பு) இந்த இடத்தில் நிறைய இறைநம்பிக்கையாளர்கள் வாழ்ந்துள்ளனர்' என்று கூறுவார். (அந்த அளவுக்கு மக்கள் குடியிருப்புகளற்ற பகுதியாக இந்தப் பகுதிகள் மாறும்)" என்று கூறியதை நான் கேட்டுள்ளேன் என உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள் என்னிடம் தெரிவித்தார்கள்.[52]

١١٩ حدثنا يحيى بن إسحاق حدثنا ابن لهيعة عن أبي الزبير عن جابر قال أخبرني عمر بن الخطاب رضي الله عنه قال سمعت النبي ﷺ يقول: ليسيرن الراكب في جنبات المدينة ثم ليقولن لقد كان في هذا حاضر من المؤمنين كثير.

---

50. [illegible] அபூதாவூத் (1835), இப்னுமாஜா (1976), அஹ்மத் (243) [illegible] (7157) [illegible] (46) [illegible]

51. [illegible] - 4202 [illegible] - 243 [illegible]

52. [illegible] - 83, 417 [illegible] (1874) [illegible]

قَالَ أَبِي أَحْمَدُ بْنُ حَنْبَلٍ: وَلَمْ يَجُزْ بِهِ حَسَنٌ الْأَشْيَبُ جَابِرًا.

(அப்துல்லாஹ் பின் அஹ்மது (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்:)

என் தந்தை அஹ்மது பின் ஹன்பல் (ரஹ்) அவர்கள், "(என் ஆசிரியர்) ஹசன் பின் மூசா அல்அஷ்யப் (ரஹ்) அவர்கள் இந்த ஹதீஸை ஜாபிர் (ரலி) அவர்களைக் கடந்து வேறு வழியில் அறிவிக்கவில்லை" என்று கூறினார்கள்.[82-A]

١٢٠ حَدَّثَنَا هَارُونُ حَدَّثَنَا ابْنُ وَهْبٍ حَدَّثَنِي عَمْرُو بْنُ الْحَارِثِ أَنَّ عُمَرَ بْنَ السَّائِبِ حَدَّثَهُ أَنَّ الْقَاسِمَ بْنَ أَبِي الْقَاسِمِ السَّبَئِيَّ حَدَّثَهُ عَنْ قَاصِّ الْأَجْنَادِ بِالْقُسْطَنْطِينِيَّةِ أَنَّهُ سَمِعَهُ يُحَدِّثُ أَنَّ عُمَرَ بْنَ الْخَطَّابِ رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ: يَا أَيُّهَا النَّاسُ إِنِّي سَمِعْتُ رَسُولَ اللَّهِ ﷺ يَقُولُ مَنْ كَانَ يُؤْمِنُ بِاللَّهِ وَالْيَوْمِ الْآخِرِ فَلَا يَقْعُدَنَّ عَلَى مَائِدَةٍ يُدَارُ عَلَيْهَا بِالْخَمْرِ وَمَنْ كَانَ يُؤْمِنُ بِاللَّهِ وَالْيَوْمِ الْآخِرِ فَلَا يَدْخُلِ الْحَمَّامَ إِلَّا بِإِزَارٍ وَمَنْ كَانَتْ تُؤْمِنُ بِاللَّهِ وَالْيَوْمِ الْآخِرِ فَلَا تَدْخُلِ الْحَمَّامَ.

120 காண்ஸ்டாண்டி நோபிள் நகரப் படைவீரர்களுக்கு சொற்பொழிவாளராக இருந்தவர் கூறியதாவது:

உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள் (மக்களுக்கு உரையாற்றுகையில் பின்வருமாறு) கூறினார்கள்: மக்களே! அல்லாஹ்வையும், இறுதி நாளையும் நம்பிக்கை கொண்டவர், மதுபானம் பரிமாறப்படும் உணவு மேசையில் அமர வேண்டாம். அல்லாஹ்வையும் இறுதி நாளையும் நம்பிக்கை கொண்டவர், கீழாடை இன்றி (பொதுக்) குளியலறைக்குள் நுழைய வேண்டாம். அல்லாஹ்வையும் இறுதி நாளையும் நம்பிக்கை கொண்ட பெண்கள் (பொதுக்) குளியலறைக்குள் நுழைய வேண்டாம்.[83]

١٢١ حَدَّثَنَا أَبُو سَلَمَةَ الْخُزَاعِيُّ أَنْبَأَنَا لَيْثٌ وَيُونُسُ حَدَّثَنَا لَيْثٌ عَنْ يَزِيدَ بْنِ عَبْدِ اللَّهِ بْنِ أُسَامَةَ بْنِ الْهَادِ عَنِ الْوَلِيدِ بْنِ أَبِي الْوَلِيدِ عَنْ عُثْمَانَ بْنِ عَبْدِ اللَّهِ يَعْنِي ابْنَ سُرَاقَةَ عَنْ عُمَرَ بْنِ الْخَطَّابِ رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ سَمِعْتُ رَسُولَ اللَّهِ ﷺ يَقُولُ: مَنْ أَظَلَّ رَأْسَ غَازٍ أَظَلَّهُ اللَّهُ يَوْمَ الْقِيَامَةِ وَمَنْ جَهَّزَ غَازِيًا حَتَّى يَسْتَقِلَّ كَانَ لَهُ مِثْلُ أَجْرِهِ حَتَّى يَمُوتَ قَالَ قَالَ يُونُسُ: أَوْ يَرْجِعَ وَمَنْ بَنَى لِلَّهِ مَسْجِدًا يُذْكَرُ

121 உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள் கூறியதாவது:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "அறப்போருக்குச் செல்லும் வீரருடைய தலைக்கு ஒருவர் நிழல் அளித்தால், அ(ளித்த)வருக்கு மறுமைநாளில் அல்லாஹ் நிழல் அளிப்பான். ஒருவர் அறப்போர் வீரர் ஒருவருக்குத் தேவையானவற்றை (அவர் பிறரிடம் தேவையாகாத அளவுக்கு நிறைவாக) ஏற்பாடு செய்து கொடுத்து, அவரைத் தன்னிறைவு உடையவராக ஆக்கினால், (அவர் போரில் இறக்கும்வரை, அல்லது போர் முடிந்து திரும்பிவரும்வரை) அவருக்குக் கிடைப்பதைப் போன்ற நற்பலன் இவருக்கும் உண்டு

"ஒருவர் அல்லாஹ்வின் பெயர் நினைவுகூரப்படும் பள்ளிவாசல் ஒன்றை எழுப்பி

---

*இந்தக் குறிப்பாளர் ஆகிய நூல்களில் இடம்பெற்றுள்ளது எனவே இது [illegible] ஹதீஸ் [illegible] ஆகும்

82-A. அதாவது, ஹசன் பின் மூசா அவர்கள், ஜாபிர் (ரலி) அவர்களைப் இன்றி வேறு எந்த தொடரும் அறிவிப்பாளர்தொடரில் மட்டுமே இதை அறிவித்துள்ளார்கள்.

83. இந்நபிமொழி முஸ்னது அஹ்மதில் மட்டுமே இடம்பெற்றுள்ளது. இது பலவீனமான அறிவிப்பாளர்தொடரில் அமைந்த செய்தியாகும். ஏனெனில், இதன் அறிவிப்பாளரான 'காண்ஸ்டான்டிநோபிள் ரோமின் நகரப் படைவீரர்களுக்கு சொற்பொழிவாளராக இருந்தவர்' என்பவர் யாரென்றே அறியப்படாதவர் ஆவார்.

...னால், அதற்குப் பகரமாக அவருக்காக அல்லாஹ் சொர்க்கத்தில் மாளிகை ஒன்றை எழுப்புகிறான்" என்று கூறியதைக் கேட்டேன்.[54]

فِيهِ اسْمُ اللَّهِ تَعَالَى بَنَى اللَّهُ لَهُ بِهِ بَيْتًا فِي الْجَنَّةِ.

122 உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள் கூறியதாவது:

(ஒரு முறை) அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் (சிலருக்கு தர்மப் பொருட்களைப்) பங்கிட்டுக் கொடுத்தார்கள். அப்போது நான், "அல்லாஹ்வின் தூதரே! இவர்களைவிட ('அஹ்லுஸ் ஸுஃப்பா' எனும்) திண்ணைத் தோழர்களே இந்தப் பொருட்களைப் பெறுவதற்கு மிகவும் தகுதியுடையவர்கள்" என்று சொன்னேன். அதற்கு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "நீங்கள் அருவருப்பாகப் பேசி, அல்லது என்னைக் கஞ்சன் என்று சொல்லி என்னிடம் கேட்கும் அளவுக்கு என்னைக் கொண்டுவந்து நிறுத்திவிட்டீர்களே! ஆனால், நான் கஞ்சன் அல்லன்" என்று கூறினார்கள்.[55]

١٢٢ حَدَّثَنَا عَفَّانُ حَدَّثَنَا أَبُو عَوَانَةَ عَنْ سُلَيْمَانَ الْأَعْمَشِ عَنْ شَقِيقٍ عَنْ سَلْمَانَ بْنِ رَبِيعَةَ قَالَ سَمِعْتُ عُمَرَ رَضِيَ اللَّهُ عَنْهُ يَقُولُ: قَسَمَ رَسُولُ اللَّهِ ﷺ قِسْمَةً فَقُلْتُ يَا رَسُولَ اللَّهِ لَغَيْرُ هَؤُلَاءِ أَحَقُّ مِنْهُمْ أَهْلُ الصُّفَّةِ قَالَ فَقَالَ رَسُولُ اللَّهِ ﷺ: إِنَّكُمْ تُخَيِّرُونِي بَيْنَ أَنْ تَسْأَلُونِي بِالْفُحْشِ وَبَيْنَ أَنْ تُبَخِّلُونِي وَلَسْتُ بِبَاخِلٍ.

123 உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள் கூறியதாவது:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் சிறுதுடக்கு ஏற்பட்ட பின்னர், அங்கத் தூய்மை (உளூ) செய்தார்கள். (அப்போது கால்களைக் கழுவுவதற்குப் பகரமாக, ஈரக் கையால் தமது) காலுறைகள் மீது தடவியதை (மஸ்ஹுச் செய்ததை) நான் கண்டேன்.[56]

١٢٣ حَدَّثَنَا عَفَّانُ حَدَّثَنَا خَالِدٌ عَنْ يَزِيدَ بْنِ أَبِي زِيَادٍ عَنْ عَاصِمِ بْنِ عُبَيْدِ اللَّهِ عَنْ أَبِيهِ عَنْ جَدِّهِ عَنْ عُمَرَ بْنِ الْخَطَّابِ رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ: رَأَيْتُ رَسُولَ اللَّهِ ﷺ بَعْدَ الْحَدَثِ تَوَضَّأَ وَمَسَحَ عَلَى الْخُفَّيْنِ.

١٢٤ حَدَّثَنَا عَفَّانُ حَدَّثَنَا حَمَّادُ بْنُ سَلَمَةَ عَنْ عَلِيِّ بْنِ زَيْدٍ عَنْ أَبِي رَافِعٍ أَنَّ عُمَرَ بْنَ الْخَطَّابِ رَضِيَ اللَّهُ عَنْهُ كَانَ مُسْتَنِدًا إِلَى ابْنِ عَبَّاسٍ وَعِنْدَهُ ابْنُ عُمَرَ وَسَعِيدُ ابْنُ زَيْدٍ رَضِيَ اللَّهُ عَنْهُمَا فَقَالَ: اعْلَمُوا

124 (நபி (ஸல்) அவர்களால் விடுதலை செய்யப்பட்ட அவர்களின் முன்னாள் அடிமையான) அபூராஃபிஉ (ரலி) அவர்கள் கூறியதாவது:

(ஒரு முறை, கலீஃபா) உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களுக்கு அருகில் அவர்கள்மீது சாய்ந்து அமர்ந்திருந்தார்கள். அப்போது

54. [illegible]

55. பார்க்க: 'முஸ்லிம்' தமிழாக்கம் (1905)

56. [illegible] புகாரீ (182, 203, 205, 363, 388, 2918, 4421, 5798, 5799) முஸ்லிம் (450) [illegible] பார்க்க: முந்தைய ஹதீஸ் எண் - 84.

أَنِّي لَمْ أَقُلْ فِي الْكَلَالَةِ شَيْئًا وَلَمْ أَسْتَخْلِفْ مِنْ بَعْدِي أَحَدًا وَأَنَّهُ مَنْ أَدْرَكَ وَفَاتِي مِنْ سَبْيِ الْعَرَبِ فَهُوَ حُرٌّ مِنْ مَالِ اللَّهِ عَزَّ وَجَلَّ فَقَالَ سَعِيدُ بْنُ زَيْدٍ أَمَا إِنَّكَ لَوْ أَشَرْتَ بِرَجُلٍ مِنَ الْمُسْلِمِينَ لَأْتَمَنَكَ النَّاسُ وَقَدْ فَعَلَ ذَلِكَ أَبُو بَكْرٍ رَضِيَ اللَّهُ عَنْهُ وَائْتَمَنَهُ النَّاسُ فَقَالَ عُمَرُ رَضِيَ اللَّهُ عَنْهُ: قَدْ رَأَيْتُ مِنْ أَصْحَابِي حِرْصًا سَيِّئًا وَإِنِّي جَاعِلٌ هَذَا الْأَمْرَ إِلَى هَؤُلَاءِ النَّفَرِ السِّتَّةِ الَّذِينَ مَاتَ رَسُولُ اللَّهِ ﷺ وَهُوَ عَنْهُمْ رَاضٍ ثُمَّ قَالَ عُمَرُ رَضِيَ اللَّهُ عَنْهُ لَوْ أَدْرَكَنِي أَحَدُ رَجُلَيْنِ ثُمَّ جَعَلْتُ هَذَا الْأَمْرَ إِلَيْهِ لَوَثِقْتُ بِهِ سَالِمٌ مَوْلَى أَبِي حُذَيْفَةَ وَأَبُو عُبَيْدَةَ بْنُ الْجَرَّاحِ.

அவர்கள் அருகில் இப்னு உமர் (ரலி), சஈது பின் ஸைத் (ரலி) ஆகிய இருவரும் இருந்தனர். அப்போது உமர் (ரலி) அவர்கள், "அறிந்து கொள்ளுங்கள்! 'கலாலா' (சொத்துரிமை பெறும் சந்ததிகள் யாருமின்றிச் சகோதர சகோதரிகளை விட்டுச் செல்பவரைப் பற்றிய சட்டம்) குறித்து நான் எதையும் கூறவில்லை எனக்குப் பின் (குறிப்பிட்ட) யாரையும் கலீஃபா வாகத் தேர்வு செய்யுமாறும் நான் கூறவில்லை. நான் இறப்பதற்குள் அரபிக் கைதிகளுள் எவர் என்னிடம் வந்தாலும், அவர் அல்லாஹ்வின் நிதியிலிருந்து (பொதுச்சொத்திலிருந்து) விடுதலை பெறுவார்" என்று கூறினார்கள்

அப்போது சஈது பின் ஸைத் (ரலி) அவர்கள், "நீங்கள் முஸ்லிம்களுள் குறிப்பிட்ட ஒருவரைச் சுட்டிக் காட்டி (அவரை கலீஃபாவாகத் தேர்வு செய்யுமாறு கூறி)னால், மக்கள் உங்களை நம்பிக்கைக்குரியவராகக் கருதுவார்கள் இவ்வாறுதான் அபூபக்ர் (ரலி) அவர்களும் செய்தார்கள். அவர்களையும் மக்கள் நம்பிக்கைக்குரியவராகவே கருதினர்" என்று கூறினார்கள்

உடனே உமர் (ரலி) அவர்கள், "நான் என் தோழர்களிடம் தவறான பேராசை ஒன்றைக் காண்கிறேன். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் யாரைக் குறித்து மனநிறைவுகொண்ட நிலையில் இறந்தார்களோ, அந்த (அலீ, உஸ்மான், ஸுபைர் பின் அல்அவ்வாம், சஅது பின் அபீவக்காஸ், அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) ஆகிய) அறுவரிடமே நான் (அடுத்த கலீஃபாவைத் தேர்வு செய்யும்) பொறுப்பை ஒப்படைக்கிறேன்" என்று கூறினார்கள் பிறகு, "அபூஹுதைஃபா அவர்களால் விடுதலை செய்யப்பட்ட அவர்களின் முன்னாள் அடிமையான சாலிம் (ரலி), அபூஉபைதா பின் அல்ஜர்ராஹ் (ரலி) ஆகிய இருவருள் ஒருவர் என்னிடம் வந்து, அவரிடம் (கலீஃபாவைத் தேர்ந்தெடுக்கும்) இந்தப் பொறுப்பை நான் ஒப்படைத்தால், அவரையும் நான் நம்பிக்கைக்குரியவராகக் கருதுவேன்" என்றும் கூறினார்கள்.[57]

١٢٥ حَدَّثَنَا عَفَّانُ حَدَّثَنَا هَمَّامٌ حَدَّثَنَا قَتَادَةُ حَدَّثَنِي أَبُو الْعَالِيَةِ عَنِ ابْنِ عَبَّاسٍ قَالَ: شَهِدَ عِنْدِي رِجَالٌ مَرْضِيُّونَ فِيهِمْ عُمَرُ رَضِيَ اللَّهُ عَنْهُ وَأَرْضَاهُمْ عِنْدِي عُمَرُ رَضِيَ اللَّهُ عَنْهُ أَنَّ رَسُولَ اللَّهِ ﷺ قَالَ: لَا صَلَاةَ بَعْدَ الصُّبْحِ حَتَّى تَطْلُعَ الشَّمْسُ وَلَا

125 இப்னு அப்பாஸ் (ரலி) கூறியதாவது:

"அஸ்ர் தொழுகைக்குப் பின்னிருந்து சூரியன் மறையும் வரையிலும், சுப்ஹுத் தொழுகைக்குப் பின்னிருந்து சூரியன் உதிக்கும் வரையிலும் எந்தத் தொழுகையும் கிடையாது" என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்

57. இந்த ஹதீஸின் அறிவிப்பாளர்தொடரில் மூன்றாவது அறிவிப்பாளராக இடம்பெற்றுள்ள அலீ பின் ஸைத் பின் ஜுத்ஆன் என்பார் பலவீனமான அறிவிப்பாளர் ஆவார். எனினும் இதே கருத்தமைந்த ஹதீஸ் முன்னர் எண் 85இல் சென்றுள்ளது. இந்த ஹதீஸில் வரும் சாலிம் (ரலி), அபூஉபைதா (ரலி) ஆகியோர் தொடர்பான இறுதிப் பகுதி தவிர மற்றவை புகாரி, முஸ்லிம் போன்ற ஆதாரபூர்வமான நூல்களில் இடம்பெற்றுள்ளன

صَلَاةَ بَعْدَ الْعَصْرِ حَتَّى تَغْرُبَ الشَّمْسُ.

இதை (நம்பிக்கைக்குரியவர் என மக்களால்) ஏற்றுக்கொள்ளப்பட்ட பலரும் என்னிடம் கூறினர். அவர்களுள் உமர் (ரலி) அவர்களும் ஒருவராவார்கள். என்னைப் பொறுத்தவரையில், அவர்கள் அனைவரிலும் உமர் (ரலி) அவர்களே என்னிடம் மிகவும் ஏற்புடையவர் ஆவார்கள்.[58]

١٢٦ حَدَّثَنَا عَفَّانُ حَدَّثَنَا وُهَيْبٌ حَدَّثَنَا عَبْدُ اللَّهِ بْنُ عُثْمَانَ بْنِ خُثَيْمٍ عَنْ سَعِيدِ بْنِ جُبَيْرٍ عَنْ ابْنِ عَبَّاسٍ أَنَّ عُمَرَ بْنَ الْخَطَّابِ رَضِيَ اللَّهُ عَنْهُ أَكَبَّ عَلَى الرُّكْنِ فَقَالَ: إِنِّي لَأَعْلَمُ أَنَّكَ حَجَرٌ وَلَوْ لَمْ أَرَ حَبِيبِي ﷺ قَبَّلَكَ وَاسْتَلَمَكَ مَا اسْتَلَمْتُكَ وَلَا قَبَّلْتُكَ وَ﴿لَقَدْ كَانَ لَكُمْ فِي رَسُولِ اللَّهِ أُسْوَةٌ حَسَنَةٌ﴾.

126 இப்னு அப்பாஸ் (ரலி) கூறுகிறார்கள்:

உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள் (இறையில்லம் கஅபாவில்) 'ஹஜருல் அஸ்வத்' கல் பதிக்கப்பெற்றுள்ள மூலை அருகில் தலையைத் தாழ்த்தி (அதனை நோக்கி), "நீ ஒரு கல்தான் என்பதை நான் நன்கறிவேன். என் தோழர் (நபி-ஸல்) அவர்கள் உன்னை முத்தமிட்டதையும், உன் மீது கையை வைத்துத் தமது கையை முத்தமிட்டதையும் நான் கண்டிராவிட்டால், உன்னை நான் முத்தமிட்டிருக்க மாட்டேன்; உன் மீது கையை வைத்து என் கையை முத்தமிட்டிருக்கவும் மாட்டேன். 'அல்லாஹ்வின் தூதரிடம் உங்களுக்கு அழகிய முன்மாதிரி இருக்கிறது." (எனும் (33:21ஆவது) இறைவசனத்தை ஓதினார்கள்).[59]

١٢٧ حَدَّثَنَا عَفَّانُ حَدَّثَنَا حَمَّادٌ أَنْبَأَنَا عَمَّارُ بْنُ أَبِي عَمَّارٍ أَنَّ عُمَرَ بْنَ الْخَطَّابِ رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ: إِنَّ رَسُولَ اللَّهِ ﷺ رَأَى فِي يَدِ رَجُلٍ خَاتَمًا مِنْ ذَهَبٍ فَقَالَ أَلْقِ ذَا فَأَلْقَاهُ فَتَخَتَّمَ بِخَاتَمٍ مِنْ حَدِيدٍ فَقَالَ ذَا شَرٌّ مِنْهُ فَتَخَتَّمَ بِخَاتَمٍ مِنْ فِضَّةٍ فَسَكَتَ عَنْهُ.

127 உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள் கூறியதாவது:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், கையில் தங்க மோதிரம் அணிந்திருந்த மனிதர் ஒருவரைக் கண்டபோது, "அதைக் கழற்றிப் போடு" என்று அவரிடம் கூறினார்கள். அவர் அதைக் கழற்றிவிட்டு, இரும்பு மோதிரம் ஒன்றைச் செய்து அணிந்துகொண்டார். அப்போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "இது அ(ந்தத் தங்க மோதிரத்)தை விடத் தீமையானது" என்று கூறினார்கள். ஆகவே, அவர் வெள்ளி மோதிரம் ஒன்றைச் செய்து அணிந்துகொண்டார். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், அது குறித்து எதுவும் கூறாமல் அமைதியாக இருந்துவிட்டார்கள்.[60]

---

58. முன்சென்ற 105, 113 ஆகிய ஹதீஸ்களைக் காண்க.

59. இறையில்லம் கஅபாவின் ஒரு மூலையில் பதிக்கப்பெற்றுள்ள 'ஹஜருல் அஸ்வத்' கல்லை முத்தமிடுவது, சிலை வழிபாட்டுக்கு ஒப்பாகும் என்ற தவறான கருத்தைப் போக்கவே உமர் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறினார்கள். என்றாலும், சொர்க்கத்திலிருந்து வந்த இப்புனிதக் கல்லின் மறுமை பயன் பற்றிய நபிமொழியொன்று இதன் சிறப்பை உணர்த்துகிறது. "இக்கல்லுக்கு நாளை மறுமையில் இறைவன் நாவையும் உதடுகளையும் வழங்குவான். தன்னை முத்தமிட்டவருக்காக அல்லாஹ்விடம் அவரது கடமையைப் பற்றி அது பரிந்து பேசும்" என்ற நபிமொழி ஹாகிம் (1633), இப்னு ஹிப்பான் (3781) ஆகிய நூல்களில் சரியான அறிவிப்பாளர்தொடரில் இடம்பெற்றுள்ளது.

60. இது அறிவிப்பாளர்தொடர் இடைமுறிந்த ஹதீஸ் ஆகும். இதன் அறிவிப்பாளர்தொடரில் இரண்டாவது அறிவிப்பாளராக இடம்பெற்றுள்ள அம்மார் பின் அபீஅம்மார் நம்பகத்தன்மை வாய்ந்த அறிவிப்பாளராக இருப்பினும் அவர் உமர் (ரலி) அவர்களைச் சந்தித்தவர் அல்லர். எனினும் இதே கருத்தமைந்த ஹதீஸ் பழுதேதுமில்லாத அறிவிப்பாளர்தொடரில் பின்வரும் ஹதீஸ் எண்கள் 6231, 6393 ஆகியவற்றிலும் ஸுனன் இப்னு ஹிப்பானிலும் பதிவாகியுள்ளது. எனவே இது

128 அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரலி) அவர்கள் கூறியதாவது:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் இறந்தபோது, (மதீனாவாசிகளான) அன்சாரிகள், "எங்களுள் ஒருவர்; (மக்காவாசிகளான) உங்களுள் ஒருவர் என தலைவர்கள் இருவர் இருக்கட்டும்" என்று கூறினர். அப்போது அங்கு வந்த உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள், "அன்சாரிகளே! அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் (நோய்வாய்ப்பட்டுப் படுக்கையில் இருந்தபோது), அபூபக்ர் (ரலி) அவர்களை மக்களுக்குத் தலைமை தாங்கித் தொழுவிக்கும்படி கட்டளையிட்டதை நீங்கள் அறியவில்லையா? உங்களுள் யாருடைய மனம் (மக்களுக்குத் தலைமையேற்கும் இவ்விஷயத்தில்) அபூபக்ர் (ரலி) அவர்களை விட முந்திச் செல்ல விரும்புகின்றது?" என்று கேட்டார்கள். உடனே அன்சாரிகள், "அபூபக்ர் (ரலி) அவர்களைவிட முந்திச் செல்வதிலிருந்து நாங்கள் அல்லாஹ்விடம் பாதுகாப்புக் கோருகின்றோம்" என்று கூறினர்.[61]

١٢٨ حدثنا معاوية بن عمرو حدثنا زائدة حدثنا عاصم وحسين بن علي عن زائدة عن عاصم عن زر عن عبد الله قال: لما قبض رسول الله ﷺ قالت الأنصار منا أمير ومنكم أمير فأتاهم عمر رضي الله عنه فقال: يا معشر الأنصار ألستم تعلمون أن رسول الله ﷺ قد أمر أبا بكر رضي الله عنه أن يؤم الناس فأيكم تطيب نفسه أن يتقدم أبا بكر رضي الله عنه فقالت الأنصار نعوذ بالله أن نتقدم أبا بكر رضي الله عنه.

١٢٩ حدثنا موسى بن داود حدثنا ابن لهيعة عن أبي الزبير عن جابر أن عمر بن الخطاب رضي الله عنه أخبره أنه رأى رجلا توضأ للصلاة فترك موضع ظفر على ظهر قدمه فأبصره النبي ﷺ فقال ارجع فأحسن وضوءك فرجع فتوضأ ثم صلى.

129 உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள் கூறியதாவது:

ஒருவர் அங்கத் தூய்மை (உளூ) செய்தார். அப்போது அவர் தம் காலின் மேல் பகுதியில் நகம் அளவு இடத்தைக் (கழுவாமல்) விட்டுவிட்டார். இதைக் கண்ட நபி (ஸல்) அவர்கள், "திரும்பிச் சென்று, சரியாக 'உளூ'ச் செய்வீராக!" என்றார்கள். அவ்வாறே அவர் திரும்பிச் சென்று (மீண்டும் 'உளூ'ச் செய்து) பின்னர் தொழுதார்.[62]

[illegible]

61. இந்த ஹதீஸ் நஸாயீ (769), முஸ்னது அஹ்மது (3577) ஆகிய நூல்களிலும் இடம்பெறுகின்றது.

62. இதே ஹதீஸ் முஸ்லிம் (412), அபூதாவூத் (148), இப்னுமாஜா (658) ஆகிய நூல்களிலும் பதிவாகியுள்ளது.

١٣٠ - حدثنا أبو سعيد مولى بني هاشم حدثنا الهيثم بن رافع الطاطري بصري حدثني أبو يحيى رجل من أهل مكة عن فروخ مولى عثمان أن عمر رضي الله عنه وهو يومئذ أمير المؤمنين خرج إلى المسجد فرأى طعاما منثورا فقال: ما هذا الطعام؟ فقالوا: طعام جلب إلينا قال: بارك الله فيه وفيمن جلبه قيل يا أمير المؤمنين فإنه قد احتكر قال ومن احتكره قالوا فروخ مولى عثمان وفلان مولى عمر فأرسل إليهما فدعاهما فقال ما حملكما على احتكار طعام المسلمين قالا يا أمير المؤمنين نشتري بأموالنا ونبيع فقال عمر سمعت رسول الله ﷺ يقول: من احتكر على المسلمين طعامهم ضربه الله بالإفلاس أو بجذام فقال فروخ عند ذلك يا أمير المؤمنين أعاهد الله وأعاهدك أن لا أعود في طعام أبدا وأما مولى عمر فقال إنما نشتري بأموالنا ونبيع.

130 உஸ்மான் (ரலி) அவர்களின் முன்னாள் அடிமையான ஃபர்ரூக் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

உமர் (ரலி) அவர்கள் (ஒரு நாள்) பள்ளிவாசலுக்குப் புறப்பட்டுச் சென்றபோது, வழியில் உணவுப் பொருட்கள் ஓரிடத்தில் பரப்பி வைக்கப்பட்டிருந்ததைக் கண்டார்கள். அப்போது அவர்கள் இறை நம்பிக்கையாளர்களின் தலைவராய் (கலீஃபாவாக) இருந்தார்கள். அவர்கள், "இது என்ன உணவுப் பொருள்?" என்று கேட்டார்கள் அதற்கு மக்கள், "இது நமக்காக வெளியூரிலிருந்து கொண்டு வரப்பட்ட உணவு தானியம்" என்று விடையளித்தனர். உமர் (ரலி) அவர்கள், "இந்த உணவுப் பொருளிலும் இதை வெளியூரிலிருந்து கொண்டு வந்தவர்களுக்கும் அல்லாஹ் அருள் வளம் (பரக்கத்) புரிவானாக" என்று பிரார்த்தித்தார்கள்.

அப்போது, "இறை நம்பிக்கையாளர்களின் தலைவரே! இந்த உணவுப் பொருள் பதுக்கல் செய்யப்பட்டு வைக்கப்பட்டிருந்தது" என்று அவர்களிடம் கூறப்பட்டது. "இதைப் பதுக்கி வைத்திருந்தவர் யார்?" என்று உமர் (ரலி) அவர்கள் கேட்டார்கள். அதற்கு, "உஸ்மான் (ரலி) அவர்களின் முன்னாள் அடிமை ஃபர்ரூகும், உமர் (ரலி) அவர்களின் (அதாவது தங்களின்) இன்ன அடிமையும்தான் (அவ்வாறு செய்தனர்)" என்று மக்கள் கூறினர் உடனே உமர் (ரலி) அவர்கள் எங்களிருவரிடமும் ஆளனுப்பி, எங்களை வரவழைத்தார்கள். பிறகு, எங்களிடம், "நீங்கள் இருவரும் முஸ்லிம்களுக்குரிய உணவுப் பொருள்களைப் பதுக்கி வைக்க என்ன காரணம்?" என்று கேட்டார்கள்

அதற்கு நாங்கள், "இறைநம்பிக்கையாளர்களின் தலைவரே! நாங்கள் எங்கள் காசுகளைச் செலவிட்டு வாங்குகிறோம். பிறகு அவற்றை விற்கிறோம். (இதில் பதுக்கல் செய்வதால் தவறென்ன?)" என்று கேட்டோம் அதற்கு உமர் (ரலி) அவர்கள், "'முஸ்லிம்களின் உணவுப் பொருட்களை அவர்களுக்கு கிட்டாமல் பதுக்கல் செய்பவரை திவாலாக்குவதன் மூலம், அல்லது தொழுநோயின் மூலம் அல்லாஹ் தண்டிப்பான்' என அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறியதை நான் கேட்டுள்ளேன்" என்று கூறினார்கள் நான் இதைக் கேட்டவுடன், "இறைநம்பிக்கையாளர்களின் தலைவரே! இனிமேல் நான் உணவுப் பொருட்களைப் பதுக்கமாட்டேன் என அல்லாஹ்விடம் உறுதியளிக்கிறேன்; தங்களிடமும் உறுதியளிக்கிறேன்" என்றார். உமர் (ரலி) அவர்களின் முன்னாள் அடிமையோ (மீண்டும்), "நாங்கள் எங்கள் காசுகளைச் செலவிட்டு வாங்குகிறோம் பிறகு அவற்றை விற்கிறோம் (இதில் பதுக்கல் செய்வதால் தவறென்ன?)" என்று கேட்டார்.

(இதன் அறிவிப்பாளர்களுள் ஒருவரான) அபூயஹ்யா அல்மக்கீ (ரஹ்) அவர்கள்

قَالَ أَبُو يَحْيَى: فَلَقَدْ رَأَيْتُ مَوْلَى عُمَرَ مَجْذُومًا.

கூறுகிறார்கள்:

(மேற்கண்டவாறு கேட்ட) உமர் (ரலி) அவர்களின் முன்னாள் அடிமையை(ப் பிற்காலத்தில்) நான் தொழுநோயாளியாகக் கண்டேன்.[63]

١٣١ حَدَّثَنَا أَبُو الْيَمَانِ أَخْبَرَنَا شُعَيْبٌ عَنِ الزُّهْرِيِّ حَدَّثَنَا سَالِمُ بْنُ عَبْدِ اللَّهِ أَنَّ عَبْدَ اللَّهِ بْنَ عُمَرَ قَالَ سَمِعْتُ عُمَرَ يَقُولُ: كَانَ النَّبِيُّ ﷺ يُعْطِينِي الْعَطَاءَ فَأَقُولُ أَعْطِهِ أَفْقَرَ إِلَيْهِ مِنِّي حَتَّى أَعْطَانِي مَرَّةً مَالاً فَقُلْتُ أَعْطِهِ أَفْقَرَ إِلَيْهِ مِنِّي فَقَالَ النَّبِيُّ ﷺ: خُذْهُ فَتَمَوَّلْهُ وَتَصَدَّقْ بِهِ فَمَا جَاءَكَ مِنْ هَذَا الْمَالِ وَأَنْتَ غَيْرُ مُشْرِفٍ وَلاَ سَائِلٍ فَخُذْهُ وَمَا لاَ فَلاَ تُتْبِعْهُ نَفْسَكَ.

حَدَّثَنَا هَارُونُ حَدَّثَنَا ابْنُ وَهْبٍ أَخْبَرَنِي يُونُسُ عَنِ ابْنِ شِهَابٍ عَنْ سَالِمٍ عَنْ أَبِيهِ قَالَ سَمِعْتُ عُمَرَ يَقُولُ كَانَ رَسُولُ اللَّهِ ﷺ يُعْطِينِي الْعَطَاءَ فَذَكَرَ مَعْنَاهُ.

131 உமர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

நபி (ஸல்) அவர்கள் எனக்கு (மக்கள் நல நிதியிலிருந்து) நன்கொடை வழங்குவார்கள். நான், "என்னைவிட அதிகத் தேவையுடையோருக்கு இதைக் கொடுங்கள்" என்று கூறிவந்தேன். இறுதியில், ஒரு முறை நபி (ஸல்) அவர்கள், (நன்கொடைப்) பொருள் ஒன்றை எனக்கு அளித்தபோது, நான், "என்னைவிட மிகத் தேவையுடையோருக்கு இதை வழங்குங்கள்" என்று சொன்னேன். நபி (ஸல்) அவர்கள், "(முதலில்) இதை வாங்கி, உங்களுக்கு உடைமையாக்கிக்கொள்ளுங்கள். பிறகு, (தேவைப்படவில்லையென்றால்,) தர்மம் செய்துவிடுங்கள். இந்தச் செல்வத்திலிருந்து எது நீங்கள் எதிர்பார்க்காமலும், நீங்களாகக் கேட்காமலும் உங்களுக்கு வந்ததோ, அதை (மறுக்காமல்) வாங்கிக்கொள்ளுங்கள். அப்படி எதுவும் வரவில்லையென்றால், நீங்களாக அதைத் தேடிச் செல்லாதீர்கள்" என்று சொன்னார்கள்.[64]

١٣٢ حَدَّثَنَا حَجَّاجٌ حَدَّثَنَا لَيْثٌ حَدَّثَنِي بُكَيْرٌ عَنْ عَبْدِ الْمَلِكِ بْنِ سَعِيدٍ الأَنْصَارِيِّ عَنْ جَابِرِ بْنِ عَبْدِ اللَّهِ عَنْ عُمَرَ بْنِ الْخَطَّابِ رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ: هَشَشْتُ يَوْمًا فَقَبَّلْتُ وَأَنَا صَائِمٌ فَأَتَيْتُ النَّبِيَّ ﷺ فَقُلْتُ صَنَعْتُ الْيَوْمَ أَمْرًا عَظِيمًا فَقَبَّلْتُ وَأَنَا صَائِمٌ فَقَالَ رَسُولُ اللَّهِ ﷺ أَرَأَيْتَ لَوْ تَمَضْمَضْتَ بِمَاءٍ

132 உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள் கூறியதாவது:

ஒருநாள் நான் உணர்ச்சி வசப்பட்டு, நோன்பு நோற்றிருந்த நிலையில் (என் மனைவியை) முத்தமிட்டேன். பிறகு நபி (ஸல்) அவர்களிடம் சென்று, "இன்று நான் பெரும் (பாவச்) செயல் ஒன்றைச் செய்துவிட்டேன். நான் நோன்பு நோற்ற நிலையில் முத்தமிட்டு விட்டேன்" என்று கூறினேன். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "நீங்கள் நோன்பு நோற்றிருக்கும் நிலையில் தண்ணீரால் வாய் கொப்பளித்தால், என்ன (அது குற்றமாகுமா?) கூறுங்கள்?" என்று கேட்டார்கள். நான், "அதனால் குற்றமில்லை" என்றேன்.

---

63. இந்த அறிவிப்பாளர்தொடர் பலவீனமானதாகும். இதன் அறிவிப்பாளர்தொடரில் மூன்றாவது அறிவிப்பாளராக இடம்பெறும் அபூயஹ்யா அல்மக்கீ என்பார் யாரென்றே அறியப்படாதவர் ஆவார். ஆனால் இமாம் இப்னுஹிப்பான் (ரஹ்) அவர்கள் கவனக் குறைவாகவே நம்பகமான அறிவிப்பாளர்களின் பட்டியலில் சேர்த்துள்ளார்கள். இந்த ஹதீஸை இமாம் இப்னுல் ஜவ்ஸீ (ரஹ்) அவர்கள் தமது 'இலலுல் முதனாஹியா' எனும் நூலில் இடம்பெறச் செய்து, அபூயஹ்யா என்பார் யாரென்றே அறியப்படாதவர் என்று கூறி, இந்த ஹதீஸ் பலவீனமானதாகும் என்று தெரிவித்துள்ளார்கள். இமாம் தஹபீ (ரஹ்) அவர்கள் தமது 'அல்மீஸான்' எனும் நூலில் இதை இடம்பெறச் செய்து, அபூயஹ்யா என்பார் ஹதீஸ்கலையில் அறியப்படாதவர். எனவே இந்தச் செய்தி நிராகரிக்கத் தக்கது என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

64. பார்க்க: முன்சென்ற ஹதீஸ் எண் - 96.

وَأَنْتَ صَائِمٌ قُلْتُ لَا بَأْسَ بِذَلِكَ فَقَالَ رَسُولُ اللَّهِ ﷺ فَفِيمَ.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "அப்படியானால், இதில் மட்டும் ஏன் (குற்றம் வரப்போகிறது)?" என்று கேட்டார்கள்.[65]

١٣٣ حَدَّثَنَا يُونُسُ بْنُ مُحَمَّدٍ حَدَّثَنَا دَاوُدُ يَعْنِي ابْنَ أَبِي الْفُرَاتِ عَنْ عَبْدِ اللَّهِ بْنِ بُرَيْدَةَ عَنْ أَبِي الْأَسْوَدِ أَنَّهُ قَالَ: أَتَيْتُ الْمَدِينَةَ فَوَافَيْتُهَا وَقَدْ وَقَعَ فِيهَا مَرَضٌ فَهُمْ يَمُوتُونَ مَوْتًا ذَرِيعًا فَجَلَسْتُ إِلَى عُمَرَ بْنِ الْخَطَّابِ رَضِيَ اللَّهُ عَنْهُ فَمَرَّتْ بِهِ جَنَازَةٌ فَأُثْنِيَ عَلَى صَاحِبِهَا خَيْرًا فَقَالَ عُمَرُ رَضِيَ اللَّهُ عَنْهُ: وَجَبَتْ ثُمَّ مُرَّ بِأُخْرَى فَأُثْنِيَ عَلَى صَاحِبِهَا خَيْرًا فَقَالَ عُمَرُ رَضِيَ اللَّهُ عَنْهُ وَجَبَتْ ثُمَّ مُرَّ بِالثَّالِثَةِ فَأُثْنِيَ عَلَيْهَا شَرًّا فَقَالَ عُمَرُ رَضِيَ اللَّهُ عَنْهُ وَجَبَتْ فَقَالَ أَبُو الْأَسْوَدِ: مَا وَجَبَتْ يَا أَمِيرَ الْمُؤْمِنِينَ قَالَ قُلْتُ كَمَا قَالَ رَسُولُ اللَّهِ ﷺ: أَيُّمَا مُسْلِمٍ شَهِدَ لَهُ أَرْبَعَةٌ بِخَيْرٍ أَدْخَلَهُ اللَّهُ الْجَنَّةَ قَالَ فَقُلْنَا وَثَلَاثَةٌ قَالَ فَقَالَ وَثَلَاثَةٌ قَالَ قُلْنَا وَاثْنَانِ قَالَ وَاثْنَانِ قَالَ ثُمَّ لَمْ نَسْأَلْهُ عَنِ الْوَاحِدِ.

133 அபுல் அஸ்வத் (அத்தீலீ - ரஹ்) அவர்கள் கூறியதாவது:

(ஒரு முறை) நான் மதீனாவுக்கு வந்தேன். அப்போது அங்கு ஒரு நோய் பரவி, (ஒரே நேரத்தில்) திடீரென ஏராளமான மக்கள் இறந்துபோயிருந்தனர். நான் (கலீஃபா) உமர் (ரலி) அவர்களை நோக்கிச் சென்று, அவர்களுக்கு அருகில் அமர்ந்தேன்.

அப்போது ஒருவரின் இறந்த உடல் (ஜனாஸா) அவர்களைக் கடந்து சென்றது. மக்கள் அவரின் நற்பண்புகளைக் கூறிப் புகழ்ந்ததும், உமர் (ரலி) அவர்கள், "உறுதியாகிவிட்டது" என்றார்கள். பிறகு மற்றொருவரின் இறந்த உடல் கடந்து சென்றது. அப்போதும் மக்கள் அவருடைய நற்பண்புகளைக் கூறிப் புகழ்ந்து பேசினர். அதற்கு உமர் (ரலி) அவர்கள், "உறுதியாகிவிட்டது" என்றார்கள். பிறகு மூன்றாமவரின் இறந்த உடல் கடந்து சென்றது. மக்கள் அவரின் தீய பண்புகளைக் கூறி, இகழ்ந்து பேசலாயினர். அப்போதும் உமர் (ரலி) அவர்கள், "உறுதியாகிவிட்டது" என்று கூறினார்கள். நான், "இறைநம்பிக்கையாளர்களின் தலைவரே! என்ன உறுதியாகிவிட்டது?" என்று கேட்டேன். அதற்கு உமர் (ரலி) அவர்கள், "நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறியதன் அடிப்படையிலேயே நான் அவ்வாறு கூறினேன்" என்றார்கள்.

நபி (ஸல்) அவர்கள், "முஸ்லிம் ஒருவரைப் பற்றி, 'அவர் நல்லவர்' என நான்கு பேர் சாட்சியம் அளித்தால், அவரை அல்லாஹ் சொர்க்கத்தில் நுழையச் செய்வான் (அவர் சொர்க்கம் செல்வது உறுதியாகிவிட்டது)" என்று கூறினார்கள். நாங்கள், "மூவர் சாட்சியமளித்தால்...?" என்று கேட்டோம். அதற்கு நபி (ஸல்) அவர்கள், "மூன்று பேர் சாட்சியம் அளித்தாலும்தான்" என்றார்கள். தொடர்ந்து, "இருவர் சாட்சியம் அளித்தால்...?" என நாங்கள் கேட்டதற்கு, "இரண்டு பேர் சாட்சியம் அளித்தாலும்தான்" என்றார்கள். பிறகு நாங்கள் ஒருவர் சாட்சியம் அளிப்பதைப் பற்றி அவர்களிடம் கேட்கவில்லை.[66]

---

65. நபி (ஸல்) அவர்கள் நோன்பு நோற்ற நிலையிலும் தம் மனைவியரைக் கட்டியணைத்தார்கள்; முத்தமிட்டார்கள் என்பது தொடர்பான ஆதாரப்பூர்வமான ஹதீஸ்கள் ஸஹீஹுல் புகாரியில் (1927-1929) இடம்பெற்றுள்ளன. எனினும் அவற்றுள் ஓர் அறிவிப்பில் அன்னை ஆயிஷா (ரலி) அவர்கள் 'நபி (ஸல்) அவர்கள் தம் உணர்ச்சியை மிகவும் கட்டுப்படுத்த கூடியவர்களாக இருந்தார்கள்' என்று அறிவித்திருப்பதால் உணர்வைக் கட்டுப்படுத்த முடியாதவர்கள் நோன்பு நோற்ற நிலையில் தம் மனைவியரைக் கட்டியணைப்பதையும் முத்தமிடுவதையும் தவிர்த்துக்கொள்ள வேண்டும். முஸ்னது அஹ்மதில் இடம்பெற்ற இந்த ஹதீஸ் (132), அபூதாவூத் (2037), தாரமீ (1522), இப்னு ஹிப்பான் (3613), இப்னு குஸைமா (1877), நஸாயீ (1777) உள்ளிட்ட நூல்களிலும் இடம்பெற்றுள்ளது.

66. புகாரீ (1368, 2643), திர்மிதீ (979), நஸாயீ (1908) உள்ளிட்ட நூல்களிலும் இதே கருத்தமைந்த ஹதீஸ் இடம்பெற்றுள்ளது. இந்த ஹதீஸிற்கு விளக்கம் மற்றொரு ஹதீஸில் இடம்பெற்றுள்ளது. அந்த ஹதீஸ் வருமாறு:

134 உமர் (ரலி) அவர்கள் கூறியதாவது:

நாங்கள் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுடன் ரமளான் மாதத்தில் (பத்ருப்) போரில் கலந்துகொண்டோம். மக்கா வெற்றிப் போரிலும் ரமளான் மாதத்தில்தான் கலந்து கொண்டோம். அவ்விரு தருணங்களிலும் நாங்கள் (பயணிகளாய் இருந்ததால்) நோன்பை விட்டுவிட்டோம்.[67]

١٣٤ حدثنا أبو سعيد حدثنا ابن لهيعة حدثنا بكير عن سعيد بن المسيب عن عمر قال: غزونا مع رسول الله ﷺ في رمضان والفتح في رمضان فأفطرنا فيهما.

135 ஹன்பாஸ் பின் ஹன்ழலா (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

என் தந்தை ஹன்ழலா பின் நுஐம் அவர்கள் ஒரு தூதுக் குழுவில் (கலீஃபா) உமர் (ரலி) அவர்களிடம் சென்றிருந்தார்கள். (பொதுவாக) உமர் (ரலி) அவர்கள் தம்மைக் கடந்து தூதுக் குழுவைச் சேர்ந்த யாரேனும் சென்றால், அவருடைய குலத்தைப் பற்றி விசாரிப்பார்கள். இந்நிலையில் அவர்களைக் கடந்து என் தந்தையார் சென்றபோது, "நீங்கள் யார்?" என்று விசாரித்தார்கள். என் தந்தை, "(நான்) 'அனஸா' குலத்தைச் சேர்ந்தவன்" என்றார்கள். அப்போது உமர் (ரலி) அவர்கள், "இந்த இடத்தில் வசிக்கும் ஒரு கோத்திரத்தார் அக்கிரமத்திற்கு உள்ளாவார்கள்; (ஆனால்) உதவி செய்யப்படுவார்கள் என்று நபி (ஸல்) அவர்கள் கூறியதை நான் கேட்டுள்ளேன்" என்றார்கள்.[68]

١٣٥ حدثنا أبو سعيد مولى بني هاشم حدثنا المثنى بن عوف العنزي بصري قال: أنبأنا الغضبان بن حنظلة أن أباه حنظلة بن نعيم وفد إلى عمر فكان عمر إذا مر به إنسان من الوفد سأله ممن هو حتى مر به أبي فسأله ممن أنت فقال من عنزة فقال سمعت رسول الله ﷺ يقول حي من هاهنا مبغي عليهم منصورون.

---

*[illegible]

67. [illegible] - (2057-2064); [illegible] (2054) [illegible]

68. [illegible]

136 உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள் கூறியதாவது:

நாங்கள் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுடன் ரமளான் மாதத்தில் பத்ரு, மக்கா வெற்றி ஆகிய இரு அறப்போர்களில் கலந்துகொண்டோம். அவ்விரு தருணங்களிலும் நாங்கள் (பயணிகளாய் இருந்ததால்) நோன்பை விட்டுவிட்டோம்.[69]

١٣٦ حدثنا حسن بن موسى حدثنا ابن لهيعة قال حدثنا يزيد بن أبي حبيب عن معمر أنه سأل سعيد بن المسيب عن الصيام في السفر فحدثه عن عمر بن الخطاب رضي الله عنه أنه قال: غزونا مع رسول الله ﷺ غزوتين في شهر رمضان يوم بدر ويوم الفتح فأفطرنا فيهما.

137 அல்லாஹ்வின் தூதர் (ஸல்) கூறினார்கள்:

என் சமுதாயத்தார் விஷயத்தில் நான் மிகவும் அஞ்சுவது, நாவன்மை மிக்க ஒவ்வொரு நயவஞ்சகர்களையும்தான்.

இதை உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.[70]

١٣٧ حدثنا أبو سعيد حدثنا ديلم بن غزوان عبدي حدثنا ميمون الكردي حدثني أبو عثمان النهدي عن عمر بن الخطاب رضي الله عنه أن رسول الله ﷺ قال: إن أخوف ما أخاف على أمتي كل منافق عليم اللسان.

138 சாலிஹ் பின் முஹம்மது பின் ஸாயிதா கூறியதாவது:

சாலிம் பின் அப்தில்லாஹ் பின் உமர் (ரஹ்) அவர்கள், மஸ்லமா பின் அப்தில் மலிக் அவர்களுடன் ரோம் ஆளுகைப் பதியில் (ஒரு போரில்) இருந்தார்கள். அப்போது ஒருவனின் உடைமைகளுக்கிடையில் (பங்கீடு செய்யப்படுவதற்குமுன் போர்ச் செல்வத்திலிருந்து) கையாடல் செய்யப்பட்ட பொருள் ஒன்று சிக்கியது. அப்போது (மஸ்லமா) அவர்கள் அது (பற்றி என்ன நடவடிக்கை எடுப்பது என்பது) குறித்து, சாலிம் பின் அப்தில்லாஹ் (ரஹ்) அவர்களிடம் கேட்டார்கள். அதற்கு சாலிம் (ரஹ்) அவர்கள் கூறினார்கள்:

என் தந்தை அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்:

"ஒருவருடைய உடைமைகளுக்கிடையில் (பங்கீடு செய்வதற்கு முன் போர்ச் செல்வத்திலிருந்து) கையாடல் செய்யப்பட்ட பொருள் ஒன்றை நீங்கள் கண்டால், அவருடைய உடைமைகளை எரித்துவிடுங்கள்; அவரை அடியுங்கள்" என்று அல்லாஹ்வின் தூதர்

١٣٨ حدثنا أبو سعيد حدثنا عبد العزيز بن محمد حدثنا صالح بن محمد بن زائدة عن سالم بن عبد الله أنه كان مع مسلمة بن عبد الملك في أرض الروم فوجد في متاع رجل غلول فسأل سالم بن عبد الله فقال حدثني عبد الله عن عمر رضي الله عنه أن رسول الله ﷺ قال: من وجدتم في متاعه غلولا فأحرقوه قال وأحسبه قال واضربوه قال

[illegible] (1447) [illegible] (33)

69. [illegible] - 134 [illegible]

70. [illegible] (1729, 1731) [illegible] (1731) [illegible]

(ஸல்) அவர்கள் கூறினார்கள் என (என் தந்தை) உமர் (ரலி) கூறினார்கள்."

ஆகவே, (போர்ச் செல்வத்தைக் கையாடல் செய்த) அந்த மனிதரின் உடைமைகளை மக்கள் கடைத் தெருவில் கொண்டுவந்து வைத்தார். அதில் குர்ஆன் பிரதி ஒன்றைக் கண்டார். அதைக் குறித்து சாலிம் அவர்களிடம் மக்கள் கேட்டபோது, "அதை விற்று, அதில் கிடைக்கும் தொகையை தர்மம் செய்துவிடுங்கள்" என்று சாலிம் (ரஹ்) அவர்கள் விடையளித்தார்கள்.[71]

فأخرج متاعه في السوق قال فوجد فيه مصحفا فسأل سالما فقال بعه وتصدق بثمنه.

139 உமர் (ரலி) அவர்கள் கூறியதாவது:

நபி (ஸல்) அவர்கள் கருமித்தனம், கோழைத்தனம், மனக்குழப்பம், சவக் குழியின் (கப்று) வேதனை, நீண்ட ஆயுளின் தீங்கு (தள்ளாமை) ஆகிய ஐந்து தன்மைகளிலிருந்து (அல்லாஹ்விடம்) பாதுகாப்புக் கோருவார்கள்.[72]

١٣٩ حدثنا أبو سعيد وحسين بن محمد قالا حدثنا إسرائيل عن أبي إسحاق عن عمرو بن ميمون عن عمر رضي الله عنه أن النبي ﷺ كان يتعوذ من خمس من البخل والجبن وفتنة الصدر وعذاب القبر وسوء العمر.

140 உமர் (ரலி) அவர்கள் கூறியதாக ஃபளாலா பின் உபைத் (ரலி) அவர்கள் கூறியதாவது:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "உயிர்த் தியாகிகள் மூவர் ஆவர்" எனக் கூறினார்கள். அவர்கள்:

1. உறுதியான நம்பிக்கையுடைய இறைநம்பிக்கையாளர். அவர் (அறப்போரில்) எதிரியைச் சந்தித்துத் தாம் கொல்லப்படும்வரை அல்லாஹ்வை நம்பினார். (இவருக்குக் கிடைக்கும் உயர் வெகுமதிகளை முன்னிட்டு) மறுமைநாளில் மக்கள் தம் தலைகளை உயர்த்தி (இவ்வாறு பேராவலுடன்) பார்ப்பார்கள். 'இவ்வாறு' என்று சைகை செய்து கூறியபோது, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுடைய தலையிலிருந்த தொப்பி அல்லது உமர் (ரலி) அவர்களுடைய தலையிலிருந்த தொப்பி (கழன்று) கீழே விழுந்துவிட்டது.[73]

١٤٠ حدثنا أبو سعيد حدثنا ابن لهيعة قال سمعت عطاء بن دينار عن أبي يزيد الخولاني أنه سمع فضالة بن عبيد يقول سمعت عمر بن الخطاب رضي الله عنه أنه سمع رسول الله ﷺ يقول: الشهداء ثلاثة رجل مؤمن جيد الإيمان لقي العدو فصدق الله حتى قتل فذلك الذي يرفع إليه الناس أعناقهم يوم القيامة ورفع رسول الله ﷺ رأسه حتى وقعت قلنسوته أو قلنسوة عمر، ورجل مؤمن

71. [illegible]

72. [illegible]

73. [illegible]

جَيِّدُ الإِيمَانِ لَقِيَ الْعَدُوَّ فَكَأَنَّمَا يُضْرَبُ جِلْدُهُ بِشَوْكِ الطَّلْحِ أَتَاهُ سَهْمٌ غَرْبٌ فَقَتَلَهُ هُوَ فِي الدَّرَجَةِ الثَّانِيَةِ، وَرَجُلٌ مُؤْمِنٌ جَيِّدُ الإِيمَانِ خَلَطَ عَمَلاً صَالِحًا وَآخَرَ سَيِّئًا لَقِيَ الْعَدُوَّ فَصَدَقَ اللَّهَ حَتَّى قُتِلَ فَذَلِكَ فِي الدَّرَجَةِ الثَّالِثَةِ.

١٤١ حدثنا أبو سعيد حدثنا عبد الله بن لهيعة حدثنا عمرو بن شعيب عن أبيه عن جده عن عمر رضي الله عنه أن رسول الله ﷺ قال: لا يُقَادُ وَالِدٌ مِنْ وَلَدٍ.

١٤٢ وقال رسول الله ﷺ: يَرِثُ الْمَالَ مَنْ يَرِثُ الْوَلاَءَ.

2. உயர்வான நற்குணமுள்ள இறைநம்பிக்கையாளர் அவர் (அறப்போரில்) எதிரியைச் சந்தித்தபோது, (அவரது கோழைத்தனத்தால்)[74] அவரது தோலில் வேலமர முட்களால் குத்திக் காயப்படுத்தப்பட்டவரைப் போன்று ஆனவர் பிறகு எங்கிருந்தோ மர்மமாக வந்த அம்பொன்று அவரைக் கொன்றுவிட்டது இவர் (உயிர்த் தியாகிகளின் பட்டியலில்) இரண்டாவது இடத்தில் உள்ளவர் ஆவார்.

3. உயர்வான நற்குணமுள்ள இறைநம்பிக்கையாளர் அவர் நற்செயலைத் தீய செயலுடன் கலந்து செய்தவர். அவர் (அறப்போரில்) எதிரியைச் சந்தித்துத் தாம் கொல்லப்படும்வரை அல்லாஹ்வை நம்பினார் இவர் (உயிர்த் தியாகிகளின் பட்டியலில்) மூன்றாவது இடத்தில் உள்ளவர் ஆவார்.[75]

141 அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

பிள்ளைக்காக (அவனைக் கொன்ற) தந்தை பழி வாங்கப்படமாட்டார்.

இதை உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.[76]

142 அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

அடிமைக்கு வாரிசாகும் உரிமையை அடைந்துகொண்டவரே, அவன் விட்டுச் சென்ற சொத்துக்கும் வாரிசாவார்.[77]

இதை உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்

விட்டது என ஃபளாலா பின் உபைத் (ரலி) அவர்கள் கூறினார்களா? அல்லது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுடைய தொப்பி கீழே விழுந்துவிட்டது என அவர்கள் கூறினார்களா? என்று எனக்குத் தெரியவில்லை' என (இந்த ஹதீஸின் மூன்றாவது அறிவிப்பாளராக இடம்பெற்றுள்ள) அபூயஸீத் அல்கவ்லானீ கூறினார் (காண்க: ஜாமிஉத் திர்மிதீ, ஹதீஸ் எண்-1568).

74. 'கோழைத்தனம்' என்ற சொல் முஸ்னதின் மூலத்தில் இல்லை. ஆனால், 'திர்மிதீ'யின் அறிவிப்பில் இருக்கும் சொல்லை அடைப்புக் குறிக்குள் எடுத்தாண்டுள்ளோம்.

75. இது பலவீனமான அறிவிப்பாளர்தொடரில் அமைந்த ஹதீஸ் ஆகும். இதன் அறிவிப்பாளர்தொடரில் மூன்றாவது அறிவிப்பாளராக அபூயஸீத் அல்கவ்லானீ என்பவர் இடம்பெறுகிறார். இவர் ஹதீஸ் கலையில் யாரென்றே அறியப்படாதவர் என இமாம் தஹபீ (ரஹ்) குறிப்பிடுகின்றார்கள். ஐந்தாவது அறிவிப்பாளராக இப்னு லஹீஆவும் இடம்பெற்றுள்ளார். இவர் இறுதிக் காலத்தில் நினைவாற்றல் இழந்தவர் ஆவார். இது தொடர்பாக திர்மிதீ 1568இல் இடம்பெற்றுள்ள ஹதீஸும் பலவீனமானதுதான்.

76. இது ஹஸன் தரத்திலமைந்த ஹதீஸ் ஆகும். பார்க்க: முன்சென்ற ஹதீஸ் எண் 94 மற்றும் அதன் அடிக்குறிப்பு.

77. ஒருவர் தம் அடிமையை விடுதலை செய்த பின் அந்த அடிமை சுதந்திரமானவனாக மாறிவிடுகின்றான். அவனுக்குப் பெற்றோர் மற்றும் உறவினர் யாருமில்லாத நிலையில், அவன் விடுதலை பெற்ற பின்பு சம்பாதித்துச் சேர்த்த சொத்துகளுக்கு அவனை விடுதலை செய்த உரிமையாளரோ, விடுதலை செய்தவரின் ஆண் வாரிசுகளோதாம் வாரிசுரிமை பெறுவார்கள். இந்த வாரிசுரிமையைப் பிறருக்கு மாற்றிக் கொடுக்க உலகத்தில் இடமில்லை. பிறப்பால் ஏற்படும் சொந்தத்தை மாற்றிக்கொள்ள முடியாதது போன்றே, விடுதலை செய்ததால் ஏற்படும் வாரிசுரிமையையும் மாற்ற இயலாது. இந்த வாரிசுரிமையை அரபி மொழியில் 'அல்வலா' என்று கூறுவர். இச்சொல்லுக்கு 'நெருக்கம்' என்று பொருள். எந்த உரிமையும் அந்த அடிமையை விடுதலை செய்து அவனை முழு மனிதனாக மாற்றியவர் அந்த உரிமையாளரே. எனவே, அவரே அவனுக்கு வாரிசாகும் உரிமையும் தகுதி பெற்றவர். பார்க்க: புகாரீ (2156, 2560) முஸ்லிம் (3009).

١٤٣ حدثنا حسن حدثنا ابن لهيعة حدثنا عمرو بن شعيب عن أبيه عن عبد الله بن عمرو رضي الله عنه قال قال عمر بن الخطاب رضي الله عنه سمعت رسول الله ﷺ يقول: لا يقاد لولد من والده.

143 அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

பிள்ளைக்காக (அவனைக் கொன்ற) தந்தை பழி வாங்கப்படமாட்டார்.

இதை உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.[78]

١٤٤ حدثنا حسن حدثنا ابن لهيعة حدثنا الضحاك بن شرحبيل عن زيد بن أسلم عن أبيه عن عمر بن الخطاب رضي الله عنه أنه قال: رأيت رسول الله ﷺ توضأ مرة مرة.

144 உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள் கூறியதாவது:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் 'உளூ'ச் செய்தபோது, (ஒவ்வோர் உறுப்பையும்) ஒவ்வொரு முறை கழுவியதை நான் பார்த்தேன்.[79]

١٤٥ حدثنا يحيى بن إسحاق أنبأنا ابن لهيعة عن عطاء بن دينار عن أبي يزيد الخولاني قال سمعت فضالة بن عبيد يقول سمعت عمر بن الخطاب رضي الله عنه يقول سمعت رسول الله ﷺ يقول: الشهداء أربعة: رجل مؤمن جيد الإيمان لقي العدو فصدق الله فقتل فذلك الذي ينظر الناس إليه هكذا ورفع رأسه حتى سقطت قلنسوة رسول الله ﷺ أو قلنسوة عمر. والثاني رجل مؤمن لقي العدو فكأنما يضرب ظهره بشوك الطلح جاءه سهم غرب فقتله فذاك في الدرجة الثانية. والثالث رجل مؤمن خلط عملا صالحا وآخر سيئا لقي العدو فصدق الله عز وجل حتى

145 உமர் (ரலி) அவர்கள் கூறியதாக ஃபளாலா பின் உபைத் (ரலி) அவர்கள் கூறியதாவது:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உயிர்த் தியாகிகள் நால்வர் ஆவர்.

1. உயர்ந்த நற்குணமுள்ள இறைநம்பிக்கையாளர். அவர் (அறப்போரில்) எதிரியைச் சந்தித்துத் தாம் கொல்லப்படும்வரை, அல்லாஹ்வை நம்பினார். (இவருக்குக் கிடைக்கும் உயர் வெகுமதிகளை முன்னிட்டு,) மறுமை நாளில் மக்கள் தம் தலைகளை உயர்த்தி, இவ்வாறு (பேராவலுடன்) பார்ப்பார்கள். 'இவ்வாறு' என்று சைகை செய்து கூறியபோது, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுடைய தலையிலிருந்த தொப்பி, அல்லது உமர் (ரலி) அவர்களுடைய தலையிலிருந்த தொப்பி (கழன்று) கீழே விழுந்துவிட்டது.

2 (உயர்ந்த நற்குணமுள்ள) இறைநம்பிக்கையாளர் அவர் (அறப்போரில்) எதிரியைச் சந்தித்தபோது, (அவரது கோழைத்தனத்தால்) அவரது முதுகு வேலமர முட்களால் குத்தப்பட்டதைப் போன்று ஆனது. பிறகு எங்கிருந்தோ மர்மமாக வந்த அம்பொன்று அவரைத் தைத்துக் கொன்றுவிட்டது. இவர் (உயிர்த் தியாகிகளின் பட்டியலில்) இரண்டாவது இடத்தில் உள்ளவர் ஆவார்.

3. (உயர்ந்த நற்குணமுள்ள) இறைநம்பிக்கையாளர் அவர் நற்செயலைத் தீய செயலுடன்

---

78. பார்க்க: முன்சென்ற ஹதீஸ் எண் - 141 மற்றும் அடிக்குறிப்பு. இந்த ஹதீஸிலும் [illegible] இப்னு லஹீஆ இடம்பெறுகிறார்.

79. இந்த ஹதீஸின் அறிவிப்பாளர்தொடரில் இப்னு லஹீஆ என்பவர் இடம்பெற்றுள்ளார். இவர் பலவீனமானவர். இதைக் கருத்தமைந்த ஹதீஸ் வேறு பலமான அறிவிப்பாளர்தொடரோடு புகாரியில் இப்னு அப்பாஸ் (ரலி) அறிவிப்பதாக இடம்பெற்றுள்ளது. 'நபி (ஸல்) அவர்கள் 'உளூ'ச் செய்தபோது உளூவின் உறுப்புகளை ஒவ்வொரு முறை கழுவினார்கள்.' புகாரி ஹதீஸ் எண் - 157. எனவே இது [illegible] ஆதாரப்பூர்வமான ஹதீஸ் ஆகும்.

லந்து செய்தவர். அவர் (அறப்போரில்) எதிரியைச் சந்தித்துத் தாம் கொல்லப்படும்வரை அல்லாஹ்வை நம்பினார். இவர் மூன்றாவது இடத்தில் உள்ளவர் ஆவார்.

4 தமக்கு எதிராக (அதிகமானப் பாவங்களால்) வரம்புமீறிய இறைநம்பிக்கையுள்ள மனிதர் அவர் (அறப்போரில்) எதிரியைச் சந்தித்துத் தாம் கொல்லப்படும்வரை, அல்லாஹ்வை நம்பினார் இவர் நான்காவது இடத்தில் உள்ளவர் ஆவார்[80]

قُتِلَ قَالَ فَذَاكَ فِي الدَّرَجَةِ الثَّالِثَةِ. وَالرَّابِعُ رَجُلٌ مُؤْمِنٌ أَسْرَفَ عَلَى نَفْسِهِ إِسْرَافًا كَثِيرًا لَقِيَ الْعَدُوَّ فَصَدَقَ اللَّهَ حَتَّى قُتِلَ فَذَاكَ فِي الدَّرَجَةِ الرَّابِعَةِ.

146 உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள் கூறியதாவது:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் தபூக் போரின்போது, அங்கத் தூய்மை (உளூ) செய்தார்கள் அப்போது, (ஒவ்வோர் உறுப்பையும்) ஒவ்வொரு முறை கழுவினார்கள்.[81]

١٤٦ حَدَّثَنَا يَحْيَى بْنُ غَيْلَانَ حَدَّثَنَا رِشْدِينُ بْنُ سَعْدٍ حَدَّثَنِي أَبُو عَبْدِ اللَّهِ الْغَافِقِيُّ عَنْ زَيْدِ بْنِ أَسْلَمَ عَنْ أَبِيهِ عَنْ عُمَرَ بْنِ الْخَطَّابِ رَضِيَ اللَّهُ عَنْهُ عَنْ رَسُولِ اللَّهِ ﷺ أَنَّهُ تَوَضَّأَ عَامَ تَبُوكَ وَاحِدَةً وَاحِدَةً.

١٤٧ حَدَّثَنَا حَسَنٌ حَدَّثَنَا ابْنُ لَهِيعَةَ حَدَّثَنَا أَبُو الزُّبَيْرِ عَنْ جَابِرٍ أَنَّ عُمَرَ بْنَ الْخَطَّابِ رَضِيَ اللَّهُ عَنْهُ أَخْبَرَهُ أَنَّهُ سَمِعَ رَسُولَ اللَّهِ ﷺ يَقُولُ: سَيَخْرُجُ أَهْلُ مَكَّةَ ثُمَّ لَا يَعْبُرُ بِهَا أَوْ لَا يَعْرِفُهَا إِلَّا قَلِيلٌ ثُمَّ تَمْتَلِئُ وَتُبْنَى ثُمَّ يَخْرُجُونَ مِنْهَا فَلَا يَعُودُونَ فِيهَا أَبَدًا.

147 அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

விரைவில் மக்காவாசிகள் (மக்காவை விட்டு) வெளியேறுவார்கள் பிறகு மக்களுள் சிலர் மட்டுமே அதைக் கடந்து செல்வார்கள்; அல்லது, அதை அறிந்துகொள்வார்கள் பின்னர், அது (மக்களால்) நிரம்பும். கட்டடங்களும் எழுப்பப்படும் பிறகு (மற்றொரு முறையும்) அங்கிருந்து மக்கள் வெளியேறுவார்கள். அதன் பிறகு ஒருபோதும் அதை நோக்கித் திரும்பி வரமாட்டார்கள்[82]

இதை உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

---

80. இதன் அறிவிப்பாளர்தொடரிலும் விமர்சிக்கப்பட்ட அறிவிப்பாளர்களான [illegible] இப்னு லஹீஆ ஆகியோர் இடம்பெற்றுள்ளனர் எனவே முன்சென்ற 140ஆவது ஹதீஸைப் போன்று இதுவும் பலவீனமான அறிவிப்பாளர்தொடரில் அமைந்ததாகும்.

81. இதன் அறிவிப்பாளர்தொடரில் ஐந்தாவது அறிவிப்பாளராக இடம்பெற்றுள்ள ரிஷ்தீன் பின் சஅத் பற்றி [illegible] பலவீனமானவர் [illegible] என்றும் குறிப்பிடுகின்றனர். எனவே இது பலவீனமான ஹதீஸ் ஆகும் [illegible] முன்சென்ற ஹதீஸ் எண் - 141ன் அடிக்குறிப்பு [illegible] ஆதாரப்பூர்வமான ஹதீஸ் ஆகும்.

82. மக்கா மற்றும் மக்காவின் தற்போதைய நிலையையும் மறுமை நாள் நெருங்கும்போது ஏற்படும் நிலையையும் நபி (ஸல்) அவர்கள் இந்த ஹதீஸில் தெளிவுபடுத்துகிறார்கள் [illegible] 10/147 [illegible] இப்னு லஹீஆ [illegible] 1208 ஆவது ஹதீஸையும் [illegible]

148 உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள் கூறியதாவது:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், 'லுஹ்ர்' தொழுகைக்காக 'அங்கத் தூய்மை' (உளூ) செய்துகொண்டிருந்த ஒருவரைக் கண்டார்கள் அவர் தமது பாதத்தின் மேற்பகுதியில் நகம் அளவு இடத்தை (கழுவாமல்) விட்டுவிட்டார் (பின்னர் தொழுகைக்காக அவர் நின்ற போது) அவரைப் பார்த்துக்கொண்டிருந்த அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "திரும்பச் சென்று, சரியாக 'உளூ'ச் செய்வீராக!" என்று கூறினார்கள். அவ்வாறே அவர் திரும்பிச் சென்று (மீண்டும் 'உளூ'ச் செய்துவந்து) பின்னர் தொழுதார்.[83]

١٤٨ حدثنا الحسن حدثنا ابن لهيعة حدثنا أبو
الزبير عن جابر أن عمر بن الخطاب رضي الله
عنه أخبره أن رسول الله ﷺ رأى رجلا توضأ
لصلاة الظهر فترك موضع ظفر على ظهر قدمه
فأبصره رسول الله ﷺ فقال: ارجع فأحسن
وضوءك فرجع فتوضأ ثم صلى.

149 அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

கிறிஸ்தவர்கள் மர்யமின் மைந்தர் ஈசாவை வரம்பு மீறிப் புகழ்ந்ததைப் போன்று என்னையும் நீங்கள் வரம்பு மீறிப் புகழ்ந்துவிடாதீர்கள்! ஏனெனில், நான் அல்லாஹ்வின் அடிமையும் அவனுடைய தூதருமே ஆவேன்.[84]

இதை உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

١٤٩ حدثنا هشيم قال زعم الزهري عن عبيد
الله بن عبد الله بن عتبة بن مسعود عن ابن
عباس عن عمر رضي الله عنه أن رسول الله ﷺ
قال: لا تطروني كما أطرت النصارى عيسى
ابن مريم عليه السلام فإنما أنا عبد الله ورسوله.

150 இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறியதாவது:

"(நபியே!) உங்கள் தொழுகையில் நீங்கள் குரலை மிகவும் உயர்த்தவும் வேண்டாம்; மிகவும் தாழ்த்தவும் வேண்டாம்" எனும் இந்த (17:110ஆவது) இறைவசனம் (பின்வரும் சூழ்நிலையில்) அருளப்பெற்றது:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் (இஸ்லாத்தின் ஆரம்பக் காலத்தில்) மக்காவில் மறைவாகத் தொழுதுகொண்டு) இருந்தார்கள். (அவ்வாறு தோழர்களுடன் சேர்ந்து தொழுதபோது) குரலை உயர்த்தி, குர்ஆனை ஓதுவார்கள் அதை இணைவைப்பாளர்கள் கேட்டுவிட்டால், குர்ஆனையும் அதை அருளிய (இறை)வனையும் அதைக் கொண்டு வந்த (நபிய)வர்களையும் ஏசுவார்கள் ஆகவே, உயர்ந்தோனாகிய அல்லாஹ், "நீங்கள்

١٥٠ حدثنا هشيم أنبأنا أبو بشر عن سعيد بن
جبير عن ابن عباس قال: نزلت هذه الآية ورسول
الله ﷺ متوار بمكة ﴿ولا تجهر بصلاتك ولا
تخافت بها﴾ قال: كان إذا صلى بأصحابه رفع
صوته بالقرآن قال فلما سمع ذلك المشركون
سبوا القرآن ومن أنزله ومن جاء به فقال الله عز
وجل لنبيه ﷺ: ﴿ولا تجهر بصلاتك﴾ أي
بقراءتك فيسمع المشركون فيسبوا القرآن ﴿ولا

[illegible] 237 [illegible]

83. [illegible] - 122 [illegible] (417) [illegible] (148) [illegible] (666) [illegible] (533) [illegible]

84. [illegible] - 150, 313, 368 [illegible]

உங்கள் தொழுகையில் (இணை வைப்பாளர்களின் காதில் விழும் அளவுக்குக்) குரலை உயர்த்தாதீர்கள். (அதற்காக, உடன் தொழுகின்ற) உங்கள் தோழர்களுக்கே கேட்காதவாறு (ஓசையின்றி) குரலைத் தாழ்த்தியும் விடாதீர்கள். அவர்களுக்குக் கேட்டால்தான், உங்களிடமிருந்து அவர்கள் குர்ஆனைக் கற்பார்கள். ஆகவே, "இவ்விரண்டிற்கும் இடையே மிதமான போக்கைக் கையாளுங்கள்" எனக் கட்டளையிட்டான்.[86]

تُخَافِتْ بِهَا﴾ عَنْ أَصْحَابِكَ فَلَا تُسْمِعُهُمُ الْقُرْآنَ حَتَّى يَأْخُذُوهُ عَنْكَ ﴿وَابْتَغِ بَيْنَ ذَلِكَ سَبِيلًا﴾.

151 இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறியதாவது:

(கலீஃபா) உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள் (ஒரு நாள்) எங்களிடையே உரை நிகழ்த்தினார்கள். அப்போது அவர்கள் அல்லாஹ்வைப் போற்றிப் புகழ்ந்தபின், 'ரஜ்மு' (மணமுடித்தவர்கள் விபசாரம் செய்தால், அவர்களைச் சாகும்வரை கல்லால் அடித்துக் கொல்லும் சட்டம்) பற்றிப் பின்வருமாறு கூறினார்கள்:

١٥١ حَدَّثَنَا هُشَيْمٌ أَنْبَأَنَا عَلِيُّ بْنُ زَيْدٍ عَنْ يُوسُفَ بْنِ مِهْرَانَ عَنِ ابْنِ عَبَّاسٍ قَالَ: خَطَبَ عُمَرُ بْنُ الْخَطَّابِ رَضِيَ اللَّهُ عَنْهُ وَقَالَ هُشَيْمٌ مَرَّةً خَطَبَنَا فَحَمِدَ اللَّهَ تَعَالَى وَأَثْنَى عَلَيْهِ فَذَكَرَ الرَّجْمَ فَقَالَ لَا تُخْدَعُنَّ عَنْهُ فَإِنَّهُ حَدٌّ مِنْ حُدُودِ اللَّهِ تَعَالَى أَلَا إِنَّ رَسُولَ اللَّهِ ﷺ قَدْ رَجَمَ وَرَجَمْنَا بَعْدَهُ وَلَوْلَا أَنْ يَقُولَ قَائِلُونَ زَادَ عُمَرُ فِي كِتَابِ اللَّهِ مَا لَيْسَ مِنْهُ لَكَتَبْتُهُ فِي نَاحِيَةٍ مِنَ الْمُصْحَفِ شَهِدَ عُمَرُ بْنُ الْخَطَّابِ رَضِيَ اللَّهُ عَنْهُ وَقَالَ هُشَيْمٌ مَرَّةً وَعَبْدُ الرَّحْمَنِ بْنُ عَوْفٍ وَفُلَانٌ وَفُلَانٌ أَنَّ رَسُولَ اللَّهِ ﷺ قَدْ رَجَمَ وَرَجَمْنَا مِنْ بَعْدِهِ أَلَا وَإِنَّهُ سَيَكُونُ مِنْ بَعْدِكُمْ قَوْمٌ يُكَذِّبُونَ بِالرَّجْمِ وَبِالدَّجَّالِ وَبِالشَّفَاعَةِ وَبِعَذَابِ الْقَبْرِ وَبِقَوْمٍ يُخْرَجُونَ مِنَ

இத்தண்டனையைப் பற்றி நீங்கள் யாரும் (மாறுபட்ட கருத்துக் கூறி) ஏமாற்றத்துக்குள்ளாகிவிட வேண்டாம். ஏனெனில், இது அல்லாஹ்வின் தண்டனைகளுள் ஒன்றாகும். அறிந்துகொள்ளுங்கள்! அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் இந்தக் கல்லெறித் தண்டனையை ('ரஜ்மு') நிறைவேற்றினார்கள். அவர்களுக்குப்பின் நாங்களும் அத்தண்டனையை நிறைவேற்றுகின்றோம். 'அல்லாஹ்வின் வேதத்தில் இல்லாத ஒன்றை உமர் கூடுதலாக்கிவிட்டார்' என யாரேனும் கூறிவிடுவார்கள் என்ற அச்சம் மட்டும் எனக்கில்லையாயின், குர்ஆனின் ஓர் ஓரத்தில் கல்லெறித் தண்டனை ('ரஜ்மு') பற்றி எழுதி இருப்பேன்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கல்லெறித் தண்டனையை நிறைவேற்றினார்கள். அவர்களுக்குப்பின் நாங்களும் அத்தண்டனையை நிறைவேற்றினோம். இதற்கு உமர் பின் அல்கத்தாபும் அப்துர்ரஹ்மான் அவ்ஃபும் இன்ன மனிதரும் இன்ன மனிதரும் சாட்சியமளித்தனர் (என்றும் நான் எழுதி இருப்பேன்).

அறிந்துகொள்ளுங்கள்! உங்களுக்குப்பின், சிலர் தோன்றுவார்கள். அவர்கள் கல்லெறி தண்டனையையும் (யுக முடிவு நாளுக்கு நெருக்கத்தில் மஸீஹ் எனும் பெயரில் புறப்படவிருக்கும் பெருங்குழப்பவாதியான) தஜ்ஜாலையும் (மறுமையில் நடைபெறும்) பரிந்துரையையும் மண்ணறையில் நடைபெறும் வேதனையையும் (பாவம் செய்த, இறைநம்பிக்கைகொண்ட) மக்கள் நரகத்தில் போட்டு கரிக்கப்பட்ட பின், அதிலிருந்து

86. இந்த ஹதீஸ் உமர் (ரலி) அறிவித்த நபிமொழிகள் அத்தியாயத்தில் (முஸ்னது உமர்) சேராது. ஏனெனில், இந்த ஹதீஸை உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கவில்லை. இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிப்பதாகும். இப்னு அப்பாஸ் (ரலி) அறிவித்த நபிமொழிகள் (முஸ்னது இப்னு அப்பாஸ்) எனும் அத்தியாயத்திலேயே இது சேரும். பார்க்க: ஹதீஸ் எண் - 1758. இதே ஹதீஸ் புகாரீ (4722, 7490, 7525, 7547), முஸ்லிம் (762), திர்மிதீ (3070, 3071), நஸாயீ (1001, 1002), இப்னு குஸைமா, இப்னு ஹிப்பான் (6603) [illegible] (2/185) [illegible] (1315) உள்ளிட்ட ஆகிய நூல்களிலும் பதிவாகியுள்ளது.

அவர்கள் வெளியேற்றப்படுவார்கள் என்பதையும் பொய்யென்று கூறி நம்பமறுப்பார்கள்.[96]

النار بعقلنا لتحشرا.

152 உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்:

١٥٢ حدثنا هشيم أنبأنا حميد عن أنس قال: قال
عمر رضي الله عنه وافقت ربي في ثلاث قلت يا
رسول الله لو اتخذنا من مقام إبراهيم مصلى
فنزلت ﴿واتخذوا من مقام إبراهيم مصلى﴾
وقلت يا رسول الله إن نساءك يدخل عليهن البر

மூன்று விஷயங்களில், (அவை நடைபெறுவதற்கு முன்பே) நான் என் இறைவனுக்கு இசைவான கருத்துக்கொண்டேன்.

1. நான் (நபி (ஸல்) அவர்களிடம்), "அல்லாஹ்வின் தூதரே! இப்றாஹீம் (அலை) அவர்கள் (கஅபாவைக் கட்டியபோது) நின்ற இடத்தை நீங்கள் தொழுமிடமாக ஆக்கிக்கொண்டால் நன்றாயிருக்குமே" என்று கேட்டேன் அப்போதுதான். "இப்றாஹீம் நின்ற இடத்தை நீங்கள் தொழுமிடமாக ஆக்கிக்கொள்ளுங்கள்" என்ற (2:125ஆவது) இறைவசனம் அருளப்பெற்றது.

2. மகளிர் மறைப்பாடை (ஹிஜாப்) சட்டம் அருளப்படுவதற்குமுன்) நான் (நபி (ஸல்) அவர்களிடம்), "அல்லாஹ்வின் தூதரே! (இறைநம்பிக்கையாளர்களின் அன்னையரான)

---

96. [illegible] 3 [illegible]

1. [illegible] - 2876, 2877.

2. [illegible] 2 [illegible] 184 [illegible] (2:185) [illegible] (2:184) [illegible].

3. [illegible] 24 [illegible] 2 - [illegible] 40)

[illegible] - 6829, 6830, 7323; [illegible] 3492; [illegible] 1352; [illegible] 3835)

[illegible]

[illegible] (183, 241, 285, 286, 313, 333) [illegible]

தங்கள் மனைவியரிடம் நல்லவரும் கெட்டவரும் (எல்லா மனிதர்களும்) வருகின்றனர் அவர்களைப் 'பர்தா' அணிந்துகொள்ளுமாறு தாங்கள் கட்டளையிடலாமே?'' என்று கேட்டேன் அப்போதுதான் 'ஹிஜாப்' (பர்தா) தொடர்பான இறைவசனம் அருளப்பெற்றது.

3 அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுடைய மனைவியர் அனைவரும் சேர்ந்துகொண்டு, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் வைராக்கியத்துடன் நடந்துகொண்டபோது, நான், ''நபி (தம் மனைவியரான) உங்களை மணவிலக்குச் செய்துவிட்டால், உங்களைவிடச் சிறந்தவர்களை உங்களுக்குப் பகரமாக அவர்களுக்கு அல்லாஹ் கொடுக்க முடியும்" என்று கூறினேன் அ(ப்போது நான் கூறிய)தைப் போன்றே (66:5ஆவது) இறைவசனம் அருளப்பெற்றது.[87]

وَالْفَاجِرُ فَلَوْ أَمَرْتَهُنَّ أَنْ يَحْتَجِبْنَ فَنَزَلَتْ آيَةُ
الْحِجَابِ وَاجْتَمَعَ عَلَى رَسُولِ اللَّهِ ﷺ نِسَاؤُهُ فِي
الْغَيْرَةِ فَقُلْتُ لَهُنَّ ﴿عَسَى رَبُّهُ إِنْ طَلَّقَكُنَّ أَنْ
يُبْدِلَهُ أَزْوَاجًا خَيْرًا مِنْكُنَّ﴾ قَالَ فَنَزَلَتْ كَذَلِكَ.

153 உமர் பின் அல்கத்தாப் (ரலி) கூறியதாவது:

ஹிஷாம் பின் ஹகீம் பின் ஹிஸாம் (ரலி) அவர்கள், 'அல்ஃபுர்கான்' எனும் (25ஆவது) அத்தியாயத்தை (தொழுகையில்) ஓதுவதை நான் செவியுற்றேன். எனக்கு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் ஓதிக் காண்பிக்காத விதத்தில் அதை அவர் ஓதிக்கொண்டிருந்தார். ஆகவே, தொழுகையில் வைத்தே அவரைத் தண்டிக்க நான் நினைத்தேன்.

١٥٣ حَدَّثَنَا عَبْدُ الْأَعْلَى بْنُ عَبْدِ الْأَعْلَى عَنْ مَعْمَرٍ
عَنِ الزُّهْرِيِّ عَنْ عُرْوَةَ بْنِ الزُّبَيْرِ عَنِ الْمِسْوَرِ بْنِ
مَخْرَمَةَ أَنَّ عُمَرَ بْنَ الْخَطَّابِ رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ
سَمِعْتُ هِشَامَ بْنَ حَكِيمِ بْنِ حِزَامٍ يَقْرَأُ سُورَةَ
الْفُرْقَانِ فَقَرَأَ فِيهَا حُرُوفًا لَمْ يَكُنْ نَبِيُّ اللَّهِ ﷺ
أَقْرَأَنِيهَا قَالَ فَأَرَدْتُ أَنْ أُسَاوِرَهُ وَهُوَ فِي الصَّلَاةِ
فَلَمَّا فَرَغَ قُلْتُ مَنْ أَقْرَأَكَ هَذِهِ الْقِرَاءَةَ قَالَ رَسُولُ
اللَّهِ ﷺ قُلْتُ كَذَبْتَ وَاللَّهِ مَا هَكَذَا أَقْرَأَكَ رَسُولُ
اللَّهِ ﷺ فَأَخَذْتُ بِيَدِهِ أَقُودُهُ فَانْطَلَقْتُ بِهِ إِلَى رَسُولِ
اللَّهِ ﷺ فَقُلْتُ يَا رَسُولَ اللَّهِ إِنَّكَ أَقْرَأْتَنِي سُورَةَ
الْفُرْقَانِ وَإِنِّي سَمِعْتُ هَذَا يَقْرَأُ فِيهَا حُرُوفًا لَمْ
تَكُنْ أَقْرَأْتَنِيهَا فَقَالَ رَسُولُ اللَّهِ ﷺ اقْرَأْ يَا هِشَامُ
فَقَرَأَ كَمَا كَانَ قَرَأَ فَقَالَ رَسُولُ اللَّهِ ﷺ هَكَذَا
أُنْزِلَتْ ثُمَّ قَالَ اقْرَأْ يَا عُمَرُ فَقَرَأْتُ فَقَالَ هَكَذَا

அவர் தொழுகையை (முடிக்கும்வரை காத்திருந்து, அவர் தொழுது) முடித்தபின், "இவ்வாறு உமக்கு ஓதிக் காட்டியது யார்?" என்று கேட்டேன். அவர், "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள்தாம்" என்று சொன்னார்.

நான், "நீர் சொல்வது பொய்! இவ்வாறு உமக்கு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் ஓதிக் காட்டியிருக்கமாட்டார்கள்" என்று சொல்லிவிட்டு, அவரது கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் சென்றேன்.

"அல்லாஹ்வின் தூதரே! 'அல்ஃபுர்கான்' அத்தியாயத்தை நீங்கள் எனக்கு ஓதிக் காட்டியுள்ளீர்கள். நீங்கள் எனக்கு ஓதிக் காட்டியிராத விதத்தில் இவர் ஓதியதை நான் செவியுற்றேன்" என்று கூறினேன்.

உடனே அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "ஹிஷாமே! ஓதுங்கள்" என்றார்கள். அவர் முன்பு ஓதியது போன்றே ஓதினார். "இவ்வாறுதான் இது அருளப்பெற்றது" என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். பிறகு, "உமரே! நீங்கள் ஓதுங்கள்" என்றார்கள். நானும் ஓதிக் காட்டினேன் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள்,

87. [illegible] புகாரீ (402, 4483, 4790, 4916), திர்மிதீ (2884), இப்னுமாஜா (999), தாரிமீ (1777) [illegible]

"இவ்வாறும்தான் இது அருளப்பெற்றது" என்று கூறிவிட்டு, "இந்தக் குர்ஆன் ஏழு முறைப்படி அருளப்பெற்றுள்ளது" என்று கூறினார்கள்.[89]

أُنْزِلَتْ ثُمَّ قَالَ رَسُولُ اللهِ ﷺ: إِنَّ الْقُرْآنَ نَزَلَ
عَلَى سَبْعَةِ أَحْرُفٍ.

154 உமர் (ரலி) அவர்கள் கூறியதாவது:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் தம் வயிற்றை நிரப்ப உலர்ந்த பேரீச்சம் பழம்கூடக் கிடைக்காமல் சுருண்டு படுத்துக்கொண்டிருந்ததை நான் கண்டேன்.[90]

١٥٤ حَدَّثَنَا عَمْرُو بْنُ الْهَيْثَمِ حَدَّثَنَا شُعْبَةُ عَنْ
سِمَاكِ بْنِ حَرْبٍ عَنِ النُّعْمَانِ بْنِ بَشِيرٍ عَنْ عُمَرَ
قَالَ: لَقَدْ رَأَيْتُ رَسُولَ اللهِ ﷺ يَلْتَوِي مَا يَجِدُ مَا
يَمْلَأُ بِهِ بَطْنَهُ مِنَ الدَّقَلِ.

155 உமர் (ரலி) அவர்கள் கூறியதாவது:

மூன்று விஷயங்களில் நான் வல்லமையும் மாண்பும் மிக்க என் இறைவனுக்கு இசைவான கருத்துக் கொண்டேன். அல்லது, என் இறைவன் அம்மூன்றில் எனக்கு இசைவாகக் கருத்துக் கொண்டான். நான் (நபி (ஸல்) அவர்களிடம்), "அல்லாஹ்வின் தூதரே! இப்ராஹீம் (அலை) அவர்கள் (கஅபாவைக் கட்டியபோது) நின்ற இடத்தைத் தொழுமிடமாக நீங்கள் ஆக்கிக்கொள்ளலாமே?" என்று கேட்டேன் (அவ்வாறே ஆக்கிக்கொள்ளும்படி)

١٥٥ حَدَّثَنَا ابْنُ أَبِي عَدِيٍّ عَنْ حُمَيْدٍ عَنْ أَنَسٍ
قَالَ قَالَ عُمَرُ: وَافَقْتُ رَبِّي عَزَّ وَجَلَّ فِي ثَلَاثٍ أَوْ
وَافَقَنِي رَبِّي فِي ثَلَاثٍ قَالَ قُلْتُ يَا رَسُولَ اللهِ لَوِ
اتَّخَذْتَ الْمَقَامَ مُصَلًّى قَالَ فَأَنْزَلَ اللهُ عَزَّ وَجَلَّ

---

89. இந்த ஹதீஸில் இடம்பெறும் 'ஏழு முறைப்படி' (ஸப்அத்தி அஹ்ருஃபின்) என்பதற்குப் பல விளக்கங்கள் வழங்கப்பெறுகின்றன. அவையாவன:

1. அரபுகளிடையே இருந்த பிரபலமான ஏழு குலங்களின் சொல் வழக்குகளில் குர்ஆன் அருளப்பெற்றது (குறைஷ், ஹுதைல், தைமுர்ரபாப், அஸ்த், ரபீஆ, ஹவாஸின், சஅத் பின் பக்ர்).

2. முளர் குலத்தின் ஏழு உட்பிரிவினரின் சொல் வழக்குகளில் குர்ஆன் அருளப்பெற்றது (குறைஷ், ஹுதைல், கினானா, கைஸ், ளப்பா, தைமுர்ரபாப், அசத் பின் குஸைமா).

3. கட்டளை வகை, தடை வகை, ஹலால் வகை, ஹராம் வகை, தெளிவான வகை, இரு பொருளுக்கு இடமளிக்கும் வகை, உவமை வகை ஆகிய ஏழு வகை வசனங்களாகக் குர்ஆன் அருளப்பெற்றது.

தொடக்கத்தில் நபி (ஸல்) அவர்களுக்கு ஓரேயொரு சொல் வழக்கில் - குறைஷி சொல் வழக்கில் - மட்டுமே குர்ஆனிய வசனங்கள் அருளப்பெற்றுவந்தன. பின்னர் இஸ்லாத்தில் இணைந்த பல்வேறு அரபு வட்டார மக்களின் சொல் வழக்குகளையும் கவனத்தில் கொண்ட நபியவர்கள், பல்வேறு வட்டாரச் சொல் வழக்குகளிலும் குர்ஆனை ஓதிட இறைவனிடம் அனுமதி கோரினார்கள். (பார்க்க: புகாரி ஹதீஸ் எண்கள் - 2419, 3219, 4991, 4992).

இருப்பினும் இந்த ஹதீஸின் கருத்தானது, ஒரே வசனம் பல்வேறு அரபுச் சொல் வழக்குகளில் ஓதிக்கொள்ள அனுமதிக்கப்பட்டதாகும். சொற்களின் ஒலிகள் மட்டுமே மாறுபடும்; பொருள் வேறுபட்டுக் கருத்து சிதைவதோ ஏதுமில்லை. எனினும் கலீஃபா உஸ்மான் (ரலி) அவர்களின் ஆட்சிக் காலத்தில் "குறைஷியர் சொல் வழக்கில் மட்டுமே குர்ஆன் பிரதிகள் அமைய வேண்டும்" என்று கட்டளை பிறப்பிக்கப்பட்டது. எனவே ஒரே விதமான அமைப்பில் மட்டுமே பிரதிகள் எடுக்கப்பட்டன. இஸ்லாமிய உலகின் பல்வேறு பகுதிகளுக்கு அவை அனுப்பிவைக்கப்பட்டன. (பார்க்க: புகாரி ஹதீஸ் எண்கள் - 4679, 4986, 4987. ஃபத்ஹுல் பாரீ - பாகம் 10, பக்கம் 32, முஸ்லிம் ஹதீஸ் எண் - 1488)

இதே ஹதீஸ் புகாரி (2419, 4992, 5041, 6936, 7550), முஸ்லிம் (1488), திர்மிதீ (2867), நஸாயீ (927-929), அபூதாவூத் (1261), முவத்தா மாலிக் (423) உள்ளிட்ட நூல்களிலும் இடம்பெற்றுள்ளது.

90. இதே கருத்தமைந்த ஹதீஸ் முஸ்லிம் (5696), திர்மிதீ (2294), இப்னுமாஜா (4136), இப்னுஹிப்பான் (6448), ஹாகிம் (8037), அபூயஅலா (170), முஸ்னது அஹ்மத் பின் ஹம்பல் (22), முஸ்னதுல் ஹுமைதீ (30) உள்ளிட்ட நூல்களிலும் பதிவாகியுள்ளது. முஸ்னதுல் ஹுமைதீயில், "கலீஃபா உமர் (ரலி) அவர்கள் உரைநிகழ்த்தியபோது மக்களுக்குக் கிடைத்துவிட்டிருந்த செல்வச்செழிப்பு பற்றி நினைவு கூர்ந்தார்கள். அப்போதுதான் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்கள்" என இடம்பெற்றுள்ளது.

﴿وَاتَّخِذُوا مِنْ مَقَامِ إِبْرَاهِيمَ مُصَلًّى﴾ وَقُلْتُ لَوْ حَجَبْتَ عَنْ أُمَّهَاتِ الْمُؤْمِنِينَ فَإِنَّهُ يَدْخُلُ عَلَيْكَ الْبَرُّ وَالْفَاجِرُ فَأُنْزِلَتْ آيَةُ الْحِجَابِ قَالَ وَبَلَغَنِي عَنْ أُمَّهَاتِ الْمُؤْمِنِينَ شَيْءٌ فَاسْتَقْرَيْتُهُنَّ أَقُولُ لَهُنَّ لَتَكُفُّنَّ عَنْ رَسُولِ اللَّهِ ﷺ أَوْ لَيُبْدِلَنَّهُ اللَّهُ بِكُنَّ أَزْوَاجًا خَيْرًا مِنْكُنَّ مُسْلِمَاتٍ حَتَّى أَتَيْتُ عَلَى إِحْدَى أُمَّهَاتِ الْمُؤْمِنِينَ فَقَالَتْ يَا عُمَرُ أَمَا فِي رَسُولِ اللَّهِ ﷺ مَا يَعِظُ نِسَاءَهُ حَتَّى تَعِظَهُنَّ فَكَفَفْتُ فَأَنْزَلَ اللَّهُ عَزَّ وَجَلَّ ﴿عَسَى رَبُّهُ إِنْ طَلَّقَكُنَّ أَنْ يُبْدِلَهُ أَزْوَاجًا خَيْرًا مِنْكُنَّ مُسْلِمَاتٍ مُؤْمِنَاتٍ قَانِتَاتٍ﴾ الْآيَةَ.

"இப்ராஹீம் நின்ற இடத்தை நீங்கள் தொழுமிடமாக ஆக்கிக்கொள்ளுங்கள்" என்று (2:125ஆவது) அல்லாஹ்வும் வசனத்தை அருளினான்.

மேலும், நான் (நபி (ஸல்) அவர்களிடம்), "அல்லாஹ்வின் தூதரே! தங்களிடம் நல்லவரும் கெட்டவரும் (எல்லா வகை மனிதர்களும்) வருகின்றார்கள். ஆகவே, (தங்கள் மனைவியரான) இறைநம்பிக்கையாளர்களின் அன்னையரைப் மகளிர் மறைப்பாடை (ஹிஜாப்) அணியும்படி தாங்கள் கட்டளையிடலாமே?" என்று கேட்டேன். அப்போதுதான் அல்லாஹ் மறைப்பாடை குறித்த வசனத்தை அருளினான்.

இறைநம்பிக்கையாளர்களின் அன்னையர் (நபி (ஸல்) அவர்களின் மனைவியர்) குறித்து, (நபி (ஸல்) அவர்களுக்கு அதிருப்தி ஏற்பட்டிருப்பதாக) எனக்குச் செய்தி எட்டியது. ஆகவே, அவர்களைத் தேடிச் சென்று, அவர்களிடம் (அது குறித்து விசாரித்து), "நீங்கள் (நபி (ஸல்) அவர்களுக்குச் சங்கடம் ஏற்படுத்துவதை) நிறுத்திக்கொள்ள வேண்டும்! இல்லையென்றால், அல்லாஹ் தன் தூதருக்கு உங்களைவிடச் சிறந்த முஸ்லிமான பெண்களைப் பகரமாகக் கொடுப்பான்" என்று சொன்னேன்.

இந்நிலையில், இறைநம்பிக்கையாளர்களின் அன்னையருள் ஒருவரிடம் நான் சென்றபோது, "உமரே! தம்முடைய மனைவியருக்கு அறிவுரைகூற அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுக்குத் தெரியாதா? நீங்கள் ஏன் எங்களுக்கு அறிவுரைகூற வேண்டும்?" என்று கேட்டார். ஆகவே, நான் (அவர்களுக்கு அறிவுரை கூறுவதை) நிறுத்திக்கொண்டேன். அப்போது, வல்லமையும் மாண்பும் மிக்க அல்லாஹ், "உங்களை அவர் (நபி) மணவிலக்குச் செய்துவிட்டால், உங்களைவிடச் சிறந்த முஸ்லிம்களான, நம்பிக்கை கொண்ட, கட்டுப்பட்டு நடக்கும் மனைவியராக (உங்களுக்குப் பகரமாக) அவருக்கு அல்லாஹ் வழங்கலாம்" எனும் (66:5ஆவது) வசனத்தை அருளினான்.[90]

١٥٦ حَدَّثَنَا الْوَلِيدُ بْنُ مُسْلِمٍ حَدَّثَنَا الْأَوْزَاعِيُّ أَنَّ يَحْيَى بْنَ أَبِي كَثِيرٍ حَدَّثَهُ عَنْ عِكْرِمَةَ مَوْلَى ابْنِ عَبَّاسٍ قَالَ سَمِعْتُ ابْنَ عَبَّاسٍ يَقُولُ سَمِعْتُ عُمَرَ بْنَ الْخَطَّابِ رَضِيَ اللَّهُ عَنْهُ يَقُولُ: سَمِعْتُ رَسُولَ اللَّهِ ﷺ وَهُوَ بِالْعَقِيقِ يَقُولُ أَتَانِي اللَّيْلَةَ آتٍ مِنْ رَبِّي فَقَالَ صَلِّ فِي هَذَا الْوَادِي الْمُبَارَكِ وَقُلْ عُمْرَةٌ فِي حَجَّةٍ.

156 உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள் கூறியதாவது:

நபி (ஸல்) அவர்கள் ('ஹஜ்'ஜுப் பயணத்தில்) 'அல்அகீக்' பள்ளத்தாக்கில் தங்கியிருந்தபோது, "இன்றிரவு (என் கனவில்) என் அதிபதியான இறைவனிடமிருந்து ஒருவர் (ஜிப்ரீல்) வந்து, 'இந்த அருள்வளம் நிரம்பிய (முபாரக்கான) பள்ளத்தாக்கில் தொழுவீராக! மேலும், 'ஹஜ்ஜுடன் உம்ரா செய்ய நாடுகின்றேன்' ('உம்ரத்துன் ஃபீ ஹஜ்ஜதின்') என்று (தல்பியா) சொல்வீராக!' என்று கூறினார்கள்" என்றார்கள்.

90. காண்க: முன்சென்ற ஹதீஸ் எண் - 152 மற்றும் அடிக்குறிப்பு

قَالَ الْوَلِيدُ يَعْنِي بِهَا الْحُلَيْفَةَ.

(இந்த ஹதீஸின் அறிவிப்பாளர்தொடரில் ஆறாவது அறிவிப்பாளராக இடம்பெற்றுள்ள) வலீது பின் முஸ்லிம் (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்:

'அல்அகீக்' பள்ளத்தாக்கு என்பது 'துல்ஹுலைஃபா' எனும் இடத்தையே குறிக்கும்.[91]

١٥٧ حَدَّثَنَا سُفْيَانُ عَنِ الزُّهْرِيِّ سَمِعَ مَالِكَ بْنَ أَوْسِ بْنِ الْحَدَثَانِ سَمِعَ عُمَرَ بْنَ الْخَطَّابِ رَضِيَ اللَّهُ عَنْهُ يَقُولُ قَالَ رَسُولُ اللَّهِ ﷺ وَقَالَ سُفْيَانُ مَرَّةً سَمِعَ رَسُولَ اللَّهِ ﷺ يَقُولُ: الذَّهَبُ بِالْوَرِقِ رِبًا إِلَّا هَاءَ وَهَاءَ وَالْبُرُّ بِالْبُرِّ رِبًا إِلَّا هَاءَ وَهَاءَ وَالشَّعِيرُ بِالشَّعِيرِ رِبًا إِلَّا هَاءَ وَهَاءَ وَالتَّمْرُ بِالتَّمْرِ رِبًا إِلَّا هَاءَ وَهَاءَ.

157 அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

உடனுக்குடன் அல்லாமல், (தவணை முறையில்) வெள்ளிக்குத் தங்கத்தை மாற்றிக் கொள்வது வட்டியாகும்; உடனுக்குடன் அல்லாமல், (தவணை முறையில்) தோல் நீக்கப் பட்ட கோதுமைக்குத் தோல் நீக்கப்பட்ட கோதுமையை மாற்றிக்கொள்வதும் வட்டியாகும்; உடனுக்குடன் அல்லாமல், (தவணை முறையில்) தோல் நீக்கப்படாத கோதுமைக்குத் தோல் நீக்கப்படாத கோதுமையை மாற்றிக்கொள்வதும் வட்டியாகும்; உடனுக்குடன் அல்லாமல், (தவணை முறையில்) பேரீச்சம் பழத்திற்குப் பேரீச்சம் பழத்தை மாற்றிக் கொள்வதும் வட்டியாகும்.[92]

இதை உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

١٥٨ حَدَّثَنَا سُفْيَانُ عَنِ الزُّهْرِيِّ سَمِعَ أَبَا عُبَيْدٍ قَالَ: شَهِدْتُ الْعِيدَ مَعَ عُمَرَ فَبَدَأَ بِالصَّلَاةِ قَبْلَ الْخُطْبَةِ وَقَالَ إِنَّ رَسُولَ اللَّهِ ﷺ نَهَى عَنْ صِيَامِ هَذَيْنِ الْيَوْمَيْنِ أَمَّا يَوْمُ الْفِطْرِ فَفِطْرُكُمْ مِنْ صَوْمِكُمْ وَأَمَّا يَوْمُ الْأَضْحَى فَكُلُوا مِنْ لَحْمِ نُسُكِكُمْ.

158 அபூ உபைத் (சஅது பின் உபைத்-ரஹ்) அவர்கள் கூறியதாவது:

நான் (கலீஃபா) உமர் (ரலி) அவர்களுடன் (ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகையில்) கலந்துகொண்டேன். அவர்கள் உரை (குத்பா) நிகழ்த்துவதற்கு முன்பே தொழுகை நடத்தினார்கள். பிறகு, "மக்களே! அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் (நோன்புப் பெருநாள், ஹஜ்ஜுப் பெருநாள் ஆகிய) இந்த இரு பெருநாட்களிலும் நோன்பு நோற்பதற்குத் தடை விதித்துள்ளார்கள். 'யவ்முல் ஃபித்ர்' (எனும் நோன்புப் பெருநாள்) நீங்கள் நோன்பிலிருந்து விடுபடும் நாள் ஆகும். 'யவ்முல் அள்ஹா' (எனும் ஹஜ்ஜுப் பெருநாள்) அன்று நீங்கள் உங்கள் குர்பானிப் பிராணிகளின் இறைச்சியை உண்ணுங்கள்!" என்று கூறினார்கள்.[93]

---

91. இந்த ஹதீஸ் புகாரீ (1534, 2337, 7343), அபூதாவூத் (1535), இப்னுமாஜா (2967) இப்னு ஹிப்பான், இப்னு குஸைமா, பைஹகீ ஆகிய நூல்களிலும் இடம்பெற்றுள்ளது.

92. பார்க்க: புகாரீ ஹதீஸ் எண்கள் - 2134, 2170, 2174-2182; முஸ்லிம் ஹதீஸ் எண்கள் - 3231, 3240. மேலும் இந்த ஹதீஸ் திர்மிதீ (1240), அபூதாவூத் (2306), இப்னுமாஜா (2244), நஸயீ (4482), அஹ்மத் (1603), பைஹகீ 5/283, தாரமீ (2452), இப்னு ஹிப்பான் (5103), முஅத்தா மாலிக் (1352), முஸன்னஃப் இப்னு அபீஷைபா 6/297, முஸன்னஃப் அப்துர் ரஸ்ஸாக் (14541), தஹாவீயின் ஷரஹு முஷ்கில் (6150), தபரானீயின் அல்முஃஜமுல் கபீர் (382), முஸ்னது அபீயஃலா (43), முஸ்னது ஷாஃபிஈ (13, 14), முஸ்னது தயாலிஸீ (614, 664) உள்ளிட்ட நூல்களிலும் பதிவாகியுள்ளது.

93. இந்த ஹதீஸ் புகாரீ (1990, 5571, 5573), முஸ்லிம் (2083), திர்மிதீ (702), அபூதாவூத் (2063), இப்னுமாஜா (1712), முஅத்தா மாலிக் (388), அஹ்மத் (141), இப்னு குஸைமா (1941, 2732), இப்னு ஹிப்பான் (3600) உள்ளிட்ட நூல்களிலும் இடம்பெற்றுள்ளது.

١٥٩ حدثنا سفيان عن الزهري عن عبيد الله بن
عبد الله بن عتبة عن ابن عباس عن عمر قال: قال
رسول الله ﷺ لا تطروني كما أطرت النصارى
عيسى ابن مريم عليه السلام فإنما أنا عبد فقولوا
عبده ورسوله.

159 அல்லாஹ்வின் தூதர் (ஸல்) கூறினார்கள்:

கிறிஸ்தவர்கள் மர்யமின் புதல்வர் ஈசா (அலை) அவர்களை வரம்பு மீறிப் புகழ்ந்ததைப் போன்று என்னை நீங்கள் வரம்பு மீறிப் புகழாதீர்கள். ஏனெனில், நான் (இறைவனின்) அடிமைதான். ஆகவே, (என்னைக் குறித்து) 'அல்லாஹ்வின் அடிமை; அவனுடைய தூதர்' என்று கூறுங்கள்.[94]

இதை உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

١٦٠ حدثنا سفيان عن عبد الله بن دينار عن ابن
عمر عن عمر أنه سأل النبي ﷺ أينام أحدنا وهو
جنب قال يتوضأ وينام إن شاء.
وقال سفيان مرة ليتوضأ ولينم.

160 இப்னு உமர் (ரலி) அவர்கள் கூறியதாவது:

(என் தந்தை) உமர் (ரலி) அவர்கள் நபி (ஸல்) அவர்களிடம், "பெருந்துடக்கு ஏற்பட்டு (குளியல் கடமையாகியு)ள்ள நிலையில் எங்களுள் ஒருவர் உறங்கலாமா?" என்று கேட்டார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள், "அவர் விரும்பினால், அங்கத் தூய்மை (உளூ) செய்துவிட்டு உறங்கலாம்" என்று விடையளித்தார்கள்.[95]

(இந்த ஹதீஸின் அறிவிப்பாளர்தொடரில் நான்காவது அறிவிப்பாளராக இடம்பெற்றுள்ள) சுஃப்யான் பின் உயைனா (ரஹ்) அவர்கள் (ஒரு முறை மேற்கண்டவாறு அறிவித்தார்கள்.) மற்றொரு முறை, "அவர் அங்கத் தூய்மை (உளூ) செய்துகொள்ளட்டும்; (பிறகு) உறங்கட்டும்" எனும் வாசகத்தில் அறிவித்தார்கள்.

١٦١ حدثنا سفيان عن زيد بن أسلم عن أبيه أن
عمر حمل على فرس في سبيل الله فرآها أو
بعض نتاجها يباع فأراد شراءه فسأل النبي ﷺ
عنه فقال اتركها توافك أو تلقها جميعا وقال
مرتين فنهاه وقال لا تشتره ولا تعد في صدقتك.

161 (உமர் (ரலி) அவர்களால் விடுதலை செய்யப்பட்ட அவர்களின் முன்னாள் அடிமையான) அஸ்லம் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

உமர் (ரலி) அவர்கள் அல்லாஹ்வின் பாதையில் (பயணம் மேற்கொள்வதற்காக ஒருவரைக்) குதிரையொன்றில் ஏற்றி, (அதை அவருக்கு தானமாகக் கொடுத்து) அனுப்பினார்கள். பின்னர் அந்தக் குதிரை அல்லது அதன் குட்டிகளுள் ஒன்று விற்கப்பட்டதைக் கண்டார்கள். எனவே அதைத் தாமே விலைக்கு வாங்க விரும்பினார்கள். இது குறித்து அவர்கள் நபி (ஸல்) அவர்களிடம் வினவியபோது, "அதை நீ விட்டுவிடு. அ(தை அன்ப)ளிப்பாக வழங்கியதற்குரிய நன்மையான)து உனக்கு முழுமையாகக் கிடைக்கும். அல்லது, அதை நீ (முழுமையாகச்) சந்திப்பாய்" என்று கூறினார்கள். இரண்டு முறை உமர் (ரலி) அவர்கள் கேட்டபோதும் அதற்குத் தடைவிதித்த நபி (ஸல்) அவர்கள், "நீர் அதை விலைக்கு வாங்காதீர்! உமது தர்மத்தைத் திரும்பப் பெறாதீர்" என்று கூறினார்கள்.[96]

---

94. பார்க்க: முன்சென்ற ஹதீஸ் எண் - 149 மற்றும் அடிக்குறிப்பு

95. பார்க்க: முன்சென்ற ஹதீஸ் எண்கள் - 90, 100 மற்றும் அடிக்குறிப்பு

96. பார்க்க: புகாரீ (1489, 2971, 3002), முஸ்லிம் (3314, 3315) [illegible] (1604), நஸாயீ (2568-2570), [illegible] (1302) [illegible] (2383) [illegible] (16572) [illegible] (2390) [illegible] (4503) [illegible]

162 நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

நீங்கள் ஹஜ்ஜையும் உம்ராவையும் அடுத்தடுத்துச் செய்யுங்கள். ஏனெனில், அவ்விரண்டையும் தொடர்ந்து செய்வது, (கொல்லனின்) உலை, இரும்பின் துருவை நீக்குவதைப் போன்று வறுமையையும் பாவங்களையும் நீக்கிவிடும்.[97]

இதை உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

١٦٢ حدثنا سفيان عن عاصم بن عبيد الله عن عبد الله بن عامر بن ربيعة يحدث عن عمر رضي الله عنه يبلغ به النبي وقال سفيان مرة عن النبي ﷺ قال تابعوا بين الحج والعمرة فإن متابعة بينهما ينفيان الفقر والذنوب كما ينفي الكير خبث الحديد.

163 அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

எண்ணத்தைப் பொறுத்தே செயல்கள் அமைகின்றன. ஒவ்வொருவருக்கும் அவர் எண்ணியதுதான் கிடைக்கிறது. ஆகவே, எவரது 'ஹிஜ்ரத்' (நாடு துறத்தல்), வல்லமையும் மாண்பும் மிக்க அல்லாஹ்வையும் அவனுடைய தூதரையும் நோக்கமாகக் கொண்டுள்ளதோ, அவரது ஹிஜ்ரத்(தின் பலனும்) அதுவாகவே இருக்கும்.

எவரது ஹிஜ்ரத், உலக (ஆதாய)த்தை, அல்லது அவர் மணக்க விரும்பும் பெண்ணை நோக்கமாகக் கொண்டுள்ளதோ, அவரது ஹிஜ்ரத்(தின் பலனும்) அதுவாகத்தான் இருக்கும்.[98]

இதை உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்

١٦٣ حدثنا سفيان عن يحيى عن محمد بن إبراهيم التيمي عن علقمة بن وقاص قال سمعت عمر رضي الله عنه يقول سمعت رسول الله ﷺ يقول: إنما الأعمال بالنية ولكل امرئ ما نوى فمن كانت هجرته إلى الله عز وجل فهجرته إلى ما هاجر إليه ومن كانت هجرته لدنيا يصيبها أو امرأة ينكحها فهجرته إلى ما هاجر إليه.

[illegible] 2022, 6975)

97. [illegible]

[illegible] 738 [illegible]

98. [illegible] (1, 54, 2529, 3898, 5070, 6689, 6953) [illegible]

١٦٤ حدثنا سفيان عن عبدة بن أبي لبابة عن أبي وائل قال قال الصبي بن معبد كنت رجلا نصرانيا فأسلمت فأهللت بالحج والعمرة فسمعني زيد بن صوحان وسلمان بن ربيعة وأنا أهل بهما فقالا لهذا أضل من بعير أهله فكأنما حمل علي بكلمتهما جبل فقدمت على عمر رضي الله عنه فأخبرته فأقبل عليهما فلامهما وأقبل علي فقال هديت لسنة النبي ﷺ هديت لسنة نبيك ﷺ.

قال عبدة قال أبو وائل: كثيرا ما ذهبت أنا ومسروق إلى الصبي نسأله عنه.

١٦٥ حدثنا سفيان عن عمرو عن طاوس عن ابن عباس ذكر لعمر أن سمرة، وقال مرة بلغ عمر رضي الله عنه أن سمرة باع خمرا قال قاتل الله سمرة إن رسول الله ﷺ قال: لعن الله اليهود حرمت عليهم الشحوم فجملوها فباعوها.

164 *ஸுபய்யு பின் மஅபத் (ரஹ்) கூறியதாவது:*

நான் கிறிஸ்தவனாக இருந்து இஸ்லாத்தைத் தழுவினேன். பிறகு (ஹஜ் செய்ய நாடி), ஹஜ்ஜுக்கும் உம்ராவிற்கும் சேர்த்து 'இஹ்ராம்' அணிந்தேன். நான் ஹஜ், உம்ரா ஆகிய இரண்டுக்கும் சேர்த்து 'இஹ்ராம்' அணிந்திருந்த செய்தியை ஸைது பின் ஸூஹான், ஸல்மான் பின் ரபீஆ ஆகிய இருவரும் கேள்விப்பட்டு, "இவர் தன் வீட்டு ஒட்டகத்தைவிட வழி தவறியவர்" என்று கூறினர்

அவ்விருவரும் கூறிய வார்த்தை என் மீது மலையைத் தூக்கி வைத்ததைப் போன்று இருந்தது. உடனே நான் (கலீஃபா) உமர் (ரலி) அவர்களிடம் வந்து, நடந்ததைத் தெரிவித்தேன்.

உமர் (ரலி) அவர்கள் அவ்விருவரையும் நோக்கிச் சென்று, அவர்களை ஏசினார்கள் பிறகு என்னை நோக்கி வந்து, "நபி (ஸல்) அவர்களின் வழி முறைக்கே நீர் வழிகாட்டப் பட்டுள்ளீர். உம் நபி (ஸல்) அவர்களின் வழி முறைக்கே நீர் வழிகாட்டப்பட்டுள்ளீர்" என்று கூறினார்கள்.

(இந்த ஹதீஸில் இரண்டாவது அறிவிப்பாளராக இடம்பெற்றுள்ள) அபூவாயில் (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்;

நானும் மஸ்ருக் அவர்களும் ஸுபய்யு அவர்களிடம் இது பற்றிக் கேட்பதற்காகப் பலமுறை அவரிடம் சென்றிருக்கிறோம்.[99]

165 *இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறியதாவது:*

ஸமுரா பின் ஜுன்துப் (ரலி) அவர்கள் மதுவை விற்றதாக உமர் (ரலி) அவர்களுக்குத் தகவல் எட்டியது அல்லது அவர்களிடம் கூறப்பட்டது. அப்போது உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்:

ஸமுராவை அல்லாஹ் சபிப்பானாக! அல்லாஹ்வின் தூதர் (ஸல்) கூறினார்கள்: "அல்லாஹ் யூதர்களைச் சபிப்பானாக! அவர்களுக்குக் கொழுப்பு தடை செய்யப்பட்ட போது, அவர்கள் அதை உருக்கி விற்றனர்." (இதை ஸமுரா அறியவில்லையா?)[100]

---

99. காண்க: முன்னோடி ஹதீஸ் எண் - 79 மற்றும் அடிக்குறிப்பு

100. இதே ஹதீஸ் புகாரீ (2223, 3460), முஸ்லிம் (3224), நஸாயீ (4184), இப்னுமாஜா (3374), தாரிமீ (2012), இப்னு ஹிப்பான் (6368) [illegible]

[illegible]

1. [illegible]

166 உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள் கூறியதாவது:

பனூ நளீர் (யூதக்) குலத்தாரின் செல்வங்கள், அல்லாஹ் தன் தூதருக்கு அளித்தவை ஆகும். இ(வற்றை அடைவ)தற்காக முஸ்லிம்கள் குதிரைகளையோ ஒட்டகங்களையோ ஓட்டிச் செல்லவில்லை. அவை அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுக்கு மட்டுமே உரியவையாக இருந்தன. அவற்றிலிருந்துதான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் தம் வீட்டாருக்கு ஆண்டுச் செலவுக்குக் கொடுத்துவந்தார்கள். மீதத்தை அல்லாஹ்வின் பாதையில் (அறப்போர்) ஆயத்தப் பொருட்கள் வாங்கவும், குதிரைகளுக்காகவும் ஆயுதங்களுக்காகவும் செலவிட்டுவந்தார்கள்.[101]

١٦٦ حدثنا سفيان عن عمرو ومعمر عن الزهري عن مالك بن أوس بن الحدثان عن عمر بن الخطاب رضي الله عنه قال: كانت أموال بني النضير مما أفاء الله على رسوله ﷺ مما لم يوجف المسلمون عليه بخيل ولا ركاب فكانت لرسول الله ﷺ خالصة وكان ينفق على أهله منها نفقة سنة وقال مرة قوت سنة وما بقي جعله في الكراع والسلاح عدة في سبيل الله عز وجل.

167 மாலிக் பின் அவ்ஸ் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி), தல்ஹா (ரலி), ஸுபைர் (ரலி), சஅது பின் அபீவக்காஸ் (ரலி) ஆகியோரிடம்; "வானமும் பூமியும் யாரால் நிலைபெற்றிருக்கின்றனவோ, அ(ந்த இறை)வனை முன்வைத்து உங்களிடம் கேட்கிறேன். '(நபிமார்களாகிய) எங்களுக்கு யாரும் வாரிசாக மாட்டார்கள். நாங்கள் விட்டுச் செல்பவையெல்லாம் தர்மம் செய்யப்பட வேண்டியவை ஆகும்' என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறியதை நீங்கள் அறிவீர்கள்தானே?" என்று உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள் கேட்டார்கள். அதற்கு அவர்கள் மூவரும், "இறைவன் மீதாணையாக! ஆம்" என்று கூறினர்.[102]

١٦٧ حدثنا سفيان عن عمرو عن الزهري عن مالك بن أوس قال: سمعت عمر رضي الله عنه يقول لعبد الرحمن بن عوف وطلحة والزبير وسعد نشدتكم بالله الذي تقوم السماء والأرض به أعلمتم أن رسول الله ﷺ قال: إنا لا نورث ما تركنا صدقة قالوا اللهم نعم.

[illegible]

2. [illegible] (ஹர்) [illegible]

3. [illegible]

[illegible] - பாகம் 5, பக்கம் 164, [illegible] - பாகம் 8, பக்கம் 543, [illegible] - 2223, 2224, 3460)

101. [illegible] புகாரி (2904, 4885), முஸ்லிம் (3610), [illegible] (1641), [illegible] (4072), [illegible] (2581), [illegible] (1405), [illegible] (7/633), [illegible] (6/296), [illegible] (6364), [illegible] (25), [illegible] (6463) [illegible]

102. [illegible] புகாரி (3093, 3094, 3712, 4033, 4241, 5358, 6725, 6728, 7302), முஸ்லிம் (3616-3618)

١٦٨ حدثنا سفيان عن ابن أبي يزيد عن أبيه عن عمر بن الخطاب رضي الله عنه أن رسول الله ﷺ قال: الولد للفراش.

168 அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

(பெண்ணொருத்தி) யாருடைய கட்டுப்பாட்டில் இருந்தபோது (அவளுக்குக்) குழந்தை பிறந்ததோ, அவருக்கே அக்குழந்தை உரியதாகும்

இதை உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.[103]

١٦٩ حدثنا ابن إدريس أنبأنا ابن جريج عن ابن أبي عمار عن عبد الله بن بابيه عن يعلى بن أمية قال: سألت عمر بن الخطاب قلت ﴿ليس عليكم جناح أن تقصروا من الصلاة إن خفتم أن يفتنكم الذين كفروا﴾ وقد أمن الله الناس فقال لي عمر: عجبت مما عجبت منه فسألت رسول الله ﷺ عن ذلك فقال: صدقة تصدق الله بها عليكم فاقبلوا صدقته.

169 யஅலா பின் உமய்யா (ரலி) அவர்கள் கூறியதாவது:

நான் உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்களிடம், "நீங்கள் பூமியில் பயணம் செய்தால், இறைமறுப்பாளர்கள் உங்களைத் துன்புறுத்துவார்கள் என நீங்கள் அஞ்சும்போது, தொழுகையைக் குறைத்துத் தொழுவதில் உங்கள் மீது தவறேதுமில்லை" (4:101) என்று தானே அல்லாஹ் கூறுகின்றான் தற்போது மக்களுக்குப் பாதுகாப்பு ஏற்பட்டுவிட்டதே? என்று கேட்டேன்

அதற்கு உமர் (ரலி) அவர்கள் (பின்வருமாறு) கூறினார்கள்: உங்களுக்கு ஏற்பட்ட வியப்பு(ம் ஐயமும்) எனக்கும் ஏற்பட்டது. எனவே, இது குறித்து நான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் வினவினேன். அப்போது, "(இது) அல்லாஹ் உங்களுக்கு வழங்கிய கொடை (சலுகை) ஆகும் அவனது அருட்கொடையை ஏற்றுக்கொள்ளுங்கள்" என அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள்.[104]

١٧٠ حدثنا أبو معاوية حدثنا الأعمش عن إبراهيم عن علقمة قال: جاء رجل إلى عمر رضي الله عنه وهو بعرفة قال أبو معاوية وحدثنا الأعمش عن خيثمة عن قيس بن مروان أنه أتى عمر رضي الله عنه فقال: جئت يا أمير المؤمنين من الكوفة وتركت بها رجلا يملي المصاحف عن ظهر قلبه فغضب وانتفخ حتى كاد يملأ ما بين شعبتي الرحل، فقال: ومن هو ويحك، قال: عبد الله بن

170 அல்கமா (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

கைஸ் பின் மர்வான் (ரஹ்) அவர்கள் (கலீஃபா) உமர் (ரலி) அவர்களிடம் வந்து, "இறைநம்பிக்கையாளர்களின் தலைவரே! நான் (இராக்கிலுள்ள) 'கூஃபா' நகரிலிருந்து வருகிறேன் அங்கு ஒருவர் தான் மனனமிட்டு வைத்துள்ள குர்ஆனை எழுதிப் பிரதிகள் எடுத்துக்கொண்டிருக்கிறார்" என்று கூறினார் (இதைக் கேட்டு) உமர் (ரலி) அவர்கள் கோபத்தின் உச்சிக்கே சென்றார்கள். எந்த அளவுக்கென்றால், ஒட்டகச் சேணத்தின் இரு பகுதிகளையும் அடைத்துக்கொள்ளும் விதத்தில் அவர்களது உடல் உப்பிப் புடைத்துக் கொள்ளும் அளவுக்குப் போய்விட்டது பிறகு அவர்கள், "உமக்குக் கேடு உண்டாகட்டும்!

103. இதே ஹதீஸ் விரிவாக புகாரீ (2053, 2218, 2421, 2533, 2745, 4303, 6749, 6765, 6817, 6818, 7182), முஸ்லிம் (2868, 2869), இப்னுமாஜா (1985) உள்ளிட்ட நூல்களிலும் இடம்பெற்றுள்ளது

104. இந்த ஹதீஸ் முஸ்லிம் (1222), திர்மிதீ (2960), நஸாயீ (1416), அபூதாவூத் (1014), இப்னுமாஜா (1055), தாரிமீ (1466), இப்னு குஸைமா (945), இப்னு ஹிப்பான் (2739), பைஹகீ (3/134) உள்ளிட்ட நூல்களிலும் பதிவாகியுள்ளது.

مسعود فما زال يُطفأ ويُسرَّى عنه الغضب حتى
عاد إلى حاله التي كان عليها ثم قال ويحك
والله ما أعلمه بقي من الناس أحد هو أحق بذلك
منه وسأحدثك عن ذلك كان رسول الله ﷺ لا
يزال يسمر عند أبي بكر رضي الله عنه الليلة
كذاك في الأمر من أمر المسلمين وإنه سمر
عنده ذات ليلة وأنا معه فخرج رسول الله ﷺ
وخرجنا معه فإذا رجل قائم يصلي في المسجد
فقام رسول الله ﷺ يستمع قراءته فلما كدنا أن
نعرفه قال رسول الله ﷺ من سره أن يقرأ القرآن
رطبًا كما أنزل فليقرأه على قراءة ابن أم عبد
قال ثم جلس الرجل يدعو فجعل رسول الله ﷺ
يقول له سل تعطه سل تعطه قال عمر رضي الله
عنه قلت والله لأغدون إليه فلأبشرنه قال فغدوت
إليه لأبشره فوجدت أبا بكر قد سبقني إليه فبشره
ولا والله ما سبقته إلى خير قط إلا وسبقني إليه.

யார் அந்த மனிதர்?" என்று கேட்டார்கள்.

அதற்கு கைஸ் அவர்கள், "அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரலி) அவர்கள்தான் (அந்த மனிதர்)" என்று விடையளித்தார்கள். அவர்களுக்கு ஏற்பட்டிருந்த கோபம் படிப்படியாக விலகி, கோபம் தணிந்து முன்பிருந்த நிலைக்கு அவர்கள் வந்தார்கள். பிறகு, "உமக்குக் கேடு உண்டாகட்டும்! அல்லாஹ்வின் மீதாணையாக! அவரைவிட இதற்குத் தகுதி வாய்ந்த ஒருவர் மனிதர்களுள் எஞ்சியிருப்பதாக நான் அறியவில்லை. இது குறித்து உனக்கு ஒரு செய்தியை நான் கூறுகிறேன்:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் இரவு நேரத்தில் அபூபக்ர் (ரலி) அவர்களுடன் முஸ்லிம்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருப்பது வழக்கம். முஸ்லிம்களின் நிலை குறித்தே அந்தப் பேச்சு அமைந்திருக்கும். இவ்வாறு ஓர் இரவில் அபூபக்ர் (ரலி) அவர்களுடன் பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது அவர்களுடன் நானும் இருந்தேன். (பேச்சை முடித்துக்கொண்டு) அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் புறப்பட்டபோது, அவர்களுடன் நாங்களும் புறப்பட்டோம்.

அப்போது ஒருவர் (மஸ்ஜிதுந்நபவீ) பள்ளிவாசலில் நின்று தொழுதுகொண்டிருந்தார். அவருடைய ஓதலை அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் நின்று கேட்டுக்கொண்டிருந்தார்கள். அவர் யார் என நாங்கள் அறிய முற்பட்டபோது, 'குர்ஆனை அது இறக்கியருளப் பெற்றதைப் போன்றே ஓத விரும்புகின்றவர், இப்னு உம்மி அப்தின் (அப்துல்லாஹ் பின் மஸ்ஊதின்) ஓதலைப் போன்று ஓதிக்கொள்ளட்டும்' என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். பிறகு (இப்னு மஸ்ஊது) அவர்கள் பிரார்த்தனை செய்தபடி அமர்ந்திருந்தார்கள். அப்போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், 'கேள்; அது கொடுக்கப்படும். கேள்; அது கொடுக்கப்படும்' என்றார்கள்.

'காலையில் அவரிடம் நான் சென்று, இந்த நற்செய்தியைக் கூறுவேன்' என்று (எனக்குள்) நான் கூறிக்கொண்டேன். காலையில் எழுந்து அவரிடம் நான் அந்த நற்செய்தியைக் கூறச் சென்றேன். ஆனால், அங்கே எனக்கு முன்பே அபூபக்ர் (ரலி) அவர்கள் சென்று, அவரிடம் அந்த நற்செய்தியைக் கூறிக்கொண்டிருந்ததைக் கண்டேன். அல்லாஹ்வின் மீது ஆணையாக! எந்த நன்மையான காரியத்தில் அபூபக்ர் (ரலி) அவர்களுடன் நான் போட்டியிட்டாலும், அவர்கள் என்னை முந்தாமல் இருந்ததில்லை.[106]

106. இந்த ஹதீஸ் முஸ்னதுல் பஸ்ஸார் (321), இப்னு அபீஷைபா (2/280) நஸாயீயின் சுனனுல் குப்ரா (8257) அபூயஃலா (181), இப்னு குஸைமா (1094), இப்னு ஹிப்பான் (7192), தபரானியின் அல்முஃஜமுல் கபீர் (8338, 8342) ஹாகிம் (2846) பைஹகீயின் சுனனுல் குப்ரா (1/452) உள்ளிட்ட நூல்களிலும் இடம்பெற்றுள்ளது

١٧١ حدّثنا أبو مُعاوِيَةَ قالَ حدّثنا الأعْمَشُ عَنْ إبْراهيمَ عَنْ عابِسِ بْنِ رَبيعَةَ قالَ: رَأيْتُ عُمَرَ رَضِيَ اللهُ عَنْهُ يُقَبِّلُ الْحَجَرَ وَيَقُولُ إنّي لأُقَبِّلُكَ وأعْلَمُ أنّكَ حَجَرٌ وَلَوْلا أنّي رَأيْتُ رَسُولَ اللهِ ﷺ يُقَبِّلُكَ لَمْ أُقَبِّلْكَ.

171 ஆபிஸ் பின் ரபீஆ (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

உமர் (ரலி) அவர்கள் (கஅபாவின் மூலையில் பதிக்கப்பெற்றுள்ள) 'ஹஜருல் அஸ்வத்' கல்லை முத்தமிட்டுவிட்டு, "உன்னை நான் முத்தமிடுகிறேன். ஆனால், நீ ஒரு கல்தான் என்பதை நான் அறிவேன். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் உன்னை முத்தமிட்டதை நான் பார்த்திராவிட்டால், உன்னை நானும் முத்தமிட்டிருக்கமாட்டேன்" என்று கூறியதை நான் கேட்டேன்.[106]

١٧٢ حدّثنا جَريرٌ عَنْ عَبْدِ الْمَلِكِ بْنِ عُمَيْرٍ عَنْ جابِرِ بْنِ سَمُرَةَ قالَ: خَطَبَ عُمَرُ النّاسَ بِالْجابِيَةِ فَقالَ إنّ رَسُولَ اللهِ ﷺ قامَ في مِثْلِ مَقامي هذا فَقالَ أحْسِنُوا إلى أصْحابي ثُمّ الّذينَ يَلُونَهُمْ ثُمّ الّذينَ يَلُونَهُمْ ثُمّ يَجيءُ قَوْمٌ يَحْلِفُ أحَدُهُمْ عَلى الْيَمينِ قَبْلَ أنْ يُسْتَحْلَفَ عَلَيْها وَيَشْهَدُ عَلى الشّهادَةِ قَبْلَ أنْ يُسْتَشْهَدَ فَمَنْ أحَبّ مِنْكُمْ أنْ يَنالَ بُحْبُوحَةَ الْجَنّةِ فَلْيَلْزَمِ الْجَماعَةَ فَإنّ الشّيْطانَ مَعَ الْواحِدِ وَهُوَ مِنَ الاثْنَيْنِ أبْعَدُ وَلا يَخْلُوَنّ رَجُلٌ بِامْرَأةٍ فَإنّ ثالِثَهُما الشّيْطانُ وَمَنْ كانَ مِنْكُمْ تَسُرُّهُ حَسَنَتُهُ وَتَسُوءُهُ سَيّئَتُهُ فَهُوَ مُؤْمِنٌ.

172 ஜாபிர் பின் சமுரா (ரலி) கூறியதாவது:

(கலீஃபா) உமர் (ரலி) அவர்கள் (சிரியாவின்) 'அல்ஜாபியா' எனுமிடத்தில் மக்களுக்கு உரை நிகழ்த்தினார்கள். அப்போது பின்வருமாறு குறிப்பிட்டார்கள்:

இதோ, நான் நிற்பது போன்றே அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் நின்று கொண்டு, "என் தோழர்களிடம் நல்ல விதமாக நடந்துகொள்ளுங்கள். பின்னர் அவர்களுக்கு அடுத்து வருவோரிடமும், அதன் பின்னர் அவர்களுக்கு அடுத்து வருவோரிடமும் நல்ல விதமாக நடந்துகொள்ளுங்கள். பின்னர் ஒரு சமுதாயத்தார் வருவார்கள். அவர்களுள் ஒருவர், சத்தியம் செய்யும்படி கோரப்படுவதற்கு முன்பே சத்தியம் செய்ய முன்வருவார். சாட்சியம் அளிக்குமாறு கூறப்படுவதற்கு முன்பே சாட்சியம் கூற முன்வருவார். உங்களுள் ஒருவர் சொர்க்கத்தின் மையப் பகுதியில் இடம் பிடிக்க விரும்பினால், அவர் (ஒரு தலைமையின் கீழ் ஒன்றுபட்ட) சமூகக் கூட்டமைப்பைப் பற்றிப் பிடித்துக்கொள்ளட்டும்! ஏனெனில், தனியொருவனுடன்தான் ஷைத்தான் உள்ளான். இருவர் இருப்பின், அவர்களைவிட்டு அவன் தொலைவில் போய்விடுவான். (அந்நியப்) பெண் ஒருத்தியுடன் ஆடவர் ஒருவர் தனித்திருந்தால், அந்த இருவருடன் மூன்றாமவனாக ஷைத்தான் இல்லாமலிருப்பதில்லை. உங்களுள் ஒருவருக்கு, அவருடைய நற்செயல் மகிழ்ச்சியை அளித்து, அவருடைய தீய செயல் மனவேதனையை ஏற்படுத்துமானால், அவர்தான் (உண்மையான) இறைநம்பிக்கையாளர் ஆவார்.[107]

١٧٣ حدّثنا أبو مُعاوِيَةَ حدّثنا الأعْمَشُ عَنْ إبْراهيمَ عَنْ عَلْقَمَةَ عَنْ عُمَرَ رَضِيَ اللهُ عَنْهُ قالَ: كانَ

173 உமர் (ரலி) அவர்கள் கூறியதாவது:

---

106. காண்க முன்சென்ற ஹதீஸ் எண் - 95 மற்றும் அடிக்குறிப்பு

107. பார்க்க முன்சென்ற ஹதீஸ் எண் - 109 மற்றும் அடிக்குறிப்பு

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் இரவு நேரத்தில் அபூபக்ர் (ரலி) அவர்களுடன் முஸ்லிம்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருப்பார்கள். அப்போது அவர்களுடன் நானும் இருப்பேன்.[108]

174 உமர் (ரலி) அவர்கள் கூறியதாவது:

நான் 'கலாலா' குறித்து அதிகமாக அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் வினவியதைப் போன்று, வேறு எதைக் குறித்தும் அவர்களிடம் வினவியதில்லை. (இது தொடர்பாக அவர்கள் என்னைக் கடிந்துகொண்டார்கள்.) எந்த அளவிற்கு எனில், அவர்கள் தமது விரலால் என் நெஞ்சில் குத்தினார்கள். "உமரே! 'அந்நிசா' அத்தியாயத்தின் கடைசியிலுள்ள கோடைக் காலத்தில் இறக்கியருளப்பெற்ற (4:176ஆவது) இறைவசனம் உமக்குப் போதுமானதாகும்" என்று கூறினார்கள்.[109]

175 நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

இறந்தவருக்காக ஒப்பாரி வைத்து அழுவதால், மண்ணறையில் அவர் வேதனை செய்யப்படுவார்.

رَسُولُ اللَّهِ ﷺ يَسْمُرُ عِنْدَ أَبِي بَكْرٍ اللَّيْلَةَ كَذَلِكَ فِي الْأَمْرِ مِنْ أَمْرِ الْمُسْلِمِينَ وَأَنَا مَعَهُ.

١٧٤ حدثنا إِسْمَاعِيلُ عَنْ سَعِيدِ بْنِ أَبِي عَرُوبَةَ عَنْ قَتَادَةَ عَنْ سَالِمِ بْنِ أَبِي الْجَعْدِ عَنْ مَعْدَانَ بْنِ أَبِي طَلْحَةَ قَالَ: قَالَ عُمَرُ رَضِيَ اللَّهُ عَنْهُ مَا سَأَلْتُ رَسُولَ اللَّهِ ﷺ عَنْ شَيْءٍ أَكْثَرَ مِمَّا سَأَلْتُهُ عَنِ الْكَلَالَةِ حَتَّى طَعَنَ بِإِصْبَعِهِ فِي صَدْرِي وَقَالَ تَكْفِيكَ آيَةُ الصَّيْفِ الَّتِي فِي آخِرِ سُورَةِ النِّسَاءِ.

١٧٥ حدثنا يَحْيَى حَدَّثَنَا شُعْبَةُ حَدَّثَنَا قَتَادَةُ عَنْ سَعِيدِ بْنِ الْمُسَيَّبِ عَنِ ابْنِ عُمَرَ عَنْ عُمَرَ رَضِيَ اللَّهُ عَنْهُمَا عَنِ النَّبِيِّ ﷺ قَالَ: الْمَيِّتُ يُعَذَّبُ فِي قَبْرِهِ بِالنِّيَاحَةِ عَلَيْهِ.

١٧٦ حدثنا يَحْيَى عَنْ عَبْدِ الْمَلِكِ حَدَّثَنَا عَبْدُ اللَّهِ مَوْلَى أَسْمَاءَ قَالَ: أَرْسَلَتْنِي أَسْمَاءُ إِلَى ابْنِ عُمَرَ أَنَّهُ بَلَغَهَا أَنَّكَ تُحَرِّمُ أَشْيَاءَ ثَلَاثَةً الْعَلَمَ فِي الثَّوْبِ وَمِيثَرَةَ الْأُرْجُوَانِ وَصَوْمَ رَجَبٍ كُلِّهِ، فَقَالَ

இதை உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.[110]

176 அஸ்மா பின்த் அபீபக்ர் (ரலி) அவர்களால் விடுதலை செய்யப்பட்ட அவர்களின் முன்னாள் அடிமை அப்துல்லாஹ் பின் கைசான் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

அஸ்மா (ரலி) அவர்கள் என்னை அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்களிடம் அனுப்பி, "ஆடைகளில் (சிறிது) பட்டு வேலைப்பாடுள்ளதையும், சிவப்பு நிற மென்பட்டு திண்டுகளை(ப் பயன்படுத்துவதையும், ரஜப் மாதம் முழுவதும் நோன்பு நோற்பதையும் தாங்கள் தடைசெய்துவருவதாக எனக்குச் செய்தி எட்டியுள்ளதே (அது உண்மையா)?" என்று கேட்டுவரப் பணித்தார்கள்.

---

108. இது முன்சென்ற 170ஆவது ஹதீஸின் ஒரு பகுதியாகும்.

109. [illegible]

110. [illegible]

أَمَّا مَا ذَكَرْتَ مِنْ صَوْمِ رَجَبٍ فَكَيْفَ بِمَنْ يَصُومُ الأَبَدَ وَأَمَّا مَا ذَكَرْتَ مِنَ الْعَلَمِ فِي الثَّوْبِ فَإِنِّي سَمِعْتُ عُمَرَ رَضِيَ اللَّهُ عَنْهُ يَقُولُ سَمِعْتُ رَسُولَ اللَّهِ ﷺ يَقُولُ مَنْ لَبِسَ الْحَرِيرَ فِي الدُّنْيَا لَمْ يَلْبَسْهُ فِي الآخِرَةِ.

١٧٧ حَدَّثَنَا يَحْيَى بْنُ سَعِيدٍ وَأَنَا سَأَلْتُهُ حَدَّثَنَا سُلَيْمَانُ بْنُ الْمُغِيرَةِ حَدَّثَنَا ثَابِتٌ عَنْ أَنَسٍ قَالَ: كُنَّا مَعَ عُمَرَ بَيْنَ مَكَّةَ وَالْمَدِينَةِ فَتَرَاءَيْنَا الْهِلاَلَ وَكُنْتُ حَدِيدَ الْبَصَرِ فَرَأَيْتُهُ فَجَعَلْتُ أَقُولُ لِعُمَرَ أَمَا تَرَاهُ قَالَ سَأَرَاهُ وَأَنَا مُسْتَلْقٍ عَلَى فِرَاشِي ثُمَّ أَخَذَ يُحَدِّثُنَا عَنْ أَهْلِ بَدْرٍ قَالَ إِنْ كَانَ رَسُولُ اللَّهِ ﷺ لَيُرِينَا مَصَارِعَهُمْ بِالأَمْسِ يَقُولُ هَذَا مَصْرَعُ فُلاَنٍ غَدًا إِنْ شَاءَ اللَّهُ تَعَالَى وَهَذَا مَصْرَعُ فُلاَنٍ غَدًا إِنْ شَاءَ اللَّهُ تَعَالَى. قَالَ فَجَعَلُوا يُصْرَعُونَ

(அவ்வாறே நான் சென்று கேட்டேன்) அப்போது என்னிடம் இப்னு உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

ரஜப் மாதத்தில் நோன்பு நோற்பதைப் பற்றி நீங்கள் குறிப்பிட்டதைப் பொறுத்தவரையில், (நீங்கள் கேள்விப்பட்டது பொய்யாகும்) எல்லாக் காலங்களிலும் நோன்பு நோற்கும் ஒருவ(னா)ன என்(னை)ப் பற்றி எப்படி (இதைச் சொல்ல முடியும்)?

ஆடைகளில் பட்டு வேலைப்பாடுகள் உள்ளதைப் பொறுத்தவரையில், அல்லாஹ் வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறியதாக (என் தந்தை) உமர் (ரலி) அவர்கள், '(மறுமையில்) எந்த நற்பேறும் இல்லாத (ஆட)வர்தான் (இம்மையில்) பட்டாடை அணிவார்' என்று கூறியதை நான் கேட்டுள்ளேன்.[111]

177 அனஸ் (ரலி) அவர்கள் கூறியதாவது:

(ஒரு பயணத்தில்) நாங்கள் மக்காவுக்கும் மதீனாவுக்கும் இடையி(லுள்ள ஓர் இடத்தி)ல் உமர் (ரலி) அவர்களுடன் இருந்தோம். அப்போது நாங்கள் (வானில்) பிறை தென்படுகிறதா? என்று பார்த்தோம் நான் கூர்மையான பார்வையுடையவனாக இருந்தேன். எனவே, நான் பிறையைப் பார்த்துவிட்டேன் "நீங்கள் பார்த்தீர்களா?" என உமர் (ரலி) அவர்களிடம் நான் கேட்டுக்கொண்டிருந்தேன். உமர் (ரலி) அவர்கள், "நான் என் படுக்கையில் மல்லாந்து படுத்தவாறே அதைப் பார்ப்பேன்" என்றார்கள் பிறகு பத்ருப் போரில் கலந்துகொண்டவர்களைப் பற்றி எங்களிடம் கூறலானார்கள்.

(பத்ருப் போருக்கு) முந்தைய நாளே அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் எங்களிடம் எதிரிகள் மாண்டு கிடக்கப்போகும் இடங்களைக் காட்டலானார்கள். "அல்லாஹ் நாடினால், நாளை இன்ன மனிதன் மாண்டு கிடக்கும் இடம் இதுதான். அல்லாஹ் நாடினால், நாளை இன்ன மனிதன் மாண்டு கிடக்கும் இடம் இதுதான்" என்று குறிப்பிட்டார்கள்

111. இந்த ஹதீஸ் முஸ்லிம் 4201 எண்ணில் விரிவாகப் பதிவாகியுள்ளது. முஸ்லிம் அறிஞரின் இந்த ஹதீஸில் கேள்வி கேட்கப்பட்டது மூன்று பற்றி ஆனால் விடையளித்தது இரண்டு பற்றி மட்டுமே என்ற ஐயம் எழுகிறது. மேற்கண்ட முஸ்லிமின் 4201 ஹதீஸை ஒப்பிட்டு நோக்க அதில் மூன்றுக்கும் விடையளிக்கப்பட்டுள்ளதை காணலாம். முஸ்லிம் தமிழாக்கம் பாகம் - 3 பக்கம் 778 அது வருமாறு:

"சிவப்பு நிறத்தில் அமைந்த மெத்தை விரிப்பைப் பொறுத்தவரையில் இதுதான் அப்துல்லாஹ் பின் உமரின் விரிப்பு. இதுவும் சிவப்பு நிறத்தில் அமைந்த விரிப்புதான்" என்று கூறினார்கள்.

நான் அஸ்மா (ரலி) அவர்களிடம் திரும்பி வந்து இது பற்றி உமர் (ரலி) அவர்கள் கூறியதைத் தெரிவித்தேன். அப்போது அஸ்மா (ரலி) அவர்கள், "இதோ அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் நீளங்கியாகும்" எனக் கூறி, கோஸ்ரோ போன்ற பாரசீக மன்னர்கள் அணியும் பட்டு நீளங்கி ஒன்றை வெளியே எடுத்தார்கள். அதன் கழுத்துப் பகுதியில் அலங்காரப் பட்டு வேலைப்பாடு இருந்தது. அதன் முன், பின் திறப்புகள் அலங்காரப் பட்டினால் வேலைப்பாடு செய்யப்பட்டிருந்தன.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் குறிப்பிட்ட இடங்களில் (சரியாக எதிரிகள் வெட்டி) வீழ்த்தப்படலாயினர். அப்போது நான் (நபி (ஸல்) அவர்களிடம்), "சத்திய (மார்க்க)த்துடன் தங்களை அனுப்பியவன் மீதாணையாக! நீங்கள் குறிப்பிட்ட இடங்களில் அவர்கள் (வெட்டி) வீழ்த்தப்பட்டுக் கொண்டிருந்தனர்" என்று சொன்னேன்.

பிறகு அவர்க(ளுடைய பிணங்)களை (ஒரு பாழுங்)கிணற்றில் தூக்கி வீசும்படி அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கட்டளையிட்டார்கள். (அவ்வாறே அவர்கள் தூக்கிப் போடப்பட்டனர்.) பிறகு அல்லாஹ்வின் தூதர் அவர்கள் எதிரிகளின் (உடல் கிடந்த கிணற்றின்) அருகே சென்று, "இன்ன மனிதரே! இன்ன மனிதரே! (என்று பெயர் கூறியழைத்து), அல்லாஹ் உங்களுக்கு வாக்களித்ததை நீங்கள் உண்மையானதாகக் கண்டீர்களா? நானோ அல்லாஹ் என்னிடம் வாக்களித்ததை உண்மையானதாகக் கண்டேன்" என்று கூறினார்கள்.

அப்போது நான், "அல்லாஹ்வின் தூதரே! உயிரற்ற சடலங்களிடம் பேசுகிறீர்களே?" என்றேன். அதற்கு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "நான் கூறுவதை அவர்களை விட நீங்கள் நன்கு செவியேற்பவர்களாக இல்லை. எனினும், அவர்களால் எனக்கு மறுமொழியேதும் கூற முடியாது" என்று கூறினார்கள்.[112]

عَلَيْهَا قَالَ قُلْتُ وَالَّذِي بَعَثَكَ بِالْحَقِّ مَا أَخْطَئُوا
تِلْكَ كَانُوا يُصْرَعُونَ عَلَيْهَا ثُمَّ أَمَرَ بِهِمْ فَطُرِحُوا
فِي بِئْرٍ فَانْطَلَقَ إِلَيْهِمْ فَقَالَ يَا فُلَانُ يَا فُلَانُ هَلْ
وَجَدْتُمْ مَا وَعَدَكُمُ اللَّهُ حَقًّا فَإِنِّي وَجَدْتُ مَا
وَعَدَنِي اللَّهُ حَقًّا قَالَ عُمَرُ يَا رَسُولَ اللَّهِ أَتُكَلِّمُ
قَوْمًا قَدْ جَيَّفُوا قَالَ مَا أَنْتُمْ بِأَسْمَعَ لِمَا أَقُولُ مِنْهُمْ
وَلَكِنْ لَا يَسْتَطِيعُونَ أَنْ يُجِيبُوا.

١٧٨ حَدَّثَنَا يَحْيَى حَدَّثَنَا حُسَيْنٌ الْمُعَلِّمُ حَدَّثَنَا
عَمْرُو بْنُ شُعَيْبٍ عَنْ أَبِيهِ عَنْ جَدِّهِ قَالَ: فَلَمَّا
رَجَعَ عَمْرٌو جَاءَ بَنُو مَعْمَرِ بْنِ حَبِيبٍ يُخَاصِمُونَهُ
فِي وَلَاءِ أُخْتِهِمْ إِلَى عُمَرَ بْنِ الْخَطَّابِ رَضِيَ اللَّهُ
عَنْهُ فَقَالَ أَقْضِي بَيْنَكُمْ بِمَا سَمِعْتُ مِنْ رَسُولِ اللَّهِ
ﷺ يَقُولُ مَا أَحْرَزَ الْوَلَدُ أَوِ الْوَالِدُ فَهُوَ لِعَصَبَتِهِ مَنْ
كَانَ فَقَضَى لَنَا بِهِ.

178 *அப்துல்லாஹ் பின் அம்ர் பின் அல்ஆஸ் (ரலி) அவர்கள் கூறியதாவது:*

(என் தந்தை) அம்ர் பின் அல்ஆஸ் (ரலி) அவர்கள் (ஷாம் நாட்டிலிருந்து மதீனாவிற்குத்) திரும்பியபோது அவர்களிடம், மஅமர் பின் ஹபீப் அவர்களின் புதல்வர்கள் தம் சகோதரி (உம்முவாயில் பின்த் மஅமர்) அவர்கள் விடுதலை செய்த அடிமையின் சொத்துக்கு 'வாரிசாகும் உரிமை' (வலா) தங்களுக்கே உரியது என என்னிடம் வழக்காடியபடி, (கலீஃபா) உமர் (ரலி) அவர்களிடம் சென்றனர்.

அப்போது உமர் (ரலி) அவர்கள், "நான் உங்களிடையே அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் செவியுற்றபடியே தீர்ப்பளிக்கிறேன். 'பிள்ளை அல்லது தந்தை சேர்த்து வைத்த சொத்துக்கு அவருடைய தந்தை வழி நெருங்கிய உறவினர் (அஸபா)தான் உரிமை பெறுவார்' என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்" என்றார்கள். அதன்படியே உமர் (ரலி) அவர்கள் எங்களுக்கு ஆதரவாக தீர்ப்பளித்தார்கள்.[113]

112. இந்த ஹதீஸ் முஸ்லிம் (5511), நஸாயீ (2047), அல்பஸ்ஸார் (228), அபூயஅலா (130) தபாரானீயின் அல்முஉஜமுல் அவ்சத் (6689) உள்ளிட்ட நூல்களிலும் இடம்பெற்றுள்ளது.

113. இந்த ஹதீஸ் அபூதாவூத் (2528), இப்னுமாஜா (2722) முஸன்னஃப் இப்னு அபீஷைபா (7/393) பைஹகீயின் ஸுனனுல் குப்ரா (10/304) உள்ளிட்ட நூல்களிலும் பதிவாகியுள்ளது.

١٧٩ قَالَ قَرَأْتُ عَلَى يَحْيَى بْنِ سَعِيدٍ عَنْ عُثْمَانَ بْنِ غِيَاثٍ حَدَّثَنِي عَبْدُ اللَّهِ بْنُ بُرَيْدَةَ عَنْ يَحْيَى بْنِ يَعْمَرَ وَحُمَيْدِ بْنِ عَبْدِ الرَّحْمَنِ الْحِمْيَرِيِّ قَالاَ: لَقِينَا عَبْدَ اللَّهِ بْنَ عُمَرَ فَذَكَرْنَا الْقَدَرَ وَمَا يَقُولُونَ فِيهِ فَقَالَ إِذَا رَجَعْتُمْ إِلَيْهِمْ فَقُولُوا إِنَّ ابْنَ عُمَرَ مِنْكُمْ بَرِيءٌ وَأَنْتُمْ مِنْهُ بُرَآءُ ثَلاَثَ مِرَارٍ ثُمَّ قَالَ أَخْبَرَنِي عُمَرُ بْنُ الْخَطَّابِ رَضِيَ اللَّهُ عَنْهُ أَنَّهُمْ بَيْنَا هُمْ جُلُوسٌ أَوْ قُعُودٌ عِنْدَ النَّبِيِّ ﷺ جَاءَهُ رَجُلٌ يَمْشِي حَسَنُ الْوَجْهِ حَسَنُ الشَّعْرِ عَلَيْهِ ثِيَابُ بَيَاضٍ فَنَظَرَ الْقَوْمُ بَعْضُهُمْ إِلَى بَعْضٍ مَا نَعْرِفُ هَذَا وَمَا هَذَا بِصَاحِبِ سَفَرٍ ثُمَّ قَالَ يَا رَسُولَ اللَّهِ آتِيكَ قَالَ نَعَمْ فَجَاءَ فَوَضَعَ رُكْبَتَيْهِ عِنْدَ رُكْبَتَيْهِ وَيَدَيْهِ عَلَى فَخِذَيْهِ فَقَالَ مَا الإِسْلاَمُ قَالَ شَهَادَةُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللَّهُ وَأَنَّ مُحَمَّدًا رَسُولُ اللَّهِ وَتُقِيمُ الصَّلاَةَ

179 யஹ்யா பின் யஅமர் (ரஹ்) அவர்களும், ஹுமைத் பின் அப்திர் ரஹ்மான் அல்ஹிம்யரீ (ரஹ்) ஆகியோர் கூறியதாவது:

நாங்கள் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்களைச் சந்தித்து, (தலை)விதி தொடர்பாகவும், (விதியை மறுக்கும்) மக்கள் அது குறித்துப் பேசிக்கொள்வதைப் பற்றியும் குறிப்பிட்டோம்.

அப்போது அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள், "நீங்கள் அந்த மக்களிடம் திரும்பிச் சென்றால், 'அவர்களை விட்டு நானும் என்னை விட்டு அவர்களும் விலகிவிட்டனர்' என்று தெரிவித்துவிடுங்கள்" என மூன்று முறை சொன்னார்கள்.[114]

பிறகு அவர்கள் கூறினார்கள்: என் தந்தை உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள் என்னிடம் தெரிவித்தார்கள்:

நாங்கள் ஒரு நாள் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் அருகில் இருந்தோம். அப்போது வெண்ணிற ஆடை அணிந்த, அழகிய முகமும் தலைமுடியும் கொண்ட ஒருவர் நடந்து வந்தார். இவர் யாரென நம்மால் அறிய முடியவில்லையே? இவர் (வெளியூரிலிருந்து) பயணம் செய்து வந்தவராகவும் தெரியவில்லையே? என அங்கிருந்தவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர்.

அவர், "அல்லாஹ்வின் தூதரே! தங்களுக்கு அருகில் வரலாமா?" என்று கேட்டார். நபி (ஸல்) அவர்கள், "ஆம்" (வாருங்கள்) என்று கூறினார்கள். அவர் வந்து, தம் முழங்கால்களை நபியவர்களின் முழங்கால்களோடு இணைத்துக் கொண்டு (நெருக்கமாக) அமர்ந்தார். அவர் தம் கைகளைத் தம் தொடைகள் மீது வைத்(து அடக்கமாக அமர்ந்)தார்.

பிறகு, "இஸ்லாம் என்றால் என்ன?" என்று கேட்டார். அதற்கு நபி (ஸல்) அவர்கள், "இஸ்லாம் என்பது, அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை என்றும், முஹம்மத் (ஆகிய நான்) அல்லாஹ்வின் தூதர் என்றும் நீங்கள் உறுதி கூறுவதாகும்.

114. அல்லாஹ் விதித்த விதிப்படியே அனைத்தும் நடக்கின்றன. எப்போது, எப்படி, எங்கே நடக்கும் என்பதெல்லாம் முன்பே [illegible] அவர்களை விட்டு நானும் என்னை விட்டு அவர்களும் விலகிவிட்டனர்' என்று இப்னு உமர் (ரலி) அவர்கள் குறிப்பிட்டார்கள்.

மேலும், தொழுகையைக் கடைப்பிடிப்பதும், ஸகாத்தை வழங்குவதும், ரமளான் மாதத்தில் நோன்பு நோற்பதும், (இயன்றால்) இறையில்லம் கஅபாவில் 'ஹஜ்' செய்வதுமாகும்" என்று மறுமொழியளித்தார்கள்.

وتؤتي الزكاة وتصوم رمضان وتحج البيت قال
فما الإيمان قال أن تؤمن بالله وملائكته والجنة
والنار والبعث بعد الموت والقدر كله قال فما
الإحسان قال أن تعمل لله كأنك تراه فإن لم
تكن تراه فإنه يراك قال فمتى الساعة قال ما
المسئول عنها بأعلم من السائل قال فما أشراطها
قال إذا العراة الحفاة العالة رعاء الشاء تطاولوا
في البنيان وولدت الإماء ربّاتهن قال ثم قال
عليّ الرجل فاطلبوه فلم يروا شيئا فمكث يومين
أو ثلاثة ثم قال يا ابن الخطاب أتدري من السائل
عن كذا وكذا قال الله ورسوله أعلم قال ذاك
جبريل جاءكم يعلمكم دينكم.

அடுத்து அவர், "ஈமான் (இறைநம்பிக்கை) என்றால் என்ன?" என்று கேட்டார். அதற்கு நபி (ஸல்) அவர்கள், "அல்லாஹ்வையும் அவனுடைய வானவர்களையும் சொர்க்கத்தையும் நரகத்தையும் இறப்புக்குப்பின் (மறுமை நாளில் உயிர் கொடுத்து) எழுப்பப் படுவதையும் (நன்மை, தீமை ஆகிய) அனைத்தும் விதியின்படியே நடக்கின்றன என்று நீங்கள் நம்புவதுமாகும்" என்று கூறினார்கள்.

அடுத்து அம்மனிதர், "இஹ்சான் (அழகிய முறையில் செயலாற்றல்) என்றால் என்ன?" என்றார். அதற்கு நபி (ஸல்) அவர்கள், "(இஹ்சான் என்பது,) அல்லாஹ்வை நீங்கள் பார்த்துக்கொண்டிருப்பதைப் போன்ற உணர்வுடன் செயல்படுவதாகும். அவனை நீங்கள் பார்க்கவில்லை என்றாலும், அவன் உங்களைப் பார்க்கின்றான்" என்று மறுமொழியளித்தார்கள்.

அம்மனிதர், "மறுமை (உலக அழிவு) நாள் எப்போது?" என்று கேட்க, நபி (ஸல்) அவர்கள், "கேள்வி கேட்கப்படுபவர் (அதாவது நான்), கேட்பவரைவிட (அதாவது உங்களை விட) அதிகம் அறிந்தவர் அல்லர். (இது பற்றி எனக்கும் தெரியாது; உங்களுக்கும் தெரியாது.)" என்று கூறினார்கள்.

அம்மனிதர், "அவ்வாறாயின், மறுமை நாளின் அடையாளங்கள் யாவை?" என்று கேட்டார் அதற்கு நபி (ஸல்) அவர்கள், "காலில் செருப்பில்லாத, அரைகுறை ஆடைகளை அணிந்துள்ள ஏழைகளான ஆட்டு இடையர்கள் போட்டி போட்டுக்கொண்டு உயரமான கட்டடங்கள் கட்டுவதை நீங்கள் காண்பதும், அடிமைப் பெண்கள் தம் எசமானிகளைப் பெற்றெடுப்பதும் ஆகும்"[115] என்று கூறினார்கள்

(அம்மனிதர் சென்றுவிட்டார்). பிறகு நபி (ஸல்) அவர்கள், "அந்த ஆளை என்னிடம் அழைத்து வாருங்கள்" என்று கூறினார்கள். மக்கள் அவரைத் தேடினர் ஆனால் அவர் அகப்படவில்லை பிறகு இரண்டு அல்லது மூன்று நாட்கள் கழித்து நபி (ஸல்) அவர்கள், "கத்தாபின் புதல்வர் உமரே! இப்படி இப்படி (என்னிடம்) கேள்வி கேட்ட அந்த ஆள் யார் என்று உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டார்கள் நான், "அல்லாஹ்வும் அவனுடைய தூதருமே நன்கு அறிந்தவர்கள்" என்று சொன்னேன் நபி (ஸல்) அவர்கள், "அவர்தான் (வானவர்) ஜிப்ரீல் உங்களுக்கு உங்கள் மார்க்கத்தைக் கற்றுத் தருவதற்காக உங்களிடம் அவர் வந்தார்" என்று சொன்னார்கள்

115. [illegible]

قَالَ وَسَأَلَهُ رَجُلٌ مِنْ جُهَيْنَةَ أَوْ مُزَيْنَةَ فَقَالَ يَا رَسُولَ اللَّهِ فِيمَا نَعْمَلُ أَفِي شَيْءٍ قَدْ خَلَا أَوْ مَضَى أَوْ فِي شَيْءٍ يُسْتَأْنَفُ الْآنَ قَالَ فِي شَيْءٍ قَدْ خَلَا أَوْ مَضَى فَقَالَ رَجُلٌ أَوْ بَعْضُ الْقَوْمِ يَا رَسُولَ اللَّهِ فِيمَا نَعْمَلُ قَالَ أَهْلُ الْجَنَّةِ يُيَسَّرُونَ لِعَمَلِ أَهْلِ الْجَنَّةِ وَأَهْلُ النَّارِ يُيَسَّرُونَ لِعَمَلِ أَهْلِ النَّارِ.

قَالَ يَحْيَى قَالَ هُوَ هَكَذَا يَعْنِي كَمَا قَرَأْتَ عَلَيَّ.

ஜுஹைனா அல்லது முஸைனா குலத்தைச் சேர்ந்த ஒருவர் நபி (ஸல்) அவர்களிடம், "அல்லாஹ்வின் தூதரே! நாம் ஏன் நற்செயல் புரிய வேண்டும்? அப்படி நற்செயல் புரிந்தால், ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டுவிட்டதன் (தலைவிதி) அடிப்படையில் நற்செயல் புரிகின்றோமா? அல்லது, செயல்கள் இப்போதுதான் புதிதாகத் தோற்றுவிக்கப்படுகின்றனவா?" என்று கேட்டார்கள் அதற்கு நபி (ஸல்) அவர்கள், "ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டதன் அடிப்படையில்தான் (செயல்கள் புரிகின்றீர்கள்)" என்று கூறினார்கள். அப்போது ஒருவர் அல்லது அங்கிருந்த சிலர், "(எல்லாம் ஏற்கனவே முடிவு செய்யப்பட்டுவிட்டன என்றால்), நாம் ஏன் நற்செயல் புரியவேண்டும்?" என்று கேட்டார். அதற்கு நபி (ஸல்) அவர்கள், "(நீங்கள் நற்செயல் புரியுங்கள்.) சொர்க்கத்திற்குரியவர்கள் சொர்க்கவாசிகளின் செயல்களைச் செய்வதற்கு வழிவகை செய்யப்படுவர். நரகத்திற்குரியோர் நரகவாசிகளுக்குரிய செயல்களைச் செய்வதற்கு வழிவகை செய்யப்படுவர்" என்று கூறினார்கள்.[116]

(அஹ்மது பின் ஹன்பல் (ரஹ்) அவர்கள் கூறினார்கள்:) நான் இந்த ஹதீஸை யஹ்யா பின் சயீத் அல்கத்தான் (ரஹ்) அவர்களிடம் வாசித்துக் காட்டியபோது, அவர்கள், "இந்த ஹதீஸ் இப்படித்தான் (வந்துள்ளது) -அதாவது, என்னிடம் நீங்கள் வாசித்துக் காட்டியதைப் போன்றுதான் வந்துள்ளது" என்று கூறினார்கள்

١٨٠ حدثنا يَحْيَى عَنْ شُعْبَةَ حَدَّثَنِي سَلَمَةُ بْنُ كُهَيْلٍ قَالَ: سَمِعْتُ أَبَا الْحَكَمِ قَالَ سَأَلْتُ ابْنَ عَبَّاسٍ رَضِيَ اللَّهُ عَنْهُ عَنْ نَبِيذِ الْجَرِّ وَالدُّبَّاءِ فَقَالَ نَهَى رَسُولُ اللَّهِ ﷺ عَنْ نَبِيذِ الْجَرِّ وَالدُّبَّاءِ وَقَالَ مَنْ سَرَّهُ أَنْ يُحَرِّمَ مَا حَرَّمَ اللَّهُ تَعَالَى وَرَسُولُهُ فَلْيُحَرِّمِ النَّبِيذَ قَالَ وَسَأَلْتُ ابْنَ الزُّبَيْرِ فَقَالَ نَهَى رَسُولُ اللَّهِ ﷺ عَنِ الدُّبَّاءِ وَالْجَرِّ قَالَ وَسَأَلْتُ ابْنَ

180 அபுல்ஹகம் (இம்ரான் பின் அல்ஹாரிஸ்-ரஹ்) அவர்கள் கூறியதாவது:

(மது ஊற்றி வைக்கப் பயன்படுத்தப்பட்ட) சுட்ட களிமண் பாத்திரம், சுரைக் குடுவை ஆகியவற்றில் ஊற வைக்கப்பட்ட பானங்கள் பற்றி இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களிடம் நான் கேட்டேன். அதற்கு இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள், "சுட்ட களிமண் பாத்திரம், சுரைக் குடுவை ஆகியவற்றில் பானங்களை ஊற்றி வைக்க வேண்டாமென அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் தடை செய்துள்ளார்கள் அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் தடைசெய்ததைத் தானும் தடைசெய்ய விரும்புகின்ற ஒருவர் (இத்தகைய) பானங்களைத் தடை செய்துகொள்ளட்டும்" என்று கூறினார்கள்

நான் (இப்பாத்திரங்களில் பானங்களை ஊற்றி வைப்பதைப் பற்றி) அப்துல்லாஹ் பின் அஸ்ஸுபைர் (ரலி) அவர்களிடமும் கேட்டேன் "சுரைக் குடுவை, சுட்ட களிமண் பாத்திரம் ஆகியவற்றில் பானங்களை ஊற்றி வைக்கவேண்டாமென அல்லாஹ்வின்

116. இந்த ஹதீஸ் புகாரீ 50, 4777 முஸ்லிம் 1, 5, 7 போன்ற நூல்களில் பதிவாகியுள்ளது. இந்த ஹதீஸ் இந்நூலில் சில செய்திகள் கூடுதல் குறைவுடனும் சில செய்திகளில் மாற்றங்களுடனும் பல இடங்களில் பதிவாகியுள்ளது. காண்க: முன்சென்ற ஹதீஸ் எண் 2 பின்வரும் ஹதீஸ் எண்கள் 186, 346, 352 மேலும் இந்த ஹதீஸ் திர்மிதீ (2535), அபூதாவூத் (4075) நஸாயீ (4904) போன்ற நூல்களிலும் இடம்பெற்றுள்ளது.

عُمَرَ رَضِيَ اللَّهُ عَنْهُ فَحَدَّثَتْ عَنْ عُمَرَ أَنَّ النَّبِيَّ ﷺ
نَهَى عَنِ الدُّبَّاءِ وَالْمُزَفَّتِ.
قَالَ وَحَدَّثَنِي أَخِي عَنْ أَبِي سَعِيدٍ أَنَّ رَسُولَ اللَّهِ
ﷺ نَهَى عَنِ الْجَرِّ وَالدُّبَّاءِ وَالْمُزَفَّتِ وَالْبُسْرِ وَالتَّمْرِ.

١٨١ حَدَّثَنَا يَحْيَى بْنُ سَعِيدٍ أَنَا سَأَلْتُهُ حَدَّثَنَا هِشَامٌ
حَدَّثَنَا قَتَادَةُ عَنْ سَالِمِ بْنِ أَبِي الْجَعْدِ عَنْ مَعْدَانَ بْنِ
أَبِي طَلْحَةَ أَنَّ عُمَرَ رَضِيَ اللَّهُ عَنْهُ خَطَبَ يَوْمَ
جُمُعَةٍ فَذَكَرَ نَبِيَّ اللَّهِ ﷺ وَذَكَرَ أَبَا بَكْرٍ رَضِيَ اللَّهُ
عَنْهُ وَقَالَ إِنِّي قَدْ رَأَيْتُ كَأَنَّ دِيكًا قَدْ نَقَرَنِي
نَقْرَتَيْنِ وَلَا أُرَاهُ إِلَّا لِحُضُورِ أَجَلِي وَإِنَّ أَقْوَامًا
يَأْمُرُونِي أَنْ أَسْتَخْلِفَ وَإِنَّ اللَّهَ لَمْ يَكُنْ لِيُضَيِّعَ
دِينَهُ وَلَا خِلَافَتَهُ وَالَّذِي بَعَثَ بِهِ نَبِيَّهُ ﷺ فَإِنْ
عَجِلَ بِي أَمْرٌ فَالْخِلَافَةُ شُورَى بَيْنَ هَؤُلَاءِ السِّتَّةِ
الَّذِينَ تُوُفِّيَ رَسُولُ اللَّهِ ﷺ وَهُوَ عَنْهُمْ رَاضٍ وَإِنِّي
قَدْ عَلِمْتُ أَنَّ قَوْمًا سَيَطْعَنُونَ فِي هَذَا الْأَمْرِ أَنَا

தூதர் (ஸல்) அவர்கள் தடை செய்துள்ளார்கள்" என்று அவர்களும் கூறினார்கள்.

நான் (இப்பாத்திரங்களில் பானங்களை ஊற்றி வைப்பதைப் பற்றி) அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்களிடமும் கேட்டேன். அதற்கு அவர்கள், "சுரைக் குடுவை, தார் பூசப்பட்ட பாத்திரம் ஆகியவற்றை (அவற்றை பானங்கள் ஊற்றி வைக்கப்) பயன்படுத்த வேண்டாமென நபி (ஸல்) அவர்கள் தடை விதித்தார்கள்' என (என் தந்தை) உமர் (ரலி) கூறினார்கள்" என்றார்கள்.

தொடர்ந்து அறிவிப்பாளர் அபுல்ஹகம் இம்ரான் பின் அல்ஹாரிஸ் அஸ்ஸுலமீ (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்:

"அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் சுட்ட களிமண் பாத்திரம், சுரைக் குடுவை, தார் பூசப்பட்ட பாத்திரம் ஆகியவற்றைக் கனியாத பேரீச்சங் காய், கனிந்த பேரீச்சம் பழம், ஆகியவற்றின் ஊறலுக்காகப் பயன்படுத்த வேண்டாமெனத் தடை செய்தார்கள் என அபூஸயீத் அல்குத்ரீ (ரலி) அவர்கள் கூறினார்கள்" என என் சகோதரரும் (மாலிக் பின் அல்ஹாரிஸ் அஸ்ஸுலமீ) என்னிடம் கூறினார்.[117]

181 மஅதான் பின் அபீதல்ஹா (ரஹ்) கூறியதாவது:

(கலீஃபா) உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள் ஒரு வெள்ளிக் கிழமை (ஜுமுஆ) அன்று உரை நிகழ்த்தினார்கள். அவர்கள் (தமது உரையில்) அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களையும் அபூபக்ர் (ரலி) அவர்களையும் நினைவுகூர்ந்தார்கள். மேலும், அவர்கள் (பின்வருமாறு) கூறினார்கள்:

நான் (இன்று) ஒரு சேவல் என்னை இரண்டு முறை கொத்துவதைப் போன்று (கனவு) கண்டேன். இதற்கு என் ஆயுட் காலம் முடிந்துவிட்டது என்றே நான் (விளக்கம்) கண்டேன்.

இந்த மக்களுள் சிலர், நான் (எனக்குப் பின்னால்) என் (ஆட்சிக்குப்) பிரதிநிதி (கலீஃபா) ஒருவரை அறிவிக்குமாறு வலியுறுத்துகின்றனர். நிச்சயமாக அல்லாஹ் தனது மார்க்கத்தையோ, தன் (அடியார்களின்) ஆட்சித் தலைமையையோ, தன் தூதரை எதனுடன் அனுப்பிவைத்தானோ, அதையும் பாழாக்கிவிடமாட்டான். எனக்கு ஏதேனும் நேர்ந்துவிட்டால், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் எவரைக் குறித்து மனநிறைவு கொண்ட நிலையில் இறந்தார்களோ, அந்த ஆறு பேர் ஆட்சித் தலைமை குறித்துத் தம்மிடையே கலந்தாலோசித்து முடிவு செய்வார்கள்.

சிலர் இதுபற்றி என்னைக் குறை கூறுவார்கள் என்பது எனக்குத் தெரியும். நான் (சில நேரங்களில்) அவர்களை இஸ்லாத்திற்காக எனது இந்தக் கையால் அடித்திருக்

117. இதே கருத்தில் புகாரீ 53, முஸ்லிம் (4042-4044), நஸாயீ (5522-5526, 5530), தாரமீ 2018 உள்ளிட்ட நூல்களிலும் இடம்பெற்றுள்ளது.

கிறேன். அவர்கள் இவ்வாறு (குறை கூறுதல்) செய்(வதை மார்க்கத்தின் ஏற்புடைய செயலாக நினைத்)தால், அத்தகையோர்தாம் இறைவனின் விரோதிகளும் வழிகெட்ட இறை மறுப்பாளர்களும் ஆவர்.

நான் எனக்குப் பின்னால், 'கலாலா'வை விட முக்கியமான ஒன்றை (முற்றுப்பெறாத நிலையில்) விட்டுச் செல்லவில்லை. இந்தக் 'கலாலா' குறித்து அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் நான் விவாதித்ததைப் போன்று வேறு எதற்காகவும் விவாதித்ததில்லை. அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களும், அவர்களிடம் நான் தோழமை கொண்டதிலிருந்து இது தொடர்பாக என்னிடம் கடிந்துகொண்டதைப் போன்று வேறு எதற்காகவும் அவர்கள் என்னிடம் கடிந்துகொண்டதில்லை. எந்த அளவிற்கு (அவர்கள் என்னைக் கடிந்துகொண்டார்கள்) எனில், அவர்கள் தமது விரலால் என் நெஞ்சில் குத்தினார்கள். "உமரே! 'அந்நிசா' அத்தியாயத்தின் இறுதியிலுள்ள கோடைக் கால(த்தில் அருளப்பெற்ற) வசனம் (4:176) உமக்குப் போதுமானதாக இல்லையா?" என்று கேட்டார்கள். நான் இன்னும் (சிறிது காலம்) வாழ்ந்தால், இந்தக் 'கலாலா' தொடர்பாகக் குர்ஆனைக் கற்றோரும் கல்லாதோரும் தீர்ப்பளிக்கும் விதத்தில் தெளிவான ஒரு தீர்ப்பை வழங்குவேன்.

ضربتهم بيدي هذه على الإسلام فإن فعلوا فأولئك
أعداء الله الكفرة الضلال وإني لا أدع بعدي
شيئا أهم إلي من الكلالة وما أغلظ لي رسول
الله ﷺ في شيء منذ صاحبته ما أغلظ لي في
الكلالة وما راجعته في شيء ما راجعته في الكلالة
حتى طعن بإصبعه في صدري وقال يا عمر ألا
تكفيك آية الصيف التي في آخر سورة النساء فإن
أعش أقض فيها قضية يقضي بها من يقرأ القرآن
ومن لا يقرأ القرآن ثم قال اللهم إني أشهدك
على أمراء الأمصار فإنما بعثتهم ليعلموا الناس
دينهم وسنة نبيهم ﷺ ويقسموا فيهم فيئهم ويعدلوا
عليهم ويرفعوا إلي ما أشكل عليهم من أمرهم
أيها الناس إنكم تأكلون من شجرتين لا أراهما
إلا خبيثتين لقد رأيت رسول الله ﷺ إذا وجد
ريحهما من الرجل في المسجد أمر به فأخذ بيده
فأخرج إلى البقيع ومن أكلهما فليمتهما طبخا.

பிறகு உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்:

இறைவா! நகரங்களின் ஆளுநர்களுக்கு உன்னையே சாட்சியாக்குகிறேன். நான் அவர்களை அந்த மக்களிடையே நேர்மையாக நடந்துகொள்வதற்காகவும், அவர்களுடைய மார்க்கத்தையும் அவர்களுடைய நபி (ஸல்) அவர்களது வழிமுறையையும் கற்றுத் தருவதற்காகவுமே அனுப்பிவைத்தேன். மேலும், அவர்களுக்குப் போரிடாமல் கிடைத்த ('ஃபைஉ' எனும்) செல்வத்தை அவர்கள் தம்மிடையே (முறையோடு) பங்கிட வேண்டும்; அவர்களிடையே நீதியாக நடந்துகொள்ள வேண்டும். அவர்களுடைய விவகாரங்களில் சிக்கல் எழும்போது அதை என் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும் (என்றும் கூறியே அனுப்பினேன்).

மக்களே! நீங்கள் இரு செடிகளிலிருந்து (வெங்காயம் வெள்ளைப் பூண்டு) விளைகின்றவற்றை (சமைக்காமல்) உண்கிறீர்கள். அவ்விரண்டையும் நான் அருவருப்பானவையாகக் கருதுகிறேன். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் பள்ளிவாசலில் இருக்கும் போது, ஒருவரிடமிருந்து அவற்றின் பச்சை வாடை வருவதைக் கண்டால், அவரது கையைப் பிடித்து, அவரை 'அல்பகீஉ' பொது மையவாடிவரை கொண்டுபோய் விட்டுவிட்டு வருமாறு கூறுவார்கள். எனவே, யார் அவற்றை உண்ண விரும்புகின்றாரோ, அவர் அவற்றைச் சமைத்து, அவற்றின் வாடையை நீக்கிக்கொள்ளட்டும்.[118]

118. பார்க்க: முன்சென்ற ஹதீஸ் எண் - 85 மற்றும் அதன் அடிக்குறிப்பு.

١٨٢ حدثنا عبد الله بن نمير عن مجالد عن عامر عن جابر بن عبد الله قال: سمعت عمر بن الخطاب رضي الله عنه يقول لطلحة بن عبيد الله ما لي أراك قد شعثت واغبررت منذ توفي رسول الله ﷺ لعلك ساءك يا طلحة إمارة ابن عمك قال معاذ الله إني لأجدركم أن لا أفعل ذلك إني سمعت رسول الله ﷺ يقول: إني لأعلم كلمة لا يقولها أحد عند حضرة الموت إلا وجد روحه لها روحا حين تخرج من جسده وكانت له نورا يوم القيامة فلم أسأل رسول الله ﷺ عنها ولم يخبرني بها فذلك الذي دخلني قال عمر رضي الله عنه فأنا أعلمها قال فلله الحمد فما هي قال هي الكلمة التي قالها لعمه لا إله إلا الله قال طلحة صدقت.

182 ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரலி) அவர்கள் கூறியதாவது:

உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள், தல்ஹா பின் உபைதில்லாஹ் (ரலி) அவர்களிடம், "தல்ஹா அவர்களே! உங்கள் தந்தையின் சகோதரர் புதல்வர் (அபூபக்ர்-ரலி) அவர்களின் ஆட்சி(ப் பொறுப்பேற்றது) உங்களுக்கு மனவேதனை அளித்துவிட்டதா? அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் இறந்ததிலிருந்து நீங்கள் பரட்டைத் தலையுடன், புழுதி படிந்த நிலையில் (சோகத்துடன்) இருப்பதைக் காண்கிறேனே, காரணம் என்ன?" என்று கேட்டார்கள்.

அதற்குத் தல்ஹா (ரலி) அவர்கள், "அல்லாஹ் காப்பாற்றுவானாக! அவ்வாறு செய்யாமலிருக்க, உங்களைவிட நானே மிகவும் தகுதி வாய்ந்தவன். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், 'நான் ஒரு சொல்லை அறிவேன். இறக்குந் தறுவாயில் ஒருவர் அதைக் கூறினால், அதை முன்னிட்டு அவரது உடலைவிட்டு உயிர் வெளியேறும்போது, தனது உயிரிலிருந்து நறுமணத்தை அவர் உணராமல் இருக்கமாட்டார். மேலும் மறுமை நாளில் அது ஒளியாகவும் அவருக்கு அமையும்' என்று கூறியதைக் கேட்டேன்.

"அ(ந்தச் சொல் என்னவென்ப)தைப் பற்றி நான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் கேட்கவுமில்லை. அதைப் பற்றி அவர்களும் என்னிடம் சொல்லவுமில்லை. அதுதான் இ(ந்தச் சோக) நிலைக்கு என்னை ஆளாக்கிவிட்டது" எனத் தல்ஹா (ரலி) அவர்கள் கூறினார்கள்.

அப்போது உமர் (ரலி) அவர்கள், "அ(ந்த வாக்கியத்)தை நான் அறிவேன்" என்று கூறினார்கள். தல்ஹா (ரலி) அவர்கள், "அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்! அது என்ன?" என்று கேட்டார்கள். அதற்கு உமர் (ரலி) அவர்கள், "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் தம் பெரிய தந்தை (அபூதாலிப்) அவர்களுக்கு (அவர் இறப்பை நெருங்கியபோது) எடுத்துரைத்த, 'லாஇலாஹ இல்லல்லாஹ்' (அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை) என்ற சொல்தான் அது" என்று கூறினார்கள். தல்ஹா (ரலி) அவர்கள், "உண்மை உரைத்தீர்" என்றார்கள்.[119]

---

119. [illegible] 1312, 1314 [illegible]

183 தாரிக் பின் ஷிஹாப் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

யூதர்களுள் ஒருவர் (கலீஃபா) உமர் (ரலி) அவர்களிடம் வந்து, "இறைநம்பிக்கையாளர்களின் தலைவரே! உங்களது வேதத்தில் ஒரு வசனத்தை நீங்கள் ஓதுகிறீர்கள் அந்த வசனம் யூதர்களாகிய எங்களுக்கு இறக்கியருளப்பட்டிருக்குமானால், (அது அருளப்பெற்ற) அந்த நாளைப் பண்டிகை நாளாக நாங்கள் ஆக்கிக் கொண்டிருப்போம்" என்று கூறினார். உமர் (ரலி) அவர்கள், "எந்த வசனம் அது?" என்று கேட்க, அவர், "'இன்று நான் உங்கள் மார்க்கத்தை உங்களுக்காக முழுமைப் படுத்திவிட்டேன்; உங்கள் மீது என் அருட்கொடையை நிறைவாகப் பொழிந்து விட்டேன்' எனும் (5:3ஆவது) இறை வசனம் தான் அது" என்று கூறினார். அப்போது உமர் (ரலி) அவர்கள், "அல்லாஹ்வின் மீதாணையாக, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுக்கு எந்த நாளில், எந்த நேரத்தில் அந்த வசனம் அருளப்பெற்றது என்பது எனக்குத் தெரியும். ('விடைபெறும் ஹஜ்'ஜின் போது) ஒரு வெள்ளிக்கிழமை மாலை வேளையில் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அரஃபாவில் இருந்தபோது(தான் இந்த வசனம் அருளப்பெற்றது)" என்று கூறினார்கள்.[120]

١٨٣ حدثنا جعفر بن عون أنبأنا أبو عميس عن قيس بن مسلم عن طارق بن شهاب قال: جاء رجل من اليهود إلى عمر رضي الله عنه فقال يا أمير المؤمنين إنكم تقرءون آية في كتابكم لو علينا معشر اليهود نزلت لاتخذنا ذلك اليوم عيدا قال وأي آية هي قال قوله عز وجل ﴿اليوم أكملت لكم دينكم وأتممت عليكم نعمتي﴾ قال فقال عمر رضي الله عنه والله إني لأعلم اليوم الذي نزلت فيه على رسول الله ﷺ والساعة التي نزلت فيها على رسول الله ﷺ عشية عرفة في يوم الجمعة.

١٨٤ حدثنا وكيع حدثنا سفيان عن عبد الرحمن بن الحارث بن عياش بن أبي ربيعة رضي الله عنهم عن حكيم بن حكيم بن عباد بن حنيف عن أبي أمامة بن سهل بن حنيف أن رجلا رمى رجلا بسهم فقتله وليس له وارث إلا خال فكتب في ذلك أبو عبيدة بن الجراح إلى عمر رضي الله عنه فكتب أن النبي ﷺ قال: الله

184 அபூஉமாமா பின் சஹ்ல் பின் ஹுனைஃப் (ரலி) அவர்கள் கூறியதாவது:

ஒருவர், அம்பெய்து மற்றொருவரைக் கொன்றுவிட்டார். இறந்தவருக்குத் தாய்மாமன் ஒருவரைத் தவிர வேறு வாரிசுகள் யாரும் இருக்கவில்லை. எனவே, இது தொடர்பாக அபூஉபைதா பின் அல்ஜர்ராஹ் (ரலி) அவர்கள், (கலீஃபா) உமர் (ரலி) அவர்களுக்குக் கடிதம் எழுதி (விளக்கம் கோரி)னார்கள். அதற்கு உமர் (ரலி) அவர்கள், "யாருக்கு உதவி செய்பவர் எவருமில்லையோ, அவருக்கு அல்லாஹ்வும் அவனுடைய தூதருமே உதவி செய்பவர்கள் ஆவர். யாருக்கு வாரிசுகள் எவருமில்லையோ, அவருக்குத்

120. இந்த ஹதீஸ் புகாரீ (45, 4407, 4606, 7268), முஸ்லிம் (5740, 5741, 5742), திர்மிதீ (2969), நஸாயீ (2952, 4926) ஆகிய [illegible] (5:3) [illegible]

وَرَسُولُهُ مَوْلَى مَنْ لَا مَوْلَى لَهُ وَالْخَالُ وَارِثُ مَنْ لَا وَارِثَ لَهُ.

தாய்மாமன்தான் வாரிசாவார்' என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்" என (பதில் கடிதம்) எழுதினார்கள்.[121]

١٨٥ حدثنا وكيع حدثنا سفيان عن أبي يعفور العبدي قال: سمعت شيخا بمكة في إمارة الحجاج يحدث عن عمر بن الخطاب رضي الله عنه أن النبي ﷺ قال له: يا عمر إنك رجل قوي لا تزاحم على الحجر فتؤذي الضعيف إن وجدت خلوة فاستلمه وإلا فاستقبله فهلل وكبر.

185 அபூயஅஃபூர் அல்அப்தீ (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

(உமய்யா ஆட்சியாளர் அப்துல் மலிக் பின் மர்வானின் தளபதி) ஹஜ்ஜாஜ் பின் யூசுஃப் ஆட்சியில் மக்காவில் முதியவர் ஒருவர் பின்வருமாறு கூறியதை நான் கேட்டேன்:

நபி (ஸல்) அவர்கள் (உமர் (ரலி) அவர்களிடம்), "உமரே! நீங்கள் வலிமை வாய்ந்த மனிதர் ஆவீர். (எனவே, கஅபாவைச் சுற்றிவரும்போது, அதன் ஒரு மூலையில் பதிக்கப்பெற்றுள்ள) 'ஹஜருல் அஸ்வத்' கல்லை நோக்கி முண்டியடித்துக்கொண்டுபோய் பலவீனமானவர்களுக்குத் துன்பம் கொடுத்துவிடாதீர். இடம் காலியாக இருப்பதைக் கண்டால், 'ஹஜருல் அஸ்வதை' நெருங்கி முத்தமிடுங்கள். அவ்வாறில்லாவிட்டால், ஹஜருல் அஸ்வதை முன்னோக்கி நின்று, 'லா இலாஹ இல்லல்லாஹ்; அல்லாஹு அக்பர்' (அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை; அல்லாஹ் மிகப் பெரியவன்) என்று கூறுங்கள்" என்றார்கள்.[122]

١٨٦ حدثنا وكيع حدثنا كهمس عن ابن بريدة عن يحيى بن يعمر عن ابن عمر أن جبريل عليه السلام قال للنبي ﷺ: ما الإيمان؟ قال: أن تؤمن بالله وملائكته وكتبه ورسله واليوم الآخر وبالقدر خيره وشره، فقال له جبريل عليه السلام: صدقت، قال فتعجبنا منه يسأله ويصدقه، قال فقال النبي

186 அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) கூறியதாவது:

(வானவர்) ஜிப்ரீல் (அலை) அவர்கள் (நபி (ஸல்) அவர்களிடம்), "ஈமான் (இறை நம்பிக்கை) என்றால் என்ன?" என்று கேட்டார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள், "அல்லாஹ்வையும் அவனுடைய வானவர்களையும் அவனுடைய வேதங்களையும் அவனுடைய தூதர்களையும் மறுமை நாளையும் நன்மை தீமை யாவும் விதியின் படியே நடக்கின்றன என்பதையும் நீங்கள் நம்புவதாகும்" என்று கூறினார்கள்.

அதற்கு ஜிப்ரீல் (அலை) அவர்கள், "உண்மை சொன்னீர்" என்றார். அவரே கேள்வி கேட்டுவிட்டு, அவரே 'உண்மைதான்' என்று கூறியதைக் கண்டு நாங்கள் வியப்படைந்

121. [illegible]

122. [illegible] - 231, 220

ﷺ: ذَاكَ جِبْرِيلُ أَتَاكُمْ يُعَلِّمُكُمْ مَعَالِمَ دِينِكُمْ.

١٨٧ حَدَّثَنَا وَكِيعٌ حَدَّثَنَا هِشَامُ بْنُ عُرْوَةَ عَنْ أَبِيهِ عُرْوَةَ عَنْ عَاصِمِ بْنِ عُمَرَ عَنْ أَبِيهِ قَالَ قَالَ رَسُولُ اللَّهِ ﷺ: إِذَا أَقْبَلَ اللَّيْلُ وَقَالَ مَرَّةً جَاءَ اللَّيْلُ مِنْ هَهُنَا وَذَهَبَ النَّهَارُ مِنْ هَهُنَا فَقَدْ أَفْطَرَ الصَّائِمُ يَعْنِي الْمَشْرِقَ وَالْمَغْرِبَ.

١٨٨ حَدَّثَنَا يَزِيدُ أَنْبَأَنَا إِسْرَائِيلُ بْنُ يُونُسَ عَنْ عَبْدِ الْأَعْلَى الثَّعْلَبِيِّ عَنْ عَبْدِ الرَّحْمَنِ بْنِ أَبِي لَيْلَى قَالَ: كُنْتُ مَعَ عُمَرَ رَضِيَ اللَّهُ عَنْهُ فَأَتَاهُ رَجُلٌ فَقَالَ إِنِّي رَأَيْتُ الْهِلَالَ هِلَالَ شَوَّالٍ فَقَالَ عُمَرُ رَضِيَ اللَّهُ عَنْهُ يَا أَيُّهَا النَّاسُ أَفْطِرُوا ثُمَّ قَامَ إِلَى عُسٍّ فِيهِ مَاءٌ فَتَوَضَّأَ وَمَسَحَ عَلَى خُفَّيْهِ فَقَالَ الرَّجُلُ وَاللَّهِ يَا أَمِيرَ الْمُؤْمِنِينَ مَا أَتَيْتُكَ إِلَّا لِأَسْأَلَكَ عَنْ هَذَا أَفَرَأَيْتَ غَيْرَكَ فَعَلَهُ فَقَالَ نَعَمْ خَيْرًا مِنِّي وَخَيْرَ الْأُمَّةِ رَأَيْتُ أَبَا الْقَاسِمِ ﷺ فَعَلَ مِثْلَ الَّذِي فَعَلْتُ وَعَلَيْهِ جُبَّةٌ شَامِيَّةٌ ضَيِّقَةُ الْكُمَّيْنِ فَأَدْخَلَ يَدَهُ مِنْ تَحْتِ الْجُبَّةِ ثُمَّ صَلَّى عُمَرُ الْمَغْرِبَ.

நோம். (வந்தவர் ஜிப்ரீல்தான் என நாங்கள் அறியாததால், எங்களிடம்) நபி (ஸல்) அவர்கள், "அவர்தான் (வானவர்) ஜிப்ரீல். உங்களுக்கு உங்களது மார்க்க அறிவைக் கற்றுத் தருவதற்காக உங்களிடம் அவர் வந்தார்" என்று (அவர் சென்றதற்குப் பிறகு சொன்னார்கள்.[123]

187 உமர் (ரலி) அவர்கள் கூறியதாவது:

"இந்தத் திசையிலிருந்து -அதாவது கிழக்கிலிருந்து- இரவு முன்னோக்கி வந்து, அந்தத் திசையிலிருந்து -அதாவது மேற்கிலிருந்து- பகல் பின்னோக்கிப்போனால், நோன்பாளி நோன்பை நிறைவு செய்ய வேண்டும்" என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.[124]

188 அப்துர்ரஹ்மான் பின் அபீலைலா (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

(ஒரு ரமளான் மாதத்தின் இறுதி நாளில்) நான் உமர் (ரலி) அவர்களுடன் (பிறை பார்க்கும் முயற்சியில்) இருந்தேன். அப்போது அவர்களிடம் ஒருவர் வந்து, "நான் ஷவ்வால் மாதத்தின் (தலைப்) பிறையைப் பார்த்தேன்" என்றார். அப்போது உமர் (ரலி) அவர்கள், "மக்களே! நீங்கள் நோன்பைத் துறந்துவிடுங்கள்" என்று கூறிவிட்டு, எழுந்து தண்ணீர் இருந்த பாத்திரத்தின் அருகே சென்று அங்கத் தூய்மை (உளூ) செய்தார்கள். அப்போது (கால்களைக் கழுவாமல்) தம் காலுறைகள் மீது தண்ணீரைத் தொட்டுத் தடவி ('மஸ்ஹு'ச் செய்யலா)னார்கள்.

அப்போது அந்த மனிதர், "அல்லாஹ்வின் மீதாணையாக! இறைநம்பிக்கையாளர்களின் தலைவரே! இதைப் பற்றிக் கேட்பதற்காகவே தங்களிடம் நான் வந்தேன். வேறு யாரேனும் இவ்வாறு செய்ததை நீங்கள் பார்த்ததுண்டா, கூறுங்கள்?" என்று கேட்டார்

அதற்கு உமர் (ரலி) அவர்கள், "ஆம்; என்னைவிடச் சிறந்தவரும், இந்தச் சமுதாயத்தாருள் சிறந்தவருமான அபுல்காசிம் (முஹம்மது-ஸல்) அவர்கள் நான் செய்ததைப் போன்று செய்ததைக் கண்டுள்ளேன். அப்போது நபி (ஸல்) அவர்கள் 'ஷாம்' நாட்டு மேலங்கி அணிந்திருந்தார்கள். அதன் கைப்பகுதி குறுகலாக இருந்தது. பிறகு, அந்த அங்கியின் கீழ்ப் பகுதி வழியாகவே கையை உள்ளே நுழைத்தார்கள்" என்று கூறினார்

---

123. இது முன்சென்ற 179ஆவது ஹதீஸின் கருத்தையும் [illegible] இந்த ஹதீஸ் [illegible] பின் உமர் (ரலி) [illegible] முன்சென்ற 179ஆவது ஹதீஸை [illegible] பின் உமர் (ரலி) [illegible] தம் தந்தை உமர் (ரலி) அவர்களிடமிருந்து கேட்டுள்ளார் [illegible] என நமக்கு [illegible].

124. இந்த ஹதீஸ் புகாரீ (1954), முஸ்லிம் (2002), திர்மிதீ (634), அபூதாவூத் (2004), தாரிமீ (1638), [illegible] (202), இப்னு ஹிப்பான் (3502), இப்னு குஸைமா (3002), அபூஅவானா (241), [illegible] (4/216) [illegible] இடம்பெற்றுள்ளது. மேலும் காண்க: பின்வரும் ஹதீஸ் எண்கள் - 225, 320, 360.

கள் பிறகு உமர் (ரலி) அவர்கள் மஃக்ரிப் தொழுகையைத் தொழுதார்கள்.[125]

189 உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள் கூறியதாவது:

நபி (ஸல்) அவர்கள் உடும்பை (உண்ண வேண்டாமென)த் தடைசெய்யவில்லை ஆயினும் (தனிப்பட்ட முறையில்), அவர்களுக்கு அது பிடிக்கவில்லை.[126]

١٨٩ حدثنا مُحَمَّدُ بْنُ جَعْفَرٍ حَدَّثَنَا سَعِيدٌ عَنْ قَتَادَةَ عَنْ سُلَيْمَانَ عَنْ جَابِرِ بْنِ عَبْدِ اللَّهِ أَنَّ عُمَرَ بْنَ الْخَطَّابِ رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ: إِنَّ نَبِيَّ اللَّهِ ﷺ لَمْ يُحَرِّمِ الضَّبَّ وَلَكِنْ قَذِرَهُ وَقَالَ غَيْرُ مُحَمَّدٍ عَنْ سُلَيْمَانَ الْيَشْكُرِيِّ.

190 உமர் (ரலி) அவர்கள் கூறியதாவது:

நான் நபி (ஸல்) அவர்களிடம் 'உம்ரா' செய்ய அனுமதி கேட்டேன் அவர்கள் அனுமதி தந்துவிட்டு, "என் சகோதரரே! உமது பிரார்த்தனையின்போது எம்மை மறந்துவிடாதீர்" என்றார்கள் அதன் பின்னர் மதீனாவில், "சகோதரரே! உமது பிரார்த்தனையில் எங்களையும் சேர்த்துக்கொள்" என்று கூறினார்கள் அவர்கள் (என்னை) 'என் சகோதரரே' என்று அழைத்ததற்குப் பகரமாக சூரியன் எதன் மீது உதிக்கிறதோ அ(ந்த பூமியான)து எனக்குக் கிடைப்பதை நான் விரும்பமாட்டேன்.[127]

١٩٠ حدثنا مُحَمَّدُ بْنُ جَعْفَرٍ حَدَّثَنَا شُعْبَةُ عَنْ عَاصِمِ بْنِ عُبَيْدِ اللَّهِ عَنْ سَالِمٍ عَنْ عَبْدِ اللَّهِ بْنِ عُمَرَ عَنْ عُمَرَ رَضِيَ اللَّهُ عَنْهُمَا عَنِ النَّبِيِّ ﷺ أَنَّهُ اسْتَأْذَنَهُ فِي الْعُمْرَةِ فَأَذِنَ لَهُ، فَقَالَ: يَا أَخِي لَا تَنْسَنَا مِنْ دُعَائِكَ، وَقَالَ بَعْدُ فِي الْمَدِينَةِ: يَا أَخِي أَشْرِكْنَا فِي دُعَائِكَ، فَقَالَ عُمَرُ: مَا أُحِبُّ أَنَّ لِي بِهَا مَا طَلَعَتْ عَلَيْهِ الشَّمْسُ لِقَوْلِهِ يَا أَخِي.

191 உமர் (ரலி) அவர்கள் கூறியதாவது:

١٩١ حدثنا مُحَمَّدُ بْنُ جَعْفَرٍ حَدَّثَنَا شُعْبَةُ وَحَجَّاجٌ قَالَ سَمِعْتُ شُعْبَةَ عَنْ عَاصِمِ بْنِ عُبَيْدِ اللَّهِ عَنْ سَالِمٍ عَنِ ابْنِ عُمَرَ عَنْ عُمَرَ رَضِيَ اللَّهُ عَنْهُمَا أَنَّهُ قَالَ لِلنَّبِيِّ ﷺ أَرَأَيْتَ مَا نَعْمَلُ فِيهِ أَقَدْ فُرِغَ مِنْهُ أَوْ

நான் நபி (ஸல்) அவர்களிடம், "நாம் ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்டுவிட்ட தலைவிதியின் அடிப்படையில் நற்செயல்கள் புரிகின்றோமா? அல்லது அவை இப்போது

---

125. இது இடைமுறிவுற்ற அறிவிப்பாளர்தொடரில் (முன்கத்திஉ) அமைந்த ஹதீஸ் ஆகும். இதை அறிவிக்கும் [illegible] உமர் (ரலி) அவர்களைச் சந்திக்கவில்லை. மேலும் இதில் [illegible] இடம்பெற்றுள்ளார் [illegible] பலவீனமானவர் [illegible] பலவீனமான ஹதீஸ் ஆகும் [illegible] புகாரீ (363, 2918), முஸ்லிம் (457-459) ஆகிய நூல்களில் பதிவாகியுள்ளது.

126. இது இடைமுறிவுற்ற அறிவிப்பாளர்தொடரில் அமைந்த (முன்கத்திஉ) ஹதீஸ் ஆகும். இதன் அறிவிப்பாளர்தொடரில் நான்காவது அறிவிப்பாளராக இடம்பெற்றுள்ள கத்தாதா (ரஹ்) அவர்கள் [illegible] இதைக் கேட்டதாகக் கூறவில்லை [illegible] இமாம் புகாரீ (ரஹ்) [illegible] போன்ற அறிஞர்கள் கூறியுள்ளனர். எனவே இது பலவீனமான ஹதீஸ் ஆகும். ஆனால் இந்த ஹதீஸ், புகாரீ (5536), முஸ்லிம் (3837), இப்னுமாஜா (3230) உள்ளிட்ட நூல்களில் ஆதாரப்பூர்வமான அறிவிப்பாளர்தொடரில் வந்துள்ளதால் [illegible] ஆதாரப்பூர்வமான ஹதீஸ் என்று குறிப்பிடுகின்றனர்.

127. இதன் அறிவிப்பாளர்தொடரில் நான்காவது அறிவிப்பாளராக இடம்பெறும் ஆஸிம் பின் உபைதுல்லாஹ் பின் ஆஸிம் என்பார் பலவீனமானவர் ஆவார். எனவே இது பலவீனமான ஹதீஸாகும். இந்த ஹதீஸ், திர்மிதீ (3485), அபூதாவூத் (1280), இப்னுமாஜா (2885) [illegible] (8700) [illegible] (742) உள்ளிட்ட நூல்களிலும் இதே ஆஸிம் பின் உபைதுல்லாஹ் வழியாகவே வந்துள்ளது.

நான் புதிதாகத் தோற்றுவிக்கப்படுகின்றனவா?" என்று கேட்டேன். அதற்கு நபி (ஸல்) அவர்கள், "ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட தலைவிதியின் அடிப்படையில்தான் (நற்செயல்கள் புரிகின்றீர்கள்)" என்று கூறினார்கள். அப்போது நான், "நாங்கள் (இதன்மீதே) நம்பிக்கை கொண்டு, (நற்செயல்கள் புரியாமல்) இருந்துவிட மாட்டோமா?" என்று கேட்டேன். அதற்கு நபி (ஸல்) அவர்கள், "சுராகாவின் புதல்வரே! நீங்கள் நற்செயல் புரியுங்கள். (நல்லார், பொல்லார்) எல்லாருக்கும் (அவரவர் செல்லும் வழி) எளிதாக்கப்பட்டுள்ளது. நற்பேறுபெற்றவர் நற்பேற்றுக்குரிய செயல்கள் புரிவார்; நற்பேறு அற்றவர் துர்பேற்றுக்குரிய (தீய)செயல்கள் புரிவார்" என்று கூறினார்கள்.[128]

فِي شَيْءٍ مُبْتَدَإٍ أَوْ أَمْرٍ مُبْتَدَعٍ قَالَ فِيمَا قَدْ فُرِغَ مِنْهُ فَقَالَ عُمَرُ أَلَا نَتَّكِلُ فَقَالَ اعْمَلْ يَا ابْنَ الْخَطَّابِ فَكُلٌّ مُيَسَّرٌ أَمَّا مَنْ كَانَ مِنْ أَهْلِ السَّعَادَةِ فَيَعْمَلُ لِلسَّعَادَةِ وَأَمَّا أَهْلُ الشَّقَاءِ فَيَعْمَلُ لِلشَّقَاءِ.

192 அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்கள் கூறியதாவது:

(கலீஃபா) உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள் மக்களுக்கு உரை நிகழ்த்தினார்கள். அப்போது அவர்கள், அறிந்துகொள்ளுங்கள்! மக்களுள் சிலர், "('விபசாரம் புரிந்தவர் மணமுடித்தவராயிருந்தால் அவரைக் கல்லால் எறிந்து கொல்ல வேண்டும்' என்ற) 'ரஜ்மு'ச் சட்டத்தின் நிலை என்ன? (அதுபற்றி அல்லாஹ்வின் வேதத்தில் கூறப்படவில்லையே? அல்லாஹ்வின் வேதத்தில் விபசாரம் புரிந்தவருக்கு) சாட்டையடி தண்டனை கொடுக்க வேண்டும் என்று (பொதுவாகத்)தானே உள்ளது?" என்று கேட்கிறார்கள்.

١٩٢ حَدَّثَنَا هُشَيْمٌ حَدَّثَنَا الزُّهْرِيُّ عَنْ عُبَيْدِ اللَّهِ بْنِ عُتْبَةَ بْنِ مَسْعُودٍ أَخْبَرَنِي عَبْدُ اللَّهِ بْنُ عَبَّاسٍ حَدَّثَنِي عَبْدُ الرَّحْمَنِ بْنُ عَوْفٍ أَنَّ عُمَرَ بْنَ الْخَطَّابِ رَضِيَ اللَّهُ عَنْهُ خَطَبَ النَّاسَ فَسَمِعْتُهُ يَقُولُ: أَلَا وَإِنَّ أُنَاسًا يَقُولُونَ مَا بَالُ الرَّجْمِ فِي كِتَابِ اللَّهِ؟ الْجَلْدُ وَقَدْ رَجَمَ رَسُولُ اللَّهِ ﷺ وَرَجَمْنَا بَعْدَهُ وَلَوْلَا أَنْ يَقُولَ قَائِلُونَ أَوْ يَتَكَلَّمَ مُتَكَلِّمُونَ أَنَّ عُمَرَ رَضِيَ اللَّهُ عَنْهُ زَادَ فِي كِتَابِ اللَّهِ مَا لَيْسَ مِنْهُ لَأَثْبَتُّهَا كَمَا نَزَلَتْ.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் (மணமுடித்தவர் விபசாரம் புரிந்தால்) கல்லெறி தண்டனை நிறைவேற்றினார்கள். அவர்களுக்குப் பின் (கலீஃபாக்களான) நாங்களும் அதைச் செய்தோம். "இந்த உமர், அல்லாஹ்வின் வேதத்தில் இல்லாத ஒன்றைக் கூடுதலாக்கிவிட்டார்" என்று யாரேனும் பேசிவிடுவர் என்ற அச்சம் மட்டும் இல்லையாயின், (குர்ஆனிலிருந்து எடுக்கப்பட்டுவிட்ட) அந்த வாசகத்தை, அது இறக்கியருளப் பெற்றதைப் போன்றே நான் பதிவு செய்திருப்பேன் என்று குறிப்பிட்டார்கள்.[129]

١٩٣ حَدَّثَنَا مُحَمَّدُ بْنُ جَعْفَرٍ حَدَّثَنَا شُعْبَةُ قَالَ سَمِعْتُ يَزِيدَ بْنَ خُمَيْرٍ يُحَدِّثُ عَنْ حَبِيبِ بْنِ عُبَيْدٍ عَنْ جُبَيْرِ بْنِ نُفَيْرٍ عَنِ ابْنِ السِّمْطِ أَنَّهُ أَتَى

193 ஜுபைர் பின் நுஃபைர் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

---

128. இந்த ஹதீஸின் அறிவிப்பாளர்தொடரில் நான்காவது அறிவிப்பாளராக ஆஸிம் பின் உபைதில்லாஹ் பின் ஆஸிம் என்பார் இடம்பெற்றுள்ளார். அவர் பலவீனமான அறிவிப்பாளர் ஆவார். இதேபோன்ற கருத்தமைந்த ஹதீஸ் புகாரீ (6596, 7552) முஸ்லிம் (5152, 5153) ஆகிய நூல்களிலும் [illegible] ஹதீஸிலும் ஆதாரபூர்வமான அறிவிப்பாளர்தொடரில் பதிவாகியுள்ளது. எனவே இது [illegible] ஹதீஸ் ஆகும்.

129. இக்கருத்தமைந்த ஹதீஸ் புகாரீ (6830, 7323) முஸ்லிம் (3492), திர்மிதீ (1352), அபூதாவூத் (3835) இப்னுமாஜா (2543), முவத்தா மாலிக் (1297) தாரிமீ (2219) ஆகிய நூல்களிலும் இடம்பெற்றுள்ளது.

أَرْضًا يُقَالُ لَهَا دُومِينُ مِنْ حِمْصَ عَلَى رَأْسِ ثَمَانِيَةَ عَشَرَ مِيلًا فَصَلَّى رَكْعَتَيْنِ فَقُلْتُ لَهُ أَتُصَلِّي رَكْعَتَيْنِ فَقَالَ رَأَيْتُ عُمَرَ بْنَ الْخَطَّابِ بِذِي الْحُلَيْفَةِ يُصَلِّي رَكْعَتَيْنِ فَسَأَلْتُهُ فَقَالَ إِنَّمَا أَفْعَلُ كَمَا رَأَيْتُ رَسُولَ اللَّهِ ﷺ أَوْ قَالَ فَعَلَ رَسُولُ اللَّهِ ﷺ.

இப்னுஸ் ஸிம்த் (எனும் ஷுரஹ்பீல் பின் அஸ்ஸிம்த்-ரலி) அவர்கள் (சிரியாவின்) 'ஹிம்ஸ்' என்ற ஊரிலிருந்து பதினெட்டு மைல் (ஏறக்குறைய 33 கி.மீ) தொலைவிலுள்ள 'தவ்மீன்' (அல்லது 'தூமீன்') என்ற பகுதிக்கு வந்தபோது, (நான்கு 'ரக்அத்'கள் கொண்ட கடமையான தொழுகையொன்றை) இரண்டு 'ரக்அத்'களாக (குறைத்துத்) தொழுதார்கள்.

அப்போது அவர்களிடம், "(நான்கு 'ரக்அத்'கள் கொண்ட தொழுகையை) இரண்டு 'ரக்அத்'களாகத் தொழுகிறீர்களே?" என்று நான் கேட்டேன். அதற்கு அவர்கள் கூறினார்கள்: "உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள், 'துல்ஹுலைஃபா'வில் இரண்டு 'ரக்அத்'கள் தொழுததை நான் கண்டேன். உமர் (ரலி) அவர்களிடம் நான் அதைப் பற்றிக் கேட்டபோது, "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் செய்ததை நான் பார்த்ததைப் போன்று' அல்லது 'அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் செய்ததைப் போன்று நானும் செய்தேன்" என விடையளித்தார்கள்.[130]

١٩٤ حَدَّثَنَا أَبُو عَبْدِ الرَّحْمَنِ حَدَّثَنَا أَحْمَدُ بْنُ حَنْبَلٍ قَرَأْتُ عَلَى عَبْدِ الرَّحْمَنِ بْنِ مَهْدِيٍّ : مَالِكٌ عَنِ ابْنِ شِهَابٍ عَنْ سَالِمِ بْنِ عَبْدِ اللَّهِ عَنِ ابْنِ عُمَرَ رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ: دَخَلَ رَجُلٌ مِنْ أَصْحَابِ رَسُولِ اللَّهِ ﷺ الْمَسْجِدَ يَوْمَ الْجُمُعَةِ وَعُمَرُ بْنُ الْخَطَّابِ رَضِيَ اللَّهُ عَنْهُ يَخْطُبُ النَّاسَ فَقَالَ عُمَرُ أَيَّةُ سَاعَةٍ هَذِهِ فَقَالَ يَا أَمِيرَ الْمُؤْمِنِينَ انْقَلَبْتُ مِنَ السُّوقِ فَسَمِعْتُ النِّدَاءَ فَمَا زِدْتُ عَلَى أَنْ تَوَضَّأْتُ فَقَالَ عُمَرُ رَضِيَ اللَّهُ عَنْهُ وَالْوُضُوءَ أَيْضًا وَقَدْ عَلِمْتَ أَنَّ رَسُولَ اللَّهِ ﷺ كَانَ يَأْمُرُ بِالْغُسْلِ.

194 இப்னு உமர் (ரலி) அவர்கள் கூறியதாவது:

உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள் வெள்ளிக்கிழமை (ஜுமுஆ) அன்று மக்களுக்கு உரையாற்றிக்கொண்டிருந்தபோது, நபித்தோழர்களுள் ஒருவர் பள்ளிக்கு(த் தாமதமாக) வந்தார். அப்போது உமர் (ரலி) அவர்கள், "இது எந்த நேரம்? (ஏன் தாமதம்?)" என்று கேட்டார்கள்.

அதற்கு அவர், "இறைநம்பிக்கையாளர்களின் தலைவரே! நான் கடைவீதியிலிருந்து வீடு நோக்கித் திரும்பிக்கொண்டிருந்தபோது, தொழுகை அறிவிப்பை (பாங்கொலியைக்) கேட்டேன். உடனே அங்கத் தூய்மை (உளூ) மட்டும் செய்துவிட்டு (விரைந்து) வருகிறேன்" என்று கூறினார். அதற்கு உமர் (ரலி) அவர்கள், "வெறும் 'உளூ' மட்டும்தானா? (குளிக்கவில்லையா?) அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் (ஜுமுஆவுக்காகக்) குளிக்குமாறு கட்டளையிட்டுவந்ததை நீங்கள் அறிவீர்களே!" என்று கேட்டார்கள்.[131]

١٩٥ حَدَّثَنَا عَبْدُ الرَّحْمَنِ عَنْ سُفْيَانَ عَنْ أَبِي إِسْحَاقَ عَنْ عَمْرِو بْنِ مَيْمُونٍ عَنْ عُمَرَ بْنِ الْخَطَّابِ رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ: كَانَ الْمُشْرِكُونَ لَا يُفِيضُونَ

195 அம்ர் பின் மைமூன் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

உமர் (ரலி) அவர்கள் (ஹஜ்ஜில்) 'முஸ்தலிஃபா'வில் தங்கியிருந்தபோது, சுப்ஹுத்

130. இந்த ஹதீஸ், முஸ்லிம் (1231, 1232), நஸாயீ (1420), முஸன்னஃப் இப்னு அபீஷைபா (2/445), அல்பஸ்ஸார் (313) முஸ்னதுல் ஹுமைதீ (35) உள்ளிட்ட நூல்களிலும் பதிவாகியுள்ளது.

131. காண்க: முன்சென்ற ஹதீஸ் எண் - 87 மற்றும் அடிக்குறிப்பு.

தொழுகை தொழுவித்துவிட்டு). "இணை வைப்போர் 'ஸபீர்' மலைமீது சூரியன் உதிக்காதவரை முஸ்தலிஃபாவிலிருந்து திரும்பிச் செல்ல மாட்டார்கள் (ஆனால்) அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களோ, (சூரியன் உதிப்பதற்கு முன்பே இங்கிருந்து திரும்பிச் சென்று) இணைவைப்போருக்கு மாறுசெய்தார்கள்" என்று கூறினார்கள்.[122]

196 அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

நான் அரபு தீபகற்பத்திலிருந்து யூதர்களையும் கிறிஸ்தவர்களையும் நிச்சயம் வெளியேற்றியே தீருவேன். முஸ்லிம்களைத் தவிர வேறெவரையும் (அங்கு) நான் விட்டுவைக்கமாட்டேன்.[133]

இதை உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

197 அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் கூறியதாவது:

(கலீஃபா) உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள் வெள்ளிக் கிழமை (பள்ளிவாசலில்) மக்களுக்கு உரையாற்றிக்கொண்டிருந்தபோது, நபித்தோழர்களுள் ஒருவர் வந்தார். அவரை உமர் (ரலி) அவர்கள் அழைத்து, "இது எந்த நேரம்? (ஏன் தாமதம்?)" என்று கேட்டார்கள்.

مِنْ جَمْعٍ حَتَّى تُشْرِقَ الشَّمْسُ عَلَى ثَبِيرٍ فَخَالَفَهُمُ النَّبِيُّ ﷺ فَأَفَاضَ قَبْلَ أَنْ تَطْلُعَ الشَّمْسُ.

١٩٦ حَدَّثَنَا عَبْدُ الرَّزَّاقِ أَنْبَأَنَا ابْنُ جُرَيْجٍ حَدَّثَنِي أَبُو الزُّبَيْرِ أَنَّهُ سَمِعَ جَابِرَ بْنَ عَبْدِ اللَّهِ يَقُولُ أَخْبَرَنِي عُمَرُ بْنُ الْخَطَّابِ رَضِيَ اللَّهُ عَنْهُ أَنَّهُ سَمِعَ رَسُولَ اللَّهِ ﷺ يَقُولُ: لَأُخْرِجَنَّ الْيَهُودَ وَالنَّصَارَى مِنْ جَزِيرَةِ الْعَرَبِ حَتَّى لَا أَدَعَ إِلَّا مُسْلِمًا.

١٩٧ حَدَّثَنَا عَبْدُ الرَّزَّاقِ حَدَّثَنَا مَعْمَرٌ عَنِ الزُّهْرِيِّ عَنْ سَالِمٍ عَنْ أَبِيهِ أَنَّ عُمَرَ بْنَ الْخَطَّابِ رَضِيَ اللَّهُ عَنْهُ بَيْنَا هُوَ قَائِمٌ يَخْطُبُ يَوْمَ الْجُمُعَةِ فَدَخَلَ رَجُلٌ مِنْ أَصْحَابِ النَّبِيِّ ﷺ فَنَادَاهُ عُمَرُ رَضِيَ اللَّهُ عَنْهُ أَيَّةُ سَاعَةٍ هَذِهِ فَقَالَ إِنِّي شُغِلْتُ الْيَوْمَ فَلَمْ أَنْقَلِبْ إِلَى أَهْلِي حَتَّى سَمِعْتُ النِّدَاءَ فَلَمْ أَزِدْ عَلَى أَنْ تَوَضَّأْتُ فَقَالَ عُمَرُ رَضِيَ اللَّهُ عَنْهُ الْوُضُوءَ أَيْضًا وَقَدْ عَلِمْتُمْ وَفِي مَوْضِعٍ آخَرَ وَقَدْ عَلِمْتَ أَنَّ رَسُولَ اللَّهِ ﷺ كَانَ يَأْمُرُ بِالْغُسْلِ.

١٩٨ حَدَّثَنَا هَاشِمُ بْنُ الْقَاسِمِ حَدَّثَنَا عِكْرِمَةُ يَعْنِي ابْنَ عَمَّارٍ حَدَّثَنِي سِمَاكٌ الْحَنَفِيُّ أَبُو زُمَيْلٍ قَالَ حَدَّثَنِي عَبْدُ اللَّهِ بْنُ عَبَّاسٍ حَدَّثَنِي عُمَرُ بْنُ الْخَطَّابِ

அதற்கு அவர், "நான் அலுவலில் மூழ்கிவிட்டேன். தொழுகை அறிவிப்பை (பாங்கொலியை)க் கேட்ட பிறகுதான் நான் வீட்டுக்கே திரும்பினேன். உடனே அங்கத் தூய்மை (உளூ) மட்டும் செய்துவிட்டு (விரைந்து) வருகிறேன்" என்று கூறினார்.

அதற்கு உமர் (ரலி) அவர்கள், "வெறும் உளூ மட்டும்தானா? (குளிக்கவில்லையா?) அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் (ஜுமுஆவிற்காகக்) குளிக்குமாறு கட்டளையிட்டு வந்ததை நீங்கள் நன்கு அறிவீர்களே!" என்று கேட்டார்கள்.[134]

198 உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள் கூறியதாவது:

---

122. ஸபீர் என்பது மக்காவுக்கும் அரஃபாவுக்கும் இடையிலுள்ள ஒரு மலையாகும். மேலும் காண்க: முன்சென்ற ஹதீஸ் எண் - 80 மற்றும் அடிக்குறிப்பு

133. இந்த ஹதீஸ் முஸ்லிம் (3626), திர்மிதீ (1532), அபூதாவூத் (2635), [illegible] (238), [illegible] (5394), முஸன்னஃப் அப்துர் ரஸ்ஸாக் (9985), [illegible] (8686), இப்னு ஹிப்பான் (3823) உள்ளிட்ட நூல்களிலும் இடம்பெற்றுள்ளது. இவற்றில் சில அறிவிப்புகளில் "நான் உயிருடன் இருந்தால்..." என்று நபி (ஸல்) அவர்கள் கூறியதாக ஹதீஸ் துவங்குகிறது.

134. காண்க: முன்சென்ற ஹதீஸ் எண்கள் - 87, 104 மற்றும் அடிக்குறிப்புகள்

رَضِيَ اللهُ عَنْهُ قَالَ: لَمَّا كَانَ يَوْمُ خَيْبَرَ أَقْبَلَ نَفَرٌ مِنْ أَصْحَابِ النَّبِيِّ ﷺ فَقَالُوا فُلَانٌ شَهِيدٌ فُلَانٌ شَهِيدٌ حَتَّى مَرُّوا عَلَى رَجُلٍ فَقَالُوا فُلَانٌ شَهِيدٌ فَقَالَ رَسُولُ اللهِ ﷺ كَلَّا إِنِّي رَأَيْتُهُ فِي النَّارِ فِي بُرْدَةٍ غَلَّهَا أَوْ عَبَاءَةٍ ثُمَّ قَالَ رَسُولُ اللهِ ﷺ يَا ابْنَ الْخَطَّابِ اذْهَبْ فَنَادِ فِي النَّاسِ أَنَّهُ لَا يَدْخُلُ الْجَنَّةَ إِلَّا الْمُؤْمِنُونَ قَالَ فَخَرَجْتُ فَنَادَيْتُ أَلَا إِنَّهُ لَا يَدْخُلُ الْجَنَّةَ إِلَّا الْمُؤْمِنُونَ.

கைபர் போர் நாளன்று நபித்தோழர்களுள் சிலர் "இன்ன மனிதர் உயிர்த்தியாகி (ஷஹீத்) ஆனார்; இன்ன மனிதர் உயிர்த்தியாகி ஆனார்" என்று கூறிக்கொண்டே வந்து, இறுதியாக ஒருவரைப் பற்றி "இன்ன மனிதரும் உயிர்த்தியாகி ஆனார்" என்று கூறினர்.

அப்போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "இல்லை! (போர்ச் செல்வங்கள் பங்கிடப்படும் முன் அவற்றிலிருந்து) கோடு போட்ட வண்ணப் போர்வை ஒன்றை அவர் எடுத்துக்கொண்ட காரணத்தால், அவரை நான் நரகத்தில் கண்டேன். (எனவே, அவரை உயிர்த்தியாகி என்று கூறாதீர்கள்)" என்றார்கள்.

பிறகு (என்னிடம்), "கத்தாபின் புதல்வரே! நீங்கள் சென்று, 'இறைநம்பிக்கையாளர்கள் தாம் சொர்க்கத்தில் நுழைவார்கள்' என்று மக்களுக்கு அறிவித்துவிடுங்கள்!" என்றார்கள். அவ்வாறே நானும் சென்று, "அறிந்துகொள்ளுங்கள்! இறைநம்பிக்கையாளர்கள்தாம் சொர்க்கத்தில் நுழைவார்கள்" என்று (மக்களிடையே) அறிவித்தேன்.[136]

١٩٩ حَدَّثَنَا عَبْدُ اللهِ بْنُ يَزِيدَ حَدَّثَنَا دَاوُدُ يَعْنِي ابْنَ أَبِي الْفُرَاتِ حَدَّثَنِي عَبْدُ اللهِ بْنُ بُرَيْدَةَ عَنْ أَبِي الْأَسْوَدِ الدِّيلِيِّ قَالَ: أَتَيْتُ الْمَدِينَةَ وَقَدْ وَقَعَ بِهَا مَرَضٌ فَهُمْ يَمُوتُونَ مَوْتًا ذَرِيعًا فَجَلَسْتُ إِلَى عُمَرَ بْنِ الْخَطَّابِ رَضِيَ اللهُ عَنْهُ فَمَرَّتْ بِهِ جَنَازَةٌ فَأُثْنِيَ عَلَى صَاحِبِهَا خَيْرٌ فَقَالَ عُمَرُ رَضِيَ اللهُ عَنْهُ وَجَبَتْ ثُمَّ مُرَّ بِأُخْرَى فَأُثْنِيَ عَلَى صَاحِبِهَا خَيْرٌ فَقَالَ وَجَبَتْ ثُمَّ مُرَّ بِالثَّالِثَةِ فَأُثْنِيَ عَلَى صَاحِبِهَا شَرٌّ فَقَالَ عُمَرُ رَضِيَ اللهُ عَنْهُ وَجَبَتْ فَقُلْتُ وَمَا

199 அபுல்அஸ்வத் அத்தீலீ (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

மதீனாவில் (கொள்ளை) நோய் பரவி, பரவலாக மக்கள் இறந்துகொண்டிருந்த காலக்கட்டத்தில் நான் அங்கு வந்து உமர் (ரலி) அவர்களுடன் அமர்ந்திருந்தேன். அப்போது ஒரு பிரேதம் (ஜனாஸா) அவர்களைக் கடந்து சென்றது. மக்கள் அவருடைய நற்பண்புகளைக் கூறிப் புகழ்ந்ததும், உமர் (ரலி) அவர்கள், "உறுதியாகிவிட்டது" என்றார்கள்.

பிறகு இன்னொரு பிரேதம் கடந்து சென்றது. அப்போதும் மக்கள் அவரது நற்பண்புகளைக் கூறிப் புகழ்ந்து பேசினர். உடனே உமர் (ரலி) அவர்கள், "உறுதியாகிவிட்டது" என்றார்கள்.

பிறகு மூன்றாவது பிரேதம் கடந்து சென்றது. மக்கள் அவரது தீய பண்புகளைக்

136. இந்த ஹதீஸ் முஸ்லிம் (182), திர்மிதீ (1499), தாரிமீ (2378), இப்னு ஹிப்பான் (4947) [illegible] (207) உள்ளிட்ட நூல்களிலும் பதிவாகியுள்ளது.

அறப்போர்களில் எதிரிகள் விட்டுச் செல்லும் பொருட்களுக்கு 'ஃகனீமத்' என்று பெயர். இதை ஐந்து பங்குகளாகப் பங்கிட்டு அவற்றுள் ஒரு பங்கை இறைத்தூதர் (ஸல்) [illegible] எடுத்துக் கொண்டு மீதி நான்கு பங்குகளைப் போரில் கலந்துகொண்ட வீரர்களுக்கிடையே பங்கிட வேண்டும் என்பது அல்லாஹ்வின் கட்டளை. பார்க்க அல்குர்ஆன் 8:41

பங்கிடுவதற்கு முன் அதிலிருந்து எதையும் எடுக்க யாருக்கும் அனுமதியில்லை. அவ்வாறு யாரேனும் எடுத்திருந்தால் அதைத் திருப்பிச் செலுத்திவிட வேண்டும் [illegible]. அவ்வாறு எடுப்பவர் இறைநம்பிக்கையாளர் அல்லர் என இந்த ஹதீஸ் அறிவிக்கிறது.

وَجَبَتْ يَا أَمِيرَ الْمُؤْمِنِينَ قَالَ قُلْتُ كَمَا قَالَ رَسُولُ اللَّهِ ﷺ: أَيُّمَا مُسْلِمٍ شَهِدَ لَهُ أَرْبَعَةٌ بِخَيْرٍ أَدْخَلَهُ اللَّهُ الْجَنَّةَ، قَالَ قُلْنَا: أَوْ ثَلَاثَةٌ؟ قَالَ أَوْ ثَلَاثَةٌ، قُلْنَا: أَوِ اثْنَانِ، قَالَ: أَوِ اثْنَانِ، ثُمَّ لَمْ نَسْأَلْهُ عَنِ الْوَاحِدِ.

கூறி இகழ்ந்து பேசலாயினர். அப்போதும் உமர் (ரலி) அவர்கள், "உறுதியாகிவிட்டது" என்று கூறினார்கள்.

நான், "இறைநம்பிக்கையாளர்களின் தலைவரே! எது உறுதியாகிவிட்டது?" எனக் கேட்டதும், "எந்த முஸ்லிமுக்காவது, அவர் நல்லவர் என நான்கு பேர் சாட்சியம் அளித்தால், அவரை அல்லாஹ் சொர்க்கத்தில் பிரவேசிக்கச் செய்வான்' என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்" என்றார்கள்.

"மூவர் சாட்சியமளித்தால்...?" என்று நாங்கள் கேட்டோம். அதற்கவர்கள், "மூன்று பேர் சாட்சியம் அளித்தாலும்தான்" என்றார்கள். மீண்டும், "இருவர் சாட்சியளித்தால்...?" என நாங்கள் கேட்டதற்கு, "இரண்டு பேர் சாட்சியம் அளித்தாலும்தான்" என்றார்கள்.

பிறகு நாங்கள் ஒரு நபர் சாட்சியம் அளிப்பது பற்றி அவர்களிடம் கேட்கவில்லை.[136]

٢٠٠ حَدَّثَنَا أَبُو عَبْدِ الرَّحْمَنِ حَدَّثَنَا حَيْوَةُ أَخْبَرَنِي بَكْرُ بْنُ عَمْرٍو أَنَّهُ سَمِعَ عَبْدَ اللَّهِ بْنَ هُبَيْرَةَ يَقُولُ إِنَّهُ سَمِعَ أَبَا تَمِيمٍ الْجَيْشَانِيَّ يَقُولُ سَمِعَ عُمَرَ بْنَ الْخَطَّابِ رَضِيَ اللَّهُ عَنْهُ يَقُولُ إِنَّهُ سَمِعَ نَبِيَّ اللَّهِ ﷺ يَقُولُ: لَوْ أَنَّكُمْ تَتَوَكَّلُونَ عَلَى اللَّهِ حَقَّ تَوَكُّلِهِ لَرَزَقَكُمْ كَمَا يَرْزُقُ الطَّيْرَ تَغْدُو خِمَاصًا وَتَرُوحُ بِطَانًا.

200 உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள் கூறியதாவது:

"நீங்கள் அல்லாஹ்வைச் சார்ந்திருக்க வேண்டிய விதத்தில் சார்ந்திருந்தால், பறவைக்கு உணவளிப்பது போல் உங்களுக்கும் அவன் உணவளிப்பான். அவை, காலையில் வெறும் வயிற்றுடன் புறப்பட்டுச் சென்று, மாலையில் வயிறு நிரம்பிய நிலையில் (கூடு) திரும்புகின்றன" என்று நபி (ஸல்) அவர்கள் கூறியதை நான் கேட்டுள்ளேன்.[137]

٢٠١ حَدَّثَنَا أَبُو عَبْدِ الرَّحْمَنِ حَدَّثَنِي سَعِيدُ بْنُ أَبِي أَيُّوبَ حَدَّثَنِي عَطَاءُ بْنُ دِينَارٍ عَنْ حَكِيمِ بْنِ شَرِيكٍ الْهُذَلِيِّ عَنْ يَحْيَى بْنِ مَيْمُونٍ الْحَضْرَمِيِّ عَنْ رَبِيعَةَ الْجُرَشِيِّ عَنْ أَبِي هُرَيْرَةَ عَنْ عُمَرَ بْنِ الْخَطَّابِ رَضِيَ اللَّهُ عَنْهُ عَنِ النَّبِيِّ ﷺ قَالَ: لَا تُجَالِسُوا أَهْلَ الْقَدَرِ وَلَا تُفَاتِحُوهُمْ.

وَقَالَ أَبُو عَبْدِ الرَّحْمَنِ مَرَّةً سَمِعْتُ رَسُولَ اللَّهِ ﷺ.

201 நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

விதியை மறுப்போருடன் நீங்கள் அமராதீர்கள். உங்கள் வழக்குகளை அவர்களிடம் கொண்டு செல்லாதீர்கள்.[138]

இதை உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

(இந்த ஹதீஸின் அறிவிப்பாளர்தொடரில் எட்டாவது அறிவிப்பாளராக இடம்பெற்றுள்ள) அபூஅப்திர் ரஹ்மான் அவர்கள் (மேற்கண்டவாறு ஒரு முறையும்) மற்றொரு முறை "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடமிருந்து நான் செவியுற்றேன்" என (உமர் (ரலி) அவர்கள் தெரிவித்ததாகவும் அறிவித்தார்கள்.

136. காண்க: முன்சென்ற ஹதீஸ் எண் - 133 மற்றும் அடிக்குறிப்பு

137. இந்த ஹதீஸ் திர்மிதீ (2266), [illegible] (4154), இப்னு ஹிப்பான் (731), ஹாகிம் (8008), [illegible] (231) [illegible] (10), [illegible] (1324), [illegible] (50), [illegible] (1187, 1188) உள்ளிட்ட நூல்களிலும் இடம்பெற்றுள்ளது.

138. இந்த ஹதீஸ், அபூதாவூத் (4087, 4097), இப்னு ஹிப்பான் (79), [illegible] (230), ஹாகிம் (263), [illegible]

202 இப்னுஸ் ஸிம்த் (ரலி) அவர்கள் கூறிய தாவது:

நான் உமர் (ரலி) அவர்களுடன் (மதீனாவி லிருந்து சுமார் 10 கி.மீ. தொலைவிலுள்ள) 'துல்ஹுலைஃபா' எனும் இடம்வரை சென் றேன். அங்கு உமர் (ரலி) அவர்கள் (நான்கு 'ரக்அத்'கள் கொண்ட தொழுகையொன்றை) இரண்டு 'ரக்அத்'களாகத் தொழுதார்கள்.

இது பற்றி அவர்களிடம் நான் கேட்டேன். அதற்கு அவர்கள், "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் செய்ததைப் போன்றே நானும் செய்கிறேன்" என்றார்கள்.[130]

٢٠٢ حدثنا هاشم بن القاسم حدثنا شعبة عن يزيد بن خمير الهمداني أبي عمر قال سمعت حبيب بن عبيد يحدث عن جبير بن نفير عن ابن السمط أنه خرج مع عمر إلى ذي الحليفة فصلى ركعتين فسألته عن ذلك فقال إنما أصنع كما رأيت رسول الله ﷺ.

203 உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள் கூறியதாவது:

பத்ருப் போர் நாளில் (எதிரிகளான) இணை வைப்பாளர்களின் எண்ணிக்கை ஆயிரத்துக் குக் கூடுதலாகவும், (முஸ்லிம்களான) தம் தோழர்களின் எண்ணிக்கை முன்னூற்றுக்கும் சற்றுக் கூடுதலாக இருந்ததையும் நபி (ஸல்) அவர்கள் கண்டார்கள். அப்போது அவர்கள், (தொழுகையின் திசையான) 'கிப்லா'வை முன் னோக்கித் தம் கைகளை நீட்டி இறைவனிடம் இறைஞ்சினார்கள்.

அப்போது அவர்கள் கீழங்கியும் மேல் துண்டும் அணிந்திருந்தார்கள். "இறைவா! எனக்கு நீ அளித்த வாக்குறுதி எங்கே? இறைவா! எனக்கு நீ அளித்த வாக்குறுதியை நிறைவேற்றுவாயாக! இறைவா! முஸ்லிம்களின் இக்குழுவினரை நீ அழித்துவிட்டால், இந்தப் புவியில் உன்னை (மட்டுமே) வழிபட (இனி) யாரும் இருக்க மாட்டார்கள்" என்று தம் கரங்களை நீட்டி, இறைவனிடம் இறைஞ்சிக்கொண்டேயிருந்தார்கள். எந்த அளவுக்கென்றால், (கைகளை உயர்த்தியதால்) அவர்களுடைய தோள்களிலிருந்து அவர்களின் மேல்துண்டு நழுவிக் கீழே விழுந்துவிட்டது.

அப்போது அவர்களிடம் அபூபக்ர் (ரலி) அவர்கள் வந்து, அத்துண்டை எடுத்து அவர்களின் தோள்கள் மீது போட்டுவிட்டு, பின்னாலிருந்து அவர்களைக் கட்டியணைத் துக்கொண்டு, "அல்லாஹ்வின் தூதரே! உங்கள் இறைவனிடம் இறைஞ்சியது போதும்

٢٠٣ حدثنا أبو نوح قراد أنبأنا عكرمة بن عمار حدثنا سماك الحنفي أبو زميل حدثني ابن عباس حدثني عمر بن الخطاب رضي الله عنه قال: لما كان يوم بدر قال نظر النبي ﷺ إلى أصحابه وهم ثلاث مائة ونيف ونظر إلى المشركين فإذا هم ألف وزيادة فاستقبل النبي ﷺ القبلة ثم مد يديه وعليه رداؤه وإزاره ثم قال اللهم أين ما وعدتني اللهم أنجز ما وعدتني اللهم إنك إن تهلك هذه العصابة من أهل الإسلام فلا تعبد في الأرض أبدا قال فما زال يستغيث ربه عز وجل ويدعوه حتى سقط رداؤه فأتاه أبو بكر رضي الله عنه فأخذ رداءه فرداه ثم التزمه من ورائه ثم

[illegible]

130. காண்க: முஸ்லிம் ... எண் - 183 மற்றும் அதன் அடிக்குறிப்பு

قَالَ يَا نَبِيَّ اللَّهِ كَفَاكَ مُنَاشَدَتُكَ رَبَّكَ فَإِنَّهُ سَيُنْجِزُ
لَكَ مَا وَعَدَكَ وَأَنْزَلَ اللَّهُ عَزَّ وَجَلَّ ﴿إِذْ تَسْتَغِيثُونَ
رَبَّكُمْ فَاسْتَجَابَ لَكُمْ أَنِّي مُمِدُّكُمْ بِأَلْفٍ مِنَ
الْمَلَائِكَةِ مُرْدِفِينَ﴾ فَلَمَّا كَانَ يَوْمَئِذٍ وَالْتَقَوْا فَهَزَمَ
اللَّهُ عَزَّ وَجَلَّ الْمُشْرِكِينَ فَقُتِلَ مِنْهُمْ سَبْعُونَ رَجُلًا
وَأُسِرَ مِنْهُمْ سَبْعُونَ رَجُلًا فَاسْتَشَارَ رَسُولُ اللَّهِ
ﷺ أَبَا بَكْرٍ وَعَلِيًّا وَعُمَرَ رَضِيَ اللَّهُ عَنْهُمْ فَقَالَ
أَبُو بَكْرٍ رَضِيَ اللَّهُ عَنْهُ يَا نَبِيَّ اللَّهِ هَؤُلَاءِ بَنُو الْعَمِّ
وَالْعَشِيرَةُ وَالْإِخْوَانُ فَإِنِّي أَرَى أَنْ تَأْخُذَ مِنْهُمُ
الْفِدْيَةَ فَيَكُونُ مَا أَخَذْنَا مِنْهُمْ قُوَّةً لَنَا عَلَى الْكُفَّارِ
وَعَسَى اللَّهُ أَنْ يَهْدِيَهُمْ فَيَكُونُونَ لَنَا عَضُدًا فَقَالَ
رَسُولُ اللَّهِ ﷺ مَا تَرَى يَا ابْنَ الْخَطَّابِ قَالَ قُلْتُ
وَاللَّهِ مَا أَرَى مَا رَأَى أَبُو بَكْرٍ رَضِيَ اللَّهُ عَنْهُ
وَلَكِنِّي أَرَى أَنْ تُمَكِّنَنِي مِنْ فُلَانٍ قَرِيبًا لِعُمَرَ
فَأَضْرِبَ عُنُقَهُ وَتُمَكِّنَ عَلِيًّا رَضِيَ اللَّهُ عَنْهُ مِنْ
عَقِيلٍ فَيَضْرِبَ عُنُقَهُ وَتُمَكِّنَ حَمْزَةَ مِنْ فُلَانٍ أَخِيهِ
فَيَضْرِبَ عُنُقَهُ حَتَّى يَعْلَمَ اللَّهُ أَنَّهُ لَيْسَتْ فِي قُلُوبِنَا
هَوَادَةٌ لِلْمُشْرِكِينَ هَؤُلَاءِ صَنَادِيدُهُمْ وَأَئِمَّتُهُمْ
وَقَادَتُهُمْ فَهَوِيَ رَسُولُ اللَّهِ ﷺ مَا قَالَ أَبُو بَكْرٍ

அவன் உங்களுக்கு அளித்த வாக்குறுதியை நிச்சயம் நிறைவேற்றுவான்" என்று கூறினார்கள்.

அப்போது வல்லமையும் மாண்பும் மிக்க அல்லாஹ், "நீங்கள் உங்கள் இறைவனிடம் பாதுகாப்புக் கோரியபோது, 'உங்களுக்குப் பின்னால் அணிவகுக்கும் ஆயிரம் வானவர்களைக் கொண்டு உங்களுக்கு நான் உதவி செய்வேன்' என்று உங்களுக்கு விடையளித்தான்" (8:9) எனும் வசனத்தை அருளினான்

அன்று காலையானதும், அவர்கள் (இரு அணியினரும்) மோதிக்கொண்டனர். அல்லாஹ் இணைவைப்பாளர்களைத் தோற்கடித்தான் அவர்களுள் எழுபது பேர் கொல்லப்பட்டனர்; எழுபது பேர் சிறைப் பிடிக்கப்பட்டனர் பின்னர் (அந்தக் கைதிகள் தொடர்பாக, 'அவர்களை என்ன செய்யலாம்'? என) அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அபூபக்ர் (ரலி) அலீ, உமர் ஆகிய என்னுடனும் ஆலோசனை செய்தார்கள்.

அப்போது அபூபக்ர் (ரலி) அவர்கள், "அல்லாஹ்வின் தூதரே! (எதிரிகளாயினும்), அவர்கள் நம் தந்தையின் சகோதரர் புதல்வர்களே; நம் குலத்தாரே; நம் சகோதரர்களே. அவர்களிடமிருந்து ஏதேனும் பிணைத் தொகையைப் பெற்றுக்கொள்ளுங்கள்: அது இறைமறுப்பாளர்களுக்கெதிரான வலிமையாக நமக்கு அமையும். அவர்களுக்கு அல்லாஹ் இஸ்லாத்திற்கு வழிகாட்டக் கூடும்" என்றார்கள்.

பிறகு நபி (ஸல்) அவர்கள், "நீங்கள் என்ன கருதுகின்றீர்கள், கத்தாபின் புதல்வரே?" என்று கேட்டார்கள். நான், "அல்லாஹ்வின் மீதாணையாக! அல்லாஹ்வின் தூதரே! அபூபக்ர் அவர்கள் கருதுவதைப் போன்று நான் கருதவில்லை மாறாக, என் உறவினருள் இன்ன மனிதர் ஒருவரை என்னிடம் ஒப்படையுங்கள் அவருடைய கழுத்தைத் துண்டித்துவிடுகிறேன். அகீலை (அவருடைய சகோதரர்) அலீ அவர்களிடம் ஒப்படையுங்கள்; அவரது கழுத்தை அலீ துண்டிக்கட்டும்! ஹம்ஸா அவர்களிடம் அவருடைய இன்ன சகோதரரை ஒப்படையுங்கள். அவரது கழுத்தை ஹம்ஸா துண்டிக்கட்டும். இதன் மூலம் இந்த இணைவைப்பாளர்கள் மீது எங்கள் உள்ளங்களில் எந்தப் பாசமும் இல்லை என்பதை அல்லாஹ் அறிந்துகொள்வான் (ஏனெனில்,) இவர்கள் இறைமறுப்பின் தலைவர்கள்; அதன் முன்னோடிகள்; வழிகாட்டிகள். (எனவே, பிணைத் தொகை பெற்று இவர்களை விடுவிக்க வேண்டாம்)" என்று (ஆலோசனை) கூறினேன்.

அபூபக்ர் (ரலி) அவர்களின் கருத்தையே நபி (ஸல்) அவர்கள் விரும்பினார்கள் எனது கருத்தை அவர்கள் ஆதரிக்கவில்லை. அந்தக் கைதிகளிடமிருந்து பிணைத்தொகை பெற்றுக் கொண்டார்கள்

மறு நாள் காலையில் நான் நபி (ஸல்) அவர்களிடம் சென்றபோது, நபி (ஸல்) அவர்களும் அபூபக்ர் (ரலி) அவர்களும் அமர்ந்து அழுதுகொண்டிருந்தனர்.

நான், "அல்லாஹ்வின் தூதரே! நீங்களும் உங்கள் நண்பரும் ஏன் அழுகின்றீர்கள்? உங்கள் அழுகைக்கான காரணத்தை அறிந் தால், நானும் அழுவேன். அழுகை வராவிட் டாலும், உங்கள் இருவரது அழுகையைக் கண்டு அழுவது போன்றாவது இருப்பேனே!" என்று கூறினேன்

அதற்கு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "கைதிகளிடமிருந்து பிணைத் தொகையைப் பெற்றுக்கொண்டு அவர்களை விடுவித்து விடலாம் என உங்களுடைய நண்பர்கள் எனக்குக் கூறிய ஆலோசனைக்கா கவே நான் அழுகின்றேன் ஆனால், (இதோ) இந்த மரத்திற்கு அருகில், நீங்கள் எவ்வாறு முன்பு வேதனை செய்யப்பட்டீர்கள் என்பது எனக்கு எடுத்துக் காட்டப்பட்டது என்று (தமக்கு அருகிலிருந்த ஒரு மரத்தைக் காட்டிக்) கூறினார்கள்

رَضِيَ اللَّهُ عَنْهُ وَلَمْ يَهْوَ مَا قُلْتُ فَأَخَذَ مِنْهُمُ الْفِدَاءَ فَلَمَّا أَنْ كَانَ مِنَ الْغَدِ قَالَ عُمَرُ رَضِيَ اللَّهُ عَنْهُ غَدَوْتُ إِلَى النَّبِيِّ ﷺ فَإِذَا هُوَ قَاعِدٌ وَأَبُو بَكْرٍ رَضِيَ اللَّهُ عَنْهُ وَإِذَا هُمَا يَبْكِيَانِ فَقُلْتُ يَا رَسُولَ اللَّهِ أَخْبِرْنِي مَاذَا يُبْكِيكَ أَنْتَ وَصَاحِبَكَ فَإِنْ وَجَدْتُ بُكَاءً بَكَيْتُ وَإِنْ لَمْ أَجِدْ بُكَاءً تَبَاكَيْتُ لِبُكَائِكُمَا قَالَ فَقَالَ النَّبِيُّ ﷺ الَّذِي عَرَضَ عَلَيَّ أَصْحَابُكَ مِنَ الْفِدَاءِ لَقَدْ عُرِضَ عَلَيَّ عَذَابُكُمْ أَدْنَى مِنْ هَذِهِ الشَّجَرَةِ لِشَجَرَةٍ قَرِيبَةٍ وَأَنْزَلَ اللَّهُ عَزَّ وَجَلَّ ﴿مَا كَانَ لِنَبِيٍّ أَنْ يَكُونَ لَهُ أَسْرَى حَتَّى يُثْخِنَ فِي الْأَرْضِ (إِلَى قَوْلِهِ) لَوْلَا كِتَابٌ مِنَ اللَّهِ سَبَقَ لَمَسَّكُمْ فِيمَا أَخَذْتُمْ﴾ مِنَ الْفِدَاءِ ثُمَّ أُحِلَّ لَهُمُ الْغَنَائِمُ فَلَمَّا كَانَ يَوْمُ أُحُدٍ مِنَ الْعَامِ الْمُقْبِلِ عُوقِبُوا بِمَا صَنَعُوا يَوْمَ بَدْرٍ مِنْ أَخْذِهِمُ الْفِدَاءَ فَقُتِلَ مِنْهُمْ سَبْعُونَ وَفَرَّ أَصْحَابُ النَّبِيِّ ﷺ عَنِ النَّبِيِّ ﷺ وَكُسِرَتْ رَبَاعِيَتُهُ وَهُشِمَتِ الْبَيْضَةُ عَلَى رَأْسِهِ وَسَالَ الدَّمُ عَلَى وَجْهِهِ وَأَنْزَلَ اللَّهُ تَعَالَى ﴿أَوَلَمَّا أَصَابَتْكُمْ مُصِيبَةٌ قَدْ أَصَبْتُمْ

அப்போது வல்லமையும் மாண்பும் மிக்க அல்லாஹ், "பூமியில் எதிரிகளை வேரறுக்கும்வரை, சிறைப் பிடித்தல் எந்த நபிக்கும் தகாது" என்று தொடங்கி, "நீங்கள் அடைந்த போர்ச் செல்வங்களை அனுமதிக்கப்பட்ட தூய்மையானவை யாகவே (கருதி) உண்ணுங்கள்" (8:67-69) என்பதுவரை (மூன்று வசனங்களை) அருளினான். அதன் பின்னர் போர்ச் செல்வங்களை அவர்களுக்கு அல்லாஹ் அனுமதித்தான்.

மறு ஆண்டில் உஹுதுப் போர் நடந்தது. அப்போரில் முஸ்லிம்கள் எழுபது பேர் கொல்லப்பட்டனர். பத்ருப் போரில் பிடிபட்ட கைதிகளிடமிருந்து பிணைத் தொகை யைப் பெற்றுக்கொண்டு அவர்களை விடுவித்த செயலுக்குத் தண்டனையாகவே இது நடந்தது நபி (ஸல்) அவர்களை விட்டுத் தோழர்கள் வெருண்டோடினர் நபி (ஸல்) அவர்களுடைய (பற்களில் கீழ்வரிசையில் வலப் புறப்) பல் ஒன்று உடைக்கப்பட்டது அவர்களது தலையில் வைத்தே அவர்களது தலைக் கவசம் நொறுக்கப்பட்டது

இதனால், அவர்களது முகத்தில் இரத்தம் வழிந்தது. இது தொடர்பாகவே, "(பத்ருப் போரில்) இதைப் போன்று இரு மடங்குத் துன்பத்தை நீங்கள் (எதிரிகளுக்கு) ஏற்படுத்தியிருக்க, (உஹுதுப் போரில்) உங்களுக்கு ஒரு (மடங்கு)

مثلَيها﴾ الآية بأخذكم الفداء.

துன்பம் நேர்ந்தபோது, 'இது எப்படி நேர்ந்தது?' என்று கேட்டீர்கள். 'உங்களால் (நீங்கள் செய்த தவற்றினால்)தான் இது நேர்ந்தது என்றும், நிச்சயமாக அல்லாஹ் எல்லாவற்றின்மீதும் பேராற்றல் பெற்றவன் என்றும் (நபியே! அவர்களிடம்) கூறுவீராக!' எனும் (3:165ஆவது) இறைவசனம் அருளப்பெற்றது. அதாவது (பத்ரில்) பிணைத் தொகையை நீங்கள் பெற்றதாலேயே இது நேர்ந்தது.[140]

٢٠٤ حدثنا أبو نوح حدثنا مالك بن أنس عن زيد بن أسلم عن أبيه عن عمر بن الخطاب رضي الله عنه قال: كنا مع رسول الله ﷺ في سفر قال فسألته عن شيء ثلاث مرات فلم يرد علي قال فقلت لنفسي ثكلتك أمك يا ابن الخطاب نزرت رسول الله ﷺ ثلاث مرات فلم يرد عليك قال فركبت راحلتي فتقدمت مخافة أن يكون نزل في شيء قال فإذا أنا بمناد ينادي يا عمر أين عمر قال فرجعت وأنا أظن أنه نزل في شيء قال فقال النبي ﷺ نزلت علي البارحة سورة هي أحب إلي من الدنيا وما فيها ﴿إنا فتحنا لك فتحا مبينا ليغفر لك الله ما تقدم من ذنبك وما تأخر﴾.

204 உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள் கூறியதாவது:

நாங்கள் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுடன் ஒரு பயணத்தில் இருந்தோம். அப்போது நான் ஏதோ ஒன்றைக் குறித்து, நபி (ஸல்) அவர்களிடம் மூன்றுமுறை வினவினேன். ஆனால், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் எனக்கு விடையளிக்கவில்லை.

அப்போது நான் (எனக்குள்ளே), "கத்தாபின் புதல்வனே (உமரே)! உன்னை உன் தாய் இழக்கட்டும்! மூன்றுமுறை நீ (கேள்வி கேட்டு) அல்லாஹ்வின் தூதரை வற்புறுத்தினாய். அவர்கள் உனக்கு விடையளிக்கவில்லையே" என்று கூறிக்கொண்டேன். (அல்லாஹ்வின் தூதரிடம் இப்படி நான் நடந்துகொண்டதற்காக) என் தொடர்பாக, ஏதாவது குர்ஆன் (வசனம்) இறங்கிவிடுமோ என்று அஞ்சியதால், நான் எனது ஒட்டகத்தில் ஏறி (முஸ்லிம்களுக்கு) முன்னால் வந்துசேர்ந்தேன்.

அப்போது என்னை ஒருவர், "உமர் எங்கே?" என்று கேட்டு, "உமரே" என்று அழைத்ததைக் கேட்டேன். (நான் நினைத்ததைப் போன்றே) என்னைப் பற்றி குர்ஆன் (வசனம்) இறங்கியிருக்கும் என்று எண்ணிக்கொண்டு, (அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம்) திரும்பினேன். அப்போது அவர்கள், "இந்த இரவு எனக்கு ஒரு (திருக்குர்ஆன்) அத்தியாயம் அருளப்பெற்றுள்ளது. அந்த அத்தியாயம் இந்த உலகத்தையும் இதிலுள்ளவற்றையும்விட எனக்கு மிகவும் விருப்பமானதாகும்" என்று கூறி, "உங்களுக்கு நாம் தெளிவான வெற்றியினை அளித்துள்ளோம். (அதனால்) உங்களின் முன் பின் தவறுகளை மன்னித்து.." (48:1-2) என்று (தொடங்கும் - வசனங்களை) ஓதிக்காட்டினார்கள்.[141]

140. இந்த ஹதீஸ் முஸ்லிம் (3621), அபூதாவூத் (2316), திர்மிதீ (3006), அல்பஸ்ஸார் (205), இப்னு ஹிப்பான் [illegible] இப்னு அபீஷைபா (14/474), முஸ்தத்ரக் [illegible] (3383), முஸ்னது [illegible] (3) உள்ளிட்ட நூல்களிலும் [illegible] இடம்பெற்றுள்ளது.

141. இந்த ஹதீஸ் புகாரீ (4177, 4833, 5012), திர்மிதீ (3262), அல்பஸ்ஸார் (206), முஅத்தா மாலிக் (427), [illegible] (2660), இப்னு ஹிப்பான் (6513), [illegible] (11466), [illegible] (2389), [illegible] (1467) உள்ளிட்ட நூல்களிலும் பதிவாகியுள்ளது.

205 யஸீது பின் அல்ஹவ்தக்கிய்யா என்பார் கூறியதாவது:

உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்களிடம் உணவு கொண்டுவரப்பட்டது அப்போது அவர்கள் மற்றொருவரை (உணவுண்ண) அழைத்தார்கள் அவரோ, "நான் நோன்பு நோற்றுள்ளேன்" என்று கூறினார்.

அதற்கு உமர் (ரலி) அவர்கள், "எந்த நோன்பு நோற்றுள்ளீர்?" என்று கேட்டுவிட்டு, "நான் கூடுதலாக, அல்லது குறைவாக அறிவித்து விடுவேனோ எனும் அச்சம் மட்டும் எனக் கில்லையாயின், உங்களிடம் நான் நபி (ஸல்) அவர்களிடம் கிராமவாசி ஒருவர் முயல் (இறைச்சி) கொண்டுவந்தபோது நடந்த நிகழ்ச் சியை அறிவிப்பேன் எனினும், அம்மார் (ரலி) அவர்களை அழைத்துவரும்படி ஆளனுப்புங் கள்" என்று கூறினார்கள்

அம்மார் (ரலி) அவர்கள் வந்தபோது, "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் கிராமவாசி ஒருவர் முயல் (இறைச்சி) கொண்டு வந்தபோது நீங்கள் இருந்தீர்கள் அல்லவா?" என்று கேட்டார்கள் அதற்கு அம்மார் (ரலி) அவர்கள், "ஆம்" என்று கூறிவிட்டுப் பின்வருமாறு கூறினார்கள்:

٢٠٥ حدثنا أبو النضر حدثنا المسعودي عن حكيم بن جبير عن موسى بن طلحة عن ابن الحوتكية قال: أتي عمر بن الخطاب رضي الله عنه بطعام فدعا إليه رجلا فقال: إني صائم ثم قال وأي الصيام تصوم لولا كراهية أن أزيد أو أنقص لحدثتكم بحديث النبي ﷺ حين جاءه الأعرابي بالأرنب ولكن أرسلوا إلى عمار فلما جاء عمار قال أشاهد أنت رسول الله ﷺ يوم جاءه الأعرابي بالأرنب؟ قال: نعم فقال إني رأيته بها دما فقال كلوها قال إني صائم قال وأي الصيام تصوم؟ قال أول الشهر وآخره قال: إن كنت صائما فصم الثلاث عشرة والأربع عشرة والخمس عشرة.

அந்த முயலில் குருதி படிந்திருந்ததையும் நான் கண்டேன் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "இதை நீங்கள் உண்ணுங்கள்" என்று (ஒருவரிடம்) கூறினார்கள் அதற்கு அவர், "நான் நோன்பு நோற்றுள்ளேன்" என்று கூறினார் "எந்த நோன்பு நோற்றுள் ளாய்?" என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கேட்டார்கள்

அவர், "மாதத்தின் முதல் நாளும் கடைசி நாளும் (வழக்கமாக நான் நோற்கும் நோன்பை)" என்றார். அதற்கு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "நீ நோன்பு நோற்க விரும்பினால், (மாதத்தில் பிறை) 13, 14, 15 ஆகிய நாட்களில் நோன்பு நோற்றுக்கொள்!" என்று கூறினார்கள்.[142]

206 மஸ்ரூக் பின் அல்அஜ்தஉ (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

நான் (கலீஃபா) உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்களைச் சந்தித்தபோது, அவர்கள்

٢٠٦ حدثنا أبو النضر حدثنا أبو عقيل حدثنا مجالد بن سعيد أخبرنا عامر عن مسروق بن الأجدع قال: لقيت عمر بن الخطاب رضي الله عنه فقال لي من أنت قلت مسروق بن الأجدع فقال عمر

142. இந்த ஹதீஸ் முஸ்னது அஹ்மதில் மட்டுமே இடம்பெற்றுள்ளது. இதன் அறிவிப்பாளர்தொடரில் நான்காவது அறிவிப்பாளராக இடம்பெறும் ஹகீம் பின் ஜுபைர் அல்அசதீ என்பவரை இமாம் அஹ்மது (ரஹ்), இப்னு மயீன் (ரஹ்) ஆகியோரும் (ரஹ்) போன்றோர் பலவீனமானவர் என்று கூறியுள்ளனர். இதை உமர் (ரலி) அவர்களிடமிருந்து அறிவிக்கும் யஸீது பின் அல்ஹவ்தக்கிய்யா என்பார் யாரென்றே அறியப்படாதவர் ஆவார். எனவே இது பலவீனமான அறிவிப்பாளர்தொடரில் அமைந்த ஹதீஸாகும். எனினும் இந்த ஹதீஸின் கடைசியில் வரும் ஒவ்வொரு மாதமும் 13, 14, 15 ஆகிய பிறைகளில் நோன்பு நோற்பது தொடர்பான ஹதீஸ்கள் ஆதாரப்பூர்வமான அறிவிப்பாளர்தொடர்களில் திர்மிதீ (692), நஸாயீ (2381), முஸ்னது அஹ்மது (20466), [illegible] (1951), இப்னு குஸைமா (1951), முஸ்னதுல் ஹுமைதீ (470) உள்ளிட்ட நூல்களில் பதிவாகியுள்ளன. பிறைக் குறிப்பின்றி பொதுவாக மாதந்தோறும் மூன்று நோன்பு நோற்பது தொடர்பாக புகாரீ (1178), முஸ்லிம்

என்னிடம், "நீங்கள் யார்?" என்று கேட்டார்கள். அதற்கு நான், "மஸ்ரூக் பின் அல்அஜ்தஉ (அஜ்தஉவின் மகன் மஸ்ரூக்)" என்றேன்.

அதற்கு உமர் (ரலி) அவர்கள், "அஜ்தஉ என்பது ஷைத்தான் (பெயர்) ஆகும் என அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறியதை நான் கேட்டுள்ளேன். எனவே, இனி நீங்கள் மஸ்ரூக் பின் அப்திர்ரஹ்மான் (அப்துர் ரஹ்மானின் புதல்வர் மஸ்ரூக்) ஆவீர்கள்" என்று (பெயர் மாற்றம் செய்து) கூறினார்கள்.

(இந்த ஹதீஸின் அறிவிப்பாளர்தொடரில் மூன்றாம் அறிவிப்பாளராக இடம்பெற்றுள்ள) ஆமிர் பின் ஷராஹீல் (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்:

(மஸ்ரூக் பின் அல்அஜ்தஉ அவர்களின் பெயர்,) பெயர்ப் பதிவேடு ஒன்றில் 'மஸ்ரூக் பின் அப்திர்ரஹ்மான்' என எழுதப்பட்டிருந்ததை நான் கண்டேன். "இது என்ன, (பெயர் மாறியிருக்கிறதே)?" என்று நான் கேட்டேன். அதற்கு மஸ்ரூக் அவர்கள், "உமர் (ரலி) அவர்கள் இப்படித்தான் எனக்குப் பெயர் சூட்டினார்கள்" என்றார்கள்.[143]

رَضِيَ اللهُ عَنْهُ: سَمِعْتُ رَسُولَ اللهِ ﷺ يَقُولُ: الْأَجْدَعُ شَيْطَانٌ وَلَكِنَّكَ مَسْرُوقُ بْنُ عَبْدِ الرَّحْمَنِ.

قَالَ عَامِرٌ: فَرَأَيْتُهُ فِي الدِّيوَانِ مَكْتُوبًا مَسْرُوقُ بْنُ عَبْدِ الرَّحْمَنِ فَقُلْتُ مَا هَذَا فَقَالَ هَكَذَا سَمَّانِي عُمَرُ.

207 உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள் கூறியதாவது:

சுதந்திரமான பெண்ணிடம் (மனைவியிடம்) அவளுடைய அனுமதி இன்றிப் 'புணர்ச்சி இடைமுறிப்பு' ('அஸ்ல்') செய்ய வேண்டாமென நபி (ஸல்) அவர்கள் தடைவிதித்தார்கள்.[144]

٢٠٧ حَدَّثَنَا إِسْحَاقُ بْنُ عِيسَى حَدَّثَنَا ابْنُ لَهِيعَةَ عَنْ جَعْفَرِ بْنِ رَبِيعَةَ عَنِ الزُّهْرِيِّ عَنْ مُحَرَّرِ بْنِ أَبِي هُرَيْرَةَ عَنْ أَبِيهِ عَنْ عُمَرَ بْنِ الْخَطَّابِ رَضِيَ اللهُ عَنْهُ: أَنَّ النَّبِيَّ ﷺ نَهَى عَنِ الْعَزْلِ عَنِ الْحُرَّةِ إِلَّا بِإِذْنِهَا.

208 உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள் கூறியதாவது:

٢٠٨ حَدَّثَنَا أَبُو عَامِرٍ عَبْدُ الْمَلِكِ بْنُ عَمْرٍو قَالَ حَدَّثَنَا هِشَامٌ يَعْنِي ابْنَ سَعْدٍ عَنْ زَيْدِ بْنِ أَسْلَمَ عَنْ

=2136), திர்மிதீ (1691) உள்ளிட்ட நூல்களில் பதிவாகியுள்ளது. மேலும், முயல் உண்ணலாம் என்பது தொடர்பாக புகாரீ (1178, 1981, 2572, 5489, 5535), முஸ்லிம் (1303, 1304, 3951) ஆகிய நூல்களில் நபிமொழிகள் இடம்பெற்றுள்ளன.

143. இந்த ஹதீஸின் அறிவிப்பாளர்தொடரில் நான்காவது அறிவிப்பாளராக இடம்பெறும் முஜாலித் பின் சயீத் என்பாரின் நினைவாற்றல் பற்றி நபிமொழியியல் அறிஞர்கள் பலர் குறைகூறி விமர்சித்துள்ளனர். இவர் பலவீனமானவர் ஆவார். முஜாலித் வழியாகவே அபூதாவூத் (4306), இப்னுமாஜா (3721), ஹாக்கிம் (7851), முஸன்னஃப் இப்னு அபீஷைபா (6/159) உள்ளிட்ட நூல்களில் இந்த ஹதீஸ் பதிவாகியுள்ளது. 'உண்மையில் [illegible] மஸ்ரூக் வழி அறிவிப்பில் 'அஜ்தஉ என்பது ஷைத்தான் ஆகும்' என்பது உமர் (ரலி) அவர்களின் கூற்றாகவே அறிவிக்கப்பட்டுள்ளது. முஜாலித் எனும் பலவீன அறிவிப்பாளரே நபியின் கூற்றாக மாற்றி அறிவித்துவிட்டார்' என இமாம் தாரகுத்னீ அவர்கள் தமது 'அல்இலல்' எனும் நூலில் குறிப்பிடுகிறார்கள்.

144. இந்த ஹதீஸின் அறிவிப்பாளர்தொடரில் இப்னு லஹீஆ இடம்பெறுகிறார். (இப்னு லஹீஆ பற்றி அறியக் காண்க: முன்சென்ற ஹதீஸ் எண்கள் - 83, 417 ஆகியவற்றின் அடிக்குறிப்புகள்) இப்னுமாஜா (1918)விலும் இந்த ஹதீஸ் இடம்பெற்றுள்ளது. இந்த ஹதீஸிலும் இப்னு லஹீஆ இடம்பெற்றிருப்பதோடு, அபூஹுரைரா (ரலி) அவர்களின் புதல்வர் முஹர்ரர் பின் அபீஹுரைரா என்பார் ஹதீஸ் கலையில் [illegible] அறியப்படாதவராக இருப்பதால் இதுவும் பலவீனமான ஹதீஸ் ஆகும்.

குழந்தை பெற்றுக்கொள்ள விருப்பமில்லாத தம்பதியர் தாம்பத்திய உறவு கொள்ளும்போது கணவன் தனது விந்தைப் பெண் குறிக்குள் செலுத்தாமல் வெளியேற்றுவதே 'புணர்ச்சி இடைமுறிப்பு' ('அஸ்ல்') எனப்படும். அதன் பற்றி அறியக் காண்க: ஸஹீஹ் முஸ்லிம் ஹதீஸ் எண் - 2834-2847 மற்றும் அடிக்குறிப்புகள்.

அடுத்த ஆண்டு நான் உயிருடன் இருந்தால், எந்த ஊர் (எனது ஆட்சியில்) வெற்றி கொள்ளப்பட்டாலும், அ(திலுள்ள நிலத்)தை மக்களிடையே நான் பங்கிட்டுக் கொடுத்துவிடுவேன் - கைபர் நிலங்களை நபி (ஸல்) அவர்கள் பங்கிட்டுக் கொடுத்தது போல.[145]

أبيه قال سمعت عمر يقول: لئن عشت إلى هذا العام المقبل لا يفتح للناس قرية إلا قسمتها بينهم كما قسم رسول الله ﷺ خيبر.

209 உமர் (ரலி) அவர்கள் கூறியதாவது:

நான் ஒரு போர்ப் பயணத்தில் நபி (ஸல்) அவர்களுடன் இருந்தேன். அப்போது நான், "இல்லை; என் தந்தை மீது சத்தியமாக" என்று சத்தியம் செய்தேன். அப்போது எனக்குப் பின்னாலிருந்து, "உங்கள் தந்தையர் பெயரால் சத்தியம் செய்யாதீர்கள்" என்று உரத்த குரலில் ஒருவர் கூறினார். (அவர் யாரெனத் திரும்பிப் பார்த்தேன்.) அங்கே நபி (ஸல்) அவர்கள் இருந்தார்கள்.[146]

٢٠٩ حدثنا محمد بن عبد الله الزبيري حدثنا إسرائيل عن سماك عن عكرمة عن ابن عباس عن عمر رضي الله عنه قال: كنت مع النبي ﷺ في غزاة فحلفت لا وأبي فهتف بي رجل من خلفي فقال لا تحلفوا بآبائكم فإذا هو النبي ﷺ.

210 ஜாபிர் (ரலி) அவர்கள் கூறியதாவது:

"நான் உயிருடன் வாழ்ந்தால், அரபு தீபகற்பத்திலிருந்து யூதர்களையும் கிறிஸ்தவர்களையும் அல்லாஹ் நாடினால் ('இன்ஷா அல்லாஹ்') நிச்சயம் வெளியேற்றியே தீருவேன்" என (கலீஃபா) உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள் கூறினார்கள்.[147]

٢١٠ حدثنا أبو أحمد الزبيري حدثنا سفيان عن أبي الزبير عن جابر عن عمر رضي الله عنه قال: لئن عشت إن شاء الله لأخرجن اليهود والنصارى من جزيرة العرب.

٢١١ حدثنا سليمان بن داود أبو داود حدثنا شريك عن عاصم بن عبيد الله عن أبيه عن عمر قال: رأيت رسول الله ﷺ يمسح على الخفين.

211 உமர் (ரலி) அவர்கள் கூறியதாவது:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் ('உளூ' செய்தபோது, கால்களைக் கழுவுவதற்குப் பகரமாக ஈரக் கையால் தமது) காலுறைகள் மீது தடவியதை ('மஸ்ஹு'ச் செய்ததை) நான் கண்டேன்.[148]

---

145. இந்த ஹதீஸின் அறிவிப்பாளர்தொடரில் நான்காம் அறிவிப்பாளராக ஹிஷாம் பின் சஅத் என்பவர் இடம்பெறுகிறார். இவரை ஹதீஸ்கலை வல்லுநர்களுள் பலர் பலவீனமானவர் என்று கூறினாலும், இமாம் அபூதாவூத் (ரஹ்) போன்றவர்கள் இவரை பலமான அறிவிப்பாளர் என்றே குறிப்பிடுகின்றனர். இதேபோன்ற கருத்தமைந்த ஹதீஸ் புகாரீ (2334, 3125, 4235, 4236), அபூதாவூத் ([illegible]) ஆகிய நூல்களிலும் இடம்பெற்றுள்ளது. எனவே, இது 'ஹசன்' தரத்திலமைந்த ஹதீஸ் ஆகும்.

146. இந்த அறிவிப்புச் சிமாக் பின் ஹர்ப் - இக்ரிமா - இப்னு அப்பாஸ் (ரலி) வழியாகவே வந்துள்ளது. எனினும் ஆதாரப்பூர்வமான நபிமொழித் தொகுப்புகளில் இச்செய்தியை மெய்ப்பிக்கும் சான்றுகள் உள்ளன. காண்க: முன்சென்ற ஹதீஸ் எண் - 111 மற்றும் அதன் அடிக்குறிப்பு. மேலும், காண்க: புகாரீ (6646, 6647, 6648), முஸ்லிம் (3360), திர்மிதீ (1453), அபூதாவூத் (2828), முவத்தா மாலிக் (909), நஸாயீ (2236).

147. இது உமர் (ரலி) அவர்களின் கூற்று ('மவ்கூஃப்') ஆகும். ஆயினும், இதே கருத்துள்ள ஹதீஸ் முன்னர் 198ஆவது எண்ணிலும் பின்னரும் 21[illegible]ஆவது எண்ணிலும் பதிவாகியுள்ளது. அது நபி (ஸல்) அவர்களின் கூற்றாக அமைந்துள்ளதால் இது 'மர்ஃபூஉ' எனும் தரம் பெறுகிறது. காண்க: முன்சென்ற ஹதீஸ் எண் - 198 மற்றும் அடிக்குறிப்பு.

148. இது பலவீனமான அறிவிப்பாளர்தொடரில் அமைந்த ஹதீஸ் ஆகும். ஏனெனில், இதன் அறிவிப்பாளர்தொடரில் பலவீனமான அறிவிப்பாளரான ஆஸிம் பின் உபைதில்லாஹ் பின் ஆஸிம் என்பவர் இடம்பெறுகின்றார். ஆயினும், இதே கருத்துள்ள ஆதாரப்பூர்வமான ஹதீஸ்கள் புகாரீ (203, 204), நஸாயீ (120, 121) போன்ற நூல்களில் பதிவு செய்யப்பட்டுள்ளதால், இது 'ஹஸன் லி ஃகைரிஹி' (புறச் சான்றுகளால் ஆதாரப்பூர்வமான) ஹதீஸ் ஆகும்.

212 சய்யார் பின் மஅரூர் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

(கலீஃபா) உமர் (ரலி) அவர்கள் உரை நிகழ்த்தினார்கள். அப்போது, "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் இந்த (மஸ்ஜிதுந் நபவீ) பள்ளிவாசலைக் கட்டினார்கள். அவர்களுடன் முஹாஜிர்களும் அன்சாரிகளுமாகிய நாமும் இருந்தோம். (பள்ளிவாசலில்) நெருக்கடி ஏற்பட்டால், உங்களில் ஒருவர் தம் சகோதரரின் முதுகின்மீது சிரவணக்கம் (சஜ்தா) செய்து கொள்ளட்டும்!" என்று கூறியதைக் கேட்டேன்.

மேலும், பள்ளிவாசலின் நடைபாதையில் சிலர் தொழுவதைக் கண்டபோது, "பள்ளிவாசலுக்குள் (சென்று) தொழுங்கள்" என்றும் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.[149]

٢١٢ حدثنا سليمان بن داود أبو داود حدثنا سلام يعني أبا الأحوص عن سماك بن حرب عن سيار بن المعرور قال: سمعت عمر رضي الله عنه يخطب وهو يقول إن رسول الله ﷺ بنى هذا المسجد ونحن معه المهاجرون والأنصار فإذا اشتد الزحام فليسجد الرجل منكم على ظهر أخيه ورأى قوما يصلون في الطريق فقال صلوا في المسجد.

213 ஹாரிஸா பின் முளர்ரிப் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

நான் உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்களுடன் ஹஜ்ஜுக்குச் சென்றேன். அப்போது, 'ஷாம்' பகுதியைச் சேர்ந்த (முஸ்லிம்களில்) பிரமுகர்கள் சிலர் அவர்களிடம் வந்து, "இறைநம்பிக்கையாளர்களின் தலைவரே! அடிமைகள், கால்நடைகள் ஆகிய செல்வங்களை நாங்கள் வைத்துள்ளோம். எங்களின் செல்வங்களிலிருந்தும் 'ஸகாத்'தை எடுத்து, அவற்றின் மூலம் எங்களைத் தூய்மையாக்குங்கள். அச்செல்வங்களும் எங்களுக்கு தூய்மையானவையாக இருக்கட்டும்" என்றார்கள்.

அதற்கு உமர் (ரலி) அவர்கள், "இது எனக்கு முன்னிருந்தவர்களான (நபி (ஸல்), அபூபக்ர் (ரலி) ஆகிய) இருவரும் செயல்படுத்தாத நடைமுறை ஆகும். ஆகவே, நான் இது குறித்து முஸ்லிம்களிடம் (ஆலோசனை) கேட்கும்வரை எதிர்பார்(த்துக் காத்தி)ருங்கள்" என்றார்கள்.[150]

٢١٣ قال قرأت على يحيى بن سعيد عن زهير قال حدثنا أبو إسحاق عن حارثة بن مضرب أنه حج مع عمر بن الخطاب رضي الله عنه فأتاه أشراف أهل الشام فقالوا: يا أمير المؤمنين إنا أصبنا من أموالنا رقيقا ودوابا فخذ من أموالنا صدقة تطهرنا بها وتكون لنا زكاة، فقال: هذا شيء لم يفعله اللذان كانا من قبلي ولكن انتظروا حتى أسأل المسلمين.

214 அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

நான் (இன்னும் சில காலம்) உயிருடன் இருந்தால், அரபு தீபகற்பத்திலிருந்து யூதர்களையும் கிறிஸ்தவர்களையும் நிச்சயம் வெளியேற்றியே தீருவேன். முஸ்லிம்களைத்

٢١٤ حدثنا روح ومؤمل قالا حدثنا سفيان الثوري عن أبي الزبير عن جابر بن عبد الله أن عمر بن الخطاب رضي الله عنه قال قال رسول الله ﷺ: لئن عشت لأخرجن اليهود والنصارى من جزيرة

149. [illegible] (3/163) [illegible]

150. காண்க: முன்சென்ற ஹதீஸ் எண் - 78 மற்றும் அடிக்குறிப்பு

தவிர வேறெவரையும் (அங்கு) நான் விட்டு வைக்கமாட்டேன்

இதை உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.[181]

215 நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

ஒருவர் இரவில் வாடிக்கையாக ஓதி வருபவற்றை, அல்லது அதில் ஒரு பகுதியை ஓதத் தவறி, அதை அவர் 'ஃபஜ்ர்' தொழுகைக்கும் 'ளுஹ்ர்' தொழுகைக்கும் இடையே ஓதினால், அவர் அதை இரவில் ஓதியதைப் போன்றவரே ஆவார்.

இதை உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.[182]

216 உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள் கூறியதாவது:

பத்ருப் போர் நாளில் (எதிரிகளான) இணை வைப்பாளர்களின் எண்ணிக்கை ஆயிரத்துக்குக் கூடுதலாகவும், (முஸ்லிம்களான) தம் தோழர்களின் எண்ணிக்கை முன்னூற்றுக்கும் சற்றுக் கூடுதலாகவும் இருந்ததை நபி (ஸல்) அவர்கள் கண்டார்கள்.

அப்போது அவர்கள், (தொழுகையின் திசையான) 'கிப்லா'வை முன்னோக்கித் தம் கைகளை நீட்டி, இறைவனிடம் இறைஞ்சினார்கள். அப்போது அவர்கள் கீழங்கியும் மேல்துண்டும் அணிந்திருந்தார்கள்.

الْعَرَبِ حَتَّى لَا أَتْرُكَ فِيهَا إِلَّا مُسْلِمًا.

٢١٥ حَدَّثَنَا عَتَّابُ بْنُ زِيَادٍ حَدَّثَنَا عَبْدُ اللَّهِ يَعْنِي ابْنَ الْمُبَارَكِ أَخْبَرَنَا يُونُسُ عَنِ الزُّهْرِيِّ عَنِ السَّائِبِ بْنِ يَزِيدَ وَعُبَيْدِ اللَّهِ بْنِ عَبْدِ اللَّهِ بْنِ عُتْبَةَ عَنْ عَبْدِ الرَّحْمَنِ بْنِ عَبْدٍ عَنْ عُمَرَ بْنِ الْخَطَّابِ رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ عَبْدُ اللَّهِ وَقَدْ بَلَغَ بِهِ أَبِي إِلَى النَّبِيِّ ﷺ قَالَ: مَنْ فَاتَهُ شَيْءٌ مِنْ وِرْدِهِ أَوْ قَالَ مِنْ حِزْبِهِ مِنَ اللَّيْلِ فَقَرَأَهُ مَا بَيْنَ صَلَاةِ الْفَجْرِ إِلَى الظُّهْرِ فَكَأَنَّمَا قَرَأَهُ مِنْ لَيْلَتِهِ.

٢١٦ حَدَّثَنَا أَبُو نُوحٍ قُرَادٌ حَدَّثَنَا عِكْرِمَةُ بْنُ عَمَّارٍ حَدَّثَنَا سِمَاكٌ الْحَنَفِيُّ أَبُو زُمَيْلٍ حَدَّثَنِي ابْنُ عَبَّاسٍ حَدَّثَنِي عُمَرُ قَالَ: لَمَّا كَانَ يَوْمُ بَدْرٍ قَالَ نَظَرَ النَّبِيُّ ﷺ إِلَى أَصْحَابِهِ وَهُمْ ثَلَاثُ مِائَةٍ وَنَيِّفٌ وَنَظَرَ إِلَى الْمُشْرِكِينَ فَإِذَا هُمْ أَلْفٌ وَزِيَادَةٌ فَاسْتَقْبَلَ النَّبِيُّ ﷺ الْقِبْلَةَ ثُمَّ مَدَّ يَدَهُ وَعَلَيْهِ رِدَاؤُهُ وَإِزَارُهُ، ثُمَّ قَالَ: اللَّهُمَّ أَيْنَ مَا وَعَدْتَنِي اللَّهُمَّ أَنْجِزْ مَا وَعَدْتَنِي اللَّهُمَّ إِنْ تُهْلِكْ هَذِهِ الْعِصَابَةَ مِنْ أَهْلِ الْإِسْلَامِ فَلَا تُعْبَدْ فِي الْأَرْضِ أَبَدًا قَالَ فَمَا زَالَ يَسْتَغِيثُ رَبَّهُ وَيَدْعُوهُ حَتَّى سَقَطَ رِدَاؤُهُ، فَأَتَاهُ أَبُو بَكْرٍ فَأَخَذَ رِدَاءَهُ فَرَدَّاهُ ثُمَّ الْتَزَمَهُ مِنْ وَرَائِهِ، ثُمَّ قَالَ: يَا نَبِيَّ اللَّهِ كَفَاكَ

"இறைவா! எனக்கு நீ அளித்த வாக்குறுதி எங்கே? இறைவா! எனக்கு நீ அளித்த வாக்குறுதியை நிறைவேற்றுவாயாக! இறைவா! முஸ்லிம்களின் இக்குழுவினரை நீ அழித்துவிட்டால், இப்புவியில் உன்னை (மட்டுமே) வழிபட (இனி) யாரும் இருக்க மாட்டார்கள்" என்று தம் கரங்களை நீட்டி, இறைவனிடம் இறைஞ்சிக்கொண்டே இருந்தார்கள். எந்த அளவுக்கென்றால், (கைகளை உயர்த்தியதால்) அவர்களுடைய தோள்களிலிருந்து அவர்களின் மேல் துண்டு நழுவிக் கீழே விழுந்துவிட்டது

அப்போது அவர்களிடம் அபூபக்ர் (ரலி) அவர்கள் வந்து, அத்துண்டை எடுத்து அவர்களின் தோள்கள்மீது போட்டுவிட்டு, பின்னாலிருந்து அவர்களைக் கட்டிய

181. பார்க்க: முன்சென்ற ஹதீஸ் எண்கள் - 196, 210

182. இதே கருத்தைக் கொண்ட ஹதீஸ் முஸ்லிம் (1360), திர்மிதீ (530), நஸாயீ (1767, 1768), அபூதாவூத் (1118), இப்னுமாஜா (1333), முவத்தா மாலிக் (421), தாரமீ (1441), பைஹகீயின் ஸுனனுல் குப்ரா 2/484, 485, முஸன்னஃப் அப்துர் ரஸ்ஸாக் (4747) உள்ளிட்ட நூல்களிலும் இடம்பெற்றுள்ளது

மُنَاشَدَتُكَ رَبَّكَ فَإِنَّهُ سَيُنْجِزُ لَكَ مَا وَعَدَكَ وَأَنْزَلَ
اللَّهُ تَعَالَى ﴿إِذْ تَسْتَغِيثُونَ رَبَّكُمْ فَاسْتَجَابَ لَكُمْ
أَنِّي مُمِدُّكُمْ بِأَلْفٍ مِنَ الْمَلاَئِكَةِ مُرْدِفِينَ﴾ فَلَمَّا
كَانَ يَوْمَئِذٍ وَالْتَقَوْا فَهَزَمَ اللَّهُ الْمُشْرِكِينَ فَقُتِلَ
مِنْهُمْ سَبْعُونَ رَجُلاً وَأُسِرَ مِنْهُمْ سَبْعُونَ رَجُلاً
فَاسْتَشَارَ رَسُولُ اللَّهِ ﷺ أَبَا بَكْرٍ وَعَلِيًّا وَعُمَرَ
فَقَالَ أَبُو بَكْرٍ يَا نَبِيَّ اللَّهِ هَؤُلاَءِ بَنُو الْعَمِّ وَالْعَشِيرَةُ
وَالإِخْوَانُ فَأَنَا أَرَى أَنْ تَأْخُذَ مِنْهُمُ الْفِدَاءَ فَيَكُونُ
مَا أَخَذْنَا مِنْهُمْ قُوَّةً لَنَا عَلَى الْكُفَّارِ وَعَسَى اللَّهُ
عَزَّ وَجَلَّ أَنْ يَهْدِيَهُمْ فَيَكُونُونَ لَنَا عَضُدًا فَقَالَ
رَسُولُ اللَّهِ ﷺ مَا تَرَى يَا ابْنَ الْخَطَّابِ فَقَالَ قُلْتُ
وَاللَّهِ مَا أَرَى مَا رَأَى أَبُو بَكْرٍ وَلَكِنِّي أَرَى أَنْ
تُمَكِّنَنِي مِنْ فُلاَنٍ قَرِيبٍ لِعُمَرَ فَأَضْرِبَ عُنُقَهُ
وَتُمَكِّنَ عَلِيًّا مِنْ عَقِيلٍ فَيَضْرِبَ عُنُقَهُ وَتُمَكِّنَ
حَمْزَةَ مِنْ فُلاَنٍ أَخِيهِ فَيَضْرِبَ عُنُقَهُ حَتَّى يَعْلَمَ اللَّهُ
أَنَّهُ لَيْسَ فِي قُلُوبِنَا هَوَادَةٌ لِلْمُشْرِكِينَ هَؤُلاَءِ
صَنَادِيدُهُمْ وَأَئِمَّتُهُمْ وَقَادَتُهُمْ فَهَوِيَ رَسُولُ اللَّهِ
ﷺ مَا قَالَ أَبُو بَكْرٍ وَلَمْ يَهْوَ مَا قُلْتُ فَأَخَذَ مِنْهُمْ

னைத்துக்கொண்டு, "அல்லாஹ்வின் தூதரே! உங்கள் இறைவனிடம் இறைஞ்சியது போதும். அவன் உங்களுக்கு அளித்த வாக்குறுதியை நிச்சயம் நிறைவேற்றுவான்" என்று கூறினார்கள்.

அப்போது மேலோன் அல்லாஹ், "நீங்கள் உங்கள் இறைவனிடம் பாதுகாப்புக்கோரிய போது, 'உங்களுக்குப் பின்னால் அணிவகுக்கும் ஆயிரம் வானவர்களைக்கொண்டு உங்களுக்கு நான் உதவி செய்வேன்' என்று அவன் உங்களுக்கு விடையளித்தான்" (8:9) எனும் இறைவசனத்தை அருளினான்.

அன்று காலையானதும், அவர்கள் (இரு அணியினரும்) மோதிக்கொண்டனர். அல்லாஹ் இணைவைப்பாளர்களைத் தோற்கடித்தான். அவர்களுள் எழுபது பேர் கொல்லப்பட்டனர்; எழுபது பேர் சிறைப் பிடிக்கப்பட்டனர். பின்னர் (அந்தக் கைதிகள் தொடர்பாக 'அவர்களை என்ன செய்யலாம்?' என) அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அபூபக்ர் (ரலி), அலீ, உமர் ஆகிய மூவருடனும் ஆலோசனை செய்தார்கள்.

அப்போது அபூபக்ர் (ரலி) அவர்கள், "அல்லாஹ்வின் தூதரே! (எதிரிகளாயினும்,) அவர்கள் நம் தந்தையின் சகோதரர் புதல்வர்களே; நம் குலத்தாரே; நம் சகோதரர்களே. அவர்களிடமிருந்து ஏதேனும் பிணைத்தொகையைப் பெற்றுக்கொள்ளுங்கள். அது இறைமறுப்பாளர்களுக்கெதிரான பலமாக நமக்கு அமையும். அவர்களுக்கு அல்லாஹ் இஸ்லாத்திற்கு வழி காட்டக்கூடும்" என்றார்கள்.

பிறகு நபி (ஸல்) அவர்கள், "நீங்கள் என்ன கருதுகின்றீர்கள், கத்தாபின் புதல்வரே?" என்று கேட்டார்கள். நான், "அல்லாஹ்வின் மீதாணையாக! அல்லாஹ்வின் தூதரே! நான் அபூபக்ர் அவர்கள் கருதுவதைப் போன்று கருதவில்லை. மாறாக, என் உறவினருள் இன்ன மனிதரை என்னிடம் ஒப்படையுங்கள். அவருடைய கழுத்தைத் துண்டித்துவிடுகிறேன். அக்கீலை அலீ அவர்களிடம் ஒப்படையுங்கள்; அவரது கழுத்தை அலீ துண்டிக்கட்டும்! ஹம்ஸா அவர்களிடம் அவருடைய இன்ன சகோதரரை ஒப்படையுங்கள்; அவரது கழுத்தை ஹம்ஸா துண்டிக்கட்டும். இதன்மூலம் இந்த இணைவைப்பாளர்கள் மீது எந்தப் பாசமும் எங்கள் உள்ளங்களில் இல்லை என்பதை அல்லாஹ் அறிந்துகொள்வான். (ஏனெனில்,) இவர்கள் இறைமறுப்பின் தலைவர்கள்; அதன் முன்னோடிகள்; வழிகாட்டிகள். (எனவே, பிணைத்தொகை பெற்று இவர்களை விடுவிக்க வேண்டாம்)" என்று (ஆலோசனை) கூறினேன்.

அபூபக்ர் (ரலி) அவர்களின் கருத்தையே நபி (ஸல்) அவர்கள் விரும்பினார்கள். எனது கருத்தை அவர்கள் ஏற்கவில்லை. அந்தக் கைதிகளிடமிருந்து பிணைத் தொகை பெற்றுக் கொண்டார்கள்.

الفداء فلما كان من الغد قال عمر رضي الله عنه غدوت إلى النبي ﷺ فإذا هو قاعد وأبو بكر وإذا هما يبكيان فقلت يا رسول الله أخبرني ماذا يبكيك أنت وصاحبك فإن وجدت بكاء بكيت وإن لم أجد بكاء تباكيت لبكائكما قال قال النبي ﷺ الذي عرض علي أصحابك من الفداء ولقد عرض علي عذابكم أدنى من هذه الشجرة شجرة قريبة وأنزل الله تعالى ﴿ما كان لنبي أن يكون له أسرى حتى يثخن في الأرض﴾ إلى قوله ﴿لمسكم فيما أخذتم﴾ من الفداء ثم أحل لهم الغنائم فلما كان يوم أحد من العام المقبل عوقبوا بما صنعوا يوم بدر من أخذهم الفداء فقتل منهم سبعون وفر أصحاب النبي ﷺ عن النبي ﷺ وكسرت رباعيته وهشمت البيضة على رأسه وسال الدم على وجهه فأنزل الله ﴿أولما أصابتكم مصيبة قد أصبتم مثليها﴾ -إلى قوله-

மறுநாள் காலையில் நான் நபி (ஸல்) அவர்களிடம் சென்றபோது, நபி (ஸல்) அவர்களும் அபூபக்ர் (ரலி) அவர்களும் அமர்ந்து அழுதுகொண்டிருந்தனர்

நான், "அல்லாஹ்வின் தூதரே! நீங்களும் உங்கள் நண்பரும் ஏன் அழுகின்றீர்கள்? உங்கள் அழுகைக்கான காரணத்தை அறிந்தால் நானும் அழுவேன். அழுகை வராவிட்டாலும், உங்கள் இருவரது அழுகையைக் கண்டு அழுவது போன்றாவது இருப்பேனே!" என்று கூறினேன்

அதற்கு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "கைதிகளிடமிருந்து பிணைத்தொகையைப் பெற்றுக்கொண்டு அவர்களை விடுவித்துவிடலாம் என உங்களுடைய நண்பர்கள் எனக்குக் கூறிய ஆலோசனைக்காகவே நான் அழுகிறேன். ஆனால், (இதோ) இந்த மரத்திற்கு அருகில், நீங்கள் எவ்வாறு முன்பு வேதனை செய்யப்பட்டீர்கள் என்பது எனக்கு எடுத்துக் காட்டப்பட்டது" என்று (தமக்கு அருகிலிருந்த ஒரு மரத்தைக் காட்டிக்) கூறினார்கள்

அப்போது வல்லமையும் மாண்பும் மிக்க அல்லாஹ், "பூமியில் எதிரிகளை வேரறுக்கும் வரை, சிறைப் பிடித்தல் எந்த நபிக்கும் தகாது" என்று தொடங்கி, "நீங்கள் அடைந்த போர்ச் செல்வங்களை அனுமதிக்கப்பட்ட தூய்மையானவையாகவே (கருதி) உண்ணுங்கள்" (8:67-69) என்பதுவரை (மூன்று வசனங்களை) அருளினான் அதன் பின்னர் போர்ச் செல்வங்களை முஸ்லிம்களுக்கு அல்லாஹ் அனுமதித்தான்

மறு ஆண்டில் உஹுதுப் போர் நடந்தது. அப்போரில் முஸ்லிம்கள் எழுபது பேர் கொல்லப்பட்டனர். பத்ருப் போரில் பிடிபட்ட கைதிகளிடமிருந்து பிணைத்தொகையைப் பெற்றுக்கொண்டு அவர்களை விடுவித்த செயலுக்குத் தண்டனையாகவே இது நடந்தது (இப்போரின்போது) நபி (ஸல்) அவர்களைவிட்டுத் தோழர்கள் வெருண்டோடினர்!

நபி (ஸல்) அவர்களுடைய (பற்களில் கீழ்வரிசையில் வலப் புறப்) பல் ஒன்று உடைக்கப்பட்டது அவர்களது தலையில் வைத்தே அவர்களது தலைக் கவசம் நொறுக்கப்பட்டது. இதனால் அவர்களது முகத்தில் இரத்தம் வழிந்தது. இது தொடர்பாகவே, "(பத்ருப் போரில்) இதைப் போன்று இரு மடங்குத் துன்பத்தை நீங்கள் (எதிரிகளுக்கு) ஏற்படுத்தியிருக்க, (உஹுதுப் போரில்) உங்களுக்கு ஒரு துன்பம் நேர்ந்தபோது, 'இது எப்படி நேர்ந்தது?' என்று கேட்டீர்கள். 'உங்களால் (நீங்கள் செய்த தவற்றினால்)தான் இது நேர்ந்தது' என்றும், 'நிச்சயமாக அல்லாஹ் எல்லாவற்றின்மீதும் பேராற்றல் பெற்றவன்' என்றும் (நபியே! அவர்களுக்குக்) கூறுவீராக!" எனும் (3:165ஆவது) இறைவசனம் அருளப்பெற்றது

அதாவது, (பத்ரில்) பிணைத் தொகையை நீங்கள் பெற்றதாலேயே இது நேர்ந்தது[183]

217 இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறியதாவது:

நான் நீண்ட நாட்களாக நபி (ஸல்) அவர்களுடைய துணைவியருள் இருவரைப் பற்றி உமர் (ரலி) அவர்களிடம் கேட்க வேண்டும் என்று பேராவல் கொண்டிருந்தேன். (ஏனெனில், அவ்விருவரைப் பற்றித்தான்) மேலோன் அல்லாஹ் (குர்ஆனில்), "நீங்கள் இருவரும் அல்லாஹ்விடம் மன்னிப்புக் கோரினால், (அதுவே நல்லது). உங்கள் இருவரின் உள்ளங்களும் நேரியவழியிலிருந்து பிறழ்ந்துவிட்டிருக்கின்றன" (66:4) என்று கூறியிருந்தான்.

(ஒரு முறை) உமர் (ரலி) அவர்கள் ஹஜ்ஜுக்குச் சென்றார்கள். நானும் (அந்த ஆண்டு) அவர்களுடன் ஹஜ் செய்தேன். (ஹஜ்ஜை முடித்துக்கொண்டு திரும்பும் வழியில்) உமர் (ரலி) அவர்கள் (இயற்கைக் கடனை நிறைவேற்றுவதற்காக) ஒதுங்கினார்கள். அவர்களுடன் நானும் நீர்க் குவளையுடன் சென்றேன்.

إِنَّ اللَّهَ عَلَى كُلِّ شَيْءٍ قَدِيرٌ) بِأَخْذِكُمُ الْفِدَاءَ.

٢١٧ حَدَّثَنَا عَبْدُ الرَّزَّاقِ أَنْبَأَنَا مَعْمَرٌ عَنِ الزُّهْرِيِّ عَنْ عُبَيْدِ اللَّهِ بْنِ عَبْدِ اللَّهِ بْنِ أَبِي ثَوْرٍ عَنِ ابْنِ عَبَّاسٍ رَضِيَ اللَّهُ عَنْهُمَا قَالَ: لَمْ أَزَلْ حَرِيصًا عَلَى أَنْ أَسْأَلَ عُمَرَ ابْنَ الْخَطَّابِ رَضِيَ اللَّهُ عَنْهُ عَنِ الْمَرْأَتَيْنِ مِنْ أَزْوَاجِ النَّبِيِّ ﷺ اللَّتَيْنِ قَالَ اللَّهُ تَعَالَى ﴿إِنْ تَتُوبَا إِلَى اللَّهِ فَقَدْ صَغَتْ قُلُوبُكُمَا﴾ حَتَّى حَجَّ عُمَرُ رَضِيَ اللَّهُ عَنْهُ وَحَجَجْتُ مَعَهُ فَلَمَّا كُنَّا بِبَعْضِ الطَّرِيقِ عَدَلَ عُمَرُ رَضِيَ اللَّهُ عَنْهُ وَعَدَلْتُ مَعَهُ بِالْإِدَاوَةِ فَتَبَرَّزَ ثُمَّ أَتَانِي فَسَكَبْتُ عَلَى يَدَيْهِ فَتَوَضَّأَ فَقُلْتُ يَا أَمِيرَ الْمُؤْمِنِينَ مَنِ الْمَرْأَتَانِ مِنْ أَزْوَاجِ النَّبِيِّ ﷺ اللَّتَانِ قَالَ اللَّهُ تَعَالَى ﴿إِنْ تَتُوبَا إِلَى اللَّهِ فَقَدْ صَغَتْ قُلُوبُكُمَا﴾ فَقَالَ عُمَرُ رَضِيَ اللَّهُ عَنْهُ وَاعَجَبًا لَكَ يَا ابْنَ عَبَّاسٍ قَالَ الزُّهْرِيُّ كَرِهَ وَاللَّهِ مَا سَأَلَهُ عَنْهُ وَلَمْ يَكْتُمْهُ عَنْهُ قَالَ هِيَ حَفْصَةُ وَعَائِشَةُ قَالَ ثُمَّ أَخَذَ يَسُوقُ الْحَدِيثَ

அவர்கள் இயற்கைக் கடனை முடித்துவிட்டு என்னிடம் திரும்பி வந்தார்கள். நான் அவர்களின் கைகளில் (குவளையிலிருந்த) தண்ணீரை ஊற்றினேன். அவர்கள் அங்கத் தூய்மை (உளூ) செய்தார்கள்.

அப்போது நான் அவர்களிடம், "இறைநம்பிக்கையாளர்களின் தலைவரே! நபி (ஸல்) அவர்களுடைய துணைவியருள் இருவரைக் குறித்து, 'நீங்கள் இருவரும் அல்லாஹ்விடம் மன்னிப்புக் கோரினால், (அதுவே நல்லது). உங்கள் இருவரின் உள்ளங்களும் நேரிய வழியிலிருந்து பிறழ்ந்துவிட்டிருக்கின்றன' (66:4) என்று அல்லாஹ் கூறியுள்ளானே, அந்த இருவர் யார்?" என்று கேட்டேன்.

அதற்கு உமர் (ரலி) அவர்கள், "இப்னு அப்பாஸே! உங்களைக் கண்டு நான் வியப்படைகிறேன். ஹஃப்ஸாவும் ஆயிஷா (ரலி) அவர்களும்தாம் அந்த இருவர்" என்று விடையளித்தார்கள்.

(இந்த ஹதீஸின் அறிவிப்பாளர்தொடரில் நான்காவது அறிவிப்பாளராக இடம் பெற்றுள்ள) இப்னு ஷிஹாப் அஸ்ஸுஹ்ரீ (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்: அல்லாஹ்வின் மீதாணையாக! இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் எதைக் குறித்துத் தம்மிடம் கேட்டார்களோ, அதை (அதாவது தம் புதல்வி தொடர்பான ஒரு வசனம் பற்றி வினவியதை) உமர் (ரலி) அவர்கள் விரும்பவில்லை (ஆகவேதான், 'உங்களைக் கண்டு வியப்படைகிறேன்' என்றார்கள்) ஆயினும், அதற்குரிய மறுமொழியை உமர் (ரலி) அவர்கள் மறைக்கவில்லை.

183. பார்க்க: முன்சென்ற ஹதீஸ் எண் - 203 மற்றும் அடிக்குறிப்பு

قَالَ كُنَّا مَعْشَرَ قُرَيْشٍ قَوْمًا نَغْلِبُ النِّسَاءَ فَلَمَّا قَدِمْنَا الْمَدِينَةَ وَجَدْنَا قَوْمًا تَغْلِبُهُمْ نِسَاؤُهُمْ فَطَفِقَ نِسَاؤُنَا يَتَعَلَّمْنَ مِنْ نِسَائِهِمْ قَالَ وَكَانَ مَنْزِلِي فِي بَنِي أُمَيَّةَ بْنِ زَيْدٍ بِالْعَوَالِي قَالَ فَتَغَضَّبْتُ يَوْمًا عَلَى امْرَأَتِي فَإِذَا هِيَ تُرَاجِعُنِي فَأَنْكَرْتُ أَنْ تُرَاجِعَنِي فَقَالَتْ مَا تُنْكِرُ أَنْ أُرَاجِعَكَ فَوَاللَّهِ إِنَّ أَزْوَاجَ النَّبِيِّ ﷺ لَيُرَاجِعْنَهُ وَتَهْجُرُهُ إِحْدَاهُنَّ الْيَوْمَ إِلَى اللَّيْلِ قَالَ فَانْطَلَقْتُ فَدَخَلْتُ عَلَى حَفْصَةَ فَقُلْتُ أَتُرَاجِعِينَ رَسُولَ اللَّهِ ﷺ قَالَتْ نَعَمْ قُلْتُ وَتَهْجُرُهُ إِحْدَاكُنَّ الْيَوْمَ إِلَى اللَّيْلِ قَالَتْ نَعَمْ قُلْتُ قَدْ خَابَ مَنْ فَعَلَ ذَلِكَ مِنْكُنَّ وَخَسِرَ أَفَتَأْمَنُ إِحْدَاكُنَّ أَنْ يَغْضَبَ اللَّهُ عَلَيْهَا لِغَضَبِ رَسُولِهِ فَإِذَا هِيَ قَدْ هَلَكَتْ لَا تُرَاجِعِي رَسُولَ اللَّهِ وَلَا تَسْأَلِيهِ شَيْئًا وَسَلِينِي مَا بَدَا لَكِ وَلَا يَغُرَّنَّكِ إِنْ كَانَتْ جَارَتُكِ هِيَ أَوْسَمَ وَأَحَبَّ إِلَى رَسُولِ اللَّهِ مِنْكِ

பிறகு உமர் (ரலி) அவர்கள் நடந்த நிகழ்ச்சி முழுவதையும் கூறலானார்கள். அப்போது அவர்கள் கூறியதாவது:

குறைஷிக் குலத்தாராகிய நாங்கள் (மக்காவில் இருந்தபோது), பெண்களை மிகைத்தவர்களாகவே இருந்துவந்தோம் (எங்களை எதிர்த்துப் பேசாத அளவுக்கு அவர்களை அடக்கி வைத்திருந்தோம்.) நாங்கள் (மக்காவைத் துறந்து) மதீனாவுக்கு வந்தபோது, அங்கு ஒரு சமுதாயத்தைக் கண்டோம். ஆண்களைப் பெண்கள் மிகைக்கக்கூடியவர்களாக இருந்தனர். இதை எங்களுடைய பெண்களும் அப்பெண்களிடமிருந்து கற்றுக்கொள்ளத் தொடங்கினர்.

எனது வீடு (மதீனாவின்) மேட்டுப் பகுதி கிராமங்களில் பனூ உமய்யா பின் ஸைத் குலத்தாரிடையே இருந்தது (ஒரு நாள்) நான் என் மனைவிமீது கோபப்பட்டேன். அவர் என்னை எதிர்த்துப் பேசினார். அவர் என்னை எதிர்த்துப் பேசியது எனக்குப் பிடிக்கவில்லை; அதை நான் வெறுத்தேன்.

அப்போது அவர், "நான் உங்களை எதிர்த்துப் பேசியதற்காக நீங்கள் ஏன் (என்னை) வெறுக்கிறீர்கள்? அல்லாஹ்வின் மீதாணையாக! நபி (ஸல்) அவர்களுடைய மனைவியர்கூட (நபியின் பேச்சுக்கு) மறு பேச்சு பேசத்தான் செய்கிறார்கள். அவர்களுள் சிலர் நபியவர்களிடம் பகலில் இருந்து இரவுவரைப் பேசுவதில்லை" என்று கூறினார்.

உடனே நான் அங்கிருந்து புறப்பட்டு (என் புதல்வி) ஹஃப்ஸாவிடம் சென்று, "நீங்கள் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் பேச்சுக்கு மறு பேச்சுப் பேசுகிறீர்களா?" என்று கேட்டேன். அதற்கு ஹஃப்ஸா, "ஆம்" என்று பதிலளித்தார். நான், "உங்களுள் சிலர் அல்லாஹ்வின் தூதரிடம் பகலில் இருந்து இரவுவரை கோபமாக இருக்கிறீர்களா?" என்று கேட்டேன். அதற்கும் ஹஃப்ஸா, "ஆம்" என்றார்.

நான், "இப்படிச் செய்தவர் இழப்புக்குள்ளாகிவிட்டார்! உங்களுள் ஒருவர் மீது இறைத்தூதருக்குக் கோபம் ஏற்பட்டால், அவர்மீது அல்லாஹ்வும் கோபமடைந்துவிடுவான் எனும் அச்சம் அவருக்கில்லையா? அவ்வாறாயின், அவர் அழிந்துபோய்விடுவார்! (எனவே,) அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களை நீ எதிர்த்துப் பேசாதே! அவர்களிடம் (அதிகமாக உன் தேவைகள்) எதையும் கேட்டுக்கொண்டிராதே! உனக்கு (அவசியத் தேவையெனத்) தோன்றியதை என்னிடம் கேள். உன் அண்டை வீட்டுக்காரர் உன்னைவிட அழகு மிக்கவராகவும், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுக்குப் பிரியமானவராகவும் இருப்பதை வைத்து, (அவர் நபியவர்களிடம் நடந்து கொள்வதைப் பார்த்து) நீ ஏமாந்துப் போய் (அவரைப் போல நடந்துகொள்ளத் துணிந்துவிடாதே" என்று நான் (என் மகளுக்கு அறிவுரை) கூறினேன்.

-ஆயிஷா (ரலி) அவர்களை மனதில் வைத்தே அவ்வாறு உமர் (ரலி) அவர்கள்

يُرِيدُ عَائِشَةَ رَضِيَ اللَّهُ عَنْهَا قَالَ وَكَانَ لِي جَارٌ مِنَ الْأَنْصَارِ وَكُنَّا نَتَنَاوَبُ النُّزُولَ إِلَى رَسُولِ اللَّهِ ﷺ فَيَنْزِلُ يَوْمًا وَأَنْزِلُ يَوْمًا فَيَأْتِينِي بِخَبَرِ الْوَحْيِ وَغَيْرِهِ وَآتِيهِ بِمِثْلِ ذَلِكَ قَالَ وَكُنَّا نَتَحَدَّثُ أَنَّ غَسَّانَ تُنْعِلُ الْخَيْلَ لِتَغْزُوَنَا فَنَزَلَ صَاحِبِي يَوْمًا ثُمَّ أَتَانِي عِشَاءً فَضَرَبَ بَابِي ثُمَّ نَادَانِي فَخَرَجْتُ إِلَيْهِ فَقَالَ حَدَثَ أَمْرٌ عَظِيمٌ قُلْتُ وَمَاذَا أَجَاءَتْ غَسَّانُ قَالَ لَا بَلْ أَعْظَمُ مِنْ ذَلِكَ وَأَطْوَلُ طَلَّقَ الرَّسُولُ نِسَاءَهُ فَقُلْتُ قَدْ خَابَتْ حَفْصَةُ وَخَسِرَتْ قَدْ كُنْتُ أَظُنُّ هَذَا كَائِنًا حَتَّى إِذَا صَلَّيْتُ الصُّبْحَ شَدَدْتُ عَلَيَّ ثِيَابِي ثُمَّ نَزَلْتُ فَدَخَلْتُ عَلَى حَفْصَةَ وَهِيَ تَبْكِي فَقُلْتُ أَطَلَّقَكُنَّ رَسُولُ اللَّهِ ﷺ فَقَالَتْ لَا أَدْرِي هُوَ هَذَا مُعْتَزِلٌ فِي هَذِهِ الْمَشْرُبَةِ فَأَتَيْتُ غُلَامًا لَهُ أَسْوَدَ فَقُلْتُ اسْتَأْذِنْ لِعُمَرَ فَدَخَلَ الْغُلَامُ ثُمَّ خَرَجَ إِلَيَّ فَقَالَ قَدْ ذَكَرْتُكَ لَهُ فَصَمَتَ فَانْطَلَقْتُ حَتَّى أَتَيْتُ الْمِنْبَرَ فَإِذَا عِنْدَهُ رَهْطٌ جُلُوسٌ

கூறினார்கள்.-

(தொடர்ந்து உமர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:) எனக்கு அன்சாரி அண்டை வீட்டுக்காரர் ஒருவர் இருந்தார். நாங்கள் இருவரும் (மேட்டுப் பாங்கான எங்கள் கிராமத்திலிருந்து) முறை வைத்துக்கொண்டு (அங்கிருந்து) இறங்கிவந்து, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் இருப்போம். அவர் ஒரு நாள் நபியவர்களுடன் இருப்பார்; நான் ஒரு நாள் இருப்பேன். அவர் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுடன் இருக்கும் அன்றைய நாளின் வேத அறிவிப்புகள் முதலானவற்றை என்னிடம் வந்து தெரிவிப்பார். அதைப் போன்றே நானும் செய்வேன்

அந்தக் கால கட்டத்தில் நாங்கள் (சிரியா நாட்டில் வாழும்) 'ஃகஸ்ஸான்' குலத்தார் எங்கள் (மதீனா) மீது போர் தொடுப்பதற்காகக் குதிரைகளுக்கு லாடம் அடித்துக் கொண்டிருக்கின்றனர் என்று ஒரு செய்தியைப் பேசிக்கொண்டிருந்தோம்.

(இவ்வாறிருக்க, ஒரு நாள்) என் நண்பர் (தமது முறை நாளில் எங்கள் பகுதியிலிருந்து) இறங்கி (அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் சென்றுவிட்டு) 'இஷா' நேரத்தில் என்னிடம் வந்தார்; என் வீட்டுக் கதவை (பலமாகத்) தட்டி, என்னை அழைத்தார். நான் வெளியே வந்தபோது, "(இன்று) மிகப்பெரிய சம்பவமொன்று நடந்துவிட்டது" என்று கூறினார்.

நான், "என்ன அது? ஃகஸ்ஸானியர் (படையெடுத்து) வந்துவிட்டனரா?" என்று கேட்டேன். "இல்லை; அதைவிடப் பெரிய, கடுமையான சம்பவம் நடந்துவிட்டது! நபி (ஸல்) அவர்கள் தம் மனைவியரை மணவிலக்குச் செய்துவிட்டார்கள்" என்று சொன்னார்.

'ஹஃப்ஸா மோசமான இழப்புக்குரியவராகிவிட்டார்! என்ன நடக்குமென்று நான் நினைத்திருந்தேனோ, அது நடந்துவிட்டது' என்று நான் சொல்லிக்கொண்டேன். சுப்ஹுத் தொழுதுவிட்டு, என் உடைகளை அணிந்துகொண்டு, என் வீட்டிலிருந்து இறங்கினேன். ஹஃப்ஸாவிடம் சென்றேன். அவர் அழுதுகொண்டிருந்தார். "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் உன்னை மணவிலக்குச் செய்துவிட்டார்களா?" என்று அவரிடம் கேட்டேன். அதற்கு ஹஃப்ஸா, "தெரியாது. அவர்கள் இதோ எங்களைப் பிரிந்து மாடியில் இருக்கிறார்கள்" என்று கூறினார்கள். உடனே அங்கிருந்த அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுடைய கறுப்பு அடிமையிடம் நான் வந்து, "உமருக்காக (நபியவர்களின் அறைக்குள் வர) அனுமதி கேள்" என்று கூறினேன். அவர் உள்ளே சென்று பிறகு என்னிடம் வந்து, "நான் நபியவர்களிடம் உங்களைப் பற்றிக் கூறினேன். அவர்கள் மௌனமாக இருந்துவிட்டார்கள்" என்று கூறினார்.

உடனே நான் அங்கிருந்து புறப்பட்டு, சொற்பொழிவு மேடை (மிம்பர்) அருகே

சென்று அமர்ந்துவிட்டேன். அங்கு ஒரு கூட்டத்தார் அமர்ந்திருந்தார்கள். அவர்களுள் சிலர் (கேள்விப்பட்ட செய்தியை எண்ணி) அழுதுகொண்டிருந்தனர். நான் சிறிது நேரம் அமர்ந்திருந்தேன்.

பிறகு துக்கம் தாளாமல் (மீண்டும்) அந்தப் பணியாளரிடம் வந்து, "உமருக்காக (நபியவர்களின் அறைக்குள் வர) அனுமதி கேள்" என்று சொன்னேன். அவர் உள்ளே சென்றுவிட்டு என்னிடம் வந்து, "நான் நபியவர்களிடம் உங்களைப் பற்றிச் சொன்னேன். அவர்கள் மௌனமாக இருந்துவிட்டார்கள்" என்று கூறினார்.

உடன், நான் அங்கிருந்து புறப்பட்டுப் பள்ளியின் சொற்பொழிவு மேடைக்கருகில் வந்தமர்ந்தேன். பிறகு துக்கம் தாளாமல் (மீண்டும்) அந்தப் பணியாளரிடம் வந்து, "உமருக்காக (நபியவர்களின் அறைக்குள் வர) அனுமதி கேள்" என்று சொன்னேன். அவர் உள்ளே சென்றுவிட்டு என்னிடம் வந்து, "நான் நபியவர்களிடம் உங்களைப் பற்றிச் சொன்னேன். அவர்கள் மௌனமாக இருந்துவிட்டார்கள்" என்று கூறினார்.

يَبْكِي بَعْضُهُمْ فَجَلَسْتُ قَلِيلاً ثُمَّ غَلَبَنِي مَا أَجِدُ
فَأَتَيْتُ الْغُلاَمَ فَقُلْتُ اسْتَأْذِنْ لِعُمَرَ فَدَخَلَ الْغُلاَمُ
ثُمَّ خَرَجَ عَلَيَّ فَقَالَ قَدْ ذَكَرْتُكَ لَهُ فَصَمَتَ فَخَرَجْتُ
فَجَلَسْتُ إِلَى الْمِنْبَرِ ثُمَّ غَلَبَنِي مَا أَجِدُ فَأَتَيْتُ
الْغُلاَمَ فَقُلْتُ اسْتَأْذِنْ لِعُمَرَ فَدَخَلَ ثُمَّ خَرَجَ إِلَيَّ
فَقَالَ قَدْ ذَكَرْتُكَ لَهُ فَصَمَتَ فَوَلَّيْتُ مُدْبِرًا فَإِذَا
الْغُلاَمُ يَدْعُونِي فَقَالَ ادْخُلْ فَقَدْ أَذِنَ لَكَ فَدَخَلْتُ
فَسَلَّمْتُ عَلَى رَسُولِ اللَّهِ ﷺ فَإِذَا هُوَ مُتَّكِئٌ عَلَى
رَمْلِ حَصِيرٍ وَحَدَّثَنَاه يَعْقُوبُ فِي حَدِيثِ صَالِحٍ
قَالَ رُمَالِ حَصِيرٍ قَدْ أَثَّرَ فِي جَنْبِهِ فَقُلْتُ أَطَلَّقْتَ
يَا رَسُولَ اللَّهِ نِسَاءَكَ فَرَفَعَ رَأْسَهُ إِلَيَّ وَقَالَ لاَ فَقُلْتُ
اللَّهُ أَكْبَرُ لَوْ رَأَيْتَنَا يَا رَسُولَ اللَّهِ وَكُنَّا مَعْشَرَ قُرَيْشٍ
قَوْمًا نَغْلِبُ النِّسَاءَ فَلَمَّا قَدِمْنَا الْمَدِينَةَ وَجَدْنَا قَوْمًا
تَغْلِبُهُمْ نِسَاؤُهُمْ فَطَفِقَ نِسَاؤُنَا يَتَعَلَّمْنَ مِنْ نِسَائِهِمْ
فَتَغَضَّبْتُ عَلَى امْرَأَتِي يَوْمًا فَإِذَا هِيَ تُرَاجِعُنِي
فَأَنْكَرْتُ أَنْ تُرَاجِعَنِي فَقَالَتْ مَا تُنْكِرُ أَنْ أُرَاجِعَكَ

எனவே, நான் திரும்பினேன். அப்போது அந்தப் பணியாளர் என்னை அழைத்து, "உள்ளே செல்லுங்கள்! உங்களுக்கு நபியவர்கள் அனுமதியளித்துவிட்டார்கள்" என்று கூறினார். உடனே நான் (அந்த அறைக்குள்) நுழைந்து அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுக்கு 'சலாம்' சொன்னேன். அங்கு அவர்கள் (பேரீச்ச ஓலையால்) வேயப்பட்ட பாய் ஒன்றில் சாய்ந்து படுத்திருந்தார்கள். அவர்களது விலாப் பகுதியில் அந்தப் பாயின் அடையாளம் பதிந்திருந்தது.

பிறகு, "அல்லாஹ்வின் தூதரே! தங்கள் மனைவியரை மணவிலக்குச் செய்துவிட்டீர்களா?" என்று கேட்டேன். நபியவர்கள் என்னை நோக்கித் தமது தலையை உயர்த்தி, "இல்லை (மணவிலக்குச் செய்யவில்லை)" என்று கூறினார்கள். உடனே நான், "அல்லாஹு அக்பர் (அல்லாஹ் மிகப் பெரியவன்)" என்று சொன்னேன்.

பிறகு (அவர்களது கோபத்தைத் தணிக்கப் பின்வருமாறு கூறினேன்:) "அல்லாஹ்வின் தூதரே! குறைஷிக் குலத்தாராகிய நாங்கள் பெண்களை அடக்கி வைத்திருந்தோம். நாங்கள் மதீனாவுக்கு வந்தபோது, ஆண்கள் மீது பெண்கள் ஆதிக்கம் செலுத்தும் ஒரு கூட்டத்தாரை (அன்சாரிகளை)க் கண்டோம். எங்கள் பெண்களும் அப்பெண்களைப் பார்த்து (ஆண்களை எதிர்த்துப் பேசும் பழக்கத்தைக்) கற்றுக்கொள்ளத் தொடங்கிவிட்டனர். நான் ஒரு நாள் என் மனைவி மீது கோபம் கொண்டேன். அவர் அப்போது என்னை எதிர்த்துப் பேசிக்கொண்டிருந்தார். அவர் என்னிடம் எதிர்த்துப் பேசியதை நான் வெறுத்தேன். அப்போது அவர், 'நான் உங்களை

فوالله إن أزواج رسول الله ﷺ ليراجعنه وتهجره
إحداهن اليوم إلى الليل فقلت قد خاب من فعل
ذلك منهن وخسر أفتأمن إحداهن أن يغضب الله
عليها لغضب رسوله فإذا هي قد هلكت فتبسم
رسول الله ﷺ فقلت يا رسول الله فدخلت على
حفصة فقلت لا يغرك إن كانت جارتك هي
أوسم وأحب إلى رسول الله ﷺ منك فتبسم
أخرى فقلت أستأنس يا رسول الله قال نعم
فجلست فرفعت رأسي في البيت فوالله ما رأيت
فيه شيئا يرد البصر إلا أهبة ثلاثة فقلت ادع يا
رسول الله أن يوسع على أمتك فقد وسع على
فارس والروم وهم لا يعبدون الله فاستوى
جالسا ثم قال أفي شك أنت يا ابن الخطاب
أولئك قوم عجلت لهم طيباتهم في الحياة
الدنيا فقلت استغفر لي يا رسول الله وكان
أقسم أن لا يدخل عليهن شهرا من شدة موجدته

எதிர்த்துப் பேசுவதை வெறுக்கிறீர்களே! அல்லாஹ்வின் மீதாணையாக! நபி (ஸல்) அவர்களின் மனைவியருங்கூட நபியவர்களின் பேச்சுக்கு மறுபேச்சுப் பேசத்தானே செய்கின்றனர் அவர்களுள் ஒருவர் நபியவர்களுடன் கோபித்துக்கொண்டு அன்றையநாள் இரவுவரை பேசுவதில்லை' என்று கூறினார்

"நான், 'இப்படிச் செய்தவர் மோசமான இழப்புக்குள்ளாகிவிட்டார். அவர்களுள் ஒருவர் மீது இறைத்தூதருக்குக் கோபம் ஏற்பட்டால், அவர்மீது அல்லாஹ்வும் கோபமடைந்துவிடுவான் எனும் அச்சம் அவருக்கில்லையா? அவ்வாறாயின், அவர் அழிந்து போய்விடுவார்' என்று சொன்னேன்" என்று கூறினேன். இதைக் கேட்டு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் புன்னகைத்தார்கள்

பிறகு நான், "அல்லாஹ்வின் தூதரே! நான் (என் மகள்) ஹஃப்ஸாவிடம் சென்று, 'உன் அண்டை வீட்டுக்காரர் (ஆயிஷா) உன்னைவிட அழகானவராகவும், அல்லாஹ்வின் தூதருக்குப் பிரியமானவராகவும் இருப்பதை வைத்து, (அவர் நபியவர்களிடம் அதிக உரிமை எடுத்துக் கொள்வதைக் கண்டு) நீ ஏமாந்துவிடாதே!' என்று கூறினேன்" என்றேன். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் இன்னொரு முறை புன்னகைத்தார்கள்.

நான், "அல்லாஹ்வின் தூதரே! (தங்களுடன் அமர்ந்து, தங்களது) தனிமையைப் போக்கட்டுமா?" என்று கேட்டேன். அவர்கள், "ஆம்" என்றார்கள். உடனே நான் அமர்ந்து கொண்டேன். பிறகு எனது தலையை உயர்த்தி, அந்த அறையை நோட்டமிட்டேன். அல்லாஹ்வின் மீதாணையாக! கண்ணைக் கவருகின்ற எந்தப் பொருளையும் நான் காணவில்லை; மூன்றே மூன்று தோல்களைத் தவிர! அப்போது நான், "தங்கள் சமுதாயத்தாருக்கு (உலகச் செல்வங்களை)த் தாராளமாக வழங்கும்படி அல்லாஹ்விடம் பிரார்த்தியுங்கள், அல்லாஹ்வின் தூதரே! ஏனெனில், பாரசீகர்களுக்கும் ரோமர்களுக்கும் -அவர்கள் (ஒரே இறைவன்) அல்லாஹ்வை வழிபடாதவர்களாக இருந்தும்- உலகச் செல்வங்களை அல்லாஹ் தாராளமாக வழங்கியுள்ளானே?" என்று கூறினேன்.

உடனே (தலையணையில் சாய்ந்து அமர்ந்திருந்த) அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் நிமிர்ந்து அமர்ந்துகொண்டு, "உங்களுக்கு இன்னும் (இத்தகைய) சந்தேகம் உண்டா, கத்தாபின் புதல்வரே? அவர்கள், தமக்குரிய இன்பங்களை இவ்வுலக வாழ்விலேயே (மறுமைக்கு) முன்னதாகவே வழங்கப்பட்டுவிட்ட மக்கள் ஆவர்" என்று கூறினார்கள். உடனே நான், "அல்லாஹ்வின் தூதரே! (அவசரப்பட்டுக் கேட்டுவிட்ட) எனக்காக அல்லாஹ்விடம் மன்னிப்புக்கோரிப் பிரார்த்தியுங்கள்" என்று சொன்னேன்

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், தம் மனைவியர்மீது ஏற்பட்ட கடும் கோபத்தின் காரணமாக, 'அவர்களிடம் ஒரு மாத காலத்திற்கு நான் செல்வதில்லை' எனச்

சத்தியம் செய்திருந்தார்கள். இறுதியில், வல்லமையும் மாண்பும் மிக்க அல்லாஹ் (66:1ஆவது வசனத்தை அருளி) நபியவர்களைக் கண்டித்தான்.[194]

عَلَيْهِنَّ حَتَّى عَاتَبَهُ اللَّهُ عَزَّ وَجَلَّ.

٢١٨ حَدَّثَنَا عَبْدُ الرَّزَّاقِ أَخْبَرَنِي يُونُسُ بْنُ سُلَيْمٍ قَالَ أَمْلَى عَلَيَّ يُونُسُ بْنُ يَزِيدَ الْأَيْلِيُّ عَنْ ابْنِ شِهَابٍ عَنْ عُرْوَةَ بْنِ الزُّبَيْرِ عَنْ عَبْدِ الرَّحْمَنِ بْنِ عَبْدٍ الْقَارِيِّ سَمِعْتُ عُمَرَ بْنَ الْخَطَّابِ رَضِيَ اللَّهُ عَنْهُ يَقُولُ: كَانَ إِذَا نَزَلَ عَلَى رَسُولِ اللَّهِ ﷺ الْوَحْيُ يُسْمَعُ عِنْدَ وَجْهِهِ دَوِيٌّ كَدَوِيِّ النَّحْلِ فَمَكَثْنَا سَاعَةً فَاسْتَقْبَلَ الْقِبْلَةَ وَرَفَعَ يَدَيْهِ فَقَالَ اللَّهُمَّ زِدْنَا وَلَا تَنْقُصْنَا وَأَكْرِمْنَا وَلَا تُهِنَّا وَأَعْطِنَا وَلَا تَحْرِمْنَا وَآثِرْنَا وَلَا تُؤْثِرْ عَلَيْنَا وَارْضَ عَنَّا وَأَرْضِنَا ثُمَّ قَالَ لَقَدْ أُنْزِلَتْ عَلَيَّ عَشْرُ آيَاتٍ مَنْ أَقَامَهُنَّ دَخَلَ الْجَنَّةَ ثُمَّ قَرَأَ عَلَيْنَا ﴿قَدْ أَفْلَحَ الْمُؤْمِنُونَ﴾ حَتَّى خَتَمَ الْعَشْرَ.

218 உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள் கூறியதாவது:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுக்கு வேத அறிவிப்பு (வஹீ) அருளப்பெறும்போது, அவர்களுடைய முகத்துக்கருகே தேனீயின் ரீங்காரம் போன்ற (மெல்லிய) ஒலி கேட்கும் (அப்படி ஒரு முறை அவர்களுக்கு 'வஹீ' வந்தது. அவர்கள் முன்) நாங்கள் சிறிது நேரம் காத்திருந்தோம்.

பிறகு (அந்த நிலை விலகியதும்), அவர்கள் கிப்லாவை முன்னோக்கித் தம் கைகளை உயர்த்தி, "அல்லாஹும்ம ஸித்னா, வலா தன்குஸ்னா! வ அக்ரிம்னா, வலா துஹின்னா! வஅஃதினா, வலா தஹ்ரிம்னா! வ ஆஸிர்னா, வலா துஃஸிர் அலைனா! வர்ள அன்னா, வ அர்ளினா" (இறைவா! எங்களுக்கு அதிகமாக வழங்கு; குறைத்துவிடாதே! எங்களை கண்ணியப்படுத்து; கேவலப்படுத்திவிடாதே! எங்களுக்கு முன்னுரிமை வழங்கு; எங்களைப் பின்னுக்குத் தள்ளிவிடாதே! எங்களை இழப்படைந்தவர்களாக ஆக்கிவிடாதே! (உனதருளுக்காக) எங்களைத் தேர்வு செய் எங்களை விடுத்து, (எங்கள் எதிரிகளைத்) தேர்வு செய்துவிடாதே! (நீ எங்களுக்கு வழங்கியிருப்பவற்றில்) எங்களை மனநிறைவு அடையச் செய்! நீ எங்களைக் குறித்து உவப்புக்கொள்!) என்று இறைஞ்சினார்கள்.

பிறகு, "எனக்கு (இப்போது) பத்து இறைவசனங்கள் அருளப்பட்டன. அவற்றை யார் கடைப்பிடிக்கிறாரோ, நிச்சயம் அவர் சொர்க்கம் செல்வார்" என்று கூறிவிட்டு, "இறைநம்பிக்கையாளர்கள் வெற்றியடைந்துவிட்டனர்" என்று தொடங்கும் அந்தப் பத்து வசனங்களை (23:1-10) முழுமையாக எங்களுக்கு ஓதிக்காட்டினார்கள்.[195]

---

194. இதே அறிவிப்பு [illegible] 89, 2468, 4913, 4915, 5191, 5218, 5843, 7256, 7263 [illegible]

195. [illegible]

219 அப்துர்ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்களால் விடுதலை செய்யப்பட்ட அடிமையான அபூஉபைத் (சஅது பின் உபைத் - ரஹ்) அவர்கள் கூறியதாவது:

நான் (ஈதுல் அள்ஹா) பெருநாள் தொழுகையில் (கலீஃபா) உமர் பின் அல் கத்தாப் (ரலி) அவர்களுடன் கலந்துகொண்டேன். அவர்கள் குத்பா - உரை நிகழ்த்துவதற்கு முன்பே பாங்கோ இகாமத்தோ இன்றித் தொழுதுவிட்டு மக்களுக்கு உரை நிகழ்த்தினார்கள்.

அப்போது, "மக்களே! அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் இந்த இரு பெருநாட்களிலும் நோன்பு நோற்கக் கூடாது என உங்களுக்குத் தடைவிதித்துள்ளார்கள். அவற்றுள் ஒன்று, உங்கள் நோன்பிலிருந்து நீங்கள் விடுபடும் நோன்புப் பெருநாள் ஆகும். மற்றொன்றோ, நீங்கள் குர்பானிப் பிராணிகளின் இறைச்சியை உண்ணும் (ஈதுல் அள்ஹா) பெருநாள் ஆகும்" என்று சொன்னார்கள்.[156]

٢١٩ حدثنا عبد الرزاق أنبأنا معمر عن الزهري عن أبي عبيد مولى عبد الرحمن بن عوف أنه شهد العيد مع عمر بن الخطاب رضي الله عنه فصلى قبل أن يخطب بلا أذان ولا إقامة ثم خطب فقال: يا أيها الناس إن رسول الله ﷺ نهى عن صيام هذين اليومين أما أحدهما فيوم فطركم من صيامكم وعيدكم، وأما الآخر فيوم تأكلون فيه من نسككم حدثنا يعقوب حدثنا أبي عن محمد بن إسحاق حدثنا الزهري عن سعد بن أبي عبيد مولى عبد الرحمن بن أزهر قال شهدت العيد مع عمر بن الخطاب رضي الله عنه فذكر الحديث.

220 இப்னு உமர் (ரலி) அவர்கள் கூறியதாவது:

(என் தந்தை) உமர் (ரலி) அவர்கள் (கஅபாவின் ஒரு மூலையில் பதிக்கப்பட்டுள்ள) 'ஹஜருல் அஸ்வத்' கல்லை முத்தமிட்டுவிட்டு, "நீ ஒரு 'கல்'தான் என்பதை நான் அறிவேன். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் உன்னை முத்தமிட்டதை நான் பார்த்திராவிட்டால், உன்னை நானும் முத்தமிட்டிருக்கமாட்டேன்" என்று கூறினார்கள்.[157]

٢٢٠ حدثنا عبد الرزاق حدثنا عبد الله بن عمر عن نافع عن ابن عمر: أن عمر رضي الله عنه قبل الحجر ثم قال قد علمت أنك حجر ولولا أني رأيت رسول الله ﷺ قبلك ما قبلتك.

221 அபூவாயில் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

சுபய்யு பின் மஅபத் என்றழைக்கப்பட்ட கிறிஸ்தவர் ஒருவர் இஸ்லாத்தைத் தழுவினார். பிறகு அவர் அறப்போருக்குச் செல்ல விரும்பினார். அப்போது அவரிடம், 'முதலில் நீங்கள் 'ஹஜ்' செய்யுங்கள்' என்று கூறப்பட்டது. ஆகவே அவர் 'அஷ்அரீ' குலத்தைச் சேர்ந்த ஒருவரிடம் வந்தபோது, அவர் ஹஜ்ஜுக்கும் உம்ராவுக்கும் சேர்த்து 'இஹ்ராம்' அணியும்படி அவருக்குக் கட்டளையிட்டார். அவ்வாறே அவரும் செய்தார்.

இந்நிலையில் அவர் 'தல்பியா' கூறிக்கொண்டிருந்தபோது, யஸீது பின் ஸவ்ஹான் என்பாரும் ஸல்மான் பின் ரபீஆ என்பாரும் அவரைக் கடந்து சென்றனர்.

٢٢١ حدثنا هشيم أخبرني سيار عن أبي وائل أن رجلا كان نصرانيا يقال له الصبي بن معبد أسلم فأراد الجهاد فقيل له ابدأ بالحج فأتى الأشعري فأمره أن يهل بالحج والعمرة جميعا ففعل فبينما هو يلبي إذ مر يزيد بن صوحان وسلمان بن

156. காண்க: முன்சென்ற ஹதீஸ் எண் - 150 மற்றும் அடிக்குறிப்பு

157. பார்க்க: முன்சென்ற ஹதீஸ் எண்கள் - 95, 171 மற்றும் அடிக்குறிப்புகள்.

زبيعة فقال أحدهما لصاحبه: لهذا أضل من بعير أهله فسمعها الصبي فكبر ذلك عليه فلما قدم أتى عمر فذكر ذلك له، فقال له عمر رضي الله عنه: هديت لسنة نبيك، قال وسمعته مرة أخرى يقول: وفقت لسنة نبيك.

அந்த இருவருள் ஒருவர் தம் நண்பரிடம், "இவர், தன் வீட்டாரின் ஒட்டகத்தைவிட வழி தவறியவர்" என்று கூறினார். இவ்வாறு அவர் கூறியது, ஸுபய்யு அவர்களுக்குப் பெரும் மன வருத்தம் அளித்தது. அவர் ஊர் வந்ததும் உமர் (ரலி) அவர்களிடம் சென்று, இதைப் பற்றிக் கூறினார்.

அப்போது உமர் (ரலி) அவர்கள், "நீர் உம் நபியின் வழிமுறைக்கு வழிகாட்டப்பட்டுள்ளீர்; அல்லது வாய்ப்பளிக்கப்பட்டுள்ளீர்" என்று கூறினார்கள்.[158]

٢٢٢ حدثنا أبو معاوية حدثنا الأعمش عن إبراهيم عن علقمة عن عمر رضي الله عنه قال: كان رسول الله ﷺ يسمر عند أبي بكر رضي الله عنه الليلة كذاك في الأمر من أمر المسلمين وأنا معه.

222 உமர் (ரலி) அவர்கள் கூறியதாவது:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் இரவு நேரத்தில் அபூபக்ர் (ரலி) அவர்களுடன் முஸ்லிம்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருப்பார்கள். அப்போது அவர்களுடன் நானும் இருப்பேன்.[159]

٢٢٣ حدثنا أبو معاوية حدثنا عاصم الأحول عن عبد الله بن سرجس قال: رأيت الأصيلع يعني عمر رضي الله عنه يقبل الحجر ويقول: إني لأقبلك وأعلم أنك حجر لا تنفع ولا تضر ولولا أني رأيت رسول الله ﷺ يقبلك لم أقبلك.

223 அப்துல்லாஹ் பின் சர்ஜிஸ் (ரலி) அவர்கள் கூறியதாவது:

நான், 'உஸைலிஉ' (அதாவது உமர் -ரலி) அவர்களைப் பார்த்தேன். அவர்கள், (கஅபாவின் ஒரு மூலையில் பதிக்கப்பெற்றுள்ள) 'ஹஜருல் அஸ்வத்' கல்லை முத்தமிட்டபடி, "உன்னை முத்தமிடுகிறேன். நீ நன்மையோ தீமையோ செய்ய இயலாத ஒரு கல்தான் என்பதை நான் நன்கறிவேன். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் உன்னை முத்தமிட்டதை நான் பார்த்திராவிட்டால், உன்னை நான் முத்தமிட்டிருக்கமாட்டேன்" என்று கூறினார்கள்.[160]

٢٢٤ حدثنا عبد الله بن نمير حدثنا عبيد الله عن نافع عن ابن عمر عن عمر رضي الله عنه قلت: يا رسول الله أيرقد أحدنا وهو جنب؟

224 உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள் கூறியதாவது:

நான் (நபி (ஸல்) அவர்களிடம்), "அல்லாஹ்வின் தூதரே! 'ஒருவருக்குப் பெருந்துடக்கு ஏற்பட்டு (குளியல் கடமையாகி) விட்டால், அவர் (குளிக்காமல்) உறங்கலாமா?" என்று கேட்டேன்.

---

158. இந்த முஸ்னது 184 என்ற ஹதீஸில் இதே நிகழ்வு சற்று விளக்கமாக வந்துள்ளது. பின்வரும் 246 மற்றும் 247A ஆகிய ஹதீஸ்களையும் பார்க்க.

159. காண்க: முஸ்லிம் [illegible] ஹதீஸ் எண் - 170 மற்றும் அதன் அடிக்குறிப்பு.

160. காண்க: முஸ்லிம் [illegible] ஹதீஸ் எண்கள் 93, 171, 220. இந்த ஹதீஸிலுள்ள 'உஸைலிஉ' என்பதற்கு 'வழுக்கைத் தலையர்' என்று பொருள். [illegible] 42:11 [illegible]

قَالَ: نَعَمْ إِذَا تَوَضَّأَ.

அதற்கு அவர்கள், "ஆம்; அங்கத் தூய்மை (உளூ) செய்துவிட்டு (உறங்கலாம்)" என்று விடையளித்தார்கள்.[161]

٢٢٥ حَدَّثَنَا ابْنُ نُمَيْرٍ أَخْبَرَنَا هِشَامٌ عَنْ أَبِيهِ عَنْ عَاصِمٍ عَنْ عُمَرَ بْنِ الْخَطَّابِ رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ قَالَ رَسُولُ اللَّهِ ﷺ: إِذَا أَقْبَلَ اللَّيْلُ وَأَدْبَرَ النَّهَارُ وَغَابَتِ الشَّمْسُ فَقَدْ أَفْطَرْتَ.

225 அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

இரவு வந்து, பகல் போய், சூரியன் மறைந்து விட்டால், நீ நோன்பைத் துறந்துகொள்!

இதை உமர் பின் அல்கத்தாப் (ரலி) அறிவிக்கிறார்கள்.[162]

٢٢٦ حَدَّثَنَا أَبُو كَامِلٍ حَدَّثَنَا إِبْرَاهِيمُ بْنُ سَعْدٍ حَدَّثَنَا ابْنُ شِهَابٍ ح و حَدَّثَنَا عَبْدُ الرَّزَّاقِ أَنْبَأَنَا مَعْمَرٌ عَنِ الزُّهْرِيِّ الْمَعْنَى عَنْ أَبِي الطُّفَيْلِ عَامِرِ بْنِ وَاثِلَةَ أَنَّ نَافِعَ بْنَ عَبْدِ الْحَارِثِ لَقِيَ عُمَرَ بْنَ الْخَطَّابِ رَضِيَ اللَّهُ عَنْهُ بِعُسْفَانَ وَكَانَ عُمَرُ رَضِيَ اللَّهُ عَنْهُ اسْتَعْمَلَهُ عَلَى مَكَّةَ، فَقَالَ لَهُ عُمَرُ رَضِيَ اللَّهُ عَنْهُ: مَنِ اسْتَخْلَفْتَ عَلَى أَهْلِ الْوَادِي؟ قَالَ: اسْتَخْلَفْتُ عَلَيْهِمُ ابْنَ أَبْزَى، قَالَ: وَمَا ابْنُ أَبْزَى؟ فَقَالَ: رَجُلٌ مِنْ مَوَالِينَا، فَقَالَ عُمَرُ رَضِيَ اللَّهُ عَنْهُ: اسْتَخْلَفْتَ عَلَيْهِمْ مَوْلًى؟ فَقَالَ: إِنَّهُ قَارِئٌ لِكِتَابِ اللَّهِ عَالِمٌ بِالْفَرَائِضِ قَاضٍ، فَقَالَ عُمَرُ رَضِيَ اللَّهُ عَنْهُ: أَمَا إِنَّ نَبِيَّكُمْ ﷺ قَدْ قَالَ: إِنَّ اللَّهَ يَرْفَعُ بِهَذَا الْكِتَابِ أَقْوَامًا وَيَضَعُ بِهِ آخَرِينَ.

226 அபுத்துஃபைல் ஆமிர் பின் வாஸிலா (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

நாஃபிஉ பின் அப்தில் ஹாரிஸ் (ரலி) அவர்கள், (கலீஃபா) உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்களை 'உஸ்ஃபான்' எனுமிடத்தில் சந்தித்தார்கள். (இக்கால கட்டத்தில்) உமர் (ரலி) அவர்கள் நாஃபிஉ பின் அப்தில் ஹாரிஸ் (ரலி) அவர்களை மக்காவின் ஆளுநராகப் பணியமர்வு செய்திருந்தார்கள்.

உமர் (ரலி) அவர்கள், (நாஃபிஉ (ரலி) அவர்களிடம்) "நீங்கள் அந்தப் பள்ளத்தாக்கு (மக்கா)வாசிகளுக்கு யாரைப் பிரதிநிதியாக ஆக்கினீர்கள்?" என்று கேட்டார்கள். அதற்கு நாஃபிஉ (ரலி) அவர்கள், "(அப்துர் ரஹ்மான்) இப்னு அப்ஸா (ரலி) அவர்களை" என்று விடையளித்தார்கள்.

உமர் (ரலி) அவர்கள், "இப்னு அப்ஸா யார்?" எனக் கேட்டார்கள். நாஃபிஉ (ரலி) அவர்கள், "எங்களால் விடுதலை செய்யப்பட்ட எங்கள் (முன்னாள்) அடிமைகளுள் ஒருவர்" என விடையளித்தார்கள்.

அதற்கு உமர் (ரலி) அவர்கள், "அவர்களுக்கு முன்னாள் அடிமை ஒருவரையா பிரதிநிதியாக்கினீர்?" என்று கேட்டார்கள். அதற்கு நாஃபிஉ (ரலி) அவர்கள், "அவர் (இப்னு அப்ஸா) அல்லாஹ்வின் வேதத்தை அறிந்தவர்; பாகப் பிரிவினைச் சட்டங்களை அறிந்தவர்; தீர்ப்புக் கூறும் தகுதியுடையவர்" என்று கூறினார்கள்.

(இதைக் கேட்ட) உமர் (ரலி) அவர்கள், "அறிந்துகொள்க! அல்லாஹ் இந்த வேதத்தின் மூலம் சிலரை உயர்த்துகிறான்; வேறு சிலரைத் தாழ்த்துகிறான்" என்று உங்கள் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (இப்னு அப்ஸா வேத அறிவினால் மேன்மைபெற்றார்)" என்று சொன்னார்கள்.[163]

---

161. காண்க: முன்சென்ற ஹதீஸ் எண்கள் - 90, 100, 160 மற்றும் அடிக்குறிப்புகள்

162. பார்க்க: முன்சென்ற ஹதீஸ் எண் - 187 மற்றும் அடிக்குறிப்பு

163. இந்த ஹதீஸ் முஸ்லிம் (1487) இப்னுமாஜா (218) தாரிமீ (3231) பைஹகீயின் ஷுஅபுல் ஈமான் (...) ... தாரிமீ (3428) முஸ்தக்ரஜு அபீஅவானா (3072) தபரானியின் முஃஜமுல் அவ்ஸத் (3926) உள்ளிட்ட நூல்களிலும் இடம்பெற்றுள்ளது

227 அபுல் பக்தரீ (சயீத் பின் ஃபைரூஸ்-ரஹ்) அவர்கள் கூறியதாவது:

உமர் (ரலி) அவர்கள் அபூ உபைதா பின் அல்ஜர்ராஹ் (ரலி) அவர்களிடம், "நீங்கள் உங்கள் கையை நீட்டுங்கள். (நீங்கள்தாம் நபியவர்களுக்குப் பிறகு 'கலீஃபா' என) நான் உங்களுக்கு வாக்குறுதி அளிக்கிறேன். ஏனெனில், உங்களைப்பற்றி, 'இந்தச் சமுதாயத்தின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்' என அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறியதை நான் கேட்டுள்ளேன்" என்றார்கள்.

அதற்கு அபூ உபைதா (ரலி) அவர்கள், "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் (மரணப் படுக்கையில் இருந்தபோது) யாரை நமக்குத் தலைமை தாங்கி (இமாமாக நின்று) தொழுவிக்குமாறு கட்டளையிட்டு, (அக்கட்டளைக்கேற்ப) அவர்கள் இறக்கும்வரை அவரும் (நமக்குத்) தலைமை தாங்கித் தொழுவித்தாரோ, அந்த ஒருவரை (அதாவது அபூபக்ர் (ரலி) அவர்)களைவிட நான் முந்துபவனாக இல்லை" என்று கூறினார்கள்.[104]

٢٢٧ حدثنا محمد بن فضيل حدثنا إسماعيل بن سميع عن مسلم البطين عن أبي البختري قال قال عمر لأبي عبيدة بن الجراح: ابسط يدك حتى أبايعك فإني سمعت رسول الله ﷺ يقول: أنت أمين هذه الأمة، فقال أبو عبيدة: ما كنت لأتقدم بين يدي رجل أمره رسول الله ﷺ أن يؤمنا فأمنا حتى مات.

228 உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள் கூறியதாவது:

(ஒருமுறை) அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் (சிலருக்கு தர்மப் பொருட்களைப்) பங்கிட்டுக் கொடுத்தார்கள். அப்போது நான், "அல்லாஹ்வின் தூதரே! இவர்களைவிட அவர்களல்லவா ('அஹ்லுஸ் ஸுஃப்பா' எனும் திண்ணைத் தோழர்கள் அல்லவா) மிகவும் தகுதியுடையவர்கள்?" என்று சொன்னேன். அதற்கு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "மக்கள் அருவருப்பாகப் பேசி, அல்லது என்னைக் கஞ்சன் என்று சொல்லி என்னிடம் கேட்கும் அளவுக்கு என்னைக் கொண்டுவந்து நிறுத்திவிட்டார்களே! ஆனால், நான் கஞ்சன் அல்லன்" என்று கூறினார்கள்.[105]

٢٢٨ حدثنا عبد الرزاق أنبأنا سفيان عن الأعمش عن شقيق بن سلمة عن سلمان بن ربيعة عن عمر رضي الله عنه قال: قسم رسول الله ﷺ قسمة، فقلت: يا رسول الله لغير هؤلاء أحق منهم، فقال النبي ﷺ: إنهم خيروني بين أن يسألوني بالفحش أو يبخلوني فلست بباخل.

229 இப்னு உமர் (ரலி) அவர்கள் கூறியதாவது:

(என் தந்தை) உமர் (ரலி) அவர்கள் நபி (ஸல்) அவர்களிடம், "எங்களுள் (பெருந்

٢٢٩ حدثنا عبد الرزاق أنبأنا عبيد الله بن عمر عن نافع عن ابن عمر أن عمر رضي الله عنه سأل النبي ﷺ هل ينام أحدنا وهو جنب؟ قال: نعم

---

104. இந்த ஹதீஸில் உமர் (ரலி) அவர்களிடமிருந்து அறிவிக்கும் அபுல் பக்தரீ அவர்கள் [illegible]

105. காண்க: முஸ்லிம் ஹதீஸ் எண் - 122 மற்றும் 'முஸ்னது' ஹதீஸ் எண் - 1905

துடக்கு ஏற்பட்டு) குளியல் கடமையான ஒருவர், (குளிப்பதற்கு முன்) உறங்கலாமா?" என்று கேட்டார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள், "ஆம்; அவர் தொழுகைக்கு அங்கத் தூய்மை (உளூ) செய்வதைப் போன்று அங்கத் தூய்மை செய்துகொள்ளட்டும் (பிறகு உறங்கட்டும்)" என்று விடையளித்தார்கள்.[166]

وَيَتَوَضَّأْ وُضُوءَهُ لِلصَّلَاةِ.

حَدَّثَنَا عَبْدُ الرَّزَّاقِ أَنْبَأَنَا مَعْمَرٌ عَنْ أَيُّوبَ عَنْ نَافِعٍ عَنِ ابْنِ عُمَرَ أَنَّ عُمَرَ رَضِيَ اللَّهُ عَنْهُ سَأَلَ النَّبِيَّ ﷺ مِثْلَهُ.

230 நாஃபிஉ (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

இப்னு உமர் (ரலி) அவர்கள், (கூஃபாவின் ஆளுநராயிருந்த) சஅது பின் மாலிக் (ரலி) அவர்கள் ('உளூ' செய்தபோது, கால்களைக் கழுவுவதற்குப் பகரமாக) தமது காலுறைகள் மீது தண்ணீர் தொட்டுத் தடவியதை (மஸ்ஹுச் செய்ததைப்) பார்த்தார்கள். அப்போது அவர்கள், "நீங்கள் இவ்வாறு செய்கிறீர்களே? (இது சரியில்லையே!)" என்று (ஆட்சேபணை) தெரிவித்தார்கள். அப்போது சஅது பின் மாலிக் (ரலி) அவர்கள், "ஆம் (நாங்கள் செய்வது சரிதான்)" என்றார்கள். பிறகு (ஒரு காலகட்டத்தில்) அவர்கள் இருவரும் உமர் (ரலி) அவர்களிடம் இருந்தபோது, சஅது பின் மாலிக் (ரலி) அவர்கள், "இறைநம்பிக்கையாளர்களின் தலைவரே! ஈரக் கையால் காலுறைகள் மீது தடவும் (மஸ்ஹு) விஷயத்தில் என் சகோதரர் மகனுக்கு (இப்னு உமருக்குத்) தீர்ப்புக் கூறுங்கள்" என்றார்கள். உடனே உமர் (ரலி) அவர்கள், "நாங்கள் எங்கள் நபி (ஸல்) அவர்களுடன் இருந்தபோது, (உளூவில் காலுறைகளைக் கழற்றிக் கால்களைக் கழுவுவதற்கு பதிலாக) எங்கள் காலுறைகள் மீது ஈரக்கையால் தடவி (மஸ்ஹுச் செய்து)வந்தோம்" என்றார்கள். அப்போது இப்னு உமர் (ரலி) அவர்கள், "மலம் சிறுநீர் கழிக்கப் போய் வந்தாலுமா (காலுறைகள் மீது மஸ்ஹுச் செய்துகொள்ளலாம்)?" என்று கேட்டார்கள். அதற்கு உமர் (ரலி) அவர்கள், "ஆம். மலம் சிறுநீர் கழிக்கப் போய் வந்தாலும்தான் (அவ்வாறு செய்து கொள்ளலாம்)" என்று விடையளித்தார்கள்.

٢٣٠. حَدَّثَنَا عَبْدُ الرَّزَّاقِ أَنْبَأَنَا عُبَيْدُ اللَّهِ بْنُ عُمَرَ عَنْ نَافِعٍ قَالَ: رَأَى ابْنُ عُمَرَ سَعْدَ بْنَ مَالِكٍ يَمْسَحُ عَلَى خُفَّيْهِ، فَقَالَ ابْنُ عُمَرَ: وَإِنَّكُمْ لَتَفْعَلُونَ هَذَا فَقَالَ سَعْدٌ: نَعَمْ فَاجْتَمَعَا عِنْدَ عُمَرَ رَضِيَ اللَّهُ عَنْهُ فَقَالَ سَعْدٌ: يَا أَمِيرَ الْمُؤْمِنِينَ أَفْتِ ابْنَ أَخِي فِي الْمَسْحِ عَلَى الْخُفَّيْنِ، فَقَالَ عُمَرُ رَضِيَ اللَّهُ عَنْهُ: كُنَّا وَنَحْنُ مَعَ نَبِيِّنَا ﷺ نَمْسَحُ عَلَى خِفَافِنَا، فَقَالَ ابْنُ عُمَرَ رَضِيَ اللَّهُ عَنْهُ: وَإِنْ جَاءَ مِنَ الْغَائِطِ وَالْبَوْلِ، فَقَالَ عُمَرُ رَضِيَ اللَّهُ عَنْهُ: نَعَمْ وَإِنْ جَاءَ مِنَ الْغَائِطِ وَالْبَوْلِ، قَالَ نَافِعٌ: فَكَانَ ابْنُ عُمَرَ بَعْدَ ذَلِكَ يَمْسَحُ عَلَيْهِمَا مَا لَمْ يَخْلَعْهُمَا وَمَا يُوَقِّتُ لِذَلِكَ وَقْتًا، فَحَدَّثْتُ بِهِ مَعْمَرًا فَقَالَ: حَدَّثَنِيهِ أَيُّوبُ عَنْ نَافِعٍ مِثْلَهُ.

அதன் பின்னர் இப்னு உமர் (ரலி) அவர்கள் காலுறைகளைக் கழற்றாமல் அவற்றின் மீது ஈரக் கையால் தடவி (மஸ்ஹுச் செய்து) வந்தார்கள். அதற்குக் காலக் கெடு எதையும் அவர்கள் நிர்ணயித்துக்கொள்ளவில்லை.[167]

---

166. பார்க்க: முஸ்னது ஹதீஸ் எண்கள் - 90, 100, 160 224

167. இப்னு உமர் (ரலி) அவர்கள் 'காலுறைகளில் 'மஸ்ஹு'ச் செய்வதற்கு காலக்கெடு நிர்ணயிக்கவில்லை' என்றாலும் நபி (ஸல்) அவர்கள், 'உள்ளூரில் இருப்பவருக்கு ஒரு பகல் ஓர் இரவு என்றும் பயணிகளுக்கு மூன்று பகல்கள் மூன்று இரவுகள் என்றும் காலக்கெடு நிர்ணயித்தார்கள்' என அலீ (ரலி) அவர்கள் மூலம் அறிவிக்கப்படும் ஹதீஸ் [illegible] என்றாலும் பார்க்க: முஸ்லிம் ஹதீஸ் எண் - 465.

காலுறைகளில் 'மஸ்ஹு'ச் செய்வதென்பது சிறுதுடக்கு ஏற்பட்டால் மட்டுமே ஏற்கத்தக்கது. பெருந்துடக்கு ஏற்பட்டால் காலுறைகளைக் கழற்றிக் குளிக்க வேண்டுமென நபி (ஸல்) அவர்கள் கட்டளையிட்டார்கள். பார்க்க: திர்மிதீ [illegible]

231 மாலிக் பின் அவ்ஸ் பின் அல்ஹதஸான் (ரஹ்) கூறியதாவது:

நான் தல்ஹா பின் உபைதில்லாஹ் (ரலி) அவர்களிடம், என்னிடமிருந்த தங்கத்தை வெள்ளி நாணயத்துக்கு மாற்றினேன். அப்போது அவர்கள், "நம் காசாளர் (மதீனாவுக்கு அருகிலுள்ள மேட்டுப் பாங்கான பகுதிகளுள் ஒன்றான) 'அல்ஙாபா' எனுமிடத்திலிருந்து வரும்வரை எனக்கு அவகாசம் (தவணை) தாருங்கள்" என்று கேட்டார்கள். இதைச் செவியுற்ற உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள், "இல்லை; அல்லாஹ்வின் மீதாணையாக! அவருக்கு (இப்போதே) நாணயத்தை மாற்றிக் கொடுக்காதவரை, அவரிடமிருந்து (இங்கிருந்து) பிரிந்து செல்லாதீர்கள். ஏனெனில், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், 'உடனுக்குடன் அல்லாமல், (தவணை முறையில்) தங்கத்துக்கு வெள்ளியை மாற்றிக்கொள்வது வட்டியாகும்' என்று கூறியதை நான் கேட்டுள்ளேன்" என்றார்கள்.[108]

٢٣١ حدثنا عبد الرزاق أنبأنا معمر عن الزهري
أخبرني مالك بن أوس بن الحدثان قال: صرفت
عند طلحة بن عبيد الله ورقا بذهب، فقال: أنظرني
حتى يأتينا خازننا من الغابة قال فسمعها عمر بن
الخطاب رضي الله عنه، فقال: لا والله لا تفارقه
حتى تستوفي منه صرفه فإني سمعت رسول الله
ﷺ يقول: الذهب بالورق ربا إلا هاء وهاء.

232 உபைதுல்லாஹ் பின் அப்தில்லாஹ் பின் உத்பா (ரஹ்) கூறியதாவது:

٢٣٢ حدثنا عبد الرزاق حدثنا معمر عن الزهري
عن عبيد الله بن عبد الله بن عتبة قال: لما ارتد
أهل الزكاة في زمان أبي بكر رضي الله عنه، قال
عمر: كيف تقاتل الناس يا أبا بكر وقد قال
رسول الله ﷺ أمرت أن أقاتل الناس حتى يقولوا
لا إله إلا الله فإذا قالوا لا إله إلا الله عصموا مني
دماءهم وأموالهم إلا بحقها وحسابهم على الله؟
فقال أبو بكر رضي الله عنه: والله لأقاتلن من
فرق بين الصلاة والزكاة فإن الزكاة حق المال

அபூபக்ர் (ரலி) அவர்களது (ஆட்சிக்) காலத்தில் மக்கள் (ஸகாத் தர மறுத்து) இஸ்லாத்திலிருந்து வெளியேறியபோது, (அவர்களுடன் அறப்போர் புரியும் முடிவுக்கு அபூபக்ர் (ரலி) அவர்கள் வந்தார்கள். அப்போது) உமர் (ரலி) அவர்கள், "அபூபக்ர் அவர்களே! அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், 'அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை என இம்மக்கள் கூறும்வரை அவர்களிடம் போர் புரியுமாறு நான் பணிக்கப்பட்டுள்ளேன். அவ்வாறு 'அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை' என்று ஒருவர் கூறிவிட்டால், அவர் என்னிடமிருந்து தம் உயிரையும் உடைமைகளையும் பாதுகாத்துக்கொள்வார்; ஆனால், தண்டனைக்குரிய குற்றம் ஒன்றில் அவர் ஈடுபட்டாலே தவிர. அவருக்குரிய விசாரணை அல்லாஹ்விடம் உள்ளது' என்று கூறி இருக்கும்போது, நீங்கள் எப்படி (ஸகாத் தர மறுக்கும்) மக்களிடம் போர் புரியலாம்?" என்று கேட்டார்கள்.

அதற்கு அபூபக்ர் (ரலி) அவர்கள், "அல்லாஹ்வின் மீதாணையாக! தொழுகையையும் ஸகாத்தையும் பிரித்துப் பார்ப்போரிடம் நான் கட்டாயம் போர் புரிவேன். ஏனெனில், ஸகாத் என்பது, செல்வத்துக்குரிய கடமையாகும். அல்லாஹ்வின்

[illegible] - 27. [illegible] - [illegible]
[illegible]

108. [illegible] - 157. [illegible]

وَاللّٰه لَوْ مَنَعُونِي عَنَاقًا كَانُوا يُؤَدُّونَهَا إِلَى رَسُولِ اللّٰه ﷺ لَقَاتَلْتُهُمْ عَلَيْهَا، قَالَ عُمَرُ رَضِيَ اللّٰهُ عَنْهُ: فَوَاللّٰه مَا هُوَ إِلاَّ أَنْ رَأَيْتُ أَنَّ اللّٰهَ قَدْ شَرَحَ صَدْرَ أَبِي بَكْرٍ رَضِيَ اللّٰهُ عَنْهُ لِلْقِتَالِ فَعَرَفْتُ أَنَّهُ الْحَقُّ.

மீதாணையாக! அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் இவர்கள் (ஸகாத்தாக) செலுத்தி வந்த ஒட்டகக் குட்டியை இவர்கள் என்னிடம் தர மறுத்தால், அதைத் தர மறுத்ததற்காக அவர்களுடன் நான் போர் புரிவேன்" என்று கூறினார்கள்.

உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: போர் புரியும் முடிவில் அபூபக்ர் (ரலி) அவர்களின் நெஞ்சத்தை அல்லாஹ் விரிவாக்கிவிட்டான் என்பதை நான் அறிந்துகொண்டேன். அதுவே சரி(யான முடிவு)என்பதையும் விளங்கிக் கொண்டேன்.[169]

٢٣٣ حَدَّثَنَا عَبْدُ الرَّزَّاقِ أَنْبَأَنَا إِسْرَائِيلُ عَنْ سِمَاكٍ عَنْ عِكْرِمَةَ عَنِ ابْنِ عَبَّاسٍ قَالَ قَالَ عُمَرُ رَضِيَ اللّٰهُ عَنْهُ: كُنْتُ فِي رَكْبٍ أَسِيرُ فِي غَزَاةٍ مَعَ النَّبِيِّ ﷺ فَحَلَفْتُ فَقُلْتُ: لاَ وَأَبِي فَنَهَرَنِي رَجُلٌ مِنْ خَلْفِي، وَقَالَ: لاَ تَحْلِفُوا بِآبَائِكُمْ فَالْتَفَتُّ فَإِذَا أَنَا بِرَسُولِ اللّٰه ﷺ.

233 உமர் (ரலி) அவர்கள் கூறியதாவது:

நபி (ஸல்) அவர்களுடன் சேர்ந்து ஓர் அறப்போருக்குப் பயணம் செய்துகொண்டிருந்த குழுவினருடன் நானும் இருந்தேன். அப்போது நான், "இல்லை; என் தந்தை மீது சத்தியமாக" என்று சத்தியம் செய்தேன். உடனே எனக்குப் பின்னாலிருந்து, "உங்கள் தந்தையர் பெயரால் சத்தியம் செய்யாதீர்கள்" என்று ஒருவர் என்னை அதட்டினார். (அவர் யாரெனத் திரும்பிப் பார்த்தேன்.) அங்கே அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் இருந்தார்கள்.[170]

٢٣٤ حَدَّثَنَا عَبْدُ الرَّزَّاقِ حَدَّثَنَا مَعْمَرٌ عَنِ الزُّهْرِيِّ عَنْ سَالِمٍ عَنْ أَبِيهِ عَنْ عُمَرَ رَضِيَ اللّٰهُ عَنْهُ قَالَ: سَمِعَنِي رَسُولُ اللّٰه ﷺ وَأَنَا أَحْلِفُ بِأَبِي، فَقَالَ: إِنَّ اللّٰهَ يَنْهَاكُمْ أَنْ تَحْلِفُوا بِآبَائِكُمْ. قَالَ عُمَرُ: فَوَاللّٰهِ مَا حَلَفْتُ بِهَا بَعْدُ ذَاكِرًا وَلاَ آثِرًا.

234 உமர் (ரலி) அவர்கள் கூறியதாவது:

நான் (ஒரு முறை) என் தந்தையின் பெயரால் சத்தியம் செய்தேன். இதைச் செவியுற்ற அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "உங்களின் தந்தையர் பெயரால் நீங்கள் சத்தியம் செய்ய வேண்டாமென அல்லாஹ் உங்களுக்குத் தடை விதிக்கிறான்" என்று சொன்னார்கள். அல்லாஹ்வின் மீதாணையாக! இவ்வாறு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறக் கேட்டது முதல் நானாகப் பேசும்போதும் சரி; பிறரது பேச்சை எடுத்துரைக்கும்போதும் சரி; நான் தந்தை பெயரால் சத்தியம் செய்ததில்லை.[171]

---

169. இந்த ஹதீஸை உமர் (ரலி) அவர்களிடமிருந்து அறிவிக்கும் [illegible] உமர் (ரலி) அவர்களிடமிருந்து [illegible] 64: 112 [illegible] அபூஹுரைரா (ரலி) அவர்களிடமிருந்து இந்த ஹதீஸை [illegible] புகாரீ (1399, 1456, 6924, 6925, 7284), முஸ்லிம் (32), திர்மிதீ (2532), நஸாயீ (2400, 3040-3043), அபூதாவூத் (1331) போன்ற நூல்களிலும் இடம்பெற்றுள்ளது.

170. காண்க: முன்சென்ற ஹதீஸ் எண்கள் - 107, 111, 209, 275.

171. பார்க்க: முன்சென்ற ஹதீஸ் எண் - 107.

235 உமர் (ரலி) அவர்கள் கூறியதாவது:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் பட்டாடையில் இருவிரல் அளவுக்கு அனுமதியளித்தார்கள்.[172]

٢٣٥ حدثنا خلف بن الوليد حدثنا خالد عن خالد عن أبي عثمان عن عمر رضي الله عنه أن رسول الله ﷺ رخص في الحرير في إصبعين.

236 அபூஉஸ்மான் அந்நஹ்தீ (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

நாங்கள் (எங்கள் படைத் தளபதி) உத்பா பின் ஃபர்கத் (ரலி) அவர்களுடன் (ஆதர்பைஜானில்) இருந்தபோது, உத்பா (ரலி) அவர்களுக்கு (கலீஃபா) உமர் (ரலி) அவர்கள் கடிதம் ஒன்றை எழுதி, அதில் நபி (ஸல்) அவர்கள் பற்றிய செய்திகளைக் குறிப்பிட்டிருந்தார்கள். அவர்கள் எழுதிய கடிதத்தில் பின்வரும் செய்தியும் இருந்தது:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "மறுமையில் இந்தப் பட்டாடையில் ஒரு சிறிது(ம் அணியின்ற பாக்கியமற்ற (ஆடவரே, இவ்வுலகில் அதை அணிவார்; இந்த அளவைத் தவிர!"

(அறிவிப்பாளர் சுலைமான் பின் தர்கான் அத்-தைமீ (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்:)

(அந்த அளவை விவரிக்கும் வகையில் அறிவிப்பாளர் அபூஉஸ்மான் அவர்கள்) சுட்டுவிரலையும் நடுவிரலையும் (இணைத்து) சைகை செய்தார்கள்- "நான் (தயாலிசா எனப்படும்) கோடு போட்ட கெட்டி ஆடைகளைக் கண்டபோது, அந்த ஆடையின் பித்தான்களின் அளவுதான் (அனுமதிக்கப்பட்ட) அந்த அளவு என நான் கருதினேன்" என்று அபூ உஸ்மான் (ரஹ்) அவர்கள் கூறினார்கள்.[173]

٢٣٦ حدثنا يحيى بن سعيد حدثنا التيمي عن أبي عثمان رضي الله عنه قال كنا مع عتبة بن فرقد فكتب إليه عمر رضي الله عنه بأشياء يحدثه عن النبي ﷺ فكان فيما كتب إليه أن رسول الله ﷺ قال لا يلبس الحرير في الدنيا إلا من ليس له في الآخرة منه شيء إلا هكذا وقال بإصبعيه السبابة والوسطى. قال أبو عثمان فرأيت أنها أزرار الطيالسة حين رأينا الطيالسة.

237 யஅலா பின் உமய்யா (ரலி) அவர்கள் கூறியதாவது:

நான் உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்களிடம், "நீங்கள் பூமியில் பயணம் செய்தால், இறைமறுப்பாளர்கள் உங்களைத் துன்புறுத்துவார்கள் என நீங்கள் அஞ்சும்போது, தொழுகையைச் குறைத்துத் தொழுவதில் உங்கள் மீது தவறேதுமில்லை' (4:101) என்றுதானே அல்லாஹ் கூறுகின்றான்! (மக்களுக்குப் பாதுகாப்பு ஏற்பட்டுவிட்ட) இந்த நாளிலும் மக்கள் குறைத்துத் தொழுதுவருகின்றனரே?" என்று கேட்டேன்

அதற்கு உமர் (ரலி) அவர்கள் (பின்வருமாறு) கூறினார்கள்: உங்களுக்கு ஏற்பட்ட வியப்பு(ம் ஐயமும்) எனக்கும் ஏற்பட்டது எனவே, இது குறித்து நான் அல்லாஹ்வின்

٢٣٧ حدثنا يحيى عن ابن جريج حدثني عبد الرحمن بن عبد الله بن أبي عمار عن عبد الله بن بابيه عن يعلى بن أمية قال قلت لعمر بن الخطاب رضي الله عنه إقصار الناس الصلاة اليوم وإنما قال الله عز وجل ﴿إن خفتم أن يفتنكم الذين كفروا﴾ فقد ذهب ذاك اليوم فقال عجبت مما عجبت منه فذكرت ذلك لرسول الله ﷺ فقال

172, 173. பார்க்க: முன்சென்ற ஹதீஸ் எண்கள் - 88, 118, 176 மற்றும் அடிக்குறிப்புகள்.

தூதர் (ஸல்) அவர்களிடம் வினவினேன். அப்போது, "(இது) அல்லாஹ் உங்களுக்கு வழங்கிய கொடை (சலுகை) ஆகும். அவனது கொடையை ஏற்றுக்கொள்ளுங்கள்" என அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் விடையளித்தார்கள்.[174]

صَدَقَةٌ تَصَدَّقَ اللهُ بِهَا عَلَيْكُمْ فَاقْبَلُوا صَدَقَتَهُ.

حَدَّثَنَا عَبْدُ الرَّزَّاقِ أَنْبَأَنَا ابْنُ جُرَيْجٍ سَمِعْتُ عَبْدَ الرَّحْمَنِ بْنَ عَبْدِ اللهِ بْنِ أَبِي عَمَّارٍ يُحَدِّثُ فَذَكَرَهُ.

238 உமர் (ரலி) அவர்கள் கூறியதாவது:

குர்ஆனில் இறுதியாக இறக்கியருளப்பட்ட வசனம் வட்டி தொடர்பான வசனம் ஆகும். வட்டி தொடர்பாக (முழுமையாக) விவரிக்காத நிலையில்தான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் இறந்தார்கள். எனவே வட்டியையும், (வட்டி என நீங்கள்) ஐயம் கொள்வதையும் விட்டுவிடுங்கள்.[175]

٢٣٨ حدثنا يَحْيَى عَنِ ابْنِ أَبِي عَرُوبَةَ حَدَّثَنَا قَتَادَةُ عَنْ سَعِيدِ بْنِ الْمُسَيَّبِ قَالَ قَالَ عُمَرُ رَضِيَ اللهُ عَنْهُ: إِنَّ آخِرَ مَا نَزَلَ مِنَ الْقُرْآنِ آيَةُ الرِّبَا وَإِنَّ رَسُولَ اللهِ ﷺ قُبِضَ وَلَمْ يُفَسِّرْهَا فَدَعُوا الرِّبَا وَالرِّيبَةَ.

239 நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

இறந்தவருக்காக ஒப்பாரி வைத்து அழுவதால் சவக் குழியில் அவர் (இறந்தவர்) வேதனை செய்யப்படுவார்.

இதை உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.[176]

٢٣٩ حدثنا يَحْيَى حَدَّثَنَا شُعْبَةُ حَدَّثَنَا قَتَادَةُ عَنْ سَعِيدِ بْنِ الْمُسَيَّبِ عَنِ ابْنِ عُمَرَ عَنْ عُمَرَ عَنِ النَّبِيِّ ﷺ قَالَ: الْمَيِّتُ يُعَذَّبُ فِي قَبْرِهِ بِالنِّيَاحَةِ عَلَيْهِ.

240 நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

இறந்தவருக்காக அவருடைய குடும்பத்தார் அழுவதால் அவர் வேதனை செய்யப்படுகிறார்.[177]

٢٤٠ حدثنا يَحْيَى عَنْ عُبَيْدِ اللهِ أَخْبَرَنِي نَافِعٌ عَنِ ابْنِ عُمَرَ عَنْ عُمَرَ رَضِيَ اللهُ عَنْهُ عَنِ النَّبِيِّ ﷺ قَالَ: يُعَذَّبُ الْمَيِّتُ بِبُكَاءِ أَهْلِهِ عَلَيْهِ.

---

174. பார்க்க: முஸ்லிம் ஹதீஸ் எண் - [illegible]

175. [illegible] 4544 [illegible] (2275-2281) [illegible] (2281) [illegible] 228 [illegible] 4176 [illegible] (2267) [illegible]

176, 177. [illegible] முஸ்லிம் ஹதீஸ் எண் - 176 [illegible] ஹதீஸ் எண் - 274 [illegible]

٢٤١ حدثنا يحيى عن يحيى قال سمعت سعيد بن المسيب أن عمر رضي الله عنه قال: إياكم أن تهلكوا عن آية الرجم لا نجد حدين في كتاب الله فقد رأيت النبي ﷺ قد رجم وقد رجمنا.

241 ஸஈத் பின் அல்முஸய்யப் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

"(மணமுடித்தவர் விபசாரம் புரிந்தால்) கல்லால் எறிந்து கொல்ல வேண்டும் எனும் ('ரஜ்ம்' பற்றிய) வசனம் தொடர்பாக (விபசாரம் புரிந்தவர் மண முடித்தவராயிருந்தால் கல்லெறி தண்டனை; மணமுடிக்காதவராயிருந்தால் கசையடி தண்டனை என) 'இறை வேதத்தில் இரண்டு தண்டனைகளை எங்களால் காண முடியவில்லையே' (பொதுவாக 'விபசாரம் புரிந்த ஆணுக்கும் பெண்ணுக்கும் நூறு சாட்டையடி கொடுங்கள்' என்றுதானே காண முடிகிறது) என்றெல்லாம் கூறுவதன் மூலம் நீங்கள் அழிவுக்குள்ளாகிவிட வேண்டாமென உங்களை நான் எச்சரிக்கிறேன். நபி (ஸல்) அவர்கள் (மண முடித்தவர் விபசாரம் புரிந்தால் அவருக்குக்) கல்லெறித் தண்டனை (ரஜ்ம்) நிறைவேற்றியுள்ளதை நான் பார்த்துள்ளேன். அவர்களுக்குப் பிறகு (கலீஃபாக்களாகிய) நாங்களும் அந்தத் தண்டனையை நிறைவேற்றியுள்ளோம்" என உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.[178]

٢٤٢ حدثنا يحيى حدثنا حميد عن أنس قال قال عمر رضي الله عنه: وافقت ربي في ثلاث ووافقني ربي في ثلاث قلت يا رسول الله لو اتخذت من مقام إبراهيم مصلى فأنزل الله ﴿واتخذوا من مقام إبراهيم مصلى﴾ قلت يا رسول الله إنه يدخل عليك البر والفاجر فلو أمرت أمهات المؤمنين بالحجاب فأنزل الله آية الحجاب وبلغني معاتبة النبي عليه السلام بعض نسائه قال

242 அனஸ் (ரலி) அவர்கள் கூறியதாவது:

உமர் (ரலி) அவர்கள், "மூன்று விஷயங்களில் (அவை விதியாக்கப்படுவதற்கு முன்பே) நான் இறைவனுக்கு இசைவான கருத்துக்கொண்டேன் என் இறைவனும் (அந்த) மூன்று விஷயங்களில் எனக்கு இசைவான கருத்துக் கூறினான்" என்று சொல்லிவிட்டுப் பின்வருமாறு (அதை விவரித்துக்) கூறினார்கள்:

1. நான் (நபி (ஸல்) அவர்களிடம்), "அல்லாஹ்வின் தூதரே! இப்ராஹீம் (அலை) அவர்கள் (கஅபாவைக் கட்டியபோது) நின்ற இடத்தைத் தொழுமிடமாக நீங்கள் ஆக்கிக்கொள்ளலாமே!" என்று கேட்டேன். அப்போது அல்லாஹ், "இப்ராஹீம் நின்ற இடத்தை நீங்கள் தொழுமிடமாக ஆக்கிக்கொள்ளுங்கள்" எனும் (2:125ஆவது) வசனத்தை அருளினான்.

2. நான், (நபி (ஸல்) அவர்களிடம்), "அல்லாஹ்வின் தூதரே! தங்களிடம் நல்லவரும் கெட்டவரும் (எல்லா வகை மனிதர்களும்) வருகின்றார்கள். ஆகவே, (தங்கள் மனைவியரான) இறைநம்பிக்கையாளர்களின் அன்னையரை மறைப்பாடை ('ஹிஜாப்') அணிந்து கொள்ளும்படி தாங்கள் கட்டளையிடலாமே!" என்று கேட்டேன் அப்போது, அல்லாஹ் 'ஹிஜாப்' (சட்டம்) குறித்த வசனத்தை அருளினான்

3. நபி (ஸல்) அவர்கள் தம் மனைவியருள் சிலர் மீது அதிருப்தி அடைந்திருந்ததாக

178. இந்த ஹதீஸின் அறிவிப்பாளர் ஸஈத் பின் அல்முஸய்யப் (ரஹ்) அவர்கள், உமர் (ரலி) அவர்களிடமிருந்து நேரடியாக ஹதீஸ் எதையும் செவியுற்றதில்லை என்பதால் இது அறிவிப்பாளர்தொடர் இடைமுறிந்த ஹதீஸாகும் (முன்கத்திஉ). எனவே பலவீனமான ஹதீஸ் ஆகும். எனினும் இதே கருத்துள்ள ஹதீஸ் புகாரீ (6829, 6830, 7323), முஸ்லிம் (3492) ஆகியவற்றில் வேறு அறிவிப்பாளர்தொடர்களில் வந்துள்ளது. எனவே இது ஏற்கத்தக்க ஹதீஸே ஆகும். மேலும் பார்க்க: முஸ்னது ஹதீஸ் எண்கள் - 151, 192.

எனக்குச் செய்தி எட்டியது. ஆகவே, நான் இறைநம்பிக்கையாளர்களின் அன்னையரைத் தேடிச் சென்று அவர்களிடம், "நீங்கள் (நபி (ஸல்) அவர்களுக்குச் சங்கடம் ஏற்படுத்துவதை நிறுத்திக்கொள்ள வேண்டும்! இல்லையென்றால், உங்களுக்கு மாற்றாக உங்களை விடச் சிறந்தவர்களை அல்லாஹ் தன் தூதருக்கு வழங்குவான்" என்று சொன்னேன்.

இப்படி ஒவ்வொருவரையும் நான் தேடிச் சென்று (மேற்கண்டவாறு) கூறலானேன். அவர்களுள் ஒருவரிடம் நான் சென்றபோது அவர், "உமரே! தம்முடைய மனைவியருக்கு அறிவுரைகூற அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுக்குத் தெரியாதா? நீங்கள் ஏன் எங்களுக்கு அறிவுரைகூற வேண்டும்?" என்று கேட்டார். அப்போது அல்லாஹ், "இறைத் தூதர் உங்களை மணவிலக்குச் செய்துவிட்டால், உங்களைவிடச் சிறந்த முஸ்லிமான மனைவியரை (உங்களுக்கு மாற்றாக) அல்லாஹ் அவருக்கு வழங்கலாம்" எனும் (66:5 ஆவது) வசனத்தை அருளினான்.[179]

فاستقريت أمهات المؤمنين فدخلت عليهن فجعلت أستقريهن واحدة واحدة والله لئن انتهيتن وإلا ليبدلن الله رسوله خيرا منكن قال فأتيت على بعض نسائه قالت يا عمر أما في رسول الله ﷺ ما يعظ نساءه حتى تكون أنت تعظهن فأنزل الله عز وجل ﴿عسى ربه إن طلقكن أن يبدله أزواجا خيرا منكن﴾.

243 அபூ திப்யான் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

அப்துல்லாஹ் பின் அஸ்ஸுபைர் (ரலி) அவர்கள் பின்வருமாறு கூறியதை நான் கேட்டுள்ளேன்:

நீங்கள் உங்கள் மனைவியருக்குப் பட்டாடை அணியக் கொடுக்காதீர்கள். ஏனெனில், "இவ்வுலகில் பட்டாடை அணிந்தவர் மறுமையில் அதை அணிய மாட்டார்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறியதாக உமர் (ரலி) அவர்கள் கூறியதை நான் கேட்டுள்ளேன்.

மேலும் அப்துல்லாஹ் பின் அஸ்ஸுபைர் (ரலி) அவர்கள், "மறுமையில் பட்டாடை அணியாதவர் என்பவர், சொர்க்கத்தில் நுழையாதவரே ஆவார். ஏனெனில், அல்லாஹ் 'அங்கே (சொர்க்கத்தில்) அவர்களின் ஆடை, பட்டாகும்' (22:23) என்று கூறியுள்ளான்" என்று தமது கருத்தையும் கூறினார்கள்.[180]

٢٤٣ حدثنا يحيى عن شعبة حدثني أبو ذبيان سمعت عبد الله بن الزبير يقول لا تلبسوا نساءكم الحرير فإني سمعت عمر يحدث يقول عن النبي ﷺ أنه قال: من لبس الحرير في الدنيا لم يلبسه في الآخرة و قال عبد الله بن الزبير من عنده ومن لم يلبسه في الآخرة لم يدخل الجنة قال الله تعالى ﴿ولباسهم فيها حرير﴾.

179. பார்க்க: முஸ்னத் ஹதீஸ் எண்கள் - 152, 155

180. இதே ஹதீஸ், புகாரீ (5834), முஸ்லிம் (4202), நஸாயீ (5217) ஆகிய நூல்களிலும் இடம்பெற்றுள்ளது. இந்த ஹதீஸ் பெண்களும் பட்டாடை அணியக் கூடாது என்ற கருத்தைத் தருகிறது. அது அப்துல்லாஹ் பின் அஸ்ஸுபைர் (ரலி) அவர்களின் கருத்தே இங்கு கூறப்பட்டுள்ளது.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் வலக்கையில் பட்டையும் இடக்கையில் தங்கத்தையும் எடுத்து "இவை இரண்டும் என் சமுதாயத்திலுள்ள ஆண்களுக்குத் தடை செய்யப்பட்டுள்ளன" என்று கூறினார்கள். (அபூதாவூத்-3535, நஸாயீ-5063, இப்னுமாஜா-3585) பட்டு பெண்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது என்ற செய்தி திர்மிதீ (1642) நஸாயீ (5057) ஆகிய நூல்களில் பதிவாகியுள்ளது. பார்க்க: முஸ்னத் ஹதீஸ் எண் - 118 மற்றும் அடிக்குறிப்பு.

244 ஆமிர் அஷ்ஷஅபீ (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

(ஒருமுறை) உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள், தல்ஹா பின் உபைதில்லாஹ் (ரலி) அவர்களைக் கடந்து சென்றார்கள். அப்போது தல்ஹா (ரலி) அவர்கள் கவலையுடன் இருந்ததைக் கண்டார்கள். "தல்ஹா அவர்களே! உங்கள் தந்தையின் சகோதரர் புதல்வர் -அதாவது அபூபக்ர் (ரலி)- ஆட்சி(ப் பொறுப் பேற்றது) உங்களுக்கு மன வேதனை அளித்து விட்டதா? (உங்கள் கவலைக்குக் காரணம் என்ன?)" என்று கேட்டார்கள்.

அதற்கு தல்ஹா (ரலி) அவர்கள், "இல்லை. அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், 'நான் வார்த்தை ஒன்றை அறிவேன். மரணத் தறுவாயில் ஒருவர் அதைக் கூறினால், (மறுமைநாளில்) அவரது வினைப்பட்டியல் அவருக்கு அந்த வார்த்தை, பேரொளியாகத் திகழாமல் இருப்பதில்லை. அல்லது அதை முன்னிட்டு அவரது உடலைவிட்டு உயிர் பிரியும்போது, தனது உயிரிலிருந்து அவர் நறுமணத்தை உணராமல் இருக்கமாட்டார்' என்று கூறியதை நான் கேட்டேன் (அது எந்த வார்த்தை என்பதை நான் மறந்துவிட்டேன். அதனால்தான் கவலையுடன் இருக்கிறேன்)" என்றார்கள்.

٢٤٤ حدثنا يحيى عن إسماعيل حدثنا عامر و
حدثنا محمد بن عبيد حدثنا إسماعيل بن أبي
خالد عن رجل عن الشعبي قال: مر عمر بطلحة
فذكر معناه قال مر عمر بطلحة فرآه مهتما قال
لعلك ساءتك إمارة ابن عمك قال يعني أبا بكر
رضي الله عنه فقال لا ولكني سمعت رسول الله
ﷺ يقول إني لأعلم كلمة لا يقولها الرجل عند
موته إلا كانت نورا في صحيفته أو وجد لها
روحا عند الموت قال عمر أنا أخبرك بها هي
الكلمة التي أراد بها عمه شهادة أن لا إله إلا الله
قال فكأنما كشف عني غطاء قال صدقت لو
علم كلمة هي أفضل منها لأمره بها.

அதற்கு உமர் (ரலி) அவர்கள், "அதைப் பற்றி நான் உமக்குக் கூறுகின்றேன். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) தம் பெரிய தந்தை (அபூதாலிப்) அவர்களின் இறப்பு வேளையில் அவர் எந்த வார்த்தையை உறுதிமொழியாகக் கூறவேண்டுமென விரும்பினார்களோ, அந்த 'லா இலாஹ இல்லல்லாஹ்' (அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை) எனும் வார்த்தைதான் அது" என்றார்கள்.

தல்ஹா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

(உமர் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறியதும்,) என்னைவிட்டு (என்னைப் போர்த்தியிருந்த) திரை அகற்றப்பட்டதைப் போன்றிருந்தது. உடனே நான் (உமர் (ரலி) அவர்களிடம்), "உண்மை உரைத்தீர். அந்த வார்த்தையைவிடச் சிறந்த வேறொரு வார்த்தையை அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அறிந்திருந்தால், அதையே கூறுமாறு (தம் பெரிய தந்தைக்கு) அவர்கள் கட்டளையிட்டிருப்பார்கள்" என்று சொன்னேன்.[181]

---

181. இந்த ஹதீஸின் அறிவிப்பாளரான ஆமிர் அஷ்ஷஅபீ (ரஹ்) அவர்கள், உமர் (ரலி) அவர்களையோ தல்ஹா (ரலி) அவர்களையோ சந்தித்ததில்லை. எனவே மேலோட்டமாகப் பார்க்கும்போது இது அறிவிப்பாளர்தொடர் இடைமுறிவு ஏற்பட்ட (முன்கதிஉ) ஹதீஸ் போலத் தோன்றுகிறது. ஆயினும் முன்சென்ற 182ஆவது ஹதீஸில் ஆமிர் அஷ்ஷஅபீ அவர்கள் இந்த ஹதீஸை யஹ்யா பின் தல்ஹா (ரலி) அவர்களிடமிருந்து அறிவிக்கின்றார்கள். ஆமிர் அஷ்ஷஅபீ அவர்கள் யஹ்யா (ரலி) அவர்களைச் சந்தித்தவர் ஆவார்கள். எனவே இது முழுமையடைந்த அறிவிப்பாளர் தொடரில் அமைந்த முத்தஸில் ஹதீஸாகும்.

மேலும், இதே செய்தி 'இப்னுமாஜா'விலும் வேறு அறிவிப்பாளர்தொடரில் பதிவாகியுள்ளது. ஹதீஸ் எண் - 3795.
மேலும், காண்க: முன்சென்ற ஹதீஸ் எண் - 182 மற்றும் அதன் அடிக்குறிப்பு.

245 யஅலா பின் உமய்யா (ரலி) அவர்கள் கூறியதாவது:

நான் உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்களுடன் (இறையில்லம் 'கஅபா'வைச்) சுற்றி (தவாஃப்) வந்தேன். 'ஹஜருல் அஸ்வத்' கல் பதிக்கப்பெற்ற பகுதியை ஒட்டியுள்ள வாசலுக்கு அருகிலுள்ள மூலையில் நான் இருந்தபோது, அந்த மூலையை முத்தமிட உமர் (ரலி) அவர்களின் கையை நான் பிடித்தேன். அப்போது உமர் (ரலி) அவர்கள், "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுடன் நீ இறையில்லம் கஅபாவைச் சுற்றி (தவாஃப்) வந்துள்ளாயா?" என்று கேட்டார்கள். நான், "ஆம்" என்றேன். "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அந்த மூலையை முத்தமிட்டதை நீ பார்த்திருக்கிறாயா?" என்று கேட்டார்கள். நான், "இல்லை" என்றேன். "அப்படியானால், நீயும் அதை விட்டுவிடு! ஏனெனில், உமக்கு அல்லாஹ்வின் தூதரிடம் அழகிய முன்மாதிரி இருக்கிறது" என்று உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.[182]

٢٤٥ حدثنا يحيى عن ابن جريج حدثني سليمان بن عتيق عن عبد الله بن بابيه عن يعلى بن أمية قال: طفت مع عمر بن الخطاب رضي الله عنه فلما كنت عند الركن الذي يلي الباب مما يلي الحجر أخذت بيده ليستلم فقال أما طفت مع رسول الله ﷺ قلت بلى قال فهل رأيته يستلمه قلت لا قال فانفذ عنك فإن لك في رسول الله أسوة حسنة.

246 அபூவாயில் ஷகீக் பின் சலமா (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

'பனூ தஃக்லிப்' குலத்தைச் சேர்ந்தவரான சுபய்யு பின் மஅபத் (ரஹ்) அவர்கள் என்னிடம் பின்வருமாறு கூறினார்கள்:

நான் கிறிஸ்தவனாக இருந்து இஸ்லாத்தைத் தழுவினேன். பிறகு நான் அறப் போருக்குச் செல்ல விரும்பினேன். (ஆனால் அறப்போருக்குச்) செல்லாமல் திரும்பி வந்து, ஹஜ்ஜுக்கும் உம்ராவுக்கும் சேர்த்து 'இஹ்ராம்' அணிந்தேன். பிறகு நான் 'அல் உதைப்' எனுமிடத்தில் சல்மான் பின் ரபீஆ, ஸைது பின் ஸூஹான் ஆகிய இருவரையும் கடந்து சென்றேன். அப்போது அவ்விருவருள் ஒருவர் "(ஹஜ்-உம்ரா ஆகிய) இரண்டுக்கும் சேர்த்தா (இஹ்ராம் கட்டுகிறீர்)?" என்று (வியப்புடன்) கேட்டார். மற்றொருவர், "இவரை விட்டுவிடு. இவர், தனது ஒட்டகத்தை விட வழி தவறியவர்" என்றார். இந்தக்

٢٤٦ حدثنا يحيى عن الأعمش حدثنا شقيق حدثني الصبي بن معبد وكان رجلا من بني تغلب قال كنت نصرانيا فأسلمت فاجتهدت فلم آل فأهللت بحجة وعمرة فمررت بالعذيب على سلمان بن ربيعة وزيد بن صوحان فقال أحدهما أبهما جميعا فقال له صاحبه دعه فلهو أضل من

182. புனித கஅபாவின் நான்கு மூலைகளுக்கும் வெவ்வேறு பெயர்கள் உள்ளன. அதன் தலைவாயிலை ஒட்டிய வடகிழக்கு மூலை 'ருக்னு ஹஜருல் அஸ்வத்' என்றும் தென்கிழக்கு மூலை 'ருக்னுல் யமானீ' என்றும் தென்மேற்கு மூலை 'ருக்னுஷ் ஷாம்' என்றும் வடமேற்கு மூலை 'ருக்னுல் இராக்' என்றும் வழங்கப்படுகின்றன. இவற்றுள் எதை எதைத் தொட்டு முத்தமிடலாம் என்பதில் நபித்தோழர்களிடையே கருத்து வேறுபாடு நிலவியது. உமர் (ரலி) உள்ளிட்ட நபித்தோழர்கள், முதலிரண்டு மூலைகளை மட்டும் தொட்டு முத்தமிட வேண்டும் என்றும் முஆவியா (ரலி) முதலான நபித்தோழர்கள், நான்கு மூலைகளையும் தொட்டு முத்தமிடலாம் என்றும் கருத்துக் கொண்டிருந்தனர்.

புனிதக் கஅபாவிலுள்ள 'ஹஜருல் அஸ்வத்' எனும் கல்லை நேரடியாக உதடுகளால் முத்தமிடலாம். 'ருக்னுல் யமானீ' எனும் மூலையை கையால் தொட்டு அக்கையை முத்தமிட வேண்டும். மற்ற இரண்டு மூலைகளை முத்தமிட நபிமொழிகளில் சான்று எதுவும் இல்லை என இந்த ஹதீஸ் அறிவுறுத்துகிறது. பார்க்க: புகாரீ 1609, அஹ்மது 296, 482

نحوه قال فكأنما بعيري على عنقي فأتيت عمر رضي الله عنه فذكرت ذلك له، فقال لي عمر: إنهما لم يقولا شيئا هديت لسنة نبيك ﷺ.

٢٤٧ حدثنا يحيى عن عبيد الله حدثني نافع عن ابن عمر عن عمر رضي الله عنه أنه قال: يا رسول الله إني نذرت في الجاهلية أن أعتكف في المسجد الحرام ليلة فقال له: فأوف بنذرك.

م ٢٤٧ حدثنا عبد الرزاق أنبأنا سفيان عن منصور عن أبي وائل عن صبي بن معبد التغلبي قال: كنت حديث عهد بنصرانية فأردت الجهاد أو الحج فأتيت رجلا من قومي يقال له هديم فسألته فأمرني بالحج فقرنت بين الحج والعمرة فذكره.

٢٤٨ حدثنا وكيع حدثنا سفيان وعبد الرحمن عن سفيان عن زبيد الإيامي عن عبد الرحمن بن أبي ليلى عن عمر رضي الله عنه قال: صلاة السفر ركعتان وصلاة الأضحى ركعتان وصلاة الفطر ركعتان وصلاة الجمعة ركعتان تمام غير قصر على لسان محمد ﷺ.

சொல் எனது கழுத்தின்மீது எனது ஒட்டகம் இருந்ததைப் போன்று (மிகவும் பாரமாக) இருந்தது. ஆகவே, நான் உமர் (ரலி) அவர்களிடம் வந்து, இது குறித்துத் தெரிவித்தேன் அப்போது உமர் (ரலி) அவர்கள் என்னிடம், "அவ்விருவரும் (பயனுள்ள) எதையும் கூறவில்லை நீர் உம்முடைய நபியின் வழிமுறைக்குத்தான் வழி காட்டப்பட்டுள்ளீர்" என்று கூறினார்கள்.[183]

247 உமர் (ரலி) அவர்கள் கூறியதாவது:

நான் (நபி (ஸல்) அவர்களிடம்), "அல்லாஹ்வின் தூதரே! மஸ்ஜிதுல் ஹராம் (புனிதப்) பள்ளிவாசலில் ஓர் இரவு (தங்கி) 'இஃதிகாஃப்' இருப்பதாக நான் அறியாமைக் காலத்தில் நேர்ந்துகொண்டேன் (இப்போது அதை நிறைவேற்றலாமா?)" என்று கேட்டேன் அதற்கு நபி (ஸல்) அவர்கள் "உங்களது நேர்த்திக்கடனை நிறைவேற்றுங்கள்" என்று கூறினார்கள்.[184]

247-A சுபய்யு பின் மஅபத் அத்தஃக்லிபீ (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

நான் கிறிஸ்தவனாக இருந்து இஸ்லாத்தைத் தழுவிய புதிதில், அறப்போர் அல்லது ஹஜ் (ஆகியவற்றுள் ஒன்றைச்) செய்ய விரும்பினேன் (அவற்றுள் எதை முதலில் செய்வது என்று அறிவதற்காக) என் சமுதாயத்தைச் சேர்ந்த 'ஹுதைம்' என்பாரிடம் சென்று, அது குறித்துக் கேட்டேன். அவர், "முதலில் ஹஜ் செய்!" என்று கூறினார். ஆகவே, நான் 'ஹஜ்ஜு'க்கும் உம்ராவுக்கும் சேர்த்து 'இஹ்ராம்' அணிந்தேன்.

பிறகு சுபய்யு (ரஹ்) அவர்கள், மேற்கண்ட (246ஆவது) ஹதீஸில் உள்ளதைப் போன்றே குறிப்பிட்டார்கள்.

248 உமர் (ரலி) அவர்கள் கூறியதாவது:

"பயணத் தொழுகை இரண்டு ரக்அத்களாகும் 'ஹஜ்ஜுப்' பெருநாள் தொழுகையும் இரண்டு ரக்அத்களாகும் நோன்புப் பெருநாள் தொழுகையும் இரண்டு ரக்அத்களாகும் 'ஜுமுஆத் தொழுகையும் இரண்டு ரக்அத்களாகும் இ(ந்த ஒவ்வோர் இரண்டு 'ரக்அத் களுமான)து குறைக்கப்படாத முழுமையான 'ரக்அத்'களே ஆகும்" (இவ்வாக்கு) முஹம்மது

183. பார்க்க: முன்சென்ற ஹதீஸ் எண் - 78.

184. இதே ஹதீஸ் புகாரீ (2032, 2042, 2043, 4320, 6697), முஸ்லிம் (3406), திர்மிதீ (1459), நஸாயீ (3760-3782), அபூதாவூத் (2889), இப்னுமாஜா (1762), பைஹகீயின் ஸுனனுல் குப்ரா (4/318), முஸ்தக்ரஜு அபீஅவானா (4743), அல்முன்தகா (238) உள்ளிட்ட நூல்களிலும் பதிவாகியுள்ளது.

(ஸல்) அவர்களின் நாவினால் மொழியப்பட்டதாகும்.[185]

இதன் அறிவிப்பாளர்களுள் ஒருவரான சுஃப்யான் (ரஹ்) கூறுகிறார்:

இந்த ஹதீஸை அறிவிக்கும்போது, "ஒருமுறை இதை உமர் (ரலி) கூறினார்கள் என்று நான் கருதுகிறேன்" என ஸைது அல்இயாமி என்ற அறிவிப்பாளர் கூறினார். மற்றொருவரான அப்துர்ரஹ்மான் பின் அபீலைலா என்பவர் சந்தேகமின்றி (உமர் (ரலி) கூறியதாக) அறிவிக்கிறார். யஸீது பின் ஹாரூன் பின் அபீலைலா என்பவர், "நான் உமர் (ரலி) அவர்களிடமிருந்து இதைச் செவியேற்றேன்" என்று கூறுகிறார்.

قَالَ سُفْيَانُ: وَقَالَ زُبَيْدٌ مَرَّةً أُرَاهُ عَنْ عُمَرَ قَالَ عَبْدُ الرَّحْمَنِ عَلَى عُمَرَ وَحْدَهُ الشَّكُّ وَقَالَ يَزِيدُ يَعْنِي ابْنَ هَارُونَ ابْنُ أَبِي لَيْلَى قَالَ سَمِعْتُ عُمَرَ رَضِيَ اللَّهُ عَنْهُ.

249 உமர் (ரலி) அவர்கள் கூறியதாவது:

நான் ஒருவரை அல்லாஹ்வின் பாதையில் (அறப்போருக்குச் செல்ல) ஒரு குதிரையின் மீதேற்றி அனுப்பிவைத்தேன். (அவர் பயணம் செய்ய ஒரு குதிரையை இலவசமாகக் கொடுத்து உதவினேன்.) பிறகு அது (சந்தையில்) விற்கப்பட்டதைக் கண்டேன். நபி (ஸல்) அவர்களிடம், "அதை நான் விலைக்கு வாங்கிக் கொள்ளட்டுமா?" என்று கேட்டேன். நபி (ஸல்) அவர்கள், "அதை வாங்காதீர்கள்; உங்கள் தர்மத்தைத் திரும்பப் பெறாதீர்கள்" என்று கூறினார்கள்.[186]

٢٤٩ حدثنا وَكِيعٌ حَدَّثَنَا هِشَامُ بْنُ سَعْدٍ عَنْ زَيْدِ بْنِ أَسْلَمَ عَنْ أَبِيهِ عَنْ عُمَرَ رَضِيَ اللَّهُ عَنْهُ أَنَّهُ وَجَدَ فَرَسًا كَانَ حَمَلَ عَلَيْهَا فِي سَبِيلِ اللَّهِ تُبَاعُ فِي السُّوقِ فَأَرَادَ أَنْ يَشْتَرِيَهَا، فَسَأَلَ النَّبِيَّ ﷺ فَنَهَاهُ، وَقَالَ: لَا تَعُودَنَّ فِي صَدَقَتِكَ.

250 கைஸ் பின் அபீ ஹாஸிம் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

உமர் (ரலி) அவர்கள் தமது கையில் பேரீச்ச மட்டை ஒன்றை வைத்துக்கொண்டு மக்களை (அமைதிப்படுத்தி) அமரச் செய்தபடி, "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுடைய கலீஃபா (அபூபக்ர்) அவர்கள் கூறுவதைச் செவிசாய்த்துக் கேளுங்கள்" என்று கூறிக் கொண்டிருந்ததை நான் கண்டேன். அப்போது அபூபக்ர் (ரலி) அவர்களால்

٢٥٠ حدثنا وَكِيعٌ عَنِ ابْنِ أَبِي خَالِدٍ عَنْ قَيْسٍ قَالَ رَأَيْتُ عُمَرَ رَضِيَ اللَّهُ عَنْهُ وَبِيَدِهِ عَسِيبُ نَخْلٍ وَهُوَ يُجْلِسُ النَّاسَ يَقُولُ: اسْمَعُوا لِقَوْلِ خَلِيفَةِ رَسُولِ اللَّهِ ﷺ فَجَاءَ مَوْلًى لِأَبِي بَكْرٍ رَضِيَ اللَّهُ عَنْهُ يُقَالُ

---

185. [illegible]

[illegible] - 350, 1080, 3835; முஸ்லிம் - 1272

186. பார்க்க: முந்தைய ஹதீஸ் எண் - 181

விடுதலை செய்யப்பட்ட அவர்களுடைய அடிமையான ஷதீத் (ரலி) அவர்கள் ஓர் (அறிவிப்பு) ஏட்டுடன் வந்து, அதை மக்களுக்கு வாசித்தார் அதில், "அபூபக்ர் கூறுகிறார்: இந்த ஏட்டிலுள்ளதைச் செவியேற்று, இதற்குக் கீழ்ப்படியுங்கள். அல்லாஹ்வின் மீதாணையாக! நான் உங்களுக்குக் குறை வைக்க மாட்டேன்" என்று இருந்தது

அதன் பிறகு உமர் (ரலி) அவர்கள் சொற்பொழிவு மேடை (மிம்பர்) மீது (ஏறி உரையாற்றியதை) நான் கண்டேன்.[187]

لَهُ شَدِيدٌ بِصَحِيفَةٍ فَقَرَأَهَا عَلَى النَّاسِ، فَقَالَ يَقُولُ أَبُو بَكْرٍ رَضِيَ اللَّهُ عَنْهُ: اسْمَعُوا وَأَطِيعُوا لِمَا فِي هَذِهِ الصَّحِيفَةِ فَوَاللَّهِ مَا آلُوتُكُمْ، قَالَ قَيْسٌ: فَرَأَيْتُ عُمَرَ رَضِيَ اللَّهُ عَنْهُ بَعْدَ ذَلِكَ عَلَى الْمِنْبَرِ.

251 இம்ரான் பின் அல்ஹாரிஸ் அஸ்ஸுலமீ (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

நான் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களிடம் (மது ஊற்றி வைக்கப் பயன்படுத்தப்பட்ட) சுட்ட களிமண் பாத்திரம், சுரைக்காய் குடுவை ஆகியவற்றில் ஊற வைக்கப்பட்ட பானங்கள் பற்றிக் கேட்டேன். அதற்கு இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள், "சுட்ட களிமண் பாத்திரம், சுரைக்காய்க் குடுவை ஆகியவற்றில் பானங்களை ஊற்றி வைக்க வேண்டாமென அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் தடை செய்துள்ளார்கள்" என்று கூறினார்கள்.

٢٥١ حَدَّثَنَا مُؤَمَّلٌ حَدَّثَنَا سُفْيَانُ عَنْ سَلَمَةَ عَنْ عِمْرَانَ السُّلَمِيِّ قَالَ سَأَلْتُ ابْنَ عَبَّاسٍ رَضِيَ اللَّهُ عَنْهُمَا عَنِ النَّبِيذِ فَقَالَ: نَهَى رَسُولُ اللَّهِ ﷺ عَنْ نَبِيذِ الْجَرِّ وَالدُّبَّاءِ، فَلَقِيتُ ابْنَ عُمَرَ فَسَأَلْتُهُ فَأَخْبَرَنِي فِيمَا أَظُنُّ عَنْ عُمَرَ أَنَّ النَّبِيَّ ﷺ نَهَى عَنْ نَبِيذِ الْجَرِّ وَالدُّبَّاءِ.

شَكَّ سُفْيَانُ قَالَ فَلَقِيتُ ابْنَ الزُّبَيْرِ فَسَأَلْتُهُ فَقَالَ: نَهَى رَسُولُ اللَّهِ ﷺ عَنْ نَبِيذِ الْجَرِّ وَالدُّبَّاءِ.

பிறகு நான் இப்னு உமர் (ரலி) அவர்களைச் சந்தித்தபோது, அவர்களிடமும் கேட்டேன் அதற்கு அவர்களும், "சுரைக்காய்க் குடுவை, தார் பூசப்பட்ட பாத்திரம் ஆகியவற்றைப் பயன்படுத்த வேண்டாமென நபி (ஸல்) அவர்கள் தடை விதித்தார்கள்" என (என் தந்தை) உமர் (ரலி) கூறினார்கள்" என்றார்கள் என நான் எண்ணுகிறேன்" என்று கூறினார்கள்

-(இவ்வாறு, 'நான் எண்ணுகிறேன்' என இந்த ஹதீஸின் அறிவிப்பாளர்தொடரில் நான்காவது அறிவிப்பாளராக இடம்பெற்றுள்ள) சுஃப்யான் அஸ்ஸவ்ரீ (ரஹ்) அவர்களே ஐயத்துடன் அறிவிக்கிறார்கள்.-

பிறகு நான் இப்னுஸ் ஸுபைர் (ரலி) அவர்களைச் சந்தித்தபோது, அவர்களிடமும் கேட்டேன். அதற்கு இப்னுஸ் ஸுபைர் (ரலி) அவர்களும், "சுரைக்காய்க் குடுவை, சுட்ட களிமண் பாத்திரம் ஆகியவற்றில் பானங்களை ஊற்றிவைக்க வேண்டாமென அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் தடை செய்துள்ளார்கள்" என்று கூறினார்கள்.[188]

---

187. இந்த ஹதீஸ் முஸ்னது அஹ்மதில் மட்டுமே இடம்பெற்றுள்ளது

188. காண்க: முன்சென்ற ஹதீஸ் எண் - 180

அறியாமைக் காலத்து மக்கள் மது வகைகளை ஊற வைப்பதற்காகத் தார் பூசப்பட்ட மண் பாத்திரம், சுரைக்காய்க் குடுவை போன்ற சில பாத்திரங்களைப் பயன்படுத்தி வந்தார்கள். மதுவிலக்குச் சட்டம் முழுமையாக அமலுக்கு வந்ததும் மது வகைகள் தடை செய்யப்பட்டன. அது போன்றே மேற்கண்ட பாத்திரங்களையும் பயன்படுத்தக்கூடாது என்று நபி (ஸல்) அவர்கள் தடை செய்தார்கள். பின்னர், இஸ்லாம் நன்கு பரவிய பிறகு முன்னர் தடைசெய்த பாத்திரங்களைப் பயன்படுத்திட நபி (ஸல்) அவர்கள் அனுமதி வழங்கினார்கள். பார்க்க: புகாரீ ஹதீஸ் எண் - 5592

252 உபைது பின் ஆதம் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

(கலீஃபா) உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள் (ஜெருசலத்திலுள்ள 'பைத்துல் மக்திஸ்' பள்ளிவாசலுக்கு அருகிலிருந்தபோது) கஅபுல் அஹ்பார் (ரஹ்) அவர்களிடம், "நான் எங்கே தொழ வேண்டுமென நீங்கள் கருதுகிறீர்கள்?" என்று கேட்டார்கள். அதற்கு கஅபுல் அஹ்பார் (ரஹ்) அவர்கள், "என்னைக் கேட்டால், நீங்கள் அந்தப் பாறைக்குப் பின்னால் நின்று தொழலாம். அப்படித் தொழுதால், 'பைத்துல் மக்திஸ்' பள்ளிவாசல் முழுவதும் உங்களுக்கு முன்னால் இருக்கும்" என்று கூறினார்கள். அதற்கு உமர் (ரலி) அவர்கள், "நீங்கள் யூத கலாசாரத்திற்கு ஒப்பாகச் சொல்கிறீர்கள் இல்லை; நான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் தொழுத இடத்திலேயே தொழுவேன்" என்று கூறி விட்டு, கிப்லா (கஅபாவின்) திசையை முன்னோக்கிச் சென்று தொழுதார்கள். பிறகு வந்து தமது மேலாடையை விரித்து, அங்கிருந்த குப்பைகளைக் கூட்டிப் பெருக்கினார்கள் மக்களும் அவ்வாறே பெருக்கினர்.

உபைது பின் ஆதம், அபூ மர்யம், அபூ ஷுஐப் (ரஹ்) ஆகிய மூவர் வழியாக வந்துள்ள அறிவிப்பில், "(கலீஃபா) உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள் 'அல்ஜாபியா' எனுமிடத்தில் இருந்தபோது, 'பைத்துல் மக்திஸ்' வெற்றி கொள்ளப்பட்டதைப் பற்றி அவர்கள் நினைவுகூர்ந்தார்கள்" என ஹதீஸ் தொடங்குகிறது.[189]

٢٥٢ حدثنا أسود بن عامر حدثنا حماد بن سلمة عن أبي سنان عن عبيد بن آدم وأبي مريم وأبي شعيب أن عمر بن الخطاب رضي الله عنه كان بالجابية فذكر فتح بيت المقدس قال فقال أبو سلمة: فحدثني أبو سنان عن عبيد بن آدم قال سمعت عمر بن الخطاب رضي الله عنه يقول لكعب: أين ترى أن أصلي؟ فقال: إن أخذت عني صليت خلف الصخرة فكانت القدس كلها بين يديك، فقال عمر رضي الله عنه ضاهيت اليهودية لا ولكن أصلي حيث صلى رسول الله ﷺ فتقدم إلى القبلة فصلى ثم جاء فبسط رداءه فكنس الكناسة في ردائه وكنس الناس.

253 உமர் (ரலி) அவர்கள் கூறியதாவது:

நான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் 'கலாலா' (மூல வாரிசுகளோ கிளை வாரிசுகளோ இல்லாத ஒருவரின் சொத்துரிமை) பற்றிக் கேட்டேன். அப்போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "கோடைக் காலத்தில் அருளப்பெற்ற இறைவசனம் (4:176) உமக்குப் போதுமானதாகும்" என்று கூறினார்கள். இது பற்றி அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் நான் கேட்டிருப்பது, சிவப்பு ஒட்டகங்கள் என்னிடம் இருப்பதை விட எனக்கு மிகவும் உவப்பானதாகும்.[190]

٢٥٣ حدثنا أبو نعيم حدثنا مالك يعني ابن مغول قال سمعت الفضيل بن عمرو عن إبراهيم النخعي عن عمر رضي الله عنه قال: سألت رسول الله ﷺ عن الكلالة فقال: تكفيك آية الصيف، فقال لأن أكون سألت رسول الله ﷺ عنها أحب إلي من أن يكون لي حمر النعم.

---

189. இச்செய்தி முஸ்னது அஹ்மதில் மட்டுமே இடம்பெற்றுள்ளது. இதன் அறிவிப்பாளர்தொடரில் [illegible]

190. உமர் (ரலி) அவர்களிடமிருந்து இந்த ஹதீஸை அறிவிக்கும் இப்ராஹீம் அந்நகஈ (ரஹ்) அவர்கள் உமர் (ரலி) அவர்களைச்

254 உமர் (ரலி) அவர்கள் கூறியதாவது:

நான் நபி (ஸல்) அவர்களிடம் சென்று, "எனக்குப் பெருந்துடக்கு ஏற்பட்டு (குளியல் கடமையாகி) விடுகிறது (இந்நிலையில், குளிக்காமல் உறங்கலாமா?)" என்று கேட்டேன். அதற்கு நபி (ஸல்) அவர்கள், இனவுறுப்பைக் கழுவிவிட்டுத் தொழுகைக்கு அங்கத் தூய்மை (உளூ) செய்வதைப் போன்று அங்கத் தூய்மை செய்து கொ(ண்டு உறங்கிக் கொ)ள்ளுமாறு என்னைப் பணித்தார்கள்.[181]

٢٥٤ حدثنا أبو أحمد محمد بن عبد الله حدثنا سفيان عن عبد الله بن دينار عن ابن عمر عن عمر رضي الله عنه: أنه أتى النبي ﷺ فقال إنه تصيبني الجنابة فأمره أن يغسل ذكره ويتوضأ وضوءه للصلاة.

255 கஸஆ (பின் யஹ்யா அல்பஸ்ரீ (ரஹ்)) அவர்கள் கூறியதாவது:

நான் இப்னு உமர் (ரலி) அவர்களிடம், "உயிருடன் இருக்கும் இவர்கள் அழுவதால், இறந்துவிட்ட ஒருவரை அல்லாஹ் வேதனை செய்வானா?" என்று கேட்டேன். அதற்கு இப்னு உமர் (ரலி) அவர்கள், "(ஆம். இவ்வாறு) அல்லாஹ்வின் தூதர் கூறியதாக என் (தந்தை) உமர் (ரலி) அவர்கள் என்னிடம் கூறினார்கள். நான் உமர் (ரலி) அவர்கள் (கூறியதாக அவர்கள்) மீது பொய் சொல்லவில்லை. உமர் (ரலி) அவர்களும் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் (கூறியதாக அவர்கள்) மீது பொய் சொல்லவில்லை" என்று கூறினார்கள்.[182]

٢٥٥ حدثنا عفان حدثنا همام عن قتادة عن قزعة قال قلت لابن عمر يعذب الله هذا الميت ببكاء هذا الحي؟ فقال حدثني عمر عن رسول الله ﷺ ما كذبت على عمر ولا كذب عمر على رسول الله ﷺ.

256 உமர் பின் அல்கத்தாப் (ரலி) கூறியதாவது:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுடன் நானும் அபூபக்ர் (ரலி) அவர்களும், அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரலி) அவர்களைக் கடந்து சென்றோம். அப்போது அவர் (தொழுகையில் நின்று) குர்ஆன் ஓதிக்கொண்டிருந்தார். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் நின்று, அவர் ஓதியதைக் கேட்டார்கள். பிறகு அவர் 'ருகூஉ' செய்துவிட்டு, 'சஜ்தா'வும் செய்தபோது, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "கேள்! அது கொடுக்கப்படும் கேள்! அது கொடுக்கப்படும்" என்றார்கள்.

٢٥٦ حدثنا عفان حدثنا عبد الواحد بن زياد حدثنا الحسن بن عبيد الله حدثنا إبراهيم عن علقمة عن القرثع عن قيس أو ابن قيس رجل من جعفي عن عمر بن الخطاب قال: مر رسول الله ﷺ وأنا معه وأبو بكر على عبد الله بن مسعود وهو يقرأ فقام فسمع قراءته ثم ركع عبد الله وسجد، قال فقال رسول الله ﷺ: سل تعطه

[illegible] 174இல் [illegible] 181ஆவது [illegible]

181. [illegible] - 90

182. [illegible] 175இன் [illegible] 274ஆவது [illegible]

பிறகு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அங்கிருந்து சென்றார்கள் "ஒருவர் குர்ஆனை, அது இறக்கியருளப்பெற்ற முறையில் புத்தம் புதிதாக ஓத விரும்பினால், அவர் இப்னு உம்மி அப்தின் (அப்துல்லாஹ் பின் மஸ்வூத் (ரலி) அவர்களின்) ஓதல் முறைப்படி ஓதட்டும்" என்று கூறினார்கள்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறிய இந்த நற்செய்தியை (உடனடியாகத்) தெரிவிப்பதற்காக அதே இரவில் அப்துல்லாஹ் பின் மஸ்வூத் (ரலி) அவர்களிடம் நான் சென்றேன். அவர் வீட்டு வாசலை நான் தட்டியதும், அல்லது என் குரலை அவர் கேட்டதும், "இந்த நேரத்தில் நீங்கள் வரக் காரணம் என்ன?" என்று கேட்டார். நான், "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் (உம்மைப் பற்றிக்) கூறிய நற்செய்தியை உம்மிடம் தெரிவிப்பதற்காகவே நான் வந்தேன்" என்றேன். அதற்கு அவர், "(அந்த நற்செய்தியைத் தெரிவிப்பதில்) அபூபக்ர் (ரலி) அவர்கள் உங்களை முந்திவிட்டார்கள்" என்றார். "அவர் செய்வார். அவர் நல்ல விஷயங்களில் அதிகம் முந்திவிடக்கூடியவர் தான் எந்த ஒரு நற்செயலில் நாங்கள் எப்போது போட்டியிட்டாலும், அதில் என்னை அபூபக்ர் (ரலி) அவர்கள் முந்தாமல் இருந்ததில்லை" என்று கூறினேன்.[193]

سَلْ تُعْطَهْ قَالَ ثُمَّ مَضَى رَسُولُ اللَّهِ ﷺ، وَقَالَ:
مَنْ سَرَّهُ أَنْ يَقْرَأَ الْقُرْآنَ غَضًّا كَمَا أُنْزِلَ فَلْيَقْرَأْهُ
مِنِ ابْنِ أُمِّ عَبْدٍ، قَالَ فَأَدْلَجْتُ إِلَى عَبْدِ اللَّهِ بْنِ
مَسْعُودٍ لِأُبَشِّرَهُ بِمَا قَالَ رَسُولُ اللَّهِ ﷺ قَالَ: فَلَمَّا
ضَرَبْتُ الْبَابَ أَوْ قَالَ لَمَّا سَمِعَ صَوْتِي قَالَ مَا
جَاءَ بِكَ هَذِهِ السَّاعَةَ قُلْتُ جِئْتُ لِأُبَشِّرَكَ بِمَا قَالَ
رَسُولُ اللَّهِ ﷺ قَالَ: قَدْ سَبَقَكَ أَبُو بَكْرٍ، قُلْتُ: إِنْ
يَفْعَلْ فَإِنَّهُ سَبَّاقٌ بِالْخَيْرَاتِ مَا اسْتَبَقْنَا خَيْرًا قَطُّ
إِلَّا سَبَقَنَا إِلَيْهَا أَبُو بَكْرٍ.

٢٥٧ حدثنا عَفَّانُ حَدَّثَنَا حَمَّادُ بْنُ سَلَمَةَ عَنْ سَعِيدٍ
الْجُرَيْرِيِّ عَنْ أَبِي نَضْرَةَ عَنْ أُسَيْرِ بْنِ جَابِرٍ قَالَ: لَمَّا
أَقْبَلَ أَهْلُ الْيَمَنِ جَعَلَ عُمَرُ رَضِيَ اللَّهُ عَنْهُ يَسْتَقْرِي
الرِّفَاقَ، فَيَقُولُ هَلْ فِيكُمْ أَحَدٌ مِنْ قَرَنٍ؟ حَتَّى أَتَى
عَلَى قَرَنٍ، فَقَالَ: مَنْ أَنْتُمْ؟ قَالُوا: قَرَنٌ فَوَقَعَ زِمَامُ
عُمَرَ رَضِيَ اللَّهُ عَنْهُ أَوْ زِمَامُ أُوَيْسٍ فَنَاوَلَهُ أَحَدُهُمَا
الْآخَرَ فَعَرَفَهُ، فَقَالَ عُمَرُ: مَا اسْمُكَ؟ قَالَ: أَنَا
أُوَيْسٌ، فَقَالَ: هَلْ لَكَ وَالِدَةٌ؟ قَالَ: نَعَمْ، قَالَ: فَهَلْ
كَانَ بِكَ مِنَ الْبَيَاضِ شَيْءٌ؟ قَالَ: نَعَمْ فَدَعَوْتُ

257 உசைர் பின் ஜாபிர் (ரலி) அவர்கள் கூறியதாவது:

யமன் நாட்டு மக்கள் (மதீனா) வந்திருந்தபோது, அவர்களிடையே இருந்த அடிமைகளிடம் (கலீஃபா) உமர் (ரலி) அவர்கள், "உங்களிடையே 'கரன்' குலத்தைச் சேர்ந்தவர் யாரேனும் ஒருவர் உள்ளாரா?" என்று கேட்டார்கள்

இறுதியில் 'கரன்' குலத்தார் சிலரிடம் உமர் (ரலி) அவர்கள் வந்து, "நீங்கள் யார்?" என்று கேட்டார்கள். அவர்கள் " (நாங்கள்) 'கரன்' குலத்தவர்கள்" என்று விடையளித்தனர் அப்போது உமர் (ரலி) அவர்களது (கையிலிருந்து) சாட்டை அல்லது உவைஸ் (அல்கரனீ-ரஹ்) அவர்களது சாட்டை கீழே விழுந்துவிட, அவர்களுள் ஒருவர் மற்றவருக்கு அதை எடுத்துக் கொடுத்தார்; அவரை அடையாளமும் கண்டுகொண்டார்.

அப்போது உமர் (ரலி) அவர்கள், "உங்கள் பெயர் என்ன?" என்று கேட்க, அதற்கு அவர், "நான் உவைஸ்" என்றார். "உங்களுக்குத் தாயார் இருக்கின்றாரா?" என்று கேட்க, அவர், "ஆம்" என்றார். உமர் (ரலி) அவர்கள், "அப்படியா? உங்களுக்கு வெண்குஷ்டம் ஏதும் இருந்ததா?" என்று கேட்டார்கள். அதற்கு அவர், "ஆம் (இருந்தது). நான் வல்லமை

193. பார்க்க: முஸ்லிம் ஹதீஸ் எண் - 170 மற்றும் அதன் அடிக்குறிப்பு

யும் மாண்பும் மிக்க அல்லாஹ்விடம் பிரார்த்தித்தேன் அந்தக் குஷ்டத்தை என்னை விட்டு அவன் அகற்றிவிட்டான்; எனது தொப்புள் பகுதியில் உள்ள ஒரு 'திர்ஹம்' அளவு இடத்தைத் தவிர அதன் மூலம் என் இறைவனை நான் (நன்றியுடன்) நினைவுகூரவேண்டும் என்பதற்காகத்தான் (அதை விட்டு வைத்துள்ளான்)" என்று கூறினார்.

அவரிடம் உமர் (ரலி) அவர்கள், "எனக்காக நீங்கள் அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கோருங்கள்" என்று கூறினார்கள்.

அதற்கு உவைஸ் (ரஹ்) அவர்கள், "எனக்காகப் பாவமன்னிப்புக் கோரத் தாங்கள்தாம் மிகவும் தகுதி வாய்ந்தவர்கள். (ஏனெனில்,) தாங்கள் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் தோழர் ஆவீர்கள்" என்று கூறினார்.

அதற்கு உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "(நபித்தோழர்களுக்கு அடுத்த காலத்தவர்களான) தாபிஉகளுள் சிறந்தவர் உவைஸ் எனப்படும் ஒருவர் ஆவார். அவருக்குத் தாயார் உள்ளார். அவரது உடலில் வெண்குஷ்டம் ஏற்பட்டு, அவர் வல்லமையும் மாண்பும் மிக்க அல்லாஹ்விடம் பிரார்த்திக்க, அதை அல்லாஹ் அவரைவிட்டு அகற்றிவிடுவான்; அவரது தொப்புள் பகுதியில் சிறிதளவைத் தவிர" என்று கூறியதை நான் கேட்டுள்ளேன்.

لله عز وجل فأذهبه عني إلا موضع الدرهم من سرتي لأذكر به ربي، قال له عمر رضي الله عنه: استغفر لي، قال: أنت أحق أن تستغفر لي أنت صاحب رسول الله ﷺ، فقال عمر رضي الله عنه: إني سمعت رسول الله ﷺ يقول: إن خير التابعين رجل يقال له أويس وله والدة وكان به بياض فدعا الله عز وجل فأذهبه عنه إلا موضع الدرهم في سرته فاستغفر له ثم دخل في غمار الناس فلم يدر أين وقع. قال: فقدم الكوفة قال: وكنا نجتمع في حلقة فنذكر الله وكان يجلس معنا فكان إذا ذكر هو وقع حديثه من قلوبنا موقعا لا يقع حديث غيره فذكر الحديث.

حدثنا عبد الملك بن أبي الشوارب حدثنا عبد الواحد بن زياد حدثنا الحسن بن عبيد الله عن إبراهيم عن القرثع عن قيس أو ابن قيس رجل من جعفي عن عمر بن الخطاب رضي الله عنه فذكر نحو حديث عفان.

பிறகு உவைஸ் அவர்கள் உமர் (ரலி) அவர்களுக்காகப் பாவமன்னிப்புக் கோரினார்கள். அதன் பின்னர் உவைஸ் அவர்கள் மக்கள் திரளிடையே நுழைந்துவிட்டார்கள். அவர் எங்கே இருக்கிறார் என அறியமுடியவில்லை.

(இந்த ஹதீஸின் அறிவிப்பாளர்) கூறினார்:

பிறகு உவைஸ் அவர்கள் 'கூஃபா' நகருக்கு வந்தார்கள். நாங்கள் ஓர் அவையில் வட்டமாக அமர்ந்து அல்லாஹ்வை நினைவுகூர்ந்து (பேசிக்) கொண்டிருந்தபோது, உவைஸ் அவர்கள் எங்கள் அவைக்கு வந்து எங்களுடன் அமர்வார்கள். அப்போது அவர் ஏதேனும் அறிவுரை கூறினால், அவரது பேச்சு எங்கள் இதயங்களில் இடம்பெற்றுவிடும்; அந்த அளவுக்கு மற்றவர்களின் பேச்சு இடம்பெறாது.[194]

---

194. இதுபோன்ற கருத்துள்ள ஹதீஸ் முஸ்லிமில் (4969-4971) இடம்பெற்றுள்ளது.

உவைஸுல் கரனீ (ரஹ்) அவர்கள் யமன் நாட்டைச் சேர்ந்தவர் ஆவார்கள். நபி (ஸல்) அவர்களின் காலத்தில் வாழ்ந்து முஸ்லிமாக இருந்தும் நபியவர்களைச் சந்திக்கும் வாய்ப்பு இவருக்குக் கிடைக்கவில்லை. வயது முதிர்ந்த தம் தாயாருக்குப் பணிவிடை செய்வதற்காகவே அவ்வாறு அவருக்குக் கிடைக்கவில்லை. அவரைப் பற்றி தம் தோழர்களுக்கு அறிவித்த நபி (ஸல்) அவர்கள், அவரைச் சந்தித்தால் அவரிடம் பிரார்த்தனை (துஆ) செய்யுமாறு கோரவேண்டும் என்று பணித்திருந்தார்கள். தமது இறுதிக் காலத்தை இராக்கின் கூஃபா நகரில் கழித்த உவைஸ் (ரஹ்) ஹிஜ்ரி 37ஆம் ஆண்டு (கி.பி. 657) நடந்த 'ஸிஃப்பீன்' போரில் அலீ (ரலி) அவர்களுடன் சேர்ந்து போரிட்டு வீரமரணம் அடைந்தார்கள்.

٢٥٨ حدثنا عفان حدثنا حماد بن سلمة حدثنا ثابت عن أنس أن عمر بن الخطاب رضي الله عنه لما عولت عليه حفصة، فقال يا حفصة أما سمعت النبي ﷺ يقول المعول عليه يعذب؟ قال وعول صهيب، فقال عمر: يا صهيب أما علمت أن المعول عليه يعذب؟

258 அனஸ் (ரலி) அவர்கள் கூறியதாவது:

உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள் தாக்கப்பட்டுக் கிடந்தபோது, அவர்களுக்காக (அவர்களுடைய புதல்வி) ஹஃப்ஸா (ரலி) அவர்கள் சப்தமிட்டு அழுதார்கள் அப்போது உமர் (ரலி) அவர்கள், "ஹஃப்ஸா! 'சப்தமிட்டு எவருக்காக அழப்படுகின்றதோ, அவர் வேதனை செய்யப்படுவார்' என அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறியதை நீ செவியுற்றதில்லையா?" என்று கேட்டார்கள். (அவ்வாறே உமர் மீது அதிக அன்பு கொண்டிருந்த) ஸுஹைப் (அர்ரூமீ-ரலி) அவர்கள் சப்தமிட்டு அழுதபோதும், "ஸுஹைப்! 'சப்தமிட்டு எவருக்கு அழப்படுகின்றதோ, அவர் வேதனை செய்யப்படுவார்' என்(று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறியிருப்)பதை நீர் அறியவில்லையா?" என்று கேட்டார்கள்.[185]

٢٥٩ حدثنا عفان حدثنا عبد الواحد حدثنا يزيد الرشك عن معاذة عن أم عمرو ابنة عبد الله أنها سمعت عبد الله بن الزبير يحدث أنه سمع عمر بن الخطاب رضي الله عنه يخطب قال: قال رسول الله ﷺ: من لبس الحرير في الدنيا فلا يكساه في الآخرة.

259 அப்துல்லாஹ் பின் அஸ்ஸுபைர் (ரலி) அவர்கள் கூறியதாவது:

உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள் உரையாற்றியபோது, "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், 'இவ்வுலகில் பட்டாடை அணிகின்ற (ஆட)வர், மறுமையில் அதை அணிவிக்கப்படமாட்டார்' என்று கூறியதை நான் செவியுற்றுள்ளேன்" என்று கூறினார்கள்.[186]

٢٦٠ حدثنا عفان حدثنا همام حدثنا قتادة حدثنا أبو العالية عن ابن عباس رضي الله عنه حدثني رجال مرضيون فيهم عمر رضي الله عنه وقال عفان مرة شهد عندي رجال مرضيون وأرضاهم عندي عمر رضي الله عنه أن رسول الله ﷺ قال: لا صلاة بعد صلاتين بعد الصبح حتى تطلع الشمس وبعد العصر حتى تغرب الشمس. حدثنا عفان حدثنا أبان حدثنا قتادة عن أبي العالية عن ابن عباس بمثل هذا شهد عندي رجال مرضيون.

260 இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறியதாவது:

"அஸ்ர் தொழுகைக்குப் பிறகு சூரியன் மறையும் வரையிலும், சுப்ஹுத் தொழுகைக்குப் பிறகு சூரியன் உதயமாகும் வரையிலும் எந்தத் தொழுகையும் கிடையாது" என்று நபி (ஸல்) அவர்கள் கூறுபவர்களாக இருந்தார்கள்.

இதை (நம்பிக்கைக்குரியோர் என மக்களால்) ஏற்றுக்கொள்ளப்பட்ட பலரும் என்னிடம் கூறினர் அவர்களுள் உமர் (ரலி) அவர்களும் ஒருவராவார்கள் என்னைப் பொறுத்தவரையில் அவர்கள் அனைவரிலும், உமர் (ரலி) அவர்களே என்னிடம் மிகவும் (நம்பிக்கையாளர் என) ஏற்கப்பட்டவர்கள் ஆவார்கள்.[187]

---

185. பார்க்க: முன்சென்ற ஹதீஸ் எண் - 255 மற்றும் அதன் அடிக்குறிப்பு

186. பார்க்க: முன்சென்ற ஹதீஸ் எண் - 118 மற்றும் அதன் அடிக்குறிப்பு

187. பார்க்க: முன்சென்ற ஹதீஸ் எண்கள் - 97, 101, 106, 113, 125.

261 தாரிக் பின் ஷிஹாப் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

யூதர்கள் (கஅ்பா) உமர் (ரலி) அவர்களிடம், "நீங்கள் ஓர் இறைவசனத்தை ஓதுகின்றீர்கள் (யூதர்களாகிய) எங்களிடையே அந்த வசனம் அருளப்பெற்றிருந்தால், அந்த நாளை நாங்கள் பண்டிகை நாளாக ஆக்கிக்கொண்டிருப்போம்" என்று கூறினர்

அதற்கு உமர் (ரலி) அவர்கள், "அந்த வசனம் எந்த இடத்தில் அருளப்பெற்றது என்பதையும், எந்த நாளில் அருளப்பெற்றது என்பதையும், அந்த வசனம் அருளப்பெற்றபோது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் எங்கே இருந்தார்கள் என்பதையும் நான் அறிவேன்" என்று கூறிவிட்டு, "அந்த வசனம் 'அரஃபா' (துல்ஹஜ் 9ஆம்) நாள் அல்லாஹ்வின் தூதர் 'அரஃபா' பெருவெளியில் தங்கியிருந்தபோதுதான் அருளப்பெற்றது" என்று கூறினார்கள்.

"இன்று உங்களது மார்க்கத்தை உங்களுக்காக நான் முழுமையாக்கிவிட்டேன். எனது அருட்கொடையையும் உங்கள் மீது நான் நிறைவு செய்துவிட்டேன். இன்னும் உங்களுக்காக (அந்த) இஸ்லாத்தை மார்க்கமாக ஏற்றுக்கொண்டுவிட்டேன்" (5:3) எனும் இறைவசனத்தைக் கருத்திற்கொண்டே அவ்வாறு கூறினார்கள்

(இந்த ஹதீஸின் அறிவிப்பாளர்தொடரில் நான்காவது அறிவிப்பாளராக இடம்பெற்றுள்ள) சுஃப்யான் அஸ்ஸவ்ரீ (ரஹ்) அவர்கள், "அது வெள்ளிக் கிழமையா, இல்லையா என நான் ஐயத்துடன் இருக்கிறேன்" என்று கூறினார்கள்[198]

٢٦١ حدثنا عبد الرحمن حدثنا سفيان عن قيس بن مسلم عن طارق بن شهاب أن اليهود قالوا: لعمر إنكم تقرءون آية لو أنزلت فينا لاتخذنا ذلك اليوم عيدا، فقال: إني لأعلم حيث أنزلت وأي يوم أنزلت وأين رسول الله ﷺ حين أنزلت أنزلت يوم عرفة ورسول الله ﷺ واقف بعرفة، قال سفيان وأشك يوم جمعة أو لا يعني ﴿اليوم أكملت لكم دينكم وأتممت عليكم نعمتي ورضيت لكم الإسلام دينا﴾.

262 அபூமூசா அல்அஷ்அரீ (ரலி) அவர்கள் கூறியதாவது:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் 'அல்பத்ஹா' பள்ளத்தாக்கில் தங்கியிருந்தபோது, அவர்களிடம் நான் வந்தேன். அவர்கள் என்னிடம், "நீர் எதற்காக 'இஹ்ராம்' அணிந்துள்ளீர்?" என்று கேட்டார்கள். நான், "நபி (ஸல்) அவர்கள் எதற்காக 'இஹ்ராம்' அணிந்துள்ளார்களோ அதற்காகவே 'இஹ்ராம்' அணிந்துள்ளேன்" என்றேன். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "நீர் உம்முடன் பலிப் பிராணியைக் கொண்டுவந்துள்ளீரா?" என்று கேட்டார்கள். நான், "இல்லை" என்றேன். "அவ்வாறாயின், "நீர் இறையில்லம் 'கஅபா'வையும் ஸஃபாவையும் மர்வாவையும் சுற்றிவந்துவிட்டுப் பின்னர் இஹ்ராமிலிருந்து விடுபட்டுக்கொள்வீராக" என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

٢٦٢ حدثنا عبد الرحمن حدثنا سفيان عن قيس بن مسلم عن طارق بن شهاب عن أبي موسى قال: قدمت على رسول الله ﷺ وهو بالبطحاء، فقال: بم أهللت؟ قلت بإهلال كإهلال النبي ﷺ، فقال: هل سقت من هدي؟ قلت لا، قال: طف بالبيت وبالصفا والمروة ثم حل فطفت بالبيت وبالصفا والمروة، ثم أتيت امرأة من قومي

198. [illegible] - 83

அவ்வாறே நான் கஅபாவையும் ஸஃபா வையும் மர்வாவையும் சுற்றிவிட்டுப் பின்னர் என் கூட்டத்தைச் சேர்ந்த (நெருங்கிய உறவுக் காரப்) பெண் ஒருத்தியிடம் சென்றேன் அவள் எனக்குத் தலை கழுவி, தலைவாரிவிட்டார்

فَمَشَطَتْنِي وَغَسَلَتْ رَأْسِي، فَكُنْتُ أُفْتِي النَّاسَ بِذَلِكَ بِإِمَارَةِ أَبِي بَكْرٍ رَضِيَ اللَّهُ عَنْهُ وَبِإِمَارَةِ عُمَرَ رَضِيَ اللَّهُ عَنْهُ فَإِنِّي لَقَائِمٌ فِي الْمَوْسِمِ إِذْ جَاءَنِي رَجُلٌ فَقَالَ: إِنَّكَ لَا تَدْرِي مَا أَحْدَثَ أَمِيرُ الْمُؤْمِنِينَ فِي شَأْنِ النُّسُكِ. فَقُلْتُ أَيُّهَا النَّاسُ مَنْ كُنَّا أَفْتَيْنَاهُ فُتْيَا فَهَذَا أَمِيرُ الْمُؤْمِنِينَ قَادِمٌ عَلَيْكُمْ فَبِهِ فَأْتَمُّوا، فَلَمَّا قَدِمَ قُلْتُ مَا هَذَا الَّذِي قَدْ أَحْدَثْتَ فِي شَأْنِ النُّسُكِ؟ قَالَ: إِنْ نَأْخُذْ بِكِتَابِ اللَّهِ تَعَالَى فَإِنَّ اللَّهَ تَعَالَى قَالَ: ﴿وَأَتِمُّوا الْحَجَّ وَالْعُمْرَةَ لِلَّهِ﴾ وَإِنْ نَأْخُذْ بِسُنَّةِ نَبِيِّنَا فَإِنَّهُ لَمْ يَحِلَّ حَتَّى نَحَرَ الْهَدْيَ.

நான் இவ்வாறே (ஹஜ்ஜுக்காகச் செய்த இஹ்ராமை உம்ராவாக மாற்றிக்கொள்ள லாம் என்றே) அபூபக்ர் (ரலி) அவர்களது ஆட்சிக் காலத்திலும், உமர் (ரலி) அவர்களது ஆட்சியி(ன் ஆரம்பக் காலத்தி)லும் மக்க ளுக்குத் தீர்ப்பளித்துவந்தேன்.

நான் ஹஜ்ஜுக் காலத்தில் ஓரிடத்தில் நின்றுகொண்டிருந்தபோது என்னிடம் ஒருவர் வந்து, "இறைநம்பிக்கையாளர்களின் தலைவர் (உமர்) ஹஜ்ஜின் கிரியைகளில் ஏற்படுத்திய புதிய நடைமுறையை நீங்கள் அறியமாட்டீர்கள்" என்று சொன்னார். உடனே நான், "மக்களே! நாம் யாருக்கேனும் ஏதேனும் மார்க்கத் தீர்ப்பு அளித்திருந்தால், அவர்கள் (அதைச் செயல்படுத்திவிடாமல்) நிறுத்திவைக்கட்டும்! இதோ! இறைநம்பிக்கையாளர்களின் தலைவர் உங்களிடம் வரப்போகிறார் அவரையே நீங்கள் பின்பற்றுங்கள்" என்று கூறினேன்

உமர் (ரலி) அவர்கள் வந்தபோது அவர்களிடம் நான், "இறைநம்பிக்கையாளர்களின் தலைவரே! ஹஜ்ஜின் கிரியைகளில் நீங்கள் ஏற்படுத்திய அந்த நடைமுறை என்ன?" என்று கேட்டேன் அதற்கு உமர் (ரலி) அவர்கள், "நாம் அல்லாஹ்வின் வேதப்படி செயல்படுவதெனில், வல்லமையும் மாண்பும் மிக்க அல்லாஹ், 'அல்லாஹ்வுக்காக ஹஜ்ஜையும் உம்ராவையும் முழுமையாக்குங்கள்' (2:196) என்று கூறுகின்றான். நாம் நம் நபி (ஸல்) அவர்களின் வழிமுறைப்படி செயல்படுவதென்றாலும் (தவறில்லை). நபி (ஸல்) அவர்கள் குர்பானிப் பிராணிகளைப் பலியிடாதவரை இஹ்ராமிலிருந்து விடுபடவில்லை" என்று கூறினார்கள்.[190]

190. இதே கருத்துள்ள ஹதீஸ், புகாரீ (1559, 1724, 1795, 4397), முஸ்லிம் (2341-2344) நஸாயீ (2688, 2692), தாரிமீ (1746) உள்ளிட்ட நூல்களிலும் பதிவாகியுள்ளது.

இந்த 262ஆவது [illegible] இறுதியில் இடம்பெறும் வாசகங்கள் இறைக் கட்டளைக்கு (2:196) [illegible] போலத் தோன்றுகிறது. இதன் தொடக்கத்தில், ஹஜ்ஜுக்காக அணிந்த இஹ்ராமை இடையில் உம்ராவாக மாற்றிக் கொள்ளலாம் என்ற நபியவர்களின் அனுமதி [illegible] (இறுதி) ஹஜ்ஜில் மட்டும் நபித்தோழர்களுக்கு அளிக்கப்பட்ட அனுமதியாகும். [illegible] செய்து முதலில் 'இஹ்ராம்' அணிந்து 'உம்ரா'வை நிறைவேற்றிய பின் பிறகு 'ஹஜ்ஜு'க்காக இஹ்ராம் அணிந்து [illegible] 'ஹஜ்ஜு'க் கடமைகளை நிறைவேற்றுவது அனுமதிக்கப்பட்ட ஒன்றேயாகும் [illegible] (2:196) இதையே வலியுறுத்துகிறது.

தமத்துஉ முறைப்படி 'உம்ரா'வை முதலில் செய்து இஹ்ராமிலிருந்து நீங்கிய பின்னர் 'ஹஜ்ஜு'க்காகத் தனியாக 'இஹ்ராம்' அணிந்து செய்யும் ஹஜ் வழிபாட்டுச் சலுகையை மக்கள் பயன்படுத்தி, தாம் வந்த நோக்கத்தை மறந்து உலக விவகாரங்களில் மூழ்கிவிடுவார்களோ என்று அஞ்சியதாலேயே உமர் (ரலி) அவர்கள், ஹஜ் பருவத்தில் 'உம்ரா' செய்ய வேண்டாம் என ஆணையிட்டதாக முஸ்லிமில் இடம்பெற்றுள்ள அறிவிப்பு (2344) உணர்த்துகிறது.

263 ஸுவைத் பின் ஃகஃப்லா (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

உமர் (ரலி) அவர்கள் (கஅபாவின் ஒரு மூலையில் பதிக்கப் பெற்றுள்ள) 'ஹஜருல் அஸ்வத்' கல்லை முத்தமிட்டுவிட்டு, "உன்னை நான் முத்தமிடுகிறேன். நீ தீமையோ நன்மையோ செய்ய இயலாத ஒரு கல்தான் என்பதை நான் நன்கறிவேன். அபுல்காசிம் (முஹம்மது -ஸல்) அவர்கள் உன்னிடம் மிகுந்த ஈடுபாடு காட்டியதை நான் பார்த்தேன். (அதனால்தான் உன்னை நான் முத்தமிட்டேன்)" என்று கூறியதைக் கண்டேன்.[200]

٢٦٣ حدثنا عبد الرحمن عن سفيان عن إبراهيم بن عبد الأعلى عن سويد بن غفلة قال: رأيت عمر رضي الله عنه يقبل الحجر ويقول: إني لأعلم أنك حجر لا تضر ولا تنفع ولكني رأيت أبا القاسم ﷺ بك حفيا.

264 அம்ர் பின் மைமூன் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

உமர் (ரலி) அவர்கள், "இணைவைப்பாளர்கள், 'ஸபீர்' மலைமீது சூரியன் உதிக்கும் வரை முஸ்தலிஃபாவிலிருந்து புறப்படமாட்டார்கள். "ஸபீர் மலைமீது சூரியன் உதிக்கட்டும்; நாங்கள் விரைவாகப் புறப்படுவோம்" என்று அவர்கள் கூறுவார்கள். ஆனால், நபி (ஸல்) அவர்கள் இணைவைப்போருக்கு மாறுசெய்யும் விதமாக, சூரியன் உதிப்பதற்கு முன்பே முஸ்தலிஃபாவிலிருந்து ('மினா'வை நோக்கி) விரைந்து புறப்பட்டார்கள்.

٢٦٤ حدثنا عبد الرحمن عن سفيان وعبد الرزاق أنبأنا سفيان عن أبي إسحاق عن عمرو بن ميمون قال قال عمر رضي الله عنه: قال عبد الرزاق سمعت عمر رضي الله عنه: إن المشركين كانوا لا يفيضون من جمع حتى تشرق الشمس على ثبير، قال عبد الرزاق: وكانوا يقولون: أشرق ثبير كيما نغير يعني فخالفهم النبي ﷺ فدفع قبل أن تطلع الشمس.

(ஸுஃப்யான் அஸ்ஸவ்ரீ (ரஹ்) அவர்கள் வழியாக வரும் அறிவிப்பிலேயே மேற்கண்டவாறு இடம்பெற்றுள்ளது) அப்துர் ரஸ்ஸாக் (ரஹ்) அவர்களது அறிவிப்பில், "'ஸபீர் மலையே! (சூரியனை) உதயமாக்கு! நாங்கள் விரைவாகப் புறப்படவேண்டும்' என்று இணைவைப்பாளர்கள் கூறுவார்கள்' என்று உமர் (ரலி) அவர்கள் கூறியதை நான் செவியுற்றேன்" என அம்ர் பின் மைமூன் (ரஹ்) அவர்கள் கூறியதாகவும் இடம்பெற்றுள்ளது.[201]

265 இப்னு அப்பாஸ் ரலி) அவர்கள் கூறியதாவது:

உமர் (ரலி) அவர்கள் (தமது உரையில் பின்வருமாறு) கூறினார்கள்:

அல்லாஹ், முஹம்மத் (ஸல்) அவர்களை (உண்மை மார்க்கத்துடன்) அனுப்பினான். அவர்களுக்கு (குர்ஆன் எனும்) வேதத்தையும் அருளினான். அல்லாஹ் அருளிய (வேதத்)தில் (மணமுடித்தவர்கள் விபசாரம் செய்தால், அவர்களுக்குக்) கல்லெறி தண்டனை (ரஜ்ம்) நிறைவேற்றப்பட வேண்டும் என்பது குறித்த இறைவசனம் இருந்தது.

٢٦٥ حدثنا عبد الرحمن حدثنا مالك عن الزهري عن عبيد الله بن عبد الله عن ابن عباس قال قال عمر رضي الله عنه: إن الله تعالى بعث محمدا ﷺ وأنزل عليه الكتاب فكان فيما أنزل عليه آية الرجم

200. பார்க்க: முன்சென்ற ஹதீஸ் எண்கள் - 95, 171, 220, 223.

201. காண்க: முன்சென்ற ஹதீஸ் எண்கள் - 80, 195.

அதை நாங்கள் ஓதியிருக்கிறோம்; அதை மனனமிட்டிருக்கிறோம்; அதை விளங்கியுமிருக்கிறோம்.[202]

(இத்தண்டனையை அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களும், அவர்களுக்குப் பிறகு நாமும் நடைமுறைப்படுத்தினோம்.) காலப் போக்கில் மக்களுள் சிலர், 'இறை வேதத்தில் கல்லெறி தண்டனை குறித்த வசனத்தை நாங்கள் காணவில்லை' என்று கூறி, அதன் மூலம் இறைவன் அருளிய விதியொன்று கைவிடப்படுமோ என நான் அஞ்சுகிறேன். மணமுடித்த ஆணோ, பெண்ணோ விபசாரம் செய்து, அதற்குச் சாட்சி இருந்தாலோ, கர்ப்பம் ஏற்பட்டாலோ, ஒப்புதல் வாக்குமூலம் அளித்தாலோ, அவருக்குக் கல்லெறி தண்டனை உண்டு என்பது இறைச் சட்டத்தில் உள்ளதாகும்.[203]

فَقَرَأْنَا بِهَا وَعَقَلْنَاهَا وَوَعَيْنَاهَا فَأَخْشَى أَنْ يَطُولَ
بِالنَّاسِ عَهْدٌ، فَيَقُولُوا: إِنَّا لَا نَجِدُ آيَةَ الرَّجْمِ فَتُتْرَكَ
فَرِيضَةٌ أَنْزَلَهَا اللَّهُ تَعَالَى وَإِنَّ الرَّجْمَ فِي كِتَابِ اللَّهِ
تَعَالَى حَقٌّ عَلَى مَنْ زَنَى إِذَا أُحْصِنَ مِنَ الرِّجَالِ
وَالنِّسَاءِ إِذَا قَامَتِ الْبَيِّنَةُ أَوْ كَانَ الْحَبَلُ أَوِ
الِاعْتِرَافُ.

٢٦٦ حَدَّثَنَا عَبْدُ الرَّحْمَنِ عَنْ مَالِكٍ عَنِ الزُّهْرِيِّ
عَنْ عُرْوَةَ عَنْ عَبْدِ الرَّحْمَنِ بْنِ عَبْدٍ عَنْ عُمَرَ بْنِ
الْخَطَّابِ رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ سَمِعْتُ هِشَامَ بْنَ
حَكِيمٍ يَقْرَأُ سُورَةَ الْفُرْقَانِ فِي الصَّلَاةِ عَلَى غَيْرِ مَا
أَقْرَؤُهَا وَكَانَ رَسُولُ اللَّهِ ﷺ أَقْرَأَنِيهَا فَأَخَذْتُ
بِثَوْبِهِ فَذَهَبْتُ بِهِ إِلَى رَسُولِ اللَّهِ ﷺ فَقُلْتُ: يَا
رَسُولَ اللَّهِ إِنِّي سَمِعْتُهُ يَقْرَأُ سُورَةَ الْفُرْقَانِ عَلَى
غَيْرِ مَا أَقْرَأْتَنِيهَا، فَقَالَ: اقْرَأْ فَقَرَأَ الْقِرَاءَةَ الَّتِي
سَمِعْتُهَا مِنْهُ، فَقَالَ: هَكَذَا أُنْزِلَتْ، ثُمَّ قَالَ لِي:

266 *உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள் கூறியதாவது:*

ஹிஷாம் பின் ஹகீம் (ரலி) அவர்கள் தொழுகையில் (குர்ஆனின் 25ஆவது) அத்தியாயம் அல்ஃபுர்கானை நான் ஓதுகின்ற முறைக்கு மாற்றமாக ஓதியதைச் செவியுற்றேன். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் ஏற்கனவே அந்த அத்தியாயத்தை எனக்கு ஓதிக் காட்டியிருந்தார்கள்.

ஆகவே, (தொழுகை முடிந்ததும்) அவரது உடையைப் பிடித்துக் கொண்டு, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் கொண்டுசென்று, "அல்லாஹ்வின் தூதரே! நீங்கள் எனக்கு ஓதிக் கொடுத்ததற்கு மாறாக இவர் 'அல்ஃபுர்கான்' ஓதியதைச் செவியுற்றேன்" என்று கூறினேன். அப்போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் (ஹிஷாம் அவர்களிடம்), "நீங்கள் (அந்த அத்தியாயத்தை) ஓதுங்கள்" என்று கூறினார்கள். அவர் என்னிடம் ஓதியதைப் போன்றே ஓத, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "இப்படித்தான் இந்த அத்தியாயம் அருளப்பெற்றது" என்று கூறினார்கள்.

202. அவ்வாறு ஆரம்பக் காலத்தில் குர்ஆனில் ஒரு வசனம் இடம்பெற்றிருந்தது: "மணமுடித்த ஆணோ பெண்ணோ விபசாரம் புரிந்துவிட்டால் அவ்விருவருக்கும் கட்டாயமாகக் கல்லெறி மூலம் தண்டனை வழங்குங்கள்" என்பதே அந்த வசனம். பின்னர் அதன் சட்டம் நீக்கப்படாது அதன் ஓதல் மாற்றப்பட்டது (முஅத்தா விரிவுரை) ஸுர்கானீ.

203. மணமுடித்த ஆணோ பெண்ணோ விபசாரம் புரிந்து நான்கு சாட்சிகளைக் கொண்டு அது நிரூபிக்கப்பட்டால் இறக்கும்வரை கல்லெறி மூலம் தண்டனை வழங்க வேண்டும் என முன்பே கூறப்பட்டது. அவ்வாறே மணமுடித்த ஒருவர் விபசாரம் செய்துவிட்டு வந்து குற்றத்தை ஒப்புக்கொண்டு முன்மொழிந்தாலும் இத்தண்டனை நிறைவேற்றப்படும். அவ்வாறே விபசாரம் செய்ததற்கு அடையாளமாகப் பெண் கர்ப்பிணியாக வந்து நின்றால் அப்போதும் இந்தத் தண்டனை நிறைவேற்றப்படும். ஆனால், அவள் குழந்தையைப் பெற்றெடுத்து அது பாலருந்த மறந்த பிறகே தண்டனை நிறைவேற்றப்படும் (முஅத்தா விரிவுரை) ஸுர்கானீ. காண்க: முன்சென்ற ஹதீஸ் எண்கள் - 151, 152, 241.

பிறகு என்னிடம், "நீங்கள் ஓதுங்கள்" என்றார்கள். நான் ஓதினேன். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "இப்படியும்தான் (இந்த அத்தியாயம்) அருளப்பெற்றது" என்று கூறி விட்டு, "இந்தக் குர்ஆன் (ஓதுவதற்கான) ஏழு முறைகளில் அருளப்பட்டிருக்கிறது. ஆகவே, உங்களுக்குச் சுலபமானது எதுவோ அதை ஓதிக்கொள்ளுங்கள்" என்று கூறினார்கள்.

மிஸ்வர் பின் மக்ரமா (ரலி), அப்துர்ரஹ்மான் பின் அப்தில்காரீ (ரஹ்) ஆகியோர் வழியாக வந்துள்ள வேறோர் அறிவிப்பில், "நான் ஹிஷாம் பின் ஹகீம் (ரலி) அவர்களைக் கடந்து சென்றேன். அப்போது அவர் 'அல்ஃபுர்கான் அத்தியாயத்தை ஓதுவதைச் செவியுற்றேன்" என ஹதீஸ் தொடங்குகின்றது. மற்ற விவரங்கள் மேற்கண்டவாறே தொடருகின்றது.[204]

ஃقرأ فقرأت، فقال: هكذا أنزلت إن هذا القرآن أنزل على سبعة أحرف فاقرءوا ما تيسر.

حدثنا عبد الرزاق أنبأنا معمر عن الزهري عن عروة عن المسور بن مخرمة وعبد الرحمن بن عبد القاري أنهما سمعا عمر رضي الله عنه يقول مررت بهشام بن حكيم بن حزام يقرأ سورة الفرقان فذكر معناه.

267 அப்துல்லாஹ் பின் அஸ்ஸஅதீ (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

(கலீஃபா) உமர் (ரலி) அவர்கள் என்னிடம், "நீங்கள் மக்கள் (நலப்) பணிகள் சிலவற்றுக்குப் பொறுப்பேற்றிருப்பதாகவும், அதற்காக ஊதியம் தரப்பட்டால் அதை நீங்கள் வெறுப்பதாகவும் எனக்குத் தகவல் வந்ததே! (உண்மை தானா?)" என்று கேட்டார்கள். அதற்கு நான், "ஆம்" என்றேன்.

٢٦٧ حدثنا عبد الرحمن حدثنا عبد الله بن المبارك عن معمر عن الزهري عن السائب بن يزيد عن عبد الله بن السعدي قال قال لي عمر رضي الله عنه: ألم أحدث أنك تلي من أعمال الناس أعمالا فإذا أعطيت العمالة لم تقبلها، قال: نعم، قال: فما تريد إلى ذلك؟ قال: أنا غني لي أعبد ولي أفراس أريد أن يكون عملي صدقة على المسلمين، قال: لا تفعل فإني كنت أفعل مثل الذي تفعل، كان رسول الله ﷺ يعطيني العطاء فأقول أعطه من هو أفقر إليه مني، فقال: خذه فإما أن تموله وإما أن تصدق به وما آتاك الله من هذا

உமர் (ரலி) அவர்கள், "நீங்கள் எந்த நோக்கத்தில் இப்படிச் செய்கிறீர்கள்?" என்று கேட்க, நான், "என்னிடம் பல குதிரைகளும் அடிமைகள் பலரும் உள்ளனர். நான் நல்லநிலையுடன் (வசதியான நிலையில்)தான் இருக்கிறேன். ஆகவே, என் ஊதியம் முஸ்லிம்களுக்கு தர்மமாக இருக்கட்டும் என்று நான் விரும்புகின்றேன்" என்று பதிலளித்தேன்.

உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: அப்படிச் செய்யாதீர்கள். ஏனென்றால், நீங்கள் விரும்பியபடியே நானும் விரும்பினேன். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் எனக்கு (மக்கள் நல நிதியிலிருந்து) நன்கொடை வழங்குவார்கள். நான், "என்னைவிட அதிகத் தேவையுடையோருக்கு இதைக் கொடுங்கள்" என்று சொல்லிவந்தேன். இறுதியில் ஒரு முறை நபி (ஸல்) அவர்கள், (நன்கொடைப்) பொருள் ஒன்றை எனக்கு அளித்தபோது, நான், "என்னைவிட அதிகத் தேவையுடையோருக்கு இதை வழங்குங்கள்" என்று சொன்னேன்.

நபி (ஸல்) அவர்கள், "(முதலில்) இதை வாங்கி, உங்களுக்கு உடைமையாக்கிக் கொள்ளுங்கள். பிறகு, (தேவைப்படவில்லையென்றால்,) தர்மம் செய்துவிடுங்கள்.

204. பார்க்க: முஸ்லிமின் ஹதீஸ் எண் - 153 மற்றும் அதன் அடிக்குறிப்பு

المال وأنت غير مشرف له ولا سائله فخذه وما لا فلا تتبعه نفسك.

இந்தச் செல்வத்திலிருந்து எது நீங்கள் எதிர் பார்க்காமலும் நீங்களாகக் கேட்காமலும் உங்களுக்கு வந்ததோ, அதை (மறுக்காமல்) வாங்கிக்கொள்ளுங்கள். அப்படி எதுவும் வரவில்லையென்றால், நீங்களாக அதைத் தேடிச் செல்லாதீர்கள்" என்று சொன்னார்கள்.[265]

حدثنا عبد الرزاق حدثنا معمر عن الزهري عن السائب بن يزيد قال: لقي عمر عبد الله بن السعدي فذكر معناه إلا أنه قال: تصدق به، وقال: لا تتبعه نفسك.

சாயிப் பின் யஸீது (ரலி) அவர்கள் வழியாக வரும் மற்றோர் அறிவிப்பில், "உமர் (ரலி) அவர்கள் அப்துல்லாஹ் பின் அஸ்ஸஅதீ (ரஹ்) அவர்களைச் சந்தித்தார்கள்" என்று ஹதீஸ் ஆரம்பமாகிறது. அந்த அறிவிப்பில், "அதைப் பெற்று தர்மம் செய்துவிடுங்கள்" என்றும், "அதை நீங்களாகத் தேடிச் செல்லாதீர்கள்" என்றும் கூறிய தகவல் இடம்பெற்றுள்ளது.

٢٦٨ حدثنا عبد الرحمن عن مالك عن زيد بن أسلم عن أبيه عن عمر بن الخطاب رضي الله عنه قال: حملت على فرس في سبيل الله فأضاعه صاحبه فأردت أن أبتاعه وظننت أنه بائعه برخص فقلت: حتى أسأل رسول الله ﷺ، فقال: لا تبتعه وإن أعطاكه بدرهم فإن الذي يعود في صدقته كالكلب يعود في قيئه.

268 உமர் பின் அல்கத்தாப் (ரலி) கூறியதாவது:

நான் ஒருவரை அல்லாஹ்வின் பாதையில் (அறப்போருக்குச் செல்ல) குதிரை ஒன்றில் (அவருக்கே அதைத் தானமாகக் கொடுத்து) அனுப்பிவைத்தேன்.

அந்த குதிரைக்காரர் அதை (உரிய முறையில் பராமரிக்காமல்) பாழாக்கிவிட்டார். அதை அவர் மலிவான விலைக்குக் (கேட்டால் கூட) விற்றுவிடுவார் என்று நான் எண்ணினேன். பிறகு, இது குறித்து அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் கேட்பது (அதன் பிறகு வாங்கிக்கொள்வேன்) என்று முடிவு செய்தேன்.

(அவ்வாறே அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் கேட்டபோது) அவர்கள், "அதை விலைக்கு வாங்காதீர்; அதை ஒரு வெள்ளிக் காசுக்கு அவர் உமக்குத் தந்தாலும் சரியே. தனது தானத்தைத் தானே திரும்பப் பெறுபவன் நாய்க்கு நிகரானவன் ஆவான். தான் எடுத்த வாந்தியைத் தானே தின்கிறது நாய்" என்றார்கள்.[266]

٢٦٩ قال قرأت على عبد الرحمن عن مالك عن ابن شهاب عن أبي عبيد مولى ابن أزهر أنه قال: شهدت العيد مع عمر بن الخطاب رضي الله عنه فجاء فصلى ثم انصرف فخطب الناس، فقال: إن هذين يومان نهى رسول الله ﷺ عن

269 இப்னு அஸ்ஹர் (ரஹ்) அவர்களால் விடுதலை செய்யப்பட்ட அடிமையான அபூஉபைத் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

நான் (ஈதுல் அள்ஹா) பெருநாள் தொழுகையில் (கலீஃபா) உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்களுடன் கலந்துகொண்டேன். அவர்கள் தொழுகையை முடித்துவிட்டுப் பிறகு மக்களுக்கு குத்பா-உரை நிகழ்த்தினார்கள்.

அப்போது, "மக்களே! அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் இந்த இரு பெருநாட்

---

265. பார்க்க: முஸ்னது ஹதீஸ் எண்கள் - 96, 131

266. காண்க: முஸ்னது ஹதீஸ் எண் - 249.

صيامهما يوم فطركم من صيامكم والآخر يوم تأكلون فيه من نسككم.

களிலும் நோன்பு நோற்கக் கூடாது என உங்களுக்குத் தடைவிதித்துள்ளார்கள். இவ்விரண்டில் ஒன்று, 'உங்கள் நோன்பிலிருந்து நீங்கள் விடுபடும் நோன்புப் பெருநாள் ஆகும். மற்றொன்றோ, 'நீங்கள் குர்பானிப் பிராணிகளின் இறைச்சியை உண்ணும் (ஈதுல் அள்ஹா) பெருநாள்' ஆகும்" என்று சொன்னார்கள்.[207]

٢٧٠ حدثنا إسماعيل بن إبراهيم عن يحيى بن أبي إسحاق عن سالم بن عبد الله قال: كان عمر رجلا غيورا فكان إذا خرج إلى الصلاة اتبعته عاتكة ابنة زيد فكان يكره خروجها ويكره منعها وكان يحدث أن رسول الله ﷺ قال: إذا استأذنتكم نساؤكم إلى الصلاة فلا تمنعوهن.

270 சாலிம் பின் அப்தில்லாஹ் பின் உமர் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

உமர் (ரலி) அவர்கள் (தன்மான உணர்வினால்) அதிகமாக ரோஷம் கொள்கிற மனிதராக இருந்தார்கள். அவர்கள் தொழுகைக்குப் புறப்பட்டால், (அவர்களுடைய மனைவி) ஆத்திகா பின்த் ஸைத் (ரலி) அவர்கள் அவர்களைப் பின்தொடர்ந்து (பள்ளிவாசலுக்கு) வருவார்கள்.

ஆத்திகா அவர்கள் (பள்ளிவாசலுக்குப்) புறப்பட்டு வருவதை உமர் (ரலி) அவர்கள் விரும்பவில்லை. (அதே நேரத்தில்,) பள்ளிவாசலுக்கு வர வேண்டாமென அவரைத் தடுக்கவும் அவர்கள் விரும்பவில்லை. "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், 'உங்கள் மனைவியர் உங்களிடம் தொழுகைக்கு (பள்ளிவாசல்) செல்ல அனுமதி கேட்டால், அவர்களைத் தடுக்காதீர்கள்' என்று கூறினார்கள்" என்று உமர் (ரலி) கூறிவந்தார்கள் (அதனால்தான் பள்ளிவாசலுக்கு வர வேண்டாமெனத் தம் மனைவியைத் தடுக்கவில்லை).[208]

٢٧١ حدثنا عبد الرحمن عن مالك عن زيد بن أسلم عن أبيه عن عمر قال: لولا آخر المسلمين ما فتحت قرية إلا قسمتها كما قسم رسول الله ﷺ خيبر.

271 உமர் (ரலி) அவர்கள் கூறியதாவது:

பிற்காலத்தில் வரும் முஸ்லிம்கள் (உடைய ஏழ்மை பற்றிய அச்சம் எனக்கு) இல்லையாயின், எந்த ஊர் (எனது ஆட்சியில்) வெற்றிகொள்ளப்பட்டாலும் அதை, கைபர் நிலங்களை அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் பங்கிட்டுக் கொடுத்ததைப் போன்று நானும் பங்கிட்டுக் கொடுத்திருப்பேன்.[209]

---

207. பார்க்க: முஸ்னது ஹதீஸ் எண்கள் - 164, 219.

208. [illegible] (751-761) [illegible]

[illegible] - 25842 [illegible] - 2217)

209. [illegible] - 208. [illegible] (2334, 3125, 4235, 4236) [illegible] (3025) [illegible] (1758) [illegible] (1064) [illegible] (277) [illegible]

٢٧٢ حدثنا إسماعيل حدثنا سلمة بن علقمة عن محمد بن سيرين قال: نبئت عن أبي العجفاء السلمي قال سمعت عمر يقول: ألا لا تغلوا صدق النساء، ألا لا تغلوا صدق النساء، فإنها لو كانت مكرمة في الدنيا أو تقوى عند الله كان أولاكم بها النبي ﷺ ما أصدق رسول الله ﷺ امرأة من نسائه ولا أصدقت امرأة من بناته أكثر من ثنتي عشرة أوقية، وإن الرجل ليغلي بصدقة امرأته، وقال مرة: وإن الرجل ليغلي بصدقة امرأته حتى تكون لها عداوة في نفسه وحتى يقول كلفت إليك علق القربة، قال: وكنت غلاما عربيا مولدا لم أدر ما علق القربة قال: وأخرى تقولونها لمن قتل في مغازيكم ومات قتل فلان شهيدا ومات فلان شهيدا ولعله أن يكون قد أوقر عجز دابته أو

272 அபுல் அஜ்ஃபா அஸ்ஸுலமீ (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

(கலீஃபா) உமர் (ரலி) அவர்கள் (உரையாற்றுகையில்) பின்வருமாறு கூறியதை நான் கேட்டேன்:

அறிந்துகொள்ளுங்கள்! பெண்களுக்கு வழங்கும் மணக்கொடை(மஹ்ர்)களில் (அளவு கடந்து கொடுப்பதன் மூலம்) வரம்பு மீறாதீர்கள். அறிந்துகொள்ளுங்கள்! பெண்களுக்கு வழங்கும் மணக்கொடைகளில் வரம்பு மீறாதீர்கள். இவ்வுலகில் அது மதிப்புமிக்க செயலாகவோ அல்லாஹ்விடம் இறையச்சத் திற்குரிய செயலாகவோ இருக்குமானால், அவ்வாறு வழங்குவதற்கு உங்களையெல்லாம் விட மிகத் தகுதி வாய்ந்தவர்கள், நபி (ஸல்) அவர்கள்தாம். (ஆனால்) நபி (ஸல்) அவர்கள் தம் மனைவியருள் எவருக்கும் பன்னிரண்டு ஊக்கியாக்களைவிடக் கூடுதலாக மணக்கொடை வழங்கவில்லை. அவர்களுடைய புதல்வியருள் எவருக்கும் பன்னிரண்டு ஊக்கியாக்களைவிடக் கூடுதலாக மணக்கொடை பெற்றதுமில்லை

"ஒருவர் தம் மனைவிக்கு வழங்கும் மணக்கொடை மூலம் அவர் சோதனைக்கு உள்ளாக்கப்படலாம். அல்லது, கூடுதலாக மணக்கொடை வழங்கப்போய், அதுவே அவன்மீது அவர் பகைமை பாராட்டுவதற்குக் காரணமாகிவிடலாம்" என்று உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

-அறிவிப்பாளர், ஒரு முறை இப்படியும் மற்றொரு முறை அப்படியுமாகக் கூறினார்.

தொடர்ந்து உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: இறுதியில் அ(க்கண)வர், "(கட்டித் தொங்கவிடப்பட்டுள்ள) தண்ணீர்த் தோல்பையைச் சுமக்கும் கயிற்றைப் போல, உன்னால் நான் மிகுந்த துன்பத்தைச் சுமந்தேன்" என்று கூறுவார்

-அறிவிப்பாளர் கூறுகிறார்:

(உமர் (ரலி) அவர்கள் கூறியபோது,) நான் அரபிமொழி பேசும் இளைஞனாக இருந்தும், ('தண்ணீர்த் தோல்பையைச் சுமக்கும் கயிறு' என்பதைக் குறிக்க அவர்கள் பயன்படுத்திய) 'அலக்குல் கிர்பத்தி' எனும் சொல்லாட்சியை அறியாதவனாக இருந்தேன்.-

தொடர்ந்து உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்:

நீங்கள் உங்கள் அறப்போர்களின்போது இறப்பவரைப் பற்றிக் கூறுகையில், 'குத்தில ஃபுலானுன் ஷஹீதன்' (இன்ன மனிதர் உயிர்த்தியாகியாகக் கொல்லப்பட்டு விட்டார்), 'மாத்த ஃபுலானுன் ஷஹீதன்' (இன்ன மனிதர் உயிர்த்தியாகியாக இறந்து

دَفَّ رَاحِلَتِهِ ذَهَبًا أَوْ وَرِقًا يَلْتَمِسُ التِّجَارَةَ لَا تَقُولُوا ذَاكُمْ وَلَكِنْ قُولُوا كَمَا قَالَ النَّبِيُّ: أَوْ كَمَا قَالَ مُحَمَّدٌ ﷺ: مَنْ قُتِلَ أَوْ مَاتَ فِي سَبِيلِ اللَّهِ فَهُوَ فِي الْجَنَّةِ.

விட்டார்) எனும் வார்த்தைகளைப் பயன்படுத்துகிறீர்கள். அவர், தங்கம் அல்லது வெள்ளியைத் தமது வாகனப் பிராணியின் முதுகில் அல்லது சேணத்தில் ஏற்றிக்கொண்டு வணிக நோக்கத்துடன் செல்லும்போது கொல்லப்பட்டிருக்கலாம். எனவே, அவ்வாறு கூறாதீர்கள். மாறாக, 'நபி (ஸல்)' அல்லது 'முஹம்மத் (ஸல்)' அவர்கள் கூறியதைப் போன்று, "அல்லாஹ்வின் பாதையில் கொல்லப்பட்டவர் அல்லது இறந்துவிட்டவர் சொர்க்கத்தில் இருப்பார்" என்று கூறுங்கள்.[210]

٢٧٣ حَدَّثَنَا إِسْمَاعِيلُ أَنْبَأَنَا الْجُرَيْرِيُّ سَعِيدٌ عَنْ أَبِي نَضْرَةَ عَنْ أَبِي فِرَاسٍ قَالَ خَطَبَ عُمَرُ بْنُ الْخَطَّابِ رَضِيَ اللَّهُ عَنْهُ فَقَالَ: يَا أَيُّهَا النَّاسُ أَلَا إِنَّا إِنَّمَا كُنَّا نَعْرِفُكُمْ إِذْ بَيْنَ ظَهْرَيْنَا النَّبِيُّ ﷺ وَإِذْ يَنْزِلُ الْوَحْيُ وَإِذْ يُنْبِئُنَا اللَّهُ مِنْ أَخْبَارِكُمْ أَلَا وَإِنَّ النَّبِيَّ ﷺ قَدْ انْطَلَقَ وَقَدْ انْقَطَعَ الْوَحْيُ وَإِنَّمَا نَعْرِفُكُمْ بِمَا نَقُولُ لَكُمْ مَنْ أَظْهَرَ مِنْكُمْ خَيْرًا ظَنَنَّا بِهِ خَيْرًا وَأَحْبَبْنَاهُ عَلَيْهِ وَمَنْ أَظْهَرَ مِنْكُمْ لَنَا شَرًّا ظَنَنَّا بِهِ شَرًّا وَأَبْغَضْنَاهُ عَلَيْهِ

273 அபூஃபிராஸ் அவர்கள் கூறியதாவது:

உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள் உரை நிகழ்த்தினார்கள். அப்போது, "மக்களே! அறிந்துகொள்ளுங்கள்! நம்மிடையே நபி (ஸல்) அவர்கள் இருந்தபோதுதான் உங்களைப் பற்றி நாம் அறிந்துவந்தோம். அக்காலகட்டங்களில் இறைச்செய்தி (வஹீ) இறங்கியது. அப்போது உங்களைப் பற்றி அல்லாஹ் நமக்கு அறிவித்தான்.

அறிந்துகொள்ளுங்கள்! நபி (ஸல்) அவர்கள் (நம்மை விட்டுச்) சென்றுவிட்டார்கள். வஹீயும் நின்றுவிட்டது. தற்போது உங்களைப் பற்றி நாம் அறிவது என்பது, உங்களிடம் நாம் கூறப்போகும் (இக்காணும்) முறைப்படிதான்:

உங்களுள் ஒருவர் நற்செயல் ஒன்றை வெளிப்படையாகச் செய்தால் அவரை நல்லவர் எனக் கருதி, அதற்காக அவரை நாம் நேசிப்போம். ஒருவர் தீய செயல் ஒன்றை வெளிப்படையாகச் செய்தால் அவரைத் தீயவர் எனக் கருதி, அதற்காக அவர் மீது நாம் சினங்கொள்வோம். உங்களுடைய மறைமுகமான செயல்பாடுகள் உங்களுக்கும் உங்கள்

210. 4:20ஆவது வசனத்தில் இறைவன் "மணப் பெண்ணுக்கு நீங்கள் (பொற்)குவியலையே கொடுத்திருந்தாலும்" என்று கூறுகிறான். மணமுடிப்பவர் தாமாக முன்வந்து பொற்குவியலையே மஹ்ராகக் கொடுப்பதையே இவ்வசனம் குறிப்பிடுகின்றது. மணமுடிப்பவர் தாராளமாகத் தம் வசதிக்கேற்ப 'மஹர்' கொடுப்பதை அல்குர்ஆன் (4:4) தூண்டுகிறது. எனினும் மணமுடிப்பதற்குரிய சூழலையே தகர்க்கும் விதமாக வரம்புமீறி 'மஹர்' தொகையை மணமுடிக்கும் பெண்கள் நிர்ணயித்துவிடக் கூடாது. இதன் விளைவாக நல்ல மணமகன் கிடைக்காது மணவாழ்க்கை சிதைந்து விடக்கூடாது. இந்தக் கோணத்திலேயே உமர் (ரலி) அவர்கள் மேற்கண்டவாறு கூறினார்கள். (பதிப்பாசிரியர்)

இதே ஹதீஸ் நஸாயீயில் (3297) அடுத்தடுத்தே இடம்பெற்றுள்ளது. திர்மிதீ (1033), அபூதாவூத் (1801), இப்னுமாஜா (1877), தாரிமீ (2103), அஹ்மத் ஷாகிர், இப்னு அபீஷைபா (3/319), இப்னு ஹிப்பான் (4704), ஹாகிம் (2678), பைஹகீ (7/234) உள்ளிட்ட நூல்களில் இந்த ஹதீஸின் முதல் பகுதியான மணக்கொடை பற்றிய குறிப்பு இடம்பெற்றுள்ளது. இந்த ஹதீஸின் அறிவிப்பாளர்தொடர், வெளிப்படையில் இடைமுறியாதது போன்று இருந்தாலும் உள்ளமைவில் இடைமுறிவு ஏற்பட்டுள்ளதை அறியலாம். இந்த ஹதீஸின் முஹம்மது பின் ஸீரீன் (ரஹ்) அவர்கள் அபுல் அஜ்ஃபா அஸ்ஸுலமீ (ரஹ்) அவர்களிடமிருந்து அறிவிக்கப்பட்டுள்ளது என்று சொல்லப்பட்டு விளைவில் கூறியுள்ளனர். ஆனால் பின்வரும் இதே கருத்தமைந்த 322ஆவது ஹதீஸில் முஹம்மது பின் ஸீரீன் (ரஹ்) அவர்கள், அபுல் அஜ்ஃபா அவர்களிடமிருந்து நேரடியாக செவியுற்றதாகக் காணப்படுகிறது.

இறைவனுக்கும் இடையில் உள்ளவையாகும்.

அறிந்துகொள்ளுங்கள்! சிலவேளை, இப்படியும் அமைந்ததுண்டு (அப்போது) நான் எண்ணுவேன் ஒருவர் அல்லாஹ்வையும் அவனிடம் இருக்கின்ற (நற்பலன்கள் வெகுமதிகள் ஆகிய)வற்றையும் நாடி குர்ஆனை ஓதினால்தான், அது மறுமைக்குரிய செயலாகும்

கவனத்தில் கொள்ளுங்கள்! சிலர் மக்களிடமிருந்து கிடைப்பதை எதிர்பார்த்து குர்ஆனை ஓதுகின்றனர் நீங்கள் அல்லாஹ்வையும் அவனிடமுள்ளவற்றையும் எதிர்பார்த்து குர்ஆனை ஓதுங்கள் அவனை நாடியே நற்செயல் புரியுங்கள்

அறிந்துகொள்ளுங்கள்! அல்லாஹ்வின் மீதாணையாக! உங்களிடம் நான் என் அதிகாரிகளை உங்களை அடிப்பதற்கோ, உங்களின் செல்வங்களை எடுப்பதற்கோ அனுப்பிவைக்கவில்லை மாறாக, உங்களது மார்க்கத்தையும் உங்கள் நபியின் வழிமுறையையும் உங்களுக்குக் கற்றுத் தருவதற்காகவே உங்களிடம் அனுப்பிவைக்கிறேன். அவர்களுள் எவரேனும் இதற்கு மாறாக யாரிடமாவது நடந்துகொண்டால், அவர் நம்மிடம் வழக்கைக் கொண்டுவரட்டும் என் உயிர் எவன் கையிலுள்ளதோ அவன் மீதாணையாக! அவருக்கு நான் பழிக்குப் பழி தண்டனை வழங்குவேன்"

سرائركم بينكم وبين ربكم ألا إنه قد أتى علي
حين وأنا أحسب أن من قرأ القرآن يريد الله وما
عنده فقد خيل إلي بأخرة ألا إن رجالا قد قرءوه
يريدون به ما عند الناس فأريدوا الله بقراءتكم
وأريدوه بأعمالكم ألا إني والله ما أرسل عمالي
إليكم ليضربوا أبشاركم ولا ليأخذوا أموالكم
ولكن أرسلهم إليكم ليعلموكم دينكم وسنتكم
فمن فعل به شيء سوى ذلك فليرفعه إلي فوالذي
نفسي بيده إذن لأقصنه منه، فوثب عمرو بن
العاص فقال: يا أمير المؤمنين أورأيت إن كان
رجل من المسلمين على رعية فأدب بعض رعيته
أئنك لمقتصه منه؟ قال: إي والذي نفس عمر
بيده إذن لأقصنه منه وقد رأيت رسول الله ﷺ
يقص من نفسه ألا لا تضربوا المسلمين فتذلوهم
ولا تجمروهم فتفتنوهم ولا تمنعوهم حقوقهم
فتكفروهم ولا تنزلوهم الغياض فتضيعوهم.

حدثنا إسماعيل مرة أخرى أخبرنا سلمة بن
علقمة عن محمد بن سيرين قال نبئت عن أبي

(இவ்வாறு உமர் (ரலி) அவர்கள் கூறியதும்) அம்ர் பின் அல்ஆஸ் (ரலி) அவர்கள் குதித்தெழுந்து, "இறைநம்பிக்கையாளர்களின் தலைவரே! குடிமக்களுக்கு (அதிகாரியாகப்) பொறுப்பேற்றுள்ள முஸ்லிம்களுள் ஒருவர் தமது பொறுப்பில் பாடம் புகட்டும் விதமாக நடவடிக்கை எடுக்கும்போது, அவரையும் பழிக்குப் பழியாக நீங்கள் தண்டிப்பேன் என்கிறீர்களே?" என்று கேட்டார்கள் அதற்கு உமர் (ரலி) அவர்கள், "ஆம். (இந்த) உமரின் உயிர் எவன் கையிலுள்ளதோ, அ(ந்த இறை)வன் மீதாணையாக! அப்போது அவரை நான் பழிக்குப் பழியாக தண்டிக்கவே செய்வேன் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அவ்வாறு பழிக்குப்பழி தண்டித்ததை நான் பார்த்துள்ளேன்" என்று கூறிவிட்டு, தொடர்ந்து (தம் அதிகாரிகளுக்கு அறிவுரை) கூறினார்கள்:

அறிந்துகொள்ளுங்கள்! முஸ்லிம்களை அடித்து, அவர்களை இழிவுபடுத்தாதீர்கள் பகை நாட்டில் (போரில்லாத காலத்தில்) அவர்களை (அங்கு) தடுத்துவைத்து அவர்களை குழப்பத்தில் ஆழ்த்திவிடாதீர்கள் அவர்களின் உரிமைகளை அவர்களுக்குக் கொடுக்க மறுத்து, அவர்களை இறைமறுப்பாளர்களாய் மாற்றிவிடாதீர்கள் தண்ணீரற்ற இடங்களில் அவர்களைத் தங்கவைத்துப் பாழாக்கிவிடாதீர்கள்

இந்த ஹதீஸ், மற்றோர் அறிவிப்பாளர்தொடர் வழியாகவும் வந்துள்ளது. அதில்,

"அபில் அஜ்ஃபா கூறியதாக நான் அறிவிக்கப் பட்டேன்' என முஹம்மது பின் சீரீன் (ரஹ்) அவர்கள் கூறவில்லை" (அபில் அஜ்ஃபாவிட மிருந்து முஹம்மது பின் சீரீன் அவர்கள் கூறியதாவது (அன் முஹம்மத் பின் சீரீன் அன் அபில் அஜ்ஃபா) என்றே இடம்பெற்றுள் ளது" என அறிவிப்பாளர்களான அய்யூப் (ரஹ்), ஹிஷாம் (ரஹ்), இப்னு அவ்ன் (ரஹ்) ஆகியோர் கூறியதாகக் காணப்படுகிறது[211]

العجفاء قال سمعت عمر يقول: ألا لا تغلوا صدق النساء فذكر الحديث قال إسماعيل وذكر أيوب وهشام وابن عون عن محمد عن أبي العجفاء عن عمر نحوا من حديث سلمة إلا أنهم قالوا: لم يقل محمد نبئت عن أبي العجفاء.

274 அப்துல்லாஹ் பின் அபீமுலைக்கா (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

நான் (மக்காவில்) இப்னு உமர் (ரலி) அவர்களுக்கு அருகில் அமர்ந்திருந்தேன். அப்போது நாங்கள் உஸ்மான் (ரலி) அவர்களின் புதல்வி உம்மு அபான் அவர்களது ஜனாஸாவை எதிர்பார்த்துக் காத்திருந்தோம். இப்னு உமர் (ரலி) அவர்களுக்கு அருகில் உஸ்மான் (ரலி) அவர்களுடைய புதல்வர் அம்ரும் இருந்தார். அப்போது இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் வந்தார்கள். அவர்களை ஒருவர் கைத்தாங்கலாக அழைத்து வந்து, இப்னு உமர் (ரலி) அவர்கள் அமர்ந்திருந்த இடத்தைக் காட்டினார். உடனே அவர்கள் வந்து எனக்குப் பக்கத்தில் அமர்ந்தார்கள். நான் அவர்கள் இருவருக்குமிடையே இருந்தேன். அப்போது வீட்டிலிருந்து அழுகுரல் கேட்டது. உடனே இப்னு உமர் (ரலி) அவர்கள் (அம்ரிடம்), "குடும்பத்தார் அழுவதன் காரணமாக இறந்தவர் வேதனை செய்யப்படுகிறார் என அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறியதை நான் கேட்டுள்ளேன்" என்று கூறி (அவர்களை அழவேண்டாமென சொல்லி)யனுப்பினார்கள்.

٢٧٤ حدثنا إسماعيل حدثنا أيوب عن عبد الله بن أبي مليكة قال: كنت عند عبد الله بن عمر ونحن ننتظر جنازة أم أبان ابنة عثمان بن عفان وعنده عمرو بن عثمان فجاء ابن عباس يقوده قائده قال فأراه أخبره بمكان ابن عمر فجاء حتى جلس إلى جنبي وكنت بينهما فإذا صوت من الدار فقال ابن عمر سمعت رسول الله ﷺ يقول: إن الميت يعذب ببكاء أهله عليه فأرسلها عبد الله مرسلة، قال ابن عباس: كنا مع أمير المؤمنين عمر حتى إذا كنا بالبيداء إذا هو برجل نازل في ظل شجرة فقال لي: انطلق فاعلم من ذاك فانطلقت

அப்போது இப்னு உமர் (ரலி) அவர்கள், ('இறந்தவர் இறைமறுப்பாளராக இருந்தால்' என்று குறிப்பிட்டுச் சொல்லாமல்) பொதுப்படையாகவே ('இறந்தவர் வேதனை செய்யப்படுகிறார்' என்று) கூறினார்கள்.

அப்போது இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் (பின்வருமாறு) கூறினார்கள்:

நாங்கள் (ஒரு பயணத்தில்) இறைநம்பிக்கையாளர்களின் தலைவர் உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்களுடன் இருந்தோம். நாங்கள் (மக்காவுக்கும் மதீனாவுக்கும் இடையிலுள்ள) 'பைதாஉ' எனுமிடத்தில் இருந்தபோது, அங்கு ஒரு மரத்திற்குக் கீழே யாரோ ஒருவர் தங்கியிருந்தார்.

(இதைக் கண்ட) உமர் (ரலி) அவர்கள் என்னிடம், "நீங்கள் சென்று அவர் யாரெனப் பா(ர்த்து, வா)ருங்கள்" என்று கூறினார்கள். நான் சென்று பார்த்தபோது, அங்கு ஸுஹைப்

211. இந்த ஹதீஸின் அறிவிப்பாளரான [illegible] எனும் நபர் அறியப்படாதவர் ஆவார். எனினும் இந்த ஹதீஸின் முற்பகுதியிலுள்ளது போன்ற கருத்து புகாரீ 264ஆவது ஹதீஸில் இடம்பெற்றுள்ளது. இரண்டாவது பகுதியான [illegible] பற்றிய செய்தி அபூதாவூதில் (3633) இடம்பெற்றுள்ளது.

(அர்ரூமீ-ரலி) அவர்கள் இருந்தார்கள். நான் உமர் (ரலி) அவர்களிடம் திரும்பி வந்து, "நீங்கள் பார்த்துவிட்டு வந்து தெரிவிக்கச் சொன்ன அந்த மனிதர் ஸுஹைப் (ரலி)" என்றேன்.

அதற்கு உமர் (ரலி) அவர்கள், "அவரை நம்முடன் சேர்ந்துகொள்ளச் சொல்லுங்கள்!" என்றார்கள். நான், "அவருடன் அவருடைய குடும்பத்தாரும் உள்ளனர்" என்றேன். உமர் (ரலி) அவர்கள், "அவருடன் அவருடைய குடும்பத்தார் இருந்தாலும் சரியே!" என்றார்கள்.

-(அப்துல்லாஹ் பின் அபீமுலைக்கா அவர்களிடமிருந்து அறிவிக்கும்) அய்யூப் அஸ்ஸக்தியானீ அவர்கள் மற்றொரு முறை அறிவிக்கையில், "('அவருடன் அவருடைய குடும்பத்தார் இருந்தாலும் சரியே' என்பதற்கு பதிலாக) 'அவர்களை நம்முடன் வந்து சேர்ந்து கொள்ளச் சொல்லுங்கள்' என்று உமர் (ரலி) அவர்கள் அப்போது கூறினார்கள்" என்றார்கள்.

நாங்கள் (அனைவரும் மதீனாவுக்கு) வந்து சேர்ந்து வெகுநாட்கள் ஆகியிருக்கவில்லை. அதற்குள் இறைநம்பிக்கையாளர்களின் தலைவர் உமர் (ரலி) அவர்கள் (கத்தியால் குத்தப்பட்டுக்) காயமுற்றார்கள். அப்போது ஸுஹைப் (ரலி) அவர்கள், "சகோதரரே! நண்பரே!" எனக் கூறியபடியே (அழுதுகொண்டு) வந்தார்.

அப்போது (மரணப் படுக்கையிலிருந்த) உமர் (ரலி) அவர்கள், "குடும்பத்தாரின் அழுகைகள் சிலவற்றால், இறந்தவர் வேதனை செய்யப்படுகிறார்' என அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறியதை நீர் அறியவில்லையா? அல்லது நீர் செவியுறவில்லையா?" என்று கேட்டார்கள். ('நீர் அறியவும் கேள்விப்படவுமில்லையா?' என்று கேட்டதாக அய்யூப் (ரஹ்) அவர்களது அறிவிப்பில் இடம்பெற்றுள்ளது.) இங்கு உமர் (ரலி) அவர்கள் (குறிப்பிட்டுக் கூறாமல்) பொதுவாகச் சொல்லியுள்ளார்கள். உமர் (ரலி) அவர்களோ 'குடும்பத்தாரின் சில அழுகைகளால்' என்று (குறிப்பாக்கிக்) கூறினார்கள்.

(அறிவிப்பாளர் அப்துல்லாஹ் பின் அபீமுலைக்கா (ரஹ்) அவர்கள் தொடர்ந்து கூறுகின்றார்கள்:)

ஆகவே, நான் எழுந்து ஆயிஷா (ரலி) அவர்களிடம் சென்றேன்; உமர் (ரலி) அவர்கள் சொன்ன ஹதீஸை அவர்களிடம் தெரிவித்தேன். ஆயிஷா (ரலி) அவர்கள், "இல்லை; அல்லாஹ்வின் மீதாணையாக! 'எவரோ ஒருவர் அழுவதன் காரணமாக, இறந்துவிட்ட (இறைநம்பிக்கையாளரான) மனிதர் வேதனை செய்யப்படுகிறார்' என அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் ஒருபோதும் கூறவில்லை. மாறாக, 'குடும்பத்தார் அழுவதன் காரணமாக இறைமறுப்பாளனுக்கு அல்லாஹ் இன்னும் வேதனையை அதிகப்படுத்துகின்றான்' என்றே கூறினார்கள். அல்லாஹ்வே சிரிக்கவும் வைக்கிறான்; அழவும் வைக்கிறான் (53:43). ஓர் ஆத்மாவின் (பாவச்) சுமையை மற்றோர் ஆத்மா சுமக்காது (35:18)" என்று கூறினார்கள்.

فإذا هو صهيب فرجعت إليه، فقلت إنك أمرتني
أن أعلم لك من ذاك وإنه صهيب، فقال: مره
فليلحق بنا فقلت إن معه أهله قال وإن كان معه
أهله وربما قال أيوب مرة فليلحق بنا فلما بلغنا
المدينة لم يلبث أمير المؤمنين أن أصيب فجاء
صهيب، فقال: وا أخاه وا صاحباه، فقال عمر:
ألم تعلم أولم تسمع أن رسول الله ﷺ قال: إن
الميت ليعذب ببعض بكاء أهله عليه فأما عبد
الله فأرسلها مرسلة وأما عمر فقال ببعض بكاء
فأتيت عائشة فذكرت لها قول عمر فقالت: لا
والله ما قاله رسول الله ﷺ أن الميت يعذب
ببكاء أحد، ولكن رسول الله ﷺ قال: إن الكافر
ليزيده الله عز وجل ببكاء أهله عذابا وإن الله
لهو أضحك وأبكى ولا تزر وازرة وزر أخرى.

قَالَ أَيُّوبُ: وَقَالَ ابْنُ أَبِي مُلَيْكَةَ حَدَّثَنِي الْقَاسِمُ قَالَ: لَمَّا بَلَغَ عَائِشَةَ قَوْلُ عُمَرَ وَابْنِ عُمَرَ قَالَتْ إِنَّكُمْ لَتُحَدِّثُونِي عَنْ غَيْرِ كَاذِبَيْنِ وَلَا مُكَذَّبَيْنِ وَلَكِنَّ السَّمْعَ يُخْطِئُ. حَدَّثَنَا عَبْدُ الرَّزَّاقِ أَنْبَأَنَا ابْنُ جُرَيْجٍ أَخْبَرَنِي عَبْدُ اللَّهِ بْنُ أَبِي مُلَيْكَةَ فَذَكَرَ مَعْنَى حَدِيثِ أَيُّوبَ إِلَّا أَنَّهُ قَالَ فَقَالَ ابْنُ عُمَرَ لِعَمْرِو بْنِ عُثْمَانَ وَهُوَ مُوَاجِهُهُ: أَلَا تَنْهَى عَنِ الْبُكَاءِ فَإِنَّ رَسُولَ اللَّهِ ﷺ قَالَ: إِنَّ الْمَيِّتَ لَيُعَذَّبُ بِبُكَاءِ أَهْلِهِ عَلَيْهِ. حَدَّثَنَا عَبْدُ الرَّزَّاقِ أَنْبَأَنَا ابْنُ جُرَيْجٍ أَخْبَرَنِي عَبْدُ اللَّهِ بْنُ أَبِي مُلَيْكَةَ قَالَ: تُوُفِّيَتِ ابْنَةٌ لِعُثْمَانَ بْنِ عَفَّانَ بِمَكَّةَ فَحَضَرَهَا ابْنُ عُمَرَ وَابْنُ عَبَّاسٍ وَإِنِّي لَجَالِسٌ بَيْنَهُمَا، فَقَالَ ابْنُ عُمَرَ لِعَمْرِو بْنِ عُثْمَانَ وَهُوَ مُوَاجِهُهُ: أَلَا تَنْهَى عَنِ الْبُكَاءِ فَإِنَّ رَسُولَ اللَّهِ ﷺ قَالَ: إِنَّ الْمَيِّتَ لَيُعَذَّبُ بِبُكَاءِ أَهْلِهِ عَلَيْهِ، فَذَكَرَ نَحْوَ حَدِيثِ إِسْمَاعِيلَ عَنْ أَيُّوبَ عَنِ ابْنِ أَبِي مُلَيْكَةَ.

காசிம் பின் முஹம்மது பின் அபீபக்ர் (ரஹ்) அவர்கள் என்னிடம் கூறினார்கள்:

உமர் (ரலி), இப்னு உமர் (ரலி) ஆகியோரின் கூற்று ஆயிஷா (ரலி) அவர்களுக்கு எட்டிய போது, "நீங்கள் பொய்யர்களோ, பொய்யுரைக் கப்பட்டவர்களோ இல்லாத இருவர் சொன்ன ஹதீஸை என்னிடம் கூறுகின்றீர்கள் ஆயினும், செவிதான் (சில நேரங்களில்) தவறாக விளங்கி விடுகிறது" என்று கூறினார்கள்.

அப்துல்லாஹ் பின் அபீமுலைக்கா (ரஹ்) அவர்களிடமிருந்து இப்னு ஜுரைஜ் (ரஹ்) அறிவிக்கும் அறிவிப்பில், மக்காவில் உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்களுடைய புதல்வி ஒருவர் இறந்தபோது, அந்த இடத்திற்கு இப்னு உமர் (ரலி) அவர்களும் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களும் வந்தார்கள். அவ்விருவருக்கும் இடையே நான் அமர்ந்திருந்தேன் அப்போது இப்னு உமர் (ரலி) அவர்கள் தமக்கு எதிரே அமர்ந்திருந்த உஸ்மான் (ரலி) அவர்களுடைய புதல்வர் அம்ர் அவர்களிடம், "நீங்கள் (சப்தமிட்டு) அழுபவர்களைத் தடுக்கக் கூடாதா? 'இறந்தவருக்காக அவருடைய குடும்பத்தார் (சப்தமிட்டு) அழுவதன் காரணமாக, இறந்தவர் வேதனை செய்யப்படுகிறார்' என அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்" என்று கூறியதாக ஹதீஸ் ஆரம்பமாகிறது மற்ற தகவல்கள், மேற்கண்டவாறே தொடர்கின்றன.[212]

٢٧٥ حَدَّثَنَا حُسَيْنُ بْنُ مُحَمَّدٍ حَدَّثَنَا إِسْرَائِيلُ عَنْ سِمَاكٍ عَنْ عِكْرِمَةَ عَنِ ابْنِ عَبَّاسٍ قَالَ قَالَ عُمَرُ رَضِيَ اللَّهُ عَنْهُ: كُنْتُ فِي رَكْبٍ أَسِيرُ فِي غَزَاةٍ مَعَ رَسُولِ اللَّهِ ﷺ فَحَلَفْتُ فَقُلْتُ لَا وَأَبِي

275 உமர் (ரலி) அவர்கள் கூறியதாவது:

நான் ஒரு போர்ப் பயணத்தில் நபி (ஸல்) அவர்களுடன் சென்றுகொண்டிருந்தேன்

---

212. காண்க: புகாரி (1286, 1287), முஸ்லிம் (1693, 1694)

ஆயிஷா (ரலி) அவர்களின் கூற்றும் இப்னு உமர் (ரலி) அவர்களின் கூற்றும் மேலோட்டமாக முரண்பட்டவை போன்று தோன்றினாலும் அவை இரண்டும் தெளிவான இரண்டு கருத்துகளை வழங்குகின்றன.

1- ஒப்பாரி வைப்பது இறைமறுப்பாளர்களின் பழக்கமாகும். எனவே வாழும்போது இறை மறுப்பில் நிலைத்த ஒருவர், தனது இறப்பின் பின்னரும் அவரது குடும்பத்தினரின் ஒப்பாரிகள் மூலம் பாவச் சுமையைச் சுமக்கிறார். ஆனால் முஸ்லிம்கள் ஒப்பாரி வைக்க மாட்டார்கள். இறந்துவிட்ட முஸ்லிமுக்காக ஒப்பாரி வைக்கப்படுவதால் அவர் அதன் பாவத்தைச் சுமக்கப்போவதில்லை. இதுவே ஆயிஷா (ரலி) அவர்களின் கருத்து.

2- முஸ்லிம்கள் பொறுமையைக் கைவிட்டு ஒப்பாரி வைக்கும் பழக்கத்தைக் கைக்கொண்டால், அவர்களின் இறப்பில் ஒப்பாரி வைப்பதும் தொடர் நிகழ்வாகிவிடும். பின்னர் இவர்களும் ஒப்பாரியின் பாவத்தைச் சுமக்க வேண்டிய நிலை ஏற்படும். இதுவே உமர் (ரலி) அவர்களின் கருத்து. (பேருரையாளர்).

அப்போது நான் (ஒருவரிடம் உரையாடும் போது), "இல்லை; என் தந்தை மீது சத்திய மாக" என்று சத்தியம் செய்தேன். அப்போது எனக்குப் பின்னாலிருந்து, "உங்கள் தந்தையர் பெயரால் சத்தியம் செய்யாதீர்கள்" என்று உரத்த குரலில் ஒருவர் கூறினார். (அவர் யாரெனத் திரும்பிப் பார்த்தேன்.) அங்கே அல் லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் இருந்தார் கள்[213]

فَهَتَفَ بِي رَجُلٌ مِنْ خَلْفِي لَا تَحْلِفُوا بِآبَائِكُمْ فَالْتَفَتُّ فَإِذَا هُوَ رَسُولُ اللَّهِ ﷺ.

276 மாலிக் பின் அவ்ஸ் பின் அல்ஹதஸான் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

(கலீஃபா) உமர் (ரலி) அவர்கள் (அல்லாஹ் வின் மீது) சத்தியமிட்டு மூன்று விஷயங் களைக் கூறினார்கள்:

அல்லாஹ்வின் மீதாணையாக! (போரிடா மல் எதிரி நாட்டிலிருந்து நமக்குக் கிடைத்த) இந்த ('ஃபைஉ'ச்) சொத்துகளுக்கு எந்த ஒருவரும் மற்றொருவரைவிட அதிக உரிமை உடையவர் அல்லர். (கலீஃபாவாகிய) நான் கூட மற்றெவரையும்விட அதிக உரிமையுடையவன் அல்லன்.

٢٧٦ حَدَّثَنَا مُحَمَّدُ بْنُ مُيَسَّرٍ أَبُو سَعْدٍ الصَّاغَانِيُّ حَدَّثَنَا مُحَمَّدُ بْنُ إِسْحَاقَ عَنْ مُحَمَّدِ بْنِ عَمْرِو بْنِ عَطَاءٍ عَنْ مَالِكِ بْنِ أَوْسِ بْنِ الْحَدَثَانِ قَالَ: كَانَ عُمَرُ يَحْلِفُ عَلَى أَيْمَانٍ ثَلَاثٍ يَقُولُ وَاللَّهِ مَا أَحَدٌ أَحَقَّ بِهَذَا الْمَالِ مِنْ أَحَدٍ وَمَا أَنَا بِأَحَقَّ بِهِ مِنْ أَحَدٍ وَاللَّهِ مَا مِنَ الْمُسْلِمِينَ أَحَدٌ إِلَّا وَلَهُ فِي هَذَا الْمَالِ نَصِيبٌ إِلَّا عَبْدًا مَمْلُوكًا وَلَكِنَّا عَلَى مَنَازِلِنَا مِنْ كِتَابِ اللَّهِ تَعَالَى وَقَسْمِنَا مِنْ رَسُولِ اللَّهِ ﷺ فَالرَّجُلُ وَبَلَاؤُهُ فِي الْإِسْلَامِ وَالرَّجُلُ وَقِدَمُهُ فِي الْإِسْلَامِ وَالرَّجُلُ وَغَنَاؤُهُ فِي الْإِسْلَامِ وَالرَّجُلُ وَحَاجَتُهُ وَوَاللَّهِ لَئِنْ بَقِيتُ لَهُمْ لَيَأْتِيَنَّ الرَّاعِيَ بِجَبَلِ صَنْعَاءَ حَظُّهُ مِنْ هَذَا الْمَالِ وَهُوَ يَرْعَى مَكَانَهُ.

அல்லாஹ்வின் மீதாணையாக! முஸ்லிம்களுள் எவராயினும், அவருக்கு இச்சொத் தில் பங்கு இருக்கவே செய்கிறது; (பிறருக்கு) உடைமையாக இருக்கும் அடிமையைத் தவிர. ஆயினும், நாம் அல்லாஹ்வின் வேதம் குறிப்பிடுகின்ற தகுதிகளின் அடிப்படை யிலும், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடமிருந்து பங்கு வாங்கிக்கொண்டதன் அடிப்படையிலும் (இச்செல்வத்தில் பங்கு பெறுகின்றவர்களாய்) உள்ளோம்.

ஒருவர் இஸ்லாத்தை ஏற்றமைக்காக அவர் சந்தித்த சோதனையும், ஒருவர் இஸ் லாத்தை ஏற்ற கால முற்பும், ஒருவரின் தன்னிறைவும், ஒருவருடைய தேவைகள் ஆகிய வையும் (இந்த போர்ச் செல்வங்களைப் பங்கிடும்போது) கவனத்தில் கொள்ளப்படும்.

அல்லாஹ்வின் மீதாணையாக! நான் உயிருடன் இருந்தால், 'ஸன்ஆ'வின் மலை மீது கால்நடைகளை மேய்த்துக்கொண்டிருக்கும் இடையருக்கும் இந்தச் செல்வத்தில் அவருக் குச் சேரவேண்டிய பங்கு, நிச்சயமாக அவர் இருக்கும் இடத்திற்கே போய்ச் சேரும்[214]

---

213. காண்க: முன்சென்ற ஹதீஸ் எண்கள் - 107, 111, 209, 233 மற்றும் அவற்றின் அடிக்குறிப்புகள்.

214. இந்த ஹதீஸின் இரண்டாவது அறிவிப்பாளர் முஹம்மது பின் முயஸ்ஸர் பலவீனமானவர் ஆவார். மற்றொரு அறிவிப்பாளரான முஹம்மது பின் இஸ்ஹாக் 'முதல்லிஸ்' (அறிவிப்பாளர்களை இருட்டடிப்புச் செய்பவர்) ஆவார். இவர் [illegible] 'அன்அனா' முறையில் [illegible] இந்த ஹதீஸ் [illegible] அறிவிப்பாளர்களிடமே [illegible] என்று குறிப்பிடாமல் அறிவித்துள்ளார் [illegible] எனவே, இது பலவீனமான ஹதீஸாகும். ஆனால், முஸ்னது அஹ்மதுக்கு [illegible] எழுதிய அறிஞர் அஹ்மது ஷாகிர் அவர்கள் இதை ஆதாரப்பூர்வமான ஹதீஸ் என்று குறிப்பிடுகின்றார்கள். [illegible] முஹம்மது பின் முயஸ்ஸர் [illegible] அறிவிப்பாளர் தொடரும் (முதாபஅ) இந்த ஹதீஸுக்கு உள்ளது. காண்க: [illegible] - 2561. ஆயினும், முஹம்மது பின் இஸ்ஹாக் பற்றிய விமர்சனத்துக்கு அஹ்மது ஷாகிர் அவர்கள் பதிலளிக்கவில்லை.

٢٧٧ حدثنا عَبْدُ الْقُدُّوسِ بْنُ الْحَجَّاجِ حَدَّثَنَا صَفْوَانُ حَدَّثَنِي أَبُو الْمُخَارِقِ زُهَيْرُ بْنُ سَالِمٍ أَنَّ عُمَيْرَ بْنَ سَعْدٍ الْأَنْصَارِيَّ كَانَ وَلَّاهُ عُمَرُ حِمْصَ فَذَكَرَ الْحَدِيثَ قَالَ عُمَرُ يَعْنِي لِكَعْبٍ: إِنِّي أَسْأَلُكَ عَنْ أَمْرٍ فَلَا تَكْتُمْنِي، قَالَ: وَاللَّهِ لَا أَكْتُمُكَ شَيْئًا أَعْلَمُهُ، قَالَ: مَا أَخْوَفُ شَيْءٍ تَخَوَّفُهُ عَلَى أُمَّةِ مُحَمَّدٍ ﷺ؟ قَالَ: أَئِمَّةً مُضِلِّينَ، قَالَ عُمَرُ: صَدَقْتَ قَدْ أَسَرَّ ذَلِكَ إِلَيَّ وَأَعْلَمَنِيهِ رَسُولُ اللَّهِ ﷺ.

277 ஸஃப்வான் (பின் அம்ர் பின் ஹரம் (ரஹ்)) அவர்கள் கூறியதாவது:

"உமர் (ரலி) அவர்கள் (சிரியாவிலுள்ள) 'ஹிம்ஸ்' பகுதிக்கு உமைர் பின் சஅத் அல்அன்சாரி (ரலி) அவர்களை ஆளுநராக நியமித்தார்கள்" என்று அபுல் முகாரிக் ஸுஹைர் பின் சாலிம் அவர்கள் கூறிவிட்டுத் தொடர்ந்து பின்வருமாறு கூறினார்கள்:

உமர் (ரலி) அவர்கள் கஅப் (ரஹ்) அவர்களிடம், "உங்களிடம் நான் ஒரு விஷயத்தைப் பற்றிக் கேட்பேன். அதைப் பற்றி நீங்கள் மறைக்காமல் விடையளிக்க வேண்டும்" என்று கேட்டார்கள். அதற்கு கஅப் அவர்கள், "அல்லாஹ்வின் மீதாணையாக! எனக்குத் தெரிந்த எதையும் நான் உங்களிடம் மறைக்க மாட்டேன்" என்று கூறினார்கள். உமர் (ரலி) அவர்கள், "முஹம்மத் (ஸல்) அவர்களின் சமுதாயத்தாருக்கு எதை நீங்கள் அஞ்சுகின்றீர்கள்?" என்று கேட்டார்கள். அதற்கு கஅப் அவர்கள், "வழி தவறச் செய்யும் தலைவர்களைத்தான் (நான் அஞ்சுகிறேன்)" என்று பதிலளித்தார்கள். அதற்கு உமர் (ரலி) அவர்கள், "உண்மை உரைத்தீர். இவ்வாறே அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் என்னிடம் இரகசியமாகவும் வெளிப்படையாகவும் அறிவித்தார்கள்" என உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.[218]

٢٧٨ حدثنا يَعْقُوبُ حَدَّثَنَا أَبِي عَنْ صَالِحٍ قَالَ ابْنُ شِهَابٍ فَقَالَ سَالِمٌ فَسَمِعْتُ عَبْدَ اللَّهِ بْنَ عُمَرَ يَقُولُ: قَالَ عُمَرُ: أَرْسِلُوا إِلَيَّ طَبِيبًا يَنْظُرُ إِلَى جُرْحِي هَذَا قَالَ: فَأَرْسَلُوا إِلَى طَبِيبٍ مِنَ الْعَرَبِ فَسَقَى عُمَرَ نَبِيذًا فَشُبِّهَ النَّبِيذُ بِالدَّمِ حِينَ خَرَجَ مِنَ الطَّعْنَةِ الَّتِي تَحْتَ السُّرَّةِ، قَالَ فَدَعَوْتُ طَبِيبًا آخَرَ مِنَ الْأَنْصَارِ مِنْ بَنِي مُعَاوِيَةَ فَسَقَاهُ لَبَنًا فَخَرَجَ اللَّبَنُ مِنَ الطَّعْنَةِ صَلْدًا أَبْيَضَ فَقَالَ لَهُ الطَّبِيبُ يَا أَمِيرَ

278 அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) கூறியதாவது:

(கலீஃபா) உமர் (ரலி) அவர்கள் (பிச்சுவாக் கத்தியால் குத்தப்பட்டு மரணப் படுக்கையில் கிடந்தபோது), "என்னிடம் மருத்துவர் ஒருவரை அழைத்து வாருங்கள். அவர் எனது காயத்தைப் பார்க்கட்டும்" என்று கூறினார்கள். மக்கள் அரபியர்களுள் மருத்துவர் ஒருவருக்கு ஆளனுப்பி வரவழைத்தனர். அவர் வந்து உமர் (ரலி) அவர்களுக்குப் பழச்சாறு ('நபீத்') ஊட்டினார். அது உமர் (ரலி) அவர்களின் தொப்புளுக்குக் கீழிருந்த காயத்தின் வழியாக வெளியேறியபோது, குருதியின் (சிவப்பு) நிறத்தில் வெளியேறிற்று.

பிறகு நான் பனூ முஆவியா குலத்தைச் சேர்ந்த அன்சாரிகளுள் மற்றொரு மருத்துவரை அழைத்து வந்தேன். அவர் உமர் (ரலி) அவர்களுக்குப் பாலைப் புகட்டினார். அந்தப் பால் அந்தக் காயத்தின் வழியாக அப்படியே கெட்டியாக வெள்ளை நிறத்தில்

218. இந்த அறிவிப்பாளர்தொடரில் மூன்றாவது அறிவிப்பாளராக இடம்பெறும் ஸுஹைர் பின் ஸாலிம் பலவீனமான அறிவிப்பாளர் ஆவார். ஹதீஸ் கலையில் நிராகரிக்கப்பட வேண்டியவர் என இமாம் தாரகுத்னீ (ரஹ்) குறிப்பிடுகிறார்கள். மேலும் ஸுஹைர் பின் ஸாலிம் என்ற அறிவிப்பாளருக்கும் உமர் (ரலி) அவர்களுக்குமிடையே அறிவிப்பாளர் ஒருவர் விடுபட்டுள்ளார். எனவே இது அறிவிப்பாளர்தொடர் இடைமுறிந்த (முன்கதிஉ) பலவீனமான ஹதீஸ் ஆகும்.

الْمُؤْمِنِينَ الْعَهْدَ، فَقَالَ عُمَرُ: صَدَقَنِي أَخُو بَنِي مُعَاوِيَةَ وَلَوْ قُلْتَ غَيْرَ ذَلِكَ كَذَّبْتُكَ، قَالَ فَبَكَى عَلَيْهِ الْقَوْمُ حِينَ سَمِعُوا ذَلِكَ، فَقَالَ: لَا تَبْكُوا عَلَيْنَا مَنْ كَانَ بَاكِيًا فَلْيَخْرُجْ أَلَمْ تَسْمَعُوا مَا قَالَ رَسُولُ اللَّهِ ﷺ قَالَ: يُعَذَّبُ الْمَيِّتُ بِبُكَاءِ أَهْلِهِ عَلَيْهِ فَمِنْ أَجْلِ ذَلِكَ كَانَ عَبْدُ اللَّهِ لَا يُقِرُّ أَنْ يُبْكَى عِنْدَهُ عَلَى هَالِكٍ مِنْ وَلَدِهِ وَلَا غَيْرِهِمْ.

வெளியேறிற்று. அந்த மருத்துவர் உமர் (ரலி) அவர்களிடம், "இறைநம்பிக்கையாளரின் தலைவரே! உறுதிமொழிகள் பெற்றுக்கொள்ளுங்கள் (உங்களுக்கு இறப்பு நெருங்கிவிட்டது)" என்று கூறினார். உடனே உமர் (ரலி) அவர்கள், "பனூ முஆவியா குலச் சகோதரர் என்னிடம் உண்மை சொன்னார்" என்று கூறிவிட்டு, (அந்த மருத்துவரிடம்), "நீர் வேறு ஏதேனும் சொல்லியிருந்தால், நீர் பொய்யுரைக்கிறீர் என்று நான் கூறியிருப்பேன்" என்றார்கள்.

இதைக் கேட்டு, மக்கள் அழுதனர். அப்போது உமர் (ரலி) அவர்கள், "எமக்காக அழாதீர்கள். அழுகின்றவர் இந்த இடத்தை விட்டு வெளியேறட்டும். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், 'இறந்தவருக்காக அவருடைய குடும்பத்தார் (சப்தமிட்டு) அழுவதன் காரணமாக, இறந்தவர் வேதனை செய்யப்படுகிறார்' என்று கூறியதை நீங்கள் செவியுற்றதில்லையா?" என்று கேட்டார்கள்.

(இந்த ஹதீஸின் அறிவிப்பாளர்தொடரில் இரண்டாவது அறிவிப்பாளராக இடம் பெற்றுள்ள) சாலிம் பின் அப்தில்லாஹ் பின் உமர் (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்:

இதனால்தான் (என் தந்தை) அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் இறந்தவருக்காகத் தம் பிள்ளைகளோ மற்றவர்களோ தமக்கருகில் (சப்தமிட்டு) அழுவதற்கு அனுமதிக்கவில்லை.[216]

٢٧٩ حَدَّثَنَا عَبْدُ الرَّزَّاقِ أَنْبَأَنَا الثَّوْرِيُّ عَنْ أَبِي إِسْحَاقَ عَنْ عَمْرِو بْنِ مَيْمُونٍ قَالَ سَمِعْتُ عُمَرَ بْنَ الْخَطَّابِ رَضِيَ اللَّهُ عَنْهُ يَقُولُ: كَانَ أَهْلُ الْجَاهِلِيَّةِ لَا يُفِيضُونَ مِنْ جَمْعٍ حَتَّى يَرَوُا الشَّمْسَ عَلَى ثَبِيرٍ وَكَانُوا يَقُولُونَ أَشْرِقْ ثَبِيرُ كَيْمَا نُغِيرُ فَأَفَاضَ رَسُولُ اللَّهِ ﷺ قَبْلَ طُلُوعِ الشَّمْسِ.

٢٨٠ حَدَّثَنَا عَبْدُ الرَّزَّاقِ أَنْبَأَنَا مَعْمَرٌ عَنِ الزُّهْرِيِّ عَنْ عُرْوَةَ عَنِ الْمِسْوَرِ بْنِ مَخْرَمَةَ وَعَبْدِ الرَّحْمَنِ بْنِ عَبْدٍ الْقَارِيِّ أَنَّهُمَا سَمِعَا عُمَرَ رَضِيَ اللَّهُ عَنْهُ يَقُولُ: مَرَرْتُ بِهِشَامِ بْنِ حَكِيمِ بْنِ حِزَامٍ يَقْرَأُ سُورَةَ

279 அம்ர் பின் மைமூன் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

உமர் (ரலி) அவர்கள் பின்வருமாறு கூறியதை நான் கேட்டேன்:

அறியாமைக் கால மக்கள் (ஹஜ்ஜுச் செய்யும்போது 'ஸபீர்' மலை மீது சூரியன் உதிப்பதைப் பார்க்காமல் முஸ்தலிஃபாவிலிருந்து புறப்படமாட்டார்கள். "ஸபீர்' மலையில் சூரியன் உதிக்கட்டும்; நாம் விரைவாகப் புறப்படுவோம்" என்று அவர்கள் கூறுவார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் (அறியாமைக் கால மக்களுக்கு மாறாக) சூரியன் உதிப்பதற்கு முன்பே (முஸ்தலிஃபாவிலிருந்து) விரைந்து புறப்பட்டார்கள்.[217]

280 உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள் கூறியதாவது:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களது வாழ்நாளில் ஹிஷாம் பின் ஹகீம் (ரலி)

இக்கருத்தமைந்த ஹதீஸ், இதே அறிவிப்பாளர்தொடரில் [illegible] (1556) எனும் நூலிலும் பதிவாகியுள்ளது.

216. பார்க்க: முன்சென்ற ஹதீஸ் எண் - 274

217. காண்க: முன்சென்ற ஹதீஸ் எண்கள் - 80, 195, 264.

الْفُرْقَانِ فِي حَيَاةِ رَسُولِ اللَّهِ ﷺ فَاسْتَمَعْتُ قِرَاءَتَهُ فَإِذَا هُوَ يَقْرَأُ عَلَى حُرُوفٍ كَثِيرَةٍ لَمْ يُقْرِئْنِيهَا رَسُولُ اللَّهِ ﷺ فَكِدْتُ أَنْ أُسَاوِرَهُ فِي الصَّلَاةِ فَنَظَرْتُ حَتَّى سَلَّمَ فَلَمَّا سَلَّمَ لَبَّبْتُهُ بِرِدَائِهِ، فَقُلْتُ مَنْ أَقْرَأَكَ هَذِهِ السُّورَةَ الَّتِي تَقْرَؤُهَا قَالَ: أَقْرَأَنِيهَا رَسُولُ اللَّهِ ﷺ قَالَ قُلْتُ لَهُ: كَذَبْتَ فَوَاللَّهِ إِنَّ النَّبِيَّ ﷺ لَهُوَ أَقْرَأَنِي هَذِهِ السُّورَةَ الَّتِي تَقْرَؤُهَا قَالَ: فَانْطَلَقْتُ أَقُودُهُ إِلَى النَّبِيِّ ﷺ فَقُلْتُ يَا رَسُولَ اللَّهِ إِنِّي سَمِعْتُ هَذَا يَقْرَأُ سُورَةَ الْفُرْقَانِ عَلَى حُرُوفٍ لَمْ تُقْرِئْنِيهَا وَأَنْتَ أَقْرَأْتَنِي سُورَةَ الْفُرْقَانِ، فَقَالَ النَّبِيُّ ﷺ: أَرْسِلْهُ يَا عُمَرُ اقْرَأْ يَا هِشَامُ فَقَرَأَ عَلَيْهِ الْقِرَاءَةَ الَّتِي سَمِعْتُهُ، فَقَالَ النَّبِيُّ ﷺ: هَكَذَا أُنْزِلَتْ، ثُمَّ قَالَ النَّبِيُّ ﷺ: اقْرَأْ يَا عُمَرُ فَقَرَأْتُ الْقِرَاءَةَ الَّتِي أَقْرَأَنِي رَسُولُ اللَّهِ ﷺ، فَقَالَ: هَكَذَا أُنْزِلَتْ ثُمَّ قَالَ رَسُولُ اللَّهِ ﷺ: إِنَّ الْقُرْآنَ أُنْزِلَ عَلَى سَبْعَةِ أَحْرُفٍ فَاقْرَءُوا مِنْهُ مَا تَيَسَّرَ.

حَدَّثَنَا الْحَكَمُ بْنُ نَافِعٍ أَنْبَأَنَا شُعَيْبٌ عَنِ الزُّهْرِيِّ حَدَّثَنِي عُرْوَةُ عَنْ حَدِيثِ الْمِسْوَرِ بْنِ مَخْرَمَةَ وَعَبْدِ الرَّحْمَنِ بْنِ عَبْدٍ الْقَارِيِّ أَنَّهُمَا سَمِعَا عُمَرَ بْنَ الْخَطَّابِ رَضِيَ اللَّهُ عَنْهُ يَقُولُ: سَمِعْتُ هِشَامَ بْنَ حَكِيمِ بْنِ حِزَامٍ يَقْرَأُ سُورَةَ الْفُرْقَانِ فِي حَيَاةِ النَّبِيِّ ﷺ فَاسْتَمَعْتُ لِقِرَاءَتِهِ فَإِذَا هُوَ يَقْرَأُ عَلَى حُرُوفٍ كَثِيرَةٍ لَمْ يُقْرِئْنِيهَا رَسُولُ اللَّهِ ﷺ فَكِدْتُ أُسَاوِرُهُ فِي الصَّلَاةِ فَنَظَرْتُ حَتَّى سَلَّمَ فَلَمَّا سَلَّمَ فَذَكَرَ مَعْنَاهُ.

அவர்கள் 'அல்ஃபுர்கான்' எனும் (25ஆவது) அத்தியாயத்தை (தொழுகையில்) ஓதிக்கொண்டிருந்தபோது, அவரைக் கடந்து நான் சென்றேன்.

நான் அவரது ஓதலைச் செவி தாழ்த்திக் கேட்டபோது, எனக்கு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் ஓதிக் காண்பிக்காத பல (வட்டார) மொழி வழக்குகளில் அதை அவர் ஓதிக்கொண்டிருந்ததைக் கேட்டேன். ஆகவே, தொழுகையில் வைத்தே அவரைத் தண்டிக்கப் பார்த்தேன். பிறகு யோசித்து, அவர் (தொழுது முடித்து) சலாம் கொடுக்கும்வரை பொறுமையாயிருந்தேன். (அவர் சலாம் கொடுத்தவுடன்) அவரது மேல் துண்டைக் கழுத்தில் சேர்த்துப் பிடித்து, "நீர் ஓதிய இந்த அத்தியாயத்தை உமக்கு ஓதிக் காட்டியது யார்?" என்று கேட்டேன்.

அவர், "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள்தாம் எனக்கு இதை ஓதிக் காட்டினார்கள்" என்று சொன்னார். நான், "நீர் சொல்வது பொய். நீர் ஓதியதற்கு மாறாகவே அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் எனக்கு ஓதிக் காட்டினார்கள்" என்று சொல்லி, அவரை இழுத்துக்கொண்டு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் சென்றேன்.

"அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! இவர் 'அல்ஃபுர்கான்' அத்தியாயத்தைத் தாங்கள் எனக்கு ஓதிக் காட்டாத வேறு முறைகளின்படி ஓதுவதை நான் செவியுற்றேன்" என்று அவர்களிடம் சொன்னேன். நபி (ஸல்) அவர்கள், "உமரே! அவரை விடுங்கள்" என்று சொல்லிவிட்டு, "ஹிஷாமே! ஓதுங்கள்!" என்றார்கள்.

நான் செவியுற்ற அதே முறைப்படி அவர் ஓதினார். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "இவ்வாறுதான் இந்த அத்தியாயம் அருளப்பெற்றது" என்று கூறிவிட்டு, "உமரே! நீங்கள் ஓதுங்கள்!" என்றார்கள். நானும் நபி (ஸல்) அவர்கள் எனக்கு ஓதிக்காட்டியபடி ஓதினேன்.

அதைக் கேட்ட நபி (ஸல்) அவர்கள், "இவ்வாறும்தான் இது அருளப்பெற்றது. இந்தக் குர்ஆன் ஏழு முறைப்படி அருளப்பெற்றுள்ளது. ஆகவே, இதிலிருந்து உங்களுக்குச் சுலபமானது எதுவோ அதை ஓதிக்கொள்ளுங்கள்" என்று சொன்னார்கள்.[218]

218. பார்க்க: முன்சென்ற ஹதீஸ் எண்கள் - 153, 266

281 அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

'லைலத்துல் கத்ர்' இரவை உங்களுள் ஒருவர் தேடுவதாக இருந்தால், அவர் (ரமளான் மாதத்தின்) கடைசிப் பத்து இரவுகளின் ஒற்றைப்படையான இரவுகளில் தேடிக்கொள்ளட்டும்!

இதை உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.[219]

٢٨١ حدثنا حسين بن علي عن زائدة عن عاصم عن أبيه عن ابن عباس قال: قال عمر رضي الله عنه: قال رسول الله ﷺ: من كان منكم ملتمسا ليلة القدر فليلتمسها في العشر الأواخر وترا.

282 இப்னு உமர் (ரலி) அவர்கள் கூறியதாவது:

(கலீஃபா) உமர் (ரலி) அவர்(கள் மரணப் படுக்கையில் இருந்தபோது அவர்)களிடம், "நீங்கள் ஒருவரை கலீஃபாவாகப் பணியமர்த்தக் கூடாதா?" என்று கேட்கப்பட்டது அதற்கு அவர்கள், "நான் (யாரையும் கலீஃபாவாக்காமல்) விட்டுவிட்டுச் சென்றால், (அது குற்றமாகாது) ஏனெனில், என்னைவிடச் சிறந்தவரான அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் (யாரையும் கலீஃபாவாக்காமல் நம்மை) விட்டுச் சென்றார்கள். நான் ஒருவரை கலீஃபாவாக அமர்த்தினால், (அதுவும் தவறாகாது). காரணம், என்னைவிடச் சிறந்தவரான அபூபக்ர் (ரலி) அவர்கள் கலீஃபா(வாக என்னை) அமர்த்திவிட்டுத்தான் சென்றார்கள்" என்று விடையளித்தார்கள்.[220]

٢٨٢ حدثنا محمد بن بشر حدثنا هشام بن عروة عن أبيه عن ابن عمر أن عمر قيل له: ألا تستخلف؟ فقال: إن أترك فقد ترك من هو خير مني رسول الله ﷺ وإن أستخلف فقد استخلف من هو خير مني أبو بكر رضي الله عنه.

٢٨٣ حدثنا يزيد أنبأنا يحيى بن سعيد أن محمد بن إبراهيم أخبره أنه سمع علقمة بن وقاص الليثي يقول إنه سمع عمر بن الخطاب رضي الله عنه وهو يخطب الناس وهو يقول: سمعت رسول الله ﷺ يقول: إنما العمل بالنية وإنما لامرئ ما نوى فمن كانت هجرته إلى الله وإلى رسوله فهجرته إلى الله وإلى رسوله ومن كانت هجرته لدنيا يصيبها أو امرأة يتزوجها

283 அல்கமா பின் வக்காஸ் அல்லைஸீ (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள் மக்களுக்கு உரை நிகழ்த்தியபோது பின்வருமாறு குறிப்பிட்டார்கள்:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "எண்ணத்தைப் பொறுத்தே செயல் அமைகின்றது ஒருவருக்கு அவர் எண்ணியதுதான் கிடைக்கும் எவரது 'ஹிஜ்ரத்' (புலம்பெயர்தல்) அல்லாஹ்வையும், அவனுடைய தூதரையும் நோக்கமாகக்கொண்டு அமைகின்றதோ, அவரது ஹிஜ்ரத்(தின் பலனும் அவ்வாறே) அல்லாஹ்விடமும் அவனுடைய தூதரிடமும் அமையும் எவரது 'ஹிஜ்ரத்' அவர் அடைய விரும்பும் உலக (ஆதாய)த்தை, அல்லது அவர் மணக்க விரும்பும் பெண்ணை நோக்கமாகக் கொண்

219. பார்க்க: முன்சென்ற ஹதீஸ் எண் - 81 மற்றும் அதன் அடிக்குறிப்பு

220. இந்தச் செய்தி கூடுதல் குறைவான விவரங்களுடன் இதே நூலில் முன்னர் பல இடங்களில் இடம்பெற்றுள்ளது பார்க்க: ஹதீஸ் எண்கள் - 85, 181, 282, 304, 314 மற்றும் அவற்றின் அடிக்குறிப்புகள்

முன்னதோ, அவரது ஹிஜ்ரத்(தின் பலனும்) அதுவாகத்தான் இருக்கும்" என்று கூறியதைக் கேட்டேன்.[221]

فَهِجْرَتُهُ إِلَى مَا هَاجَرَ إِلَيْهِ.

284 உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள் கூறியதாவது:

நீங்கள் கீழாடை அணிந்துகொள்ளுங்கள். மேலாடை அணிந்துகொள்ளுங்கள். செருப் பணிந்துகொள்ளுங்கள். காலுறைகளும் முழுக்கால் சட்டைகளும் போட்டுக்கொள் ளுங்கள். வாகனத்தின்மீது சேணமிட்டுக் கொள்ளுங்கள். (உயர் இனப் பொலிப் பிராணிகளைப் பயன்படுத்தி) கால்நடைகளை நன்கு இணைகூட விடுங்கள். அதற்காக 'மஅத்' குலத்துப் பொலிப் பிராணிகளைப் பயன்படுத் துங்கள். இலக்கு வைத்து அம்பெய்யுங்கள். உல்லாச வாழ்வையும், அரபியரல்லாதாரின் நாகரிகங்களையும் விட்டுவிடுங்கள். பட்டாடை அணியாதீர் என உங்களை நான் எச்சரிக் கிறேன். ஏனெனில், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "பட்டாடை அணியாதீர்" எனத் தடைசெய்துவிட்டு, "ஆனால் இந்த அள வைத் தவிர" எனத் தம்மிரு விரல்களால் (உயர்த்திக் காட்டி) சைகை செய்தார்கள்.[222]

٢٨٤ حَدَّثَنَا يَزِيدُ حَدَّثَنَا عَاصِمٌ عَنْ أَبِي عُثْمَانَ النَّهْدِيِّ عَنْ عُمَرَ بْنِ الْخَطَّابِ رَضِيَ اللَّهُ عَنْهُ أَنَّهُ قَالَ: اتَّزِرُوا وَارْتَدُوا وَانْتَعِلُوا وَأَلْقُوا الْخِفَافَ وَالسَّرَاوِيلَاتِ وَأَلْقُوا الرُّكُبَ وَانْزُوا نَزْوًا وَعَلَيْكُمْ بِالْمَعَدِّيَّةِ وَارْمُوا الْأَغْرَاضَ وَذَرُوا التَّنَعُّمَ وَزِيَّ الْعَجَمِ وَإِيَّاكُمْ وَالْحَرِيرَ فَإِنَّ رَسُولَ اللَّهِ ﷺ قَدْ نَهَى عَنْهُ، وَقَالَ: لَا تَلْبَسُوا مِنَ الْحَرِيرِ إِلَّا مَا كَانَ هَكَذَا وَأَشَارَ رَسُولُ اللَّهِ ﷺ بِإِصْبَعَيْهِ.

٢٨٥ حَدَّثَنَا يَزِيدُ أَنْبَأَنَا يَحْيَى عَنْ سَعِيدِ بْنِ الْمُسَيَّبِ أَنَّ عُمَرَ بْنَ الْخَطَّابِ رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ: إِيَّاكُمْ أَنْ تَهْلِكُوا عَنْ آيَةِ الرَّجْمِ وَأَنْ يَقُولَ قَائِلٌ لَا نَجِدُ حَدَّيْنِ فِي كِتَابِ اللَّهِ تَعَالَى فَقَدْ رَأَيْتُ رَسُولَ اللَّهِ ﷺ رَجَمَ وَرَجَمْنَا بَعْدَهُ.

285 சஅது பின் அல்முசய்யப் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

"(மணமுடித்தவர் விபசாரம் புரிந்தால்,) கல்லால் எறிந்து கொல்ல வேண்டும் எனும் (ரஜ்ம்) தொடர்பான வசனம் பற்றி, (விபசாரம் புரிந்தவர் மண முடித்தவராயிருந்தால், கல்லெறி தண்டனை; மணமுடிக்காதவராயிருந்தால், கசையடித் தண்டனை என) 'இறை வேதத்தில் இரண்டு தண்டனைகளை எங்களால் காண முடியவில்லையே' (பொதுவாக, 'விபசாரம் புரிந்த ஆணுக்கும் பெண்ணுக்கும் நூறு சாட்டையடி கொடுங் கள்' என்றுதானே காண முடிகிறது) என்று கூறுவதன் மூலம் நீங்கள் அழிவுக்குள்ளாகி விட வேண்டாமென உங்களை நான் எச்சரிக்கிறேன். நபி (ஸல்) அவர்கள், (மண முடித் தவர் விபசாரம் புரிந்தால், அவருக்குக்) கல்லெறி தண்டனை (ரஜ்ம்) நிறைவேற்றியுள் ளதை நான் பார்த்துள்ளேன். அவர்களுக்குப் பிறகு (கலீஃபாக்களாகிய) நாங்களும் அந்தத் தண்டனையை நிறைவேற்றியுள்ளோம்" என உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.[223]

---

221. காண்க: முந்தைய ஹதீஸ் எண் - 153 மற்றும் அதன் அடிக்குறிப்பு

222. இருவிரல் அளவு தவிர பட்டாடை அணியக்கூடாது என்பது தொடர்பாக முன்னர் சென்றுள்ளது. காண்க: முந்தைய ஹதீஸ் எண்கள் - 98, 235, 236.

223. இது நபித்தோழர் விடுபட்ட செய்தி (முர்சல்) ஆகும் என்று கூறி, இது பலவீனமான தகவல் ஆகும் என அறிஞர் அர்னாஊத் கூறுகின்றனர். எனினும், முந்தைய 182, 241, 265 ஆகிய எண்களில் தொடர் இடையறாமல் வந்துள்ளது. இந்த ஹதீஸ் புகாரீ (6829, 6830, 7323); முஸ்லிம் (3492) ஆகிய நூல்களிலும் பதிவாகியுள்ளது.

٢٨٦ حدثنا يزيد أنبأنا العوام حدثني شيخ كان مرابطا بالساحل قال: لقيت أبا صالح مولى عمر بن الخطاب رضي الله عنه، فقال: حدثنا عمر بن الخطاب رضي الله عنه عن رسول الله ﷺ أنه قال: ليس من ليلة إلا والبحر يشرف فيها ثلاث مرات على الأرض يستأذن الله في أن ينفضخ عليهم فيكفه الله عز وجل.

286 அவ்வாம் பின் ஹவ்ஷப் பின் யஸீத் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

கடலோரத்தில் தங்கி, இறை வழிபாட்டில் ஈடுபட்டுவந்த முதியவர் ஒருவர் என்னிடம் கூறினார்:

நான் உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்களின் அடிமையான அபூஸாலிஹ் அவர்களைச் சந்தித்தேன். அன்னார் உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள் சொன்னதாகப் பின்வருமாறு கூறினார்கள்:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

கடல், ஒவ்வொரு (நாள்) இரவிலும் மூன்று தடவை தரைப் பகுதியை நோக்கி ஆயத்தமாக நின்று (தரைப் பகுதியில் வாழும்) மக்கள்மீது தழும்பி, அவர்களை மூழ்கடித்து விட அல்லாஹ்விடம் அனுமதி கோருகிறது ஆனால், அதை வல்லமையும் மாண்பும் மிக்க அல்லாஹ் தடுத்துவிடுகின்றான்.[224]

٢٨٧ حدثنا يزيد أخبرنا عبد الملك عن أنس بن سيرين قال: قلت لابن عمر: حدثني عن طلاقك امرأتك قال طلقتها وهي حائض، قال فذكرت ذلك لعمر بن الخطاب رضي الله عنه فذكره للنبي ﷺ، فقال النبي ﷺ: مره فليراجعها فإذا طهرت فليطلقها في طهرها، قال قلت له: هل اعتددت بالتي طلقتها وهي حائض؟ قال فما لي لا أعتد بها وإن كنت قد عجزت واستحمقت.

287 அனஸ் பின் சீரீன் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

நான் இப்னு உமர் (ரலி) அவர்களிடம், "நீங்கள் உங்கள் மனைவியை மணவிலக்குச் செய்ததைப் பற்றி என்னிடம் கூறுங்கள்" என்று கேட்டேன். அதற்கு அவர்கள் கூறினார்கள்: நான் என் மனைவியை அவர் மாதவிடாயாயிருந்தபோது மணவிலக்குச் செய்தேன். இது குறித்து நான் (என் தந்தை) உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்களிடம் (தெரிவித்து விளக்கம்) கேட்டேன்.

உமர் (ரலி) அவர்கள் இதைப் பற்றி நபி (ஸல்) அவர்களிடம் தெரிவித்தார்கள். அப்போது நபி (ஸல்) அவர்கள், "(உங்கள் புதல்வர்) தம் மனைவியைத் திரும்ப அழைத்துக்கொள்ளட்டும். பிறகு அவள் தூய்மையடைந்ததும், அவள் தூய்மையுடனிருக்கும் நேரத்தில் (அவள் 'இத்தா' இருப்பதற்கேற்ப) அவளை மணவிலக்கு அளிக்குமாறு கூறுங்கள்" என்றார்கள்.

நான் இப்னு உமர் (ரலி) அவர்களிடம், "மாதவிடாய் நேரத்தில் நீங்கள் செய்ததை மணவிலக்கு என நீங்கள் கருதினீர்களா?" என்று கேட்டேன். அதற்கு அவர்கள், "நான் (எனது கடமையை நிறைவேற்ற) இயலாமலும், அதை அறிந்துகொள்ளாமலும் இருந்தாலுங்கூட அதை நான் மணவிலக்கு எனக் கருதாமல் எப்படி இருக்க முடியும்?" என்று கேட்டார்கள்.[225]

---

224. இது பலவீனமான ஹதீஸாகும். இதன் அறிவிப்பாளர்தொடரில் இடம்பெறும் அவ்வாம் பின் ஹவ்ஷப் என்பார் தமக்கு முதியவர் ஒருவர் அறிவித்தார் என்று கூறினார். அந்த முதியவர் யார் என்ற விவரம் இல்லை. மேலும் உமர் (ரலி) அவர்களின் அடிமை அபூஸாலிஹ் என்பவரும் ஹதீஸ்கலையில் அறியப்படாதவர் ஆவார்.

225. இந்த ஹதீஸ் புகாரீ (4908, 5252, 5258, 5332), முஸ்லிம் (2926, 2927), நஸாயீ (3336-3339, 3343, 3500) ஆகியவற்றி

288 அபுல் அலாஉ அஷ்ஷாமீ என்பார் கூறியதாவது:

அபூஉமாமா அல்பாஹிலீ (ரலி) அவர்கள் புத்தாடை அணிந்தார்கள். கழுத்தெலும்புப் பகுதியை ஆடை எட்டியதும், "அல்ஹம்து லில்லாஹில் லதீ கஸானீ மா உவாரீ பிஹி அவ்ரத்தீ, வஅத்தஜம்மலு பிஹி ஃபீ ஹயாத்தீ" (நான் மறைவிடத்தை மறைக்கவும், என் வாழ்நாளில் என்னை அலங்கரித்துக்கொள்ளவும் எனக்கு ஆடை அணிவித்த அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்) என்று அவர்கள் கூறினார்கள்.

பின்னர், "உமர் (ரலி) சொல்லக் கேட்டேன். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒருவர் புத்தாடை அணியும் போது அது கழுத்தெலும்பை அடைந்ததும், 'அல்ஹம்து லில்லாஹில் லதீ கஸானீ மா உவாரீ பிஹி அவ்ரத்தீ, வஅத்தஜம்மலு பிஹி ஃபீ ஹயாத்தீ' என்று கூறிவிட்டுப் பின்னர், தாம் பழையதாக்கிய அல்லது கழற்றிப் போட்ட ஆடையை எடுத்து தர்மம் செய்துவிட்டால், அவர் அல்லாஹ்வின் பொறுப்பிலும் அரவணைப்பிலும் பாதுகாப்பிலும் இருக்கிறார்; அவர் உயிருடன் இருந்தாலும், இறந்துவிட்டாலும் சரியே; அவர் உயிருடன் இருந்தாலும், இறந்துவிட்டாலும் சரியே; அவர் உயிருடன் இருந்தாலும், இறந்துவிட்டாலும் சரியே" என்று கூறினார்கள்.[226]

٢٨٨ حدثنا يزيد أنبأنا أصبغ عن أبي العلاء الشامي قال: لبس أبو أمامة ثوبا جديدا فلما بلغ ترقوته قال: الحمد لله الذي كساني ما أواري به عورتي وأتجمل به في حياتي ثم قال سمعت عمر بن الخطاب رضي الله عنه يقول: قال رسول الله ﷺ: من استجد ثوبا فلبسه، فقال: حين يبلغ ترقوته الحمد لله الذي كساني ما أواري به عورتي وأتجمل به في حياتي ثم عمد إلى الثوب الذي أخلق أو قال ألقى فتصدق به كان في ذمة الله تعالى وفي جوار الله وفي كنف الله حيا وميتا حيا وميتا حيا وميتا.

289 உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள் கூறியதாவது:

நான் நபி (ஸல்) அவர்களிடம், "அல்லாஹ்வின் தூதரே! எங்களுள் (பெருந்துடக்கு ஏற்பட்டுக்) குளியல் கடமையான ஒருவர், குளிப்பதற்கு முன் உறங்க விரும்பினால், அவர் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டேன். அதற்கு நபி (ஸல்) அவர்கள், "அவர் தொழுகைக்கு அங்கத் தூய்மை (உளூ) செய்வதைப் போன்று அங்கத் தூய்மை செய்துகொள்ளட்டும். பிறகு உறங்கட்டும்" என்று விடையளித்தார்கள்.[227]

٢٨٩ حدثنا يزيد أنبأنا محمد بن إسحاق عن نافع عن ابن عمر عن عمر بن الخطاب رضي الله عنه قال: سألت رسول الله ﷺ قلت يا رسول الله أحدنا إذا أراد أن ينام وهو جنب كيف يصنع قبل أن يغتسل؟ قال: يتوضأ وضوءه للصلاة ثم ينام.

---

*(1964, 1966, 1969) ஆகிய எண்களிலும் இடம்பெற்றுள்ளது

226. இந்த ஹதீஸின் அறிவிப்பாளரான அபுல் அலாஉ அஷ்ஷாமீ என்பாரின் [illegible] இவரைப் பற்றி விமர்சனங்கள் ஏதும் கிடைக்கவில்லை. மேலும் இந்த ஹதீஸை இமாம் திர்மிதீ (ரஹ்) அவர்கள் அறிவித்துள்ளார்கள். [illegible] ஹதீஸ் எண் - 3483. இந்த ஹதீஸ், இப்னுமாஜா (3547) [illegible] போன்ற நூல்களிலும் பதிவாகியுள்ளது. இமாம் [illegible] (ரஹ்) அவர்கள் தமது 'அல் இலல்' (குறைபாடுள்ள ஹதீஸ்கள்) எனும் தொகுப்பில் இதைப் பதிவு செய்து [illegible] உணர்த்தியுள்ளார்கள்.

227. பார்க்க: முன்சென்ற ஹதீஸ் எண்கள் - 90. 100. 100. 254 மற்றும் அவற்றின் அடிக்குறிப்புகள்.

٢٩٠ حدثنا يزيد أنبأنا ورقاء وأبو النضر قال حدثنا ورقاء عن عبد الأعلى الثعلبي عن عبد الرحمن بن أبي ليلى قال: كنت مع البراء بن عازب وعمر بن الخطاب رضي الله عنه في البقيع ينظر إلى الهلال فأقبل راكب فتلقاه عمر رضي الله عنه فقال: من أين جئت؟ فقال: من المغرب، قال: أهللت؟ قال: نعم، قال عمر رضي الله عنه: الله أكبر إنما يكفي المسلمين الرجل ثم قام عمر رضي الله عنه فتوضأ فمسح على خفيه ثم صلى المغرب، ثم قال: هكذا رأيت رسول الله ﷺ صنع، قال أبو النضر: وعليه جبة ضيقة الكمين فأخرج يده من تحتها ومسح.

290 அப்துர்ரஹ்மான் பின் அபீலைலா (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

நான் பராஉ பின் ஆஸிப் (ரலி), உமர் பின் அல்கத்தாப் (ரலி) ஆகியோருடன் 'அல்பகீஉ' எனும் பொது மையவாடிப் பகுதியில் இருந்தேன் அப்போது உமர் (ரலி) அவர்கள், பிறை தெரிகிறதா எனப் பார்த்துக்கொண்டு இருந்தார்கள். அப்போது பயணி ஒருவர் வந்தார். அவரை எதிர்கொண்ட உமர் (ரலி) அவர்கள், "எங்கிருந்து வருகிறீர்?" என்று கேட்டார்கள். "அரபுப் பகுதியிலிருந்துதான்" என்று அவர் கூறினார்.

உமர் (ரலி) அவர்கள், "நீ இஹ்ராம் அணிந்து (தல்பியா கூறி)விட்டாயா?" என்று கேட்டார்கள் அவர் "ஆம்" என்றார். உமர் (ரலி) அவர்கள், "அல்லாஹு அக்பர்" (அல்லாஹ் மிகப் பெரியவன்). முஸ்லிம்களுக்கு ஒருவர் (கூறிய சாட்சியமே) போதும்" என்று கூறினார்கள்.

பிறகு உமர் (ரலி) அவர்கள் எழுந்து, அங்கத் தூய்மை (உளூ) செய்தார்கள். அப்போது (தம் கால்களைக் கழுவுவதற்குப் பகரமாக), ஈரக் கையால் காலுறைகள் மீது தடவினார்கள். பிறகு மஃக்ரிப் தொழுகை தொழுவித்தார்கள். பிறகு, "இவ்வாறு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் (உளூ) செய்ததை நான் கண்டேன்" என்று கூறினார்கள்.

(இதன் அறிவிப்பாளர்தொடரில் ஐந்தாவது அறிவிப்பாளராக இடம்பெற்றுள்ள) அபுந்நள்ர் (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்:

உமர் (ரலி) அவர்கள் சட்டைக் கைகள் குறுகலான குளிராடை அணிந்திருந்ததால், அதன் கீழ்ப் பகுதியிலிருந்து தமது கையை வெளியே எடுத்து, ஈரக் கையால் காலுறைகள் மீது தொட்டுத் தடவினார்கள்.[228]

٢٩١ حدثنا يزيد أخبرنا جرير أنبأنا الزبير بن الخريت عن أبي لبيد قال: خرج رجل من طاحية مهاجرا يقال له بيرح بن أسد فقدم المدينة بعد وفاة رسول الله ﷺ بأيام فرآه عمر رضي الله عنه فعلم أنه غريب، فقال له: من أنت؟ قال: من أهل

291 அபூலபீத் (லிமாஸா பின் ஸப்பார்-ரஹ்) அவர்கள் கூறியதாவது:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் இறந்த சில நாட்களுக்குப்பின், 'தாஹியா' எனும் பகுதியிலிருந்து புலம் பெயர்ந்து (ஹிஜ்ரத் செய்து) பைரஹ் பின் அசத் என்பவர் மதீனாவுக்கு வந்தார் அவரைப் பார்த்த உமர் (ரலி) அவர்கள், அவர் ஒரு வெளியூர்க்காரர் என்பதை அறிந்துகொண்டு, "நீங்கள் யார்?" என்று கேட்டார்கள் அவர், "நான்

---

228. இது அறிவிப்பாளர்தொடர் இடைமுறிந்த செய்தியாகும். இதன் அறிவிப்பாளர்தொடரில் மூன்றாவது அறிவிப்பாளராக அப்துல் அஃலா அத்தஃலபீ என்பார் இடம்பெற்றுள்ளார். இவர் பலவீனமான அறிவிப்பாளர் ஆவார். மேலும் இந்த ஹதீஸின் அறிவிப்பாளர் அப்துர்ரஹ்மான் பின் அபீலைலா (ரஹ்) அவர்கள், உமர் (ரலி) அவர்களைச் சந்தித்ததில்லை. உமர் (ரலி) அவர்களிடமிருந்து எதையும் செவியுற்றதுமில்லை. காலுறைகள் மீது தடவி 'மஸ்ஹு' செய்தல் மற்றும் குறுகலான குளிராடை அணிந்திருந்தபோது நடந்த நிகழ்ச்சிக்கு ஆதாரப்பூர்வமான அறிவிப்பாளர்தொடரில் செய்திகள் உள்ளன. காண்க: முஸ்லிம் 456-458, நஸாயீ 81, 124. பார்க்க: முன்சென்ற ஹதீஸ் எண் - 198 மற்றும் அதன் அடிக்குறிப்பு.

உமான்[229] (ஓமன்) வாசிகளுள் ஒருவன்" என்றார். "சரி" என்று கூறிய உமர் (ரலி) அவர்கள், அவருடைய கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு, அபூபக்ர் (ரலி) அவர்களிடம் சென்றார்கள். "இவர் இன்ன ஊரைச் சேர்ந்தவராவார்" என்று கூறிய உமர் (ரலி) அவர்கள் "அந்த ஊரைப் பற்றித்தான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், 'நான் ஓர் ஊரைப் பற்றி அறிவேன் அதற்கு 'உமான்' (ஓமன்) என்று கூறப்படும் அதன் ஓரப் பகுதியில் கடல் ஆர்ப்பரிக்கும் அங்கு அரபுகளின் ஒரு குலத்தார் இருப்பர் என் தூதர் அந்தப் பகுதிக்குச் சென்றால், அவரை நோக்கி அக்குலத்தார் அம்பெய்ய மாட்டார்கள்; கல்லாலும் அடிக்க மாட்டார்கள்' என்று கூறியதை நான் கேட்டுள்ளேன்" என்றார்கள்[230]

292 நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

அருளும் உயர்வும் வாய்ந்த அல்லாஹ், "எனக்காக 'இவ்வாறு' பணிவுடன் நடந்து கொள்ளும் ஒருவரை நான் 'இவ்வாறு' உயர்த்துவேன்" என்று கூறுகிறான்.

இதை உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்

عثمان، قال: نعم، قال: فأخذ بيده فأدخله على أبي بكر رضي الله عنه، فقال هذا من أهل الأرض التي سمعت رسول الله ﷺ يقول: إني لأعلم أرضا يقال لها عمان ينضح بناحيتها البحر بها حي من العرب لو أتاهم رسولي ما رموه بسهم ولا حجر.

٢٩٢ حدثنا يزيد أنبأنا عاصم بن محمد عن أبيه عن ابن عمر عن عمر رضي الله عنه قال: لا أعلمه إلا رفعه قال يقول الله تبارك وتعالى: من تواضع لي هكذا وجعل يزيد باطن كفه إلى الأرض وأدناها إلى الأرض رفعته هكذا وجعل باطن كفه إلى السماء ورفعها نحو السماء.

٢٩٣ حدثنا يزيد أنبأنا ديلم بن غزوان العبدي حدثنا ميمون الكردي عن أبي عثمان النهدي قال: إني لجالس تحت منبر عمر رضي الله عنه وهو يخطب الناس فقال في خطبته: سمعت رسول الله ﷺ يقول: إن أخوف ما أخاف على هذه الأمة

(அஹ்மது பின் ஹன்பல் ஆகிய நான் கூறுகிறேன்:) (இந்த ஹதீஸை எனக்கு அறிவித்த) யஸீது பின் ஹாரூன் (ரஹ்) அவர்கள் (முதல் முறை) 'இவ்வாறு' என்று கூறியபோது, தம் உள்ளங்கையை பூமியை நோக்கி தாழ்த்தி தரைவரை கொண்டுசென்று சைகை செய்தார்கள்; (இரண்டாவது முறை) 'இவ்வாறு' என்று கூறியபோது, தம் உள்ளங்கையை வானத்தை நோக்கித் திருப்பி, அதை வானத்தை நோக்கி உயர்த்திக் காட்டினார்கள்[231]

293 அபூஉஸ்மான் அந்நஹ்தீ (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

(ஒரு முறை) உமர் (ரலி) அவர்கள் மக்களுக்கு உரை நிகழ்த்தியபோது, நான் அவர்களுடைய சொற்பொழிவு மேடை (மிம்பர்) அருகில் அமர்ந்திருந்தேன் அவர்கள் தமது உரையில், "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், 'நான் என் சமுதாயத்தார் விஷயத்தில்

---

229. 'உமான்' (Sultanate of Oman) ஓமன் [illegible] GCO [illegible]

230. [illegible] முஸ்னது அஹ்மத் [illegible] (4974) முஸ்னது அஹ்மத் (18635) [illegible]

231. [illegible] (46) [illegible] (6451) [illegible] (7914) முஸ்னது [illegible] (174) [illegible]

كُلُّ مُنَافِقٍ عَلِيمِ اللِّسَانِ.

٢٩٤ حدثنا رَوْحٌ حَدَّثَنَا مَالِكٌ ح وَحَدَّثَنَا إِسْحَاقُ أَخْبَرَنِي مَالِكٌ قَالَ أَبو عَبْد الرَّحْمَنِ عَبْد اللهِ بن أَحْمَدَ وحَدَّثَنَا مُصْعَبٌ الزُّبَيْرِيُّ حَدَّثَنِي مَالِكٌ عَنْ زَيْدِ بْنِ أَبِي أُنَيْسَةَ أَنَّ عَبْدَ الْحَمِيدِ بْنَ عَبْدِ الرَّحْمَنِ بْنِ زَيْدِ بْنِ الْخَطَّابِ رَضِيَ اللهُ عَنْهُ أَخْبَرَهُ عَنْ مُسْلِمِ بْنِ يَسَارٍ الْجُهَنِيِّ أَنَّ عُمَرَ بْنَ الْخَطَّابِ رَضِيَ اللهُ عَنْهُ سُئِلَ عَنْ هَذِهِ الآيَةِ ﴿وَإِذْ أَخَذَ رَبُّكَ مِنْ بَنِي آدَمَ مِنْ ظُهُورِهِمْ ذُرِّيَّاتِهِمْ﴾ الآيَةَ، فَقَالَ عُمَرُ رَضِيَ اللهُ عَنْهُ: سَمِعْتُ رَسُولَ اللهِ ﷺ سُئِلَ عَنْهَا، فَقَالَ رَسُولُ اللهِ ﷺ: إِنَّ اللهَ خَلَقَ آدَمَ ثُمَّ مَسَحَ ظَهْرَهُ بِيَمِينِهِ وَاسْتَخْرَجَ مِنْهُ ذُرِّيَّةً، فَقَالَ: خَلَقْتُ هَؤُلاَءِ لِلْجَنَّةِ وَبِعَمَلِ أَهْلِ الْجَنَّةِ يَعْمَلُونَ ثُمَّ مَسَحَ ظَهْرَهُ فَاسْتَخْرَجَ مِنْهُ ذُرِّيَّةً، فَقَالَ: خَلَقْتُ هَؤُلاَءِ لِلنَّارِ وَبِعَمَلِ أَهْلِ النَّارِ يَعْمَلُونَ فَقَالَ: رَجُلٌ يَا رَسُولَ اللهِ فَفِيمَ الْعَمَلُ، فَقَالَ رَسُولُ اللهِ ﷺ: إِنَّ اللهَ عَزَّ وَجَلَّ إِذَا خَلَقَ الْعَبْدَ لِلْجَنَّةِ اسْتَعْمَلَهُ بِعَمَلِ أَهْلِ الْجَنَّةِ حَتَّى يَمُوتَ عَلَى عَمَلٍ مِنْ أَعْمَالِ أَهْلِ الْجَنَّةِ فَيُدْخِلَهُ بِهِ الْجَنَّةَ

மிகவும் அஞ்சுவது, நாவன்மை மிக்க ஒவ்வொரு நயவஞ்சகர்களையும்தான்' என்று கூறியதை நான் கேட்டுள்ளேன்" என்றார்கள்.[232]

294 முஸ்லிம் பின் யசார் அல்ஜுஹனீ (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்களிடம், "(நபியே) உம்முடைய இறைவன், ஆதமுடைய மக்களின் (மனிதர்களின்) முதுகுகளிலிருந்து அவர்களின் வழித்தோன்றல்களை வெளியாக்கி, அவர்களுக்கெதிராக அவர்களையே சாட்சிகளாக்கி, 'நான் உங்கள் இறைவன் அல்லவா?' என்று கேட்டதை (எண்ணிப் பார்ப்பீராக). அதற்கு அவர்கள், 'ஆம்; (இதற்கு) நாங்கள் சாட்சியமளிக்கிறோம்' என்றனர்" எனும் இந்த (7:172ஆவது) இறைவசனம் குறித்துக் கேட்கப்பட்டது.

அதற்கு உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் இந்த வசனம் குறித்துக் கேட்கப்பட்டபோது, அவர்கள் பின்வருமாறு கூறியதை நான் செவியுற்றேன்:

ஆதம் (அலை) அவர்களை அல்லாஹ் படைத்தான். பின்னர் தனது வலக் கரத்தால் ஆதம் (அலை) அவர்களின் முதுகைத் தடவி, அதிலிருந்து வழித்தோன்றல்கள் சிலரை வரவழைத்தான். "நான் இவர்களைச் சொர்க்கத்திற்காகவே படைத்துள்ளேன். சொர்க்கவாசிகளின் செயல்களையே இவர்கள் செய்வார்கள்" என்று கூறினான்.

பிறகு (மற்றொரு முறை) ஆதம் (அலை) அவர்களின் முதுகைத் தடவினான். அதிலிருந்து வழித்தோன்றல்கள் சிலரை வெளியாக்கினான். பிறகு, "இவர்களை நான் நரகத்திற்காகவே படைத்துள்ளேன். நரகவாசிகளின் செயல்களையே இவர்கள் செய்வார்கள்" என்று கூறினான்.

(இவ்வாறு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறியதும்) ஒருவர், "அல்லாஹ்வின் தூதரே! பிறகு நல்லறங்கள் எதற்காகச் செய்ய வேண்டும்?" என்று கேட்டார்.

அதற்கு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ், அடியார் ஒருவரைச் சொர்க்கத்திற்காகப் படைத்துவிட்டால், அவரைச் சொர்க்கவாசிகளின் செயல்களைச் செய்ய வைப்பான். இறுதியில் அவர் சொர்க்கவாசிகளின் செயல்களுள் ஏதேனுமொன்றைச் செய்து இறந்துவிடுவார். அதன்மூலம் அவரை அல்லாஹ் சொர்க்கத்தில் நுழைய வைப்பான்.

232. பார்க்க: முன்சென்ற ஹதீஸ் - 137 மற்றும் அதன் அடிக்குறிப்பு

அல்லாஹ், அடியார் ஒருவரை நரகத்திற்காகப் படைத்துவிட்டால், அவரை நரகவாசிகளின் செயல்களைச் செய்ய வைப்பான். இறுதியில் நரகவாசிகளின் செயல்களுள் ஏதேனுமொன்றைச் செய்து அவர் இறந்துவிடுவார். அதன் காரணமாக அவரை அல்லாஹ் நரகத்தில் நுழையச் செய்வான்.[233]

وَإِذَا خَلَقَ الْعَبْدَ لِلنَّارِ اسْتَعْمَلَهُ بِعَمَلِ أَهْلِ النَّارِ حَتَّى يَمُوتَ عَلَى عَمَلٍ مِنْ أَعْمَالِ أَهْلِ النَّارِ فَيُدْخِلَهُ بِهِ النَّارَ.

295 அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் கூறியதாவது:

٢٩٥ حَدَّثَنَا رَوْحٌ حَدَّثَنَا مَالِكُ بْنُ أَنَسٍ عَنِ ابْنِ شِهَابٍ عَنْ سَالِمِ بْنِ عَبْدِ اللَّهِ بْنِ عُمَرَ رَضِيَ اللَّهُ عَنْهُمَا عَنْ أَبِيهِ أَنَّ رَجُلًا مِنْ أَصْحَابِ رَسُولِ اللَّهِ ﷺ دَخَلَ الْمَسْجِدَ يَوْمَ الْجُمُعَةِ وَعُمَرُ بْنُ الْخَطَّابِ رَضِيَ اللَّهُ عَنْهُ قَائِمٌ يَخْطُبُ، فَقَالَ عُمَرُ رَضِيَ اللَّهُ عَنْهُ: أَيَّةُ سَاعَةٍ هَذِهِ؟ فَقَالَ: يَا أَمِيرَ الْمُؤْمِنِينَ انْقَلَبْتُ مِنَ السُّوقِ فَسَمِعْتُ النِّدَاءَ فَمَا زِدْتُ عَلَى أَنْ تَوَضَّأْتُ فَأَقْبَلْتُ، فَقَالَ عُمَرُ رَضِيَ اللَّهُ عَنْهُ: الْوُضُوءُ أَيْضًا وَقَدْ عَلِمْتَ أَنَّ رَسُولَ اللَّهِ ﷺ كَانَ يَأْمُرُنَا بِالْغُسْلِ.

உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள் (வெள்ளிக்கிழமையன்று மிம்பரில்) நின்று மக்களுக்கு உரையாற்றிக்கொண்டிருந்த போது, நபித்தோழர்களுள் ஒருவர் பள்ளிக்கு(த் தாமதமாக) வந்தார். அப்போது உமர் (ரலி) அவர்கள், "இது எந்த நேரம்? (ஏன் தாமதம்?)" என்று கேட்டார்கள்.

அதற்கு அவர், "இறைநம்பிக்கையாளர்களின் தலைவரே! நான் கடை வீதியிலிருந்து (வீடு நோக்கித்) திரும்பிக்கொண்டிருந்த போது, தொழுகை அறிவிப்பை (பாங்கோசையை)க் கேட்டேன். உடனே அங்கத் தூய்மை (உளூ) மட்டுமே செய்தேன். அதைவிடக் கூடுதலாக வேறொன்றும் செய்யாமல் (விரைந்து) வருகிறேன்" என்று கூறினார்.

அதற்கு உமர் (ரலி) அவர்கள், "வெறும் 'உளூ' மட்டும்தானா? (குளிக்கவில்லையா?) அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் (ஜுமுஆவுக்காகக்) குளிக்குமாறு நமக்குக் கட்டளையிட்டுவந்ததை நீங்கள் அறிவீர்களே!" என்று கேட்டார்கள்.[234]

296 யஅலா பின் உமய்யா (ரலி) அவர்கள் கூறியதாவது:

٢٩٦ حَدَّثَنَا رَوْحٌ حَدَّثَنَا ابْنُ جُرَيْجٍ أَخْبَرَنِي سُلَيْمَانُ بْنُ عَتِيقٍ عَنْ عَبْدِ اللَّهِ بْنِ بَابَيْهِ عَنْ بَعْضِ بَنِي يَعْلَى عَنْ يَعْلَى بْنِ أُمَيَّةَ قَالَ: طُفْتُ مَعَ عُمَرَ بْنِ الْخَطَّابِ رَضِيَ اللَّهُ عَنْهُ فَاسْتَلَمَ الرُّكْنَ قَالَ يَعْلَى: فَكُنْتُ مِمَّا يَلِي الْبَيْتَ، فَلَمَّا بَلَغْتُ الرُّكْنَ

நான் உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்களுடன் இறையில்லம் கஅபாவைச் சுற்றி (தவாஃப்) வந்துகொண்டிருந்தேன். அப்போது அவர்கள், கஅபாவின் ('ஹஜருல் அஸ்வத்' பதிக்கப்பெற்றுள்ள) மூலையைக் கையால் தொட்டு முத்தமிட்டார்கள். அப்போது நான் கஅபாவை ஒட்டிய பகுதியில் (கஅபாவுக்கு மிக அருகில்) இருந்தேன்.

---

233. [illegible]

234. [illegible] - 87. 194. 197.

الْغَرْبِيَّ الَّذِي يَلِي الْأَسْوَدَ جَرَرْتُ بِيَدِهِ لِيَسْتَلِمَ، فَقَالَ: مَا شَأْنُكَ؟ فَقُلْتُ أَلَا تَسْتَلِمُ، قَالَ أَلَمْ تَطُفْ مَعَ رَسُولِ اللَّهِ ﷺ، فَقُلْتُ بَلَى فَقَالَ: أَفَرَأَيْتَهُ يَسْتَلِمُ هَذَيْنِ الرُّكْنَيْنِ الْغَرْبِيَّيْنِ قَالَ فَقُلْتُ لَا، قَالَ: أَفَلَيْسَ لَكَ فِيهِ أُسْوَةٌ حَسَنَةٌ قَالَ قُلْتُ بَلَى قَالَ: فَانْفُذْ عَنْكَ.

நான் 'ஹஜருல் அஸ்வத்' அடுத்துள்ள மேற்குப் பகுதி மூலை ('ருக்னுல் ஃகர்பீ')யை அடைந்த போது, உமர் (ரலி) அவர்களின் கையைப் பிடித்து அந்த மூலையைத் தொட்டு முத்த மிடச் செய்ய முற்பட்டேன். அப்போது உமர் (ரலி) அவர்கள், "உங்களுக்கு என்ன நேர்ந்தது?" என்று கேட்டார்கள்.

அதற்கு நான், "(இந்த மூலையைத் தொட்டு) நீங்கள் முத்தமிடவில்லையா?" என்று கேட்டேன். அதற்கு அவர்கள், "நீங்கள் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுடன் இறை இல்லம் கஅபாவைச் சுற்றி (தவாஃப்) வந்த தில்லையா?" என்று கேட்டார்கள். நான், "ஆம் (வந்துள்ளேன்)" என்றேன். அதற்கு உமர் (ரலி) அவர்கள், "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் மேற்குப் பகுதியிலுள்ள இவ்விரு மூலைகளையும் முத்தமிட்டதை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா?" என்று கேட்டார்கள். நான், "இல்லை" என்றேன். உமர் (ரலி) அவர்கள், "அப்படியானால், இவ்விஷயத்தில் உங்களுக்கு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் அழகிய முன்மாதிரி இல்லையா?" என்று கேட்டார்கள். நான், "ஆம் (உள்ளது)" என்றேன். அதற்கு உமர் (ரலி) அவர்கள், "அப்படியானால் நீங்கள் போகலாம்" என்றார்கள்.[236]

٢٩٧ حَدَّثَنَا عُثْمَانُ بْنُ عُمَرَ وَأَبُو عَامِرٍ قَالَ حَدَّثَنَا مَالِكٌ عَنِ الزُّهْرِيِّ عَنْ مَالِكِ بْنِ أَوْسِ بْنِ الْحَدَثَانِ قَالَ: جِئْتُ بِدَنَانِيرَ لِي فَأَرَدْتُ أَنْ أَصْرِفَهَا فَلَقِيَنِي طَلْحَةُ بْنُ عُبَيْدِ اللَّهِ فَاصْطَرَفَهَا وَأَخَذَهَا، فَقَالَ حَتَّى يَجِيءَ سَلْمٌ خَازِنِي قَالَ أَبُو عَامِرٍ مِنَ الْغَابَةِ، وَقَالَ فِيهَا كُلِّهَا هَاءَ وَهَاءَ، قَالَ فَسَأَلْتُ عُمَرَ بْنَ الْخَطَّابِ رَضِيَ اللَّهُ عَنْهُ عَنْ ذَلِكَ، فَقَالَ: سَمِعْتُ رَسُولَ اللَّهِ ﷺ يَقُولُ: الذَّهَبُ بِالْوَرِقِ رِبًا إِلَّا هَاءَ وَهَاءَ وَالْبُرُّ بِالْبُرِّ رِبًا إِلَّا هَاءَ وَهَاءَ وَالشَّعِيرُ بِالشَّعِيرِ رِبًا إِلَّا هَاءَ وَهَاءَ وَالتَّمْرُ بِالتَّمْرِ رِبًا إِلَّا هَاءَ وَهَاءَ.

297 மாலிக் பின் அவ்ஸ் பின் அல்ஹதஸான் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

நான் என்னிடமிருந்த சில 'தீனார்' (பொற்காசு)களை எடுத்துக்கொண்டு, அவற்றை திர்ஹம் (வெள்ளிக்காசு)களாக மாற்றும் நோக்கத்துடன் வந்தேன். அப்போது என்னைச் சந்தித்த தல்ஹா பின் உபைதில்லாஹ் (ரலி) அவர்கள் அதை மாற்றிக்கொள்வதாகக் கூறிவிட்டு, "என் கருவூலக் காப்பாளர் 'சல்ம்' என்பார் (மதீனாவுக்கு அருகிலுள்ள) 'அல்ஃகாபா' எனுமிடத்திலிருந்து வரும்வரை எனக்கு அவகாசம் (தவணை) தாருங்கள்" என்று கேட்டார்கள். நான் இது குறித்து உமர் (ரலி) அவர்களிடம் கேட்டேன்.

அப்போது உமர் (ரலி) அவர்கள், "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் 'உடனுக்குடன் அல்லாமல் (தவணை முறையில்) தங்கத்துக்கு வெள்ளியை மாற்றிக்கொள்வது வட்டியாகும். உடனுக்குடன் அல்லாமல் தோல் நீக்கப்பட்ட கோதுமைக்குத் தோல் நீக்கப்பட்ட கோதுமையை மாற்றிக்கொள்வதும் வட்டியாகும். உடனுக்குடன் அல்லாமல் தோல் நீக்கப்படாத கோதுமைக்குத் தோல் நீக்கப்படாத கோதுமையை மாற்றிக்கொள்வதும் வட்டியாகும். உடனுக்குடன் அல்லாமல் பேரீச்சம் பழத்துக்குப்

236. முன்சென்ற 245ஆவது ஹதீஸின் கருத்தே இங்கும் வந்துள்ளது. 245ஆவது ஹதீஸில் [illegible]

பேரீச்சம் பழத்தை மாற்றிக்கொள்வதும் வட்டியாகும்' என்று கூறியதை நான் கேட்டுள்ளேன்" என்றார்கள்.[236]

298 அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

இறந்தவருக்காக அவருடைய குடும்பத்தார் (ஓலமிட்டு) அழுவதால் இறந்தவர் மண்ணறையில் வேதனை செய்யப்படுகிறார்.

இதை உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.[237]

299 அதீ பின் ஹாத்திம் (ரலி) அவர்கள் கூறியதாவது:

நான் (கலீஃபா) உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்களிடம் எனது ('தய்யி') குலத்தைச் சேர்ந்த ஒரு குழுவினருடன் வந்தேன். அப்போது உமர் (ரலி) அவர்கள் (எனது) தய்யி குலத்தாருள் ஒவ்வொருவருக்கும் இரண்டாயிரம் (தீனார்/திர்ஹம்) வழங்கலானார்கள்.

ஆனால், என்னைவிட்டுத் தமது முகத்தைத் திருப்பிக்கொண்டார்கள். ஆகவே, நான் அவர்களுக்கு முன்னால் போய் நின்றேன். அப்போதும் அவர்கள் என்னைவிட்டு முகத்தைத் திருப்பிக்கொண்டார்கள். பிறகு மீண்டும் அவர்களது முகத்துக்கெதிரே போய் நின்றேன். அப்போதும் என்னை விட்டுத் தமது முகத்தைத் திருப்பிக்கொண்டார்கள். அப்போது நான், "இறைநம்பிக்கையாளர்களின் தலைவரே! என்னைத் தெரியவில்லையா?" என்று கேட்டேன். இதைக் கேட்டு உமர் (ரலி) அவர்கள் விழுந்து விழுந்து சிரித்தார்கள்.

பிறகு, "ஆம். அல்லாஹ்வின் மீதாணையாக! உங்களை நான் அறிவேன். மக்கள் (ஒரே இறைவனை) மறுத்தபோது, நீங்கள் (அந்த இறைவனை) நம்பிக்கைகொண்டீர்கள்; அவர்கள் (இஸ்லாத்தை ஏற்காமல்) பின்வாங்கிச் சென்றபோது, நீங்கள் (ஏற்க) முன்வந்தீர்கள். அவர்கள் (ஸகாத்தை வழங்காமல்) மோசடி செய்தபோது, நீங்கள் அதை நிறைவேற்றினீர்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களது முகத்தையும் அவர்களின் தோழர்களது முகத்தையும் (மகிழ்ச்சியால்) ஒளிரச் செய்த முதலாவது 'ஸகாத்' தொகை (தங்களது) 'தய்யி' குலத்தார் வழங்கிய 'ஸகாத்' தொகையே ஆகும். நீங்கள்தான் அதை அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் கொண்டு வந்தீர்கள்" என்று சொன்னார்கள்.

இதைக் கேட்டு அதீ பின் ஹாத்திம் (ரலி) அவர்கள் வருத்தம் தெரிவிக்கலானார்கள்.

٢٩٨ حدثنا عثمان بن عمر أخبرنا يونس عن الزهري عن سعيد بن المسيب أن عمر رضي الله عنه قال: إن رسول الله ﷺ قال: إن الميت يعذب ببكاء أهله عليه.

٢٩٩ حدثنا بكر بن عيسى حدثنا أبو عوانة عن المغيرة عن الشعبي عن عدي بن حاتم قال: أتيت عمر بن الخطاب رضي الله عنه في أناس من قومي فجعل يفرض للرجل من طيء في ألفين ويعرض عني قال فاستقبلته فأعرض عني ثم أتيته من حيال وجهه فأعرض عني، قال فقلت: يا أمير المؤمنين أتعرفني؟ قال فضحك حتى استلقى لقفاه ثم قال: نعم والله إني لأعرفك آمنت إذ كفروا وأقبلت إذ أدبروا ووفيت إذ غدروا وإن أول صدقة بيضت وجه رسول الله ﷺ ووجوه أصحابه صدقة طيء جئت بها إلى رسول الله ﷺ، ثم أخذ يعتذر ثم قال: إنما فرضت لقوم أجحفت بهم الفاقة وهم

236. பார்க்க: முன்னெறை ஹதீஸ் எண் - 157 மற்றும் அதன் அடிக்குறிப்பு

237. பார்க்க: முன்னெறை ஹதீஸ் எண் - 175 மற்றும் அதன் அடிக்குறிப்பு

سَادَةُ عَشَائِرِهِمْ لِمَا يَنُوبُهُمْ مِنَ الْحُقُوقِ.

٣٠٠ حَدَّثَنَا عَبْدُ الْمَلِكِ بْنُ عَمْرٍو حَدَّثَنَا هِشَامُ بْنُ سَعْدٍ عَنْ زَيْدِ بْنِ أَسْلَمَ عَنْ أَبِيهِ قَالَ: سَمِعْتُ عُمَرَ بْنَ الْخَطَّابِ رَضِيَ اللَّهُ عَنْهُ يَقُولُ: فِيمَا الرَّمَلَانُ الْآنَ وَالْكَشْفُ عَنِ الْمَنَاكِبِ وَقَدْ أَطَّأَ اللَّهُ الْإِسْلَامَ وَنَفَى الْكُفْرَ وَأَهْلَهُ وَمَعَ ذَلِكَ لَا نَدَعُ شَيْئًا كُنَّا نَفْعَلُهُ عَلَى عَهْدِ رَسُولِ اللَّهِ ﷺ.

٣٠١ حَدَّثَنَا عَبْدُ الصَّمَدِ وَعَفَّانُ قَالَا حَدَّثَنَا دَاوُدُ بْنُ أَبِي الْفُرَاتِ حَدَّثَنَا عَبْدُ اللَّهِ بْنُ بُرَيْدَةَ قَالَ عَفَّانُ عَنِ ابْنِ بُرَيْدَةَ عَنْ أَبِي الْأَسْوَدِ الدِّيلِيِّ قَالَ: أَتَيْتُ الْمَدِينَةَ وَقَدْ وَقَعَ بِهَا مَرَضٌ قَالَ عَبْدُ الصَّمَدِ فَهُمْ يَمُوتُونَ مَوْتًا ذَرِيعًا فَجَلَسْتُ إِلَى عُمَرَ بْنِ الْخَطَّابِ رَضِيَ اللَّهُ عَنْهُ فَمَرَّتْ بِهِ جَنَازَةٌ فَأُثْنِيَ عَلَى صَاحِبِهَا خَيْرٌ، فَقَالَ عُمَرُ رَضِيَ اللَّهُ عَنْهُ: وَجَبَتْ ثُمَّ مُرَّ بِأُخْرَى فَأُثْنِيَ عَلَى صَاحِبِهَا خَيْرٌ، فَقَالَ وَجَبَتْ ثُمَّ مُرَّ بِأُخْرَى فَأُثْنِيَ عَلَيْهَا شَرٌّ فَقَالَ عُمَرُ رَضِيَ اللَّهُ

பிறகு உமர் (ரலி) அவர்கள், "நான் வறுமையால் வாடிக்கொண்டிருக்கும் ஒரு சமுதாயத்தாருக்கே கொடுத்தேன். இவர்கள் தம் கோத்திரங்களின் உரிமைகளுக்குப் பொறுப்பேற்றுள்ள தலைவர்கள் ஆவர்" என்று கூறினார்கள்.[238]

300 *உமர் (ரலி) அவர்களால் விடுதலை செய்யப்பட்ட அடிமையான அஸ்லம் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:*

(கலீஃபா) உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள், "அல்லாஹ் (இந்த அரபு மண்ணில்) இஸ்லாத்தை நிலை நிறுத்தி, இறை மறுப்பையும் இறைமறுப்பாளர்களையும் இல்லாமல் ஆக்கிவிட்ட இன்றைய சூழலில், ('ஹஜ்'ஜின் முதல் தவாஃபிலும் உம்ராவின் தவாஃபிலும் மக்கள்) நடைபோட்டமாகச் செல்வதும் ('ரமல்' செய்வதும்), தோள்களைத் திறந்து கொள்வதும் ஏன்?" என்று கேட்டுவிட்டு, "ஆயினும், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களது காலத்தில் நாங்கள் செய்துவந்த எந்த ஒரு செயலையும் (அன்றைக்கிருந்த காரணம் இன்றைக்கில்லாவிட்டாலும், அதை) நாங்கள் விட்டுவிடமாட்டோம்" என்று கூறினார்கள்.[239]

301 *அபுல் அஸ்வது அத்தீலீ (ரஹ்) அவர்கள் கூறியதாவது:*

மதீனாவில் (கொள்ளை) நோய் பரவி, பரவலாக மக்கள் இறந்துகொண்டிருந்த காலக் கட்டத்தில் நான் மதீனாவுக்கு வந்து (கலீஃபா) உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்களுடன் அமர்ந்திருந்தேன். அப்போது ஒரு 'ஜனாஸா' (பிரேத ஊர்வலம்) அவர்களைக் கடந்து சென்றது. அப்போது இறந்தவரை (அவரது நற்பண்புகளைக் கூறிப்) புகழ்ந்து பேசப்பட்டது. அப்போது உமர் (ரலி) அவர்கள், "உறுதியாகிவிட்டது" என்றார்கள். பிறகு மற்றொரு 'ஜனாஸா' அவர்களைக் கடந்து சென்றது. அப்போதும் 'ஜனாஸா'வைப் பற்றிப் புகழ்ந்து பேசப்பட்டது அப்போதும் உமர் (ரலி) அவர்கள் "உறுதியாகிவிட்டது" என்றார்கள்.

பிறகு வேறொரு 'ஜனாஸா' அவர்களைக் கடந்து சென்றது. இந்த 'ஜனாஸா'வைப்

---

238. இந்த ஹதீஸின் முற்பகுதி புகாரியிலும் (4384), பிற்பகுதி முஸ்லிமிலும் (4048) இடம்பெற்றுள்ளன. இக்கருத்து முஸன்னஃப் இப்னு அபீஷைபா (6/344), பைஹகீயின் சுனனுல் குப்ரா (7/10) ஆகிய நூல்களிலும் பதிவாகியுள்ளது.

239. இந்த ஹதீஸ்தொடர் விளக்கம் புகாரீ (1602, 1605), முஸ்லிம் (2424, 2427) ஆகிய நூல்களில் [illegible] நபி (ஸல்) அவர்கள் மக்கா வந்து [illegible] மதீனா [illegible] நபி (ஸல்) அவர்கள் [illegible] நபி (ஸல்) அவர்கள் தம் தோழர்களிடம் முதல் மூன்று சுற்றுகளில் நடைபோட்டமாகவும், மீதிப் நான்கு சுற்றுகளில் சாதாரணமாக நடக்கவும் கட்டளையிட்டார்கள். இந்த ஹதீஸ் அபூதாவூத் (1618), இப்னுமாஜா (2943), [illegible] (2081), [illegible] (175). இப்னு

عَنْهُ: وَجَبَتْ فَقَالَ أَبُو الأَسْوَدِ: فَقُلْتُ لَهُ: يَا أَمِيرَ الْمُؤْمِنِينَ مَا وَجَبَتْ؟ فَقَالَ: قُلْتُ كَمَا قَالَ رَسُولُ اللَّهِ ﷺ: أَيُّمَا مُسْلِمٍ شَهِدَ لَهُ أَرْبَعَةٌ بِخَيْرٍ إِلاَّ أَدْخَلَهُ اللَّهُ الْجَنَّةَ، قَالَ قُلْنَا: وَثَلاَثَةٌ، قَالَ وَثَلاَثَةٌ قُلْنَا: وَاثْنَانِ قَالَ وَاثْنَانِ، قَالَ وَلَمْ نَسْأَلْهُ عَنِ الْوَاحِدِ.

பற்றியும் (அவரது தீய பண்புகளைக் கூறி) இகழ்ந்து பேசப்பட்டது. அப்போதும் உமர் (ரலி) அவர்கள், "உறுதியாகிவிட்டது" என்றார்கள் நான், "இறைநம்பிக்கையாளர்களின் தலைவரே! என்ன உறுதியாகிவிட்டது?" என்று கேட்டேன்.

அதற்கு உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்:

நான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறியதைப் போன்றுதான் கூறினேன். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "எந்த முஸ்லிமுக்காவது அவர் நல்லவர் என (முஸ்லிம்கள்) நால்வர் சாட்சியம் அளித்தால், அவரை அல்லாஹ் சொர்க்கத்தில் நுழையச் செய்வான்" என்று கூறினார்கள். நாங்கள், "மூவர் சாட்சியம் அளித்தால்...?" என்று கேட்டோம். அதற்கு அவர்கள், "மூவர் சாட்சியம் அளித்தாலும்தான்" என்றார்கள் நாங்கள், "இருவர் சாட்சியம் அளித்தால்...?" என்று கேட்டதற்கு, "இருவர் சாட்சியம் அளித்தாலும்தான்" என்றார்கள். ஆயினும், நாங்கள் அவர்களிடம் ஒருவர் சாட்சியம் அளிப்பதைப் பற்றிக் கேட்கவில்லை.[240]

٣٠٢ حَدَّثَنَا عَبْدُ الصَّمَدِ حَدَّثَنَا حَرْبٌ يَعْنِي ابْنَ شَدَّادٍ حَدَّثَنَا يَحْيَى حَدَّثَنَا أَبُو سَلَمَةَ حَدَّثَنَا أَبُو هُرَيْرَةَ قَالَ: بَيْنَمَا عُمَرُ بْنُ الْخَطَّابِ رَضِيَ اللَّهُ عَنْهُ يَخْطُبُ إِذْ جَاءَ رَجُلٌ فَجَلَسَ، فَقَالَ عُمَرُ: لِمَ تَحْتَبِسُونَ عَنِ الْجُمُعَةِ؟ فَقَالَ الرَّجُلُ يَا أَمِيرَ الْمُؤْمِنِينَ مَا هُوَ إِلاَّ أَنْ سَمِعْتُ النِّدَاءَ فَتَوَضَّأْتُ ثُمَّ أَقْبَلْتُ، فَقَالَ عُمَرُ رَضِيَ اللَّهُ عَنْهُ: وَأَيْضًا أَلَمْ تَسْمَعُوا رَسُولَ اللَّهِ ﷺ يَقُولُ: إِذَا رَاحَ أَحَدُكُمْ إِلَى الْجُمُعَةِ فَلْيَغْتَسِلْ. حَدَّثَنَا عَبْدُ الصَّمَدِ حَدَّثَنِي أَبِي حَدَّثَنَا الْحُسَيْنُ الْمُعَلِّمُ حَدَّثَنَا يَحْيَى أَخْبَرَنِي أَبُو سَلَمَةَ أَنَّ أَبَا هُرَيْرَةَ رَضِيَ اللَّهُ عَنْهُ أَخْبَرَهُ أَنَّ عُمَرَ رَضِيَ اللَّهُ عَنْهُ بَيْنَا هُوَ يَخْطُبُ فَذَكَرَهُ.

302 அபூஹுரைரா (ரலி) அவர்கள் கூறியதாவது:

(கலீஃபா) உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள் வெள்ளிக்கிழமை (ஜுமுஆ) அன்று உரையாற்றிக்கொண்டிருந்தபோது, ஒருவர் (பள்ளிவாசலுக்கு) வந்தார். அப்போது உமர் (ரலி) அவர்கள், "ஏன் தொழுகைக்குத் தாமதமாக வருகின்றீர்கள்?" என்று கேட்டார்கள்.

அதற்கு அந்த மனிதர், "அதற்குக் காரணம், பாங்கைக் கேட்ட பிறகுதான் நான் அங்கத் தூய்மை (உளூ) செய்தேன் பிறகு நான் வந்தேன்" என்றார். அப்போது உமர் (ரலி) அவர்கள், "நபி (ஸல்) அவர்கள், 'உங்களுள் ஒருவர் ஜுமுஆத் தொழுகைக்குச் செல்லும்போது குளித்துக்கொள்ளட்டும்' என்று கூறியதை நீங்கள் செவியுற்றதில்லையா?" என்று கேட்டார்கள்.[241]

٣٠٣ حَدَّثَنَا عَبْدُ الصَّمَدِ حَدَّثَنَا حَرْبٌ حَدَّثَنَا يَحْيَى عَنْ عِمْرَانَ بْنِ حِطَّانَ فِيمَا يَحْسِبُ حَرْبٌ أَنَّهُ سَأَلَ ابْنَ عَبَّاسٍ رَضِيَ اللَّهُ عَنْهُ عَنْ لَبُوسِ

303 யஹ்யா பின் அபீகஸீர் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

இம்ரான் பின் ஹித்தான் (ரஹ்) அவர்கள் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களிடம்

*குஸைமா (2502), ஹாகிம் (1622), பைஹகீ (5/70) ஆகிய நூல்களிலும் இடம்பெற்றுள்ளது.

240. பார்க்க: முன்சென்ற ஹதீஸ் எண்கள் - 133, 139 மற்றும் அவற்றின் அடிக்குறிப்புகள்

241. காண்க: முன்சென்ற ஹதீஸ் எண்கள் - 87, 197 மற்றும் அவற்றின் அடிக்குறிப்புகள்

الحرير، فقال: سل عنه عائشة، فسأل عائشة
فقالت: سل ابن عمر رضي الله عنه، فسأل ابن
عمر رضي الله عنه فقال: حدثني أبو حفص أن
رسول الله ﷺ قال: من لبس الحرير في الدنيا
فلا خلاق له في الآخرة.

٣٠٤ حدثنا يحيى بن حماد وعفان قالا حدثنا أبو
عوانة عن داود بن عبد الله الأودي عن حميد بن
عبد الرحمن الحميري حدثنا ابن عباس بالبصرة
قال: أنا أول من أتى عمر رضي الله عنه حين
طعن، فقال: احفظ عني ثلاثا فإني أخاف أن لا
يدركني الناس أما أنا فلم أقض في الكلالة قضاء
ولم أستخلف على الناس خليفة وكل مملوك له
عتيق فقال له الناس استخلف، فقال: أي ذلك
أفعل فقد فعله من هو خير مني إن أدع إلى الناس
أمرهم فقد تركه نبي الله عليه الصلاة والسلام
وإن أستخلف فقد استخلف من هو خير مني
أبو بكر رضي الله عنه فقلت له: أبشر بالجنة

பட்டாடை அணிவதைப் பற்றிக் கேட்டார்கள். அதற்கு இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள், "நீங்கள் இது குறித்து ஆயிஷா (ரலி) அவர்களிடம் கேளுங்கள்" என்றார்கள். அவ்வாறே இம்ரான் அவர்கள், ஆயிஷா (ரலி) அவர்களிடம் கேட்டபோது, ஆயிஷா (ரலி) அவர்கள், "நீங்கள் இது குறித்து இப்னு உமர் (ரலி) அவர்களிடம் கேளுங்கள்" என்றார்கள் அவ்வாறே இம்ரான் அவர்கள், இப்னு உமர் (ரலி) அவர்களிடம் கேட்டபோது, இப்னு உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்:

(என் தந்தை) அபூஹஃப்ஸ் (உமர்-ரலி) அவர்கள், "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், 'இவ்வுலகில் பட்டாடை அணிந்தவருக்கு மறுமையில் எந்தப் பங்கும் கிடையாது' என்று கூறினார்கள்" என்றார்கள்.[242]

304 இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறியதாவது:

(கலீஃபா) உமர் (ரலி) அவர்கள் தாக்கப்பட்டு (இறக்குந்தறுவாயில்) இருந்தபோது, அவர்களைச் சென்று பார்த்தவர்களுள் நான்தான் முதல்வனாவேன். அப்போது அவர்கள், "என்னிடமிருந்து மூன்று செய்திகளை(க் கேட்டு) மனனமிட்டுக்கொள்வீராக! ஏனெனில், நான் என்னிடம் மக்கள் வந்து சேரமாட்டார்களோ (அதற்குள் நான் இறந்துவிடுவேனோ) என்று அஞ்சுகிறேன். நான் 'கலாலா' (மூல வாரிசுகளோ கிளை வாரிசுகளோ இல்லாத ஒருவரின் சொத்துரிமை) குறித்து இதுவரை (முடிவான) தீர்ப்பு எதையும் கூறவில்லை. நான் எனக்குப்பின் (மக்களுக்கு) ஆட்சியாளராக யாரையும் நியமிக்கவில்லை. எனக்குரிய ஒவ்வொருவரும் அடிமை விடுதலை பெற்றவர்கள் ஆவர்" என்று கூறினார்கள்.

அப்போது உமர் (ரலி) அவர்களிடம் மக்கள், "நீங்கள் உங்களுக்குப்பின் ஆட்சியாளர் ஒருவரை நியமியுங்கள்" என்று கோரினர் அதற்கு உமர் (ரலி) அவர்கள், "நான் (இரு முறைகளில்) எதைச் செய்தாலும் (நன்றே ஏனெனில், இவ்விரு முறைகளையும்) என்னைவிடச் சிறந்தவர்கள் செய்துள்ளனர். நான் மக்களின் (ஆட்சியாளர் தேர்வு) விவகாரத்தை மக்களிடமே விட்டாலும், (அதுவும் சரியானதே! காரணம்,) அவ்வாறே நபி (ஸல்) அவர்களும் விட்டுள்ளார்கள். நான் எனக்குப்பின் ஆட்சியாளர் ஒருவரைத் தேர்வு செய்தால், (அதுவும் சரியே! காரணம்,) என்னைவிடச் சிறந்தவரான அபூபக்ர் (ரலி) அவர்கள் (தமக்குப்பின் என்னை) ஆட்சியாளராக அமர்த்தவே செய்தார்கள்" என்று கூறினார்கள்.

அப்போது உமர் (ரலி) அவர்களிடம் நான், "தங்களுக்குச் சொர்க்கம் உண்டு என்ற

242. பார்க்க: முன்சென்ற ஹதீஸ் எண் - 88 மற்றும் அதன் அடிக்குறிப்பு

நற்செய்தியைப் பெற்றுக்கொள்ளுங்கள். ஏனெனில், தாங்கள் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுடன் நீண்ட காலம் தோழமையுடன் இருந்துள்ளீர்கள். இறைநம்பிக்கையாளர்களுக்கு ஆட்சியாளராகப் பொறுப்பேற்று, அதை வலிமையாக நடத்தினீர்கள். (ஆட்சிப் பொறுப்பு எனும்) அந்த அடைக்கலப் பொறுப்பை உரிய முறையில் நிறைவேற்றினீர்கள்" என்று கூறினேன்.

அதற்கு உமர் (ரலி) அவர்கள், "எனக்குச் சொர்க்கம் உண்டென நீர் நற்செய்தி கூறியதைப் பொறுத்தவரை, எவனைத் தவிர வேறு இறைவன் இல்லையோ, அந்த இறைவன் மீதாணையாக! எனக்கு இந்த உலகமும் இதிலுள்ளவையும் சொந்தமானவையாக இருந்து, (அவற்றைப் பிணைத் தொகையாகக் கொடுத்து, மறுமையின் தண்டனைகளிலிருந்து என்னை விடுவித்துக்கொள்ள இயலுமானால்,) அவற்றைப் பிணைத் தொகையாகக் கொடுத்து, எனக்கு முன்னாலிருக்கும் (மறுமையின்) அமளியிலிருந்து என்னை விடுவித்துக்கொள்வேன்.

"இறைநம்பிக்கையாளர்களுக்கு ஆட்சியாளராகப் பொறுப்பேற்றது குறித்து நீர் குறிப்பிட்டதைப் பொறுத்தவரை, அல்லாஹ்வின் மீதாணையாக! அவ்வாறு நான் பொறுப்பேற்று ஆட்சி நடத்தியது (மறுமையில்) எனக்குச் சாதகமாகவோ எதிராகவோ இல்லாமல், சரி சமமாக அமைந்தாலே போதும் என்றே நான் விரும்புகிறேன். நபி (ஸல்) அவர்களின் தோழமை குறித்து நீர் கூறியதைப் பொறுத்தவரை, அது (உண்மை)தான்; (அந்தச் சிறப்புக்கு உரியவன்தான் நான்)" என்று கூறினார்கள்.[243]

صَاحَبْتَ رَسُولَ اللَّهِ ﷺ فَأَطَلْتَ صُحْبَتَهُ وَوُلِّيتَ
أَمْرَ الْمُؤْمِنِينَ فَقَوِيتَ وَأَدَّيْتَ الْأَمَانَةَ، فَقَالَ: أَمَّا
تَبْشِيرُكَ إِيَّايَ بِالْجَنَّةِ فَوَاللَّهِ لَوْ أَنَّ لِي قَالَ عَفَّانُ
فَلَا وَاللَّهِ الَّذِي لَا إِلَهَ إِلَّا هُوَ لَوْ أَنَّ لِي الدُّنْيَا بِمَا
فِيهَا لَافْتَدَيْتُ بِهِ مِنْ هَوْلِ مَا أَمَامِي قَبْلَ أَنْ أَعْلَمَ
الْخَبَرَ، وَأَمَّا قَوْلُكَ فِي أَمْرِ الْمُؤْمِنِينَ فَوَاللَّهِ لَوَدِدْتُ
أَنَّ ذَلِكَ كَفَافًا لَا لِي وَلَا عَلَيَّ وَأَمَّا مَا ذَكَرْتَ
مِنْ صُحْبَةِ نَبِيِّ اللَّهِ ﷺ فَذَلِكَ.

٣٠٥ حَدَّثَنَا يَحْيَى بْنُ آدَمَ حَدَّثَنَا سُفْيَانُ عَنْ عَبْدِ
الرَّحْمَنِ بْنِ عَيَّاشٍ عَنْ حَكِيمِ بْنِ حَكِيمٍ عَنْ أَبِي
أُمَامَةَ بْنِ سَهْلٍ قَالَ: كَتَبَ عُمَرُ رَضِيَ اللَّهُ عَنْهُ إِلَى
أَبِي عُبَيْدَةَ بْنِ الْجَرَّاحِ أَنْ عَلِّمُوا غِلْمَانَكُمُ الْعَوْمَ
وَمُقَاتِلَتَكُمُ الرَّمْيَ فَكَانُوا يَخْتَلِفُونَ إِلَى الْأَغْرَاضِ
فَجَاءَ سَهْمٌ غَرْبٌ إِلَى غُلَامٍ فَقَتَلَهُ فَلَمْ يُوجَدْ لَهُ
أَصْلٌ وَكَانَ فِي حَجْرِ خَالٍ لَهُ، فَكَتَبَ فِيهِ أَبُو
عُبَيْدَةَ إِلَى عُمَرَ رَضِيَ اللَّهُ عَنْهُ إِلَى مَنْ أَدْفَعُ عَقْلَهُ
فَكَتَبَ إِلَيْهِ عُمَرُ رَضِيَ اللَّهُ عَنْهُ إِنَّ رَسُولَ اللَّهِ ﷺ

305 அபூஉமாமா பின் சஹ்ல் பின் ஹுனைஃப் (ரலி) அவர்கள் கூறியதாவது:

உமர் (ரலி) அவர்கள் அபூஉபைதா பின் ஜர்ராஹ் (ரலி) அவர்களுக்கு, "உங்கள் சிறுவர்களுக்கு நீச்சலையும், உங்கள் போர் வீரர்களுக்கு அம்பெய்தலையும் கற்றுக்கொடுங்கள்" என்று (அன்றைய 'ஷாம்' நாட்டிற்குக்) கடிதம் எழுதி இருந்தார்கள். (அவ்வாறே அவர்கள் அம்பெய்யும் பயிற்சியில் ஈடுபட்டு) இலக்குகளை நோக்கி வந்துபோய்க் கொண்டிருந்தபோது, எங்கிருந்தோ வந்த அம்பொன்று சிறுவன் ஒருவன் மீது பாய்ந்துவிட்டது. அச்சிறுவனுக்கு மூல வாரிசுகள் யாரும் இருக்கவில்லை. அச்சிறுவன் தன் தாய் மாமன் ஒருவரின் பொறுப்பில்தான் வளர்ந்துவந்தான். எனவே, இது தொடர்பாக அபூஉபைதா பின் அல்ஜர்ராஹ் (ரலி) அவர்கள் (கலீஃபா) உமர் (ரலி) அவர்களுக்குக் கடிதம் எழுதி (விளக்கம் கோரி)னார்கள். அதற்கு உமர் (ரலி) அவர்கள், "யாருக்கு விடுதலை செய்த உரிமையாளர் எவருமில்லையோ, அவருக்கு

243. காண்க: முன்சென்ற ஹதீஸ் எண்கள் - 85, 181 மற்றும் அவற்றின் அடிக்குறிப்புகள்.

كَانَ يَقُولُ اللهُ وَرَسُولُهُ: مَوْلَى مَنْ لَا مَوْلَى لَهُ وَالْخَالُ وَارِثُ مَنْ لَا وَارِثَ لَهُ.

அல்லாஹ்வும் அவனுடைய தூதருமே உரிமையாளர்கள் ஆவர். யாருக்கு வாரிசுகள் எவருமில்லையோ, அவருக்குத் தாய் மாமன்தான் வாரிசாவார்" என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் என (மறுமொழிக் கடிதம்) எழுதினார்கள்.[244]

٣٠٦ حَدَّثَنَا عَبْدُ اللهِ بْنُ يَزِيدَ أَخْبَرَنَا ابْنُ لَهِيعَةَ عَنْ عَمْرِو بْنِ شُعَيْبٍ عَنْ أَبِيهِ عَنْ جَدِّهِ عَنْ عُمَرَ بْنِ الْخَطَّابِ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ: سَمِعْتُ رَسُولَ اللهِ ﷺ يَقُولُ: يَرِثُ الْوَلَاءَ مَنْ يَرِثُ الْمَالَ مِنْ وَالِدٍ أَوْ وَلَدٍ.

306 அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறியதாவது:

தந்தையோ அல்லது பிள்ளையோ அடிமைக்கு வாரிசாகும் உரிமையை அடைந்து கொண்டவரே, அவர் விட்டுச் சென்ற சொத்துக்கும் வாரிசாவார்.

இதை உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.[245]

٣٠٧ حَدَّثَنَا مُحَمَّدُ بْنُ عُبَيْدٍ حَدَّثَنَا الْأَعْمَشُ عَنْ إِبْرَاهِيمَ عَنْ عَابِسِ بْنِ رَبِيعَةَ قَالَ: رَأَيْتُ عُمَرَ رَضِيَ اللهُ عَنْهُ أَتَى الْحَجَرَ، فَقَالَ: أَمَا وَاللهِ إِنِّي لَأَعْلَمُ أَنَّكَ حَجَرٌ لَا تَضُرُّ وَلَا تَنْفَعُ وَلَوْلَا أَنِّي رَأَيْتُ رَسُولَ اللهِ ﷺ قَبَّلَكَ مَا قَبَّلْتُكَ ثُمَّ دَنَا فَقَبَّلَهُ.

307 ஆபிஸ் பின் ரபீஆ (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

உமர் (ரலி) அவர்கள் (கஅபாவின் ஒரு மூலையில் பதிக்கப்பெற்றுள்ள) 'ஹஜருல் அஸ்வத்' கல் அருகில் வந்து, "அல்லாஹ்வின் மீதாணையாக! நீ தீமையோ நன்மையோ செய்ய இயலாத ஒரு கல்தான் என்பதை நான் நன்கறிவேன். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் உன்னை முத்தமிட்டதை நான் பார்த்திராவிட்டால், உன்னை நான் முத்தமிடமாட்டேன்" என்று கூறிவிட்டு ('ஹஜருல் அஸ்வத்' கல்லை) நெருங்கி, அதை முத்தமிட்டதை நான் கண்டேன்.[246]

٣٠٨ حَدَّثَنَا أَبُو سَعِيدٍ حَدَّثَنَا دُجَيْنٌ أَبُو الْغُصْنِ بَصْرِيٌّ قَالَ: قَدِمْتُ الْمَدِينَةَ فَلَقِيتُ أَسْلَمَ مَوْلَى عُمَرَ بْنِ الْخَطَّابِ رَضِيَ اللهُ عَنْهُ فَقُلْتُ حَدِّثْنِي عَنْ عُمَرَ فَقَالَ: لَا أَسْتَطِيعُ أَخَافُ أَنْ أَزِيدَ أَوْ أَنْقُصَ كُنَّا إِذَا قُلْنَا لِعُمَرَ رَضِيَ اللهُ عَنْهُ حَدِّثْنَا عَنْ رَسُولِ

308 துஜைன் அபுல் ஃகுஸ்ன் பஸ்ரீ (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

நான் மதீனாவுக்கு வந்து, உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்களால் விடுதலை செய்யப்பட்ட அவர்களின் அடிமை அஸ்லம் (ரஹ்) அவர்களைச் சந்தித்து, "உமர் (ரலி) அவர்களைப் பற்றி எனக்குக் கூறுங்கள்" என்றேன்

அதற்கு அஸ்லம் (ரஹ்) அவர்கள் கூறினார்கள்:

என்னால் இயலாது. நான் உமர் (ரலி) அவர்களைப் பற்றிக் கூடுதல் குறைவாக ஏதேனும் கூறிவிடுவேனோ என அஞ்சுகிறேன். நாங்கள் உமர் (ரலி) அவர்களிடம், "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களைப் பற்றி எங்களுக்குக் கூறுங்கள்" என்று கேட்டால், உமர் (ரலி) அவர்கள், "நான் (அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களைப் பற்றிக்)

244. காண்க: முன்சென்ற ஹதீஸ் எண் - 184 மற்றும் அதன் அடிக்குறிப்பு

245. பார்க்க: முன்சென்ற ஹதீஸ் எண் - 142 மற்றும் அதன் அடிக்குறிப்பு

246. காண்க: முன்சென்ற ஹதீஸ் - 95.

الله ﷺ قال: أخاف أن أزيد حرفا أو أنقص إن رسول الله ﷺ قال: من كذب علي فهو في النار.

كூடுதலாகவோ குறைவாகவோ ஏதேனும் ஒன்றைக் கூறிவிடுவதை அஞ்சுகிறேன். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், 'என் மீது (நான் சொல்லாத ஒன்றைச் சொன்னதாக) யாரேனும் ஒருவர் பொய்யுரைத்தால், அவர் நரகத்திற்குச் செல்வார்' எனக் கூறினார்கள்" என்பார்கள்.[247]

٣٠٩ حدثنا أبو سعيد حدثنا حماد بن زيد عن عمرو بن دينار مولى آل الزبير عن سالم عن أبيه عن عمر رضي الله عنه قال قال رسول الله ﷺ: من قال في سوق "لا إله إلا الله وحده لا شريك له له الملك وله الحمد بيده الخير يحيي ويميت وهو على كل شيء قدير" كتب الله له بها ألف ألف حسنة، ومحا عنه بها ألف ألف سيئة، وبنى له بيتا في الجنة.

309 அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

ஒருவர் கடைத்தெருவில், "லா இலாஹ இல்லல்லாஹு, வஹ்தஹு, லா ஷரீக்க லஹு, லஹுல் முல்க்கு, வலஹுல் ஹம்து, பியதிஹில் கைரு, யுஹ்யீ வயுமீத்து வஹுவ அலா குல்லி ஷைஇன் கதீர் (அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை. அவன் தனித்தவன். அவனுக்கு இணையாக யாரும் இல்லை. ஆட்சியதிகாரம் அவனுக்கே உரியது. புகழனைத்தும் அவனுக்கே உரியன. நன்மைகள் அவன் கையிலேயே உள்ளன. அவனே உயிர்ப்பிக்கிறான். அவனே இறக்கச் செய்கிறான். அவன் அனைத்தின் மீதும் ஆற்றல் உள்ளவன் ஆவான்)" என்று கூறினால், அவருக்கு அல்லாஹ் இதற்காக ஓர் இலட்சம் நன்மைகளைப் பதிவு செய்கிறான்; ஓர் இலட்சம் பாவங்களை அவரைவிட்டு அழிக்கிறான் மேலும் அவருக்காகச் சொர்க்கத்தில் ஒரு மாளிகையை எழுப்புகிறான்.

இதை உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.[248]

٣١٠ حدثنا أبو سعيد حدثنا عكرمة بن عمار حدثنا أبو زميل حدثني ابن عباس حدثني عمر بن الخطاب رضي الله عنه قال: لما كان يوم خيبر

310 உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள் கூறியதாவது:

---

247. இதன் அறிவிப்பாளர்தொடரில் வரும் [illegible] பலவீனமான அறிவிப்பாளர் ஆவார். எனவே இதன் அறிவிப்பாளர்தொடர் பலவீனமானதாகும். எனினும், இதில் கூறப்பட்டுள்ள செய்தி [illegible] புகாரி [illegible] எண்கள் - 106, 110, 1291 முஸ்லிம் முன்னுரை 2, 3, 4, 5 [illegible] பதிவாகியுள்ளது.

248. [illegible]

[illegible] திர்மிதீ 3350, 3351, இப்னுமாஜா [illegible] [illegible]

'கைபர்' போர் நாளன்று நபித்தோழர்களுள் சிலர், "இன்ன மனிதர் உயிர்த் தியாகி (ஷஹீத்) ஆகிவிட்டார், இன்ன மனிதர் உயிர்த் தியாகி (ஷஹீத்) ஆகிவிட்டார்" என்று கூறிக் கொண்டே வந்து, இறுதியாக ஒருவரைக் கடந்து சென்றபோது, "இன்ன மனிதரும் உயிர்த் தியாகி (ஷஹீத்) ஆகிவிட்டார்" என்று கூறினர்.

அப்போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "இல்லை. (போர்ச் செல்வங்கள் பங்கிடப்படும் முன் அவற்றிலிருந்து) ஆடை ஒன்றை அவர் கையாடல் செய்த காரணத்தால், அவர் நரகத்துக்கு இழுத்துச் செல்லப் படுவதை நான் கண்டேன்" என்று கூறிவிட்டு, "உமரே! நீங்கள் புறப்பட்டுச் சென்று, 'இறைநம்பிக்கையாளர்கள்தாம் சொர்க்கத்தில் நுழைவார்கள்' என்று மக்களிடையே அறிவியுங்கள்!" என்றார்கள். அவ்வாறே நானும் சென்று, "இறைநம்பிக்கையாளர்கள்தாம் சொர்க்கத்தில் நுழைவார்கள்" என்று (மக்களிடையே) அறிவித்தேன்.[249]

قِيلَ نَفَرٌ مِنْ أَصْحَابِ رَسُولِ اللَّهِ ﷺ يَقُولُونَ: فُلَانٌ شَهِيدٌ وَفُلَانٌ شَهِيدٌ حَتَّى مَرُّوا بِرَجُلٍ، فَقَالُوا: فُلَانٌ شَهِيدٌ، فَقَالَ رَسُولُ اللَّهِ ﷺ: كَلَّا إِنِّي رَأَيْتُهُ يُجَرُّ إِلَى النَّارِ فِي عَبَاءَةٍ غَلَّهَا، اخْرُجْ يَا عُمَرُ فَنَادِ فِي النَّاسِ إِنَّهُ لَا يَدْخُلُ الْجَنَّةَ إِلَّا الْمُؤْمِنُونَ فَخَرَجْتُ فَنَادَيْتُ إِنَّهُ لَا يَدْخُلُ الْجَنَّةَ إِلَّا الْمُؤْمِنُونَ.

٣١١ حَدَّثَنَا أَبُو سَعِيدٍ حَدَّثَنَا إِسْرَائِيلُ حَدَّثَنَا سَعِيدُ بْنُ مَسْرُوقٍ عَنْ سَعْدِ بْنِ عُبَيْدَةَ عَنِ ابْنِ عُمَرَ رَضِيَ اللَّهُ عَنْهُ عَنْ عُمَرَ أَنَّهُ قَالَ: لَا وَأَبِي فَقَالَ رَسُولُ اللَّهِ ﷺ: مَهْ إِنَّهُ مَنْ حَلَفَ بِشَيْءٍ دُونَ اللَّهِ فَقَدْ أَشْرَكَ.

٣١٢ حَدَّثَنَا حَمَّادٌ الْخَيَّاطُ حَدَّثَنَا عَبْدُ اللَّهِ عَنْ نَافِعٍ أَنَّ عُمَرَ رَضِيَ اللَّهُ عَنْهُ زَادَ فِي الْمَسْجِدِ مِنَ الْأُسْطُوَانَةِ إِلَى الْمَقْصُورَةِ وَزَادَ عُثْمَانُ رَضِيَ اللَّهُ عَنْهُ وَقَالَ عُمَرُ رَضِيَ اللَّهُ عَنْهُ: لَوْلَا أَنِّي سَمِعْتُ رَسُولَ اللَّهِ ﷺ يَقُولُ: نَبْغِي نَزِيدُ فِي مَسْجِدِنَا مَا زِدْتُ فِيهِ.

311 இப்னு உமர் (ரலி) அவர்கள் கூறியதாவது:

உமர் (ரலி) அவர்கள் (தம் பேச்சினிடையே), "இல்லை! என் தந்தை மீது சத்தியமாக!" என்று கூறினார்கள். இதைச் செவியுற்ற அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "நிறுத்துக! யார் அல்லாஹ்வை விடுத்து மற்றொன்றின் பெயரால் சத்தியம் செய்கிறாரோ, அவர் (இறைவனுக்கு) இணை கற்பித்துவிட்டார்" என்று கூறினார்கள்.[250]

312 நாஃபிஉ (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

(கலீஃபா) உமர் (ரலி) அவர்கள் (மஸ்ஜிதுந் நபவீ) பள்ளிவாசலை 'அல்உஸ்துவானா' எனும் தூணிலிருந்து 'அல்மக்ஸூரா' எனும் பகுதிவரை விரிவுபடுத்தினார்கள். உஸ்மான் (ரலி) அவர்களும் (தமது ஆட்சிக் காலத்தில்) விரிவுபடுத்தினார்கள். "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், 'நமது பள்ளிவாசலை விரிவுபடுத்த நாம் விரும்புகிறோம்' என்று கூறியதை நான் செவியுற்றிருக்காவிட்டால், இதை நான் விரிவுபடுத்தியிருக்க மாட்டேன்" என்று உமர் (ரலி) கூறினார்கள்.[251]

249. பார்க்க: முஸ்லிம் ஹதீஸ் எண் - 198 மற்றும் அதன் அடிக்குறிப்பு.

250. காண்க: முஸ்லிம் ஹதீஸ் எண்கள் - 107, 111, 208, 233, 275 மற்றும் அடிக்குறிப்புகள்.

251. [illegible]

313 இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறியதாவது:

உமர் (ரலி) அவர்கள், "வல்லமையும் மாண்பும் மிக்க அல்லாஹ், முஹம்மத் (ஸல்) அவர்களைச் சத்திய (மார்க்க)த்துடன் அனுப்பி வைத்தான். அவர்களுக்கு (குர்ஆன் எனும்) வேதத்தையும் இறக்கியருளினான். அவர்களுக்கு அருளப்பட்ட(வேதத்)தில் (திருமணம் செய்தவர் விபசாரம் செய்தால், அவரைக்) கல்லால் எறிந்து கொல்லவேண்டும் என்பது பற்றிய வசனம் இருந்தது. அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் (மணமுடித்தவர் விபசாரம் புரிந்தால், அவருக்குக்) கல்லெறி தண்டனை நிறைவேற்றியுள்ளார்கள். அவர்களுக்குப் பிறகு (நபித்தோழர்களாகிய) நாங்களும் அந்தத் தண்டனையை நிறைவேற்றியுள்ளோம். (கல்லெறி தண்டனை பற்றிய அந்த வசனத்தை) நாங்கள் (குர்ஆனில்) ஓதியும் வந்தோம்" என்று கூறினார்கள்.

பிறகு, "உங்கள் தந்தையரைப் புறக்கணிக்காதீர்கள் நிச்சயமாக, அது நன்றி கெட்ட செயலாகும். மேலும், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், 'மர்யமின் மகன் ஈசா (அலை) அவர்கள் வரம்பு மீறிப் புகழப்பட்டது போல், என்னையும் வரம்பு மீறிப் புகழாதீர்கள். நான் (அல்லாஹ்வின்) அடிமைதான். எனவே, அவனுடைய அடிமை, அவனுடைய தூதர் என்று கூறுங்கள்'" என்றார்கள்.

மஃமர் (ரஹ்) அவர்கள் இதை அறிவிக்கையில் சில நேரங்களில், "கிறிஸ்தவர்கள் மர்யமின் மகன் ஈசா (அலை) அவர்களை வரம்பு மீறிப் புகழ்ந்ததைப் போன்று (என்னைப் புகழாதீர்கள்)" என்று அறிவித்தார்கள்.[282]

٣١٣ حدثنا عبد الرزاق حدثنا معمر عن الزهري
عن عبيد الله بن عبد الله بن عتبة بن مسعود عن
ابن عباس عن عمر رضي الله عنه أنه قال: إن الله
عز وجل بعث محمدا ﷺ بالحق وأنزل معه
الكتاب فكان مما أنزل عليه آية الرجم، فرجم
رسول الله ﷺ ورجمنا بعده، ثم قال: قد كنا
نقرأ ولا ترغبوا عن آبائكم فإنه كفر بكم أو إن
كفرا بكم أن ترغبوا عن آبائكم ثم إن رسول
الله ﷺ قال: لا تطروني كما أطري ابن مريم
وإنما أنا عبد فقولوا عبده ورسوله. وربما قال
معمر كما أطرت النصارى ابن مريم.

314 இப்னு உமர் (ரலி) அவர்கள் கூறியதாவது:

நான் (என் தந்தை) உமர் (ரலி) அவர்களிடம், "மக்கள் ஒன்றைப் பற்றிப் பேசிக்கொண்டதை நான் கேள்விப்பட்டேன். அதைத் தங்களிடம் நான் தெரிவிப்பேன் என நான் சத்தியம் செய்துவிட்டேன் தங்களுக்குப் பிறகு தாங்கள் யாரையும் ஆட்சித் தலைவராக அமர்த்தமாட்டீர்கள் என மக்கள் பேசிக்கொண்டனர்" என்றேன்.

உமர் (ரலி) அவர்கள் சிறிது நேரம் தமது தலையைத் தாழ்த்திக்கொண்டிருந்தார்கள். பிறகு தலையை உயர்த்தி, "வல்லமையும் மாண்பும் மிக்க அல்லாஹ் நிச்சயமாகத் தனது மார்க்கத்தைப் பாதுகாப்பான். நான் எனக்குப்பின் ஆட்சித் தலைவர் ஒருவரை அமர்த்தாவிட்டால், (அது தவறன்று. ஏனெனில்,) அல்லாஹ்வின் தூதர் (ஸல்)

٣١٤ حدثنا عبد الرزاق حدثنا معمر عن الزهري
عن سالم عن ابن عمر رضي الله عنه أنه قال
لعمر رضي الله عنه: إني سمعت الناس يقولون
مقالة فآليت أن أقولها لكم زعموا أنك غير
مستخلف فوضع رأسه ساعة ثم رفعه فقال: إن
الله عز وجل يحفظ دينه وإني إن لا أستخلف
فإن رسول الله ﷺ لم يستخلف وإن أستخلف

282. பார்க்க: முன்சென்ற ஹதீஸ் எண்கள் - 149, 150 மற்றும் அவற்றின் அடிக்குறிப்புகள்.

فَإِنَّ أَبَا بَكْرٍ رَضِيَ اللَّهُ عَنْهُ قَدِ اسْتَخْلَفَ قَالَ فَوَاللَّهِ مَا هُوَ إِلَّا أَنْ ذَكَرَ رَسُولَ اللَّهِ ﷺ وَأَبَا بَكْرٍ فَعَلِمْتُ أَنَّهُ لَمْ يَكُنْ يَعْدِلُ بِرَسُولِ اللَّهِ ﷺ أَحَدًا وَأَنَّهُ غَيْرُ مُسْتَخْلِفٍ.

அவர்கள் தமக்குப் பிறகு யாரையும் ஆட்சித் தலைவராக அமர்த்தவில்லை. நான் எனக்குப் பின் யாரையேனும் ஆட்சித் தலைவராக அமர்த்தினால், (அதுவும் தவறாகாது ஏனெனில்,) அபூபக்ர் (ரலி) அவர்கள் தமக்குப்பின் (என்னை) ஆட்சித் தலைவராக அமர்த்தினார்கள்" என்று கூறினார்கள்.

அல்லாஹ்வின் மீதாணையாக! உமர் (ரலி) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களையும் அபூபக்ர் (ரலி) அவர்களையும் நினைவுகூர்ந்தபோது, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுக்கு நிகராக யாரையும் அவர்கள் ஆக்க மாட்டார்கள்; தமக்குப்பின் யாரையும் ஆட்சித் தலைவராக அமர்த்தமாட்டார்கள் என நான் அறிந்துகொண்டேன்.[263]

٣١٥ حَدَّثَنَا عَبْدُ الرَّزَّاقِ حَدَّثَنَا مَعْمَرٌ عَنِ الزُّهْرِيِّ عَنْ مَالِكِ بْنِ أَوْسِ بْنِ الْحَدَثَانِ قَالَ: أَرْسَلَ إِلَيَّ عُمَرُ رَضِيَ اللَّهُ عَنْهُ فَذَكَرَ الْحَدِيثَ، فَقُلْتُ لَكُمَا إِنَّ رَسُولَ اللَّهِ ﷺ قَالَ: لَا نُورَثُ مَا تَرَكْنَا صَدَقَةٌ.

315 இப்னு ஷிஹாப் அஸ்ஸுஹ்ரீ (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

மாலிக் பின் அவ்ஸ் பின் அல்ஹதஸான் (ரஹ்) அவர்கள், "(கலீஃபா) உமர் (ரலி) அவர்கள் என்னிடம் ஆளனுப்பி, என்னை வரச் சொன்னார்கள்" என்று கூறிவிட்டுத் தொடர்ந்து, (ஃபாத்திமா (ரலி) அவர்களும் அப்பாஸ் (ரலி) அவர்களும் நபி (ஸல்) அவர்களிடமிருந்து தமக்குச் சேரவேண்டிய சொத்துரிமையைக் கேட்டுவந்ததைப் பற்றிய) ஹதீஸை அறிவித்தார்கள். "அதில், உமர் (ரலி) அவர்கள் அவ்விருவரிடமும், '(இறைத்தூதர்களான) எங்களுக்கு யாரும் (சொத்தில்) வாரிசாக முடியாது. நாங்கள் விட்டுச் செல்பவையெல்லாம் தர்மம் செய்யப்பட வேண்டியவை ஆகும்' என அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் என உங்களிடம் நான் (முன்பே) சொல்லியிருக்கிறேன்" என்றார்கள் எனும் குறிப்பும் இடம்பெற்றுள்ளது.[264]

٣١٦ حَدَّثَنَا عَبْدُ الرَّزَّاقِ حَدَّثَنَا مَعْمَرٌ عَنِ الزُّهْرِيِّ عَنِ ابْنِ الْمُسَيَّبِ قَالَ: لَمَّا مَاتَ أَبُو بَكْرٍ رَضِيَ اللَّهُ عَنْهُ بُكِيَ عَلَيْهِ فَقَالَ عُمَرُ رَضِيَ اللَّهُ عَنْهُ: إِنَّ رَسُولَ اللَّهِ ﷺ قَالَ: إِنَّ الْمَيِّتَ يُعَذَّبُ بِبُكَاءِ الْحَيِّ.

316 சயீத் பின் அல்முசய்யப் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

அபூபக்ர் (ரலி) அவர்கள் இறந்தபோது, அவர்களுக்காக (மக்கள்) அழுதனர். அப்போது உமர் (ரலி) அவர்கள், "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், 'இறந்தவருக்காக (அவருடைய) குடும்பத்தார் அழுவதால், அவர் வேதனை செய்யப்படுகிறார்' என்று கூறினார்கள்" என்றார்கள்.[265]

٣١٧ حَدَّثَنَا إِبْرَاهِيمُ بْنُ خَالِدٍ حَدَّثَنَا رَبَاحٌ عَنْ مَعْمَرٍ عَنِ الزُّهْرِيِّ عَنْ عُبَيْدِ اللَّهِ بْنِ عَبْدِ اللَّهِ بْنِ عُتْبَةَ عَنْ أَبِي هُرَيْرَةَ رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ: لَمَّا تُوُفِّيَ

317 அபூஹுரைரா (ரலி) அவர்கள் கூறியதாவது:

---

263. காண்க: முன்சென்ற ஹதீஸ் எண்கள் - 85, 181, 282, 304, 314 மற்றும் அவற்றின் அடிக்குறிப்புகள்.

264. காண்க: முன்சென்ற ஹதீஸ் எண்கள் - 9, 14, 25, 52, 55, 57, 74, 75, 166, 167, 318, 319 பின்வரும் ஹதீஸ்கள் - 330, 399, 1318, 1332, 1488, 1570. இதுபற்றி விரிவாக அறிய காண்க: முஸ்லிம் ஹதீஸ் எண்கள் 3614-3617, 3619.

265. பார்க்க: முன்சென்ற ஹதீஸ் எண்கள் - 175, 298 மற்றும் அவற்றின் அடிக்குறிப்புகள்.

رَسُولُ اللَّهِ ﷺ وَكَفَرَ مَنْ كَفَرَ قَالَ فَقَالَ عُمَرُ بْنُ
الْخَطَّابِ رَضِيَ اللَّهُ عَنْهُ: يَا أَبَا بَكْرٍ كَيْفَ تُقَاتِلُ
النَّاسَ وَقَدْ قَالَ رَسُولُ اللَّهِ ﷺ أُمِرْتُ أَنْ أُقَاتِلَ
النَّاسَ حَتَّى يَقُولُوا لَا إِلَهَ إِلَّا اللَّهُ فَمَنْ قَالَ لَا إِلَهَ
إِلَّا اللَّهُ فَقَدْ عَصَمَ مِنِّي مَالَهُ وَنَفْسَهُ وَحِسَابُهُ عَلَى
اللَّهِ عَزَّ وَجَلَّ؟ قَالَ أَبُو بَكْرٍ رَضِيَ اللَّهُ عَنْهُ: لَأُقَاتِلَنَّ
مَنْ فَرَّقَ بَيْنَ الصَّلَاةِ وَالزَّكَاةِ إِنَّ الزَّكَاةَ حَقُّ الْمَالِ
وَاللَّهِ لَوْ مَنَعُونِي عَنَاقًا كَانُوا يُؤَدُّونَهَا إِلَى رَسُولِ
اللَّهِ ﷺ لَقَاتَلْتُهُمْ عَلَى مَنْعِهَا، فَقَالَ عُمَرُ رَضِيَ
اللَّهُ عَنْهُ وَاللَّهِ مَا هُوَ إِلَّا أَنْ رَأَيْتُ أَنَّ اللَّهَ قَدْ شَرَحَ
صَدْرَ أَبِي بَكْرٍ رَضِيَ اللَّهُ عَنْهُ بِالْقِتَالِ فَعَرَفْتُ
أَنَّهُ الْحَقُّ.

٣١٨ حَدَّثَنَا سُفْيَانُ عَنْ عَمْرٍو عَنِ الزُّهْرِيِّ عَنْ
مَالِكِ بْنِ أَوْسٍ عَنْ عُمَرَ رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ قَالَ
رَسُولُ اللَّهِ ﷺ: إِنَّا لَا نُورَثُ مَا تَرَكْنَا صَدَقَةٌ.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் இறந்(து அபூபக்ர் (ரலி) அவர்கள் ஆட்சித் தலைவராக வந்)தபோது, சிலர் (ஸகாத் வழங்க மறுத்ததன் மூலம்) இறைமறுப்பாளர்களாய் மாறினர். (அவர்கள் மீது போர் தொடுக்கப்போவதாக அபூபக்ர் அறிவித்தார்கள்) அப்போது உமர் (ரலி) அவர்கள் (கலீஃபா அபூபக்ர் (ரலி) அவர்களிடம்), "அபூபக்ர் அவர்களே! இந்த மக்களுடன் நீங்கள் எவ்வாறு போரிட முடியும்? அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், 'அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவனில்லை என்று கூறாத வரை, (இந்த) மக்களுடன் போர் புரியும்படி நான் கட்டளையிடப்பட்டுள்ளேன். அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை என்று சொன்னவர், தகுந்த காரணம் இருந்தால் தவிர, தமது செல்வத்துக்கும் உயிருக்கும் என்னிடம் பாதுகாப்புப் பெறுவார். அவரது (உள்ளத்தில் இறைமறுப்பை வைத்திருந்தால், அது குறித்த) விசாரணை, வல்லமையும் மாண்பும் மிக்க அல்லாஹ்விடமே உள்ளது' என்று கூறியுள்ளார்களே?" என்று கேட்டார்கள்.

அதற்கு அபூபக்ர் (ரலி) அவர்கள், "திண்ணமாக! தொழுகையையும் ஸகாத்தையும் வேறுபடுத்திப்பார்ப்பவர்களுடன் நான் போர் புரிந்தே தீருவேன் ஏனெனில், ஸகாத் என்பது பொருளாதாரக் கடமையாகும். அல்லாஹ்வின் மீதாணையாக! அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் செலுத்திவந்த ஒட்டகக் குட்டியை இவர்கள் இப்போது என்னிடம் செலுத்த மறுத்தாலும், அதை மறுத்ததற்காக அவர்களுடன் போர் புரிவேன்" என்று சொன்னார்கள்

இதுபற்றி உமர் (ரலி) அவர்கள், "அல்லாஹ்வின் மீதாணையாக! (ஸகாத் வழங்க மறுத்தவர்கள் மீது) போர் தொடுக்கும் (முடிவை எடுக்கும்)படி அபூபக்ர் (ரலி) அவர்களின் நெஞ்சத்தை அல்லாஹ் விரிவாக்கிவிட்டான் என்பதைத் தவிர, வேறெதையும் அப்போது நான் காணவில்லை. அதுவே சரி(யான முடிவு) என்பதையும் நான் அறிந்து கொண்டேன்" என்று சொன்னார்கள்[256]

318 அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

(இறைத்தூதர்களான) எங்களுக்கு யாரும் (சொத்தில்) வாரிசாக முடியாது. நாங்கள் விட்டுச் செல்பவையெல்லாம் தர்மம் செய்யப்படவேண்டியவை ஆகும்.

இதை உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்[257]

256. பார்க்க: முன்சென்ற ஹதீஸ் எண்கள் - 64, 112, 232 மற்றும் அவற்றின் அடிக்குறிப்புகள்.

257. பார்க்க: முன்சென்ற ஹதீஸ் எண்கள் - 74, 167, 315 மற்றும் அவற்றின் அடிக்குறிப்புகள்.

319 இப்னு ஷிஹாப் அஸ்ஸுஹ்ரீ (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

மாலிக் பின் அவ்ஸ் பின் அல்ஹதஸான் (ரலி) அவர்கள், "(கலீஃபா) உமர் (ரலி) அவர்கள் என்னை அழைத்து வரும்படி என்னிடம் ஆளனுப்பினார்கள்" என்று கூறிவிட்டு, (உமர் (ரலி) அவர்கள் தொடர்பான நீளமான) ஹதீஸை அறிவித்தார்கள். அப்போது, பின்வரும் தகவலையும் குறிப்பிட்டார்கள்:

பனூ நளீர் (யூதக்) குலத்தாரின் செல்வங்கள், அல்லாஹ் தன் தூதருக்கு அளித்தவை ('ஃபைஉ'ச் சொத்துகள்) ஆகும். இ(வற்றை அடைவ)தற்காக, முஸ்லிம்கள் குதிரைகளையோ ஒட்டகங்களையோ ஓட்டிப் (போருக்குப்) போகவில்லை. அவை அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுக்கு மட்டுமே உரியவையாக இருந்தன. அவற்றிலிருந்துதான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் தம் வீட்டாருக்கு ஆண்டுச் செலவுக்குக் கொடுத்து வந்தார்கள். மீதத்தை அல்லாஹ்வின் பாதையில் (அறப் போருக்காக) ஆயுதப் பொருட்கள் வாங்கவும் குதிரைகளுக்காகவும் ஆயுதங்களுக்காகவும் செலவிட்டுவந்தார்கள்.[258]

…يانُ عَنْ عَمْرٍو عَنِ الزُّهْرِيِّ عَنْ
…الَ: أَرْسَلَ إِلَيَّ عُمَرُ رَضِيَ اللَّهُ عَنْهُ
…وَقَالَ إِنَّ أَمْوَالَ بَنِي النَّضِيرِ كَانَتْ
…لَى رَسُولِهِ مِمَّا لَمْ يُوجِفْ عَلَيْهِ
…وَلَا رِكَابٍ فَكَانَ يُنْفِقُ عَلَى أَهْلِهِ
…مَا بَقِيَ جَعَلَهُ فِي الْكُرَاعِ وَالسِّلَاحِ
…لَّهِ عَزَّ وَجَلَّ.

320 நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

சூரியன் மறைந்து (அதாவது) பகல்போய் இரவு வந்துவிட்டால், நோன்பைத் துறந்துவிட வேண்டும்.

இதை உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.[259]

…يانُ عَنْ هِشَامٍ عَنْ أَبِيهِ عَنْ
…رَضِيَ اللَّهُ عَنْهُ عَنْ أَبِيهِ أَنَّ النَّبِيَّ
…قْبَلَ اللَّيْلُ وَأَدْبَرَ النَّهَارُ وَغَرَبَتِ
…فْطَرَ الصَّائِمُ.

321 இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறியதாவது:

நான் உமர் (ரலி) அவர்களிடம் ஒரு தகவலைக் கேட்க வேண்டும் எ… னேன். ஆனால், அதற்கான வாய்ப்பு கிடைக்கவில்லை. (அதற்காக) இரண்… காத்திருந்தேன்.

(ஒரு முறை நாங்கள் ஹஜ்ஜுக்குச் சென்று திரும்பினோம்.) நாங்கள் 'மர்(… எனும் இடத்தில் இருந்தபோது, உமர் (ரலி) அவர்கள் இயற்கைக் கடனை… வதற்காக ஒதுங்கினார்கள். அவர்கள் தமது இயற்கைக் கடனை முடி… பியபோது, (அவர்கள் 'உளூ' செய்வதற்காக) நான் அவர்களுக்குத் தண்… சென்றேன். அப்போது நான் அவர்களிடம், "இறைநம்பிக்கையாளர்களி…

…يانُ عَنْ يَحْيَى يَعْنِي ابْنَ سَعِيدٍ
…نٍ عَنِ ابْنِ عَبَّاسٍ قَالَ: أَرَدْتُ أَنْ
…يَ اللَّهُ عَنْهُ فَمَا رَأَيْتُ مَوْضِعًا
…فَلَمَّا كُنَّا بِمَرِّ الظَّهْرَانِ وَذَهَبَ
…خَلَاءَ وَقَدْ قَضَى حَاجَتَهُ فَتَبِعْتُ
…الْمَاءِ قُلْتُ يَا أَمِيرَ الْمُؤْمِنِينَ مَنْ

258. காண்க: முன்சென்ற ஹதீஸ் எண் - 315 மற்றும் அதன் அடிக்குறிப்பு.

259. பார்க்க: முன்சென்ற ஹதீஸ் எண்கள் - 187, 225 மற்றும் அவற்றின் அடிக்குறிப்புகள்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுக்கு எதிராகக் கூடிப் பேசிச் செயல்பட்ட மனைவியர் இருவர் யார் யார்?" என்று கேட்டேன். அதற்கு உமர் (ரலி) அவர்கள், "ஆயிஷா (ரலி) அவர்களும் ஹஃப்ஸாவும்தான் (அந்த இருவரும்)" என்று விடையளித்தார்கள்.[260]

المرأتان اللتان تظاهرتا على رسول الله ﷺ قال عائشة وحفصة رضي الله عنهما.

322 அபுல் அஜ்ஃபாஉ (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

(கலீஃபா) உமர் (ரலி) அவர்கள் (உரையாற்றுகையில்), பின்வருமாறு கூறியதை நான் கேட்டேன்:

பெண்களுக்கு வழங்கும் மணக்கொடை ('மஹ்ர்')களில் (அளவு கடந்து கொடுப்பதன் மூலம்) வரம்பு மீறாதீர்கள். அது, இவ்வுலகில் மதிப்புமிக்க செயலாகவோ, மறுமையில் இறையச்சத்திற்குரிய செயலாகவோ இருக்குமானால், அவ்வாறு வழங்குவதற்கு உங்களையெல்லாம்விட மிகத் தகுதி வாய்ந்தவர், நபி (ஸல்) அவர்கள்தாம். (ஆனால்) நபி (ஸல்) அவர்கள் தம் மனைவியருள் எவருக்கும் பன்னிரண்டு ஊக்கியாக்களைவிடக் கூடுதலாக மணக்கொடை ('மஹ்ர்') வழங்கவில்லை. அவர்களுடைய புதல்வியருள் எவருக்கும் பன்னிரண்டு ஊக்கியாக்களைவிடக் கூடுதலாக மணக்கொடை பெறவுமில்லை.

٣٢٢ حدثنا سفيان عن أيوب عن ابن سيرين سمعه من أبي العجفاء سمعت عمر رضي الله عنه يقول: لا تغلوا صدق النساء فإنها لو كانت مكرمة في الدنيا أو تقوى في الآخرة لكان أولاكم بها النبي ﷺ ما أنكح شيئا من بناته ولا نسائه فوق اثنتي عشرة أوقية وأخرى تقولونها في مغازيكم قتل فلان شهيدا مات فلان شهيدا ولعله أن يكون قد أوقر عجز دابته أو دف راحلته ذهبا وفضة يبتغي التجارة فلا تقولوا ذاكم ولكن قولوا كما قال محمد ﷺ: من قتل في سبيل الله فهو في الجنة.

நீங்கள் உங்கள் அறப்போர்களில், இறப்போரைப் பற்றிக் கூறுகையில், 'குத்தில ஃபுலானுன் ஷஹீதன்' (இன்ன மனிதர் ஷஹீதாகக் கொல்லப்பட்டுவிட்டார்), 'மாத்த ஃபுலானுன் ஷஹீதன்' (இன்ன மனிதர் ஷஹீதாக இறந்துவிட்டார்) எனும் சொற்களைப் பயன்படுத்துகிறீர்கள். அவர் தங்கம் அல்லது வெள்ளியைத் தன் வாகனப் பிராணியின் முதுகில் அல்லது சேணத்தில் ஏற்றிக்கொண்டு, வணிக நோக்கத்துடன் செல்லும்போது கொல்லப்பட்டிருக்கலாம். எனவே, இவ்வாறு கூறாதீர்கள். மாறாக, முஹம்மத் (ஸல்) அவர்கள் கூறியதைப் போன்று, "அல்லாஹ்வின் பாதையில் கொல்லப்பட்டவர் சொர்க்கத்தில் இருப்பார்" என்று கூறுங்கள்.[261]

323 மஅதான் பின் அபீதல்ஹா அல்யஅமரீ (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

(கலீஃபா) உமர் (ரலி) அவர்கள் (மக்களிடையே) நின்று உரையாற்றினார்கள். அப்போது அவர்கள் அல்லாஹ்வைப் போற்றிப் புகழ்ந்துவிட்டு, நபி (ஸல்) அவர்களையும் அபூபக்ர் (ரலி) அவர்களையும் நினைவு கூர்ந்தார்கள். மேலும், அவர்கள் கூறினார்கள்:

٣٢٣ حدثنا محمد بن جعفر حدثنا سعيد بن أبي عروبة أملاه علي عن قتادة عن سالم بن أبي الجعد الغطفاني عن معدان بن أبي طلحة اليعمري أن عمر رضي الله عنه قام خطيبا فحمد الله وأثنى عليه وذكر نبي الله ﷺ وأبا بكر رضي الله عنه ثم قال: إني رأيت رؤيا كأن ديكا نقرني

---

260. இத்தொடரைப் பற்றி விவரம் அறிய காண்க: முன்சென்ற ஹதீஸ் எண் - 217.

261. காண்க: முன்சென்ற ஹதீஸ் எண் - 272 மற்றும் அதன் அடிக்குறிப்பு

نَقْرَتَيْنِ وَلاَ أُرَى ذَلِكَ إِلاَّ لِحُضُورِ أَجَلِي وَإِنَّ نَاسًا يَأْمُرُونَنِي أَنْ أَسْتَخْلِفَ وَإِنَّ اللَّهَ عَزَّ وَجَلَّ لَمْ يَكُنْ لِيُضَيِّعَ خِلاَفَتَهُ وَدِينَهُ وَلاَ الَّذِي بَعَثَ بِهِ نَبِيَّهُ ﷺ فَإِنْ عَجِلَ بِي أَمْرٌ فَالْخِلاَفَةُ شُورَى فِي هَؤُلاَءِ الرَّهْطِ السِّتَّةِ الَّذِينَ تُوُفِّيَ رَسُولُ اللَّهِ ﷺ وَهُوَ عَنْهُمْ رَاضٍ فَأَيُّهُمْ بَايَعْتُمْ لَهُ فَاسْمَعُوا لَهُ وَأَطِيعُوا وَقَدْ عَرَفْتُ أَنَّ رِجَالاً سَيَطْعُنُونَ فِي هَذَا الأَمْرِ وَإِنِّي قَاتَلْتُهُمْ بِيَدِي هَذِهِ عَلَى الإِسْلاَمِ فَإِنْ فَعَلُوا فَأُولَئِكَ أَعْدَاءُ اللَّهِ الْكَفَرَةُ الضُّلاَّلُ وَإِنِّي وَاللَّهِ مَا أَدَعُ بَعْدِي شَيْئًا هُوَ أَهَمُّ إِلَيَّ مِنْ أَمْرِ الْكَلاَلَةِ، وَلَقَدْ سَأَلْتُ نَبِيَّ اللَّهِ ﷺ عَنْهَا فَمَا أَغْلَظَ لِي فِي شَيْءٍ قَطُّ مَا أَغْلَظَ لِي فِيهَا حَتَّى طَعَنَ بِيَدِهِ أَوْ بِإِصْبَعِهِ فِي صَدْرِي أَوْ جَنْبِي، وَقَالَ: يَا عُمَرُ تَكْفِيكَ الآيَةُ الَّتِي نَزَلَتْ فِي الصَّيْفِ الَّتِي فِي آخِرِ سُورَةِ النِّسَاءِ وَإِنِّي إِنْ أَعِشْ أَقْضِ فِيهَا قَضِيَّةً لاَ يَخْتَلِفُ فِيهَا أَحَدٌ يَقْرَأُ الْقُرْآنَ أَوْ لاَ يَقْرَأُ الْقُرْآنَ

நான் (இன்று) ஒரு சேவல் என்னை இரண்டு முறை கொத்துவதைப் போன்று கனவு கண்டேன். இதற்கு, என் ஆயுட்காலம் முடிந்துவிட்டது என்றே நான் (விளக்கம்) கண்டேன்.

மக்களுள் சிலர், (எனக்குப்பின்) ஆட்சித் தலைவர் (கலீஃபா) ஒருவரை அமர்த்துமாறு என்னை வலியுறுத்துகின்றனர். நிச்சயமாக வல்லமையும் மாண்பும் மிக்க அல்லாஹ் தன் (அடியார்களின்) ஆட்சித் தலைமையையும் தனது மார்க்கத்தையும் தன் தூதரை அனுப்பி வைத்ததையும் பாழாக்கிவிடமாட்டான். எனக்குத் திடீரென ஏதேனும் நேர்ந்துவிட்டால், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் யாரைக் குறித்து மனநிறைவுகொண்ட நிலையில் இறந்தார்களோ, அத்தகைய ஆறுபேர், ஆட்சித் தலைமை குறித்துத் தம்மிடையே கலந்தாலோசித்து முடிவு செய்வார்கள். அவர்களுள் யாருக்கு நீங்கள் வாக்குறுதி அளித்தாலும், அவரது சொல்லை ஏற்று அவருக்குக் கீழ்ப்படியுங்கள்.

சிலர், இது பற்றி என்னைக் குறை கூறுவார்கள் என்பது எனக்குத் தெரியும். நான் (சில நேரங்களில்) அவர்களை இஸ்லாத்திற்காக எனது இந்தக் கையால் அடித்திருக்கிறேன். இவ்வாறு (குறை கூறுதல்) செய்வதை மார்க்கத்தின் ஏற்புடைய ஒரு செயலாக யாரேனும் நினைத்தால், அத்தகையோர்தாம் இறைவனின் விரோதிகளும் பாதை மாறிய இறைமறுப்பாளர்களும் ஆவர்.

அல்லாஹ்வின் மீதாணையாக! நான் எனக்குப் பின்னால், 'கலாலா'வைவிட முக்கியமான ஒன்றை விட்டுச் செல்லவில்லை. இந்தக் 'கலாலா' குறித்து, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் நான் வினவியதைப் போன்று, வேறு எது குறித்தும் நான் வினவியதில்லை. அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களும் இது தொடர்பாக என்னிடம் கடிந்து கொண்டதைப் போன்று, வேறு எதற்காகவும் அவர்கள் என்னிடம் கடிந்து கொண்டதில்லை. எந்த அளவிற்கெனில், அவர்கள் தமது கை அல்லது விரலால் என் நெஞ்சில் அல்லது விலாப் பகுதியில் குத்தினார்கள். "உமரே! 'அந்நிசா' அத்தியாயத்தின் இறுதியிலுள்ள கோடைக்கால வசனம் (4:176) உமக்குப் போதுமானதாக இல்லையா? நான் இன்னும் (சிறிது காலம்) வாழ்ந்தால், இந்தக் 'கலாலா' தொடர்பாக, குர்ஆனைக் கற்றோரும் கல்லாதோரும் யாருமே கருத்து வேறுபாடு கொள்ள வேண்டிய நிலையேற்படாத வகையில், ஒரு தீர்ப்பை வழங்குவேன்" என்று நபியவர்கள் கூறினார்கள்.[282]

---

282. காண்க: முன்சென்ற ஹதீஸ் எண்கள் - 85, 174, 181, 253, 282. பின்வரும் ஹதீஸ் எண் - 368 மற்றும் அதற்கு அடிக்குறிப்புகள். திருக்குர்ஆனை அருளிய அல்லாஹ் அதன் விளக்கங்களை வழங்கும் முதல் விரிவுரையாளராகத் தன் தூதரையே நியமித்திருக்கின்றான். திருக்குர்ஆன் அத்தியாயம் 16: வசனம் 44. நபி (ஸல்) அவர்கள் வழங்கிய விளக்கங்கள் இருவகைப்படும்:

கற்றோரும் கல்லாதோரும் புரிந்துகொள்கின்ற வகையில் அமைந்த விளக்கங்கள்.*

ثُمَّ قَالَ: اللَّهُمَّ إِنِّي أُشْهِدُكَ عَلَى أُمَرَاءِ الْأَمْصَارِ فَإِنِّي بَعَثْتُهُمْ يُعَلِّمُونَ النَّاسَ دِينَهُمْ وَسُنَّةَ نَبِيِّهِمْ وَيَقْسِمُونَ فِيهِمْ فَيْئَهُمْ وَيَعْدِلُونَ عَلَيْهِمْ وَمَا أَشْكَلَ عَلَيْهِمْ يَرْفَعُونَهُ إِلَيَّ، ثُمَّ قَالَ: يَا أَيُّهَا النَّاسُ إِنَّكُمْ تَأْكُلُونَ مِنْ شَجَرَتَيْنِ لَا أُرَاهُمَا إِلَّا خَبِيثَتَيْنِ هَذَا الثُّومُ وَالْبَصَلُ لَقَدْ كُنْتُ أَرَى الرَّجُلَ عَلَى عَهْدِ رَسُولِ اللَّهِ ﷺ يُوجَدُ رِيحُهُ مِنْهُ فَيُؤْخَذُ بِيَدِهِ حَتَّى يُخْرَجَ بِهِ إِلَى الْبَقِيعِ فَمَنْ كَانَ آكِلَهُمَا لَا بُدَّ فَلْيُمِتْهُمَا طَبْخًا، قَالَ: فَخَطَبَ بِهَا عُمَرُ رَضِيَ اللَّهُ عَنْهُ يَوْمَ الْجُمُعَةِ وَأُصِيبَ يَوْمَ الْأَرْبِعَاءِ لِأَرْبَعِ لَيَالٍ بَقِينَ مِنْ ذِي الْحِجَّةِ.

٣٢٤ حَدَّثَنَا عَبْدُ الرَّزَّاقِ قَالَ وَأَخْبَرَنِي هُشَيْمٌ عَنِ الْحَجَّاجِ بْنِ أَرْطَاةَ عَنِ الْحَكَمِ بْنِ عُتَيْبَةَ عَنْ عُمَارَةَ عَنْ أَبِي بُرْدَةَ عَنْ أَبِي مُوسَى أَنَّ عُمَرَ رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ: هِيَ سُنَّةُ رَسُولِ اللَّهِ ﷺ يَعْنِي

பிறகு உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்:

இறைவா! நகரங்களின் ஆளுநர்களுக்கு உன்னையே சாட்சியாக்குகின்றேன். நான் அவர்களை அந்த மக்களுக்கு, அவர்களுடைய மார்க்கத்தையும் அவர்களுடைய நபியின் வழிமுறையையும் கற்றுக்கொடுப்பதற்காகவே அனுப்பிவைத்தேன். மேலும், போரிடாமல் கிடைத்த ('ஃபைஉ' எனும் வெற்றிச்) செல்வத்தை அவர்கள் தம்மிடையே (முறையோடு) பங்கிட வேண்டும்; அவர்களிடையே நீதியாக நடந்துகொள்ள வேண்டும்; அவர்களுடைய செயல்பாடுகளில் சிக்கல் எழும்போது, அதை என் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும் (என்றும் கூறியே அனுப்பினேன்).

மக்களே! நீங்கள் இரு செடிகள் விளைவிக்கின்ற இந்த வெங்காயம் வெள்ளைப் பூண்டு ஆகியவற்றை (சமைக்காமல் பச்சையாக) உண்கிறீர்கள். அவ்விரண்டையும் நான் அருவருப்பானவையாகக் கருதுகிறேன். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களது காலத்தில் (பள்ளிவாசலில் இருக்கும்) ஒருவரிடமிருந்து அவற்றின் பச்சை வாடை வருவதைக் கண்டால், அவரது கையைப் பிடித்து அவரை 'அல்பகீஉ' பொது மையவாடிவரை கொண்டுபோய் விடப்பட்டதை நான் பார்த்திருக்கிறேன். எனவே, யார் அவற்றை உண்டே தீர வேண்டுமென்ற நிலையில் இருக்கிறாரோ, அவர் அவற்றைச் சமைத்து, அவற்றின் வாடையை நீக்கிக்கொள்ளட்டும்.

இந்த உரையை உமர் (ரலி) அவர்கள் வெள்ளிக் கிழமையன்று நிகழ்த்தினார்கள். 'துல்ஹஜ்' மாதத்தில் நான்கு நாட்கள் எஞ்சியிருந்த நிலையில், புதன்கிழமையன்று அவர்கள் தாக்கப்பட்டார்கள்.[283]

324 அபூமூசா அல்அஷ்அரீ (ரலி) அவர்கள் கூறியதாவது:

உமர் (ரலி) அவர்கள், "அது, அதாவது, (ஹஜ் பருவத்தில் உம்ராவுக்கு இஹ்ராம்

•கற்றோர் மட்டும் புரிந்துகொள்கிற விளக்கங்கள்.

முதல்வகை விளக்கங்கள் கருத்து வேறுபாடு ஏற்படாத வகையில் அமைந்திருக்கும். இரண்டாம் வகை விளக்கங்களில் கற்றோரிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்படும்.

[illegible]

283. பார்க்க: முன்சென்ற ஹதீஸ் எண்கள் - 85, 181 மற்றும் அவற்றின் அடிக்குறிப்புகள்.

அணிந்து, அதை நிறைவேற்றிவிட்டு, பிறகு துல்ஹஜ் எட்டாவது நாள் ஹஜ்ஜுக்கு இஹ்ராம் அணிந்து பயனடையும் 'தமத்துஉ' முறை.) அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களது வழிமுறை (சுன்னத்) ஆகும். ஆயினும், ஹாஜிகள் தம் மனைவியருடன் 'அராக்' மரத்தின் கீழ் தாம்பத்திய உறவில் ஈடுபட்டு (குளித்து) விட்டு, காலையில் தம் மனைவியருடன் ஹாஜிகளாக (மினாவை நோக்கிச்) செல்வார்களோ என நான் அஞ்சினேன் (ஆகவேதான், ஹஜ் பருவத்தில் 'உம்ரா'ச் செய்ய வேண்டாம் என நான் ஆணையிட்டேன்)" என்று கூறினார்கள்.[264]

اَلْمُتْعَةَ وَلَكِنِّي أَخْشَى أَنْ يُعَرِّسُوا بِهِنَّ تَحْتَ الْأَرَاكِ ثُمَّ يَرُوحُوا بِهِنَّ حُجَّاجًا.

325 உமர் (ரலி) அவர்கள் கூறியதாவது:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் 'சிறுதுடக்கு' ஏற்பட்ட பின்னர், அங்கத் தூய்மை (உளூ) செய்தார்கள். (அப்போது கால்களைக் கழுவுவதற்குப் பகரமாக ஈரக் கையால் தமது) காலுறைகள் மீது தடவியதையும் (மஸ்ஹுச் செய்ததையும்), பின்னர் தொழுததையும் நான் கண்டேன்.[265]

٣٢٥ حَدَّثَنَا عَلِيُّ بْنُ عَاصِمٍ أَنْبَأَنَا يَزِيدُ بْنُ أَبِي زِيَادٍ عَنْ عَاصِمِ بْنِ عُبَيْدِ اللَّهِ عَنْ أَبِيهِ أَوْ جَدِّهِ الشَّكُّ مِنْ يَزِيدَ عَنْ عُمَرَ رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ: رَأَيْتُ رَسُولَ اللَّهِ ﷺ تَوَضَّأَ بَعْدَ الْحَدَثِ وَمَسَحَ عَلَى خُفَّيْهِ وَصَلَّى.

٣٢٦ حَدَّثَنَا مُحَمَّدُ بْنُ جَعْفَرٍ حَدَّثَنَا شُعْبَةُ عَنْ سِمَاكٍ قَالَ سَمِعْتُ عِيَاضًا الْأَشْعَرِيَّ قَالَ: شَهِدْتُ الْيَرْمُوكَ وَعَلَيْنَا خَمْسَةُ أُمَرَاءَ أَبُو عُبَيْدَةَ بْنُ الْجَرَّاحِ وَيَزِيدُ بْنُ أَبِي سُفْيَانَ وَابْنُ حَسَنَةَ وَخَالِدُ بْنُ الْوَلِيدِ وَعِيَاضٌ وَلَيْسَ عِيَاضٌ هَذَا بِالَّذِي حَدَّثَ سِمَاكًا قَالَ: وَقَالَ عُمَرُ رَضِيَ اللَّهُ عَنْهُ: إِذَا كَانَ قِتَالٌ فَعَلَيْكُمْ أَبُو عُبَيْدَةَ قَالَ فَكَتَبْنَا إِلَيْهِ إِنَّهُ قَدْ جَاشَ إِلَيْنَا الْمَوْتُ وَاسْتَمْدَدْنَاهُ فَكَتَبَ إِلَيْنَا إِنَّهُ قَدْ جَاءَنِي

326 இயாள் பின் அம்ர் அல்அஷ்அரீ (ரலி) அவர்கள் கூறியதாவது:

'யர்மூக்' போரில் நான் கலந்துகொண்டேன். அப்போரில் எங்களுக்கு அபூ உபைதா பின் அல்ஜர்ராஹ் (ரலி), யஸீது பின் அபீசுஃப்யான் (ரலி), இப்னு ஹசனா (ரலி), காலித் பின் அல்வலீத் (ரலி), இயாள் (ரலி)-இந்த இயாள் இந்த ஹதீஸை அறிவிக்கின்ற இயாள் அல்லர்- ஆகிய ஐவரும் (ஒருவர் பின் ஒருவராகத்) தளபதிகளாகத் திகழ்ந்தனர்.

(கலீஃபா) உமர் (ரலி) அவர்கள் (எங்களைப் போருக்கு அனுப்பியபோது), "போர் நடந்தால் அபூஉபைதா (ரலி) அவர்களை உங்கள் தளபதியாக்கிக்கொள்ளுங்கள்" என்று கூறியிருந்தார்கள்.

பின்னர் (போர் நடந்தது. அப்போது) நாங்கள் உமர் (ரலி) அவர்களுக்கு, "இறப்பு எங்களை நோக்கி ஆர்ப்பரித்து வருகின்றது (எங்களுள் பலர் இறந்துவிட்டனர்)" என்று

264. [illegible]

[illegible]

265. [illegible] - 202

குறிப்பிட்டுக் கடிதம் எழுதி, உதவிப் படை அனுப்புமாறு கோரினோம்

உமர் (ரலி) அவர்கள் எங்களுக்கு மறு மொழிக் கடிதம் எழுதினார்கள் அதில், "என்னிடம் உதவிப் படை அனுப்புமாறு கோரி நீங்கள் எழுதிய கடிதம் கிடைத்தது நான் உங்களுக்கு உதவி செய்வதற்கு வல்லமையும் மாண்பும் மிக்க பெரும்படை கொண்ட ஒருவனைப் பற்றி கூறுகிறேன் அவன்தான் அல்லாஹ் அவனிடமே நீங்கள் உதவி கோருங்கள் ஏனெனில், முஹம்மத் (ஸல்) அவர்கள் 'பத்ர்' போர் நாளில் உங்களைவிட மிகக் குறைவான படையினருடன் இருந்தபோதுதான் உதவி செய்யப்பட்டார்கள் ஆகவே, எனது இந்தக் கடிதம் உங்களுக்குக் கிடைத்ததும், அவர்களுடன் நீங்கள் போர் செய்யுங்கள் என்னிடம் திரும்பத் தொடர்பு கொள்ளாதீர்கள்" என்று குறிப்பிட்டார்கள்.

அவ்வாறே நாங்கள் எதிரிகளிடம் போரிட்டு, அவர்களைத் தோற்கடித்தோம் அவர்களுடன் நான்கு 'ஃபர்ஸக்' (சுமார் 21 கி.மீ) தொலை தூரத்துக்கு ஓட ஓட விரட்டிச் சென்று போரிட்டோம். எங்களுக்கு (ஏராளமான போர்ச்) செல்வங்கள் கிடைத்தன. (அவற்றை எவ்வாறு பங்கிடுவது என்பதுபற்றி) மக்கள் ஆலோசனை செய்தனர் அப்போது (தளபதி) இயாள் (ரலி) அவர்கள், ஒவ்வொருவருக்கும் பத்துப் பங்கு கொடுக்கவேண்டும் எனக் கூறினார்கள். அப்போது அபூ உபைதா (ரலி) அவர்கள், "என்னுடன் குதிரைப் பந்தயத்தில் கலந்துகொள்பவர் யார்?" என்று கேட்டார்கள். அப்போது இளைஞர் ஒருவர், "நீங்கள் கோபப்படாவிட்டால், நான் (கலந்துகொள்கிறேன்!" என்று கூறினார் (பிறகு நடந்த பந்தயத்தில்) அபூ உபைதா (ரலி) அவர்களை அந்த இளைஞர் வென்றுவிட்டார். (பந்தயம் நடந்துகொண்டிருந்தபோது) அபூஉபைதா (ரலி) அவர்களின் தலைப் பின்னல்கள் இரண்டையும் நான் பார்த்தேன் (வேகமாக அவர்கள் வந்ததால்) அவையிரண்டும் குதித்துக்கொண்டிருந்தன. அபூஉபைதா அவர்கள் அவ்விளைஞருக்குப் பின்னால் அரபுக் குதிரையொன்றில் வந்துகொண்டிருந்தார்கள்[288]

كتابكم تستمدوني وإني أدلكم على من هو أعز نصرا وأحضر جندا الله عز وجل فاستنصروه فإن محمدا ﷺ قد نصر يوم بدر في أقل من عدتكم فإذا أتاكم كتابي هذا فقاتلوهم ولا تراجعوني قال فقاتلناهم فهزمناهم وقتلناهم أربع فراسخ قال وأصبنا أموالا فتشاوروا، فأشار علينا عياض أن نعطي عن كل رأس عشرة قال، وقال أبو عبيدة: من يراهني؟ فقال شاب: أنا إن لم تغضب، قال فسبقه فرأيت عقيصتي أبي عبيدة تنقزان وهو خلفه على فرس عربي.

۳۲۷ حدثنا محمد بن بكر أنبأنا عيينة عن علي بن زيد قال: قدمت المدينة فدخلت على سالم بن عبد الله وعلي جبة خز، فقال لي سالم: ما تصنع بهذه الثياب؟ سمعت أبي يحدث عن عمر بن الخطاب رضي الله عنه أن رسول الله ﷺ قال: إنما يلبس الحرير من لا خلاق له.

327 அலீ பின் ஸைத் பின் ஜத்ஆன் கூறியதாவது:

நான் மதீனாவுக்கு வந்து சாலிம் பின் அப்தில்லாஹ் (ரஹ்) அவர்களிடம் சென்றேன் அப்போது நான் பட்டுக் குளிராடை அணிந்திருந்தேன் அப்போது சாலிம் (ரஹ்) அவர்கள் என்னிடம், "என்ன இந்த ஆடையை அணிந்திருக்கிறீர்?" என்று கேட்டுவிட்டு, "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், '(மறுமையில்) எந்தப் பங்கும் இல்லாதவன்தான் பட்டாடை அணிவான்' என்று கூறியதாக (தம் தந்தை) உமர் பின் அல்கத்தாப்

288. இந்த ஹதீஸ் முஸன்னஃப் இப்னு அபீஷைபா (7/714, 8/36), பைஹகீயின் சுனனுல் குப்ரா (10/21) இப்னு [illegible] (222), இப்னு ஹிப்பான் (4852) ஆகிய நூல்களில் இடம்பெற்றுள்ளது

(ரலி) அவர்கள் கூறினார்கள் என என் தந்தை (அப்துல்லாஹ் பின் உமர் (ரலி)) அவர்கள் கூறியதை நான் கேட்டுள்ளேன்" என்றார்கள்.[267]

328 அம்ரு பின் ஷுஐப் (ரஹ்) அவர்கள் தம் தந்தை (ஷுஐப் பின் முஹம்மத்) வழியாக தம் பாட்டனார் (அப்துல்லாஹ் பின் அம்ர் (ரலி)) அவர்களிடமிருந்து கூறியதாவது:

ஒருவர் தன் மகனை திட்டமிட்டுக் கொலை செய்துவிட்டார். இந்த வழக்கு (கலீஃபா) உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்களிடம் கொண்டு வரப்பட்டது. உமர் (ரலி) அவர்கள், அவர் மூன்று வயது முழுமையடைந்த முப்பது பெண் ஒட்டகங்களும், நான்கு வயது முழுமையடைந்த முப்பது பெண் ஒட்டகங்களும், ஐந்து வயது முழுமையடைந்த நாற்பது பெண் ஒட்டகங்களும் என 100 ஒட்டகங்களை (உயிரீட்டுத் தொகையாக வழங்க வேண்டுமெனத் தீர்ப்புக்) கூறினார்கள். மேலும், "கொலையாளி வாரிசாக ஆகமாட்டான். 'மகனுக்காகத் தந்தை பழிக்குப் பழியாகக் கொல்லப்படமாட்டார்' என அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறியதை நான் செவியுற்றிருக்காவிட்டால், நிச்சயமாக உன்னை நான் (பழிக்குப் பழியாகக்) கொன்றிருப்பேன்" என்றும் கூறினார்கள்.[268]

٣٢٨ حدثنا أبو المنذر إسماعيل بن عمر أراه عن حجاج عن عمرو بن شعيب عن أبيه عن جده قال: قتل رجل ابنه عمدا فرفع إلى عمر بن الخطاب رضي الله عنه فجعل عليه مائة من الإبل ثلاثين حقة وثلاثين جذعة وأربعين ثنية، وقال: لا يرث القاتل ولولا أني سمعت رسول الله ﷺ يقول: لا يقتل والد بولده لقتلتك.

٣٢٩ حدثنا هشيم ويزيد عن يحيى بن سعيد عن عمرو بن شعيب قال قال عمر رضي الله عنه: لولا أني سمعت رسول الله ﷺ يقول: ليس لقاتل شيء لورثتك قال ودعا خال المقتول فأعطاه الإبل.

حدثنا يعقوب حدثنا أبي عن ابن إسحاق حدثني عبد الله بن أبي نجيح وعمرو بن شعيب كلاهما عن مجاهد بن جبر فذكر الحديث، وقال: أخذ عمر رضي الله عنه من الإبل ثلاثين حقة وثلاثين جذعة وأربعين ثنية إلى بازل عامها كلها خلفة

329 அம்ரு பின் ஷுஐப் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

(கொலை செய்த அந்த மனிதரிடம்) உமர் (ரலி) அவர்கள், 'கொலையாளிக்கு (கொல்லப்பட்டவரிடமிருந்து சொத்துரிமை) எதுவும் இல்லை' என அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறியதை நான் கேட்டிராவிட்டால், உன்னை நான் (உன் மகனுடைய சொத்துக்கு) வாரிசாக்கி இருப்பேன்" என்று கூறிவிட்டு, கொலையுண்டவரின் தாய்மாமனை அழைத்து, அவரிடம் அந்த ஒட்டகங்களை வழங்கினார்கள்.

இதே ஹதீஸ், முஜாஹித் பின் ஜப்ர் (ரஹ்) அவர்களிடமிருந்து அப்துல்லாஹ் பின் அபீ நஜீஹ் (ரஹ்) மற்றும் அம்ர் பின் ஷுஐப் (ரஹ்) ஆகியோர் வழியாகவும் வந்துள்ளது. அதில் பின்வரும் தகவலும் இடம்பெற்றுள்ளது.

உமர் (ரலி) அவர்கள் மூன்று வயது முழுமையடைந்த முப்பது பெண் ஒட்டகங்களும், நான்கு வயது முழுமையடைந்த முப்பது பெண் ஒட்டகங்களும், ஐந்து வயது

267. இந்த ஹதீஸின் அறிவிப்பாளர் அலீ பின் ஸைத் பின் ஜுத்ஆன் என்பார் பலவீனமானவர் ஆவார். எனினும் விமர்சிக்கப்படாத வேறு சில அறிவிப்பாளர்தொடரில் இதே கருத்துள்ள ஹதீஸ் வந்துள்ளது. காண்க: முன்சென்ற ஹதீஸ் எண் - 303 எனவே, இது புறச்சான்றுகளால் ஆதாரபூர்வமான ஹதீஸ் வரிசையில் லிஃகைரிஹி ஆகும்.

268. பார்க்க: அடுத்த ஹதீஸ் எண் - 329.

முழுமையடைந்தது முதல் எட்டு வயது முழுமையடைந்தது வரையிலான சினையுற்ற நாற்பது பெண் ஒட்டகங்களும் (உயிரீட்டுத் தொகையாகப்) பெற்றார்கள். பிறகு கொலையுண்டவரின் சகோதரரை அழைத்து, அவரிடம் அவ்வொட்டகங்களை வழங்ினொர்கள். தந்தைக்கு எதுவும் வழங்கவில்லை. மேலும், "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், 'கொலை செய்தவனுக்கு (சொத்துரிமை) எதுவும் இல்லை' என்று கூறியதை நான் கேட்டுள்ளேன்" என்று கூறினார்கள்.[269]

قَالَ، ثُمَّ دَعَا أَخَا الْمَقْتُولِ، فَأَعْطَاهَا إِيَّاهُ دُونَ أَبِيهِ، وَقَالَ: سَمِعْتُ رَسُولَ اللَّهِ ﷺ يَقُولُ: لَيْسَ لِقَاتِلٍ شَيْءٌ.

330 மாலிக் பின் அவ்ஸ் பின் அல்ஹதஸான் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

அப்பாஸ் (ரலி), அலீ (ரலி) ஆகிய இருவரும் (நபி (ஸல்) அவர்களிடமிருந்த சொத்தைத் தம்மிடம் தரும்படி) வழக்காடியபடி (கலீஃபா) உமர் (ரலி) அவர்களிடம் வந்தனர். அப்போது அப்பாஸ் (ரலி) அவர்கள், "எனக்கும், இவருக்குமிடையே இன்னின்னவற்றில் தீர்ப்பளியுங்கள்" என்று கூறினார்கள் உடனே மக்களும், "அவ்விருவருக்குமிடையே (சொத்துகளைப்) பிரித்துக் கொடுங்கள். அவ்விருவருக்குமிடையே பிரித்துக் கொடுங்கள்" என்று கூறினர்.

அதற்கு உமர் (ரலி) அவர்கள், "நான் இவ்விருவருக்குமிடையில் பிரித்துக் கொடுக்க மாட்டேன். ஏனெனில், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், '(நபிமார்களான) எங்களுடைய சொத்துக்கு யாரும் வாரிசாக மாட்டார்கள். நாங்கள் விட்டுச் செல்பவையாவும் தர்மம் செய்யப்பட வேண்டியவையாகும்' என்று கூறியதை இவ்விருவரும் அறிந்தே உள்ளார்கள்" என்று கூறினார்கள்.[270]

٣٣٠ حَدَّثَنَا إِسْمَاعِيلُ حَدَّثَنَا أَيُّوبُ عَنْ عِكْرِمَةَ بْنِ خَالِدٍ عَنْ مَالِكِ بْنِ أَوْسِ بْنِ الْحَدَثَانِ قَالَ: جَاءَ الْعَبَّاسُ وَعَلِيٌّ عَلَيْهِمَا السَّلَامُ إِلَى عُمَرَ رَضِيَ اللَّهُ عَنْهُ يَخْتَصِمَانِ، فَقَالَ الْعَبَّاسُ: اقْضِ بَيْنِي وَبَيْنَ هَذَا الْكَذَا كَذَا، فَقَالَ النَّاسُ: افْصِلْ بَيْنَهُمَا افْصِلْ بَيْنَهُمَا، قَالَ: لَا أَفْصِلُ بَيْنَهُمَا قَدْ عَلِمَا أَنَّ رَسُولَ اللَّهِ ﷺ قَالَ: لَا نُورَثُ مَا تَرَكْنَا صَدَقَةٌ.

331 உமர் (ரலி) அவர்கள் கூறியதாவது:

குர்ஆனில் இறுதியாக இறக்கியருளப்பெற்ற வசனம், வட்டி தொடர்பான வசனம் ஆகும். வட்டி தொடர்பாக (முழுமையாக) விளக்காத நிலையில்தான், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் இறந்தார்கள். எனவே, வட்டியையும் (வட்டி என நீங்கள்) ஐயம் கொள்வதையும் விட்டுவிடுங்கள்.[271]

٣٣١ حَدَّثَنَا إِسْمَاعِيلُ عَنِ ابْنِ أَبِي عَرُوبَةَ عَنْ قَتَادَةَ عَنِ ابْنِ الْمُسَيَّبِ أَنَّ عُمَرَ رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ: إِنَّ مِنْ آخِرِ مَا أُنْزِلَ آيَةُ الرِّبَا وَإِنَّ رَسُولَ اللَّهِ ﷺ تُوُفِّيَ وَلَمْ يُفَسِّرْهَا فَدَعُوا الرِّبَا وَالرِّيبَةَ.

---

269. மேற்கண்ட 328, 329 ஆகிய ஹதீஸ்களில் முறையே [illegible] பின் [illegible] இடம்பெற்றுள்ளதாக 328ஆவது ஹதீஸில் [illegible] உமர் (ரலி) அவர்களை [illegible] இவ்விரு ஹதீஸ்களுமே [illegible] இதன் [illegible] இடம்பெற்ற அறிவிப்பாளர்தொடரில் [illegible] பின் [illegible] உமர் (ரலி) அவர்களை [illegible] எனவே [illegible] [illegible] குறிப்பிடுகின்றார்கள்

270. பார்க்க: முன்சென்ற ஹதீஸ் எண் - 9 மற்றும் அதன் அடிக்குறிப்பு

271. பார்க்க: முன்சென்ற ஹதீஸ் எண் - 238 இதை உமர் (ரலி) அவர்களிடமிருந்து அறிவிக்கும் ஸயீத் பின் அல்முஸய்யப் (ரஹ்) அவர்கள் உமர் (ரலி) அவர்களைச் சந்தித்ததில்லை எனவே இது அறிவிப்பாளர்தொடர் இடைமுறிந்தது (முன்கதிஉ)

332 இப்ராஹீம் பின் அபீமூசா (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

(என் தந்தை) அபூமூசா (ரலி) அவர்கள் 'தமத்துஉ' முறையில் ஹஜ் செய்யலாம் என மார்க்கத் தீர்ப்புக் கூறிக்கொண்டிருந்தார்கள். அப்போது அவர்களிடம் ஒருவர், "உங்களது மார்க்கத் தீர்ப்பில் ஒன்றை நிறுத்திவையுங்கள். ஏனெனில், நீங்கள் சென்ற பின்னர், ஹஜ்ஜின் செயல் முறைகள்பற்றி இறைநம்பிக்கையாளர்களின் தலைவர் (உமர் (ரலி) அவர்கள்) புதிதாகக் கூறியதை நீங்கள் அறிய மாட்டீர்கள்" என்று கூறினார்.

அதன்பின் அபூமூசா (ரலி) அவர்கள் உமர் (ரலி) அவர்களைச் சந்தித்தபோது, இது பற்றிக் கேட்டார்கள். அப்போது உமர் (ரலி) அவர்கள், "நபி (ஸல்) அவர்களும் அவர்களின் தோழர்களும் ('தமத்துஉ' முறையில் ஹஜ்) செய்ததை நான் அறிவேன். ஆயினும், 'அராக்' மரத்தின் கீழ், மக்கள் இரவில் தம் மனைவியருடன் தாம்பத்திய உறவில் ஈடுபட்டுக் (குளித்துவிட்டு), தம் தலைகளிலிருந்து தண்ணீர் சொட்டிக்கொண்டிருக்க 'ஹஜ்'ஜுக்காக அவர்கள் (மினா, அரஃபா நோக்கி) வருவதை நான் விரும்பவில்லை (ஆகவேதான், ஹஜ் பருவத்தில் 'உம்ரா'ச் செய்ய வேண்டாம் என நான் ஆணையிட்டேன்)" என்று கூறினார்கள்.[272]

٣٣٢ حدثنا أبو عبد الله محمد بن جعفر حدثنا شعبة عن الحكم عن عمارة بن عمير عن إبراهيم بن أبي موسى عن أبي موسى أنه كان يفتي بالمتعة، فقال له رجل: رويدك ببعض فتياك فإنك لا تدري ما أحدث أمير المؤمنين في النسك بعدك حتى لقيه بعد فسأله، فقال عمر رضي الله عنه: قد علمت أن النبي ﷺ قد فعله وأصحابه، ولكني كرهت أن يظلوا بهن معرسين في الأراك ويروحوا للحج تقطر رءوسهم.

333 இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறியதாவது:

(கலீஃபா) உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள் (ஹிஜ்ரீ 23ஆம் ஆண்டு இறுதியாக) ஹஜ் செய்தார்கள். (தமது இறப்புக்குப்பின் யார் ஆட்சித் தலைவராக வரவேண்டும் என்பது குறித்தும், அபூபக்ர் (ரலி) அவர்கள் அவசர கோலமாக ஆட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்றும், தமக்குத் தொடர்பில்லாத ஒன்றில் தலையிட்டு, ஒருவர் விமர்சித்துப் பேசிய செய்தி எட்டியபோது.) மக்களுக்கு உரை நிகழ்த்த விரும்பினார்கள். அப்போது அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்கள், "இ(ந்த உரை நிகழ்த்துவ)தை நீங்கள் மதீனாவிற்குச் செல்லும்வரை தள்ளி வையுங்கள். ஏனெனில், விவரமற்ற மக்களும் உங்கள் அருகில் குழுமியுள்ளனர். (நீங்கள் கூறுவதை அவர்கள் தவறாகப் புரிந்துகொள்வர்)" என்று கூறினார்கள்.

உமர் (ரலி) அவர்கள் மதீனாவுக்கு வந்தபோது, நான் உமர் (ரலி) அவர்களை

٣٣٣ حدثنا محمد بن جعفر وحجاج قالا حدثنا شعبة عن سعد بن إبراهيم قال سمعت عبيد الله بن عبد الله بن عتبة يحدث عن ابن عباس عن عبد الرحمن بن عوف قال: حج عمر بن الخطاب رضي الله عنه فأراد أن يخطب الناس خطبة، فقال عبد الرحمن بن عوف: إنه قد اجتمع عندك رعاع الناس فأخر ذلك حتى تأتي المدينة، فلما قدم المدينة دنوت منه قريبا من المنبر

[illegible] - 323[illegible] - 5762 [illegible]
[illegible]

272. [illegible] - 262, 324.

நெருங்கிச் சொற்பொழிவு மேடைக்கு அருகில் இருந்தேன் அப்போது உமர் (ரலி) அவர்கள் (ஆற்றிய உரையில்) பின்வருமாறு குறிப்பிட்டதை நான் கேட்டேன்:

மக்களுள் சிலர், "(விபசாரம் புரிந்தவர் மணமுடித்தவராயிருந்தால் அவரைக் கல்லால் எறிந்து கொல்ல வேண்டும்' என்ற) 'ரஜ்மு'ச் சட்டத்தின் நிலை என்ன? (அதுபற்றி அல்லாஹ்வின் வேதத்தில் கூறப்படவில்லையே?) அல்லாஹ்வின் வேதத்தில் (விபசாரம் புரிந்தவருக்கு சாட்டையடி தண்டனை கொடுக்க வேண்டும் என்று (பொதுவாகத்)தானே உள்ளது?" என்று கேட்கிறார்கள் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், (மணமுடித்தோர் விபசாரம் புரிந்தால்) கல்லெறி தண்டனை நிறைவேற்றினார்கள். அவர்களுக்குப்பின் (கலீஃபாக்களான) நாங்களும் அதைச் செய்தோம். 'உமர், அல்லாஹ்வின் வேதத்தில் இல்லாத ஒன்றைக் கூடுதலாக்கி விட்டார்' என்று மக்கள் பேசிவிடுவர் எனும் அச்சம் மட்டும் இல்லையாயின், (குர்ஆனின் ஓர் ஓரத்தில்) அ(ந்தச் சட்)டம் பற்றிய வசனத்தை, அது இறக்கியருளப்பட்டதைப் போன்றே நான் பதிவு செய்திருப்பேன்" என்று குறிப்பிட்டார்கள்[273]

فسمعته يقول: وإن ناسا يقولون: ما بال الرجم؟ وإنما في كتاب الله الجلد وقد رجم رسول الله ﷺ ورجمنا بعده، ولولا أن يقولوا أثبت في كتاب الله ما ليس فيه لأثبتها كما أنزلت.

334 சிமாக் பின் ஹர்ப் அவர்கள் கூறியதாவது:

நுஃமான் பின் பஷீர் (ரலி) அவர்கள் உரை நிகழ்த்தியபோது, பின்வருமாறு கூறியதைக் கேட்டேன்:

உமர் (ரலி) அவர்கள் மக்களுக்கு ஏற்பட்டுள்ள வசதிவாய்ப்புக் குறித்து நினைவு கூர்ந்துவிட்டு, "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் தம் வயிற்றை நிரப்ப, உலர்ந்த பேரீச்சம் பழம்கூடக் கிடைக்காமல், ஒருநாள் (முழுவதும்) சுருண்டு படுத்துக்கொண்டிருந்ததை நான் பார்த்தேன்" என்று கூறினார்கள்.[274]

٣٣٤ حدثنا محمد بن جعفر وحجاج قالا حدثنا شعبة عن سماك بن حرب قال سمعت النعمان يعني ابن بشير يخطب قال: ذكر عمر رضي الله عنه ما أصاب الناس من الدنيا، فقال: لقد رأيت رسول الله ﷺ يظل اليوم يلتوي ما يجد دقلا يملأ به بطنه.

335 நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

ஒப்பாரி வைத்து அழப்படுவதால் இறந்தவர் மண்ணறையில் வேதனை செய்யப்படுவார்

(ஷுஅபா (ரஹ்) வழியாக வந்துள்ள அறிவிப்பிலேயே மேற்கண்ட வாசகம் காணப்படுகிறது) ஹஜ்ஜாஜ் பின் முஹம்மது (ரஹ்) வழியாக வந்துள்ள அறிவிப்பில், "இறந்தவருக்காக ஒப்பாரி வைத்து அழுவதால்" எனும் வாசகம் இடம்பெற்றுள்ளது[275]

இதை உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்

٣٣٥ حدثنا محمد بن جعفر حدثنا شعبة وحجاج قال حدثني شعبة قال سمعت قتادة يحدث عن سعيد بن المسيب عن ابن عمر عن أبيه عن النبي ﷺ قال: الميت يعذب في قبره بما نيح عليه، وقال حجاج: بالنياحة عليه.

273. காண்க: முன்சென்ற ஹதீஸ் எண் - 192 மற்றும் அதன் அடிக்குறிப்பு. உமர் (ரலி) அவர்கள் ஆற்றிய முழு உரையையும் அறிய விரும்பினால் காண்க: புகாரீ ஹதீஸ் எண் - 6830

274. காண்க: முன்சென்ற ஹதீஸ் எண் - 154 மற்றும் அதன் அடிக்குறிப்பு

275. காண்க: முன்சென்ற ஹதீஸ் எண் - 175 மற்றும் அதன் அடிக்குறிப்பு

336 உமர் (ரலி) அவர்கள் கூறியதாவது:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் இரண்டு நேரங்களில் தொழ வேண்டாமெனத் தடைவிதித்தார்கள் அவை:

1 அஸ்ர் தொழுகைக்குப் பிறகு சூரியன் மறையும் வரையிலும்,

2 சுப்ஹுத் தொழுகைக்குப் பிறகு சூரியன் உதயமாகும் வரையிலும்.

இதை உமர் (ரலி) அவர்களிடமிருந்து அறிவிக்கும் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: மேற்கண்டவாறு நபித்தோழர்களுள் பலரும் என்னிடம் கூறினர். அவர்களுள் எனக்கு மிகவும் விருப்பமானவர்கள் உமர் (ரலி) அவர்கள் ஆவார்கள்.[276]

٣٣٦ حدثنا محمد بن جعفر حدثنا شعبة عن قتادة قال سمعت رفيعا أبا العالية يحدث عن ابن عباس حدثني رجال قال شعبة أحسبه قال من أصحاب النبي ﷺ قال: وأعجبهم إلي عمر بن الخطاب رضي الله عنه أن رسول الله ﷺ نهى عن الصلاة في ساعتين بعد العصر حتى تغرب الشمس وبعد الصبح حتى تطلع.

337 அபூ உஸ்மான் அந்நஹ்தி (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

நாங்கள் (எங்கள் படைத் தளபதி) உத்பா பின் ஃபர்கத் (ரலி) அவர்களுடன் 'ஆதர்பைஜானில்' அல்லது 'ஷாம்' (சிரியா) நாட்டில் இருந்தபோது, எங்களுக்கு (கலீஃபா) உமர் (ரலி) அவர்களிடமிருந்து கடிதம் வந்தது (அதில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது:)

இறைவாழ்த்துக்குப் பின்! அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் பட்டாடை அணிவதை (ஆண்களுக்குத்) தடைசெய்தார்கள்; இந்த இரு விரல்களின் அளவைத் தவிர!

அறிவிப்பாளர் அபூ உஸ்மான் அந்நஹ்தி (ரஹ்) அவர்கள் கூறினார்கள்: "(உமர் (ரலி) அவர்கள் குறிப்பிட்ட 'இந்த அளவு' என்பது, ஆடைகளின் கரைகளில் செய்யப்படும்) வேலைப்பாட்டையே குறிக்கிறது என அறிந்துகொள்ள எங்களுக்கு அவகாசம் தேவைப்படவில்லை.[277]

٣٣٧ حدثنا محمد بن جعفر حدثنا شعبة وحجاج قال حدثني شعبة عن قتادة قال سمعت أبا عثمان النهدي قال: جاءنا كتاب عمر ونحن بأذربيجان مع عتبة بن فرقد أو بالشام أما بعد فإن رسول الله ﷺ نهى عن الحرير إلا هكذا أصبعين، قال أبو عثمان: فما عتمنا إلا أنه الأعلام. حدثنا محمد بن جعفر حدثنا شعبة وحجاج وأبو داود قال حدثنا شعبة عن قتادة قال سمعت أبا عثمان النهدي قال: جاءنا كتاب عمر.

338 அம்ர் பின் மைமூன் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

உமர் (ரலி) அவர்கள் (ஹஜ்ஜில்) 'முஸ்தலிஃபா'வில் (தங்கியிருந்தபோது) எங்களுக்கு சுப்ஹுத் தொழுகை தொழுவித்தார்கள். பிறகு எழுந்து, "இணைவைப்போர் சூரியன் உதயமாகி, 'ஸபீர் மலையே! (சூரியனை) உதயமாக்கு!' (நாங்கள் விரைவாகப் புறப்பட

٣٣٨ حدثنا محمد بن جعفر حدثنا شعبة وأبو داود عن شعبة عن أبي إسحاق عن عمرو بن ميمون قال: صلى عمر رضي الله عنه الصبح وهو بجمع، قال أبو داود: كنا مع عمر بجمع، فقال: إن المشركين كانوا لا يفيضون حتى تطلع الشمس

276. காண்க: முன்சென்ற ஹதீஸ் எண் - 97 மற்றும் அதன் அடிக்குறிப்பு

277. காண்க: முன்சென்ற ஹதீஸ் எண் - 88 மற்றும் அதன் அடிக்குறிப்பு

وَيَقُولُونَ: أَشْرِقْ ثَبِيرُ وَإِنَّ نَبِيَّ اللَّهِ ﷺ خَالَفَهُمْ فَأَفَاضَ قَبْلَ طُلُوعِ الشَّمْسِ.

வேண்டும்)" என்று கூறாதவரையில் திரும்பிச் செல்ல மாட்டார்கள். (ஆனால்) அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களோ, (சூரியன் உதயமாவதற்கு முன்பே இங்கிருந்து திரும்பிச் சென்று) இணைவைப்போருக்கு மாறுசெய்தார்கள்" என்று கூறினார்கள். பிறகு உமர் (ரலி) அவர்கள் சூரியன் உதிப்பதற்கு முன்பே அங்கிருந்து திரும்பிச் சென்றார்கள்.

அதில் (ஷுஅபா (ரஹ்) அவர்களது அறிவிப்பிலேயே மேற்கண்டவாறு காணப்படுகிறது.) அபூதாவூத் அத்தயாலிசீ (ரஹ்) அவர்கள் வழியாக வந்துள்ள அறிவிப்பில், "நாங்கள் உமர் (ரலி) அவர்களுடன் முஸ்தலிஃபாவில் இருந்தோம்..." என்று ஹதீஸ் தொடங்குகிறது. (மற்ற விவரங்கள் மேற்கண்ட ஹதீஸில் உள்ளதைப் போன்றே இடம்பெற்றுள்ளன.)[278]

٣٣٩ حَدَّثَنَا مُحَمَّدُ بْنُ جَعْفَرٍ حَدَّثَنَا شُعْبَةُ عَنْ عَبْدِ اللَّهِ بْنِ دِينَارٍ قَالَ سَمِعْتُ ابْنَ عُمَرَ يَقُولُ: سَأَلَ عُمَرُ رَضِيَ اللَّهُ عَنْهُ رَسُولَ اللَّهِ ﷺ فَقَالَ: تُصِيبُنِي الْجَنَابَةُ مِنَ اللَّيْلِ فَمَا أَصْنَعُ؟ قَالَ: اغْسِلْ ذَكَرَكَ ثُمَّ تَوَضَّأْ ثُمَّ ارْقُدْ.

339 இப்னு உமர் (ரலி) அவர்கள் கூறியதாவது:

(என் தந்தை) உமர் (ரலி) அவர்கள் நபி (ஸல்) அவர்களிடம், "எனக்கு இரவில் பெருந்துடக்கு ஏற்பட்டுவிடுகிறது. இந்நிலையில், நான் என்ன செய்வது? (குளிக்காமல் உறங்கலாமா?)" என்று கேட்டார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள், "உமது இனவுறுப்பைக் கழுவிவிட்டு, தொழுகைக்கு அங்கத் தூய்மை (உளூ) செய்வதைப் போன்று அங்கத் தூய்மை செய்துகொண்டு உறங்குவீராக!" என்று கூறினார்கள்.[279]

٣٤٠ حَدَّثَنَا مُحَمَّدُ بْنُ جَعْفَرٍ حَدَّثَنَا شُعْبَةُ عَنْ سَلَمَةَ بْنِ كُهَيْلٍ قَالَ سَمِعْتُ أَبَا الْحَكَمِ قَالَ: سَأَلْتُ ابْنَ عُمَرَ عَنِ الْجَرِّ، فَحَدَّثَنَا عَنْ عُمَرَ رَضِيَ اللَّهُ عَنْهُ أَنَّ رَسُولَ اللَّهِ ﷺ نَهَى عَنِ الْجَرِّ وَعَنِ الدُّبَّاءِ وَعَنِ الْمُزَفَّتِ.

340 அபுல் ஹகம் (இம்ரான் பின் அல்ஹாரிஸ்-ரஹ்) அவர்கள் கூறியதாவது:

நான் இப்னு உமர் (ரலி) அவர்களிடம், (மது ஊறலுக்காகப் பயன்படுத்தப்படும்) சுட்ட களிமண் பாத்திரத்தைப் பற்றிக் கேட்டேன். அப்போது அவர்கள், "சுட்ட களிமண் பாத்திரம், சுரைக்காய் குடுவை, தார் பூசப்பட்ட பாத்திரம் ஆகியவற்றை (பானங்கள் ஊற்றி வைக்கப் பயன்படுத்த வேண்டாமென) அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் தடைசெய்தார்கள்" என்று (தம் தந்தை) உமர் (ரலி) கூறியதாக விடையளித்தார்கள்.[280]

٣٤١ حَدَّثَنَا مُحَمَّدُ بْنُ جَعْفَرٍ حَدَّثَنَا شُعْبَةُ عَنْ عَاصِمٍ الْأَحْوَلِ عَنْ عَبْدِ اللَّهِ بْنِ سَرْجِسَ قَالَ: رَأَيْتُ الْأُصَيْلِعَ يَعْنِي عُمَرَ بْنَ الْخَطَّابِ رَضِيَ اللَّهُ عَنْهُ يُقَبِّلُ الْحَجَرَ وَيَقُولُ: أَمَا إِنِّي أَعْلَمُ أَنَّكَ حَجَرٌ

341 அப்துல்லாஹ் பின் சர்ஜிஸ் (ரலி) கூறியதாவது:

அந்த வழுக்கைத் தலையர் அதாவது - உமர் (ரலி) அவர்கள் (கஅபாவின் ஒரு மூலையில் பதிக்கப்பெற்றுள்ள) 'ஹஜருல் அஸ்வத்' கல்லை முத்தமிட்டபடி, "உன்னை

278. பார்க்க: முன்சென்ற ஹதீஸ் எண்கள் - 264, 278 மற்றும் அவற்றின் அடிக்குறிப்புகள்.

279. காண்க: முன்சென்ற ஹதீஸ் எண் - 90 மற்றும் அதன் அடிக்குறிப்பு

280. இது [illegible] காண்க: முன்சென்ற ஹதீஸ் எண் - 180 மற்றும் அதன் அடிக்குறிப்பு

நான் முத்தமிடுகிறேன். நீ ஒரு கல்தான் என்பதை நான் நன்கறிவேன். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் உன்னை முத்தமிட்டதை நான் பார்த்திராவிட்டால், உன்னை நான் முத்தமிட்டிருக்க மாட்டேன்" என்று கூறியதை நான் கண்டேன்.[201]

وَلَكِنْ رَأَيْتُ رَسُولَ اللَّهِ ﷺ يُقَبِّلُكَ.

342 ஜுவைரிய்யா பின் குதாமா (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

(கலீஃபா) உமர் (ரலி) அவர்கள் தாக்கப்பட்ட வருடத்தில், நான் ஹஜ் செய்துவிட்டு மதீனாவுக்கு வந்தேன். உமர் (ரலி) அவர்கள் (கொல்லப்படுவதற்கு ஒரு வாரத்துக்குமுன் ஒரு வெள்ளிக் கிழமையன்று) உரை நிகழ்த்தினார்கள். அப்போது அவர்கள், "நான் (இன்று) ஒரு சிவப்புச் சேவல் என்னை ஒரு முறை அல்லது இரண்டு முறைகள் கொத்துவதைப் போன்று கனவு கண்டேன்" என்று கூறினார்கள்.

-அறிவிப்பாளர் ஷுஅபா (ரஹ்) அவர்கள் தாம் ('ஒரு முறை' அல்லது 'இரண்டு முறைகள்' என) ஐயத்துடன் அறிவிக்கிறார்கள்.-

٣٤٢ حَدَّثَنَا مُحَمَّدُ بْنُ جَعْفَرٍ حَدَّثَنَا شُعْبَةُ قَالَ
سَمِعْتُ أَبَا جَمْرَةَ الضُّبَعِيَّ يُحَدِّثُ عَنْ جُوَيْرِيَةَ بْنِ
قُدَامَةَ قَالَ: حَجَجْتُ فَأَتَيْتُ الْمَدِينَةَ الْعَامَ الَّذِي
أُصِيبَ فِيهِ عُمَرُ رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ فَخَطَبَ فَقَالَ:
إِنِّي رَأَيْتُ كَأَنَّ دِيكًا أَحْمَرَ نَقَرَنِي نَقْرَةً أَوْ نَقْرَتَيْنِ
شُعْبَةُ الشَّاكُّ فَكَانَ مِنْ أَمْرِهِ أَنَّهُ طُعِنَ فَأُذِنَ لِلنَّاسِ
عَلَيْهِ فَكَانَ أَوَّلَ مَنْ دَخَلَ عَلَيْهِ أَصْحَابُ النَّبِيِّ ﷺ
ثُمَّ أَهْلُ الْمَدِينَةِ ثُمَّ أَهْلُ الشَّامِ ثُمَّ أُذِنَ لِأَهْلِ الْعِرَاقِ
فَدَخَلْتُ فِيمَنْ دَخَلَ قَالَ فَكَانَ كُلَّمَا دَخَلَ عَلَيْهِ
قَوْمٌ أَثْنَوْا عَلَيْهِ وَبَكَوْا قَالَ فَلَمَّا دَخَلْنَا عَلَيْهِ قَالَ
وَقَدْ عَصَبَ بَطْنَهُ بِعِمَامَةٍ سَوْدَاءَ وَالدَّمُ يَسِيلُ قَالَ
فَقُلْنَا: أَوْصِنَا، قَالَ: وَمَا سَأَلَهُ الْوَصِيَّةَ أَحَدٌ غَيْرُنَا،
فَقَالَ: عَلَيْكُمْ بِكِتَابِ اللَّهِ فَإِنَّكُمْ لَنْ تَضِلُّوا مَا اتَّبَعْتُمُوهُ
فَقُلْنَا: أَوْصِنَا فَقَالَ: أُوصِيكُمْ بِالْمُهَاجِرِينَ فَإِنَّ النَّاسَ

அவ்வாறே அவர்கள் (பிச்சுவாக் கத்தியால்) குத்தப்பட்டார்கள்.

பிறகு (அவர்களின் இறுதி நேரத்தில்) அவர்களைச் சந்திக்க மக்கள் அனுமதியளிக்கப்பட்டனர். அவர்களை நபித்தோழர்களே முதலில் சந்திக்க வந்தனர். பிறகு மதீனாவாசிகளும், அடுத்து ஷாம்வாசிகளும் வந்து சந்தித்தனர். பிறகு, இராக் மக்கள் அனுமதியளிக்கப்பட்டனர். அப்போது அவர்களுடன் நானும் சென்றேன். அவர்களைச் சந்திக்கச் சென்ற ஒவ்வொரு குழுவினரும் அவர்களைப் பாராட்டிப் பேசிவிட்டு அழலாயினர்.

நாங்கள் உமர் (ரலி) அவர்களிடம் சென்றபோது, அவர்கள் (கத்திக் குத்து விழுந்த) தமது வயிற்றுப் பகுதியைக் கறுப்பு நிறத் தலைப்பாகைத் துணியால் கட்டி இருந்தார்கள். அப்போதும் இரத்தம் வெளியேறிக்கொண்டுதானிருந்தது. நாங்கள் அவர்களிடம், "எங்களுக்கு ஏதேனும் அறிவுரை கூறுங்கள்" என்று கேட்டோம். அப்போது எங்களைத் தவிர வேறெவரும் அவர்களிடம் அறிவுரை கூறும்படி கேட்கவில்லை. அப்போது அவர்கள், "அல்லாஹ்வின் வேதத்தைப் பற்றிக்கொள்ளுங்கள். நிச்சயமாக நீங்கள் அதைப் பின்பற்றும்வரை, ஒருபோதும் வழி தவற மாட்டீர்கள்" என்று கூறினார்கள்.

நாங்கள், "(இன்னும் ஏதேனும்) எங்களுக்கு அறிவுரை கூறுங்கள்" என்று கேட்டோம். அப்போது அவர்கள், "(இஸ்லாத்திற்காகப் புலம் பெயர்ந்துவந்த)

201. பார்க்க: முன்சென்ற ஹதீஸ் எண்கள் - 95, 171, 220, 223 மற்றும் அவற்றின் அடிக்குறிப்புகள்.

முஹாஜிர்களிடம் நல்ல விதமாக நடந்து கொள்ளுமாறு உங்களுக்கு நான் அறிவுறுத்துகிறேன். ஏனெனில், இனி மற்றவர்கள் அதிகமாவார்கள். ஆனால், முஹாஜிர்கள் குறைந்து விடுவர். அன்சாரிகளிடமும் நீங்கள் நல்ல விதமாக நடந்துகொள்ளுமாறு உங்களுக்கு நான் அறிவுறுத்துகிறேன். ஏனெனில், அவர்கள் இஸ்லாத்திற்கு அடைக்கலமளித்த சமூகத்தார் ஆவர். கிராமப்புற அரபியருடனும் நல்ல விதமாக நடந்துகொள்ளுமாறு உங்களுக்கு நான் அறிவுறுத்துகிறேன். ஏனெனில், அவர்கள் உங்களின் மூதாதையரும் உங்கள் மூலப் பரம்பரையும் ஆவர். உங்களது பொறுப்பின் கீழ் உள்ள பிற சமயத்தாரிடமும் நல்ல விதமாக நடந்துகொள்ளுமாறு உங்களுக்கு நான் அறிவுறுத்துகிறேன். ஏனெனில், அவர்கள், உங்கள் நபியின் ஒப்பந்தத்தில் இருந்தவர்களும் உங்கள் குடும்பத்தாரின் வாழ்வாதாரமுமாவர்" என்று கூறிவிட்டு, "என்னிடமிருந்து எழுந்து செல்லுங்கள்" என்றார்கள். உமர் (ரலி) அவர்கள் இதைத் தவிர வேறெதையும் எங்களிடம் கூறவில்லை.

يَكْثُرُونَ وَيَقِلُّونَ وَأُوصِيكُمْ بِالأَنْصَارِ فَإِنَّهُمْ شِعْبُ الإِسْلاَمِ الَّذِي لَجِئَ إِلَيْهِ وَأُوصِيكُمْ بِالأَعْرَابِ فَإِنَّهُمْ أَصْلُكُمْ وَمَادَّتُكُمْ وَأُوصِيكُمْ بِأَهْلِ ذِمَّتِكُمْ فَإِنَّهُمْ عَهْدُ نَبِيِّكُمْ وَرِزْقُ عِيَالِكُمْ قُومُوا عَنِّي قَالَ فَمَا زَادَنَا عَلَى هَؤُلاَءِ الْكَلِمَاتِ. قَالَ مُحَمَّدُ بْنُ جَعْفَرٍ قَالَ شُعْبَةُ ثُمَّ سَأَلْتُهُ بَعْدَ ذَلِكَ فَقَالَ لِي فِي الأَعْرَابِ وَأُوصِيكُمْ بِالأَعْرَابِ فَإِنَّهُمْ إِخْوَانُكُمْ وَعَدُوُّ عَدُوِّكُمْ. حَدَّثَنَا حَجَّاجٌ أَنْبَأَنَا شُعْبَةُ سَمِعْتُ أَبَا جَمْرَةَ الضُّبَعِيَّ يُحَدِّثُ عَنْ جُوَيْرِيَةَ بْنِ قُدَامَةَ قَالَ: حَجَجْتُ فَأَتَيْتُ الْمَدِينَةَ الْعَامَ الَّذِي أُصِيبَ فِيهِ عُمَرُ رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ فَخَطَبَ فَقَالَ: إِنِّي رَأَيْتُ كَأَنَّ دِيكًا أَحْمَرَ نَقَرَنِي نَقْرَةً أَوْ نَقْرَتَيْنِ شُعْبَةُ الشَّاكُّ قَالَ: فَمَا لَبِثَ إِلاَّ جُمُعَةً حَتَّى طُعِنَ فَذَكَرَ مِثْلَهُ إِلاَّ أَنَّهُ قَالَ: وَأُوصِيكُمْ بِأَهْلِ ذِمَّتِكُمْ

ஷுஅபா (ரஹ்) அவர்கள் கூறினார்கள்:

நான் (இந்த ஹதீஸை எனக்கு அறிவித்த) அபூஜம்ரா அள்ளுபஈ (ரஹ்) அவர்களிடம் அதன் பிறகு இந்த ஹதீஸ் குறித்துக் கேட்டபோது, கிராமப் புற அரபியர் தொடர்பாக உமர் (ரலி) அவர்கள், "கிராமப் புற அரபியரிடம் நல்ல விதமாக நடந்துகொள்ளுமாறு உங்களுக்கு நான் அறிவுறுத்துகிறேன். ஏனெனில், அவர்கள் உங்கள் சகோதரர்களும் உங்கள் பகைவர்களுக்குப் பகைவர்களுமாவர்" என்று கூறியதாக அறிவித்தார்கள்.

இதே ஹதீஸ் மற்றோர் அறிவிப்பாளர்தொடர் வழியாகவும் வந்துள்ளது. அதில், ஜுவைரிய்யா பின் குதாமா (ரஹ்) அவர்கள் கூறியதாவது: "நான் ஹஜ் செய்துவிட்டு மதீனாவுக்கு வந்தேன். அது (கலீஃபா) உமர் (ரலி) அவர்கள் தாக்கப்பட்ட ஆண்டாகும். உமர் (ரலி) அவர்கள் (ஒரு வெள்ளிக் கிழமையன்று) உரையாற்றினார்கள். அப்போது அவர்கள், 'நான் (இன்று) ஒரு சிவப்புச் சேவல் என்னை ஒருமுறை அல்லது இரண்டு முறை கொத்துவதைப் போன்று கனவு கண்டேன்' என்று கூறினார்கள்

-அறிவிப்பாளர் ஷுஅபா (ரஹ்) அவர்களே ('ஒருமுறை' அல்லது 'இரண்டு முறை' என) சந்தேகத்துடன் அறிவிக்கிறார்கள்.-

"அதற்குப்பின், ஒரு வாரம்கூட ஆகவில்லை. அதற்குள் அவர்கள் தாக்கப்பட்டு விட்டார்கள்." (என்று ஹதீஸ் ஆரம்பமாகிறது.) மற்ற விவரங்கள் மேற்கண்ட ஹதீஸில் உள்ளதைப் போன்றே இடம்பெற்றுள்ளன. மேலும் இந்த அறிவிப்பில் உமர் (ரலி) அவர்கள், "உங்கள் பொறுப்பின் கீழுள்ள பிற சமயத்தாரிடம் நல்லவிதமாக நடந்து கொள்ளுமாறு உங்களுக்கு நான் அறிவுறுத்துகிறேன். ஏனெனில், அவர்கள் உங்கள்

நபியின் பொறுப்பின்கீழ் இருந்தவர்கள் ஆவர்" என்று கூறியதாக (சற்று வேறுபாட்டுடன்) இடம்பெற்றுள்ளது.

இந்த அறிவிப்பில் ஷுஅபா (ரஹ்) அவர்கள் பின்வருமாறு கூறியதாகக் காணப்படுகிறது. (அது வருமாறு:)

பின்னர் நான், (எனக்கு இந்த ஹதீஸை அறிவித்த) அபூஜம்ரா அள்ளுபஈ (ரஹ்) அவர்களிடம் (இந்த ஹதீஸ் பற்றிக்) கேட்டபோது, அவர்கள், "உமர் (ரலி) அவர்கள் கிராமப் புற அரபியர் தொடர்பாக, 'கிராமப் புற அரபியரிடமும் நல்ல விதமாக நடந்துகொள்ளுமாறு உங்களுக்கு நான் அறிவுறுத்துகிறேன். ஏனெனில், அவர்கள் உங்கள் சகோதரர்களும் உங்கள் எதிரிகளுக்கு எதிரிகளுமாவர்' என்று கூறினார்கள்" என்றார்கள்.[282]

فَإِنَّهُمْ ذِمَّةُ نَبِيِّكُمْ. قَالَ شُعْبَةُ ثُمَّ سَأَلْتُهُ بَعْدَ ذَلِكَ فَقَالَ فِي الْأَعْرَابِ: وَأُوصِيكُمْ بِالْأَعْرَابِ فَإِنَّهُمْ إِخْوَانُكُمْ وَعَدُوُّ عَدُوِّكُمْ.

343 இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறியதாவது:

நபி (ஸல்) அவர்கள், "சுப்ஹுத் தொழுகைக்குப் பிறகிலிருந்து சூரியன் உதயமாகும் வரையிலும், அஸ்ர் தொழுகைக்குப் பிறகிலிருந்து சூரியன் மறையும் வரையிலும், எந்தத் தொழுகையும் தொழ வேண்டாம்" எனத் தடைவிதித்தார்கள்.

இதை (நம்பிக்கைக்குரியவர் என மக்களால்) ஏற்றுக்கொள்ளப்பட்ட பலரும் என்னிடம் கூறினர். அவர்களுள் உமர் (ரலி) அவர்களும் ஒருவராவார்கள். என்னைப் பொறுத்தவரையில், அவர்கள் அனைவருள்ளும் உமர் (ரலி) அவர்களே என்னிடம் (நம்பிக்கையாளர் என) மிகவும் ஏற்கப்பட்டவர்கள் ஆவர்கள்.[283]

٣٤٣ حدثنا مُحَمَّدُ بْنُ جَعْفَرٍ حَدَّثَنَا سَعِيدٌ وَعَبْدُ الْوَهَّابِ عَنْ سَعِيدٍ عَنْ قَتَادَةَ عَنْ أَبِي الْعَالِيَةِ عَنِ ابْنِ عَبَّاسٍ رَضِيَ اللَّهُ عَنْهُ أَنَّهُ قَالَ: شَهِدَ عِنْدِي رِجَالٌ مَرْضِيُّونَ فِيهِمْ عُمَرُ وَأَرْضَاهُمْ عِنْدِي عُمَرُ أَنَّ رَسُولَ اللَّهِ ﷺ نَهَى عَنْ صَلَاةٍ بَعْدَ صَلَاةِ الصُّبْحِ حَتَّى تَطْلُعَ الشَّمْسُ وَبَعْدَ الْعَصْرِ حَتَّى تَغْرُبَ.

344 சுவைது பின் ஃகஃபலா (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

உமர் (ரலி) அவர்கள் 'அல்ஜாபியா' எனுமிடத்தில் மக்களிடையே உரையாற்றினார்கள். அப்போது அவர்கள், "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் பட்டாடை அணியவேண்டாமென (ஆண்களுக்கு)த் தடை விதித்தார்கள்; இரண்டு அல்லது மூன்று அல்லது நான்கு விரல்கள் அளவுக்கே தவிர" என்று கூறினார்கள். இவ்வாறு கூறியபோது தமது கையால் சைகை செய்து காட்டினார்கள்.[284]

٣٤٤ حدثنا مُحَمَّدُ بْنُ جَعْفَرٍ حَدَّثَنَا سَعِيدٌ عَنْ قَتَادَةَ عَنِ الشَّعْبِيِّ عَنْ سُوَيْدِ بْنِ غَفَلَةَ أَنَّ عُمَرَ رَضِيَ اللَّهُ عَنْهُ خَطَبَ النَّاسَ بِالْجَابِيَةِ فَقَالَ: نَهَى رَسُولُ اللَّهِ ﷺ عَنْ لُبْسِ الْحَرِيرِ إِلَّا مَوْضِعَ أُصْبُعَيْنِ أَوْ ثَلَاثَةٍ أَوْ أَرْبَعَةٍ وَأَشَارَ بِكَفِّهِ.

282. உங்கள் பொறுப்பின்கீழ் உள்ள பிற சமயத்தாரிடம் நல்லவிதமாக நடந்துகொள்ளுமாறு எனும் பகுதி புகாரிய 3162ஆம் எண்ணில் இடம்பெற்றுள்ளது.

283. காண்க: முன்சென்ற ஹதீஸ் எண்கள் - 97, 336 மற்றும் அவற்றின் அடிக்குறிப்புகள்

284. காண்க: முன்சென்ற ஹதீஸ் எண்கள் - 88, 337 மற்றும் அவற்றின் அடிக்குறிப்புகள்.

345 நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

இறந்தவர் தமது மண்ணறையில் ஒப்பாரி வைத்து அழப்படுவதால், அவர் (இறந்தவர்) வேதனை செய்யப்படுவார்.

இதை உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.[illegible]

346 உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள் கூறியதாவது:

நாங்கள் ஒரு நாள் நபி (ஸல்) அவர்களுக்கு அருகில் இருந்தோம். அப்போது தூய வெள்ளை நிற ஆடை அணிந்த, அடர்ந்த கறுப்பு நிறத்தில் தலைமுடி உடைய ஒருவர் வந்தார். பயணத்தில் வந்த எந்த அடையாளமும் அவரிடம் காணப்படவில்லை. அல்லது, (எந்த அடையாளத்தையும்) நாங்கள் காணவில்லை. எங்களுள் எவருக்கும் அவரை (யார் எனத்) தெரியவில்லை. அவர் நபி (ஸல்) அவர்களுக்கு அருகில் வந்து தமது முழங்கால்களை நபியவர்களின் முழங்கால்களோடு இணைத்துக் கொண்டு (நெருக்கமாக) அமர்ந்தார். அவர் தம் கைகளைத் தம் தொடைகள்மீது வைத்(து அமர்ந்)தார்.

பிறகு, "முஹம்மதே! இஸ்லாத்தைப் பற்றி எனக்குச் சொல்லுங்கள்!" என்று கூறிவிட்டு, "இஸ்லாம் என்றால் என்ன?" என்று கேட்டார். அதற்கு நபி (ஸல்) அவர்கள், "இஸ்லாம் என்பது, அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை என்றும், முஹம்மது (ஆகிய நான்) அல்லாஹ்வின் தூதர் என்றும் நீங்கள் உறுதி கூறுவதாகும். மேலும் தொழுகையைக் கடைப்பிடிப்பதும் 'ஸகாத்' (எனும் கட்டாய தர்மத்தை) வழங்குவதும் ரமளான் மாதத்தில் நோன்பு நோற்பதும் கஅபாவுக்குச் சென்றுவர இயன்றால், ஹஜ் செய்வதும் ஆகும்" என்று விடையளித்தார்கள். அதற்கு அந்த மனிதர், "சரியாகச் சொன்னீர்" என்றார்.

அவர் இவ்வாறு கூறியதைக் கேட்டு, அவரே கேள்வியும் கேட்டுவிட்டு, அவரே நபி (ஸல்) அவர்கள் அளித்த பதிலை உறுதிப்படுத்தவும் செய்கிறாரே என்று நாங்கள் வியந்தோம்!

அடுத்து அவர், "ஈமான் (இறைநம்பிக்கை) பற்றி எனக்குச் சொல்லுங்கள்" என்று கேட்டார். அதற்கு நபி (ஸல்) அவர்கள், "ஈமான் என்பது, அல்லாஹ்வையும் அவனுடைய வானவர்களையும் அவனுடைய வேதங்களையும் அவனுடைய தூதர்களையும் இறுதி

٣٤٥ حدثنا محمد بن جعفر حدثنا سعيد عن قتادة عن سعيد بن المسيب عن ابن عمر عن عمر رضي الله عنه أن النبي ﷺ قال: الميت يعذب في قبره بما نيح عليه.

٣٤٦ حدثنا محمد بن جعفر حدثنا كهمس عن ابن بريدة ويزيد بن هارون حدثنا كهمس عن ابن بريدة عن يحيى بن يعمر سمع ابن عمر قال: حدثني عمر بن الخطاب رضي الله عنه قال: بينما نحن ذات يوم عند نبي الله ﷺ إذ طلع علينا رجل شديد بياض الثياب شديد سواد الشعر لا يرى قال يزيد لا نرى عليه أثر السفر ولا يعرفه منا أحد حتى جلس إلى نبي الله ﷺ، فأسند ركبتيه إلى ركبتيه ووضع كفيه على فخذيه، ثم قال: يا محمد أخبرني عن الإسلام ما الإسلام؟ فقال: الإسلام أن تشهد أن لا إله إلا الله وأن محمدا رسول الله، وتقيم الصلاة وتؤتي الزكاة وتصوم رمضان وتحج البيت إن استطعت إليه سبيلا، قال: صدقت، قال: فعجبنا له يسأله ويصدقه قال ثم قال: أخبرني عن الإيمان، قال: الإيمان أن تؤمن بالله وملائكته وكتبه ورسله واليوم الآخر

[illegible]. காண்க: [illegible] - 175, 335 மற்றும் [illegible].

நாளையும், நன்மை - தீமை அனைத்தும் விதியின்படியே நடக்கின்றன என்றும் நீங்கள் நம்புவதாகும்" என்று கூறினார்கள். அதற்கும் அம்மனிதர், "சரியாகச் சொன்னீர்" என்று கூறினார்

அடுத்து அம்மனிதர், "இஹ்சான் பற்றி எனக்குச் சொல்லுங்கள். 'இஹ்சான்' (அழகிய முறையில் செயலாற்றல்) என்றால் என்ன?" என்று கேட்டார். அதற்கு நபி (ஸல்) அவர்கள், "(இஹ்சான் என்பது,) அல்லாஹ்வை நீங்கள் பார்த்துக்கொண்டிருப்பதைப் போன்ற உணர்வுடன் நீங்கள் வழிபடுவதாகும். அவனை நீங்கள் பார்க்கவில்லை என்றாலும், அவன் உங்களைப் பார்க்கிறான் (என்ற உணர்வுடன் செயல்படுவ தாகும்)!" என்று விடையளித்தார்கள்.

அம்மனிதர், "மறுமை (யுக முடிவு) நாளைப் பற்றி (அது எப்போது வரும் என) எனக்குச் சொல்லுங்கள்" என்று கேட்க, நபி (ஸல்) அவர்கள், "கேள்வி கேட்கப்படுபவர் (அதாவது நான்), கேட்பவரைவிட (அதாவது உங்களைவிட) அதிகம் அறிந்தவர் அல்லர் (இது பற்றி எனக்கும் தெரியாது; உங்களுக்கும் தெரியாது)!" என்று கூறினார்கள்.

அம்மனிதர், "அவ்வாறாயின், மறுமை நாளின் அடையாளங்களைப் பற்றி எனக்குச் சொல்லுங்கள்!" என்று கேட்டார். அதற்கு நபி (ஸல்) அவர்கள், "அடிமைப் பெண், தன் எஜமானியைப் பெற்றெடுப்பதும், காலில் செருப்பில்லா அரைகுறை ஆடைகளை அணிந்த ஏழைகளான ஆட்டு இடையர்கள் போட்டி போட்டுக்கொண்டு உயரமான கட்டடங்கள் கட்டுவதை நீங்கள் காண்பதும் (அதன் அடையாளங்கள்) ஆகும்" என விடையளித்தார்கள். பின்னர் அந்த மனிதர் சென்றுவிட்டார்

நீண்ட அவகாசம் -யஸீது பின் ஹாரூன் அவர்களது அறிவிப்பில் 'மூன்று நாட்கள்'- கழிந்த பின்னர் என்னிடம் நபி (ஸல்) அவர்கள், "உமரே! கேள்வி கேட்ட அந்த ஆள் யார் என்று உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டார்கள் நான், "அல்லாஹ்வும் அவனுடைய தூதருமே நன்கறிந்தவர்கள்" என்று சொன்னேன் நபி (ஸல்) அவர்கள், "அவர்தாம் (வானவர்) ஜிப்ரீல். உங்களுக்கு உங்களது மார்க்கத்தைக் கற்றுக் தருவதற்காக உங்களிடம் அவர் வந்தார்" என்று கூறினார்கள்.[286]

وَالْقَدَرِ كُلِّهِ خَيْرِهِ وَشَرِّهِ، قَالَ صَدَقْتَ قَالَ: فَأَخْبِرْنِي عَنِ الْإِحْسَانِ مَا الْإِحْسَانُ؟ قَالَ يَزِيدُ أَنْ تَعْبُدَ اللَّهَ كَأَنَّكَ تَرَاهُ فَإِنْ لَمْ تَكُنْ تَرَاهُ فَإِنَّهُ يَرَاكَ، قَالَ فَأَخْبِرْنِي عَنِ السَّاعَةِ قَالَ: مَا الْمَسْئُولُ عَنْهَا بِأَعْلَمَ بِهَا مِنَ السَّائِلِ، قَالَ: فَأَخْبِرْنِي عَنْ أَمَارَاتِهَا، قَالَ: أَنْ تَلِدَ الْأَمَةُ رَبَّتَهَا وَأَنْ تَرَى الْحُفَاةَ الْعُرَاةَ رِعَاءَ الشَّاءِ يَتَطَاوَلُونَ فِي الْبِنَاءِ، قَالَ ثُمَّ انْطَلَقَ قَالَ فَلَبِثَ مَلِيًّا قَالَ يَزِيدُ ثَلَاثًا، فَقَالَ لِي رَسُولُ اللَّهِ ﷺ: يَا عُمَرُ أَتَدْرِي مَنِ السَّائِلُ؟ قَالَ: قُلْتُ اللَّهُ وَرَسُولُهُ أَعْلَمُ، قَالَ: فَإِنَّهُ جِبْرِيلُ أَتَاكُمْ يُعَلِّمُكُمْ دِينَكُمْ.

حَدَّثَنَا عَبْدُ اللَّهِ بْنُ يَزِيدَ حَدَّثَنَا كَهْمَسٌ عَنْ عَبْدِ اللَّهِ بْنِ بُرَيْدَةَ عَنْ يَحْيَى بْنِ يَعْمَرَ سَمِعَ ابْنَ عُمَرَ قَالَ حَدَّثَنَا عُمَرُ رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ: كُنَّا جُلُوسًا عِنْدَ رَسُولِ اللَّهِ ﷺ فَذَكَرَ الْحَدِيثَ إِلَّا أَنَّهُ قَالَ: وَلَا يُرَى عَلَيْهِ أَثَرُ السَّفَرِ وَقَالَ قَالَ عُمَرُ رَضِيَ اللَّهُ عَنْهُ: فَلَبِثْتُ ثَلَاثًا فَقَالَ لِي رَسُولُ اللَّهِ ﷺ يَا عُمَرُ.

٣٤٧ حدثنا بَهْزٌ قَالَ وَحَدَّثَنَا عَفَّانُ قَالَا حَدَّثَنَا هَمَّامٌ حَدَّثَنَا قَتَادَةُ عَنْ أَبِي نَضْرَةَ قَالَ: قُلْتُ لِجَابِرِ بْنِ عَبْدِ اللَّهِ: إِنَّ ابْنَ الزُّبَيْرِ رَضِيَ اللَّهُ عَنْهُ

347 அபூ நள்ரா (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

நான் ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரலி) அவர்களிடம், "அப்துல்லாஹ் பின் அஸ்ஸுபைர்

286. பார்க்க: புகாரி ஹதீஸ் எண்கள் - 50, 4777; முஸ்லிம் - 5, 7.

تَنْهَى عَنِ الْمُتْعَةِ وَإِنَّ ابْنَ عَبَّاسٍ يَأْمُرُ بِهَا قَالَ فَقَالَ لِي عَلَى يَدَيَّ جَرَى الْحَدِيثُ تَمَتَّعْنَا مَعَ رَسُولِ اللَّهِ ﷺ قَالَ عَفَّانُ: وَمَعَ أَبِي بَكْرٍ فَلَمَّا وَلِيَ عُمَرُ رَضِيَ اللَّهُ عَنْهُ خَطَبَ النَّاسَ، فَقَالَ: إِنَّ الْقُرْآنَ هُوَ الْقُرْآنُ وَإِنَّ رَسُولَ اللَّهِ ﷺ هُوَ الرَّسُولُ وَإِنَّهُمَا كَانَتَا مُتْعَتَانِ عَلَى عَهْدِ رَسُولِ اللَّهِ ﷺ إِحْدَاهُمَا مُتْعَةُ الْحَجِّ وَالْأُخْرَى مُتْعَةُ النِّسَاءِ.

٣٤٨ حَدَّثَنَا حَجَّاجٌ أَنْبَأَنَا ابْنُ لَهِيعَةَ عَنْ عَبْدِ اللَّهِ بْنِ هُبَيْرَةَ عَنْ أَبِي تَمِيمٍ أَنَّهُ سَمِعَ عُمَرَ بْنَ الْخَطَّابِ رَضِيَ اللَّهُ عَنْهُ يَقُولُ: سَمِعْتُ النَّبِيَّ ﷺ يَقُولُ: لَوْ أَنَّكُمْ تَوَكَّلْتُمْ عَلَى اللَّهِ حَقَّ تَوَكُّلِهِ لَرَزَقَكُمْ كَمَا يَرْزُقُ الطَّيْرَ تَغْدُو خِمَاصًا وَتَرُوحُ بِطَانًا.

٣٤٩ حَدَّثَنَا حَجَّاجٌ حَدَّثَنَا لَيْثٌ حَدَّثَنِي بُكَيْرُ بْنُ عَبْدِ اللَّهِ عَنْ بُسْرِ بْنِ سَعِيدٍ عَنِ ابْنِ السَّاعِدِيِّ الْمَالِكِيِّ

(ரலி) அவர்கள் (ஹஜ் காலத்தில் 'உம்ரா'வுக்கு இஹ்ராம் அணிந்து, அதை நிறைவேற்றி விட்டுப் பிறகு 'துல்ஹஜ்' எட்டாவது நாள் ஹஜ்ஜுக்கு இஹ்ராம் அணிந்து பயனடையும்) 'முத்அத்துல் ஹஜ்' (தமத்துஉ) முறைக்குத் தடை விதிக்கிறார்கள். ஆனால், இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களோ, அதைச் செய்யுமாறு கூறுகிறார்களே (எது சரி)?" என்று கேட்டேன். அப்போது அவர்கள் கூறினார்கள்:

இதுபற்றி என்னிடம் என்னோடே தொடர்புடைய ஹதீஸ் உள்ளது. நாங்கள் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுடனும் அபூபக்ர் (ரலி) அவர்களுடனும் 'முத்ஆ' முறையில் ஹஜ் செய்துள்ளோம். உமர் (ரலி) அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றபோது, அவர்கள் மக்களுக்கு உரை நிகழ்த்தினார்கள். அப்போது அவர்கள், "நிச்சயமாக குர்ஆன் குர்ஆனாகவே உள்ளது. (அதில் கூறப்படும் 'தமத்துஉ' ஹஜ் அப்படியே உள்ளது.) அல்லாஹ்வின் தூதராகவே அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களும் உள்ளார்கள். (அதாவது அவர்களின் நிலைபாடும் அப்படியே உள்ளது.) அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் காலத்தில் இரண்டு 'முத்ஆக்கள்' இருந்தன. அவற்றுள் ஒன்று, 'முத்அத்துல் ஹஜ்' ஆகும். மற்றொன்று, 'முத்அத்துந் நிசா' (எனும் தவணை முறையில் பெண்ணை மணத்தல்) ஆகும்" என்று குறிப்பிட்டார்கள்.[287]

348 உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள் கூறியதாவது:

நபி (ஸல்) அவர்கள், "நீங்கள் அல்லாஹ்வைச் சார்ந்திருக்க வேண்டிய விதத்தில் சார்ந்திருந்தால், பறவைக்கு உணவளிப்பதுபோல், உங்களுக்கும் அவன் உணவளிப்பான். பறவைகள், காலையில் வெறும் வயிற்றுடன் புறப்பட்டுச் சென்று, மாலையில் வயிறு நிரம்பிய நிலையில் (கூட்டுக்குத்) திரும்புகின்றன" என்று கூறியதை நான் கேட்டுள்ளேன்.[288]

349 இப்னுஸ் ஸாஇதீ அல்மாலிக்கீ (ரலி) அவர்கள் கூறியதாவது:

---

287. 'முத்அத்துந் நிசா' [illegible] (முஸ்லிம் 2722) [illegible] (முஸ்லிம் 2730) [illegible]
புகாரி ஹதீஸ் எண்கள் - [illegible], 5115, 5117, 5118; முஸ்லிம் - 2722, 2727, 2730, 2731

288. [illegible] - 200 [illegible]

أَنَّهُ قَالَ: اسْتَعْمَلَنِي عُمَرُ بْنُ الْخَطَّابِ رَضِيَ اللَّهُ عَنْهُ عَلَى الصَّدَقَةِ فَلَمَّا فَرَغْتُ مِنْهَا وَأَدَّيْتُهَا إِلَيْهِ، أَمَرَ لِي بِعُمَالَةٍ فَقُلْتُ لَهُ: إِنَّمَا عَمِلْتُ لِلَّهِ وَأَجْرِي عَلَى اللَّهِ، قَالَ: خُذْ مَا أُعْطِيتَ فَإِنِّي قَدْ عَمِلْتُ عَلَى عَهْدِ رَسُولِ اللَّهِ ﷺ فَعَمَّلَنِي، فَقُلْتُ مِثْلَ قَوْلِكَ، فَقَالَ لِي رَسُولُ اللَّهِ ﷺ: إِذَا أُعْطِيتَ شَيْئًا مِنْ غَيْرِ أَنْ تَسْأَلَ فَكُلْ وَتَصَدَّقْ.

(கலீஃபா) உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள் என்னை 'ஸகாத்' வசூலிக்கும் அதிகாரியாக நியமித்தார்கள். நான் அந்தப் பணியை முடித்துவிட்டு (வந்து), உமர் (ரலி) அவர்களிடம் ஸகாத் பொருட்களை ஒப்படைத்தபோது, எனக்கு ஊதியம் கொடுக்கக் கட்டளையிட்டார்கள். அப்போது, "நான் இந்த வேலையை அல்லாஹ்வுக்காகவே செய்தேன். எனக்குரிய ஊதியம் அல்லாஹ்விடமே உள்ளது" என்று சொன்னேன். அதற்கு உமர் (ரலி) அவர்கள் (பின்வருமாறு) கூறினார்கள்:

(நீங்களாகக் கேட்காமல்,) உங்களுக்கு ஏதேனும் வழங்கப்பட்டால், அதை நீங்கள் பெற்றுக்கொள்ளுங்கள். ஏனெனில், நான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களது காலத்தில் ஸகாத் வசூலிப்பவனாக இருந்தேன். அதற்காக அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் எனக்கு ஊதியம் வழங்கினார்கள். நீங்கள் சொன்னதைப் போன்றே நானும் சொன்னேன். அப்போது என்னிடம் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "நீங்களாகக் கேட்காமல் ஏதேனும் உங்களுக்கு (நீங்கள் செய்த பணிக்காக) வழங்கப்பட்டால், அதை நீங்கள் (வாங்கி) உட்கொள்ளுங்கள்; தர்மமும் செய்யுங்கள்" என்று சொன்னார்கள்.[289]

٣٥٠ حَدَّثَنَا حَجَّاجٌ حَدَّثَنَا لَيْثٌ حَدَّثَنِي بُكَيْرٌ عَنْ عَبْدِ الْمَلِكِ بْنِ سَعِيدٍ الْأَنْصَارِيِّ عَنْ جَابِرِ بْنِ عَبْدِ اللَّهِ عَنْ عُمَرَ بْنِ الْخَطَّابِ رَضِيَ اللَّهُ عَنْهُ أَنَّهُ قَالَ: هَشِشْتُ يَوْمًا فَقَبَّلْتُ وَأَنَا صَائِمٌ فَأَتَيْتُ رَسُولَ اللَّهِ ﷺ، فَقُلْتُ صَنَعْتُ الْيَوْمَ أَمْرًا عَظِيمًا قَبَّلْتُ وَأَنَا صَائِمٌ، فَقَالَ رَسُولُ اللَّهِ ﷺ: أَرَأَيْتَ لَوْ تَمَضْمَضْتَ بِمَاءٍ وَأَنْتَ صَائِمٌ، فَقُلْتُ: لَا بَأْسَ بِذَلِكَ، فَقَالَ رَسُولُ اللَّهِ ﷺ: فَفِيمَ.

350 உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள் கூறியதாவது:

ஒரு நாள் நான் உணர்ச்சி வசப்பட்டு, நோன்பு நோற்றிருந்த நிலையில் (என் மனைவியை) முத்தமிட்டேன். பிறகு நபி (ஸல்) அவர்களிடம் சென்று, "இன்று நான் பெரும் (பாவச்) செயல் ஒன்றைச் செய்துவிட்டேன். நான் நோன்பு நோற்ற நிலையில் (என் மனைவியை) முத்தமிட்டுவிட்டேன்" என்று கூறினேன். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "நீங்கள் நோன்பு நோற்றிருக்கும் நிலையில் தண்ணீரால் வாய் கொப்பளித்தால் என்ன (அது குற்றமாகுமா?), கூறுங்கள்?" என்று கேட்டார்கள். நான், "அதனால் குற்றமில்லை" என்றேன். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "அப்படியானால், இதில் மட்டும் என்ன (குற்றம் வரப்போகிறது)?" என்று கேட்டார்கள்.[290]

٣٥١ حَدَّثَنَا يَحْيَى بْنُ إِسْحَاقَ أَنْبَأَنَا ابْنُ لَهِيعَةَ حَدَّثَنَا عَبْدُ اللَّهِ بْنُ هُبَيْرَةَ قَالَ سَمِعْتُ أَبَا تَمِيمٍ الْجَيْشَانِيَّ يَقُولُ: سَمِعْتُ عُمَرَ بْنَ الْخَطَّابِ رَضِيَ اللَّهُ عَنْهُ يَقُولُ: سَمِعْتُ رَسُولَ اللَّهِ ﷺ يَقُولُ: لَوْ أَنَّكُمْ كُنْتُمْ تَوَكَّلُونَ عَلَى اللَّهِ حَقَّ تَوَكُّلِهِ لَرَزَقَكُمْ

351 உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள் கூறியதாவது:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "நீங்கள் அல்லாஹ்வைச் சார்ந்திருக்க

289. காண்க: முன்சென்ற ஹதீஸ் எண்கள் - 96, 131, 267 மற்றும் அவற்றின் அடிக்குறிப்புகள்

290. காண்க: முன்சென்ற ஹதீஸ் எண் - 132 மற்றும் அதன் அடிக்குறிப்பு

كَمَا يُرْزَقُ الطَّيْرُ أَلَا تَرَوْنَ أَنَّهَا تَغْدُو خِمَاصًا وَتَرُوحُ بِطَانًا.

...வேண்டிய விதத்தில் சார்ந்திருந்தால், பறவைக்கு உணவளிப்பதுபோல், உங்களுக்கும் அவன் உணவளிப்பான். நீங்கள் பார்க்கவில்லையா? பறவைகள், காலையில் வெறும் வயிற்றுடன் புறப்பட்டுச் சென்று, மாலையில் வயிறு நிரம்பிய நிலையில் (கூட்டுக்குத்) திரும்புகின்றன" என்று கூறியதை நான் கேட்டுள்ளேன்.[291]

٣٥٢ حَدَّثَنَا أَبُو نُعَيْمٍ حَدَّثَنَا سُفْيَانُ عَنْ عَلْقَمَةَ بْنِ مَرْثَدٍ عَنْ سُلَيْمَانَ بْنِ بُرَيْدَةَ عَنِ ابْنِ يَعْمَرَ قَالَ: قُلْتُ لِابْنِ عُمَرَ رَضِيَ اللَّهُ عَنْهُ: إِنَّا نُسَافِرُ فِي الْآفَاقِ فَنَلْقَى قَوْمًا يَقُولُونَ لَا قَدَرَ، فَقَالَ ابْنُ عُمَرَ: إِذَا لَقِيتُمُوهُمْ فَأَخْبِرُوهُمْ أَنَّ عَبْدَ اللَّهِ بْنَ عُمَرَ مِنْهُمْ بَرِيءٌ وَأَنَّهُمْ مِنْهُ بُرَاءٌ ثَلَاثًا، ثُمَّ أَنْشَأَ يُحَدِّثُ بَيْنَمَا نَحْنُ عِنْدَ رَسُولِ اللَّهِ ﷺ فَجَاءَ رَجُلٌ فَذَكَرَ مِنْ هَيْئَتِهِ، فَقَالَ رَسُولُ اللَّهِ ﷺ: ادْنُهْ فَدَنَا، فَقَالَ ادْنُهْ فَدَنَا فَقَالَ: ادْنُهْ فَدَنَا حَتَّى كَادَ رُكْبَتَاهُ تَمَسَّانِ

352 யஹ்யா பின் யஅமர் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

நான் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்களிடம், "நாங்கள் பல பகுதிகளுக்குப் பயணம் மேற்கொள்கிறோம். அப்போது, 'தலைவிதி[292] என எதுவும் இல்லை' என்று கூறுகின்ற மக்களைச் சந்திக்கிறோம் (அவர்களிடம் நாங்கள் என்ன சொல்ல வேண்டும்?)" என்று கேட்டேன். அதற்கு அவர்கள், "அவர்களை நீங்கள் சந்தித்தால், 'அவர்களை விட்டு அப்துல்லாஹ் பின் உமர் ஆகிய நானும், என்னை விட்டு அவர்களும் விலகிவிட்டனர்' என்று தெரிவித்துவிடுங்கள்" என்று மூன்று தடவை கூறினார்கள். பிறகு பின்வருமாறு கூறலானார்கள்:[293]

(ஒரு நாள்) நாங்கள் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுக்கு அருகில் இருந்தோம். அப்போது ஒருவர் வந்தார். பிறகு, அவரது தோற்றத்தைப் பற்றி விளக்கிவிட்டுத் தொடர்ந்து கூறினார்கள்:

அப்போது அந்த மனிதரிடம் அல்லாஹ்வின் தூதர் (ஸல்), "அருகில் வாருங்கள்" என்று கூறினார்கள். அவர் அருகில் வந்தார். "இன்னும் அருகில் வாருங்கள்" என அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அழைத்தார்கள். அவர் இன்னும் அருகில் வந்தார்.

---

291. காண்க: முன்சென்ற ஹதீஸ் எண்கள் - 200, 348 மற்றும் அவற்றின் அடிக்குறிப்புகள்.

292. முஸ்லிம் ஒருவர் ஈமான் எனும் நம்பிக்கை கொள்ள வேண்டியவற்றுள் விதியும் ஒன்றாகும். விதியை நம்பவில்லையெனில் அவர் முஸ்லிமாக இருக்க முடியாது. ஆனால், 'கதரிய்யா' என்ற பிரிவினர் விதியை மறுத்தனர். [illegible]

293. இங்கே உமர் (ரலி) அவர்களின் புதல்வர் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்களே இந்த நிகழ்வில் தொடர்புடையவர் போன்று ஹதீஸின் வாசகம் அமைந்துள்ளது. ஆனால், முஸ்லிம் ஹதீஸ் எண் [illegible] 'பிறகு அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: என் தந்தை உமர் பின் [illegible] (ரலி) அவர்கள் என்னிடம் தெரிவித்தார்கள்' என்ற வாசகம் இடம்பெற்றுள்ளது. எனவே, பின்வரும் செய்தியை அறிவிப்பவர் உமர் (ரலி) அவர்கள்தாம் என விளங்க முடிகிறது. பார்க்க: முஸ்லிம் ஹதீஸ் எண் - 1

رُكْبَتَيْهِ فَقَالَ: يَا رَسُولَ اللهِ أَخْبِرْنِي مَا الْإِيمَانُ أَوْ
عَنِ الْإِيمَانِ؟ قَالَ: تُؤْمِنُ بِاللهِ وَمَلَائِكَتِهِ وَكُتُبِهِ وَرُسُلِهِ
وَالْيَوْمِ الْآخِرِ وَتُؤْمِنُ بِالْقَدَرِ قَالَ سُفْيَانُ أُرَاهُ قَالَ
خَيْرِهِ وَشَرِّهِ، قَالَ: فَمَا الْإِسْلَامُ؟ قَالَ: إِقَامُ الصَّلَاةِ
وَإِيتَاءُ الزَّكَاةِ وَحَجُّ الْبَيْتِ وَصِيَامُ شَهْرِ رَمَضَانَ
وَغُسْلٌ مِنَ الْجَنَابَةِ كُلُّ ذَلِكَ، قَالَ: صَدَقْتَ صَدَقْتَ
قَالَ الْقَوْمُ: مَا رَأَيْنَا رَجُلًا أَشَدَّ تَوْقِيرًا لِرَسُولِ اللهِ
ﷺ مِنْ هَذَا كَأَنَّهُ يُعَلِّمُ رَسُولَ اللهِ ﷺ، ثُمَّ قَالَ: يَا
رَسُولَ اللهِ أَخْبِرْنِي عَنِ الْإِحْسَانِ، قَالَ: أَنْ تَعْبُدَ اللهَ
أَوْ تَعْبُدَهُ كَأَنَّكَ تَرَاهُ فَإِنْ لَا تَرَاهُ فَإِنَّهُ يَرَاكَ. كُلُّ
ذَلِكَ نَقُولُ مَا رَأَيْنَا رَجُلًا أَشَدَّ تَوْقِيرًا لِرَسُولِ اللهِ
مِنْ هَذَا، فَيَقُولُ: صَدَقْتَ صَدَقْتَ، قَالَ: أَخْبِرْنِي عَنِ
السَّاعَةِ، قَالَ: مَا الْمَسْئُولُ عَنْهَا بِأَعْلَمَ بِهَا مِنَ السَّائِلِ
قَالَ فَقَالَ: صَدَقْتَ، قَالَ ذَلِكَ مِرَارًا مَا رَأَيْنَا رَجُلًا

இறுதியாக, அவருடைய முழங்கால்கள் நபி (ஸல்) அவர்களின் முழங்கால்களைத் தொட்டுக்கொண்டிருந்தன

அப்போது அவர், "அல்லாஹ்வின் தூதரே! ஈமான் (இறைநம்பிக்கை) என்றால் என்ன? அல்லது இறைநம்பிக்கையைப் பற்றி எனக்குக் கூறுங்கள்" என்று கேட்டார். அதற்கு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "அல்லாஹ்வையும் அவனுடைய வானவர்களையும் அவனுடைய வேதங்களையும் அவனுடைய தூதர்களையும் இறுதி நாளையும் நன்மை-தீமை ஆகிய அனைத்தும் விதியின்படியே நடக்கின்றன என்று நீங்கள் நம்புவதாகும்" என்று விடையளித்தார்கள்.

அடுத்து அவர், "இஸ்லாம் என்றால் என்ன?" என்று கேட்டார். அதற்கு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "தொழுகையைக் கடைப்பிடிப்பதும் ஸகாத் வழங்குவதும் இறையில்லம் கஅபாவில் ஹஜ் செய்வதும் ரமளான் மாதத்தில் நோன்பு நோற்பதும் பெருந்துடக்கிற்காகக் கடமையான குளியலை நிறைவேற்றுவதும் ஆகும்" என விடையளித்தார்கள்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் ஒவ்வொரு முறையும் விடையளித்ததும், "சரியாகச் சொன்னீர்கள்; சரியாகச் சொன்னீர்கள்" என்று அவர் கூறிக்கொண்டிருந்தார். மக்கள், "இவரைவிட அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களை மிகவும் கண்ணியப்படுத்துகின்ற ஒருவரை நாங்கள் கண்டதில்லை" என்று கூறிக்கொண்டனர் அந்த மனிதரே அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுக்குக் கற்றுக்கொடுத்ததைப் போன்றிருந்தது

பிறகு அவர், "அல்லாஹ்வின் தூதரே! 'இஹ்சான்' (அழகிய முறையில் செயலாற்றல்) பற்றி எனக்குக் கூறுங்கள்?" என்று கேட்டார் அதற்கு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "(இஹ்சான் என்பது,) அல்லாஹ்வை நீங்கள் பார்த்துக்கொண்டிருப்பதைப் போன்ற உணர்வுடன் வழிபடுவதாகும். ஏனெனில், அவனை நீங்கள் பார்க்கவில்லை என்றாலும், அவன் உங்களைப் பார்க்கின்றான் (என்ற உணர்வுடன் செயல்படுவதாகும்)" என்று விடையளித்தார்கள் ஒவ்வொரு முறையும் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் விடையளித்ததும், "நீங்கள் சரியாகச் சொன்னீர்கள்; நீங்கள் சரியாகச் சொன்னீர்கள்" என்று அவர் கூறியதைக் கேட்டு, "இவரைவிட அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களைக் கண்ணியப்படுத்துகின்ற ஒருவரை நாங்கள் கண்டதில்லை" என்று நாங்கள் கூறினோம்.

பிறகு அவர், "மறுமை பற்றி எனக்குக் கூறுங்கள்?" என்று கேட்டார் அதற்கு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், கேள்வி கேட்கப்படுபவர் (அதாவது நான்), கேள்வி கேட்பவரைவிட (அதாவது உங்களைவிட) மிகவும் அறிந்தவர் அல்லர். (இது பற்றி எனக்கும் தெரியாது; உங்களுக்கும் தெரியாது)" என்று கூறினார்கள் அதற்கு அவர், "சரியாகச் சொன்னீர்கள்" என்று கூறினார் இவ்வாறு அவர் பலமுறை கூறினார்.

அப்போது நாங்கள், "இவரைவிட அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களைக் கண்ணியப்படுத்துகின்ற ஒருவரை நாங்கள் கண்டதில்லை" என்று கூறினோம். பிறகு அவர் திரும்பிச் சென்றுவிட்டார்.

(இந்த ஹதீஸின் அறிவிப்பாளர்தொடரில் ஐந்தாவது அறிவிப்பாளராக இடம்பெற்றுள்ள) சுஃப்யான் அஸ்ஸவ்ரீ (ரஹ்) அவர்கள் கூறினார்கள்:

பின்வரும் தகவலும் எனக்குக் கிடைத்தது:

பிறகு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "அந்த மனிதரைத் தேடி அழைத்து வாருங்கள்" என்று கூறினார்கள். மக்கள் தேடிப் பார்த்தனர் அவர்களால் அவரைக் காண முடியவில்லை. அப்போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "இவர்தான் (வானவர்) ஜிப்ரீல் (அலை). உங்களது மார்க்கத்தை உங்களுக்குக் கற்றுத்தருவதற்காகவே அவர் உங்களிடம் வந்தார். அவர் எந்தத் தோற்றத்தில் வந்தாலும், (உடனடியாக) அவரை நான் அறிந்துகொள்ளாமல் இருந்ததில்லை; (இப்போது அவர் வந்த) இந்தத் தோற்றத்தில் தவிர" என்று கூறினார்கள்.

أشد توقيرا لرسول الله ﷺ من هذا ثم ولى، قال
سفيان فبلغني أن رسول الله ﷺ قال: التمسوه
فلم يجدوه، قال: هذا جبريل جاءكم يعلمكم دينكم
ما أتاني في صورة إلا عرفته غير هذه الصورة.
حدثنا أبو أحمد حدثنا سفيان عن علقمة بن
مرثد عن سليمان بن بريدة عن ابن يعمر قال:
سألت ابن عمر أو سأله رجل إنا نسير في هذه
الأرض فنلقى قوما يقولون لا قدر، فقال ابن عمر:
إذا لقيت أولئك فأخبرهم أن عبد الله بن عمر
منهم بريء وهم منه برآء، قالها ثلاث مرات، ثم
أنشأ يحدثنا قال: بينا نحن عند رسول الله ﷺ
فجاء رجل، فقال: يا رسول الله أدنو فقال ادنه
فدنا رتوة ثم قال: يا رسول الله أدنو فقال ادنه
فدنا رتوة ثم قال: يا رسول الله أدنو فقال ادنه
فدنا رتوة حتى كادت أن تمس ركبتاه ركبة

இந்த ஹதீஸ் மற்றோர் அறிவிப்பாளர்தொடர் வழியாகவும் வந்துள்ளது அதில் பின்வருமாறு காணப்படுகிறது:

யஹ்யா பின் யஅமர் (ரஹ்) அவர்கள் கூறினார்கள்:

இப்னு உமர் (ரலி) அவர்களிடம் நானோ அல்லது மற்றொருவரோ, "நாங்கள் இந்த பூமியில் பயணம் மேற்கொள்கிறபோது, 'தலைவிதி என்பது கிடையாது' என்று கூறுகின்ற மக்களைச் சந்திக்கிறோம் (அவர்களிடம் நாங்கள் என்ன சொல்ல வேண்டும்)?" என்று கேட்டேன். அதற்கு இப்னு உமர் (ரலி) அவர்கள், "நீ அவர்களைச் சந்தித்தால், அவர்களை விட்டு அப்துல்லாஹ் பின் உமர் ஆகிய நானும் என்னை விட்டு அவர்களும் விலகிவிட்டனர்' என்று தெரிவித்துவிடு" என்று மூன்றுமுறை கூறினார்கள். பின்னர் பின்வருமாறு கூறலானார்கள்:

(ஒரு நாள்) நாங்கள் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் இருந்தோம். அப்போது ஒருவர் வந்து, "அல்லாஹ்வின் தூதரே! நான் அருகில் வரலாமா?" என்று கேட்டார். "அருகில் வாருங்கள்" என அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அவர் ஓர் எட்டு வைத்து அருகில் வந்தார். பிறகு, "அல்லாஹ்வின் தூதரே! நான் இன்னும் அருகில் வரலாமா?" என்று (மீண்டும்) கேட்டார். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "அருகில் வாருங்கள்" என்று கூறினார்கள். அவர் மற்றோர் எட்டு வைத்து அருகில் வந்தார் பிறகு, "அல்லாஹ்வின் தூதரே! நான் (இன்னும்) அருகில் வரலாமா?" என்று கேட்டார். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "அருகில் வாருங்கள்" என்று

கூறியதும், அவர் இன்னோர் எட்டு வைத்து, இன்னும் அருகில் வந்தார். இறுதியில் அவரது முழங்கால்கள் அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்களது முழங்காலைத் தொடுமளவுக்கு நெருங்கினார். பிறகு, "அல்லாஹ்வின் தூதரே! ஈமான் (இறைநம்பிக்கை) என்றால் என்ன?" என்று கேட்டார். தொடர்ந்து, மேற்கண்ட தகவல்கள் இடம்பெறுகின்றன.[294]

رَسُولِ اللَّهِ ﷺ فَقَالَ: يَا رَسُولَ اللَّهِ مَا الإِيمَانُ؟ فَذَكَرَ مَعْنَاهُ.

353 அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

அறப்போருக்குச் செல்லும் வீரருடைய தலைக்கு ஒருவர் நிழல் அளித்தால், மறுமை நாளில் அவருக்கு அல்லாஹ் நிழல் அளிப்பான். ஒருவர் அறப்போர் வீரர் ஒருவருக்குத் தேவையானவற்றை (அவர் பிறரளவில் தேவையாகாத அளவுக்கு நிறைவாக) ஏற்பாடு செய்து கொடுத்து, அவரைத் தன்னிறைவு உடையவராக ஆக்கினால், அவருக்குக் கிடைப்பதைப் போன்ற நற்பலன் இவருக்கும் உண்டு. ஒருவர் அல்லாஹ்வின் பெயர் நினைவுகூரப்படும் பள்ளிவாசல் ஒன்றை எழுப்பினால், அதற்குப் பகரமாக அவருக்காக அல்லாஹ் சொர்க்கத்தில் மாளிகை ஒன்றை எழுப்புகிறான்.

இதை உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.[295]

٣٥٣ حدثنا حَسَنُ بْنُ مُوسَى الأَشْيَبُ حَدَّثَنَا ابْنُ لَهِيعَةَ حَدَّثَنَا الْوَلِيدُ بْنُ أَبِي الْوَلِيدِ عَنْ عُثْمَانَ بْنِ عَبْدِ اللَّهِ بْنِ سُرَاقَةَ الْعَدَوِيِّ عَنْ عُمَرَ بْنِ الْخَطَّابِ رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ قَالَ رَسُولُ اللَّهِ ﷺ: مَنْ أَظَلَّ رَأْسَ غَازٍ أَظَلَّهُ اللَّهُ يَوْمَ الْقِيَامَةِ، وَمَنْ جَهَّزَ غَازِيًا حَتَّى يَسْتَقِلَّ بِجَهَازِهِ كَانَ لَهُ مِثْلُ أَجْرِهِ، وَمَنْ بَنَى مَسْجِدًا يُذْكَرُ فِيهِ اسْمُ اللَّهِ بَنَى اللَّهُ لَهُ بَيْتًا فِي الْجَنَّةِ.

354 நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

٣٥٤ حدثنا عَتَّابٌ يَعْنِي ابْنَ زِيَادٍ حَدَّثَنَا عَبْدُ اللَّهِ يَعْنِي ابْنَ الْمُبَارَكِ أَنْبَأَنَا يُونُسُ عَنِ الزُّهْرِيِّ عَنِ السَّائِبِ بْنِ يَزِيدَ وَعُبَيْدِ اللَّهِ بْنِ عَبْدِ اللَّهِ بْنِ عُتْبَةَ عَنْ عَبْدِ الرَّحْمَنِ بْنِ عَبْدٍ عَنْ عُمَرَ بْنِ الْخَطَّابِ رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ عَبْدُ اللَّهِ: وَقَدْ بَلَغَ بِهِ أَبِي إِلَى النَّبِيِّ ﷺ قَالَ: مَنْ فَاتَهُ شَيْءٌ مِنْ وِرْدِهِ أَوْ قَالَ مِنْ حِزْبِهِ مِنَ اللَّيْلِ فَقَرَأَهُ مَا بَيْنَ صَلَاةِ الْفَجْرِ إِلَى الظُّهْرِ فَكَأَنَّمَا قَرَأَهُ مِنْ لَيْلَتِهِ.

ஒருவர் இரவில் வாடிக்கையாக ஓதிவருபவற்றுள் சிலவற்றை, அல்லது அதன் ஒரு பகுதியை (ஓதாமல்) தவறவிட்டு, அதை அவர் ஃபஜ்ருத் தொழுகைக்கும் லுஹ்ர் தொழுகைக்கும் இடையே ஓதினால், அவர் அதை இரவில் ஓதியவரைப் போன்றவரே ஆவார்.

இதை உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.[296]

---

294. இதே ஹதீஸ் ஒரு சில வார்த்தை மாற்றங்களுடன் புகாரீ, முஸ்லிம் போன்ற நூல்களிலும் இதே நூலில் முன்னர் பல இடங்களிலும் வந்துள்ளது. ஆனால் இந்த ஹதீஸில் இஸ்லாம் என்றால் என்ன? என்ற கேள்விக்கு விடையளிக்கும் போது "அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை; முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் ஆவார்கள்" என்பது பற்றிய குறிப்பு இல்லை. அதற்குப் பகரமாக, பெருந்தொடக்கிலிருந்து குளிப்பதும் இஸ்லாமியக் கடமைகளுள் ஒன்று என்ற பொருளில் கூறப்பட்டுள்ளது. பார்க்க: முன்சென்ற ஹதீஸ் எண்கள் - 179, 346

295. காண்க: முன்சென்ற ஹதீஸ் எண் - 121 மற்றும் அதன் அடிக்குறிப்பு

296. காண்க: முன்சென்ற ஹதீஸ் எண் - 215 மற்றும் அதன் அடிக்குறிப்பு

355 அபூமைசரா (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

மதுவைத் தடை செய்யும் இறைவசனம் அருளப்பெறுவதற்குமுன் உமர் (ரலி) அவர்கள், "இறைவா! மதுவைப் பற்றி ஒரு தீர்க்கமான முடிவை எங்களுக்கு வழங்குவாயாக" என்று கூறினார்கள். அப்போது, "(நபியே!) மதுவைப் பற்றியும் சூதாட்டத்தைப் பற்றியும் அவர்கள் உம்மிடம் வினவுகின்றனர். அவ்விரண்டிலும் பெரும் பாதிப்பும் மக்களுக்குச் சில பயன்களும் உள்ளன" எனும் 'அல்பகரா' அத்தியாயத்திலுள்ள இந்த இறைவசனம் (2:219) அருளப்பெற்றது. உடனே உமர் (ரலி) அவர்கள் அழைக்கப்பட்டு, அவர்களுக்கு இந்த இறைவசனம் ஓதிக்காட்டப்பெற்றது.

மீண்டும் உமர் (ரலி) அவர்கள், "இறைவா! மதுவைப் பற்றி ஒரு தீர்க்கமான முடிவை எங்களுக்கு வழங்குவாயாக!" என்று கூறினார்கள். அப்போது, "இறைநம்பிக்கை கொண்டோரே! நீங்கள் போதையில் இருக்கும்போது தொழுகையை நெருங்காதீர்கள்" (4:43) எனும் 'அந்நிசா' அத்தியாயத்திலுள்ள இறைவசனம் அருளப்பெற்றது. இதையடுத்து, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுடைய பொது அறிவிப்பாளர் தொழுகைக்கு 'இகாமத்' சொல்லும்போது, "போதையில் இருப்பவர் யாரும் கட்டாயமாகத் தொழுகைக்கு வரக் கூடாது" என்று அறிவிப்புச் செய்யலானார். அப்போதும் உமர் (ரலி) அவர்கள் அழைக்கப்பட்டு, அவர்களிடம் இந்த வசனம் (4:43) ஓதிக் காட்டப்பெற்றது. அப்போதும் அவர்கள், "இறைவா! மதுவைப் பற்றி ஒரு தீர்க்கமான முடிவை எங்களுக்கு வழங்குவாயாக!" என்றே கூறினார்கள்.

பின்னர் 'அல்மாயிதா' எனும் (5ஆவது) அத்தியாயத்திலுள்ள, "மது, சூது, பலிபீடங்கள், குறிபார்க்கும் அம்புகள் ஆகியவை அருவருக்கத் தக்க 'ஷைத்தானின் நடவடிக்கைகள் ஆகும்" எனும் - (5:90,91) வசனங்கள் அருளப்பெற்றன. அப்போது, உமர் (ரலி) அவர்கள் அழைக்கப்பட்டு, அவர்களுக்கு இவ்வசனங்கள் ஓதிக் காண்பிக்கப்பெற்றன. அந்த வசனங்களில், "ஆகவே நீங்கள் விலகிவிடுவீர்கள் அல்லவா?" என்ற தொடரை அடைந்தபோது, "நாங்கள் விலகிவிட்டோம்; நாங்கள் விலகிவிட்டோம்" என்று உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.[297]

٣٥٥ حدثنا خلف بن الوليد حدثنا إسرائيل عن أبي إسحاق عن أبي ميسرة عن عمر بن الخطاب رضي الله عنه قال: لما نزل تحريم الخمر قال: اللهم بين لنا في الخمر بيانا شافيا فنزلت هذه الآية التي في سورة البقرة ﴿يسألونك عن الخمر والميسر قل فيهما إثم كبير﴾ قال فدعي عمر رضي الله عنه فقرئت عليه، فقال: اللهم بين لنا في الخمر بيانا شافيا فنزلت الآية التي في سورة النساء ﴿يا أيها الذين آمنوا لا تقربوا الصلاة وأنتم سكارى﴾ فكان منادي رسول الله ﷺ إذا أقام الصلاة نادى أن لا يقربن الصلاة سكران، فدعي عمر رضي الله عنه فقرئت عليه، فقال: اللهم بين لنا في الخمر بيانا شافيا فنزلت الآية التي في المائدة، فدعي عمر رضي الله عنه فقرئت عليه فلما بلغ فهل أنتم منتهون؟ قال فقال عمر رضي الله عنه: انتهينا انتهينا.

356 அபூவாயில் (ஷகீக் பின் சலமா - ரஹ்) அவர்கள் கூறியதாவது:

٣٥٦ حدثنا عفان حدثنا شعبة عن الحكم عن أبي وائل عن صبي بن معبد أنه كان نصرانيا

297. இந்த ஹதீஸ் அபூதாவூத் (3165), திர்மிதீ (2975), நஸாயீ (5443), அல்முஸ்னத் (328), ஹாகிம் (3058), பைஹகீயின் ஸுனனுல் குப்ரா (8/285), நஸாயீயின் ஸுனனுல் குப்ரா (3/202, 203), தபரானீயின் அல்முஉஜமுல் அவ்ஸத் (1520) உள்ளிட்ட நூல்களிலும் இடம்பெற்றுள்ளது.

تَغْلِبِيًّا فَأَسْلَمَ فَسَأَلَ أَيُّ الْعَمَلِ أَفْضَلُ فَقِيلَ لَهُ الْجِهَادُ
فِي سَبِيلِ اللَّهِ عَزَّ وَجَلَّ فَأَرَادَ أَنْ يُجَاهِدَ، فَقِيلَ لَهُ:
أَحَجَجْتَ؟ قَالَ: لَا، فَقِيلَ لَهُ حُجَّ وَاعْتَمِرْ ثُمَّ
جَاهِدْ فَأَهَلَّ بِهِمَا جَمِيعًا، فَوَافَقَ زَيْدَ بْنَ صُوحَانَ
وَسَلْمَانَ بْنَ رَبِيعَةَ فَقَالَا هُوَ أَضَلُّ مِنْ نَاقَتِهِ أَوْ مَا
هُوَ بِأَهْدَى مِنْ جَمَلِهِ، فَانْطَلَقَ إِلَى عُمَرَ رَضِيَ اللَّهُ
عَنْهُ فَأَخْبَرَهُ بِقَوْلِهِمَا، فَقَالَ: هُدِيتَ لِسُنَّةِ نَبِيِّكَ
ﷺ أَوْ لِسُنَّةِ رَسُولِ اللَّهِ ﷺ.

٣٥٧ حَدَّثَنَا يَحْيَى بْنُ سَعِيدٍ عَنْ هِشَامٍ قَالَ:
أَخْبَرَنِي أَبِي أَنَّ عُمَرَ رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ لِلْحَجَرِ:
إِنَّمَا أَنْتَ حَجَرٌ وَلَوْلَا أَنِّي رَأَيْتُ رَسُولَ اللَّهِ ﷺ
يُقَبِّلُكَ مَا قَبَّلْتُكَ ثُمَّ قَبَّلَهُ.

٣٥٨ حَدَّثَنَا وَكِيعٌ عَنْ هِشَامٍ عَنْ أَبِيهِ أَنَّ عُمَرَ
رَضِيَ اللَّهُ عَنْهُ أَتَى الْحَجَرَ فَقَالَ: إِنِّي لَأَعْلَمُ أَنَّكَ
حَجَرٌ لَا تَضُرُّ وَلَا تَنْفَعُ وَلَوْلَا أَنِّي رَأَيْتُ رَسُولَ
اللَّهِ ﷺ يُقَبِّلُكَ مَا قَبَّلْتُكَ قَالَ ثُمَّ قَبَّلَهُ.

சுபய்யு பின் மஅபத் என்பார் 'தஃக்லிப்' குலத்தைச் சேர்ந்த கிராமப்புறக் கிறிஸ்தவராக இருந்தார். பிறகு அவர் இஸ்லாத்தை ஏற்றார். பின்னர், "நற்செயல்களுள் சிறந்தது எது?" என்று கேட்டார். "வல்லமையும் மாண்பும் மிக்க அல்லாஹ்வின் பாதையில் அறப்போர் புரிவது" என்று அவரிடம் கூறப்பட்டது. ஆகவே, அவர் அறப்போருக்குச் செல்ல விரும்பினார் அப்போது அவரிடம், "நீர் ஹஜ் செய்துவிட்டீரா?" என்று கேட்கப்பட்டது. அவர், "இல்லை" என்றார். அப்போது (அவரிடம்), "ஹஜ்ஜும் உம்ராவும் செய்துவிட்டுப் பிறகு அறப்போருக்குச் செல்வீராக" என்று கூறப்பட்டது.

அவர் (மக்கா நோக்கிப் புறப்பட்டு, 'ஹவாபித்' எனுமிடத்திற்கு வந்து), உம்ராவுக்கும் ஹஜ்ஜுக்கும் சேர்த்து 'இஹ்ராம்' அணிந்தார். அப்போது அவரை ஸைது பின் ஸூஹான், ஸல்மான் பின் ரபீஆ ஆகிய இருவரும் பார்த்துவிட்டு, "இவர் தமது ஒட்டகத்தைவிட வழிதவறியவர்; அல்லது இவர் தமது ஒட்டகத்தைவிட நேர்வழி செல்பவர் அல்லர்" என்று கூறினர். பிறகு சுபய்யு, (கலீஃபா) உமர் (ரலி) அவர்களிடம் வந்தபோது, அவ்விருவரும் கூறியதைத் தெரிவித்தார். அப்போது உமர் (ரலி) அவர்கள், "நீர் உம்முடைய நபியின் வழிமுறைக்கே அல்லது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் வழிமுறைக்கே வழிகாட்டப்பட்டுள்ளீர்" என்று கூறினார்கள்.[298]

357 உர்வா பின் அஸ்ஸுபைர் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

உமர் (ரலி) அவர்கள் 'ஹஜருல் அஸ்வத்' கல்லை நோக்கி, "நீ ஒரு கல்தான். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் உன்னை முத்தமிட்டதை நான் பார்த்திராவிட்டால், உன்னை நான் முத்தமிட மாட்டேன்" என்று கூறிவிட்டு (ஹஜருல் அஸ்வத் கல்லை நெருங்கி,) அதை முத்தமிட்டார்கள்.[299]

358 உர்வா பின் அஸ்ஸுபைர் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

உமர் (ரலி) அவர்கள் 'ஹஜருல் அஸ்வது' அருகில் வந்து, "நீ தீமையோ நன்மையோ செய்ய இயலாத ஒரு கல்தான் என்பதை நான் நன்கறிவேன். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் உன்னை முத்தமிட்டதை நான் பார்த்திராவிட்டால், உன்னை நான் முத்தமிட மாட்டேன்" என்று கூறிவிட்டு, அதை முத்தமிட்டதை நான் கண்டேன்.[300]

---

298. காண்க: முஸ்னது அஹ்மத் ஹதீஸ் எண்கள் - 79, 184, 221, 246 மற்றும் அவற்றின் அடிக்குறிப்புகள்.

299. காண்க: முஸ்னது அஹ்மத் ஹதீஸ் எண்கள் - 95, 220, 223 மற்றும் அவற்றின் அடிக்குறிப்புகள்.

300. பார்க்க: முஸ்னது அஹ்மத் ஹதீஸ் எண்கள் - 95, 126, 171, 220, 223. இந்த ஹதீஸின் அறிவிப்பாளராக உர்வா (ரஹ்) இடம்பெறுகின்றார்கள். ஆனால் அவர்கள், உமர் (ரலி) அவர்களைச் சந்தித்ததில்லை. எனவே இது அறிவிப்பாளர்தொடர் [illegible]

359 சுவைது பின் ஃகஃப்லா (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

உமர் (ரலி) அவர்கள் 'ஹஜருல் அஸ்வத்' கல்மீது இதழ் பதித்து, முத்தமிட்டார்கள் பிறகு, "அபுல் காசிம் (ஸல்) அவர்கள் உன்னிடம் அதிக ஈடுபாடு காட்டியதை நான் பார்த்தேன்" என்று கூறினார்கள்.[301]

٣٥٩ حدثنا وكيع حدثنا سفيان عن إبراهيم بن عبد الأعلى عن سويد بن غفلة أن عمر رضي الله عنه قبّله والتزمه ثم قال: رأيت أبا القاسم ﷺ بك حفيا يعني الحجر.

360 அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

இந்தத் திசையிலிருந்து -அதாவது கிழக்கிலிருந்து- இரவு முன்னோக்கி வந்து, அந்தத் திசையிலிருந்து -அதாவது மேற்கிலிருந்து- பகல் பின்னோக்கிப் போனால், நோன்பாளி நோன்பை நிறைவு செய்ய வேண்டும்

இதை உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.[302]

٣٦٠ حدثنا وكيع حدثنا هشام بن عروة عن أبيه عن عاصم بن عمر عن أبيه قال قال رسول الله ﷺ: إذا جاء الليل من ههنا وذهب النهار من ههنا فقد أفطر الصائم.

361 அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

கொடுத்த தானத்தைத் திரும்பப் பெறுபவரின் நிலை, எடுத்த வாந்தியைத் தானே தின்பவரின் நிலைக்கு ஒப்பானதாகும்.

இதை உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.[303]

٣٦١ حدثنا وكيع حدثنا هشام بن سعد عن زيد بن أسلم عن أبيه عن عمر رضي الله عنه قال قال رسول الله ﷺ: مثل الذي يعود في صدقته كمثل الذي يعود في قيئه.

362 உமர் (ரலி) அவர்கள் கூறியதாவது:

அறியாமைக் கால மக்கள் (ஹஜ்ஜின்போது), "ஸபீர் மலையே! சூரியனை உதயமாக்கு! நாங்கள் விரைவாகப் புறப்படவேண்டும்" என்று கூறாமல் (அதாவது சூரியன் உதயமாகாமல்) 'முஸ்தலிஃபா'விலிருந்து புறப்பட்டுச் செல்ல மாட்டார்கள்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் (ஹஜ்ஜுக்கு) வந்தபோது, அவர்களுக்கு மாறு செய்தார்கள் அவர்கள் வைகறை வெளிச்சம் வந்தபின், அதிகாலைத் தொழுகையைத் தொழுபவர்களுக்குத் தேவைப்படும் அளவுக்கு நேரம் இருக்கும்போதே, சூரியன் உதிப்பதற்கு முன்பே முஸ்தலிஃபாவை விட்டுப் புறப்பட்டுச் செல்பவராய் இருந்தார்கள்.[304]

٣٦٢ حدثنا وكيع عن سفيان عن أبي إسحاق عن عمرو بن ميمون عن عمر رضي الله عنه قال: كان أهل الجاهلية لا يفيضون من جمع حتى يقولوا أشرق ثبير كيما نغير، فلما جاء رسول الله ﷺ خالفهم فكان يدفع من جمع مقدار صلاة المسفرين بصلاة الغداة قبل طلوع الشمس.

---

* [illegible] - 95, 126, 171, 220, 223, 245, 263, 307, 341, 358, 359 மற்றும் [illegible]

301. [illegible] - 263 மற்றும் [illegible]

302. [illegible] - 187, 320 மற்றும் [illegible]

303. [illegible] - 161 மற்றும் [illegible]

304. [illegible] - 80 மற்றும் [illegible]

٣٦٣ حَدَّثَنَا وَكِيعٌ حَدَّثَنَا رَبَاحُ بْنُ أَبِي مَعْرُوفٍ عَنِ ابْنِ أَبِي مُلَيْكَةَ سَمِعَ ابْنَ عَبَّاسٍ رَضِيَ اللَّهُ عَنْهُ يَقُولُ: قَالَ لِي عُمَرُ رَضِيَ اللَّهُ عَنْهُ: سَمِعْتُ رَسُولَ اللَّهِ ﷺ يَقُولُ: إِنَّ الْمَيِّتَ لَيُعَذَّبُ بِبُكَاءِ أَهْلِهِ عَلَيْهِ.

363 இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறியதாவது:

என்னிடம் உமர் (ரலி) அவர்கள், "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், 'இறந்தவருக்காக அவருடைய குடும்பத்தார் அழுவதால், அவர் (மண்ணறையில்) வேதனை செய்யப்படுகிறார்' என்று கூறினார்கள்" என்றார்கள்.[305]

٣٦٤ حَدَّثَنَا وَكِيعٌ عَنْ حَسَنِ بْنِ صَالِحٍ عَنْ عَاصِمِ بْنِ عُبَيْدِ اللَّهِ عَنْ سَالِمٍ عَنِ ابْنِ عُمَرَ رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ قَالَ عُمَرُ رَضِيَ اللَّهُ عَنْهُ: أَنَا رَأَيْتُ رَسُولَ اللَّهِ ﷺ يَمْسَحُ عَلَى خُفَّيْهِ فِي السَّفَرِ.

364 உமர் (ரலி) அவர்கள் கூறியதாவது:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் பயணத்தில் ('உளூ' செய்யும்போது கால்களைக் கழுவுவதற்குப் பகரமாக ஈரக் கையால்) தமது காலுறைகள் மீது தடவியதை ('மஸ்ஹு'ச் செய்ததை) நான் கண்டேன்.[306]

٣٦٥ حَدَّثَنَا وَكِيعٌ عَنْ إِسْرَائِيلَ عَنْ أَبِي إِسْحَاقَ عَنْ عَمْرِو بْنِ مَيْمُونٍ عَنْ عُمَرَ رَضِيَ اللَّهُ عَنْهُ أَنَّ النَّبِيَّ ﷺ كَانَ يَتَعَوَّذُ مِنَ الْبُخْلِ وَالْجُبْنِ وَعَذَابِ الْقَبْرِ وَأَرْذَلِ الْعُمُرِ وَفِتْنَةِ الصَّدْرِ، قَالَ وَكِيعٌ: فِتْنَةُ الصَّدْرِ أَنْ يَمُوتَ الرَّجُلُ، وَذَكَرَ وَكِيعٌ الْفِتْنَةَ لَمْ يَتُبْ مِنْهَا.

365 உமர் (ரலி) அவர்கள் கூறியதாவது:

நபி (ஸல்) அவர்கள் கருமித்தனம், கோழைத்தனம், மண்ணறையின் (கப்று) வேதனை, தள்ளாமை, மனக் குழப்பம், ஆகியவற்றிலிருந்து (அல்லாஹ்விடம்) பாதுகாப்புக் கோரிவந்தார்கள்.[307]

(இந்த ஹதீஸின் அறிவிப்பாளர்தொடரில் ஐந்தாவது அறிவிப்பாளராக இடம்பெற்றுள்ள) வகீஉ (ரஹ்) அவர்கள், "மனக் குழப்பம் என்பது, ஒருவர் ஒரு குழப்பத்தில் ஈடுபட்டு, அதிலிருந்து பாவமன்னிப்புக் கோரி மீளாமலேயே இறந்துபோவதாகும்" என்று (விளக்கம்) கூறினார்கள்.

٣٦٦ حَدَّثَنَا وَكِيعٌ حَدَّثَنَا عُمَرُ بْنُ الْوَلِيدِ الشَّنِّيُّ عَنْ عَبْدِ اللَّهِ بْنِ بُرَيْدَةَ قَالَ: جَلَسَ عُمَرُ رَضِيَ اللَّهُ عَنْهُ مَجْلِسًا كَانَ رَسُولُ اللَّهِ ﷺ يَجْلِسُهُ تَمُرُّ عَلَيْهِ الْجَنَائِزُ، قَالَ فَمَرُّوا بِجَنَازَةٍ فَأَثْنَوْا خَيْرًا فَقَالَ: وَجَبَتْ

366 அப்துல்லாஹ் பின் புரைதா (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

(ஒரு நாள்) உமர் (ரலி) அவர்கள், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அமரும் ஓர் இடத்தில் அமர்ந்திருந்தார்கள். அப்போது அவர்களைக் கடந்து பல இறந்த உடல்களைக் கொண்டு சென்றனர். (முதலில்) ஓர் உடலைக் கொண்டு சென்றனர். அப்போது மக்கள் இறந்துபோன அந்த மனிதரைப் பாராட்டி நல்லவிதமாகப் பேசினர். உடனே உமர் (ரலி) அவர்கள், "(அவருக்குச் சொர்க்கம்) உறுதியாகிவிட்டது"

305. காண்க: முன்சென்ற ஹதீஸ் எண்கள் - 175, 239, 240, 256, 258, 274, 278, 298, 318, 336, 345 மற்றும் அடிக்குறிப்புகள். இந்த ஹதீஸ் புகாரீ (1206, 1207, 1210), முஸ்லிம் (1536-1539, 1542-45, 1547), திர்மிதீ (923), நஸாயீ (1825), இப்னுமாஜா (1582), முவத்தா மாலிக் (494) உள்ளிட்ட நூல்களிலும் இடம்பெற்றுள்ளது.

306. இந்த ஹதீஸின் அறிவிப்பாளர்தொடரில் [illegible] இடம்பெற்றுள்ளார். [illegible]. காண்க: முன்சென்ற ஹதீஸ் எண்கள் - 83, 84, 123, 211, 325 ஆகியவற்றிலும் புகாரீ (192, 2082), முஸ்லிம் (456, 458) ஆகிய நூல்களிலும் [illegible] இடம்பெற்றுள்ளன. [illegible] ஹதீஸ் ஆகும்.

307. காண்க: முன்சென்ற ஹதீஸ் எண் - 139 மற்றும் அதன் அடிக்குறிப்பு.

என்று சொன்னார்கள். பின்னர் மற்றோர் உடலையும் கொண்டு சென்றனர். அப்போதும் மக்கள் இறந்துபோன அந்த மனிதரைப் பாராட்டி நல்லவிதமாகப் பேசினர். உடனே உமர் (ரலி) அவர்கள், "உறுதியாகிவிட்டது" என்றார்கள். பின்னர் அவர்களைக் கடந்து இன்னோர் உடலையும் கொண்டு சென்றனர். அப்போதும் மக்கள் இறந்துபோன அந்த மனிதரைப் பாராட்டி நல்லவிதமாகப் பேசிக் கொண்டனர். அப்போதும் உமர் (ரலி) அவர்கள், "உறுதியாகிவிட்டது" என்றார்கள்

பிறகு அவர்களைக் கடந்து வேறொருவரின் உடல் கொண்டு செல்லப்பட்டது. அப்போது மக்கள், "இவன் மக்களிலேயே பெரும் பொய்யனாகத் திகழ்ந்தான்" என்று கூறினர். அப்போது உமர் (ரலி) அவர்கள், "மக்களிலேயே பெரும் பொய்யன் யாரெனில், அல்லாஹ்வின் மீது பொய்யுரைப்பவனே ஆவான். அடுத்துப் பெரும் பொய்யர்கள் யாரெனில், தம் உடலில் உள்ள தமது உயிருக்கெதிராகவே பொய்யுரைத்தவர்கள் ஆவர்" என்று கூறினார்கள்.

ثُمَّ مَرُّوا بِجَنَازَةٍ فَأَثْنَوْا خَيْرًا، فَقَالَ: وَجَبَتْ ثُمَّ مَرُّوا بِجَنَازَةٍ فَقَالُوا: خَيْرًا فَقَالَ: وَجَبَتْ ثُمَّ مَرُّوا بِجَنَازَةٍ فَقَالُوا هَذَا كَانَ أَكْذَبَ النَّاسِ فَقَالَ: إِنَّ أَكْذَبَ النَّاسِ أَكْذَبُهُمْ عَلَى اللَّهِ ثُمَّ الَّذِينَ يَلُونَهُمْ مَنْ كَذَبَ عَلَى رُوحِهِ فِي جَسَدِهِ قَالَ قَالُوا: أَرَأَيْتَ إِذَا شَهِدَ أَرْبَعَةٌ قَالَ وَجَبَتْ قَالُوا أَوْ ثَلَاثَةٌ قَالَ وَثَلَاثَةٌ وَجَبَتْ قَالُوا وَاثْنَيْنِ قَالَ: وَجَبَتْ وَلَأَنْ أَكُونَ قُلْتُ وَاحِدًا أَحَبُّ إِلَيَّ مِنْ حُمْرِ النَّعَمِ قَالَ: فَقِيلَ لِعُمَرَ هَذَا شَيْءٌ تَقُولُهُ بِرَأْيِكَ أَمْ شَيْءٌ سَمِعْتَهُ مِنْ رَسُولِ اللَّهِ ﷺ قَالَ: لَا بَلْ سَمِعْتُهُ مِنْ رَسُولِ اللَّهِ ﷺ.

٣٦٧ حَدَّثَنَا عَبْدُ الرَّحْمَنِ حَدَّثَنَا سُفْيَانُ عَنْ أَبِيهِ عَنْ عَبَايَةَ بْنِ رِفَاعَةَ قَالَ: بَلَغَ عُمَرَ رَضِيَ اللَّهُ عَنْهُ أَنَّ سَعْدًا لَمَّا بَنَى الْقَصْرَ، قَالَ: انْقَطَعَ الصُّوَيْتُ

அப்போது மக்கள், "நான்கு பேர் சாட்சியம் சொன்னாலுமா (அவருக்கு சொர்க்கம்) உறுதியாகும்?" என்று கேட்டனர் அதற்கு உமர், "(ஆம்) உறுதியாகவே செய்யும்" என்றார்கள் மக்கள், "மூன்று பேர் சாட்சியம் சொன்னாலுமா?" என்று கேட்டனர். அதற்கு உமர் (ரலி) அவர்கள், "(ஆம்) மூன்று பேர் சாட்சியம் சொன்னாலும் உறுதியாகவே செய்யும்" என்றார்கள். மக்கள், "இரண்டு பேர்..?" என்று கேட்டதற்கு, "(ஆம்) உறுதியாகவே செய்யும். ஒருவர் சாட்சியம் சொன்னாலும், அவருக்கு உறுதியாகவே செய்யும் என்று கூறுபவனாக நான் இருப்பது, (அரிய செல்வமான) சிவப்பு நிற ஒட்டகங்கள் எனக்குக் கிடைப்பதைவிட மிகவும் உகப்பானதாகும்" என்றார்கள்.

அப்போது உமர் (ரலி) அவர்களிடம், "இது உங்களது சொந்தக் கருத்தா? அல்லது இதைத் தாங்கள் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடமிருந்து செவியுற்றீர்களா?" என்று கேட்கப்பட்டது. அதற்கு உமர் (ரலி) அவர்கள், "இல்லை. நான் இதை அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடமிருந்துதான் செவியுற்றேன்" என்று கூறினார்கள்.[308]

367 அபாயா பின் ரிஃபாஆ (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

சஅது பின் அபீவக்காஸ் (ரலி) அவர்கள் (கூஃபாவின் ஆளுநராக இருந்தபோது,

308. [illegible] 133, 199, 301 [illegible]

அரசின் செயலகமாகவும் பொதுநிதிக் காப்பகமாகவும் இயங்க) மாளிகை ஒன்றை எழுப்பிக்கொண்டு. "(மக்களின்) கூக்குரல் நின்று விட்டது. (இந்த மாளிகைக்குள் எந்தச் சப்த மும் இல்லை)" என்று கூறியதாக (கலீஃபா) உமர் (ரலி) அவர்களுக்குச் செய்தி எட்டியது.

அப்போது உமர் (ரலி) அவர்கள் முஹம்மது பின் மஸ்லமா (ரலி) அவர்களை சஅது (ரலி) அவர்களிடம் அனுப்பி வைத்தார்கள். முஹம்மது பின் மஸ்லமா (ரலி) அவர்கள் (கூஃபாவுக்கு)வந்து, தமது முன்கையை (சட்டைக்குள்ளிருந்து) வெளிப்படுத்தி, ஒரு திர்ஹமுக்கு விறகுகள் வாங்கி, (அந்த மாளிகை யின் வாசலை எரிப்பதற்காக) நெருப்பு ஒன்றைப் பற்றவைத்துக்கொண்டார்கள்.

فَبَعَثَ إِلَيْهِ مُحَمَّدَ بْنَ مَسْلَمَةَ فَلَمَّا قَدِمَ أَخْرَجَ زَنْدَهُ وَأَوْرَى نَارَهُ وَابْتَاعَ حَطَبًا بِدِرْهَمٍ وَقِيلَ لِسَعْدٍ إِنَّ رَجُلًا فَعَلَ كَذَا وَكَذَا، فَقَالَ ذَاكَ مُحَمَّدُ بْنُ مَسْلَمَةَ فَخَرَجَ إِلَيْهِ فَحَلَفَ بِاللَّهِ مَا قَالَهُ، فَقَالَ نُؤَدِّي عَنْكَ الَّذِي تَقُولُهُ وَنَفْعَلُ مَا أُمِرْنَا بِهِ فَأَحْرَقَ الْبَابَ ثُمَّ أَقْبَلَ يَعْرِضُ عَلَيْهِ أَنْ يُزَوِّدَهُ فَأَبَى فَخَرَجَ فَقَدِمَ عَلَى عُمَرَ رَضِيَ اللَّهُ عَنْهُ فَهَجَّرَ إِلَيْهِ فَسَارَ ذَهَابَهُ وَرُجُوعَهُ تِسْعَ عَشْرَةَ، فَقَالَ لَوْلَا حُسْنُ الظَّنِّ بِكَ لَرَأَيْنَا أَنَّكَ لَمْ تُؤَدِّ عَنَّا، قَالَ بَلَى أَرْسَلَ يَقْرَأُ السَّلَامَ وَيَعْتَذِرُ وَيَحْلِفُ بِاللَّهِ مَا قَالَهُ، قَالَ: فَهَلْ زَوَّدَكَ شَيْئًا؟ قَالَ: لَا قَالَ: فَمَا مَنَعَكَ أَنْ تُزَوِّدَنِي أَنْتَ؟

அப்போது சஅது (ரலி) அவர்களிடம், "ஒருவர் இன்னின்னவாறு செய்தார்" என்று கூறப்பட்டது. (அந்த மனிதர் யாரென விசாரித்து அறிந்த) சஅது (ரலி) அவர்கள், "அவர் முஹம்மது பின் மஸ்லமாதான்" என்று கூறிவிட்டு, அவரை நோக்கிப் புறப்பட்டுவந்து, அல்லாஹ்வின் மீது ஆணையிட்டு, தாம் சொன்னதைப் பற்றித் தெரிவித்தார்கள்.

அப்போது முஹம்மது பின் மஸ்லமா (ரலி) அவர்கள், "தாங்கள் கூறுவதை தங்கள் சார்பாக நாம் (கலீஃபா அவர்களிடம்) தெரிவிப்போம். (அதே நேரத்தில்) எமக்குக் கட்டளையிடப்பட்டதை நாம் செய்வோம்" என்று கூறிவிட்டுப் பிறகு அந்த மாளிகை யின் கதவை எரித்துவிட்டார்கள்.

பிறகு (மதீனாவுக்குத் திரும்பிச் செல்லப் போன) முஹம்மது பின் மஸ்லமா (ரலி) அவர்கள், சஅது (ரலி) அவர்களிடம் தமது பயணத்திற்கு வேண்டிய உணவைத் தயார் செய்து தருமாறு கோரினார்கள். ஆனால், சஅது (ரலி) அவர்கள் மறுத்துவிட்டார்கள்.

பிறகு முஹம்மது பின் மஸ்லமா (ரலி) அவர்கள் புறப்பட்டு, உமர் (ரலி) அவர்களி டம் ஓர் அதிகாலை நேரத்தில் வந்து சேர்ந்தார்கள். அவர்கள் (மதீனாவிலிருந்து கூஃபா வரை) சென்று திரும்புவதற்கு பத்தொன்பது நாட்கள் ஆகியிருந்தன.

அப்போது உமர் (ரலி) அவர்கள் முஹம்மது பின் மஸ்லமா (ரலி) அவர்களிடம், "உங்களைப் பற்றிய நல்லெண்ணம் மட்டும் எனக்கு இல்லாவிட்டால், எமக்காக (நாம் இட்ட கட்டளையை) நீங்கள் நிறைவு செய்யமாட்டீர்கள் என்றே நாம் கருதியிருப் போம்" என்று கூறினார்கள்.

அப்போது முஹம்மது பின் மஸ்லமா (ரலி) அவர்கள், "ஆம்" என்று கூறிவிட்டு, சஅது (ரலி) அவர்கள் சலாம் கூறிவிட்டதையும், அவர்கள் சாக்குபோக்குக் கூறியதை யும், அவர்கள் அல்லாஹ்வின் மீது ஆணையிட்டுக் கூறியதையும் தெரிவித்தார்கள்.

அப்போது உமர் (ரலி) அவர்கள், "சஅது (ரலி) அவர்கள் உங்களுக்குப் பயண உணவுக்காக ஏதேனும் தந்தார்களா?" என்று கேட்டார்கள். அதற்கு முஹம்மது பின் மஸ்லமா (ரலி) அவர்கள், "இல்லை" என்று கூறிவிட்டு, "நீங்களே எனக்குப் பயண உணவு தந்துவிடாததற்கு என்ன காரணம்?" என்று (உமர் (ரலி) அவர்களிடம்) கேட்டார்கள்.

قال: إني كرهت أن آمر لك فيكون لك البارد ويكون لي الحار وحولي أهل المدينة قد قتلهم الجوع، وقد سمعت رسول الله ﷺ يقول: لا يشبع الرجل دون جاره.

آخر مسند عمر بن الخطاب رضي الله عنه

அதற்கு உமர் (ரலி) அவர்கள், "நான் உங்களுக்காக (பயண உணவு தருமாறு) உத்தரவிட்டு, உங்களுக்கு மகிழ்ச்சியும் எனக்குக் கவலையும் ஏற்படுவதை நான் விரும்பவில்லை. என்னைச் சுற்றிலுமுள்ள மதீனாவாசிகள் பசி பட்டினியால் செத்துக்கொண்டிருக்கின்றனர். (அதனால்தான் உங்களுக்குப் பயண உணவு தர முடியவில்லை) அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், 'தம் அண்டை வீட்டார் பசித்திருக்க, ஒருவர் தான் மட்டும் வயிறு நிரம்ப உண்ணக் கூடாது' என்று கூறியதை நான் கேட்டுள்ளேன்" என்றார்கள்.[309]

உமர் (ரலி) அறிவித்த நபிமொழிகள் நிறைவுற்றன.

حديث السقيفة:

'பனூ சாஇதா சமுதாயக் கூடம்' தொடர்பான செய்தி[310]

٣٦٨ حدثنا إسحاق بن عيسى الطباع حدثنا مالك بن أنس حدثني ابن شهاب عن عبيد الله بن عبد الله بن عتبة بن مسعود أن ابن عباس أخبره أن عبد الرحمن بن عوف رجع إلى رحله، قال ابن عباس: وكنت أقرئ عبد الرحمن بن عوف فوجدني وأنا أنتظره وذلك بمنى في آخر حجة حجها عمر بن الخطاب رضي الله عنه، قال عبد الرحمن بن عوف: إن رجلا أتى عمر بن الخطاب

368 *இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறியதாவது:*

உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள் (ஹிஜ்ரி 23ஆம் ஆண்டில்) செய்த இறுதி ஹஜ்ஜின்போது, நான் அப்துர்ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்களுக்கு (மனப்பாடம் செய்வதற்காக) குர்ஆனைக் கற்றுக்கொடுத்து வந்தேன். அக்காலை, மினாவில் உமர் (ரலி) அவர்களின் தங்குமிடத்திற்குச் சென்றுவிட்டு, அப்துர்ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்கள் திரும்பி வந்தார்கள். அவர்களை நான் எதிர் பார்த்துக்கொண்டிருந்ததைக் கண்டு, (பின்வருமாறு) கூறினார்கள்:

ஒருவர் (கலீஃபா) உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்களிடம் வந்து, "உமர் அவர்கள்

---

309. [illegible] 2630 [illegible] (1703) [illegible] (125731) [illegible]

310. [illegible]

[illegible] (368-375) [illegible] (موسوعة الحديث الشريف) [illegible] 368, 369 [illegible] 370 [illegible] 375 [illegible]

இறந்துவிட்டால், இன்ன மனிதருக்கு நான் வாக்களிப்பு (பைஅத்) செய்து கொடுப்பேன்" என்று கூறினார்

(அதைக் கேட்டுச் சினமுற்ற) உமர் (ரலி) அவர்கள், "இன்று மாலை, நான் மக்கள் முன் நின்று, தங்களுக்குத் தொடர்பில்லாத செய்தி களில் தலையிட நினைக்கும் இக்குழுவினர் குறித்து எச்சரிக்கை செய்யப் போகிறேன்" என்று சொன்னார்கள்

உடனே நான், "இறைநம்பிக்கையாளர்களின் தலைவரே! அவ்வாறு செய்யாதீர்கள். ஏனெனில், (ஹஜ்) காலத்தில் (அறிவாளர்களுடன்) விவரமற்ற மக்களும் சாமான்யர்களும் குழுமு கின்றனர். நீங்கள் (உரையாற்றுவதற்காக) மக்கள் முன் நிற்கும்போது, அவர்கள்தாம் உங்களுக்கருகே மிகுதியாக இருப்பர் நீங்கள் எழுந்து நின்று, ஏதோ ஒன்றைச் சொல்ல, அதற்கு உரிய பொருள் தந்து முறையாக விளங் காமல், அவரவர் (மனம் போன போக்கில்) தவறாகப் புரிந்துகொள்வார்களோ என நான் அஞ்சுகிறேன். ஆகவே, நீங்கள் மதீனாவுக்குச் சென்று சேரும்வரை பொறுமையாயிருங்கள். ஏனெனில், மதீனாதான் 'ஹிஜ்ரத்' மற்றும் நபி வழியின் உறைவிடமாகும். நீங்கள் (அங்குச் சென்று) அறிவுமுதிர்ச்சி உடையவர்களையும் செல்வாக்குடையவர்களையும் தனியாகச் சந்தித்து, நீங்கள் சொல்ல வேண்டியதை அழுத்தம் திருத்தமாகச் சொன்னால், அறிவு படைத்தோர் உங்கள் கூற்றை அறிந்து, அதற்கு உரிய இடமளிப்பர்" என்று சொன்னேன்

رَضِيَ اللَّهُ عَنْهُ فَقَالَ: إِنَّ فُلَانًا يَقُولُ: لَوْ قَدْ مَاتَ
عُمَرُ رَضِيَ اللَّهُ عَنْهُ بَايَعْتُ فُلَانًا، فَقَالَ عُمَرُ رَضِيَ
اللَّهُ عَنْهُ: إِنِّي قَائِمٌ الْعَشِيَّةَ فِي النَّاسِ فَمُحَذِّرُهُمْ
هَؤُلَاءِ الرَّهْطَ الَّذِينَ يُرِيدُونَ أَنْ يَغْصِبُوهُمْ أَمْرَهُمْ،
قَالَ عَبْدُ الرَّحْمَنِ: فَقُلْتُ يَا أَمِيرَ الْمُؤْمِنِينَ لَا تَفْعَلْ
فَإِنَّ الْمَوْسِمَ يَجْمَعُ رَعَاعَ النَّاسِ وَغَوْغَاءَهُمْ وَإِنَّهُمُ
الَّذِينَ يَغْلِبُونَ عَلَى مَجْلِسِكَ إِذَا قُمْتَ فِي النَّاسِ
فَأَخْشَى أَنْ تَقُولَ مَقَالَةً يَطِيرُ بِهَا أُولَئِكَ فَلَا يَعُوهَا
وَلَا يَضَعُوهَا عَلَى مَوَاضِعِهَا، وَلَكِنْ حَتَّى تَقْدَمَ
الْمَدِينَةَ فَإِنَّهَا دَارُ الْهِجْرَةِ وَالسُّنَّةِ وَتَخْلُصَ بِعُلَمَاءِ
النَّاسِ وَأَشْرَافِهِمْ فَتَقُولَ مَا قُلْتَ مُتَمَكِّنًا فَيَعُونَ
مَقَالَتَكَ وَيَضَعُونَهَا مَوَاضِعَهَا، فَقَالَ عُمَرُ رَضِيَ
اللَّهُ عَنْهُ: لَئِنْ قَدِمْتُ الْمَدِينَةَ سَالِمًا صَالِحًا لَأُكَلِّمَنَّ
بِهَا النَّاسَ فِي أَوَّلِ مَقَامٍ أَقُومُهُ، فَلَمَّا قَدِمْنَا الْمَدِينَةَ
فِي عَقِبِ ذِي الْحِجَّةِ وَكَانَ يَوْمُ الْجُمُعَةِ عَجَّلْتُ
الرَّوَاحَ صَكَّةَ الْأَعْمَى، فَقُلْتُ لِمَالِكٍ: وَمَا صَكَّةُ
الْأَعْمَى؟ قَالَ إِنَّهُ لَا يُبَالِي أَيَّ سَاعَةٍ خَرَجَ لَا يَعْرِفُ
الْحَرَّ وَالْبَرْدَ وَنَحْوَ هَذَا، فَوَجَدْتُ سَعِيدَ بْنَ زَيْدٍ

அதற்கு உமர் (ரலி) அவர்கள், "நான் நல்ல நிலையில் உடல் நலத்துடன் மதீனா சென்றடைந்தால், திண்ணமாக முதலாவது கூட்டத்திலேயே இதைப் பற்றிப் பேசப் போகிறேன்" என்று சொன்னார்கள்.

இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: அவ்வாறே நாங்கள் 'துல்ஹஜ்' மாதத்தின் பிந்திய பகுதியில் மதீனா வந்துசேர்ந்தோம். அன்று வெள்ளிக்கிழமையாக இருந்தது நான் (பள்ளிவாசலை நோக்கி) நண்பகல் நேரத்தில் கண் பார்வையற்றவர் விழுந்தடித்துச் செல்வதைப் போன்று விரைந்து சென்றேன்

-அறிவிப்பாளர் இஸ்ஹாக் பின் ஈசா (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்: நான் மாலிக் (ரஹ்) அவர்களிடம், "கண்பார்வையற்றவர் விழுந்தடித்துச் செல்வதைப் போன்று' (ஸக்கத்துல் அஃமா) என்றால் என்ன?" என்று கேட்டேன் அதற்கு மாலிக் (ரஹ்) அவர்கள், "கண்பார்வையற்றவர் வெளியில் புறப்பட்டுச் செல்லும்போது, வெயில் என்றும் நிழல் என்றும் பாராமல், எந்த நேரத்தில் செல்கிறோம் என்பதைப் பொருட்படுத்தாமல் செல்வார்" என்று கூறினார்கள் -

(பள்ளிவாசலிலுள்ள) சொற்பொழிவு மேடையின் வலப் புற மூலையில் சஈது பின் ஸைத் (பின் அம்ர் பின் நுஃபைல் (ரலி)) அவர்களைக் கண்டேன். அவர்கள் எனக்கு முன்பே சென்றுவிட்டிருந்தார்கள். ஆகவே, நான் அவருக்கு நேராக எனது முழங்கால்கள் அவருடைய முழங்கால்களைத் தொட்டுக்கொண்டிருக்கும் நிலையில் அமர்ந்துகொண்டேன்.

சிறிது நேரம்தான் ஆகியிருக்கும்; உமர் (ரலி) அவர்கள் திடீரென வந்தார்கள். நான் உமர் (ரலி) அவர்களைக் கண்டதும், "உமர் (ரலி) அவர்கள் இன்று மாலை இந்தச் சொற்பொழிவு மேடையின் மீது ஒரு செய்தியைக் கூறவிருக்கிறார்கள். இதற்குமுன் வேறெவரும் அதைக் கூறியிருக்கமுடியாது" என்றேன். இவ்வாறு நான் கூறியதற்கு சஈது பின் ஸைத் (ரலி) அவர்கள் மறுப்புத் தெரிவித்தார்கள். "வேறெவரும் கூறாத ஒன்றைக் கூறுவார் என்று நீங்கள் எப்படிச் சொல்லலாம்?" என்று கேட்டார்கள்.

பிறகு உமர் (ரலி) அவர்கள் சொற்பொழிவு மேடை மீது அமர்ந்தார்கள் 'அதான்' (தொழுகை அறிவிப்புச்) சொல்லி அமைதியானதும், உமர் (ரலி) அவர்கள் எழுந்து, அல்லாஹ்வை அவனது தகுதிக்கேற்பப் போற்றிப் புகழ்ந்தார்கள். பிறகு பின்வருமாறு கூறினார்கள்:

இறைவாழ்த்துக்குப்பின்!

மக்களே! நான் (இன்று) எதைச் சொல்ல வேண்டுமென்று விதிக்கப்பட்டுள்ளதோ, அதை நான் உங்களுக்குச் சொல்லவிருக்கிறேன் இது என் இறப்புக்கு நெருங்கிய பேச்சாகவும் இருக்கக்கூடும்; (உறுதியாக) எனக்குத் தெரியாது இதை யார் (கேட்டு) விளங்கி நினைவில் நிறுத்திக்கொள்கிறாரோ, அவர் தமது வாகனம் செல்லும் இடங்களிலெல்லாம் எடுத்துரைக்கட்டும்! யார் இதை(ச் சரியாக) விளங்க மாட்டார்களோ, அவர்கள் என்மீது பொய்யுரைப்பதை நான் அனுமதிக்கமாட்டேன்

அருள்வளமும் உயர்வுமிக்க அல்லாஹ், முஹம்மத் (ஸல்) அவர்களை உண்மை மார்க்கத்துடன் அனுப்பினான். மேலும், அவர்களுக்கு (குர்ஆன் எனும்) வேதத்தையும் அருளினான். அவன் அருளிய (வேதத்)தில் கல்லெறி தண்டனை (ரஜ்ம்) குறித்த வசனம் இருந்தது. அதை நாங்கள் ஓதியிருக்கிறோம். அதைப் புரிந்து மனனமிட்டுமிருக்கிறோம். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் (மணம் முடித்தவர் விபசாரம் புரிந்தால், அவருக்குக்) கல்லெறி தண்டனை (ரஜ்ம்) நிறைவேற்றியுள்ளார்கள். அவர்களுக்குப் பிறகு (கலீஃபாக்களாகிய) நாங்களும் அந்தத் தண்டனையை நிறைவேற்றியுள்ளோம் காலப் போக்கில் மக்களுள் சிலர், 'அல்லாஹ்வின் மீதாணையாக! இறைவேதத்தில் கல்லெறி தண்டனை குறித்த வசனத்தை நாங்கள் காணவில்லை' என்று கூறி, இறைவன் அருளிய கடமை ஒன்றைக் கைவிடுவதன் மூலம், வழி தவறிவிடுவார்களோ என நான் அஞ்சுகிறேன்.

عِنْدَ رُكْنِ الْمِنْبَرِ الْأَيْمَنِ قَدْ سَبَقَنِي فَجَلَسْتُ حِذَاءَهُ تَحُكُّ رُكْبَتِي رُكْبَتَهُ فَلَمْ أَنْشَبْ أَنْ طَلَعَ عُمَرُ رَضِيَ اللَّهُ عَنْهُ، فَلَمَّا رَأَيْتُهُ قُلْتُ: لَيَقُولَنَّ الْعَشِيَّةَ عَلَى هَذَا الْمِنْبَرِ مَقَالَةً مَا قَالَهَا عَلَيْهِ أَحَدٌ قَبْلَهُ، قَالَ فَأَنْكَرَ سَعِيدُ بْنُ زَيْدٍ ذَلِكَ، فَقَالَ: مَا عَسَيْتَ أَنْ يَقُولَ مَا لَمْ يَقُلْ أَحَدٌ، فَجَلَسَ عُمَرُ رَضِيَ اللَّهُ عَنْهُ عَلَى الْمِنْبَرِ فَلَمَّا سَكَتَ الْمُؤَذِّنُ قَامَ فَأَثْنَى عَلَى اللَّهِ بِمَا هُوَ أَهْلُهُ، ثُمَّ قَالَ: أَمَّا بَعْدُ أَيُّهَا النَّاسُ فَإِنِّي قَائِلٌ مَقَالَةً قَدْ قُدِّرَ لِي أَنْ أَقُولَهَا لَا أَدْرِي لَعَلَّهَا بَيْنَ يَدَيْ أَجَلِي فَمَنْ وَعَاهَا وَعَقَلَهَا فَلْيُحَدِّثْ بِهَا حَيْثُ انْتَهَتْ بِهِ رَاحِلَتُهُ وَمَنْ لَمْ يَعِهَا فَلَا أُحِلُّ لَهُ أَنْ يَكْذِبَ عَلَيَّ إِنَّ اللَّهَ تَبَارَكَ وَتَعَالَى بَعَثَ مُحَمَّدًا ﷺ بِالْحَقِّ وَأَنْزَلَ عَلَيْهِ الْكِتَابَ وَكَانَ مِمَّا أَنْزَلَ عَلَيْهِ آيَةُ الرَّجْمِ فَقَرَأْنَاهَا وَوَعَيْنَاهَا وَرَجَمَ رَسُولُ اللَّهِ ﷺ وَرَجَمْنَا بَعْدَهُ فَأَخْشَى إِنْ طَالَ بِالنَّاسِ زَمَانٌ أَنْ يَقُولَ قَائِلٌ لَا نَجِدُ آيَةَ الرَّجْمِ فِي كِتَابِ

اللَّه عَزَّ وَجَلَّ فَيَضِلُّوا بِتَرْكِ فَرِيضَةٍ قَدْ أَنْزَلَهَا اللَّهُ
عَزَّ وَجَلَّ، فَالرَّجْمُ فِي كِتَابِ اللَّهِ حَقٌّ عَلَى مَنْ زَنَى
إِذَا أُحْصِنَ مِنَ الرِّجَالِ وَالنِّسَاءِ إِذَا قَامَتْ الْبَيِّنَةُ أَوْ
الْحَبَلُ أَوْ الِاعْتِرَافُ أَلَا وَإِنَّا قَدْ كُنَّا نَقْرَأُ لَا تَرْغَبُوا
عَنْ آبَائِكُمْ فَإِنَّ كُفْرًا بِكُمْ أَنْ تَرْغَبُوا عَنْ آبَائِكُمْ
أَلَا وَإِنَّ رَسُولَ اللَّهِ ﷺ قَالَ: لَا تُطْرُونِي كَمَا
أُطْرِيَ عِيسَى ابْنُ مَرْيَمَ عَلَيْهِ السَّلَام فَإِنَّمَا أَنَا
عَبْدُ اللَّهِ فَقُولُوا عَبْدُ اللَّهِ وَرَسُولُهُ، وَقَدْ بَلَغَنِي أَنَّ
قَائِلًا مِنْكُمْ يَقُولُ: لَوْ قَدْ مَاتَ عُمَرُ رَضِيَ اللَّهُ عَنْهُ
بَايَعْتُ فُلَانًا فَلَا يَغْتَرَّنَّ امْرُؤٌ أَنْ يَقُولَ إِنَّ بَيْعَةَ
أَبِي بَكْرٍ رَضِيَ اللَّهُ عَنْهُ كَانَتْ فَلْتَةً أَلَا وَإِنَّهَا
كَانَتْ كَذَلِكَ أَلَا وَإِنَّ اللَّهَ عَزَّ وَجَلَّ وَقَى شَرَّهَا
وَلَيْسَ فِيكُمْ الْيَوْمَ مَنْ تُقْطَعُ إِلَيْهِ الْأَعْنَاقُ مِثْلُ أَبِي
بَكْرٍ رَضِيَ اللَّهُ عَنْهُ أَلَا وَإِنَّهُ كَانَ مِنْ خَبَرِنَا حِينَ
تُوُفِّيَ رَسُولُ اللَّهِ ﷺ أَنَّ عَلِيًّا وَالزُّبَيْرَ وَمَنْ كَانَ مَعَهُمَا
تَخَلَّفُوا فِي بَيْتِ فَاطِمَةَ رَضِيَ اللَّهُ عَنْهَا بِنْتِ رَسُولِ
اللَّهِ ﷺ وَتَخَلَّفَتْ عَنَّا الْأَنْصَارُ بِأَجْمَعِهَا فِي سَقِيفَةِ
بَنِي سَاعِدَةَ وَاجْتَمَعَ الْمُهَاجِرُونَ إِلَى أَبِي بَكْرٍ
رَضِيَ اللَّهُ عَنْهُ، فَقُلْتُ لَهُ يَا أَبَا بَكْرٍ: انْطَلِقْ بِنَا إِلَى
إِخْوَانِنَا مِنَ الْأَنْصَارِ فَانْطَلَقْنَا نَؤُمُّهُمْ حَتَّى لَقِيَنَا

மணமுடித்த ஆணோ, பெண்ணோ விபசாரம் புரிந்து, அதற்குச் சாட்சி இருந்தாலோ, கர்ப்பம் உண்டானாலோ, ஒப்புதல் வாக்கு மூலம் அளித்தாலோ, அவருக்குக் கல்லெறித் தண்டனை உண்டு என்பது இறைவேதத்தில் உள்ளதாகும். பிறகு, நாங்கள் ஓதிவந்த இறைவேதத்தில் இதையும் ஓதிவந்தோம்: 'உங்களுடைய (உண்மையான) தந்தையரைப் புறக்கணித்து (விட்டு வேறொருவரைத் தந்தையாக்கி விட வேண்டாம் அவ்வாறு உங்கள் தந்தையரைப் புறக்கணிப்பது, நன்றிகொன்ற செயலாகும்'

அறிந்துகொள்ளுங்கள்! 'மர்யமின் புதல்வர் ஈசா எல்லை மீறிப் புகழப்பட்டதைப் போன்று, என்னை நீங்கள் எல்லை மீறிப் புகழாதீர்கள்! மாறாக, (என்னைக் குறித்து நான்) அல்லாஹ்வின் அடிமை என்றும் அவனுடைய தூதர் என்றும் சொல்லுங்கள்' என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

மேலும், உங்களுள் ஒருவர், 'அல்லாஹ்வின் மீதாணையாக உமர் இறந்துவிட்டால், இன்ன மனிதருக்கு நான் வாக்களிப்புச் செய்து கொடுத்திருப்பேன்' என்று கூறுவதாக எனக்குச் செய்தி எட்டியது. '(கலீஃபா) அபூபக்ர் (ரலி) அவர்களின் வாக்களிப்பு நிகழ்வு அவசரக் கோலமாகத் தான் நடைபெற்றுமுடிந்தது' என்று கூறி, எவரும் தம்மைத் தாமே ஏமாற்றிக்கொள்ள வேண்டாம். ஆம்! அது அப்படி (அனைவரிடமும் ஆலோசிக்காமல் அவசரமாக)த்தான் நடந்தது ஆனால், (அவசரத்) தீமைகளிலிருந்து அல்லாஹ் (நம்மைப்) பாதுகாத்துவிட்டான் இன்று ஒட்டகப் பயணிகளுள் (அதாவது அரபுலகில்) அபூபக்ர் (ரலி) அவர்களைப் போன்று (சிறந்தவர்) எவரும் இலர்

அறிந்துகொள்ளுங்கள்! அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் இறந்தபோது நம்மிடையே நடந்த நிகழ்வுகளுள் ஒன்று: அலீ (ரலி), ஸுபைர் (ரலி) ஆகியோரும் அவர்களுடனிருந்த மற்ற சிலரும் (நம்மிடம்) வராமல், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் புதல்வி பாத்திமா (ரலி) அவர்களின் வீட்டில் (ஒன்றுகூடி) இருந்தனர் 'அன்சாரிகள்' அனைவரும் நம்மிடம் வராமல், 'பனூ சாஇதா' சமுதாயக் கூடத்தில் ஒன்று கூடினர் 'முஹாஜிர்கள்' அபூபக்ர் (ரலி) அவர்களிடம் வந்து ஒன்று கூடினர்

அப்போது நான் அபூபக்ர் (ரலி) அவர்களிடம், "அபூபக்ர் (ரலி) அவர்களே! வாருங்கள்! நாம் நம் சகோதரர்களான அன்சாரிகளிடம் செல்வோம் அவர்களை நாம் ஆட்சித் தலைமையில் அமர்த்துவோம்" என்று கூறிவிட்டுப் புறப்பட்டோம். (வழியில்) எங்களை நல்ல மனிதர்கள் இருவர் சந்தித்தனர் அவர்கள் இருவரும் (மதீனா) மக்களின்

رجلان صالحان فذكرا لنا الذي صنع القوم، فقالا:
أين تريدون يا معشر المهاجرين؟ فقلت: نريد
إخواننا هؤلاء من الأنصار، فقالا: لا عليكم أن لا
تقربوهم واقضوا أمركم يا معشر المهاجرين فقلت
والله لنأتينهم فانطلقنا حتى جئناهم في سقيفة
بني ساعدة فإذا هم مجتمعون وإذا بين ظهرانيهم
رجل مزمل، فقلت: من هذا؟ فقالوا: سعد بن عبادة
فقلت: ما له؟ قالوا: وجع فلما جلسنا قام خطيبهم
فأثنى على الله عز وجل بما هو أهله وقال: أما بعد
فنحن أنصار الله عز وجل وكتيبة الإسلام وأنتم
يا معشر المهاجرين رهط منا وقد دفت دافة
منكم يريدون أن يخزلونا من أصلنا ويحضنونا
من الأمر، فلما سكت أردت أن أتكلم وكنت قد
زورت مقالة أعجبتني أردت أن أقولها بين يدي
أبي بكر رضي الله عنه وقد كنت أداري منه
بعض الحد وهو كان أحلم مني وأوقر، فقال أبو
بكر رضي الله عنه على رسلك فكرهت أن أغضبه

நடவடிக்கை குறித்து எங்களிடம் கூறினர். "முஹாஜிர்களே! எங்கே செல்கிறீர்கள்?" என்று கேட்டனர். அதற்கு நான், "எங்கள் அன்சாரி சகோதரர்களைச் சந்திக்கச் செல்கிறோம்" என்று கூறினேன். அதற்கு அவ்விருவரும், "இல்லை (வேண்டாம்) அவர்களை நீங்கள் நெருங்காதீர்கள். முஹாஜிர்களே! உங்கள் நிலைபாட்டை நீங்கள் (இங்கேயே) தீர்மானித்துக்கொள்ளுங்கள் (அதுவரை, பொறுமையைக் கடைப்பிடியுங்கள்)" என்று கூறினர். உடனே நான், "அல்லாஹ்வின் மீதாணையாக! கட்டாயம் நாங்கள் அவர்களிடம் செல்லத்தான் போகிறோம்" என்று கூறிவிட்டு, 'பனூ சாஇதா' சமுதாயக் கூடத்திலிருந்த அன்சாரிகளிடம் நாங்கள் சென்றோம். அங்கு அன்சாரிகள் ஒன்றுகூடியிருந்தனர்.

அவர்களின் நடுவே போர்வை போர்த்திய மனிதர் ஒருவர் இருந்தார். நான், "இவர் யார்?" என்று கேட்டேன். மக்கள், "இவர்தாம் சஅது பின் உபாதா" என்று பதிலளித்தனர். "அவருக்கென்ன நேர்ந்துள்ளது?" என்று நான் கேட்டேன். மக்கள், "அவருக்குக் குளிர் காய்ச்சல் ஏற்பட்டுள்ளது" என்று கூறினர். நாங்கள் உட்கார்ந்ததும், அவர்களின் பேச்சாளர் எழுந்து, வல்லமையும் மாண்பும் மிக்க அல்லாஹ்வை அவனது தகுதிக்கேற்பப் போற்றிப் புகழ்ந்தார். பிறகு பின்வருமாறு கூறினார்:

இறைவாழ்த்துக்குப்பின்!

நாங்கள் (அன்சாரிகள்) வல்லமையும் மாண்பும் மிக்க அல்லாஹ்வின் (மார்க்கத்திற்கு) உதவியாளர்கள்; இஸ்லாத்தின் துருப்புகள். (அன்சாரிகளை ஒப்பிடும்போது) முஹாஜிர்களே! நீங்கள் எங்களைவிடச் சொற்பமானோர்தாம். உங்கள் கூட்டத்திலிருந்து சிலர் இரவோடிரவாக (மதீனா) வந்து சேர்ந்தார்கள். (இன்றோ) அவர்கள் எங்கள் பூர்வீகத்தைவிட்டே எங்களைப் பிரித்துவிடவும், ஆட்சியதிகாரத்திலிருந்து எங்களை வெளியேற்றிவிடவும் எண்ணுகின்றனர்" என்று கூறினார்.

(உமர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:) அன்சாரிகளின் பேச்சாளர் பேசி முடித்து அமைதியானபோது, நான் பேச நினைத்தேன். மேலும், நான் எனக்குப் பிடித்த ஓர் உரையை அழகாகத் தயாரித்து வைத்திருந்தேன். அதனை அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு முன்பே எடுத்துரைத்துவிட வேண்டும் என்றும், (அன்சாரிகளின் பேச்சால்) அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு ஏற்பட்டிருந்த சூட்டைச் சிறிதளவேனும் தணித்திட வேண்டும் என்றும் விரும்பினேன். நான் பேச முற்பட்டபோது அபூபக்ர் (ரலி) அவர்கள், "நிதானத்தைக் கையாளுங்கள்" என்று சொன்னார்கள். ஆகவே, நான் (அபூபக்ர் அவர்களுக்கு மாறுசெய்து) அவர்களுக்குச் சினம் உண்டாக்க விரும்பவில்லை. இதையடுத்து அபூபக்ர் (ரலி) அவர்கள் பேசினார்கள். அன்னார் என்னைவிடப் பொறுமைசாலியாகவும்

وَكَانَ أَعْلَمَ مِنِّي وَأَوْقَرَ وَاللَّهِ مَا تَرَكَ مِنْ كَلِمَةٍ
أَعْجَبَتْنِي فِي تَزْوِيرِي إِلَّا قَالَهَا فِي بَدِيهَتِهِ وَأَفْضَلَ
حَتَّى سَكَتَ، فَقَالَ: أَمَّا بَعْدُ فَمَا ذَكَرْتُمْ مِنْ خَيْرٍ
فَأَنْتُمْ أَهْلُهُ وَلَمْ تَعْرِفِ الْعَرَبُ هَذَا الْأَمْرَ إِلَّا لِهَذَا
الْحَيِّ مِنْ قُرَيْشٍ هُمْ أَوْسَطُ الْعَرَبِ نَسَبًا وَدَارًا
وَقَدْ رَضِيتُ لَكُمْ أَحَدَ هَذَيْنِ الرَّجُلَيْنِ أَيَّهُمَا شِئْتُمْ
وَأَخَذَ بِيَدِي وَبِيَدِ أَبِي عُبَيْدَةَ بْنِ الْجَرَّاحِ فَلَمْ أَكْرَهْ
مِمَّا قَالَ غَيْرَهَا وَكَانَ وَاللَّهِ أَنْ أُقَدَّمَ فَتُضْرَبَ
عُنُقِي لَا يُقَرِّبُنِي ذَلِكَ إِلَى إِثْمٍ أَحَبَّ إِلَيَّ مِنْ أَنْ
أَتَأَمَّرَ عَلَى قَوْمٍ فِيهِمْ أَبُو بَكْرٍ رَضِيَ اللَّهُ عَنْهُ إِلَّا
أَنْ تُغَيِّرَ نَفْسِي عِنْدَ الْمَوْتِ، فَقَالَ قَائِلٌ مِنَ الْأَنْصَارِ:
أَنَا جُذَيْلُهَا الْمُحَكَّكُ وَعُذَيْقُهَا الْمُرَجَّبُ مِنَّا أَمِيرٌ
وَمِنْكُمْ أَمِيرٌ يَا مَعْشَرَ قُرَيْشٍ، فَقُلْتُ لِمَالِكٍ: مَا
مَعْنَى أَنَا جُذَيْلُهَا الْمُحَكَّكُ وَعُذَيْقُهَا الْمُرَجَّبُ؟
قَالَ: كَأَنَّهُ يَقُولُ: أَنَا دَاهِيَتُهَا، قَالَ وَكَثُرَ اللَّغَطُ

நிதானமிக்கவராகவும் இருந்தார்கள். நான் எனக்குப் பிடித்த வகையில் அழகுபடத் தயாரித்து வைத்திருந்த உரையில் எதையும் விட்டு விடாமல், அதைப் போன்று அல்லது அதை விடவும் சிறப்பாகத் தயக்கமின்றி (தங்குதடையின்றி) அன்னார் பேசி முடித்தார்கள்.

அபூபக்ர் (ரலி) அவர்கள் (தமது உரையில் பின்வருமாறு) குறிப்பிட்டார்கள்:

இறைவாழ்த்துக்குப்பின்!

(அன்சாரிகளே!) உங்களைப் பற்றி நீங்கள் குறிப்பிட்ட (குண)நலன்களுக்கு நீங்கள் உரியவர்கள்தான். (ஆனால்,) இந்த ஆட்சியதிகாரம் என்பது, (காலங்காலமாக) இந்தக் குறைஷிக் குலத்தாருக்கு உரியதாகவே அரபியர் அறிந்து வருகின்றனர். குறைஷியர்தாம் அரபுகளிலேயே சிறந்த பாரம்பரியத்தையும் சிறந்த ஊரையும் (மக்கா) சேர்ந்தவர்கள். நான் உங்களுக்காக இந்த இருவருள் ஒருவரை திருப்திப்படுகிறேன். நீங்கள் விரும்பிய ஒருவருக்கு வாக்களி(த்து ஆட்சித் தலைவராகக் தேர்வு செய்)யுங்கள்.

இவ்வாறு கூறிவிட்டு, என் கையையும் அங்கு அமர்ந்திருந்த அபூஉபைதா பின் அல்ஜர்ராஹ் (ரலி) அவர்களின் கையையும் அபூபக்ர் (ரலி) அவர்கள் பற்றினார்கள். (இறுதியாக அவர்கள் கூறிய) இந்தச் சொல்லைத் தவிர அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறிய வேறெதையும் நான் வெறுக்கவில்லை. அல்லாஹ்வின் மீதாணையாக! அபூபக்ர் (ரலி) அவர்கள் (போன்ற தகுதியுள்ளவர்) இருக்கும் ஒரு சமுதாயத்திற்கு நான் ஆட்சித் தலைவராக ஆவதைவிட, நான் எந்தப் பாவமும் செய்யாமலேயே (மக்கள்) முன் கொண்டுவரப்பட்டு, என் கழுத்து வெட்டப்படுவதையே நான் விரும்பினேன் (இன்றுவரை இதுவே என் நிலையாகும் இதற்கு மாற்றமாக) தற்போது எனக்கு ஏற்படாத ஓர் எண்ணத்தை இறக்கும்போது என் மனம் எனக்கு ஊட்டினால், அது வேறு விஷயம்.

அப்போது அன்சாரிகளுள் ஒருவர், "நான் சிரங்கு பிடித்த ஒட்டகம் சொறிந்துகொள்வதற்கான மரக்கொம்பு ஆவேன்; முட்டுக் கொடுக்கப்பட்ட பேரீச்ச மரம் ஆவேன். (அதாவது பிரச்சினையைத் தீர்ப்பவன் ஆவேன் நான் ஒரு நல்ல யோசனை கூறுகிறேன்: அன்சாரிகளான) எங்களுள் ஒரு தலைவர்; குறைஷிக் குலத்தாரே! உங்களுள் ஒரு தலைவர்" என்றார்

-அறிவிப்பாளர் இஸ்ஹாக் பின் ஈசா (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்: நான் மாலிக் (ரஹ்) அவர்களிடம், "'நான் சிரங்கு பிடித்த ஒட்டகம் சொறிந்துகொள்வதற்கான மரக் கொம்பு ஆவேன்; முட்டுக் கொடுக்கப்பட்ட பேரீச்ச மரம் ஆவேன்' என்று கூறியதன் பொருள் என்ன?" என்று கேட்டேன் அதற்கு மாலிக் (ரஹ்) அவர்கள், "அதாவது, நான் சிறந்த யோசனை கூறி, இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கிறேன் என்று அவர் கூறியதைப் போன்றுள்ளது" என்றார்கள்.-

وَارْتَفَعَتِ الْأَصْوَاتُ حَتَّى خَشِيتُ الِاخْتِلَافَ،
فَقُلْتُ: ابْسُطْ يَدَكَ يَا أَبَا بَكْرٍ فَبَسَطَ يَدَهُ فَبَايَعْتُهُ
وَبَايَعَهُ الْمُهَاجِرُونَ ثُمَّ بَايَعَهُ الْأَنْصَارُ وَنَزَوْنَا عَلَى
سَعْدِ بْنِ عُبَادَةَ، فَقَالَ قَائِلٌ مِنْهُمْ: قَتَلْتُمْ سَعْدًا فَقُلْتُ
قَتَلَ اللَّهُ سَعْدًا، وَقَالَ عُمَرُ رَضِيَ اللَّهُ عَنْهُ: أَمَا وَاللَّهِ
مَا وَجَدْنَا فِيمَا حَضَرْنَا أَمْرًا هُوَ أَقْوَى مِنْ مُبَايَعَةِ
أَبِي بَكْرٍ رَضِيَ اللَّهُ عَنْهُ خَشِينَا إِنْ فَارَقْنَا الْقَوْمَ
وَلَمْ تَكُنْ بَيْعَةٌ أَنْ يُحْدِثُوا بَعْدَنَا بَيْعَةً فَإِمَّا أَنْ
نُتَابِعَهُمْ عَلَى مَا لَا نَرْضَى وَإِمَّا أَنْ نُخَالِفَهُمْ فَيَكُونَ
فِيهِ فَسَادٌ فَمَنْ بَايَعَ أَمِيرًا عَنْ غَيْرِ مَشُورَةِ الْمُسْلِمِينَ
فَلَا بَيْعَةَ لَهُ وَلَا بَيْعَةَ لِلَّذِي بَايَعَهُ تَغِرَّةً أَنْ يُقْتَلَا.
قَالَ مَالِكٌ: وَأَخْبَرَنِي ابْنُ شِهَابٍ عَنْ عُرْوَةَ بْنِ
الزُّبَيْرِ أَنَّ الرَّجُلَيْنِ اللَّذَيْنِ لَقِيَاهُمَا عُوَيْمِرُ بْنُ سَاعِدَةَ
وَمَعْنُ بْنُ عَدِيٍّ، قَالَ ابْنُ شِهَابٍ: وَأَخْبَرَنِي

அப்போது கூச்சல் கூடிற்று. குரல்கள் உயர்ந்தன பிளவு ஏற்பட்டுவிடுமோ என்று நான் அஞ்சினேன் ஆகவே, "அபூபக்ர் அவர்களே! உங்கள் கையை நீட்டுங்கள் (உங்களிடம் உறுதிமொழி அளிக்கிறேன்)" என்று நான் சொன்னேன். அப்போது அபூபக்ர் (ரலி) அவர்கள் தமது கரத்தை நீட்டினார்கள். உடனே நான் அவர்களுக்கு (நீங்கள்தாம் ஆட்சித் தலைவர் உங்களுக்கு நாங்கள் கட்டுப்பட்டு நடப்போமென) உறுதிமொழிப் பிரமாணம் (பைஅத்) அளித்தேன். (அவ்வாறே) முஹாஜிர்களும் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு உறுதி மொழி அளித்தனர். பிறகு, அவர்களுக்கு அன்சாரிகளும் உறுதிமொழி அளித்தனர்.

நாங்கள் (அன்சாரிகளின் தலைவர்) சஅது பின் உபாதா (ரலி) அவர்களிடம் (அன்னாரைச் சமாதானப்படுத்துவதற்காக) விரைந்து சென்றோம். அப்போது அன்சாரிகளுள் ஒருவர், "நீங்கள் சஅது பின் உபாதா அவர்களை (நம்பவைத்து)க் கொன்றுவிட்டீர்கள்" என்று சொன்னார். உடனே நான், "அல்லாஹ்தான் சஅது பின் உபாதாவைக் கொன்றான் (நாங்களில்லை)" என்று கூறினேன்

மேலும், அல்லாஹ்வின் மீதாணையாக! (அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் இறந்த போது) நாங்கள் சந்தித்த பிரச்சினைகளுள் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு உறுதிமொழிப் பிரமாணம் (பைஅத்) அளித்ததைவிட, மிகவும் சிக்கலான பிரச்சினை வேறெதையும் நாங்கள் கண்டதில்லை

உறுதிமொழிப் பிரமாணம் நடைபெறாத நிலையில், நாங்கள் அந்த மக்களிடமிருந்து வெளியேறிச் சென்றால், நாங்கள் சென்றதற்குப் பிறகு, தங்களுள் ஒருவருக்கு அவர்கள் உறுதிமொழிப் பிரமாணம் செய்து கொடுத்துவிடுவார்கள் அப்போது ஒன்று, நாங்கள் திருப்தியில்லாமலேயே அவர்களுக்கு உறுதிமொழிப் பிரமாணம் செய்து கொடுக்க வேண்டிவரும் அல்லது, அவர்களுக்கு மாறாக நாங்கள் செயல்பட நேரும் அப்போது குழப்பம் உருவாகும் என்று நாங்கள் அஞ்சினோம்.

ஆக, யார் முஸ்லிம்களின் (சம்மதம் மற்றும்) ஆலோசனையின்றி ஒருவருக்கு உறுதி மொழி அளிக்கிறாரோ அவரும், அவர் யாருக்கு உறுதிமொழி அளித்தாரோ அவரும் ஏற்கப்பட மாட்டார்கள் எச்சரிக்கை! அவ்விருவரும் கொல்லப்படவும் செய்யலாம்

(இந்த ஹதீஸின் அறிவிப்பாளர்தொடரில் ஆறாவது அறிவிப்பாளராக இடம்பெற்றுள்ள) மாலிக் (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்:

"(வழியில்) அபூபக்ர் (ரலி), உமர் (ரலி) ஆகியோரைச் சந்தித்த (நல்ல) மனிதர்கள் இருவர், உவைமிர் பின் சாஇதா (ரலி), மஅன் பின் அதீ (ரலி) ஆகியோர் ஆவர்" என்ற தகவலை, உர்வா (ரஹ்) அவர்களிடமிருந்து ஸுஹ்ரீ (ரஹ்) அவர்கள் எனக்குத் தெரிவித்தார்கள்.

سَعِيدُ بْنُ الْمُسَيَّبِ أَنَّ الَّذِي قَالَ: أَنَا جُذَيْلُهَا الْمُحَكَّكُ وَعُذَيْقُهَا الْمُرَجَّبُ، الْحُبَابُ بْنُ الْمُنْذِرِ.

இப்னு ஷிஹாப் அஸ்ஸுஹ்ரீ (ரஹ்) அவர்கள் கூறினார்கள்:

"நான் சிரங்கு பிடித்த ஒட்டகம் சொறிந்து கொள்வதற்கான மரக் கொம்பு ஆவேன்; முட்டுக் கொடுக்கப்பட்ட பேரீச்ச மரம் ஆவேன்" என்று கூறிய அன்சாரித் தோழர், ஹுபாப் பின் அல்முன்திர் (ரலி) ஆவார்கள்" என சஈத் பின் அல்முசய்யப் (ரஹ்) அவர்கள் என்னிடம் கூறினார்கள்.[311]

٣٦٩ حَدَّثَنَا إِسْحَاقُ بْنُ عِيسَى أَخْبَرَنِي مَالِكٌ عَنْ يَحْيَى بْنِ سَعِيدٍ أَنَّهُ سَمِعَ أَنَسَ بْنَ مَالِكٍ يَقُولُ: قَالَ رَسُولُ اللَّهِ ﷺ: أَلَا أُخْبِرُكُمْ بِخَيْرِ دُورِ الْأَنْصَارِ بَنِي النَّجَّارِ ثُمَّ بَنِي عَبْدِ الْأَشْهَلِ ثُمَّ بَلْحَارِثِ بْنِ الْخَزْرَجِ ثُمَّ بَنِي سَاعِدَةَ، وَقَالَ: فِي كُلِّ دُورِ الْأَنْصَارِ خَيْرٌ.

369 அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் கூறியதாவது:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "அன்சாரிகளின் இனைக் குடும்பங்களுள் சிறந்ததை உங்களுக்குத் தெரிவிக்கட்டுமா?" என்று கூறிவிட்டு, "அது, 'பனூ நஜ்ஜார்' குடும்பமாகும் பிறகு அவர்களைத் தொடர்ந்து 'பனூ அப்தில் அஷ்ஹல்' குடும்பமாகும். பின்னர் அவர்களைத் தொடர்ந்து 'பனுல் ஹாரிஸ் பின் கஸ்ரஜ்' குடும்பமாகும். பின்னர் அவர்களைத் தொடர்ந்து 'பனூ சாஇதா' குடும்பமாகும்" என்று கூறிவிட்டுப் பிறகு, "அன்சாரிக் இனைக் குடும்பங்கள் ஒவ்வொன்றிலும் நன்மை உண்டு" என்றும் சொன்னார்கள்.[312]

٣٧٠ حَدَّثَنَا إِسْحَاقُ بْنُ عِيسَى حَدَّثَنَا مَالِكٌ عَنْ نَافِعٍ عَنِ ابْنِ عُمَرَ رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ: قَالَ رَسُولُ اللَّهِ ﷺ: الْمُتَبَايِعَانِ بِالْخِيَارِ مَا لَمْ يَتَفَرَّقَا أَوْ يَكُونُ الْبَيْعُ خِيَارًا.

370 அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

விற்பவரும் வாங்குபவரும் பிரியாமல் இருக்கும்வரை, (வியாபாரத்தை முறித்துக் கொள்ள) உரிமை உண்டு. அல்லது, வியாபாரத்தை முறித்துக்கொள்ளலாம் எனப் பேசி இருப்பின், முறித்துக்கொள்ளலாம்.

இதை இப்னு உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.[313]

---

311. இதே ஹதீஸ் புகாரியில் (6830) ஒரு சில மாற்றங்களுடன் இடம்பெற்றுள்ளது. மேலும் இதன் ஒரு சில பகுதிகள் புகாரீ (2462, 3445, 3928, 4021, 6829, 6830, 7323), முஸ்லிம் (3492), திர்மிதீ (1351), அபூதாவூத் (3835), இப்னுமாஜா (2543), முவத்தா மாலிக் (1297), தாரிமீ, இப்னு ஹிப்பான், இப்னு அபீஷைபா, அப்துர்ரஸ்ஸாக், அபூயஅலா, பைஹகீ ஆகிய நூல்களிலும் இடம்பெற்றுள்ளன.

312. 'கஸ்ரஜ்' குலத்தின் நஜ்ஜார் பின் ஸஅலபா என்பாரின் வழித் தோன்றல்களே 'பனூ நஜ்ஜார்' குடும்பத்தார் ஆவர். இவர்கள் நபி (ஸல்) அவர்களின் பாட்டனார் அப்துல் முத்தலிபின் தாய்வழி உறவினர்களாவர். அடுத்து 'அவ்ஸ்' குலத்தின் அப்துல் அஷ்ஹல் பின் ஜுஷம் என்பாரின் வழித்தோன்றல்களே 'அப்துல் அஷ்ஹல்' குடும்பத்தார் ஆவர். 'கஸ்ரஜ்' குலத்தில் ஹாரிஸ் பின் கஸ்ரஜ் பின் அம்ர் என்பாரின் வழித்தோன்றல்களே 'பனுல் ஹாரிஸ் பின் கஸ்ரஜ்' குடும்பத்தார் ஆவர். 'பனூ சாஇதா' குடும்பத்தார், 'கஸ்ரஜ்' குலத்தினரே ஆவர்; சாஇதா பின் கஅப் பின் கஸ்ரஜ் என்பாரின் வழித்தோன்றல்களே இவர்கள். (ஃபத்ஹுல் பாரீ) பார்க்க: புகாரீ (ஹதீஸ் 3789, 3790, 3807, 5300), முஸ்லிம் (4923), திர்மிதீ (3845).

313. பின்வரும் ஹதீஸ் எண்கள் - 4254, 4338, 4884, 4911, 5181, 5734, 5817 ஆகியவற்றிலும் இதே கருத்து இடம்பெறுகிறது. இதே ஹதீஸ் புகாரீ (2111, 2113), முஸ்லிம் (3072), திர்மிதீ (1166), நஸாயீ (4389-4404), அபூதாவூத் (2996), இப்னுமாஜா (2172), முவத்தா மாலிக் (1177), இப்னு ஹிப்பான் (5006), தாரகுத்னீ (2848), பைஹகீயின் ஸுனனுல் குப்ரா (5/268), முஸ்னதுஷ் ஷாஃபிஈ (609) உள்ளிட்ட நூல்களிலும் இடம்பெற்றுள்ளது.

٣٧١ حدثنا إسحاق بن عيسى أنبأنا مالك عن نافع عن ابن عمر رضي الله عنه: أن رسول الله ﷺ نهى عن بيع حبل الحبلة.

371 இப்னு உமர் (ரலி) அவர்கள் கூறியதாவது:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் சினை ஒட்டகத்தின் வயிற்றிலுள்ள குட்டி ஈனும் குட்டியை (ஹபலுல் ஹபலா) விற்பதற்குத் தடைவிதித்தார்கள்.[314]

٣٧٢ حدثنا إسحاق بن عيسى أنبأنا مالك عن نافع عن ابن عمر رضي الله عنه قال: كنا نتبايع الطعام على عهد رسول الله ﷺ فيبعث علينا من يأمرنا بنقله من المكان الذي ابتعناه فيه إلى مكان سواه قبل أن نبيعه.

372 இப்னு உமர் (ரலி) அவர்கள் கூறியதாவது:

நாங்கள் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களது காலத்தில் உணவுப் பொருட்களை விலைக்கு வாங்குவோம். அப்போது அவர்கள் எங்களிடம் ஆளனுப்பி, அதை (மற்றவருக்கு) விற்பதற்குமுன் வாங்கிய இடத்திலிருந்து வேறு இடத்திற்குக் கொண்டு சென்றுவிடுமாறு எங்களுக்குக் கட்டளையிடுவார்கள்.[315]

٣٧٣ حدثنا إسحاق بن عيسى أخبرنا مالك عن نافع عن ابن عمر رضي الله عنه قال: قال رسول الله ﷺ: من ابتاع طعاما فلا يبعه حتى يستوفيه.

373 அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

உணவுப் பொருளை விலைக்கு வாங்கிய ஒருவர், அது தமது கைக்கு வந்து சேர்வதற்குமுன் (மற்றவருக்கு) விற்க வேண்டாம்.

இதை இப்னு உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.[316]

---

314. [illegible] - 4882, 4364, 4411, 5056, 5208, 5253, 6025, 6148 [illegible]

[illegible]

1 [illegible]

2 [illegible]

[illegible] (2143, 2256, 3843) [illegible] (3034, 3035) [illegible] (1514) [illegible] (4544-4546) [illegible] (2934) [illegible] (2188) [illegible] (1188) [illegible]

315. [illegible]

[illegible] - 4288, 4410, 4486, 4746, 4901, 5654, 5915, 5983, 6090 [illegible] (2123, 2137) [illegible] (3062) [illegible] (4526-4529) [illegible] (3029-3031, 3035, 3036) [illegible] (2227) [illegible]

316. [illegible] 100 [illegible]

٣٧٤ حدثنا إسحاق بن عيسى أنبأنا مالك عن نافع عن ابن عمر رضي الله عنه أن رسول الله ﷺ قال: من أعتق شركا له في عبد فكان له ما يبلغ ثمن العبد فإنه يقوم قيمة عدل فيعطى شركاؤه حقهم وعتق عليه العبد وإلا فقد أعتق ما أعتق.

374 *அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:*

யார் அடிமை ஒருவரின் மீது தமக்குரிய பங்கை விடுதலை செய்கிறாரோ, அவரிடம் அந்த அடிமையின் (முழு) விலையையும் எட்டுகின்ற அளவுக்குச் செல்வம் இருந்தால், அந்த அடிமையை ஒத்த மற்றோர் அடிமையின் விலையை மதிப்பிட்டு, தம் கூட்டாளிகளுக்கு அவர்களுக்குரிய பங்குகளின் விலையைக் கொடுத்து, அந்த அடிமையை (முழுமையாக) விடுதலை செய்துவிட வேண்டும். இல்லையெனில், அவர் எந்த அளவுக்கு விடுதலை செய்தாரோ, அந்த (தமது பங்கின்) அளவுக்குத்தான் விடுதலை செய்தவர் ஆவார்.

இதை இப்னு உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.[317]

٣٧٥ حدثنا سفيان عن أيوب عن سعيد قال: قلت لابن عمر رضي الله عنه: رجل لاعن امرأته

375 *சஈத் பின் ஜுபைர் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:*

நான் இப்னு உமர் (ரலி) அவர்களிடம், "ஒருவர் தம் மனைவியிடம் சாப அழைப்புச் சத்தியம் (லிஆன்) செய்துவிட்டார். (இப்போது என்ன செய்ய வேண்டும்?)" என்று கேட்டேன். அதற்கு இப்னு உமர் (ரலி) அவர்கள், "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள்

[illegible] 120 [illegible] 120 [illegible] (புகாரீ: 2126, 2135, 2136), முஸ்லிம் (3056), நஸாயீ (4518), அபூதாவூத் (3029), இப்னுமாஜா (2217), முஅத்தா மாலிக் (1154)

317. [illegible] - 4212, 4361, 4406, 4666, 4903, 5558, 5650, 5785, 5897, 6154 [illegible]

[illegible] (புகாரீ: 2491, 2503, 2521, 2525, 2553), முஸ்லிம் (3006), [illegible] (1266), அபூதாவூத் (3435), இப்னுமாஜா (2528), முஅத்தா மாலிக் (1264) [illegible]

(லிஆன் செய்துகொண்ட) அவர்களைப் பிரித்து வைத்தார்கள்" என விடையளித்தார்கள்.[318]

فَقَالَ: فَرَّقَ رَسُولُ اللهِ ﷺ بَيْنَهُمَا، وَذَكَرَ الْحَدِيثَ.

(உமர் (ரலி) அவர்கள் அறிவித்த நபிமொழிகள் நிறைவுற்றன.)

318. [illegible]

[illegible]

[illegible] (1925) [illegible]

உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்களின் வரலாற்றுச் சுருக்கம்

இஸ்லாமிய வரலாற்றின் ஆரம்பக் கால முஸ்லிம்களுள் உஸ்மான் (ரலி) அவர்களும் ஒருவர் ஆவார்கள். அபூபக்ர் (ரலி) அவர்களால் இஸ்லாமிய அழைப்பு விடுக்கப்பெற்று, ஓரிறைக் கொள்கையில் இணைந்த நபித்தோழர்களுள் அன்னாரும் ஒருவர்.

நபி (ஸல்) அவர்களின் முப்பாட்டனார் அப்து மனாஃப் அவர்களுடன் உஸ்மான் (ரலி) அவர்களின் தலைமுறை ("உஸ்மான் பின் அஃப்பான் பின் அபில் ஆஸ் பின் உமய்யா பின் அப்தி ஷம்ஸ் பின் அப்தி மனாஃப்" என்று) ஒன்றிணைகிறது. தந்தையின் பெயர், அஃப்பான். தாயார் பெயர், உம்மு ஹகீம் பைளா (ரலி)

நபி (ஸல்) அவர்கள் தம் புதல்வி ருகையா (ரலி) அவர்களை முதலில் உஸ்மான் (ரலி) அவர்களுக்கு மணம் முடித்துக் கொடுத்தார்கள். ருகையாவின் இறப்பிற்குப் பின்னர், தம் புதல்வியருள் மற்றொருவரான உம்முகுல்ஸூம் (ரலி) அவர்களை உஸ்மானுக்கு இரண்டாவது மனைவியாகத் திருமணம் செய்து வைத்தார்கள். அன்னார் வணிகத்தில் ஈடுபட்டு வளமான செல்வந்தராகத் திகழ்ந்தார்கள்.

மக்கா குறைஷியர் தொடக்க கால முஸ்லிம்களுக்கு பல்வேறு தொல்லைகள் கொடுக்க முற்பட்டபோது, முஸ்லிம்களுள் வலுவிழந்தவர்களையும் பெண்களையும் சிறார்களையும் மக்காவைத் துறந்து அபிசீனியாவுக்குப் புலம்பெயருமாறு நபியவர்கள் கட்டளையிட்டார்கள். அவ்வடிப்படையில் சென்ற முஹாஜிர்களுள் உஸ்மான்-ருகையா தம்பதியரும் அடங்குவர். சில நாட்களுக்குப்பின் மக்காவுக்குத் திரும்பி வந்து, பெருமானின் மக்காவை விட்டு மதீனாவுக்கு 'ஹிஜ்ரத்' செய்த மக்களோடு உஸ்மான் தம்பதியரும் சென்றனர்

நபியவர்களின் புதல்வியர் இருவரை அடுத்தடுத்து மணம் புரிந்தவராதலால், உஸ்மான் அவர்கள் 'தின்னூரைன்' (இரண்டு ஒளிகளை உடையவர்) என்ற சிறப்புப் பெயர் வழங்கப் பெற்றார்கள்

மதீனாவுக்கு நபியவர்களும் முஸ்லிம்களும் புலம்பெயர்ந்து வந்ததன் பின்னர், மக்கா குறைஷியருக்கும் முஸ்லிம்களுக்கும் நடந்த முதல் போரான பத்ருப் போரில் உஸ்மான் (ரலி) அவர்கள் கலந்துகொள்ள முடியவில்லை. ஏனெனில், அப்போது அவர்களின் அன்பு மனைவி ருகையா (ரலி) அவர்கள் நோய்வாய்ப்பட்டிருந்தார்கள். நபியவர்களின்

பரிந்துரையால், தம் மனைவியைக் கவனித்துக் கொள்வதற்காக, பத்ருப் போருக்குச் செல்லாமல் மதீனாவிலேயே தங்கிவிட்டார்கள் உஸ்மான் (ரலி). அந்த நோய்ப் படுக்கையில் ருகையாவும் இறப்பெய்தினார்கள். (இஸ்லாமியவரலாறு)

உஸ்மான் அவர்களுக்கு 'அபூஅப்தில்லாஹ்' அல்லது 'அபூஅம்ர்' என்ற குறிப்புப் பெயர் (குன்யத்) உண்டு. நபியவர்களால் சொர்க்கவாசிகள் என நற்செய்தி கூறப்பெற்ற குறைஷியர் பதின்மருள் உஸ்மானும் ஒருவர்.

ஹிஜ்ரி ஆறாம் ஆண்டில் நிகழ்ந்த 'ஹுதைபிய்யா' உடன்படிக்கைக்காக நபியவர்களும் முஸ்லிம்களும் மக்காவுக்கருகிலுள்ள இடத்தில் ஒன்றுகூடிய நிகழ்ச்சிக்கு முன்னர், உஸ்மான் (ரலி) அவர்களை நபி (ஸல்) அவர்கள் மக்காவுக்குத் தூதனுப்பினார்கள். ஆனால், மக்காவாசிகள் உஸ்மானைப் பிடித்து வைத்துக்கொண்டனர். குறிப்பிட்ட நேரத்திற்குள் திரும்பி வராததால், உஸ்மான் குறைஷிகளால் கொலை செய்யப்பட்டுவிட்டதாக முஸ்லிம்கள் கருதினர். அதனால் சஞ்சலமுற்ற முஸ்லிம்கள், 'உஸ்மானின் கொலைக்குப் பழி தீர்த்தே ஆகவேண்டும்' என்று கருதி, நபியவர்களின் கையில் உறுதிமொழி (பைஅத்) அளித்தனர். அதுவே, 'பைஅத்துர் ரிள்வான்' இறை உவப்புப்பெற்ற உறுதிமொழி) என்று இஸ்லாமிய வரலாற்றில் குறிக்கப்படுகின்றது. இந்த ஒப்பந்தம் உஸ்மான் (ரலி) அவர்களின் காரணமாகவே நிகழ்ந்தது.

இந்த உறுதிமொழிக்குப் பின்னரே, மக்கா குறைஷியர் முஸ்லிம்களுடன் சமாதான உடன்படிக்கை செய்ய முன்வந்தனர். அதுவே 'ஹுதைபிய்யா உடன்படிக்கை' என்று வரலாற்றில் இடம்பெற்றுள்ளது

இஸ்லாமியப் பேரரசின் இரண்டாம் கலீஃபாவான உமர் (ரலி) அவர்களின் இறப்பிற்குப் பின்னர், மூன்றாவது கலீஃபாவாக உஸ்மான் (ரலி) அவர்கள் தேர்ந்தெடுக்கப் பெற்றார்கள். குர்ஆன் பிரதிகள் அன்னாரின் ஆட்சியில்தான் ஒரே சீராக பிரதியெடுக்கப் பட்டு ஒழுங்குபடுத்தப்பட்டன.

ஏறத்தாழ 11 ஆண்டுகள் (ஹிஜ்ரி 13-23) உஸ்மான் (ரலி) அவர்களின் 'கிலாஃபத்' நீடித்தது. அன்னாரின் ஆட்சிக் காலத்தில் கருங்கடல்வரை இஸ்லாமிய அரசு விரிவடைந்தது. குராசான், ஆர்மீனியா, அஸர்பைஜான் ஆகிய நாடுகள் மீண்டும் வெற்றி கொள்ளப்பட்டதோடு அர்ரய்யு, ஹம்தான், தப்ரிஸ்தான், ஜுர்ஜான் ஆகிய நாடுகளும் இஸ்லாமிய அரசின் கீழ்வந்தது. ஈரான் வெற்றி உஸ்மான் (ரலி) அவர்கள் காலத்திலேயே நிறைவுபெற்றது. ரோமப் பைஸாந்திய படை தோற்கடிக்கப்பட்டது. இஸ்லாமிய வரலாற்றில் முதல் கடற்போர் நடைபெற்றதும் அன்னாரின் ஆட்சியில்தான். சைப்ரஸ்தீவு கிலாஃபத்தின் கீழ்வந்தது.

ஹிஜ்ரி 35ஆம் ஆண்டு துல்ஹஜ் மாதம் தமது 82ஆம் வயதில் உஸ்மான் (ரலி) அவர்கள் கிளர்ச்சிக்காரர்களால் கொலை செய்யப்பட்டார்கள்!

சான்றுகள்:

- உஸ்துல் ஃகாபா,
- ஃபத்ஹுல்பாரீ,
- முஃஜமுத் தபரானீ.

(٣) مسند عثمان بن عفان رضي الله عنه

பாடம்: 3

உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்கள் அறிவித்த நபிமொழிகள்

٣٧٦ حدثنا يحيى بن سعيد حدثنا عوف حدثنا يزيد
يعني الفارسي قال أبي أحمد بن حنبل وحدثنا محمد بن
جعفر حدثنا عوف عن يزيد قال: قال لنا ابن عباس
رضي الله عنه: قلت لعثمان بن عفان: ما حملكم على
أن عمدتم إلى الأنفال وهي من المثاني وإلى براءة
وهي من المئين فقرنتم بينهما ولم تكتبوا؟ قال ابن جعفر
بينهما سطرا بسم الله الرحمن الرحيم ووضعتموها في
السبع الطوال، ما حملكم على ذلك؟ قال عثمان رضي
الله عنه: إن رسول الله ﷺ كان مما يأتي عليه الزمان
ينزل عليه من السور ذوات العدد وكان إذا أنزل عليه
الشيء يدعو بعض من يكتب عنده يقول ضعوا هذا في
السورة التي يذكر فيها كذا وكذا وينزل عليه الآيات
فيقول ضعوا هذه الآيات في السورة التي يذكر فيها
كذا وكذا وينزل عليه الآية فيقول ضعوا هذه الآية في
السورة التي يذكر فيها كذا وكذا، وكانت الأنفال من
أوائل ما أنزل بالمدينة وبراءة من آخر القرآن فكانت
قصتها شبيها بقصتها، فقبض رسول الله ﷺ ولم يبين لنا

376 யஸீது அல்ஃபாரிஸீ அவர்கள் கூறியதாவது:

இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் எங்களிடம் பின்வருமாறு கூறினார்கள்:

நான் உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்களிடம், "நீங்கள் நூற்றுக்கும் குறைவான வசனங்கள் கொண்ட (மஸானீ) அத்தியாயங்களுள் ஒன்றான 'அல்அன்ஃபால்' (எனும் 8ஆவது) அத்தியாயத்திற்கும் நூற்றுக்கும் மேற்பட்ட வசனங்கள் கொண்ட (மிஉன்) அத்தியாயங்களுள் ஒன்றான 'பராஅத்' (அல்லது 'அத்தவ்பா' எனும் 9ஆவது) அத்தியாயத்திற்கும் இடையே 'பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்' எனும் வரியை எழுதாமல், அவற்றை இணைத்து, அதை எழுபெரும் அத்தியாயங்களுள் ஒன்றாக அமைத்துள்ளீர்களே; இதற்குக் காரணம் என்ன?" என்று கேட்டேன்.[1]

அப்போது உஸ்மான் (ரலி) அவர்கள் கூறியதாவது: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுக்கு (வேத அறிவிப்பு எதுவும் அருளப்பெறாமலிருந்து) சில நாட்களுக்குப் பின் சில அத்தியாயங்கள் அருளப்பட்டன. நபி (ஸல்) அவர்களுக்கு ஏதேனும் வேத அறிவிப்பு அருளப்படும்போது, அவர்கள் தம்மிடமிருந்த எழுத்தர்களை அழைத்து, "இதை இன்னின்ன செய்திகள் பேசப்படுகின்ற அத்தியாயத்துடன் சேர்த்துவிடுங்கள்" என்று கூறுவது வழக்கம். அதைப் போன்றே, அவர்களுக்குச் சில வசனங்கள் அருளப்பெற்றாலும், "இவற்றை இன்னின்ன செய்திகள் பேசப்படுகின்ற அத்தியாயத்துடன் சேர்த்துவிடுங்கள்" என்பார்கள். அதைப் போன்றே, அவர்களுக்கு ஒரேயொரு வசனம் (மட்டும்) அருளப்பெற்றாலும், "இதை இன்னின்ன செய்திகள் பேசப்படுகின்ற அத்தியாயத்துடன் சேர்த்துவிடுங்கள்" என்றே கூறுவார்கள்.

'அல்அன்ஃபால்' அத்தியாயம் மதீனாவில் அருளப்பெற்ற ஆரம்பக் காலக்கட்ட அத்தியாயங்களுள் ஒன்றாகும். 'பராஅத்' அத்தியாயம் குர்ஆனிலேயே இறுதியாக அருளப்பெற்றதாகும். 'பராஅத்' அத்தியாயத்தின் செய்தியும் 'அல்அன்ஃபால்' அத்தியாயத்தின் செய்தியும் (ஏறத்தாழ) ஒரே மாதிரியாகவே உள்ளன. அல்லாஹ்வின் தூதர்

---

1. எழுபெரும் அத்தியாயங்கள் என நாம் மொழிபெயர்க்கும் சொல்லுக்கான இடத்தில் 'அஸ்ஸப்உத் திவால்' என்ற சொல் இடம்பெற்றுள்ளது. இதைக் குறிப்பிடுவது எழுபெரும் அத்தியாயங்களாவன: 1- அல்பகரா 2- ஆலுஇம்ரான் 3- அந்நிஸா 4- அல்மாயிதா 5- அல்அன்ஆம் 6- அல்அஃராஃப் 7- அல்அன்ஃபால் உடன் அத்தவ்பா. சிலர் எழுபெரும் அத்தியாயங்களுள் யூனுஸ் அத்தியாயத்தையும் இணைத்துள்ளனர்.

أَنَّهَا مِنْهَا وَظَنَنْتُ أَنَّهَا مِنْهَا فَمِنْ ثَمَّ قَرَنْتُ بَيْنَهُمَا وَلَمْ أَكْتُبْ بَيْنَهُمَا سَطْرًا بِسْمِ اللَّهِ الرَّحْمَنِ الرَّحِيمِ.

قَالَ ابْنُ جَعْفَرٍ: وَوَضَعْتُهَا فِي السَّبْعِ الطُّوَالِ.

٣٧٧ حَدَّثَنَا يَحْيَى بْنُ سَعِيدٍ عَنْ هِشَامِ بْنِ عُرْوَةَ أَخْبَرَنِي أَبِي أَنَّ حُمْرَانَ أَخْبَرَهُ قَالَ: تَوَضَّأَ عُثْمَانُ رَضِيَ اللَّهُ عَنْهُ عَلَى الْبَلَاطِ ثُمَّ قَالَ: لَأُحَدِّثَنَّكُمْ حَدِيثًا سَمِعْتُهُ مِنْ رَسُولِ اللَّهِ ﷺ لَوْلَا آيَةٌ فِي كِتَابِ اللَّهِ مَا حَدَّثْتُكُمُوهُ سَمِعْتُ النَّبِيَّ ﷺ يَقُولُ: مَنْ تَوَضَّأَ فَأَحْسَنَ الْوُضُوءَ ثُمَّ دَخَلَ

(ஸல்) அவர்கள், 'இதுவும் அதுவும் ஒன்றுதான்' என்பதை எங்களுக்கு விளக்காமலேயே இறந்துபோனார்கள். இந்த நிலையில் இரண்டும் ஒன்றுதான் என்று நான் கருதினேன். அதனாலேயே அவ்விரண்டுக்கும் இடையே 'பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்' எனும் வரியை எழுதாமல் இரண்டையும் ஒன்றிணைத்து விட்டேன்.

(முஹம்மது) இப்னு ஜஅஃபர் (ரஹ்) அவர்கள் வழியாக வந்துள்ள மற்றோர் அறிவிப்பில், "(அவ்விரண்டையும் ஒன்றாக்கி) அதை எழுபெரும் அத்தியாயங்களுள் ஒன்றாக அமைத்தேன்" என்று உஸ்மான் (ரலி) அவர்கள் கூறினார்கள் எனும் தகவல் கூடுதலாக இடம்பெற்றுள்ளது.[2]

377 (உஸ்மான் (ரலி) அவர்களின் முன்னாள் அடிமை) ஹும்ரான் பின் அபான் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

உஸ்மான் (ரலி) அவர்கள் (மதீனாவிலுள்ள) 'பலாத்'[3] எனும் இடத்தில் (ஒரு முறை) அங்கத் தூய்மை (உளூ) செய்தார்கள். பின்னர் அவர்கள், "நான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடமிருந்து கேட்ட நபிமொழி ஒன்றை உங்களுக்கு அறிவிக்கப்போகிறேன். அல்லாஹ்வின் வேதத்தில் இடம்பெற்றுள்ள ஒரு வசனம்[4] மட்டும் இல்லை என்றால், அதை நான் உங்களுக்கு அறிவித்திருக்க மாட்டேன்" என்று சொல்லி விட்டுப் பின்வருமாறு கூறினார்கள்:

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒருவர் அழகிய முறையில் அங்கத் தூய்மை (உளூ)

---

2. இந்த ஹதீஸ், அபூதாவூத் (786), திர்மிதீ (3011), ஹாகிம் (2/221), நஸாயீயின் ஸுனனுல் குப்ரா (8007), இப்னு ஹிப்பான் (43), பைஹகீயின் தலாயிலுந் நுபுவ்வா (3080), அல்முக்தாரா (338) உள்ளிட்ட நூல்களிலும் பதிவாகியுள்ளது. இந்த ஹதீஸைப் பற்றி இமாம் திர்மிதீ (ரஹ்) அவர்களும் ஹாகிம் (ரஹ்) அவர்களும் சரியானது என்று கூறினாலும் இதன் அறிவிப்பாளர்களுள் சிலர் பலவீனமானவர்களாக உள்ளனர். இந்த ஹதீஸை இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களிடமிருந்து அறிவிக்கும் யஸீத் அல்ஃபாரிஸீ அவர்களைப் பற்றியே அத்தனை அறிவிப்புகளும் வந்துள்ளன. இவர் யார் என்பதில் ஹதீஸ்கலை அறிஞர்களிடையே குழப்பம் நிலவுகிறது. இவர் யஸீத் பின் ஹுர்முஸ் என்பவரா? அல்லது வேறொருவரா? என்பது தெளிவாகவில்லை. இப்னு மஹ்தீ, இமாம் அஹ்மது போன்றவர்கள் இவர் யஸீத் பின் ஹுர்முஸ்தான் என்று கூறுகின்றனர். இதை இமாம் யஹ்யா பின் ஸயீத் அல்கத்தான் மறுக்கிறார்கள். மேலும் இவரை இமாம் புகாரீ (ரஹ்) அவர்கள் தமது அள்ளுஅஃபா அஸ்ஸகீர் (பலவீனமானவர்களின் சிறிய பட்டியல்) என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்கள்.

இந்த யஸீத் என்பவர் யஸீத் பின் ஹுர்முஸா? அல்லது வேறொருவரா? அவர் யார்? யாரென்றே அறியப்படாதவர் தனித்து அறிவிக்கும் இந்த ஹதீஸை எப்படி ஏற்றுக்கொள்வது? அன்றியும் குர்ஆன் தொகுக்கப்பட்டது பற்றிய செய்திகள் அனைத்தும் மிகமிக உறுதியான நபிமொழிகள் மூலம் வந்துள்ளபோது இந்தச் செய்தியில் யாரென்றே தெரியாதவர் இடம்பெறலாமா? எனவே 'இமாம் திர்மிதீ (ரஹ்) அவர்கள் இது 'ஹஸன் ஸஹீஹ்' தரத்தில் அமைந்த ஹதீஸ் என்று கூறினாலும் ஹாகிம் (ரஹ்) அவர்கள் ஆதாரப்பூர்வமானது என்றாலும் இமாம் தஹபீ (ரஹ்) அவர்கள் அதை ஆமோதித்த போதிலும் இது பலவீனமான அறிவிப்பாளர்தொடர் கொண்டது என்பதே எனக்குத் தெளிவான கருத்தாகும்' என்கிறார் அறிஞர் அஹ்மது ஷாகிர்.

3. நபி (ஸல்) அவர்களின் பள்ளிவாசலுக்கும் மதீனாவின் கடைத் தெருவுக்கும் இடையிலுள்ள கற்கள் நிறைந்த இடம்.

4. அது "வேதத்தில் மக்களுக்காக நாம் தெளிவுபடுத்திய பின்னர் நாம் அருளிய தெளிவான சான்றுகளையும் நேர்வழியையும் மறைப்பவர்களை அல்லாஹ் சபிக்கிறான். சபிப்பவர்களும் சபிக்கின்றனர்" எனும் 2:159ஆவது வசனமாகும்.

يُصَلِّي غُفِرَ لَهُ مَا بَيْنَهُ وَبَيْنَ الصَّلَاةِ الأُخْرَى حَتَّى يُصَلِّيَهَا.

செய்துவிட்டுப் பின்னர் (பள்ளிவாசலுக்கு) வந்து தொழுதால், அவருடைய அந்நேரத் தொழுகை)க்கும் அடுத்த தொழுகையை அவர் நிறைவேற்றுவதற்கும் இடையிலான (சிறு) பாவங்கள் (யாவும்) அவருக்கு மன்னிக்கப்படுகின்றன.[5]

٣٧٨ حدثنا يحيى بن سعيد عن مالك حدثني نافع عن نبيه بن وهب عن أبان بن عثمان رضي الله عنه عن أبيه عن النبي ﷺ قال: المحرم لا ينكح ولا ينكح ولا يخطب.

378 நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

'இஹ்ராம்' அணிந்திருப்பவர் (அந்நிலையில்) திருமணம் செய்துகொள்ளக் கூடாது. திருமணம் செய்து கொடுக்கவும் கூடாது. பெண் கேட்கவும் கூடாது.

இதை உஸ்மான் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.[6]

٣٧٩ حدثنا يحيى عن ابن حرملة قال سمعت سعيدا يعني ابن المسيب قال: خرج عثمان رضي الله عنه حاجا حتى إذا كان ببعض الطريق قيل لعلي رضوان الله عليهما إنه قد نهى عن التمتع بالعمرة إلى الحج فقال علي رضي الله عنه لأصحابه: إذا ارتحل فارتحلوا فأهل علي وأصحابه بعمرة فلم يكلمه عثمان رضي الله عنه في ذلك، فقال له علي رضي الله عنه: ألم أخبر أنك نهيت عن التمتع بالعمرة؟ قال فقال: بلى، قال:

379 சயீத் பின் அல்முசய்யப் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

(ஒரு முறை) உஸ்மான் (ரலி) அவர்கள் ஹஜ் செய்வதற்குப் புறப்பட்டார்கள் அப்போது வழியில் ஓரிடத்தில் அவர்கள் இருந்தபோது, (கலீஃபா) உஸ்மான் (ரலி) அவர்கள் ஹஜ்ஜையும் உம்ராவையும் 'தமத்துஉ' முறையில் நிறைவேற்றுவதற்குத் தடை விதித்திருப்பதாக அலீ (ரலி) அவர்களிடம் கூறப்பட்டது. அப்போது அலீ (ரலி) அவர்கள் தம் தோழர்களிடம், "உஸ்மான் (ரலி) அவர்கள் (ஹஜ்ஜுக்குப்) புறப்பட்டால் நீங்களும் (அவர்களுடன்) புறப்பட்டுவிடுங்கள்" என்று கூறினார்கள் பின்னர், அலீ (ரலி) அவர்களும் அவர்களுடைய தோழர்களும் உம்ராவுக்காக (மட்டும் 'தமத்துஉ' முறையில் இஹ்ராம் அணிந்து) 'தல்பியா' கூறினர் எனவே, உஸ்மான் (ரலி) அவர்கள் இது தொடர்பாக அலீ (ரலி) அவர்களிடம் (எதுவும்) பேசவில்லை. பின்னர் அலீ (ரலி) அவர்கள் உஸ்மான் (ரலி) அவர்களிடம், "நீங்கள் 'தமத்துஉ' முறையில் உம்ராவையும் ஹஜ்ஜையும்) நிறைவேற்றக் கூடாது எனத் தடைவிதிப்பதாக எனக்குத் தகவல் வந்துள்ளதே; (உண்மைதானா)?" என்று கேட்டார்கள். அதற்கு உஸ்மான் (ரலி) அவர்கள், "ஆம்; (உண்மைதான்)" என்றார்கள். "அவ்வாறாயின், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் 'தமத்துஉ' முறையில் (ஹஜ்ஜையும்

---

5. காண்க: புகாரீ (158, 160, 164, 1934, 6433), முஸ்லிம் (383-386). [illegible] (541), [illegible] (106), [illegible] (1080), [illegible] (83, 84), இப்னு [illegible] (21), இப்னு [illegible] (1047), [illegible] (1144), [illegible] (1832), [illegible] (408) [illegible]

6. 'இஹ்ராம்' [illegible] - 1837 [illegible] 2757 [illegible] (780), [illegible] (1753, 2101), [illegible] (678), [illegible] (610), [illegible] (1506), [illegible] (1966), [illegible] (354, 355), [illegible] (2794, 3223, 3224), இப்னு [illegible] (2448), இப்னு [illegible] (679) [illegible] 6489 [illegible]

فَلَمْ تَسْمَعْ رَسُولَ اللَّهِ ﷺ تَمَتَّعَ؟ قَالَ: بَلَى.

உம்ராவையும்) நிறைவேற்றியுள்ளார்கள் என்பதை நீங்கள் கேள்விப்படவில்லையா?" என்று அலீ (ரலி) அவர்கள் கேட்டார்கள். அதற்கு உஸ்மான் (ரலி) அவர்கள், "ஆம்; (கேள்விப்பட்டிருக்கிறேன்)" என்று கூறினார்கள்.[7]

٣٨٠ حَدَّثَنَا وَكِيعٌ عَنْ إِسْرَائِيلَ عَنْ عَامِرِ بْنِ شَقِيقٍ عَنْ أَبِي وَائِلٍ عَنْ عُثْمَانَ رَضِيَ اللَّهُ عَنْهُ أَنَّ رَسُولَ اللَّهِ ﷺ تَوَضَّأَ ثَلَاثًا ثَلَاثًا.

380 உஸ்மான் (ரலி) அவர்கள் கூறியதாவது:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் மும்மூன்று முறை (ஒவ்வோர் உறுப்பையும் கழுவி) அங்கத் தூய்மை (உளூ) செய்தார்கள்.[8]

٣٨١ حَدَّثَنَا وَكِيعٌ حَدَّثَنَا سُفْيَانُ عَنْ أَبِي النَّضْرِ عَنْ أَبِي أَنَسٍ أَنَّ عُثْمَانَ رَضِيَ اللَّهُ عَنْهُ تَوَضَّأَ بِالْمَقَاعِدِ ثَلَاثًا ثَلَاثًا وَعِنْدَهُ رِجَالٌ مِنْ أَصْحَابِ رَسُولِ اللَّهِ ﷺ قَالَ: أَلَيْسَ هَكَذَا رَأَيْتُمْ رَسُولَ اللَّهِ ﷺ يَتَوَضَّأُ؟ قَالُوا نَعَمْ.

381 அபூஅனஸ் (மாலிக் பின் அபீஆமிர் -ரஹ்) அவர்கள் கூறியதாவது:

(ஒருமுறை) உஸ்மான் (ரலி) அவர்கள் (மஸ்ஜிதுந் நபவீ பள்ளிவாசலுக்கு அருகிலுள்ள) 'மகாஇத்' எனும் இடத்தில் மும்மூன்று முறைகள் (ஒவ்வோர் உறுப்பையும் கழுவி) அங்கத் தூய்மை (உளூ) செய்தார்கள். அப்போது அவர்களுக்கு அருகில் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுடைய தோழர்களில் சிலர் இருந்தனர். அந்த நபித்தோழர்களிடம், "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் இவ்வாறு அங்கத் தூய்மை செய்ததை நீங்கள் பார்த்திருக்கிறீர்கள் அல்லவா?" என்று உஸ்மான் (ரலி) அவர்கள் கேட்க, "ஆம் (பார்த்திருக்கிறோம்)" என்று அந்த நபித்தோழர்கள் கூறினர்.[9]

---

7. பார்க்க: முஸ்லிம் ஹதீஸ் எண் - 2346

[illegible] முஸ்லிம் - 2344, 2345 [illegible]

1- [illegible]

2- [illegible] 669 [illegible]

8. காண்க: புகாரீ - 159, 160, 164, 1934, 6433; முஸ்லிம் - 383, 384.

[illegible] 380, 391, 393, 395, 401, 402, 410, 442, 443, 448, 452, 453, 456, 457, 458, 462, 472, 474 [illegible]

[illegible]

9. பார்க்க: முஸ்லிம் ஹதீஸ் எண் - 380

٣٨٢ حدثنا وكيع حدثنا سفيان وعبد الرحمن عن سفيان عن علقمة بن مرثد عن أبي عبد الرحمن عن عثمان رضي الله عنه قال: قال رسول الله ﷺ: أفضلكم من تعلم القرآن وعلمه.

382 அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

குர்ஆனைத் தாமும் கற்று, அதை(ப் பிற ருக்கும்) கற்றுக் கொடுப்பவரே உங்களுள் சிறந்தவர் ஆவார்.

இதை உஸ்மான் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.[10]

٣٨٣ حدثنا عبد الرحمن بن مهدي حدثنا شعبة عن جامع بن شداد قال سمعت حمران بن أبان يحدث عن عثمان رضي الله عنه قال: قال رسول الله ﷺ: من أتم الوضوء كما أمره الله عز وجل فالصلوات المكتوبات كفارات لما بينهن.

383 அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

வல்லமையும் மாண்பும் மிக்க அல்லாஹ் கட்டளையிட்டபடி, ஒருவர் அங்கத் தூய்மையை (உளூவை) முழுமையாகச் செய்தால், அதன் பின்னர் கடமையான தொழுகைகளுக்கிடையே ஏற்படும் (சிறு) பாவங்களுக்கு அது பரிகாரமாக அமையும்

இதை உஸ்மான் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.[11]

٣٨٤ حدثنا وكيع عن إسماعيل بن أبي خالد قال قال قيس فحدثني أبو سهلة أن عثمان رضي الله عنه قال يوم الدار حين حصر: إن رسول الله ﷺ عهد إلي عهدا فأنا صابر عليه.

قال قيس: فكانوا يرونه ذلك اليوم.

384 (உஸ்மான் (ரலி) அவர்களின் முன்னாள் அடிமை) அபூசஹ்லா (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

(கலீஃபா) உஸ்மான் (ரலி) அவர்கள் (கிளர்ச்சியாளர்களால்) அவர்களது வீட்டில் முற்றுகையிடப்பட்டிருந்த நாளில், "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் என்னிடம் (நானாகப் பதவி விலகக் கூடாது என்பது தொடர்பாக) ஓர் உறுதிமொழி வாங்கினார்கள். அதை முன்னிட்டு (இப்போது என்ன துன்பம் நேர்ந்தாலும்) நான் சகித்துக்கொள்வேன்" என்று கூறினார்கள்.

(இந்த ஹதீஸின் அறிவிப்பாளர்களுள் ஒருவரான) கைஸ் பின் அபீஹாஸிம் (ரஹ்) அவர்கள் கூறுகையில், "(நபி (ஸல்) அவர்களின் உறுதிமொழி குறித்த) அந்த நாள் (உஸ்மான் (ரலி) அவர்கள் முற்றுகையிடப்பட்ட) இந்த நாள்தான் என்று மக்கள் கருதி வந்தனர்" எனக் குறிப்பிட்டுள்ளார்கள்.[12]

---

10. காண்க: புகாரீ (5027, 5028), திர்மிதீ (2832, 2833), இப்னுமாஜா (207, 209), அபூதாவூத் (1240), தாரிமீ (3204), முஸன்னஃப் அப்திர்ரஸ்ஸாக் (5995)

11. பார்க்க: முஸ்லிம் ஹதீஸ் எண் - 391. இந்த ஹதீஸ் நஸாயீ (145), இப்னு ஹிப்பான் (1049), அல்பஸ்ஸார் (398) உள்ளிட்ட நூல்களிலும் இடம்பெற்றுள்ளது.

12. இந்த ஹதீஸ் திர்மிதீ (3644), ஹாகிம் (4518), முஸ்னது அபீயஅலா (4681), முஸ்னதுல் பஸ்ஸார் (384) உள்ளிட்ட நூல்களிலும் இடம்பெற்றுள்ளது.

ஓர் உறுதிமொழி என்பது எது? என்ற கேள்வி இங்கே எழுகிறது. அதற்கு விளக்கம் வருமாறு: நபி (ஸல்) அவர்கள் நோய்வாய்ப்பட்டிருந்தபோது தம் தோழர் ஒருவரை அழைக்குமாறு கூறினார்கள். அதற்கு 'அபூபக்ரையா?' எனக் கேட்க நபியவர்கள் மௌனமாயிருந்தார்கள். 'உமரையா?' என்று கேட்டதற்கும் மௌனமாயிருந்தார்கள். பின்னர், 'உஸ்மானையா?' எனக் கேட்டபோது 'ஆம்' என்றார்கள் நபி (ஸல்). பின்னர் உஸ்மான் (ரலி) அவர்கள் வந்தபோது அவர்களின் காதில் நபி (ஸல்) அவர்கள் ஏதோ ஒன்றைக் கூறினார்கள். அதைக் கேட்ட உஸ்மானின் முகம் மாறிப்போனது (இப்னுமாஜா-110)

٣٨٥ حدثنا عبد الرحمن حدثنا سفيان وعبد الرزاق قالا حدثنا سفيان عن عثمان بن حكيم عن عبد الرحمن بن أبي عمرة عن عثمان بن عفان رضي الله عنه قال عبد الرزاق: عن النبي ﷺ قال: من صلى صلاة العشاء والصبح في جماعة فهو كقيام ليلة.

وقال عبد الرحمن: من صلى العشاء في جماعة فهو كقيام نصف ليلة ومن صلى الصبح في جماعة فهو كقيام ليلة.

385 நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

'இஷா'த் தொழுகையையும் 'சுப்ஹு'த் தொழுகையையும் 'ஜமாஅத்'துடன் தொழுகின்றவர் இரவு முழுவதும் நின்று வழிபட்டவரைப் போன்றவர் ஆவார்.

உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்கள் அறிவித்துள்ள இந்த ஹதீஸ், இரண்டு அறிவிப்பாளர்தொடர்களில் இடம்பெற்றுள்ளது. அவற்றுள் அப்துர் ரஸ்ஸாக் பின் ஹம்மாம் (ரஹ்) அவர்கள் வழியாக வந்ததே மேற்கண்ட அறிவிப்பாகும்

அப்துர் ரஹ்மான் பின் மஹ்தீ (ரஹ்) அவர்களின் அறிவிப்பில், "இஷா'த் தொழுகையை ஜமாஅத்துடன் தொழுகின்றவர், பாதி இரவுவரை நின்று வழிபட்டவரைப் போன்றவர் ஆவார். 'சுப்ஹு'த் தொழுகையையும் ஜமாஅத்துடன் தொழுகின்றவர், இரவு முழுவதும் நின்று வழிபட்டவரைப் போன்றவர் ஆவார்" எனும் வாசகம் இடம்பெற்றுள்ளது[13]

٣٨٦ حدثنا عبد الملك بن عمرو حدثنا علي بن المبارك عن يحيى يعني ابن أبي كثير عن محمد بن إبراهيم عن عثمان بن عفان رضي الله عنه أن النبي ﷺ قال: من صلى العشاء في جماعة فهو كمن قام نصف الليل ومن صلى الصبح في جماعة فهو كمن قام الليل كله.

386 நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

ஒருவர் 'இஷா'த் தொழுகையை 'ஜமாஅத்'துடன் தொழுதால், அவர் பாதி இரவுவரை நின்று வழிபட்டவரைப் போன்றவர் ஆவார். அவர் 'சுப்ஹு'த் தொழுகையையும் 'ஜமாஅத்'துடன் தொழுதுவிட்டால், இரவு முழுவதும் நின்று வழிபட்டவரைப் போன்றவர் ஆவார்.

இதை உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.[14]

அஹ்மத்-24614 [illegible]

முஸ்னது அஹ்மதில் (24614) [illegible] உஸ்மான் (ரலி) [illegible] ... முஸ்னது அஹ்மத் - 23427, 24007 [illegible] (3638) [illegible]

13. [illegible] - 182 [illegible] (205) [illegible] (468) [illegible] (271) [illegible] (1196) [illegible] (1361) [illegible] (1384) [illegible] (2084) [illegible]

14. [illegible]

387 குறைஷியரின் முன்னாள் அடிமை அதாஉ பின் ஃபர்ரூக் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

(ஒரு முறை) உஸ்மான் (ரலி) அவர்கள் ஒருவரிடம் நிலம் ஒன்றை விலைக்கு வாங்கினார்கள். (நிலத்தை விற்ற) அந்த மனிதர், உஸ்மான் (ரலி) அவர்களிடம் (நிலத்திற்கான விலையைப் பெற்றுக்கொள்வதில்) கால தாமதம் செய்தார். ஒரு நாள் அந்த மனிதரைச் சந்தித்த உஸ்மான் (ரலி) அவர்கள், "உமக்குச் சேர வேண்டிய பொருளை (நிலத்தின் விலையை) நீர் வாங்க மறுப்பதற்குக் காரணம் என்ன?" என்று அவரிடம் கேட்டார்கள். அதற்கு அவர், "நீங்கள் எனக்கு இழப்பை ஏற்படுத்திவிட்டீர்கள்; மக்களுள் யாரை நான் சந்தித்தாலும், அவர் (இது தொடர்பாக) என்னைக் குறை கூறவே செய்கின்றனர்" என்றார்.

٣٨٧ حدثنا إسماعيل بن إبراهيم حدثنا يونس يعني ابن عبيد حدثني عطاء بن فروخ مولى القرشيين أن عثمان رضي الله عنه اشترى من رجل أرضا فأبطأ عليه فلقيه فقال له: ما منعك من قبض مالك؟ قال: إنك غبنتني فما ألقى من الناس أحدا إلا وهو يلومني، قال أو ذلك يمنعك؟ قال: نعم، قال فاختر بين أرضك ومالك، ثم قال: قال رسول الله ﷺ: أدخل الله عز وجل الجنة رجلا كان سهلا مشتريا وبائعا وقاضيا ومقتضيا.

٣٨٨ حدثنا إسماعيل حدثنا يونس بن عبيد عن أبي معشر عن إبراهيم عن علقمة قال: كنت مع ابن مسعود وهو عند عثمان رضي الله عنه، فقال له عثمان رضي الله عنه: ما بقي للنساء منك؟ قال: فلما ذكرت النساء

அப்போது உஸ்மான் (ரலி) அவர்கள், "இதுதான் (நிலத்தின் விலையை) நீர் வாங்க மறுப்பதற்குக் காரணமா?" என்று கேட்க, அவர், "ஆம்" என்றார். பின்னர் உஸ்மான் (ரலி) அவர்கள் (அந்த மனிதரிடம்), "நீர் உமது நிலம் அல்லது அதற்கான விலை ஆகிய இரண்டில் எதை வேண்டுமானாலும் பெற்றுக்கொள்ளலாம்" என்று கூறிவிட்டு, "விற்கும்போதும் வாங்கும்போதும் உரிமையை வழங்கும்போதும் உரிமையைக் கோரும்போதும் மென்மையாக நடந்துகொள்ளும் மனிதரை வல்லமையும் மாண்பும் மிக்க அல்லாஹ் சொர்க்கத்தில் நுழைவிப்பான்" என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறியதாகக் குறிப்பிட்டார்கள்.[15]

388 அல்கமா பின் கைஸ் அந்நகஈ (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

நான், (ஒருமுறை நபித்தோழர்) இப்னு மஸ்ஊத் (ரலி) அவர்களுடன் இருந்தேன். அப்போது அவர்கள் உஸ்மான் (ரலி) அவர்களுக்கு அருகில் இருந்தார்கள். உஸ்மான் (ரலி) அவர்கள் இப்னு மஸ்ஊது (ரலி) அவர்களிடம், "உமக்குத் திருமணம் செய்துகொள்ளும்

---

*அப்துர் ரஹ்மான் பின் [illegible] இடம்பெற்ற அறிவிப்பு [illegible] ஷாகிர் (757) எனும் நூலில் பதிவாகியுள்ளது. எனவே இது முழுமையடைந்த அறிவிப்பாளர்தொடரில் அமைந்த ஹதீஸ் ஆகும். இதுபோன்ற ஹதீஸ் முஸ்லிம் போன்ற நூல்களில் சரியான அறிவிப்பாளர்தொடர்களில் வந்துள்ளதால் இது ஏற்கத் தக்க ஹதீஸ் ஆகும். பார்க்க முன்சென்ற ஹதீஸ் எண் - 385 மற்றும் அதன் அடிக்குறிப்பு.

15. உஸ்மான் (ரலி) நிலம் வாங்கியது பற்றிய சம்பவம் நீங்கலாக "விற்கும்போதும் வாங்கும்போதும் வழக்குரைக்கும்போதும் பெருந்தன்மையாக நடந்துகொள்ளும் மனிதருக்கு அல்லாஹ் அருள் புரிவானாக" எனும் தொடர் மட்டும் புகாரீ (2076), இப்னுமாஜா (2194), [illegible] (4/60), நஸாயீ (4617), [illegible] (376) ஆகிய நூல்களில் வந்துள்ளது. இந்த ஹதீஸின் அறிவிப்பாளர்தொடரில் உஸ்மான் (ரலி) அவர்களிடமிருந்து அறிவிக்கும் அதாஉ பின் ஃபர்ரூக் (ரஹ்) அவர்கள் உஸ்மான் (ரலி) அவர்களைச் சந்தித்தாரா அல்லவா இல்லையா [illegible] (ரஹ்) அவர்கள் தமது [illegible] எனும் நூலில் குறிப்பிடுகின்றார்கள். எனவே [illegible] குறைவானது. "இது [illegible] 'முன்கதிஉ' (தொடர்பு அறுந்த) ஹதீஸ் ஆகும்" என்று குறிப்பிடுகின்றனர்.

என்னம் எதுவும் உண்டா?" என்று கேட்டார்கள். பெண்கள் தொடர்பாகப் பேச்சு நடந்தபோது, இப்னு மஸ்ஊத் (ரலி) அவர்கள், (தமக்குத் திருமணம் முடிக்கும் தேவை இல்லை என்பதால்) இளைஞனாக இருந்த என்னை அழைத்து, "அல்கமா! அருகில் வா!" என்றார்கள்.

அப்போது உஸ்மான் (ரலி) அவர்கள் இப்னு மஸ்ஊத் (ரலி) அவர்களிடம் பின்வருமாறு கூறினார்கள்: (ஒருமுறை) அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் முஹாஜிர்களைச் சேர்ந்த இளைஞர்கள் சிலரிடம் வந்தார்கள். அப்போது, "உங்களுள் (திருமணம் முடிப்பதற்கு) வசதி படைத்தவர் திருமணம் செய்துகொள்ளட்டும்; ஏனெனில், அது (தகாத) பார்வையைக் கட்டுப்படுத்தும்; கற்பைக் காக்கும்; (அந்த) வசதியைப் பெறாதவர் நோன்பு (நோற்கட்டும்; அவ்வாறு நோன்பு) நோற்றால், அது அவருக்கு (ஆசையை அடக்கும்) கேடயமாக அமையும்" என்று அறிவுறுத்தினார்கள்.[16]

قَالَ ابْنُ مَسْعُودٍ: ادْنُ يَا عَلْقَمَةُ، قَالَ وَأَنَا رَجُلٌ شَابٌّ، فَقَالَ لَهُ عُثْمَانُ رَضِيَ اللَّهُ عَنْهُ: خَرَجَ رَسُولُ اللَّهِ ﷺ عَلَى فِتْيَةٍ مِنَ الْمُهَاجِرِينَ، فَقَالَ: مَنْ كَانَ مِنْكُمْ ذَا طَوْلٍ فَلْيَتَزَوَّجْ فَإِنَّهُ أَغَضُّ لِلطَّرْفِ وَأَحْصَنُ لِلْفَرْجِ وَمَنْ لَا فَإِنَّ الصَّوْمَ لَهُ وِجَاءٌ.

٣٨٩ حَدَّثَنَا مُحَمَّدُ بْنُ جَعْفَرٍ وَبَهْزٌ وَحَجَّاجٌ قَالُوا حَدَّثَنَا شُعْبَةُ قَالَ سَمِعْتُ عَلْقَمَةَ بْنَ مَرْثَدٍ يُحَدِّثُ عَنْ سَعْدِ بْنِ عُبَيْدَةَ عَنْ أَبِي عَبْدِ الرَّحْمَنِ السُّلَمِيِّ عَنْ عُثْمَانَ بْنِ عَفَّانَ رَضِيَ اللَّهُ عَنْهُ عَنِ النَّبِيِّ ﷺ أَنَّهُ قَالَ: إِنَّ خَيْرَكُمْ مَنْ عَلَّمَ الْقُرْآنَ أَوْ تَعَلَّمَهُ.

قَالَ مُحَمَّدُ بْنُ جَعْفَرٍ وَحَجَّاجٌ فَقَالَ أَبُو عَبْدِ الرَّحْمَنِ: فَذَاكَ الَّذِي أَقْعَدَنِي هَذَا الْمَقْعَدَ.

قَالَ حَجَّاجٌ: قَالَ شُعْبَةُ: وَلَمْ يَسْمَعْ أَبُو عَبْدِ الرَّحْمَنِ مِنْ عُثْمَانَ رَضِيَ اللَّهُ عَنْهُ وَلَا مِنْ عَبْدِ اللَّهِ وَلَكِنْ قَدْ سَمِعَ مِنْ عَلِيٍّ رَضِيَ اللَّهُ عَنْهُ، قَالَ أَبِي.

389 உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்கள் கூறியதாவது:

நபி (ஸல்) அவர்கள், "குர்ஆனைப் (பிறருக்குக்) கற்றுக் கொடுப்பவரே, அல்லது அதனைக் கற்றுக்கொள்பவரே உங்களுள் சிறந்தவர் ஆவார்" என்று கூறினார்கள்.[17]

முஹம்மது பின் ஜஅஃபர் (ரஹ்) மற்றும் ஹஜ்ஜாஜ் பின் முஹம்மது (ரஹ்) ஆகியோரது அறிவிப்பில் (உஸ்மான் (ரலி) அவர்களிடமிருந்து இந்த ஹதீஸை அறிவிக்கும்) அபூஅப்திர் ரஹ்மான் (அப்துல்லாஹ் பின் ஹபீப் பின் ரபீஆ அஸ்ஸுலமீ-ரஹ்) அவர்கள், "நபியவர்களின் இந்தப் பொன்மொழிதான் என்னை இந்த இடத்தில் (ஆசிரியராக) அமர்த்தியது" என்று கூறியதாக இடம்பெற்றுள்ளது.

(இந்த ஹதீஸின் ஆறாவது அறிவிப்பாளரான) ஷுஅபா பின் அல்ஹஜ்ஜாஜ் (ரஹ்) அவர்கள், "அபூஅப்திர் ரஹ்மான் (ரஹ்) அவர்கள் உஸ்மான் (ரலி) அவர்களிடமிருந்தோ, அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்களிடமிருந்தோ (ஹதீஸ்) எதையும் செவியுற்றவர் அல்லர். மாறாக, அலீ (ரலி) அவர்களிடமிருந்தே (ஹதீஸைச்) செவியுற்றுள்ளார்" எனக் கூறியுள்ளார்கள்.

16. இந்த ஹதீஸ், புகாரீ (1905, 5065, 5066) முஸ்லிம் (2710) நஸாயீ (2211, 3156) [illegible] (1029) [illegible] (4962) [illegible] (3/2002) [illegible] (6/170) உள்ளிட்ட நூல்களிலும் இடம்பெற்றுள்ளது.

17. இந்த ஹதீஸ், புகாரீ (5027) திர்மிதீ (2832, 2833) [illegible] (1240) [illegible] (207, 208) [illegible] (2044) [illegible] (7/174) [illegible] (118) [illegible] (380) உள்ளிட்ட நூல்களிலும் இடம்பெற்றுள்ளது.

وَقَالَ بَهْزٌ عَنْ شُعْبَةَ قَالَ عَلْقَمَةُ بْنُ مَرْثَدٍ: أَخْبَرَنِي وَقَالَ: خَيْرُكُمْ مَنْ تَعَلَّمَ الْقُرْآنَ وَعَلَّمَهُ.

(இந்த ஹதீஸின் ஐந்தாவது அறிவிப்பாளரான) அல்கமா பின் மர்ஸத் (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்:

حَدَّثَنَا عَفَّانُ حَدَّثَنَا شُعْبَةُ أَخْبَرَنِي عَلْقَمَةُ بْنُ مَرْثَدٍ وَقَالَ فِيهِ: مَنْ تَعَلَّمَ الْقُرْآنَ أَوْ عَلَّمَهُ.

இந்த ஹதீஸை எனக்கு அறிவித்த சஅது பின் உபைதா (ரஹ்) அவர்கள், 'குர்ஆனைத் தாமும் கற்று, அதை(ப் பிறருக்கும்) கற்றுக் கொடுப்பவரே உங்களுள் சிறந்தவர் ஆவார்' என்றே நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் என (ஐயப்பாடின்றி) என்னிடம் தெரிவித்தார்கள்

அஃப்பான் பின் முஸ்லிம் (ரஹ்) அவர்களது அறிவிப்பில், "நபி (ஸல்) அவர்கள், 'குர்ஆனைக் கற்றுக்கொண்டவரே உங்களுள் சிறந்தவர் ஆவார்; அல்லது அதனை(ப் பிறருக்குக்) கற்றுக் கொடுப்பவரே சிறந்தவர் ஆவார்' எனக் கூறியதாக அல்கமா பின் மர்ஸத் (ரஹ்) அவர்கள் தெரிவித்தார்கள்" என்று இடம்பெற்றுள்ளது.

٣٩٠ حَدَّثَنَا مُحَمَّدُ بْنُ جَعْفَرٍ وَحَجَّاجٌ قَالاَ حَدَّثَنَا شُعْبَةُ عَنْ عَمْرِو بْنِ دِينَارٍ قَالَ: سَمِعْتُ رَجُلاً يُحَدِّثُ عَنْ عُثْمَانَ بْنِ عَفَّانَ رَضِيَ اللَّهُ عَنْهُ عَنِ النَّبِيِّ ﷺ قَالَ: كَانَ رَجُلٌ سَمْحًا بَائِعًا وَمُبْتَاعًا وَقَاضِيًا وَمُقْتَضِيًا فَدَخَلَ الْجَنَّةَ.

٣٩١ حَدَّثَنَا مُحَمَّدُ بْنُ جَعْفَرٍ حَدَّثَنَا سَعِيدٌ عَنْ قَتَادَةَ عَنْ مُسْلِمِ بْنِ يَسَارٍ عَنْ حُمْرَانَ بْنِ أَبَانَ عَنْ عُثْمَانَ بْنِ عَفَّانَ رَضِيَ اللَّهُ عَنْهُ أَنَّهُ دَعَا بِمَاءٍ فَتَوَضَّأَ وَمَضْمَضَ وَاسْتَنْشَقَ ثُمَّ غَسَلَ وَجْهَهُ ثَلاَثًا وَذِرَاعَيْهِ ثَلاَثًا ثَلاَثًا وَمَسَحَ بِرَأْسِهِ وَظَهْرِ قَدَمَيْهِ ثُمَّ ضَحِكَ، فَقَالَ لأَصْحَابِهِ: أَلاَ تَسْأَلُونِي

390 *நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:*

ஒருவர் விற்கும்போதும் வாங்கும்போதும் உரிமை வழங்கும்போதும் உரிமைகோரும் போதும் பெருந்தன்மையாக நடந்துகொண்டார். எனவே, சொர்க்கத்தில் நுழைந்தார்.

இதை உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.[18]

391 *(உஸ்மான் (ரலி) அவர்களின் முன்னாள் அடிமை) ஹும்ரான் பின் அபான் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:*

(ஒருமுறை) உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்கள் தண்ணீர் கொண்டுவரச் சொல்லி, அங்கத் தூய்மை (உளூ) செய்யலானார்கள். அப்போது வாய் கொப்பளித்தார்கள்; (மூக்கிற்கு நீர் செலுத்தி) மூக்குச் சிந்தினார்கள்; பின்னர் தமது முகத்தை மூன்றுமுறை கழுவினார்கள்; தம்மிரு கைகளையும் முழங்கைவரை மும்மூன்று முறை கழுவினார்கள்; பின்னர் (நனைந்த கையால்) தமது தலையைத் தடவி ('மஸ்ஹு'ச் செய்யலா)னார்கள். பின்னர் தம்மிரு கால்களின் மேற்புறத்திலும் ஈரக் கையால் தடவி ('மஸ்ஹு'ச் செய்யலா)னார்கள்

---

18. இந்த ஹதீஸின் அறிவிப்பாளர்களுள் உஸ்மான் (ரலி) அவர்களிடமிருந்து அறிவிப்பவர் யாரென்று தெரியவில்லை. அம்ரு பின் தீனார் (ரஹ்) அவர்கள் உஸ்மான் (ரலி) அவர்களிடமிருந்து ஒருவர் அறிவித்ததை நான் கேட்டேன் எனக் கூறுகிறார். எனவே, இது அறிவிப்பாளர்தொடர் இடைமுறிந்த பலவீனமான ஹதீஸாகும். எனினும், இது தொடர்பான ஹதீஸ் [illegible] 387ஆவது [illegible] புகாரீ (2076), திர்மிதீ, இப்னுமாஜா ஆகிய நூல்களிலும் இடம்பெற்றுள்ளது. இந்த ஹதீஸ்களிலிருந்து விடுபட்டவர் அதாஉ பின் ஃபாரூக் [illegible] என அறிய முடிகிறது. இந்த அதாஉ பின் ஃபாரூக் பற்றி கருத்து வேறுபாடு உள்ளது. [illegible] அவர்களின் கருத்தின்படி அவர் நம்பகமானவர் [illegible]. இன்னும் வேறுவேறு அறிவிப்பாளர்தொடர்களில் இதே நூலில் இந்த ஹதீஸ் பதிவாகியுள்ளது. எனவே, இது 'ஸஹீஹுன் லிஃகைரிஹீ' (புறச் சான்றுகளால் 'ஸஹீஹ்' தரத்தை எட்டிய ஹதீஸ்) ஆகும். மேலும் பார்க்க: பின்வரும் ஹதீஸ்கள் - 41K 454, 477

عَمَّا أَضْحَكَنِي فَقَالُوا: مِمَّ ضَحِكْتَ يَا أَمِيرَ الْمُؤْمِنِينَ؟ قَالَ: رَأَيْتُ رَسُولَ اللَّهِ ﷺ دَعَا بِمَاءٍ قَرِيبًا مِنْ هَذِهِ الْبُقْعَةِ فَتَوَضَّأَ كَمَا تَوَضَّأْتُ ثُمَّ ضَحِكَ، فَقَالَ أَلَا تَسْأَلُونِي مَا أَضْحَكَنِي؟ فَقَالُوا: مَا أَضْحَكَكَ يَا رَسُولَ اللَّهِ؟ فَقَالَ: إِنَّ الْعَبْدَ إِذَا دَعَا بِوَضُوءٍ، فَغَسَلَ وَجْهَهُ حَطَّ اللَّهُ عَنْهُ كُلَّ خَطِيئَةٍ أَصَابَهَا بِوَجْهِهِ فَإِذَا غَسَلَ ذِرَاعَيْهِ كَانَ كَذَلِكَ وَإِنْ مَسَحَ بِرَأْسِهِ كَانَ كَذَلِكَ وَإِذَا طَهَّرَ قَدَمَيْهِ كَانَ كَذَلِكَ.

பின்னர் அவர்கள் சிரித்தார்கள். பிறகு (அங்கிருந்த) தம்முடைய தோழர்களிடம், "நான் ஏன் சிரித்தேன் என என்னிடம் நீங்கள் கேட்க மாட்டீர்களா?" என வினவினார்கள். அப்போது அந்தத் தோழர்கள், "இறைநம்பிக்கையாளர்களின் தலைவரே! தாங்கள் ஏன் சிரித்தீர்கள்?" எனக் கேட்டனர்.

உஸ்மான் (ரலி) அவர்கள் கூறினார்கள்: (ஒருமுறை) அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் இதே இடத்திற்கு அருகே தண்ணீரைக் கொண்டு வரச் சொன்னார்கள். நான் (இப்போது) செய்த அங்கத் தூய்மையைப் போன்றே அங்கத் தூய்மை செய்துவிட்டுப் பின்னர் சிரித்தார்கள். பின்னர் (அருகிலிருந்த தம் தோழர்களிடம்), "நான் ஏன் சிரித்தேன் என என்னிடம் நீங்கள் கேட்க மாட்டீர்களா?" என வினவினார்கள். அப்போது அந்தத் தோழர்கள், "அல்லாஹ்வின் தூதரே! தாங்கள் ஏன் சிரித்தீர்கள்?" எனக் கேட்டனர்.

٣٩٢ حَدَّثَنَا بَهْزٌ أَخْبَرَنَا مَهْدِيُّ بْنُ مَيْمُونٍ حَدَّثَنَا مُحَمَّدُ بْنُ عَبْدِ اللَّهِ بْنِ أَبِي يَعْقُوبَ عَنِ الْحَسَنِ بْنِ سَعْدٍ مَوْلَى حَسَنِ بْنِ عَلِيٍّ عَنْ رَبَاحٍ قَالَ: زَوَّجَنِي أَهْلِي أَمَةً لَهُمْ رُومِيَّةً فَوَقَعْتُ عَلَيْهَا فَوَلَدَتْ لِي غُلَامًا أَسْوَدَ مِثْلِي فَسَمَّيْتُهُ عَبْدَ اللَّهِ ثُمَّ وَقَعْتُ عَلَيْهَا فَوَلَدَتْ لِي غُلَامًا أَسْوَدَ مِثْلِي فَسَمَّيْتُهُ عُبَيْدَ اللَّهِ ثُمَّ طَبِنَ لَهَا غُلَامٌ لِأَهْلِي رُومِيٌّ يُقَالُ

அப்போது நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அடியார் ஒருவர் அங்கத் தூய்மை செய்வதற்குத் தண்ணீர் கொண்டுவரச் சொல்லி, (அதன் மூலம்) தனது முகத்தைக் கழுவினால், அவரது முகத்தின் மூலம் அவர் செய்த பாவங்கள் அனைத்தையும் அவரை விட்டு அல்லாஹ் அழித்துவிடுவான். அவர் தம்மிரு கைகளையும் முழங்கைவரை கழுவினால், அப்போதும் அப்படியே ஆகிறது. அவர் தமது தலையை ஈரக்கையால் தடவினால் ('மஸ்ஹு'ச் செய்தால்), அப்போதும் அப்படியே ஆகிறது. அவர் தம்மிரு பாதங்களையும் தூய்மைப்படுத்தினால், அப்போதும் அப்படியே ஆகிறது.[10]

392 ரபாஹ் அல்கூஃபி அவர்கள் கூறியதாவது:

என்னுடைய குடும்பத்தார், அவர்களுக்குச் சொந்தமான ரோம் நாட்டு அடிமைப் பெண் ஒருத்தியை எனக்கு மணமுடித்து வைத்தார்கள். அவளுடன் நான் தாம்பத்திய உறவு கொண்டேன். அதன் மூலம் எனக்கு அந்தப் பெண் என்னைப் போன்றே கறுப்பு நிறத்தில் ஓர் ஆண் குழந்தையைப் பெற்றாள். அந்தக் குழந்தைக்கு அப்துல்லாஹ் எனப் பெயரிட்டேன். பின்னரும் அவளுடன் தாம்பத்திய உறவு கொண்டேன். அப்போதும் எனக்கு என்னைப் போன்றே கறுப்பு நிறத்தில் ஓர் ஆண் குழந்தையைப் பெற்றாள். அந்தக் குழந்தைக்கு உபைதுல்லாஹ் எனப் பெயர் வைத்தேன்.

அதன் பின்னர் என்னுடைய குடும்பத்தாருக்குச் சொந்தமான ரோம் நாட்டு அடிமை

---

10. [illegible] 383, 384, 412, 413 [illegible] (7677) [illegible] 401 [illegible] - 283

لَهُ يُوحَنَّسُ فَرَاطَنَهَا بِلِسَانِهِ، قَالَ فَوَلَدَتْ غُلَامًا كَأَنَّهُ وَزَغَةٌ مِنَ الْوَزَغَاتِ فَقُلْتُ لَهَا: مَا هَذَا؟ قَالَتْ: هُوَ لِيُوحَنَّسَ، قَالَ فَرَفَعْنَا إِلَى أَمِيرِ الْمُؤْمِنِينَ عُثْمَانَ رَضِيَ اللَّهُ عَنْهُ، قَالَ مَهْدِيٌّ أَحْسَبُهُ قَالَ: سَأَلَهُمَا فَاعْتَرَفَا، فَقَالَ: أَتَرْضَيَانِ أَنْ أَقْضِيَ بَيْنَكُمَا بِقَضَاءِ رَسُولِ اللَّهِ ﷺ؟ قَالَ فَإِنَّ رَسُولَ اللَّهِ ﷺ قَضَى أَنَّ الْوَلَدَ لِلْفِرَاشِ وَلِلْعَاهِرِ الْحَجَرَ.

قَالَ مَهْدِيٌّ وَأَحْسَبُهُ قَالَ جَلَدَهَا وَجَلَدَهُ وَكَانَا مَمْلُوكَيْنِ.

حَدَّثَنَا شَيْبَانُ أَبُو مُحَمَّدٍ حَدَّثَنَا مَهْدِيُّ بْنُ مَيْمُونٍ حَدَّثَنَا مُحَمَّدُ بْنُ عَبْدِ اللَّهِ بْنِ أَبِي يَعْقُوبَ عَنِ الْحَسَنِ بْنِ سَعْدٍ عَنْ رَبَاحٍ فَذَكَرَ الْحَدِيثَ قَالَ فَرَفَعْتُهُمَا إِلَى أَمِيرِ الْمُؤْمِنِينَ عُثْمَانَ بْنِ عَفَّانَ رَضِيَ اللَّهُ عَنْهُ فَقَالَ: إِنَّ رَسُولَ اللَّهِ ﷺ قَضَى أَنَّ الْوَلَدَ لِلْفِرَاشِ، فَذَكَرَ مِثْلَهُ.

ஒருவன் அவளது மனத்தைக் கெடுத்தான். 'யோஹன்னஸ்' (அல்லது 'யூஹன்னா') என்பது அவன் பெயர். அவன் அவளிடம் தனது தாய்மொழியில் பேசி (தன் வசப்படுத்தி)னான். அதனால், அவள் ஓர் ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். அதுவோ பல்லிகளுள் ஒரு பல்லியைப் போன்று (சிவப்பு நிறத்தில்) இருந்தது. அவளிடம், "இந்தக் குழந்தை ஏது?" என்று கேட்டேன். அவள், "இது யோஹன்னஸுக்கு உரியது" என்றாள்.

பின்னர் நாங்கள் இறைநம்பிக்கையாளர்களின் தலைவர் உஸ்மான் (ரலி) அவர்களிடம் (இது குறித்து) முறையீடு செய்தோம். அவர்கள் அவ்விருவரையும் விசாரிக்க, அவர்கள் இருவரும் (செய்த குற்றத்தை) ஒப்புக்கொண்டனர். பின்னர், உஸ்மான் (ரலி) அவர்கள் (அவ்விருவரிடமும்), "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அளித்த தீர்ப்பை உங்கள் இருவரிடையே நான் அளித்தால், நீங்கள் இருவரும் ஏற்றுக்கொள்வீர்களா?" என்று கேட்டுவிட்டு, "(ஒருத்தி பெற்றெடுத்த) குழந்தை, (அப்)பெண் யாருடைய அதிகாரத்தின் கீழ் இருக்கின்றாளோ, அவருக்கே உரியது. விபசாரம் செய்தவருக்கு இழப்புதான் கிடைக்கும்" என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் தீர்ப்பளித்துள்ளதாகக் குறிப்பிட்டார்கள்.

இந்த ஹதீஸின் அறிவிப்பாளர்களுள் ஒருவரான மஹ்தீ பின் மைமூன் (ரஹ்) அவர்கள் கூறும்போது, "உஸ்மான் (ரலி) அவர்கள் (விபசாரக் குற்றமிழைத்த) அவ்விருவருக்கும் (கல்லெறி மரண தண்டனை தரவில்லை; மாறாக,) கசையடித் தண்டனையே வழங்கினார்கள். அவ்விருவரும் அடிமைகளாக இருந்தனர் என்பதே இதற்குக் காரணம் என்று ரபாஹ் (ரஹ்) அவர்கள் கூறினார்கள் என்று நான் கருதுகிறேன்" என்றார்கள்.

-இதே ஹதீஸ் மற்றோர் அறிவிப்பாளர்தொடர் வழியாகவும் வந்துள்ளது. அதில் ரபாஹ் (ரஹ்) அவர்கள் மேற்கண்ட ஹதீஸைக் கூறிவிட்டுப் பின்வரும் தகவலைக் கூறியதாக இடம்பெற்றுள்ளது:

நான் (விபசாரக் குற்றம் புரிந்த) அவ்விருவர் குறித்தும் இறைநம்பிக்கையாளர்களின் தலைவர் உஸ்மான் (ரலி) அவர்களிடம் முறையீடு செய்தேன். அப்போது உஸ்மான் (ரலி) அவர்கள், "(ஒரு பெண் பெற்றெடுத்த) குழந்தை, (அப்)பெண் யாருடைய அதிகாரத்தின் கீழ் இருக்கின்றாளோ அவருக்கே உரியது" என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் தீர்ப்பளித்தது போன்றே அவர்களும் கூறினார்கள்.[20]

---

20. இது பலவீனமான ஹதீஸாகும். இதன் அறிவிப்பாளர் ரபாஹ் அவர்கள் யாரென்றே அறியப்படாதவர் என இப்னு ஹிப்பான், ஹாஃபிழ் இப்னு ஹஜர் (ரஹ்) உள்ளிட்டோர் கூறுகின்றனர்.

இதே ரபாஹ் வழியாக இந்த ஹதீஸை அபூதாவூத் (1937), ... (7/402) போன்ற நூல்களில் இடம்பெற்றுள்ளது. ஆனால், "ஒருத்தி பெற்றெடுத்த குழந்தை அவள் யாருடைய அதிகாரத்தின் கீழ் இருக்கின்றாளோ அவருக்கே உரியது. விபசாரம் செய்தவருக்கு இழப்புதான்" என்ற அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் கூற்று இதில் இடம்பெறாத வேறொரு தொடருடன் சேர்ந்து பின்வரும் நூல்களில் இடம்பெற்றுள்ளது. காண்க: புகாரீ - 2053.

393 (உஸ்மான் (ரலி) அவர்களின் முன்னாள் அடிமை) ஹும்ரான் பின் அபான் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

(ஒருமுறை) உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்கள் 'மகாஇத்' எனுமிடத்தில் இருந்தபோது, (அங்கத் தூய்மை செய்வதற்காகத்) தண்ணீர் கொண்டுவரச் சொல்லி, அதைத் தமது வலக் கையில் ஊற்றிக் கழுவினார்கள். பின்னர் தமது வலக் கையைப் பாத்திரத்துக்குள் இட்டுத் தம்மிரு முன் கைகளையும் மூன்றுமுறை கழுவினார்கள். பின்னர் தமது முகத்தை மூன்றுமுறை கழுவினார்கள். வாய் கொப்பளித்து, மூக்கினுள் நீர் செலுத்தி, மூக்குச் சிந்தினார்கள். தம்மிரு கைகளையும் முழங்கை முட்டுவரை மூன்றுமுறை கழுவினார்கள். பின்னர், தமது தலையை (ஈரக் கையால் தடவி) 'மஸ்ஹு'ச் செய்தார்கள். பின்னர், தம்மிரு கால்களையும் கணுக்கால்வரை மூன்றுமுறை கழுவினார்கள்.

٣٩٣ - حدثنا أبو كامل حدثنا إبراهيم يعني ابن سعد حدثنا ابن شهاب عن عطاء بن يزيد عن حمران قال: دعا عثمان رضي الله عنه بماء وهو على المقاعد فسكب على يمينه فغسلها ثم أدخل يمينه في الإناء فغسل كفيه ثلاثا ثم غسل وجهه ثلاث مرار وتمضمض واستنثر وغسل ذراعيه إلى المرفقين ثلاث مرات ثم مسح برأسه ثم غسل رجليه إلى الكعبين ثلاث مرار، ثم قال سمعت رسول الله ﷺ يقول: من توضأ نحو وضوئي هذا ثم صلى ركعتين لا يحدث نفسه فيهما غفر له ما تقدم من ذنبه.

حدثنا إبراهيم بن نصر الترمذي حدثنا إبراهيم بن سعد عن ابن شهاب عن عطاء بن يزيد عن حمران مولى عثمان أنه رأى عثمان رضي الله عنه دعا بإناء، فذكر نحوه.

பின்னர், "நான் செய்த இந்த அங்கத் தூய்மையைப் போன்று அங்கத் தூய்மை செய்து, பின்னர் வேறு எத்தவிதமான (கெட்ட) எண்ணங்களுக்கும் இடம் தராமல், இரண்டு 'ரக்அத்'கள் யார் தொழுகிறாரோ, அவர் முன்பு செய்த (சிறிய) பாவங்கள் அவருக்கு மன்னிக்கப்படும்' என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறியதை நான் செவியுற்றேன்" என்று கூறினார்கள்.

- இதே ஹதீஸ் வேறோர் அறிவிப்பாளர்தொடரிலும் வந்துள்ளது. அந்த ஹதீஸ், "(ஒரு முறை) உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்கள் (அங்கத் தூய்மை செய்வதற்காகத்) தண்ணீர் கொண்டுவரச் சொன்னதை நான் பார்த்தேன்" என்று உஸ்மான் (ரலி) அவர்களின் முன்னாள் அடிமை ஹும்ரான் பின் அபான் (ரஹ்) அவர்கள் கூறியதாகத் தொடங்குகிறது. அதைத் தொடர்ந்து, மேற்கண்ட ஹதீஸில் வந்துள்ள செய்தியே இடம்பெறுகின்றது.[21]

*2218, 2421, 2533, 2745, 4303, 6749, 6765, 6817, 7182 முஸ்லிம் - 2888, 2889

[illegible]

21. [illegible] - 381, 391 [illegible].

394 அபூசலமா பின் அப்திர் ரஹ்மான் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

உஸ்மான் (ரலி) அவர்கள் (தமது வீட்டில் கிளர்ச்சியாளர்களால்) முற்றுகையிடப் பட்டிருந்தார்கள். அப்போது அவர்கள் மாடியில் ஏறி நின்றுகொண்டு (மக்களை நோக்கி), "அல்லாஹ்வை முன்னிறுத்திக் கேட்கிறேன். 'ஹிரா' நாளின்போது[22] (உங்களுள்) யாரேனும் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுடன் இருந்துள்ளீர்களா? அந்நாளில் அந்த (ஹிரா) மலை அசைந்தது. அதை நபி (ஸல்) அவர்கள் தமது காலால் எட்டி உதைத்துவிட்டு, 'ஹிராவே! (ஆடாமல்) அமைதியாக இரு! உன்மீது நபியும், பெருந்தகையாளர் ஒருவரும், உயிர்த் தியாகி ஒருவரும் தவிர வேறு யாருமில்லை' என்று கூறினார்களே, அப்போது நபியவர்களுடன் நாலும் இருந்தேன் அல்லவா?" என்று கேட்டார்கள். அப்போது சிலர் உஸ்மான் (ரலி) அவர்களை நோக்கி, "ஆம்" என்றனர்.[23]

٣٩٤ حدثنا أبو قطن حدثنا يونس يعني ابن أبي إسحاق عن أبيه عن أبي سلمة بن عبد الرحمن قال: أشرف عثمان رضي الله عنه من القصر وهو محصور، فقال: أنشد بالله من شهد رسول الله ﷺ يوم حراء إذ اهتز الجبل فركله بقدمه ثم قال: اسكن حراء ليس عليك إلا نبي أو صديق أو شهيد وأنا معه فانتشد له رجال قال أنشد بالله من شهد رسول الله ﷺ يوم بيعة الرضوان إذ بعثني إلى المشركين إلى أهل مكة قال هذه يدي وهذه يد عثمان رضي الله عنه فبايع لي فانتشد له رجال قال

மறுபடியும் உஸ்மான் (ரலி) அவர்கள் (மக்களை நோக்கி), "அல்லாஹ்வை முன்னிறுத்திக் கேட்கிறேன். 'பைஅத்துர் ரிள்வான்' உறுதிப் பிரமாணம் நடைபெற்ற நாளில் (உங்களுள்) யாரேனும் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுடன் இருந்துள்ளீர்களா? அப்போது நபி (ஸல்) அவர்கள் (முன்னதாக) என்னை மக்காவிலுள்ள இணைவைப்பாளர்களிடம் அனுப்பிவைத்திருந்தார்கள். அப்போது (மக்காவாசிகள் என்னைக் கொன்றுவிட்டார்கள் என்று முஸ்லிம்களிடையே வதந்தி கிளம்பியபோது, இந்தச் செய்தி உண்மையானால், மக்காவாசிகளை எதிர்த்துப் போரிட வேண்டும் என்று தம்முடைய தோழர்களிடம் உறுதிமொழி வாங்கிய) நபி (ஸல்) அவர்கள் (தம்மிரு கைகளுள் ஒன்றைக் காட்டி), 'இது எனது கை; (மற்றொரு கையைக் காட்டி) இது உஸ்மானின் கை' என்று கூறி, என் சார்பில் அவர்களே உறுதிப் பிரமாணம் (பைஅத்) செய்தார்கள் அல்லவா?" என்று கேட்டார்கள். அப்போதும் சிலர் உஸ்மான் (ரலி) அவர்களை நோக்கி, "ஆம்" என்றனர்.[24]

---

22. 'ஹிரா' நாளில் (யவ்ம ஹிரா) என்று சொல். இந்த நிகழ்வு மக்காவிலுள்ள ஹிரா மலையைத் தொடர்புபடுத்தி நடந்ததாக இருக்குமோ எனும் ஐயத்தை எழுப்புகின்றது. புகாரியின் 3675, 3686, 3697 ஆகிய எண்களில் அனஸ் (ரலி) அவர்கள் வழியாக வந்துள்ள அறிவிப்பில் அந்த மலை (மதீனாவின்) உஹுது மலை எனக் குறிப்பிடப் பெற்றுள்ளது. ஆனால் முஸ்லிமின் (4796ஆம்) ஹதீஸை அறிவிக்கும் அபூஹுரைரா (ரலி) அவர்கள் (மக்காவின்) 'ஹிரா' மலை எனக் குறிப்பிடுகிறார்கள். இதைப் போன்றே நஸாயீயின் (3552) அறிவிப்பு [illegible] மலை நாளில் என்ற சொற்றொடருடன் மேற்கண்ட நிகழ்வைக் குறிப்பிடுகின்றது. இவற்றில் முரண்பாடு ஒன்றுமில்லை. இது போன்ற நிகழ்வு பலமுறை நிகழ்ந்திருக்கலாம். எனவே வெவ்வேறு மலைகளின் பெயர்களில் அறிவிப்புகள் வந்துள்ளன.

23. இந்த நபிமொழியில் நபி என்பது நபி (ஸல்) அவர்களையும், பெருந்தகையாளர் என்பது அபூபக்ர் [illegible] (ரலி) அவர்களையும், உயிர்த்தியாகி என்பது உமர் (ரலி) அவர்களையும் குறிக்கும். புகாரியின் அறிவிப்புகளில் உயிர்த்தியாகிகள் இருவர் என இடம்பெற்றுள்ளது. அது உமர் (ரலி), உஸ்மான் (ரலி) ஆகிய இருவரையும் குறிக்கும். அவர்கள் இருவருமே கொலை செய்யப்பட்டு வீரமரணமடைந்தனர் (ஃபத்ஹுல் பாரீ).

24. 'பைஅத்துர் ரிள்வான்' பற்றி முன்னர் உஸ்மான் (ரலி) அவர்களின் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளோம். மேலும் காண்க: புகாரீ ஹதீஸ் எண் - 3698

أَنْشُدُ بِاللهِ مَنْ شَهِدَ رَسُولَ اللهِ ﷺ قَالَ: مَنْ يُوَسِّعُ لَنَا بِهَذَا الْبَيْتِ فِي الْمَسْجِدِ بِبَيْتٍ فِي الْجَنَّةِ فَابْتَعْتُهُ مِنْ مَالِي فَوَسَّعْتُ بِهِ الْمَسْجِدَ فَانْتَشَدَ لَهُ رِجَالٌ قَالَ وَأَنْشُدُ بِاللهِ مَنْ شَهِدَ رَسُولَ اللهِ ﷺ يَوْمَ جَيْشِ الْعُسْرَةِ، قَالَ مَنْ يُنْفِقُ الْيَوْمَ نَفَقَةً مُتَقَبَّلَةً فَجَهَّزْتُ نِصْفَ الْجَيْشِ مِنْ مَالِي قَالَ فَانْتَشَدَ لَهُ رِجَالٌ وَأَنْشُدُ بِاللهِ مَنْ شَهِدَ رُومَةَ يُبَاعُ

மறுபடியும் உஸ்மான் (ரலி) அவர்கள் (மக்களை நோக்கி), "அல்லாஹ்வை முன்னிறுத்திக் கேட்கிறேன். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், 'இந்த வீட்டை யாரேனும் பள்ளிவாசலுக்காக விரிவுபடுத்தித் தருவார்களா? அவ்வாறாயின், அவருக்குச் சொர்க்கத்தில் ஓர் இல்லம் உண்டு' என்று கூறிய போது, (உங்களுள்) யாரேனும் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுடன் இருந்துள்ளீர்களா? அப்போது நான் எனது சொந்தப் பணம் கொடுத்து அ(ந்த இல்லத்)தை வாங்கி, அதை (மஸ்ஜிதுந் நபவீ) பள்ளிவாசலாக விரிவுபடுத்திக் கொடுத்தேன் அல்லவா?" என்று கேட்டார்கள். அப்போதும் சிலர் உஸ்மான் (ரலி) அவர்களை நோக்கி, "ஆம்" என்றனர்.

மறுபடியும் உஸ்மான் (ரலி) அவர்கள் (மக்களை நோக்கி), "அல்லாஹ்வை முன்னிறுத்திக் கேட்கிறேன். 'அல்உஸ்ரா'[25] ('தபூக்' போருக்காகப்) படை (திரட்டப்பட்ட பொருளாதார நெருக்கடி நிறைந்த அந்த) நாளில் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், 'இன்றைய தினம் யாராவது (அல்லாஹ்வால்) ஒப்புக்கொள்ளப்படுவதற்குத் தகுந்த ஈகையைச் செய்ய முன்வருவார்களா?' என்று கேட்டபோது, (உங்களுள்) யாராவது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுடன் இருந்துள்ளீர்களா? அப்போது அந்தப் படையினருக்கு ஆகும் செலவில் பாதியை எனது சொந்தப் பணத்திலிருந்து வழங்கினேன் அல்லவா?" என்று கேட்டார்கள். அப்போதும் சிலர் உஸ்மான் (ரலி) அவர்களை நோக்கி, "ஆம்" என்றனர்.

மறுபடியும் உஸ்மான் (ரலி) அவர்கள் (மக்களை நோக்கி), "அல்லாஹ்வை முன்னிறுத்திக் கேட்கிறேன். 'ரூமா'[26] எனும் கிணற்று நீர் வழிப்போக்கருக்கு(க்கூட) விலைக்கு

---

25. தபூக் போர்தான் 'அல்உஸ்ரா' (சிரம காலப் போர்) என்று குறிப்பிடப்படுகிறது. இது ஹிஜ்ரீ 9ஆம் ஆண்டு ரஜப் (கி.பி. 630 செப்டம்பர்) மாதத்தில் நடந்தது. தபூக் என்பது அரபு நாட்டிலுள்ள ஒரு பாலைவனச் சோலையாகும். இது மதீனாவுக்கு வடக்கே ஏறத்தாழ 750 கி.மீ. தொலைவிலுள்ளது. ரோமர்கள் (பைஸாந்தியர்) பெரும் படையுடன் மதீனாவைத் தாக்க வரவிருப்பதாகவும் அவர்களுக்கு [illegible] உதவிகளையும் செய்திருப்பதாகவும் [illegible] மதீனா வந்த [illegible] வணிகர்கள் மூலம் தகவல் கிடைத்தது. லக்ம், ஜுதாம் உள்ளிட்ட அரபுக் குலத்தாரின் ஆதரவும் ரோமர்களுக்குக் கிடைத்தது. ரோமாபுரி மன்னன் 40 ஆயிரம் படை வீரர்களை அனுப்பி வைத்தான். ரோமர்களின் முதல் படையணி 'அல்பல்கா' எனும் இடம்வரை வந்துவிட்டது. எனவே நபி (ஸல்) அவர்கள் 30 ஆயிரம் முஸ்லிம்களுடன் புறப்பட்டார்கள்.

அப்போது பொருளாதார நெருக்கடியும் வறட்சியும் மிகுந்த காலமாக இருந்தது. உஸ்மான் (ரலி) போன்ற நபித்தோழர்களின் தாராள உதவியும் தயாள குணமும் இருந்ததால், பெரும்படையொன்றைத் திரட்டவும் ஏராளமான வாகனங்களைப் பெறவும் முடிந்தது. இருந்தும் கடும் வெப்பம் ஒருபுறமும் உணவு மற்றும் தண்ணீர்ப் பற்றாக்குறை மறுபுறமும் முஸ்லிம்களைப் பெரிதும் வாட்டின. இதனால் இப்போருக்கு 'அல்உஸ்ரா' (சிரம காலப் போர்) எனப் பெயர் வழங்கலாயிற்று. நபி (ஸல்) அவர்களும் முஸ்லிம் வீரர்களும் தபூக் எனுமிடத்தில் 20 நாட்கள் முகாமிட்டனர். எதிரிகள் பின்வாங்கி ஓடிவிட்டதால், போரேதும் நடக்கவில்லை. நபி (ஸல்) அவர்கள் மதீனா திரும்பினார்கள். நபியவர்கள் [illegible] இறுதிப் போர் இதுதான் [illegible]

26. மதீனா நகரிலுள்ள 'ரூமா' என்ற கிணற்றுக்கு 'பிஃரு உஸ்மான' (உஸ்மான் (ரலி) அவர்களின் கிணறு) என்ற பெயரும் உண்டு. உஸ்மான் (ரலி) அவர்கள் அதை விலை கொடுத்து வாங்கி, முஸ்லிம்களுக்கும் வழிப்போக்கர்களுக்கும் அர்ப்பணித்தார்கள். [illegible] ரூமா [illegible] என்பவருக்கு விற்றார். அதனால்தான் இதற்கு 'ரூமா' என்ற பெயர் [illegible] வழங்கலாயிற்று. இது 'அல்அகீக்' பள்ளத்தாக்கில் [illegible] எனும் [illegible] இடத்தில், மஸ்ஜிதுந் நபவீ பள்ளிவாசலிலிருந்து 3.5 கி.மீ. தூரத்திலுள்ளது. [illegible]

ملؤها ابن السبيل فابتعتها من مالي فأبحتها لابن السبيل قال فانتشد له رجال.

விற்கப்பட்டுக்கொண்டிருந்தபோது, (உங்களுள்) யாரேனும் இருந்துள்ளீர்களா? அப்போது நான் அந்தக் கிணற்றை என் சொந்தப் பணம் கொடுத்து வாங்கி, வழிப்போக்கருக்கு அர்ப்பணித்தேன் அல்லவா?" என்று கேட்டார்கள். அப்போதும் சிலர் உஸ்மான் (ரலி) அவர்களை நோக்கி, "ஆம்" என்றனர்.[27]

٣٩٥ حدثنا عبد الرزاق أنبأنا معمر عن الزهري عن عطاء بن يزيد الليثي عن حمران بن أبان قال: رأيت عثمان بن عفان رضي الله عنه توضأ فأفرغ على يديه ثلاثا فغسلهما ثم مضمض واستنثر ثم غسل وجهه ثلاثا ثم غسل يده اليمنى إلى المرفق ثلاثا ثم اليسرى مثل ذلك ثم مسح برأسه ثم غسل قدمه اليمنى ثلاثا ثم اليسرى مثل ذلك، قال: رأيت رسول الله ﷺ توضأ نحوا من وضوئي هذا ثم قال من توضأ وضوئي هذا ثم صلى ركعتين لا يحدث فيهما نفسه غفر له ما تقدم من ذنبه.

395 (உஸ்மான் (ரலி) அவர்களின் முன்னாள் அடிமை) ஹும்ரான் பின் அபான் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

(ஒருமுறை) உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்கள் அங்கத் தூய்மை செய்ததைப் பார்த்தேன். (முதலில்) அவர்கள் தம்முடைய கைகளில் (மணிக்கட்டுவரை) தண்ணீரை ஊற்றி, மூன்றுமுறை அவற்றைக் கழுவினார்கள். பிறகு வாய் கொப்பளித்து, (மூக்கினுள் தண்ணீர் செலுத்தி) மூக்குச் சிந்தினார்கள். பின்னர் தமது முகத்தை மூன்றுமுறை கழுவினார்கள். பிறகு தமது வலக் கையை முழங்கை மூட்டுவரை மூன்றுமுறை கழுவினார்கள். அடுத்து, (தமது) இடக் கையையும் அதைப் போன்றே கழுவினார்கள். பிறகு தமது தலையை (ஈரக் கையால் தடவி) 'மஸ்ஹு'ச் செய்தார்கள். பின்னர் தமது வலக் காலை கணுக்கால் வரை மூன்றுமுறை கழுவினார்கள். அடுத்து, இடக் காலையும் அதைப் போன்றே கழுவினார்கள்.

பின்னர், "நான் செய்த இந்த அங்கத் தூய்மையைப் போன்றே அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களும் அங்கத் தூய்மை செய்ததை நான் பார்த்தேன். மேலும், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், 'யார் நான் செய்த இந்த அங்கத் தூய்மையைப் போன்று செய்து, பின்னர் வேறு எந்த (கெட்ட) எண்ணங்களுக்கும் இடம் தராமல், இரண்டு 'ரக்அத்'கள் தொழுகின்றாரோ, அவர் முன்பு செய்த (சிறிய) பாவங்கள் அவருக்கு மன்னிக்கப்படும்' என்று கூறினார்கள்" என்றார்கள்.[28]

பள்ளியிலிருந்து ஒரு மைல் தூரத்திலும் உள்ளது.

நபி (ஸல்) அவர்கள் மதீனாவுக்கு வந்தபோது இந்தக் கிணற்றுத் தண்ணீர்தான் இனிமையானதாக இருந்தது. அப்போது இது யூதன் ஒருவனுக்கு உரியதாக இருந்தது. அவன் அதன் தண்ணீரை விலைக்கு விற்றுவந்தான். உஸ்மான் (ரலி) அவர்கள் 35 ஆயிரம் திர்ஹம் கொடுத்துப் பாதி உரிமையை விலைக்கு வாங்கினார்கள். இதன்படி ஒருநாள் அந்த யூதன் அத்தண்ணீரைப் பயன்படுத்திக்கொள்வான். மறுநாள் உஸ்மான் (ரலி) அவர்கள் அதிலிருந்து எல்லா முஸ்லிம்களுக்கும் வழிப்போக்கர்களுக்கும் பயன்படக் கொடுத்தார்கள். இதுபோன்று ஒருநாள் விட்டு ஒருநாள் மட்டும் தண்ணீர் கிடைத்தது முஸ்லிம்களுக்குப் போதுமானதாக இல்லை. எனவே, மீண்டும் உஸ்மான் (ரலி) அவர்கள் 8 ஆயிரம் திர்ஹம் கொடுத்து முழுவதையும் வாங்கி, அதை முஸ்லிம்களுக்காக அர்ப்பணித்தார்கள். (திர்மிதீ, நஸாயீ, தாரீகுல் மதீனத்தில் முனவ்வரா, தாரீகு மஆலிமில் மதீனத்தில் முனவ்வரா [illegible])

27. இந்த ஹதீஸ் நஸாயீ (3131, 3552), தாரகுத்னீ (4469), திர்மிதீ (3636) ஆகியவற்றிலும், இப்னு ஹிப்பான் (7042, 7045, 7046), இப்னு குஸைமா (2290, 2294, 2295), தபரானீயின் அல்முஅஜமுல் அவ்சத் (1224), ஹாகிம் (1476), தைலமீயின் [illegible] (4/96), முஸன்னஃப் இப்னு அபீஷைபா (8/688) உள்ளிட்ட தமிழொழி [illegible] நூல்களிலும் பதிவாகியுள்ளது.

28. காண்க: முன்சென்ற ஹதீஸ் எண்கள் - 377, 393 மற்றும் அடிக்குறிப்புகள்.

٣٩٦ حدثنا عبد الرزاق أخبرنا معمر عن أيوب عن نافع عن نبيه بن وهب قال: أرسل عمر بن عبيد الله إلى أبان بن عثمان رضي الله عنه أيكحل عينيه وهو محرم أو بأي شيء يكحلهما وهو محرم فأرسل إليه أن يضمدهما بالصبر فإني سمعت عثمان بن عفان رضي الله عنه يحدث ذلك عن رسول الله ﷺ.

396 நுபைஹ் பின் வஹ்ப் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

(ஒரு பயணத்தின்போது கடுமையான கண்வலியால் பாதிக்கப்பட்ட) உமர் பின் உபைதில்லாஹ் (ரஹ்) அவர்கள், அபான் பின் உஸ்மான் (ரஹ்) அவர்களிடம் ஆளனுப்பி, "நான் 'இஹ்ராம்' அணிந்திருக்கிறேன்; எனவே, (கண்வலி குணமாவதற்காக) என்னிரு கண்களிலும் அஞ்சனம் (சுர்மா) இட்டுக் கொள்ளலாமா?" அல்லது, "நான் 'இஹ்ராம்' அணிந்திருக்கிறேன்; (கண்வலி குறைவதற்காக) என் கண்களில் எதைப் பூசுவது?" என்று விளக்கம் கேட்டார்கள். அதற்கு அபான் பின் உஸ்மான் (ரஹ்) அவர்கள் உமர் பின் உபைதில்லாஹ் (ரஹ்) அவர்களிடம் ஒருவரை அனுப்பி, "இரு கண்களிலும் கற்றாழைச் சாற்றைப் பிழிந்து கட்டிக் கொள்ளுங்கள்; ஏனெனில், இந்தத் தகவலை அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறியதாக (என் தந்தை) உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்கள் குறிப்பிட்டதை நான் செவியுற்றேன்" என்று கூறியனுப்பினார்கள்.[29]

٣٩٧ حدثنا عبد الله قال حدثنا عبيد الله بن عمر حدثنا عثمان بن عمر حدثنا عمران بن حدير عن عبد الملك بن عبيد عن حمران بن أبان عن عثمان بن عفان رضي الله عنه أن النبي ﷺ قال: من علم أن الصلاة حق واجب دخل الجنة.

397 நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

ஒருவர் தொழுகை என்பது கட்டாயக் கடமை என்பதை அறிந்துகொண்டால், அவர் சொர்க்கத்தில் நுழைவார்.

இதை உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.[30]

٣٩٨ حدثنا عبد الله حدثنا محمد بن أبي بكر المقدمي حدثني أبو معشر يعني البراء واسمه يوسف بن يزيد حدثنا ابن حرملة عن سعيد بن المسيب قال: خرج عثمان حتى إذا كان في بعض الطريق أخبر علي أن عثمان نهى أصحابه عن التمتع بالعمرة والحج، فقال علي لأصحابه إذا راح فروحوا فأهل علي وأصحابه

398 சயீது பின் அல்முசய்யப் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

(ஒரு முறை) உஸ்மான் (ரலி) அவர்கள் 'ஹஜ்' செய்வதற்காகப் பயணம் சென்றார்கள். அப்போது வழியில் ஓரிடத்தில் அவர்கள் இருந்தபோது, 'உஸ்மான் (ரலி) அவர்கள் ஹஜ்ஜையும் உம்ராவையும் 'தமத்துஉ' முறையில் நிறைவேற்றக் கூடாது எனத் தம்முடைய தோழர்களுக்குத் தடை விதித்துள்ளார்கள்' என அலீ (ரலி) அவர்களிடம் தகவல் தெரிவிக்கப்பட்டது. அப்போது அலீ (ரலி) அவர்கள் தம் தோழர்களிடம், "உஸ்மான்

---

29. இந்த ஹதீஸிலிருந்து கற்றாழைச் சாறு கண்வலிக்கு மருந்து என்பதையும் இஹ்ராம் அணிந்திருப்பவர் கண்களுக்கு மருந்திடலாம் என்பதையும் அறிந்துகொள்கிறோம். மேலும் பார்க்க: முஸ்லிம் ஹதீஸ் எண்கள் - 2276, 2277 மற்றும் திர்மிதீ (875), அபூதாவூத் (1567), நஸாயீ (2663), தாரிமீ (1849) [illegible] (5/62)

30. இந்த ஹதீஸின் அறிவிப்பாளர்தொடரில் உஸ்மான் (ரலி) அவர்களிடமிருந்து அறிவிக்கும் இரண்டாவது அறிவிப்பாளர் அப்துல்மலிக் பின் உபைத் [illegible] [illegible] [illegible] இந்த ஹதீஸ். இதே அப்துல் மலிக் பின் உபைத் [illegible] (384) [illegible] இடம்பெற்றுள்ளது.

(ரலி) அவர்கள் (ஹஜ்ஜுக்குப்) புறப்பட்டால் நீங்களும் (அவர்களுடன்) புறப்பட்டு விடுங்கள்" என்று கூறினார்கள். பின்னர், அலீ (ரலி) அவர்களும் அவர்களின் தோழர்களும் உம்ராவுக்காக (மட்டும் 'தமத்துஉ' முறையில் இஹ்ராம் அணிந்து) 'தல்பியா' கூறினர். உஸ்மான் (ரலி) அவர்கள் இது தொடர்பாக அவர்களிடம் எதுவும் பேசவில்லை. பின்னர் அலீ (ரலி) அவர்கள் உஸ்மான் (ரலி) அவர்களிடம், "நீங்கள் 'தமத்துஉ' முறையில் உம்ராவை(யும் ஹஜ்ஜையும்) நிறைவேற்றக் கூடாது எனத் தடைவிதித்ததாக எனக்குத் தகவல் வந்துள்ளதே; (அப்படியாயின்,) அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் 'தமத்துஉ' முறையில் ஹஜ் செய்தில்லையா?" என்று கேட்டார்கள். அப்போது உஸ்மான் (ரலி) அவர்கள் அலீ (ரலி) அவர்களுக்கு என்ன பதில் அளித்தார்கள் என்பது எனக்குத் தெரியாது.[31]

بِعُمْرَةٍ فَلَمْ يُكَلِّمْهُمْ عُثْمَانُ، فَقَالَ عَلِيٌّ رَضِيَ اللَّهُ عَنْهُ: أَلَمْ أُخْبَرْ أَنَّكَ نَهَيْتَ عَنِ التَّمَتُّعِ أَلَمْ يَتَمَتَّعْ رَسُولُ اللَّهِ ﷺ، قَالَ: فَمَا أَدْرِي مَا أَجَابَهُ عُثْمَانُ رَضِيَ اللَّهُ عَنْهُ.

٣٩٩ حَدَّثَنَا عَبْدُ الرَّزَّاقِ حَدَّثَنَا مَعْمَرٌ عَنِ الزُّهْرِيِّ عَنْ مَالِكِ بْنِ أَوْسِ بْنِ الْحَدَثَانِ قَالَ: أَرْسَلَ إِلَيَّ عُمَرُ بْنُ الْخَطَّابِ رَضِيَ اللَّهُ عَنْهُ فَبَيْنَا أَنَا كَذَلِكَ إِذْ جَاءَهُ مَوْلَاهُ يَرْفَأُ، فَقَالَ: هَذَا عُثْمَانُ وَعَبْدُ الرَّحْمَنِ وَسَعْدٌ وَالزُّبَيْرُ بْنُ الْعَوَّامِ قَالَ وَلَا أَدْرِي أَذْكَرَ طَلْحَةَ أَمْ لَا يَسْتَأْذِنُونَ عَلَيْكَ قَالَ ائْذَنْ لَهُمْ ثُمَّ مَكَثَ سَاعَةً ثُمَّ جَاءَ، فَقَالَ هَذَا الْعَبَّاسُ وَعَلِيٌّ رَضِيَ اللَّهُ عَنْهُمَا: يَسْتَأْذِنَانِ عَلَيْكَ قَالَ ائْذَنْ لَهُمَا، فَلَمَّا دَخَلَ الْعَبَّاسُ قَالَ: يَا أَمِيرَ الْمُؤْمِنِينَ اقْضِ بَيْنِي وَبَيْنَ هَذَا وَهُمَا حِينَئِذٍ يَخْتَصِمَانِ فِيمَا أَفَاءَ اللَّهُ عَلَى رَسُولِهِ مِنْ أَمْوَالِ بَنِي النَّضِيرِ، فَقَالَ الْقَوْمُ:

399 மாலிக் பின் அவ்ஸ் பின் அல்ஹதஸான் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

(ஒரு முறை) உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள் என்னிடம் ஆளனுப்பி (என்னைத் தம்மிடம் அழைத்து வருமாறு கூறி)னார்கள் நான் (சென்று) உமர் (ரலி) அவர்களிடம் இருந்தபோது, அவர்களிடம் அவர்களுடைய முன்னாள் அடிமை 'யர்ஃபஉ' என்பவர் வந்து, "இதோ உஸ்மான் (ரலி), அப்துர் ரஹ்மான் (ரலி), சஅது (ரலி), ஸுபைர் பின் அல்அவ்வாம் (ரலி) ஆகியோர் உங்களிடம் வருவதற்கு அனுமதி கேட்கின்றனர்" என்று கூறினார். -"அவர் தல்ஹா (ரலி) அவர்களின் பெயரைக் கூறினாரா இல்லையா? என்பது எனக்குத் தெரியாது" என்று அறிவிப்பாளர் கூறுகிறார் - அப்போது உமர் (ரலி) அவர்கள், "அவர்களுக்கு (உள்ளே வர) அனுமதி வழங்குவீராக" என்றார்கள். (அனுமதி பெற்ற அவர்கள் அனைவரும் உள்ளே வந்து அமர்ந்தனர்.)

பின்னர் சிறிது நேரம் அமைதியாக இருந்த அவர் மறுபடியும் உமர் (ரலி) அவர்களிடம் வந்து, "இதோ அப்பாஸ் (ரலி) அவர்களும் அலீ (ரலி) அவர்களும் உங்களிடம் வருவதற்கு அனுமதி கோருகின்றனர்" என்று கூறினார். அப்போதும் உமர் (ரலி) அவர்கள், "அவ்விருவருக்கும் (உள்ளே வர) அனுமதி வழங்குவீராக" என்றார்கள்.

அப்பாஸ் (ரலி) அவர்கள் (வீட்டினுள்) நுழைந்ததும், "இறைநம்பிக்கையாளர்களின் தலைவரே! எனக்கும் இவருக்குமிடையே நீங்கள் தீர்ப்பு வழங்குங்கள்" என்றார்கள். அப்போது அப்பாஸ் (ரலி) அவர்களும் அலீ (ரலி) அவர்களும் பனூ நளீர் (யூதக்) குலத்தாரின் செல்வங்களில் எவற்றை அல்லாஹ் தன் தூதருக்கு வழங்கியிருந்தானோ, அந்தச் செல்வம் (தம்மிருவருள் யாருக்குச் சேரும் என்பது) தொடர்பாக வழக்காடினார்கள்

31. [illegible] - 379 [illegible]

اقْضِ بَيْنَهُمَا يَا أَمِيرَ الْمُؤْمِنِينَ وَأَرِحْ كُلَّ وَاحِدٍ مِنْ صَاحِبِهِ فَقَدْ طَالَتْ خُصُومَتُهُمَا، فَقَالَ عُمَرُ رَضِيَ اللَّهُ عَنْهُ: أَنْشُدُكُمُ اللَّهَ الَّذِي بِإِذْنِهِ تَقُومُ السَّمَوَاتُ وَالْأَرْضُ أَتَعْلَمُونَ أَنَّ رَسُولَ اللَّهِ ﷺ قَالَ: لَا نُورَثُ مَا تَرَكْنَا صَدَقَةٌ، قَالُوا: قَدْ قَالَ ذَلِكَ وَقَالَ لَهُمَا مِثْلَ ذَلِكَ فَقَالَا نَعَمْ قَالَ فَإِنِّي سَأُخْبِرُكُمْ عَنْ هَذَا الْفَيْءِ إِنَّ اللَّهَ عَزَّ وَجَلَّ خَصَّ نَبِيَّهُ ﷺ مِنْهُ بِشَيْءٍ لَمْ يُعْطِهِ غَيْرَهُ فَقَالَ: ﴿وَمَا أَفَاءَ اللَّهُ عَلَى رَسُولِهِ مِنْهُمْ فَمَا أَوْجَفْتُمْ عَلَيْهِ مِنْ خَيْلٍ وَلَا رِكَابٍ﴾ وَكَانَتْ لِرَسُولِ اللَّهِ ﷺ خَاصَّةً وَاللَّهِ مَا احْتَازَهَا دُونَكُمْ وَلَا اسْتَأْثَرَ بِهَا عَلَيْكُمْ لَقَدْ قَسَمَهَا بَيْنَكُمْ، وَبَثَّهَا فِيكُمْ حَتَّى بَقِيَ مِنْهَا هَذَا الْمَالُ فَكَانَ يُنْفِقُ عَلَى أَهْلِهِ مِنْهُ سَنَةً ثُمَّ يَجْعَلُ مَا بَقِيَ مِنْهُ مَجْعَلَ مَالِ اللَّهِ، فَلَمَّا قُبِضَ رَسُولُ اللَّهِ ﷺ قَالَ أَبُو بَكْرٍ رَضِيَ

அப்போது (அருகில் இருந்த) அந்தக் குழுவினரும், "இறைநம்பிக்கையாளர்களின் தலைவரே! (இந்த) இருவருக்குமிடையே தீர்ப்பு வழங்கி, இவர்களுள் ஒருவர் மற்றவரிடமிருந்து நிம்மதியாக இருக்க வழி செய்யுங்கள். ஏனெனில், இவர்களுக்கு இடையிலான (இந்தப்) பிரச்சினை நெடு நாட்களாக நீடித்துவருகிறது" என்றனர்.

பின்னர் உமர் (ரலி) அவர்கள் (அருகில் இருந்தவர்களை நோக்கி), "யாருடைய கட்டளையால் வானங்களும் பூமியும் நிலை பெற்றிருக்கின்றனவோ, அந்த அல்லாஹ்வை முன்னிறுத்திக் கேட்கிறேன்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், '(இறைத்தூதர்களான) எங்களுக்கு யாரும் வாரிசாக முடியாது; நாங்கள் விட்டுச் செல்பவை யாவும் தர்மமே' என்று சொன்னதை நீங்கள் அறிவீர்களா?" என்று கேட்டார்கள். அதற்கு அக்குழுவினர், "(ஆம்;) நபி (ஸல்) அவ்வாறு சொன்னது உண்மைதான்" என்றனர். இதே கேள்வியை உமர் (ரலி) அவர்கள் (வழக்குக் கொண்டுவந்த) அவ்விருவரிடமும் கேட்டார்கள். அவ்விருவரும், "ஆம்" என்று கூறினர்.

"அவ்வாறாயின், (போரிடாமல் கைப்பற்றப்பட்ட) இந்த 'ஃபைஉ' செல்வம் (தொடர்பான சட்டம்) பற்றி நான் உங்களுக்குச் சொல்கிறேன்" என்று உமர் (ரலி) அவர்கள் கூறிவிட்டு(த் தொடர்ந்து பின்வருமாறு) கூறினார்கள்:

(போரிடாமல் கைப்பற்றப்பட்ட) இந்த 'ஃபைஉ' செல்வத்தை அல்லாஹ் தன் தூதருக்கு மட்டுமே உரியதாக ஆக்கினான். அவர்களைத் தவிர வேறு யாருக்கும் அதை அவன் வழங்கவில்லை. இதையே, "அல்லாஹ் எ(ந்தச் செல்வத்)தை (எதிரிகளான) அவர்களிடமிருந்து விடுவித்துத் தன்னுடைய தூதரிடம் ஒப்படைத்தானோ, அது உங்கள் குதிரைகளையும் ஒட்டகங்களையும் (அறப்போர் புரியும் நோக்கத்தில்) நீங்கள் ஓட்டிச் சென்றதால் கிடைத்ததன்று" (59:6) என்று அல்லாஹ் கூறியுள்ளான்.

இ(ந்தச் செல்வமான)து, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுக்கு மட்டுமே உரியதாக இருந்தது. அல்லாஹ்வின் மீதாணையாக! நபி (ஸல்) அவர்கள் உங்களை விட்டுவிட்டு, அதைத் தமக்காக எடுத்துக்கொள்ளவில்லை. அந்தச் செல்வம் விஷயத்தில் உங்களை விட்டுவிட்டுத் தமக்கு அவர்கள் முன்னுரிமை அளிக்கவும் இல்லை. அதை உங்களிடையேதான் பங்கிட்டுக் கொடுத்தார்கள். இறுதியில், அதில் இந்த (ஃபதக்) செல்வம் மட்டுமே எஞ்சியது.

நபி (ஸல்) அவர்கள் இந்தச் செல்வத்திலிருந்துதான் தம்முடைய குடும்பத்தாருக்கு ஓராண்டுக்குத் தேவையான தொகையை (எடுத்து)ச் செலவிட்டுவந்தார்கள். பின்னர் அவற்றில் எஞ்சியதை அல்லாஹ்வின் சொத்தாக (பொது நிதியாக) ஆக்கினார்கள்.

பின்னர் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் இறந்தபோது, (அவர்களுக்குப் பின்னர் ஆட்சித் தலைவராக வந்த) அபூபக்ர் (ரலி) அவர்கள், "நான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுக்குப் பின்னர் அவர்களுடைய பிரதிநிதி ஆவேன்; (எனவே,) நபி (ஸல்)

اللهُ عَنْهُ: أَنَا وَلِيُّ رَسُولِ اللهِ ﷺ بَعْدَهُ أَعْمَلُ فِيهَا بِمَا كَانَ يَعْمَلُ رَسُولُ اللهِ ﷺ فِيهَا.

٤٠٠ - حَدَّثَنَا عَبْدُ اللهِ حَدَّثَنَا إِسْمَاعِيلُ أَبُو مَعْمَرٍ حَدَّثَنَا يَحْيَى بْنُ سُلَيْمٍ الطَّائِفِيُّ عَنْ إِسْمَاعِيلَ بْنِ أُمَيَّةَ عَنْ مُوسَى بْنِ عِمْرَانَ بْنِ مَنَّاحٍ عَنْ أَبَانَ بْنِ عُثْمَانَ عَنْ عُثْمَانَ رَضِيَ اللهُ عَنْهُ أَنَّهُ رَأَى جَنَازَةً فَقَامَ إِلَيْهَا وَقَالَ: رَأَيْتُ رَسُولَ اللهِ ﷺ رَأَى جَنَازَةً فَقَامَ لَهَا.

அவர்கள் அந்தப் பொதுச்சொத்)தில் எவ்வாறு நடந்துகொண்டார்களோ, அவ்வாறே நானும் நடந்துகொள்வேன்" என்று கூறினார்கள்.[32]

400 அபான் பின் உஸ்மான் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

(என் தந்தை) உஸ்மான் (ரலி) அவர்கள் இறந்துபோன ஒருவரின் உடலை ('ஜனாஸா'வைக்) கண்டதும் அதற்காக எழுந்து நின்றார்கள். பின்னர், "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் ஒரு ஜனாஸாவைக் கண்டபோது, அதற்காக எழுந்து நின்றதை நான் பார்த்தேன்" எனக் கூறினார்கள்.[33]

---

32. காண்க: புகாரி 3094, 4034, 5358, 6728, 7305; முஸ்லிம் 3612, 3613, அபூதாவூத் (2574) முன்சென்ற ஹதீஸ் எண்கள் - 9, 14, 25, 52, 55, 57, 74, 75, 186, 187, 315, 318, 319, 330; பின்வரும் ஹதீஸ்கள் - 1319, 1332, 1468.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

33. [illegible] முஸ்லிம் - 1742.

[illegible] முஸ்லிம் - 1752.

[illegible]

٤٠١ حدثنا عبدالله حدثنا محمد بن أبي بكر حدثنا خالد بن الحارث حدثنا ابن أبي ذئب عن سعيد بن عبد الله بن قارظ عن أبي عبيد قال: شهدت عليا وعثمان رضي الله عنهما في يوم الفطر والنحر يصليان ثم ينصرفان فيذكران الناس فسمعتهما يقولان: نهى رسول الله ﷺ عن صوم هذين اليومين.

حدثنا محمد بن بكر أخبرنا ابن جريج حدثني ابن شهاب عن عطاء بن يزيد الجندعي أنه سمع حمران مولى عثمان بن عفان رضي الله عنه قال: رأيت أمير المؤمنين عثمان يتوضأ فأفرغ على يديه ثلاث مرات ثم استنثر ثلاث مرات ومضمض ثلاثا.

وذكر الحديث مثل معنى حديث معمر.

401 அபூஉபைத் (சஅது பின் உபைத் அஸ்ஸுஹ்ரீ - ரஹ்) அவர்கள் கூறியதாவது:

நான் அலீ (ரலி) அவர்களுடனும் உஸ்மான் (ரலி) அவர்களுடனும் நோன்புப் பெருநாள் தொழுகையிலும் ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகையிலும் கலந்துகொண்டுள்ளேன். அவர்கள் இருவரும் தொழவைத்துவிட்டுப் பின்னர் (மக்களை நோக்கித்) திரும்பி மக்களுக்கு அறிவுரை (குத்பா) கூறுவார்கள். அப்போது, "இந்த இரு நாட்களிலும் நோன்பு நோற்கக்கூடாது என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் தடைசெய்துள்ளார்கள்" என்று அவ்விருவரும் கூறியதை நான் கேட்டுள்ளேன்.[34]

(உஸ்மான் (ரலி) அவர்களின் முன்னாள் அடிமை) ஹும்ரான் பின் அபான் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

(ஒருமுறை) இறைநம்பிக்கையாளர்களின் தலைவர் (கலீஃபா) உஸ்மான் (ரலி) அவர்கள் அங்கத் தூய்மை (உளூ) செய்ததைப் பார்த்தேன். அப்போது, அவர்கள் தம்முடைய கைகளில் மூன்றுமுறை தண்ணீரை ஊற்றி, (அவற்றைக் கழுவினார்கள்) பின்னர் மூன்றுமுறை வாய் கொப்பளித்தார்கள். பின்னர் மூன்றுமுறை (மூக்கினுள் தண்ணீர் செலுத்தி) மூக்குச் சிந்தினார்கள்.

பிறகு, ஏற்கெனவே இடம்பெற்ற மஅமர் (ரஹ்) அவர்கள் அறிவித்த (395ஆவது) ஹதீஸைப் போன்றே தொடர்ந்து குறிப்பிட்டார்கள்.

٤٠٢ حدثنا يزيد بن هارون أنبأنا الجريري عن عروة بن قبيصة عن رجل من الأنصار عن أبيه أن عثمان رضي الله عنه قال: ألا أريكم كيف كان وضوء رسول الله ﷺ؟ قالوا: بلى، فدعا بماء فتمضمض ثلاثا واستنثر ثلاثا وغسل وجهه وذراعيه ثلاثا ومسح برأسه وغسل قدميه ثلاثا، ثم قال: واعلموا أن الأذنين من الرأس، ثم قال: قد تحريت لكم وضوء رسول الله ﷺ.

402 அன்சாரிகளுள் ஒருவர் தம் தந்தையார் வாயிலாகக் கூறியதாவது:

(ஒருமுறை) உஸ்மான் (ரலி) அவர்கள் (தமக்கு அருகில் இருந்தவர்களிடம்), "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் செய்த அங்கத் தூய்மை (உளூ) எப்படி இருந்தது? என்று உங்களுக்கு நான் காட்டட்டுமா?" எனக் கேட்டார்கள். அதற்கு அ(ங்கிருந்த)வர்கள், "ஆம்" என்றனர். அப்போது உஸ்மான் (ரலி) அவர்கள் தண்ணீர் கொண்டுவரச் சொல்லி, அதன் மூலம் மூன்று முறை வாய் கொப்புளித்தார்கள். பின்னர், மூன்று முறை (மூக்கினுள் தண்ணீர் செலுத்தி) மூக்குச் சிந்தினார்கள். பின்னர் தமது முகத்தை மூன்று முறை கழுவினார்கள். பின்னர், தமது கைகளை முழங்கைவரை கழுவினார்கள். பின்னர், தமது தலையை நனைந்த கையால் தடவி ('மஸ்ஹு'ச் செய்யலா)னார்கள். பின்னர், தம்மிரு கால்களையும் (கணுக்கால்கள்வரை) மூன்றுமுறை கழுவினார்கள். பின்னர், "இரு காதுகளும் தலையின் அங்கங்களே[35] என்பதைப் புரிந்துகொள்ளுங்கள்" என்று கூறிவிட்டு,

34. காண்க: புகாரீ (1990, 5571), முஸ்லிம் (2083), திர்மிதீ (702), முவத்தா மாலிக் (380), [illegible]
35. தலையை ஈரக்கையால் தடவி 'மஸ்ஹு'ச் செய்யும்போதே காதுகளையும் உட்புறமும் வெளிப்புறமும் தடவி 'மஸ்ஹு'ச்

٤٠٣ حدثنا إسحاق بن يوسف حدثنا عوف الأعرابي عن معبد الجهني عن حمران بن أبان قال: كنا عند عثمان بن عفان رضي الله عنه فدعا بماء، فتوضأ فلما فرغ من وضوئه تبسم فقال: هل تدرون مما ضحكت؟ قال فقال: توضأ رسول الله ﷺ كما توضأت ثم تبسم ثم قال: هل تدرون مم ضحكت؟ قال قلنا: الله ورسوله أعلم، قال: إن العبد إذا توضأ فأتم وضوءه ثم دخل في صلاته فأتم صلاته خرج من صلاته كما خرج من بطن أمه من الذنوب.

٤٠٤ حدثنا روح حدثنا شعبة عن قتادة قال سمعت عبد الله بن شقيق يقول: كان عثمان رضي الله عنه ينهى عن المتعة وعلي رضي الله عنه يفتي بها، فقال له عثمان رضي الله عنه قولا، فقال له علي رضي الله

"அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் செய்த அங்கத் தூய்மையை உங்களுக்காக நான் திட்டமிட்டே செய்து காட்டினேன்" என்றார்கள்.[36]

403 (உஸ்மான் (ரலி) அவர்களின் முன்னாள் அடிமை) ஹும்ரான் பின் அபான் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

(ஒருமுறை) நாங்கள் உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்களிடம் இருந்தோம். அப்போது அவர்கள் தண்ணீரைக் கொண்டு வரச் சொல்லி அங்கத் தூய்மை (உளூ) செய்தார்கள். அங்கத் தூய்மை செய்து முடித்ததும், புன்முறுவல் பூத்தார்கள். பின்னர், "நான் எதற்காகச் சிரித்தேன் என்று உங்களுக்குத் தெரியுமா?" எனக் கேட்டார்கள். (தொடர்ந்து) அவர்களே பின்வருமாறு விடையளித்தார்கள்:

நான் (இப்போது) செய்த இந்த அங்கத் தூய்மையைப் போன்றே அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அங்கத் தூய்மை செய்து விட்டுப் பின்னர் புன்முறுவல் பூத்தார்கள். பிறகு, "நான் எதற்காகச் சிரித்தேன் என்று உங்களுக்குத் தெரியுமா?" எனக் கேட்டார்கள். அப்போது நாங்கள், "அல்லாஹ்வும் அவனுடைய தூதருமே அறிந்தவர்கள்" என்று கூறினோம். அப்போது நபி (ஸல்) அவர்கள், "அடியார் ஒருவர் அங்கத் தூய்மை செய்(ய வந்)து, அந்த அங்கத் தூய்மையை நிறைவாகச் செய்துவிட்டுப் பின்னர் தொழச் சென்று, அந்தத் தொழுகையை முழுமையாக நிறைவேற்றினால், அவர் தொழுகையிலிருந்து வெளியேறும்போது, அன்று பிறந்த பாலகனைப் போன்று பாவங்களிலிருந்து வெளியேறிவிடுகிறார்" என்று கூறினார்கள்.[37]

404 அப்துல்லாஹ் பின் ஷகீக் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

உஸ்மான் (ரலி) அவர்கள் ஹஜ்ஜையும் உம்ராவையும் 'தமத்துஉ' முறையில் நிறைவேற்றுவதற்குத் தடை விதித்துவந்தார்கள். ஆனால் அலீ (ரலி) அவர்கள் அவ்வாறு நிறைவேற்றலாம் என்று மார்க்கத் தீர்ப்பு வழங்கிவந்தார்கள். ஆகவே, அலீ (ரலி) அவர்களிடம் உஸ்மான் (ரலி) அவர்கள் (அது தொடர்பாக) ஒரு செய்தியைக் கூறினார்கள்.

---

*[illegible]

36. [illegible]

37. [illegible] - 391, 393 [illegible]

உடனே அலீ (ரலி) அவர்கள் உஸ்மான் (ரலி) அவர்களை நோக்கி, "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் ஹஜ்ஜையும் உம்ராவையும் 'தமத்துஉ' முறையில் நிறைவேற்றியுள்ளார்கள் என்பது தங்களுக்கு நன்கு தெரியுமே (அப்படியிருந்தும் அதற்குத் தடை விதிக்கிறீர்களே)!" என்றார்கள். அதற்கு உஸ்மான் (ரலி) அவர்கள், "ஆம்! (நன்கு தெரியும்தான்;) ஆயினும், அப்போது நாம் அஞ்சிக்கொண்டிருந்தோம்; (இன்று அந்த அச்சம் இல்லையே)" என்று (பதில்) கூறினார்கள்.

இந்த ஹதீஸின் அறிவிப்பாளர்களுள் ஒருவரான ஷுஅபா (ரஹ்) அவர்கள் கூறியதாவது: (நபி (ஸல்) அவர்களின் காலத்தில்) நபித்தோழர்களுக்கு ஏற்பட்டிருந்த அச்சம் என்னவாக இருந்தது? என்று நான் கத்தாதா அவர்களிடம் கேட்டேன். அதற்கு அவர்கள், 'எனக்குத் தெரியாது' என்று கூறினார்கள்.[29]

عَنْهُ: لَقَدْ عَلِمْتَ أَنَّ رَسُولَ اللَّهِ ﷺ فَعَلَ ذَلِكَ، قَالَ عُثْمَانُ رَضِيَ اللَّهُ عَنْهُ: أَجَلْ وَلَكِنَّا كُنَّا خَائِفِينَ.

قَالَ شُعْبَةُ: فَقُلْتُ لِقَتَادَةَ مَا كَانَ خَوْفُهُمْ؟ قَالَ: لَا أَدْرِي.

٤٠٥ حَدَّثَنَا مُحَمَّدُ بْنُ جَعْفَرٍ حَدَّثَنَا شُعْبَةُ عَنْ قَتَادَةَ قَالَ قَالَ عَبْدُ اللَّهِ بْنُ شَقِيقٍ: كَانَ عُثْمَانُ رَضِيَ اللَّهُ عَنْهُ يَنْهَى عَنِ الْمُتْعَةِ وَعَلِيٌّ رَضِيَ اللَّهُ عَنْهُ يَأْمُرُ بِهَا، فَقَالَ عُثْمَانُ رَضِيَ اللَّهُ عَنْهُ لِعَلِيٍّ قَوْلًا، ثُمَّ قَالَ عَلِيٌّ رَضِيَ اللَّهُ عَنْهُ: لَقَدْ عَلِمْتَ أَنَّا قَدْ تَمَتَّعْنَا مَعَ رَسُولِ اللَّهِ ﷺ، قَالَ: أَجَلْ وَلَكِنَّا كُنَّا خَائِفِينَ.

٤٠٦ حَدَّثَنَا رَوْحٌ حَدَّثَنَا كَهْمَسٌ عَنْ مُصْعَبِ بْنِ ثَابِتِ بْنِ عَبْدِ اللَّهِ بْنِ الزُّبَيْرِ قَالَ: قَالَ عُثْمَانُ بْنُ عَفَّانَ رَضِيَ اللَّهُ عَنْهُ: وَهُوَ يَخْطُبُ عَلَى مِنْبَرِهِ إِنِّي مُحَدِّثُكُمْ حَدِيثًا سَمِعْتُهُ مِنْ رَسُولِ اللَّهِ ﷺ لَمْ يَكُنْ يَمْنَعُنِي أَنْ أُحَدِّثَكُمْ إِلَّا الضِّنُّ عَلَيْكُمْ وَإِنِّي سَمِعْتُ رَسُولَ اللَّهِ ﷺ يَقُولُ: حَرَسُ لَيْلَةٍ فِي سَبِيلِ اللَّهِ تَعَالَى أَفْضَلُ مِنْ أَلْفِ لَيْلَةٍ يُقَامُ لَيْلُهَا

405 அப்துல்லாஹ் பின் ஷகீக் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

உஸ்மான் (ரலி) அவர்கள் ஹஜ்ஜையும் உம்ராவையும் 'தமத்துஉ' முறையில் நிறைவேற்றுவதற்குத் தடை விதித்துவந்தார்கள். ஆனால், அலீ (ரலி) அவர்கள் (அதற்கு மாறாக) 'தமத்துஉ' முறையில் நிறைவேற்றுமாறு உத்தரவிட்டுவந்தார்கள். அப்போது அலீ (ரலி) அவர்களிடம் உஸ்மான் (ரலி) அவர்கள் ஏதோ சொன்னார்கள். பின்னர், அலீ (ரலி) அவர்கள், "நாம் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுடன் 'தமத்துஉ' முறையில் ஹஜ்ஜையும் உம்ராவையும் நிறைவேற்றியுள்ளோம் என்பது உங்களுக்கு நன்கு தெரியும்தானே" என்று உஸ்மான் (ரலி) அவர்களிடம் கேட்டார்கள். அதற்கு உஸ்மான் (ரலி) அவர்கள், "ஆம்; (தெரியும்தான்); ஆயினும், அப்போது நாம் அஞ்சிக்கொண்டிருந்தோம்" என்றார்கள்.[30]

406 அப்துல்லாஹ் பின் அஸ்ஸுபைர் (ரலி) அவர்கள் கூறியதாவது:

(ஒரு முறை) உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்கள் தமது சொற்பொழிவு மேடையில் நின்றுகொண்டு உரையாற்றினார்கள். அப்போது, "நான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடமிருந்து செவியுற்ற தகவல் ஒன்றை உங்களுக்குச் சொல்லப் போகிறேன். உங்களைப் பற்றி எனக்கிருந்த தயக்கமே, அதை உங்களிடம் சொல்லவிடாமல் தடுத்துக்கொண்டிருந்தது.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: மேலோன் அல்லாஹ்வின் பாதையில் (நாட்டின் எல்லையை) ஓர் இரவு காவல் காப்பது, ஓராயிரம் நாட்கள் பகலெல்லாம்

29, 30. பார்க்க: முஸ்லிம் ஹதீஸ் எண் - 2345. 'அச்சம் என்னவாக இருந்தது?' என்று கேட்டதற்கு, 'தெரியாது' என்று [illegible] - 370, 398 [illegible].

وَيَصُومُ نَهَارَهَا.

நோன்பு நோற்று, இரவெல்லாம் நின்று வழிபடுவதைவிட மிகச் சிறந்ததாகும்.[40]

٤٠٧ حَدَّثَنَا عَبْدُ الْكَبِيرِ بْنُ عَبْدِ الْمَجِيدِ أَبُو بَكْرٍ الْحَنَفِيُّ حَدَّثَنَا عَبْدُ الْحَمِيدِ يَعْنِي ابْنَ جَعْفَرٍ عَنْ أَبِيهِ عَنْ مَحْمُودِ بْنِ لَبِيدٍ عَنْ عُثْمَانَ بْنِ عَفَّانَ رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ: سَمِعْتُ رَسُولَ اللَّهِ ﷺ يَقُولُ: مَنْ بَنَى مَسْجِدًا لِلَّهِ عَزَّ وَجَلَّ بَنَى اللَّهُ لَهُ مِثْلَهُ فِي الْجَنَّةِ.

407 அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

வல்லமையும் மாண்பும் மிக்க அல்லாஹ்வுக்காக யாரேனும் பள்ளிவாசல் ஒன்றைக் கட்டினால், அவருக்காக அல்லாஹ் அதைப் போன்ற (ஓர் இல்லத்)தைச் சொர்க்கத்தில் கட்டுகிறான்.

இதை உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.[41]

٤٠٨ حَدَّثَنَا عُثْمَانُ بْنُ عُمَرَ حَدَّثَنَا ابْنُ أَبِي ذِئْبٍ عَنْ سَعِيدِ بْنِ خَالِدِ بْنِ عَبْدِ اللَّهِ بْنِ قَارِظٍ عَنْ أَبِي عُبَيْدٍ مَوْلَى عَبْدِ الرَّحْمَنِ بْنِ أَزْهَرَ قَالَ: رَأَيْتُ عَلِيًّا رَضِيَ اللَّهُ عَنْهُ وَعُثْمَانَ يُصَلِّيَانِ يَوْمَ الْفِطْرِ وَالْأَضْحَى ثُمَّ يَنْصَرِفَانِ يُذَكِّرَانِ النَّاسَ قَالَ وَسَمِعْتُهُمَا يَقُولَانِ: إِنَّ رَسُولَ اللَّهِ ﷺ نَهَى عَنْ صِيَامِ هَذَيْنِ الْيَوْمَيْنِ.

408 அப்துர் ரஹ்மான் பின் அஸ்ஹர் (ரஹ்) அவர்களின் முன்னாள் அடிமை அபூ உபைத் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

நான் நோன்புப் பெருநாள் மற்றும் ஹஜ்ஜுப் பெருநாள் நாட்களில் அலீ (ரலி), உஸ்மான் (ரலி) ஆகிய இருவரையும் பார்த்துள்ளேன். அவ்விருவரும் பெருநாள் தொழுகையை முடித்துவிட்டுப் பின்னர் திரும்பி, மக்களுக்குச் சொற்பொழிவு (குத்பா) நிகழ்த்துவார்கள். அப்போது அவ்விருவரும், "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் இந்த இரு பெருநாட்களிலும் நோன்பு நோற்கக் கூடாது எனத் தடைசெய்துள்ளார்கள்" என்று கூறியதை நான் செவியேற்றுள்ளேன்.[42]

٤٠٩ حَدَّثَنَا قَالَ وَسَمِعْتُ عَلِيًّا رَضِيَ اللَّهُ عَنْهُ يَقُولُ: نَهَى رَسُولُ اللَّهِ ﷺ أَنْ يَبْقَى مِنْ نُسُكِكُمْ عِنْدَكُمْ شَيْءٌ

409 அப்துர் ரஹ்மான் பின் அஸ்ஹர் (ரஹ்) அவர்களின் முன்னாள் அடிமை அபூஉபைத் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

அலீ (ரலி) அவர்கள் (பெருநாள் தொழுகைக்குப் பின்னர் மக்களுக்கு உரையாற்றிய போது), "உங்களுடைய குர்பானி இறைச்சியை உங்களிடம் மூன்று நாட்களுக்கு மேல் எஞ்சி இருப்பதை அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் தடைசெய்தார்கள்" என்று

40. இந்த ஹதீஸின் [illegible] உஸ்மான் (ரலி) [illegible] 50 [illegible] (2363) [illegible] (143) [illegible] (4068) [illegible] 2882, [illegible] (1587, 1592) [illegible] (3752) [illegible]

41. இந்த ஹதீஸ் புகாரீ (450), முஸ்லிம் (926, 927, 5705, 5706), திர்மிதீ (728), [illegible] (2882), இப்னு குஸைமா (1220), இப்னு அபீஷைபா (1344), இப்னு ஹிப்பான் (1838), அபூஅவானா (802), [illegible] (2808), [illegible] (2437) ஆகிய நூல்களிலும் இடம்பெற்றுள்ளது.

42. பார்க்க: முந்தைய ஹதீஸ் எண் - 401

கூறியதை நான் செவியுற்றேன்[43]

بَعْدَ ثَلَاثٍ.

٤١٠ حدثنا صَفْوَانُ بْنُ عِيسَى عَنْ مُحَمَّدِ بْنِ عَبْدِ اللَّهِ بْنِ أَبِي مَرْيَمَ قَالَ: دَخَلْتُ عَلَى ابْنِ دَارَةَ مَوْلَى عُثْمَانَ قَالَ: فَسَمِعَنِي أُمَضْمِضُ قَالَ فَقَالَ: يَا مُحَمَّدُ قَالَ قُلْتُ لَبَّيْكَ قَالَ: أَلَا أُخْبِرُكَ عَنْ وُضُوءِ رَسُولِ اللَّهِ ﷺ؟ قَالَ: رَأَيْتُ عُثْمَانَ رَضِيَ اللَّهُ عَنْهُ وَهُوَ بِالْمَقَاعِدِ دَعَا بِوَضُوءٍ فَمَضْمَضَ ثَلَاثًا وَاسْتَنْشَقَ ثَلَاثًا وَغَسَلَ وَجْهَهُ ثَلَاثًا وَذِرَاعَيْهِ ثَلَاثًا وَمَسَحَ بِرَأْسِهِ ثَلَاثًا وَغَسَلَ قَدَمَيْهِ، ثُمَّ قَالَ: مَنْ أَحَبَّ أَنْ يَنْظُرَ إِلَى وُضُوءِ رَسُولِ اللَّهِ ﷺ فَهَذَا وُضُوءُ رَسُولِ اللَّهِ ﷺ.

410 முஹம்மது பின் அப்தில்லாஹ் பின் அபீமர்யம் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

நான் உஸ்மான் (ரலி) அவர்களின் முன்னாள் அடிமை (ஸைது) இப்னு தாரா (ரஹ்) அவர்களிடம் சென்றேன். அப்போது நான் (அங்கத் தூய்மை செய்து) வாய் கொப்பளிக்கும் சப்தம் அவர் காதில் விழுந்தது. உடனே அவர், "முஹம்மதே" என்று என்னை அழைத்தார். நான், "இதோ வந்துவிட்டேன்" என்றேன். அவர், "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் செய்த அங்கத் தூய்மை பற்றி உமக்கு நான் சொல்லட்டுமா?" என்று கேட்டார். தொடர்ந்து அவரே கூறினார்:

(ஒருமுறை) உஸ்மான் (ரலி) அவர்களை 'மகாஇத்' எனும் இடத்தில் நான் கண்டேன். அவர்கள் அங்கத் தூய்மை (உளூ) செய்வதற்காகத் தண்ணீர் கொண்டுவரச்சொல்லி, (முதலில்) மூன்றுமுறை வாய் கொப்பளித்தார்கள். பின்னர், மூன்றுமுறை (மூக்கினுள் தண்ணீர் செலுத்தி) மூக்குச் சிந்தினார்கள். பின்னர், மூன்றுமுறை தமது முகத்தைக் கழுவினார்கள். பின்னர், தம்மிரு கைகளையும் முழங்கை வரை கழுவினார்கள். பின்னர், நனைந்த கையால் தமது தலையை மூன்றுமுறை தடவினார்கள் ('மஸ்ஹு'ச் செய்தார்கள்). பின்னர், தம்மிரு கால்களையும் கழுவினார்கள். பின்னர் உஸ்மான் (ரலி) அவர்கள், "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் செய்த அங்கத் தூய்மையை யாரேனும் பார்க்க விரும்பினால், (இதோ பார்த்துக்கொள்ளுங்கள்;) இதுதான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் செய்த அங்கத் தூய்மை" என்று கூறினார்கள்.[44]

٤١١ حدثنا سُلَيْمَانُ بْنُ حَرْبٍ وَعَفَّانُ الْمَعْنَى قَالَا حَدَّثَنَا حَمَّادُ بْنُ زَيْدٍ حَدَّثَنَا يَحْيَى بْنُ سَعِيدٍ عَنْ أَبِي أُمَامَةَ بْنِ سَهْلٍ قَالَ: كُنَّا مَعَ عُثْمَانَ رَضِيَ اللَّهُ عَنْهُ وَهُوَ مَحْصُورٌ فِي الدَّارِ فَدَخَلَ مَدْخَلًا كَانَ إِذَا دَخَلَهُ يَسْمَعُ كَلَامَهُ مَنْ عَلَى الْبَلَاطِ قَالَ فَدَخَلَ ذَلِكَ الْمَدْخَلَ وَخَرَجَ إِلَيْنَا فَقَالَ: إِنَّهُمْ يَتَوَعَّدُونِي بِالْقَتْلِ آنِفًا، قَالَ قُلْنَا: يَكْفِيكَهُمُ اللَّهُ

411 அபூஉமாமா பின் சஹ்ல் பின் ஹுனைஃப் (ரலி) அவர்கள் கூறியதாவது:

உஸ்மான் (ரலி) அவர்கள் (எதிர்ப்பாளர்களால்) வீட்டில் முற்றுகையிடப்பட்டிருந்தபோது, அவர்களுடன் நாங்கள் இருந்தோம். அப்போது அவர்கள் (தம்மைப் பற்றி மக்கள் என்ன பேசிக்கொள்கிறார்கள் என்பதை அறிந்துகொள்வதற்காகத் தமது வீட்டின் இரு அறைகளுக்கிடையிலான) தாழ்வாரப் பகுதிக்குள் சென்றார்கள். யாரேனும் அந்தப் பகுதிக்குள் சென்றுவிட்டால், (மதீனாவின் பிரபலமான இடமாகிய) 'பலாத்' எனுமிடத்தில் இருப்பவர்களின் உரையாடலை நன்குக் கேட்க முடியும். உஸ்மான் (ரலி) அவர்கள் அந்தப் பகுதிக்குள் சென்றுவிட்டு (அங்கிருந்து வெளியேறி) எங்களிடம் வந்து, "சற்று முன்னர் (நான் அங்கே சென்றிருந்தபோது) மக்கள் என்னைக் கொல்லப்போவதாக மிரட்டல் விடுத்துக்கொண்டிருக்கின்றனர்" என்றார்கள். நாங்கள், "இறைநம்பிக்கையாளர்களின் தலைவரே! அவர்கள் விஷயத்தில் அல்லாஹ்வே உங்களுக்குப் போதுமானவன்"

43. பார்க்க: முஸ்லிம் ஹதீஸ் எண்கள் - 3982 முதல் 3985 வரை. [illegible] 3986 முதல் 3994 வரையுள்ள ஹதீஸ்களில் [illegible]

44. [illegible] 1982 [illegible] 1301 [illegible]

يا أمير المؤمنين، قال: وبم يقتلونني؟ إني سمعت رسول الله ﷺ يقول: لا يحل دم امرئ مسلم إلا بإحدى ثلاث: رجل كفر بعد إسلامه، أو زنى بعد إحصانه، أو قتل نفسا فيقتل بها، فوالله ما أحببت أن لي بديني بدلا منذ هداني الله، ولا زنيت في جاهلية ولا في إسلام قط، ولا قتلت نفسا، فبم يقتلونني؟

حدثنا عبد الله حدثنا عبيد الله بن عمر القواريري حدثنا حماد بن زيد حدثنا يحيى بن سعيد حدثنا أبو أمامة بن سهل بن حنيف قال: إني لمع عثمان رضي الله عنه في الدار وهو محصور وقال: كنا ندخل مدخلا فذكر الحديث مثله وقال قد سمعت رسول الله ﷺ يقول: فذكر الحديث مثله أو نحوه.

٤١٢ حدثنا عبد الصمد حدثنا القاسم يعني ابن الفضل حدثنا عمرو بن مرة عن سالم بن أبي الجعد قال: دعا عثمان رضي الله عنه ناسا من أصحاب رسول الله ﷺ

என்று கூறினோம். அப்போது உஸ்மான் (ரலி) அவர்கள், "அவர்கள் எந்த அடிப்படையில் என்னைக் கொல்வார்கள்? அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், 'முஸ்லிமான மனிதரை (நியாயமான) மூன்று காரணங்களுள் ஒன்றை முன்னிட்டே தவிர, வேறெதற்காகவும் கொலை செய்ய அனுமதி இல்லை.

1. இஸ்லாத்தைத் தழுவிய பின்னர் (இஸ்லாத்திலிருந்து வெளியேறி) இறைமறுப்புக்குச் செல்வது.

2. திருமணம் முடித்ததற்குப் பிறகு விபசாரம் புரிதல்.

3. ஒருவரை (அநியாயமாகக்) கொலை செய்தல்.

இவற்றுள் ஒன்றை முன்னிட்டே (இஸ்லாமிய அரசால்) ஒருவர் கொலை செய்யப்படுவார்' என்று கூறியதை நான் செவியுற்றுள்ளேன்" என்று கூறினார்கள். பின்னர், "அல்லாஹ்வின் மீதாணையாக! அல்லாஹ் என்னை நல்வழிக்குக் கொண்டுவந்ததிலிருந்து நான் எனது மார்க்கத்திற்கு மாற்றாக வேறு எதையும் விரும்பியதில்லை. அறியாமைக் காலத்திலும் சரி, இஸ்லாத்தைத் தழுவிய பின்னரும் சரி, நான் ஒருபோதும் விபசாரம் புரிந்ததும் இல்லை. (அநியாயமாக) எவரையும் நான் கொன்றதும் இல்லை. அவ்வாறிருக்க, எந்த அடிப்படையில் என்னை அவர்கள் கொல்வார்கள்?" என்று கேட்டார்கள்.

இதே ஹதீஸ், அபூஉமாமா பின் சஹ்ல் பின் ஹுனைஃப் (ரலி) அவர்கள் வாயிலாக மற்றோர் அறிவிப்பாளர்தொடரிலும் வந்துள்ளது. அதில் அபூஉமாமா பின் சஹ்ல் பின் ஹுனைஃப் (ரலி) அவர்கள், "உஸ்மான் (ரலி) அவர்கள் (கிளர்ச்சியாளர்களால்) வீட்டில் முற்றுகையிடப்பட்டிருந்தபோது, அவர்களுடன் நான் இருந்தேன். நாங்கள் தாழ்வாரப் பகுதிக்குள் நுழைந்தோம்" என்று சொல்லிவிட்டுப் பின்னர், மேற்கண்ட ஹதீஸில் இடம்பெற்றதைப் போன்றே கூறினார்கள். அதைப் போன்றே உஸ்மான் (ரலி) அவர்கள், ("அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறியதைச் செவியுற்றுள்ளேன்" என்பதற்குப் பதிலாக), "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறியதை நான் நிச்சயமாகச் செவியுற்றுள்ளேன்" என்று கூறியதாகவும் அந்த அறிவிப்பில் இடம்பெற்றுள்ளது.[46]

412 சாலிம் பின் அபில் ஜஅத் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

(ஒருமுறை) உஸ்மான் (ரலி) அவர்கள் நபித்தோழர்களுள் சிலரை அழைத்தார்கள்.

46. இதே கருத்தமைந்த ஹதீஸ் திர்மிதீ (2084) அபூதாவூத் (3903) நஸாயீ (3953) இப்னுமாஜா (2524) தாரிமீ (2195) ஹாகிம் (8142) [illegible] (73) [illegible] (743) [illegible] (366) பைஹகீயின் சுனனுல் குப்ரா (8/19) நஸாயீயின் சுனனுல் குப்ரா (2/2921) இப்னு அபீஆஸிமின் [illegible] (147) உள்ளிட்ட நூல்களிலும் இடம்பெற்றுள்ளது. இதே கருத்தமைந்த ஹதீஸ் ஆயிஷா (ரலி) இப்னு மஸ்ஊத் (ரலி) ஆகியோர் அறிவிக்க புகாரீ (6878) முஸ்லிம் (3463, 3464) ஆகிய நூல்களிலும் பதிவாகியுள்ளது. அதில் உஸ்மான் (ரலி) கொலையுண்ட சம்பவம் இடம்பெறாமல் ஒரு முஸ்லிமுக்கு மரணதண்டனை விதிக்கப்படுவதற்கான 3 காரணங்கள் மட்டும் கூறப்பட்டுள்ளன. மேலும் காண்க: பின்வரும் ஹதீஸ்கள் - 423, 438, 478, 1328.

فيهم عمار بن ياسر، فقال: إني سائلكم وإني أحب أن تصدقوني نشدتكم الله أتعلمون أن رسول الله ﷺ كان يؤثر قريشا على سائر الناس ويؤثر بني هاشم على سائر قريش؟ فسكت القوم، فقال عثمان رضي الله عنه: لو أن بيدي مفاتيح الجنة لأعطيتها بني أمية حتى يدخلوا من عند آخرهم فبعث إلى طلحة والزبير، فقال عثمان رضي الله عنه: ألا أحدثكما عنه يعني عمارا أقبلت مع رسول الله ﷺ آخذا بيدي نتمشى في البطحاء حتى أتى على أبيه وأمه وعليه يعذبون، فقال أبو عمار: يا رسول الله الدهر هكذا، فقال له النبي ﷺ: اصبر ثم قال: اللهم اغفر لآل ياسر وقد فعلت.

٤١٣ حدثنا عبد الصمد حدثنا حرب بن السائب قال سمعت الحسن يقول: حدثني حمران عن عثمان بن

அவர்களுள் அம்மார் பின் யாசிர் (ரலி) அவர்களும் இருந்தார்கள். அப்போது உஸ்மான் (ரலி) அவர்கள், "நான் உங்களிடம் ஒன்று கேட்பேன் (அது தொடர்பாக) நீங்கள் என்னிடம் உண்மையே கூற வேண்டும் என்று நான் விரும்புகிறேன்" என்று சொல்லிவிட்டு, "அல்லாஹ்வை முன் வைத்து உங்களிடம் நான் கேட்கிறேன். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் மற்ற மக்களைவிட (தம்முடைய குலத்தாராகிய) குறைஷியருக்கும், (அந்தக்) குறைஷிக் குலத்தாருள் மற்ற குடும்பத்தாரைவிட (தம்முடைய குடும்பத்தாராகிய) 'பனூ ஹாஷிம்' குடும்பத்தாருக்கும் முன்னுரிமை வழங்கியது உங்களுக்குத் தெரியும் தானே?" என்று கேட்டார்கள். அதற்கு அந்தக் கூட்டத்தார் (உடன்பாட்டின் அறிகுறியாக) அமைதிகாத்தனர். பின்னர் உஸ்மான் (ரலி) அவர்கள், "என் கையில் (ஆட்சி அதிகாரமென்ன?) சொர்க்கத்தின் சாவிகள் இருந்தால் கூட (என்னுடைய குடும்பத்தாராகிய) பனூ உமய்யாக்களில் கடைசி நபர்வரை (ஒருவர் கூட விடுபடாமல்) அனைவரும் சொர்க்கத்தில் நுழைய வேண்டும் என்பதற்காக அவர்களிடம் அவற்றை நான் வழங்கிக்கொண்டேதான் இருப்பேன்" என்று கூறினார்கள்.

பின்னர், தல்ஹா (ரலி), ஸுபைர் (ரலி) ஆகிய இருவரிடமும் ஆளனுப்பி வரவழைத்தார்கள். அவ்விருவரிடமும், "நான் உங்கள் இருவருக்கும் இந்த அம்மாரைப் பற்றி எடுத்துரைக்கட்டுமா?" என்று கேட்டுவிட்டுத் தொடர்ந்து அவர்களே கூறினார்கள்:

(ஒருமுறை) அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் என் கையைப் பிடித்திருக்க, நான் அவர்களுடன் சென்றுகொண்டிருந்தேன். அப்போது நாங்கள் 'அல்பத்ஹா' எனப்படும் (மக்காவின் மணற்பாங்கான) பகுதியில் நடந்தோம். அந்த மண்ணில் வைத்து இவருடைய தாயாரும் தந்தையாரும் (இஸ்லாத்தை ஏற்றதற்காக இணைவைப்பாளர்களால்) வேதனை செய்யப்பட்டுக்கொண்டிருந்த நிலையில் நபி (ஸல்) அவர்கள் அங்கு சென்றார்கள். அப்போது அம்மாரின் தந்தை (யாசிர் (ரலி) அவர்கள்), "அல்லாஹ்வின் தூதரே! காலம் முழுக்க இதுதான் (எங்கள்) கதியோ?" என்று கேட்டார். அதற்கு நபி (ஸல்) அவர்கள், "பொறுமையாக இருப்பீராக" என்று அவரிடம் கூறினார்கள். பின்னர், "இறைவா! யாசிரின் குடும்பத்தாரை நீ மன்னிப்பாயாக" என்று பிரார்த்தனை புரிந்தார்கள். (அவ்வாறே) நானும் செய்தேன்.[44]

413 அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

---

44. இந்த ஹதீஸ், முஸ்னது அஹ்மதில் மட்டுமே இடம்பெற்றுள்ளது. [illegible]

ஆதமின் மகனுக்கு (மனிதனுக்கு) அவன் குடியிருக்கும் வீடொன்றின் நிழல், குழம்பில்லாத காய்ந்த ரொட்டி, அவனது மானத்தை மறைக்கும் ஆடை, குடிநீர் ஆகியவற்றைத் தவிர மேலதிகமான மற்ற பொருட்களில் எந்த உரிமையும் கிடையாது.

இதை உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.[47]

عَفَّانَ رَضِيَ اللَّهُ عَنْهُ أَنَّ رَسُولَ اللَّهِ ﷺ قَالَ: كُلُّ شَيْءٍ سِوَى ظِلِّ بَيْتٍ وَجِلْفِ الْخُبْزِ وَثَوْبٍ يُوَارِي عَوْرَتَهُ وَالْمَاءِ، فَمَا فَضَلَ عَنْ هَذَا فَلَيْسَ لِابْنِ آدَمَ فِيهِ حَقٌّ.

414 ஸகீஃப் குலத்தைச் சேர்ந்த அறிஞர் ஒருவர் தம்முடைய தந்தையின் சகோதரர் வாயிலாகக் கூறியதாவது:

٤١٤ حَدَّثَنَا عَبْدُ اللَّهِ بْنُ بَكْرٍ حَدَّثَنَا حُمَيْدٌ الطَّوِيلُ عَنْ شَيْخٍ مِنْ ثَقِيفٍ ذَكَرَهُ حُمَيْدٌ بِصَلَاحٍ ذَكَرَ أَنَّ عَمَّهُ أَخْبَرَهُ أَنَّهُ رَأَى عُثْمَانَ بْنَ عَفَّانَ رَضِيَ اللَّهُ عَنْهُ جَلَسَ عَلَى الْبَابِ الثَّانِي مِنْ مَسْجِدِ رَسُولِ اللَّهِ ﷺ، فَدَعَا بِكَتِفٍ فَتَعَرَّقَهَا ثُمَّ قَامَ فَصَلَّى وَلَمْ يَتَوَضَّأْ ثُمَّ قَالَ: جَلَسْتُ مَجْلِسَ النَّبِيِّ ﷺ وَأَكَلْتُ مَا أَكَلَ النَّبِيُّ ﷺ وَصَنَعْتُ مَا صَنَعَ النَّبِيُّ ﷺ.

(ஒருமுறை) உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுடைய (மஸ்ஜிதுந் நபவீ) பள்ளிவாசலின் இரண்டாவது வாசலில் அமர்ந்திருந்தார்கள். அப்போது ஆட்டுச் சப்பை ஒன்றைக்கொண்டு வரச்சொல்லி, அதைக் கடித்து(ச் சுவைத்)தார்கள். பின்னர் எழுந்து அங்கத் தூய்மை செய்யாமலேயே தொழுதார்கள்.

பின்னர் உஸ்மான் (ரலி) அவர்கள் "நான் (ஒருமுறை) நபி (ஸல்) அவர்களுடைய அவையில் அமர்ந்திருந்தேன்; நபி (ஸல்) அவர்கள் சாப்பிட்டதைப் போன்றே அப்போது நானும் சாப்பிட்டேன்; பின்னர் நபி (ஸல்) அவர்கள் செய்ததைப் போன்றே (இப்போது) நானும் செய்தேன்" என்று கூறினார்கள்.[48]

415 உஸ்மான் (ரலி) அவர்களின் முன்னாள் அடிமை அபூஸாலிஹ் கூறியதாவது:

٤١٥ حَدَّثَنَا أَبُو سَعِيدٍ مَوْلَى بَنِي هَاشِمٍ حَدَّثَنَا ابْنُ لَهِيعَةَ حَدَّثَنَا زُهْرَةُ بْنُ مَعْبَدٍ عَنْ أَبِي صَالِحٍ مَوْلَى عُثْمَانَ أَنَّهُ حَدَّثَهُ قَالَ: سَمِعْتُ عُثْمَانَ بِمِنًى يَقُولُ: يَا أَيُّهَا النَّاسُ إِنِّي

உஸ்மான் (ரலி) அவர்கள், 'மினா'வில் உரை நிகழ்த்தியபோது, "மக்களே! அல்லாஹ்

47. [illegible]

48. [illegible]

أحَدِّثُكُمْ حَدِيثًا سَمِعْتُهُ مِنْ رَسُولِ اللهِ ﷺ يَقُولُ: رِبَاطُ يَوْمٍ فِي سَبِيلِ اللهِ أَفْضَلُ مِنْ أَلْفِ يَوْمٍ فِيمَا سِوَاهُ فَلْيُرَابِطِ امْرُؤٌ كَيْفَ شَاءَ هَلْ بَلَّغْتُ؟ قَالُوا: نَعَمْ قَالَ اللَّهُمَّ اشْهَدْ.

٤١٦ حَدَّثَنَا أَبُو سَعِيدٍ يَعْنِي مَوْلَى بَنِي هَاشِمٍ حَدَّثَنَا عِكْرِمَةُ بْنُ إِبْرَاهِيمَ الْبَاهِلِيُّ حَدَّثَنَا عَبْدُ اللهِ بْنُ عَبْدِ الرَّحْمَنِ بْنِ أَبِي ذُبَابٍ عَنْ أَبِيهِ: أَنَّ عُثْمَانَ بْنَ عَفَّانَ رَضِيَ اللهُ عَنْهُ صَلَّى بِمِنًى أَرْبَعَ رَكَعَاتٍ فَأَنْكَرَهُ النَّاسُ عَلَيْهِ فَقَالَ: يَا أَيُّهَا النَّاسُ إِنِّي تَأَهَّلْتُ بِمَكَّةَ مُنْذُ قَدِمْتُ وَإِنِّي سَمِعْتُ رَسُولَ اللهِ ﷺ يَقُولُ: مَنْ تَأَهَّلَ فِي بَلَدٍ فَلْيُصَلِّ صَلَاةَ الْمُقِيمِ.

٤١٧ حَدَّثَنَا أَبُو سَعِيدٍ مَوْلَى بَنِي هَاشِمٍ حَدَّثَنَا عَبْدُ اللهِ بْنُ لَهِيعَةَ حَدَّثَنَا مُوسَى بْنُ وَرْدَانَ قَالَ سَمِعْتُ سَعِيدَ بْنَ الْمُسَيَّبِ يَقُولُ: سَمِعْتُ عُثْمَانَ رَضِيَ اللهُ عَنْهُ يَخْطُبُ عَلَى الْمِنْبَرِ وَهُوَ يَقُولُ: كُنْتُ أَبْتَاعُ التَّمْرَ مِنْ بَطْنٍ مِنَ

வின் தூதர் (ஸல்) அவர்களிடமிருந்து நான் செவியுற்ற செய்தி ஒன்றை உங்களுக்குச் சொல்கிறேன் 'அல்லாஹ்வின் பாதையில் ஒருநாள் (நாட்டின்) எல்லையைக் காவல் காப்பது, அல்லாத பிற இடங்களில் ஆயிரம் நாட்களைக் கழிப்பதைவிடச் சிறந்ததாகும். ஆகவே, ஒருவர் தாம் விரும்பிய அளவு எல்லைப் பாதுகாப்புப் பணியில் ஈடுபடட்டும்' என அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்" என்று கூறிவிட்டுப் பிறகு மக்களைப் பார்த்து, "(உங்களுக்குச் சொல்ல வேண்டியதை) நான் எடுத்துரைத்துவிட்டேன் அல்லவா?" என்று கேட்டார்கள். அதற்கு மக்கள், "ஆம்" என்றனர் உஸ்மான் (ரலி) அவர்கள், "இறைவா! இதற்கு நீயே சாட்சி" என்றார்கள்.[49]

416 அபூதுபாப் அப்துர் ரஹ்மான் பின் அல்ஹாரிஸ் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

(ஒருமுறை) உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்கள் (ஹஜ்ஜின்போது) 'மினா'வில் நான்கு 'ரக்அத்' (தொழுகை ஒன்றை இரண்டு 'ரக்அத்'களாகக் குறைக்காமல், முழுமையாகவே) தொழுதார்கள். அதற்கு மக்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். அப்போது உஸ்மான் (ரலி) அவர்கள், "மக்களே! நான் மக்காவுக்கு வந்ததிலிருந்து மக்காவிலேயே மணமுடித்துக் கொண்டு உள்ளூர்வாசியாகிவிட்டேன்; அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், 'ஓர் ஊரில் யாரேனும் மணமுடித்துக் கொண்டு அவ்வூர்வாசியாகிவிட்டால், அவர் உள்ளூர்வாசி தொழுவதைப் போன்று (முழுமையாகவே) தொழ வேண்டும்' என்று கூறியதை நான் செவியுற்றுள்ளேன் (அதனால்தான் நான் குறைத்துத் தொழவில்லை)" என்று கூறினார்கள்.[50]

417 சஅத் பின் அல்முசய்யப் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

(ஒருநாள்) உஸ்மான் (ரலி) அவர்கள், சொற்பொழிவு மேடை (மிம்பர்)மீது உரை

49. இந்த ஹதீஸின் அறிவிப்பாளரான உஸ்மான் (ரலி) அவர்களின் முன்னாள் அடிமை அபூஸாலிஹ் [illegible] அறிவிப்பாளர் ஆவார். இந்த ஹதீஸ் இதே அபூஸாலிஹ் வழியாகவே திர்மிதீ (1590), நஸாயீ (3118, 3191), ஹாகிம் (2566), சுனன் அத்தாரிமீ (2479), நஸாயீயின் சுனனுல் குப்ரா (3/27), பைஹகீயின் சுனனுல் குப்ரா (9/39) முஸன்னஃப் இப்னு அபீஷைபா (4/584) உள்ளிட்ட நூல்களில் பதிவாகியுள்ளது. மேலும் முஸ்னது அஹ்மதின் இந்த அறிவிப்பில் நான்காவது அறிவிப்பாளராக இப்னு லஹீஆ இடம்பெற்றுள்ளார். இவரது நிலைபாடு குறித்து முன்பே 83, 417 ஆகிய ஹதீஸ்களில் பேசப்பட்டுள்ளது. காண்க: முன்சென்ற ஹதீஸ் - 406 மற்றும் அதன் அடிக்குறிப்பு.

50. இது பலவீனமான செய்தியாகும். இதன் அறிவிப்பாளர்தொடரில் மூன்றாவது அறிவிப்பாளராக இடம்பெற்றுள்ள இக்ரிமா பின் இப்ராஹீம் அல்பாஹிலீ என்பவர் பலவீனமான அறிவிப்பாளர் ஆவார். அதுமட்டுமின்றி உஸ்மான் (ரலி) அவர்கள் மக்காவிலிருந்து மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்த நபித்தோழர் ஆவார்கள். 'ஹிஜ்ரத்' செய்தவர்கள் மீண்டும் மக்காவைச் சொந்த நகரமாகக் கொள்வது 'ஹராம்' என்று நபி (ஸல்) அவர்கள் அறிவித்திருக்கிறார்கள் (பார்க்க: புகாரீ 3933, முஸ்லிம் 2628, நஸாயீ 1438, திர்மிதீ 872) எனவே உஸ்மான் (ரலி) மினாவில் இரண்டு 'ரக்அத்'கள் தொழுவதை நான்கு 'ரக்அத்'களாகத் தொழுததற்கு இந்தக் காரணத்தைக் குறிப்பிட முடியாது (ஃபத்ஹுல் பாரீ). இந்த ஹதீஸ், [illegible] (3561) [illegible] (1380) ஆகிய நூல்களில் இதே விமர்சிக்கப்பட்ட அறிவிப்பாளரான இக்ரிமா பின் இப்ராஹீம் வழியாகவே பதிவாகியுள்ளது.

[illegible] பின்வருமாறு கூறினார்கள்:

நான் 'பனூ கைனுகா' எனப்படும் ஒரு யூதக் குடும்பத்தாரிடம் பேரீச்சம் பழ வியாபாரம் செய்துவந்தேன். அதை (அவர்களிடம்) நான் இலாபத்திற்கே விற்பேன். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுக்கு இது தெரியவந்தபோது, அவர்கள் (என்னிடம்), "உஸ்மான்! நீர் (யூதர்களிடமிருந்து பொருளை விலைக்கு) வாங்கினால், அளந்து வாங்குவீராக. விற்பனை செய்தாலும், அளந்தே விற்பீராக" என்று கூறினார்கள்.[61]

يَهُودَ يُقَالُ لَهُمْ بَنُو قَيْنُقَاعَ فَأَبِيعُهُ بِرِبْحٍ فَبَلَغَ ذَلِكَ رَسُولَ اللَّهِ ﷺ فَقَالَ: يَا عُثْمَانُ إِذَا اشْتَرَيْتَ فَاكْتَلْ وَإِذَا بِعْتَ فَكِلْ.

حَدَّثَنَا يَحْيَى بْنُ إِسْحَاقَ حَدَّثَنَا ابْنُ لَهِيعَةَ حَدَّثَنَا مُوسَى بْنُ وَرْدَانَ عَنْ سَعِيدِ بْنِ الْمُسَيَّبِ عَنْ عُثْمَانَ بْنِ عَفَّانَ رَضِيَ اللَّهُ عَنْهُ فَذَكَرَ مِثْلَهُ.

418 அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

யார், "பிஸ்மில்லாஹில்லதீ லா யளுர்ரு மஅஸ்மிஹி ஷைஉன் ஃபில் அர்ளி வலா ஃபிஸ்ஸமாஇ வ ஹுவஸ் ஸமீஉல் அலீம்" (அல்லாஹ்வின் பெயரால்; அவனது பெயருடன் விண்ணிலும் மண்ணிலும் எந்தப் பொருளும் இடையூறு அளிக்க (முடியாது; அவன் செவியுறுவோனும் நன்கறிந்தோனும் ஆவான்) என்று கூறுகிறாரோ, அவருக்கு எந்தப் பொருளும் இடையூறு அளிக்காது.

இதை உஸ்மான் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.[62]

٤١٨ حَدَّثَنَا عُبَيْدُ بْنُ أَبِي قُرَّةَ حَدَّثَنَا ابْنُ أَبِي الزِّنَادِ عَنْ أَبِيهِ عَنْ أَبَانَ بْنِ عُثْمَانَ عَنْ أَبِيهِ قَالَ: قَالَ رَسُولُ اللَّهِ ﷺ: مَنْ قَالَ بِسْمِ اللَّهِ الَّذِي لَا يَضُرُّ مَعَ اسْمِهِ شَيْءٌ فِي الْأَرْضِ وَلَا فِي السَّمَاءِ وَهُوَ السَّمِيعُ الْعَلِيمُ لَمْ يَضُرَّهُ شَيْءٌ.

٤١٩ حَدَّثَنَا عَبْدُ الْوَهَّابِ الْخَفَّافُ حَدَّثَنَا سَعِيدٌ عَنْ قَتَادَةَ عَنْ مُسْلِمِ بْنِ يَسَارٍ عَنْ حُمْرَانَ بْنِ أَبَانَ أَنَّ عُثْمَانَ بْنَ عَفَّانَ رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ سَمِعْتُ رَسُولَ اللَّهِ ﷺ يَقُولُ: إِنِّي لَأَعْلَمُ كَلِمَةً لَا يَقُولُهَا عَبْدٌ حَقًّا مِنْ قَلْبِهِ إِلَّا حُرِّمَ

419 ஹும்ரான் பின் அபான் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

ஒருமுறை உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்கள், "நான் ஒரு வார்த்தையை அறிவேன்; அதை உண்மையிலேயே தமது உள்ளத்திலிருந்து மொழியும் எந்த அடியாரும் நரகத்திலிருந்து காப்பாற்றப்படாமல் இருக்கமாட்டார்' என்று அல்லாஹ்வின் தூதர்

---

61. [illegible] (83, 417) [illegible] 2227 [illegible]

62. [illegible] 444/487.

عَلَى النَّارِ. فَقَالَ لَهُ عُمَرُ بْنُ الْخَطَّابِ رَضِيَ اللَّهُ عَنْهُ: أَنَا أُحَدِّثُكَ مَا هِيَ هِيَ كَلِمَةُ الإِخْلاصِ الَّتِي أَعَزَّ اللَّهُ تَبَارَكَ وَتَعَالَى بِهَا مُحَمَّدًا ﷺ وَأَصْحَابَهُ وَهِيَ كَلِمَةُ التَّقْوَى الَّتِي أَلاَصَ عَلَيْهَا نَبِيُّ اللَّهِ ﷺ عَمَّهُ أَبَا طَالِبٍ عِنْدَ الْمَوْتِ شَهَادَةُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللَّهُ.

(ஸல்) அவர்கள் கூறியதை நான் செய்யு(த்)றேன்" எனச் சொன்னார்கள்.

அப்போது உமர் (ரலி) அவர்கள், "அது என்ன வார்த்தை என்பதை உங்களுக்கு நான் சொல்கிறேன். அது தூய்மையான (ஓரிறை உறுதிமொழி) வார்த்தை ஆகும்; அதன் மூலம் தான் அல்லாஹ், முஹம்மத் (ஸல்) அவர்களையும் அவர்களுடைய தோழர்களையும் கண்ணியப்படுத்தினான். அது இறையச்சத்தின் வார்த்தை ஆகும். நபி (ஸல்) அவர்கள் தம் பெரிய தந்தை அபூதாலிபை அவரது மரணத்தின்போது, அதை மொழியுமாறு தான் வலியுறுத்தினார்கள். 'லா இலாஹ இல்லல்லாஹ்' (அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை) எனும் உறுதிமொழியே அது" என்று கூறினார்கள்.[53]

٤٢٠ حدثنا عَبْدُ الصَّمَدِ حَدَّثَنِي أَبِي حَدَّثَنَا الْحُسَيْنُ يَعْنِي الْمُعَلِّمَ عَنْ يَحْيَى يَعْنِي ابْنَ أَبِي كَثِيرٍ أَخْبَرَنِي أَبُو سَلَمَةَ أَنَّ عَطَاءَ بْنَ يَسَارٍ أَخْبَرَهُ أَنَّ زَيْدَ بْنَ خَالِدٍ الْجُهَنِيَّ أَخْبَرَهُ أَنَّهُ سَأَلَ عُثْمَانَ بْنَ عَفَّانَ رَضِيَ اللَّهُ عَنْهُ، قُلْتُ: أَرَأَيْتَ إِذَا جَامَعَ امْرَأَتَهُ وَلَمْ يُمْنِ؟ فَقَالَ عُثْمَانُ: يَتَوَضَّأُ كَمَا يَتَوَضَّأُ لِلصَّلاَةِ وَيَغْسِلُ ذَكَرَهُ. وَقَالَ عُثْمَانُ رَضِيَ اللَّهُ عَنْهُ سَمِعْتُهُ مِنْ رَسُولِ اللَّهِ ﷺ فَسَأَلْتُ عَنْ ذَلِكَ عَلِيَّ بْنَ أَبِي طَالِبٍ رَضِيَ اللَّهُ عَنْهُ وَالزُّبَيْرَ بْنَ الْعَوَّامِ وَطَلْحَةَ بْنَ عُبَيْدِ اللَّهِ وَأُبَيَّ بْنَ كَعْبٍ، فَأَمَرُوهُ بِذَلِكَ.

420 ஸைது பின் காலித் அல்ஜுஹனீ (ரலி) அவர்கள் கூறியதாவது:

நான் உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்களிடம், "ஒருவர் தம்முடைய மனைவியோடு தாம்பத்திய உறவு கொண்டார் ஆனால், விந்தை வெளியேற்றவில்லை (இந்நிலையில் அவர்மீது குளிப்பு கடமையா?) இது குறித்துத் தாங்கள் என்ன கருதுகின்றீர்கள்?" எனக் கேட்டேன். அதற்கு உஸ்மான் (ரலி) அவர்கள், "அவர் தனது பிறப்பு உறுப்பைக் கழுவிவிட்டுத் தொழுகைக்காக அங்கத் தூய்மை (உளூ) செய்வதைப் போன்று செய்துகொள்ள வேண்டும். இதை நான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடமிருந்து செவியேற்றேன்" என்றார்கள். "இது தொடர்பாக, நான் அலீ பின் அபீதாலிப் (ரலி), ஸுபைர் பின் அல்அவ்வாம் (ரலி), தல்ஹா பின் உபைதில்லாஹ் (ரலி), உபை பின் கஅப் (ரலி) ஆகியோரிடமும் (விளக்கம்) கேட்டேன். அவர்களும் அ(ங்கத் தூய்மை செய்வ)தையே அவர்களும் வலியுறுத்தினர்" என்றும் கூறினார்கள்.[54]

٤٢١ حدثنا عُبَيْدُ بْنُ أَبِي قُرَّةَ قَالَ سَمِعْتُ مَالِكَ بْنَ أَنَسٍ يَقُولُ: ﴿نَرْفَعُ دَرَجَاتٍ مَنْ نَشَاءُ﴾ قَالَ بِالْعِلْمِ،

421 உபைது பின் அபீகுர்ரா (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

மாலிக் பின் அனஸ் (ரஹ்) அவர்கள், "நாம் நாடியோருக்குப் பல தகுதிகளை உயர்த்துவோம்" (6:83, 12:76) எனும் இறைவசனத்திற்கு விளக்கம் கூறுகையில், "கல்வி

---

53. இக்கருத்தமைந்த ஹதீஸ் ஹாக்கிம் (1245) இப்னு ஹிப்பான் (204) முஸ்னது அஹ்மத் பின் ஹம்பல் (419) பின்வரும் ஹதீஸ்கள் 434, 467 ஆகியவற்றிலும் பதிவாகியுள்ளது.

54. இந்த ஹதீஸ் புகாரீ (179, 292), முஸ்லிம் (577) ஆகிய நூல்களிலும் பதிவாகியுள்ளது.

தாம்பத்திய உறவில் ஈடுபட்டபோது விந்து வெளியேறிய நிலையில்தான் குளிப்பது கடமையாகும்; விந்து வெளியேறுவதற்கு முன்னால் உடலுறவை நிறுத்திக்கொண்டால் குளிப்பது கடமையில்லை என்ற சட்டம் தொடக்க காலத்தில் நடைமுறையில் இருந்தது. பின்னர், உடலுறவில் ஈடுபட்டாலே விந்து வெளியேறாவிட்டாலும் குளிப்பது கடமையாகும் என்ற சட்டம் நடைமுறைக்கு வந்துவிட்டது (புகாரீ - 291, முஸ்லிம் - 578-580). இந்த உஸ்மான் (ரலி) அவர்கள் அறிவிக்கும் செய்தி தொடக்க கால சட்டமாகும். [illegible] ஹதீஸை அறிவிக்கும் உஸ்மான் (ரலி) அவர்களும் உடலுறவு கொண்டு விந்து வெளியேறாவிட்டாலும் குளிப்பு கடமையாகிவிடும் என்றே தீர்ப்பு வழங்கியிருக்கிறார்கள் (பார்க்க: [illegible] - 103 முஸ்னது அஹ்மத் 20187). எனவே இது மாற்றப்பட்டுவிட்ட (மன்ஸூக்) சட்டத்தைத் தெரிவிக்கும் ஹதீஸ் ஆகும்.

ஞானத்தின் வாயிலாகத் தகுதிகளை உயர்த்து வான்" என்று குறிப்பிட்டார்கள். அப்போது நான், "இவ்விளக்கத்தை உமக்கு அறிவித்த வர் யார்?" எனக் கேட்டேன். அதற்கு, "ஸைது பின் அஸ்லம் (ரஹ்) அவர்கள்" என்று மாலிக் பின் அனஸ் (ரஹ்) அவர்கள் விடையளித் தார்கள்.[55]

قُلْتُ: مَنْ حَدَّثَكَ؟ قَالَ: زَعَمَ ذَلِكَ زَيْدُ بْنُ أَسْلَمَ.

٤٢٢ حدثنا مُحَمَّدُ بْنُ عَبْدِ اللهِ بْنِ الزُّبَيْرِ حَدَّثَنَا مَسَرَّةُ بْنُ مَعْبَدٍ عَنْ يَزِيدَ بْنِ أَبِي كَبْشَةَ عَنْ عُثْمَانَ بْنِ عَفَّانَ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ: جَاءَ رَجُلٌ إِلَى النَّبِيِّ ﷺ، فَقَالَ: يَا رَسُولَ اللهِ إِنِّي صَلَّيْتُ فَلَمْ أَدْرِ أَشَفَعْتُ أَمْ أَوْتَرْتُ، فَقَالَ رَسُولُ اللهِ ﷺ: إِيَّايَ وَأَنْ يَتَلَعَّبَ بِكُمُ الشَّيْطَانُ فِي صَلَاتِكُمْ، مَنْ صَلَّى مِنْكُمْ فَلَمْ يَدْرِ أَشَفَعَ أَوْ أَوْتَرَ فَلْيَسْجُدْ سَجْدَتَيْنِ فَإِنَّهُمَا تَمَامُ صَلَاتِهِ.

حَدَّثَنَا يَحْيَى بْنُ مَعِينٍ وَزِيَادُ بْنُ أَيُّوبَ قَالَا حَدَّثَنَا سَوَّارٌ أَبُو عُمَارَةَ الرَّمْلِيُّ عَنْ مَسَرَّةَ بْنِ مَعْبَدٍ قَالَ: صَلَّى بِنَا يَزِيدُ بْنُ أَبِي كَبْشَةَ الْعَصْرَ فَانْصَرَفَ إِلَيْنَا بَعْدَ صَلَاتِهِ، فَقَالَ: إِنِّي صَلَّيْتُ مَعَ مَرْوَانَ بْنِ الْحَكَمِ فَسَجَدَ مِثْلَ هَاتَيْنِ السَّجْدَتَيْنِ ثُمَّ انْصَرَفَ إِلَيْنَا فَأَعْلَمَنَا أَنَّهُ صَلَّى مَعَ عُثْمَانَ رَضِيَ اللهُ عَنْهُ وَحَدَّثَ عَنِ النَّبِيِّ ﷺ فَذَكَرَ مِثْلَهُ نَحْوَهُ.

422 உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்கள் கூறியதாவது:

ஒருவர் நபி (ஸல்) அவர்களிடம் வந்து, "அல்லாஹ்வின் தூதரே! நான் (ஒரு தொழுகையைத்) தொழுதேன். நான் (அதை) இரட்டைப்படை எண்ணிக்கையில் தொழுதேனா? அல்லது ஒற்றைப்படை எண்ணிக்கையில் தொழுதேனா? என்று தெரியவில்லை (இந் நிலையில் நான் என்ன செய்ய வேண்டும்)?" என்று கேட்டார். அப்போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "உங்களுடைய தொழுகையில் உங்களிடம் ஷைத்தான் விளையாடுவதை குறித்து[56] உங்களையும் என்னையும் எச்சரிக்கிறேன். உங்களுள் ஒருவர் தொழும்போது, தாம் இரட்டைப்படையாகத் தொழுதோமா? அல்லது ஒற்றைப்படையாகத் தொழுதோமா? என்பது அவருக்குத் தெரிய வில்லையானால், அவர் (மறதிக்காக) இரண்டு 'சஜ்தா'க்கள் செய்துகொள்ளட்டும். அவ் விரண்டும் அவருடைய தொழுகையை நிறைவாக்கும்" என்று கூறினார்கள்.[57]

- இந்த ஹதீஸின் அறிவிப்பாளர்களில் ஒருவரான மசர்ரா பின் மஅபத் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

(ஒருமுறை) எங்களுக்கு யஸீது பின் அபீகப்ஷா (ரஹ்) அவர்கள் 'அஸ்ர்' தொழுகை நடத்தினார்கள். தொழுது முடித்த பின்னர் எங்களை நோக்கித் திரும்பி, "நான் (ஒருமுறை) மர்வான் பின் அல்ஹகம் (ரஹ்) அவர்களுடன் தொழுதேன். அவர் இதைப் போன்றே இரண்டு 'சஜ்தா'க்கள் செய்துவிட்டுப் பின்னர் எங்களை நோக்கித் திரும்பித் தாம் உஸ்மான் (ரலி) அவர்களுடன் (ஒருமுறை) தொழுததாகவும், அப்போது உஸ்மான் (ரலி) அவர்கள் இந்தச் செய்தியை நபி (ஸல்) அவர்களிடமிருந்து (தம்மிடம்) தெரிவித்ததாகவும் கூறினார்" என யஸீது பின் அபீகப்ஷா (ரஹ்) அவர்கள் குறிப்பிட்டார்கள்.[58]

---

55. இது உஸ்மான் (ரலி) அறிவித்த நபிமொழியின் அத்தியாயத்தில் சேர்த்து மாறாக இது ஸைது பின் அஸ்லம் (ரஹ்) அவர்களின் கூற்று [illegible] ஸைது பின் அஸ்லம் (ரஹ்) அவர்கள் நபித்தோழர்களின் காலத்தில் வாழ்ந்தவர் (தாபிஈ) ஆவார். தாபிஈ ஒருவரின் கூற்றுக்கு ஹதீஸ் கலையில் 'மக்தூஉ' என்பர். இச்செய்தி முஸ்னதில் மட்டுமே இடம்பெற்றுள்ளது.

56. இந்த ஹதீஸில் 'ஷைத்தான் உங்களுடனும் என்னுடனும் விளையாடுவது குறித்து' என்பதன் பொருளாவது, ஷைத்தான் தொழும்போது நமக்குக் குழப்பத்தை ஏற்படுத்தி மறதி ஏற்படச் செய்கிறான். எனவே அவன் நம்மோடு விளையாடுவது என்பது நடப்பு முறையில் அல்ல. எனவே அவன் ஏற்படுத்தும் குழப்பத்திலிருந்து எச்சரிக்கவே அவ்வாறு கூறப்பட்டுள்ளது.

57. இது முஸ்னதில் மட்டுமே இடம்பெற்றுள்ளது. இதே கருத்துள்ள நபிமொழியை வேறு அறிவிப்பாளர்தொடரில் புகாரீ, முஸ்லிம் போன்ற நூல்களில் வந்துள்ளதை பார்க்க: அடுத்துவரும் அடிக்குறிப்பு எண் - 58

58. பார்க்க: புகாரீ - 1232 முஸ்லிம் - 984 தொழுகையில் மறதி ஏற்பட்டுவிட்டால் நாம் எத்தனை 'ரக்அத்' தொழுதோம்

423 இப்னு உமர் (ரலி) அவர்கள் கூறியதாவது:

உஸ்மான் (ரலி) அவர்கள் (கிளர்ச்சியாளர்களால்) முற்றுகையிடப்பட்டிருந்த போது, தம்முடைய தோழர்களை எட்டிப் பார்த்தார்கள். பின்னர் அவர்கள், "நீங்கள் எந்த அடிப்படையில் என்னைக் கொல்வீர்கள்? அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், 'முஸ்லிமான மனிதரை (நியாயமான) மூன்று காரணங்களுள் ஒன்றை முன்னிட்டே தவிர, வேறெதற்காகவும் கொலை செய்ய அனுமதி இல்லை. 1 திருமணம் முடித்ததற்குப் பிறகு விபசாரம் புரிதல்; அவ்வாறு செய்பவருக்குச் சாகும்வரை கல்லெறித் தண்டனை உண்டு 2. ஒருவரைத் திட்டமிட்டு (அநியாயமாகக்) கொலை செய்தல்; அவ்வாறு கொல்பவருக்குப் பழிக்குப்பழி தண்டனை உண்டு. 3 இஸ்லாத்தைத் தழுவிய பின்னர் மதம் மாறுதல்; அவ்வாறு மாறுபவருக்கு மரண தண்டனை உண்டு' என்று கூறியதை நான் செவியுற்றுள்ளேன். அல்லாஹ்வின் மீதாணையாக! நான் அறியாமைக் காலத்திலும் சரி, இஸ்லாத்தைத் தழுவிய பின்னரும் சரி, ஒருபோதும் விபசாரம் புரிந்ததில்லை. (அநியாயமாக) எவரையும் கொன்று, அவருக்காகப் பழிக்குப்பழி வாங்கப்பட வேண்டிய நிலையிலும் நான் இல்லை. இஸ்லாத்தைத் தழுவியதிலிருந்து நான் மதம் மாறியதும் இல்லை. 'அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை; முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் அடியாரும் அவருடைய தூதரும் ஆவார்கள்' என்று நான் உறுதிமொழிகிறேன்" என்று கூறினார்கள்.[59]

٤٢٣ حدثنا إِسْحَاقُ بْنُ سُلَيْمَانَ قَالَ سَمِعْتُ مُغِيرَةَ بْنَ مُسْلِمٍ أَبَا سَلَمَةَ يَذْكُرُ عَنْ مَطَرٍ عَنْ نَافِعٍ عَنِ ابْنِ عُمَرَ أَنَّ عُثْمَانَ رَضِيَ اللَّهُ عَنْهُ أَشْرَفَ عَلَى أَصْحَابِهِ وَهُوَ مَحْصُورٌ فَقَالَ: عَلَامَ تَقْتُلُونِي؟ فَإِنِّي سَمِعْتُ رَسُولَ اللَّهِ ﷺ يَقُولُ: لَا يَحِلُّ دَمُ امْرِئٍ مُسْلِمٍ إِلَّا بِإِحْدَى ثَلَاثٍ: رَجُلٌ زَنَى بَعْدَ إِحْصَانِهِ فَعَلَيْهِ الرَّجْمُ أَوْ قَتَلَ عَمْدًا فَعَلَيْهِ الْقَوَدُ أَوْ ارْتَدَّ بَعْدَ إِسْلَامِهِ فَعَلَيْهِ الْقَتْلُ، فَوَاللَّهِ مَا زَنَيْتُ فِي جَاهِلِيَّةٍ وَلَا إِسْلَامٍ وَلَا قَتَلْتُ أَحَدًا فَأُقِيدَ نَفْسِي مِنْهُ وَلَا ارْتَدَدْتُ مُنْذُ أَسْلَمْتُ إِنِّي أَشْهَدُ أَنْ لَا إِلَهَ إِلَّا اللَّهُ وَأَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ.

424 மாலிக் பின் அப்தில்லாஹ் அஸ்ஸியாதீ (ரஹ்) கூறியதாவது:

(ஒருமுறை) அபூதர் (ரலி) அவர்கள் உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்களிடம் உள்ளே வர அனுமதி கேட்டார்கள். உஸ்மான் (ரலி) அவர்கள் அவருக்கு அனுமதி அளித்தார்கள். அப்போது அபூதர் (ரலி) அவர்களின் கையில் ஒரு கைத்தடி இருந்தது. பின்னர், உஸ்மான் (ரலி) அவர்கள் (தம் அவையில் இருந்த) கஅபுல்அஹ்பார் (ரஹ்)

٤٢٤ حدثنا حَسَنُ بْنُ مُوسَى حَدَّثَنَا عَبْدُ اللَّهِ بْنُ لَهِيعَةَ حَدَّثَنَا أَبُو قَبِيلٍ قَالَ: سَمِعْتُ مَالِكَ بْنَ عَبْدِ اللَّهِ الزِّيَادِيَّ يُحَدِّثُ عَنْ أَبِي ذَرٍّ أَنَّهُ جَاءَ يَسْتَأْذِنُ عَلَى عُثْمَانَ بْنِ عَفَّانَ رَضِيَ اللَّهُ عَنْهُ فَأَذِنَ لَهُ وَبِيَدِهِ عَصَاهُ، فَقَالَ عُثْمَانُ

என ஒருவருக்கு ஐயம் ஏற்படலாம். அல்லது நான்கு ரக்அத்கள் தொழுது முடித்த ஒருவர் மறந்துபோய் ஐந்தாவது ரக்அத்திற்கு எழுந்துவிடலாம். அல்லது நான்கு ரக்அத் தொழ வேண்டிய இடத்தில் மறந்துபோய் இரண்டாவது ரக்அத்திலேயே சலாம் கொடுத்துவிடலாம். அல்லது முதல் அமர்வில் உட்காராமல் மூன்றாவது ரக்அத்திற்காக எழுந்துவிடலாம். இவை போன்ற தருணங்களில் நினைவு வந்தவுடன் தவறைத் திருத்திக்கொள்வதுடன், ஏற்பட்டுவிட்ட தவறுக்குப் பரிகாரமாகத் தொழுகையின் இறுதியில் இரண்டு 'சஜ்தா'க்களை கூடுதலாகச் செய்ய வேண்டும். இதற்கு 'சஜ்தா சஹ்வு' (மறதிக்கான சிரவணக்கம்) என்பர். தொழுகையின் இறுதியில் சலாம் கொடுப்பதற்கு முன்பு அல்லது சலாம் கொடுத்த பின்பு அந்த இரு 'சஜ்தா'க்களைச் செய்ய வேண்டும். இந்த இரு முறைகளில் எது சிறந்தது என்பதில் அறிஞர்களிடையே கருத்து வேறுபாடு காணப்படுகிறது. ஒரு தொழுகையில் பலமுறை மறதி ஏற்பட்டாலும் அனைத்திற்கும் சேர்த்து இரு 'சஜ்தா'க்கள் செய்தால் போதும் என்பதே அறிஞர்களின் கருத்தாகும். [illegible]

59. காண்க: முஸ்னத் ஹதீஸ் எண் - 411 மற்றும் அதன் அடிக்குறிப்பு.

رَضِيَ اللهُ عَنْهُ: يَا كَعْبُ إِنَّ عَبْدَ الرَّحْمَنِ تُوُفِّيَ وَتَرَكَ مَالًا فَمَا تَرَى فِيهِ؟ فَقَالَ: إِنْ كَانَ يَصِلُ فِيهِ حَقَّ اللهِ فَلَا بَأْسَ عَلَيْهِ، فَرَفَعَ أَبُو ذَرٍّ عَصَاهُ فَضَرَبَ كَعْبًا، وَقَالَ سَمِعْتُ رَسُولَ اللهِ ﷺ يَقُولُ: مَا أُحِبُّ لَوْ أَنَّ لِي هَذَا الْجَبَلَ ذَهَبًا أُنْفِقُهُ وَيُتَقَبَّلُ مِنِّي أَذَرُ خَلْفِي مِنْهُ سِتَّ أَوَاقٍ أَنْشُدُكَ اللهَ يَا عُثْمَانُ أَسَمِعْتَهُ ثَلَاثَ مَرَّاتٍ، قَالَ: نَعَمْ.

٤٢٥ حَدَّثَنَا عَبْدُ اللهِ حَدَّثَنَا يَحْيَى بْنُ مَعِينٍ حَدَّثَنَا هِشَامُ بْنُ يُوسُفَ حَدَّثَنِي عَبْدُ اللهِ بْنُ بَحِيرٍ الْقَاصُّ عَنْ هَانِئٍ مَوْلَى عُثْمَانَ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ: كَانَ عُثْمَانُ رَضِيَ اللهُ عَنْهُ إِذَا وَقَفَ عَلَى قَبْرٍ بَكَى حَتَّى يَبُلَّ لِحْيَتَهُ، فَقِيلَ لَهُ: تَذْكُرُ الْجَنَّةَ

அவர்களிடம்,) "கஅபே! அப்துர் ரஹ்மான் (பின் அவ்ஃப் (ரலி)) அவர்கள் (தமக்குப் பின்) செல்வத்தை விட்டுவிட்டு இறந்து விட்டார்கள். அதுபற்றி உங்கள் கருத்து என்ன?" என்று கேட்டார்கள் கஅப் (ரஹ்) அவர்கள், "அவர் அ(ந்தச் செல்வத்)தில் அல்லாஹ்வுக்குச் செலுத்த வேண்டிய கடமையை(ச் சரியாக) நிறைவேற்றியிருந்தால், அவருக்குப் பிரச்சினை ஏதுமில்லை" என்றார்கள்

உடனே அபூதர் (ரலி) அவர்கள் தமது கைத்தடியை உயர்த்தி கஅப் (ரஹ்) அவர்களை அடித்தார்கள். பின்னர், "இந்த (உஹுத்) மலை (அளவு) என்னிடம் தங்கமாக இருந்து, அதை நான் (அறவழியில்) செலவு செய்ய, அது என்னிடமிருந்து ஏற்கப்படும் என்றால், அதிலிருந்து ஆறு ஊக்கியா அளவைக்கூட எனக்குப் பின்னால் நான் விட்டுவிட்டுச் செல்ல விரும்பமாட்டேன்' என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறியதை நான் செவியுற்றுள்ளேன்" என்று கூறிய அபூதர் (ரலி) அவர்கள், "உஸ்மான் அவர்களே! அல்லாஹ்வை முன்வைத்து உங்களிடம் கேட்கிறேன் இதை நீங்களும் செவியுற்றுள்ளீர்கள்தானே?" என்று மூன்று முறை கேட்டார்கள் அதற்கு உஸ்மான் (ரலி) அவர்கள், "ஆம் (செவியுற்றுள்ளேன்)" என்றார்கள்[60]

425 (உஸ்மான் (ரலி) அவர்களின் முன்னாள் அடிமை) ஹானிஉ (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

உஸ்மான் (ரலி) அவர்கள் ஏதேனும் மண்ணறை அருகே நிற்க நேர்ந்தால், தமது தாடி நனையும் அளவுக்கு அழுவார்கள். அப்போது, "சொர்க்கம்- நரகம் குறித்து நினைவூட்டப்படும்போதெல்லாம் அழாத நீங்கள், இதற்காக அழுகின்றீர்களே (ஏன்)?" என்று

---

60. இந்த ஹதீஸின் அறிவிப்பாளர்தொடரில் இப்னு லஹீஆ இடம்பெற்றுள்ளார் முன்சென்ற 51ஆவது அடிக்குறிப்பில் விளக்கப்பட்டுள்ளபடி நான்கு அப்துல்லாக்களில் யாரும் இந்த ஹதீஸை இப்னு லஹீஆவிடமிருந்து அறிவிக்கவில்லை என்பதால் இந்த ஹதீஸ் பலவீனமடைகிறது. 'உஹுது மலை அளவு தங்கம் இருந்து' என்ற கருத்தமைந்த பகுதி மட்டும் புகாரீ (1407, 1408, 2389, 6445, 7228) முஸ்லிம் (1810, 1813) ஆகிய நூல்களில் இடம்பெற்றுள்ளது

[illegible] 9 34 35 [illegible]

[illegible] புகாரீ - 46, 6956 [illegible]

وَالنَّارَ فَلَا تَبْكِي وَتَبْكِي مِنْ هَـذَا، فَقَالَ: إِنَّ رَسُولَ
اللَّهِ ﷺ قَالَ: الْقَبْرُ أَوَّلُ مَنَازِلِ الْآخِرَةِ فَإِنْ يَنْجُ مِنْهُ فَمَا
بَعْدَهُ أَيْسَرُ مِنْهُ وَإِنْ لَمْ يَنْجُ مِنْهُ فَمَا بَعْدَهُ أَشَدُّ مِنْهُ قَالَ
وَقَالَ رَسُولُ اللَّهِ ﷺ: وَاللَّهِ مَا رَأَيْتُ مَنْظَرًا قَطُّ إِلَّا
وَالْقَبْرُ أَفْظَعُ مِنْهُ.

அவர்களிடம் கேட்கப்பட்டது.

அதற்கு அவர்கள், "மறுமைக்குச் செல்லும் தங்குமிடங்களுள் முதலாவது இடம், இம்மண்ணறையே. இதில் ஒருவர் வெற்றி பெற்றுவிட்டால், அதற்குப் பிறகுள்ளவை அதைவிட மிகவும் இலகுவானவை ஆகும். அதில் ஒருவர் வெற்றிபெறத் தவறிவிட்டால், அதற்குப் பிறகுள்ளவை அதைவிட மிகக் கடுமையானவை ஆகும். 'அல்லாஹ்வின் மீதாணையாக! நான் கண்ட காட்சிகளுள் மிகவும் அகோரமானதாக மண்ணறையைத் தவிர வேறெதையும் கண்டதே இல்லை' என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களும் கூறியுள்ளார்கள் (அதனால் தான், இதைப் பார்த்ததும் அழுகிறேன்)" என்றார்கள்.[61]

٤٢٦ حَدَّثَنَا زَكَرِيَّا بْنُ عَدِيٍّ حَدَّثَنَا عَلِيُّ بْنُ مُسْهِرٍ عَنْ
هِشَامِ بْنِ عُرْوَةَ عَنْ أَبِيهِ عَنْ مَرْوَانَ وَمَا إِخَالُهُ يُتَّهَمُ عَلَيْنَا
قَالَ: أَصَابَ عُثْمَانَ رَضِيَ اللَّهُ عَنْهُ رُعَافٌ سَنَةَ الرُّعَافِ
حَتَّى تَخَلَّفَ عَنِ الْحَجِّ وَأَوْصَى فَدَخَلَ عَلَيْهِ رَجُلٌ مِنْ
قُرَيْشٍ فَقَالَ: اسْتَخْلِفْ قَالَ وَقَالُوهُ: قَالَ: نَعَمْ، قَالَ مَنْ
هُوَ؟ قَالَ فَسَكَتَ، قَالَ ثُمَّ دَخَلَ عَلَيْهِ رَجُلٌ آخَرُ فَقَالَ لَهُ
مِثْلَ مَا قَالَ لَهُ الْأَوَّلُ، وَرَدَّ عَلَيْهِ نَحْوَ ذَلِكَ، قَالَ فَقَالَ
عُثْمَانُ رَضِيَ اللَّهُ عَنْهُ: قَالُوا الزُّبَيْرَ، قَالَ: نَعَمْ، قَالَ: أَمَا

426 மர்வான் பின் அல்ஹகம் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

(மூக்கிலிருந்து குருதி வடியும்) சில்லு மூக்கு நோய் (பரவலாக ஏற்பட்ட ஹிஜ்ரீ 31ஆவது) ஆண்டில் உஸ்மான் (ரலி) அவர்களுக்கும் (அந்தச்) சில்லு மூக்கு நோய் ஏற்பட்டது. இதனால், அவர்கள் (அந்த ஆண்டு) ஹஜ்ஜுக்குப் போகாமல் இருந்து விட்டார்கள். அவர்கள் தமது இறுதிவிருப்பத்தையும் (வஸிய்யத்) ஆயத்தம் செய்து வைத்தார்கள். அப்போது அவர்களிடம் குறைஷிக் குலத்தைச் சேர்ந்த ஒருவர் வந்து, "(உங்களுக்குப் பின்னர் ஆட்சித் தலைமைக்கு) நீங்களே ஒரு பிரதிநிதியை (கலீஃபாவை) நியமித்துவிடுங்கள்" என்றார். அதற்கு உஸ்மான் (ரலி) அவர்கள், "மக்கள் அது குறித்து ஏதும் பேசிக்கொள்கிறார்களோ?" என்று கேட்டார்கள். அவர், "ஆம்" என்றார். உஸ்மான் (ரலி) அவர்கள், "யாரை (கலீஃபாவாக நியமிக்கச் சொல்கின்றனர்)?" என்று கேட்டார்கள். அதற்கு அவர் (மறுமொழி கூறாமல்) அமைதியாக இருந்தார்.

பின்னர் மற்றொருவர், உஸ்மான் (ரலி) அவர்களிடம் வந்து, முதலாமவர் கூறியதைப் போன்றே கூறலானார். உஸ்மான் (ரலி) அவர்கள் முதலாமவரிடம் கூறியதைப் போன்றே இவரிடமும் கூறிவிட்டு, "ஸுபைர்[62] (ரலி) அவர்களையா (கலீஃபாவாக நியமிக்கும்படி

61. இதே ஹதீஸ், திர்மிதீ (2230), இப்னுமாஜா (4257), ஷுஅபுல் ஈமான் ... (1/50), ஹாகிம் (1321, 8060), அஹ்மத் (410) போன்ற நூல்களிலும் பதிவாகியுள்ளது.

62. ஸுபைர் பின் அல்அவ்வாம் (ரலி) அவர்களுக்கு அபூஅப்தில்லாஹ் எனும் குறிப்புப் பெயரும் உண்டு. இவர்களின் 5ஆவது முன்னோரான குஸை பின் கிலாப் என்பாரில் அவர்களுடைய வமிசப் பரம்பரையும் நபி (ஸல்) அவர்களின் வமிசப் பரம்பரையும் இணைகின்றன. இவர்களின் தாயார் நபி (ஸல்) அவர்களின் மாமியான ஸஃபிய்யா பின்த் அப்தில்முத்தலிப் (ரலி) ஆவார். தமது 8ஆவது அல்லது 16ஆவது வயதில் ஸுபைர் (ரலி) இஸ்லாத்தை ஏற்றார். அபிசீனியா, மதீனா ஆகிய இரு இடங்களுக்கும் 'ஹிஜ்ரத்' செய்தார். பத்ர் உட்பட எல்லா அறப்போர்களிலும் கலந்துகொண்டார். இவர் சொர்க்கவாசிகள் என நற்செய்தி கூறப்பெற்றவர்களுள் ஒருவராவார். ஹிஜ்ரீ 36ஆம் ஆண்டு ஜுமாதுல் ஊலாவில் நடந்த 'ஜமல்' போரில் உயிரிழந்தார். பஸ்ராவின் (இராக்) அஸ்ஸிபாஉ பள்ளத்தாக்கில் அடக்கம் செய்யப்பட்டார் ...

وَالَّذِي نَفْسِي بِيَدِهِ إِنْ كَانَ لَخَيْرَهُمْ مَا عَلِمْتُ وَأَحَبَّهُمْ إِلَى رَسُولِ اللَّهِ ﷺ.

حَدَّثَنَا عَبْدُ اللَّهِ حَدَّثَنَاه سُوَيْدٌ حَدَّثَنَا عَلِيُّ بْنُ مُسْهِرٍ بِإِسْنَادِهِ مِثْلَهُ.

مக்கள் பேசிக்கொள்கிறார்கள்)?" என்றும் கேட்டார்கள் அவர், "ஆம்" என்றார். அப்போது உஸ்மான் (ரலி) அவர்கள், "என் உயிர் எவன் கையில் உள்ளதோ அ(ந்த இறை)வன்மீது சத்தியமாக! ஸுபைர் (ரலி) அவர்கள் நான் அறிந்தவரை, மக்களுள் நல்லவர்; அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுக்கு மிகப் விருப்பமானவராகவும் இருந்தார்" என்று கூறினார்கள்.[63]

٤٢٧ حَدَّثَنَا زَكَرِيَّا بْنُ أَبِي زَكَرِيَّا حَدَّثَنَا يَحْيَى بْنُ سُلَيْمٍ حَدَّثَنَا إِسْمَاعِيلُ بْنُ أُمَيَّةَ عَنْ مُوسَى بْنِ عِمْرَانَ بْنِ مَنَّاحٍ قَالَ: رَأَى أَبَانُ بْنُ عُثْمَانَ رَضِيَ اللَّهُ عَنْهُ جَنَازَةً فَقَامَ لَهَا وَقَالَ: رَأَى عُثْمَانُ بْنُ عَفَّانَ رَضِيَ اللَّهُ عَنْهُ جَنَازَةً فَقَامَ لَهَا، ثُمَّ حَدَّثَ أَنَّ رَسُولَ اللَّهِ ﷺ رَأَى جَنَازَةً فَقَامَ لَهَا.

427 மூசா பின் இம்ரான் பின் மன்னாஹ் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

(ஒரு முறை) அபான் பின் உஸ்மான் (ரஹ்) அவர்கள், இறந்துபோன ஒருவரின் உடலை (ஜனாஸாவை)ப் பார்த்ததும், அதற்காக எழுந்து நின்றுவிட்டுப் பின்வருமாறு கூறினார்கள்:

(என் தந்தை) உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்கள் (இதைப் போன்றே) ஒரு (முறை) ஜனாஸாவைப் பார்த்ததும், அதற்காக எழுந்து நின்றார்கள். பின்னர், "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் (ஒரு முறை) ஜனாஸாவைக் கண்டபோது, அதற்காக எழுந்து நின்றார்கள். (அதனால்தான் நானும் நின்றேன்)" என்று குறிப்பிட்டார்கள்.[64]

٤٢٨ حَدَّثَنَا حَسَنُ بْنُ مُوسَى حَدَّثَنَا شَيْبَانُ عَنْ يَحْيَى بْنِ أَبِي كَثِيرٍ عَنْ أَبِي سَلَمَةَ أَنَّ عَطَاءَ بْنَ يَسَارٍ أَخْبَرَهُ عَنْ زَيْدِ بْنِ خَالِدٍ الْجُهَنِيِّ أَخْبَرَهُ أَنَّهُ سَأَلَ عُثْمَانَ بْنَ عَفَّانَ رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ قُلْتُ: أَرَأَيْتَ إِذَا جَامَعَ الرَّجُلُ امْرَأَتَهُ وَلَمْ يُمْنِ؟ فَقَالَ عُثْمَانُ رَضِيَ اللَّهُ عَنْهُ: يَتَوَضَّأُ كَمَا يَتَوَضَّأُ لِلصَّلَاةِ وَيَغْسِلُ ذَكَرَهُ، قَالَ وَقَالَ عُثْمَانُ رَضِيَ اللَّهُ عَنْهُ: سَمِعْتُهُ مِنْ رَسُولِ اللَّهِ ﷺ فَسَأَلْتُ عَنْ ذَلِكَ عَلِيَّ بْنَ أَبِي طَالِبٍ وَالزُّبَيْرَ وَطَلْحَةَ وَأُبَيَّ بْنَ كَعْبٍ فَأَمَرُوهُ بِذَلِكَ.

428 ஸைது பின் காலித் அல்ஜுஹனீ (ரலி) அவர்கள் கூறியதாவது:

நான் உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்களிடம், "ஒருவர் தம்முடைய மனைவியோடு தாம்பத்திய உறவு கொண்டார். ஆனால், விந்தை வெளியேற்றவில்லை. (இந்நிலையில் அவர்மீது குளியல் கடமையா?) இது குறித்துத் தாங்கள் என்ன கருதுகின்றீர்கள்?" எனக் கேட்டேன். அதற்கு உஸ்மான் (ரலி) அவர்கள், "அவர் தனது பிறப்பு உறுப்பைக் கழுவிவிட்டுத் தொழுகைக்காகச் அங்கத் தூய்மை (உளூ) செய்வதைப் போன்று அங்கத் தூய்மை செய்துகொள்ள வேண்டும். இதை நான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடமிருந்து செவியேற்றேன்" என்றார்கள். "இது தொடர்பாக, நான் அலீ பின் அபீதாலிப் (ரலி), ஸுபைர் பின் அல்அவ்வாம் (ரலி), தல்ஹா பின் உபைதில்லாஹ் (ரலி), உபை பின் கஅப் (ரலி) ஆகியோரிடமும் (விளக்கம்) கேட்டேன். அவர்களும் அ(ங்கத் தூய்மை செய்வ)தையே வலியுறுத்தினர்" என்றும் கூறினார்கள்.[65]

---

63. காண்க: ஸஹீஹுல் புகாரீ ஹதீஸ் எண் - 3717. இந்த ஹதீஸ் நஸாயீயின் சுனனுல் குப்ரா (5/60), ஹாகிம் (5572) ஆகிய நூல்களிலும் பதிவாகியுள்ளது.

64. காண்க: முன்சென்ற ஹதீஸ் எண் - 400 மற்றும் அதன் அடிக்குறிப்பு.

65. இதே ஹதீஸ் 420ஆம் எண்ணில் முன்னர் சென்றுள்ளது.

٤٢٩ حدثنا حسن بن موسى حدثنا شيبان عن يحيى عن محمد بن إبراهيم بن الحارث التيمي قال أخبرني معاذ بن عبد الرحمن أن حمران بن أبان أخبره قال: أتيت عثمان بن عفان رضي الله عنه وهو جالس في المقاعد فتوضأ فأحسن الوضوء، ثم قال: رأيت رسول الله ﷺ وهو في هذا المجلس توضأ فأحسن الوضوء ثم قال: من توضأ مثل وضوئي هذا ثم أتى المسجد فركع فيه ركعتين غفر له ما تقدم من ذنبه، وقال: قال رسول الله ﷺ: ولا تغتروا.

429 ஹும்ரான் பின் அபான் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

(மதீனாவிலுள்ள) 'மகாஇத்' எனுமிடத்தில் உஸ்மான் (ரலி) அவர்கள் அமர்ந்திருந்தபோது, அவர்களிடம் நான் சென்றேன். அப்போது அழகிய முறையில் அங்கத் தூய்மை (உளூ) செய்த உஸ்மான் (ரலி) அவர்கள், "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் (நான் அமர்ந்துள்ள) இதே இடத்தில் (அமர்ந்து) அழகிய முறையில் அங்கத் தூய்மை செய்ததைக் கண்டுள்ளேன்" என்று கூறிவிட்டுத் தொடர்ந்து சொன்னார்கள்:

(இவ்வாறு அங்கத் தூய்மை செய்த) அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "நான் செய்த இந்த அங்கத் தூய்மையைப் போன்று ஒருவர் அங்கத் தூய்மை செய்துவிட்டுப் பின்னர் பள்ளிவாசலுக்கு வந்து, அங்கு இரண்டு 'ரக்அத்'கள் தொழுதால், அவருக்கு அவருடைய முந்தைய (சிறு) பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன. ஆனால், (இதைக் கொண்டு) ஏமாந்துபோய் (பாவங்களில் மூழ்கி)விடாதீர்கள்" என்று கூறினார்கள்.[66]

٤٣٠ حدثنا عبيد الله بن محمد بن حفص بن عمر التيمي قال سمعت أبي يقول سمعت عمي عبيد الله بن عمر بن موسى يقول: كنت عند سليمان بن علي رضي الله عنه فدخل شيخ من قريش فقال سليمان: انظر إلى الشيخ فأقعده مقعدا صالحا فإن لقريش حقا، فقلت أيها الأمير ألا أحدثك حديثا بلغني عن رسول الله ﷺ قال: بلى قال قلت له بلغني أن رسول الله ﷺ قال: من أهان قريشا أهانه الله، قال سبحان الله ما أحسن هذا من حدثك هذا؟ قال قلت حدثنيه ربيعة بن أبي عبد الرحمن

430 உபைதுல்லாஹ் பின் உமர் பின் மூசா (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

நான் (அப்பாஸிய்யாக்களின் ஆட்சியில் பஸ்ராவின் ஆளுநராயிருந்த) சுலைமான் பின் அலீ (பின் அப்தில்லாஹ் பின் அப்பாஸ்-ரஹ்) அவர்களிடம் இருந்தேன். அப்போது குறைஷிக் குலத்தைச் சேர்ந்த முதியவர் ஒருவர் வந்தார். சுலைமான் அவர்கள் (என்னிடம்), "நீ (போய்) அந்த முதியவரை (நன்கு) கவனித்து நல்லதோர் இடத்தில் அமரச் செய்; ஏனெனில், குறைஷியருக்கென்று சில உரிமைகள் உள்ளன" என்று கூறினார். நான், "தலைவரே! அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடமிருந்து எனக்குக் கிடைத்த தகவல் ஒன்றை உங்களுக்கு நான் அறிவிக்கட்டுமா?" என்றேன். அவர், "சரி" என்று கூறினார்.

நான், "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், 'குறைஷியரை யாரேனும் இழிவுபடுத்தினால், அவரை அல்லாஹ் இழிவுபடுத்துவான்' என்று கூறினார்கள் எனும் தகவல் எனக்குக் கிடைத்தது" என்று அவரிடம் நான் கூறினேன். உடனே அவர், "அல்லாஹ் தூயவன்! (சுப்ஹானல்லாஹ்). என்ன அழகான தகவல்! உமக்கு இதை அறிவித்தவர் யார்?" என்று கேட்டார். அப்போது நான் பின்வருமாறு கூறினேன்:

இதை எனக்கு ரபீஆ பின் அபீஅப்திர் ரஹ்மான் (ரஹ்) அவர்களும், அவருக்கு சஈது

66. பார்க்க: புகாரி ஹதீஸ் எண் - 6433; முஸ்லிம் - 388, 393; மேலும் காண்க: முன்சென்ற ஹதீஸ் எண்கள் - 381, 391, 393, 395, 410 மற்றும் அவற்றின் அடிக்குறிப்புகள்.

عَنْ سَعِيدِ بْنِ الْمُسَيَّبِ عَنْ عَمْرِو بْنِ عُثْمَانَ بْنِ عَفَّانَ رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ قَالَ لِي أَبِي: يَا بُنَيَّ إِنْ وَلِيتَ مِنْ أَمْرِ النَّاسِ شَيْئًا فَأَكْرِمْ قُرَيْشًا فَإِنِّي سَمِعْتُ رَسُولَ اللَّهِ ﷺ يَقُولُ: مَنْ أَهَانَ قُرَيْشًا أَهَانَهُ اللَّهُ.

பின் அல்முசய்யப் (ரஹ்) அவர்களும், அவருக்கு அம்ர் பின் உஸ்மான் பின் அஃப்பான் (ரஹ்) அவர்களும், அவருக்கு அவருடைய தந்தை உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்களும் அறிவித்தனர்

உஸ்மான் (ரலி) அவர்கள் தம்முடைய மகன் அம்ர் (ரஹ்) அவர்களிடம், "என் அருமை மகனே! மக்களை நிர்வகிக்கும் பொறுப்பு ஒன்றுக்கு நீ பணியமர்வு செய்யப்பட்டால், நீ குறைஷியருக்கு (உரிய) மரியாதை வழங்குவாயாக! ஏனெனில், 'குறைஷியரை யாரேனும் இழிவுபடுத்தினால், அவரை அல்லாஹ் இழிவுபடுத்துவான்' என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறியதை நான் செவியுற்றுள்ளேன்" என்று குறிப்பிட்டார்கள்.[67]

٤٣١ حَدَّثَنَا إِسْمَاعِيلُ بْنُ أَبَانَ الْوَرَّاقُ حَدَّثَنَا يَعْقُوبُ عَنْ جَعْفَرِ بْنِ أَبِي الْمُغِيرَةِ عَنِ ابْنِ أَبْزَى عَنْ عُثْمَانَ بْنِ عَفَّانَ رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ: قَالَ لَهُ عَبْدُ اللَّهِ بْنُ الزُّبَيْرِ حِينَ حُصِرَ: إِنَّ عِنْدِي نَجَائِبَ قَدْ أَعْدَدْتُهَا لَكَ فَهَلْ لَكَ أَنْ تَحَوَّلَ إِلَى مَكَّةَ فَيَأْتِيَكَ مَنْ أَرَادَ أَنْ يَأْتِيَكَ؟ قَالَ: لَا إِنِّي سَمِعْتُ رَسُولَ اللَّهِ ﷺ يَقُولُ: يُلْحَدُ بِمَكَّةَ كَبْشٌ مِنْ قُرَيْشٍ اسْمُهُ عَبْدُ اللَّهِ عَلَيْهِ مِثْلُ نِصْفِ أَوْزَارِ النَّاسِ.

431 இப்னு அப்ஸா (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்கள் (கிளர்ச்சியாளர்களால்) முற்றுகையிடப்பட்டிருந்தபோது, அவர்களிடம் நபித்தோழர் அப்துல்லாஹ் பின் அஸ்ஸுபைர் (ரலி) அவர்கள், "என்னிடம் உயரின (வாகன)ப் பிராணிகள் பல உள்ளன. அவற்றை உங்களுக்காகவே நான் ஆயத்த நிலையில் வைத்துள்ளேன். எனவே, மக்காவுக்குப் புலம் பெயர்ந்து செல்லும் திட்டம் ஏதும் உங்களுக்கு உண்டா? அப்படிச் சென்றால், உங்களிடம் வந்து சேர விரும்புவோர் வந்து சேர்ந்துகொள்வார்களே" என்று கூறினார்கள். அதற்கு உஸ்மான் (ரலி) அவர்கள், "(அத்தகைய திட்டம் ஏதும் என்னிடம்) கிடையாது. ஏனெனில், 'அப்துல்லாஹ் என்ற பெயரை உடைய குறைஷிப் பிரமுகர் ஒருவர் மக்காவில் குற்றம் புரிவார். மக்கள் செய்யும் குற்றங்களில் பாதியளவு அவர்மீதே சேரும்' என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறியதை நான் கேட்டுள்ளேன்" என்றார்கள்.[68]

---

67. இந்த ஹதீஸில் சுலைமான் பின் அலீ (ரஹ்) பற்றிய விபரம் தவிர மற்றவை ஹாகிம் (7054), இப்னு ஹிப்பான் (6375) உள்ளிட்ட நூல்களிலும் இடம்பெற்றுள்ளன.

இஸ்லாமியப் பிரசாரத்தைப் பலப்படுத்துகின்ற அரும்பணியாளர்களாகவும், இறை வழிகாட்டல்களை நம்பிக்கை கொண்டு அவை நடைமுறையில் வேரூன்றிட வித்துகளாய்ப் பயன்பட்டதில் முன்னிலையாளர்களாகவும் குறைஷியரே திகழ்ந்தனர். அது மட்டுமின்றி, மூர்க்கமாக எதிர்த்துவந்த பலர் குறைஷியரில் இடம்பெற்றாலும், திருந்திய பின்னர் அதே வேகத்தில் இஸ்லாமியச் சட்டங்களை அறிமுகப்படுத்துவதிலும் அவர்கள் களப்பணியாற்றினார்கள். இஸ்லாமிய வளர்ச்சிக்காகத் தம் சொந்த சுகங்கள் அனைத்தையும் துறந்து 'ஹிஜ்ரத்' எனும் தியாகப் பயணம் மேற்கொண்ட மக்களிலும் [illegible] விளங்கினர் என்பதோடு, அவர்களை வசை அல்லாஹ் கௌரவிக்கும் முகமாக அவர்களின் சொல்லிலேயே இருக்கிறது. [illegible] என்பதால் குறைஷியரின் அரும்பணிக்கு இச்சமுதாயம் நன்றிக் கடன்பட்டிருக்கின்றது என்று இச்செய்தி மூலம் நபி (ஸல்) அவர்கள் உணர்த்துகிறார்கள்.

68. இந்த ஹதீஸை உஸ்மான் (ரலி) அவர்களிடமிருந்து அறிவிக்கும் இப்னு அப்ஸா அவர்கள், உஸ்மான் (ரலி) அவர்களைச் சந்தித்தவர் அல்லர். எனவே, இது அறிவிப்பாளர்தொடர் இடைமுறிந்த ('முன்கத்திஉ') ஹதீஸாகும். மேலும், இதில் கூறப்படும் செய்தி புனைந்துரைக்கப்பட்டதாகும் (முன்கர்) என்பதோடு அல்லாமல் இந்த ஹதீஸ் முஸ்னது அஹ்மதில் மட்டுமே பதிவாகியுள்ளது.

432 அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

'இஹ்ராம்' அணிந்திருப்பவர் திருமணம் செய்துகொள்ளவும் கூடாது; திருமணம் செய்து கொடுக்கவும் கூடாது; பெண் பேசவும் கூடாது.

இதை உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.[69]

٤٣٢ حدثنا عبد الله بن بكر ومحمد بن جعفر قالا حدثنا سعيد عن مطر ويعلى بن حكيم عن نافع عن نبيه بن وهب عن أبان بن عثمان بن عفان عن عثمان بن عفان رضي الله عنه أن رسول الله ﷺ قال: لا ينكح المحرم ولا ينكح ولا يخطب.

433 அப்துல்லாஹ் பின் அஸ்ஸுபைர் (ரலி) அவர்கள் கூறியதாவது:

(ஒரு முறை) உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்கள் தமது சொற்பொழிவு மேடையில் நின்றுகொண்டு உரையாற்றினார்கள். அப்போது, "நான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடமிருந்து செவியுற்ற தகவல் ஒன்றை உங்களுக்குச் சொல்லப் போகிறேன். உங்களைப் பற்றி எனக்கிருந்த தயக்கம்தான், அதை உங்களிடம் சொல்லவிடாமல் என்னைத் தடுத்துக்கொண்டிருந்தது.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வின் பாதையில் (நாட்டின் எல்லையை) ஓர் இரவு காவல் காப்பது, ஓராயிரம் நாட்கள் இரவெல்லாம் நின்று வழிபட்டு, பகலெல்லாம் நோன்பு நோற்பதைவிட மிகச் சிறந்ததாகும்.[70]

٤٣٣ حدثنا محمد بن جعفر حدثنا كهمس حدثنا مصعب بن ثابت عن عبد الله بن الزبير قال قال عثمان رضي الله عنه وهو يخطب على منبره: إني محدثكم حديثا سمعته من رسول الله ﷺ لم يكن يمنعني أن أحدثكم به إلا الضن بكم إني سمعت رسول الله ﷺ يقول: حرس ليلة في سبيل الله أفضل من ألف ليلة يقام ليلها ويصام نهارها.

434 நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

(ஓரிறை உறுதிமொழியாகிய) 'லா இலாஹ இல்லல்லாஹ்' (அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை) என்பதை நன்கு புரிந்துகொண்ட நிலையில் ஒருவர் இறந்தால், அவர் சொர்க்கம் செல்வார்.

இதை உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.[71]

٤٣٤ حدثنا محمد بن جعفر حدثنا شعبة قال سمعت خالدا عن أبي بشر العنبري عن حمران بن أبان عن عثمان بن عفان رضي الله عنه عن النبي ﷺ قال: من مات وهو يعلم أن لا إله إلا الله دخل الجنة.

---

69. காண்க: முன்சென்ற ஹதீஸ் எண் - 378 மற்றும் அதன் அடிக்குறிப்பு.

70. இக்கருத்தமைந்த ஹதீஸ் முன்சென்ற 404, 415 ஆகிய எண்களிலும் இடம்பெற்றுள்ளது. அவ்விரு அறிவிப்புகளும் பலவீனமானவை. அதுபோன்றே இந்த ஹதீஸும் பலவீனமானதாகும். 404ஆவது ஹதீஸின் அறிவிப்பாளர்தொடர் பலவீனமுடைய [illegible] காரணமே அதுவே இங்கும் உள்ளது.

71. இந்த ஹதீஸ் முஸ்லிம் (43), [illegible] இப்னு அபீஷைபா (3/126) [illegible] (6/274) [illegible] (2241) [illegible] (1728) [illegible] (1, 9) [illegible]. இப்னு [illegible] (202) [illegible] (56) உள்ளிட்ட நூல்களிலும் பதிவாகியுள்ளது.

435 நுபைஹ் பின் வஹ்ப் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

உமர் பின் உபைதில்லாஹ் பின் மஅமர் (ரஹ்) அவர்கள் 'இஹ்ராம்' அணிந்திருந்த போது, அவர்களுக்குக் கண்வலி ஏற்பட்டது. எனவே, கண்களில் அஞ்சனம் (சுர்மா) இட அவர் விரும்பினார். ஆனால், அபான் பின் உஸ்மான் (ரஹ்) அவர்கள் அவரை (அஞ்சனம் இட வேண்டாம் என)த் தடுத்து விட்டு, (அதற்குப் பகரமாக) இரு கண்களிலும் கற்றாழைச் சாற்றைப் பிழிந்து கட்டுமாறு அவருக்குக் கட்டளையிட்டார்கள்; மேலும், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அவ்வாறே செய்ததாக நபி (ஸல்) அவர்களிடமிருந்து உஸ்மான் (ரலி) அவர்கள் தெரிவித்ததாகவும் குறிப்பிட்டார்கள்.[72]

٤٣٥ حدثنا عفان حدثنا عبد الوارث حدثنا أيوب بن موسى حدثني نبيه بن وهب أن عمر بن عبيد الله بن معمر رمدت عينه وهو محرم فأراد أن يكحلها فنهاه أبان بن عثمان رضي الله عنه وأمره أن يضمدها بالصبر وزعم أن عثمان رضي الله عنه حدث عن رسول الله ﷺ أنه فعل ذلك.

436 நுபைஹ் பின் வஹ்ப் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

உமர் பின் உபைதில்லாஹ் (ரஹ்) அவர்கள் 'இஹ்ராம்' அணிந்திருந்தபோது, தம்முடைய மகனுக்குத் மணமுடித்து வைக்க விரும்பினார்கள். அப்போது அபான் (ரஹ்) அவர்கள் அவரைத் (மணமுடித்துவைக்கக் கூடாது எனத்) தடுத்துவிட்டு, "இஹ்ராம் அணிந்திருப்பவர் திருமணம் செய்துகொள்ளவும் கூடாது; திருமணம் செய்து கொடுக்கவும் கூடாது" என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் என்று உஸ்மான் (ரலி) அறிவித்ததாகக் குறிப்பிட்டார்கள்.[73]

٤٣٦ حدثنا عفان حدثنا عبد الوارث حدثنا أيوب بن موسى عن نبيه بن وهب أن عمر بن عبيد الله أراد أن يزوج ابنه وهو محرم فنهاه أبان وزعم أن عثمان رضي الله عنه حدث عن رسول الله ﷺ قال: المحرم لا ينكح ولا ينكح.

437 ரபாஹ் அல்கூஃபீ அவர்கள் கூறியதாவது:

٤٣٧ حدثنا عفان حدثنا جرير بن حازم قال سمعت محمد بن عبد الله بن أبي يعقوب يحدث عن رباح قال: زوجني أهلي أمة لهم رومية ولدت لي غلاما أسود فعلقها عبد رومي يقال له يوحنس فجعل يراطنها بالرومية فحملت وقد كانت ولدت لي غلاما أسود مثلي فجاءت بغلام وكأنه وزغة من الوزغات فقلت

என்னுடைய குடும்பத்தார், அவர்களுக்குச் சொந்தமான ரோம் நாட்டு அடிமைப் பெண் ஒருத்தியை எனக்கு மணமுடித்து வைத்தார்கள். அவள் எனக்கு (என்னைப் போன்றே) கறுப்பு நிறத்தில் ஓர் ஆண் குழந்தையைப் பெற்றாள். அவளை யோஹன்னஸ் என்ற பெயருடைய ரோம் நாட்டு அடிமை ஒருவன் விரும்பினான். அவன் அவளிடம் தனது தாய்மொழியில் பேசித் தன் வசப்படுத்தலானான். அதனால் அவள் கருவுற்றாள். ஏற்கனவே எனக்கு என்னைப் போன்றே கறுப்பு நிறத்தில் ஆண் குழந்தையைப் பெற்றுத் தந்த அவள் இப்போது ஆண் குழந்தையொன்றைப் பெற்றெடுத்தாள். அதுவோ, பல்லிகளுள் ஒரு பல்லியைப் போன்று (சிவப்பு நிறத்தில்) இருந்தது. நான் அவளிடம், "இது

72. காண்க: முன்சென்ற ஹதீஸ் எண் - 396 மற்றும் அதன் அடிக்குறிப்பு.
73. காண்க: முன்சென்ற ஹதீஸ் எண்கள் - 378, 432 மற்றும் அவற்றின் அடிக்குறிப்புகள்.

لَهَا: مَا هَذَا؟ فَقَالَتْ: هُوَ مِنْ يُوحَنَّسَ فَسَأَلْتُ يُوحَنَّسَ فَاعْتَرَفَ فَأَتَيْتُ عُثْمَانَ بْنَ عَفَّانَ رَضِيَ اللَّهُ عَنْهُ فَذَكَرْتُ ذَلِكَ لَهُ فَأَرْسَلَ إِلَيْهِمَا فَسَأَلَهُمَا ثُمَّ قَالَ: سَأَقْضِي بَيْنَكُمَا بِقَضَاءِ رَسُولِ اللَّهِ ﷺ الْوَلَدُ لِلْفِرَاشِ وَلِلْعَاهِرِ الْحَجَرُ فَأَلْحَقَهُ بِي قَالَ فَجَلَدَهُمَا فَوَلَدَتْ لِي بَعْدُ غُلَامًا أَسْوَدَ.

என்ன (குழந்தை)?" என்று கேட்டேன். அவள், "இது யோஹன்னஸுக்கு உரியது" என்றாள் (அது குறித்து) நான் யோஹன்னஸிடம் விசாரிக்க, அவனும் (குற்றத்தை) ஒப்புக்கொண்டான்

உடனே நான் (கலீஃபா) உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்களிடம் வந்து நடந்ததைச் சொன்னேன் உஸ்மான் (ரலி) அவர்கள் அவ்விருவரையும் (ஆளனுப்பி) வரவழைத்து, அவ்விருவரிடமும் விசாரணை நடத்தி முடித்துவிட்டுப் பிறகு, "(இது தொடர்பாக) அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அளித்த தீர்ப்பையே நான் உங்கள் இருவரிடையே அளிக்கப்போகிறேன்; (ஒருத்தி பெற்றெடுத்த குழந்தை, (அப்)பெண் யாருடைய அதிகாரத்தின் கீழ் இருக்கின்றாளோ அவருக்கே உரியதாகும்; விபசாரம் செய்தவருக்கு இழப்புதான் கிடைக்கும்" என்று சொல்லிவிட்டு, அந்தக் குழந்தையை எனக்குச் சொந்தமானது என்றே தீர்ப்பளித்தார்கள் பின்னர் (விபசாரக் குற்றமிழைத்த) அவ்விருவருக்கும் (கல்லெறிந்து கொல்லும் மரணதண்டனை தரவில்லை; மாறாக,) கசையடித் தண்டனையே வழங்கினார்கள் அதன் பின்னர் அவள் எனக்கு, என்னைப் போன்றே கறுப்பு நிறத்தில் ஆண் குழந்தை ஒன்றைப் பெற்றெடுத்தாள்.[74]

٤٣٨ حَدَّثَنَا عَفَّانُ حَدَّثَنَا حَمَّادُ بْنُ زَيْدٍ حَدَّثَنَا يَحْيَى بْنُ سَعِيدٍ عَنْ أَبِي أُمَامَةَ بْنِ سَهْلٍ قَالَ: كُنْتُ مَعَ عُثْمَانَ رَضِيَ اللَّهُ عَنْهُ فِي الدَّارِ وَهُوَ مَحْصُورٌ قَالَ: وَكُنَّا نَدْخُلُ مَدْخَلًا إِذَا دَخَلْنَاهُ سَمِعْنَا كَلَامَ مَنْ عَلَى الْبَلَاطِ قَالَ فَدَخَلَ عُثْمَانُ يَوْمًا لِحَاجَةٍ فَخَرَجَ إِلَيْنَا مُنْتَقِعًا لَوْنُهُ، فَقَالَ إِنَّهُمْ لَيَتَوَعَّدُونِي بِالْقَتْلِ آنِفًا قَالَ قُلْنَا: يَكْفِيكَهُمُ اللَّهُ يَا أَمِيرَ الْمُؤْمِنِينَ قَالَ فَقَالَ: وَبِمَ يَقْتُلُونِي؟ فَإِنِّي سَمِعْتُ رَسُولَ اللَّهِ ﷺ يَقُولُ: إِنَّهُ لَا يَحِلُّ دَمُ امْرِئٍ مُسْلِمٍ إِلَّا فِي إِحْدَى ثَلَاثٍ رَجُلٌ كَفَرَ بَعْدَ إِسْلَامِهِ أَوْ زَنَى بَعْدَ إِحْصَانِهِ

438 அபூஉமாமா பின் சஹ்ல் பின் ஹுனைஃப் (ரலி) அவர்கள் கூறியதாவது:

உஸ்மான் (ரலி) அவர்கள் (கிளர்ச்சியாளர்களால்) வீட்டில் முற்றுகையிடப்பட்டிருந்த போது, அவர்களுடன் நானும் இருந்தேன் நாங்கள் (உஸ்மான் (ரலி) அவர்களது வீட்டில் இரு அறைகளுக்கிடையிலான) தாழ்வாரப் பகுதிக்குள் போய்வந்துகொண்டிருந்தோம் அவ்வாறு நாங்கள் போனபோது, (மதீனாவின் பிரபலமான இடமாகிய) 'பலாத்' எனுமிடத்தில் இருப்பவர்களின் உரையாடலை நாங்கள் நன்கு கேட்போம். ஒருநாள் உஸ்மான் (ரலி) அவர்கள் ஒரு தேவையின் நிமித்தம் அந்தப் பகுதிக்குள் நுழைந்தார்கள். பின்னர் தமது நிறம் வெளிறிப்போனவர்களாக எங்களிடம் வந்து, "சற்று முன்னர் (நான் அங்கே சென்றிருந்தபோது) மக்கள் என்னைக் கொல்லப்போவதாக மிரட்டல் விடுக்கின்றனர்" என்றார்கள் நாங்கள், "இறைநம்பிக்கையாளர்களின் தலைவரே! அவர்கள் விஷயத்தில் அல்லாஹ்வே உங்களுக்குப் போதுமானவன்" என்று கூறினோம்

அப்போது உஸ்மான் (ரலி) அவர்கள், "அவர்கள் எந்த அடிப்படையில் என்னைக் கொல்வார்கள்? அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், 'முஸ்லிமான மனிதரை (நியாய மான) மூன்று காரணங்களுள் ஒன்றை முன்னிட்டே தவிர வேறெதற்காகவும் கொலை

74. இந்த ஹதீஸின் அறிவிப்பாளரான ரபாஹ் அல்லக்மீ என்பார் யாரென்றே அறியப்படாதவர் ஆவார். எனவே இந்த அறிவிப்பாளர்தொடர் பலவீனமானதாகும். காண்க: முன்சென்ற ஹதீஸ் எண் - 392 மற்றும் அதன் அடிக்குறிப்பு

أوْ قَتَلَ نَفْسًا بِغَيْرِ نَفْسٍ، فَوَاللهِ مَا زَنَيْتُ فِي جَاهِلِيَّةٍ وَلَا إِسْلَامٍ وَلَا تَمَنَّيْتُ بَدَلًا بِدِينِي مُنْذُ هَدَانِي اللهُ عَزَّ وَجَلَّ وَلَا قَتَلْتُ نَفْسًا، فَبِمَ يَقْتُلُونِي؟

செய்ய அனுமதி இல்லை 1. இஸ்லாத்தைத் தழுவிய பின்னர் (இஸ்லாத்திலிருந்து வெளியேறி) இறைமறுப்புக்குச் செல்லல் 2. திருமணம் முடித்ததற்குப் பிறகு விபசாரம் புரிதல் 3. ஒருவரை (அநியாயமாகக்) கொலை செய்தல். இவற்றுள் ஒன்றை முன்னிட்டே ஒருவர் கொலை செய்யப்படுவார்' என்று கூறியதை நான் செவியுற்றுள்ளேன். அல்லாஹ்வின் மீதாணையாக! நான் அறியாமைக் காலத்திலும் சரி, இஸ்லாத்தைத் தழுவிய பின்னரும் சரி, ஒருபோதும் விபசாரம் புரிந்ததில்லை. வல்லமையும் மாண்பும் மிக்க அல்லாஹ் என்னை நல்வழியில் செலுத்தியதிலிருந்து நான் எனது (இஸ்லாமிய) மார்க்கத்திற்கு மாற்றாக வேறு (மார்க்கம்) எதையும் விரும்பியதில்லை. (அநியாயமாக) எவரையும் நான் கொன்றதும் இல்லை. அவ்வாறிருக்க, எந்த அடிப்படையில் என்னை அவர்கள் கொல்வார்கள்?" என்று கேட்டார்கள்.[78]

٤٣٩ - حَدَّثَنَا إِسْحَاقُ بْنُ عِيسَى حَدَّثَنَا عَبْدُ الرَّحْمَنِ بْنُ أَبِي الزِّنَادِ ح وَسُرَيْجٌ وَحُسَيْنٌ قَالَا حَدَّثَنَا ابْنُ أَبِي الزِّنَادِ عَنْ أَبِيهِ عَنْ عَامِرِ بْنِ سَعْدٍ قَالَ حُسَيْنٌ ابْنِ أَبِي وَقَّاصٍ قَالَ: سَمِعْتُ عُثْمَانَ بْنَ عَفَّانَ رَضِيَ اللهُ عَنْهُ يَقُولُ: مَا يَمْنَعُنِي أَنْ أُحَدِّثَ عَنْ رَسُولِ اللهِ ﷺ أَنْ لَا أَكُونَ أَوْعَى أَصْحَابِهِ عَنْهُ وَلَكِنِّي أَشْهَدُ لَسَمِعْتُهُ يَقُولُ: مَنْ قَالَ عَلَيَّ مَا لَمْ أَقُلْ فَلْيَتَبَوَّأْ مَقْعَدَهُ مِنَ النَّارِ.

وَقَالَ حُسَيْنٌ: أَوْعَى صَحَابَتِهِ عَنْهُ

٤٤٠ - حَدَّثَنَا هَاشِمٌ حَدَّثَنَا لَيْثٌ حَدَّثَنِي زُهْرَةُ بْنُ مَعْبَدٍ الْقُرَشِيُّ عَنْ أَبِي صَالِحٍ مَوْلَى عُثْمَانَ بْنِ عَفَّانَ رَضِيَ

439 உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்கள் கூறியதாவது:

நான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடமிருந்து அவர்களின் தோழர்களிலேயே மிகப்பெரிய அளவில் (ஹதீஸ்களை) மனனம் செய்யாதவனாக இருந்தது, அவர்களிடமிருந்து ஹதீஸை அறிவிப்பதை விட்டு என்னைத் தடுக்கவில்லை. மாறாக, "நான் சொல்லாத ஒன்றை என்மீது (புனைந்து) உரைக்கின்றவர் தமது இருப்பிடத்தை நரகத்தில் அமைத்துக்கொள்ளட்டும்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறியதை உறுதியாக நான் செவியுற்றேன் என்று சாட்சியம் அளிக்கிறேன். (இதுவே நான் ஹதீஸ்களை அதிகம் அறிவிக்காமல் இருந்ததற்குக் காரணமாகும்.)[79]

இந்த ஹதீஸில், "அவர்களின் தோழர்களிலேயே மிகப்பெரிய அளவில் மனனம் செய்யாதவனாக இருந்தது" என்பதைச் சுட்ட 'அன்லா அகூன அவ்ஆ அன்ஹு' எனும் சொற்றொடர் இடம்பெற்றுள்ளது. இது ஹுசைன் பின் முஹம்மது பின் பஹ்ராம் (ரஹ்) அவர்களது அறிவிப்பில், 'அன்லா அகூன அவ்ஆ ஸஹாபத்திஹி' என்று இடம்பெற்றுள்ளது. (இரண்டுக்கும் பொருள் ஒன்றே.)

440 (உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்களின் முன்னாள் அடிமை) அபூ ஸாலிஹ்

78. காண்க: முன்சென்ற ஹதீஸ் எண்கள் - 411, 423 மற்றும் அவற்றின் அடிக்குறிப்புகளை.

79. இந்த ஹதீஸ் முஸ்னது அஹ்மதில் மட்டுமே இடம்பெற்றுள்ளது. [illegible]

اللهُ عَنْهُ قَالَ سَمِعْتُ عُثْمَانَ رَضِيَ اللهُ عَنْهُ يَقُولُ عَلَى الْمِنْبَرِ: أَيُّهَا النَّاسُ إِنِّي كَتَمْتُكُمْ حَدِيثًا سَمِعْتُهُ مِنْ رَسُولِ اللهِ ﷺ كَرَاهِيَةَ تَفَرُّقِكُمْ عَنِّي ثُمَّ بَدَا لِي أَنْ أُحَدِّثَكُمُوهُ لِيَخْتَارَ امْرُؤٌ لِنَفْسِهِ مَا بَدَا لَهُ سَمِعْتُ رَسُولَ اللهِ ﷺ يَقُولُ: رِبَاطُ يَوْمٍ فِي سَبِيلِ اللهِ تَعَالَى خَيْرٌ مِنْ أَلْفِ يَوْمٍ فِيمَا سِوَاهُ مِنَ الْمَنَازِلِ.

٤٤١ حَدَّثَنَا هَاشِمٌ حَدَّثَنَا أَبُو جَعْفَرٍ الرَّازِيُّ عَنْ عَبْدِ الْعَزِيزِ بْنِ عُمَرَ رَضِيَ اللهُ عَنْهُ عَنْ صَالِحِ بْنِ كَيْسَانَ عَنْ رَجُلٍ عَنْ عُثْمَانَ بْنِ عَفَّانَ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ قَالَ رَسُولُ اللهِ ﷺ: مَا مِنْ مُسْلِمٍ يَخْرُجُ مِنْ بَيْتِهِ يُرِيدُ سَفَرًا أَوْ غَيْرَهُ فَقَالَ حِينَ يَخْرُجُ: بِسْمِ اللهِ آمَنْتُ بِاللهِ اعْتَصَمْتُ بِاللهِ تَوَكَّلْتُ عَلَى اللهِ لَا حَوْلَ وَلَا قُوَّةَ إِلَّا بِاللهِ إِلَّا رُزِقَ خَيْرَ ذَلِكَ الْمَخْرَجِ وَصُرِفَ عَنْهُ شَرُّ ذَلِكَ الْمَخْرَجِ.

அவர்கள் கூறியதாவது:

உஸ்மான் (ரலி) அவர்கள் (ஒரு முறை) மிம்பரின் மீது இருந்து (சொற்பொழிவாற்றியபோது பின்வருமாறு) கூறினார்கள்:

மக்களே! நான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடமிருந்து செவியுற்ற நபிமொழி ஒன்றை (இதுவரை) உங்களிடம் (கூறாமல்) மறைத்து வைத்திருந்தேன். நீங்கள் என்னைவிட்டுப் பிரிந்து சென்றுவிடக் கூடாது என்பதே அதற்குக் காரணம். பின்னர், ஒவ்வொருவரும் தமக்கு எது தோன்றுகிறதோ அதைத் தேர்வு செய்துகொள்ளட்டும் என்பதற்காக, அந்த நபிமொழியை உங்களுக்கு அறிவித்துவிட வேண்டும் என்று எனக்குத் தோன்றிற்று. (அதை இப்போது அறிவிக்கிறேன்:) அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "உயர்ந்தோன் அல்லாஹ்வின் பாதையில் ஒரு நாள் (நாட்டின்) எல்லையைக் காவல் காப்பது, அஃதல்லா பிற இடங்களில் ஆயிரம் நாட்களைக் கழிப்பதைவிடச் சிறந்ததாகும்" என்று கூறியதை நான் செவியுற்றுள்ளேன்[77]

441 *அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:*

பயணம் அல்லது வேறு ஏதேனும் ஒரு நோக்கத்தில் தமது வீட்டிலிருந்து வெளியே புறப்படும் முஸ்லிம் ஒருவர், "பிஸ்மில்லாஹ், ஆமன்த்து பில்லாஹ், இஉத்தஸம்த்து பில்லாஹ், தவக்கல்த்து அலல்லாஹ், லா ஹவ்ல வலா குவ்வத்த இல்லா பில்லாஹ்" என்று கூறுவாராயின், அந்தப் புறப்பாட்டின் நன்மை அவருக்கு வழங்கப்படாமல் போகாது அந்தப் புறப்பாட்டின் தீமை அவரை விட்டுத் தடுக்கப்படாமலும் போகாது.

(பொருள்: அல்லாஹ்வின் பெயரால் (புறப்படுகிறேன்). அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொண்டேன். அல்லாஹ்வைப் பற்றிப் பிடித்துக்கொண்டேன். அல்லாஹ்வையே முழுமையாகச் சார்ந்துள்ளேன். தீமையிலிருந்து விடுபடுவதும் நன்மை புரியும் ஆற்றல் பெறுவதும் அல்லாஹ்வின் (உதவியின்) மூலமே அன்றி இல்லை.)

இவ்வாறு உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்கள் அறிவித்ததாக ஒருவர் கூறினார்[78]

---

77. இந்த ஹதீஸின் அறிவிப்பாளரான உஸ்மான் (ரலி) அவர்களின் முன்னாள் அடிமை அபூஸாலிஹ் [illegible] அறியப்படாதவர் ஆவார். எனவே இதன் அறிவிப்பாளர்தொடர் பலவீனமானதாகும். காண்க: முன்சென்ற ஹதீஸ் எண் - 415 மற்றும் அதன் அடிக்குறிப்பு

78. இந்த ஹதீஸ் முஸ்னது அஹ்மதில் மட்டுமே இடம்பெற்றுள்ளது. இந்த ஹதீஸின் அறிவிப்பாளர்தொடரில் இதை உஸ்மான் (ரலி) அவர்களிடமிருந்து அறிவிப்பவர் பெயர் மற்றும் இதர விவரங்கள் ஏதும் கிடைக்கவில்லை. ஒருவர் கூறினார் என மட்டுமே இடம்பெறுகிறது. எனவே இது பலவீனமான ஹதீஸாகும்.

442 உஸ்மான் (ரலி) அவர்கள் கூறியதாவது:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அங்கத் தூய்மை (உளூ) செய்ததை நான் பார்த்துள்ளேன். அவர்கள் தமது முகத்தை மூன்று முறையும், தம்மிரு கைகளை மூன்று முறையும் கழுவினார்கள். தமது தலையை (ஈரக் கையால் தடவி) 'மஸ்ஹு'ச் செய்தார்கள். தம்மிரு கால்களையும் ஒருமுறை கழுவினார்கள்.[79]

٤٤٢ حدثنا عبدالله حدثني محمد بن أبي بكر المقدمي حدثنا حماد بن زيد عن الحجاج عن عطاء عن عثمان رضي الله عنه قال: رأيت رسول الله ﷺ توضأ فغسل وجهه ثلاثا ويديه ثلاثا ومسح برأسه وغسل رجليه غسلا.

443 அபூஸக்ரா ஜாமிஉ பின் ஷத்தாத் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

ஹும்ரான் பின் அபான் (ரஹ்) அவர்கள் (பிஷ்ர் பின் மர்வான் பின் அல்ஹகமுடைய ஆட்சியின்போது) 'பஸ்ரா' பள்ளிவாசலில் அபூபுர்தா (ரஹ்) அவர்களிடம் (பின்வருமாறு) அறிவித்ததை நான் செவியுற்றேன். அப்போது நானும் அவருடன் நின்று கொண்டிருந்தேன்:

உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்கள் கூறினார்கள்: "உயர்ந்தோன் அல்லாஹ் கட்டளையிட்டபடி, யார் முழுமையாக அங்கத் தூய்மை (உளூ) செய்கிறாரோ, அவர் தொழும் ஐவேளைத் தொழுகைகள் (ஒவ்வொன்றும்) அவற்றுக்கிடையே ஏற்படும் (சிறு) பாவங்களுக்குப் பரிகாரமாகும்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறியதை நான் செவியுற்றேன்.[80]

٤٤٣ حدثنا هاشم حدثنا شعبة قال أخبرني أبو صخرة جامع بن شداد قال سمعت حمران بن أبان يحدث أبا بردة في مسجد البصرة وأنا قائم معه، أنه سمع عثمان بن عفان رضي الله عنه يحدث عن النبي ﷺ أنه قال: من أتم الوضوء كما أمره الله عز وجل فالصلوات الخمس كفارة لما بينهن.

٤٤٤ حدثنا سريج حدثنا ابن أبي الزناد عن أبيه عن أبان بن عثمان قال سمعت عثمان بن عفان رضي الله عنه وهو يقول قال رسول الله ﷺ: من قال في أول يومه أو في أول ليلته: بسم الله الذي لا يضر مع اسمه شيء في الأرض ولا في السماء وهو السميع العليم ثلاث مرات، لم يضره شيء في ذلك اليوم أو

444 அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

யாரேனும் பகலின் தொடக்கத்திலோ இரவின் தொடக்கத்திலோ, "பிஸ்மில்லாஹில்லதீ லா யளுர்ரு மஅஸ்மிஹீ ஷைஉன் ஃபில்அர்ளி வலா ஃபிஸ்ஸமாஇ வஹுவஸ் ஸமீஉல் அலீம்" என்று மூன்று முறை கூறினால், அன்றைய பகல் முழுவதும் அல்லது அன்றைய இரவு முழுவதும் அவருக்கு எதுவும் தீங்களிக்காது.

(பொருள்: அல்லாஹ்வின் பெயரால்; அவனது பெயருடன் பூமியிலும் வானத்திலும் எந்தப் பொருளும் இடையூறு அளிக்க (முடியாது. அவன் செவியுறுவோனும் நன்கறிந்தோனும் ஆவான்.)

---

79. இந்த ஹதீஸின் அறிவிப்பாளர்தொடரில் அதாஉ பின் அபீரபாஹ் இடம்பெறுகிறார். இவர் உஸ்மான் (ரலி) அவர்களிடமிருந்து அறிவிக்கும் செய்திகள் தொடர் இடைமுறிந்தவையாக இருப்பதால் இது பலவீனமான ஹதீஸ் ஆகும். மேலும் இதில் ஹஜ்ஜாஜ் பின் அர்தாத் என்ற அறிவிப்பாளர் இடம்பெறுகிறார். இவரை ஹதீஸ்கலை வல்லுநர்கள் விமர்சித்துள்ளனர். இதே கருத்தமைந்த ஹதீஸ், முஸ்லிம் ஹதீஸ் எண் - 384இல் இடம்பெற்றுள்ளது. அதில் இரு கால்களையும் மும்முறை கழுவியதாக வந்துள்ளது.

80. காண்க: முன்சென்ற ஹதீஸ் எண் - 383 மற்றும் அதன் அடிக்குறிப்பு

في تلك البلدة.

இதை உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.[81]

٤٤٥ حدثنا عفان حدثنا حماد بن سلمة أنبأنا أبو سنان عن يزيد بن موهب أن عثمان رضي الله عنه قال لابن عمر رضي الله عنه: اقض بين الناس فقال: لا أقضي بين اثنين ولا أؤم رجلين أما سمعت النبي ﷺ يقول: من عاذ بالله فقد عاذ بمعاذ، قال عثمان رضي الله عنه: بلى قال: فإني أعوذ بالله أن تستعملني فأعفاه وقال: لا تخبر بهذا أحدا.

٤٤٦ حدثنا عفان حدثنا عبد الواحد بن زياد عن عثمان بن حكيم حدثنا محمد بن المنكدر عن حمران عن عثمان بن عفان رضي الله عنه قال قال رسول الله ﷺ: من توضأ فأحسن الوضوء خرجت خطاياه من جسده حتى تخرج من تحت أظفاره.

445 யஸீத் பின் மவ்ஹப் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

(கலீஃபா) உஸ்மான் (ரலி) அவர்கள் இப்னு உமர் (ரலி) அவர்களிடம், "மக்களிடையே தீர்ப்பு வழங்கும் (நீதிபதிப்) பொறுப்பை நீர் ஏற்றுக்கொள்வீராக" என்று கூறினார்கள். அதற்கு இப்னு உமர் (ரலி) அவர்கள், "இருவருக்கிடையே தீர்ப்பளிக்கும் (நீதிபதிப்) பொறுப்பையும் நான் ஏற்கமாட்டேன்; இரண்டு பேருக்குக் கூட நான் தலைமை ஏற்கவுமாட்டேன்" என்று கூறினார்கள். பின்னர், (உஸ்மான் (ரலி) அவர்களை நோக்கி), "நபி (ஸல்) அவர்கள், 'ஒருவர் அல்லாஹ்விடம் பாதுகாப்புக் கோரினால், அவர் (தகுந்த) பாதுகாப்பைப் பெற்றுக்கொண்டவர் ஆவார்' என்று கூறியதைத் தாங்கள் கேள்விப்பட்டுள்ளீர்கள்தானே?" என்று கேட்டார்கள். அதற்கு உஸ்மான் (ரலி) அவர்கள், "ஆம்" என்றார்கள். உடனே இப்னு உமர் (ரலி) அவர்கள், "அவ்வாறாயின், என்னை நீங்கள் அரசுப் பணியில் அமர்த்துவதிலிருந்து நான் அல்லாஹ்விடம் பாதுகாப்புக் கோருகிறேன்" என்றார்கள். அதையடுத்து உஸ்மான் (ரலி) அவர்கள் இப்னு உமர் (ரலி) அவர்களை (அவரது போக்கில்) விட்டுவிட்டார்கள். "இதை வேறு யாரிடமும் தெரிவிக்க வேண்டாம்" என்று (அவரிடம்) உஸ்மான் (ரலி) அவர்கள் கூறினார்கள்.[82]

446 அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

ஒருவர் அங்கத் தூய்மை (உளூ) செய்யும்போது, அதை அழகிய முறையில் செய்தால், அவருடைய (சிறு) பாவங்கள் அவரது உடலிலிருந்து வெளியேறிவிடுகின்றன. முடிவில், அவருடைய நகக் கண்களுக்குக் கீழேயிருந்தும் (அவருடைய பாவங்கள்) வெளியேறி விடுகின்றன.

இதை உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.[83]

---

81. காண்க: முன்சென்ற ஹதீஸ் எண் - 418 மற்றும் அதன் அடிக்குறிப்பு

82. இந்த ஹதீஸின் அறிவிப்பாளர்தொடரில் விமர்சனம் உள்ளது. இதன் அறிவிப்பாளர்தொடரில் அபூசினான் எனும் ஈசா பின் சினான் என்பவர் இடம்பெற்றுள்ளார். இவர் பலவீனமானவர் என இமாம் அஹ்மது பின் ஹன்பல், யஹ்யா பின் மயீன், அபூஸுர்ஆ அர்ராஸீ, நஸாயீ (ரஹ்) ஆகியோர் கூறியுள்ளார்கள். எனவே இது பலவீனமான ஹதீஸாகும். இதன் அறிவிப்பாளர்தொடரில் இடைமுறிவு ஏற்பட்டுள்ளதாக இமாம் திர்மிதீ குறிப்பிடுகிறார்கள். இச்செய்தி இதே அறிவிப்பாளர்தொடரில் முஸ்னது அப்து பின் ஹுமைத் (445) எனும் நூலிலும் பதிவாகியுள்ளது.

83. காண்க: முன்சென்ற ஹதீஸ் எண் - 391 மற்றும் அதன் அடிக்குறிப்பு

447 (உஸ்மான் (ரலி) அவர்களின் முன்னாள் அடிமை) அபூஸாலிஹ் அவர்கள் கூறியதாவது:

(ஒரு முறை) உஸ்மான் (ரலி) அவர்கள், "மக்களே! விரைந்து வாருங்கள்! நானும் விரைவாகவே வந்துள்ளேன்" என்றார்கள் மக்கள் விரைவாக வந்தனர். பின்னர் உஸ்மான் (ரலி) அவர்கள், "மக்களே! அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடமிருந்து நான் செவியுற்ற நாள் முதல் இன்றுவரை, உங்களிடம் நான் கூறாத செய்தியொன்றை (இப்போது) கூறப்போகிறேன்: "அல்லாஹ்வின் பாதையில் ஒரு நாள் (நாட்டின்) எல்லையைக் காவல் காப்பது, அஃதல்லாத பிற இடங்களில் ஆயிரம் நாட்களைக் கழிப்பதைவிடச் சிறந்ததாகும் எனவே, ஒருவர் தான் விரும்பிய அளவு எல்லைப் பாதுகாப்புப் பணியில் ஈடுபடட்டும்" என அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறியதாகக் குறிப்பிட்டார்கள். பின்னர் (மக்களைப் பார்த்து), "நான் (உங்களுக்குச் சொல்ல வேண்டியதை) எடுத்துரைத்துவிட்டேன் அல்லவா?" என்று கேட்டார்கள் அதற்கு மக்கள், "ஆம்" என்றனர் அப்போது, "இறைவா! இதற்கு நீயே சாட்சி" என்று உஸ்மான் (ரலி) அவர்கள் கூறினார்கள்[84]

٤٤٧ حدثنا عبد الله حدثناه سويد بن سعيد سنة ست وعشرين حدثنا رشدين بن سعد عن زهرة بن معبد عن أبي صالح مولى عثمان رضي الله عنه أن عثمان قال: أيها الناس هجّروا فإني مهجّر فهجّر الناس ثم قال: أيها الناس إني محدثكم بحديث ما تكلمت به منذ سمعت رسول الله ﷺ إلى يومي هذا قال رسول الله ﷺ: إن رباط يوم في سبيل الله أفضل من ألف يوم مما سواه فليرابط امرؤ حيث شاء، هل بلغتكم؟ قالوا: نعم، قال: اللهم اشهد.

448 ஹும்ரான் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

(ஒரு முறை) உஸ்மான் (ரலி) அவர்கள் (மதீனாவிலுள்ள) 'மகாஇத்' எனுமிடத்தில் அமர்ந்திருந்தார்கள். அப்போது அவர்கள் அங்கத் தூய்மை (உளூ) செய்வதற்குத் தண்ணீரைக் கொண்டு வரச் சொல்லி, (அதன் மூலம்) அங்கத் தூய்மை செய்தார்கள். பின்னர், "நான் அமர்ந்துள்ள இதே இடத்தில் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் (அமர்ந்து) அங்கத் தூய்மை செய்ததை நான் கண்டுள்ளேன்" என்று கூறிவிட்டுத் தொடர்ந்து சொன்னார்கள்:

(இவ்வாறு அங்கத் தூய்மை செய்த) அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "ஒருவர் நான் செய்த இந்த அங்கத் தூய்மையைப் போன்று செய்துவிட்டுப் பின்னர் எழுந்து நின்று, இரண்டு 'ரக்அத்'கள் தொழுதால், அவருக்கு அவருடைய முந்தைய (சிறு) பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன. ஆனால், (இதைக்கொண்டு) ஏமாறிப்போய் (பாவங்களில் மூழ்கி) விடாதீர்கள்" என்று கூறினார்கள்.[85]

٤٤٨ حدثنا أبو المغيرة حدثنا الأوزاعي حدثنا يحيى بن أبي كثير عن محمد بن إبراهيم التيمي حدثني شقيق بن سلمة عن حمران قال: كان عثمان رضي الله عنه قاعدا في المقاعد فدعا بوضوء، فتوضأ ثم قال: رأيت رسول الله ﷺ توضأ في مقعدي هذا، ثم قال: من توضأ مثل وضوئي هذا ثم قام فركع ركعتين غفر له ما تقدم من ذنبه، وقال رسول الله ﷺ: لا تغتروا.

84. இந்த ஹதீஸின் அறிவிப்பாளர்தொடரில் நான்காவது அறிவிப்பாளராக ரிஷ்தீன் பின் சஅத் என்பார் இடம்பெறுகிறார். இவர் பலவீனமான அறிவிப்பாளர் ஆவார். இக்கருத்தமைந்த ஹதீஸ் முன்னர் இரு இடங்களில் (415, 440) பலவீனமான அறிவிப்பாளர்தொடரிலேயே பதிவாகியுள்ளது

85. காண்க: முன்சென்ற ஹதீஸ் எண் - 429.

449 அபூஅவ்ன் அல்அன்சாரீ (ரஹ்) கூறியதாவது:

(ஒரு முறை) உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்கள் இப்னு மஸ்ஊத் (ரலி) அவர்களிடம், "உம்மைப் பற்றி (நீர் கூறியதாக) எனக்கு ஒரு தகவல் வந்துள்ளது அ(தைக் கூறுவ)திலிருந்து நீர் விலகிக்கொள்ள மாட்டீரா?" என்று கேட்டார்கள். அப்போது இப்னு மஸ்ஊத் (ரலி) அவர்கள் ஏதோ காரணம் கூறிச் சமாளித்தார்கள். உஸ்மான் (ரலி) அவர்கள், "உமக்குக் கேடுதான்! (நீர் கூறி வரும் அதே செய்தியை) நான் செவியுற்றுள்ளேன்; மனனமும் செய்துள்ளேன். ஆனால், அந்தச் செய்தி நீர் கூறுவதைப் போன்று இல்லை. அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "விரைவில் தலைவர் ஒருவர் படுகொலை செய்யப்படுவார்; தீமையை நோக்கி விரைந்து செல்வோர் விரைவர்" என்று கூறினார்கள். (இதன்படி பலரால்) படுகொலை செய்யப்படப்போகிறவன் நான்தான்; (நீர் கூறுவதைப் போன்று) உமர் (ரலி) அவர்கள் அல்லர்; உமர் (ரலி) அவர்களைக் கொன்றவன் ஒரு தனி மனிதனே; எனக்கு எதிராகத்தான் ஒரு கூட்டமே ஒன்றுதிரளும்" என்றார்கள்.[56]

٤٤٩ حدثنا أبو المغيرة حدثنا أرطاة يعني ابن المنذر أخبرني أبو عون الأنصاري أن عثمان بن عفان رضي الله عنه قال لابن مسعود: هل أنت منته عما بلغني عنك فاعتذر بعض العذر؟ فقال عثمان رضي الله عنه: ويحك إني قد سمعت وحفظت وليس كما سمعت أن رسول الله ﷺ قال: سيقتل أمير وينتزي منتز وإني أنا المقتول وليس عمر رضي الله عنه إنما قتل عمر واحد وإنه يجتمع علي.

450 உபைதுல்லாஹ் பின் அதீ பின் அல்கியார்[57] (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

(நான் என் உறவினரான கலீஃபா உஸ்மான் (ரலி) அவர்களிடம், கூஃபாவில் ஆளுநராக இருந்த அவருடைய தாய்வழிச் சகோதரர் வலீத் பின் உக்பா அவர்கள் விஷயத்தில் மக்கள் பேசிக்கொண்ட சில புகார்கள் குறித்துப் பேசப்போனேன். அப்போது) உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்கள் என்னிடம், "என் சகோதரர் மகனே! நீர் அல்லாஹ்வின் தூதரைச் சந்தித்துள்ளீரா?" என்று கேட்டார்கள். நான் அவர்களிடம், "இல்லை; இருப்பினும், திரைக்குள் இருக்கும் கன்னிப் பெண்ணுக்குக்கூட அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறிய கல்வி ஞானமும் உறுதியான தகவல்களும் சென்றடையும்போது, எனக்கும் அதைப் போன்ற கல்வி ஞானம் வந்துதான் இருக்கிறது" என்றேன்.

உடனே உஸ்மான் (ரலி) அவர்கள் ஓரிறை உறுதிமொழியைக் கூறிவிட்டுத் தொடர்ந்து, "இறை வாழ்த்துக்குப்பின்! வல்லமையும் மாண்பும் மிக்க அல்லாஹ், முஹம்மத் (ஸல்) அவர்களைச் சத்திய (மார்க்க)த்துடன் அனுப்பிவைத்தான். (அப்போது)

٤٥٠ حدثنا بشر بن شعيب حدثني أبي عن الزهري حدثني عروة بن الزبير أن عبيد الله بن عدي بن الخيار أخبره أن عثمان بن عفان رضي الله عنه قال له ابن أخي: أدركت رسول الله ﷺ؟ قال فقلت له: لا ولكن خلص إلي من علمه واليقين ما يخلص إلى العذراء في سترها قال فتشهد ثم قال: أما بعد فإن الله عز وجل بعث محمدا ﷺ بالحق فكنت ممن استجاب لله

56. இந்த ஹதீஸ் முஸ்னது அஹ்மதில் மட்டுமே இடம்பெற்றுள்ளது. இது அறிவிப்பாளர்தொடர் இடைமுறிந்த பலவீனமான செய்தியாகும். உஸ்மான் (ரலி) அவர்கள் பற்றி அறிவிக்கும் அபூஅவ்ன் அவர்கள் [illegible] ஆவார். இருவருக்குமிடையே [illegible] இடைவெளி உள்ளதால் இது தொடர் இடைமுறிந்த பலவீனமான செய்தியாகும்.

57. இவர் உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்களின் சகோதரி மகனார். ஃபத்ஹுல் பாரீ

அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் பதில் அளித்தவர்களுள் நானும் ஒருவனாக இருந்தேன். முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு இறக்கியருளப்பெற்ற (வேதத்)தை நம்பிக்கை கொண்டேன். பின்னர், நீர் (சற்று முன்னர்) குறிப்பிட்டதைப் போன்று, இரண்டு முறை (மக்காவிலிருந்து) புலம் பெயர்ந்து (ஹிஜ்ரத்) சென்றுள்ளேன். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுடைய குடும்பத்தில் திருமண உறவும் கொண்டுள்ளேன். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் நான் உறுதிமொழிப் பிரமாணமும் அளித்துள்ளேன். அல்லாஹ்வின் மீதாணையாக! வல்லமையும் மாண்பும் மிக்க அல்லாஹ் நபி (ஸல்) அவர்களை இறக்கச் செய்யும்வரை, அவர்களுக்கு நான் மாறு செய்யவில்லை. அவர்களுக்கு மோசம் செய்யவும் இல்லை. (எனவே, வலீத் பின் உக்பா விஷயத்தில் நான் தெரிந்துகொண்டே எந்தத் தவற்றையும் செய்யவில்லை)" என்று குறிப்பிட்டார்கள்.[88]

وَلِرَسُولِهِ وَآمَنَ بِمَا بُعِثَ بِهِ مُحَمَّدٌ ﷺ ثُمَّ هَاجَرْتُ الْهِجْرَتَيْنِ كَمَا قُلْتَ وَنِلْتُ صِهْرَ رَسُولِ اللَّهِ ﷺ وَبَايَعْتُ رَسُولَ اللَّهِ ﷺ فَوَاللَّهِ مَا عَصَيْتُهُ وَلَا غَشَشْتُهُ حَتَّى تَوَفَّاهُ اللَّهُ عَزَّ وَجَلَّ.

٤٥١ حَدَّثَنَا عَلِيُّ بْنُ عَيَّاشٍ حَدَّثَنَا الْوَلِيدُ بْنُ مُسْلِمٍ قَالَ وَأَخْبَرَنِي الْأَوْزَاعِيُّ عَنْ مُحَمَّدِ بْنِ عَبْدِ الْمَلِكِ بْنِ مَرْوَانَ أَنَّهُ حَدَّثَهُ عَنِ الْمُغِيرَةِ بْنِ شُعْبَةَ أَنَّهُ دَخَلَ عَلَى عُثْمَانَ رَضِيَ اللَّهُ عَنْهُ وَهُوَ مَحْصُورٌ فَقَالَ: إِنَّكَ إِمَامُ الْعَامَّةِ وَقَدْ نَزَلَ بِكَ مَا تَرَى وَإِنِّي أَعْرِضُ عَلَيْكَ خِصَالًا ثَلَاثًا اخْتَرْ إِحْدَاهُنَّ إِمَّا أَنْ تَخْرُجَ فَتُقَاتِلَهُمْ فَإِنَّ مَعَكَ عَدَدًا وَقُوَّةً وَأَنْتَ عَلَى الْحَقِّ وَهُمْ عَلَى الْبَاطِلِ وَإِمَّا أَنْ نَخْرِقَ لَكَ بَابًا سِوَى الْبَابِ الَّذِي هُمْ عَلَيْهِ فَتَقْعُدَ عَلَى رَوَاحِلِكَ

451 முஃகீரா பின் ஷுஅபா (ரலி) அவர்கள் கூறியதாவது:

உஸ்மான் (ரலி) அவர்கள் முற்றுகையிடப்பட்டிருந்தபோது, அவர்களிடம் நான் சென்று, "(கலீஃபா அவர்களே!) நீங்கள் மக்கள் அனைவருக்கும் தலைவராக உள்ளீர்கள். இந்நிலையில் உங்களுக்கு நீங்கள் காணும் இந்தச் சோதனை ஏற்பட்டுள்ளது. உங்களுக்கு முன்னால் நான் மூன்று தீர்வுகளை வைக்கிறேன். அவற்றுள் ஒன்றை நீங்கள் தேர்வு செய்து கொள்ளுங்கள். ஒன்று, நீங்கள் இங்கிருந்து வெளியேறிச் சென்று, முற்றுகையாளர்களோடு சண்டையிடுங்கள். ஏனெனில், உங்களிடம் ஆட்பலமும் அதிகாரமும் உள்ளது. அது மட்டுமன்றி, நீங்கள் சத்தியத்தில் உள்ளீர்கள். (உங்களை எதிர்க்கும்) அவர்களோ, அசத்தியத்தில் உள்ளனர். அல்லது முற்றுகையாளர்கள் இருக்கும் வாசலை விட்டுவிட்டு, வேறொரு வாசலை உங்களுக்கு நாங்கள் உருவாக்கித் தருகிறோம். நீங்கள் உங்கள் வாகனப்

88. [illegible] 3872, 3927 [illegible]

تَلْحَقَ بِمَكَّةَ فَإِنَّهُمْ لَنْ يَسْتَحِلُّوكَ وَأَنْتَ بِهَا وَإِمَّا أَنْ تَلْحَقَ بِالشَّامِ فَإِنَّهُمْ أَهْلُ الشَّامِ وَفِيهِمْ مُعَاوِيَةُ، فَقَالَ عُثْمَانُ رَضِيَ اللَّهُ عَنْهُ: أَمَّا أَنْ أَخْرُجَ فَأُقَاتِلَ فَلَنْ أَكُونَ أَوَّلَ مَنْ خَلَفَ رَسُولَ اللَّهِ ﷺ فِي أُمَّتِهِ بِسَفْكِ الدِّمَاءِ وَأَمَّا أَنْ أَخْرُجَ إِلَى مَكَّةَ فَإِنَّهُمْ لَنْ يَسْتَحِلُّونِي بِهَا فَإِنِّي سَمِعْتُ رَسُولَ اللَّهِ ﷺ يَقُولُ: يُلْحِدُ رَجُلٌ مِنْ قُرَيْشٍ بِمَكَّةَ يَكُونُ عَلَيْهِ نِصْفُ عَذَابِ الْعَالَمِ فَلَنْ أَكُونَ أَنَا إِيَّاهُ وَأَمَّا أَنْ أَلْحَقَ بِالشَّامِ فَإِنَّهُمْ أَهْلُ الشَّامِ وَفِيهِمْ مُعَاوِيَةُ فَلَنْ أُفَارِقَ دَارَ هِجْرَتِي وَمُجَاوَرَةَ رَسُولِ اللَّهِ ﷺ.

حَدَّثَنَاه عَلِيُّ بْنُ إِسْحَاقَ عَنِ ابْنِ الْمُبَارَكِ فَذَكَرَ الْحَدِيثَ وَقَالَ يُلْحِدُ.

٤٥٢ حَدَّثَنَا حَجَّاجٌ وَيُونُسُ قَالَا حَدَّثَنَا لَيْثٌ قَالَ حَجَّاجٌ حَدَّثَنِي يَزِيدُ بْنُ أَبِي حَبِيبٍ عَنْ عَبْدِ اللَّهِ بْنِ أَبِي سَلَمَةَ وَنَافِعِ بْنِ جُبَيْرِ بْنِ مُطْعِمٍ عَنْ مُعَاذِ بْنِ عَبْدِ الرَّحْمَنِ التَّيْمِيِّ عَنْ حُمْرَانَ مَوْلَى عُثْمَانَ رَضِيَ اللَّهُ عَنْهُ عَنْ عُثْمَانَ أَنَّهُ قَالَ سَمِعْتُ رَسُولَ اللَّهِ ﷺ يَقُولُ: مَنْ تَوَضَّأَ فَأَسْبَغَ الْوُضُوءَ ثُمَّ مَشَى إِلَى صَلَاةٍ مَكْتُوبَةٍ فَصَلَّاهَا غُفِرَ

பிராணிகளில் அமர்ந்து (அந்த வழியாக வெளியேறி) மக்காவுக்குச் சென்றுவிடுங்கள். நீங்கள் மக்காவில் இருக்கும்போது, முற்றுகையாளர்கள் மக்காவின் புனிதத்தை ஒருபோதும் சீர்குலைக்கமாட்டார்கள். அல்லது நீங்கள் சிரியாவுக்குச் சென்று விடுங்கள். ஏனெனில், அ(ங்கிருப்ப)வர்கள் சிரியாவாசிகள் ஆவர். அவர்களிடையே (உங்களுக்கு நெருக்கமான) முஆவியா (ரலி) அவர்கள் உள்ளார்கள்" என்று கூறினேன்.

உடனே உஸ்மான் (ரலி) அவர்கள், "நான் (இங்கிருந்து) வெளியே சென்று சண்டையிட வேண்டும் என்றீரே, அது முடியாது. ஏனெனில், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுக்குப் பின்னால், அவர்களின் சமுதாயத்தாரிடையே இரத்தத்தைச் சிந்தச் செய்த முதல் ஆளாக நான் இருந்து விடக் கூடாது. அடுத்து, நான் மக்காவுக்குப் போய்விட்டால், நான் அங்கிருக்கும்வரை (அங்கு வந்து) அதன் புனிதத்தை முற்றுகையாளர்கள் சீர்குலைக்கமாட்டார்கள் என்றீரே, நான் மக்காவுக்கும் போகமாட்டேன். ஏனெனில், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், 'குறைஷியருள் ஒருவர் மக்காவில் குற்றமிழைப்பார்; அகிலத்தாரின் வேதனையில் பாதியளவு அவர்மீதே விழும்' என்று கூறியதை நான் செவியுற்றுள்ளேன். எனவே, அந்த ஆளாக நான் இருந்துவிடக் கூடாது. அடுத்து, நான் சிரியாவுக்குப் போய்விட்டால், அங்குச் சிரியாவாசிகளும் அவர்களுடன் முஆவியா (ரலி) அவர்களும் இருக்கிறார்கள் என்றீரே, நான் சிரியாவுக்குப் போகும் உத்தேசம் இல்லை. ஏனெனில், நான் புலம் பெயர்ந்து (ஹிஜ்ரத்) வந்துள்ள இந்த ஊரிலிருந்தும் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் அருகிலிருந்தும் நான் பிரிந்து செல்லமாட்டேன்" என்று கூறினார்கள்.[90]

452 உஸ்மான் (ரலி) அவர்கள் கூறியதாவது:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "ஒருவர் நிறைவாக அங்கத் தூய்மை (உளூ) செய்து, பின்னர் கடமையான தொழுகைக்காக நடந்து சென்று, (மக்களுடன் சேர்ந்து) அதைத் தொழுதால், அவர் செய்த (சிறு) பாவங்கள் அவருக்காக மன்னிக்கப்படு

90. இந்த ஹதீஸின் [illegible] 50இல் [illegible] 82 [illegible] 130இல் [illegible] (247) [illegible]

لَهُ ذَنْبُهُ.

٤٥٣ حدثنا عَفَّانُ حَدَّثَنَا أَبُو عَوَانَةَ عَنْ عَاصِمٍ عَنِ الْمُسَيَّبِ عَنْ مُوسَى بْنِ طَلْحَةَ عَنْ حُمْرَانَ قَالَ: كَانَ عُثْمَانُ رَضِيَ اللَّهُ عَنْهُ يَغْتَسِلُ كُلَّ يَوْمٍ مَرَّةً مِنْ مُنْذُ أَسْلَمَ فَوَضَعْتُ وَضُوءًا لَهُ ذَاتَ يَوْمٍ لِلصَّلَاةِ فَلَمَّا تَوَضَّأَ قَالَ إِنِّي أَرَدْتُ أَنْ أُحَدِّثَكُمْ بِحَدِيثٍ سَمِعْتُهُ مِنْ رَسُولِ اللَّهِ ﷺ ثُمَّ قَالَ: بَدَا لِي أَنْ لَا أُحَدِّثَكُمُوهُ فَقَالَ الْحَكَمُ بْنُ أَبِي الْعَاصِ: يَا أَمِيرَ الْمُؤْمِنِينَ إِنْ كَانَ خَيْرًا فَنَأْخُذُ بِهِ أَوْ شَرًّا فَنَتَّقِيهِ قَالَ فَقَالَ: فَإِنِّي مُحَدِّثُكُمْ بِهِ تَوَضَّأَ رَسُولُ اللَّهِ ﷺ هَذَا الْوُضُوءَ، ثُمَّ قَالَ: مَنْ تَوَضَّأَ هَذَا الْوُضُوءَ فَأَحْسَنَ الْوُضُوءَ ثُمَّ قَامَ إِلَى الصَّلَاةِ فَأَتَمَّ رُكُوعَهَا وَسُجُودَهَا كَفَّرَتْ عَنْهُ مَا بَيْنَهَا وَبَيْنَ الصَّلَاةِ الْأُخْرَى مَا لَمْ يُصِبْ مَقْتَلَةً يَعْنِي كَبِيرَةً.

٤٥٤ حدثنا عَفَّانُ حَدَّثَنَا حَمَّادُ بْنُ سَلَمَةَ عَنْ يُونُسَ عَنْ عَطَاءِ بْنِ فَرُّوخَ عَنْ عُثْمَانَ بْنِ عَفَّانَ رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ سَمِعْتُ رَسُولَ اللَّهِ ﷺ يَقُولُ: أَدْخَلَ اللَّهُ الْجَنَّةَ رَجُلًا كَانَ سَهْلًا قَاضِيًا وَمُقْتَضِيًا وَبَائِعًا وَمُشْتَرِيًا.

கின்றன" என்று கூறியதை நான் செவியேற்றுள்ளேன்.[90]

453 (உஸ்மான் (ரலி) அவர்களின் முன்னாள் அடிமை) ஹும்ரான் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

உஸ்மான் (ரலி) அவர்கள் இஸ்லாத்தைத் தழுவியதிலிருந்து நாள்தோறும் ஒரு முறை குளித்துவிடுவது வழக்கம். ஒரு நாள் தொழுகைக்கு அங்கத் தூய்மை செய்வதற்காக அவர்களுக்கு நான் தண்ணீர் எடுத்து வைத்தேன். அவர்கள் அங்கத் தூய்மை செய்தபோது, "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடமிருந்து நான் செவியுற்ற நபிமொழி ஒன்றை உம்மிடம் கூறலாம் என்று நினைத்தேன்" என்று சொன்னார்கள். பின்னர் (சிறிது நேரம் கழித்து), "அதை உமக்கு நான் அறிவிக்கத் தேவையில்லை என்றே எனக்குத் தோன்றுகிறது" என்றார்கள்

அப்போது (அருகில் இருந்த) ஹகம் பின் அபில்ஆஸ் (ரஹ்) அவர்கள், "இறைநம்பிக்கையாளர்களின் தலைவரே! (நீங்கள் அதைச் சொல்லுங்கள்.) அது நல்லதாக இருந்தால், நாங்கள் கடைப்பிடிக்கிறோம்; தீயதாக இருக்குமாயின், அதைவிட்டு விலகி விடுகிறோம்" என்று கூறினார். "அப்படியாயின், அதை உங்களிடம் நான் கூறுகிறேன்" என்று குறிப்பிட்ட உஸ்மான் (ரலி) அவர்கள் பின்வருமாறு சொன்னார்கள்:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் இதைப் போன்றே (ஒரு முறை) அங்கத் தூய்மை செய்தார்கள். பின்னர், "(நான் செய்த) இந்த அங்கத் தூய்மையைப் போன்று ஒருவர் அழகிய முறையில் அங்கத் தூய்மை செய்துவிட்டுப் பின்னர் தொழுகைக்காக எழுந்து நின்று, தொழுகையின் குனிதல் (ருகூஉ) மற்றும் சிரவணக்கம் (சஜ்தா) ஆகியவற்றை முழுமையாகச் செய்தால், அந்தத் தொழுகைக்கும் அதற்கடுத்த தொழுகைக்கும் இடையே உள்ள (சிறு) பாவங்கள் அவருக்கு மன்னிக்கப்படும். ஆனால், அவர் (இடைப்பட்ட நேரத்தில்) பெரும் பாவம் எதையும் செய்திருக்கக் கூடாது" என்று (நபியவர்கள்) கூறினார்கள்.[91]

454 அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

உரிமையை வழங்கும்போதும் உரிமை கோரும்போதும் விற்கும்போதும் வாங்கும் போதும் மென்மையாக நடந்துகொள்ளும் மனிதரை அல்லாஹ் சொர்க்கத்தில் நுழையச் செய்வான்.

---

90. காண்க: முன்சென்ற ஹதீஸ் எண்கள் - 377, 381, 383, 391, 393, 395, 403, 429, 443, 448, பின்வரும் ஹதீஸ்கள் - 453, 458, 472, 486 மற்றும் அடிக்குறிப்புகள்

91. காண்க: முன்சென்ற ஹதீஸ் எண் - 452, முஸ்லிம் ஹதீஸ் எண் - 390.

இதை உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்கள் அறிவித்துள்ளார்கள்.[92]

455 மதீனாவாசிகளுள் ஒருவர் வாயிலாக இக்ரிமா பின் காலித் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

தொழுகை அறிவிப்பாளர் (முஅத்தின்) அஸ்ர் தொழுகைக்காக அறிவிப்பு (பாங்கு) கொடுத்தார். அப்போது உஸ்மான் (ரலி) அவர்கள் தண்ணீரைக் கொண்டு வரச் சொல்லி, அங்கத் தூய்மை (உளூ) செய்தார்கள். பின்னர், "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், 'ஒருவர் கட்டளையிடப்பட்டதைப் போன்று அங்கத் தூய்மை செய்து, கட்டளையிடப்பட்டதைப் போன்று தொழுகையை நிறைவேற்றினால், அவருடைய பாவங்கள் அவரைவிட்டு அகற்றப்படுகின்றன' என்று கூறியதை நான் செவியுற்றேன்" என்று குறிப்பிட்டுவிட்டு, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுடைய தோழர்கள் நான்கு பேரிடம் இது தொடர்பாகச் சாட்சியம் அளிக்குமாறு கோரினார்கள். அப்போது இந்தச் செய்தி நபி (ஸல்) அவர்கள் கூறியதுதான் என்று அந்நால்வரும் உஸ்மான் (ரலி) அவர்களிடம் சாட்சியம் அளித்தனர்.[93]

٤٥٥ حدثنا قال حَدَّثَنَا عَفَّانُ حَدَّثَنَا أَبُو عَوَانَةَ عَنْ إِبْرَاهِيمَ بْنِ الْمُهَاجِرِ عَنْ عِكْرِمَةَ بْنِ خَالِدٍ حَدَّثَنِي رَجُلٌ مِنْ أَهْلِ الْمَدِينَةِ أَنَّ الْمُؤَذِّنَ أَذَّنَ لِصَلَاةِ الْعَصْرِ قَالَ: فَدَعَا عُثْمَانُ رَضِيَ اللَّهُ عَنْهُ بِطَهُورٍ فَتَطَهَّرَ قَالَ ثُمَّ قَالَ: سَمِعْتُ رَسُولَ اللَّهِ ﷺ يَقُولُ: مَنْ تَطَهَّرَ كَمَا أُمِرَ وَصَلَّى كَمَا أُمِرَ كُفِّرَتْ عَنْهُ ذُنُوبُهُ فَاسْتَشْهَدَ عَلَى ذَلِكَ أَرْبَعَةً مِنْ أَصْحَابِ رَسُولِ اللَّهِ ﷺ قَالَ فَشَهِدُوا لَهُ بِذَلِكَ عَلَى النَّبِيِّ ﷺ.

456 புஸ்ர் பின் சஈத் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

உஸ்மான் (ரலி) அவர்கள் (மதீனாவின் பிரபலமான) 'மகாஇத்' எனுமிடத்திற்கு வந்து, அங்கத் தூய்மை செய்வதற்குத் தண்ணீர் கொண்டுவரச் சொன்னார்கள். (தண்ணீர் வந்ததும்) வாய் கொப்பளித்தார்கள். (மூக்கிற்கு நீர் செலுத்தி) மூக்குச் சிந்தினார்கள். பின்னர் தமது முகத்தை மூன்றுமுறை கழுவினார்கள். தம்மிரு கைகளையும் (முழங்கை வரை) மும்மூன்று முறை கழுவினார்கள். பின்னர் (ஈரக் கையால்) தமது தலையைத் தடவி ('மஸ்ஹு'ச் செய்திடலா)னார்கள். பின்னர் தம்மிரு கால்களையும் மூன்றுமுறை ஈரக் கையால் தடவி ('மஸ்ஹு'ச் செய்திடலா)னார்கள். பின்னர், "இப்படித்தான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அங்கத் தூய்மை செய்ததை நான் பார்த்தேன்" என்று கூறிய உஸ்மான் (ரலி) அவர்கள், தமக்கு அருகிலிருந்த நபித்தோழர்களுள் சிலரை நோக்கி, "என்ன தோழர்களே! அப்படித்தானே?" என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள், "ஆம்" என்றனர்.[94]

٤٥٦ حدثنا ابْنُ الْأَشْجَعِيِّ حَدَّثَنَا أَبِي عَنْ سُفْيَانَ عَنْ سَالِمٍ أَبِي النَّضْرِ عَنْ بُسْرِ بْنِ سَعِيدٍ قَالَ: أَتَى عُثْمَانُ الْمَقَاعِدَ فَدَعَا بِوَضُوءٍ فَتَمَضْمَضَ وَاسْتَنْشَقَ ثُمَّ غَسَلَ وَجْهَهُ ثَلَاثًا وَيَدَيْهِ ثَلَاثًا ثَلَاثًا ثُمَّ مَسَحَ بِرَأْسِهِ وَرِجْلَيْهِ ثَلَاثًا ثَلَاثًا ثُمَّ قَالَ: رَأَيْتُ رَسُولَ اللَّهِ ﷺ هَكَذَا يَتَوَضَّأُ يَا هَؤُلَاءِ أَكَذَاكَ قَالُوا: نَعَمْ لِنَفَرٍ مِنْ أَصْحَابِ رَسُولِ اللَّهِ ﷺ عِنْدَهُ.

---

92. காண்க: முன்சென்ற ஹதீஸ் எண்கள் - 387, 390 மற்றும் அடிக்குறிப்புகள்.

93. இந்த ஹதீஸ் முஸ்னது அஹ்மதில் மட்டுமே இடம்பெற்றுள்ளது. இந்த ஹதீஸ் பலவீனமானதாகும். ஏனெனில், இதன் அறிவிப்பாளர் பற்றிக் குறிப்பிடும்போது, 'மதீனாவாசிகளுள் ஒருவர் வாயிலாக இக்ரிமா பின் காலித் (ரஹ்) அவர்கள் கூறியதாவது' என்றே வந்துள்ளது. அவர் பற்றிய விவரம் அறியப்படவில்லை.

94. காண்க: முன்சென்ற ஹதீஸ் எண்கள் - 381, 383, 385, 402, 429, 448 மற்றும் அடிக்குறிப்புகள்.

٤٥٧ حدثنا عَبْدُ اللهِ بْنُ الْوَلِيدِ حَدَّثَنَا سُفْيَانُ حَدَّثَنِي سَالِمٌ أَبُو النَّضْرِ عَنْ بُسْرِ بْنِ سَعِيدٍ عَنْ عُثْمَانَ بْنِ عَفَّانَ رَضِيَ اللهُ عَنْهُ أَنَّهُ دَعَا بِمَاءٍ فَتَوَضَّأَ عِنْدَ الْمَقَاعِدِ فَتَوَضَّأَ ثَلَاثًا ثَلَاثًا ثُمَّ قَالَ لِأَصْحَابِ رَسُولِ اللهِ ﷺ: هَلْ رَأَيْتُمْ رَسُولَ اللهِ ﷺ فَعَلَ هَذَا؟ قَالُوا: نَعَمْ.

قَالَ أَبِي هَذَا الْعَدَنِيُّ كَانَ بِمَكَّةَ مُسْتَمْلِيَ ابْنِ عُيَيْنَةَ.

457 புஸ்ர் பின் சஈத் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்கள் தண்ணீர் கொண்டுவரச் சொல்லி 'மகாஇத்' எனுமிடத்தில் அங்கத் தூய்மை செய்தார்கள். அப்போது (உறுப்புகள் ஒவ்வொன்றையும்) மும்மூன்று முறை (கழுவி) அங்கத் தூய்மை செய்தார்கள். பின்னர் அவர்கள் (அருகிலிருந்த) நபித் தோழர்களிடம், "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் இவ்வாறு (அங்கத் தூய்மை) செய்ததை நீங்கள் பார்த்துள்ளீர்கள்தாமே?" என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள், "ஆம்" என்றனர்.[96]

(நூலாசிரியரின் புதல்வர்) அப்துல்லாஹ் பின் அஹ்மது (ரஹ்) அவர்கள் கூறியதாவது: என் தந்தை அஹ்மது பின் ஹன்பல் (ரஹ்) அவர்கள் கூறினார்கள்: (இந்த ஹதீஸை எனக்கு அறிவித்த) 'அதனீ' குலத்தைச் சேர்ந்த அப்துல்லாஹ் பின் அல்வலீத் (ரஹ்) அவர்கள் மக்காவில் சுஃப்யான் பின் உயைனா (ரஹ்) அவர்களிடமிருந்து ஹதீஸ்களை எழுதிக்கொள்ளக் கூடியவராக இருந்தார்.

٤٥٨ حدثنا يَعْقُوبُ حَدَّثَنَا أَبِي عَنِ ابْنِ إِسْحَاقَ حَدَّثَنِي مُحَمَّدُ بْنُ إِبْرَاهِيمَ بْنِ الْحَارِثِ التَّيْمِيُّ عَنْ مُعَاذِ بْنِ عَبْدِ الرَّحْمَنِ التَّيْمِيِّ عَنْ حُمْرَانَ بْنِ أَبَانَ مَوْلَى عُثْمَانَ بْنِ عَفَّانَ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ: رَأَيْتُ عُثْمَانَ بْنَ عَفَّانَ رَضِيَ اللهُ عَنْهُ دَعَا بِوَضُوءٍ وَهُوَ عَلَى بَابِ الْمَسْجِدِ فَغَسَلَ يَدَيْهِ ثُمَّ مَضْمَضَ وَاسْتَنْشَقَ وَاسْتَنْثَرَ ثُمَّ غَسَلَ وَجْهَهُ ثَلَاثَ مَرَّاتٍ ثُمَّ غَسَلَ يَدَيْهِ إِلَى الْمِرْفَقَيْنِ ثَلَاثَ مَرَّاتٍ ثُمَّ مَسَحَ بِرَأْسِهِ وَأَمَرَّ بِيَدَيْهِ عَلَى ظَاهِرِ أُذُنَيْهِ ثُمَّ مَرَّ بِهِمَا عَلَى لِحْيَتِهِ ثُمَّ غَسَلَ رِجْلَيْهِ إِلَى الْكَعْبَيْنِ ثَلَاثَ مَرَّاتٍ ثُمَّ قَامَ فَرَكَعَ رَكْعَتَيْنِ ثُمَّ قَالَ: تَوَضَّأْتُ لَكُمْ كَمَا رَأَيْتُ رَسُولَ اللهِ ﷺ تَوَضَّأَ ثُمَّ رَكَعْتُ رَكْعَتَيْنِ كَمَا رَأَيْتُهُ

458 (உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்களின் முன்னாள் அடிமை) ஹும்ரான் பின் அபான் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

(ஒரு முறை) உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்கள் (மஸ்ஜிதுந் நபவீ) பள்ளிவாசலில் இருந்து கொண்டு அங்கத் தூய்மை செய்யத் தண்ணீர் கொண்டுவரச் சொன்னார்கள். (தண்ணீர் வந்ததும்) முதலில் தம்மிரு கைகளையும் (மணிக்கட்டுவரை) கழுவினார்கள். பின்னர், வாய் கொப்பளித்தார்கள். மூக்கிற்குள் நீர் செலுத்தி மூக்குச் சிந்தினார்கள். பின்னர், தமது முகத்தை மூன்று முறை கழுவினார்கள். தம்மிரு கைகளையும் முழங்கைகள்வரை மூன்று முறை கழுவினார்கள். பின்னர், ஈரக் கையால் தலையைத் தடவி ('மஸ்ஹு'ச் செய்திடலா)னார்கள். பின்னர், தம் கைகளை அப்படியே தம்மிரு காதுகளின் மேற்பகுதியில் வைத்துத் தடவினார்கள். பின்னர், தமது தாடியின் மீதும் தம் கைகளை வைத்துத் தடவினார்கள். பின்னர், தம்மிரு கால்களையும் கணுக்கால்கள்வரை மூன்று முறை கழுவினார்கள். பின்னர் எழுந்து நின்று இரண்டு 'ரக்அத்'கள் தொழுதுவிட்டு, (பின்வருமாறு) கூறினார்கள்:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் எப்படி அங்கத் தூய்மை செய்ததை நான் பார்த்தேனோ, அதைப் போன்றே உங்களுக்கு நான் அங்கத் தூய்மை செய்து காட்டினேன். பின்னர், எப்படி அவர்கள் இரண்டு 'ரக்அத்'கள் தொழுததை நான் கண்டேனோ, அதைப் போன்றே நானும் உங்களுக்குத் தொழுது காட்டினேன்

96. காண்க: முன்சென்ற ஹதீஸ் எண் - 456 மற்றும் அதன் அடிக்குறிப்பு

رَكَعَ قَالَ ثُمَّ قَالَ: قَالَ رَسُولُ اللَّهِ ﷺ: حِينَ فَرَغَ مِنْ رَكْعَتَيْهِ مَنْ تَوَضَّأَ كَمَا تَوَضَّأْتُ ثُمَّ رَكَعَ رَكْعَتَيْنِ لَا يُحَدِّثُ فِيهِمَا نَفْسَهُ غُفِرَ لَهُ مَا كَانَ بَيْنَهُمَا وَبَيْنَ صَلَاتِهِ بِالْأَمْسِ.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அவ்வாறு இரண்டு 'ரக்அத்'கள் தொழுது முடித்தபோது, "நான் அங்கத் தூய்மை செய்ததைப் போன்று ஒருவர் செய்து, பின்னர் வேறு எந்த விதமான (கெட்ட) எண்ணங்களுக்கும் இடம் தராமல், இரண்டு 'ரக்அத்'கள் தொழுதால், அவர் தொழுத அந்த இரு 'ரக்அத்'களுக்கும் அதற்கு முந்தைய நாளில் அவர் தொழுத தொழுகைக்கும் இடையிலான (சிறிய) பாவங்கள் அவருக்கு மன்னிக்கப்படும்" என்று கூறினார்கள்.[96]

٤٥٩ حدثنا مُعَاوِيَةُ بْنُ عَمْرٍو حَدَّثَنَا زَائِدَةُ عَنْ عَاصِمٍ عَنْ شَقِيقٍ قَالَ: لَقِيَ عَبْدُ الرَّحْمَنِ بْنُ عَوْفٍ الْوَلِيدَ بْنَ عُقْبَةَ فَقَالَ لَهُ الْوَلِيدُ: مَا لِي أَرَاكَ قَدْ جَفَوْتَ أَمِيرَ الْمُؤْمِنِينَ عُثْمَانَ رَضِيَ اللَّهُ عَنْهُ، فَقَالَ لَهُ عَبْدُ الرَّحْمَنِ: أَبْلِغْهُ أَنِّي لَمْ أَفِرَّ يَوْمَ عَيْنَيْنِ قَالَ عَاصِمٌ يَقُولُ يَوْمَ أُحُدٍ وَلَمْ أَتَخَلَّفْ يَوْمَ بَدْرٍ وَلَمْ أَتْرُكْ سُنَّةَ عُمَرَ رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ فَانْطَلَقَ فَخَبَّرَ ذَلِكَ عُثْمَانَ رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ فَقَالَ: أَمَّا قَوْلُهُ إِنِّي لَمْ أَفِرَّ يَوْمَ عَيْنَيْنِ فَكَيْفَ يُعَيِّرُنِي بِذَنْبٍ وَقَدْ عَفَا اللَّهُ عَنْهُ فَقَالَ: ﴿إِنَّ الَّذِينَ تَوَلَّوْا مِنْكُمْ يَوْمَ الْتَقَى الْجَمْعَانِ إِنَّمَا اسْتَزَلَّهُمُ الشَّيْطَانُ بِبَعْضِ مَا كَسَبُوا وَلَقَدْ عَفَا

459 ஷகீக் பின் சலமா (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

(ஒரு முறை) அப்துர்ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்கள் (உஸ்மான் - ரலி அவர்களின் தாய்வழிச் சகோதரர்) வலீத் பின் உக்பா (ரஹ்) அவர்களைச் சந்தித்தார்கள் அப்போது அவர்களிடம் வலீத் (ரஹ்) அவர்கள், "இறைநம்பிக்கையாளர்களின் தலைவர் உஸ்மான் (ரலி) அவர்களிடம் நீங்கள் சரியான முறையில் உறவைப் பேணுவதில்லையே, ஏன்?" என்று கேட்டார் அப்போது அவரிடம் அப்துர்ரஹ்மான் (ரலி) அவர்கள், "நான் 'அய்னைன்'[97] நாளில் - அதாவது உஹுத் போர் நடைபெற்ற நாளில் - பின்வாங்கி ஓடவில்லை; பத்ருப் போரில் நான் கலந்துகொள்ளத் தவறவும் இல்லை; உமர் (ரலி) அவர்கள் காட்டித் தந்த (அரசியல்) நடைமுறையை நான் கைவிடவும் இல்லை என்று அவரிடம் போய்ச் சொல்வீராக" என்றார்கள். வலீத் (ரஹ்) அவர்கள் சென்று உஸ்மான் (ரலி) அவர்களிடம் அந்தத் தகவலைச் சொன்னார்கள்.

அப்போது உஸ்மான் (ரலி) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்: "உஹுத் போரில் நாம் பின்வாங்கி ஓடவில்லை என்று அவர் (கூறுவதன் மூலம், நான் அந்தப் போரில் பின்வாங்கி ஓடியதாக என்னை அவர் குறை) கூறுகிறார் (ஆம்; அது உண்மைதான். ஆனால்,) அல்லாஹ்வே மன்னித்துவிட்ட ஒரு குற்றத்துக்காக, என்னை எப்படி அவர் குறை கூறலாம்? அல்லாஹ்தான், "இரணிகள் மோதிக்கொண்ட நாளில் உங்களுள் யார் பின்வாங்கி(ஓடி)னார்களோ அவர்களை, அவர்கள் செய்த (தவறுகள்) சிலவற்றின் காரணத்தால், ஷைத்தான்தான் அடிபிறழச் செய்தான். அவர்களை அல்லாஹ் மன்னித்துவிட்டான்" (3:155) என்று கூறிவிட்டானே!

96. காண்க: முன்சென்ற ஹதீஸ் எண் - 457 மற்றும் அதன் அடிக்குறிப்பு

97. 'அய்னைன்' என்பது 'உஹுத்' மலைக்கு அருகிலுள்ள ஒரு சிறு மலையாகும். இங்கு 'உஹுத்' நாள் என்று கூறாமல் [illegible] 'அய்னைன்' [illegible] 'உஹுத்' மலையில் [illegible] 'அய்னைன்' [illegible]. [illegible]

اللهُ عَنْهُمْ) وَأَمَّا قَوْلُهُ إِنِّي تَخَلَّفْتُ يَوْمَ بَدْرٍ فَإِنِّي كُنْتُ أُمَرِّضُ رُقَيَّةَ بِنْتَ رَسُولِ اللَّهِ ﷺ حِينَ مَاتَتْ وَقَدْ ضَرَبَ لِي رَسُولُ اللَّهِ ﷺ بِسَهْمِي وَمَنْ ضَرَبَ لَهُ رَسُولُ اللَّهِ ﷺ بِسَهْمِهِ فَقَدْ شَهِدَ وَأَمَّا قَوْلُهُ إِنِّي لَمْ أَتْرُكْ سُنَّةَ عُمَرَ رَضِيَ اللَّهُ عَنْهُ فَإِنِّي لَا أُطِيقُهَا وَلَا هُوَ فَأْتِهِ فَحَدِّثْهُ بِذَلِكَ.

அடுத்து, நான் பத்ருப் போரில் கலந்து கொள்ளவில்லை என்று அவர் கூறுகிறார். அப்போது மரணப் படுக்கையில் இருந்த அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் புதல்வி(யும் என்னுடைய மனைவியுமான) ருகைய்யா (ரலி) அவர்களுக்கு நான் சிகிச்சைக்கு வழி வகை செய்து கொண்டிருந்தேன் (எனவே, அப்போரில் நான் கலந்துகொள்ள முடியவில்லை. இருப்பினும், அந்தப் போரில் கிடைத்த செல்வங்களில்) அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் எனக்கும் ஒரு பங்கை ஒதுக்கினார்கள். அவ்வாறு (போரில் கலந்து கொள்ளாது) யாருக்காவது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் பங்கை ஒதுக்கினால் அவர் (அந்தப் போரில்) கலந்து கொண்டார் (என்றே கருதப்படுவார்).

அடுத்து, உமர் (ரலி) அவர்கள் காட்டித் தந்த (அரசியல்) நடைமுறையைத் தாம் கைவிடவும் இல்லை என்று கூறி(யதன் மூலம், நான் அந்த நடைமுறையைக் கைவிட்டதாகக் குறை கூறி)யுள்ளார். (ஆம்; நான் அதைக் கைவிடவே செய்தேன். ஏனெனில்,) அ(தை நடைமுறைப்படுத்துவ)தற்கு எனக்கு வலிமையில்லை; (ஏன்?) அவருக்கும்தான் வலிமையில்லை.

இவ்வாறு கூறிய உஸ்மான் (ரலி) அவர்கள் வலீது பின் உக்பா (ரஹ்) அவர்களிடம், "நீர் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்களிடம் சென்று இதைத் தெரிவித்து விடுவீராக" என்று கூறினார்கள்.[89]

٤٦٠ حَدَّثَنَا إِسْحَاقُ بْنُ يُوسُفَ حَدَّثَنَا سُفْيَانُ عَنْ أَبِي سَهْلٍ يَعْنِي عُثْمَانَ بْنَ حَكِيمٍ حَدَّثَنَا عَبْدُ الرَّحْمَنِ بْنُ أَبِي عَمْرَةَ عَنْ عُثْمَانَ بْنِ عَفَّانَ رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ قَالَ رَسُولُ اللَّهِ ﷺ: مَنْ صَلَّى الْعِشَاءَ فِي جَمَاعَةٍ كَانَ كَقِيَامِ نِصْفِ لَيْلَةٍ وَمَنْ صَلَّى الْعِشَاءَ وَالْفَجْرَ فِي جَمَاعَةٍ كَانَ كَقِيَامِ لَيْلَةٍ.

460 அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

'இஷா'த் தொழுகையை ஒருவர் ஜமாஅத்துடன் தொழுதவர் பாதி இரவுவரை நின்று வழிபட்டவரைப் போன்றவர் ஆவார். 'இஷா', 'ஃபஜ்ர்' ஆகிய இரண்டையும் 'ஜமாஅத்'துடன் ஒருவர் தொழுதவர் இரவு முழுவதும் நின்று வழிபட்டவரைப் போன்றவர் ஆவார்.

இதை உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.[90]

٤٦١ حَدَّثَنَا إِسْمَاعِيلُ حَدَّثَنَا أَيُّوبُ عَنْ نَافِعٍ عَنْ نُبَيْهِ بْنِ وَهْبٍ قَالَ أَرَادَ ابْنُ مَعْمَرٍ أَنْ يُنْكِحَ ابْنَهُ ابْنَةَ شَيْبَةَ بْنِ

461 நுபைஹ் பின் வஹ்ப் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

உமர் பின் உபைதில்லாஹ் பின் மஅமர் (ரஹ்) அவர்கள் தம்முடைய புதல்வர் தல்ஹா பின் உமருக்கு ஷைபா பின் ஜுபைர் (ரஹ்) அவர்களின் மகளை மணமுடித்து

89. இக்கருத்து முழுமையாக முஸ்னது பஸ்ஸார் (379) எனும் நூலிலும் இதன் ஒரு பகுதி தபரானியின் அல்முஃஜமுல் கபீர் (133) எனும் நூலிலும் இடம்பெற்றுள்ளது.

90. காண்க: முஸ்லிம் ஹதீஸ் எண் - 385 மற்றும் அதன் அடிக்குறிப்பு

வைக்க விரும்பினார் எனவே, (அவ்வாண்டு) 'ஹஜ்' பருவத்தின் தலைவராக இருந்த அபான் பின் உஸ்மான் (ரஹ்) அவர்களிடம் என்னை அனுப்பி, (அத்திருமணத்திற்குச் சாட்சியாக இருந்து நடத்திவைப்பதற்காக அவரை அழைத்துவரச் சொன்னார்.

நான் அபான் பின் உஸ்மான் (ரஹ்) அவர்களிடம் வந்து, "உங்களுடைய சகோதரர் தம்முடைய மகனுக்குத் திருமணம் செய்ய விரும்புகிறார்; அதற்கு நீங்கள் சாட்சியாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறார்" என்றேன் அப்போது அபான் (ரஹ்) அவர்கள், "இதோ (பாருங்கள்)! அவர் முரட்டு சுபாவமுள்ள இராக்கியராக இருப்பார் என்றே கருதுகிறேன்; 'இஹ்ராம்' அணிந்திருப்பவர் (தாமும்) திருமணம் செய்துகொள்ளக் கூடாது; (பிறருக்குத்) திருமணம் முடித்துவைக்கவும் கூடாது" என்று கூறினார்கள்.

خَيْبَرَ فَبَعَثَنِي إِلَى أَبَانَ بْنِ عُثْمَانَ رَضِيَ اللَّهُ عَنْهُ وَهُوَ
أَمِيرُ الْمَوْسِمِ فَأَتَيْتُهُ فَقُلْتُ لَهُ: إِنَّ أَخَاكَ أَرَادَ أَنْ يُنْكِحَ
ابْنَهُ فَأَرَادَ أَنْ يُشْهِدَكَ ذَاكَ، فَقَالَ: أَلاَ أُرَاهُ عِرَاقِيًّا
جَافِيًا إِنَّ الْمُحْرِمَ لاَ يَنْكِحُ وَلاَ يُنْكِحُ.
ثُمَّ حَدَّثَ عَنْ عُثْمَانَ رَضِيَ اللَّهُ عَنْهُ بِمِثْلِهِ يَرْفَعُهُ.

٤٦٢ حدثنا سُفْيَانُ بْنُ عُيَيْنَةَ عَنْ هِشَامٍ عَنْ أَبِيهِ عَنْ
حُمْرَانَ مَوْلَى عُثْمَانَ رَضِيَ اللَّهُ عَنْهُ أَنَّ عُثْمَانَ تَوَضَّأَ
بِالْمَقَاعِدِ فَغَسَلَ ثَلاَثًا ثَلاَثًا وَقَالَ سَمِعْتُ رَسُولَ اللَّهِ
ﷺ يَقُولُ: مَنْ تَوَضَّأَ وُضُوئِي هَذَا ثُمَّ قَامَ إِلَى الصَّلاَةِ
سَقَطَتْ خَطَايَاهُ يَعْنِي مِنْ وَجْهِهِ وَيَدَيْهِ وَرِجْلَيْهِ وَرَأْسِهِ.

٤٦٣ حدثنا سُفْيَانُ بْنُ عُيَيْنَةَ عَنْ أَيُّوبَ بْنِ مُوسَى عَنْ
نُبَيْهِ بْنِ وَهْبٍ قَالَ: اشْتَكَى عُمَرُ بْنُ عُبَيْدِ اللَّهِ بْنِ مَعْمَرٍ

பின்னர் இதைப் போன்றதொரு தகவலை நபி (ஸல்) அவர்கள் கூறியதாகத் (தம் தந்தை) உஸ்மான் (ரலி) அவர்கள் வாயிலாக அபான் (ரஹ்) அவர்கள் அறிவித்தார்கள்.[100]

462 (உஸ்மான் (ரலி) அவர்களின் முன்னாள் அடிமை) ஹும்ரான் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

(ஒரு முறை) உஸ்மான் (ரலி) அவர்கள் (மஸ்ஜிதுந் நபவீ பள்ளிவாசலுக்கு அருகிலுள்ள) 'மகாஇத்' எனும் இடத்தில் அங்கத் தூய்மை (உளூ) செய்தார்கள் அப்போது (உறுப்புகளை) மும்மூன்று முறை கழுவினார்கள். பின்னர் அவர்கள் (பின்வருமாறு) கூறினார்கள்:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் (ஒரு முறை இவ்வாறு அங்கத் தூய்மை செய்துவிட்டு), "ஒருவர் நான் செய்த இந்த அங்கத் தூய்மையைப் போன்று அங்கத் தூய்மை செய்து விட்டுப் பின்னர் தொழுகைக்காக எழுந்து நின்றால், அவருடைய (சிறு) பாவங்கள் அவருடைய முகம், கைகள், கால்கள், தலை ஆகியவற்றிலிருந்து உதிர்ந்து விழுகின்றன" என்று கூறினார்கள்.[101]

463 நுபைஹ் பின் வஹ்ப் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

உமர் பின் உபைதில்லாஹ் பின் மஅமர் (ரஹ்) அவர்கள் 'இஹ்ராம்' அணிந்திருந்த

100. இது முன்னர் சென்ற 378, 432, 436 ஆகிய ஹதீஸ்களைவிட விரிவாக அமைந்துள்ளது.

101. இந்த ஹதீஸ் ஒரு சில சொல் வேறுபாடுகளுடன் முஸ்லிம் 389ஆவது எண்ணில் இடம்பெற்றுள்ளது. மேலும் ஒரு சில மாற்றங்களுடன் இதே நூலில் முன்னர் 377, 429, 448, 452, 457, 458 ஆகிய ஹதீஸ்களிலும் பதிவாகியுள்ளது.

போது, அவர்க)ளுக்கு இரு கண்களிலும் வலி ஏற்பட்டிருந்தது. அப்போது அவர் (ஹஜ் பருவத்திற்குத்) தலைவராக இருந்த அபான் பின் உஸ்மான் (ரஹ்) அவர்களிடம் ஆளனுப்பி, "(வலி ஏற்பட்ட) இரு கண்களுக்கும் என்ன (மருத்துவம்) செய்வது?" என்று (விளக்கம்) கேட்டார்கள். அதற்கு அபான் (ரஹ்) அவர்கள், "இரு கண்களிலும் கற்றாழைச் சாற்றைப் பிழிந்து கட்டுவீராக. ஏனெனில், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் இவ்வாறே கூறியதாக உஸ்மான் (ரலி) அவர்களிடமிருந்து நான் செவியுற்றுள்ளேன்" என்று கூறினார்கள்.[102]

464 மூசா பின் இம்ரான் பின் மன்னாஹ் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

(ஒரு முறை) அபான் பின் உஸ்மான் (ரஹ்) அவர்கள் பிரேத (ஊர்வல)ம் வந்துகொண்டிருந்ததைப் பார்த்தார்கள். அதைப் பார்த்ததும் எழுந்து நின்றார்கள். பின்னர், "(என் தந்தை) உஸ்மான் (ரலி) அவர்கள் இவ்வாறு செய்ததை நான் பார்த்துள்ளேன். அதுமட்டுமன்றி, உஸ்மான் (ரலி) அவர்கள், நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு செய்ததைத் தாம் பார்த்ததாக எனக்கு அறிவிக்கவும் செய்தார்கள்" என்று அபான் (ரஹ்) அவர்கள் குறிப்பிட்டார்கள்.[103]

عَيْنَيْهِ فَأَرْسَلَ إِلَى أَبَانَ بْنِ عُثْمَانَ رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ سُفْيَانُ وَهُوَ أَمِيرُ مَا يَصْنَعُ بِهِمَا، قَالَ قَالَ: ضَمِّدْهُمَا بِالصَّبِرِ فَإِنِّي سَمِعْتُ عُثْمَانَ رَضِيَ اللَّهُ عَنْهُ يُحَدِّثُ ذَلِكَ عَنْ رَسُولِ اللَّهِ ﷺ.

٤٦٤ حَدَّثَنَا عَبْدُ اللَّهِ حَدَّثَنِي الْحَكَمُ بْنُ مُوسَى أَبُو صَالِحٍ حَدَّثَنَا سَعِيدُ بْنُ مَسْلَمَةَ عَنْ إِسْمَاعِيلَ بْنِ أُمَيَّةَ عَنْ مُوسَى بْنِ عِمْرَانَ بْنِ مَنَّاحٍ عَنْ أَبَانَ بْنِ عُثْمَانَ رَضِيَ اللَّهُ عَنْهُ أَنَّهُ رَأَى جَنَازَةً مُقْبِلَةً فَلَمَّا رَآهَا قَامَ وَقَالَ: رَأَيْتُ عُثْمَانَ يَفْعَلُ ذَلِكَ. وَأَخْبَرَنِي أَنَّهُ رَأَى النَّبِيَّ ﷺ يَفْعَلُهُ.

٤٦٥ حَدَّثَنَا سُفْيَانُ عَنْ أَيُّوبَ بْنِ مُوسَى عَنْ نُبَيْهِ بْنِ وَهْبٍ عَنْ أَبَانَ بْنِ عُثْمَانَ رَضِيَ اللَّهُ عَنْهُ عَنْ عُثْمَانَ يَبْلُغُ بِهِ النَّبِيَّ ﷺ قَالَ: لَا يَنْكِحُ الْمُحْرِمُ وَلَا يَخْطُبُ.

٤٦٦ حَدَّثَنَا سُفْيَانُ عَنْ أَيُّوبَ بْنِ مُوسَى بْنِ عَمْرِو بْنِ سَعِيدٍ عَنْ نُبَيْهِ بْنِ وَهْبٍ رَجُلٍ مِنَ الْحَجَبَةِ عَنْ أَبَانَ بْنِ عُثْمَانَ رَضِيَ اللَّهُ عَنْهُ أَنَّهُ حَدَّثَ عَنْ عُثْمَانَ رَضِيَ اللَّهُ عَنْهُ أَنَّ رَسُولَ اللَّهِ ﷺ رَخَّصَ أَوْ قَالَ فِي الْمُحْرِمِ: إِذَا اشْتَكَى

465 நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

'இஹ்ராம்' அணிந்திருப்பவர் திருமணம் செய்துகொள்ளக் கூடாது; பெண் பேசவும் கூடாது.

இதை உஸ்மான் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.[104]

466 உஸ்மான் (ரலி) அவர்கள் கூறியதாவது:

'இஹ்ராம்' அணிந்திருக்கும் ஒருவருக்குக் கண்வலி ஏற்பட்டால், அவர் (தமது) கண்ணில் கற்றாழைச் சாற்றைப் பிழிந்து கட்டிக்கொள்ளலாம் என்று அல்லாஹ்வின்

102. இதே ஹதீஸ் முன்னர் 396, 435 ஆகிய எண்களில் சென்றுள்ளது. முஸ்லிம் (2276, 2277), திர்மிதீ (875), அபூதாவூத் (1567), நஸாயீ (2663), தாரிமீ (1849), அல்பஸ்ஸார், இப்னு குஸைமா, இப்னு ஹிப்பான், பைஹகீ ஆகிய நூல்களிலும் இந்த ஹதீஸ் இடம்பெற்றுள்ளது.

103. காண்க: முன்சென்ற ஹதீஸ் எண்கள் - 400, 427 மற்றும் அவற்றின் அடிக்குறிப்புகள்

104. இதேபோன்ற ஹதீஸ் முன்னர் 378, 432, 461 ஆகிய எண்களிலும் சென்றுள்ளது.

தூதர் (ஸல்) அவர்கள் 'கூறினார்கள்' அல்லது 'சயுகை அளித்தார்கள்'.[105]

عَنْهُ أَنْ يُضَمِّنَهَا بِالصَّبْرِ.

467 அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

(ஓரிறைக் கொள்கையின் உறுதி மொழியான) "லா இலாஹ இல்லல்லாஹ்" (அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை) என்பதை ஒருவர் நன்கு அறிந்துகொண்ட நிலையில் இறப்பெய்தினால், அவர் சொர்க்கம் செல்வார்.

இதை உஸ்மான் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.[106]

٤٦٧ حدثنا إِسْمَاعِيلُ عَنْ خَالِدٍ الْحَذَّاءِ عَنِ الْوَلِيدِ أَبِي بِشْرٍ عَنْ حُمْرَانَ عَنْ عُثْمَانَ رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ: قَالَ رَسُولُ اللَّهِ ﷺ: مَنْ مَاتَ وَهُوَ يَعْلَمُ أَنَّهُ لَا إِلَهَ إِلَّا اللَّهُ دَخَلَ الْجَنَّةَ.

468 இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறியதாவது:

நான் உஸ்மான் (ரலி) அவர்களிடம், "நீங்கள் நூற்றுக்கும் குறைவான வசனங்கள் கொண்ட (மஸானீ) அத்தியாயங்களுள் ஒன்றான 'அல்அன்ஃபால்' (எனும் 8ஆவது) அத்தியாயத்திற்கும், நூற்றுக்கும் மேற்பட்ட வசனங்கள் கொண்ட (மிஈன்) அத்தியாயங்களுள் ஒன்றான 'பராஅத்' (அல்லது 'அத்தவ்பா' எனும் 9ஆவது) அத்தியாயத்திற்கும் இடையே 'பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்' எனும் வரியை எழுதாமல், அவற்றை ஒன்றிணைத்து, அவ்விரண்டின் மொத்தத்தை எழுபெரும் அத்தியாயங்களுள் ஒன்றாக அமைத்துள்ளீர்களே; இதற்குக் காரணம் என்ன?" என்று கேட்டேன்.

٤٦٨ حدثنا إِسْمَاعِيلُ بْنُ إِبْرَاهِيمَ حَدَّثَنَا عَوْفُ بْنُ أَبِي جَمِيلَةَ حَدَّثَنِي يَزِيدُ الْفَارِسِيُّ حَدَّثَنَا ابْنُ عَبَّاسٍ قَالَ: قُلْتُ لِعُثْمَانَ: مَا حَمَلَكُمْ عَلَى أَنْ عَمَدْتُمْ إِلَى سُورَةِ الْأَنْفَالِ وَهِيَ مِنَ الْمَثَانِي وَإِلَى سُورَةِ بَرَاءَةَ وَهِيَ مِنَ الْمِئِينَ فَقَرَنْتُمْ بَيْنَهُمَا وَلَمْ تَكْتُبُوا بَيْنَهُمَا سَطْرَ بِسْمِ اللَّهِ الرَّحْمَنِ الرَّحِيمِ فَوَضَعْتُمُوهَا فِي السَّبْعِ الطِّوَالِ؟ فَمَا حَمَلَكُمْ عَلَى ذَلِكَ؟ قَالَ: كَانَ رَسُولُ اللَّهِ ﷺ مِمَّا يَأْتِي عَلَيْهِ الزَّمَانُ وَهُوَ يُنْزَلُ عَلَيْهِ مِنَ السُّوَرِ ذَوَاتِ الْعَدَدِ فَكَانَ إِذَا أُنْزِلَ عَلَيْهِ الشَّيْءُ دَعَا بَعْضَ مَنْ يَكْتُبُ لَهُ، فَيَقُولُ: ضَعُوا هَذِهِ فِي السُّورَةِ الَّتِي يُذْكَرُ فِيهَا كَذَا وَكَذَا وَإِذَا أُنْزِلَتْ عَلَيْهِ الْآيَاتُ قَالَ: ضَعُوا هَذِهِ الْآيَاتِ فِي السُّورَةِ الَّتِي يُذْكَرُ فِيهَا كَذَا وَكَذَا وَإِذَا أُنْزِلَتْ عَلَيْهِ الْآيَةُ قَالَ: ضَعُوا هَذِهِ الْآيَةَ فِي السُّورَةِ الَّتِي يُذْكَرُ فِيهَا كَذَا وَكَذَا وَكَانَتْ

அப்போது உஸ்மான் (ரலி) அவர்கள் கூறியதாவது: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுக்கு (நெடு நாட்களாக வேத அறிவிப்பு எதுவும் அருளப்பெறவில்லை. பின்னர்) சில அத்தியாயங்கள் அருளப்பட்டன. அவர்களுக்கு ஏதேனும் வேத அறிவிப்பு (வஹீ) அருளப்படும்போது, அவர்கள் தம்மிடமிருந்த எழுத்தர்களை அழைத்து, "இதை இன்னின்ன செய்திகள் பேசப்படுகின்ற அத்தியாயத்துடன் சேர்த்துவிடுங்கள்" என்று கூறுவது வழக்கம். அதைப் போன்றே அவர்களுக்குச் சில வசனங்கள் அருளப்பெற்றாலும், "இவற்றை இன்னின்ன செய்திகள் பேசப்படுகின்ற அத்தியாயத்துடன் சேர்த்து விடுங்கள்" என்பார்கள். அதைப் போன்றே அவர்களுக்கு ஒரேயொரு வசனம் (மட்டும்) அருளப்பெற்றாலும், "இதை இன்னின்ன செய்திகள் பேசப்படுகின்ற அத்தியாயத்துடன் சேர்த்துவிடுங்கள்" என்றே கூறுவார்கள்.

105. [illegible] - 388, 435, 463 [illegible].

106. [illegible] - 434 [illegible]

'அல்அன்ஃபால்' அத்தியாயம் மதீனாவில் அருளப்பெற்ற முதன்மை அத்தியாயங்களுள் ஒன்றாகும். 'பராஅத்' அத்தியாயம் குர்ஆனில் இறுதியாக அருளப்பெற்ற அத்தியாயங்களுள் ஒன்றாகும். 'பராஅத்' அத்தியாயத்தின் செய்தியும், 'அல்அன்ஃபால்' அத்தியாயத்தின் செய்தியும் (ஏறத்தாழ) ஒரே மாதிரியாகவே உள்ளன. அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களும் 'இதுவும் அதுவும் ஒன்றுதான்' என்பதை எங்களுக்கு விளக்காமலேயே இறந்துபோனார்கள். எனவே, இரண்டும் ஒன்றுதான் என்று நாங்கள் கருதிக்கொண்டோம். அதனாலேயே அவ்விரண்டுக்கும் இடையே, 'பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்' எனும் வரியை எழுதாமல் இரண்டையும் ஒன்றிணைத்து, அதை ஏழு பெரும் அத்தியாயங்களுள் ஒன்றாக அமைத்துவிட்டேன்.[107]

سُورَةُ الْأَنْفَالِ مِنْ أَوَائِلِ مَا نَزَلَ بِالْمَدِينَةِ وَكَانَتْ سُورَةُ بَرَاءَةَ مِنْ أَوَاخِرِ مَا أُنْزِلَ مِنَ الْقُرْآنِ، قَالَ فَكَانَتْ قِصَّتُهَا شَبِيهًا بِقِصَّتِهَا فَظَنَنَّا أَنَّهَا مِنْهَا وَقُبِضَ رَسُولُ اللَّهِ ﷺ وَلَمْ يُبَيِّنْ لَنَا أَنَّهَا مِنْهَا فَمِنْ أَجْلِ ذَلِكَ قَرَنْتُ بَيْنَهُمَا وَلَمْ أَكْتُبْ بَيْنَهُمَا سَطْرَ بِسْمِ اللَّهِ الرَّحْمَنِ الرَّحِيمِ وَوَضَعْتُهَا فِي السَّبْعِ الطُّوَلِ.

469 நபி (ஸல்) அவர்கள் கூறியதாக உஸ்மான் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

٤٦٩ حَدَّثَنَا يَحْيَى بْنُ سَعِيدٍ عَنْ سُفْيَانَ وَشُعْبَةَ عَنْ عَلْقَمَةَ بْنِ مَرْثَدٍ عَنْ سَعْدِ بْنِ عُبَيْدَةَ عَنْ أَبِي عَبْدِ الرَّحْمَنِ عَنْ عُثْمَانَ رَضِيَ اللَّهُ عَنْهُ عَنِ النَّبِيِّ ﷺ: قَالَ سُفْيَانُ: أَفْضَلُكُمْ وَقَالَ شُعْبَةُ: خَيْرُكُمْ مَنْ تَعَلَّمَ الْقُرْآنَ وَعَلَّمَهُ.

குர்ஆனைத் தாமும் பயின்று, அதைப் (பிறருக்கும்) பயிற்றுவிப்பவரே உங்களுள் (மிகச்) சிறந்தவர் ஆவார்.

இதன் அறிவிப்பாளர்களுள் ஒருவரான சுஃப்யான் அஸ்ஸவ்ரீ (ரஹ்), 'அஃப்ளலுக்கும்' (உங்களுள் மிகச் சிறந்தவர்) என்றும், மற்றொருவரான ஷுஅபா அல்ஹஜ்ஜாஜ் (ரஹ்), 'கைருக்கும்' (உங்களுள் சிறந்தவர்) என்ற சொல்லாலும் இதை அறிவிக்கின்றனர்.[108]

٤٧٠ حَدَّثَنَا وَكِيعٌ عَنْ إِسْمَاعِيلَ بْنِ أَبِي خَالِدٍ قَالَ قَالَ قَيْسٌ: فَحَدَّثَنِي أَبُو سَهْلَةَ أَنَّ عُثْمَانَ قَالَ يَوْمَ الدَّارِ حِينَ حُصِرَ: إِنَّ النَّبِيَّ ﷺ عَهِدَ إِلَيَّ عَهْدًا فَأَنَا صَابِرٌ عَلَيْهِ.

قَالَ قَيْسٌ: فَكَانُوا يَرَوْنَهُ ذَلِكَ الْيَوْمَ.

470 (உஸ்மான் (ரலி) அவர்களின் முன்னாள் அடிமை) அபூசஹ்லா (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

(கலீஃபா) உஸ்மான் (ரலி) அவர்கள் (கிளர்ச்சியாளர்களால்) அவர்களது வீட்டில் முற்றுகையிடப்பட்டிருந்த நாளில், பின்வருமாறு கூறினார்கள்:

நபி (ஸல்) அவர்கள் என்னிடம் ஓர் உறுதிமொழி வாங்கினார்கள்.[109] அதை முன்னிட்டு, (இப்போது என்ன துன்பம் நேர்ந்தாலும்) நான் சகித்துக்கொள்வேன்.

(இந்த ஹதீஸின் அறிவிப்பாளர்களுள் ஒருவரான) கைஸ் பின் அபீஹாஸிம் (ரஹ்) அவர்கள் கூறுகையில், "(நபி (ஸல்) அவர்களின் உறுதிமொழி தொடர்பான) அந்த நாள் (உஸ்மான் (ரலி) அவர்கள் முற்றுகையிடப்பட்ட) இந்த நாள்தான் என்று மக்கள் கருதினார்கள்" எனக் குறிப்பிட்டுள்ளார்கள்.

107. காண்க: முஸ்னது அஹ்மத் ஹதீஸ் எண் - 378 மற்றும் அதன் அடிக்குறிப்பு.

108. காண்க: முஸ்னது அஹ்மத் ஹதீஸ் எண்கள் - 302, [illegible] மற்றும் அவற்றின் அடிக்குறிப்புகள்.

109. முஸ்னது அஹ்மத் ஹதீஸ் எண் [illegible] அடிக்குறிப்பைக் காண்க.

٤٧١ حدثنا يزيد أنبأنا مهدي بن ميمون عن محمد بن عبد الله بن أبي يعقوب عن الحسن بن سعد قال: حدثني رباح قال: زوجني مولاي جارية رومية فوقعت عليها فولدت لي غلاما أسود مثلي فسميته عبد الله ثم وقعت عليها فولدت لي غلاما أسود مثلي فسميته عبيد الله ثم طبن لي غلام رومي قال حسنة قال لأهلي رومي يقال له يوحنس فراطنها بلسانه يعني بالرومية فوقع عليها فولدت له غلاما أحمر كأنه وزغة من الوزغات، فقلت لها: ما هذا؟ فقالت: هذا من يوحنس، قال فارتفعنا إلى عثمان بن عفان رضي الله عنه وأقرا جميعا، فقال عثمان: إن شئتم قضيت بينكم بقضية رسول الله ﷺ إن رسول الله ﷺ قضى أن الولد للفراش قال حسنة قال وجلدهما.

471 ரபாஹ் (அல்லக்மீ) அவர்கள் கூறிய தாவது:

(எனக்கு விடுதலையளித்த) என்னுடைய (முன்னாள்) உரிமையாளர், ரோம் நாட்டு அடிமைப் பெண் ஒருத்தியை எனக்கு மண முடித்து வைத்தார். அவளுடன் நான் தாம்பத்திய உறவு கொண்டேன். அவள் எனக்கு என்னைப் போன்றே கறுப்பு நிறத்தில் ஓர் ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். அந்தக் குழந்தைக்கு அப்துல்லாஹ் என்று பெயரிட்டேன். இந்நிலையில், யோஹன்னஸ் என்ற பெயருடைய ரோம் நாட்டு அடிமை ஒருவன் என் மனைவியை விரும்பினான். அவன் அவளிடம் தனது தாய்மொழியில் பேசித் தன் வசப்படுத்தலானான். அவளுடன் உறவும் கொண்டான். அதனால் (கருவுற்ற) அவள், சிவப்பு நிறத்தில் ஆண் குழந்தை ஒன்றைப் பெற்றெடுத்தாள். அது பல்லிகளுள் ஒரு பல்லியைப் போன்று (சிவப்பாக) இருந்தது. நான் அவளிடம், "இது என்ன (குழந்தை)?" என்று கேட்டேன். அவள், "இது யோஹன்னஸிடமிருந்து பெற்றது" என்றாள்.

பின்னர் நாங்கள் (கலீஃபா) உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்களிடம் (இது தொடர்பாக) முறையிட்டோம். அப்போது உஸ்மான் (ரலி) அவர்கள், "(இது பற்றி) நீங்கள் விரும்பினால், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அளித்த தீர்ப்பையே நான் உங்களுக்கு அளிக்கிறேன்: '(ஒருத்தி பெற்றெடுத்த) குழந்தை, (அப்)பெண் யாருடைய அதிகாரத்தின் கீழ் இருக்கின்றாளோ, அவருக்கே உரியது' என்றே அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் தீர்ப்பளித்தார்கள்" என்று சொன்னார்கள். பின்னர் (விபசாரக் குற்றமிழைத்த) அவ்விருவருக்கும் கசையடித் தண்டனை வழங்கினார்கள்.[110]

٤٧٢ حدثنا محمد بن جعفر حدثنا شعبة عن جامع بن شداد قال سمعت حمران بن أبان يحدث أبا بردة في المسجد أنه سمع عثمان بن عفان يحدث عن النبي ﷺ أنه قال: من أتم الوضوء كما أمره الله فالصلوات المكتوبات كفارات لما بينهن.

472 ஜாமிஉ பின் ஷத்தாத் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

ஹும்ரான் பின் அபான் (ரஹ்) அவர்கள் (பஸ்ரா) பள்ளிவாசலில் அபூபுர்தா (ரஹ்) அவர்களிடம் (பின்வருமாறு) அறிவித்ததை நான் செவியுற்றேன்:

உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்கள் கூறினார்கள்: "அல்லாஹ் தனக்குக் கட்டளையிட்டபடி, யார் முழுமையாக அங்கத் தூய்மை (உளூ) செய்கின்றாரோ, அவர் (அதன்மூலம்) தொழும் கடமையாக்கப்பட்ட தொழுகைகள் (ஒவ்வொன்றும்) அவற்றுக்கு இடையே ஏற்படும் (சிறு) பாவங்களுக்குப் பரிகாரமாகும்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறியதை நான் செவியுற்றேன்.[111]

---

110. இதன் அறிவிப்பாளரான ரபாஹ் அல்லக்மீ என்பார் யாரென அறியப்படாதவர் ஆவார். காண்க: முன்சென்ற ஹதீஸ் எண் - 392 மற்றும் அதன் அடிக்குறிப்பு.

111. காண்க: முன்சென்ற ஹதீஸ் எண்கள் - 383, 443 மற்றும் அவற்றின் அடிக்குறிப்புகள்.

473 அபூருவாஉ அப்பாத் பின் லாஹிர் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

(ஒரு முறை) உஸ்மான் (ரலி) அவர்கள் உரையாற்றியபோது பின்வருமாறு கூறியதை நான் செவியுற்றேன்: "அல்லாஹ்வின் மீதாணையாக! நாங்கள் பயணத்திலும் சரி, உள்ளூரிலும் சரி, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களோடு இருந்துள்ளோம். அவர்கள் எங்களில் நோய்வாய்ப்பட்டவர்களை நலம் விசாரிப்பார்கள்; எங்களிடையே உயிர் இழந்தோரின் இறுதி ஊர்வலத்தில் கலந்துகொள்வார்கள்; எங்களோடு சேர்ந்து அறப்போர் புரியவும் செய்வார்கள்; குறைவிலும் நிறைவிலும் எங்களுக்குக் கொடுத்துதவுவார்கள்; ஆனால், (இன்றைக்கு) மக்களுள் சிலர் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களைப் பற்றி என்னிடமே அறிவிக்கிறார்கள்; அவர்களில் சிலர் அல்லாஹ்வின் தூதரை அறவே பார்த்திருக்கக்கூடமாட்டார்கள்" என்று குறிப்பிட்டார்கள்.[112]

٤٧٣ حدثنا مُحَمَّدُ بْنُ جَعْفَرٍ حَدَّثَنَا شُعْبَةُ عَنْ سِمَاكِ بْنِ حَرْبٍ قَالَ سَمِعْتُ عَبَّادَ بْنَ زَاهِرٍ أَبَا رُوَاعٍ قَالَ: سَمِعْتُ عُثْمَانَ رَضِيَ اللَّهُ عَنْهُ يَخْطُبُ فَقَالَ: إِنَّا وَاللَّهِ قَدْ صَحِبْنَا رَسُولَ اللَّهِ ﷺ فِي السَّفَرِ وَالْحَضَرِ وَكَانَ يَعُودُ مَرْضَانَا وَيَتْبَعُ جَنَائِزَنَا وَيَغْزُو مَعَنَا وَيُوَاسِينَا بِالْقَلِيلِ وَالْكَثِيرِ وَإِنَّ نَاسًا يُعْلِمُونِي بِهِ عَسَى أَنْ لَا يَكُونَ أَحَدُهُمْ رَآهُ قَطُّ.

474 ஸஈத் பின் அல்முஸய்யப் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

٤٧٤ حدثنا الْوَلِيدُ بْنُ مُسْلِمٍ حَدَّثَنِي شُعَيْبُ أَبُو شَيْبَةَ قَالَ سَمِعْتُ عَطَاءً الْخُرَاسَانِيَّ يَقُولُ سَمِعْتُ سَعِيدَ بْنَ الْمُسَيَّبِ يَقُولُ: رَأَيْتُ عُثْمَانَ قَاعِدًا فِي الْمَقَاعِدِ فَدَعَا بِطَعَامٍ مِمَّا مَسَّتْهُ النَّارُ فَأَكَلَهُ ثُمَّ قَامَ إِلَى الصَّلَاةِ فَصَلَّى ثُمَّ قَالَ عُثْمَانُ: قَعَدْتُ مَقْعَدَ رَسُولِ اللَّهِ ﷺ وَأَكَلْتُ طَعَامَ رَسُولِ اللَّهِ وَصَلَّيْتُ صَلَاةَ رَسُولِ اللَّهِ ﷺ.

உஸ்மான் (ரலி) அவர்கள் 'மகாஇத்' எனுமிடத்தில் அமர்ந்திருந்ததை நான் கண்டேன். அப்போது அவர்கள், சமைக்கப்பட்ட உணவு ஒன்றைக் கொண்டுவரச் செய்து, அதை உட்கொண்டார்கள். பின்னர் (அங்கத் தூய்மை செய்யாமல்) தொழுகைக்காக எழுந்து நின்று தொழுதார்கள். பின்னர் அவர்கள், "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அமர்ந்த இடத்தில் அமர்ந்து, அவர்கள் உண்ட உணவுப் பொருள் போன்றதை உண்டு, அவர்கள் தொழுததைப் போன்றே நானும் தொழுதேன்" என்றார்கள்.[113]

475 மஹ்மூது பின் லபீத் (ரலி) அவர்கள் கூறியதாவது:

٤٧٥ حدثنا الضَّحَّاكُ بْنُ مَخْلَدٍ حَدَّثَنَا عَبْدُ الْحَمِيدِ بْنُ جَعْفَرٍ حَدَّثَنِي أَبِي عَنْ مَحْمُودِ بْنِ لَبِيدٍ أَنَّ عُثْمَانَ رَضِيَ اللَّهُ عَنْهُ أَرَادَ أَنْ يَبْنِيَ مَسْجِدَ الْمَدِينَةِ فَكَرِهَ النَّاسُ ذَاكَ وَأَحَبُّوا أَنْ يَدَعَهُ عَلَى هَيْئَتِهِ، فَقَالَ عُثْمَانُ رَضِيَ اللَّهُ عَنْهُ: سَمِعْتُ رَسُولَ اللَّهِ ﷺ يَقُولُ: مَنْ بَنَى مَسْجِدًا لِلَّهِ بَنَى اللَّهُ لَهُ بَيْتًا فِي الْجَنَّةِ مِثْلَهُ.

(கலீஃபா) உஸ்மான் (ரலி) அவர்கள் மதீனா(விலுள்ள மஸ்ஜிதுந் நபவீ) பள்ளிவாசலை (அதன் பழைய அமைப்பை மாற்றி விரிவுபடுத்திக்) கட்ட விரும்பினார்கள். ஆனால், மக்கள் அதை விரும்பவில்லை; அதை அதன் (பழைய) அமைப்பிலேயே விட்டுவிட வேண்டும் என்று விரும்பினர். அப்போது உஸ்மான் (ரலி) அவர்கள், "அல்லாஹ்வுக்காக யாரேனும் பள்ளிவாசல் ஒன்றைக் கட்டினால், அவருக்காக அல்லாஹ் அதைப் போன்றதோர் இல்லத்தைச் சொர்க்கத்தில் கட்டுகிறான்" என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறியதை

---

112. இந்த ஹதீஸ் 'ஹஸன்' தரத்தில் அமைந்ததாகும் (அல்முஸ்னது ஷாக்கிர்).

113. முன்சென்ற ஹதீஸ் எண் 414இன் அடிக்குறிப்பு காண்க. சமைக்கப்பட்ட பொருளொன்றை உண்டால் 'உளூ' நீங்கிவிடும் என்று முன்னர் சட்டம் இருந்தது. பின்னர் அச்சட்டம் மாற்றப்பட்டுவிட்டது.

நான் செவியேற்றுள்ளேன்" என்றார்கள்.[114]

٤٧٦ حدثنا عَبْدُ الْكَبِيرِ بْنُ عَبْدِ الْمَجِيدِ أَبُو بَكْرٍ الْحَنَفِيُّ حَدَّثَنَا عَبْدُ الْحَمِيدِ بْنُ جَعْفَرٍ عَنْ أَبِيهِ عَنْ مَحْمُودِ بْنِ لَبِيدٍ عَنْ عُثْمَانَ بْنِ عَفَّانَ رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ قَالَ رَسُولُ اللَّهِ ﷺ: مَنْ تَعَمَّدَ عَلَيَّ كَذِبًا فَلْيَتَبَوَّأْ بَيْتًا فِي النَّارِ.

476 அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

என்மீது யார் திட்டமிட்டுப் பொய் யொன்றைக் கூறினாரோ, அவர் தனது குடியிருப்பை நரகத்தில் அமைத்துக் கொள்ளட்டும்.

இதை உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.[115]

٤٧٧ حدثنا إِسْمَاعِيلُ حَدَّثَنَا يُونُسُ حَدَّثَنَا عَطَاءُ بْنُ فَرُّوخَ مَوْلَى الْقُرَشِيِّينَ عَنْ عُثْمَانَ بْنِ عَفَّانَ رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ قَالَ رَسُولُ اللَّهِ ﷺ: أَدْخَلَ اللَّهُ رَجُلًا الْجَنَّةَ كَانَ سَهْلًا مُشْتَرِيًا وَبَائِعًا وَقَاضِيًا وَمُقْتَضِيًا.

477 அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

விற்கும்போதும் வாங்கும்போதும் உரிமை வழங்கும்போதும் உரிமை கோரும் போதும் மென்மையாக நடந்துகொள்ளும் மனிதரை அல்லாஹ் சொர்க்கத்தில் நுழைவிப்பான்.

இதை உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.[116]

٤٧٨ حدثنا سُلَيْمَانُ بْنُ حَرْبٍ حَدَّثَنَا حَمَّادُ بْنُ زَيْدٍ عَنْ يَحْيَى بْنِ سَعِيدٍ عَنْ أَبِي أُمَامَةَ بْنِ سَهْلِ بْنِ حُنَيْفٍ قَالَ: كُنَّا مَعَ عُثْمَانَ وَهُوَ مَحْصُورٌ فِي الدَّارِ قَالَ: وَلِمَ تَقْتُلُونَنِي؟ سَمِعْتُ رَسُولَ اللَّهِ ﷺ يَقُولُ: لَا يَحِلُّ دَمُ امْرِئٍ مُسْلِمٍ إِلَّا بِإِحْدَى ثَلَاثٍ رَجُلٌ كَفَرَ بَعْدَ إِسْلَامِهِ أَوْ زَنَى بَعْدَ إِحْصَانِهِ أَوْ قَتَلَ نَفْسًا فَيُقْتَلُ بِهَا.

478 அபூஉமாமா பின் சஹ்ல் பின் ஹுனைஃப் (ரலி) அவர்கள் கூறியதாவது:

உஸ்மான் (ரலி) அவர்கள் (கிளர்ச்சியாளர்களால்) வீட்டில் முற்றுகையிடப் பட்டிருந்தபோது, அவர்களுடன் நாங்களும் இருந்தோம். அப்போது உஸ்மான் (ரலி) அவர்கள் (மக்களை நோக்கி), "நீங்கள் எதற்காக என்னைக் கொல்(ல முயலு)கிறீர்கள்? அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், 'முஸ்லிமான மனிதரை (நியாயமான) மூன்று காரணங்களுள் ஒன்றை முன்னிட்டே தவிர வேறெதற்காகவும் கொலை செய்ய அனுமதி இல்லை. 1. இஸ்லாத்தைத் தழுவிய பின்னர், (இஸ்லாத்திலிருந்து வெளியேறி) இறைமறுப்புக்குச் செல்லல். 2. திருமணம் முடித்ததற்குப் பிறகு, விபசாரம் புரிதல். 3. ஒருவரை (அநியாயமாகக்) கொலை செய்து, அதற்குப் பகரமாக அவர் கொல்லப்படுதல். இவற்றுள் ஒன்றை முன்னிட்டே ஒருவர் கொலை செய்யப்படுவார்' என்று கூறியதை நான் செவியுற்றுள்ளேன். (பின்னர் எந்த அடிப்படையில் என்னை நீங்கள் கொல்வீர்கள்?)" என்று கேட்டார்கள்.[117]

114. காண்க: முன்சென்ற ஹதீஸ் எண் - 407 மற்றும் அதன் அடிக்குறிப்பு

115. பார்க்க: புகாரீ ஹதீஸ் எண் - 110, முஸ்லிம் முன்னுரை ஹதீஸ் எண் - 4; முன்னர் சென்ற ஹதீஸ் எண் - 439 மற்றும் அதன் அடிக்குறிப்பு

116. காண்க: முன்சென்ற ஹதீஸ் எண்கள் - 387, 390, 454 மற்றும் அடிக்குறிப்புகள்.

117. காண்க: முன்சென்ற ஹதீஸ் எண்கள் - 411, 423, 438 மற்றும் அடிக்குறிப்புகள்; பின்வரும் ஹதீஸ் எண் - 1328.

٤٧٩ حدثنا عُثْمَانُ بْنُ عُمَرَ حَدَّثَنَا ابْنُ أَبِي ذِئْبٍ عَنْ سَعِيدِ بْنِ خَالِدِ بْنِ عَبْدِ اللَّهِ بْنِ قَارِظٍ عَنْ أَبِي عُبَيْدٍ مَوْلَى عَبْدِ الرَّحْمَنِ بْنِ أَزْهَرَ قَالَ: رَأَيْتُ عَلِيًّا وَعُثْمَانَ رَضِيَ اللَّهُ عَنْهُمَا يُصَلِّيَانِ يَوْمَ الْفِطْرِ وَالْأَضْحَى ثُمَّ يَنْصَرِفَانِ يُذَكِّرَانِ النَّاسَ قَالَ وَسَمِعْتُهُمَا يَقُولَانِ: إِنَّ رَسُولَ اللَّهِ ﷺ نَهَى عَنْ صِيَامِ هَذَيْنِ الْيَوْمَيْنِ.

٤٨٠ حدثنا قَالَ وَسَمِعْتُ عَلِيًّا يَقُولُ: نَهَى رَسُولُ اللَّهِ ﷺ أَنْ يَبْقَى مِنْ نُسُكِكُمْ عِنْدَكُمْ شَيْءٌ بَعْدَ ثَلَاثٍ.

٤٨١ حدثنا بَهْزٌ حَدَّثَنَا أَبُو عَوَانَةَ حَدَّثَنَا حُصَيْنٌ عَنْ عَمْرِو بْنِ جَاوَانَ قَالَ قَالَ الْأَحْنَفُ: انْطَلَقْنَا حُجَّاجًا فَمَرَرْنَا بِالْمَدِينَةِ فَبَيْنَمَا نَحْنُ فِي مَنْزِلِنَا إِذْ جَاءَنَا آتٍ فَقَالَ النَّاسُ مِنْ فَزَعٍ فِي الْمَسْجِدِ فَانْطَلَقْتُ أَنَا وَصَاحِبِي فَإِذَا النَّاسُ مُجْتَمِعُونَ عَلَى نَفَرٍ فِي الْمَسْجِدِ قَالَ فَتَخَلَّلْتُهُمْ حَتَّى قُمْتُ عَلَيْهِمْ فَإِذَا عَلِيُّ بْنُ أَبِي طَالِبٍ وَالزُّبَيْرُ وَطَلْحَةُ وَسَعْدُ بْنُ أَبِي وَقَّاصٍ قَالَ فَلَمْ يَكُنْ ذَلِكَ بِأَسْرَعَ مِنْ أَنْ جَاءَ عُثْمَانُ يَمْشِي فَقَالَ: أَهَاهُنَا عَلِيٌّ؟ قَالُوا: نَعَمْ

479 *அப்துர் ரஹ்மான் பின் அஸ்ஹர் (ரஹ்) அவர்களின் (முன்னாள்) அடிமை அபூஉபைத் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:*

நான் நோன்புப் பெருநாள் மற்றும் ஹஜ்ஜுப் பெருநாள் நாட்களில் அலீ (ரலி), உஸ்மான் (ரலி) ஆகிய இருவரையும் பார்த்துள்ளேன். அவ்விருவரும் பெருநாள் தொழுகை(யை நடத்தி) முடித்துவிட்டுத் திரும்பி மக்களுக்குச் சொற்பொழிவு (குத்பா) நிகழ்த்துவார்கள். அப்போது அவ்விருவரும், "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் இந்த இரு பெருநாட்களிலும் நோன்பு நோற்கக் கூடாது எனத் தடை செய்துள்ளார்கள்" என்று கூறியதை நான் செவியுற்றுள்ளேன்.[118]

480 *அப்துர் ரஹ்மான் பின் அஸ்ஹர் (ரஹ்) அவர்களின் (முன்னாள்) அடிமை அபூஉபைத் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:*

அலீ (ரலி) அவர்கள் (ஹஜ்ஜுப் பெரு நாள் உரையில்), "உங்களுடைய குர்பானி இறைச்சியில் எதுவும் மூன்று நாட்களுக்கு மேல் உங்களிடம் எஞ்சியிருக்கக் கூடாது என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் தடைவிதித்தார்கள்" எனக் கூறியதை நான் செவியுற்றேன்.[119]

481 *அஹ்னஃப் (ளஹ்ஹாக் பின் கைஸ் - ரஹ்) அவர்கள் கூறியதாவது:*

நாங்கள் 'ஹஜ்' செய்ய (மக்காவுக்குச்) சென்றோம். பிறகு மதீனாவைக் கடந்து சென்றோம். (மதீனாவில்) நாங்கள் எங்களுடைய தங்குமிடத்தில் இருந்தபோது எங்களிடம் ஒருவர் வந்து, "மக்களெல்லாம் பள்ளிவாசலில் பீதியுடன் உள்ளார்கள்" என்றார். உடனே நானும் என்னுடைய தோழர் ஒருவரும் (பள்ளிவாசலுக்குப்) போனோம். அங்கு மக்கள் ஒருவரைச் சுற்றிக் குழுமியிருந்தனர்.

உடனே நான் மக்கள் கூட்டத்துக்குள் ஊடுருவிச் சென்று, அவர்களுக்கு முன்னால் போய் நின்றேன். அங்கு அலீ பின் அபீதாலிப் (ரலி), ஸுபைர் (ரலி), தல்ஹா (ரலி), சஅது பின் அபீவக்காஸ் (ரலி) ஆகியோர் இருந்தனர். அதற்குள் உஸ்மான் (ரலி) அவர்கள் மிக வேகமாக அங்கு வந்(து சேர்ந்)தார்கள்.

"இங்கே அலீ இருக்கின்றாரா?" என்று கேட்டார்கள். குழுமியிருந்தவர்கள், "ஆம்"

118, 119. இவ்விரண்டு (479, 480) ஹதீஸ்களும் முன்னர் 408, 409 ஆகிய எண்களில் சென்றுள்ளன. குர்பானி இறைச்சியை மூன்று நாட்களுக்கு மேல் சேமித்து வைக்கக் கூடாது எனும் தடை பஞ்சம் ஏற்பட்டிருந்த ஒரு சந்தர்ப்பத்தில் விதிக்கப்பட்டிருந்தது. பின்னர் இத்தடை நீக்கப்பட்டு விட்டது. எனவே குர்பானி இறைச்சியை சேமித்து வைக்க அனுமதியுண்டு. இதுபற்றி அறியக் காண்க: முஸ்லிம் ஹதீஸ் எண்கள்: 3986-3994.

قَالَ أَهَاهُنَا الزُّبَيْرُ؟ قَالُوا: نَعَمْ قَالَ أَهَاهُنَا طَلْحَةُ قَالُوا نَعَمْ
قَالَ أَهَاهُنَا سَعْدٌ؟ قَالُوا نَعَمْ قَالَ: أَنْشُدُكُمْ بِاللَّهِ الَّذِي لاَ
إِلَهَ إِلاَّ هُوَ أَتَعْلَمُونَ أَنَّ رَسُولَ اللَّهِ ﷺ قَالَ: مَنْ يَبْتَاعُ
مِرْبَدَ بَنِي فُلاَنٍ غَفَرَ اللَّهُ لَهُ؟ فَابْتَعْتُهُ فَأَتَيْتُ رَسُولَ اللَّهِ ﷺ
فَقُلْتُ: إِنِّي قَدْ ابْتَعْتُهُ فَقَالَ: اجْعَلْهُ فِي مَسْجِدِنَا وَأَجْرُهُ
لَكَ قَالُوا: نَعَمْ قَالَ أَنْشُدُكُمْ بِاللَّهِ الَّذِي لاَ إِلَهَ إِلاَّ هُوَ
أَتَعْلَمُونَ أَنَّ رَسُولَ اللَّهِ ﷺ قَالَ: مَنْ يَبْتَاعُ بِئْرَ رُومَةَ؟
فَابْتَعْتُهَا بِكَذَا وَكَذَا فَأَتَيْتُ رَسُولَ اللَّهِ ﷺ فَقُلْتُ: إِنِّي قَدْ
ابْتَعْتُهَا يَعْنِي بِئْرَ رُومَةَ، فَقَالَ: اجْعَلْهَا سِقَايَةً لِلْمُسْلِمِينَ
وَأَجْرُهَا لَكَ قَالُوا نَعَمْ قَالَ أَنْشُدُكُمْ بِاللَّهِ الَّذِي لاَ إِلَهَ إِلاَّ
هُوَ أَتَعْلَمُونَ أَنَّ رَسُولَ اللَّهِ ﷺ نَظَرَ فِي وُجُوهِ الْقَوْمِ يَوْمَ
جَيْشِ الْعُسْرَةِ؟ فَقَالَ: مَنْ يُجَهِّزُ هَؤُلاَءِ غَفَرَ اللَّهُ لَهُ فَجَهَّزْتُهُمْ

என்றனர். "இங்கே ஸுபைர் இருக்கின்றாரா?" என்று கேட்டார்கள். குழுமியிருந்தவர்கள், "ஆம்" என்றனர். "இங்கே தல்ஹா இருக்கின்றாரா?" என்று கேட்டார்கள். குழுமியிருந்தவர்கள், "ஆம்" என்றனர். "இங்கே "சஅது" இருக்கின்றாரா?" என்று கேட்டார்கள். குழுமியிருந்தவர்கள், "ஆம்" என்றனர்.

பின்னர் உஸ்மான் (ரலி) அவர்கள், "யாரைத் தவிர வேறு இறைவன் இல்லையோ, அந்த அல்லாஹ்வை முன்னிறுத்தி உங்களிடம் கேட்கிறேன்: (ஒரு முறை) அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "இன்ன சமூகத்தாரின் ஒட்டகத் தொழுவத்தை யாரேனும் விலைக்கு வாங்கினால், அவருக்கு அல்லாஹ் மன்னிப்பு வழங்குவான்" என்று கூறியபோது, நான் அதை வாங்கிவிட்டு நபி (ஸல்) அவர்களிடம் வந்து, 'நான் அ(ந்தத் தொழுவத்)தை விலைக்கு வாங்கிவிட்டேன்' என்று சொன்னேன். அப்போது நபி (ஸல்) அவர்கள், 'அ(ந்த இடத்)தை நீர் நம்முடைய பள்ளிவாசலுக்கு (அறக்கொடையாக) வழங்கினால், அதற்கான பிரதிபலன் உமக்குக் கிடைக்கும் (சம்மதமா)?' என்று கேட்டது(ம், நான் அதை அறக்கொடையாக வழங்கியதும்) உங்களுக்குத் தெரியுமல்லவா?" என்று கேட்டார்கள். அதற்கு அங்கிருந்தவர்கள், "ஆம்!" (தெரியும்) என்றனர்

மறுபடியும் உஸ்மான் (ரலி) அவர்கள், "யாரைத் தவிர வேறு இறைவன் இல்லையோ, அந்த அல்லாஹ்வை முன்னிறுத்தி உங்களிடம் கேட்கிறேன்: (ஒரு முறை) அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், 'யாரேனும் 'ரூமா' கிணற்றை விலைக்கு வாங்குவார்களா?' என்று கேட்டார்கள். உடனே நான் இன்னின்ன விலை கொடுத்து அதை வாங்கிவிட்டு, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் வந்து, 'நான் 'ரூமா' கிணற்றை விலைக்கு வாங்கிவிட்டேன்' என்றேன். நபி (ஸல்) அவர்கள், 'அதை நீர் முஸ்லிம்களின் குடிநீர் ஆதாரத்திற்காக அர்ப்பணம் செய்வீராக! அதற்கான பிரதிபலன் உமக்கு உண்டு (சம்மதமா)?' என்று கேட்டது(ம், நான் அதை அர்ப்பணித்த விவரம்) உங்களுக்குத் தெரியுமல்லவா?" என்று கேட்டார்கள். அதற்கும் அங்கிருந்தவர்கள், "ஆம்!" (தெரியும்) என்றனர்.

மறுபடியும் உஸ்மான் (ரலி) அவர்கள், "யாரைத் தவிர வேறு இறைவன் இல்லையோ, அந்த அல்லாஹ்வை முன்னிறுத்தி உங்களிடம் கேட்கிறேன்: (ஒரு முறை) அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் 'அல்உஸ்ரா' (எனும் சிரமம் நிறைந்த காலக் கட்டத்தில் நடந்த தபூக்) போர்ப் படையை ஆயத்தம் செய்துகொண்டிருந்த நாளில், (போருக்குச் செல்ல ஆசையிருந்தும், வசதி வாய்ப்பில்லாமல் வாட்டத்துடன் நின்று கொண்டிருந்த) சிலருடைய முகத்தைப் பார்த்துவிட்டு, 'இவர்களுக்கு அறப்போரில் கலந்துகொள்வதற்குத் தேவையான ஆயத்தப் பொருட்களை ஏற்பாடு செய்து கொடுப்பவர் யாரேனும் உள்ளாரா? அவருக்கு அல்லாஹ் பாவமன்னிப்பு அளிப்பான்" என்று கேட்டார்கள். உடனே நான் மூக்கணாங் கயிறுகூட விடாமல், அனைத்து ஆயத்தப்

حَتَّى مَا يَفْقِدُونَ عِطَامًا وَلَا عِقَالًا قَالُوا: اللَّهُمَّ نَعَمْ، قَالَ: اللَّهُمَّ اشْهَدْ اللَّهُمَّ اشْهَدْ اللَّهُمَّ اشْهَدْ ثُمَّ انْصَرَفَ.

பொருட்களையும் ஏற்பாடு செய்து கொடுத்தது உங்களுக்குத் தெரியுமல்லவா?" என்று கேட்டார்கள். அதற்கும் அங்கிருந்தவர்கள், "ஆம்!" (தெரியும்) என்றனர்.

பின்னர் உஸ்மான் (ரலி) அவர்கள், "இறைவா! நீயே சாட்சி. இறைவா! நீயே சாட்சி. இறைவா! நீயே சாட்சி" என்று சொல்லிவிட்டுத் திரும்பிச் சென்றார்கள்.[120]

٤٨٢ حدثنا مُحَمَّدُ بْنُ بَكْرٍ أَخْبَرَنَا ابْنُ جُرَيْجٍ أَخْبَرَنِي سُلَيْمَانُ بْنُ عَتِيقٍ عَنْ عَبْدِ اللَّهِ بْنِ بَابَيْهِ عَنْ بَعْضِ بَنِي يَعْلَى بْنِ أُمَيَّةَ قَالَ قَالَ يَعْلَى: طُفْتُ مَعَ عُثْمَانَ فَاسْتَلَمْنَا الرُّكْنَ قَالَ يَعْلَى: فَكُنْتُ مِمَّا يَلِي الْبَيْتَ فَلَمَّا بَلَغْنَا الرُّكْنَ الْغَرْبِيَّ الَّذِي يَلِي الْأَسْوَدَ جَرَرْتُ بِيَدِهِ لِيَسْتَلِمَ فَقَالَ: مَا شَأْنُكَ؟ فَقُلْتُ: أَلَا تَسْتَلِمُ؟ قَالَ فَقَالَ: أَلَمْ تَطُفْ مَعَ رَسُولِ اللَّهِ ﷺ؟ فَقُلْتُ: بَلَى، قَالَ: أَرَأَيْتَهُ يَسْتَلِمُ هَذَيْنِ الرُّكْنَيْنِ الْغَرْبِيَّيْنِ؟ قُلْتُ: لَا، قَالَ: أَفَلَيْسَ لَكَ فِيهِ أُسْوَةٌ حَسَنَةٌ، قُلْتُ: بَلَى، قَالَ: فَانْفُذْ عَنْكَ.

482 யஅலா பின் உமய்யா குலத்தாருள் ஒருவர் கூறியதாவது:

நான் (ஒரு முறை) உஸ்மான் (ரலி) அவர்களுடன் ('கஅபா'வைச்) சுற்றி (தவாஃப்) வந்துகொண்டிருந்தேன். நாங்கள் இருவரும் 'ருக்னுல் யமானீ' (யமன் தேச மூலை)யைக் கையால் தொட்(டு முத்தமிட்)டோம். அப்போது நான் கஅபாவின் அருகில் இருந்தேன். நாங்கள் ஹஜருல் அஸ்வதை அடுத்துள்ள மேற்குப் பகுதி மூலையை அடைந்ததும், அதைக் கையால் தொட்(டு முத்தமி)டுவதற்காக உஸ்மான் (ரலி) அவர்களின் கையைப் பிடித்து இழுத்தேன். அதற்கு அவர்கள், "உமக்கென்ன நேர்ந்தது?" என்றார்கள். நான், "நீங்கள் (இந்த மேற்குப் பகுதி மூலையைக்) கையால் தொ(ட்டு முத்தமி)டவில்லையா?" எனக் கேட்டேன்.

அதற்கு உஸ்மான் (ரலி) அவர்கள், "நீர் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுடன் (கஅபாவைச்) சுற்றி (தவாஃப்) வந்ததில்லையா?" என்று கேட்டார்கள். நான், "ஆம்! (சுற்றி வந்துள்ளேனே)" என்றேன். உஸ்மான் (ரலி) அவர்கள், "நபி (ஸல்) அவர்கள் இந்த இரு மேற்குப் பகுதி மூலைகளையும் கையால் முத்தமிட்டதை நீர் பார்த்துள்ளீரா?" என்று கேட்டார்கள். நான், "இல்லை" என்றேன். உஸ்மான் (ரலி) அவர்கள், "உமக்கு நபி (ஸல்) அவர்களிடம் அழகிய முன்மாதிரி இல்லையா?" என்று கேட்டார்கள். நான், "ஆம்! (இருக்கிறது)" என்றேன். உஸ்மான் (ரலி) அவர்கள், "அவ்வாறாயின், (அவ்விரண்டையும் முத்தமிடுவதை) நீர் தவிர்த்துக்கொள்வீராக" என்றார்கள்.[121]

٤٨٣ حدثنا أَبُو عَبْدِ الرَّحْمَنِ الْمُقْرِئُ حَدَّثَنَا حَيْوَةُ أَنْبَأَنَا أَبُو عَقِيلٍ أَنَّهُ سَمِعَ الْحَارِثَ مَوْلَى عُثْمَانَ يَقُولُ: جَلَسَ

483 உஸ்மான் (ரலி) அவர்களின் (முன்னாள்) அடிமை ஹாரிஸ் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

---

120. காண்க: முன்சென்ற ஹதீஸ் எண் - 394 மற்றும் அதன் அடிக்குறிப்பு.

121. இந்த ஹதீஸ் முஸ்னது அஹ்மதில் மட்டுமே இடம்பெற்றுள்ளது. இந்த ஹதீஸின் அறிவிப்பாளர் தொடர்பாக 'யஅலா பின் உமய்யா குலத்தாருள் ஒருவர் கூறியதாவது' என்று மர்மமாகவே இடம்பெற்றுள்ளது. அவர் யாரென்ற விவரம் ஏதும் இல்லாததால், இது பலவீனமான செய்தியாகும். எனினும், வேறு சரியான அறிவிப்பாளர்தொடரில் இது முன்னர் சென்றுள்ளது. பார்க்க: முன்சென்ற ஹதீஸ் எண்கள் - 245, 296. இவ்விரு அறிவிப்புகளிலும் யஅலா பின் உமய்யா (ரலி) அவர்கள் உமர் (ரலி) அவர்களுடன் தவாஃப் வந்தபோதே இந்நிகழ்வு நடந்ததாகக் காணப்படுகிறது.

ஒருநாள் உஸ்மான் (ரலி) அவர்கள் அமர்ந்திருந்தார்கள். அவர்களுடன் நாங்களும் அமர்ந்திருந்தோம் அப்போது தொழுகை அறிவிப்பாளர் (முஅத்தின்) உஸ்மான் (ரலி) அவர்களிடம் வந்(து தொழுகை நடத்த வருமாறு அழைப்பு விடுத்)தார். அப்போது உஸ்மான் (ரலி) அவர்கள் ஒரு பாத்திரத்தில் தண்ணீர் கொண்டு வரச் சொன்னார்கள். அந்தப் பாத்திரத்தின் கொள்ளளவு ஒரு 'முத்'[122] இருக்கும் என்று கருதுகிறேன்.

عُثْمَانُ يَوْمًا وَجَلَسْنَا مَعَهُ فَجَاءَهُ الْمُؤَذِّنُ فَدَعَا بِمَاءٍ فِي
إِنَاءٍ أَظُنُّهُ سَيَكُونُ فِيهِ مُدٌّ فَتَوَضَّأَ ثُمَّ قَالَ: رَأَيْتُ رَسُولَ
اللَّهِ ﷺ يَتَوَضَّأُ وُضُوئِي هَذَا، ثُمَّ قَالَ: وَمَنْ تَوَضَّأَ وُضُوئِي
ثُمَّ قَامَ فَصَلَّى صَلَاةَ الظُّهْرِ غُفِرَ لَهُ مَا كَانَ بَيْنَهَا وَبَيْنَ
الصُّبْحِ ثُمَّ صَلَّى الْعَصْرَ غُفِرَ لَهُ مَا بَيْنَهَا وَبَيْنَ صَلَاةِ
الظُّهْرِ ثُمَّ صَلَّى الْمَغْرِبَ غُفِرَ لَهُ مَا بَيْنَهَا وَبَيْنَ صَلَاةِ
الْعَصْرِ ثُمَّ صَلَّى الْعِشَاءَ غُفِرَ لَهُ مَا بَيْنَهَا وَبَيْنَ صَلَاةِ

(அத்தண்ணீரால்) உஸ்மான் (ரலி) அவர்கள் அங்கத் தூய்மை (உளூ) செய்தார்கள் பின்னர், "நான் செய்த இந்த அங்கத் தூய்மையைப் போன்றே அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அங்கத் தூய்மை செய்ததை நான் பார்த்தேன்" என்று சொல்லிவிட்டுத் தொடர்ந்து (பின்வருமாறு) கூறினார்கள்:

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நான் செய்த இந்த அங்கத் தூய்மையைப் போன்று யாரேனும் அங்கத் தூய்மை செய்துவிட்டுப் பின்னர் 'லுஹ்ர்' தொழுகையை நிறைவேற்றினால், லுஹ்ருக்கும் சுப்ஹுக்கும் இடைப்பட்ட நேரத்தில் நிகழ்ந்த (சிறு)[123] பாவங்கள் அவருக்காக மன்னிக்கப்படுகின்றன.

பின்னர் (அதைப் போன்றே அங்கத் தூய்மை செய்துவிட்டு) 'அஸ்ர்' தொழுகையை நிறைவேற்றினால், அஸ்ருக்கும் லுஹ்ருக்கும் இடைப்பட்ட நேரத்தில் நிகழ்ந்த (சிறு) பாவங்கள் அவருக்காக மன்னிக்கப்படுகின்றன. பின்னர் (அதைப் போன்றே அங்கத் தூய்மை செய்துவிட்டு) 'மஃக்ரிப்' தொழுகையை நிறைவேற்றினால், மஃக்ரிபுக்கும் அஸ்ருக்கும் இடைப்பட்ட நேரத்தில் நிகழ்ந்த (சிறு) பாவங்கள் அவருக்காக மன்னிக்கப்படுகின்றன

122. இது மதீனாவில் அன்றிருந்த முகத்தலளவையின் பெயர். ஒரு 'முத்' (muddu) என்பது 586 மி லிட்டர் அளவு கொண்டதாகும். [illegible] அளவில் 687 கிராமுக்கு நிகரானதாகும்.

123. சில இடங்களில் சிறுபாவங்கள் மன்னிக்கப்படும் என்று மொழியாக்கம் செய்யப்பட்டு 'சிறு' என்பது அடைப்புக் குறிக்குள் தரப்பட்டுள்ளது. இதற்குக் காரணம் பின்வரும் நபிமொழிகளில் வந்துள்ளது: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஐவேளைத் தொழுகைகள், ஒரு ஜுமுஆவிலிருந்து மறு ஜுமுஆ ஆகியன அவற்றுக்கிடையே ஏற்படும் பாவங்களுக்குப் பரிகாரமாகும்; பெரும்பாவங்களில் சிக்காதவரை. (முஸ்லிம் ஹதீஸ் எண் - 394) நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஐவேளைத் தொழுகைகள், ஒரு ஜுமுஆவிலிருந்து மறு ஜுமுஆ, ஒரு ரமளானிலிருந்து மறு ரமளான் ஆகியன அவற்றுக்கிடையே ஏற்படும் பாவங்களுக்குப் பரிகாரமாகும்; பெரும் பாவங்களில் ஈடுபடாமல் இருந்தால். (முஸ்லிம் - 396)

மேலும் நபி (ஸல்) அவர்கள் பெரும்பாவங்கள் பற்றிக் கூறும்போது, அல்லாஹ்வுக்கு இணைவைப்பது, பெற்றோரைப் புண்படுத்துவது, கொலை செய்வது, பொய் பேசுவது ஆகியவை பெரும் பாவங்களில் அடங்கும் என்று கூறினார்கள். புகாரீ - 2653, 5977, 6871 முஸ்லிம்-144 சூனியம் செய்வது, அநாதைகளின் சொத்தை உண்பது, வட்டி வாங்குவது, போரின்போது புறமுதுகிட்டு ஓடுவது, அப்பாவிகளான இறைநம்பிக்கை கொண்ட பெண்கள்மீது அவதூறு கூறுவது ஆகியவையும் பெரும்பாவங்கள் என முஸ்லிம் (145), புகாரீ (2766, 5764, 6857) ஆகிய நூல்களில் காணப்படுகிறது. இவை மிகக் கொடிய பாவங்கள். இவற்றுள் சில அல்லாஹ்வோடு தொடர்புடையவை; சில மனிதர்களுக்குச் செய்யும் பாவங்கள். இவை மன்னிக்கப்பட வேண்டுமானால் இறைவனிடம் பாவமன்னிப்புத் தேடுவது, மனிதர்களிடமிருந்து பறிக்கப்பட்ட உரிமைகளை வழங்கிவிடும் [illegible] வேண்டுவது ஆகியவற்றின் மூலமே அவை மன்னிக்கப்படுமே தவிர, வெறுமனே 'உளூச்' செய்வது, தொழுவது ஆகியவற்றால் அவை மன்னிக்கப்படமாட்டா என்பது கவனிக்கத்தக்கது.

المغرب، ثم لعله أن يبيت يتمرغ ليلته ثم إن قام فتوضأ
وصلى الصبح غفر له ما بينها وبين صلاة العشاء وهن
الحسنات يذهبن السيئات، قالوا: هذه الحسنات فما
الباقيات يا عثمان؟ قال: هن لا إله إلا الله وسبحان الله
والحمد لله والله أكبر ولا حول ولا قوة إلا بالله.

٤٨٤ حدثنا حجاج حدثنا ليث حدثني عقيل عن ابن
شهاب عن يحيى بن سعيد بن العاص أن سعيد بن
العاص أخبره أن عائشة زوج النبي ﷺ وعثمان حدثاه
أن أبا بكر رضي الله عنه استأذن على رسول الله ﷺ
وهو مضطجع على فراشه لابس مرط عائشة فأذن لأبي
بكر رضي الله عنه وهو كذلك فقضى إليه حاجته ثم

பின்னர் (அதைப் போன்றே அங்கத் தூய்மை செய்துவிட்டு) 'இஷா'த் தொழுகையை நிறைவேற்றினால், இஷாவுக்கும் மஃக்ரிபுக்கும் இடைப்பட்ட நேரத்தில் நிகழ்ந்த பாவங்கள் அவருக்காக மன்னிக்கப்படுகின்றன. பின்னர் அவர் அந்த இரவு முழுவதும் புரண்டு புரண்டு (ஆழ்ந்து) உறங்கக்கூடும். பின்னர் அவர் எழுந்து (அதைப் போன்றே) அங்கத் தூய்மை செய்துவிட்டு, 'சுப்ஹு'த் தொழுகையை நிறைவேற்றினால், சுப்ஹுக்கும் (கடந்த) இஷாவுக்கும் இடைப்பட்ட நேரத்தில் நிகழ்ந்த (சிறு) பாவங்கள் அவருக்காக மன்னிக்கப்படுகின்றன. இவைதாம் (குர்ஆன் 11:114ஆவது வசனத்திலுள்ள) தீமைகளை நீக்கும் நற்செயல்கள் ஆகும்.

இவ்வாறு குறிப்பிட்ட உஸ்மான் (ரலி) அவர்களிடம், "உஸ்மான் அவர்களே! இவை நற்செயல்கள் எனில், (18:46ஆவது வசனத்திலுள்ள) நிலையான நல்லறங்கள் யாவை?" என்று அங்கிருந்தவர்கள் கேட்டனர். அதற்கு உஸ்மான் (ரலி) அவர்கள், "அவை, 'லா இலாஹ இல்லல்லாஹ்' (அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவனில்லை), 'சுப்ஹானல்லாஹ்' (அல்லாஹ் தூயவன்), 'அல்ஹம்து லில்லாஹ்' (எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே), 'அல்லாஹு அக்பர்' (அல்லாஹ் மிகப்பெரியவன்), 'லா ஹவ்ல வலா குவ்வத்த இல்லா பில்லாஹ்' (தீமையிலிருந்து விடுபடுவதும், நன்மை செய்ய ஆற்றல் பெறுவதும் அல்லாஹ்வின் மூலமே அன்றி வேறில்லை) ஆகிய துதிச் சொற்கள் ஆகும்" என்று விடையளித்தார்கள்.[124]

484 நபி (ஸல்) அவர்களின் மனைவி ஆயிஷா (ரலி), உஸ்மான் (ரலி) ஆகிய இருவரும் கூறியதாவது:

(ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:) (ஒரு நாள்) அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் எனது கம்பளி ஆடையைப் போர்த்தியபடி தமது விரிப்பில் ஒருக்களித்துப் படுத்திருந்தபோது, அபூபக்ர் (ரலி) அவர்கள் உள்ளே வர அனுமதி கேட்டார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அதே நிலையில் (படுத்துக்கொண்டு), அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு உள்ளே வர அனுமதியளித்தார்கள். அவர்கள் உள்ளே வந்து, தமது

---

124. [illegible]

[illegible] - 1502.

[illegible] - 5840.

انصَرَفَ ثُمَّ اسْتَأْذَنَ عُمَرُ رَضِيَ اللّٰهُ عَنْهُ فَأَذِنَ لَهُ وَهُوَ عَلَى تِلْكَ الْحَالِ فَقَضَى إِلَيْهِ حَاجَتَهُ ثُمَّ انصَرَفَ قَالَ عُثْمَانُ رَضِيَ اللّٰهُ عَنْهُ: ثُمَّ اسْتَأْذَنْتُ عَلَيْهِ فَجَلَسَ وَقَالَ لِعَائِشَةَ رَضِيَ اللّٰهُ عَنْهَا اجْمَعِي عَلَيْكِ ثِيَابَكِ فَقَضَيْتُ إِلَيْهِ حَاجَتِي ثُمَّ انصَرَفْتُ، قَالَتْ عَائِشَةُ رَضِيَ اللّٰهُ عَنْهَا: يَا رَسُولَ اللّٰهِ مَا لِي لَمْ أَرَكَ فَزِعْتَ لِأَبِي بَكْرٍ وَعُمَرَ كَمَا فَزِعْتَ لِعُثْمَانَ رَضِيَ اللّٰهُ عَنْهُ؟ قَالَ رَسُولُ اللّٰهِ ﷺ: إِنَّ عُثْمَانَ رَجُلٌ حَيِيٌّ وَإِنِّي خَشِيتُ إِنْ أَذِنْتُ لَهُ عَلَى تِلْكَ الْحَالِ أَنْ لَا يَبْلُغَ إِلَيَّ فِي حَاجَتِهِ.

وَقَالَ اللَّيْثُ: وَقَالَ جَمَاعَةُ النَّاسِ إِنَّ رَسُولَ اللّٰهِ ﷺ قَالَ لِعَائِشَةَ رَضِيَ اللّٰهُ عَنْهَا: أَلَا أَسْتَحْيِي مِمَّنْ يَسْتَحْيِي مِنْهُ الْمَلَائِكَةُ.

حَدَّثَنَا يَعْقُوبُ حَدَّثَنَا أَبِي عَنْ صَالِحٍ قَالَ ابْنُ شِهَابٍ: أَخْبَرَنِي يَحْيَى بْنُ سَعِيدِ بْنِ الْعَاصِ أَنَّ سَعِيدَ بْنَ الْعَاصِ أَخْبَرَهُ أَنَّ عُثْمَانَ وَعَائِشَةَ حَدَّثَاهُ أَنَّ أَبَا بَكْرٍ رَضِيَ اللّٰهُ عَنْهُ اسْتَأْذَنَ عَلَى رَسُولِ اللّٰهِ ﷺ وَهُوَ مُضْطَجِعٌ عَلَى فِرَاشِهِ لَابِسٌ مِرْطَ عَائِشَةَ رَضِيَ اللّٰهُ عَنْهَا، فَذَكَرَ مَعْنَى حَدِيثِ عُقَيْلٍ.

٤٨٥ حَدَّثَنَا يُونُسُ حَدَّثَنَا لَيْثٌ عَنْ يَزِيدَ بْنِ أَبِي حَبِيبٍ عَنْ عَبْدِ اللّٰهِ يَعْنِي ابْنَ أَبِي سَلَمَةَ وَنَافِعِ بْنِ جُبَيْرِ بْنِ مُطْعِمٍ عَنْ مُعَاذِ بْنِ عَبْدِ الرَّحْمَنِ التَّيْمِيِّ عَنْ حُمْرَانَ

அலுவலை(ப் பற்றிப் பேசி) முடித்துக் கொண்டு திரும்பிச் சென்றார்கள்.

பிறகு உமர் (ரலி) அவர்கள் உள்ளே வர அனுமதி கேட்டார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அதே நிலையில் (படுத்துக்கொண்டே), உமர் (ரலி) அவர்களுக்கு உள்ளே வர அனுமதி வழங்கினார்கள். உமர் (ரலி) அவர்கள் உள்ளே வந்து தமது அலுவலை(ப் பற்றிப் பேசி) முடித்துக் கொண்டு திரும்பிச் சென்றார்கள்.

உஸ்மான் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: பிறகு நான் வந்து உள்ளே நுழைய நபி (ஸல்) அவர்களிடம் அனுமதி கேட்டேன். உடனே அவர்கள் (எழுந்து) அமர்ந்து கொண்டார்கள். மேலும், (தம் மனைவி) ஆயிஷா (ரலி) அவர்களிடம், "உனது ஆடையை எடுத்து நன்கு அணிந்துகொள்" என்று கூறினார்கள். (எனக்கு அனுமதி கிடைத்தபோது நான் உள்ளே சென்றேன்.) அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் என்னிடம் தம் அலுவலை(ப் பேசி) முடித்ததும் நான் திரும்பிச் சென்றேன்.

அப்போது ஆயிஷா (ரலி) அவர்கள், "அல்லாஹ்வின் தூதரே! அபூபக்ர் (ரலி), உமர் (ரலி) ஆகியோருக்காக அசையாத நீங்கள் உஸ்மான் (ரலி) அவர்களுக்காக பதற்றம் அடைந்தீர்களே, ஏன்?" என்று கேட்டார்கள். அதற்கு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "உஸ்மான் நாணம் மிகுந்த மனிதர். நான் அதே நிலையில் (படுத்த வண்ணம்) இருந்து கொண்டு, அவருக்கு உள்ளே வர அனுமதி அளித்தால், அவர் தமது தேவையை என்னிடம் தெரிவிக்காமலேயே போய்விடுவாரோ என்று நான் அஞ்சினேன்" என்று சொன்னார்கள்.

இந்த ஹதீஸின் அறிவிப்பாளர்களுள் ஒருவரான லைஸ் பின் சஅத் (ரஹ்) அவர்கள் கூறியதாவது: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் ஆயிஷா (ரலி) அவர்களிடம், "வானவர்கள் யாரைக் கண்டு வெட்கமடைகிறார்களோ, அவரைக் கண்டு நான் வெட்கமடைய வேண்டும் அல்லவா?" என்று கேட்டதாக (நபித்தோழர்களுள்) பலர் கூறினர்.[126]

மேற்கண்ட ஹதீஸ், ஸாலிஹ் பின் கைசான் (ரஹ்) அவர்கள் வாயிலாக மற்றோர் அறிவிப்பாளர்தொடரிலும் வந்துள்ளது.

485 உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்கள் கூறியதாவது:

---

126. இதே ஹதீஸை முஸ்லிமில் 4772, 4773 ஆகிய எண்களில் இடம்பெற்றுள்ளது

مَوْلَى عُثْمَانَ عَنْ عُثْمَانَ بْنِ عَفَّانَ قَالَ: سَمِعْتُ رَسُولَ اللَّهِ ﷺ يَقُولُ: مَنْ تَوَضَّأَ فَأَسْبَغَ الْوُضُوءَ ثُمَّ مَشَى إِلَى صَلَاةٍ مَكْتُوبَةٍ فَصَلَّاهَا غُفِرَ لَهُ ذَنْبُهُ.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "ஒருவர் நிறைவாக அங்கத் தூய்மை (உளூ) செய்து, பின்னர் கடமையான தொழுகைக்காக நடந்துசென்று, (மக்களுடன் சேர்ந்து) அதைத் தொழுதால், அவர் செய்த (சிறு) பாவங்கள் அவருக்காக மன்னிக்கப்படுகின்றன" என்று கூறியதை நான் செவியுற்றேன்.[126]

٤٨٦ حَدَّثَنَا مُحَمَّدُ بْنُ عَبْدِ اللَّهِ بْنِ الزُّبَيْرِ حَدَّثَنَا عُبَيْدُ اللَّهِ يَعْنِي ابْنَ عَبْدِ الرَّحْمَنِ بْنِ مَوْهَبٍ أَخْبَرَنِي عَمِّي عُبَيْدُ اللَّهِ بْنُ عَبْدِ اللَّهِ بْنِ مَوْهَبٍ عَنْ أَبِي هُرَيْرَةَ رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ: رَاحَ عُثْمَانُ رَضِيَ اللَّهُ عَنْهُ إِلَى مَكَّةَ حَاجًّا وَدَخَلَتْ عَلَى مُحَمَّدِ بْنِ جَعْفَرِ بْنِ أَبِي طَالِبٍ امْرَأَتُهُ فَبَاتَ مَعَهَا حَتَّى أَصْبَحَ ثُمَّ غَدَا عَلَيْهِ رَدْعُ الطِّيبِ وَمِلْحَفَةٌ مُعَصْفَرَةٌ مُفْدَمَةٌ فَأَدْرَكَ النَّاسَ بِمَلَلٍ قَبْلَ أَنْ يَرُوحُوا فَلَمَّا رَآهُ عُثْمَانُ انْتَهَرَ وَأَفَّفَ، وَقَالَ: أَتَلْبَسُ الْمُعَصْفَرَ وَقَدْ نَهَى عَنْهُ رَسُولُ اللَّهِ ﷺ، فَقَالَ لَهُ عَلِيُّ بْنُ أَبِي طَالِبٍ رَضِيَ اللَّهُ عَنْهُ: إِنَّ رَسُولَ اللَّهِ ﷺ لَمْ يَنْهَهُ وَلَا إِيَّاكَ إِنَّمَا نَهَانِي.

486 அபூஹுரைரா (ரலி) அவர்கள் கூறியதாவது:

உஸ்மான் (ரலி) அவர்கள் ஹஜ் செய்வதற்காக (ஒரு நாள்) மாலையில் (மக்களுடன்) மக்காவை நோக்கிப் புறப்பட்டார்கள். அப்போது முஹம்மது பின் ஜஅஃபர் பின் அபீதாலிப் (ரஹ்) அவர்கள் இருந்த இடத்தில் அவர்களின் மனைவி நுழைந்தார் அவர் தம் மனைவியுடன் இரவில் தங்கி இருந்தார் பொழுது புலர்ந்தபோது முஹம்மது பின் ஜஅஃபர் (ரஹ்) அவர்கள்மீது வாசனைத் திரவியத்தின் கறை இருந்தது அதுமட்டுமன்றி, கடும் செம்மஞ்சள் நிறச் சாயம் ஏற்றப்பட்ட ஆடையையும் அவர் அணிந்திருந்தார். பின்னர், மக்களெல்லாம் புறப்பட்டுச் செல்வதற்கு முன்னர், 'மலல்'[127] எனுமிடத்திலேயே அவர்களுடன் சேர்ந்துகொண்டார் அப்போது உஸ்மான் (ரலி) அவர்கள் அவரை (அந்தக் கோலத்தில்) கண்டபோது, அவரைக் கண்டித்தார்கள். மேலும், (அவரிடம்) தமது சலிப்பை வெளிப்படுத்திவிட்டு, "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் செம்மஞ்சள் நிறச் சாயமேற்றப்பட்ட ஆடையை அணியலாகாது என்று தடைசெய்திருக்க, நீர் அதை அணிந்துள்ளீரா?" என்று கேட்டார்கள் அப்போது (அருகிலிருந்த) அலீ பின் அபீதாலிப் (ரலி) அவர்கள் உஸ்மான் (ரலி) அவர்களை நோக்கி, "நபி (ஸல்) அவர்கள் அந்தத் தடையை அவருக்கோ உங்களுக்கோ விதிக்கவில்லை; மாறாக, எனக்கே அந்தத் தடையை விதித்தார்கள்" என்று குறிப்பிட்டார்கள்.[128]

٤٨٧ حَدَّثَنَا عَبْدُ اللَّهِ حَدَّثَنِي أَبِي وَأَبُو خَيْثَمَةَ قَالَا

487 உஸ்மான் (ரலி) அவர்கள் கூறியதாவது:

126. காண்க: முன்சென்ற ஹதீஸ் எண் - 452 மற்றும் அதன் அடிக்குறிப்பு

127. 'மலல்' என்பது மக்காவுக்கும் மதீனாவுக்கும் இடையிலுள்ள ஓர் இடம்

128. இந்த ஹதீஸ் முஸ்னது அஹ்மதில் மட்டுமே இடம்பெறுகின்றது. நபி (ஸல்) அவர்கள், அலீ (ரலி) அவர்களிடம் செம்மஞ்சள் நிறச் சாயம் இடப்பட்ட ஆடையை அணிய வேண்டாம் என்று நேரடியாகத் தடுத்துள்ளனர். பொதுவாக மற்றவர்களும் அதை அணிய வேண்டாமென்று தடுத்துள்ளார்கள். பார்க்க: முஸ்லிம் ஹதீஸ் எண்கள் - 4218-4222

இந்த ஹதீஸின் அறிவிப்பாளர்தொடர் பலவீனமானதாகும். இதன் அறிவிப்பாளர்தொடரில் இடம்பெறும் உபைதுல்லாஹ் பின் அப்திர் ரஹ்மான் பின் மவ்ஹப் பலவீனமானவர் ஆவார் என ஹாஃபிழ் இப்னு ஹஜர் (ரஹ்) கூறியுள்ளார்கள். இமாம் ஷாஃபிஈ (ரஹ்), இமாம் அஹ்மது பின் ஹன்பல் (ரஹ்), இமாம் இப்னுல் கத்தான் (ரஹ்) ஆகியோர் 'இவர் யாரென்றே அறியப்படாதவர்' எனக் கூறியுள்ளனர் [illegible]

حَدَّثَنَا يَعْقُوبُ قَالَ أَبِي فِي حَدِيثِهِ: قَالَ أَخْبَرَنَا ابْنُ أَخِي ابْنِ شِهَابٍ وَقَالَ أَبُو خَيْثَمَةَ حَدَّثَنِي عَنْ عَمِّهِ قَالَ أَخْبَرَنِي صَالِحُ بْنُ عَبْدِ اللَّهِ بْنِ أَبِي فَرْوَةَ أَنَّ عَامِرَ بْنَ سَعْدِ بْنِ أَبِي وَقَّاصٍ أَخْبَرَهُ أَنَّهُ سَمِعَ أَبَانَ بْنَ عُثْمَانَ يَقُولُ: قَالَ عُثْمَانُ سَمِعْتُ رَسُولَ اللَّهِ ﷺ يَقُولُ: أَرَأَيْتَ لَوْ كَانَ بِفِنَاءِ أَحَدِكُمْ نَهَرٌ يَجْرِي يَغْتَسِلُ مِنْهُ كُلَّ يَوْمٍ خَمْسَ مَرَّاتٍ مَا كَانَ يَبْقَى مِنْ دَرَنِهِ؟ قَالُوا: لَا شَيْءَ، قَالَ: إِنَّ الصَّلَوَاتِ تُذْهِبُ الذُّنُوبَ كَمَا يُذْهِبُ الْمَاءُ الدَّرَنَ.

(ஒருமுறை) அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "உங்களுள் ஒருவருடைய வீட்டு வாசலில் ஓர் ஆறு ஓடிக்கொண்டிருக்க, அவர் நாள்தோறும் ஐந்து முறை அதில் குளித்தால், அவருடலில் அழுக்கு ஏதேனும் எஞ்சியிருக்குமா?" என்று கேட்டார்கள். அதற்குத் தோழர்கள், "எதுவும் இருக்காது" என்றனர். அப்போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "தண்ணீர் எப்படி அழுக்கைப் போக்குகின்றதோ, அதைப் போன்றே தொழுகைகள் பாவங்களைப் போக்கிவிடும்" என்று கூறினார்கள்.[129]

٤٨٨ حدثنا قَالَ أَبُو عَبْدِ الرَّحْمَنِ وَجَدْتُ فِي كِتَابِ أَبِي حَدَّثَنَا مُحَمَّدُ بْنُ بِشْرٍ حَدَّثَنِي عَبْدُ اللَّهِ بْنُ عَبْدِ اللَّهِ بْنِ الْأَسْوَدِ عَنْ حُصَيْنِ بْنِ عُمَرَ عَنْ مُخَارِقِ بْنِ عَبْدِ اللَّهِ بْنِ جَابِرٍ الْأَحْمَسِيِّ عَنْ طَارِقِ بْنِ شِهَابٍ عَنْ عُثْمَانَ بْنِ عَفَّانَ قَالَ قَالَ رَسُولُ اللَّهِ ﷺ: مَنْ غَشَّ الْعَرَبَ لَمْ يَدْخُلْ فِي شَفَاعَتِي وَلَمْ تَنَلْهُ مَوَدَّتِي.

488 அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

யார் அரபியருக்கு மோசடி செய்கிறாரோ, அவருக்கு எனது பரிந்துரையில் இடமில்லை; என் அன்பும் அவருக்குக் கிடைக்காது.

இதை உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.[130]

٤٨٩ حدثنا عَبْدُ اللَّهِ حَدَّثَنِي عَبَّاسُ بْنُ مُحَمَّدٍ وَأَبُو يَحْيَى الْبَزَّازُ قَالَا حَدَّثَنَا حَجَّاجُ بْنُ نُصَيْرٍ حَدَّثَنَا شُعْبَةُ عَنِ الْعَوَّامِ بْنِ مُزَاحِمٍ مِنْ بَنِي قَيْسِ بْنِ ثَعْلَبَةَ عَنْ أَبِي عُثْمَانَ النَّهْدِيِّ عَنْ عُثْمَانَ أَنَّ رَسُولَ اللَّهِ ﷺ قَالَ: إِنَّ الْجَمَّاءَ لَتُقَصُّ مِنَ الْقَرْنَاءِ يَوْمَ الْقِيَامَةِ.

489 அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

கொம்பில்லாத பிராணிக்காக (அதை முட்டித் தள்ளிய) கொம்புள்ள பிராணியிடம் மறுமைநாளில் பழிவாங்கப்படும்.

இதை உஸ்மான் (ரலி) அறிவிக்கிறார்கள்.[131]

---

129. இந்த ஹதீஸ், இப்னுமாஜா (1387), [illegible] (349), [illegible] (2666), முஸ்னது [illegible] (57) ஆகிய நூல்களிலும் இடம்பெற்றுள்ளது.

130. [illegible] (1/557) [illegible] (64), [illegible] (347) ஆகிய நூல்களிலும் [illegible]

131. [illegible] (6038), திர்மிதீ (2344) ஆகிய நூல்களிலும் இடம்பெற்றுள்ளது. [illegible]

٤٩٠ حدثنا عبد الله حدثنا شيبان بن أبي شيبة حدثنا مبارك بن فضالة حدثنا الحسن قال: شهدت عثمان يأمر في خطبته بقتل الكلاب وذبح الحمام.

490 ஹசன் அல்பஸ்ரீ (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

(கலீஃபா) உஸ்மான் (ரலி) அவர்கள் தமது சொற்பொழிவில் நாய்களைக் கொல்லுமாறும், புறாக்களை அறு(த்துப் புசி)க்குமாறும் கட்டளையிட்டபோது, அங்கு நான் இருந்தேன்.[132]

٤٩١ حدثنا عبد الله حدثني عثمان بن أبي شيبة حدثنا جرير عن مغيرة عن أم موسى قالت: كان عثمان من أجمل الناس.

491 உம்மு மூசா அல்கூஃபிய்யா (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

உஸ்மான் (ரலி) அவர்கள் மக்களிலேயே மிக அழகானவராக இருந்தார்கள்.[133]

٤٩٢ حدثنا عبد الله حدثنا سويد بن سعيد حدثنا إبراهيم بن سعد حدثني أبي عن أبيه قال: كنت أصلي فمر رجل بين يدي، فمنعته فأبى، فسألت عثمان بن عفان فقال: لا يضرك يا ابن أخي.

492 இப்ராஹீம் பின் அப்திர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

நான் தொழுதுகொண்டிருந்தேன். அப்போது எனக்கு முன்னால் (குறுக்கே) ஒருவர் கடந்துசென்றார். அவரைத் தடுத்தேன். அவர் மறுத்து(விட்டு) அப்படியே கடந்து சென்று)விட்டார். (தொழுகையின்போது) நான் செய்த இந்தச் செயல் தொடர்பாக உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்களிடம் பின்னர் விளக்கம் கேட்டேன். அதற்கு அவர்கள், "என் சகோதரர் மகனே! அதனால் உமக்கு எந்த பிரச்சினையும் இல்லை" என்று கூறினார்கள்.[134]

٤٩٣ حدثنا عبد الله حدثنا سويد حدثنا إبراهيم بن سعد حدثني أبي عن أبيه قال قال عثمان: إن وجدتم في كتاب الله عز وجل أن تضعوا رجلي في القيد فضعوها.

493 இப்ராஹீம் பின் அப்திர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

உஸ்மான் (ரலி) அவர்கள் (கிளர்ச்சியாளர்களால் முற்றுகையிடப்பட்டிருந்தபோது முற்றுகையாளர்களை நோக்கி), "எனது காலில் விலங்கிட வேண்டுமென வல்லமையும் மாண்பும் மிக்க அல்லாஹ்வின் வேதத்தில் நீங்கள் கண்டால், அவ்வாறே செய்யுங்கள்" என்றார்கள்.[135]

٤٩٤ حدثنا عبد الله حدثنا أحمد بن عبدة البصري حدثنا المغيرة بن عبد الرحمن بن الحارث المخزومي حدثني أبي عبد الرحمن بن الحارث عن زيد بن علي بن حسين عن أبيه علي بن حسين عن عبيد الله بن أبي رافع مولى رسول الله ﷺ عن علي بن أبي طالب رضي الله عنه أن رسول الله ﷺ وقف بعرفة وهو

494 அலீ பின் அபீதாலிப் (ரலி) அவர்கள் கூறியதாவது:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அரஃபாவில் தங்கியிருந்தபோது, தமக்குப்

---

132. இச்செய்தி முஸ்னது அஹ்மதில் மட்டுமே இடம்பெற்றுள்ளது. [illegible]

133, 134, 135. இம்மூன்று அறிவிப்புகளும் முஸ்னது அஹ்மதில் மட்டுமே இடம்பெற்றுள்ளன. [illegible] இம்மூன்று செய்திகளும் (491-493) [illegible]

مُرْدِفٌ أُسَامَةَ بْنَ زَيْدٍ فَقَالَ: هَذَا الْمَوْقِفُ وَكُلُّ عَرَفَةَ مَوْقِفٌ ثُمَّ دَفَعَ يَسِيرُ الْعَنَقَ وَجَعَلَ النَّاسُ يَضْرِبُونَ يَمِينًا وَشِمَالاً وَهُوَ يَلْتَفِتُ وَيَقُولُ: السَّكِينَةَ أَيُّهَا النَّاسُ السَّكِينَةَ أَيُّهَا النَّاسُ حَتَّى جَاءَ الْمُزْدَلِفَةَ وَجَمَعَ بَيْنَ الصَّلاَتَيْنِ ثُمَّ وَقَفَ بِالْمُزْدَلِفَةِ فَوَقَفَ عَلَى قُزَحَ وَأَرْدَفَ الْفَضْلَ بْنَ عَبَّاسٍ، وَقَالَ: هَذَا الْمَوْقِفُ وَكُلُّ مُزْدَلِفَةَ مَوْقِفٌ ثُمَّ دَفَعَ وَجَعَلَ يَسِيرُ الْعَنَقَ وَالنَّاسُ يَضْرِبُونَ يَمِينًا وَشِمَالاً وَهُوَ يَلْتَفِتُ، وَيَقُولُ: السَّكِينَةَ أَيُّهَا النَّاسُ السَّكِينَةَ.

وَذَكَرَ الْحَدِيثَ بِطُولِهِ.

٤٩٥ حدثنا عبدالله حَدَّثَنَا عُثْمَانُ بْنُ أَبِي شَيْبَةَ حَدَّثَنَا يُونُسُ بْنُ أَبِي يَعْفُورٍ الْعَبْدِيُّ عَنْ أَبِيهِ عَنْ مُسْلِمٍ أَبِي سَعِيدٍ مَوْلَى عُثْمَانَ بْنِ عَفَّانَ أَنَّ عُثْمَانَ بْنَ عَفَّانَ أَعْتَقَ عِشْرِينَ مَمْلُوكًا وَدَعَا بِسَرَاوِيلَ فَشَدَّهَا عَلَيْهِ وَلَمْ يَلْبَسْهَا فِي جَاهِلِيَّةٍ وَلاَ إِسْلاَمٍ وَقَالَ: إِنِّي رَأَيْتُ رَسُولَ اللَّهِ ﷺ الْبَارِحَةَ فِي الْمَنَامِ وَرَأَيْتُ أَبَا بَكْرٍ وَعُمَرَ رَضِيَ اللَّهُ عَنْهُمَا وَإِنَّهُمْ قَالُوا لِي: اصْبِرْ فَإِنَّكَ تُفْطِرُ عِنْدَنَا الْقَابِلَةَ ثُمَّ

பின்னால் தமது வாகனத்தில் உசாமா பின் ஸைத் (ரலி) அவர்களை அமர வைத்திருந்தார்கள். அப்போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "இது தங்குமிடமாகும்; அரஃபா முழுவதுமே தங்குமிடம்தான்" என்று கூறிவிட்டு, பின்னர் (அங்கிருந்து) மிதமான வேகத்தில் (புறப்பட்டுச்) செல்லலானார்கள். அதையடுத்து, மக்களும் இடப் புறமாகவும் வலப் புறமாகவும் (வேக வேகமாகப்) புறப்பட்டார்கள். அப்போது மக்களைத் திரும்பிப் பார்த்த அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "மக்களே! அமைதி! மக்களே! அமைதி!" என்று கூறினார்கள்.

பின்னர் 'முஸ்தலிஃபா' வந்து சேர்ந்த அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், அங்கு (மஃக்ரிப், இஷா ஆகிய) இரண்டு நேரத் தொழுகைகளை ஒரே நேரத்தில் சேர்த்து (ஜம்உ செய்து) தொழுதுவிட்டு, முஸ்தலிஃபாவில் உள்ள 'குஸஹ்' எனும் குன்றில் தங்கினார்கள். அப்போது தமக்குப் பின்னால் (வாகனத்தில்) ஃபள்ல் பின் அப்பாஸ் (ரலி) அவர்களை அமர வைத்திருந்தார்கள். பின்னர் நபி (ஸல்) அவர்கள், "இது தங்குமிடமாகும். முஸ்தலிஃபா முழுவதுமே தங்குமிடம்தான்" என்று கூறிவிட்டு, பின்னர் (அங்கிருந்து) மிதமான வேகத்தில் (புறப்பட்டுச்) செல்லலானார்கள். அதையடுத்து, மக்களும் இடப் புறமாகவும் வலப் புறமாகவும் (வேகவேகமாகப்) புறப்பட்டார்கள். அப்போது மக்களைத் திரும்பிப் பார்த்த நபி (ஸல்) அவர்கள், "மக்களே! அமைதி! மக்களே! அமைதி!" என்று கூறினார்கள்.

இதைத் தொடர்ந்து, இந்த நீண்ட ஹதீஸின் தொடர்ச்சியை அறிவிப்பாளர் அறிவிக்கிறார்.[136]

495 உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்களின் (முன்னாள்) அடிமை அபூசயீத் முஸ்லிம் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

(ஒருமுறை) உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்கள் இருபது அடிமைகளை விடுதலை செய்தார்கள். பின்னர், முழுக்கால் சட்டை ஒன்றைக் கொண்டுவரச் சொல்லி, அதை அணிந்துகொண்டார்கள். அவர்கள் அந்த முழுக்கால் சட்டையை அறியாமைக் காலத்திலும் சரி, இஸ்லாத்தைத் தழுவிய பின்னரும் சரி, ஒருபோதும் அணிந்ததில்லை. பின்னர் அவர்கள், "கடந்த இரவில் நான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களையும் அபூபக்ர், உமர் (ரலி) ஆகியோரையும் கனவில் கண்டேன். அவர்கள் என்னை நோக்கி,

136. [illegible] 530 [illegible]

(உஸ்மானே!) நீர் பொறுமை காப்பீராக! நீர் வரக்கூடிய இரவில் எங்களுடன் நோன்பு துறப்பீர் என்று கூறினர் எனக் குறிப்பிட்டார்கள். பின்னர், திருக்குர்ஆனைக் கொண்டு வரச் சொல்லி, அதைத் தமக்கு முன்னால் விரித்து வைத்தார்கள். திருக்குர்ஆன் தமக்கு முன்னால் இருக்கும் நிலையிலேயே அவர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள்.[137]

دَعَا بِمُصْحَفٍ فَنَشَرَهُ بَيْنَ يَدَيْهِ فَقُتِلَ وَهُوَ بَيْنَ يَدَيْهِ.

496 உஸ்மான் (ரலி) அவர்கள் கூறியதாவது:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அங்கத் தூய்மை (உளூ) செய்ததை நான் பார்த்துள்ளேன். அப்போது அவர்கள் தமது முகத்தை மூன்றுமுறையும், தம்மிரு கைகளை மூன்றுமுறையும் கழுவினார்கள். பின்னர் தம்மிரு முழங்கைகளை மும்மூன்று முறை கழுவினார்கள் தமது தலையை ஈரக் கையால் தடவி (மஸ்ஹுச் செய்யலா)னார்கள். தம்மிரு கால்களையும் ஒருமுறை கழுவினார்கள்.[138]

٤٩٦ حَدَّثَنَا عَبْدُاللهِ حَدَّثَنِي مُحَمَّدُ بْنُ أَبِي بَكْرٍ الْمُقَدَّمِيُّ وَأَبُو الرَّبِيعِ الزَّهْرَانِيُّ قَالاَ حَدَّثَنَا حَمَّادُ بْنُ زَيْدٍ عَنِ الْحَجَّاجِ عَنْ عَطَاءٍ عَنْ عُثْمَانَ قَالَ: رَأَيْتُ رَسُولَ اللهِ ﷺ تَوَضَّأَ فَغَسَلَ وَجْهَهُ ثَلاَثًا وَيَدَيْهِ ثَلاَثًا وَغَسَلَ ذِرَاعَيْهِ ثَلاَثًا ثَلاَثًا وَمَسَحَ بِرَأْسِهِ وَغَسَلَ رِجْلَيْهِ غَسْلاً.

497 நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

٤٩٧ حَدَّثَنَا عَبْدُاللهِ حَدَّثَنِي مُحَمَّدُ بْنُ إِسْحَاقَ الْمُسَيَّبِيُّ حَدَّثَنَا أَنَسُ بْنُ عِيَاضٍ عَنْ أَبِي مَوْدُودٍ عَنْ مُحَمَّدِ بْنِ كَعْبٍ عَنْ أَبَانَ بْنِ عُثْمَانَ عَنْ عُثْمَانَ أَنَّ النَّبِيَّ ﷺ قَالَ: مَنْ قَالَ: بِسْمِ اللهِ الَّذِي لاَ يَضُرُّ مَعَ اسْمِهِ شَيْءٌ فِي الأَرْضِ وَلاَ فِي السَّمَاءِ وَهُوَ السَّمِيعُ الْعَلِيمُ ثَلاَثَ مَرَّاتٍ لَمْ تَفْجَأْهُ فَاجِئَةُ بَلاَءٍ حَتَّى اللَّيْلِ، وَمَنْ قَالَهَا حِينَ يُمْسِي: لَمْ تَفْجَأْهُ فَاجِئَةُ بَلاَءٍ حَتَّى يُصْبِحَ إِنْ شَاءَ اللهُ.

யாரேனும் (காலையில்), "பிஸ்மில்லாஹில்லதீ லா யளுர்ரு மஅஸ்மிஹி ஷைஉன் ஃபில்அர்ளி வலா ஃபிஸ் ஸமாஇ வஹுவஸ் ஸமீஉல் அலீம்" என்று மூன்று முறை கூறினால், அல்லாஹ் நாடினால், இரவுவரை அவரை எந்தச் சோதனையும் திடீரெனத் தாக்காது. யாரேனும் இதை மாலையில் கூறினால், காலைவரை அவரை எந்தவொரு சோதனையும் திடீரெனத் தாக்காது.

(பொருள்: அல்லாஹ்வின் பெயரால்; அவனது பெயருடன் மண்ணிலும் விண்ணிலும் எந்தப் பொருளும் இடையூறு அளிக்க(முடியா)து. அவன் செவியுறுவோனும் நன்கறிந்தோனும் ஆவான்.)

இதை உஸ்மான் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.[139]

498 மூசா பின் இம்ரான் பின் மன்னாஹ் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

٤٩٨ حَدَّثَنَا عَبْدُاللهِ حَدَّثَنَا الْحَكَمُ بْنُ مُوسَى حَدَّثَنَا سَعِيدُ بْنُ مَسْلَمَةَ عَنْ إِسْمَاعِيلَ بْنِ أُمَيَّةَ عَنْ مُوسَى بْنِ

---

137. இந்த ஹதீஸ் [illegible]

138. [illegible] காண்க: முன்சென்ற ஹதீஸ் எண் - 442 மற்றும் அதன் அடிக்குறிப்பு

139. காண்க: முன்சென்ற ஹதீஸ் எண்கள் - 418, 444 மற்றும் அடிக்குறிப்புகள்

عمران بن مناح عن أبان بن عثمان أنه رأى جنازة مقبلة فلما رآها قام فقال: رأيت عثمان يفعل ذلك، وخبرني أنه رأى النبي ﷺ يفعله.

(ஒரு முறை) அபான் பின் உஸ்மான் (ரஹ்) அவர்கள் பிரேத (ஊர்வல)ம் வந்து கொண்டிருந்ததைப் பார்த்தார்கள். அதைப் பார்த்ததும் எழுந்து நின்றார்கள். பின்னர், "(என் தந்தை) உஸ்மான் (ரலி) அவர்கள் இவ்வாறு செய்ததை நான் பார்த்துள்ளேன். அது மட்டுமன்றி, உஸ்மான் (ரலி) அவர்கள், நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு செய்ததைத் தாம் பார்த்ததாக எனக்கு அறிவிக்கவும் செய்தார்கள்" என்று அபான் (ரஹ்) அவர்கள் குறிப்பிட்டார்கள்.[140]

٤٩٩ حدثنا عبدالله حدثنا أبو إبراهيم الترجماني حدثنا إسماعيل بن عياش عن ابن أبي فروة عن محمد بن يوسف عن عمرو بن عثمان بن عفان عن أبيه قال: قال رسول الله ﷺ: الصبحة تمنع الرزق.

499 அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

காலை நேர உறக்கம் வாழ்வாதாரத்தைத் தடுக்கும்.

இதை உஸ்மான் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.[141]

٥٠٠ حدثنا عبدالله حدثني سريج بن يونس حدثنا محبوب بن محرز عن إبراهيم بن عبد الله بن فروخ عن أبيه قال: شهدت عثمان بن عفان رضي الله عنه دفن في ثيابه بدمائه ولم يغسل.

500 அப்துல்லாஹ் பின் ஃபர்ரூக் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்களின் ஜனாஸா அடக்கத்தில் நான் கலந்து கொண்டேன். அவர்கள் நீராட்டப்படாமல், ஏற்கெனவே உடுத்தியிருந்த ஆடையில் இரத்தக் கறைகளுடனேயே அடக்கம் செய்யப்பட்டார்கள்.[142]

٥٠١ حدثنا عبدالله حدثني أبو يحيى البزاز محمد بن عبد الرحيم حدثنا الحسن بن بشر بن سلم الكوفي حدثنا العباس بن الفضل الأنصاري عن هشام بن زياد القرشي عن أبيه عن محجن مولى عثمان عن عثمان

501 அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

---

140. பார்க்க: முன்சென்ற ஹதீஸ் எண் - 464. இவ்விரு ஹதீஸ்களின் (464, 498) அறிவிப்பாளர்தொடர்களும் பலவீனமானவையாகும். ஏனெனில், இவ்விரு அறிவிப்பாளர்தொடர்களிலும் சஅது பின் ஸல்மா எனும் பலவீனமான அறிவிப்பாளர் இடம்பெறுகிறார். ஆனால் இதே கருத்தமைந்த ஹதீஸ் ஆதாரப்பூர்வமான அறிவிப்பாளர்தொடர்களில் - 400, 427 ஆகிய எண்களில் முன்னர் சென்றுள்ளது.

141. இந்த ஹதீஸ், பைஹகீயின் ஷுஅபுல் ஈமான் (4402), முஸ்னதுஷ் ஷிஹாப் (64) ஆகிய நூல்களிலும் பதிவாகியுள்ளது. இதன் அறிவிப்பாளர்தொடர்கள் பலவீனமானவையாகும். இதன் அறிவிப்பாளர்களுள் ஒருவரான இஸ்ஹாக் பின் அப்தில்லாஹ் பின் அபீஃபர்வா என்பவர் ஹதீஸ் கலையில் கைவிடப்பட வேண்டியவர் என்று இமாம்களான புகாரீ, நஸாயீ, தாரகுத்னீ (ரஹ்) ஆகியோரும், இவரைப் 'பொய்யர்' என்று யஹ்யா பின் மயீன் (ரஹ்) அவர்களும், இவர் ஹதீஸ்கலையில் 'நிராகரிக்கப்பட்டவர்' ஆவார் என அலீ பின் அல்மதீனீ (ரஹ்) அவர்களும் தெரிவித்துள்ளனர். இது புனைந்துரைக்கப்பட்ட ஹதீஸ் ஆகும் என்று கூறினாலும் தகும். ஏனெனில், இமாம் இப்னுல் ஜவ்ஸீ (ரஹ்) அவர்கள், இதைத் தமது புனைந்துரைக்கப்பட்ட நபிமொழிகளின் தொகுப்பில் (அல்மவ்ளூஆத்) இடம்பெறச் செய்து, இதன் தரத்தை உணர்த்துகிறார்கள். தாரீகுல் கபீர், தஹ்தீப்

142. இந்த ஹதீஸ் முஸ்னது அஹ்மதில் மட்டுமே இடம்பெற்றுள்ளது. இது நபிமொழி அன்று. இச்செய்தியின் அறிவிப்பாளர் தொடரில் நான்காவது அறிவிப்பாளராக இடம்பெறும் மஹ்பூப் பின் முஹ்ரிஸ் என்பார் பலவீனமான அறிவிப்பாளர் ஆவார் என இமாம் தாரகுத்னீ (ரஹ்) கூறுகிறார்கள். மூன்றாவது அறிவிப்பாளரான இப்ராஹீம் பின் அப்தில்லாஹ் பின் ஃபர்ரூக் என்பார் யாரென்றே அறியப்படாதவர் ஆவார். எனவே இது பலவீனமான தகவல் ஆகும்.

قَالَ سَمِعْتُ رَسُولَ اللَّهِ ﷺ يَقُولُ: أَظَلَّ اللَّهُ عَبْدًا فِي ظِلِّهِ يَوْمَ لاَ ظِلَّ إِلاَّ ظِلُّهُ أَنْظَرَ مُعْسِرًا أَوْ تَرَكَ لِغَارِمٍ.

அடியார் ஒருவர் துன்பத்தில் இருப்பவருக்கு (அவர் தர வேண்டிய கடனுக்காக) அவகாசம் அளித்தால், அல்லது கடன்பட்டவருக்கு(க் கடனை)த் தள்ளுபடி செய்தால், அவருக்கு அல்லாஹ் தனது நிழல் தவிர வேறு நிழலே இல்லாத (மறுமை) நாளில் தனது நிழலில் அடைக்கலம் தருவான்.

இதை உஸ்மான் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.[143]

٥٠٢ حَدَّثَنَا عَبْدُاللَّهِ حَدَّثَنِي يَحْيَى بْنُ عُثْمَانَ يَعْنِي الْحَرْبِيَّ أَبُو زَكَرِيَّا حَدَّثَنَا إِسْمَاعِيلُ بْنُ عَيَّاشٍ عَنْ رَجُلٍ قَدْ سَمَّاهُ عَنْ مُحَمَّدِ بْنِ يُوسُفَ عَنْ عَمْرِو بْنِ عُثْمَانَ بْنِ عَفَّانَ عَنْ أَبِيهِ قَالَ: قَالَ رَسُولُ اللَّهِ ﷺ: الصُّبْحَةُ تَمْنَعُ الرِّزْقَ.

502 அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

காலைநேர உறக்கம் வாழ்வாதாரத்தைத் தடுக்கும்.

இதை உஸ்மான் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.[144]

٥٠٣ حَدَّثَنَا يَحْيَى بْنُ سَعِيدٍ عَنْ مَالِكٍ حَدَّثَنِي نَافِعٌ عَنْ نُبَيْهِ بْنِ وَهْبٍ عَنْ أَبَانَ بْنِ عُثْمَانَ عَنْ أَبِيهِ عَنِ النَّبِيِّ ﷺ قَالَ: الْمُحْرِمُ لاَ يَنْكِحُ وَلاَ يُنْكِحُ وَلاَ يَخْطُبُ.

503 நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

'இஹ்ராம்' அணிந்திருப்பவர் திருமணம் செய்துகொள்ளவும் கூடாது; திருமணம் செய்துகொடுக்கவும் கூடாது; பெண் கேட்கவும் கூடாது.

இதை உஸ்மான் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.[145]

٥٠٤ حَدَّثَنَا عَبْدُاللَّهِ حَدَّثَنِي مُحَمَّدُ بْنُ أَبِي بَكْرٍ الْمُقَدَّمِيُّ حَدَّثَنَا حَمَّادُ بْنُ زَيْدٍ عَنْ أَيُّوبَ عَنْ نَافِعٍ حَدَّثَنِي نُبَيْهُ بْنُ وَهْبٍ قَالَ: بَعَثَنِي عُمَرُ بْنُ عُبَيْدِ اللَّهِ بْنِ مَعْمَرٍ وَكَانَ يَخْطُبُ بِنْتَ شَيْبَةَ بْنِ عُثْمَانَ عَلَى ابْنِهِ فَأَرْسَلَ إِلَى أَبَانَ بْنِ عُثْمَانَ وَهُوَ عَلَى الْمَوْسِمِ فَقَالَ: أَلاَ أُرَاهُ أَعْرَابِيًّا

504 நுபைஹ் பின் வஹ்ப் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

உமர் பின் உபைதில்லாஹ் பின் மஅமர் (ரஹ்) அவர்கள் தம்முடைய புதல்வ(ர் தல்ஹா பின் உம)ருக்கு ஷைபா பின் உஸ்மான் (ரஹ்) அவர்களின் மகளைப் பெண் பேசியிருந்தார் (அவளை தம்முடைய மகனுக்குத் திருமணம் செய்துவைக்க விரும்பினார்.) எனவே, (அவ்வாண்டு) ஹஜ் பருவத்தின் தலைவராக இருந்த அபான் பின் உஸ்மான் (ரஹ்) அவர்களிடம் என்னை அனுப்பி(அத்திருமணத்திற்குச் சாட்சியாக இருந்து நடத்தி

143. இந்த ஹதீஸ் முஸ்னது அஹ்மதில் மட்டுமே இடம்பெற்றுள்ளது. இதன் அறிவிப்பாளர்தொடர் பலவீனமானதாகும். இதன் அறிவிப்பாளர்தொடரில் மூன்றாவது அறிவிப்பாளராக இடம்பெற்றுள்ள அப்பாஸ் பின் அப்பாஸ் அல்அன்சாரீ என்பார் பலவீனமானவர் ஆவார். இவரை ஹதீஸ் கலையில் மறுக்கத் தக்கவர் என இமாம் புகாரீ தமது 'தாரீக் அல்கபீர்' எனும் நூலில் குறிப்பிடுகிறார்கள். நான்காவது அறிவிப்பாளராக இடம்பெற்றுள்ள ஹிஷாம் பின் ஸியாத் அல்குறஷீ அபில்மிக்தாம் எனும் அறிவிப்பாளரும் பலவீனமானவர் ஆவார் என இமாம் புகாரீ (ரஹ்) குறிப்பிடுகிறார்கள். இமாம் நஸாயீ (ரஹ்) அவர்கள் இவர் ஹதீஸ்கலையில் தவிர்க்கப்பட வேண்டியவர் என்று கூறுகிறார்கள். இமாம் உகைலீ (ரஹ்) அவர்கள் தமது 'அள்ளுஅஃபா' (பலவீனமானவர்கள்) பட்டியல் எனும் நூலில் இந்த ஹதீஸைப் பதிவு செய்துள்ளார்கள். எனினும் இந்த நபிமொழியின் கருத்து முஸ்லிம் ஹதீஸ் எண் 5736 மற்றும் இப்னு ஹிப்பான், திர்மிதீ (1227), தாரிமீ ஆகிய நூல்களிலும் இடம்பெற்றுள்ளது.

144. இதே ஹதீஸ் முன்னர் 499ஆம் எண்ணில் சென்றுள்ளது. இதுவும் பலவீனமான அறிவிப்பாளர்தொடர் கொண்டதே. இதன் அறிவிப்பாளர்களுள் ஒருவரான இஸ்மாயீல் பின் அய்யாஷ் அவர்கள் யாரிடமிருந்து கேட்டார்களோ அவர் தாம் அறியப்படாதவர் ஆவார்.

145. இது முன்னர் 378இல் இதே அறிவிப்பாளர்தொடரில் பதிவாகியுள்ளது. மேலும் காண்க: முன்சென்ற ஹதீஸ்கள் - 432, 436, 461, 465.

إنَّ الْمُحْرِمَ لَا يَنْكِحُ وَلَا يُنْكِحُ أَخْبَرَنِي بِذَلِكَ عُثْمَانُ رَضِيَ اللَّهُ عَنْهُ عَنِ النَّبِيِّ ﷺ وَحَدَّثَنِي نُبَيْهٌ عَنْ أَبِيهِ بِنَحْوِهِ.

வைப்பதற்காக அவரை அழைத்துவரச் சொன்)னார்.

(நான் அபான் பின் உஸ்மான் (ரஹ்) அவர்களிடம் வந்து, தகவலைக் கூறினேன்.) அப்போது அபான் (ரஹ்) அவர்கள், "இதோ (பாருங்கள்)! அவரை ஒரு கிராம வாசியாகவே நான் கருதுகிறேன். 'இஹ்ராம்' அணிந்திருப்பவர் (தாமும்) திருமணம் செய்துகொள்ளக் கூடாது; (பிறருக்குத்) திருமணம் செய்து வைக்கவும் கூடாது; இதை (என் தந்தை) உஸ்மான் (ரலி) அவர்கள் நபி (ஸல்) அவர்களிடமிருந்து எனக்கு அறிவித்தார்கள்" என்று கூறினார்.[146]

٥٠٥ حَدَّثَنَا عَبْدُ اللَّهِ حَدَّثَنِي مُحَمَّدُ بْنُ أَبِي بَكْرٍ حَدَّثَنَا زُهَيْرُ بْنُ إِسْحَاقَ حَدَّثَنَا دَاوُدُ بْنُ أَبِي هِنْدٍ عَنْ زِيَادِ بْنِ عَبْدِ اللَّهِ عَنْ أُمِّ هِلَالٍ ابْنَةِ وَكِيعٍ عَنْ نَائِلَةَ بِنْتِ الْفَرَافِصَةِ امْرَأَةِ عُثْمَانَ بْنِ عَفَّانَ رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَتْ: نَعَسَ أَمِيرُ الْمُؤْمِنِينَ عُثْمَانُ فَأَغْفَى فَاسْتَيْقَظَ، فَقَالَ: لَيَقْتُلُنَّنِي الْقَوْمُ، قُلْتُ: كَلَّا إِنْ شَاءَ اللَّهُ لَمْ يَبْلُغْ ذَاكَ إِنَّ رَعِيَّتَكَ اسْتَعْتَبُوكَ قَالَ: إِنِّي رَأَيْتُ رَسُولَ اللَّهِ ﷺ فِي مَنَامِي وَأَبُو بَكْرٍ وَعُمَرُ رَضِيَ اللَّهُ عَنْهُمَا فَقَالُوا: تُفْطِرُ عِنْدَنَا اللَّيْلَةَ.

505 உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்களின் மனைவி நாயிலா பின்த் அல் ஃபராஃபிஸா (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

இறைநம்பிக்கையாளர்களின் தலைவர் உஸ்மான் (ரலி) அவர்கள் (ஒருமுறை) உறக்கம் மேலிட்டு உறங்கினார்கள் பின்னர் விழித்தெழுந்ததும், "கண்டிப்பாக இந்த மக்கள் என்னைப் படுகொலை செய்யத்தான் போகிறார்கள்" என்று கூறினார்கள். அப்போது நான், "அல்லாஹ் நாடினால், அவ்வாறெல்லாம் நடக்காது; அந்த அளவுக்கு விஷயம் போகாது; உங்களுடைய குடிமக்கள் நீங்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டு வருத்தம் தெரிவிக்க வேண்டும் என்றே விரும்புகின்றனர் (அவ்வளவுதான்)" என்று கூறினேன். அதற்கு உஸ்மான் (ரலி) அவர்கள், "நான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களையும், அபூபக்ர் (ரலி), உமர் (ரலி) ஆகியோரையும் கனவில் கண்டேன். அவர்கள், 'நீர் இன்றிரவு எங்களிடம் நோன்பு துறப்பீர்' எனக் கூறினார்கள்" என்று குறிப்பிட்டார்கள்.[147]

(உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்கள் தொடர்பான சில தகவல்கள்)

٥٠٦ حَدَّثَنَا عَبْدُ اللَّهِ حَدَّثَنِي زِيَادُ بْنُ أَيُّوبَ حَدَّثَنَا هُشَيْمٌ قَالَ زَعَمَ أَبُو الْمِقْدَامِ عَنِ الْحَسَنِ بْنِ أَبِي الْحَسَنِ قَالَ: دَخَلْتُ الْمَسْجِدَ فَإِذَا أَنَا بِعُثْمَانَ بْنِ عَفَّانَ رَضِيَ اللَّهُ عَنْهُ مُتَّكِئٌ عَلَى رِدَائِهِ فَأَتَاهُ سَقَّاءَانِ يَخْتَصِمَانِ إِلَيْهِ فَقَضَى

506 ஹசன் பின் அபில்ஹசன் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

நான் (மஸ்ஜிதுந் நபவி) பள்ளிவாசலுக்குள் நுழைந்தேன். அங்கு உஸ்மான் (ரலி) அவர்கள் தமது மேலாடை மீது சாய்ந்தவாறு இருக்கக் கண்டேன். அப்போது அவர்

146. இதே ஹதீஸ் 40ஆவது எண்ணிலும் முன்னர் சென்றுள்ளது. மேலும் பார்க்க: ஹதீஸ் எண்கள் - 432, 436, 465.

147. இந்த ஹதீஸ் முஸ்னது அஹ்மதில் மட்டுமே இடம்பெற்றுள்ளது. இந்த ஹதீஸின் அறிவிப்பாளர்தொடரில் மூன்றாவது அறிவிப்பாளராக இடம்பெறும் உம்மு ஹிலால் பின்த் வகீஉ என்பவர் யாரென்றே அறியப்படாதவர் ஆவார் என 'அத்தஅஜீலுல் மன்ஃபஆ' என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், நான்காம் அறிவிப்பாளரான ஸியாத் பின் அப்தில்லாஹ் பின் ஹுனைத் அல்குறஷீ என்பவர் பற்றிக் கூறுமிடத்து 'இவரைப் பற்றிக் கருத்து மாறுபாடுள்ளது' என்று அதே நூலில் கூறப்பட்டுள்ளது. மேலும், ஆறாவது அறிவிப்பாளரான ஸுஹைர் பின் இஸ்ஹாக் பலவீனமானவர் என யஹ்யா பின் மயீன் (ரஹ்), அபூஹாதிம் (ரஹ்) போன்றோர் குறிப்பிட்டுள்ளனர். எனவே இது பலவீனமான ஹதீஸாகும். இமாம் ஹைஸமீ (ரஹ்) அவர்கள் தமது 'அல்மஜ்மஉஸ் ஸவாயித்' எனும் நூலில் இந்தச் செய்தியை இடம்பெறச் செய்து இதில் யாரென்றே அறியப்படாத அறிவிப்பாளர்கள் உள்ளனர் என்று கூறியுள்ளார்கள்.

களிடம் தண்ணீர் பாய்ச்சும் இருவர் வழக்கு ஒன்றைக் கொண்டுவந்தனர். அவ்விருக்கிடையே உஸ்மான் (ரலி) அவர்கள் தீர்ப்பு வழங்கினார்கள். பின்னர் நான் உஸ்மான் (ரலி) அவர்களுக்கருகில் வந்து பார்த்தேன். அப்போது அவர்கள் அழகிய முகம் கொண்டவர்களாக இருந்தார்கள். அவர்களின் கன்னத்தின் மேற்புறத்தில் அம்மைத் தழும்புகள் இருந்தன. அவர்களுடைய தலைமுடி, அவர்களது முழங்கைகளைப் போர்த்தியிருந்தது.[148]

بَيْنَهُمَا ثُمَّ أَتَيْتُهُ فَنَظَرْتُ إِلَيْهِ، فَإِذَا رَجُلٌ حَسَنُ الْوَجْهِ بِوَجْنَتِهِ نَكَتَاتُ جُدَرِيٍّ وَإِذَا شَعْرُهُ قَدْ كَسَا ذِرَاعَيْهِ.

507 புனானா அவர்கள் கூறியதாவது:

உஸ்மான் (ரலி) அவர்கள் (தலையிலோ, தாடியிலோ மருதாணிச்) சாயம் அறவே பூசியதில்லை.[149]

٥٠٧ حدثنا وَكِيعٌ حَدَّثَتْنِي أُمُّ غُرَابٍ عَنْ بُنَانَةَ قَالَتْ: مَا خَضَبَ عُثْمَانُ قَطُّ.

508 வாகித் பின் அப்தில்லாஹ் அத்தமீமீ (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்கள் தங்கப் பல் கட்டியிருந்தார்கள் என அன்னாரைப் பார்த்த ஒருவர் கூறினார்.[150]

٥٠٨ حدثنا عَبْدُاللهِ حَدَّثَنِي عُبَيْدُ اللهِ بْنُ عُمَرَ الْقَوَارِيرِيُّ حَدَّثَنَا أَبُو الْقَاسِمِ بْنُ أَبِي الزِّنَادِ حَدَّثَنِي وَاقِدُ بْنُ عَبْدِ اللهِ التَّمِيمِيُّ عَنْ مَنْ رَأَى عُثْمَانَ بْنَ عَفَّانَ ضَبَّبَ أَسْنَانَهُ بِذَهَبٍ.

٥٠٩ حدثنا هُشَيْمُ بْنُ بَشِيرٍ إِمْلَاءً قَالَ أَنْبَأَنَا مُحَمَّدُ بْنُ قَيْسٍ الْأَسَدِيُّ عَنْ مُوسَى بْنِ طَلْحَةَ قَالَ: سَمِعْتُ عُثْمَانَ بْنَ عَفَّانَ رَضِيَ اللهُ عَنْهُ وَهُوَ عَلَى الْمِنْبَرِ وَالْمُؤَذِّنُ يُقِيمُ الصَّلَاةَ وَهُوَ يَسْتَخْبِرُ النَّاسَ يَسْأَلُهُمْ عَنْ أَخْبَارِهِمْ وَأَسْعَارِهِمْ.

٥١٠ حدثنا عَبْدُاللهِ حَدَّثَنِي سُوَيْدُ بْنُ سَعِيدٍ حَدَّثَنَا إِبْرَاهِيمُ بْنُ سَعْدٍ عَنِ ابْنِ شِهَابٍ عَنِ السَّائِبِ بْنِ يَزِيدَ أَنَّ عُثْمَانَ رَضِيَ اللهُ عَنْهُ سَجَدَ فِي ص.

509 மூசா பின் தல்ஹா (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

(கலீஃபா) உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்கள் சொற்பொழிவு மேடை (மிம்பர்)மீது அமர்ந்திருக்க, தொழுகை அறிவிப்பாளர் (முஅத்தின்) தொழுகைக்கு 'இகாமத்' கூறிக் கொண்டிருப்பார். அப்போது உஸ்மான் (ரலி) அவர்கள் மக்களைப் பற்றிய செய்திகளையும் விலைவாசி நிலவரங்களையும் மக்களிடம் விசாரித்துக்கொண்டிருப்பதை நான் கேட்டுள்ளேன்.[151]

510 சாயிப் பின் யஸீத் (ரலி) அவர்கள் கூறியதாவது:

உஸ்மான் (ரலி) அவர்கள் 'ஸாத்' (எனும் 38ஆவது) அத்தியாயத்(திலுள்ள 24ஆவது

---

148. இச்செய்தி முஸ்னது அஹ்மதில் மட்டுமே இடம்பெற்றுள்ளது. இதன் அறிவிப்பாளர்தொடர் பலவீனமானதாகும். ஏனெனில், இதில் இடம்பெறும் அபுல்மிக்தாம் என்ற ஹிஷாம் பின் ஸியாத் அல்குறஷீ என்பவரை இமாம் புகாரீ, அஹ்மது போன்ற ஹதீஸ்கலை வல்லுநர்கள் பலவீனமான அறிவிப்பாளர் என விமர்சித்துள்ளனர். இமாம் நஸாயீ (ரஹ்) அவர்கள் இவரை ஹதீஸ்கலையில் கைவிடப்பட்டவர் என்று கூறியுள்ளார்கள்.

149. இச்செய்தி முஸ்னது அஹ்மதில் மட்டுமே இடம்பெற்றுள்ளது. இதன் அறிவிப்பாளர் புனானா மற்றும் இரண்டாவது அறிவிப்பாளரான உம்மு குராப் ஆகியோர் பற்றிய வரலாற்றுக் குறிப்புகளோ நம்பகத் தன்மை குறித்த சான்றுகளோ கிடைக்கவில்லை. எனவே இது பலவீனமான செய்தியாகும்.

150. இந்த ஹதீஸ் முஸ்னது அஹ்மதில் மட்டுமே இடம்பெற்றுள்ளது. உஸ்மான் (ரலி) அவர்களைப் பார்த்தவர் யாரென்று அறியப்படவில்லை. எனவே இச்செய்தி பலவீனமானதாகும்.

151. இந்த ஹதீஸின் அறிவிப்பாளர்தொடர் சரியானதாகும்.

வசனத்)தை ஓதியபோது, 'சஜ்தா' (ஓதலுக்கான சிரவணக்கம்) செய்தார்கள்.[152]

٥١١ حَدَّثَنَا عَبْدُاللهِ حَدَّثَنِي سُرَيْجُ بْنُ يُونُسَ حَدَّثَنَا مَحْبُوبُ بْنُ مُحْرِزٍ بَيَّاعُ الْقَوَارِيرِ كُوفِيٌّ ثِقَةٌ كَذَا، قَالَ سُرَيْجٌ عَنْ إِبْرَاهِيمَ بْنِ عَبْدِ اللهِ يَعْنِي ابْنَ فَرُّوخَ عَنْ أَبِيهِ قَالَ: صَلَّيْتُ خَلْفَ عُثْمَانَ رَضِيَ اللهُ عَنْهُ الْعِيدَ فَكَبَّرَ سَبْعًا وَخَمْسًا.

511 அப்துல்லாஹ் பின் ஃபர்ரூக் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

நான் உஸ்மான் (ரலி) அவர்களுக்குப் பின்னால் நின்று பெருநாள் தொழுகை தொழுதுள்ளேன். அப்போது அவர்கள் (முதலாவது 'ரக்அத்'தில் கூடுதலாக) ஏழு தக்பீர்களும் (இரண்டாவது 'ரக்அத்'தில் கூடுதலாக) ஐந்து தக்பீர்களும் கூறினார்கள்.[153]

٥١٢ حَدَّثَنَا عَبْدُ الصَّمَدِ حَدَّثَنَا سَالِمٌ أَبُو جُمَيْعٍ حَدَّثَنَا الْحَسَنُ وَذَكَرَ عُثْمَانَ رَضِيَ اللهُ عَنْهُ وَشِدَّةَ حَيَائِهِ فَقَالَ: إِنْ كَانَ لَيَكُونُ فِي الْبَيْتِ وَالْبَابُ عَلَيْهِ مُغْلَقٌ فَمَا يَضَعُ عَنْهُ الثَّوْبَ لِيُفِيضَ عَلَيْهِ الْمَاءَ يَمْنَعُهُ الْحَيَاءُ أَنْ يُقِيمَ صُلْبَهُ.

512 அபூஜுமைஉ சாலிம் பின் தீனார் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

(ஒருமுறை) ஹசன் பின் அபில்ஹசன் யசார் (ரஹ்) அவர்கள் எங்களிடம் உஸ்மான் (ரலி) அவர்களைப் பற்றியும் அவர்களிடமிருந்த கடுமையான வெட்க உணர்வு பற்றியும் நினைவுகூர்ந்தார்கள். அப்போது, "உஸ்மான் (ரலி) அவர்கள் வீட்டில் இருக்கும்போது வாசல் கதவு மூடப்பட்டிருந்தாலும், தமது மேனியில் தண்ணீர் ஊற்றுவதற்காக(த் தமது) ஆடையைக் களைய மாட்டார்கள். அவர்களிடமிருந்த வெட்க உணர்வு (வீட்டிலிருக்கும் நேரத்தில்கூட) அவரை நேராக நிற்கவிடாமல் தடுக்கும்" என்று குறிப்பிட்டார்கள்.[154]

٥١٣ حَدَّثَنَا إِبْرَاهِيمُ بْنُ خَالِدٍ الصَّنْعَانِيُّ حَدَّثَنِي أُمَيَّةُ بْنُ شِبْلٍ وَغَيْرُهُ قَالُوا: وَلِيَ عُثْمَانُ ثِنْتَيْ عَشْرَةَ وَكَانَتِ الْفِتْنَةُ خَمْسَ سِنِينَ.

513 உமய்யா பின் ஷிப்ல் உள்ளிட்டோர் கூறியதாவது:

உஸ்மான் (ரலி) அவர்கள் பன்னிரண்டு ஆண்டுகள் ஆட்சிப் பொறுப்பில் இருந்தார்கள். அவற்றுள் ஐந்தாண்டுகள் (அரசியல்) குழப்பம் நிலவியது.[155]

٥١٤ حَدَّثَنَا إِسْحَاقُ بْنُ عِيسَى بْنِ الطَّبَّاعِ عَنْ أَبِي مَعْشَرٍ

514 அபூமஅஷர் நஜீஹ் பின் அப்திர் ரஹ்மான் அவர்கள் கூறியதாவது:

---

152. இந்த ஹதீஸ், முஸன்னஃப் அப்திர்ரஸ்ஸாக் (5664), பைஹகீ 2/319), இப்னு அபீஷைபா (2/9) ஆகிய நூல்களிலும் இடம்பெற்றுள்ளது.

153. இதே கருத்தமைந்த ஹதீஸ் வேறு அறிவிப்பாளர்தொடரில் அபூதாவூத் (970, 971), திர்மிதீ (492), இப்னுமாஜா (1268, 1269) உள்ளிட்ட நூல்களில் இடம்பெற்றுள்ளது.

154. இதன் அறிவிப்பாளரான ஹசன் பின் அபில்ஹசன் யசார் (ரஹ்) அவர்கள் உஸ்மான் (ரலி) அவர்களைச் சந்தித்தவர் அல்லர். ஏனெனில், அவர் தாபிஉத் தாபிஈன் (தாபிஉகளின் காலத்தில் வாழ்ந்தவர்) ஆவார். எனவே இது தொடர் இடைமுறிவுற்ற பலவீனமான செய்தியாகும்.

155. இது அறிவிப்பாளர் இடைமுறிவுற்ற பலவீனமான செய்தியாகும். ஏனெனில், இதன் அறிவிப்பாளரான உமய்யா பின் ஷிப்ல் என்பார் உஸ்மான் (ரலி) அவர்களையோ, நபித்தோழர்களுள் பிறரையோ சந்தித்திருக்க வாய்ப்பில்லை. இவர் தாபிஈன் காலத்துக்கு அடுத்து தாபிஉத் தாபிஈன் காலத்தில் வாழ்ந்தவர் ஆவார். நபித்தோழர்கள் காலத்தில் வாழ்ந்த தாபிஈன் காலத்தாருள் ஒருவரோ அல்லது அதற்கடுத்த தாபிஉத் தாபிஈன் காலத்தவரோ அறிவிக்கும் இத்தகைய செய்திகளுக்கு ஹதீஸ்கலையில் 'மக்தூஉ' என்று பெயர் வழங்கப்படுகிறது.

உஸ்மான் (ரலி) அவர்கள் ஹிஜ்ரி முப்பத்தைந்தாவது ஆண்டு, 'துல்ஹிஜ்ஜா' மாதம் பதினெட்டாம் நாள், வெள்ளிக் கிழமை அன்று படுகொலை செய்யப்பட்டார்கள். அவர்களது ஆட்சிக் காலம், பன்னிரண்டு நாட்கள் மீதமிருக்க, பன்னிரண்டு வருடங்கள் நீடித்தது.[156]

515 அபூஉஸ்மான் அப்துர்ரஹ்மான் பின் மல்லு (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

உஸ்மான் (ரலி) அவர்கள் 'அய்யாமுத் தஷ்ரீக்'கின் மத்திய நாளில் (துல்ஹிஜ்ஜா மாதம் பன்னிரண்டாம் நாள்) படுகொலை செய்யப்பட்டார்கள்.[157]

516 கத்தாதா (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

உஸ்மான் (ரலி) அவர்கள் தொண்ணூறு வயதில் அல்லது எண்பத்தெட்டு வயதில் படுகொலை செய்யப்பட்டார்கள்.[158]

قَالَ: وَقُتِلَ عُثْمَانُ رَضِيَ اللَّهُ عَنْهُ يَوْمَ الْجُمُعَةِ لِثَمَانِ عَشْرَةَ مَضَتْ مِنْ ذِي الْحِجَّةِ سَنَةَ خَمْسٍ وَثَلَاثِينَ وَكَانَتْ خِلَافَتُهُ ثِنْتَيْ عَشْرَةَ سَنَةً إِلَّا اثْنَيْ عَشَرَ يَوْمًا.

٥١٥ حَدَّثَنَا عَبْدُ اللَّهِ حَدَّثَنِي عُبَيْدُ اللَّهِ بْنُ مُعَاذٍ حَدَّثَنَا مُعْتَمِرُ بْنُ سُلَيْمَانَ قَالَ قَالَ أَبِي: حَدَّثَنَا أَبُو عُثْمَانَ أَنَّ عُثْمَانَ رَضِيَ اللَّهُ عَنْهُ قُتِلَ فِي أَوْسَطِ أَيَّامِ التَّشْرِيقِ.

٥١٦ حَدَّثَنَا حَسَنُ بْنُ مُوسَى حَدَّثَنَا أَبُو هِلَالٍ حَدَّثَنَا قَتَادَةُ أَنَّ عُثْمَانَ قُتِلَ وَهُوَ ابْنُ تِسْعِينَ سَنَةً أَوْ ثَمَانٍ وَثَمَانِينَ.

٥١٧ حَدَّثَنَا عَبْدُ اللَّهِ حَدَّثَنِي جَعْفَرُ بْنُ مُحَمَّدِ بْنِ فُضَيْلٍ حَدَّثَنَا أَبُو نُعَيْمٍ حَدَّثَنَا أَبُو خَلْدَةَ عَنْ أَبِي الْعَالِيَةِ قَالَ: كُنَّا بِبَابِ عُثْمَانَ رَضِيَ اللَّهُ عَنْهُ فِي عَشْرِ الْأَضْحَى.

٥١٨ حَدَّثَنَا عَبْدُ الرَّزَّاقِ حَدَّثَنَا مَعْمَرٌ عَنْ قَتَادَةَ قَالَ: صَلَّى الزُّبَيْرُ عَلَى عُثْمَانَ رَضِيَ اللَّهُ عَنْهُ وَدَفَنَهُ وَكَانَ أَوْصَى إِلَيْهِ.

517 அபுல்ஆலியா (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

நாங்கள் துல்ஹஜ் மாதம் (முதல்) பத்து நாட்கள் உஸ்மான் (ரலி) அவர்களுடைய வீட்டு வாசலில் (காவல்) இருந்துகொண்டிருந்தோம்.

518 கத்தாதா (ரஹ்) அவர்கள் கூறியதாவது.

உஸ்மான் (ரலி) அவர்க(ள் இறந்தபோது அவர்க)ளுக்கு ஸுபைர் பின் அல்அவ்வாம் (ரலி) அவர்கள் ஜனாஸா தொழுகை நடத்தினார்கள். பின்னர் அவர்களை ஸுபைர் (ரலி) அவர்களே அடக்கம் செய்தார்கள். முன்னதாக (இது தொடர்பாக) உஸ்மான் (ரலி) அவர்கள் ஸுபைர் (ரலி) அவர்களிடம் இறுதிவிருப்பம் (வஸிய்யத்) தெரிவித்திருந்தார்கள்.[159]

---

156. இது அறிவிப்பாளர்தொடர் இடைமுறிவுற்ற பலவீனமான செய்தியாகும். இதன் அறிவிப்பாளரான அபூமஅஷர் நஜீஹ் பின் அப்துர்ரஹ்மான் என்பார் பலவீனமான அறிவிப்பாளர் ஆவார். இவர் உஸ்மான் (ரலி) அவர்களின் காலத்தவரல்லர். அபூமஅஷர் எனும் தாபிஉ அறிவிக்கும் இச்செய்திக்கும் 'மக்தூஉ' என்றே பெயர். மக்தூஉ பற்றி அறிய இதற்கு முந்தைய அடிக்குறிப்பைக் காண்க.

157. இஸ்லாமிய மாதங்களுள் பன்னிரண்டாவது மாதமான துல்ஹிஜ்ஜாவின் பிறை 11, 12, 13 ஆகிய மூன்று நாட்களுக்கு 'அய்யாமுத் தஷ்ரீக்' என்பர். குர்பானி இறைச்சியை உலரவைக்கும் நாட்கள் என்பதால் அவற்றுக்கு இப்பெயர் வழங்கப்படலாயிற்று.

158. இது அறிவிப்பாளர்தொடர் இடைமுறிவுற்ற பலவீனமான செய்தியாகும். இதன் அறிவிப்பாளரான கத்தாதா (ரஹ்) அவர்கள் உஸ்மான் (ரலி) அவர்களைப் பார்த்ததில்லை. மேலும், இதன் அறிவிப்பாளர்தொடரில் இரண்டாவது அறிவிப்பாளராக இடம்பெறும் அபூஹிலால் அர்ராசிபீ என்பார் குறித்து இமாம் அஹ்மத், நஸாயீ உள்ளிட்ட அறிஞர்கள் குறைகூறி விமர்சித்துள்ளனர்.

159. இது அறிவிப்பாளர்தொடர் இடைமுறிவுற்ற பலவீனமான செய்தியாகும். இதன் அறிவிப்பாளரான கத்தாதா (ரஹ்) அவர்கள், உஸ்மான் (ரலி) அவர்களைச் சந்தித்ததில்லை.

٥١٩ حدثنا زكريا بن عدي عن عبيد الله بن عمرو عن عبد الله بن محمد بن عقيل قال: قتل عثمان رضي الله عنه سنة خمس وثلاثين فكانت الفتنة خمس سنين منها أربعة أشهر للحسن رضي الله عنه.

519 அப்துல்லாஹ் பின் முஹம்மத் பின் அக்கீல் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

உஸ்மான் (ரலி) அவர்கள் ஹிஜ்ரீ முப்பத்தைந்தாவது ஆண்டில் படுகொலை செய்யப்பட்டார்கள். (அவற்றுள்) ஐந்து ஆண்டுகள் (அரசியல்) குழப்பம் நிலவியது. அவற்றுள் நான்கு மாதங்கள் ஹசன் (ரலி) அவர்களின் பொறுப்பில் ஆட்சி இருந்தது.[100]

٥٢٠ حدثنا أبو نعيم حدثنا أبو خلدة عن أبي العالية قال: كنا بباب عثمان رضي الله عنه في عشر الأضحى.

520 அபுல்ஆலியா (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

நாங்கள் 'துல்ஹஜ்' மாதம் (முதல்) பத்து நாட்கள் உஸ்மான் (ரலி) அவர்களுடைய வீட்டு வாசலில் (காவல்) இருந்துகொண்டிருந்தோம்.[101]

٥٢١ حدثنا عبد الله حدثني عبيد الله بن عمر القواريري حدثني القاسم بن الحكم بن أوس الأنصاري حدثني أبو عبادة الزرقي الأنصاري من أهل المدينة عن زيد بن أسلم عن أبيه قال: شهدت عثمان رضي الله عنه يوم حوصر في موضع الجنائز ولو ألقي حجر لم يقع إلا على رأس رجل فرأيت عثمان رضي الله عنه أشرف من الخوخة التي تلي مقام جبريل عليه السلام فقال: أيها الناس أفيكم طلحة؟ فسكتوا ثم قال: أيها الناس أفيكم طلحة؟ فسكتوا ثم قال: يا أيها الناس أفيكم

521 உமர் (ரலி) அவர்களின் (முன்னாள்) அடிமை அஸ்லம் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

உஸ்மான் (ரலி) அவர்கள் முற்றுகையிடப்பட்ட நாளில், பிரேதங்கள் வைக்கப்படுகின்ற இடத்தில் அவர்களுடன் நானும் இருந்தேன். அங்கு ஏதேனும் ஒரு கல் போடப்படுமானால், அது (அங்கு நிற்கும்) யாரேனும் ஒருவரது தலைமீதுதான் விழும். (அந்த அளவுக்கு அங்குக் கூட்டம் குழுமியிருந்தது.) அப்போது உஸ்மான் (ரலி) அவர்கள், ஜிப்ரீல் (அலை) அவர்கள் (நபியவர்களுக்கு வேத அறிவிப்பு (வஹீ) கொண்டுவரும்போது) நின்ற இடத்திற்கு அருகிலுள்ள மாடத்தில் ஏறி நின்றதை நான் கண்டேன்.

அப்போது உஸ்மான் (ரலி) அவர்கள், "மக்களே! உங்களிடையே தல்ஹா இருக்கிறாரா?" என்று கேட்டார்கள். மக்கள் வாய் மூடி மௌனமாக இருந்தார்கள். மறுபடியும், "மக்களே! உங்களிடையே தல்ஹா இருக்கிறாரா?" என்று கேட்டார்கள். அப்போதும் மக்கள் வாய் மூடி மௌனமாக இருந்தார்கள். பின்னர் மறுபடியும், "மக்களே! உங்களிடையே தல்ஹா இருக்கிறாரா?" என்று கேட்டார்கள். அப்போது

---

100. இது அறிவிப்பாளர்தொடர் இடைமுறிவுற்ற பலவீனமான செய்தியாகும். இதன் அறிவிப்பாளர் அப்துல்லாஹ் பின் முஹம்மது பின் அகீல் (ரஹ்) உஸ்மான் (ரலி) அவர்களின் காலத்தவரல்லர். மேலும், உஸ்மான் (ரலி) அவர்கள் ஹிஜ்ரீ 35ஆம் ஆண்டு துல்ஹிஜ்ஜா மாதம் கொலை செய்யப்பட்டார்கள். ஆனால், அலீ (ரலி) அவர்கள் ஹிஜ்ரீ 40ஆம் ஆண்டு ரமளான் மாதம் கொலை செய்யப்பட்டார்கள். பின்னர் ஹசன் (ரலி) அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்று ஆறு மாதங்கள் ஆட்சியிலிருந்தார்கள். ஹிஜ்ரீ 41ஆம் ஆண்டு ரபீஉல் அவ்வல் மாதத்தில் முஆவியா (ரலி) அவர்களுடன் ஏற்பட்ட உடன்பாட்டின்படி ஆட்சியிலிருந்து இறங்கினார்கள். எனவே அவர்கள் ஆட்சி புரிந்தது ஆறு மாதங்கள் என்பதே சரியான தகவலாகும். நான்கு மாதங்கள் என்ற தகவல் சரியன்று.

161. முன்சென்ற ஹதீஸ் எண் - 517 மீண்டும் இங்கு இடம்பெற்றுள்ளது.

طَلْحَةُ؟ فَقَامَ طَلْحَةُ بْنُ عُبَيْدِ اللَّهِ، فَقَالَ لَهُ عُثْمَانُ رَضِيَ اللَّهُ عَنْهُ: أَلَا أُرَاكَ هَاهُنَا مَا كُنْتُ أُرَى أَنَّكَ تَكُونُ فِي جَمَاعَةٍ تَسْمَعُ نِدَائِي آخِرَ ثَلَاثِ مَرَّاتٍ ثُمَّ لَا تُجِيبُنِي، أَنْشُدُكَ اللَّهَ يَا طَلْحَةُ تَذْكُرُ يَوْمَ كُنْتُ أَنَا وَأَنْتَ مَعَ رَسُولِ اللَّهِ ﷺ فِي مَوْضِعِ كَذَا وَكَذَا لَيْسَ مَعَهُ أَحَدٌ مِنْ أَصْحَابِهِ غَيْرِي وَغَيْرُكَ، قَالَ: نَعَمْ، فَقَالَ لَكَ رَسُولُ اللَّهِ ﷺ: يَا طَلْحَةُ إِنَّهُ لَيْسَ مِنْ نَبِيٍّ إِلَّا وَمَعَهُ مِنْ أَصْحَابِهِ رَفِيقٌ مِنْ أُمَّتِهِ مَعَهُ فِي الْجَنَّةِ وَإِنَّ عُثْمَانَ بْنَ عَفَّانَ رَضِيَ اللَّهُ عَنْهُ هَذَا يَعْنِينِي رَفِيقِي مَعِي فِي الْجَنَّةِ قَالَ طَلْحَةُ: اللَّهُمَّ نَعَمْ ثُمَّ انْصَرَفَ.

தல்ஹா பின் உபைதில்லாஹ் (ரலி) அவர்கள் எழுந்து நின்றார்கள். உடனே உஸ்மான் (ரலி) அவர்கள் தல்ஹா (ரலி) அவர்களிடம், "நீர் இங்கு இருந்ததை நான் பார்க்கத்தான் செய்தேன்; நீர் மக்களோடு மக்களாக நின்று கொண்டு, நான் விடுத்த அழைப்பை மூன்று முறை காதால் கேட்ட பின்னரும், எனக்கு நீர் பதிலளிக்காமல் இருப்பீர் என்று நான் (கொஞ்சம்கூட) எதிர்பார்க்கவில்லை! தல்ஹா, அல்லாஹ்வை முன் வைத்து உம்மிடம் கேட்கின்றேன்: ஒரு நாள் நானும் நீங்களும் இன்னின்ன இடங்களில் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுடன் இருந்தோமே, அப்போது நபித்தோழர்களுள் என்னையும் உம்மையும் தவிர வேறுயாரும் இல்லையே, அந்த நாள் உமக்கு நினைவுள்ளதா?" என்று கேட்டார்கள். அதற்கு தல்ஹா (ரலி) அவர்கள், "ஆம் (நினைவிருக்கிறது)" என்றார்கள்.

"அப்போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் உம்மை நோக்கி, 'தல்ஹா! எந்த நபிக்கும் அவருடைய சமுதாயத்தைச் சேர்ந்த தோழர்களுள் ஒருவர் சொர்க்கத்திலும் தோழராக இல்லாமல் இருக்கமாட்டார் இதோ உஸ்மான் பின் அஃப்பான் ஆகிய இவர் சொர்க்கத்தில் என்னோடு இருக்கும் தோழர் ஆவார்' என்று என்னை மனத்தில் வைத்துக்கொண்டு சொன்னார்கள் அல்லவா?" என்று உஸ்மான் (ரலி) அவர்கள் கேட்டார்கள். அதற்கு தல்ஹா (ரலி) அவர்கள், "இறைவா (நீயே சாட்சி)! ஆம் (சொன்னார்கள்தான்)!" என்று குறிப்பிட்டார்கள். பின்னர் திரும்பிச் சென்றுவிட்டார்கள்.[162]

٥٢٢ حَدَّثَنَا عَبْدُ اللَّهِ حَدَّثَنِي الْعَبَّاسُ بْنُ الْوَلِيدِ النَّرْسِيُّ حَدَّثَنَا يَزِيدُ بْنُ زُرَيْعٍ حَدَّثَنَا سَعِيدٌ حَدَّثَنَا قَتَادَةُ عَنْ مُسْلِمِ بْنِ يَسَارٍ عَنْ حُمْرَانَ بْنِ أَبَانَ: أَنَّهُ شَهِدَ عُثْمَانَ رَضِيَ اللَّهُ عَنْهُ تَوَضَّأَ يَوْمًا فَمَضْمَضَ وَاسْتَنْشَقَ وَغَسَلَ وَجْهَهُ ثَلَاثًا وَحَدَّثَ عَنِ النَّبِيِّ ﷺ نَحْوَ حَدِيثِ ابْنِ

522 ஹும்ரான் பின் அபான் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

ஒருநாள் உஸ்மான் (ரலி) அவர்கள் அங்கத் தூய்மை செய்தபோது, நான் அவர்களுக்கு அருகில் இருந்தேன். அப்போது உஸ்மான் (ரலி) அவர்கள் வாய் கொப்பளித்தார்கள். (மூக்கிற்கு நீர் செலுத்தி) மூக்குச் சிந்தினார்கள். பின்னர் தமது முகத்தை மூன்று முறை கழுவினார்கள். பின்னர் நபி (ஸல்) அவர்கள் கூறிய பொன்மொழி ஒன்றைக் குறிப்பிட்டார்கள்.

---

162. இது பலவீனமான அறிவிப்பாளர்தொடரில் அமைந்த செய்தியாகும். ஏனெனில், இதன் அறிவிப்பாளர்தொடரில் ஐந்தாவது அறிவிப்பாளராக இடம்பெற்றுள்ள காசிம் பின் அல்ஹகம் பின் அவ்ஸ் அல்அன்சாரீ என்பவர் தரம் அறியப்படாதவர் ஆவார். மேலும், நான்காவது அறிவிப்பாளரான அபூஉபாதா அஸ்ஸுரக்கிய்யு அல்அன்சாரீ என்பார் ஹதீஸ்கலையில் நிராகரிக்கப்பட்டவர் ஆவார் என இமாம் புகாரீ, நஸாயீ, இப்னு ஹிப்பான், அபூஹாத்திம் அர்ராஸீ போன்றோர் குறிப்பிட்டுள்ளனர். இமாம் இப்னுல் ஜவ்ஸீ (ரஹ்) அவர்கள், மறைமுகக் குறைபாடுடைய ஹதீஸ்களின் தொகுப்பாகிய 'அல்இலலுல் முதனாஹியா' எனும் தமது நூலில் இதைப் பதிவு செய்து இதன் தரத்தை உணர்த்துகிறார்கள்.

(505-521 வரையுள்ள செய்திகள் முஸ்னது அஹ்மதில் மட்டுமே இடம்பெற்றுள்ளன.)

جعفر عن سعيد.

٥٢٣ حدثنا عبدالله حدثني وهب بن بقية الواسطي أنبأنا خالد يعني ابن عبد الله عن الجريري عن عروة بن قبيصة عن رجل من الأنصار عن أبيه قال: كنت قائماً عند عثمان بن عفان رضي الله عنه، فقال: ألا أريكم كيف كان رسول الله ﷺ يتوضأ؟ قلنا: بلى، فدعا بماء فغسل وجهه ثلاثاً ومضمض واستنشق ثلاثاً ثم غسل يديه إلى مرفقيه ثلاثاً ثم مسح برأسه وأذنيه وغسل رجليه ثلاثاً ثم قال: هكذا كان رسول الله ﷺ يتوضأ.

٥٢٤ حدثنا عبدالله حدثني محمد بن أبي بكر بن علي المقدمي حدثنا محمد بن عبد الله الأنصاري حدثنا هلال بن حق عن الجريري عن ثمامة بن حزن القشيري قال: شهدت الدار يوم أصيب عثمان رضي الله عنه فاطلع عليهم اطلاعة، فقال: ادعوا لي صاحبيكم اللذين ألباكم علي، فدعيا له، فقال: نشدتكما الله أتعلمان أن رسول الله ﷺ لما قدم المدينة ضاق المسجد بأهله

(அஹ்மது பின் ஹன்பல் ஆகிய நான் கூறுகிறேன்:)

சஈது பின் அபீஅரூபா (ரஹ்) அவர்களிடமிருந்து முஹம்மது பின் ஜஅஃபர் (ரஹ்) அவர்கள் அறிவித்துள்ள (391ஆவது) ஹதீஸைப் போன்று அது இருந்தது.[163]

523 *அன்சாரிகளுள் ஒருவர் கூறியதாவது:*

என் தந்தை கூறினார்: (ஒரு முறை) நான் உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்களுக்கு அருகில் நின்றுகொண்டிருந்தேன். அப்போது அவர்கள், "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் எவ்வாறு அங்கத் தூய்மை (உளூ) செய்துவந்தார்கள் என்று உங்களுக்கு நான் தெரிவிக்கட்டுமா?" என்று கேட்டார்கள். அதற்கு நாங்கள், "ஆம் (தெரிவியுங்கள்)!" என்றோம்.

பின்னர், உஸ்மான் (ரலி) அவர்கள் தண்ணீர் கொண்டுவரச் சொல்லி, தமது முகத்தை மூன்று முறை கழுவினார்கள். மூன்று முறை வாய் கொப்பளிக்கவும் (மூக்கிற்கு நீர் செலுத்தி) மூக்குச் சிந்தவும் செய்தார்கள். பின்னர் தம்மிரு கைகளையும் முழங்கைகள்வரை மூன்று முறை கழுவினார்கள். பின்னர் (ஈரக்கையால்) தமது தலையையும் இரு காதுகளையும் தடவி ('மஸ்ஹு'ச் செய்ய)னார்கள். தம்மிரு கால்களையும் மூன்று முறை கழுவினார்கள். பின்னர், "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் இவ்வாறுதான் அங்கத் தூய்மை செய்து வந்தார்கள்" என்று குறிப்பிட்டார்கள்.[164]

524 *ஸுமாமா பின் ஹஸ்ன் அல்குஷைரீ (ரஹ்) அவர்கள் கூறியதாவது:*

உஸ்மான் (ரலி) அவர்கள்மீது தாக்குதல் நடத்தப்பட்ட நாளில், நான் (அவர்களுடைய) வீட்டில் இருந்தேன். அப்போது உஸ்மான் (ரலி) அவர்கள் (மாடத்தில் நின்று) மக்களை எட்டிப் பார்த்துவிட்டு, "எனக்கு எதிராக உங்களைத் தூண்டிவிட்ட உங்களுடைய நண்பர்கள் இருவரையும் எனக்காக அழைத்துவாருங்கள்" என்றார்கள். அவ்விருவரும் உஸ்மான் (ரலி) அவர்களிடம் அழைத்துவரப்பட்டனர்.

அப்போது உஸ்மான் (ரலி) அவர்கள், "அல்லாஹ்வை முன்னிறுத்தி உங்கள் இருவரிடமும் கேட்கிறேன்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் மதீனாவுக்கு வந்த

163. காண்க முன்சென்ற ஹதீஸ் எண் - 391 மற்றும் அதன் அடிக்குறிப்பு

164. இது அறிவிப்பாளர்தொடர் இடைமுறிவுற்ற பலவீனமான ஹதீஸ் ஆகும். அன்சாரி மதீனாவாசிகளுள் ஒருவர். அவர் தந்தை வழியாக அறிவிப்பதாக அமையும் இதில் தந்தையும் மகனும் யாரென்று அறியப்படாததால் இது பலவீனமான தகவல் ஆகும். எனினும் இதே கருத்தமைந்த செய்தி முன்னர் 380 381 410 456 ஆகிய எண்களில் பதிவாகியுள்ளது. எனவே இது 'ஹசனுன் லிஃகைரிஹி' (புறச் சான்றுகளால் 'ஹசன்' தரத்தை அடைய ஹதீஸ்) ஆகும்.

فَقَالَ: مَنْ يَشْتَرِي هَذِهِ الْبُقْعَةَ مِنْ خَالِصِ مَالِهِ؟ فَيَكُونَ فِيهَا كَالْمُسْلِمِينَ وَلَهُ خَيْرٌ مِنْهَا فِي الْجَنَّةِ فَاشْتَرَيْتُهَا مِنْ خَالِصِ مَالِي فَجَعَلْتُهَا بَيْنَ الْمُسْلِمِينَ وَأَنْتُمْ تَمْنَعُونِي أَنْ أُصَلِّيَ فِيهِ رَكْعَتَيْنِ، ثُمَّ قَالَ: أَنْشُدُكُمُ اللَّهَ أَتَعْلَمُونَ أَنَّ رَسُولَ اللَّهِ ﷺ لَمَّا قَدِمَ الْمَدِينَةَ لَمْ يَكُنْ فِيهَا بِئْرٌ يُسْتَعْذَبُ مِنْهُ إِلَّا رُومَةَ، فَقَالَ رَسُولُ اللَّهِ ﷺ: مَنْ يَشْتَرِيهَا مِنْ خَالِصِ مَالِهِ؟ فَيَكُونَ دَلْوُهُ فِيهَا كَدُلِيِّ الْمُسْلِمِينَ وَلَهُ خَيْرٌ مِنْهَا فِي الْجَنَّةِ فَاشْتَرَيْتُهَا مِنْ خَالِصِ مَالِي فَأَنْتُمْ تَمْنَعُونِي أَنْ أَشْرَبَ مِنْهَا ثُمَّ قَالَ: هَلْ تَعْلَمُونَ أَنِّي صَاحِبُ جَيْشِ الْعُسْرَةِ؟ قَالُوا: اللَّهُمَّ نَعَمْ.

٥٢٥ حَدَّثَنَا عَبْدُ اللَّهِ حَدَّثَنِي أَبِي وَأَبُو خَيْثَمَةَ قَالَا حَدَّثَنَا مُعَاوِيَةُ بْنُ عَمْرٍو حَدَّثَنَا زَائِدَةُ عَنْ عَاصِمٍ عَنْ شَقِيقٍ قَالَ: لَقِيَ عَبْدُ الرَّحْمَنِ بْنُ عَوْفٍ الْوَلِيدَ بْنَ عُقْبَةَ، فَقَالَ لَهُ الْوَلِيدُ: مَا لِي أَرَاكَ قَدْ جَفَوْتَ أَمِيرَ الْمُؤْمِنِينَ عُثْمَانَ

புதிதில் (மஸ்ஜிதுந் நபவீ) பள்ளிவாசல் மக்களுக்கு நெருக்கடியாக இருக்கவே, 'தமது தூய்மையான செல்வத்திலிருந்து இந்த இடத்தை யாரேனும் (பள்ளிவாசலுக்காக) விலைக்கு வாங்கித் தந்து, அதில் மற்ற முஸ்லிம்களைப் போன்றே அவர் இருந்து வந்தால், அவருக்குச் சொர்க்கத்தில் இதை விடச் சிறந்தது கிடைக்கும்' என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அப்போது, நான் எனது தூய்மையான செல்வத்திலிருந்து அந்த இடத்தை விலைக்கு வாங்கி, முஸ்லிம்களின் பொதுப் பயன்பாட்டுக்காக வழங்கியது உங்கள் இருவருக்கும் தெரியும் அல்லவா? ஆனால், அந்தப் பள்ளிவாசலிலேயே என்னை இரண்டு 'ரக்அத்'கள் தொழ விடாமல் (தற்போது நீங்கள்) தடுக்கின்றீர்களே" என்றார்கள்.

பின்னர் உஸ்மான் (ரலி) அவர்கள், "(மறுபடியும்) அல்லாஹ்வை முன்னிறுத்தி உங்களிடம் கேட்கிறேன்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் மதீனாவுக்கு வந்த புதிதில், மதீனாவில் 'ரூமா' எனப்படும் கிணற்றைத் தவிர வேறெந்தக் கிணற்றிலும் குடிப்பதற்கு நல்ல தண்ணீர் இல்லாமல் இருந்தது. அப்போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், 'தமது தூய்மையான செல்வத்திலிருந்து அந்தக் கிணற்றை ஒருவர் விலைக்கு வாங்கித் தந்து, அதில் முஸ்லிம்களின் வாளிகளுக்குள்ள உரிமையைப் போன்றே தனது வாளிக்கும் அவர் கடைப்பிடித்தால், அவருக்குச் சொர்க்கத்தில் இதைவிடச் சிறந்தது கிடைக்கும்' என்று கூறினார்கள். அப்போது, நான் எனது தூய்மையான செல்வத்திலிருந்து அதை வாங்கிக் கொடுத்தது உங்களுக்குத் தெரியுமல்லவா? ஆனால், அந்தக் கிணற்றின் நீரை அருந்த விடாமல் என்னைத் தடுக்கின்றீர்களே" என்றார்கள்

பின்னர், "இக்கட்டான நேரத்தில் நடந்த 'உஸ்ரா' (தபூக்) போருக்கான படைகளை ஆயத்தம் செய்வதற்குப் பெருமளவில் பொருளுதவி புரிந்தவன் நான்தான் என்பதும் உங்களுக்குத் தெரியுமல்லவா?" என்றும் உஸ்மான் (ரலி) அவர்கள் கேட்டார்கள். அதற்கு அவர்கள், "இறைவா! (நீயே சாட்சி), ஆம் (தெரியும்)" என்றனர்.[165]

525 ஷகீக் பின் சலமா (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

(ஒருமுறை) அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்கள் (உஸ்மான் - ரலி அவர்களின் தாய்வழிச் சகோதரர்) வலீது பின் உக்பா (ரஹ்) அவர்களைச் சந்தித்தார்கள். அப்போது அவர்களிடம் வலீத் (ரஹ்) அவர்கள், "இறைநம்பிக்கையாளர்களின் தலைவர் உஸ்மான் (ரலி) அவர்களிடம் நீங்கள் சரியான முறையில் உறவைப் பேணுவதில்

165. காண்க முன்சென்ற ஹதீஸ் எண்கள் - 394, 481 மற்றும் அவற்றின் அடிக்குறிப்புகள்

رَضِيَ اللّٰهُ عَنْهُ؟ قَالَ عَبْدُ الرَّحْمٰنِ: أَبْلِغْهُ فَذَكَرَ الْحَدِيثَ، وَأَمَّا قَوْلُهُ إِنِّي تَخَلَّفْتُ يَوْمَ بَدْرٍ فَإِنِّي كُنْتُ أُمَرِّضُ رُقَيَّةَ بِنْتَ رَسُولِ اللّٰهِ ﷺ حَتَّى مَاتَتْ وَقَدْ ضَرَبَ لِي رَسُولُ اللّٰهِ ﷺ بِسَهْمٍ وَمَنْ ضَرَبَ لَهُ رَسُولُ اللّٰهِ ﷺ بِسَهْمٍ فَقَدْ شَهِدَ.

فَذَكَرَ الْحَدِيثَ بِطُولِهِ إِلَى آخِرِهِ.

٥٢٦ حَدَّثَنَا عَبْدُاللّٰهِ حَدَّثَنِي سُفْيَانُ بْنُ وَكِيعٍ حَدَّثَنِي قَبِيصَةُ عَنْ أَبِي بَكْرِ بْنِ عَيَّاشٍ عَنْ عَاصِمٍ عَنْ أَبِي وَائِلٍ قَالَ: قُلْتُ لِعَبْدِ الرَّحْمٰنِ بْنِ عَوْفٍ: كَيْفَ بَايَعْتُمْ عُثْمَانَ وَتَرَكْتُمْ عَلِيًّا رَضِيَ اللّٰهُ عَنْهُ؟ قَالَ: مَا ذَنْبِي قَدْ بَدَأْتُ بِعَلِيٍّ، فَقُلْتُ أُبَايِعُكَ عَلَى كِتَابِ اللّٰهِ وَسُنَّةِ رَسُولِهِ وَسِيرَةِ أَبِي بَكْرٍ وَعُمَرَ رَضِيَ اللّٰهُ عَنْهُمَا، قَالَ: فَقَالَ فِيمَا اسْتَطَعْتُ قَالَ ثُمَّ عَرَضْتُهَا عَلَى عُثْمَانَ رَضِيَ اللّٰهُ عَنْهُ فَقَبِلَهَا.

லையே, ஏன்?" என்று கேட்டார். அப்போது அவரிடம் அப்துர்ரஹ்மான் (ரலி) அவர்கள், "அவரிடம் போய்ச் சொல்வீராக" என்று, (459ஆவது ஹதீஸில் உள்ளதைப் போன்று) சில தகவல்களைக் கூறினார்கள். (தொடர்ந்து பின்வருமாறு ஹதீஸ் தொடர்கிறது:)

அப்போது உஸ்மான் (ரலி) அவர்கள் கூறினார்கள்: "நான் பத்ருப் போரில் கலந்துகொள்ளவில்லை" என்று அவர் கூறுகின்றார் அப்போது (நோயுற்றிருந்த) அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் புதல்வி(யும் என்னுடைய மனைவியுமான) ருகைய்யா (ரலி) அவர்களுக்கு நான் சிகிச்சை(க்கு வழிவகை) செய்துகொண்டிருந்தேன் இறுதியில் அவர் இறந்துவிட்டார் (எனவே, பத்ரில் நான் கலந்துகொள்ள முடியவில்லை இருப்பினும், அந்தப் போரில் கிடைத்த செல்வங்களில்) அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் எனக்கும் ஒரு பங்கை ஒதுக்கினார்கள். அவ்வாறு (போரில் கலந்துகொள்ளாத) ஒருவருக்கு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் பங்கை ஒதுக்கினால், அவர் (அந்தப் போரில்) கலந்துகொண்டார் (என்றே கருதப்படுவார்)."

தொடர்ந்து இந்த ஹதீஸை (459ஆவது ஹதீஸில் உள்ளதைப் போன்று) இறுதிவரை முழுமையாகக் குறிப்பிட்டார்கள்

526 அபூவாயில் ஷகீக் பின் சலமா (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

நான் நபித்தோழர் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்களிடம், "(உமர் (ரலி) இறந்தபின்) நீங்கள் அலீ (ரலி) அவர்களை விட்டுவிட்டு, உஸ்மான் (ரலி) அவர்களுக்கு எவ்வாறு உறுதிமொழிப் பிரமாணம் (பைஅத்) செய்து கொடுத்தீர்கள்?" என்று கேட்டேன் அதற்கு அவர்கள், "(இதில்) என் தவறு எதுவும் இல்லை; அலீ (ரலி) அவர்களிடம்தான் நான் முதல் முதலில் பேச்சைத் தொடங்கினேன் நான் அலீ (ரலி) அவர்களிடம், 'அல்லாஹ்வின் வேதப்படியும் அவனுடைய தூதரின் வழிமுறைப்படியும், அபூபக்ர் (ரலி), உமர் (ரலி) ஆகியோரின் (அரசியல்) நடைமுறைப்படியும், (தாங்கள் நடந்துகொள்ள வேண்டும் என்ற அடிப்படையில்) நான் உங்களிடம் உறுதிமொழிப் பிரமாணம் செய்கிறேன்' என்றேன்; அதற்கு அவர், 'என்னால் இயன்றவரை' என்று கூறிவிட்டார் பின்னர் உஸ்மான் (ரலி) அவர்களிடம் அ(ந்தக் கருத்)தை எடுத்துரைத்தேன் அதை அவர் (அப்படியே) ஒப்புக்கொண்டார். (அதனால்தான் அவரை முற்படுத்த வேண்டியதாயிற்று)" என்று கூறினார்கள் [166]

166. இச்செய்தி முஸ்னது அஹ்மதில் மட்டுமே இடம்பெற்றுள்ளது இது அறிவிப்பாளர்தொடர் இடைமுறிவற்ற பலவீனமான ஹதீஸ் ஆகும் இதன் அறிவிப்பாளர்களுள் சுஃப்யான் பின் வகீஉ என்பார், ஹதீஸ்களைக் குழப்பி அறிவிப்பவர் ஆவார் அபூஹாதிம் அர்ராஸீ (ரஹ்) அவர்கள் இவரை பலவீனமான அறிவிப்பாளர் என்றும் இமாம் நஸாயீ (ரஹ்) அவர்கள் இவரை பலவீனமானவர் என்றும் கூறியுள்ளனர். (துஹ்ஃபா)

٥٢٧ حدثنا هاشم بن القاسم حدثنا ليث حدثنا زهرة بن معبد القرشي عن أبي صالح مولى عثمان رضي الله عنه قال: سمعت عثمان يقول على المنبر: أيها الناس إني كتمتكم حديثا سمعته من رسول الله ﷺ كراهية تفرقكم عني ثم بدا لي أن أحدثكموه ليختار امرؤ لنفسه ما بدا له سمعت رسول الله ﷺ يقول: رباط يوم في سبيل الله خير من ألف يوم فيما سواه من المنازل.

حدثنا أبو سعيد مولى بني هاشم حدثنا عكرمة بن إبراهيم باهلي حدثنا عبد الله بن عبد الرحمن بن أبي ذباب وذكره.

٥٢٨ حدثنا أبو سعيد حدثنا ابن لهيعة أخبرنا موسى بن وردان قال سمعت سعيد بن المسيب يقول: سمعت عثمان يخطب على المنبر وهو يقول: كنت أبتاع التمر من بطن من اليهود يقال لهم بنو قينقاع فأبيعه بربح الآصع فبلغ ذلك النبي ﷺ فقال: يا عثمان إذا اشتريت فاكتل وإذا بعت فكل.

٥٢٩ حدثنا بشر بن شعيب بن أبي حمزة حدثني أبي عن الزهري حدثني عروة بن الزبير أن عبيد الله بن

527 உஸ்மான் (ரலி) அவர்களின் (முன்னாள்) அடிமை அபூஸாலிஹ் அல்ஹாரிஸ் அவர்கள் கூறியதாவது:

(ஒரு முறை) உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்கள் சொற்பொழிவு மேடை (மிம்பர்)மீது நின்று உரையாற்றினார்கள் அப்போது, "மக்களே! நான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடமிருந்து செவியுற்ற தகவல் ஒன்றை (இதுகாறும்) உங்களிடம் (கூறாமல்) மறைத்துவந்தேன். என்னைவிட்டு நீங்கள் பிரிந்து சென்றுவிடுவதை நான் விரும்பாததே அதற்குக் காரணம். பின்னர் ஒவ்வொருவரும் தமக்கு என்ன தோன்றுகிறதோ அதைத் தேர்வு செய்துகொள்ளட்டும் என்பதற்காக, அதை உங்களுக்குத் தெரிவித்துவிட வேண்டும் என்று தோன்றியது. (அதனால் அத்தகவலை உங்களிடம் தெரிவிக்கிறேன்:)

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வின் பாதையில் (நாட்டின் எல்லையை) ஓர் இரவு காவல் காப்பது ஓராயிரம் நாட்கள் அஃதல்லா பிற இடங்களில் கழிப்பதைவிடச் சிறந்ததாகும்.[167]

528 சயீத் பின் அல்முசய்யப் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

(ஒரு முறை) உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்கள் சொற்பொழிவு மேடை (மிம்பர்) மீது நின்றுகொண்டு உரையாற்றினார்கள் அப்போது, "நான் 'பனூ கைனுகா' எனப்படும் யூதக் குலத்தாரிடமிருந்து பேரீச்சம் பழம் கொள்முதல் செய்து, அதை விற்கும்போது பல மடங்கு (ஆஸுஉ)[168] இலாபம் வைத்து விற்பனை செய்வது வழக்கம். இந்தச் செய்தி நபி (ஸல்) அவர்களுக்கு எட்டியபோது, நபி (ஸல்) அவர்கள், 'உஸ்மான்! நீர் கொள்முதல் செய்யும்போதும் அளந்துகொள்வீராக; விற்கும்போதும் அளந்தே கொடுப்பீராக' எனக் கூறினார்கள்" என்றார்கள்

529 உபைதுல்லாஹ் பின் அதீ பின் கியார் (ரஹ்) கூறியதாவது:

---

167. இந்த ஹதீஸின் அறிவிப்பாளரான அபூஸாலிஹ் அல்ஹாரிஸ் என்பார் தரம் அறியப்படாதவர் ஆவார். எனவே இதன் அறிவிப்பாளர்தொடர் பலவீனமானதாகும். இதே ஹதீஸ் முன்னர் எண் 440இல் சென்றுள்ளது. மேலும் காண்க: ஹதீஸ் எண்கள் - 415, 447 மற்றும் அவற்றின் அடிக்குறிப்புகள்.

168. இந்த இடத்தில் அரபி மூலத்தில் 'ஆஸுஉ' என இடம்பெற்றுள்ளது. இது அன்றைய நாட்களில் மதீனாவில் நடைமுறையில் இருந்த முகத்தல் அளவையாகும். 'ஆஸுஉ' என்பது 'ஸாஉ' என்பதன் பன்மையாகும். ஒரு 'ஸாஉ' என்பது 4 'முத்'கள் கொண்ட கொள்ளளவாகும். அதன்படி ஒரு 'ஸாஉ' என்பது 2 கிலோ 751 லிட்டர் கொண்ட கொள்ளளவுக்குச் சமமானதாகும். பார்க்க: முன்சென்ற ஹதீஸ் எண் - 417

عَدِيِّ بْنِ الْخِيَارِ أَخْبَرَهُ أَنَّ عُثْمَانَ رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ لَهُ: إِنَّ النَّبِيَّ ﷺ قَالَ لَهُ: إِنَّ اللَّهَ قَدْ بَعَثَ مُحَمَّدًا عَلَيْهِ الصَّلَاةُ وَالسَّلَامُ بِالْحَقِّ فَكُنْتُ مِمَّنْ اسْتَجَابَ لِلَّهِ وَلِرَسُولِهِ وَآمَنَ بِمَا بُعِثَ بِهِ مُحَمَّدٌ عَلَيْهِ الصَّلَاةُ وَالسَّلَامُ ثُمَّ هَاجَرْتُ الْهِجْرَتَيْنِ وَنِلْتُ صِهْرَ رَسُولِ اللَّهِ ﷺ وَبَايَعْتُ رَسُولَ اللَّهِ ﷺ فَوَاللَّهِ مَا عَصَيْتُهُ وَلَا غَشَشْتُهُ حَتَّى تَوَفَّاهُ اللَّهُ عَزَّ وَجَلَّ.

உஸ்மான் (ரலி) அவர்கள் என்னிடம் கூறினார்கள்: நபி (ஸல்) அவர்கள் என்னிடம், 'முஹம்மதை அல்லாஹ் உண்மை (வழி)யுடன் அனுப்பினான்' என்று கூறினார்கள். ஆகவே, நான் அல்லாஹ்வுடைய அழைப்புக்கும் அவனுடைய தூதரின் அழைப்புக்கும் பதிலளித்து, முஹம்மது (ஸல்) அவர்களுடன் கொடுத்தனுப்பப் பட்ட (வேதத்)தை நம்பிக்கைகொண்டவர்களுள் ஒருவன் ஆனேன். பின்னர் (அபிசீனியாவுக்கும், அடுத்து மதீனாவுக்குமாக) இரண்டு முறை (மக்காவிலிருந்து) புலம் பெயர்ந்து (ஹிஜ்ரத்) சென்றேன். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுடைய (மகளை மணமுடித்து, அவர்களின்) மருமகனாகவும் இருந்தேன். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் உறுதிமொழிப் பிரமாணம் (பைஅத்) அளித்திருந்தேன். அல்லாஹ்வின் மீதாணையாக! வல்லமையும் மாண்பும் மிக்க அல்லாஹ், நபி (ஸல்) அவர்களின் உயிரைக் கைப்பற்றும்வரை, நான் அவர்களுக்கு மாறுசெய்ததில்லை; அவர்களுக்கு மோசடி செய்ததும் இல்லை.[169]

(உஸ்மான் (ரலி) அவர்கள் அறிவித்த நபிமொழிகள் நிறைவுற்றன.)



169. இந்த ஹதீஸ், ஸஹீஹுல் புகாரியில் (3927) இடம்பெற்றுள்ளது. மேலும் பார்க்க: முன்சென்ற ஹதீஸ் எண் - 450

அலி பின் அபீதாலிப் (ரலி) அவர்களின் வரலாற்றுச் சுருக்கம்

அலி பின் அபீதாலிப் பின் அப்தில் முத்தலிப் அல்குறஷிய்யி அல்ஹாஷிமீ என்பது அவர்களின் முழுப் பெயராகும்.

அலி (ரலி) அவர்கள், சிறு வயதிலேயே இஸ்லாத்தை ஏற்றார்கள் அன்னாரின் குறிப்புப் பெயர் (குன்யத்) 'அபுல் ஹசன்' (ஹசனின் தந்தை) என்பதாகும் இளைஞர்களுள் முதன் முதலாக இஸ்லாத்தை ஏற்ற சிறப்பும் அவருக்கு உண்டு

நபி (ஸல்) அவர்களுக்கு நபித்துவம் கிடைப்பதற்குப் பத்து ஆண்டுகளுக்குமுன் பிறந்தார்கள்; நபி (ஸல்) அவர்களின் அரவணைப்பில் வளர்க்கப்பட்டார்கள். இவர்களின் தந்தை அபூதாலிப் தாயார் பெயர் ஃபாத்திமா பின்த் அசது பின் ஹாஷிம் தந்தை அபூதாலிப் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், தாயார் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்

நபி (ஸல்) அவர்கள் தமது 'ஹிஜ்ரத்' பயணத்திற்கு இரகசியமாகப் புறப்பட்டபோது, தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட அடைக்கலப் பொருள்களை உரியவர்களிடம் சேர்ப்ப தற்காக, அலியவர்களைத் தமது வீட்டில் படுக்கவைத்துவிட்டுப் புறப்பட்டார்கள். எதிரிகளால் சூழப்பட்ட அந்தச் சூழ்நிலையிலும், துணிச்சலுடன் நபி (ஸல்) அவர்களின் கட்டளையை செவ்வனே செய்து முடித்தார் அலீ (ரலி)

நபி (ஸல்) அவர்களின் மகள் ஃபாத்திமா (ரலி) அவர்களை மணந்தார்கள். ஹசன், ஹுசைன் (ரலி) ஆகிய இருவரும் இவர்களுக்குப் பிறந்தவர்களே

தபூக் போர் தவிர, மற்ற எல்லாப் போர்களிலும் கலந்துகொண்டார்கள். "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் தபூக் போருக்குப் புறப்பட்டபோது, மதீனாவில் அலீ (ரலி) அவர்களை (தாம் திரும்பிவரும் வரை தமக்கு)ப் பிரதிநிதியாக நியமித்தார்கள் அப்போது அலீ (ரலி) அவர்கள், 'குழந்தைகளையும் பெண்களையும் கவனித்துக் கொள்வதற்காகவா என்னை விட்டுச் செல்கிறீர்கள்?' என்று கேட்டார்கள் அதற்கு நபி (ஸல்) அவர்கள், 'மூசாவிடம் ஹாரூன் இருந்த தகுதியில் என்னிடம் நீங்கள் இருப்பதை விரும்பவில்லையா?' ஆயினும், (ஒரு வேறுபாடு என்னவெனில்), எனக்குப் பிறகு எந்த இறைத்தூதரும் இல்லை' என்று சொன்னார்கள்" (புகாரீ 4416, முஸ்லிம் 4777).

அலீ (ரலி) அவர்கள் இஸ்லாத்திற்காக அரும்பெரும் சேவைகள் செய்துள்ளார்கள். பல அறப்போர்களின்போது இஸ்லாமியப் படையின் கொடி இவர்கள் கையில் கொடுக்கப்பட்டிருந்தது.

'ராஃபிளாக்கள்' எனும் பிரிவினர் அலீ (ரலி) அவர்களின் வாழ்க்கை வரலாற்றில், புனைந்துரைக்கப்பட்ட பல நிகழ்வுகளைப் புகுத்தியுள்ளனர். புனை சுருட்டுகளால்தான் அவர்களுக்குச் சிறப்புக்கூற வேண்டிய தேவையேதும் இல்லை எனும் அளவுக்கு உண்மையிலேயே அவர்களுக்கு நல்ல பல சிறப்புகள் உள்ளன. அதற்குக் கீழ்க் காணும் நபிமொழியே சான்று:

"அலீ (ரலி) அவர்கள் கைபர்ப் போருக்கு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுடன் (செல்ல முடியாமல்) பின்தங்கிவிட்டிருந்தார்கள். அவர்களுக்குக் கண் வலி ஏற்பட்டிருந்தது. அப்போது அவர்கள், 'நான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுடன் (போருக்குச்) செல்லாமல் பின்தங்கிவிட்டேனே!' என்று (வருத்தத்துடன்) கூறினார்கள்.

"அதன் பின்னர் புறப்பட்டுச் சென்று, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுடன் சேர்ந்துகொண்டார்கள். எந்த நாளின் காலைப் பொழுதில் கைபரை அல்லாஹ் வெற்றிகொள்ளச் செய்தானோ, அதற்கு முந்தைய நாள் மாலை நேரம் வந்தபோது, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், 'நாளை '(முஸ்லிம்களின்) கொடியை, அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் நேசிக்கும், அல்லது அல்லாஹ்வையும் அவனுடைய தூதரையும் நேசிக்கும் ஒருவரிடம் கொடுக்கப்போகிறேன். அவருக்கு அல்லாஹ் வெற்றியளிப்பான்' என்று கூறினார்கள்.

"நாங்கள் எதிர்பார்க்காத நிலையில், (அடுத்த நாள்) அலீ (ரலி) அவர்கள் எங்களுடன் வந்திருந்தார்கள். அப்போது மக்கள், 'இதோ அலீ வந்துவிட்டார்!' என்று சொன்னார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அந்தக் கொடியை அலீ (ரலி) அவர்களிடமே கொடுத்தார்கள். அவர்களுக்கே அல்லாஹ் வெற்றியளித்தான்." (முஸ்லிம்-4781).

உஸ்மான் (ரலி) அவர்களுக்குப்பின், நான்காவது கலீஃபாவாகப் பொறுப்பேற்று, அலீ (ரலி) அவர்கள் அரிய பல சேவைகளை ஆற்றியுள்ளார்கள். ஹிஜ்ரீ 35ஆம் ஆண்டு முதல் ஐந்து ஆண்டுகள் ஆட்சி புரிந்தார்கள். இஸ்லாமிய பேரரசு விரிவடைய வாய்ப்பில்லா வகையில் உள்நாட்டுக் குழப்பங்களை எதிர்கொள்ள வேண்டி இருந்ததால் புதிதாக நாடுகள் எதுவும் அன்னாரின் ஆட்சியில் வெற்றிகொள்ளப்படவில்லை.

ஹிஜ்ரீ 40 ரமளான் மாதம் 17ஆம் நாள் அன்று தமது 63ஆவது வயதில் அப்துர் ரஹ்மான் இப்னு முல்ஜிம் என்பவனால் கொலை செய்யப்பட்டார்கள்.

இராக்கில் உள்ள கூஃபா நகரில் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள்.

'இவர்களின் உடல் மண்ணில் அடக்கம் செய்யப்படவில்லை; வானவர்களால் வானத்தளவில் உயர்த்திக்கொள்ளப்பட்டது' என்றெல்லாம் சில அடிப்படையற்ற தகவல்கள் உலாவருகின்றன! அவற்றுக்கு ஆதாரம் இல்லை.

சான்றேடுகள்:

- முஹம்மதுர் ரசூலுல்லாஹ்,
- ஃபத்ஹுல் பாரீ.

(٤) مُسْنَدُ عَلِيِّ بْنِ أَبِي طَالِبٍ رَضِيَ اللهُ عَنْهُ

٥٣٠ حدثنا أَبُو أَحْمَدَ مُحَمَّدُ بْنُ عَبْدِ اللهِ بْنِ الزُّبَيْرِ حَدَّثَنَا سُفْيَانُ عَنْ عَبْدِ الرَّحْمَنِ بْنِ الْحَارِثِ بْنِ عَيَّاشِ بْنِ أَبِي رَبِيعَةَ عَنْ زَيْدِ بْنِ عَلِيٍّ عَنْ أَبِيهِ عَنْ عُبَيْدِ اللهِ بْنِ أَبِي رَافِعٍ عَنْ عَلِيِّ بْنِ أَبِي طَالِبٍ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ: وَقَفَ رَسُولُ اللهِ ﷺ بِعَرَفَةَ فَقَالَ: هَذَا الْمَوْقِفُ وَعَرَفَةُ كُلُّهَا مَوْقِفٌ وَأَفَاضَ حِينَ غَابَتِ الشَّمْسُ ثُمَّ أَرْدَفَ أُسَامَةَ فَجَعَلَ يُعْنِقُ عَلَى بَعِيرِهِ وَالنَّاسُ يَضْرِبُونَ يَمِينًا وَشِمَالاً يَلْتَفِتُ إِلَيْهِمْ وَيَقُولُ: السَّكِينَةَ أَيُّهَا النَّاسُ ثُمَّ أَتَى جَمْعًا فَصَلَّى بِهِمُ الصَّلاَتَيْنِ الْمَغْرِبَ وَالْعِشَاءَ ثُمَّ بَاتَ حَتَّى أَصْبَحَ ثُمَّ أَتَى قُزَحَ فَوَقَفَ عَلَى قُزَحَ، فَقَالَ: هَذَا الْمَوْقِفُ وَجَمْعٌ كُلُّهَا مَوْقِفٌ ثُمَّ سَارَ حَتَّى أَتَى مُحَسِّرًا فَوَقَفَ عَلَيْهِ فَقَرَعَ نَاقَتَهُ فَخَبَّتْ حَتَّى جَازَ الْوَادِيَ ثُمَّ حَبَسَهَا ثُمَّ أَرْدَفَ الْفَضْلَ وَسَارَ حَتَّى أَتَى الْجَمْرَةَ فَرَمَاهَا ثُمَّ أَتَى الْمَنْحَرَ، فَقَالَ: هَذَا الْمَنْحَرُ وَمِنًى كُلُّهَا مَنْحَرٌ قَالَ وَاسْتَفْتَتْهُ جَارِيَةٌ شَابَّةٌ مِنْ خَثْعَمَ فَقَالَتْ: إِنَّ أَبِي شَيْخٌ كَبِيرٌ قَدْ أَفْنَدَ وَقَدْ أَدْرَكَتْهُ فَرِيضَةُ اللهِ فِي الْحَجِّ فَهَلْ يُجْزِىءُ عَنْهُ أَنْ أُؤَدِّيَ عَنْهُ؟ قَالَ: نَعَمْ فَأَدِّي

பாடம்: 4

அலீ பின் அபீதாலிப் (ரலி) அவர்கள் அறிவித்த நபிமொழிகள்

530 *அலீ பின் அபீதாலிப் (ரலி) அவர்கள் கூறியதாவது:*

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் (துல்ஹஜ் ஒன்பதாம் நாளில்) 'அரஃபா'வில் தங்கினார்கள். அப்போது "இது தங்குமிடமாகும். 'அரஃபா' முழுவதும் தங்குமிடமாகும்" என்று கூறினார்கள். சூரியன் மறைந்ததும், வேகமாகப் புறப்பட்டார்கள். பின்னர், தமது (ஒட்டகத்தின்) பின்னே உசாமா (ரலி) அவர்களை அமர வைத்துக் கொண்டார்கள். தமது ஒட்டகத்தை வேகமாக ஓட்டினார்கள். மக்களோ, (விரைவாகப் புறப்படுவதற்காக ஒட்டகங்களின்) இடப் புறமும் வலப் புறமும் அடித்தனர். அவர்களை நோக்கித் திரும்பிய அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "மக்களே! அமைதி!" என்று கூறினார்கள்.

பின்பு 'முஸ்தலிஃபா'வுக்கு வந்தார்கள். அங்கு மஃக்ரிப், 'இஷா' ஆகிய தொழுகைகள் இரண்டையும் சேர்த்து, மக்களுக்குத் தொழ வைத்தார்கள். பின்னர் காலைவரை அங்குத் தங்கினார்கள். பின்னர் (காலையில் அங்குள்ள) 'குஸஹ்' என்ற மலைப் பகுதிக்கு வந்தார்கள். பின்னர் (சிறிது நேரம்) அதன்மீது தங்கினார்கள். "இதுவும் தங்குமிடமாகும் (இந்த) 'முஸ்தலிஃபா' முழுவதும் தங்குமிடமாகும்" என்றார்கள்.

பின்னர் புறப்பட்டு, 'முஹஸ்ஸிர்' (என்ற கணவாய்ப்) பகுதிக்கு வந்து, அங்கும் தங்கினார்கள். பிறகு (புறப்படுவதற்காகத்) தம் ஒட்டகத்தை வேகமாகத் தட்டினார்கள். அது வேகமாகப் புறப்பட்டது. பின்னர் ஓர் ஓடைப் பகுதிக்கு வந்தார்கள். அப்போது ஒட்டகத்தை நிறுத்தி, தம் (ஒட்டகத்தில் தமக்குப்) பின்னே ஃபள்லு பின் அப்பாஸ் (ரலி) அவர்களையும் ஏற்றிக்கொண்டார்கள். பின்னர் (மினாவின்) 'ஜம்ரா' (கல்லெறியும்) பகுதிக்கு வந்தடைந்து, அங்கு கல்லெறிந்தார்கள். பின்னர் (அங்குள்ள) 'குர்பானி' கொடுக்குமிடத்திற்கு வந்தார்கள். "இது அறுக்குமிடமாகும். இந்த 'மினா' முழுவதும் அறுக்குமிடமாகும்" என்றார்கள்.

அப்போது 'கஸ்அம்' குலத்தைச் சேர்ந்த இளம் பெண் ஒருத்தி, அவர்களிடம் வந்து, "என் தந்தை முதுமை அடைந்தவராகவும் தள்ளாடியவராகவும் இருக்கிறார். அவருக்கு அல்லாஹ் விதித்த 'ஹஜ்' கடமை ஏற்பட்டிருந்தது. அவருக்காக நான் அதனை நிறைவேற்றினால், அவருக்கு நற்கூலி கிடைக்குமா?" என்று நபி (ஸல்) அவர்களிடம் கேட்டாள்.

عَنْ أَبِيكَ قَالَ وَقَدْ لَوَى عُنُقَ الْفَضْلِ، فَقَالَ لَهُ الْعَبَّاسُ: يَا رَسُولَ اللَّهِ لِمَ لَوَيْتَ عُنُقَ ابْنِ عَمِّكَ؟ قَالَ: رَأَيْتُ شَابًّا وَشَابَّةً فَلَمْ آمَنِ الشَّيْطَانَ عَلَيْهِمَا، قَالَ ثُمَّ جَاءَهُ رَجُلٌ فَقَالَ: يَا رَسُولَ اللَّهِ حَلَقْتُ قَبْلَ أَنْ أَنْحَرَ؟ قَالَ: انْحَرْ وَلاَ حَرَجَ، ثُمَّ أَتَاهُ آخَرُ فَقَالَ يَا رَسُولَ اللَّهِ إِنِّي أَفَضْتُ قَبْلَ أَنْ أَحْلِقَ، قَالَ: احْلِقْ أَوْ قَصِّرْ وَلاَ حَرَجَ، ثُمَّ أَتَى الْبَيْتَ فَطَافَ بِهِ ثُمَّ أَتَى زَمْزَمَ، فَقَالَ: يَا بَنِي عَبْدِ الْمُطَّلِبِ سِقَايَتَكُمْ وَلَوْلاَ أَنْ يَغْلِبَكُمُ النَّاسُ عَلَيْهَا لَنَزَعْتُ بِهَا.

٥٣١ حدثنا عَبْدُ الصَّمَدِ بْنُ عَبْدِ الْوَارِثِ حَدَّثَنَا هِشَامٌ عَنْ قَتَادَةَ عَنْ أَبِي حَرْبِ بْنِ أَبِي الأَسْوَدِ عَنْ أَبِيهِ عَنْ عَلِيٍّ رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ: قَالَ رَسُولُ اللَّهِ ﷺ: بَوْلُ الْغُلاَمِ يُنْضَحُ عَلَيْهِ وَبَوْلُ الْجَارِيَةِ يُغْسَلُ.

அதற்கு நபி (ஸல்) அவர்கள், "கிடைக்கும். உன் தந்தைக்காக நீ நிறைவேற்று" என்று மறுமொழி கூறினார்கள். (அப்போது அந்த இளம் பெண்ணையே (இளைஞர்) ஃபள்ல் (ரலி) அவர்கள் பார்த்துக் கொண்டிருந்தார்கள். எனவே,) ஃபள்ல் (ரலி) அவர்களின் கழுத்தை நபி (ஸல்) அவர்கள் (வேறு பக்கம்) திருப்பி விட்டார்கள். அப்போது (ஃபள்ல் அவர்களின் தந்தை) அப்பாஸ் (ரலி) அவர்கள், "அல்லாஹ்வின் தூதரே! உங்கள் சிறிய தந்தையின் மகனின் கழுத்தை (முகத்தை) ஏன் திருப்பினீர்கள்?" என்று கேட்டார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள், "இவரும் இளைஞர்; அந்தப் பெண்ணும் இளம்பெண் என்பதை அறிந்த நான், இவ்விருவர் பற்றி, (தீமைக்குத் தூண்டும்) ஷைத்தானை அஞ்சாமல் இருக்க இயலவில்லை" என்று கூறினார்கள்.

பின்னர் (நபி–ஸல்) அவர்களிடம் ஒருவர் வந்து, "அல்லாஹ்வின் தூதரே! நான் குர்பானி கொடுப்பதற்கு முன் தலையைச் சிரைத்துவிட்டேன்" என்று கூறினார். அதற்கு நபி (ஸல்), "குர்பானியை (இப்போது) கொடுங்கள்; குற்றமில்லை" என்றார்கள். பின்னர் மற்றொருவர் அவர்களிடம் வந்து, "அல்லாஹ்வின் தூதரே! நான் தலையை மழித்துக் கொள்வதற்கு முன் 'தவாஃபுல் இஃபாளா' (ஹஜ்ஜுடைய தவாஃப்) செய்துவிட்டேன்" என்று கூறினார். "நீங்கள் மழித்துக்கொள்ளுங்கள்; அல்லது (வெட்டிக்) குறைத்துக் கொள்ளுங்கள்; குற்றமில்லை" என்று கூறினார்கள்.

பின்னர் கஅபாவுக்கு வந்து, ஹஜ்ஜுக்கான 'தவாஃப்' செய்தார்கள். பின்பு 'ஸம்ஸம்' கிணற்றுக்கு வந்து, "அப்துல் முத்தலிபின் சந்ததிகளே! நீங்களே (ஸம்ஸம்) நீர் விநியோகித்து வாருங்கள். (உங்களுடன் சேர்ந்து நானும் மக்களுக்குத் தண்ணீர் விநியோகிக்க முன்வந்து,) இவ்விஷயத்தில் மற்றவர்கள் உங்களை மிகைத்துவிடமாட்டார்கள் என்றிருந்தால், நானும் (உங்களுடன் சேர்ந்து) நீர் இறைத்திருப்பேன்" என்று கூறினார்கள்.[1]

531 அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

ஆண் குழந்தையின் சிறுநீர் (ஆடையில்) பட்டுவிட்டால், அதில் தண்ணீரைத் தெளித்துவிட வேண்டும். பெண் குழந்தையின் (சிறுநீர்) பட்டுவிட்டால், (அது)

1. அப்துல்முத்தலிபின் சந்ததிகள் குறைந்த எண்ணிக்கையிலேயே இருந்தனர். தொன்றுதொட்டு ஸம்ஸம் நீர் இறைத்து மக்களுக்குப் புகட்டுவது அவர்களின் பணியாக இருந்துவந்தது. ஆர்வ மிகுதியால், நபி (ஸல்) அவர்களும் இப்பணியில் இறங்கிவிட்டால், அந்த நற்பணியில் மற்ற மக்களும் போட்டியிட்டு இறங்கிவிடுவார்கள். முடிவில் இந்தப் பணியின் பொறுப்பு அப்துல் முத்தலிபின் சந்ததிகளின் கைகளைவிட்டுப் போய்விடும் என்ற கருத்திலேயே நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்.

இது ஹஸன் தரத்தில் அமைந்த ஹதீஸ் ஆகும். இந்த ஹதீஸ், திர்மிதீ [illegible], அபூதாவூத் [illegible], இப்னு குஸைமா, பைஹகீயின் ஸுனனுல் குப்ரா [illegible], முஸ்னதுல் பஸ்ஸார் 532 ஆகிய நூல்களிலும் இடம்பெற்றுள்ளது. இதைவிடக் கூடுதல் விவரங்களுடன் முஸ்லிம் 2334ஆவது எண்ணில் இந்த ஹதீஸ் இடம்பெற்றுள்ளது. இந்த ஹதீஸ் கூடுதல் குறைவாக முன்சென்ற ஹதீஸ் - 494; பின்வரும் ஹதீஸ்கள் - 532, 578, 729, 1277 ஆகியவற்றிலும் இடம்பெற்றுள்ளது.

கழுவப்பட வேண்டும்.

இதை அலீ (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

கத்தாதா (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்:

இந்தச் சட்டம், அந்த ஆண், பெண் ஆகிய இரண்டு குழந்தைகளும் (திட) உணவை உண்ணாதவரைதான். திடஉணவு உண்ணத் தொடங்கிவிட்டால், அவர்களின் சிறுநீர் கழுவப்பட வேண்டும்.[2]

قَالَ قَتَادَةُ: هَذَا مَا لَمْ يَطْعَمَا فَإِذَا طَعِمَا غُسِلَ بَوْلُهُمَا.

532 அலீ பின் அபீதாலிப் (ரலி) அவர்கள் கூறியதாவது:

نبی (ஸல்) அவர்கள் (துல்ஹஜ் ஒன்பதாம் நாளில்) 'அரஃபா'வில் தங்கினார்கள். (தமது வாகனத்தில்) தமக்குப் பின்னால் உசாமா பின் ஸைத் (ரலி) அவர்களை அமரவைத்தார்கள். "இது தங்குமிடமாகும்; 'அரஃபா' முழுதும் தங்குமிடமாகும்" என்றார்கள். பின்னர் விரைவாகப் புறப்பட்டார்கள். மக்களும் (புறப்பட எண்ணித் தங்களின் வாகனங்களை) வலப் புறமாகவும் இடப் புறமாகவும் அடித்தார்கள். அவர்களை நோக்கித் திரும்பிய நபியவர்கள், "மக்களே! அமைதி! அமைதி!" என்றார்கள்.

٥٣٢ حدثنا عَبْد اللهِ بْن أَحْمَد قَالَ حَدَّثَنِي أَحْمَدُ بْنُ عَبْدَةَ الْبَصْرِيُّ حَدَّثَنَا الْمُغِيرَةُ بْنُ عَبْدِ الرَّحْمَنِ بْنِ الْحَارِثِ الْمَخْزُومِيُّ حَدَّثَنِي أَبِي عَبْدُ الرَّحْمَنِ بْنُ الْحَارِثِ عَنْ زَيْدِ بْنِ عَلِيِّ بْنِ حُسَيْنِ بْنِ عَلِيٍّ عَنْ أَبِيهِ عَلِيِّ بْنِ حُسَيْنٍ عَنْ عُبَيْدِ اللهِ بْنِ أَبِي رَافِعٍ مَوْلَى رَسُولِ اللهِ ﷺ عَنْ عَلِيِّ بْنِ أَبِي طَالِبٍ رَضِيَ اللهُ عَنْهُ: أَنَّ النَّبِيَّ ﷺ وَقَفَ بِعَرَفَةَ وَهُوَ مُرْدِفٌ أُسَامَةَ بْنَ زَيْدٍ، فَقَالَ: هَذَا الْمَوْقِفُ وَكُلُّ عَرَفَةَ مَوْقِفٌ ثُمَّ دَفَعَ يَسِيرُ الْعَنَقَ وَجَعَلَ النَّاسُ يَضْرِبُونَ يَمِينًا وَشِمَالاً وَهُوَ يَلْتَفِتُ وَيَقُولُ: السَّكِينَةَ أَيُّهَا النَّاسُ السَّكِينَةَ أَيُّهَا النَّاسُ حَتَّى جَاءَ الْمُزْدَلِفَةَ وَجَمَعَ بَيْنَ الصَّلَاتَيْنِ ثُمَّ وَقَفَ بِالْمُزْدَلِفَةِ فَوَقَفَ عَلَى قُزَحَ، وَأَرْدَفَ الْفَضْلَ بْنَ عَبَّاسٍ، وَقَالَ: هَذَا الْمَوْقِفُ وَكُلُّ الْمُزْدَلِفَةِ مَوْقِفٌ ثُمَّ دَفَعَ وَجَعَلَ يَسِيرُ الْعَنَقَ وَالنَّاسُ يَضْرِبُونَ يَمِينًا وَشِمَالاً وَهُوَ يَلْتَفِتُ وَيَقُولُ السَّكِينَةَ السَّكِينَةَ أَيُّهَا النَّاسُ حَتَّى جَاءَ مُحَسِّرًا فَقَرَعَ رَاحِلَتَهُ فَخَبَّتْ حَتَّى خَرَجَ ثُمَّ عَادَ لِسَيْرِهِ الْأَوَّلِ حَتَّى

பின்னர் 'முஸ்தலிஃபா'வுக்கு வந்து, இரண்டு தொழுகைகளைச் சேர்த்(துத் தொழு)தார்கள். பின்னர் முஸ்தலிஃபாவில் தங்கினார்கள். 'குஸஹ்' மலைப் பகுதியில் தங்கியிருந்த அவர்கள், (புறப்பட ஆயத்தமாகி) தம் பின்னே ஃபள்ல் பின் அப்பாஸ் (ரலி) அவர்களை அமர வைத்தார்கள். "இது தங்குமிடமாகும்; இந்த முஸ்தலிஃபா முழுதும் தங்குமிடமாகும்" என்றார்கள்.

பின்னர், வேகமாகப் புறப்பட்டார்கள். மக்களோ (தங்களின் ஒட்டகங்களை) வலப் புறமாகவும் இடப் புறமாகவும் அடித்தார்கள். அவர்களை (நோக்கித் திரும்பிய நபியவர்கள்), "மக்களே! அமைதி! அமைதி!" என்றார்கள். பின்பு 'முஹஸ்ஸிர்'[3] என்ற பகுதிக்கு வந்தார்கள். பின்னர், தம் ஒட்டகத்தை லேசாக அடித்தார்கள். அது விரைவாகப் புறப்பட்டது. (அந்த இடத்தைவிட்டு வெளியேறினார்கள். பின்னர்

2. பாலைத் தவிர வேறு திட உணவுகளை உட்கொள்ளாத பிள்ளைகளின் சிறுநீர் தொடர்பாகவே இச்சட்டம் அமைவதாக 'கத்தாதா' (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள். ஆனாலும், இது அவர்களின் சொந்தக் கருத்தன்று. நபி (ஸல்) அவர்களின் வழிகாட்டலைத் தழுவியே இதை 'கத்தாதா' (ரஹ்) கூறுகிறார்கள். பார்க்க: புகாரீ ஹதீஸ் எண்கள் - 222, 223, 435, 5693; முஸ்லிம் - 483, 484. இந்த ஹதீஸ், திர்மிதீ (555), அபூதாவூத் (322), இப்னுமாஜா (518), நஸாயீ (302), தாரகுத்னீ (480), பைஹகீயின் சுனனுல் குப்ரா (2/415) உள்ளிட்ட நூல்களிலும் இடம்பெற்றுள்ளது.

3. முஹஸ்ஸிர் என்பது 'முஸ்தலிஃபா'விற்கும் 'மினா'விற்கும் இடையிலுள்ள ஓர் இடமாகும்.

رَمَى الْجَمْرَةَ ثُمَّ جَاءَ الْمَنْحَرَ، فَقَالَ: هَذَا الْمَنْحَرُ وَكُلُّ مِنًى مَنْحَرٌ ثُمَّ جَاءَتْهُ امْرَأَةٌ شَابَّةٌ مِنْ خَثْعَمَ فَقَالَتْ: إِنَّ أَبِي شَيْخٌ كَبِيرٌ وَقَدْ أَفْنَدَ وَأَدْرَكَتْهُ فَرِيضَةُ اللَّهِ فِي الْحَجِّ وَلَا يَسْتَطِيعُ أَدَاءَهَا فَيُجْزِئُ عَنْهُ أَنْ أُؤَدِّيَهَا عَنْهُ؟ قَالَ رَسُولُ اللَّهِ ﷺ: نَعَمْ، وَجَعَلَ يَصْرِفُ وَجْهَ الْفَضْلِ بْنِ الْعَبَّاسِ عَنْهَا، ثُمَّ أَتَاهُ رَجُلٌ فَقَالَ: إِنِّي رَمَيْتُ الْجَمْرَةَ وَأَفَضْتُ وَلَبِسْتُ وَلَمْ أَحْلِقْ، قَالَ: فَلَا حَرَجَ فَاحْلِقْ، ثُمَّ أَتَاهُ رَجُلٌ آخَرُ فَقَالَ: إِنِّي رَمَيْتُ وَحَلَقْتُ وَلَبِسْتُ وَلَمْ أَنْحَرْ، فَقَالَ: لَا حَرَجَ فَانْحَرْ، ثُمَّ أَفَاضَ رَسُولُ اللَّهِ ﷺ فَدَعَا بِسَجْلٍ مِنْ مَاءِ زَمْزَمَ فَشَرِبَ مِنْهُ وَتَوَضَّأَ ثُمَّ قَالَ: انْزِعُوا يَا بَنِي عَبْدِ الْمُطَّلِبِ فَلَوْلَا أَنْ تُغْلَبُوا عَلَيْهَا لَنَزَعْتُ، قَالَ الْعَبَّاسُ: يَا رَسُولَ اللَّهِ إِنِّي رَأَيْتُكَ تَصْرِفُ وَجْهَ ابْنِ أَخِيكَ، قَالَ: إِنِّي رَأَيْتُ غُلَامًا شَابًّا وَجَارِيَةً

மீண்டும் முதலில் (பிறை எட்டு அன்று) புறப்பட்ட இடத்திற்கே[4] வந்து, 'ஜம்ரா'வில் கல்லெறிந்தார்கள். பின்னர் குர்பானி கொடுக்குமிடம் வந்து, "இது குர்பானி கொடுக்குமிடமாகும்; 'மினா' முழுதுமே அறுக்குமிடம்தான்" என்றார்கள்.

பின்னர் 'கஸ்அம்' கோத்திரத்தைச் சேர்ந்த இளம் பெண் ஒருவர் நபியவர்களிடம் வந்து, "வயது முதிர்ந்த என் தந்தை முதுமையடைந்து, மிகவும் தள்ளாடிய நிலையில் இருக்கிறார். அல்லாஹ் விதித்த ஹஜ் அவர் மீது கடமையாகி இருந்தது. (ஆனால்) அதை நிறைவேற்ற அவருக்கு இயலவில்லை. அவருக்காக அதை நான் நிறைவேற்றினால், அவருக்குக் நன்மை கிடைக்குமா?" என்று கேட்டார். "கிடைக்கும்" என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அப்பெண்ணைப் பார்த்துக்கொண்டிருந்த) ஃபள்ல் பின் அப்பாஸ் (ரலி) அவர்களின் முகத்தை (வேறுபக்கம்) நபியவர்கள் திருப்பி வைத்தார்கள்.

பின்னர் நபியவர்களிடம் ஒருவர் வந்து, "நான் 'ஜம்ரா'வில் கல்லெறிந்துவிட்டேன். பின் ஹஜ்ஜுக்கான தவாஃபையும் முடித்துவிட்டு (தைக்கப்பட்ட) ஆடைகளை அணிந்து விட்டேன். ஆனால், தலைமுடியை (மட்டும்) மழிக்கவில்லை" என்றார். "அதனால் குற்றமில்லை; தலைமுடியை மழித்துக்கொள்ளுங்கள்" என்றார்கள். பிறகு, இன்னொருவரும் வந்து, "நான் ஜம்ராவில் கல்லெறிந்துவிட்டேன். தலைமுடியையும் மழித்துவிட்டேன். (தைக்கப்பட்ட) ஆடைகளை அணிந்துகொண்டேன். ஆனால், குர்பானி கொடுக்கவில்லை" என்று கூறினார். அதற்கு நபியவர்கள், "குற்றமில்லை. அறுத்துப் பலியிடுவீராக!" என்று கூறினார்கள். பின்னர், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் ஹஜ்ஜுக்கான 'தவாஃப்' செய்து, 'ஸம்ஸம்' தண்ணீர் நிறைந்த ஒரு வாளியைக் கொண்டுவரச் செய்து, அதைக் குடித்துவிட்டு, 'உளூ'ச் செய்தார்கள். பின்னர், "அப்துல் முத்தலிப் கூட்டத்தாரே! நீங்கள் இறங்குங்கள். தண்ணீர் இறைத்துக்கொடுங்கள்! இது விஷயத்தில் (நீரிறைத்து விநியோகிக்கும் பொறுப்பில் நீங்கள் மிகைக்கப்படமாட்டீர்கள் என்றிருந்தால், நானும் நீரிறைத்துக் கொடுத்திருப்பேன்" என்றார்கள். (ஃபள்ல் (ரலி) அவர்களின் தந்தை) அப்பாஸ் (ரலி) அவர்கள், "அல்லாஹ்வின் தூதரே! உங்கள் சகோதரர் மகனின் முகத்தைத் தங்கள் (வேறுபக்கம்) திருப்பி வைத்ததை நான்

4. நபி (ஸல்) அவர்கள் ஒரு வழிபாட்டுக்காகப் புறப்படும்போது வருவதற்கு ஒரு பாதையையும் திரும்பிச் செல்வதற்கு இன்னொரு பாதையையும் தேர்வு செய்வார்கள். எடுத்துக் காட்டாக: பெருநாள் தொழுகைக்காக வந்து திரும்பியபோதும், மக்கா வந்து திரும்பியபோதும், வெவ்வேறு பாதைகளையே தேர்வு செய்தார்கள். அதுபோன்றே பிறை எட்டு அன்று மினாவில் தங்கிய பிறகு அரஃபா செல்லும்போது சென்ற பாதை ஒன்றாகவும், முஸ்தலிஃபாவிலிருந்து திரும்பி மீண்டும் மினா வரும்போது வருகின்ற பாதை வேறொன்றாகவுமே அமைந்தது. மனித வாழ்வில் தொல்லைகள் நீங்கி வளம்பெற வேண்டும் என்ற நல்ல நோக்கில், இந்த வழிமுறையை நபியவர்கள் மேற்கொண்டார்கள். (பார்க்க: இமாம் நவவீ (ரஹ்) அவர்களின் முஸ்லிமின் விரிவுரை).

شَابَّةٌ فَخَشِيتُ عَلَيْهِمَا الشَّيْطَانَ.

பார்த்தேனே?" என்று கேட்டார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள், "அவரும் இளைஞர்; அந்தப் பெண்ணும் இளம் பெண் என்பதை உணர்ந்த நான், அவ்விருவர் விஷயத்திலும் ஷைத்தானை அஞ்சினேன்" என்றார்கள்.[5]

٥٣٣ حدثنا أَبُو سَعِيدٍ مَوْلَى بَنِي هَاشِمٍ حَدَّثَنَا إِسْرَائِيلُ حَدَّثَنَا أَبُو إِسْحَاقَ عَنِ الْحَارِثِ عَنْ عَلِيٍّ قَالَ: كَانَ رَسُولُ اللَّهِ ﷺ إِذَا عَوَّذَ مَرِيضًا قَالَ: أَذْهِبِ الْبَأْسَ رَبَّ النَّاسِ اشْفِ أَنْتَ الشَّافِي لَا شِفَاءَ إِلَّا شِفَاؤُكَ شِفَاءً لَا يُغَادِرُ سَقَمًا.

533 *அலீ (ரலி) அவர்கள் கூறியதாவது:*

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், நோயாளியை உடல்நலம் விசாரிக்கச் சென்றால், "அத்ஹிபில்பஃஸ, ரப்பந் நாஸ், இஷ்ஃபி அன்தஷ் ஷாஃபீ, லா ஷிஃபாஅ இல்லா ஷிஃபாஉக்க, ஷிஃபாஅன் லா யுஃகாதிரு ஸகமா" என்று பிரார்த்திப்பார்கள்.[6]

(பொருள்: மனிதர்களின் இரட்சகனே! இந்த நோயைப் போக்கி, அறவே நோயில்லாதவாறு நலமளிப்பாயாக! நீயே நலமளிப்பவன். நீயளிக்கும் நிவாரணத்தைத் தவிர வேறு ஒரு நிவாரணமில்லை.)

٥٣٤ حدثنا أَبُو سَعِيدٍ حَدَّثَنَا إِسْرَائِيلُ حَدَّثَنَا أَبُو إِسْحَاقَ عَنِ الْحَارِثِ عَنْ عَلِيٍّ قَالَ: قَالَ رَسُولُ اللَّهِ ﷺ: لَوْ كُنْتُ مُؤَمِّرًا أَحَدًا دُونَ مَشُورَةِ الْمُؤْمِنِينَ لَأَمَّرْتُ ابْنَ أُمِّ عَبْدٍ.

534 *அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:*

இறைநம்பிக்கையாளர்களின் ஆலோசனையின்றி, ஒருவரை நான் தலைவராக ஆக்க வேண்டும் என்றிருந்தால், இப்னு உம்மி அப்த் (எனும் அப்துல்லாஹ் பின் மஸ்ஊத்) அவர்களைத் தலைவராக ஆக்கியிருப்பேன்.

இதை அலீ (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.[7]

---

5. பார்க்க: முன்சென்ற ஹதீஸ் எண்கள் - 494, 530 மற்றும் அவற்றின் அடிக்குறிப்புகள்

6. இந்த ஹதீஸின் அறிவிப்பாளர்தொடரில் அலீ (ரலி) அவர்களிடமிருந்து அறிவிக்கும் ஹாரிஸ் அல்அஃவர் என்பவர் பலவீனமான அறிவிப்பாளர் ஆவார். அலீ பின் அல்மதீனீ (ரஹ்) அவர்கள் இவரைப் பொய்யர் என்று குறிப்பிடுகிறார்கள். அபூஸுர்ஆ அர்ராஸீ (ரஹ்) அவர்களும் அபூஹாத்திம் அர்ராஸீ (ரஹ்) அவர்களும் இவரின் ஹதீஸ்கள் ஆதாரமாகக் கொள்ளத் தக்கவையல்ல என்று கூறியுள்ளனர். எனவே இது முற்றிலும் பலவீனமான ஹதீஸ் ஆகும். எனினும், இதே கருத்தமைந்த ஹதீஸ், புகாரீ (5675, 5743, 5750), முஸ்லிம் (4409), திர்மிதீ (3488), அபூதாவூத் (3392), அஹ்மத் (847) ஆகிய நூல்களிலும் இடம்பெற்றுள்ளது. எனவே இது 'ஹஸன் லிஃகைரிஹி' (பிற சான்றுகளால் 'ஹஸன்' தரத்தை எட்டிய ஹதீஸ்) ஆகும்.

நோய் ஏற்பட்டால், குர்ஆன் வசனங்களைக் கொண்டும், இந்த நபிமொழியில் வந்துள்ளது போன்ற பிரார்த்தனைகளைக் கொண்டும் ஓதிப் பார்க்கலாம். நபி (ஸல்) அவர்கள், மார்க்கம் அனுமதிக்காத, பொருள் புரியாத வார்த்தைகளால் ஓதிப் பார்க்கத் தடை செய்துள்ளார்கள். ஓதிப் பார்ப்பதைக் கூடக் கைவிட்டு, இறைவன் மேல் முழுமையான நம்பிக்கை கொண்டு அவனையே சார்ந்திருப்பது ('தவக்குல்' வைப்பது), உன்னதமான இறைநம்பிக்கைக்குச் சான்றாகும். இப்படிப்பட்டவர்கள் கேள்வி கணக்கின்றிச் சொர்க்கம் செல்லும் பேறுபெற்றவர்கள் என்றும் ஒரு நபிமொழி உண்டு. (முஸ்லிம் ஹதீஸ் எண்கள் 371-374, சுருக்கமாக)

"இறைநம்பிக்கையாளர் ஒருவருக்கு ஏற்படும் வலி, துன்பம், நோய், கவலை, அவர் உணரும் சின்னஞ்சிறு மன வேதனை உட்பட எதுவானாலும் அதற்குப் பகரமாக அவருடைய பாவங்களுள் சில மன்னிக்கப்படுகின்றன" என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம் - 5030)

இந்த ஹதீஸில் கூறப்படுவது போன்று, நோயும் துன்பங்களும் ஏற்படும்போது பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன என்றால், ஏன் ஓதிப் பார்க்கவேண்டும் எனக் கருத வேண்டியதில்லை. காரணம், 'துஆ' (பிரார்த்தனை) என்பதே வழிபாடாகும் (திர்மிதீ 3170). எனவே, பிரார்த்திப்பதால், நோய் நீங்கி சுகம் பெறுவதோடு நற்கூலியும் கிடைத்துவிடுகிறது. பொறுமை மேற்கொள்வதால் நற்கூலியும் பாவமன்னிப்பும் கிடைத்துவிடுகிறது. (துஹ்ஃபதுல் அஹ்வதீ)

7. மேற்கண்ட 533ஆவது எண் ஹதீஸின் அறிவிப்பாளர்தொடரில் இடம்பெறும் ஹாரிஸ் அல்அஃவர் என்பார் இந்த

٥٣٥ حدثنا أبو سعيد حدثنا سعيد بن سلمة بن أبي الحسام مدني مولى لآل عمر حدثنا يزيد بن عبد الله عن عبد الله بن أبي سلمة عن عمرو بن سليم عن أمه قالت: بينما نحن بمنى إذا علي بن أبي طالب رضي الله عنه يقول: إن رسول الله ﷺ قال: إن هذه أيام أكل وشرب فلا يصومها أحد واتبع الناس على جمله يصرخ بذلك.

535 *அம்ர் பின் சுலைம் (ரஹ்) அவர்கள் தம் தாயார் (நவ்வார் பின்த் அப்தில்லாஹ்) வழியாக அறிவிப்பதாவது:*

நாங்கள் 'மினா'வில் இருந்தபோது, "நிச்சயமாக இந்த (ஹஜ்ஜுப் பெருநாளைத் தொடர்ந்து மூன்று) நாட்கள் உண்ணுவதற்கும் பருகுவதற்கும் உரிய நாட்களாகும். எனவே, இவற்றில் யாரும் நோன்பு நோற்கலாகாது" என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறியதாக அலீ (ரலி) அவர்கள், தம் ஒட்டகத்தில் அமர்ந்தவாறு கூறிக்கொண்டு மக்களைப் பின்தொடர்ந்து, உரத்த குரலில் அறிவித்தார்கள்.[8]

٥٣٦ حدثنا أبو سعيد حدثنا إسرائيل حدثنا عبد الأعلى عن أبي عبد الرحمن عن علي رضي الله عنه ورفعه قال: من كذب في حلمه كلف عقد شعيرة يوم القيامة.

536 *அலீ (ரலி) அவர்கள் கூறியதாவது:*

யார் தனது கனவு பற்றி பொய்யுரைக்கிறாரோ அவர் மறுமை நாளில் ஒரு வாற்கோதுமையை (அதன் இருமுனைகளையும் இணைத்து) முடிச்சிடும்படி (கூறி) வேதனை செய்யப்படுவார் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.[9]

٥٣٧ حدثنا أبو سعيد وحسين بن محمد قالا حدثنا إسرائيل عن أبي إسحاق عن الحارث عن علي رضي الله عنه قال: كان رسول الله ﷺ يصلي ركعتي الفجر عند الإقامة.

537 *அலீ (ரலி) அவர்கள் கூறியதாவது:*

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், 'ஃபஜ்ரு'டைய (முன் 'சுன்னத்') இரண்டு 'ரக்அத்'களை (ஃபஜ்ருடைய தொழுகைக்கு) 'இகாமத்' கூறும்போது தொழுவார்கள்.[10]

ஹதீஸிலும் இடம்பெற்றுள்ளார். எனவே இந்த ஹதீஸ் முற்றிலும் பலவீனமானதாகும். இந்த ஹதீஸ், ஹாரிஸ் அல்அஃவர் வழியாகவே திர்மிதீ (3744), இப்னுமாஜா (134), அல்பஸ்ஸார் (852) உள்ளிட்ட நூல்களிலும் இடம்பெற்றுள்ளது.

8. இதுபோன்ற கருத்தமைந்த ஹதீஸ், முஸ்லிமில் 2099, 2100 ஆகிய எண்களில் இடம்பெற்றுள்ளது.

9. இதுபோன்ற கருத்தமைந்த நபிமொழி புகாரீ (7042), திர்மிதீ (2207), தாரிமீ (2200), ஹாக்கிம் (8299), முஸ்னதுல் பஸ்ஸார் (595) ஆகிய நூல்களிலும் பதிவாகியுள்ளது. காணாத கனவைக் கண்டதாகப் பொய்யுரைப்பது மிகப் பெரிய பாவச் செயல் என்று இந்த நபிமொழி எச்சரிக்கிறது. குறிப்பாக, காணாத கனவுகளைக் கற்பனை செய்து, அதன் மூலம் காரியம் சாதிக்க முனைவது தண்டனைக்குரிய மிகப் பெரும் பாவச் செயல் என இந்த ஹதீஸில் விளக்கப்பட்டுள்ளது.

இந்த ஹதீஸின் அறிவிப்பாளர்தொடரில் மூன்றாவது அறிவிப்பாளராக அப்துல்அஃலா பின் ஆமிர் அஸ்ஸஅலபீ என்பார் இடம்பெற்றுள்ளார். இவர் பலவீனமானவர் என ஹதீஸ்கலை வல்லுநர்கள் குறிப்பிடுகின்றனர். இதன் அறிவிப்பாளர்தொடர் பலவீனமாக இருப்பினும் இக்கருத்தமைந்த ஹதீஸ் புகாரீ, திர்மிதீ, தாரிமீ போன்ற நூல்களில் ஆதாரபூர்வமான அறிவிப்புகளில் இடம்பெற்றுள்ளதால், இது 'ஹசனுன் லிஃகைரிஹி' (புறச் சான்றுகளால் ஹசன் தரத்தை எட்டிய ஹதீஸ்) ஆகும். இந்த ஹதீஸ், பின்வரும் ஹதீஸ் எண்கள் - 656, 661, 750, 1017, 1034, 1035 ஆகியவற்றிலும் இடம்பெற்றுள்ளது.

10. இதன் அறிவிப்பாளர்தொடரில் இரண்டாவது அறிவிப்பாளராக ஹாரிஸ் அல்அஃவர் என்பார் இடம்பெறுகிறார். இவர் பலவீனமான அறிவிப்பாளர் ஆவார். இவரைப் பற்றிய குறிப்பு முன்னர் 533ஆம் எண்ணில் சென்றுள்ளது. எனவே, இது பலவீனமான ஹதீஸாகும். இந்த ஹதீஸ், இதே அறிவிப்பாளர்தொடரில் முஸ்னதுல் பஸ்ஸார் (856), முஸன்னஃப் அப்திர் ரஸ்ஸாக் (4785) ஆகிய நூல்களிலும், இதே நூலில் 623, 725, 842, 885 ஆகிய எண்களிலும் பதிவாகியுள்ளது.

538 அலீ (ரலி) அவர்கள் கூறியதாவது:

பின்னிரவு (சஹர்) நேரத்தில் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் வந்து போவதற்காக எனக்கென்று தனிப்பட்ட நேரம் ஒன்று இருந்தது. அந்த நேரத்தில் (நபியவர்களிடம் நான் செல்லும்போது) அவர்கள் தொழுகையில் நின்றிருந்தால், எனக்காக 'தஸ்பீஹ்' (இறைத்துதி) கூறுவார்கள். அது எனக்குக் கிடைக்கும் அனுமதியாக அமையும். தொழாமல் இருந்தால், உள்ளே வருமாறு அழைப்பார்கள்.[11]

٥٣٨ حدثنا أبو سعيد حدثنا عبد الواحد بن زياد الثقفي حدثنا عمارة بن القعقاع عن الحارث بن يزيد العكلي عن أبي زرعة عن عبد الله بن نجي قال: قال علي: كانت لي ساعة من السحر أدخل فيها على رسول الله ﷺ فإن كان قائما يصلي سبح بي فكان ذاك إذنه لي وإن لم يكن يصلي أذن لي.

539 அலீ (ரலி) அவர்கள் கூறியதாவது:

நானும் பாத்திமாவும் தூங்கிக்கொண்டிருந்தபோது என்னிடம் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் வந்தார்கள். அது பின்னிரவு (சஹ்ர்) நேரமாக இருந்தது வாசலில் வந்து நின்ற அவர்கள், "நீங்கள் (தஹஜ்ஜுத்) தொழவில்லையா?" என்று கேட்டார்கள். அவர்களுக்கு பதில் கூறும் வகையில், "அல்லாஹ்வின் தூதரே! (நாங்கள் தூங்கும் போது) எங்களின் உயிர்கள் அல்லாஹ்வின் கையில் அல்லவா இருக்கின்றன. அவன் நாடி இருந்தால், எங்களை அவன் எழுப்பி இருக்கலாமே" என்றேன். எனக்கு மறுமொழி கூறாமல் திரும்பிச் சென்றார்கள். அவ்வாறு திரும்பிச் சென்றபோது, தமது கையைத் தமது தொடையில் தட்டியவாறு, "மனிதன் அதிகமாகத் தர்க்கம் செய்பவனாக இருக்கின்றான் என்ற (18:54ஆவது) வசனத்தைக் கூறியதைக் கேட்டேன்".[12]

٥٣٩ حدثنا عبد الله حدثنا إسماعيل بن عبيد بن أبي كريمة الحراني حدثنا محمد بن سلمة عن أبي عبد الرحيم عن زيد بن أبي أنيسة عن الزهري عن علي بن حسين عن أبيه قال: سمعت عليا يقول: أتاني رسول الله ﷺ وأنا نائم وفاطمة وذلك من السحر حتى قام على الباب، فقال: ألا تصلون؟ فقلت مجيبا له: يا رسول الله إنما نفوسنا بيد الله فإذا شاء أن يبعثنا، قال فرجع رسول الله ﷺ ولم يرجع إلي الكلام فسمعته حين ولى يقول: وضرب بيده على فخذه ﴿وكان الإنسان أكثر شيء جدلا﴾.

540 அலீ (ரலி) அவர்கள் கூறியதாவது:

٥٤٠ حدثنا أبو سعيد حدثنا إسرائيل حدثنا أبو إسحاق عن الحارث عن علي رضي الله عنه قال: كان رسول

---

11. இதன் அறிவிப்பாளர்தொடர் பலவீனமானதாகும். இதில் இடம்பெறும் அப்துல்லாஹ் பின் நுஜய்யி பின் சலமா என்பவர் பற்றி மாறுபட்ட கருத்துகள் ஹதீஸ்கலை வல்லுநர்களிடம் உண்டு. இப்னு ஹிப்பான், நசாயீ போன்றோர் இவரை நம்பகமானவர் என்றாலும், இமாம் ஷாஃபிஈ (ரஹ்) அவர்கள், ஹதீஸ்கலையில் இவர் யாரென்றே அறியப்படாதவர் என்றும், இமாம் தாரகுத்னீ (ரஹ்) அவர்கள், இவர் பலவீனமானவர் என்றும் குறிப்பிடுகின்றனர். இமாம் புகாரீ, இப்னு அதீ (ரஹ்) போன்றோர், இவர் பற்றிச் சந்தேகம் தெரிவிக்கின்றனர். மேலும், இவர் அலீ (ரலி) அவர்களைச் சந்தித்ததில்லை. அவர்களிடமிருந்து எதையும் கேட்டதுமில்லை. எனவே, தொடர் இடைமுறிவுற்றதாகவும் இச்செய்தி அமைகிறது. இதே அப்துல்லாஹ் பின் நுஜய்யி வழியாக நசாயீ (1196), இப்னுமாஜா (3698) ஆகிய நூல்களிலும் இந்த ஹதீஸ் இடம்பெற்றுள்ளது. பொதுவாக, தொழுகையில் மற்றவர்களுக்கு ஏதாவதொன்றை உணர்த்தும் வகையில் கனைப்பது, 'சுப்ஹானல்லாஹ்' என்று சொல்வது போன்ற மிகச் சிறிய செயல்களைச் செய்யலாம். அதனால் தொழுகை முறிந்துவிடாது. (பிஹ்)

12. இதே ஹதீஸ், புகாரீ (1127, 4724, 7347, 7465), முஸ்லிம் (1424), நசாயீ (1593, 1594), இப்னு குஸைமா (1140), அபூயஃலா (350), அல்பஸ்ஸார் (503), நசாயீயின் சுனனுல் குப்ரா (7414, 6/386), சுனனுஸ் ஸுஃக்ரா (1593), இப்னு ஹிப்பான் (2618), இப்னு குஸைமா (1140), அபூஅவானா (1766) உள்ளிட்ட நூல்களிலும் இடம்பெற்றுள்ளது.

الله ﷺ وَأَهْلُهُ يَغْتَسِلُونَ مِنْ إِنَاءٍ وَاحِدٍ.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களும், அவர்களின் மனைவியரும் ஒரே பாத்திரத்தில் குளிப்பவர்களாக இருந்தனர்.[13]

٥٤١ حدثنا أبو سعيد حدثنا إسرائيل حدثنا سماك عن حنش عن علي رضي الله عنه قال: بعثني رسول الله ﷺ إلى اليمن فانتهينا إلى قوم قد بنوا زبية للأسد فبينا هم كذلك يتدافعون إذ سقط رجل فتعلق بآخر ثم تعلق رجل بآخر حتى صاروا فيها أربعة فجرحهم الأسد، فانتدب له رجل بحربة فقتله، وماتوا من جراحتهم كلهم فقاموا أولياء الأول إلى أولياء الآخر فأخرجوا السلاح ليقتتلوا، فأتاهم علي رضي الله عنه على تفيئة ذلك فقال: تريدون أن تقاتلوا ورسول الله ﷺ حي؟ إني أقضي بينكم قضاء إن رضيتم فهو القضاء وإلا حجز بعضكم عن بعض حتى تأتوا النبي ﷺ فيكون هو الذي يقضي بينكم فمن عدا بعد ذلك فلا حق له اجمعوا من قبائل الذين حفروا البئر ربع الدية وثلث الدية ونصف الدية والدية كاملة، فللأول الربع لأنه

541 அலீ (ரலி) அவர்கள் கூறியதாவது:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் என்னை 'யமன்' நாட்டிற்கு அனுப்பினார்கள். நாங்கள் அங்கிருந்த ஒரு கூட்டத்தாரிடம் வந்தடைந்தோம். அக்கூட்டத்தார் சிங்கத்தைப் பிடிப்பதற்காகப் பள்ளம் தோண்டி வைத்திருந்தனர். (அதில் சிங்கம் விழுந்திருந்தது.) அந்தக் கூட்டத்தார் ஒருவரையொருவர் முந்தித்தள்ள, ஒருவர் அந்தப் பள்ளத்தில் விழுந்துவிட்டார். அந்த மனிதர் விழுந்தபோது, மற்றொருவரைப் பிடித்திருக்க, அவரும் விழுந்துவிட்டார். அ(வ்விரண்டாமவ)வர் இன்னொருவரைப் பிடித்திருக்க, அவரும் அவருடன் சேர்ந்து விழுந்தார். இறுதியாக, அந்தப் பள்ளத்தில் நான்குபேர் விழுந்துவிட்டனர். (பள்ளத்திலிருந்த) சிங்கம் அவர்களைக் (கீறிக்) காயப்படுத்திவிட்டது. உடனே ஒருவர் தனது ஆயுதத்தால் அந்தச் சிங்கத்தைக் கொன்றுவிட்டார். (குழிக்குள் விழுந்த) அனைவரும் அந்தச் சிங்கம் ஏற்படுத்திய காயத்தால் இறந்துவிட்டனர். முதலில் அந்தப் பள்ளத்தில் விழுந்தவரின் வாரிசுகள் (இரண்டாவதாக இறந்த) மற்றொருவரின் வாரிசுகளை நோக்கிச் சென்று, ஆயுதங்களை எடுத்துப் போரிடலானார்கள்.

அப்போது அலீ (ரலி) அவர்கள் அந்தக் கூட்டத்தாரிடம் வந்து, "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் (நம்மிடையே) வாழ்ந்துகொண்டிருக்கும் நிலையிலே நீங்கள் ஒருவருடன் மற்றவர் போரிட விரும்புகிறீர்களா? நான் உங்களிடையே நல்லதொரு தீர்ப்பை வழங்குவேன். நீங்கள் அதை ஏற்றுக்கொண்டால், அதுதான் (சரியான) தீர்ப்பு. இல்லையெனில், நீங்கள் சிலரை விட்டுச் சிலர் (சண்டையிடாதவாறு) தடுத்துக்கொள்ளுங்கள். முடிவில் நீங்கள் (அனைவரும்) நபி (ஸல்) அவர்களிடம் வாருங்கள். அவர்கள், உங்களிடையே தீர்ப்பளிப்பார்கள். இதன் பின்னர் வரம்பு மீறுபவருக்கு எந்த உரிமையும் இல்லை" என்று கூறிவிட்டு, பள்ளம் தோண்டியவர்களிடம் இழப்பீடாக நான்கில் ஒரு பங்கு வசூலிக்கும் படியும், (இரண்டாவது நபருக்கு) மூன்றில் ஒரு பங்கும், (மூன்றாவது நபருக்குப்) பாதியும், (நான்காவது நபருக்கு) முழுமையான இழப்பீடும் வழங்க வேண்டுமெனத் தீர்ப்பளித்தார்கள்.

---

13. இந்த ஹதீஸின் அறிவிப்பாளர்தொடரில் 533ஆவது எண் ஹதீஸின் அடிக்குறிப்பில் கூறப்பட்டுள்ள ஹாரிஸ் அல்அஃவர் எனும் பலவீனமான அறிவிப்பாளர் இடம்பெறுகிறார். எனவே இது பலவீனமான அறிவிப்பாளர்தொடர் கொண்ட செய்தியாகும். எனினும், இதே கருத்தமைந்த ஹதீஸ், புகாரீ (222, 250, 261, 264, 1281), முஸ்லிம் (536, 538, 540) ஆகிய நூல்களில் இடம்பெற்றுள்ளது. இதே ஹதீஸ், ஹாரிஸ் அல்அஃவர் வழியாகவே இப்னுமாஜா (368), முஸ்னதுல் பஸ்ஸார் (840) உள்ளிட்ட நூல்களிலும் பதிவாகியுள்ளது. எனவே இது 'ஹஸனுன் லிஃகைரிஹி' பிற சான்றுகளால் 'ஹஸன்' தரத்தை எட்டிய ஹதீஸ் ஆகும்.

هَلَكَ مَنْ فَوْقَهُ وَلِلثَّانِي ثُلُثُ الدِّيَةِ وَلِلثَّالِثِ نِصْفُ الدِّيَةِ فَأَبَوْا أَنْ يَرْضَوْا، فَأَتَوُا النَّبِيَّ ﷺ وَهُوَ عِنْدَ مَقَامِ إِبْرَاهِيمَ فَقَصُّوا عَلَيْهِ الْقِصَّةَ، فَقَالَ: أَنَا أَقْضِي بَيْنَكُمْ وَاحْتَبَى فَقَالَ رَجُلٌ مِنَ الْقَوْمِ: إِنَّ عَلِيًّا قَضَى فِينَا فَقَصُّوا عَلَيْهِ الْقِصَّةَ فَأَجَازَهُ رَسُولُ اللَّهِ ﷺ.

حَدَّثَنَا بَهْزٌ حَدَّثَنَا حَمَّادٌ أَنْبَأَنَا سِمَاكٌ عَنْ حَنَشٍ أَنَّ عَلِيًّا رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ: وَلِلرَّابِعِ الدِّيَةُ كَامِلَةً.

٥٤٢ حدثنا عَبْدُاللَّهِ قَالَ: كَتَبَ إِلَيَّ قُتَيْبَةُ بْنُ سَعِيدٍ كَتَبْتُ إِلَيْكَ بِخَطِّي وَخَتَمْتُ الْكِتَابَ بِخَاتَمِي يَذْكُرُ أَنَّ اللَّيْثَ بْنَ سَعْدٍ حَدَّثَهُمْ عَنْ عُقَيْلٍ عَنِ الزُّهْرِيِّ عَنْ عَلِيِّ بْنِ الْحُسَيْنِ أَنَّ الْحُسَيْنَ بْنَ عَلِيٍّ حَدَّثَهُ عَنْ عَلِيِّ بْنِ أَبِي طَالِبٍ رَضِيَ اللَّهُ عَنْهُ: أَنَّ النَّبِيَّ ﷺ طَرَقَهُ وَفَاطِمَةَ رَضِيَ اللَّهُ عَنْهَا فَقَالَ: أَلَا تُصَلُّونَ؟ فَقُلْتُ: يَا رَسُولَ اللَّهِ إِنَّمَا أَنْفُسُنَا بِيَدِ اللَّهِ فَإِذَا شَاءَ أَنْ يَبْعَثَنَا بَعَثَنَا وَانْصَرَفَ رَسُولُ اللَّهِ ﷺ حِينَ قُلْتُ لَهُ ذَلِكَ، ثُمَّ سَمِعْتُهُ وَهُوَ مُدْبِرٌ يَضْرِبُ فَخِذَهُ وَيَقُولُ: ﴿وَكَانَ الْإِنْسَانُ

முதலாவது நபருக்கு நான்கில் ஒரு பங்கு ஏனெனில், அவர்தான் தனக்கு மேலே இருந்தவர்களின் இழப்புக்குக் காரணமானவர். இரண்டாவது நபருக்கு இழப்பீட்டில் மூன்றில் ஒரு பங்கு, மூன்றாவது நபருக்கு இழப்பீட்டில் பாதி.

அவர்கள் இத்தீர்ப்பை ஏற்க மறுத்தனர். எனவே, அவர்கள் நபி (ஸல்) அவர்களிடம் வந்தனர். அப்போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், (கஅபா அருகிலுள்ள) 'மகாமு இப்றாஹீம்' என்ற இடத்தில் இருந்தார்கள். அப்போது அம்மக்கள் நடந்த விவரங்களைக் கூறினார்கள். நபி (ஸல்) அவர்கள், "நான் உங்களிடையே தீர்ப்பளிக்கிறேன்" என்று கூறியவர்களாக, முழங்கால்களைக் கைகளால் கட்டிக்கொண்டு அமர்ந்தார்கள். அக்குழுவினருள் ஒருவர், "எங்களுக்கிடையில் அலீ (ரலி) தீர்ப்பளித்துவிட்டார்கள்" என்று கூறி, நடந்ததை விளக்கினார். அப்போது, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அத்தீர்ப்பை ஏற்றுக்கொண்டார்கள்.

மற்றோர் அறிவிப்பாளர்தொடரில், 'நான்காவது நபருக்கு முழு இழப்பீடு வழங்க வேண்டுமென்று அலீ (ரலி) கூறினார்கள்' என வந்துள்ளது.[14]

542 அலீ (ரலி) அவர்கள் கூறியதாவது:

நபி (ஸல்) அவர்கள் என்னிடமும், பாத்திமா (ரலி) அவர்களிடமும் இரவில் வந்தார்கள். "நீங்கள் தொழமாட்டீர்களா?" என்று கேட்டார்கள். "அல்லாஹ்வின் தூதரே! நம்முடைய உயிர்கள் (நாம் தூங்கும்போது) அல்லாஹ்வின் கையில்தான் உள்ளன. அவன் எங்களை எழுப்பிட நாடி இருந்தால், எங்களை எழுப்பி இருப்பான்" என்று கூறினேன். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் இதை நான் கூறியதும், அவர்கள் திரும்பிச் சென்றுவிட்டார்கள். அவர்கள் திரும்பிச் சென்றபோது, தமது தொடையில் அடித்துக் கொண்டே, "மனிதன் அதிகமாகத் தர்க்கம் செய்பவனாக உள்ளான்" (18:54) என்ற

14. இதன் அறிவிப்பாளர்தொடர் பலவீனமானதாகும். இந்த ஹதீஸின் அறிவிப்பாளர்தொடரில் இரண்டாவது அறிவிப்பாளராக இடம்பெறும் ஹனஷ் பின் அல்முஅத்தமிர் அல்கினானீ என்பார் பலவீனமானவர் ஆவார். இவர் அறிவிக்கும் ஹதீஸ்கள் விமர்சனத்திற்கு உரியவை என்று புகாரீ (ரஹ்) அவர்களும், இவர் பலவீனமானவர் என நஸாயீ (ரஹ்) அவர்களும், இவருடைய ஹதீஸ்கள் ஆதாரமாகக் கொள்ளத் தக்கவையல்ல என இப்னு ஹிப்பான் (ரஹ்) அவர்களும் கூறியுள்ளனர். இமாம் புகாரீ (ரஹ்) அவர்கள், இந்த ஹதீஸை 'அள்ளுஅஃபா' (பலவீனமானவர்களின் பட்டியல்) எனும் தமது நூலில் பதிவு செய்து இதன் தரத்தை உணர்த்தியுள்ளனர். இந்த ஹதீஸ் விமர்சிக்கப்பட்ட இதே ஹனஷ் பின் அல்முஅத்தமிர் வழியாக பின்வரும் ஹதீஸ் எண்கள் - 1011, 1241 ஆகியவற்றிலும், பைஹகீயின் சுனனுல் குப்ரா (8/111), முஸ்னதுல் பஸ்ஸார் (1151), முஸன்னஃப் இப்னு அபீஷைபா (28451, 29706) ஆகிய நூல்களிலும் பதிவாகியுள்ளது.

أَكْثَرَ شَيْءٍ جَدَلًا﴾.

இறைவசனத்தை ஓதியதைக் கேட்டேன்.[15]

٥٤٣ حدثنا عَبْدُ اللهِ حَدَّثَنِي نَصْرُ بْنُ عَلِيٍّ الْأَزْدِيُّ أَخْبَرَنِي عَلِيُّ بْنُ جَعْفَرِ بْنِ مُحَمَّدِ بْنِ عَلِيِّ بْنِ الْحُسَيْنِ بْنِ عَلِيٍّ حَدَّثَنِي أَخِي مُوسَى بْنُ جَعْفَرٍ عَنْ أَبِيهِ جَعْفَرِ بْنِ مُحَمَّدٍ عَنْ أَبِيهِ عَنْ عَلِيِّ بْنِ حُسَيْنٍ رَضِيَ اللهُ عَنْهُ عَنْ أَبِيهِ عَنْ جَدِّهِ: أَنَّ رَسُولَ اللهِ ﷺ أَخَذَ بِيَدِ حَسَنٍ وَحُسَيْنٍ رَضِيَ اللهُ عَنْهُمَا فَقَالَ: مَنْ أَحَبَّنِي وَأَحَبَّ هَذَيْنِ وَأَبَاهُمَا وَأُمَّهُمَا كَانَ مَعِي فِي دَرَجَتِي يَوْمَ الْقِيَامَةِ.

543 *அலீ (ரலி) அவர்கள் கூறியதாவது:*

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், (தம் பேரர்களான) ஹசன் (ரலி), ஹுசைன் (ரலி) ஆகிய இருவரின் கைகளையும் பிடித்துக்கொண்டு, "ஒருவர் என்னையும் நேசித்து, இந்த இருவரையும் இந்த இருவரின் தந்தையையும் தாயையும் நேசித்தால், அவர் என்னோடு மறுமைநாளில் எனது தகுதியில் இருப்பார்" என்று கூறினார்கள்.[16]

٥٤٤ حدثنا حَسَنُ بْنُ مُوسَى حَدَّثَنَا ابْنُ لَهِيعَةَ حَدَّثَنَا عَبْدُ اللهِ بْنُ هُبَيْرَةَ السَّبَئِيُّ عَنْ عَبْدِ اللهِ بْنِ زُرَيْرٍ الْغَافِقِيِّ عَنْ عَلِيٍّ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ: قَالَ رَسُولُ اللهِ ﷺ: لَا تُنْكَحُ الْمَرْأَةُ عَلَى عَمَّتِهَا وَلَا عَلَى خَالَتِهَا.

544 *அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறியதாவது:*

பெண்ணொருத்தி, அவளின் தந்தையின் சகோதரியுடன் அல்லது தாயின் சகோதரியுடன் சேர்த்து (ஒரே ஆளுக்கு ஒரே நேரத்தில்) திருமணம் செய்து வைக்கப்படமாட்டாள்.

இதை அலீ (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.[17]

٥٤٥ حدثنا حَسَنٌ وَأَبُو سَعِيدٍ مَوْلَى بَنِي هَاشِمٍ قَالَا حَدَّثَنَا ابْنُ لَهِيعَةَ حَدَّثَنَا عَبْدُ اللهِ بْنُ هُبَيْرَةَ عَنْ عَبْدِ اللهِ بْنِ زُرَيْرٍ أَنَّهُ قَالَ: دَخَلْتُ عَلَى عَلِيِّ بْنِ أَبِي طَالِبٍ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ حَسَنٌ يَوْمَ الْأَضْحَى فَقَرَّبَ إِلَيْنَا خَزِيرَةً فَقُلْتُ: أَصْلَحَكَ اللهُ لَوْ قَرَّبْتَ إِلَيْنَا مِنْ هَذَا الْبَطِّ يَعْنِي

545 *அப்துல்லாஹ் பின் ஸுரைர் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:*

நான் அலீ (ரலி) அவர்களிடம் ஹஜ்ஜுப் பெருநாள் அன்று சென்றேன். அவர்கள் எங்கள் முன் 'கஸீரா' (எனும் இறைச்சி கலந்த கோதுமைக் குருணைக் கஞ்சி) உணவை வைத்தார்கள். அப்போது நான், "அல்லாஹ் உங்களைச் சீராக்குவானாக! இந்த வாத்திலிருந்து (சமைத்த இறைச்சியை) எங்களுக்கு

15. பார்க்க: முன்சென்ற ஹதீஸ் எண் - 539 மற்றும் அதன் அடிக்குறிப்பு.

16. இது பலவீனமான ஹதீஸ் ஆகும். இதன் அறிவிப்பாளர்தொடரில் ஏழாவது அறிவிப்பாளராக இடம்பெறும் அலீ பின் ஜஅஃபர் பின் முஹம்மத் என்பார் பலவீனமானவர் ஆவார். இந்த ஹதீஸ் இதே அறிவிப்பாளர் வழியாக திர்மிதீ (3666), தப்ரானீயின் அல்முஅஜமுஸ் ஸஃகீர் (957, 2588) ஆகிய நூல்களிலும் பதிவாகியுள்ளது. இமாம் தஹபீ (ரஹ்) அவர்கள் தமது மீஸானுல் இஃதிதால் எனும் நூலில் அலீ பின் ஜஅஃபர் பற்றிய பாடத்தில் "அவ்விருவரையும் நேசிப்பவர்கள் அவ்விருவருடைய தகுதியில் சொர்க்கத்தில் இருப்பர்" என்று கூற வேண்டியதை "என்னுடைய தகுதியில் இருப்பார்" என நபியவர்கள் கூறியதாக தவறாக அறிவித்திருக்கலாம் என்கிறார்கள். "ஒருவர் தாம் நேசிப்பவரோடு மறுமையில் இருப்பார்" எனும் நபிமொழி (புகாரீ - 6168) இதை உறுதிசெய்கிறது.

17. இதன் அறிவிப்பாளர்தொடரில் நான்காவது அறிவிப்பாளராக இப்னு லஹீஆ எனும் பலவீனமான அறிவிப்பாளர் இடம்பெற்றிருப்பினும் இது புகாரீ, முஸ்லிம், நஸாயீ போன்ற நூல்களில் வேறு அறிவிப்பாளர்தொடரில் வந்துள்ளதால் இது 'ஹசனுன் லிஃகைரிஹி' (புறச் சான்றுகளால் ஹசன் தரத்தை எட்டிய ஹதீஸ்) ஆகும்.

குர்ஆன் எப்படி மார்க்கத்தின் மூலாதாரமோ அதேபோன்று நபிவழியும் மார்க்கத்தின் மூலாதாரமே ஆகும். இதற்கு இந்த ஹதீஸிலுள்ள சட்டம் ஓர் எடுத்துக்காட்டாகும். இந்த ஹதீஸின் தரம் குறைவாக இருப்பினும் இதனை வலுப்படுத்தும் விதமாக புகாரீ (5109), முஸ்லிம் (2746) ஆகியவற்றில் இடம்பெறும் ஹதீஸ்கள் இதற்குத் தக்க சான்றுகளாக உள்ளன. ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களை மணம் புரிவதாக இருந்தால், அப்பெண்களிடையே இது போன்ற நெருங்கிய உறவுமுறை இருக்கலாகாது என்பது பொதுவான விதியாகும்.

الْوَزَّ فَإِنَّ اللَّهَ عَزَّ وَجَلَّ قَدْ أَكْثَرَ الْخَيْرَ فَقَالَ: يَا ابْنَ زُرَيْرٍ إِنِّي سَمِعْتُ رَسُولَ اللَّهِ ﷺ يَقُولُ: لَا يَحِلُّ لِلْخَلِيفَةِ مِنْ مَالِ اللَّهِ إِلَّا قَصْعَتَانِ قَصْعَةٌ يَأْكُلُهَا هُوَ وَأَهْلُهُ وَقَصْعَةٌ يَضَعُهَا بَيْنَ يَدَيِ النَّاسِ.

٥٤٦ حَدَّثَنَا مُعْتَمِرُ بْنُ سُلَيْمَانَ عَنْ أَبِيهِ عَنْ مُغِيرَةَ عَنْ أُمِّ مُوسَى عَنْ عَلِيٍّ رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ: مَا رَمِدْتُ مُنْذُ تَفَلَ النَّبِيُّ ﷺ فِي عَيْنِي.

٥٤٧ حَدَّثَنَا مُحَمَّدُ بْنُ فُضَيْلٍ حَدَّثَنَا مُطَرِّفٌ عَنْ أَبِي إِسْحَاقَ عَنْ عَاصِمٍ عَنْ عَلِيٍّ رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ: كَانَ رَسُولُ اللَّهِ ﷺ يُوتِرُ فِي أَوَّلِ اللَّيْلِ وَفِي وَسَطِهِ وَفِي آخِرِهِ، ثُمَّ ثَبَتَ لَهُ الْوِتْرُ فِي آخِرِهِ.

٥٤٨ حَدَّثَنَا عَبْدُاللَّهِ حَدَّثَنِي أَبُو إِبْرَاهِيمَ التَّرْجُمَانِيُّ حَدَّثَنَا الْفَرَجُ بْنُ فَضَالَةَ عَنْ مُحَمَّدِ بْنِ عَبْدِ اللَّهِ بْنِ عَمْرِو بْنِ عُثْمَانَ عَنْ أُمِّهِ فَاطِمَةَ بِنْتِ حُسَيْنٍ عَنْ حُسَيْنٍ عَنْ أَبِيهِ عَنِ النَّبِيِّ ﷺ قَالَ: لَا تُدِيمُوا النَّظَرَ إِلَى الْمُجَذَّمِينَ

வழங்கியிருக்கலாமே! நிச்சயமாக அல்லாஹ் செல்வத்தை அதிகம் தந்திருக்கிறானே!" என்றேன். அதற்கு அலீ (ரலி) அவர்கள், "இப்னு ஸுரைர் அவர்களே! 'ஆட்சியாளரும் அவருடைய குடும்பத்தாரும் உண்பதற்கு ஒரு தட்டு, மக்கள் முன் (உண்பதற்கு) வைக்கும் மற்றொரு தட்டு ஆகிய இரண்டு தட்டுகள் தவிர, ஆட்சியாளருக்கு அல்லாஹ் வின் (பொதுச்)சொத்திலிருந்து (மேலதிகமாக வைத்துக்கொள்ள) அனுமதி இல்லை' என அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறியதைக் கேட்டுள்ளேன். (இதனால் இந்த உணவைப் போதுமாக்கிக்கொண்டேன்)" எனக் கூறினார்கள்.[18]

546 அலீ (ரலி) அவர்கள் கூறியதாவது:

(நான் கண் நோயால் பாதிக்கப்பட்ட போது) நபி (ஸல்) அவர்கள், என் கண்ணில் தமது உமிழ்நீரை உமிழ்ந்ததிலிருந்து எனக்குக் கண் நோய் ஏற்பட்டதில்லை.[19]

547 அலீ (ரலி) அவர்கள் கூறியதாவது:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், (ஆரம்பத்தில்) 'வித்ருத்' தொழுகையை (இஷாவுக்குப் பின்) இரவின் தொடக்கத்திலும் நடுப் பகுதியிலும் இறுதிப் பகுதியிலும் தொழுபவர்களாக இருந்தார்கள். பிற்காலத்தில் இரவின் இறுதிப் பகுதியிலேயே அவர்களின் 'வித்ருத்' தொழுகை நிலைபெற்றது.[20]

548 நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

---

18. இந்த ஹதீஸின் அறிவிப்பாளர்தொடரில் நான்காவது அறிவிப்பாளராக இப்னு லஹீஆ என்ற பலவீனமான அறிவிப்பாளர் இடம்பெற்றுள்ளார்

19. இந்த ஹதீஸ் 'ஹசன்' தரத்தில் அமைந்ததாகும். இதுபோன்ற கருத்தமைந்த ஹதீஸ் இதைவிட விரிவாக புகாரீ (2942, 3009, 3701, 4210), முஸ்லிம் (4780) ஆகிய நூல்களில் பதிவாகியுள்ளது

20. இதே கருத்துடைய ஹதீஸ் புகாரீ (996), முஸ்லிம் (1355, 1356), திர்மிதீ (419), இப்னுமாஜா (1176) ஆகிய நூல்களிலும் பதிவாகியுள்ளது. இந்நூலில் இதே ஹதீஸ் 616, 618, 784, 927, 1095, 1152, 1155, 1195 ஆகிய எண்களிலும் பதிவாகியுள்ளது. இவற்றில் ஒருசில அறிவிப்புகளில் பலவீனமான அறிவிப்பாளர்கள் இடம்பெற்றிருப்பினும் இச்செய்தி ஆதாரபூர்வமான ஹதீஸ்களில் நிரூபணமாகியே உள்ளது.

'வித்ரில்' நடுத்தரமானது மூன்று 'ரக்அத்'களாகும். ஒரு 'ரக்அத்' தொழுவதற்கும் ஆதாரம் உள்ளது. 'வித்ரில்' 'குனூத்' எனும் சிறப்புப் பிரார்த்தனை ஓதுவதற்கும் ஆதாரம் உள்ளது. அதை 'ருகூஉ'க்கு முன்பு ஓதவும் 'ருகூஉ' செய்த பின்பு ஓதவும் ஆதாரம் உள்ளது (திர்மிதீ ஹதீஸ் எண் - 426) இத்தொழுகையை ஃபஜ்ருக்கு முன்புள்ள நேரத்தில் தொழுவதே ஏற்றமானது.

இந்த ஹதீஸில் இரவின் தொடக்கத்தில் என்பது 'இஷா' தொழுத பின்பு என்பதைக் குறிக்கும். இரவில் எழ முடியாமல் நோய், உடல்வலி போன்ற துன்பமான நேரத்தில் முன்னிரவிலேயே தொழுவது சிறந்தது. நடுப் பகுதி என்பது நள்ளிரவைக் குறிக்கும். பயணத்தின்போது நள்ளிரவில் நபி (ஸல்) அவர்கள் தொழுதுள்ளார்கள். இரவின் இறுதிப் பகுதி என்பது 'ஸஹர்' செய்யும் நேரம் அல்லது ஃபஜ்ருடைய பாங்கு சொல்வதற்கு சற்று முன்புள்ள நேரத்தைக் குறிக்கும். (ஃபத்ஹுல்பாரீ)

وَإِذَا كَلَّمْتُمُوهُمْ فَلْيَكُنْ بَيْنَكُمْ وَبَيْنَهُمْ قِيدُ رُمْحٍ.

٥٤٩ حَدَّثَنَا عَبْدُ اللَّهِ حَدَّثَنِي مُحَمَّدُ بْنُ أَبِي بَكْرٍ الْمُقَدَّمِيُّ حَدَّثَنَا هَارُونُ بْنُ مُسْلِمٍ حَدَّثَنَا الْقَاسِمُ بْنُ عَبْدِ الرَّحْمَنِ عَنْ مُحَمَّدِ بْنِ عَلِيٍّ عَنْ أَبِيهِ عَنْ عَلِيٍّ قَالَ: قَالَ لِي النَّبِيُّ ﷺ: يَا عَلِيُّ أَسْبِغِ الْوُضُوءَ وَإِنْ شَقَّ عَلَيْكَ وَلَا تَأْكُلِ الصَّدَقَةَ وَلَا تُنْزِ الْحَمِيرَ عَلَى الْخَيْلِ وَلَا تُجَالِسْ أَصْحَابَ النُّجُومِ.

٥٥٠ حَدَّثَنَا مُحَمَّدُ بْنُ فُضَيْلٍ عَنِ الْأَعْمَشِ عَنْ عَبْدِ الْمَلِكِ بْنِ مَيْسَرَةَ عَنِ النَّزَّالِ بْنِ سَبْرَةَ قَالَ: أُتِيَ عَلِيٌّ رَضِيَ اللَّهُ عَنْهُ بِكُوزٍ مِنْ مَاءٍ وَهُوَ فِي الرَّحَبَةِ فَأَخَذَ كَفًّا مِنْ مَاءٍ فَمَضْمَضَ وَاسْتَنْشَقَ وَمَسَحَ وَجْهَهُ وَذِرَاعَيْهِ وَرَأْسَهُ ثُمَّ شَرِبَ وَهُوَ قَائِمٌ، ثُمَّ قَالَ: هَذَا وُضُوءُ مَنْ لَمْ

தொழு நோயாளிகளை நீங்கள் தொடர்ந்து பார்க்காதீர்கள். அவர்களிடம் நீங்கள் பேசினால், அவர்களுக்கும் உங்களுக்குமிடையே ஓர் ஈட்டி அளவு இடைவெளி இருக்கட்டும்.

இதை அலீ (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.[21]

549 *அலீ (ரலி) அவர்கள் கூறியதாவது:*

"அலீயே! உமக்குத் தொல்லையாக இருப்பினும், நிறைவாக அங்கத் தூய்மை (உளூ) செய்வீராக! தர்மப் பொருளை உண்ணாதீர்! குதிரைகளுடன் கழுதைகளை இணைகூடச் செய்யாதீர்! நட்சத்திர(ங்கள் மூலம்) சோதிடம் பார்ப்பவர்களுடன் அமராதீர்!" என என்னிடம் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.[22]

550 *நஸ்ஸால் பின் ஸப்ரா (ரஹ்) அவர்கள் கூறியதாவது:*

அலீ (ரலி) அவர்களிடம் தண்ணீர் நிறைந்த தண்ணீர் குவளை கொண்டுவரப்பட்டது. அப்போது அவர்கள் (கூஃபா நகரிலுள்ள) 'ரஹ்பா' எனுமிடத்தில் இருந்தார்கள். ஒரு கை தண்ணீர் எடுத்து, வாய் கொப்பளித்து, நாசிக்கு நீர் செலுத்தி (மூக்கைச் சிந்தி)னார்கள். ஈரக்கையால் தம் முகம், முழங்கைகள், தலை ஆகியவற்றைத் தடவி ('மஸ்ஹு'ச் செய்திடலா)னார்கள். பின்னர் எஞ்சியிருந்த தண்ணீரை நின்றுகொண்டே பருகினார்கள். பின்பு, "இதுதான், உளூ முறியாதவர்களுக்கான உளூவாகும். இவ்வாறே அல்லாஹ்

21. இது பலவீனமான ஹதீஸ் ஆகும். இதன் அறிவிப்பாளர்தொடரில் ஐந்தாவது அறிவிப்பாளராக இடம்பெறும் ஃபரஜ் பின் ஃபளாலா என்பார் குறித்து புகாரீ, முஸ்லிம், நஸாயீ (ரஹ்) ஆகியோர் அவர் ஹதீஸ்களையயில் நிராகரிக்கப்பட்டவர் (முன்கர்) என்று விமர்சித்துள்ளனர். இந்தச் செய்தி இதே ஃபரஜ் பின் ஃபளாலா வழியாக இப்னு ஜரீர் அத்தபரியின் தஹ்தீபுல் ஆஸார் (1295), முஸ்னது அபீயஅலா (6629) ஆகிய நூல்களிலும் பதிவாகியுள்ளது.

22. இது பலவீனமான அறிவிப்பாளர்தொடரில் அமைந்த ஹதீஸ் ஆகும். இந்த ஹதீஸின் அறிவிப்பாளர்தொடரில் ஆறாவது அறிவிப்பாளராக இடம்பெற்றுள்ள ஹாரூன் பின் முஸ்லிம் அல்பஸரீ என்பார் பலவீனமான அறிவிப்பாளர் ஆவார் என அபூஹாத்திம் (ரஹ்) குறிப்பிடுகிறார்கள். மற்றோர் அறிவிப்பாளரான காசிம் பின் அப்திர்ரஹ்மான் அல்அன்சாரியைப் பற்றி இமாம் இப்னு மயீன் (ரஹ்) அவர்கள், அவர் ஒரு பொருட்டற்றவர் என்றும், அபூஹாத்திம் (ரஹ்) அவர்கள், அவர் ஹதீஸ்களையயில் பலவீனமானவர் என்றும் குறிப்பிட்டுள்ளனர். மேலும், இந்த ஹதீஸை அலீ (ரலி) அவர்களிடமிருந்து அறிவிக்கும் அலீ பின் அல்ஹுசைன் (ரஹ்) அவர்கள், தமது பாட்டனாரான அலீ (ரலி) அவர்களைச் சந்தித்ததில்லை. எனவே இது இடைமுறிவுற்ற செய்தியுமாகும். இவ்வாறு பல காரணங்களால் இது பலவீனமடைகிறது. எனினும், இதன் கருத்து வெவ்வேறு ஹதீஸ்களில் பதிவாகியுள்ளது. எனவே இது 'ஹசனுன் லிஃகைரிஹி' (புறச் சான்றுகளால் 'ஹசன்' தரத்தை எட்டிய ஹதீஸ்) ஆகும்.

உளூவை முழுமையாகச் செய்யும்படி கூறும் நபிமொழிகள், முஸ்லிம் (406), முஸ்னது அபீயஅலா (453) ஆகிய நூல்களிலும், ஸகாத் பொருளை உண்ணத் தடைசெய்ததற்கு முஸ்லிம் (1946), நஸாயீ, அபூதாவூத் ஆகிய நூல்களிலும், குதிரைகளுடன் கழுதைகளை இணைகூடச் செய்வது விலக்கப்பட்டதாகும் என்பதற்கு இதே நூலில் பின்னர் வரும் 746, 1053 ஆகிய ஹதீஸ்களும், நட்சத்திரச் சோதிடம் பார்ப்பது தடைசெய்யப்பட்டதாகும் என்பதற்கு இதே நூலில் பின்னர் வரும் 1896, 2697 ஆகிய ஹதீஸ்களும் சான்றுகள் ஆகும்.

கோள்கள், நட்சத்திரங்கள் மூலம் குறிகேட்டல் என்பது வானிலுள்ள கோள்கள், நட்சத்திரங்கள் போன்றவை மனித வாழ்வில் நன்மை, தீமை, வளமை, வறுமை போன்ற மாற்றங்களை ஏற்படுத்தும் என நம்புவதைக் குறிக்கும். இது சோதிடம், குறியம் போன்றே மார்க்கத்தில் தடைசெய்யப்பட்ட செயலாகும். குதிரைகளுடன் கழுதைகளை இணைகூடச் செய்வதால் ஏற்படும் இழப்பு குறித்து பின்வரும் 729ஆவது ஹதீஸின் கீழ் விளக்கப்பட்டுள்ளது.

يُحَدِّثُ هَكَذَا رَأَيْتُ رَسُولَ اللَّهِ ﷺ فَعَلَ.

வின் தூதர் (ஸல்) அவர்கள் 'உளூ'ச் செய்ததை நான் பார்த்தேன்" என்று கூறினார்கள்.[23]

٥٥١ حَدَّثَنَا مُحَمَّدُ بْنُ فُضَيْلٍ عَنِ الْأَعْمَشِ عَنْ حَبِيبٍ عَنْ ثَعْلَبَةَ عَنْ عَلِيٍّ رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ: قَالَ رَسُولُ اللَّهِ ﷺ: مَنْ كَذَبَ عَلَيَّ مُتَعَمِّدًا فَلْيَتَبَوَّأْ مَقْعَدَهُ مِنَ النَّارِ.

551 அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறியதாவது:

என்னைப் பற்றி (நான் சொல்லாத ஒன்றைச் சொன்னதாக) யார் வேண்டுமென்றே பொய்யுரைக்கிறாரோ, அவர் தமது இருப்பிடத்தை நரகத்தில் அமைத்துக்கொள்ளட்டும்.

இதை அலீ (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.[24]

٥٥٢ حَدَّثَنَا مُحَمَّدُ بْنُ فُضَيْلٍ حَدَّثَنَا الْمُغِيرَةُ عَنْ أُمِّ مُوسَى عَنْ عَلِيٍّ رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ: كَانَ آخِرُ كَلَامِ رَسُولِ اللَّهِ ﷺ الصَّلَاةَ الصَّلَاةَ اتَّقُوا اللَّهَ فِيمَا مَلَكَتْ أَيْمَانُكُمْ.

552 அலீ (ரலி) அவர்கள் கூறியதாவது:

"தொழுகை(யைப் பேணுங்கள்)! தொழுகை(யைப் பேணுங்கள்)! உங்கள் வலக் கரம் சொந்தமாக்கிக்கொண்ட அடிமைகள் விஷயத்தில் அல்லாஹ்வை அஞ்சிக்கொள்ளுங்கள்" என்பதுதான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் (இறப்புத்தறுவாயில்) பேசிய இறுதிப் பேச்சாக இருந்தது.[25]

٥٥٣ حَدَّثَنَا مُحَمَّدُ بْنُ فُضَيْلٍ عَنْ عَاصِمِ بْنِ كُلَيْبٍ عَنْ أَبِي بُرْدَةَ بْنِ أَبِي مُوسَى عَنْ أَبِي مُوسَى عَنْ عَلِيٍّ رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ: نَهَانِي رَسُولُ اللَّهِ ﷺ أَنْ أَجْعَلَ خَاتَمِي فِي هَذِهِ السَّبَّاحَةِ أَوْ الَّتِي تَلِيهَا.

553 அலீ (ரலி) அவர்கள் கூறியதாவது:

எனது மோதிரத்தை நான் எனது ஆட்காட்டி விரலிலும் அதற்கு அடுத்த (நடு) விரலிலும் அணிந்துகொள்ள வேண்டாமென அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் எனக்குத் தடைவிதித்தார்கள்.

---

23. ஏற்கெனவே அங்கத் தூய்மை செய்து, அது முறியாமல் இருக்க, மீண்டும் அங்கத் தூய்மை செய்ய விரும்புபவர், கழுவ வேண்டிய உறுப்புகளைக் கழுவாமல், அவற்றை ஈரக் கையால் தொட்டுத் தடவினால் போதும் என்ற கருத்தை இந்த ஹதீஸ் தருகிறது. ஆனால், ஏற்கெனவே உளூவுடன் இருப்பதால் மீண்டும் (உளூ) செய்வது கட்டாயமில்லை. 'உளூ'ச் செய்யாமல் இருப்பவரும், 'உளூ' முறிந்துவிட்டவரும் முகம், கைகள், கால்கள் போன்ற உறுப்புகளைக் கழுவினால்தான் 'உளூ' உண்டாகும் என்பது மார்க்க அறிஞர்களின் ஒருமித்த முடிவாகும். ஈரக் கைகளால் அவ்வுறுப்புகளைத் தடவினால் மட்டும் போதாது.

24. இந்த ஹதீஸ், புகாரீ (110), முஸ்லிம் முன்னுரை ஹதீஸ் எண் - 4, அபூயஅலா (474), அல்பஸ்ஸார் (867) உள்ளிட்ட நூல்களிலும் பதிவாகியுள்ளது.

25. இந்த ஹதீஸ், இமாம் புகாரீ (ரஹ்) அவர்களின் 'அல்அதபுல் முஃப்ரத்' (158), அபூதாவூத் (4489), இப்னுமாஜா (2689), அபூயஅலா (573), பைஹகீயின் சுனனுல் குப்ரா (8/11) உள்ளிட்ட நூல்களிலும் பதிவாகியுள்ளது.

நபி (ஸல்) அவர்களின் இறுதிப் பேச்சு, "அல்லாஹும்மஃக்ஃபிர்லீ வஅல்ஹிக்னீ மஅர் ரஃபீகில் அஃலா" (பொருள்: இறைவா! என்னை மன்னிப்பாயாக! மிக மேலான தோழர்களுடன் (சொர்க்கத்தில்) என்னைச் சேர்த்தருள்வாயாக!) என்பதே ஆகும் என புகாரீ (5675, 5743, 5750), முஸ்லிம் (4409), திர்மிதீ (3418), இப்னுமாஜா (1606) ஆகிய நூல்களில் பதிவாகியுள்ளது. எனவே, கட்டளைகள் என்ற அடிப்படையில் நபி (ஸல்) அவர்கள் பேசிய இறுதிப் பேச்சாக இதை எடுத்துக் கொள்ள வேண்டும். (சிந்தீ (ரஹ்) அவர்களின் இப்னுமாஜா விரிவுரை)

எந்நிலையிலும் கைவிடக் கூடாத கடமை தொழுகை. அதுபோன்று மனித உரிமைகள் தொடர்புடைய அடிமைகளின் நலனும் எந்நிலையிலும் பேணப்பட வேண்டும் என்பதற்காகவே தொழுகையுடன், வலக்கரங்கள் சொந்தமாக்கிக் கொண்ட அடிமைகளையும் இணைத்துத் தமது இறுதிப் பேச்சில் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அபூதாவூதின் விரிவுரை 'அவ்னுல் மஅபூத்')

554 அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்களின் முன்னாள் அடிமை அபூ உபைத் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

...பின்னர் நான் பெருநாள் தொழுகையில் அலீ பின் அபீதாலிப் (ரலி) அவர்களுடன் கலந்துகொண்டேன் அவர்கள் உரை நிகழ்த்துவதற்கு முன்பு, பாங்கு, 'இகாமத்' இல்லாமல் (பெருநாள் தொழுகை) தொழவைத்தார்கள். பின்னர், "ஒருவர் தமது குர்பானி இறைச்சியை மூன்று நாட்களுக்கு மேல் தம்மிடம் வைத்திருக்க வேண்டாம்" என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறியதை நான் கேட்டுள்ளேன் என்றும் குறிப்பிட்டார்கள்.[26]

٥٥٤ حدثنا مُحَمَّدُ بْنُ جَعْفَرٍ حَدَّثَنَا مَعْمَرٌ أَنْبَأَنَا الزُّهْرِيُّ عَنْ أَبِي عُبَيْدٍ مَوْلَى عَبْدِ الرَّحْمَنِ بْنِ عَوْفٍ قَالَ: ثُمَّ شَهِدْتُ عَلِيَّ بْنَ أَبِي طَالِبٍ رَضِيَ اللَّهُ عَنْهُ بَعْدَ ذَلِكَ يَوْمَ عِيدٍ بَدَأَ بِالصَّلَاةِ قَبْلَ الْخُطْبَةِ وَصَلَّى بِلَا أَذَانٍ وَلَا إِقَامَةٍ ثُمَّ قَالَ: سَمِعْتُ رَسُولَ اللَّهِ ﷺ نَهَى أَنْ يُمْسِكَ أَحَدٌ مِنْ نُسُكِهِ شَيْئًا فَوْقَ ثَلَاثَةِ أَيَّامٍ.

555 அலீ (ரலி) அவர்கள் கூறியதாவது:

நபி (ஸல்) அவர்கள் தம் மனைவியருக்கு இவ்வுலகம், மறுமை ஆகிய இரண்டில் ஒன்றைத் தேர்ந்தெடுக்க வாய்ப்பளித்தார்கள்; மணவிலக்குச் செய்துகொள்ள அவர்களுக்கு வாய்ப்பளிக்கவில்லை.[27]

٥٥٥ حدثنا عَبْدُ اللَّهِ حَدَّثَنِي سُرَيْجُ بْنُ يُونُسَ حَدَّثَنَا عَلِيُّ بْنُ هَاشِمٍ يَعْنِي ابْنَ الْبَرِيدِ عَنْ مُحَمَّدِ بْنِ عُبَيْدِ اللَّهِ بْنِ أَبِي رَافِعٍ عَنْ عُمَرَ بْنِ عَلِيِّ بْنِ حُسَيْنٍ عَنْ أَبِيهِ عَنْ عَلِيٍّ رَضِيَ اللَّهُ عَنْهُ: أَنَّ النَّبِيَّ ﷺ خَيَّرَ نِسَاءَهُ الدُّنْيَا وَالْآخِرَةَ وَلَمْ يُخَيِّرْهُنَّ الطَّلَاقَ.

حَدَّثَنَا عَبْدُ اللَّهِ قَالَ وحَدَّثَنَاه يَحْيَى بْنُ أَيُّوبَ حَدَّثَنَا عَلِيُّ بْنُ هَاشِمِ بْنِ الْبَرِيدِ فَذَكَرَ مِثْلَهُ، وَقَالَ: خَيَّرَ نِسَاءَهُ بَيْنَ الدُّنْيَا وَالْآخِرَةِ وَلَمْ يُخَيِّرْهُنَّ الطَّلَاقَ.

556 அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

٥٥٦ حدثنا أَبُو يُوسُفَ الْمُؤَدِّبُ يَعْقُوبُ جَارُنَا حَدَّثَنَا إِبْرَاهِيمُ بْنُ سَعْدٍ عَنْ عَبْدِ الْعَزِيزِ بْنِ الْمُطَّلِبِ عَنْ عَبْدِ الرَّحْمَنِ بْنِ الْحَارِثِ عَنْ زَيْدِ بْنِ عَلِيِّ بْنِ الْحُسَيْنِ عَنْ

---

26. இதே கருத்துள்ள ஹதீஸ், முன்சென்ற ஹதீஸ்கள் - 409, 479 ஆகிய எண்களிலும் பதிவாகியுள்ளது. அவற்றை வலுப்படுத்தும் விதத்தில் புகாரீ (5573), முஸ்லிம் (3982) ஆகியவற்றில் இடம்பெற்ற ஹதீஸ்களும் அமைந்துள்ளன. என்றாலும் இச்சட்டம் பின்னர் மாற்றப்பட்டு 'குர்பானி இறைச்சியை மூன்று நாட்களுக்கு மேல் சேமித்து வைக்கலாம்' என்ற அனுமதி வழங்கப்பட்டது. பார்க்க: புகாரீ (1729, 5423, 5569); முஸ்லிம் (3986-3994)

'குர்பானி இறைச்சியை மூன்று நாட்களுக்கு மேல் சேமித்து வைக்கத் தடைவிதிக்க காரணம், நபி (ஸல்) அவர்கள் காலத்தில் ஒருமுறை பஞ்சம் ஏற்பட்டு மக்கள் உணவுக்காகத் துயர்ப்பட்டனர். அதனால் அந்த ஆண்டு 'குர்பானி' இறைச்சியைச் சேமித்து வைக்காமல் தேவைப்பட்டோருக்கு வழங்கிட வேண்டுமென நபி (ஸல்) அவர்கள் உத்தரவிட்டார்கள். பஞ்சம் நீங்கிய பின் அடுத்த ஆண்டு 'குர்பானி' இறைச்சியை மூன்று நாட்களுக்குமேலும் சேமித்து வைத்திருந்து உண்ணலாம் என அனுமதி அளித்தார்கள். அலீ (ரலி) அவர்கள் காலத்திலும் பஞ்சம் ஏற்பட்டபோது இந்நிலை கடைப்பிடிக்கப்பட்டிருக்கலாம் (ஃபத்ஹுல் பாரீ).

27. இது பலவீனமான அறிவிப்பாளர்தொடரில் அமைந்த ஹதீஸ் ஆகும். இதன் அறிவிப்பாளர்தொடரில் ஐந்தாவது அறிவிப்பாளராக இடம்பெற்றுள்ள முஹம்மது பின் உபைதில்லாஹ் பின் அபீராஃபிஉ என்பாரைப் பற்றி இமாம் புகாரீ (ரஹ்) அவர்கள் 'ஹதீஸ்களையில் ஏற்கத் தகாதவர்' என்றும், இமாம் அபூஹாத்திம் (ரஹ்), இப்னு மயீன் (ரஹ்) ஆகியோர் 'பலவீனமானவர்' என்றும் இமாம் தாரகுத்னீ (ரஹ்) அவர்கள் 'ஹதீஸ் கலையில் தள்ளப்பட வேண்டியவர்' என்றும் கூறியுள்ளனர். மேலும் இந்த ஹதீஸ் ஏனைய ஆதாரபூர்வமான ஹதீஸ்களுக்கு முரண்படுகிறது. சரியான அறிவிப்பில் நபி (ஸல்) அவர்கள் தம் மனைவியருக்கு தலாக் (விவாகரத்து) - அல்லது அல்லாஹ்வையும் அவன் தூதர், மறுமை வாழ்வு ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுத்துக்கொள்ள விருப்ப உரிமையளித்தார்கள். நபி (ஸல்) அவர்களின் மனைவியர் அல்லாஹ்வையும் அவன் தூதரையும் மறுமை வாழ்வையும் தேர்ந்தெடுத்துக்கொண்டனர்" என்றே இடம்பெற்றுள்ளது (பார்க்க: புகாரீ - 5262) இந்த வகையில், மேற்கண்ட (555ஆவது) ஹதீஸ் ஆதாரபூர்வமான ஹதீஸ்களுக்கு முரண்படுகிறது

أَبِيهِ عَنْ جَدِّهِ قَالَ: قَالَ رَسُولُ اللَّهِ ﷺ: مَنْ قُتِلَ دُونَ مَالِهِ فَهُوَ شَهِيدٌ.

தமது செல்வத்தைக் காப்பதற்காக போராடியபோது ஒருவர் கொல்லப்பட்டால், அவர் 'ஷஹீத்' (உயிர்த் தியாகி) ஆவார்.

இதை அலீ (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.[28]

٥٥٧ حَدَّثَنَا مُحَمَّدُ بْنُ أَبِي عَدِيٍّ عَنْ سَعِيدٍ عَنْ قَتَادَةَ عَنْ أَبِي حَسَّانَ عَنْ عَبِيدَةَ عَنْ عَلِيٍّ رَضِيَ اللَّهُ عَنْهُ أَنَّ النَّبِيَّ ﷺ قَالَ يَوْمَ الْأَحْزَابِ: مَلَأَ اللَّهُ بُيُوتَهُمْ وَقُبُورَهُمْ نَارًا كَمَا شَغَلُونَا عَنِ الصَّلَاةِ حَتَّى آبَتِ الشَّمْسُ.

557 அலீ (ரலி) அவர்கள் கூறியதாவது:

நபி (ஸல்) அவர்கள், 'அஹ்ஸாப்' (எனும் அகழ்ப்) போரின்போது, "சூரியன் மறையும் வரை (அஸ்ர்) தொழுகையிலிருந்து நம்மை கவனமற்று இருக்கச் செய்ததற்காக, அவர்களின் வீடுகளிலும், மண்ணறைகளிலும் அல்லாஹ் நெருப்பை நிரப்புவானாக!" என்று கூறினார்கள்.[29]

٥٥٨ حَدَّثَنَا سُفْيَانُ عَنِ الزُّهْرِيِّ عَنِ الْحَسَنِ وَعَبْدِ اللَّهِ ابْنَيْ مُحَمَّدِ بْنِ عَلِيٍّ عَنْ أَبِيهِمَا وَكَانَ حَسَنٌ أَرْضَاهُمَا فِي أَنْفُسِنَا أَنَّ عَلِيًّا قَالَ لِابْنِ عَبَّاسٍ رَضِيَ اللَّهُ

558 ஸுஹ்ரீ (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

(தவணைமுறைத் திருமணம் (நிகாஹுல் முத்ஆ) செல்லும் என இப்னு அப்பாஸ்

---

28. தன் சொந்த உடைமைகளைப் பிறர் பறிக்க முற்படும்போது அதைப் பாதுகாக்கப் போராடி ஒருவரின் உயிர் பறிபோனாலும், அதை வீரமரணமாகவே இஸ்லாம் கருதுகின்றது. இதே ஹதீஸ் புகாரீ (2480), முஸ்லிம் (226), திர்மிதீ (1339), நஸாயீ (4016-4028) உள்ளிட்ட நூல்களிலும் இடம்பெற்றுள்ளது. இக்கருத்தமைந்த ஹதீஸ் சயீத் பின் ஸைத் பின் அம்ர் பின் நுஃபைல் (ரலி) அவர்கள் அறிவித்த நபிமொழியிலும் பதிவாகியுள்ளது. காண்க: பின்வரும் ஹதீஸ்கள் - 1642, 1565.

29. இந்த ஹதீஸ் புகாரீ (2931, 4111, 4533, 6396), முஸ்லிம் (1104, 1105), திர்மிதீ (2910), [illegible] அபூதாவூத் (346), இப்னுமாஜா (676), தாரிமீ (1204) ஆகிய நூல்களிலும் பதிவாகியுள்ளது. பொதுவாக எல்லாத் தொழுகைகளையும் குறிப்பாக நடுத் தொழுகையையும் பேணித் தொழுங்கள் என (2:238)ஆவது வசனத்தில் அல்லாஹ் கட்டளையிடுகின்றான். 'அஸ்ர்' தொழுகைதான் நடுத் தொழுகை என்பதற்கு புகாரீ, முஸ்லிம் போன்ற நூல்களில் ஆதாரம் வந்துள்ளது.

அஹ்ஸாபுப் போர்: அகழ்ப் போர் எனும் அஹ்ஸாபுப் போர் ஹிஜ்ரீ ஐந்தாம் ஆண்டு (கிபி 625) ஷவ்வால் மாதம் நடந்தது. (அல்பிதாயா வந்நிஹாயா, சீரத் இப்னு ஹிஷாம்). அப்போது 'அஸ்ர்' தொழுகையை குறித்த நேரத்தில் முஸ்லிம்களைத் தொழவிடாமல் எதிரிகள் தடுத்துவிட்டனர். அதற்காக நபி (ஸல்) அவர்கள் கடும் கண்டனத்திற்குரிய சொற்களைப் பயன்படுத்தியுள்ளார்கள் என்பதிலிருந்து தொழுகையில், குறிப்பாக குறித்த நேரத்தில் தொழ வேண்டுமென்பது முக்கியம் எனவும் நடுத் தொழுகையான 'அஸ்ர்' தொழுகையின் முக்கியமும் புலனாகிறது.

பாரசீக நாட்டைச் சேர்ந்த நபித்தோழர் சல்மான் அல்ஃபாரிஸீ (ரலி) அவர்களின் ஆலோசனைப்படி மதீனா நகரைச் சுற்றி ஆழமான அகழ் தோண்டி எதிரிகளிடமிருந்து பாதுகாத்துக்கொண்டதால் அப்போருக்கு 'கன்தக்' (அகழ்) போர் எனப் பெயர் வந்தது. மக்கா குறைஷியர், ஃகத்ஃபான் குலத்தார், யூதர்கள் எனப் பல குலத்தினராகப் பிரிந்திருந்த எதிரிகள் அனைவரும் ஒன்றிணைந்து இப்போரில் ஈடுபட்டதால் இதற்கு 'அஹ்ஸாப்' (கூட்டுப் படைப்) போர் என்ற பெயர் வந்தது. இப்போர் பற்றி திருக்குர்ஆனில் 33ஆவது அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ளது.

மதீனா யூதர்களில் ஒரு பிரிவினரான பனூநளீர் குலத்தினர் செய்த அநியாயங்களின் காரணமாக நாடு கடத்தப்பட்டபின் அவர்களின் தலைவர்களுள் ஒருவரான ஹுயய் பின் அக்தப் மக்கா சென்றார். அங்கு குறைஷியரை நபி (ஸல்) அவர்களுக்கு எதிராக படையெடுக்குமாறு தூண்டினார். மற்றொரு தலைவரான கினானா பின் ரபீஉ என்பவர் பனூ ஃகத்ஃபான் குலத்தாரைத் தூண்டிவிட்டார். அவர்கள் தமது நட்புக் குலத்தாரான பனூ அஸது குலத்தாருக்குக் கடிதம் எழுதி அவர்களையும் படையெடுக்கத் தூண்டினர். அபூ சுஃப்யான் பின் ஹர்ப் மக்கா குறைஷியரை அழைத்துக்கொண்டு 'மர்ருழ் ழஹ்ரான்' எனும் இடத்திற்கு வந்துவிட்டார். அவர்களுடன் பனூ சுலைம் குலத்தாரும் வந்தனர். பத்தாயிரம் பேர் கொண்ட பெரும் படை திரண்டு மதீனாவைத் தாக்க வந்தனர். எதிரிகள் மதீனாவை முற்றுகையிட்டனர். சுமார் பதினைந்து முதல் இருபது நாட்கள் முற்றுகை நீடித்தது. போர் நடக்கவில்லை. இறுதியில் எதிரிகள் திரும்பிச் சென்றனர். இரு தரப்பிலும் சிலர் உயிரிழந்தனர். (ஃபத்ஹுல் பாரீ)

(ரலி) அவர்கள் கூறினார்கள் என்ற செய்தி அலீ (ரலி) அவர்களுக்கு எட்டியபோது) அலீ (ரலி) அவர்கள், இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களிடம், "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் 'கைபர்' போரின்போது, 'முத்ஆ' திருமணத்திற்கும், நாட்டுக் கழுதையின் இறைச்சி(யை உண்பதற்)கும் தடை விதித்துள்ளார்கள்" என்று கூறினார்கள்.[30]

559 அலீ (ரலி) அவர்கள் கூறியதாவது:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், தம்முடைய (குர்பானி) ஒட்டகங்களை (அறுத்துப்) பங்கிடக் கட்டளையிட்டு, அதன் பொறுப்பை என்னிடம் ஒப்படைத்தார்கள். அவற்றின் தோல்கள், சேணங்கள் ஆகியவற்றைப் பங்கிட்டுவிடுமாறும், அவற்றுள் எதையும் அறுப்பவருக்கான கூலியாகக் கொடுக்கக் கூடாது என்றும் கட்டளையிட்டார்கள். "அறுப்பவருக்குரிய கூலியை நாமே கொடுப்போம்" என்றும் அவர்கள் கூறினார்கள்.[31]

عَنْهُ: إِنَّ رَسُولَ اللَّهِ ﷺ نَهَى عَنْ نِكَاحِ الْمُتْعَةِ وَعَنْ لُحُومِ الْحُمُرِ الأَهْلِيَّةِ زَمَنَ خَيْبَرَ.

٥٥٩ حدثنا سُفْيَانُ عَنْ عَبْدِ الْكَرِيمِ عَنْ مُجَاهِدٍ عَنِ ابْنِ أَبِي لَيْلَى عَنْ عَلِيٍّ رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ: أَمَرَنِي رَسُولُ اللَّهِ ﷺ أَنْ أَقْسِمَ بُدْنَهُ أَقُومُ عَلَيْهَا وَأَنْ أَقْسِمَ جُلُودَهَا وَجِلالَهَا وَأَمَرَنِي أَنْ لاَ أُعْطِيَ الْجَازِرَ مِنْهَا شَيْئًا، وَقَالَ: نَحْنُ نُعْطِيهِ مِنْ عِنْدِنَا.

٥٦٠ حدثنا سُفْيَانُ عَنْ أَبِي إِسْحَاقَ عَنْ زَيْدِ بْنِ أُثَيْعٍ رَجُلٍ مِنْ هَمْدَانَ سَأَلْنَا عَلِيًّا رَضِيَ اللَّهُ عَنْهُ بِأَيِّ شَيْءٍ بُعِثْتَ يَعْنِي يَوْمَ بَعَثَهُ النَّبِيُّ ﷺ مَعَ أَبِي بَكْرٍ رَضِيَ اللَّهُ عَنْهُ فِي الْحَجَّةِ؟ قَالَ: بُعِثْتُ بِأَرْبَعٍ: لاَ يَدْخُلُ الْجَنَّةَ إِلاَّ نَفْسٌ مُؤْمِنَةٌ، وَلاَ يَطُوفُ بِالْبَيْتِ عُرْيَانٌ، وَمَنْ كَانَ بَيْنَهُ وَبَيْنَ النَّبِيِّ ﷺ عَهْدٌ فَعَهْدُهُ إِلَى مُدَّتِهِ، وَلاَ يَحُجُّ الْمُشْرِكُونَ وَالْمُسْلِمُونَ بَعْدَ عَامِهِمْ هَذَا.

560 ஸைது பின் உஸைஉ (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

நாங்கள் அலீ (ரலி) அவர்களிடம், "அபூபக்ர் (ரலி) அவர்களுடன் சேர்த்து, உங்களையும் நபி (ஸல்) அவர்கள் ஹஜ்ஜுக்கு அனுப்பியபோது, என்னென்ன கட்டளைகளுடன் நீங்கள் அனுப்பப்பட்டீர்கள்?" என்று கேட்டோம். அதற்கு அலீ (ரலி) அவர்கள், "இறைநம்பிக்கையாளர் தவிர வேறுயாரும் சொர்க்கம் செல்லமாட்டார்கள். கஅபாவை (இனி) நிர்வாணமாகச் சுற்றி (தவாஃப்) வர முடியாது. எவருடனும் இறைத்தூதர் உடன்படிக்கை செய்திருந்தால், அதற்குரிய காலக் கெடுவரை அது நீடிக்கும். இந்த ஆண்டுக்குப் பிறகு இறைநம்பிக்கையாளர்களுடன் இணைவைப்பாளர்கள் இணைந்து ஹஜ் செய்யக் கூடாது என்ற நான்கு கட்டளைகளுடன் நான் ஹஜ்ஜுக்கு அனுப்பப்பட்டேன்" என்றார்கள்.[32]

---

30. இந்த ஹதீஸ் புகாரீ (4216, 5115), முஸ்லிம் (2740, 2741), திர்மிதீ (1040, 1716), நஸாயீ (3313), தாரிமீ (2100), அபூயஅலா (553), முஸன்னஃப் இப்னு அபீஷைபா (17348), அல்பஸ்ஸார் (634), இப்னுமாஜா (1951), முவத்தா மாலிக் (994), இப்னு ஹிப்பான் (4217), பைஹகீயின் சுனனுல் குப்ரா (7/202), நஸாயீயின் சுனனுல் ஸுஃக்ரா (13/295), முஸ்னது அப்து பின் ஹுமைத் (40), முஸ்னதுஷ் ஷாஃபிஈ (802) உள்ளிட்ட நூல்களிலும் இடம்பெற்றுள்ளது. 'முத்ஆ' திருமணம் பற்றிய செய்தி அறிய முஸ்னதின் 34 ஆவது ஹதீஸை காண்க.

31. இதே ஹதீஸ் புகாரீ (1718), முஸ்லிம் (2535), அபூதாவூத் (1506), இப்னுமாஜா (3090), அல்பஸ்ஸார் (610), இப்னு குஸைமா (2922), அபூயஅலா (554), பைஹகீயின் சுனனுல் குப்ரா (5/241), நஸாயீயின் சுனனுல் குப்ரா (2/455), முஸ்னதுல் ஹுமைதீ (45), முஸன்னஃப் இப்னு அபீஷைபா (3/619) உள்ளிட்ட நூல்களிலும் இடம்பெற்றுள்ளது.

இந்த ஹதீஸிலிருந்து பலிப் பிராணியை அறுப்பதற்காக மற்றொருவரை நியமிக்கலாம். அதன் இறைச்சி, தோல், சேணம் போன்றவற்றை தர்மம் செய்து விடலாம். அதற்கு அழகிய சேணம் அணிவிக்கலாம். உரிப்பவருக்கோ, அறுப்பவருக்கோ அதிலிருந்து கூலியாக எதுவும் கொடுக்க கூடாது உள்ளிட்ட விஷயங்களை அறிய முடிகிறது. உரிப்பவருக்கோ, அறுப்பவருக்கோ அதிலிருந்து கொடுக்கும்போது அதனை ஒரு பகுதியை வியாபாரம் செய்வது போன்று ஆகிவிடுகிறது. (இமாம் நவவீ (ரஹ்) அவர்களின் முஸ்லிம் விரிவுரை)

32. இச்செய்தி முன்னர் சென்ற ஹதீஸ் எண் 46 ல் சற்று விரிவாகச் சென்றுள்ளது. இதே ஹதீஸ் புகாரீ (369, 1622, 3177,

561 அலீ (ரலி) அவர்கள் கூறியதாவது:

"கடனுக்குமுன் இறுதி விருப்பம் (வஸிய்யத்) (நிறைவேற்றப்பட வேண்டும்) என்று நீங்கள் (குர்ஆனில்) ஓதினாலும், இறுதி விருப்பத்தை நிறைவேற்றுமுன், (இறந்தவரின்) கடன்தான் நிறைவேற்றப்பட வேண்டும்" என்று முஹம்மது (ஸல்) அவர்கள் தீர்ப்பளித்தார்கள்.

மேலும், "ஒரே தாய் தந்தைக்குப் பிறந்த சகோதர சகோதரிகள் இருக்கும்போது, தந்தைவழிச் சகோதர சகோதரிகளுக்குச் சொத்தில் பங்கு கிடைக்காது" என்றும் அவர்கள் தீர்ப்பளித்தார்கள்.[33]

٥٦١ حدثنا سُفْيَانُ عَنْ أَبِي إِسْحَاقَ عَنِ الْحَارِثِ عَنْ عَلِيٍّ رَضِيَ اللَّهُ عَنْهُ: قَضَى مُحَمَّدٌ ﷺ أَنَّ الدَّيْنَ قَبْلَ الْوَصِيَّةِ وَأَنْتُمْ تَقْرَءُونَ الْوَصِيَّةَ قَبْلَ الدَّيْنِ، وَأَنَّ أَعْيَانَ بَنِي الْأُمِّ يَتَوَارَثُونَ دُونَ بَنِي الْعَلَّاتِ.

562 அலீ (ரலி) அவர்கள் கூறியதாவது:

நபி (ஸல்) அவர்கள் (என்னிடமும் தம் புதல்வி ஃபாத்திமாவிடமும்), "திண்ணைத் தோழர்களின் வயிறுகள் பசியால் சுருண்டு (ஒட்டிக்)கிடக்கும் நிலையில், அவர்களை விட்டுவிட்டு உங்களுக்கு (எதையும்) நான் தரமாட்டேன் அல்லது உங்கள் இருவருக்கும் பணியாளரை வழங்கமாட்டேன்" என்று கூறினார்கள்.[34]

٥٦٢ حدثنا سُفْيَانُ عَنْ عَطَاءِ بْنِ السَّائِبِ عَنْ أَبِيهِ عَنْ عَلِيٍّ رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ: قَالَ النَّبِيُّ ﷺ: لَا أُعْطِيكُمْ وَأَدَعُ أَهْلَ الصُّفَّةِ تَلَوَّى بُطُونُهُمْ مِنَ الْجُوعِ، وَقَالَ مَرَّةً: لَا أُخْدِمُكُمَا وَأَدَعُ أَهْلَ الصُّفَّةِ تَطْوَى.

563 அலீ (ரலி) அவர்கள் கூறியதாவது:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் ஸஃபா, மர்வாவுக்கிடையே விரைந்து சென்றதை

٥٦٣ حدثنا أَبُو عَبْدِ الرَّحْمَنِ عَبْدُ اللَّهِ بْنُ أَبِي زِيَادٍ الْقَطْوَانِيُّ حَدَّثَنَا زَيْدُ بْنُ الْحُبَابِ أَخْبَرَنِي حَرْبُ أَبُو سُفْيَانَ الْمِنْقَرِيُّ حَدَّثَنَا مُحَمَّدُ بْنُ عَلِيٍّ أَبُو جَعْفَرٍ حَدَّثَنِي عَمِّي عَنْ أَبِيهِ أَنَّهُ رَأَى رَسُولَ اللَّهِ ﷺ يَسْعَى

4363, 4655, 4657), முஸ்லிம் (2822), திர்மிதீ (798, 3017), நஸயீ (1971), அபூதாவூத் (431), பைஹகீ ஷுஅபுல் ஈமான் (4349), முஸ்னது ஹுமைதீ (63) உள்ளிட்ட நூல்களிலும் இடம்பெற்றுள்ளது. முன்சென்ற ஹதீஸ் எண் - 4 பலவீனமானதாயினும், இந்த ஹதீஸ் ஆதாரப்பூர்வமானதாகும். ஏனெனில் உபைதா (ரஹ்) அவர்கள், அலீ (ரலி) அவர்களைச் சந்தித்துள்ளார்கள்.

33. இந்த ஹதீஸ், திர்மிதீ (2020), இப்னுமாஜா (2706), அபூயஅலா (600), பைஹகீயின் சுனனுல் குப்ரா (6/232), தபரானீயின் அல்முஃஜமுல் அவ்சத் (5313), தாரகுத்னீ (4168) உள்ளிட்ட நூல்களிலும் இடம்பெற்றுள்ளது. இதன் அறிவிப்பாளர்தொடரில் ஹாரிஸ் அல்அஃவர் இடம்பெற்றுள்ளார். இவர் பலவீனமான அறிவிப்பாளர் ஆவார்.

4:11, 12 ஆகிய வசனங்களில் கடனுக்கு முன் 'வஸிய்யத்' (உயில்) எனும் இறுதி விருப்பம் நிறைவேற்றப்பட வேண்டுமெனக் கூறப்பட்டுள்ளது. ஆனால், நபி (ஸல்) அவர்கள் 'வஸிய்யத்'துக்கு முன் கடன்தான் செலுத்தப்பட வேண்டுமெனக் குறிப்பிடுகிறார்கள். காரணம் 1. இந்த வசனங்கள் சொத்துரிமை சம்பந்தமானவை என்பதால், 'வஸிய்யத்' (உயில்) என்பதும் சொத்து சம்பந்தப்பட்டதாக இருப்பதால், அது முதலில் கூறப்பட்டுள்ளது. 2. 'வஸிய்யத்' என்பது ஒருவர் செய்த எந்த ஒரு செலவுக்கும் பிரதியாக நிறைவேற்றப்படுவதன்று. கடன் என்பது அவரிடமிருந்து முன்பு பெற்றிருந்ததைத் திருப்பிச் செலுத்துவது. எனவே, வாரிசுதாரர்களுக்குக் கடனை விட 'வஸிய்யத்'தை நிறைவேற்றுவது சுமையானது. கொடுக்க மனம் வராது. 3. கடன் என்பது கடன் கொடுத்தவரின் உரிமையாகும். கடன் கொடுத்தவர் வலுக்கட்டாயமாக அதைத் திருப்பிப் பெறவும் பேசவும் அனுமதி உண்டு. 'வஸிய்யத்' வஸிய்யத் செய்தவரின் புறத்திலிருந்து அவராகவே முன்வந்து உதவுவது. கடன் அப்படிப்பட்டதன்று. (திர்மிதீயின் விரிவுரை துஹ்ஃபத்துல் அஹ்வதீ)

ஒரே தாய் தந்தைக்குப் பிறந்த சகோதர சகோதரிகள் என்பதைக் குறிக்க இந்த ஹதீஸில் 'பனுல் உம்மி' என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. 'பனுல் அல்லாத்' என்ற சொல், தந்தை ஒன்றுபட்டு, தாய் வேறுபட்ட சகோதர சகோதரிகளைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

34. இந்த ஹதீஸ், இதே நூலில் பின்வரும் ஹதீஸ் எண் 797இல் விரிவாக இடம்பெற்றுள்ளது. இதே ஹதீஸ், முஸ்னது ஹுமைதீ (48) எனும் நபிமொழித் தொகுப்பிலும் பதிவாகியுள்ளது.

بَيْنَ الصَّفَا وَالْمَرْوَةِ فِي الْمَسْعَى كَاشِفًا عَنْ ثَوْبِهِ قَدْ بَلَغَ إِلَى رُكْبَتِهِ.

٥٦٤ حَدَّثَنَا عَبْدُ اللهِ حَدَّثَنِي أَبُو كُرَيْبٍ مُحَمَّدُ بْنُ الْعَلَاءِ حَدَّثَنَا ابْنُ الْمُبَارَكِ عَنْ يَحْيَى بْنِ أَيُّوبَ عَنْ عُبَيْدِ اللهِ بْنِ زَحْرٍ عَنْ عَلِيِّ بْنِ يَزِيدَ عَنِ الْقَاسِمِ عَنْ أَبِي أُمَامَةَ قَالَ: قَالَ عَلِيٌّ رَضِيَ اللهُ عَنْهُ: كُنْتُ آتِي النَّبِيَّ ﷺ فَأَسْتَأْذِنُ فَإِنْ كَانَ فِي صَلَاةٍ سَبَّحَ وَإِنْ كَانَ فِي غَيْرِ صَلَاةٍ أَذِنَ لِي.

٥٦٥ حَدَّثَنَا سُفْيَانُ عَنْ مُطَرِّفٍ عَنِ الشَّعْبِيِّ عَنْ أَبِي جُحَيْفَةَ قَالَ: سَأَلْنَا عَلِيًّا رَضِيَ اللهُ عَنْهُ هَلْ عِنْدَكُمْ مِنْ رَسُولِ اللهِ ﷺ شَيْءٌ بَعْدَ الْقُرْآنِ؟ قَالَ: لَا وَالَّذِي فَلَقَ الْحَبَّةَ وَبَرَأَ النَّسَمَةَ إِلَّا فَهْمٌ يُؤْتِيهِ اللهُ عَزَّ وَجَلَّ رَجُلًا فِي الْقُرْآنِ أَوْ مَا فِي الصَّحِيفَةِ، قُلْتُ: وَمَا فِي الصَّحِيفَةِ؟ قَالَ: الْعَقْلُ وَفِكَاكُ الْأَسِيرِ وَلَا يُقْتَلُ مُسْلِمٌ بِكَافِرٍ.

(சயீ செய்ததை) நான் பார்த்தேன். சயீ செய்யுமிடத்தில் அவ்வாறு அவர்கள் விரைந்து சென்றபோது அவர்களின் ஆடை (சற்று) விலகி, அவர்களின் முழங்கால்கள்வரை தெரிந்தது.[35]

564 *அலீ (ரலி) அவர்கள் கூறியதாவது:*

நான் நபி (ஸல்) அவர்களிடம், (அவர்களது இல்லத்துக்குள் நுழைய) அனுமதி கேட்பேன். அவர்கள் அப்போது தொழுது கொண்டிருந்தால், (சுப்ஹானல்லாஹ் என்று) இறைத்துதி (தஸ்பீஹ்) கூறுவார்கள்; தொழாமலிருந்தால், எனக்கு (உள்ளே வர) அனுமதியளிப்பார்கள்.[36]

565 *(வஹ்ப் பின் அப்தில்லாஹ்) அபூஜுஹைஃபா (ரலி) அவர்கள் கூறியதாவது:*

"குர்ஆனுக்குப் பின், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடமிருந்து கிடைத்த (மார்க்க ஞானம் ஏதேனும்) உங்களிடம் உள்ளதா?" என நாங்கள் அலீ (ரலி) அவர்களிடம் கேட்டோம்.[37] *அதற்கு அவர்கள், "வித்துகளைப் பிளந்தவனும், உயிரினங்களை உருவாக்கியவனுமான அல்லாஹ்வின் மீதாணையாக! வல்லமையும் மாண்பும் மிக்க அல்லாஹ், ஒருவருக்குக் குர்ஆனில் அளித்த விளக்கத்தையும் இந்த ஏட்டில் உள்ளதையும் தவிர, (வேறெதுவும் எங்களிடம் இல்லை)" என்று கூறினார்கள். அப்போது நான், "அந்த ஏட்டில் என்ன (எழுதப்பட்டு) உள்ளது?" என்று கேட்டேன். அதற்கு அலீ (ரலி) அவர்கள், "இழப்பீடு (தொடர்பான விளக்கங்கள்), போர்க் கைதியை விடுவித்தல், இறைமறுப்பாளனுக்காக முஸ்லிம் ஒருவன் கொல்லப்பட*

---

35. இந்த ஹதீஸ், முஸ்னதுல் பஸ்ஸார் (637) எனும் நூலிலும் பதிவாகியுள்ளது. இவ்விரு அறிவிப்புகளிலும் நான்காவது அறிவிப்பாளராக இடம்பெற்றுள்ள ஹர்ப் பின் சுரைஜ் என்பாரை அறிஞர்களுள் சிலர் விமர்சித்துள்ளனர்.

36. இந்த ஹதீஸின் அறிவிப்பாளர்தொடரில் வரிசையாகப் பல குறைபாடுகள் உள்ளன. ஐந்தாவது அறிவிப்பாளராக இடம் பெற்றுள்ள உபைதுல்லாஹ் பின் ஸஹ்ர் என்பார் பற்றி இமாம்களான அஹ்மது, இப்னுல் மதீனீ, இப்னு ஹிப்பான், ஹாக்கிம், தாரகுத்னீ, கதீப் ஆகியோர் 'பலவீனமானவர்' என்று கூறுகின்றனர். நான்காவது அறிவிப்பாளராக இடம்பெற்றுள்ள அலீ பின் யஸீத் அல்அல்ஹானீ எனும் அறிவிப்பாளரும் பலவீனமானவர் ஆவார் என இமாம்கள் அஹ்மது, இப்னு மயீன், அபூஸுர்ஆ, அபூஹாத்திம், திர்மிதீ, நஸாயீ போன்றோர் கூறியுள்ளனர். இவரைப் பற்றி இமாம் புகாரீ (ரஹ்) அவர்கள் 'ஹதீஸ் கலையில் மறுக்கத் தக்கவர்' 'பலவீனமானவர்' என்று குறிப்பிட்டுள்ளார்கள். காசிம் பின் அப்திர்ரஹ்மான் பின் அஷ்ஷாமீ எனும் அறிவிப்பாளரிடமிருந்து அலீ பின் யஸீத் என்பவர் வியக்கத் தக்க நூதனமான செய்திகளை அறிவித்துள்ளார். இமாம் இப்னு ஹிப்பான் இவரைக் 'விமர்சிக்கப்பட்டவர்கள்' எனும் பொருள் தரும் 'அல் மஜ்ரூஹீன்' எனும் தமது நூலில் குறிப்பிட்டுள்ளார். ஓர் அறிவிப்பாளர் தொடரில் உபைதுல்லாஹ் பின் ஸஹ்ர், அலீ பின் யஸீத், காசிம் அபூ அப்திர்ரஹ்மான் ஆகிய மூவரும் ஒன்று சேர்ந்துவிட்டால், அந்தச் செய்தி அவர்கள் புனைந்துரைத்து நிரப்பியது என விளங்கிக்கொள்ளலாம். எனவே இது பலவீனமான செய்தியாகும். பார்க்க: முன்சென்ற ஹதீஸ் எண் - 538.

37. நபி (ஸல்) அவர்களின் குடும்பத்தாரிடம் குறிப்பாக அலீ (ரலி) அவர்களிடம் 'வஹீ' (இறைச் செய்தி)யில் மற்றவர்களுக்குத் தெரியாத சில தகவல்கள் உள்ளன என 'ஷீஆ'க்களுள் ஒரு பிரிவினர் நம்பினர். அதனால்தான் அபூஜுஹைஃபா (ரலி) அவர்கள் அவ்வாறு கேட்டார்கள். அலீ (ரலி) அவர்கள் அதை மறுத்து தம்மிடம் ஏதும் இல்லை என விளக்கமளித்தார்கள். (ஃபத்ஹுல் பாரீ - புகாரியின் விரிவுரை)

٥٦٦ حدثنا سُفْيَانُ عَنْ عَمْرٍو قَالَ أَخْبَرَنِي حَسَنُ بْنُ مُحَمَّدِ بْنِ عَلِيٍّ أَخْبَرَنِي عُبَيْدُ اللَّهِ بْنُ أَبِي رَافِعٍ وَقَالَ مَرَّةً: إِنَّ عُبَيْدَ اللَّهِ بْنَ أَبِي رَافِعٍ أَخْبَرَهُ أَنَّهُ سَمِعَ عَلِيًّا رَضِيَ اللَّهُ عَنْهُ يَقُولُ: بَعَثَنِي رَسُولُ اللَّهِ ﷺ أَنَا وَالزُّبَيْرَ وَالْمِقْدَادَ فَقَالَ: انْطَلِقُوا حَتَّى تَأْتُوا رَوْضَةَ خَاخٍ فَإِنَّ بِهَا ظَعِينَةً مَعَهَا كِتَابٌ فَخُذُوهُ مِنْهَا، فَانْطَلَقْنَا تَعَادَى بِنَا خَيْلُنَا حَتَّى أَتَيْنَا الرَّوْضَةَ فَإِذَا نَحْنُ بِالظَّعِينَةِ، فَقُلْنَا: أَخْرِجِي الْكِتَابَ، قَالَتْ: مَا مَعِي مِنْ كِتَابٍ، قُلْنَا: لَتُخْرِجِنَّ الْكِتَابَ أَوْ لَنَقْلِبَنَّ الثِّيَابَ، قَالَ فَأَخْرَجَتِ الْكِتَابَ مِنْ عِقَاصِهَا، فَأَخَذْنَا الْكِتَابَ فَأَتَيْنَا بِهِ رَسُولَ اللَّهِ ﷺ فَإِذَا فِيهِ مِنْ حَاطِبِ بْنِ أَبِي بَلْتَعَةَ إِلَى نَاسٍ مِنَ الْمُشْرِكِينَ بِمَكَّةَ يُخْبِرُهُمْ بِبَعْضِ أَمْرِ رَسُولِ اللَّهِ ﷺ، فَقَالَ رَسُولُ اللَّهِ ﷺ: يَا حَاطِبُ مَا هَذَا؟ قَالَ: لَا تَعْجَلْ عَلَيَّ إِنِّي كُنْتُ امْرَأً مُلْصَقًا فِي قُرَيْشٍ وَلَمْ أَكُنْ مِنْ أَنْفُسِهَا، وَكَانَ مَنْ كَانَ مَعَكَ مِنَ الْمُهَاجِرِينَ لَهُمْ قَرَابَاتٌ يَحْمُونَ أَهْلِيهِمْ بِمَكَّةَ فَأَحْبَبْتُ إِذْ فَاتَنِي ذَلِكَ مِنَ النَّسَبِ فِيهِمْ أَنْ أَتَّخِذَ فِيهِمْ يَدًا يَحْمُونَ بِهَا قَرَابَتِي

மாட்டான் ஆகிய செய்திகள் இதில் உள்ளன" என்று விடையளித்தார்கள்.[38]

566 *அலீ (ரலி) அவர்கள் கூறியதாவது:*

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் என்னையும், ஸுபைர், மிக்தாது (ரலி) ஆகியோரையும், "'ரவ்ளத் காக்'[39] என்ற இடம்வரை செல்லுங்கள். அங்கு ஒட்டகச் சிவிகையில் பெண்ணொருத்தி இருப்பாள். அவளிடம் ஒரு கடிதம் உள்ளது. அதை அவளிடமிருந்து எடுத்து வாருங்கள்" என்று கூறி அனுப்பினார்கள். எங்கள் குதிரைகளைத் தட்டிவிட்டு விரைந்து புறப்பட்டு, 'ரவ்ளத் காக்'கை அடைந்தோம்.

அங்கு ஓர் ஒட்டகச் சிவிகையில் அந்தப் பெண்ணைக் கண்டோம். "கடிதத்தை எடு!" என்றோம். "என்னிடம் எந்தக் கடிதமும் இல்லை" என்றாள். "நீயாகக் கடிதத்தைக் கொடு. அல்லது ஆடையைக் களைந்து சோதனையிடுவோம்!" என்று (அச்சுறுத்திக்) கூறினோம். அவள் தன் சடைப் பின்னல்களுக்கு உள்ளேயிருந்து கடிதத்தை எடுத்தாள். கடிதத்தைப் பெற்றுக்கொண்ட நாங்கள், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் திரும்பிவந்தோம். அதில், ஹாத்திப் பின் அபீ பல்த்தஆ (ரலி) அவர்கள், மக்காவில் உள்ள இணைவைப்போருள் குறிப்பிட்ட சிலருக்குத் தெரிவித்த செய்தி எழுதப்பட்டு இருந்தது. அவர், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் (ரகசிய) நடவடிக்கைகள் பற்றி அதில் குறிப்பிட்டிருந்தார். உடனே அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "ஹாத்திபே! இது என்ன?" என்று கேட்டார்கள்.

"அல்லாஹ்வின் தூதரே! என் விஷயத்தில் அவசரப்பட்டு (முடிவு எடுத்து) விட வேண்டாம். நான் குறைஷி இனத்தைச் சார்ந்தவனல்லன் என்பதால், அவர்களைச் சார்ந்தே வாழ்ந்துவந்தேன். தங்களுடன் இருக்கும் முஹாஜிர்களுக்கு அவர்களின் குடும்பத்தாரையும் சொத்துகளையும் பாதுகாக்க மக்காவில் உறவினர்கள் உள்ளனர். எனக்கு அது போன்ற உறவினர் இல்லாததால், அவர்களுக்கு உபகாரம் எதையேனும் செய்து, அதன் மூலம் என் குடும்பத்தாரை அவர்கள் பாதுகாக்க வேண்டுமென நான் விரும்பினேன்.

---

38. பார்க்க: புகாரீ (111, 3047, 6903, 6915). இதே கருத்துள்ள ஹதீஸ் முஸ்னதுஷ் ஷாஃபிஈ (944), முஸ்னதுல் ஹுமைதீ (44), இப்னுல் ஜாரூத் அல்முன்தகா (430), பைஹகீயின் அஸ்ஸுனனுஸ் ஸஃகீர் (2345), ஸுனனுல் குப்ரா (8/28), நஸாயீயின் ஸுனனுல் குப்ரா (4/220), தபரானீயின் அல்முஃஜமுல் அவ்ஸத் (2249), திர்மிதீ (1332), இப்னுமாஜா (2648), தஹாவீ (241), முஸன்னஃப் இப்னு அபீஷைபா (28042), அல்பஸ்ஸார் (486) ஆகிய நூல்களிலும் இடம்பெற்றுள்ளது.

39. 'ரவ்ளத்து காக்' என்ற இடம் மக்காவுக்கும் மதீனாவுக்கும் இடையிலுள்ள பயணியர் தங்குமிடமாகும். கடிதம் கொண்டு சென்ற பெண்ணின் பெயர் 'ஸாரா' என்பதாகும் கூறப்படுகின்றது.

وَمَا فَعَلْتُ ذَلِكَ كُفْرًا وَلاَ ارْتِدَادًا عَنْ دِينِي وَلاَ رِضًا بِالْكُفْرِ بَعْدَ الإِسْلاَمِ، فَقَالَ رَسُولُ اللَّهِ ﷺ: إِنَّهُ قَدْ صَدَقَكُمْ، فَقَالَ عُمَرُ رَضِيَ اللَّهُ عَنْهُ: دَعْنِي أَضْرِبْ عُنُقَ هَذَا الْمُنَافِقِ، فَقَالَ: إِنَّهُ قَدْ شَهِدَ بَدْرًا، وَمَا يُدْرِيكَ لَعَلَّ اللَّهَ قَدِ اطَّلَعَ عَلَى أَهْلِ بَدْرٍ، فَقَالَ: اعْمَلُوا مَا شِئْتُمْ فَقَدْ غَفَرْتُ لَكُمْ.

ஆகவேதான், இத்தகவலை அவர்களுக்கு அளிக்க முன்வந்தேன். நான் உண்மை மார்க்கத்தை மறுத்தோ, (இஸ்லாத்தை துறந்து) வேறு மார்க்கத்தைத் தழுவுவதற்கோ, இஸ்லாத்தை ஏற்றபின் இறைமறுப்பை விரும்பியோ இவ்வாறு செய்யவில்லை" என்று ஹாத்திப் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

(இதைக் கேட்ட) அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "இவர் உண்மை கூறினார்" என்று கூறினார்கள். அப்போது உமர் (ரலி) அவர்கள், "இந்த நயவஞ்சகரின் கழுத்தை நான் வெட்டுகிறேன்; (அவரை) என்னிடம் விடுங்கள்" என்றார்கள். உடனே அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "இவர் பத்ருப்[40] போரில் கலந்துகொண்டார். மேலும், உங்களுக்கு என்ன தெரியும்? திண்ணமாக! அல்லாஹ் 'பத்ருப் போரில் கலந்துகொண்டவர்களை நோக்கி, 'நீங்கள் விரும்பியதைச் செய்துகொள்ளுங்கள். உங்கள் பாவங்களை நான் மன்னித்துவிட்டேன்' என்று கூறி இருக்கலாம்" என்று கூறினார்கள்.[41]

٥٦٧ حَدَّثَنَا عَبْدُاللَّهِ حَدَّثَنِي حَجَّاجُ بْنُ يُوسُفَ الشَّاعِرُ حَدَّثَنَا يَحْيَى بْنُ حَمَّادٍ حَدَّثَنَا أَبُو عَوَانَةَ عَنْ عَطَاءِ بْنِ السَّائِبِ عَنْ مُوسَى بْنِ سَالِمٍ أَبِي جَهْضَمٍ أَنَّ أَبَا جَعْفَرٍ حَدَّثَهُ عَنْ أَبِيهِ أَنَّ عَلِيًّا رَضِيَ اللَّهُ عَنْهُ حَدَّثَهُمْ: أَنَّ رَسُولَ اللَّهِ ﷺ نَهَانِي عَنْ ثَلاَثَةٍ، قَالَ: فَمَا أَدْرِي لَهُ خَاصَّةً أَمْ لِلنَّاسِ عَامَّةً، نَهَانِي عَنِ الْقَسِّيِّ وَالْمِيثَرَةِ وَأَنْ أَقْرَأَ وَأَنَا رَاكِعٌ.

567 அலீ (ரலி) அவர்கள் கூறியதாவது:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் மூன்று செயல்களைச் செய்ய எனக்குத் தடை செய்தார்கள். அது எனக்கு மட்டும்தானா? அல்லது மக்களனைவருக்கும் பொதுவானதா? என்பதை நான் அறியவில்லை. பட்டு கலந்த பஞ்சாடை, மென்பட்டுத் திண்டு ஆகிய இவ்விரண்டிற்கும், 'ருகூஉ'வில் நான் (குர்ஆன்) ஓதுவதற்கும் எனக்குத் தடைவிதித்தார்கள்.[42]

---

40. இஸ்லாமிய வரலாற்றில் 'பத்ருப் போர்' ஏற்படுத்திய தாக்கம் உலக வரலாற்றையே மாற்றியமைத்தது. 'வலிமையே எளிமையை வெல்லும்' எனும் மக்களின் பொதுவான கருத்தை மாற்றி, வல்லமையுள்ள அல்லாஹ் நாடினால் சிறு படையும் பெரும்படையை வெல்லும் என்பதை உண்மைப்படுத்தியது. ஹிஜ்ரீ இரண்டாம் ஆண்டு (கி.பி. 624) ரமளான் 17 அன்று நடந்த இப்போரில் பங்கு பெற்றுத் தம் உயிர்களைப் பணயம் வைத்தவர்கள்தான் பத்ருப் போர் வீரர்கள். என்ன குற்றம் செய்தாலும் இறைவன் மன்னிப்பான் என்ற உறுதிமொழி நபி (ஸல்) அவர்களுக்கு வழங்கப்பட்டது. அந்த மன்னிப்புக்கு உரியவர்களுள் ஒருவர்தான் இந்த ஹதீஸில் இடம்பெற்ற ஹாத்திப் பின் அபீபல்தஆ (ரலி) என்ற நபித்தோழர். இவர் யமன் நாட்டிலிருந்து வந்து மக்காவில் வாழ்ந்தவர். அங்கிருந்துதான் மதீனாவுக்கு 'ஹிஜ்ரத்' செய்தார்.

41. இந்த ஹதீஸ், புகாரீ (3007, 3081, 3983, 4274, 4890, 6259, 6939), முஸ்லிம் (4907), முஸ்னதுல் ஹுமைதீ (54), அபூதாவூத் (2279), திர்மிதீ (3227), அபூயஅலா (378-381), இப்னு ஹிப்பான் (6607), பைஹகீயின் சுனனுல் குப்ரா (9/146), நஸாயீயின் சுனனுல் குப்ரா (6/487), ஹாகிம் (7065), அல்பஸ்ஸார் (530), முஸ்னதுஷ் ஷாஃபிஈ (1512) உள்ளிட்ட நூல்களிலும் பதிவாகியுள்ளது.

அவர்களின் பாவங்கள் மன்னிக்கப்பட்டதாகக் கூறப்படுவது மறு உலகில்தான். இவ்வுலகில் அவர்கள் திருட்டு, கொலை, விபசாரம் போன்ற தண்டனைக்குரிய குற்றமொன்றைச் செய்துவிட்டால் அது நிறைவேற்றப்படும். பத்ருப் போரில் கலந்துகொண்ட மிஸ்தஹ் (ரலி) அவர்களுக்கு நபி (ஸல்) அவர்கள் அவதூறுக்கான தண்டனையை நிறைவேற்றியுள்ளார்கள் என்பது கவனிக்கத் தக்கது. (அபூதாவூதின் விரிவுரை 'அவ்னுல் மஅபூத்', அல்மின்ஹாஜ்).

42. இது பலவீனமான ஹதீஸாகும். அலீ (ரலி) அவர்களின் புதல்வர் ஹுசைன் (ரலி) அவர்களின் மகனாகிய அலீ (ரஹ்) அவர்கள் 'ஸைனுல் ஆபிதீன்' என அழைக்கப்படுகிறார். இவர் அலீ (ரலி) அவர்களைச் சந்திக்காதவராவார். இது அறிவிப்பாள-

568 அலீ (ரலி) அவர்கள் கூறியதாவது:

நான் நபி (ஸல்) அவர்களிடம் இருந்தேன். அப்போது அபூபக்ர் (ரலி), உமர் (ரலி) ஆகிய இருவரும் (நபியவர்களை நோக்கி) வந்தனர். அப்போது நபி (ஸல்) அவர்கள், "அலீயே! நபிமார்கள், ரசூல்மார்களுக்கு அடுத்து, சொர்க்கவாசிகளில் பேரிளமைப் பருவத்திலுள்ளோருக்கும்[43] இளைஞர்களுக்கும் இந்த இருவரும் தலைவர்களாவர்" என்று கூறினார்கள்.[44]

٥٦٨ حدثنا عبد الله حَدَّثَنِي وَهْبُ بْنُ بَقِيَّةَ الْوَاسِطِيُّ حَدَّثَنَا عُمَرُ بْنُ يُونُسَ يَعْنِي الْيَمَامِيَّ عَنْ عَبْدِ اللَّهِ بْنِ عُمَرَ الْيَمَامِيِّ عَنِ الْحَسَنِ بْنِ زَيْدِ بْنِ حَسَنٍ حَدَّثَنِي أَبِي عَنْ أَبِيهِ عَنْ عَلِيٍّ رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ: كُنْتُ عِنْدَ النَّبِيِّ ﷺ فَأَقْبَلَ أَبُو بَكْرٍ وَعُمَرُ رَضِيَ اللَّهُ عَنْهُمَا، فَقَالَ: يَا عَلِيُّ هَذَانِ سَيِّدَا كُهُولِ أَهْلِ الْجَنَّةِ وَشَبَابِهَا بَعْدَ النَّبِيِّينَ وَالْمُرْسَلِينَ.

569 அலீ (ரலி) அவர்கள் கூறியதாவது:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம், அவர்கள் மகளை எனக்குப் பெண் கேட்க விரும்பினேன். 'என்னிடம் எதுவும் இல்லாமல் இருக்கும்போது, எப்படிப் போய்க் கேட்பது?' என்றும் எண்ணினேன். பின்னர் அவர்களுக்கும் (எனக்குமுள்ள) உறவையும், அவர்களின் பாசத்தையும் நினைத்துப் பார்த்த நான், அவர்களிடம் அவர்களின் மகளைப் பெண் கேட்டேன். "உம்மிடம் (மஹ்ராகத் தருவதற்கு) ஏதேனும் உள்ளதா?" என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். அதற்கு நான், "இல்லை" என்று கூறினேன். "இன்ன நாளில் உமக்கு நான் அளித்த 'ஹுத்தமிய்யா'[45]

٥٦٩ أَنْبَأَنَا سُفْيَانُ عَنِ ابْنِ أَبِي نَجِيحٍ عَنْ أَبِيهِ عَنْ رَجُلٍ سَمِعَ عَلِيًّا رَضِيَ اللَّهُ عَنْهُ يَقُولُ: أَرَدْتُ أَنْ أَخْطُبَ إِلَى رَسُولِ اللَّهِ ﷺ ابْنَتَهُ، فَقُلْتُ: مَا لِي مِنْ شَيْءٍ فَكَيْفَ؟ ثُمَّ ذَكَرْتُ صِلَتَهُ وَعَائِدَتَهُ فَخَطَبْتُهَا إِلَيْهِ، فَقَالَ: هَلْ لَكَ مِنْ شَيْءٍ؟ قُلْتُ: لَا قَالَ: فَأَيْنَ دِرْعُكَ الْحُطَمِيَّةُ

தொடர் இடைமுறிவுற்ற செய்தியாகிறது. மேலும் அதாஉ பின் அஸ்ஸாயிப் மூளை குழம்பியவர் ஆவார். இவரிடமிருந்து கேட்ட அறிவிப்பாளர் அவர்கள், அதாஉ பின் அஸ்ஸாயிபிடமிருந்து அவர் மூளை குழம்பிய நிலையிலும் மூளை குழம்பாதிருந்த நல்ல நிலையிலும் கேட்டுள்ளார். எனவே இது ஆதாரமாக ஏற்றுக்கொள்ள இயலாத செய்தியாகும்.

இதுபோன்ற கருத்தமைந்த ஹதீஸ் முஸ்லிமில் 4220, 4221, 4222 ஆகிய எண்களில் வந்துள்ளதாலும், பின்வரும் 577இல் சரியான அறிவிப்பாளர்தொடரில் வருவதாலும் இதனை ஷுஐப் அல்அர்னஊத் அடங்கிய அறிஞர் குழுவினர், 'ஹஸனுன் லி'ஃகைரிஹி (பிற சான்றுகளால் 'ஹசன்' தரத்தை எட்டிய ஹதீஸ்) என்று கூறியுள்ளனர்.

இத்தடை அலீ (ரலி) அவர்களுக்கு மட்டுமன்று; மாறாக எல்லாருக்கும் பொதுவானதுதான். [illegible] 'அல்லுஃலுஉ வல்மர்ஜான்') சிரம் பணியும் சஜ்தாவின் போதும் குர்ஆன் ஓதத் தடை வந்துள்ளது. பார்க்க: பின்வரும் ஹதீஸ் எண் 585. 'ருகூஉ'வும் 'சஜ்தா'வும் அல்லாஹ்வைப் பெருமைப்படுத்தி அவனிடம் பிரார்த்தனை செய்வதற்கான இடங்களாகும். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'ருகூஉ'வில் வல்லமையும் மாண்பும் மிக்க இறைவனை மகிமைப்படுத்துங்கள். 'சஜ்தா'வில் முனைப்புடன் பிரார்த்தனை புரியுங்கள். உங்கள் பிரார்த்தனை ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு அது மிகவும் தகுதியானதாகும் (முஸ்லிம் 824).

43. பேரிளமைப் பருவத்திலுள்ளோர் என்பதற்கு ஹதீஸில் 'குஹூல்' என்ற சொல் வந்துள்ளது. இச்சொல் முப்பது வயதைக் கடந்தவர்கள், அல்லது முப்பத்து நான்கு வயது முதல் ஐம்பது வயதுள்ளவர்களுக்குச் சொல்லப்படும். நடுத்தர வயதுள்ளவர்களுக்கே தலைவர்களாக இருக்கும்போது வாலிபர்களுக்கும் அவர்கள் தலைவர் ஆகிவிடுவார்கள் (துஹ்ஃபத்துல் அஹ்வதீ).

44. இந்த ஹதீஸ் திர்மிதீ (3598, 3599), இப்னுமாஜா முன்னுரை-92, இப்னு ஹிப்பான் (7030), தப்ரானீயின் அல்முஃஜமுல் அவ்சத் (4584), முஸ்னது அபீயஃலா (510, 589), முஸ்னதுல் பஸ்ஸார் (490) உள்ளிட்ட நூல்களிலும் இடம்பெற்றுள்ளது.

45. 'ஹுத்தம்' என்றால் முறிப்பது, உடைப்பது என்று பொருள். அதாவது எதிரியின் வாளை உடைத்தெறியும் திறன் கொண்ட கவச ஆடை என்பது பொருள். [illegible]

الَّتِي أَعْطَيْتُكَ يَوْمَ كَذَا وَكَذَا، قَالَ: هِيَ عِنْدِي، قَالَ: فَأَعْطِهَا إِيَّاهُ.

எனும் கவச ஆடை எங்கே?" என்று கேட்டார்கள். அதற்கு "அது என்னிடம் உள்ளது" என்றேன். "அதை மஹ்ராகக் கொடுத்து (மணமுடித்து) விடு" என்று கூறினார்கள்.[46]

٥٧٠ حَدَّثَنَا سُفْيَانُ عَنْ عُبَيْدِ اللَّهِ بْنِ أَبِي يَزِيدَ عَنْ مُجَاهِدٍ عَنِ ابْنِ أَبِي لَيْلَى عَنْ عَلِيٍّ رَضِيَ اللَّهُ عَنْهُ: أَنَّ فَاطِمَةَ أَتَتِ النَّبِيَّ ﷺ تَسْتَخْدِمُهُ، فَقَالَ: أَلَا أَدُلُّكِ عَلَى مَا هُوَ خَيْرٌ لَكِ مِنْ ذَلِكَ، تُسَبِّحِينَ ثَلَاثًا وَثَلَاثِينَ وَتُكَبِّرِينَ ثَلَاثًا وَثَلَاثِينَ وَتَحْمَدِينَ ثَلَاثًا وَثَلَاثِينَ أَحَدُهَا أَرْبَعًا وَثَلَاثِينَ.

570 அலீ (ரலி) அவர்கள் கூறியதாவது:

ஃபாத்திமா (ரலி) அவர்கள், தமக்குப் பணிவிடை செய்வதற்குப் பணியாள் ஒருவரைக் கேட்டு, நபி (ஸல்) அவர்களிடம் சென்றார்கள். அப்போது நபி (ஸல்) அவர்கள், "அதைவிடச் சிறந்த ஒன்றை உமக்கு நான் அறிவிக்கட்டுமா?" என்று கேட்டுவிட்டு, "(உனது படுக்கைக்குச் செல்லும் போது), 33 தடவை 'சுப்ஹானல்லாஹ்', 33 தடவை 'அல்லாஹு அக்பர்', 33 தடவை 'அல்ஹம்துலில்லாஹ்' கூறிவா! இம்மூன்றில் ஒன்றை 34 தடவை கூறிக்கொள்!" என்று சொன்னார்கள்.[47]

٥٧١ حَدَّثَنَا عَبْدُ اللَّهِ حَدَّثَنِي عَبْدُ الْأَعْلَى بْنُ حَمَّادٍ النَّرْسِيُّ حَدَّثَنَا دَاوُدُ بْنُ عَبْدِ الرَّحْمَنِ حَدَّثَنَا أَبُو عَبْدِ اللَّهِ مَسْلَمَةُ الرَّازِيُّ عَنْ أَبِي عَمْرٍو الْبَجَلِيِّ عَنْ عَبْدِ الْمَلِكِ بْنِ سُفْيَانَ الثَّقَفِيِّ رَضِيَ اللَّهُ عَنْهُ عَنْ أَبِي جَعْفَرٍ مُحَمَّدِ بْنِ عَلِيٍّ عَنْ مُحَمَّدِ ابْنِ الْحَنَفِيَّةِ عَنْ أَبِيهِ قَالَ: قَالَ رَسُولُ اللَّهِ ﷺ: إِنَّ اللَّهَ يُحِبُّ الْعَبْدَ الْمُؤْمِنَ الْمُفَتَّنَ التَّوَّابَ.

571 அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

(பாவங்களால்) குழப்பத்தில் ஆழ்த்தப்பட்டுப் பாவமீட்சி கோருகின்ற இறைநம்பிக்கையுள்ள அடியானை, திண்ணமாக அல்லாஹ் விரும்புகிறான்.

இதை முஹம்மது பின் அல்ஹனஃபிய்யா (ரஹ்) அவர்கள் தம் தந்தை அலீ (ரலி) அவர்களிடமிருந்து அறிவிக்கிறார்கள்.[48]

•ஹுதமா குலத்தினர் கவச ஆடைகள் செய்பவர்களாக இருந்தார்கள். எனவே அக்கவச ஆடைகள் 'ஹுதமிய்யா' எனப்பட்டன. (அந்நிஹாயா)

46. இது பலவீனமான அறிவிப்பாளர்தொடரில் அமைந்த ஹதீஸ் ஆகும். அலீ (ரலி) அவர்களிடமிருந்து கேட்ட ஒருவர் தமக்கு அறிவித்ததாக அப்துல்லாஹ் பின் யசார் அபீநஜீஹ் (ரஹ்) கூறுகிறார். அந்த ஒருவர் யாரென அறியப்படாததால் இது பலவீனமடைகிறது. இந்த ஹதீஸ் சுருக்கமாக நஸாயீ (3322, 3323), அபூதாவூத் (1815) ஆகிய நூல்களிலும் பதிவாகியுள்ளது.

47. இந்த ஹதீஸ் புகாரீ (5362), முஸ்லிம் (5274), திர்மிதீ (3330), அபூதாவூத் (2595), அபூயஃலா (578), இப்னு ஹிப்பான் (5529), அல்பஸ்ஸார் (878) ஆகிய நூல்களிலும் இடம்பெற்றுள்ளது. விரிவாக அறியப் பார்க்க: புகாரீ ஹதீஸ் எண்கள் - 3113, 3705, 5362, 6318, முஸ்லிம் 5273. மேலும் காண்க: பின்வரும் ஹதீஸ் எண்கள் - 702, 797, 949, 1085, 1166, 1185, 1244

48. இது பலவீனமான ஹதீஸாகும். இதன் அறிவிப்பாளர்தொடரில் ஆறாவது அறிவிப்பாளராக இடம்பெற்றுள்ள அபூ அப்தில்லாஹ் மஸ்லமா அர்ராஸீ என்பார் யார் என அறியப்படாதவர் ஆவார். ஐந்தாவது அறிவிப்பாளராக இடம்பெற்றுள்ள அபூஅம்ர் பஜலீ என்பாரை இமாம் இப்னு ஹிப்பான் (ரஹ்) அவர்கள், 'குறைபாடுடையவர்கள்' (அல்மஜ்ரூஹீன்) என்ற பட்டியலில் இடம்பெறச் செய்துள்ளார்கள். இவர் நம்பகமானவர்களின் பெயர்களைப் பயன்படுத்திப் புனைந்துரைக்கப்பட்ட செய்திகளை வெளியிடுவோர் என்பதும் இவர் மீதுள்ள மற்றொரு குற்றச்சாட்டு ஆகும். நான்காவது அறிவிப்பாளராக இடம்பெற்றுள்ள அப்துல்மலிக் பின் சுஃப்யான் அஸ்ஸகஃபீ என்பார் யாரென்றே அறியப்படாதவர் ஆவார். ஆகவே இது புனைந்துரைக்கப்பட்ட செய்தியாகும் என்றுகூடச் சொல்லலாம்.

572 அலீ (ரலி) அவர்கள் கூறியதாவது:

நான் அதிக அளவில் இச்சைக் கசிவு[49] ஏற்படும் ஆண்மகனாக இருந்தேன். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் மகள் (ஃபாத்திமா) என் மனைவியாக இருந்ததால், அவர்களிடம் இது குறித்துக் கேட்க வெட்கப்பட்டேன். எனவே, மிக்தாத் (ரலி) அவர்களிடம் (இதுகுறித்து நபியிடம் கேட்குமாறு) கூறியனுப்பினேன். அதன்படி அவரும் கேட்டார். அதற்கு நபி (ஸல்) அவர்கள், "அவர் தன் இனஉறுப்பைக் கழுவிவிட்டு, அங்கத் தூய்மை ('உளூ') செய்துகொள்ள வேண்டும். (குளிக்கத் தேவையில்லை)" என்று கூறினார்கள்.[50]

٥٧٢ حدثنا عَبْدُ اللهِ حَدَّثَنِي مُحَمَّدُ بْنُ عَبْدِ اللهِ بْنِ نُمَيْرٍ حَدَّثَنَا وَكِيعٌ حَدَّثَنَا الْأَعْمَشُ عَنِ الْمُنْذِرِ عَنْ مُحَمَّدِ بْنِ عَلِيٍّ عَنْ عَلِيٍّ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ: كُنْتُ رَجُلًا مَذَّاءً، فَكُنْتُ أَسْتَحِي أَنْ أَسْأَلَ رَسُولَ اللهِ ﷺ لِمَكَانِ ابْنَتِهِ فَأَمَرْتُ الْمِقْدَادَ فَسَأَلَهُ، فَقَالَ: يَغْسِلُ ذَكَرَهُ وَيَتَوَضَّأُ.

573 அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

என் சமுதாயத்தாருக்கு நான் சிரமம் கொடுத்துவிடுவேன் என்றில்லாவிட்டால், ஒவ்வொரு தொழுகையின்போதும், அவர்களைப் பல் துலக்கும்படி நான் கட்டளையிட்டிருப்பேன்.

இதை அலீ (ரலி), அபூ ராஃபிஉ (ரலி) ஆகிய இருவரும் அறிவிக்கின்றார்கள்.[51]

٥٧٣ حدثنا عَبْدُ اللهِ حَدَّثَنِي عُقْبَةُ بْنُ مُكْرَمٍ الْكُوفِيُّ حَدَّثَنَا يُونُسُ بْنُ بُكَيْرٍ حَدَّثَنَا مُحَمَّدُ بْنُ إِسْحَاقَ عَنْ سَعِيدِ بْنِ أَبِي سَعِيدٍ الْمَقْبُرِيِّ عَنْ أَبِي هُرَيْرَةَ وَعَنْ عُبَيْدِ اللهِ بْنِ أَبِي رَافِعٍ عَنْ أَبِيهِ عَنْ عَلِيٍّ رَضِيَ اللهُ عَنْهُ قَالَا: قَالَ رَسُولُ اللهِ ﷺ: لَوْلَا أَنْ أَشُقَّ عَلَى أُمَّتِي لَأَمَرْتُهُمْ بِالسِّوَاكِ عِنْدَ كُلِّ صَلَاةٍ.

574 அலீ (ரலி) அவர்கள் கூறியதாவது:

٥٧٤ حدثنا أَبُو بَكْرِ بْنُ عَيَّاشٍ حَدَّثَنَا مُغِيرَةُ بْنُ مِقْسَمٍ حَدَّثَنَا الْحَارِثُ الْعُكْلِيُّ عَنْ عَبْدِ اللهِ بْنِ نُجَيٍّ قَالَ: قَالَ عَلِيٌّ رَضِيَ اللهُ عَنْهُ: كَانَ لِي مِنْ رَسُولِ اللهِ ﷺ مَدْخَلَانِ بِاللَّيْلِ وَالنَّهَارِ وَكُنْتُ إِذَا دَخَلْتُ عَلَيْهِ وَهُوَ يُصَلِّي تَنَحْنَحَ فَأَتَيْتُهُ ذَاتَ لَيْلَةٍ، فَقَالَ: أَتَدْرِي مَا أَحْدَثَ الْمَلَكُ اللَّيْلَةَ؟ كُنْتُ أُصَلِّي فَسَمِعْتُ خَشْفَةً فِي الدَّارِ فَخَرَجْتُ

நபி (ஸல்) அவர்களிடம் வந்துபோவதற்காக இரவிலும் பகலிலும் எனக்கெனக் குறிப்பிட்ட இரண்டு நேரங்கள் இருந்தன. (அந்நேரங்களில்) நான் வரும்போது, அவர்கள் தொழுகையில் இருந்தால், (உள்ளே வர அனுமதிக்கும் முகமாக) கனைப்பார்கள். ஒரு நாள் இரவில் அவர்களிடம் நான் வந்தேன். அவர்கள் என்னிடம், "இன்றிரவு வானவர் (ஜிப்ரீல் (அலை) அவர்கள்) என்ன செய்தார்கள் என்று உமக்குத் தெரியுமா?" என்று கேட்டுவிட்டு, "நான் தொழுதுகொண்டிருந்தேன். வீட்டில் யாரோ

---

49. இச்சைக் கசிவு என்பதைக் குறிக்க அரபியில் 'மதீ' என்பர். தாம்பத்திய உறவுக்கு முற்படும்போதோ, பெண்களைப் பற்றி மோகத்துடன் அதிகமாகச் சிந்திக்கும்போதோ இன உறுப்பிலிருந்து வெளியாகும் பசை போன்று ஒட்டிக்கொள்ளும் இளகிய வெள்ளை நீரே 'மதீ' என்று கூறப்படும். இது விந்து போன்று துள்ளலுடன் வெளியாகாது. இது வெளிப்பட்டால் இனஉறுப்பையும் இதுபட்ட ஆடையையும் உடலில் பட்டிருந்தால் அந்த இடத்தையும் கழுவிக்கொள்ள வேண்டும். இதற்கும் சிறுநீரின் விதிமுறைகள் பொருந்தும் (முஃக்னீ).

50. இந்த ஹதீஸ் புகாரீ (132, 178, 269), முஸ்லிம் (508), திர்மிதீ (106), அஹ்மத்ஷாகிர் 451, 658), நஸாயீ (157), பைஹகீயின் ஸுனனுஸ் ஸஃகீர் (20), ஸுனனுல் குப்ரா (1/115), இப்னு குஸைமா (18), அபூஅவானா (591), அபூயஃலா (298), அஹ்மத்ஷாகிர் (451, 659), முஸ்னதுத் தயாலிஸீ (135), முஸன்னஃப் அப்திர் ரஸ்ஸாக் (604) உள்ளிட்ட நூல்களிலும் இடம்பெற்றுள்ளது. காண்க: பின்வரும் ஹதீஸ்கள் - 584, 626, 770, 782, 806, 814, 826-828, 848, 849, 861, 930, 960, 976, 978, 984, 1016, 1121, 1174.

51. இந்த ஹதீஸ் புகாரீ (887), முஸ்லிம் (422), திர்மிதீ (22), நஸாயீ (7), அபூதாவூத் (42), இப்னுமாஜா (263), தாரிமீ (680) ஆகிய நூல்களிலும் பதிவாகியுள்ளது.

فإذا جبريل عليه السلام، فقال: ما زلت هذه الليلة أنتظرك إن في بيتك كلبا فلم أستطع الدخول وإنا لا ندخل بيتا فيه كلب ولا جنب ولا تمثال.

٥٧٥ حدثنا أبو بكر بن عياش حدثنا أبو إسحاق عن شريح بن النعمان الهمداني عن علي بن أبي طالب رضي الله عنه قال: نهى رسول الله ﷺ أن يضحى بالمقابلة أو بمدابرة أو شرقاء أو خرقاء أو جدعاء.

٥٧٦ حدثنا جرير بن عبد الحميد عن منصور عن هلال عن وهب بن الأجدع عن علي رضي الله عنه قال: قال رسول الله ﷺ: لا يصلى بعد العصر إلا أن تكون الشمس بيضاء مرتفعة.

٥٧٧ حدثنا يحيى بن سعيد عن ابن عجلان حدثني إبراهيم بن عبد الله بن حنين عن أبيه عن ابن عباس عن علي رضي الله عنه قال: نهاني رسول الله ﷺ أن

நடமாடும் ஓசையைக் கேட்டேன் உடனே வெளியே வந்தேன். அங்கே ஜிப்ரீல் (அலை) அவர்கள் இருந்தார்கள். அப்போது அவர்கள் "இன்று இரவு உங்களை எதிர்பார்த்துக் காத்திருந்தேன் உங்கள் வீட்டில் ஒரு நாய் இருந்தது எனவே நான் உள்ளே வரஇயலவில்லை 'நாய், குளியல் கடமையானவர் மற்றும் உருவச் சிலைகள் உள்ள வீட்டில் (அருள் வானவர்களாகிய) நாங்கள் நுழைய மாட்டோம்' என்று சொன்னார்கள்" என அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் குறிப்பிட்டார்கள்.[52]

575 அலீ பின் அபீதாலிப் (ரலி) அவர்கள் கூறியதாவது:

காதின் முனைப் பகுதி துண்டிக்கப்பட்ட, அல்லது அடிப் பகுதி துண்டிக்கப்பட்ட, அல்லது இரு கூறாகக் கிழிக்கப்பட்ட, அல்லது துவாரமிடப்பட்ட, அல்லது காது, மூக்கு, உதடு உள்ளிட்டவை வெட்டப்பட்ட பிராணியை அறுத்துப் பலியிடுவதற்கு (குர்பானி கொடுப்பதற்கு) அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் தடைவிதித்தார்கள்.[53]

576 அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

சூரியன் (மறையாமல் வானில்) உயர்ந்து வெண்மையாக இருக்கும்போது தவிர, 'அஸ்ருக்குப் பின்னர் தொழ வேண்டாம்.

இதை அலீ (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.[54]

577 அலீ (ரலி) அவர்கள் கூறியதாவது:

நான் 'ருகூஉ'வில் குர்ஆன் ஓதுவதற்கும், தங்க மோதிரம் அணிவதற்கும், பட்டு கலந்த

---

52. இதன் அறிவிப்பாளர்தொடர் இடைமுறிவுற்றுள்ளதால் இது பலவீனமான செய்தியாகும். இதில் அப்துல்லாஹ் பின் நுஜய்ம் பின் ஸலமா என்பவர் இடம்பெற்றுள்ளார். இவர் விமர்சிக்கப்பட்டவர் என்பது ஒரு புறமிருக்க, இவர் அலீ (ரலி) அவர்களைச் சந்தித்தவருமல்லர். காண்க: முன்சென்ற ஹதீஸ் எண்கள் - 538, 564

53. இந்த ஹதீஸ் திர்மிதீ (1418), இப்னுமாஜா (3133), அபூதாவூத் (2422), நஸாயீ (4296-4301), இப்னுல் ஜாரூத் (882), பைஹகீயின் ஸுனனுஸ் ஸஃகீர் (1437), ஸுனனுல் குப்ரா (9/275), நஸாயீயின் ஸுனனுல் குப்ரா (3/55), தாரிமீ (2004), நஸாயீயின் ஸுனனுஸ் ஸுஃக்ரா (4296), ஹாகிம் (7638) ஆகிய நூல்களிலும் இடம்பெற்றுள்ளது. மேலும் காண்க: பின்வரும் ஹதீஸ் எண்கள் - 809, 1009, 1210

54. முன்சென்ற 105ஆவது ஹதீஸின் அடிக்குறிப்பு காண்க. இந்த ஹதீஸ் அபூதாவூத் (1082), இப்னு அபீஷைபா, நஸாயீ (569), அபூயஅலா (558), இப்னு குஸைமா (1284), இப்னு ஹிப்பான் (1572), பைஹகீயின் ஸுனனுல் குப்ரா (2/459) ஆகிய நூல்களிலும் இடம்பெற்றுள்ளது.

இந்த ஹதீஸ் 'அஸ்ருக்குப் பின் தொழ வேண்டாம்' என பொதுவாக வந்துள்ள ஆதாரபூர்வமான ஹதீஸ்களுக்கு எதிராக அமைந்துள்ளது. காண்க: ஸஹீஹுல் புகாரீ ஹதீஸ்கள் - 584, 586, 588, 1197; முஸ்லிம் - 1503; நஸாயீ 515, 558, 559, 563-565. எனினும் அன்றைய நிலையில் அஸர் தொழுகையை நேரம் பிந்தி தொழுதுகொண்டிருப்பவர், மக்காவில் மஸ்ஜிதுல் ஹராம் பள்ளிவாசலில் தொழுபவர் போன்றோருக்கு இந்த ஹதீஸ் பொருந்தக்கூடியதாக அமைந்துள்ளது.

أَقْرَأَ وَأَنَا رَاكِعٌ وَعَنْ خَاتَمِ الذَّهَبِ وَعَنِ الْقَسِّيِّ وَالْمُعَصْفَرِ.

٥٧٨ حَدَّثَنَا أَبُو مُعَاوِيَةَ حَدَّثَنَا الْأَعْمَشُ عَنِ الْحَكَمِ بْنِ عُتَيْبَةَ عَنْ عَبْدِ الرَّحْمَنِ بْنِ أَبِي لَيْلَى قَالَ: جَاءَ أَبُو مُوسَى إِلَى الْحَسَنِ بْنِ عَلِيٍّ يَعُودُهُ، فَقَالَ لَهُ عَلِيٌّ رَضِيَ اللَّهُ عَنْهُ: أَعَائِدًا جِئْتَ أَمْ شَامِتًا قَالَ لَا بَلْ عَائِدًا قَالَ فَقَالَ لَهُ عَلِيٌّ رَضِيَ اللَّهُ عَنْهُ: إِنْ كُنْتَ جِئْتَ عَائِدًا فَإِنِّي سَمِعْتُ رَسُولَ اللَّهِ ﷺ يَقُولُ: إِذَا عَادَ الرَّجُلُ أَخَاهُ الْمُسْلِمَ مَشَى فِي خِرَافَةِ الْجَنَّةِ حَتَّى يَجْلِسَ فَإِذَا جَلَسَ غَمَرَتْهُ الرَّحْمَةُ فَإِنْ كَانَ غُدْوَةً صَلَّى عَلَيْهِ سَبْعُونَ أَلْفَ مَلَكٍ حَتَّى يُمْسِيَ وَإِنْ كَانَ مَسَاءً صَلَّى عَلَيْهِ سَبْعُونَ أَلْفَ مَلَكٍ حَتَّى يُصْبِحَ

٥٧٩ حَدَّثَنَا عَبْدُ اللَّهِ حَدَّثَنَا سُوَيْدُ بْنُ سَعِيدٍ فِي سَنَةِ سِتٍّ وَعِشْرِينَ وَمِائَتَيْنِ حَدَّثَنَا مُسْلِمُ بْنُ خَالِدٍ الزَّنْجِيُّ قَالَ أَبُو عَبْدِ الرَّحْمَنِ: قُلْتُ لِسُوَيْدٍ: وَلِمَ سُمِّيَ الزَّنْجِيَّ قَالَ كَانَ شَدِيدَ السَّوَادِ عَنْ عَبْدِ الرَّحْمَنِ بْنِ الْحَارِثِ عَنْ زَيْدِ بْنِ عَلِيِّ بْنِ الْحُسَيْنِ عَنْ أَبِيهِ عَنْ عُبَيْدِ اللَّهِ بْنِ أَبِي رَافِعٍ عَنْ عَلِيِّ بْنِ أَبِي طَالِبٍ رَضِيَ اللَّهُ عَنْهُ أَنَّ رَسُولَ اللَّهِ ﷺ وَقَفَ بِعَرَفَةَ وَهُوَ مُرْدِفٌ أُسَامَةَ بْنَ زَيْدٍ فَقَالَ: هَذَا مَوْقِفٌ وَكُلُّ عَرَفَةَ مَوْقِفٌ ثُمَّ دَفَعَ فَجَعَلَ يَسِيرُ

பஞ்சாடை, செம்மஞ்சள் நிறமேற்றப்பட்ட ஆடைகள் ஆகியவற்றை அணிவதற்கும், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் தடைவிதித்தார்கள்.[55]

578 அப்துர்ரஹ்மான் பின் அபீ லைலா (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

அபூமூசா (ரலி) அவர்கள், (நோயுற்றிருந்த) ஹசன் பின் அலீ (ரலி) அவர்களை உடல் நலம் விசாரிக்க வந்திருந்தார்கள். அப்போது அவர்களிடம் அலீ (ரலி) அவர்கள், "உடல் நலம் விசாரிக்க வந்தீர்களா? அல்லது தற்செயலாக வந்தீர்களா?" என்று கேட்டார்கள். "இல்லை. உடல்நலம் விசாரிக்கவே வந்தேன்" என்று அபூமூசா (ரலி) அவர்கள் கூறினார்கள்.

உடனே அவர்களிடம் அலீ (ரலி) அவர்கள் கூறினார்கள்: "நீங்கள் உடல்நலம் விசாரிக்க வந்திருந்தால் (கேளுங்கள்): 'ஒருவர் முஸ்லிமான தன் சகோதரனை உடல்நலம் விசாரிக்க வந்தால், அவர் (நோயாளியின் அருகே வந்து) அமரும் வரை சொர்க்கத் தோட்டங்களில் நடந்தவர் ஆவார். அவர் அமர்ந்துவிட்டால், அவரை இறையருள் சூழ்ந்துகொள்ளும். இது காலையில் நடந்தால், மாலைவரை அவருக்காக எழுபதாயிரம் வானவர்கள் பிரார்த்திப்பார்கள். மாலை நேரத்தில் நடந்தால், (மறுநாள்) காலைவரை எழுபதாயிரம் வானவர்கள் அவருக்காகப் பிரார்த்திப்பார்கள்' என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறியதைக் கேட்டுள்ளேன்."[56]

579 அலீ (ரலி) அவர்கள் கூறியதாவது:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அரஃபாவில் தங்கினார்கள் (பின்னர் புறப்பட்டார்கள். ஒட்டகத்தின் மீது) தமக்குப் பின்னால் உசாமா பின் ஸைத் (ரலி) அவர்களை அமரவைத்துக்கொண்டார்கள். "இது தங்குமிடம். அரஃபா முழுவதும்

55. இந்த ஹதீஸ், முஸ்லிம் (4220, 4222), அல்பஸ்ஸார் (918), நஸாயீ (1030-1034), அபூதாவூத் (288), அபூஅவானா (1164) ஆகிய நூல்களிலும் பதிவாகியுள்ளது. பார்க்க: முன்சென்ற ஹதீஸ் எண் - 567

56. இந்தக் கருத்தமைந்த ஹதீஸ் திர்மிதீ (891), ஹாகிம் (1219), அல்பஸ்ஸார் (620), இப்னுமாஜா (1432), அபூதாவூத் (2694), முஸன்னஃப் இப்னு அபீஷைபா (10940), பைஹகீயின் சுனனுல் குப்ரா (3/380) உள்ளிட்ட நூல்களிலும் இடம்பெற்றுள்ளது. சிலவற்றுள் முதலில் வந்துள்ள நிகழ்ச்சியின்றி நபி (ஸல்) அவர்களின் கூற்று மட்டும் இடம்பெற்றுள்ளது. இந்த ஹதீஸ் அலீ (ரலி) அவர்களின் கூற்றா (மவ்கூஃப்), அல்லது நபிமொழியா (மர்ஃபூஉ) என்பதில் அறிஞர்களிடையே கருத்து வேறுபாடு உள்ளது. அலீ அவர்களின் கூற்று என்பதே சரியான தகவல் ஆகும். (ஷுஐப்) அல்அர்னாஊத் குழுவினரின் அடிக்குறிப்பு.

الْعَنَقَ وَالنَّاسُ يَضْرِبُونَ يَمِينًا وَشِمَالاً وَهُوَ يَلْتَفِتُ وَيَقُولُ: السَّكِينَةَ أَيُّهَا النَّاسُ السَّكِينَةَ أَيُّهَا النَّاسُ حَتَّى جَاءَ الْمُزْدَلِفَةَ فَجَمَعَ بَيْنَ الصَّلاَتَيْنِ ثُمَّ وَقَفَ بِالْمُزْدَلِفَةِ فَأَرْدَفَ الْفَضْلَ بْنَ عَبَّاسٍ ثُمَّ وَقَفَ عَلَى قُزَحَ، فَقَالَ: هَذَا الْمَوْقِفُ وَكُلُّ الْمُزْدَلِفَةِ مَوْقِفٌ ثُمَّ دَفَعَ فَجَعَلَ يَسِيرُ الْعَنَقَ وَالنَّاسُ يَضْرِبُونَ يَمِينًا وَشِمَالاً وَهُوَ يَلْتَفِتُ وَيَقُولُ: السَّكِينَةَ أَيُّهَا النَّاسُ السَّكِينَةَ أَيُّهَا النَّاسُ فَلَمَّا وَقَفَ عَلَى مُحَسِّرٍ قَرَعَ رَاحِلَتَهُ فَخَبَّتْ بِهِ حَتَّى خَرَجَتْ مِنَ الْوَادِي ثُمَّ سَارَ مَسِيرَتَهُ حَتَّى أَتَى الْجَمْرَةَ ثُمَّ دَخَلَ الْمَنْحَرَ، فَقَالَ: هَذَا الْمَنْحَرُ وَكُلُّ مِنًى مَنْحَرٌ، فَذَكَرَ مِثْلَ حَدِيثِ أَحْمَدَ بْنِ عَبْدَةَ عَنِ الْمُغِيرَةِ بْنِ عَبْدِ الرَّحْمَنِ مِثْلَهُ أَوْ نَحْوَهُ.

٥٨. حدثنا عَبْدُ اللهِ حَدَّثَنِي إِسْمَاعِيلُ أَبُو مَعْمَرٍ حَدَّثَنَا إِسْمَاعِيلُ بْنُ عَيَّاشٍ عَنْ زَيْدِ بْنِ جَبِيرَةَ عَنْ دَاوُدَ بْنِ الْحُصَيْنِ عَنْ عُبَيْدِ اللهِ بْنِ أَبِي رَافِعٍ عَنْ عَلِيٍّ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ قَالَ رَسُولُ اللهِ ﷺ: لاَ يُبْغِضُ الْعَرَبَ إِلاَّ مُنَافِقٌ.

தங்குமிடம்தான்" என்று கூறினார்கள். பின்னர் விரைந்து புறப்பட்டார்கள். மக்களும் (விரைவாகப் புறப்பட எண்ணி) இடப் புறமாகவும் வலப் புறமாகவும் விழுந்தடித்துக்கொண்டு புறப்பட்டனர். நபி (ஸல்) அவ்ர்கள் மக்களை நோக்கித் திரும்பி, "மக்களே! அமைதி. மக்களே! அமைதி" என்றார்கள்.

பின்னர் 'முஸ்தலிஃபா'வுக்கு வந்தார்கள். (மஃக்ரிப், இஷா ஆகிய) இரண்டு தொழுகைகளைச் சேர்த்துத் தொழுதார்கள். பின்னர், 'முஸ்தலிஃபா'வில் தங்கினார்கள். (அங்கிருந்து புறப்பட்டபோது) தமக்குப் பின்னால் (வாகனத்தில்) ஃபள்ல் பின் அப்பாஸ் (ரலி) அவர்களை அமர்த்திக் கொண்டார்கள். பின்னர் (அங்குள்ள) 'குஸஹ்' எனும் இடத்திற்கு வந்து, "இது தங்குமிடமாகும். 'முஸ்தலிஃபா' முழுவதும் தங்குமிடம்தான்" என்றார்கள்.

பின்னர் விரைந்து புறப்பட்டார்கள். மக்களும் (விரைவாகப் புறப்பட எண்ணி) இடப் புறமாகவும் வலப் புறமாகவும் விழுந்தடித்தவர்களாகப் புறப்பட்டனர். அவர்களை நோக்கித் திரும்பிய நபி (ஸல்) அவர்கள், "மக்களே! அமைதி. மக்களே! அமைதி" என்றார்கள். பின்னர் (மினாவில் உள்ள) 'முஹஸ்ஸிர்' பகுதிக்கு வந்து தங்கியிருந்தபோது, தமது ஒட்டகத்தை மெதுவாக அடித்தார்கள். அது அவர்களுக்குக் கீழ்ப்படிந்து அந்தக் கணவாயிலிருந்து புறப்பட்டது. பின்னர் தமது பயணத்தைத் தொடர்ந்து, (கல்லெறியும்) 'ஜம்ரா' பகுதிக்கு வந்தார்கள். பின்னர் அறுக்குமிடம் சென்றார்கள். "இது அறுக்குமிடம். 'மினா' முழுதும் அறுக்குமிடம்தான்" என்றார்கள்.[57]

580 *அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:*

நயவஞ்சகனைத் தவிர வேறெவரும் அரபியரைக் கோபப்படுத்தமாட்டார்.

இதை அலீ (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.[58]

---

57. இது பலவீனமான அறிவிப்பாளர்தொடரில் அமைந்த ஹதீஸ் ஆகும். இதில் இடம்பெறும் முஸ்லிம் பின் காலித் அஸ்ஸன்ஜீ (ரஹ்) அவர்கள், இமாம் ஷாஃபிஈ (ரஹ்) அவர்களின் ஆசான் ஆவார். இவர் உண்மையாளராயிருந்தும் ஹதீஸ் அறிவிக்கும்போது தவறுதலாகவும் சந்தேகத்துடனும் அறிவிப்பவர் ஆவார். எந்த அளவுக்கெனில், இமாம் புகாரீ (ரஹ்) அவர்கள் இவரைப் பற்றிக் கூறும்போது 'ஹதீஸ் கலையில் மறுக்கத் தக்கவர்' என்று குறிப்பிடுகிறார்கள். இமாம் இப்னுல் மதீனீ (ரஹ்) அவர்கள், இவர் ஒரு பொருட்டற்றவர் என்றும், இமாம் நசயீ (ரஹ்) அவர்கள், இவரை பலவீனமானவர் என்றும் கூறியுள்ளனர். எனவே அறிஞர் அர்னாஊத் அவர்கள் இதைப் பலவீனமான ஹதீஸ் என்று கூறினாலும், இது முஸ்லிம் 2334ஆவது ஹதீஸில் விரிவாக வந்துள்ளதாலும் முஸ்னத் ஹதீஸ் எண்கள் 494, 530, 532 ஆகியவற்றில் பதிவாகியுள்ளதாலும் இதை ஷுஐப் அல்அர்னாஊத் அடங்கிய அறிஞர் குழுவினர் 'ஹசன்' தரத்தில் அமைந்த ஹதீஸ் என்று கூறுகிறார்கள்.

58. இதன் அறிவிப்பாளர்தொடரில் நான்காவது அறிவிப்பாளராக இடம்பெறும் ஸைத் பின் ஜுபைரா என்பார் பலவீனமானவர்

581 இப்ராஹீம் அத்-தைமீ (ரஹ்) அவர்கள், தம் தந்தை (யஸீது பின் ஷரீக் பின் தாரிக் (ரஹ்) அவர்கள் கூறியதாக அறிவிப்பதாவது:

٥٨١ حدثنا أبو معاوية حدثنا الأعمش عن إبراهيم التيمي عن أبيه قال: خطبنا علي رضي الله عنه فقال: من زعم أن عندنا شيئا نقرؤه إلا كتاب الله وهذه الصحيفة صحيفة فيها أسنان الإبل وأشياء من الجراحات فقد كذب قال وفيها قال رسول الله ﷺ: المدينة حرم ما بين عير إلى ثور فمن أحدث فيها حدثا أو آوى محدثا فعليه لعنة الله والملائكة والناس أجمعين لا يقبل الله منه يوم القيامة عدلا ولا صرفا ومن ادعى إلى غير أبيه أو تولى غير مواليه فعليه لعنة الله والملائكة والناس أجمعين لا يقبل الله منه يوم القيامة صرفا ولا عدلا وذمة المسلمين واحدة يسعى بها أدناهم.

(ஒருமுறை) அலீ (ரலி) அவர்கள் எங்களுக்கு உரை நிகழ்த்தினார்கள். அப்போது அவர்கள் கூறியதாவது: நாம் ஓதிவருகின்ற இந்த இறைவேதத்தையும், இந்த ஏட்டையும் தவிர வேறு (ஏடு) எதுவும் எங்களிடம் இருப்பதாக யார் கருதுகின்றாரோ, அவர் பொய்யுரைக்கின்றார். இந்த ஏட்டில் (ஸகாத்) ஒட்டகங்களுக்கான வயது வரம்புகள் காயங்க(ளுக்கான இழப்பீடுக)ள் பற்றிய விவரங்களே உள்ளன.

மேலும் இந்த ஏட்டில், நபி (ஸல்) அவர்கள் கூறியதாக பின்வரும் தகவல்களும் உள்ளன. மதீனா நகரம், 'அய்ர்' மலையிலிருந்து 'ஸவ்ர்' மலைவரை புனிதப் பகுதியாகும். இ(ந்த நகரத்)தில் யாரேனும் புதிய நடைமுறை ஒன்றை (மார்க்கத்தின் பெயரால்) உருவாக்கினால், அல்லது அவ்வாறு புதிதாக உருவாக்குபவனுக்கு ஆதரவு அளித்தால், அவர்மீது அல்லாஹ்வின் சாபமும் வானவர்களின் சாபமும் மக்களனைவரின் சாபமும் உண்டாகும்! மறுமைநாளில் அவரிடமிருந்து கடமையான வழிபாடோ உபரியான வழிபாடோ ஏற்கப்படமாட்டாது. எவர் தன் தந்தையல்லாத ஒருவரைத் தந்தை என்று வாதிடுகின்றாரோ, அல்லது தன்னை விடுதலை செய்த உரிமையாளர் அல்லாத வேறு எவரையும் வாரிசாக்கிக்கொள்கின்றாரோ, அவர்மீது அல்லாஹ்வின் சாபமும் வானவர்களின் சாபமும் மக்களனைவரின் சாபமும் உண்டாகும்! மறுமைநாளில் அவரிடமிருந்து கடமையான வழிபாடோ, உபரியான வழிபாடோ ஏற்கப்படமாட்டாது. முஸ்லிம்கள் அளிக்கும் அடைக்கலம் (எதுவாயிருப்பினும், அது) ஒன்றுதான். அவர்களில் கடைநிலையில் உள்ளவர்கூட அடைக்கலம் தர முன்வரலாம்.[89]

٥٨٢ حدثنا أبو معاوية حدثنا الأعمش عن خيثمة عن سويد بن غفلة قال قال علي رضي الله عنه: إذا حدثتكم عن رسول الله ﷺ حديثا فلأن أخر من السماء أحب إلي من أن أكذب عليه وإذا حدثتكم

582 அலீ (ரலி) அவர்கள் கூறியதாவது:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களைப் பற்றி நான் உங்களுக்கு அறிவிக்கிறேன் என்றால், (உண்மையில் அவர்கள் சொன்னதையே அறிவிக்கிறேன். ஏனெனில்,)

---

*அறிவிப்பாளர் ஆவார் இவரை இமாம் புகாரீ (ரஹ்) அவர்கள் 'ஹதீஸ்களையில் மறுக்கப்பட்டவர்' என்றும் இமாம் அபூஹாத்திம் (ரஹ்) அவர்கள் ஹதீஸ்களையில் மறுக்கத் தக்கவர். அதனால் இவரது ஹதீஸ்கள் ஏற்கப்படமாட்டா என்றும் கூறியுள்ளனர். எனவே இது பலவீனமான ஹதீஸாகும்

89. இந்த ஹதீஸ், புகாரீ (1870, 3172, 3180, 6755, 7300), முஸ்லிம் (3024), நஸாயீ (4653), முஸன்னஃப் இப்னு அபீஷைபா (12/454, 456), திர்மிதீ (2053), அபூதாவூத் (1739), அபூயஃலா (280), இப்னு ஹிப்பான் (3786, 3787) உள்ளிட்ட நூல்களிலும் கூடுதல் குறைவான செய்திகளுடன் இடம்பெற்றுள்ளது. பார்க்க: முன்சென்ற ஹதீஸ் எண் - 565 மற்றும் அதன் அடிக்குறிப்பு

عَنْ غَيْرِهِ فَإِنَّمَا أَنَا رَجُلٌ مُحَارِبٌ وَالْحَرْبُ خَدْعَةٌ سَمِعْتُ رَسُولَ اللَّهِ ﷺ يَقُولُ: يَخْرُجُ فِي آخِرِ الزَّمَانِ أَقْوَامٌ أَحْدَاثُ الْأَسْنَانِ سُفَهَاءُ الْأَحْلَامِ يَقُولُونَ مِنْ قَوْلِ خَيْرِ الْبَرِيَّةِ لَا يُجَاوِزُ إِيمَانُهُمْ حَنَاجِرَهُمْ فَأَيْنَمَا لَقِيتُمُوهُمْ فَاقْتُلُوهُمْ فَإِنَّ قَتْلَهُمْ أَجْرٌ لِمَنْ قَتَلَهُمْ يَوْمَ الْقِيَامَةِ.

٥٨٣ حدثنا أَبُو مُعَاوِيَةَ حَدَّثَنَا الْأَعْمَشُ عَنْ مُسْلِمٍ عَنْ شُتَيْرِ بْنِ شَكَلٍ عَنْ عَلِيٍّ رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ: قَالَ رَسُولُ اللَّهِ ﷺ يَوْمَ الْأَحْزَابِ: شَغَلُونَا عَنْ صَلَاةِ الْوُسْطَى صَلَاةِ الْعَصْرِ مَلَأَ اللَّهُ قُبُورَهُمْ وَبُيُوتَهُمْ نَارًا ثُمَّ صَلَّاهَا بَيْنَ الْعِشَاءَيْنِ بَيْنَ الْمَغْرِبِ وَالْعِشَاءِ.

٥٨٤ حدثنا أَبُو مُعَاوِيَةَ حَدَّثَنَا الْأَعْمَشُ عَنِ الْمُنْذِرِ أَبِي يَعْلَى عَنْ مُحَمَّدِ ابْنِ الْحَنَفِيَّةِ عَنْ عَلِيٍّ رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ: كُنْتُ رَجُلًا مَذَّاءً فَاسْتَحْيَيْتُ أَنْ أَسْأَلَ النَّبِيَّ ﷺ عَنِ الْمَذْيِ قَالَ فَقُلْتُ لِلْمِقْدَادِ: سَلْ لِي رَسُولَ اللَّهِ ﷺ عَنِ الْمَذْيِ قَالَ فَسَأَلَهُ قَالَ فَقَالَ رَسُولُ اللَّهِ ﷺ: فِيهِ الْوُضُوءُ.

அவர்கள் மீது பொய்யுரைப்பதைவிட, நான் வானத்திலிருந்து விழுந்துவிடுவது எனக்கு உவப்பானதாகும். அவர்களல்லாத மற்றதைப் பற்றி நான் அறிவிப்பேன் எனில், நானும் போர் செய்யும் ஒருவன்தான். போர் (என்பதே) சூழ்ச்சிதான். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறியதை நான் கேட்டுள்ளேன்: "இறுதிக் காலத்தில் சிலர் தோன்றுவார்கள். அவர்கள் இளம் பருவத்தினராயிருப்பர்; அறிவு முதிர்ச்சியற்றவர்களாயிருப்பர். அவர்கள் பூமியிலேயே மிகச் சிறந்த சொல்லை (குர்ஆன் வசனங்களை) எடுத்தாள்வார்கள். (அதில் நல்ல நோக்கம் இருக்காது.) ஆனால், அவர்களின் இறைநம்பிக்கையானது, அவர்களின் தொண்டைக் குழியைத் தாண்டி (உள்ளே) செல்லாது. அவர்களை நீங்கள் எங்கு கண்டாலும், அவர்களுடன் போரிடுங்கள். (அந்தப் போரில்) அவர்களைக் கொன்றவருக்கு மறுமைநாளில் மிகப்பெரும் நன்மையுண்டு."[60]

583 அலீ (ரலி) அவர்கள் கூறியதாவது:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், அஹ்ஸாப் (எனும் அகழ்ப்) போரின்போது, "(எதிரிகளான) அவர்கள் நடுத் தொழுகையான அஸ்ர் தொழுகையிலிருந்து நமது கவனத்தைத் திருப்பிவிட்டார்கள். அல்லாஹ் அவர்களுடைய சவக் குழிகளையும் வீடுகளையும் நெருப்பால் நிரப்புவானாக!" என்று கூறிவிட்டுப் பிறகு அத்தொழுகையை இரு இரவுத் தொழுகைகளான மஃக்ரிபுக்கும் இஷாவிற்கும் இடைப்பட்ட நேரத்தில் தொழுதார்கள்."[61]

584 அலீ (ரலி) அவர்கள் கூறியதாவது:

நான் அதிக அளவில் இச்சைக் கசிவு ஏற்படும் ஆடவனாக இருந்தேன். இச்சைக் கசிவு பற்றி நபி (ஸல்) அவர்களிடம் கேட்க நான் வெட்கப்பட்டேன். எனவே, "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் இச்சைக் கசிவு பற்றி எனக்காக நீங்கள் கேளுங்கள்" என மிக்தாத் (ரலி) அவர்களிடம் கூறினேன். எனவே, அவர் நபி (ஸல்) அவர்களிடம் கேட்டார். அதற்கு அவர்கள், "(இது ஏற்படும் சந்தர்ப்பத்)தில் அங்கத் தூய்மை (உளூ) மட்டும் செய்ய வேண்டும்" என்று கூறினார்கள்.[62]

---

60. இந்த ஹதீஸ் புகாரீ (3611, 5057, 6930), முஸ்லிம் (1932), அபூதாவூத் (4138), நஸாயீ (4033), அஹ்மத் (485, 569), அபூயஃலா (261), பைஹகீயின் சுனனுல் குப்ரா (8/170) உள்ளிட்ட நூல்களிலும் பதிவாகியுள்ளது.

61. இந்த ஹதீஸ் முன்னர் 567ஆம் எண்ணில் சென்றுள்ளது. இந்த ஹதீஸின்படி 'அஸ்ர் தொழுகைதான் நடுத் தொழுகை' எனத் தெளிவாக விளங்குகிறது. இதற்கு முஸ்லிம் (1105, 1108), திர்மிதீ (166), இப்னுமாஜா (676) உள்ளிட்ட நூல்களிலும் சான்றுகள் உள்ளன.

62. காண்க: முன்சென்ற ஹதீஸ் - 572 மற்றும் அதன் அடிக்குறிப்பு.

585 அலீ (ரலி) அவர்கள் கூறியதாவது:

ஒருவர் (தொழுகையில்) 'ருகூஉ' செய்யும் போது, அல்லது 'சஜ்தா' செய்யும்போது, (குர்ஆன்) ஓதுவதற்கு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் தடைவிதித்தார்கள்.[63]

٥٨٥ حدثنا عَبْدُ اللهِ بْنُ نُمَيْرٍ حَدَّثَنَا حَجَّاجٌ عَنْ أَبِي إِسْحَاقَ عَنِ الْحَارِثِ عَنْ عَلِيٍّ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ: نَهَى رَسُولُ اللهِ ﷺ أَنْ يَقْرَأَ الرَّجُلُ وَهُوَ رَاكِعٌ أَوْ سَاجِدٌ.

586 அலீ (ரலி) அவர்கள் கூறியதாவது:

நான் (நபி (ஸல்) அவர்களிடம்), "அல்லாஹ்வின் தூதரே! (பனூ ஹாஷிம் குலத்தாராகிய) நம்மை விட்டு விட்டு, குறைஷியரின் (மற்ற கிளைப் பெண்களை மணமுடிப்பதன்) மீது ஆர்வம் காட்டுகின்றீர்களே, காரணமென்ன?" என்று கேட்டேன். அதற்கவர்கள், "உங்களிடம் (நம் பனூ ஹாஷிம் குலப் பெண்கள் பற்றிய செய்தி) ஏதேனும் உள்ளதா?" என்று கேட்டார்கள். அதற்கு நான், "ஆம்; ஹம்ஸாவின் மகள் (பற்றிய செய்தி இருக்கிறது)" என்றேன். அதற்கு நபி (ஸல்) அவர்கள், "அவள் நான் மணமுடிக்கத் தகாதவள் ஆவாள். ஏனெனில் அவள், பால்குடி உறவு முறையில், என் சகோதரர் (ஹம்ஸாவின்) மகள் ஆவாள்" என்று கூறினார்கள்.[64]

٥٨٦ حدثنا أَبُو مُعَاوِيَةَ عَنِ الْأَعْمَشِ عَنْ سَعْدِ بْنِ عُبَيْدَةَ عَنْ أَبِي عَبْدِ الرَّحْمَنِ السُّلَمِيِّ عَنْ عَلِيٍّ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ: قُلْتُ: يَا رَسُولَ اللهِ مَا لَكَ تَنَوَّقُ فِي قُرَيْشٍ وَتَدَعُنَا؟ قَالَ: وَعِنْدَكُمْ شَيْءٌ؟ قَالَ قُلْتُ: نَعَمْ ابْنَةُ حَمْزَةَ، فَقَالَ: إِنَّهَا لَا تَحِلُّ لِي هِيَ ابْنَةُ أَخِي مِنَ الرَّضَاعَةِ.

٥٨٧ حدثنا أَبُو مُعَاوِيَةَ حَدَّثَنَا الْأَعْمَشُ عَنْ سَعْدِ بْنِ عُبَيْدَةَ عَنْ أَبِي عَبْدِ الرَّحْمَنِ السُّلَمِيِّ عَنْ عَلِيٍّ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ: كَانَ رَسُولُ اللهِ ﷺ ذَاتَ يَوْمٍ جَالِسًا وَفِي يَدِهِ عُودٌ يَنْكُتُ بِهِ قَالَ فَرَفَعَ رَأْسَهُ فَقَالَ: مَا مِنْكُمْ مِنْ نَفْسٍ إِلَّا وَقَدْ عُلِمَ مَنْزِلُهَا مِنَ الْجَنَّةِ وَالنَّارِ قَالَ فَقَالُوا: يَا رَسُولَ اللهِ فَلِمَ نَعْمَلُ؟ قَالَ: اعْمَلُوا فَكُلٌّ مُيَسَّرٌ لِمَا خُلِقَ لَهُ ﴿أَمَّا مَنْ أَعْطَى وَاتَّقَى وَصَدَّقَ بِالْحُسْنَى

587 அலீ (ரலி) அவர்கள் கூறியதாவது:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் ஒருநாள் உட்கார்ந்த நிலையில், தம் கையில் வைத்திருந்த குச்சியால் தரையில் குத்தி கோடிட்டுக்கொண்டிருந்தார்கள். பின்னர் தம் தலையை உயர்த்தி, "உங்களுள் எவருக்கும் அவரின் இருப்பிடமான சொர்க்கம் அல்லது நரகம் பற்றி முடிவு செய்யப்படாமல் இல்லை" என்றார்கள். அப்போது மக்கள், "அல்லாஹ்வின் தூதரே! (அப்படியானால்) நாம் எதற்காக நற்செயல் புரியவேண்டும்?" என்று கேட்டார்கள். உடனே அவர்கள், "நீங்கள் (தொடர்ந்து) செயல்படுங்கள். எதற்காகப் படைக்கப்பட்டுள்ளனரோ, அதற்குரிய வழி அனைவருக்கும் இலகுவாக்கப்பட்டுள்ளது

63. இதன் அறிவிப்பாளர்தொடரில் இரண்டாவது அறிவிப்பாளராக ஹாரிஸ் அல்அஃவர் என்பார் இடம்பெற்றுள்ளார். இவர் பலவீனமானவர் ஆவார். எனினும், இந்தக் கருத்தமைந்த ஹதீஸ், முஸ்லிம் ஹதீஸ் எண் 826 முதல் 829வரை சரியான அறிவிப்பாளர்தொடரில் இடம்பெற்றுள்ளது. எனவே, இது 'ஹசனுன் லிஃகைரிஹீ' (பிற சான்றுகளால் 'ஹசன்' தரத்தை அடையும்) ஹதீஸ் ஆகும்.

64. இந்த ஹதீஸ், முஸ்லிம் (2863), நசாயீ அல்குப்ரா (587), அபூயஅலா (265), இப்னு அபீஷைபா (17320), பைஹகீயின் ஷுஅபுல் ஈமான் (7175), தப்ரானீயின் அல்முஅஜமுல் கபீர் (2851), அபூஅவானா (3561) உள்ளிட்ட நூல்களிலும் இடம்பெற்றுள்ளது.

ஹம்ஸா (ரலி) அவர்கள், நபி (ஸல்) அவர்களின் சிறிய தந்தை ஆவார். ஹம்ஸா (ரலி) அவர்களின் மகளை மணப்பதற்கு நபி (ஸல்) அவர்களுக்குத் தடையில்லை. எனினும், நபி (ஸல்) அவர்களும் அவர்களைவிட இரண்டு வயது மூத்தவரான ஹம்ஸா (ரலி) அவர்களும் குழந்தைப் பருவத்தில் அபூலஹபால் விடுதலை செய்யப்பட்ட ஸுவைபா என்ற அடிமைப் பெண்ணிடம் பால் குடித்துள்ளனர். எனவே, ஹம்ஸா (ரலி) அவர்கள் நபி (ஸல்) அவர்களுக்குப் பால்குடி வகையில் சகோதரர் ஆகிவிடுகிறார்கள். பால்குடிச் சகோதரரின் மகளை மணப்பது தடை செய்யப்பட்டுள்ளது.

لِسَنُيَسِّرُهُ لِلْيُسْرَى وَأَمَّا مَنْ بَخِلَ وَاسْتَغْنَى وَكَذَّبَ بِالْحُسْنَى فَسَنُيَسِّرُهُ لِلْعُسْرَى﴾.

٥٨٨ حدثنا أَبُو مُعَاوِيَةَ حَدَّثَنَا الْأَعْمَشُ عَنْ سَعْدِ بْنِ عُبَيْدَةَ عَنْ أَبِي عَبْدِ الرَّحْمَنِ السُّلَمِيِّ عَنْ عَلِيٍّ رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ: بَعَثَ رَسُولُ اللَّهِ ﷺ سَرِيَّةً وَاسْتَعْمَلَ عَلَيْهِمْ رَجُلاً مِنَ الْأَنْصَارِ قَالَ فَلَمَّا خَرَجُوا قَالَ وَجَدَ عَلَيْهِمْ فِي شَيْءٍ فَقَالَ قَالَ لَهُمْ: أَلَيْسَ قَدْ أَمَرَكُمْ رَسُولُ اللَّهِ ﷺ أَنْ تُطِيعُونِي؟ قَالَ قَالُوا: بَلَى قَالَ فَقَالَ: اجْمَعُوا حَطَبًا ثُمَّ دَعَا بِنَارٍ فَأَضْرَمَهَا فِيهِ ثُمَّ قَالَ: عَزَمْتُ عَلَيْكُمْ لَتَدْخُلُنَّهَا قَالَ فَهَمَّ الْقَوْمُ أَنْ يَدْخُلُوهَا قَالَ فَقَالَ لَهُمْ شَابٌّ مِنْهُمْ: إِنَّمَا فَرَرْتُمْ إِلَى رَسُولِ اللَّهِ ﷺ مِنَ النَّارِ فَلَا تَعْجَلُوا حَتَّى تَلْقَوْا النَّبِيَّ ﷺ فَإِنْ أَمَرَكُمْ أَنْ تَدْخُلُوهَا فَادْخُلُوا، قَالَ فَرَجَعُوا إِلَى النَّبِيِّ ﷺ فَأَخْبَرُوهُ فَقَالَ لَهُمْ: لَوْ دَخَلْتُمُوهَا مَا خَرَجْتُمْ مِنْهَا أَبَدًا إِنَّمَا الطَّاعَةُ فِي الْمَعْرُوفِ.

(என்று கூறிவிட்டு, கீழ்வரும் குர்ஆன் வசனத்தை ஓதினார்கள்:) 'உங்களுள் எவர் தானம் செய்து, (அல்லாஹ்வை) அஞ்சி, (இந்த மார்க்கத்தில் உள்ள) நன்மையானவற்றை உண்மையாக்கி வைக்கின்றாரோ, சுகமடையும் (சொர்க்கத்தின்) வழியை நாம் அவருக்கு எளிதாக்குகிறோம். எவன் கஞ்சத்தனம் செய்து, (அல்லாஹ்வையும்) பொருட்படுத்தாமல், நற்செயல்களைப் பொய்ப்படுத்துகின்றானோ, அவனுக்கு வேதனைக்குரிய (நரக) வழியை எளிதாக்குவோம்." (அல்குர்ஆன் 92:5-10) என்று கூறினார்கள்.[65]

588 அலீ (ரலி) அவர்கள் கூறியதாவது:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் படை ஒன்றை அனுப்பினார்கள். அதற்கு (அப்துல்லாஹ் பின் ஹுதாஃபா என்ற) அன்சாரித் தோழரைத் தளபதியாக நியமித்தார்கள். அவர் தம் படையினர்மீது ஏதோ ஒரு விஷயத்தில் கோபம் கொண்டார். அவர்களிடம் அவர், "எனக்கு நீங்கள் கட்டுப்பட வேண்டும் என உங்களுக்கு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கட்டளையிடவில்லையா?" என்று கேட்டார். அவர்கள், "ஆம்" என்றார்கள்.

உடனே அவர், "விறகைச் சேகரியுங்கள்" என்றார். பின்னர் நெருப்பை மூட்டச் சொல்லி, அதை எரியச் செய்தார். பின்னர், "நான் அறுதியிட்டுக் கூறுகிறேன். இதில் நீங்கள் விழவேண்டும்" என்றார். அதில் விழுவதற்கு மக்கள் ஆயத்தமாகிவிட்டனர். அப்போது அவர்களிடையே இருந்த இளைஞர் ஒருவர், "நரக நெருப்பிலிருந்து வெருண்டோடித்தான் அல்லாஹ்வின் தூதரின் பக்கம் வந்துள்ளீர்கள். நபி (ஸல்) அவர்களைச் சந்திக்கும்வரை அவசரப்படாதீர்கள். 'இதில் நீங்கள் விழுங்கள்' என நபி (ஸல்) அவர்கள் கூறினால், நீங்கள் விழுங்கள்" என்று கூறினார்.

நபி (ஸல்) அவர்களிடம் திரும்பி வந்த அவர்கள், நடந்ததைக் கூறினர். அப்போது அவர்களிடம் நபி (ஸல்) அவர்கள், "அதில் நீங்கள் விழுந்திருந்தால், அதிலிருந்து எப்போதும் வெளியேறி இருக்க முடியாது. கீழ்ப்படிதல் என்பது, நன்மையில் மட்டும்தான்" என்று கூறினார்கள்.[66]

---

65. இந்த ஹதீஸ் புகாரீ (1362, 4945-4949, 6217, 6605, 7552), அல்அதபுல் முஃப்ரத் (935), முஸ்லிம் (5151), திர்மிதீ (3267), இப்னு ஹிப்பான் (335), இப்னுமாஜா (75), அல்பஸ்ஸார் (534) உள்ளிட்ட நூல்களிலும் இடம்பெற்றுள்ளது.

66. இந்த ஹதீஸ் புகாரீ (4340, 7145), முஸ்லிம் (3752, 3753), அல்பஸ்ஸார் (539), நஸாயீ (4134), அபூஅவானா (6746), அபூதாவூத் (2256), முஸன்னஃப் இப்னு அபீஷைபா (7/736), பைஹகீயின் ஸுனனுல் குப்ரா (8/156), நஸாயீயின் ஸுனனுல் குப்ரா (4/434), அபூயஃலா (362), இப்னு ஹிப்பான் (4660), முஸ்னது அப்தில்லாஹ் பின் அல்முபாரக் (267), முஸ்னதுத் தயாலிஸீ (110) உள்ளிட்ட நூல்களிலும் பதிவாகியுள்ளது.

இதுபோன்ற பொருள் கொண்ட ஹதீஸ் முஸ்னதின் 1212ஆவது எண்கொண்ட ஹதீஸிலும் இடம்பெற்றுள்ளது. அதில், அந்தப் படைத் தளபதி நகைச் சுவையாக நெருப்பை மூட்டச் செய்து அதில் தம் படையினரைக் குதிக்கச் சொன்னபோது

589 வாகிது பின் அம்ரு பின் சஅது பின் முஆத் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

பனூ சலமா குலத்தாரின் பிரேத அடக்க நிகழ்வொன்றில் நான் கலந்து கொண்டேன். அப்போது நான் (அமராமல்) நின்றுகொண்டிருந்தேன். அப்போது என்னிடம் நாஃபிஉ பின் ஜுபைர் (ரஹ்) அவர்கள், "அமருங்கள்! இது குறித்துச் சரியான விளக்கத்தை உங்களுக்கு நான் கூறுகிறேன். மஸ்ஊது பின் அல்ஹகம் அஸ்ஸுரக்கீ (ரலி) அவர்கள் எனக்கு அறிவித்தார்கள்: 'அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், பிரேதத்தை கண்டால் எழுந்து நிற்க வேண்டுமென்று முன்பு எங்களுக்குக் கட்டளையிட்டார்கள். பின்னர் தாமும் அமர்ந்தார்கள்; எங்களையும் அமருமாறு பணித்தார்கள்' என்று அலீ பின் அபீதாலிப் (ரலி) அவர்கள் கூஃபாவிலுள்ள 'ரஹ்பா' எனுமிடத்தில் இருந்தபோது, கூறியதைக் கேட்டேன்."[67]

٥٨٩ حدثنا إسماعيل بن إبراهيم عن محمد بن عمرو قال حدثني واقد بن عمرو بن سعد بن معاذ قال: شهدت جنازة في بني سلمة فقمت فقال لي نافع بن جبير: اجلس فإني سأخبرك في هذا بثبت حدثني مسعود بن الحكم الزرقي أنه سمع علي بن أبي طالب رضي الله عنه برحبة الكوفة وهو يقول: كان رسول الله ﷺ أمرنا بالقيام في الجنازة ثم جلس بعد ذلك وأمرنا بالجلوس.

٥٩٠ حدثنا إسماعيل عن سعيد بن أبي عروبة عن عبد الله الداناج عن حضين أبي ساسان الرقاشي: أنه قدم ناس من أهل الكوفة على عثمان رضي الله عنه فأخبروه بما كان من أمر الوليد أي بشربه الخمر فكلمه علي في ذلك فقال: دونك ابن عمك فأقم عليه الحد فقال: يا حسن قم فاجلده قال: ما أنت من هذا في شيء ول هذا غيرك قال: بل ضعفت ووهنت وعجزت قم يا عبد الله بن جعفر فجعل عبد الله

590 ஹுளைன் அபூ சாசான் அர்ரகாஷீ (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

கூஃபாவாசிகளுள் சிலர் உஸ்மான் (ரலி) அவர்களிடம் வந்து, "வலீது பின் உக்பா (ரலி) அவர்கள் மது அருந்துபவராக உள்ளார்" என்று கூறினார்கள். இது தொடர்பாக அலீ (ரலி) அவர்களும் உஸ்மான் (ரலி) அவர்களிடம் பேசினார்கள். அதற்கு உஸ்மான் (ரலி) அவர்கள், "உம் சிறிய தந்தையின் மகனுக்கு நீங்களே (விசாரணை செய்து) தண்டனையை நிறைவேற்றுங்கள்!" என்று அலீ (ரலி) அவர்களிடம் கூறினார்கள். உடனே, அலீ (ரலி) அவர்கள் (தம் புதல்வர் ஹசன் (ரலி) அவர்களிடம்), "ஹசனே! நீ எழுந்து அவருக்குச் சாட்டையடி கொடு!" என்று கூறினார்கள். அதற்கு ஹசன் (ரலி) அவர்கள், "இதற்குப் பொறுப்பேற்க வேண்டியவர் நீர் அல்லர்; வேறொருவரிடம் இப்பொறுப்பை ஒப்படைப்பீராக!" என்று கூறினார்கள். அதற்கு அலீ (ரலி) அவர்கள், "நீ பலவீனனாகவும் கோழையாகவும் இயலாதவனாகவும் இருக்கிறாய்!" என்று கூறிவிட்டு, (தம் சகோதரரின் புதல்வரிடம்), "அப்துல்லாஹ் பின் ஜஅஃபரே! நீ எழுந்து,

---

அவர்களும் அதற்கு ஆயத்தமானபோது தாம் அதனை விரும்பவில்லை என்றும் நன்மையானவற்றில் மட்டுமே படைத் தலைவருக்குக் கட்டுப்பட வேண்டும் என்றும் அவர் கூறியதாக வந்துள்ளது. அவர் நகைச்சுவையாகப் பேசக் கூடியவராகவும் இருந்தார்; சிரிப்பூட்டக் கூடியவராகவும் இருந்தார் (பத்ஹுல்பாரீ).

67. இந்த ஹதீஸ் முஸ்லிம் (1753, 1754), அபூஅவானா (272, 292), இப்னு ஹிப்பான் (3121), பைஹகீ, முவத்தா மாலிக் (491), முஸன்னஃப் அப்திர் ரஸ்ஸாக் (6312), அபூதாவூத் (2761), திர்மிதீ (965), நசாயீ (1972, 1973), முஸ்னதுல் பஸ்ஸார் (908, 909) ஆகிய நூல்களிலும் இடம்பெற்றுள்ளது. முஸ்னதுல் பஸ்ஸாரின் அறிவிப்பில் பின்வருமாறு பதிவாகியுள்ளது: மஸ்ஊது பின் அல்ஹகம் அஸ்ஸுரக்கீ (ரலி) அவர்கள் கூறினார்கள்: நான் இராக்கில் பிரேத அடக்க நிகழ்வொன்றில் கலந்துகொண்டேன். அப்போது சிலர் பிரேதம் கீழே வைக்கப்படுவதை எதிர்பார்த்து (அமராமல்) நின்றுகொண்டிருந்தனர். அப்போது அலீ (ரலி) அவர்கள் (தும்பியிருந்து) சைகை செய்து அவர்களை உட்காரச் சொன்னார்கள். "ஏனெனில், அல்லாஹ்வின்=

يضربه ويعد علي حتى بلغ أربعين ثم قال: أمسك أو
قال كف جلد رسول الله ﷺ أربعين وأبو بكر أربعين
وكملها عمر ثمانين وكل سنة.

٥٩١ حدثنا إسماعيل حدثنا محمد بن إسحاق حدثني
محمد بن طلحة بن يزيد بن ركانة عن عبيد الله
الخولاني عن ابن عباس رضي الله عنه قال: دخل علي
علي بيتي فدعا بوضوء فجئته بقعب يأخذ المد أو
قريبه حتى وضع بين يديه وقد بال فقال: يا ابن عباس
ألا أتوضأ لك وضوء رسول الله ﷺ قلت: بلى فداك
أبي وأمي قال: فوضع له إناء فغسل يديه ثم مضمض
واستنشق واستنثر ثم أخذ بيديه فصك بهما وجهه

அதைச் (செய்)!" என்றார்கள். அவ்வாறே அப்துல்லாஹ் பின் ஜஅஃபர் (ரலி) அவர்கள் (எழுந்து) வலீதுக்குச் சாட்டையடி கொடுத்தார்கள். அப்போது அலீ (ரலி) அவர்கள் (சாட்டையடியை) எண்ணிக் கொண்டிருந்தார்கள். நாற்பது அடியான தும், "போதும்! நிறுத்து!" என்றார்கள். பின்னர், "(மது அருந்தியதற்குத் தண்டனையாக) அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் நாற்பது சாட்டையடிதான் கொடுத்துள்ளார்கள். அபூபக்ர் (ரலி) அவர்களும் நாற்பது சாட்டையடிதான் கொடுத்துள்ளார்கள். உமர் (ரலி) அவர்கள் எண்பது அடியாக அதை முழுமைப்படுத்தினார்கள். இவை அனைத்தும் (நல்ல) நடைமுறைகளே" என்று அலீ (ரலி) அவர்கள் கூறினார்கள்.[68]

591 இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறியதாவது:

அலீ (ரலி) அவர்கள் என் வீட்டிற்கு வந்து, 'உளூ'ச் செய்வதற்காகத் தண்ணீர் கொண்டுவரும்படி கூறினார்கள். ஒரு 'முத்'து (muddu)[69] அல்லது அதற்குச் சற்று குறைந்த அளவுக்குத் தண்ணீர் உள்ள மரப் பாத்திரம் ஒன்றை அவர்கள் முன் கொண்டு வந்து வைத்தேன். சிறுநீர் கழித்து (துப்பரவு செய்து) முடித்த அலீ (ரலி) அவர்கள், "இப்னு அப்பாஸே! அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் செய்ததைப் போல் உனக்கு நான் 'உளூ'ச் செய்து காட்டட்டுமா?" என்று கேட்டார்கள். உடனே நான், "ஆம்; என் தாயும், தந்தையும் உங்களுக்கு அர்ப்பணம்" என்றேன்.

அவர்களுக்கு ஒரு பாத்திரம் வழங்கப்பட்டது. அவர்கள் தம் கைகளைக் கழுவினார்கள். பின்னர் வாய் கொப்பளித்து, மூக்கில் நீர் செலுத்தி, மூக்கைத் தூய்மை செய்தார்கள். பின்னர் தம் இரு கைகளால் (தண்ணீரை) எடுத்து, தமது முகத்தில் ஊற்றித் தேய்த்

=தூதர் (ஸல்) அவர்கள் எழுந்து நின்றுவிட்டுப் பின்னர் அமர்ந்து கொள்ளுமாறு எங்களுக்கு உத்தரவிட்டார்கள்" என்று கூறினார்கள் (இதே செய்தி இப்னு ஜரீர் தபரீ அவர்களின் தஹ்தீபுல் ஆஸார் (268) எனும் நூலிலும் பதிவாகியுள்ளது)

68. இந்த ஹதீஸ், முஸ்லிம் (3515), அபூதாவூத் (3884), இப்னுமாஜா (2561), அபூயஅலா (481), தாரிமீ (2208), பைஹகீயின் சுனனுஸ் ஸஃகீர் (2734), சுனனுல் குப்ரா (8/316), அபூஅவானா (5121), முஸ்னதுத் தயாலிசீ (166), முஸன்னஃப் இப்னு அபீஷைபா (28998), முஸன்னஃப் அப்திர் ரஸ்ஸாக் (13545) உள்ளிட்ட நூல்களிலும் பதிவாகியுள்ளது.

'உம் சிறிய தந்தையின் மகனுக்கு (இதை) அமல்படுத்து' என்று உஸ்மான் (ரலி) அவர்கள், அலீ (ரலி) அவர்களிடம் கூறியது உண்மையில் வலீத் அவர்கள் அலீ (ரலி) அவர்களின் தந்தையின் சகோதரர் மகன் என்பதைக் குறிப்பதற்கன்று. மாறாக அரபியர் ஒருவரை மற்றொருவருடன் இணைத்துப் பேசும்போது 'உம் தந்தையின் சகோதரர் மகன்' என்று கூறும் வழக்கப்படி அமைந்ததாகும். அதனடிப்படையே உஸ்மான் (ரலி) அவர்கள் கூறினார்கள். சொல்லப்போனால், இந்த அறிவிப்பில் இடம்பெற்ற வலீத், அலீ (ரலி) அவர்களைவிட உஸ்மான் (ரலி) அவர்களுக்கே நெருங்கிய உறவினர் ஆவார். வலீத் அவர்கள் உஸ்மான் (ரலி) அவர்களின் தாய்வழிச் சகோதரரும், காலித் பின் அல்வலீத் (ரலி) அவர்களின் உடன்பிறந்த சகோதரரும் ஆவார். ([illegible]) உமர் (ரலி) அவர்கள், மது அருந்தியவருக்கு எண்பது சாட்டையடிகள் கொடுத்தாலும் நபி (ஸல்), அபூபக்ர் (ரலி) ஆகியோர் கொடுத்த தண்டனையான நாற்பது சாட்டையடிகளே தமக்கு மிகவும் விருப்பமானதாகும் என்று அலீ (ரலி) அவர்கள் கூறியதாக வந்துள்ளது. காண்க: முஸ்லிம் - 3516

வலீத் (ரலி) அவர்கள் மது அருந்தியதற்கு தண்டனையாக நாற்பது சாட்டையடி வழங்கப்பட்டது. சட்டத்திற்கு முன் அனைவரும் சமம் என்பதை எடுத்துரைக்கிறது.

69. இரண்டு கைகள் கொள்ளளவு. பார்க்க: முன்சென்ற ஹதீஸ் எண் - 483 மற்றும் அதன் அடிக்குறிப்பு.

وَالْقَمَ إِبْهَامَهُ مَا أَقْبَلَ مِنْ أُذُنَيْهِ قَالَ ثُمَّ عَادَ فِي مِثْلِ
ذَلِكَ ثَلَاثًا ثُمَّ أَخَذَ كَفًّا مِنْ مَاءٍ بِيَدِهِ الْيُمْنَى فَأَفْرَغَهَا
عَلَى نَاصِيَتِهِ ثُمَّ أَرْسَلَهَا تَسِيلُ عَلَى وَجْهِهِ ثُمَّ غَسَلَ
يَدَهُ الْيُمْنَى إِلَى الْمِرْفَقِ ثَلَاثًا ثُمَّ يَدَهُ الْأُخْرَى مِثْلَ ذَلِكَ
ثُمَّ مَسَحَ بِرَأْسِهِ وَأُذُنَيْهِ مِنْ ظُهُورِهِمَا ثُمَّ أَخَذَ بِكَفَّيْهِ
مِنَ الْمَاءِ فَصَكَّ بِهِمَا عَلَى قَدَمَيْهِ وَفِيهِمَا النَّعْلُ ثُمَّ
قَلَبَهَا بِهَا ثُمَّ عَلَى الرِّجْلِ الْأُخْرَى مِثْلَ ذَلِكَ قَالَ فَقُلْتُ
وَفِي النَّعْلَيْنِ قَالَ: وَفِي النَّعْلَيْنِ قُلْتُ وَفِي النَّعْلَيْنِ قَالَ:
وَفِي النَّعْلَيْنِ قُلْتُ وَفِي النَّعْلَيْنِ قَالَ: وَفِي النَّعْلَيْنِ.

٥٩٢ حدثنا إِسْمَاعِيلُ حَدَّثَنَا أَيُّوبُ عَنْ مُحَمَّدٍ عَنْ
عَبِيدَةَ عَنْ عَلِيٍّ رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ: ذُكِرَ الْخَوَارِجُ فَقَالَ:
فِيهِمْ مُخْدَجُ الْيَدِ أَوْ مُودَنُ الْيَدِ أَوْ مَثْدُونُ الْيَدِ لَوْلَا أَنْ
تَبْطَرُوا لَحَدَّثْتُكُمْ بِمَا وَعَدَ اللَّهُ الَّذِينَ يَقْتُلُونَهُمْ عَلَى

தார்கள். தம் கட்டை விரலைக் காதுகளுக்குள் நுழைத்தார்கள். பின்னர் மூன்றுமுறை இதே போல் செய்தார்கள்.

பிறகு தமது வலக் கையில் ஒரு கையளவுத் தண்ணீரை அள்ளி, தம் முன் நெற்றியில் ஊற்றி, அதை முகத்தில் வழிந்தோடச் செய்தார்கள். பின்னர் வலக் கையை முழங்கை வரை மூன்று முறை கழுவினார்கள். பிறகு தம் மற்றொரு கையையும் இதேபோல் கழுவினார்கள். பிறகு தம் தலையையும் காதுகளின் வெளிப்புறத்தையும் ஈரக் கையால் தடவி ('மஸ்ஹு'ச் செய்திடலா)னார்கள்.

பிறகு இரு கைகளால் தண்ணீரை அள்ளித் தம் பாதங்களில் ஊற்றி தமது கால்களில் காலணி இருக்கவே அவற்றைத் தேய்த்தார்கள். பின்னர் தம் கால்களில் காலணி இருக்கவே அதைத் திருப்பினார்கள். (அதிலும் தண்ணீர் ஊற்றினார்கள்.) பின்பு இதே போல் மற்றொரு காலையும் கழுவினார்கள்

(உபைதுல்லாஹ் அல்கவ்லானீ (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்:)

"(இரு கைகளிலும் ஒரு முறை தண்ணீர் அள்ளி) இரண்டு காலணிகளிலுமா (ஊற்றினார்கள்)?" என்று கேட்டேன். "இரண்டு காலணிகளிலும்தான்" என இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் மறுமொழி கூறினார்கள். "(இரு கைகளிலும் ஒருமுறை தண்ணீர் அள்ளி) இரண்டு காலணிகளிலுமா (ஊற்றினார்கள்)?" என்று மீண்டும் கேட்டேன். "இரண்டு காலணிகளிலும்தான் (ஊற்றினார்கள்)" என்றே மீண்டும் மறுமொழி கூறினார்கள். "(இரு கைகளிலும் ஒரு முறை தண்ணீர் அள்ளி) இரண்டு காலணிகளிலுமா (ஊற்றினார்கள்)?" என்று மீண்டும் கேட்டேன். அதற்கு, "இரண்டு காலணிகளிலும்தான் (ஊற்றினார்கள்)" என்றே மறுமொழியளித்தார்கள்.[70]

592 அபீதா (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

அலீ (ரலி) அவர்களிடம் காரிஜியாக்கள் பற்றிக் கூறப்பட்டது. அப்போது அவர்கள், "அவர்களுள் கை ஊனமான ஒருவன் இருப்பான். நீங்கள் வரம்பு மீறிவிடுவீர்கள் என்ற

---

70. இந்த ஹதீஸ், அபூதாவூத் (102), அல்பஸ்ஸார் (464), அபூயஅலா (577), இப்னு குஸைமா (153), இப்னு ஹிப்பான் (1067), ளியாவின் அல்முக்தாரா (1/54) உள்ளிட்ட நூல்களிலும் இடம்பெற்றுள்ளது.

உளூ செய்யும்போது உறுப்புகளை ஒருமுறை முழுமையாக நனையுமாறு கழுவினால் போதும். ஒவ்வோர் உறுப்பையும் இரண்டு முறை கழுவுவதற்கும் ஆதாரம் வந்துள்ளது. இந்த ஹதீஸில் உள்ளது போன்று ஒவ்வோர் உறுப்பையும் மும்முறை கழுவுவதற்கும் சான்று உள்ளது. சில உறுப்புகளை இரண்டு முறையும் சிலவற்றை மூன்று முறையும் கழுவியதாகவும் நபிமொழிகள் வந்துள்ளன. ஒருமுறை மட்டும் உறுப்புகளில் நீர்படுமாறு கழுவினால் போதுமானதே. முழுமையான அளவு மும்முறை கழுவுவதாகும். அதற்கு மேல் அதிகப்படுத்தக் கூடாது (புகாரீ-பத்ஹுல் பாரீ).

நபி (ஸல்) அவர்கள் உளூ செய்தபோது (ஒவ்வோர் உறுப்பையும்) ஒவ்வொரு முறை கழுவினார்கள். புகாரீ (79, 100), திர்மிதீ (40), இப்னுமாஜா (405), நஸயீ (692)). நபி (ஸல்) அவர்கள் உளூ செய்தபோது (ஒவ்வோர் உறுப்பையும்) இரண்டிரண்டு முறை கழுவினார்கள். திர்மிதீ (41), அபூதாவூத் (117). நபி (ஸல்) அவர்கள் உளூ செய்தபோது (ஒவ்வோர் உறுப்பையும்) மும்மூன்று முறை கழுவினார்கள். முஸ்லிம் (389), திர்மிதீ (42), நஸயீ (80), அபூதாவூத் (96), இப்னுமாஜா-412)

அச்சம் இல்லையானால், அவர்களைக் கொல்பவர்களுக்கு அல்லாஹ் தன் தூதரின் நாவினால் வாக்களித்துள்ள நற்பலனை உங்களுக்கு நான் அறிவித்துவிடுவேன்" என்று கூறினார்கள். உடனே நான், "முஹம்மத் (ஸல்) அவர்களிடமிருந்து இதை நீங்கள் செவியுற்றீர்களா?" என்று கேட்டேன். அதற்கு அலீ (ரலி) அவர்கள், "ஆம்; கஅபாவின் அதிபன் மீதாணையாக! ஆம்; கஅபாவின் அதிபன் மீதாணையாக! ஆம்; கஅபாவின் அதிபன் மீதாணையாக!" என்று (மூன்று முறை) கூறினார்கள்.

'கை ஊனமானவன்' என்பதைக் குறிக்க மூலத்தில் 'முக்தஜுல் யதி' அல்லது 'முதூனுல் யதி' அல்லது 'மூதத்துல் யதி' எனும் சொற்றொடர்கள் ஆளப்பட்டுள்ளன.[71]

لسان محمد قلت: أنت سمعته من محمد قال: إي ورب الكعبة، إي ورب الكعبة، إي ورب الكعبة.

٥٩٣ حدثنا أبو معاوية حدثنا شعبة عن عمرو بن مرة عن عبد الله بن سلمة عن علي رضي الله عنه قال: كان رسول الله ﷺ يقرئنا القرآن ما لم يكن جنبا.

٥٩٤ حدثنا يحيى بن سعيد عن سفيان حدثنا محمد بن عمر بن علي بن أبي طالب عن علي رضي الله عنه قال: قلت: يا رسول الله إذا بعثتني أكون كالسكة المحماة أم الشاهد يرى ما لا يرى الغائب قال: الشاهد يرى ما

593 அலீ (ரலி) அவர்கள் கூறியதாவது:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், (பெருந்துடக்கு ஏற்பட்டு) குளியல் கடமையானவராக இல்லாதபோதே எங்களுக்கு குர்ஆனை ஓதிக்காட்டுவார்கள்.[72]

594 அலீ (ரலி) அவர்கள் கூறியதாவது:

நான் (நபி (ஸல்) அவர்களிடம்), "அல்லாஹ்வின் தூதரே! நீங்கள் என்னை (ஏதேனும் பணி நிமித்தம் ஓரிடத்திற்கு) அனுப்பிவைக்கும்போது, (சூழ்நிலை நன்மைகளை கருத்தில் கொள்ளாமல்) வார்க்கப்பட்ட இரும்புபோல் (இடப்பட்ட உத்தரவுப்படி) நான் நடந்துகொள்வதா? அல்லது (ஒரு நிகழ்ச்சி நடக்கும்) களத்தில் இடம்பெற்றவனைப் போன்று (சூழ்நிலை நன்மைகளை கருத்தில் கொண்டு) நடந்து கொள்ளவேண்டுமா? (ஏனெனில்) களத்தில் இடம்பெற்றவர் களத்தில் இல்லாதவர் கவனத்தில் கொள்ளாத அம்சங்களையெல்லாம் கவனத்தில் கொள்வார்" என்று கூறினேன். அதற்கு நபி (ஸல்) அவர்கள், "(ஆம்) களத்தில் இடம்பெற்றவர்தான் களத்தில் இல்லாதவர் கவனத்தில் கொள்ளாத அம்சங்களையெல்லாம் கவனத்தில்

---

71. [illegible] புகாரீ (3611), முஸ்லிம் (1933), அபூதாவூத் (4135, 4138), இப்னுமாஜா (முகத்திமா-153), [illegible] (630), அபூயஅலா (321), முஸன்னஃப் இப்னு அபீஷைபா (39038), முஸன்னஃப் அப்திர் ரஸ்ஸாக் (18650) உள்ளிட்ட நூல்களிலும் இடம்பெற்றுள்ளது.

72. [illegible] (136) [illegible] (265, 266), இப்னுமாஜா (587) [illegible] (496), இப்னு ஹிப்பான் (800), தாரகுத்னீ (439), [illegible] (641) ஆகிய நூல்களிலும் இடம்பெற்றுள்ளது. [illegible]

[illegible] முஸ்லிம் (608) [illegible]

சொல்வார்" (எனவே, களத்தில் இருப்பவர் போன்றே சூழ்நிலைகளைப் பார்த்து நடந்துகொள்!)" என்று கூறினார்கள்.[73]

لاَ يَرَى الْغَائِبُ.

595 அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

என்னைப் பற்றி (நான் கூறாத ஒன்றைக் கூறியதாகப்) பொய்யுரைக்காதீர்கள்! ஏனெனில், என்னைப் பற்றி யார் பொய் கூறுகிறாரோ, அவர் நரகம்தான் செல்வார்.

இதை அலீ (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.[74]

٥٩٥ حَدَّثَنَا يَحْيَى عَنْ شُعْبَةَ حَدَّثَنَا مَنْصُورٌ قَالَ سَمِعْتُ رِبْعِيًّا قَالَ سَمِعْتُ عَلِيًّا رَضِيَ اللهُ عَنْهُ يَقُولُ: قَالَ رَسُولُ اللهِ ﷺ: لاَ تَكْذِبُوا عَلَيَّ فَإِنَّهُ مَنْ يَكْذِبْ عَلَيَّ يَلِجِ النَّارَ.

596 அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

என்னைப் பற்றி (நான் கூறாத ஒன்றைக் கூறியதாகப்) பொய்யுரைக்காதீர்கள்! ஏனெனில், என்னைப் பற்றி யார் பொய் கூறுகிறாரோ, அவர் நரகம்தான் செல்வார்.

இதை அலீ (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.[75]

٥٩٦ حَدَّثَنَا حُسَيْنٌ حَدَّثَنَا شُعْبَةُ عَنْ مَنْصُورٍ عَنْ رِبْعِيِّ بْنِ حِرَاشٍ قَالَ سَمِعْتُ عَلِيًّا يَقُولُ: قَالَ رَسُولُ اللهِ ﷺ: لاَ تَكْذِبُوا عَلَيَّ فَإِنَّهُ مَنْ يَكْذِبْ عَلَيَّ يَلِجِ النَّارَ.

597 அலீ (ரலி) அவர்கள் கூறியதாவது:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் (பிரேதம் கொண்டு செல்வதைக் கண்டால்) எழுந்து நிற்பதைக் கண்டோம். ஆகவே, நாங்களும் நின்றோம்; அவர்கள் அமர்ந்தபோது, நாங்களும் அமர்ந்தோம்.[76]

٥٩٧ حَدَّثَنَا يَحْيَى عَنْ شُعْبَةَ حَدَّثَنَا مُحَمَّدُ بْنُ الْمُنْكَدِرِ عَنْ مَسْعُودِ بْنِ الْحَكَمِ عَنْ عَلِيٍّ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ: قَدْ رَأَيْنَا رَسُولَ اللهِ ﷺ قَامَ فَقُمْنَا وَقَعَدَ فَقَعَدْنَا.

---

73. [illegible] முஸ்னது [illegible] (634) [illegible] (63) [illegible] (1/177) [illegible] (1/472) [illegible] (3/268) [illegible]

74. இந்த ஹதீஸ் புகாரீ (106), முஸ்லிம் முன்னுரை 2, திர்மிதீ (2584), இப்னுமாஜா (31) [illegible] ஆகிய நூல்களிலும் இடம்பெற்றுள்ளது.

[illegible]

75. [illegible]

76. [illegible] 590 [illegible]

598 நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

குளியல் கடமையானவரும், உருவப்படமும், நாயும் உள்ள வீட்டில் (அருள்) வானவர்கள் நுழையமாட்டார்கள்.

இதை அலீ (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.[77]

٥٩٨ حدثنا يحيى عن شعبة حدثني علي بن مدرك عن أبي زرعة عن ابن نجي عن أبيه عن علي رضي الله عنه عن النبي ﷺ: لا تدخل الملائكة بيتا فيه جنب ولا صورة ولا كلب.

599 அலீ (ரலி) அவர்கள் கூறியதாவது:

கொம்பு உடைந்த, காது கிழிந்த பிராணிகளைக் குர்பானி கொடுக்க வேண்டாமென அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் தடைவிதித்தார்கள்.[78]

٥٩٩ حدثنا يحيى عن هشام حدثنا قتادة عن جري بن كليب عن علي رضي الله عنه قال: نهى رسول الله ﷺ أن يضحى بعضباء القرن والأذن.

600 அலீ (ரலி) அவர்கள் கூறியதாவது:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், சுரைக்காய்க் குடுவையையும் தார் பூசப்பட்ட பாத்திரத்தையும் (பயன்படுத்துவதைத்) தடைசெய்தார்கள்.[79]

٦٠٠ حدثنا يحيى عن سفيان حدثني سليمان عن إبراهيم التيمي عن الحارث بن سويد عن علي رضي الله عنه قال: نهى رسول الله ﷺ عن الدباء والمزفت.
قال أبو عبد الرحمن: سمعت أبي يقول ليس بالكوفة عن علي رضي الله عنه حديث أصح من هذا.

அபூ அப்திர்ரஹ்மான் (அப்துல்லாஹ் பின் அஹ்மத் பின் ஹன்பல் (ரஹ்) அவர்கள்) கூறுகிறார்கள்:

"கூஃபாவாசிகளிடம் அலீ (ரலி) அவர்கள் கூறியதாக வரும் ஹதீஸ்களில் இதைவிட மிகச் சரியான (அறிவிப்பாளர்தொடரில்) வேறு ஹதீஸ் எதுவும் இல்லை" என என் தந்தை (அஹ்மது பின் ஹன்பல்-ரஹ்) அவர்கள் கூறினார்கள்.

---

77. [illegible] புகாரீ (3225, 3322, 4002, 5949, 5958), முஸ்லிம் (4274, 4275, 4283), [illegible] (3650) [illegible] (261, 4207) [illegible] (106, 3822) [illegible] (2548) [illegible]

[illegible] 1 [illegible] 2 [illegible] 3 [illegible] 4 [illegible]

78. பார்க்க முஸ்னது ஹதீஸ் எண் - 575 [illegible]

79. இந்த ஹதீஸ் புகாரீ (5594) முஸ்லிம் (4037) [illegible] பார்க்க முஸ்னது ஹதீஸ் எண் - 251, 340 [illegible]

601 அலீ (ரலி) அவர்கள் கூறியதாவது:

வட்டி உண்பவன், வட்டியை உண்ணக் கொடுப்பவன், அதைப் பதிவு செய்பவன், அதற்குச் சாட்சிகளாகத் திகழும் இருவர், (கணவனால் முறைப்படி மூன்று 'தலாக்' விடப்பட்டு முற்றாகப் பிரிந்துவிட்ட பெண்ணை மீண்டும் அக்கணவனே மணந்து கொள்வதற்கு ஏதுவாக) தாற்காலிகத் திருமணம் செய்தவன், தாற்காலிகத் திருமணத்துக்கு உடந்தையாகச் செயல்பட்ட முதல் கணவன் (அல்முஹல்லலு லஹு), 'ஸகாத்' வழங்க மறுப்பவன், பச்சை குத்திவிடுபவள், பச்சை குத்திக்கொள்பவள் ஆகிய பத்துப்பேர்களை அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் சபித்துள்ளார்கள்.[60]

٦٠١ حدثنا يحيى عن مجالد حدثني عامر عن الحارث عن علي رضي الله عنه قال: لعن رسول الله ﷺ عشرة آكل الربا وموكله وكاتبه وشاهديه والحال والمحلل له ومانع الصدقة والواشمة والمستوشمة.

602 அலீ (ரலி) அவர்கள் கூறியதாவது:

நான் இளம் வயதினனாக இருந்தபோது, என்னை அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், 'யமன்' நாட்டிற்கு (நீதிபதியாக) அனுப்பினார்கள். அப்போது நான், (அல்லாஹ்வின் தூதரே!) என்னை நீங்கள் ஒரு சமுதாயத்தாரிடம் அனுப்புகிறீர்கள் அவர்களுக்கிடையே பல்வேறு பிரச்சினைகள் உருவாகும் ஆனால், என்னிடம் (அவர்களுக்கிடையே) தீர்ப்பு வழங்கும் அளவுக்கு அனுபவ) அறிவு இல்லையே? என்று கேட்டேன். அதற்கு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "உமது நாவிற்கு அல்லாஹ் நல்வழி காட்டுவான். உமது உள்ளத்தை உறுதிப்படுத்துவான்" என்று கூறினார்கள். அதற்குப் பின், இரண்டு பேருக்கிடையில் (ஏற்படும் பிரச்சினைக்குத்) தீர்ப்பு வழங்கும்போது, நான் ஐயத்திற்கு ஆளானதில்லை.[61]

٦٠٢ حدثنا حدثني يحيى عن الأعمش عن عمرو بن مرة عن أبي البختري عن علي رضي الله عنه قال: بعثني رسول الله ﷺ إلى اليمن وأنا حديث السن قال قلت: تبعثني إلى قوم يكون بينهم أحداث ولا علم لي بالقضاء، قال: إن الله سيهدي لسانك ويثبت قلبك قال: فما شككت في قضاء بين اثنين بعد.

603 அலீ (ரலி) அவர்கள் கூறியதாவது:

٦٠٣ حدثنا يحيى عن شعبة حدثنا عمرو بن مرة عن عبد الله بن سلمة عن علي رضي الله عنه قال: مر بي

---

60. [illegible] 533[illegible] 624, 634, 683, 803, 933, 1065, 1222, 1294 [illegible]

[illegible] 3256[illegible] 5042[illegible] 1038[illegible] 'ஸகாத்' [illegible] 5014[illegible]

61. [illegible] 630[illegible] - 630, 840, 1056, 1218, 1272

رَسُولُ اللَّهِ ﷺ وَأَنَا وَجِعٌ وَأَنَا أَقُولُ اللَّهُمَّ إِنْ كَانَ
أَجَلِي قَدْ حَضَرَ فَأَرِحْنِي وَإِنْ كَانَ آجِلًا فَارْفَعْنِي وَإِنْ
كَانَ بَلَاءً فَصَبِّرْنِي، قَالَ مَا قُلْتَ؟ فَأَعَدْتُ عَلَيْهِ فَضَرَبَنِي
بِرِجْلِهِ، فَقَالَ: مَا قُلْتَ قَالَ فَأَعَدْتُ عَلَيْهِ فَقَالَ: اللَّهُمَّ عَافِهِ
أَوْ اشْفِهِ، قَالَ: فَمَا اشْتَكَيْتُ ذَلِكَ الْوَجَعَ بَعْدُ.
حَدَّثَنَا عَفَّانُ حَدَّثَنَا شُعْبَةُ عَنْ عَمْرِو بْنِ مُرَّةَ قَالَ: سَمِعْتُ
عَبْدَ اللَّهِ بْنَ سَلِمَةَ عَنْ عَلِيٍّ رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ: كُنْتُ
شَاكِيًا فَمَرَّ بِي رَسُولُ اللَّهِ ﷺ، فَذَكَرَ مَعْنَاهُ إِلَّا أَنَّهُ قَالَ:
اللَّهُمَّ عَافِهِ اللَّهُمَّ اشْفِهِ، فَمَا اشْتَكَيْتُ ذَلِكَ الْوَجَعَ بَعْدُ.
٦٠٤ حَدَّثَنَا يَحْيَى عَنْ شُعْبَةَ حَدَّثَنِي عَمْرُو بْنُ مُرَّةَ عَنْ
عَبْدِ اللَّهِ بْنِ سَلِمَةَ قَالَ: أَتَيْتُ عَلَى عَلِيٍّ رَضِيَ اللَّهُ عَنْهُ
أَنَا وَرَجُلَانِ فَقَالَ: كَانَ رَسُولُ اللَّهِ ﷺ يَقْضِي حَاجَتَهُ
ثُمَّ يَخْرُجُ فَيَقْرَأُ الْقُرْآنَ وَيَأْكُلُ مَعَنَا اللَّحْمَ وَلَا يَحْجِزُهُ
وَرُبَّمَا قَالَ: يَحْجُبُهُ مِنَ الْقُرْآنِ شَيْءٌ لَيْسَ الْجَنَابَةَ.
٦٠٥ حَدَّثَنَا عَبْدُ اللَّهِ بْنُ نُمَيْرٍ حَدَّثَنَا هِشَامٌ عَنْ أَبِيهِ عَنْ
عَبْدِ اللَّهِ بْنِ جَعْفَرٍ عَنْ عَلِيٍّ رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ: سَمِعْتُ
رَسُولَ اللَّهِ ﷺ يَقُولُ: خَيْرُ نِسَائِهَا مَرْيَمُ بِنْتُ عِمْرَانَ،

(ஒருமுறை) நான் உடல் நலிவுற்றிருந்த போது, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் என்னைக் கடந்து சென்றார்கள். அப்போது நான், "அல்லாஹ்வே! என் ஆயுள் முடியும் நேரம் வந்துவிட்டது என்றால், என்னை (இறக்கச் செய்வதன் மூலம்) எனக்கு நிம்மதி வழங்குவாயாக! என் ஆயுள் முடிய இன்னும் நேரம் இருக்கிறது என்றால், எனது ஆயுளை அதிகரிக்கச் செய்வாயாக! இது சோதனைதான் என்றால், எனக்குப் பொறுமையைத் தருவாயாக!" என்றேன். அப்போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "என்ன சொன்னீர்?" என்றார்கள். அவர்களிடம் (நான் முன்பு கூறியதை) மீண்டும் கூறினேன். அப்போது (அன்போடு) தமது காலால் என்னை ஒரு தட்டு தட்டி, "என்ன சொன்னீர்?" என்று கேட்டார்கள். அவர்களிடம் (நான் முன்னர் கூறியதை) மீண்டும் கூறினேன். உடனே அவர்கள், "அல்லாஹ்வே! இவருக்கு நலமளிப்பாயாக! அல்லது நிவாரணம் அளிப்பாயாக!" என்று கூறினார்கள். அதன் பின்னர் அந்த நோய் எனக்கு ஏற்படவேயில்லை.

இந்த ஹதீஸ் மற்றோர் அறிவிப்பாளர் தொடரிலும் வந்துள்ளது. அதில், 'நான் நோய்வாய்ப்பட்டிருந்தேன். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் என்னைக் கடந்து சென்றார்கள்' என்பதன் பின்னர், மேற்கண்ட செய்தியே இடம்பெற்றுள்ளது. எனினும், இறுதியில், 'அல்லாஹ்வே! இவருக்கு நலமளிப்பாயாக! அல்லாஹ்வே! இவருக்கு நிவாரணம் அளிப்பாயாக!' என்று கூறினார்கள். அதன் பின்னர் நான் அந்த நோய் எனக்கு ஏற்படவேயில்லை' என அலீ (ரலி) அவர்கள் கூறியதாக இடம்பெற்றுள்ளது.[02]

604 அப்துல்லாஹ் பின் ஸலமா அவர்கள் கூறியதாவது:

நான் இரண்டு நபர்களுடன் அலீ (ரலி) அவர்களிடம் சென்றேன். அப்போது அவர்கள், "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் தம் (இயற்கைத்) தேவையை முடித்துவிட்டு வந்து, குர்ஆனை ஓதுவார்கள்; எங்களுடன் சேர்ந்து இறைச்சியை உண்பார்கள். குளியல் கடமையான நிலையைத் தவிர வேறெதுவும் குர்ஆன் ஓதுவதை விட்டு அவர்களைத் தடுத்ததில்லை" என்று கூறினார்கள்.[03]

605 அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

---

02. இந்த ஹதீஸ் திர்மிதீ [illegible], இப்னு ஹிப்பான் [illegible], அபூயஃலா [illegible], ஹாகிம் [illegible], அஹ்மத் [illegible] உள்ளிட்ட நூல்களிலும் இடம்பெற்றுள்ளது. இந்த ஹதீஸின் இரண்டாவது அறிவிப்பாளரான அப்துல்லாஹ் பின் ஸலமா என்பார் விமர்சிக்கப்பட்டவர் ஆவார். எனினும் இது [illegible] 'ஹஸன்' தரத்தை எட்டிய ஹதீஸ் ஆகும்.

03. இந்த ஹதீஸின் அறிவிப்பாளரான அப்துல்லாஹ் பின் ஸலமா என்பார் விமர்சிக்கப்பட்டவர் ஆவார். காண்க: முந்தைய ஹதீஸ் 583 மற்றும் அதன் அடிக்குறிப்பு.

وَخَيْرُ نِسَائِهَا خَدِيجَةُ.

٦٠٦ حَدَّثَنَا ابْنُ نُمَيْرٍ حَدَّثَنَا عَبْدُ الْمَلِكِ عَنْ أَبِي عَبْدِ الرَّحِيمِ الْكِنْدِيِّ عَنْ زَاذَانَ أَبِي عُمَرَ قَالَ: سَمِعْتُ عَلِيًّا فِي الرَّحَبَةِ وَهُوَ يَنْشُدُ النَّاسَ مَنْ شَهِدَ رَسُولَ اللَّهِ ﷺ يَوْمَ غَدِيرِ خُمٍّ وَهُوَ يَقُولُ مَا قَالَ؟ فَقَامَ ثَلَاثَةَ عَشَرَ رَجُلًا فَشَهِدُوا أَنَّهُمْ سَمِعُوا رَسُولَ اللَّهِ ﷺ وَهُوَ يَقُولُ: مَنْ كُنْتُ مَوْلَاهُ فَعَلِيٌّ مَوْلَاهُ.

٦٠٧ حَدَّثَنَا ابْنُ نُمَيْرٍ حَدَّثَنَا الْأَعْمَشُ عَنْ عَدِيِّ بْنِ ثَابِتٍ عَنْ زِرِّ بْنِ حُبَيْشٍ قَالَ: قَالَ عَلِيٌّ رَضِيَ اللَّهُ عَنْهُ: وَاللَّهِ إِنَّهُ مِمَّا عَهِدَ إِلَيَّ رَسُولُ اللَّهِ ﷺ أَنَّهُ لَا يُبْغِضُنِي

உலகின் பெண்களிலேயே (அன்று) சிறந்தவர், இம்ரானின் மகள் மர்யம் ஆவார். உலகப் பெண்களிலேயே (இன்று) சிறந்தவர் கதீஜா (ரலி) ஆவார்.

இதை அலீ (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.[84]

606 ஸாதான் அபீஉமர் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

அலீ (ரலி) அவர்கள் (இராக்கிலுள்ள) 'அர்ரஹ்பா' எனுமிடத்தில் "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் 'கும்மு'[85] ஓடை நாளில் (உரையாற்றியபோது) 'நான் யாருக்கு நண்பனோ அவருக்கு அலீயும் நண்பர் ஆவார்' என்று கூறியதை செவியுற்றவர் யார்?" என்று அல்லாஹ்வை முன்வைத்துக் கேட்டார்கள். அப்போது (நபித்தோழர்களுள்) பதின்மூன்று பேர் எழுந்து, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அவ்வாறு கூறியதைத் தாங்கள் செவியுற்றதாகச் சாட்சியம் அளித்தனர்.[86]

607 அலீ (ரலி) அவர்கள் கூறியதாவது:

"அல்லாஹ்வின் மீதாணையாக! நயவஞ்சகனைத் தவிர வேறெவரும் என்னை

---

84. இந்த ஹதீஸ் புகாரீ (3432, 3815), முஸ்லிம் (4815), திர்மிதீ (3812), [illegible] (3796), [illegible] (7/530), [illegible] (440), [illegible] (588) உள்ளிட்ட நூல்களிலும் இடம்பெற்றுள்ளது.

85. கும்மு என்பது புனித மக்காவிலிருந்து 187 கி.மீ. தூரத்திலுள்ள [illegible]

86. [illegible] 633 [illegible] 915 [illegible] 918 [illegible] 18476 [illegible] 2240 [illegible] 906, 1242, 18497 [illegible] (6931), திர்மிதீ (3646), இப்னுமாஜா (118) [illegible]

[illegible]

إِلاَّ مُنَافِقٌ وَلاَ يُحِبُّنِي إِلاَّ مُؤْمِنٌ.

٦٠٨ حَدَّثَنَا أَبُو أُسَامَةَ أَنْبَأَنَا زَائِدَةُ حَدَّثَنَا عَطَاءُ بْنُ السَّائِبِ عَنْ أَبِيهِ عَنْ عَلِيٍّ رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ: جَهَّزَ رَسُولُ اللَّهِ ﷺ فَاطِمَةَ فِي خَمِيلٍ وَقِرْبَةٍ وَوِسَادَةِ أَدَمٍ حَشْوُهَا لِيفُ الْإِذْخِرِ.

٦٠٩ حَدَّثَنَا أَسْبَاطُ بْنُ مُحَمَّدٍ حَدَّثَنَا نُعَيْمُ بْنُ حَكِيمٍ الْمَدَائِنِيُّ عَنْ أَبِي مَرْيَمَ عَنْ عَلِيٍّ رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ: انْطَلَقْتُ أَنَا وَالنَّبِيُّ ﷺ حَتَّى أَتَيْنَا الْكَعْبَةَ، فَقَالَ لِي رَسُولُ اللَّهِ ﷺ: اجْلِسْ. وَصَعِدَ عَلَى مَنْكِبَيَّ فَذَهَبْتُ لِأَنْهَضَ بِهِ فَرَأَى مِنِّي ضَعْفًا فَنَزَلَ وَجَلَسَ لِي نَبِيُّ اللَّهِ ﷺ وَقَالَ: اصْعَدْ عَلَى مَنْكِبَيَّ. قَالَ فَصَعِدْتُ عَلَى مَنْكِبَيْهِ قَالَ فَنَهَضَ بِي قَالَ فَإِنَّهُ يُخَيَّلُ إِلَيَّ أَنِّي لَوْ شِئْتُ لَنِلْتُ أُفُقَ السَّمَاءِ، حَتَّى صَعِدْتُ عَلَى الْبَيْتِ وَعَلَيْهِ تِمْثَالُ صُفْرٍ أَوْ نُحَاسٍ فَجَعَلْتُ أُزَاوِلُهُ عَنْ يَمِينِهِ وَعَنْ شِمَالِهِ وَبَيْنَ يَدَيْهِ وَمِنْ خَلْفِهِ حَتَّى إِذَا اسْتَمْكَنْتُ مِنْهُ، قَالَ لِي رَسُولُ اللَّهِ ﷺ: اقْذِفْ بِهِ فَقَذَفْتُ بِهِ فَتَكَسَّرَ كَمَا تَتَكَسَّرُ

வெறுக்கமாட்டார்" என்பதும், இறைநம்பிக்கையாளரைத் தவிர வேறெவரும் என்னை நேசிக்கமாட்டார்" என்பதும், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் என்னிடம் அறுதியிட்டுக் கூறியவற்றுள் அடங்கும்.[97]

608 அலீ (ரலி) அவர்கள் கூறியதாவது:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் (தம் புதல்வி) ஃபாத்திமா (ரலி) அவர்களுக்கு அவர்களுடைய திருமணத்தின் போது, குஞ்சம் வைத்த கம்பளிப் போர்வை, தோல் பாத்திரம், 'இத்கிர்' புல் நிரப்பப்பட்ட தோல் தலையணை ஆகியவற்றைக் கொடுத்தார்கள்.[98]

609 அலீ (ரலி) அவர்கள் கூறியதாவது:

(மக்கா வெற்றி நாளில்) நானும், நபி (ஸல்) அவர்களும் நடந்து இறையில்லம் கஅபாவை வந்தடைந்தோம். நபி (ஸல்) அவர்கள் என்னிடம், "அமருங்கள்!" என்றார்கள். (நான் அமர்ந்ததும்,) என் இரு தோள்கள்மீது ஏறினார்கள். நான் அப்படியே அவர்களைத் தூக்கிக்கொண்டு நகர முயன்றேன் (ஆனால், முடியவில்லை.) என்னிடம் பலவீனத்தைக் கண்டபோது, அவர்கள் கீழே இறங்கிக்கொண்டு, எனக்காக அவர்கள் கீழே அமர்ந்தார்கள். "எனது தோள்கள்மீது ஏறுங்கள்" என்றார்கள். நான் அவர்களுடைய இரு தோள்கள்மீது ஏறினேன். என்னை அவர்கள் அப்படியே தூக்கிக்கொண்டு நகர்ந்தார்கள். அப்போது, "நான் நினைத்தால், அடிவானத்தையே தொட்டுவிடுவேன்" என்று எனக்குள் எண்ணம் தோன்றியது.

(அப்படியே அவர்கள் வந்து, கஅபாவை நெருங்கியபோது,) நான் கஅபாவின் மீது ஏறினேன். அதன்மீது பித்தளை அல்லது செம்பாலான உருவச் சிலை இருந்தது. நான் அதை வலப் புறமும் இடப் புறமும் முன்புறமாகவும் பின்பக்கமாகவும் அசைத்து, பெயர்த்தெடுக்க முயன்று, அதை எனது கையில் எடுத்துக்கொண்டேன். என்னிடம் நபி (ஸல்) அவர்கள், "அதை தூக்கி வீசு" என்றார்கள். உடனே அதைத் தூக்கி வீசினேன்.

97. இந்த ஹதீஸ் முஸ்லிம் (131) திர்மிதீ (3669) நஸாயீ (4936) இப்னுமாஜா (111) முஸன்னஃப் இப்னு அபீஷைபா (7/494) அஸ்ஸுன்னா (514) அபூயஃலா (425) இப்னு ஹிப்பான், நஸாயீயின் சுனனுல் குப்ரா (5/47) உள்ளிட்ட நூல்களில் பதிவாகியுள்ளது. இதே கருத்துள்ள தெளிவான ஹதீஸ் முஸ்னதின் பின்வரும் எண்கள் 693, 1010 ஆகியவற்றிலும் இடம்பெற்றுள்ளது.

இறைநம்பிக்கையாளரைத் தவிர வேறெவரும் என்னை நேசிக்கமாட்டார் என்பது வரம்புடன் நேசிப்பதையே குறிக்கும். [illegible]

98. இந்த ஹதீஸ் நஸாயீ (3331) இப்னுமாஜா (4142) நஸாயீயின் சுனனுல் குப்ரா (3/334) ஹாகிம் (2705) இப்னு ஹிப்பான் (7073) உள்ளிட்ட நூல்களிலும் இடம்பெற்றுள்ளது.

الْقَوَارِيرُ ثُمَّ نَزَلْتُ فَانْطَلَقْتُ أَنَا وَرَسُولُ اللَّهِ ﷺ نَسْتَبِقُ حَتَّى تَوَارَيْنَا بِالْبُيُوتِ خَشْيَةَ أَنْ يَلْقَانَا أَحَدٌ مِنَ النَّاسِ.

٦١٠ حَدَّثَنَا فَضْلُ بْنُ دُكَيْنٍ حَدَّثَنَا يَاسِينُ الْعِجْلِيُّ عَنْ إِبْرَاهِيمَ بْنِ مُحَمَّدٍ ابْنِ الْحَنَفِيَّةِ عَنْ أَبِيهِ عَنْ عَلِيٍّ رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ: قَالَ رَسُولُ اللَّهِ ﷺ: الْمَهْدِيُّ مِنَّا أَهْلَ الْبَيْتِ يُصْلِحُهُ اللَّهُ فِي لَيْلَةٍ.

٦١١ حَدَّثَنَا مُحَمَّدُ بْنُ عُبَيْدٍ حَدَّثَنَا هَاشِمُ بْنُ الْبَرِيدِ عَنْ حُسَيْنِ بْنِ مَيْمُونٍ عَنْ عَبْدِ اللَّهِ بْنِ عَبْدِ اللَّهِ قَاضِي الرَّيِّ عَنْ عَبْدِ الرَّحْمَنِ بْنِ أَبِي لَيْلَى قَالَ: سَمِعْتُ أَمِيرَ الْمُؤْمِنِينَ عَلِيًّا رَضِيَ اللَّهُ عَنْهُ يَقُولُ: اجْتَمَعْتُ أَنَا وَفَاطِمَةُ رَضِيَ اللَّهُ عَنْهَا وَالْعَبَّاسُ وَزَيْدُ بْنُ حَارِثَةَ عِنْدَ رَسُولِ اللَّهِ ﷺ، فَقَالَ الْعَبَّاسُ: يَا رَسُولَ اللَّهِ كَبِرَ سِنِّي وَرَقَّ عَظْمِي وَكَثُرَتْ مُؤْنَتِي فَإِنْ رَأَيْتَ يَا رَسُولَ اللَّهِ أَنْ تَأْمُرَ لِي بِكَذَا وَكَذَا وَسْقًا مِنْ طَعَامٍ فَافْعَلْ، فَقَالَ رَسُولُ اللَّهِ ﷺ: نَفْعَلُ، فَقَالَتْ فَاطِمَةُ: يَا رَسُولَ اللَّهِ

கண்ணாடிக் குவளைகள் உடைந்து சிதறுவதுபோல் அது உடைந்து சிதறியது. பின்பு (கஅபாவின் மீதிருந்து) இறங்கினேன். பிறகு மக்களுள் யாரேனும் எங்களைப் பார்த்துவிடுவார்களோ என்றஞ்சி, நானும் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களும் விரைவாகச் சென்று வீடுகளுக்குள் மறைந்து கொண்டோம்.[89]

610 *அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:*

(யுகமுடிவு நாளுக்கு முன் தோன்றும்) 'மஹ்தீ' (அலை), எமது குடும்பத்தைச் சேர்ந்தவர் ஆவார். அவரை அல்லாஹ் ஒரே இரவிலேயே சீராக்கி (தகுதிபெற்றவராக ஆக்கி) விடுவான்.

இதை அலீ (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.[90]

611 *அலீ (ரலி) அவர்கள் கூறியதாவது:*

(ஒருமுறை) நானும், ஃபாத்திமா (ரலி), அப்பாஸ் (ரலி), ஸைத் பின் ஹாரிஸா (ரலி) ஆகியோரும் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுக்கு அருகில் இருந்தோம். அப்போது அப்பாஸ் (ரலி) அவர்கள், "அல்லாஹ்வின் தூதரே! எனக்கு வயதாகிவிட்டது. என் எலும்பு பலவீனமாகிவிட்டது. என் தேவைகள் கூடிவிட்டன. அல்லாஹ்வின் தூதரே! உணவுப் பொருட்களில் இன்ன - இன்னவற்றில் ஒரு 'வஸக்' அளவுக்கு எனக்கு வழங்க உத்தரவிட விரும்பினால் அவ்வாறே செய்யுங்கள்" என்று கேட்டார்கள். உடனே அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்

---

89. அறிஞர் ஷுஐப் அல்அர்னாஊத் உள்ளிட்ட அறிஞர் குழுவினர் இது பலவீனமான அறிவிப்பாளர்தொடரில் அமைந்த ஹதீஸ் ஆகும் என்று குறிப்பிடுகின்றனர். இதன் அறிவிப்பாளர்களுள் ஒருவரான நூஹ் பின் ஃகைஸ் பற்றி மாறுபட்ட விமர்சனங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. இமாம் நஸாயீ (ரஹ்) அவர்கள் இவரை பலவீனமானவர் என்று கூறியுள்ளார்கள். அதேபோன்று இதன் அறிவிப்பாளர்தொடரில் இடம்பெற்றுள்ள அபூமர்யம் என்ற மற்றொரு அறிவிப்பாளர் யாரென்றே அறியப்படாதவர் என இமாம் தாரகுத்னீ (ரஹ்) கூறுகிறார்கள். இமாம் தஹபீ (ரஹ்) அவர்கள், இதன் அறிவிப்பாளர்தொடர் சரியாக இருப்பினும், இதில் கூறப்பட்ட கருத்து மறுக்கத் தக்கதாகும் என்று குறிப்பிடுகிறார்கள். இந்த ஹதீஸ், விமர்சிக்கப்பட்ட அவ்விரு அறிவிப்பாளர்கள் வழியாகவே தாரீக் ஹாகிம் (1530) அபூயஅலா (278) அஹ்மத் (702), முஸன்னஃப் இப்னு அபீஷைபா (38062) உள்ளிட்ட நூல்களிலும் இடம்பெற்றுள்ளது.

90. மஹ்தீ (அலை) என்பார் யுகமுடிவு நாளுக்கு நெருக்கத்தில் மக்களை ஆட்சிபுரியும் நீதிமிக்க அரசர் ஆவார். அவரைப் பற்றிய முன்னறிவிப்பு ஆதாரப்பூர்வமான நபிமொழிகளில் பதிவாகியுள்ளன. இந்த ஹதீஸிலுள்ள அவரை அல்லாஹ் ஒரே இரவிலேயே சீராக்கிவிடுவான் என்பதன் பொருள், அவரின் பாவங்களை மன்னித்து அவருக்கு அருள்புரிந்து முன்னர் அவர் அறிந்திராத நல்வழியை அவருக்கு உணர்த்திவிடுவான் என்பதாகும் (இப்னு கஸீர் -ரஹ்).

இது பலவீனமான அறிவிப்பாளர்தொடரில் அமைந்த ஹதீஸ் ஆகும் என அறிஞர் ஷுஐப் அல்அர்னாஊத் உள்ளிட்ட அறிஞர் குழுவினர் குறிப்பிடுகின்றனர். இமாம் புகாரீ (ரஹ்) அவர்கள் தமது 'அத்தாரீகுல் கபீர்' எனும் நூலில் இதன் அறிவிப்பாளர்களுள் விமர்சனத்திற்குரியவர்களாக யாசீன் அல்இஜ்லீ, இப்ராஹீம் பின் முஹம்மத் அல்ஹனஃபிய்யா ஆகியோரைக் குறிப்பிடுகிறார்கள். இந்த ஹதீஸ், விமர்சிக்கப்பட்ட இதே அறிவிப்பாளர்கள் வழியாக இப்னுமாஜா (4075), அபூயஅலா (444), முஸன்னஃப் இப்னு அபீஷைபா (38799), அஹ்மத் (644) உள்ளிட்ட நூல்களிலும் இடம்பெற்றுள்ளது.

بنْ رَأَيْتَ أَنْ تَأْمُرَ لِي كَمَا أَمَرْتَ لِعَمِّكَ فَافْعَلْ، فَقَالَ
رَسُولُ اللَّهِ ﷺ: نَفْعَلُ ذَلِكَ، ثُمَّ قَالَ زَيْدُ بْنُ حَارِثَةَ: يَا
رَسُولَ اللَّهِ كُنْتَ أَعْطَيْتَنِي أَرْضًا كَانَتْ مَعِيشَتِي مِنْهَا
ثُمَّ قَبَضْتَهَا فَإِنْ رَأَيْتَ أَنْ تَرُدَّهَا عَلَيَّ فَافْعَلْ، فَقَالَ
رَسُولُ اللَّهِ ﷺ: نَفْعَلُ، فَقُلْتُ: أَنَا يَا رَسُولَ اللَّهِ إِنْ رَأَيْتَ
أَنْ تُوَلِّيَنِي هَذَا الْحَقَّ الَّذِي جَعَلَهُ اللَّهُ لَنَا فِي كِتَابِهِ مِنْ
هَذَا الْخُمُسِ فَأَقْسِمُهُ فِي حَيَاتِكَ كَيْ لَا يُنَازِعَنِيهِ أَحَدٌ
بَعْدَكَ، فَقَالَ رَسُولُ اللَّهِ ﷺ: نَفْعَلُ ذَاكَ فَوَلَّانِيهِ رَسُولُ
اللَّهِ ﷺ فَقَسَمْتُهُ فِي حَيَاتِهِ، ثُمَّ وَلَّانِيهِ أَبُو بَكْرٍ رَضِيَ
اللَّهُ عَنْهُ فَقَسَمْتُهُ فِي حَيَاتِهِ، ثُمَّ وَلَّانِيهِ عُمَرُ رَضِيَ اللَّهُ
عَنْهُ فَقَسَمْتُ فِي حَيَاتِهِ حَتَّى كَانَتْ آخِرُ سَنَةٍ مِنْ سِنِي
عُمَرَ رَضِيَ اللَّهُ عَنْهُ فَإِنَّهُ أَتَاهُ مَالٌ كَثِيرٌ.

கள், "அவ்வாறே செய்வோம்" என்றார்கள்.

அப்போது ஃபாத்திமா (ரலி) அவர்கள், "அல்லாஹ்வின் தூதரே! உங்கள் தந்தையின் சகோதரருக்கு (உணவுப் பொருட்கள் வழங்க) உத்தரவிட்டதுபோல் எனக்கும் உத்தரவிடுங்கள்!" என்று கேட்டார்கள். உடனே அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "அவ்வாறே செய்வோம்" என்றார்கள்.

பின்னர் ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்கள், "அல்லாஹ்வின் தூதரே! எனக்கு நீங்கள் ஒரு நிலம் தந்திருந்தீர்கள் அதன் மூலம் என் வாழ்வாதாரம் நிறைவேறியது. பின்னர் அதை நீங்கள் திரும்பப் பெற்றுக் கொண்டீர்கள். அதை எனக்குத் திருப்பித் தர விரும்பினால் அதைச் செய்யுங்கள்" என்று கேட்டார்கள். உடனே அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "அவ்வாறே செய்வோம்" என்று கூறினார்கள்.

அப்போது நான், "அல்லாஹ்வின் தூதரே! நானும் (ஒன்றைக் கேட்கிறேன்) அல்லாஹ் தன் வேதத்தின் மூலம் நமக்குரியதாக ஆக்கிய இந்த 'குமுஸ்' -ஐந்திலொரு பாக சொத்துகளுக்கு என்னை நீங்கள் பொறுப்பாளராக ஆக்க விரும்பினால் அவ்வாறே செய்யுங்கள் அதை நான் உங்களின் வாழ்நாளிலேயே பங்கிட்டுக் கொடுப்பேன். உங்களுக்குப் பின் எவரும் என்னுடன் அதில் சண்டை செய்யாமல் இருக்க வேண்டும் என்பதே இதற்குக் காரணம்" என்றேன் உடனே அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "அவ்வாறே செய்வோம்" என்றார்கள்

(பின்னர்), அவ்வாறே என்னை (அச்சொத்துகளுக்கு) அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் பொறுப்பாளராக ஆக்கினார்கள். அவர்களின் வாழ்நாளிலேயே அதை நான் பங்கீடு செய்துவந்தேன் பின்னர் அதற்குப் பொறுப்பாளராக அபூபக்ர் (ரலி) அவர்களும் என்னை அமர்த்தினார்கள். அவர்களின் வாழ்நாளிலும் நான் அதைப் பங்கீடு செய்து வந்தேன். பின்னர் உமர் (ரலி) அவர்களும் அதற்குப் பொறுப்பாளராக என்னை அமர்த்தினார்கள். அவர்களின் வாழ்நாளிலும் நான் அதைப் பங்கீடு செய்துவந்தேன். உமர் (ரலி) அவர்களது (ஆட்சியின்) இறுதி ஆண்டில் அவர்களிடம் ஏராளமான செல்வங்கள் வந்து குவிந்திருந்தன.[91]

91. [illegible] 2501 [illegible] 1826 [illegible] 6/343,3441 [illegible]

[illegible]

٦١٢ حدثنا محمد بن عبيد حدثنا شرحبيل بن مدرك الجعفي عن عبد الله بن نجي الحضرمي عن أبيه قال: قال لي علي رضي الله عنه: كانت لي من رسول الله ﷺ منزلة لم تكن لأحد من الخلائق إني كنت آتيه كل سحر فأسلم عليه حتى يتنحنح وإني جئت ذات ليلة فسلمت عليه فقلت: السلام عليك يا نبي الله فقال: على رسلك يا أبا حسن حتى أخرج إليك فلما خرج إلي قلت يا نبي الله أغضبك أحد قال: لا، قلت: فما لك لا تكلمني فيما مضى حتى كلمتني الليلة قال: سمعت في الحجرة حركة فقلت: من هذا؟ فقال: أنا جبريل قلت: ادخل قال: لا اخرج إلي فلما خرجت قال: إن في بيتك شيئا لا يدخله ملك ما دام فيه قلت: ما أعلمه يا جبريل قال: اذهب فانظر ففتحت البيت فلم أجد فيه شيئا غير جرو كلب كان يلعب به الحسن، قلت: ما وجدت إلا جروا قال: إنها ثلاث لن يلج ملك ما دام فيها أبدا واحد منها: كلب أو جنابة أو صورة روح.

612 அலீ (ரலி) அவர்கள் கூறியதாவது:

படைப்பினங்களுள் யாருக்கும் இல்லாத தனித் தகுதி, எனக்காக அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் இருந்தது. நான் ஒவ்வொரு நாளும் இரவின் இறுதிப் பகுதியில் (அதிகாலை முன்னேரத்தில்) அவர்களிடம் வந்து அவர்களுக்கு 'சலாம்' கூறுவேன். (உள்ளே வர அனுமதிக்கும் முகமாக) அவர்கள் கனைப்பார்கள். ஓர் இரவு நான் அவர்களிடம் வந்து, "அல்லாஹ்வின் நபியே! உங்களுக்கு உங்கள் மீது அல்லாஹ்வின் அமைதி ஏற்படட்டும் (அஸ்ஸலாமு அலைக்க)!" என்றேன். அதற்கு நபி (ஸல்) அவர்கள், "ஹசனின் தந்தையே! நான் உங்களை நோக்கி வெளியே வரும்வரை, அங்கேயே இருங்கள்!" என்றார்கள்.

என்னிடம் அவர்கள் வந்ததும், "அல்லாஹ்வின் தூதரே! யாராவது உங்களைக் கோபப்படுத்திவிட்டார்களா?" என்று கேட்டேன். அதற்கு, "இல்லை" என்றார்கள். "அப்படியானால், இரவில் என்னிடம் பேசும் நீங்கள், சென்ற இரவு பேசவில்லையே. காரணம் என்ன?" என்று கேட்டேன். அப்போது அவர்கள், "(எனது) அறைக்குள்ளிருந்த நான் (வெளியே) ஏதோ அசையும் ஓசையைக் கேட்டேன் 'யார் அது?' என்றேன். 'நான்தான் ஜிப்ரீல்' என்று ஜிப்ரீல் (அலை) கூறினார்கள் 'உள்ளே வாருங்கள்' என்றேன் 'முடியாது; என்னிடம் நீங்கள் வாருங்கள்' என்றார்கள் நான் வெளியே வந்ததும், "உங்கள் வீட்டுக்குள் ஒரு பொருள் உள்ளது. அது இருக்கும் வரை வானவர் யாரும் வீட்டிற்குள் வரமாட்டார்கள்' என்று கூறினார் 'ஜிப்ரீலே! அது என்னவென்று எனக்குத் தெரியாது' என்றேன் 'நீங்களே வீட்டிற்குள் சென்று பாருங்கள்' என்று ஜிப்ரீல் கூறினார். நான் வீட்டைத் திறந்தேன் அங்கு ஒரு நாய்க் குட்டியைத் தவிர வேறெதையும் நான் காணவில்லை. அதனுடன் (என் பேரன்) ஹசன் விளையாடிக்கொண்டிருந்தார். 'ஒரு நாய்க் குட்டியைத் தவிர வேறு எதையும் நான் காணவில்லை' என்று கூறினேன்.

அதற்கு ஜிப்ரீல் (அலை) அவர்கள், 'மூன்று பொருட்கள், அவற்றுள் எந்த ஒன்றிருந்தாலும், அந்த இடத்தில் ஒருபோதும் (அருள்) வானவர் எவரும் நுழையமாட்டார். அவை: 1. நாய் 2. குளியல் கடமையானவர் 3. உயிர்ப் பிராணியின் ஓவியம்' என்று கூறியதாக, நபி (ஸல்) அவர்கள் தெரிவித்தார்கள்.[92]

[illegible] அலீ (ரலி) அவர்கள் [illegible] அஹ்மத் [illegible] எண் - 2591 [illegible]

92. இந்த [illegible] ஹதீஸ் எண் 613இல் [illegible]

613 அப்துல்லாஹ் பின் நுஜய்ா அவர்கள் கூறியதாவது:

என் தந்தை நுஜய்யி பின் சலமா அவர்கள் (கலீஃபா) அலீ (ரலி) அவர்களின் தண்ணீர்க் குவளையை சுமந்து பணிவிடை செய்பவராய் இருந்தார்கள் (ஒருமுறை) அலீ (ரலி) அவர்களுடன் என் தந்தையும் 'ஸிஃப்பீன்' போருக்குப் புறப்பட்டுச் சென்றார்கள். 'நீனவா' எனும் பகுதியில் ஃபுராத் (யூப்ரட்டீஸ்') நதிக் கரையை அடைந்தபோது, அலீ (ரலி) அவர்கள், உரத்த குரலில், "அபூஅப்தில்லாஹ்! இங்கே சற்று பொறுமையாகச் செல்லுங்கள்! அபூஅப்தில்லாஹ்! சற்று பொறுமையாகச் செல்லுங்கள்!" என்றார்கள்.

நான், "என்ன விஷயம்?" என்று கேட்டேன் அப்போது அலீ (ரலி) அவர்கள், "ஒருநாள் நான் நபி (ஸல்) அவர்களிடம் சென்றேன். அப்போது அவர்களின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்துகொண்டிருந்தது உடனே நான், "அல்லாஹ்வின் தூதரே! உங்களை யாரேனும் கோபமடையச் செய்துவிட்டார்களா? உங்கள் கண்கள் கண்ணீரைச் சொரியக் காரணம் என்ன?" என்று கேட்டேன். அதற்கு நபி (ஸல்) அவர்கள், "இல்லை! (சற்று)முன் ஜிப்ரீல் (அலை) அவர்கள் (என்னிடம் வந்துவிட்டு) என்னிடமிருந்து எழுந்து சென்றார்கள். செல்லுமுன், "ஹுசைன் (ரலி) அவர்கள் 'ஃபுராத்' நதிக் கரையோரத்தில் கொல்லப்படுவார்' என்று என்னிடம் கூறினார்கள்" என்று சொன்னார்கள் மேலும், இந்தப் பகுதியின் மண்ணை நீங்கள் நுகர்ந்து பார்க்க விருப்பம் உண்டா? என்று (என்னிடம்) கேட்டார்கள். நான் 'ஆம்' என்றேன். தமது கையை நீட்டி ஒருபிடி மண்ணை எடுத்து, அதை என்னிடம் தந்தார்கள். அதனால்தான் என் கண்களை என்னால் கட்டுப்படுத்த முடியாமல் அவை கண்ணீரைச் சொரிந்தன" என்று கூறினார்கள்.[*]

٦١٣ حدثنا محمد بن عبيد حدثنا شرحبيل بن مدرك عن عبد الله بن نجي عن أبيه: أنه سار مع علي رضي الله عنه وكان صاحب مطهرته فلما حاذى نينوى وهو منطلق إلى صفين فنادى علي رضي الله عنه: اصبر أبا عبد الله اصبر أبا عبد الله بشط الفرات قلت: وماذا قال؟ قال: دخلت على النبي ﷺ ذات يوم وعيناه تفيضان قلت: يا نبي الله أغضبك أحد ما شأن عينيك تفيضان؟ قال: بل قام من عندي جبريل قبل فحدثني أن الحسين يقتل بشط الفرات قال فقال: هل لك إلى أن أشمك من تربته؟ قال قلت: نعم فمد يده فقبض قبضة من تراب فأعطانيها فلم أملك عيني أن فاضتا.

614 அபூசுஹைலா அவர்கள் கூறியதாவது:

(ஒருமுறை) அலீ (ரலி) அவர்கள் (எங்களிடம்), மேலோன் அல்லாஹ்வின் வேதத்தில் மிகச்சிறந்த வசனம் எது என்று உங்களிடம் நான் கூறட்டுமா?" என்று கேட்டுவிட்டு, "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் எங்களிடம், 'எந்தத் தீங்கும் உங்களை வந்தடைவது, உங்கள் கைகளால் ஈட்டிக்கொண்ட (தீய) செயலின் காரணமா

٦١٤ حدثنا مروان بن معاوية الفزاري أنبأنا الأزهر بن راشد الكاهلي عن الخضر بن القواس عن أبي سخيلة قال: قال علي رضي الله عنه: ألا أخبركم بأفضل آية في كتاب الله تعالى حدثنا بها رسول الله ﷺ (ما أصابكم من مصيبة فبما كسبت أيديكم ويعفو عن كثير)

[illegible]

وَسَأُفَسِّرُهَا لَكَ يَا عَلِيُّ مَا أَصَابَكُمْ مِنْ مَرَضٍ أَوْ عُقُوبَةٍ أَوْ بَلَاءٍ فِي الدُّنْيَا فَبِمَا كَسَبَتْ أَيْدِيكُمْ وَاللَّهُ تَعَالَى أَكْرَمُ مِنْ أَنْ يُثَنِّيَ عَلَيْهِمُ الْعُقُوبَةَ فِي الْآخِرَةِ وَمَا عَفَا اللَّهُ تَعَالَى عَنْهُ فِي الدُّنْيَا فَاللَّهُ تَعَالَى أَحْلَمُ مِنْ أَنْ يَعُودَ بَعْدَ عَفْوِهِ.

٦١٥ حدثنا وَكِيعٌ حَدَّثَنَا سُفْيَانُ وَإِسْرَائِيلُ وَأَبِي عَنْ أَبِي إِسْحَاقَ عَنْ عَاصِمِ بْنِ ضَمْرَةَ قَالَ: سَأَلْنَا عَلِيًّا رَضِيَ اللَّهُ عَنْهُ عَنْ تَطَوُّعِ النَّبِيِّ ﷺ بِالنَّهَارِ، فَقَالَ: إِنَّكُمْ لَا تُطِيقُونَهُ قَالَ قُلْنَا: أَخْبِرْنَا بِهِ نَأْخُذْ مِنْهُ مَا أَطَقْنَا قَالَ: كَانَ النَّبِيُّ ﷺ إِذَا صَلَّى الْفَجْرَ أَمْهَلَ حَتَّى إِذَا كَانَتِ الشَّمْسُ مِنْ هَا هُنَا يَعْنِي مِنْ قِبَلِ الْمَشْرِقِ مِقْدَارُهَا مِنْ صَلَاةِ الْعَصْرِ مِنْ هَاهُنَا مِنْ قِبَلِ الْمَغْرِبِ قَامَ فَصَلَّى رَكْعَتَيْنِ ثُمَّ يُمْهِلُ حَتَّى إِذَا كَانَتِ الشَّمْسُ مِنْ هَاهُنَا يَعْنِي مِنْ قِبَلِ الْمَشْرِقِ مِقْدَارُهَا مِنْ صَلَاةِ الظُّهْرِ مِنْ هَاهُنَا يَعْنِي مِنْ قِبَلِ الْمَغْرِبِ قَامَ فَصَلَّى أَرْبَعًا وَأَرْبَعًا قَبْلَ الظُّهْرِ إِذَا زَالَتِ الشَّمْسُ وَرَكْعَتَيْنِ بَعْدَهَا وَأَرْبَعًا قَبْلَ

கவேதான். (ஆயினும் அவற்றுள்) பெரும் பாலானவற்றை அவன் மன்னித்துவிடு கின்றான்' (42:30) என்ற இறைவசனத்தை ஓதிக்காட்டிவிட்டு, 'அலீயே! உமக்கு இந்த வசனத்தின் விளக்கத்தைக் கூறுகிறேன். இவ்வுலகில் உங்களுக்கு ஏற்படக் கூடிய நோய், தண்டனை அல்லது சோதனை ஆகியவை உங்கள் கைகள் சம்பாதித்தவற்றி(ன் வினை வி)னாலேயாகும். மேலோன் அல்லாஹ், மறுமையில் அவர்களுக்கு மீண்டுமொருமுறை தண்டனையளிக்காத கண்ணியவான் ஆவான். இவ்வுலகில் (குற்றம்) ஒன்றுக்கு மிக்க மேலான அல்லாஹ் மன்னிப்பு அளித்துவிட்டபின் மீண்டும் தண்டனையளிக்காத சகிப்புத் தன்மையுடையோன் ஆவான்'' என்று கூறினார்கள் என்றார்கள்.[94]

615 ஆஸிம் பின் ளம்ரா (ரஹ்) அவர்கள் கூறியதாவது:

நபி (ஸல்) அவர்கள் பகலில் தொழுத கூடுதல் (நஃபில்) தொழுகைகள் பற்றி அலீ (ரலி) அவர்களிடம் கேட்டோம். அப்போது அவர்கள், "உங்களால் அதைச் செய்ய முடியாது" என்றார்கள். எனினும், "எங்களிடம் அதைப் பற்றிக் கூறுங்கள் அவற்றில் எங்களால் இயன்ற அளவு கடைப்பிடிக்கிறோம்" என்றோம்.

அப்போது அலீ (ரலி) அவர்கள், "நபி (ஸல்) அவர்கள் ஃபஜ்ர் தொழுகை தொழுதும் (சற்றுநேரம்) காத்திருப்பார்கள் பிறகு அஸ்ர் தொழுகையின்போது சூரியன் மேற்கில் எங்கே அமைந்திருக்குமோ அதைப்போன்று கிழக்கே அமைந்திருக்கும்போது, எழுந்து இரண்டு ரக்அத்கள் தொழுவார்கள் பிறகு (சற்றுநேரம்) காத்திருந்துவிட்டு, ளுஹ்ர் தொழுகையின்போது சூரியன் மேற்கில் எங்கே அமைந்திருக்குமோ அதைப்போன்று கிழக்கில் அமைந்திருக்கும்போது (உச்சி சாய்வதற்குமுன்) எழுந்து நான்கு ரக்அத்கள் தொழுவார்கள்.

"சூரியன் உச்சியிலிருந்து சாய்ந்துவிட்டால், 'ளுஹ்ரு'க்குமுன் நான்கு 'ரக்அத்'கள் தொழுவார்கள். அதற்குப்பின் இரண்டு 'ரக்அத்'கள் தொழுவார்கள். 'அஸ்ரு'க்கு முன் நான்கு 'ரக்அத்'கள் தொழுவார்கள். ஒவ்வோர் இரண்டு ரக்அத்களுக்குமிடையே நெருக்க

[illegible] (347) [illegible] (2743) [illegible]

94. [illegible] 1430 [illegible]

எனும் கவச ஆடை எங்கே?" என்று கேட்டார்கள் அதற்கு "அது என்னிடம் உள்ளது" என்றேன் "அதை மஹ்ராகக் கொடுத்து (மணமுடித்து) விடு" என்று கூறினார்கள்[46]

570 அலீ (ரலி) அவர்கள் கூறியதாவது:

ஃபாத்திமா (ரலி) அவர்கள், தமக்குப் பணிவிடை செய்வதற்குப் பணியாள் ஒருவரைக் கேட்டு, நபி (ஸல்) அவர்களிடம் சென்றார்கள். அப்போது நபி (ஸல்) அவர்கள், "அதைவிடச் சிறந்த ஒன்றை உமக்கு நான் அறிவிக்கட்டுமா?" என்று கேட்டுவிட்டு, "(உனது படுக்கைக்குச் செல்லும் போது), 33 தடவை 'சுப்ஹானல்லாஹ்', 33 தடவை 'அல்லாஹு அக்பர்', 33 தடவை 'அல்ஹம்துலில்லாஹ்' கூறிவா! இம்மூன்றில் ஒன்றை 34 தடவை கூறிக்கொள்!" என்று சொன்னார்கள்[47]

571 அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

(பாவங்களால்) குழப்பத்தில் ஆழ்த்தப்பட்டுப் பாவமீட்சி கோருகின்ற இறைநம்பிக்கையுள்ள அடியானை, திண்ணமாக அல்லாஹ் விரும்புகிறான்.

இதை முஹம்மது பின் அல்ஹனஃபிய்யா (ரஹ்) அவர்கள் தம் தந்தை அலீ (ரலி) அவர்களிடமிருந்து அறிவிக்கிறார்கள்[48]

الَّتِي أَعْطَيْتُكَ يَوْمَ كَذَا وَكَذَا، قَالَ: هِيَ عِنْدِي، قَالَ: فَأَعْطِهَا إِيَّاهُ.

٥٧٠ حَدَّثَنَا سُفْيَانُ عَنْ عُبَيْدِ اللَّهِ بْنِ أَبِي يَزِيدَ عَنْ مُجَاهِدٍ عَنِ ابْنِ أَبِي لَيْلَى عَنْ عَلِيٍّ رَضِيَ اللَّهُ عَنْهُ: أَنَّ فَاطِمَةَ أَتَتِ النَّبِيَّ ﷺ تَسْتَخْدِمُهُ، فَقَالَ: أَلَا أَدُلُّكِ عَلَى مَا هُوَ خَيْرٌ لَكِ مِنْ ذَلِكَ، تُسَبِّحِينَ ثَلَاثًا وَثَلَاثِينَ وَتُكَبِّرِينَ ثَلَاثًا وَثَلَاثِينَ وَتَحْمَدِينَ ثَلَاثًا وَثَلَاثِينَ أَحَدُهَا أَرْبَعًا وَثَلَاثِينَ.

٥٧١ حَدَّثَنَا عَبْدُ اللَّهِ حَدَّثَنِي عَبْدُ الْأَعْلَى بْنُ حَمَّادٍ النَّرْسِيُّ حَدَّثَنَا دَاوُدُ بْنُ عَبْدِ الرَّحْمَنِ حَدَّثَنَا أَبُو عَبْدِ اللَّهِ مَسْلَمَةُ الرَّازِيُّ عَنْ أَبِي عَمْرٍو الْبَجَلِيِّ عَنْ عَبْدِ الْمَلِكِ بْنِ سُفْيَانَ الثَّقَفِيِّ رَضِيَ اللَّهُ عَنْهُ عَنْ أَبِي جَعْفَرٍ مُحَمَّدِ بْنِ عَلِيٍّ عَنْ مُحَمَّدِ ابْنِ الْحَنَفِيَّةِ عَنْ أَبِيهِ قَالَ: قَالَ رَسُولُ اللَّهِ ﷺ: إِنَّ اللَّهَ يُحِبُّ الْعَبْدَ الْمُؤْمِنَ الْمُفَتَّنَ التَّوَّابَ.

---

*இருந்தார் அக்குலத்தினர் கவச ஆடைகள் செய்பவர்களாக இருந்தார்கள். எனவே அக்கவச ஆடைகள் 'ஹுதமிய்யா' எனப்பட்டன. (அந்நிஹாயா)

46. இது பலவீனமான அறிவிப்பாளர்தொடரில் அமைந்த ஹதீஸ் ஆகும். அலீ (ரலி) அவர்களிடமிருந்து கேட்ட ஒருவர் தமக்கு அறிவித்ததாக அப்துல்லாஹ் பின் யஹ்யா அந்நஜ்ஜீ (ரஹ்) கூறுகிறார். அந்த ஒருவர் யாரென அறியப்படாததால் இது பலவீனமடைகிறது. இந்த ஹதீஸ் சுருக்கமாக நஸாயீ (3322, 3323), அபூதாவூத் (1815) ஆகிய நூல்களிலும் பதிவாகியுள்ளது.

47. இந்த ஹதீஸ் புகாரீ (5362), முஸ்லிம் (5274), திர்மிதீ (3330), அபூதாவூத் (2585), அஹ்மத் (578), இப்னு ஹிப்பான் (5529), அல்அதப் (878) ஆகிய நூல்களிலும் இடம்பெற்றுள்ளது. விரிவாக அறியப் பார்க்க: புகாரீ ஹதீஸ் எண்கள் - 3113, 3705, 5362, 6318; முஸ்லிம் 5273. மேலும் காண்க: பின்வரும் ஹதீஸ் எண்கள் - 702, 797, 949, 1085, 1166, 1185, 1244

48. இது பலவீனமான ஹதீஸாகும். இதன் அறிவிப்பாளர்தொடரில் ஆறாவது அறிவிப்பாளராக இடம்பெற்றுள்ள அபூ அப்தில்லாஹ் மஸ்லமா அர்ராஸீ என்பார் யார் என அறியப்படாதவர் ஆவார். ஐந்தாவது அறிவிப்பாளராக இடம்பெற்றுள்ள அபூஅம்ர் பஜலீ என்பாரை இமாம் இப்னு ஹிப்பான் (ரஹ்) அவர்கள், குறைபாடுடையவர்கள் (அல்மஜ்ரூஹீன்) என்ற பட்டியலில் இடம்பெறச் செய்துள்ளார்கள். இவர் நம்பகமானவர்களின் பெயர்களைப் பயன்படுத்தி புனைந்துரைக்கப்பட்ட செய்திகளை வெளியிடுவார் என்பதும் இவர் மீதுள்ள மற்றொரு குற்றச்சாட்டு ஆகும். நான்காவது அறிவிப்பாளராக இடம்பெற்றுள்ள அப்துல்மலிக் பின் சுஃப்யான் அஸ்ஸகஃபீ என்பார் யாரென்றே அறியப்படாதவர் ஆவார். ஆகவே இது புனைந்துரைக்கப்பட்ட செய்தியாகும் என்றுகூடச் சொல்லலாம்.